ரிப்பவித்துத் திவ்யமந்திரமாகிப் பலன்கொடுக்கும்படி சிவன து சங்கற்பத்தாலுண்டாய், அச்சுத்தியசுத்த சம்மேளனமாகிச் சுத்தமாயா புவநவாசிகளாகிய சாரூபிகளுக்குச் சத்தியவடிவா யும் மாந்திரிகனது சங்கற்பத்தாற் கற்பிதசம்மேளனமா கிச் சிவனுக்குக் கற்பிதவடிவாயுமிருக்கும் வாசகமந்திரமாகிய பஞ்சதசாக்ஷரி பஞ்சாக்ஷரமாகி, தனது பரிக்ரஹசத்தியாயி ருக்கின்ற வாசகசத்திமயசரீரத்திலாவிர்ப்பவித்தவினுடைதமா யிருக்கின்ற வாச்சியமந்திரமாகிய பஞ்சதசாக்ஷரி பஞ்சாக்ஷ ரமாகி, தனது சமவேதசத்தியாயிருக்கின்ற வாச்யசத்திமய சரீரியாய். ஆகையால்,—

ஞானமூர்த்தியாய் - சலைபா யிருக்கின்ற ஜடமூர்த்திகட் கு வேறாய், அசலையாயிருக்கின்ற சித்தருவாய், இப்படி கற்பித மூர்த்திக்குக் கரசரணாதிகளின தசைவுகூடாதாகையால்,—

(அகிலமீன்ற மாதினையு மொருபாகத்தடக்கி) அகிலமீன்ற- பரம்பரியமாய்ப் பராசத்தியா லதிஷ்டிக்கப்பட்டபராபரா சத்தி த்வாரத்தினாலேயுந் தன்னாலே சாக்ஷாத் அதிஷ்டிக்கப் பட்ட ப்ரம்மாதி த்வாரத்தினாலேயுந் தநுகரண புவநபோக ங்களாகிய சகலத்தையும் உற்பவிப்பித்து,—

ஒருபாகத்து - வாமபாகத்து,—

மாதினையும் - நிர்த்தசாக்ஷியாய் நிற்கும் உமாதேவியையு மே நிர்த்தசாக்ஷியாய்த்தனது சத்திசாந்நித்தியத்தாலமாய் நின் ற நிலைநிற்கவும் ஓரங்கிசத்தினாலே,—

அடக்கி - சமுத்திரத்துதித்த முத்துப்போல வகுத்த த்வா ரத்தினாலே மாயையி னுற்பவிப்பித்துத் தனது சம்மேளன ச க்ரவிக்ரகத்தி லாவிர்ப்பவிப்பித்த ஸ்ரீகண்டமூர்த்தியிற் ப்ர வேசிப்பித்து சம்மேளனமாகத் திரும்ப வதிற் றுனுஞ்சாந்நித் தியமாய்,—

வானோர் மகுடசூடாமணியாய்- பிரமாதிதேவர்க்கு மதி தேவராகிய ஸ்ரீகண்டாதிதேவர் தேவராகிய அநந்தாதிகட்குந் தேவனாய்,—

வையம்போற்ற - உலகங்களெல்லாந் துதிப்ப,—

பாதிமதி யணிபவளச் சடைகடாழ - (பாதி - சம்பாத மன்று ஒரங்கிசமாதலால்) சந்திரகலையைத்தரித்த விரிந்த பவளக்கொடிபோன்ற சடைகள் பின்றூங்க,—

படரொளியம்பலத்து-பராசத்தியா லதிஷ்டிக்கப்பட்டுப் பரம்பாநின்ற ப்ரகாசத்தையுடைய சுத்த மாயாமயமாகிய சபையின்கண்ணே,—

ஆடும் - நடிக்கும்,—

பரனார் - சுத்த சிவனாரது,—

பாதத்தாமரைகள் - பாதாரவிந்தங்களை,—

சிரத்தேவைத்து - சென்னியிற் றரித்து,—

தளராத பேரன்பு வளராநிற்பாம் - யாம் நீங்காத மிகுந்த பத்திநிறைவாக்காநிற்பாம். எ - று.

யாம்—தோன்றா யெழுவாய்.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

ஈசனருளிச்சையறிவியற்றலிங்ப
மிலயமொடுபோகமதிகாரமாகித்
தேசருவமருவுருவமுருவமாகித்
தேவியுமாய்த்தேசமொடுசெல்வதிமாப்

பேசரியவுயிரையெலாம்பெற்றுநோக்கிப்
பெரும்போகமவையளித்துப்பிறப்பினையு மொழித்திட்
டாசகலுமடியருளத்தப்பனுடனிருக்கு
மன்னையருட் பாதமலர்சென்னிவைப்பாம்.

மேலிதனுச் சிவனுடைய *சமவாயசத்தியையும் §தத்பே தங்களையுங் கூறுகின்றது.

*சமவாயசத்தி - அபின்னசத்தி, §தத்பேதம் - அதனது பேதம்.

(இ - ள்.) ஈசனருள் - பரமேஸ்வரனுக்கு அக்நிக்கூஷ்ண ம்போல + அவிநாபாவமாயிருக்கிற க்ருபாசத்தியானது பஞ்ச ¶ க்ருத்ய நிமித்தமாக க்ருத்யபேதங்களினாலே யஞ்சுபேதம்.

*தத்ஸஹஸ்ராம்ஶதோ தேவ ஶக்திஸ்ஸ பரமேஶ்வரீ யாஶக்திருத்பந்நா। ஸர்வாநுக்ராஹிணீ ஸம்ஹாரிணீ ஸ்ருஷ்டிஸ்திதிகாரிணீ॥

பரமசிவத்தி லாயிரத்தொருகூறு பராசத்தி,—

+ அவிநாபாவம் - பிரிவில்லாமை, ¶க்ருத்யம் - தொழில்.

இன்பம் - ஆன்மாக்களுக்கு விஷயசுகத்தைப் பொருத்து மாதிசத்தியானது அந்தப் பராசத்தியி லாயிரத்தொரு கூறாக த்தோன்றும்,—

இச்சை - ச்ருஷ்டியாதியைப் பண்ணவேணுமென்னு மிச் சாசத்தியானது அந்த வாதிசத்தியி லாயிரத்தொரு கூறாகத் தோன்றும்,—

அறிவு-சர்வான்மாக்களுடைய கன்மங்களையு மந்தக் கன் மங்களுக்கிடான தநுகரண புவனபோகங்களையு முபாதாகத்ர

யங்களினின்று முண்டாக்கும். அதையு மேககாலத்திலே ‡யகர் வத்தாக வறியு ஞானசத்தியானது இச்சாசத்தியி லாயிரத் தொரு கூறுகத்தோன்றும்;—

‡ அதர்வத் - உளபடி.

இயற்றல் - †ச்ருஷ்டியாதி க்ருத்யங்களைப் பண்ணுங் க்ரியாசத்தியானது ஞானசத்தியி லாயிரத்தொரு கூறுகத்தோன்றும்.

† ச்ருஷ்டியாதி யென்றதனால் பஞ்சக்ருத்யங்களையும் எனவறிக.

இது சிவச்ருஷ்டி, இந்தச் சிவசத்திகளைந்து நிஷ்களமே.

※ [illegible] 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸
𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌦𑌜𑌾𑌯𑌤 ॥ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾
𑌦𑌾𑌦𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾 । 𑌆𑌦𑌿𑌶𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌦𑌿
𑌚𑍍𑌛𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌜𑍍
𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾
𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥ 𑌏𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌕𑍍𑌤𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚
[illegible] । 𑌶𑌿𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋
𑌕𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿. ※

இவ்வாறு பஞ்சசத்திகளு மொன்றுக்கொன்று ஸஹஸ்ராம்சமென்றது க்ருத்ய ¶ தாரதம்மியத்தையிலுலே சொன்னதன்றி § பரிச்சின்னமாகச் சொன்னதல்ல வெனவறிக. இப்படி தோன்றின பஞ்சசத்திகளிலே பராசத்தியானது பஞ்சு

னாகிய வான்மாக்களை யநுக்ரஹிக்கும். ஆதிசத்தியானது ஆணவமலம் பக்வமாம்படிக்குச் செலுத்தும்,—

¶ தாரதம்மியம் - ஏற்றக்குறைச்சல், § பரிச்சின்னம் - கண்டிப்பு.

இவையொரு போகமதிகாரமாகித் தேசுருவ மருவுருவ மூருவமாகி - ஞானசத்தியானது சத்தற்கு ஞானப்பிரகாசமாகிச் சர்மசக்ஷுராதி *யக்ராஹ்யமான தேஜோரூபமாம். இந்தப் பஞ்சசத்திகளினுடைய தசாம்சங்களினாலே சகளா ‡ களமாகிய சதாசிவரூபமாம். இவர் உத்தியுக்தர். இவருடைய சகளரூபம் பிறகே சொல்லுகிறார். இவ்விடத்திலே நிஷ்களரூபத்தைச் சொல்லுகிறார். இவர் சுத்தமாயாக்ருத்யம் பண்ணுவர்; இவர்க்கு அந்த சத்தியில்லை. பத்திலொன்று என்னவே பத்திலொரு பங்கு நிஷ்களத்திருமேனியான சாதாக்யமென்றறிக.

* அக்ராஹ்யம் - க்ரஹிக்கப்படாமை, ‡ அகளம் - நிஷ்களம்.

* [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

க்ரியாசத்தியினாலே சதாசிவத்தில் சஹஸ்ராம்சமாகச் சகளமாகிய மஹேஶ்வரரூபமாய் இருபத்தைந்து விக்ரஹபேதமாகிய சுத்தமாயா க்ருத்யத்தைப் பண்ணுவர்.

இவர் ப்ரவிர்த்தர். இவர்க் கநந்தேஶ்வரர் என்றும் பெயர்.

* [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

சேவியுமாய் - சதாசிவாதி மூர்த்திகளுக்கு மனோன்மணியாதி போகசத்திகளுமாய்,—

தேசமொடு செல்வமாகி-சிவனுக் காதாரதேக கரண வஸ்த்ராபரண ஆயுத ஐஸ்வரியங்களுந் தானேயாகி.

* [illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

பேசரிய வுயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போக மலைவயளித்துப் பிறப்பினையு மொழித்திட் டாசகனு மடியருளாத் தப்பனுடனிருக்கு மன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம் - (இவ்வளவென் றிலக்கஞ்சொல்ல வரிதாகிய) அதாவது அளவிடப்படாத ஆன்மாக்களையெல்லா மீன்றும் வளர்த்து மலபரிபாகத்திலே பேரின்பத்தையுங் கொடுத்து மேல் ஜநநமில்லாதபடியும் பண்ணி யாணவாதிகுற்ற நீங்கின வான்மாக்களிடத்திலே சர்வான்மாக்களுக்கும் பிதாவாகிய சிவத்துடனே பேதமற ப்ரகாசித்திருக்கும் லோகமாதாவினுடைய பாதாரவிந்தத்தைத் தலையின்மேற் பாவிப்பாம். எ-று.

பதியைப்போல் பசுவு மநாதி, அதற்கு உற்பத்தி நாசமுமில்லையென்று சாஸ்த்ரங்களிலே சொல்ல, இவ்விடத் தீஸ்வரனான்மாக்களுக்குப் பிதாவென்றும் ஈஸ்வரியார் மாதாவென்றுஞ் சர்வப்பிராணிகளையும் பெற்றாளென்றுஞ் சொல்வது விரோதமெனனில்? விரோதமில்லாதபடி கூறுவாம்! ஆன்மாக்கள் மஹாப்ரளயகாலத்தி லாணவகேவலமாக விருந்தபொழுது ஞானம் ப்ரகாசியாதபடியாலே யான்மாவென்ப தொன்றில்லை யென்பதுபோல நின்றது; அதை ச்ருஷ்டிகாலத்திலே ¶ ஈஸ்வரா விநாபூதையான சக்தி, சுத்தாசுத்த மாயைகளிலே தத்ததாகாரமான கலாதிகளை யுதிப்பித்து, அந்தக் கலாதிகரணங்களினாலே யாணவமல சக்தியைச் சிறிதுநீக்கி, யான்மஞானத்தைத்தான பேதமறநின்று ப்ரகாசிப்பிக்கையால்; ஈஸ்வரசத்தி யான்மாக்களைப் பெற்றதென்றது. அந்தச்சத்தி ஈஸ்வரா விநாபூதையில் வேறற விருக்கையா லீஸ்வரநிமித்தகாரணமாகிய பிதாவென்றது. ஆணவமல பரிபாகத்திலே யான்மாக்களை விஷயசுகங்களான சிற்றின்பத்திற்கேதுவாகிய ஸ்தூல சூக்கும சரீரங்களினின்றும் வாங்கிப் பேரின்பஸ்வரூபமாகிய சிவனுடன் றன்னைப்போ லவிநாபூதமாக வேறற நிற்கப்பண்ணி, இவ்வாறு.

ண்டான வான்மாக்களுக்கு ஸ்ருஷ்டிகாலத்திலே யாணவகே வலத்திலே நின்றுநீங்கித் தன்னிடத்திலே ஜநிப்பதையும் (பிற ப்பினையும் எனற—வும்மையால், ப்ரளயகாலத்திலே யாணவ கேவலமாகையான மரிப்பது போன்றதையு) மொழித்து; த கையப்படாத ப்ரகாச ஞானஸ்வரூபமாகி, தானும் பரமானந் த ஸ்வரூபமாகிய சிவமும்,தனைவற்று ஞாதிருஸ்வரூபமான வா னமாக்களிடத்திற் பேதமற நிற்பார்கள்.

¶ ஈஶ்வரா விநாபூதா - ஈஶ்வர அவிநாபூதை எனப்பிரி த்து ஈஶ்வரனுக்கு பின்னமற்றிருத்தல் எனப்பொருள்கூறுக.

பௌதிகதேகத்திற் சுபிவியத்தி யேதுவானது கொண்டு பிதா நிமித்தகாரணமென்றும்,மாதா வுபாதாநகாரணமென்று ம், பிள்ளை யவ்விருவர் காரியமென்றும் விவகாரம் §ஆபால கோ பால ப்ரசித்தமாகையால் முத்திபரியந்தஞ் சிருஷ்டிகாலங்க டோறும் சத்தாரமாக ஸ்வரூபாபி வியக்தியைப்பண்ணின வீ ஶ்வரசத்தியை யு மீஶ்வரனையு மாதாபிதா வென்பதும்; அவர்க ள் காரணம் ஆன்மா காரியமென்பது முசிதம். ஆகையாலீஶ் வரன் பிதாவென்றும் ஈஶ்வரி மாதாவென்றுஞ் சொல்லுகிற து சர்வசாஸ்த்ரப் பிரசித்தம். ஈஶ்வரன காரணமென்பதும் ஆன்மா காரியமென்பது முத்தி பரியந்தமுண்டு. முத்தியிலே ஈஶ்வரன காரணமாகிலு முத்தியந்த்ர மான்மா சிவஸ்வரூப மே ஆகையாற் காரணகாரிய பாவமில்லை. ஆகில் பாசச் † சே த மொருகாலமு மான்மஸ்வரூபப் பிரகாச மொருகாலமோ வென்னில்? அப்படியல்ல! பாம்பு * குப்பாசங் கழற்றினபொ ழுது குப்பாசங் கழன்ற தொருகாலமும் பாம்பினுடைய ப்ர காச மொருகாலமு மல்லாதது போல; பாச ‡ சேதமும் ஸ்வரூ பாபி வியத்தியு மேககாலமே.

§ ஆபால கோபால நியாயம் பாலர்கள் முதல் அறிஞ ரான இடையரீறாக. எ-று. † சேதம்-நீக்கம். * குப்பாசம்-சட்டை, ‡ களகம் - நீக்கம்.

* [illegible] *

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஓதனத்தினது பாகஞ் சாத்தனது பாகமென்கிறதுபோலக் கர்த்தாவாகிய சிவனாற் கன்மமாகிய ஜடசித்துக்களிலே க் கிரியையாகப் பண்ணப்படுகையால் சிவனது ச்ருஷ்டி திதி சங்கரம் த்ரோபாவம் அநுக்கிரகம், ஜடசித்துகளது ச்ருஷ்டி திதி சங்காரம் த்ரோபாவம் அநுக்கிரகமென்றுஞ் சொல்லப்படுமென்றறிக. (ஆகி என்பதனைப்பிரித் தெங்குக்கூட்டுக. ஈசனுக்கு அருளாகி அருளென்பதாகு பெயராதலால்) அருளாகி _ சித்தாகிய வான்மாவிடத்திலே சிவனுக்கொப்பாகு முத்திசித்திக்கும்பொருட்டு மலநீங்க முன்றடைபட்டிருந்த பேரறிவு பெருந்தொழிலாகிய சிவத்துவவிருத்தி விளக்கமென்னு மருளை அநுக்கிரகத்தைப் பண்ணும் பராசத்தியாகி—

இன்பமாகி - க்ரமத்திலே பேரின்பமாவதாய் அந்தப்பேரின்பத்துக்குக் காரணமாகுஞ் சிற்றின்பத்துக்கு நிமித்தமாகிய சருஷ்டி திதி சங்காரம் திரோபாவமெனகிற நாலு க்ருத்யங்களை ஆரணி ஜநநீ ரோதயித்திரிரூபமாயிருந்து பண்ணுந் திரோதானசத்தியெனனு மாதிசத்தியாகி. (பரசிவாதீதமாகிய சிவனுக் கினபத்தைப்பண்ணும் பராசத்திபதீதமாகிய வினபசத்தியாகிய எனனும் கொங்கிப்பொருளுமாம்.) இப்படிப் பஞ்சகருத்யம் பண்ணுமிடத்து நியமித் ததிக துத்தியோகித்துச் சங்கற்பித்துப் பண்ணவேண்டுகையால்,—

இச்சையாகி - இந்தப்பொரு ளிப்படியாம் இந்தப்பொரு ளிப்படியாகாதெனனு நியமத்தைப்பண்ணு மிச்சாசத்தியாகி,—

அறிவாகி-இதுகாரண மிதுகரண மிதுகாரிய மிதுப்ரயோசநமெனனுஞ் சாதத சவிகற்பஞானத்தைப் பண்ணு ஞானசத்தியாகி,—

இயற்றலாகி - க்ரியாசத்தியாயிருந் திதைநான் பண்ணுகிற்பேனென றுதத்தியோகித்தலாகிய சாதா சவிகற்பக் கிரியையைப்பண்ணி, திருப விச்சாசத்தி ரூபமாகியிருந் திந்தவஸ்திப்படியாகக் கடவதென்று சங்கற்பத்தைப் பண்ணும் க்ரியாசத்தியாகி, மந்த்ர துலபஞ்சக்ருத்யங்களையும் அந்தத் துலபஞ்சக்ருத்யங்களுக்கு யோக்கியத்தைப் பண்ணுமதாகிய சூக்குமபஞ்சக்ருத்யங்களையும் பண்ணுமிடத்தில் லயபோக வதிகார காலங்களிலே பண்ணவேண்டுமதாகையால்,—

இலயமொடு போகமதிகாரமாகி - லயபோக வதிகாரங்களுக்குள் லயத்தைச் சொல்வாம். (அர்த்தமாத்ரயோகன நிர்விகற்பக்காட்சி, ப்ரத்தியர்த்தக்காட்சிமாத்ர சவிகற்பப் பார்வைபார்க்குஞ் சுத்தசிவன்போ லிருந்தாலும் போகனாயு மதிகாரனாயு மநுக்ரஹ க்ருத்யமாத்ரங் குறித் திருக்குமிப்

பித் துள்வைத் திருக்குமயோசக சாத்த சவிகற்ப ஞானக்கிரி
யா சங்கற்பவாறு யிருக்கின்ற விந்துவைநீங்காத விலயருகரு
மூர்த்திபண்ணு மனுக்ரக க்ருத்ய மப்படியிருக்கும். விந்துவை
நீங்கிய விலயருகரு வியத்திபண்ணு மனுக்ரக க்ருத்ய மெப்
போது மியற்கையா யிருக்கின்றதாகிலுந் துலபஞ்ச க்ருத்யத
துக்கு யோக்கியத்தைப் பண்ணுமதாகிய சூக்கும பஞ்சக்ருத்ய
த்தைப் பண்ணும்படி இலயகாலத்திலே போகரையும் அதிகா
ரரையுஞ் சூக்குமிப்பித் துள்வைத்துச் சிருஷ்டிகாலத்திலே
தா னவர்க் குள்ளுமாயிருப்பர். இலயராதலால் அந்த மூர்த்தி
யதி க்ருத்யமு முடித்துத் துலபஞ்ச க்ருத்யநிமித்தமாகிய
சூக்குமபஞ்ச க்ருத்யத்தையும் பண்ணுவர். ஆகையால், மஹா
ப்பிரளயத்திலே துலபஞ்ச க்ருத்யங்களை விட்டிருக்குங் க்
ரியாசத்திக்குச் சூக்கும பஞ்சக்ருத்ய நிமித்தஞ் சூக்குமித்து
நிடமித்தல், சற்றே சவிகற்பித்தறிதல், அப்படி யுத்தியோகித்த
ல், நிர்விகற்ப சவிகற்ப வேற்றுமைதோற்றச் சங்கற்பித்தலெ
னுந் தொழில்களைப்பண்ணு மிச்சாசத்தி ஞானசத்தி க்ரியா
சத்தி, அந்தக் கிரியாசத்தி பேதமாகிய விச்சாசத்திகளை யங்கி
யமன்றித் தனக்குள்வைத்து நிர்விகற்பவறிவு மாத்ரத்தைப்ப
ண்ணு ஞானசத்தி மாத்ரமாயிருத்தல் லயம்) (போகத்
தைச சொல்வாம். அந்தக் கிரியாசத்திக்கு சிருஷ்டியாதி து
லபஞ்ச க்ருத்யங்களைப் பண்ணும்படி நியமித்தல் அறிதல் உத்
தியோகித்தலென்னுந் துலயோசக பவுத்த சவிகற்ப வேற்று
மைதோற்றுஞ் சூக்கும யோசக சாத்தசவிகற்பத் தொழில்க
ளின துள்ளுந்திரேகத்தைப் பண்ணி இச்சாசத்தியாயு ஞான
சத்தியாயுங் க்ரியாசத்தியாயு மிருத்தல் போகம்.) (அதிகார
த்தைச் சொல்வாம். அந்தக கிரியாசத்திக்குச் சொல்லிய சா
த்த சவிகற்ப நிர்விகற்ப வேற்றுமைதோற்றுஞ் சூக்கும யோச
க சாத்தசவிகற்ப சங்கற்பத்தினுது அந்தர் ருத்ரேகத்தைப்

பண்ணிக் கிரியாசத்தி பேதமாகிய விச்சாசத்தியாயிருத்தல் அதிகாரம்.) ஆகையாற் றன்னைக்குறித்துப் பிரபஞ்சம் ப்ரயோஜனமாகத் தோற்றுதாதலாற் றன்னைக்குறியாமற் ப்ரபஞ்சத்தை ஸ்வரூபமாத்ரமாகப் பார்த்தலைப்பண்ணுவது, "ஆதிகுடிலக்கமிலா வளவில்சோதி." என்று முன்சொல்லியது சுத்தசிவச்சுபாவம். பிறர் ப்ரயோஜனத்தைக் குறித்துப் பார்த்தலைப் பண்ணுதலைச் செய்வதிப்போதுசொல்லிய விலயபோக அதிகாரச் சிவச்சுபாவம் இந்த விலயபோக அதிகாரச்சுபாவமும் சர்வ கருத்ருத்வத்துக்குச் சிறப்பு கருத்ருத்வ மாதலால் ஔபாதிகத்தடத்த லக்ஷணமன்று, நிருபாதிக மிருவகை பொருவகைச் சுபாவமும் சொரூபலக்ஷணமே. ஆதலால், இந்த விலயபோக வதிகாரங்கள் விருத்தி பரிணதி விவர்த்தாரம்பங்களின்றாகிய நித்தியங்கள் சோபாதிகங்கள் சத்தியங்களன்று: பஹிரங்கபேதமாய்ப் பிரிக்கற்கரிதாகி அந்தரங்கபேதமாயிருக்கின்ற சிவபேதமாயும் சிவசத்திபேதமாயும் சிவசத்தி வ்யாபாரபேதமாயுமிருத்தலால் வ்யாபாரங்கட்கு இலயபோக வதிகாரமென்னுமந்தரங்கபேதமுண்டு: சிவனுக்குஞ் சிவசத்திக்குமில்லையென்று சொல்லப்படாது. காரணபேத மில்லாதிருத்தலாற் காரியபேத மில்லையாதலால் சிவ சிவசத்தி சிவசத்திவ்யாபாரங்கள் மூன்றிற்குந் தனித்தனி இலயபோக வதிகாரங்களைப் பிரித்தலில்லாத வந்தரங்க பேதமாயும் பகிரங்கத்தபேதமாயும் நித்தியங்களாயுஞ் சத்தியங்களாயு மிருக்கும்; கற்பிதமூர்த்தி வடிவுமாத்ரத்தாற் கற்பிதவநித்தியங்களாயு மசத்தியங்களாயு மிருக்குமெனவறிக. விந்துவுக்கும் வைந்தவ சரீரகட்கு மாத்ரம் இலயபோக வதிகாரங்கள் பிரித்தற்கெளிதாகிய பகிரங்கபேதமா யச்சற்காரியத்தால் நித்தியங்களாயு மனுமூர்த்திவடிவுமுதற் காரியமாத்ரத்தா லநித்தியங்களாயு மசத்தியங்

களாயு மிருக்குமெனவறிக. திரும்ப விலைபோக வதிராக்கிரமங்களிலே,—

நேசருவ மருவுருவ முருவமாகி - சோதியாம் நிஷ்கள சகளநிஷ்கள சகளமாகிப் பின்னு மதிகாரத்துக்குப் புறம்புமன்றுமாயிருக்கும் பரசிவனும் மகாசதாசிவனுமோரகலை யீரிருகலைக் கிரமத்திலே யதிஷ்டிக்கப்பட்ட சாந்தியதீதை சாந்தி வித்தை ப்ரதிஷ்டை நிவிர்த்தியென்னுங் கலைகளில் விழுகது பஞ்சசாதாக்கியங்களையும் பஞ்சமூர்த்திகளையு மிந்த விருகலைப் பினுள்ள பஞ்சப்பிரமங்களையு முறைப்பவிப்பிக்கும் தூலகாரிய பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி க்ரியாசத்திகளுமாகி, பின்னும் ஈசானியாதி மூர்த்தியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி, வாமாதி சர்வபூததமனியந்தமாகிய வஷ்டசத்திகளுமாகி, பின்னு மனோன்மனியாதி சரஸ்வதியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி,—

தேவியுமாய் - போகசத்தியுமாய்,—

தேசமொடு செல்வமாகி - யோகசத்தியொடு வீரசத்தியுமாகிப் பின்,—

பேசரி வுயிரையெலாம் பெற்று - எண்ணிறந்த வான்மாக்களுக்குப் பரதேகமென்றும் சூக்குமதேகமென்றும் தூலதேகமென்றுஞ் சொல்லப்படுந் திரிதேகங்களோடுங் கூட்டி அறிவு விளங்கச் சிருஷ்டித்து,—

காக்கி - இரக்ஷித்து,—

பெரும்போகமளவுளித்து - புவனபதிகளா யிருக்கின்ற பரபோகங்களையும் புவனவாசிகளா யிருக்கின்ற வபரபோகங்களையுங் கொடுத்துத் திரோபவித்து,—

பிறப்பினையு மொழித்திட்டு - அனுக்கிரகித்துச் சிவனுக்கொப்பாகி யிருக்கும் பரமுத்தியையும் சுத்த மாயாபுவனப் பிராப்தி

யாகிய வபரமுத்தியையுங் கொடுத் தநுக்ரஹித்து,—

ஆசகனு மடியருளத்து - தீக்ஷாசுத்தராகிய சாதகர் இரு தயகமலத்திலே யவரவர் யோககியாறுகுணமாய்ச் சகள நிஷ்களசகள நிஷ்களநிருத்த மத்தியதிலக நிஷ்களாதீதமெனறு முன்சொன்ன ஸ்வரூபங்களாய்,—

அப்பனுடனிருக்கும் - சிவஞேடுகூட நியாகம்பண்ணப் படும்,—

அன்னையருட் பாதமலர் - உலகமாதாவினது பாதாரவிந் தங்களை,—

சென்னிவைப்பாம் - சிரசிலே சூட்டிக்கொள்ளா நிற்கின் ரேம். எ - று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

கந்தன்வணக்கம்.

அருமறையாகமமங்கமருங்கலைநூறெரித்த
வகத்தியனுக்கோத்தனைக்குமருட்குருவாங்குரிசில்
திருமறைமாமுனிவர்முனிதேவர்கட்கேதேவன
சிவனருள்சேர்திருமதலைகவலையோர்தெய்வம்
பொருமறையார்கழல்வீரர்வீரன்கையிற்
பூதிர்கொண்டோவாதுபோற்றுமடியவர்கள்
கருமறைபாவதையருளிக்கதிவழங்குங்கந்தன்
கழலிணைகளென்சிரத்திற்கருத்தில்வைப்பாம்.

(இ-ள்.) அருமறையாகம மங்கமருங்கலை நூறெறிந்த - ஓதியுணர்தற்கரிய நாலுவேதங்களையு மிருபத்தெட்டு சிவகாமங்களையு மாறங்கங்களையு மற்று மரிதாகிய கலைஞானங்களையு முதலே போதியுணர்ந்த,—அகத்தியனுக் கோத்துணைக்கு மருட்குருவாங் குருவை-அகத்தியமஹாருஷிக்கு வேதாந்த ஞானத்தை யநுக்கிரகம் பண்ணப்படாநின்ற க்ருபாமூர்த்தியாகிய நித்தியபாலனாகிய குரு,—திருமறைமாமுனிவர்முனி § வேதோத்தா சாரயுக்தரா யிருக்கிற ருஷிகளுக்கெல்லாம் ப்ரதானமாகிய முனி,—* தேவர்கடந் தேவன சிவனருள்சேர் திருமகவை-தேவர்களுக்கெல்லா நாயகமாகிய சிவன், தாரகாசூரனைச் சங்கரித்து அவனாற் பீடிக்கப்பட்ட தேவாதிகளை யிரக்ஷிக்கவேண்டுமெனகிற க்ருபையினாலே தரப்பட்ட, ஸ்ரீமத் குமாரமூர்த்தி,—தவநிலையோர் தெய்வம் - தபசினுடைய நிலைமைக்குப் பிரதிஷ்டையான வொப்பற்றதேவன்,—பொருமறையார் கழல்வீரர் வீரன் - வேதத்தினாற் றுதிக்கப்பட்ட ஸ்ரீபாதங்களையுடையவன மஹாவீரர்களெல்லா † மக்ரகண்யனை,—கையிற் பூநீர்கொண் டோவாது போற்று மடியவர்கள்-சர்வகாலமுங் கையிலே புஷ்பத்தையும் ஜலத்தையுங்கொண் டர்ச்சித்துத் தோத்திரவழிபாடுசெய்யுந் தொண்டர்கள்,—கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன் - ஜநநாதிதுக்கங்களினாற் றங்களுடைய ஸ்வரூபஞானத்தை மறைக்கப்படாதபடிக்கு சத்கதியை க்ருபைபண்ணுமவன், சத்ருக்களைச் ¶ சோஷிப்பிக்கையினாலே கந்தனென்னுந் திருநாமத்தையுடையவன்,—கழலிணைகளென்சிரத்திற் கருத்தில்வைப்பாம் - வீரக்கழலைப்பொருந்திய விரண்டு ஸ்ரீபாதங்களையு மென்னுடைய சிரசினுமிருதயத்தினும் பொருந்த பாவிப்பாம்.

§ வேதோத்தா சாரயுக்தர் - வேதத்தினாலே சொல்லப்பட்ட வாசாரங்களை யநுஷ்டிப்போர், * தேவர்கடந் தேவ

னை என்பதனை யொருமுடிபாக்கி இந்த்ராதிதேவர்கட்கெல்லா மதிதேவனுயுள்ளவன் எனவும் இப்பாடல் முழுமைக்கும் பொழிப்புரையாகவும் சில ப்ரதியி லெழுதப்பட்டிருக்கிறது. †அக்ரகண்ணியன்-முதன்மைபெற்றவன, ¶ சோஷிப்பிக்கை - உலர்த்தல், வற்றுதல், வாட்டுதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அருமறையாகமமங்கம் - தனதிடத்திற் சிவதீக்ஷைபெற்ற பின ஆகமம், அதற்குமுன வேதவேதாங்கங்கள், அதற்குமுனமுன் பினமுன, — அருங்கலை - அரிதாகிய அறுபத்துநான்கா யிருக்கின்ற கலைஞானங்கள், — நூல் - சத்ததர்க்க மீமாங்கிச வேதாந்தமென்கிற சாத்திர மிவைகளைத் தான்போதிக்க, — தெரிந்த - அவைகளிலே சொல்லப்பட்ட பதார்த்தங்களை உத்தேச லக்ஷண பரீக்ஷைகளோடேகூட வறிந்த, — அகத்தியனுக்கு - அகத்தியமாமுனிக்கு, — ஓத்துரைக்கும் - பிரணவத்தை யுபதேசம்பண்ணி யதனமுடிவிற் சித்தாந்த மஹாவாக்கிய வுபதேசஞ்செய்யும், — அருட்குருவாங்குருனை - அநுக்ரக விக்ரக குருவாகிய குமாரன, — திருமறைமாமுனிவர் முனி - வேதவித்தாகிய முனீஸ்வரர்களுக்கு முனீஸ்வரன், — தேவர்கடந் தேவன் - தேவர்க்கு தேவன, — சிவனருள்சேர் திருமதலை - சிவனது க்ருபைபொருந்திய புத்திரன், — தவநிலைபோர் தெய்வம் - தவசைப்பண்ணுகிறபேர்க்குப் பலனகொடுக்கிற தேவன், — பொருமறையார் கழல்வீரர் வீரன் - போராநின் றறைந் தார்ப்பரியாகின்ற வீரவண்டையத்தையுடைய வீரர்க்கும் வீரன், — கையிற் பூநீர்கொளை டோவாது போற்றுமடியார்கள் - கரத்திற் புஷ்பந் தீர்த்தங்கொண்டு இடைவிடாது பூசிக்கும் பத்தர்களுக்கு, — கரும

றையாவகையருளி - ஜநநமரணங்களுக்குக் காரணமாகிய மல மறையாதபடி க்ருபைபண்ணி,—கதிவழங்கும்-சிவஸ்வரூப விளக்கமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும்,—நந்தன் - நமது குமாரஸ்வாமியினது,—கழலிணைகள் - இருபாதங்களை,—என்சிரத்திற் கருத்தில்வைப்பாம் - எமது சென்னியில்வைத்து வணங்கி மனசில்வைத்து த்யாநம்பண்ணுவாம்.

மறைஞானதேசிகர் உரை.

சுபக்ஷப் பாயிரம்.

மேற் சுபக்ஷஞ் சொல்லுவானறொடங்கித்
தெய்வவணக்க முணர்த்துகிறார்.

அறுவகைச் சமையத்தோர்க்கு மவ்வவர் பொரு
ளாய்வேறாங், குறியது வுடைத்தாய்வேதா கமங்களின்
குறியிறந்தங், கறிவினி லருளான்மன்னி யம்மையோ
டப்பனாகிச், செறிவொழி யாதுநின்ற சிவனடி சென்
னிவைப்பாம். (௧)

இ-ள். அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய்	உலோகாயிதன் பௌத்தன் அருகன் மீமாஞ்சகன் மாயாவாதி பஞ்சராத்ரியாகிய புறச்சமயிக ளறுவருந் தாந்தாங்கொண்ட கோட்பாட்டுக்குத் தக்க மூர்த்திகளுமாய்
வேறாங் குறியது வுடைத்தாய்	முற்கூறிய சமயிக ளிதுவே பரமமான மூர்த்தியென்று குறிக்கத்தக்க கோட்பாட்டுக்கெட்டாத முதலுமாய்
வேதாகமங்களின் குறியிறந்து	வேதாகமங்களிற் கூறிய நினைவுகளுக் கெட்டாத பொருளுமாய், ஆயினறியப்படானோவென்னில் ?

அறிவினி லருளானமனவி	சிவன் றனது காருண்யத்தினாலே பசுவான்மாக்களுடைய வறிவிலே யநவரதமு நிலைபெற்று
அம்மையோ டப்பனாகிச் செறி வொழிபாது நின்ற சிவனடி சென்னி வைப் பாம்.	பார்வதியாரும் பரமசிவனுமாய் விட்டுநீங் காம லநவரதமுஞ் சராசரங்களாகிய வான் மாக்கடோறும் வியாத்தியினாலே யந்நியமா யிருக்கிற சிவனுடைய சீர்பாதங்களை யாஞ் சென்னியில் வைப்பாம்—எ-று.

யாமென்ப தெழுவாய், வைப்பாமென்பது பயனிலை. "தன்மைப்பெயரு முன்னிலைப்பெயருந் தானுந்தொகலுமா மின்னிசைசெய்யுளினென்றனர்" எனபதனாற் றன்மைப்பெயர் தொக்கதெனவறிக.

பசுக்களினது நிறம் பலவாகினும் பால் ஒன்றானாற்போலச் சமயங்கள் பலவாகினும் பலத்தைக் கொடுக்கிறவன சிவ னொருவ னென்பதுகருத்து. "அறிவினான்மிக்க வறுவகைச் சமயத்-தவரவர்க்கங்கே யாரருள்புரிந்து" என்னுந திருவாக் கினு முணர்க.

சிவன சைவத்திற்குத் தாண்டவபூஷணனென்னு மூர்த் தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறுஞ் சடைமுடியுந்தரித்த மூர் தியாயும், மாவிரதத்திற்கெலும்பு மாலைதரித்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகம் புத்திரதீபமணிகடரித்த மூர்த்தியா யும், வாமத்திற்கு அக்கினியுமுபவீதமுந்தரித்த மூர்த்தியாயும், பை ரவத்திற்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித்த மூர்த்தியாயும், இவ ர்களெல்லா முகக்கண்ணையு முடையராயிருத்தலால் அவ்வவர் பொருளெனச் சிறப்பித்தார். (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

எ - து. புறச்சமயமாகிய உலகாயிதன் புத்தன் சமணன் மீமாம்சன் மாயாவாதி பஞ்சராத்தி அறுவர்களும், சைவம பாசுபதம் மாவிரதங் காளாமுகம் வாமம் பைரவம் என்னு மறுவர்களு மவரவர்கோட்பாடுகளுக்குத்தக்க மூர்த்திகளும் பொருளுமாய், அவர்கள் கோட்பாட்டுக் கெட்டாத அடையாளமுள்ள முதலுமாய்; வேதாகமங்களிற் கூறிய அடையாளங்களினை வுக்கெட்டாததா யிருக்குமாறு லறியப்படாத சூந்யமோவெனவில்? பக்குவான்மாக்களுடைய வறிவினுள்ளே சிவன காருண்யத்தினாலே விளங்கி நிலைபெற்றுநின்றுள்ளவன். மற்றவிடத்தி லில்லையோவெனனில்? பார்வதியும் பரமேஸ்வரனுமாகிய விருவரும் சடசித்துக்க ளியாவையினும் வ்யாபகமா யந்நியமாகவிருக்கிற சிவனுடைய சீர்பாதகமலங்களை யென்தலைமேல்வைப்பாம்—எ-று.

யாம் - எழுவாய் வைப்பாம் பயனிலை.

பசுக்களினது நிறம்பலவாறாலும் பாலொன்றாதல்போல் சமயங்கள் பலவாறாலுஞ் சமயத்துக்குக் கொண்டதெய்வங்கள் பலவாறாலு மதிலேநின்றும் பலத்தைக்கொடுக்குஞ் சிவனொருவனே! என்பது கருத்து.

இதற்குச்சம்மதி—"அறிவினுண்மிக்க வறுவகைச்சமயத்தவ்வவர்கங்கே யாரருள்புரிந்து" என்னும் பாட்டாலும் "யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள், வேதனைப்படுமிறக்கும் மறக்குமேல் வினையுஞ்செய்யும் என்பதனாலுமறிக. சித்- ௨—௫, ௨௫—௪.

வேறுங்குறியது வுடைத்தாயென்றது, சைவத்திற்குத் தாண்டவபூஷணனென்னு மூர்த்தியாயும், பாசுபதர்க்குத் திருநீறு

ஞ் சடையுந்தரித்த மூர்த்தியாயும், மாவிரதற்கு என்புமாலைதரி
த்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகம் புத்ரதீபந்தரி
த்த மூர்த்தியாயும், வாமதத்திற்கு அக்நியும் உபவீதத்தையுந் தரி
த்த மூர்த்தியாயும், பைரவத்திற்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித்
த மூர்த்தியாயும்; இவர்களெல்லா முக்கண்ணுமுடையராயிருத்
தலா லவ்வவர்பொருளாய் வேறுங்குறியது வுடைத்தாயென்
று சிறப்பித்தாரெனவறிக

* இப்பாட்டும் உரையும் சிலப்ரதிகளிலில்லை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சுபக்ஷ சிவதோத்ரஞ்செய்கிறார்.

அறுவகைச் சமயத்தோர்க்கும் - புறச்சமயிகளறுவர்க்குள் உலோகாயிதன் ப்ருதிவு அப்பு தேயு வாயு நாலுபூதங்களுமே கர்த்தாவென்பன், அருகன உலகமெலா மிந்தப்படி நித்யமாயிருக்கும்-தானே அருகேசுரன் குருதவமாத்திரத்திலே கர்த்தாவாயிருப்பனென்பன, புத்தனு மப்படி தானே சுகதா கர்த்தாவென்பன், மீமாங்கிசன் உலகமெலா மிந்தப்படி தானே நித்யமாயிருக்கும்-சரீரோத்பத்தியிலே கன்மந் தானே கர்த்தா வென்பன், பாஞ்சராத்ரி ஸ்ரீமந் நாராயணர் தானே யபின்னநிமித்தோபாதாநராய் ஜகத்கர்த்தாவாயிருப்பாரென்பன், மாயாவாதி பிரமந் தானே தனவிடத்திலே பரிணாமத்தினாலே தான் விவர்த்தத்தினாலேதான் ஜகத்கர்த்தாவாயிருக்குமென்பன், இப்படிச் சொல்லாநின்ற அறுவகைச் சமயத்தோர்க்கும், — அவ்வவர் பொருளாய் - அவரவர்களாலே சொல்லப்பட்ட கர்த்ருகாரணங்களை யதிஷ்டித்துக்கொண்டு அந்தக் கர்த்ருகாரணஸ்வரூபியாய், பின்னு முட்சமயிகளறுவர்; அவர்கட்குச் சிவனே தேவதையாகையாற் சைவர்க்குத் தான் டவபூஷண

னென்னு மூர்த்தியாய், பாசுபதர்க்குத் திருநீறுஞ் சடையுந் தரி
த்த மூர்த்தியாய், மஹாவிரதர்க்கு என்புமாலைதரித்தமூர்த்தி
யாய், காளாமுகர்க்குப் படிகம் புத்ரதீபமணிகள்தரித்த மூர்
த்தியாய், வாமர்க்கு அக்நியு முபவீதமுந்தரித்த மூர்த்தியாய்,
வைரவர்க்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித்த மூர்த்தியாய்,—வே
றுங்குறியது வுடைத்தாய் - வைதிகசைவர்க்கு உருத்ராகாரமா
ய், சைவசித்தாந்திகட்குச் சதாசிவாதியாகாரமாய், அதின மி
குந்த பக்குவர்க்கு,—வேதாகமங்களின குறியிறந்து - வேதாக
மங்களிற் கற்பிக்கப்பட்ட மூர்த்திகளைக் கடந்து,—அங்கு - அ
வ்விடத்தில்,—(அறிவினி லருளான்மன்னி) - அருளால் - சிவ
சத்தியால் விளக்கப்பட்டு மநோவாக்கதீதமாயிருக்கின்ற,—
அறிவினில் - தீக்ஷாவான்களுடைய சிற்சத்தியிலே,—மன்னி -
தோற்றி,—அ[illegible]யோடப்பணுகி - சிவசத்திமாத்ரசொரூப
மாகி,—செறிவொழி யாதுநின்ற - எங்கும் வ்யாபகமாயிராநி
ன்ற,—சிவனடி - சிவனது ஞானக்கிரியாசொரூபமா யிராநின்
ற சத்திரூபசாமர்த்தியத்தை,—சென்னிவைப்பாம் - உன்மனா
கலைக்குமேலே த்யானம் பண்ணுமற் றியானம்பண்ணுவாம்: நிர்
விகற்பமாகச் சிந்திப்பாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னு நான
கனுள் அகச்சமய மொழித் தொழிந்த முக்கூற்றுப்புறங்களிற்
றனித்தனி யறுவகைப்பட்ட சமயங்களின் றுகொண்டவற்று
ள்ளும் பலவேறுவகைப்பட வோர்த்துணர்கின்ற அவரவர்கொ
ண்ட முதற்பொருளாய்; அவரின்வேறாகிய பாடாணவாதமுத
லிய அகச்சமயத்தார்க்கு இலயம் போகமதிகாரமென்னு மூன
றவத்தையின் முறையே சத்தியு முத்தியோகமும் ப்ரவிர்த்திய

மெனனுந் தொழில் வேறுபாடுபற்றிச் சிவன் சதாசிவன் மகேசனெனனும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமெனனுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய், சித்தாந்தசைவர்க்கு அத்தடத்தகுறியையன்றி வேதாகமங்களின் கருத்திற்கிதமாய், உயிர்க்குயிராய், உயிர்கட்கெல்லாமறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுமாகி, எங்கணுமெக்காலமுஞ் செறிந்து வ்யாபகமாய் நின்ற சிவபிரான திருவடியைச் சிரமேற்கொள்வாமென்பதாம்.

பரபக்கத்துட் புறப்புறச்சமயத்தாரையும் புறச்சமயத்தாரையு மறுப்பவே, அம்முறைபற்றி அகப்புறச்சமயத்தாரும் மறுக்கப்பட்டாரோ யாவரென்னுங் கருத்தான், அவரையுமுடன்றழுவ அறுவகைச்சமயத்தெனப் பொதுப்படக் கூறினர்.

ஓர்த்தல் ஆராய்தல்.

விசேடியமடியாகலின் உடைத்தாயென்றார்.

சிவனடியென்றது உபசாரம்.

இதனுள், அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாமெனவே மேற்கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறுங்குறியது வுடைத்தாயெனவே முதற்சூத்ர முதலியவைந்து சூத்ரத்திற் பெறப்படுந் தடத்தட்பொருளும், வேதாகமங்களின குறியிறந்தெனவே இரண்டுமன்றி யேனைச்சொருபலக்கணங் கூறும் ஆறுஞ் சூத்ரப்பொருளும், அறிவினிலெனவே ஆன்மஸ்வரூபங் கூறு மேழாஞ் சூத்ரப்பொருளும், அருளான் மனனிலெனவே ஞானதரிசனங்கூறு மெட்டாஞ் சூத்ரப்பொருளும், அம்மையோடப்பனாகியெனவே ஞானமுஞேயமு ஞாதிருவுமாகக் காணப்படுமொன்பதாஞ் சூத்ரப்பொருளும், செறிவொழியாது நின்றவெனவே ஏகனாகிநிற்றல் கூறும் பத்தாஞ்

சூத்ரப்பொருளும் சிவனடி சென்னிவைப்பாமெனவே அரன
மலரடிக்கீழிருத்தல் கூறும் பதினொராஞ் சூத்ரப்பொருளும்,
சென்னிவைப்பா மென்னுஞ் சொல்லியல்பான அணைந்தோர்த
ன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்ரப்பொருளுங் குறிப்பா ன
றியக் கிடந்தன.

இங்ஙனந்தொகுத்துக் காட்டுதல் மங்கலவாழ்த்துக்கு இ
லக்கணமென வுணர்க.

இனி, இதனுட் கூறப்படுமறுவகை வினையெச்சங்களானு
ம் முதல்வனுடைய அறுவகைக் குணங்களுங் கூறப்பட்டன
வென்றுரைத்தலுமொன்று. அதுகாட்டுதும்:—

அவ்வவர் பொருளாயென்றதனால் அங்ஙனம் பலவேறுவ
கைப்பட நிற்கு மநந்தசத்தியாகிய அளவிலாற்றலுடைமை கூற
ப்பட்டது.

வேறுங்குறியது வுடைத்தாயென்றதனால் அநாதிபோத
மநாதிமுத்தத் தன்மையெனப்படும் இயல்பாகவே பாசங்களி
னீங்குதல் கூறப்பட்டது, நிராமயான்மா வெனப்படும் இயற்
கையுணர்வினனாதலு மீண்டேயடங்கும்.

வேதாகமங்களின குறியிறந்தென்றதனாற் சுதந்திரனெ
னப்படுந் தன்வயத்தனாதல் கூறப்பட்டது.

அறிவினிலருளான் மன்னியென்றதனாற் சர்வஞ்ஞத்வமெ
னப்படும் முற்றுமுணர்தல் கூறப்பட்டது.

அம்மையோடப்பனாகி யென்றதனால் அலுத்தசத்தியென
ப்படும் பேரருளுடைமை கூறப்பட்டது, விசுத்ததேகமெனப்ப
டுந் தூயவுடம்பினனாதலு மீண்டேயடங்கும்.

செறிவொழியாதென்றதனாற் பூர்த்தியெனப்படும் வரம்
பிலின்பமுடைமை கூறப்பட்டதென் றுணர்க.

இன்னும் விரிப்பிற்பெருகும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் - சைவம் பாசுபதம் மஹாவிரதம் காளாமுகம் வாமம் வயிரவம் என்று சொல்லப்பட்ட வாறுவகைப்பட்ட சமயத்துள்ளார்களும் அவ்வவர்கொண்ட கொண்ட கோட்பாடுகளுக்குத் தக்கதாக வநுக்கிரகஞ்செய்கிறவத்தமாய்,— வேறுங்குறியது வுடைத்தாய் - இந்தச்சமயங்கள் குறிக்கத்தக்க கோட்பாடுகளுக்கெல்லைப்படாத சுகஸ்வரூபத்தையுடைத்தாய்,—வேதாகமங்களின் குறியிறந்து - வேதாகமங்களினாலே யறுதியிடப்பட்ட பொருளுக்கு மெட்டாததுமாய்,— அறிவினிலருளால்மன்னி - தனது காருண்யத்தினாலே யான்மாக்கள்தோறு நிலைபெற்று நிற்பதாய்,—அம்மையோடப்பனாகி - ப்ரபஞ்சத்திலுள்ள வான்மாக்களுக்கெல்லாம் மாதாவும் பிதாவுமாகி,---செறிவொழியாதுநின்ற சிவனடிசென்னிவைப்பாம் - இப்படி சித்தசித்துக் களிரண்டினும்விட்டு நீங்காமல் நிற்கிற தம்பிரானுடைய ஸ்ரீபாதங்க ளிரண்டையு மென்னுடைய தலையின்மேல் வைத்துக்கொள்ளாநின்றேன்—எ-று.

அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய். எ-து உலோகாயிதன் புத்தன் க்ஷபணன் மீமாங்கிசன் மாயாவாதி பஞ்சராத்ரி என்றுசொல்லப்பட்ட புறச்சமயிகள் சிவனைக் கர்த்தாவாகக் கொள்ளாதபடியினாலே யவர்கள்கொண்ட கோட்பாடுகளுக் கறியப்படாத வத்தமாய்; சைவம் பாசுபதம் மஹாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம்என்று சொல்லப்பட்ட வறுவகைச்சமயத்துள்ளார்க்கு மவ்வவர்கொண்ட கோட்பாடுகளுக்குத் தக்கதாக அநுக்கிரகஞ்செய்கிற வத்தமாயிருக்கும் என்றது. இதற்குப்பிரமாணம் திருவாசகம் திருவண்

டப்பகுதி—"இருமுச்சமயத்தொருபேய்த்தேரினை - நீர்நசை தரவருநெடுங்கண்மானகணம்" எ-ம். "திருத்தகு - மறுவகைச்சமயத்தறுவகையோர்க்கும் - வீடுபேறுய்நின்ற" எ-ம். சித - பரபக்ஷம் பாயிரம் - ௪௦ - செ.—"இறைவனையுமிறைவனுலியம்பநூலும், மீண்டளவும்பொருளியல்பும்வேண்டுஞ்செய்தி, முறைமைகளும்பெத்தமொடுமுத்தியெல்லா, மூதுலகிலெமகியன்றமுயற்சியாலே, சிறையுலவும்புனனிலவத்தோன்றும்பேய்த்தேர்ச், செப்பைகபோலுண்டாயபொய்கொண்மார்க்கத், துறைபலவுங்காவிடையார்சொல்லிப்போக்கித், துகடீரவிந்நூலிறசொல்லகிற்பாம்" எ-ம். சங்கற்பநிராகரணம் பாயிரம்—"அஃதாலந்நூற் றனையுனிய - மாந்தரிதுவேபொருளென்றதனில - யஃறதினவேற்றோர்பனுவலேற்றோர்க - ளிசையாமாறுபாடுகூறுவாதலாற் - புறச்சமயங்கள்சிறப்பில வாகி - யருளின்மாகத்தைவெருளுறமயக்கி - யலைத்தேரினிலையிற்றீரு - மீங்கிவைநிற்க" எ-ம். "நீங்காச்சமய - மூவிருதகுதிமேவியதாமு - மொனறொடொனறுசென்றுறுநிலையி - லாறுமாறுவீறுடைத்து" என்னுமதுங் கண்டுகொள்க.

வேறுங்குறியதுவுடைத்தாய். எ-து. இந்தவுட்சமயத்திலுள்ளவிவர்களுக்குஞ் சிவனைக கர்த்தாவாகக்கொண்ட வம்மாதரமொழிந்து த்ரிபதார்த்த நிர்ணயமுடையவர்க ளல்லவெனறறிக.

வேதாகமங்களின் குறியிறந்து. எ-து. வேதாகமங்கள் மனவாக்குக்காயங்களினு லறிகையினு லப்பாசஞானமெனக் கொள்க.

செறிவொழிபாதுநின்ற சிவன். எ-து. பெத்தமுத்தியிரண்டிடத்திலும் விட்டுநீங்காமை நிற்பனெனக்கொள்க.

இதுவரை நிர்ணயம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அறுவகைச்சமயத்தும் - புறப்புறம் புறம் அகப்புறம் அக மென்று நான்கனுளகச்சமயமொழித் தொழிந்த முக்கூற்றுப் புறங்களிற் றனித்தனி யறுவகைப்பட்ட சமயங்களினின்று கொண்டு,—ஓர்க்கும் - அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டவா வியந்தறிகின்ற,—அவ்வவாபொருளாய் - அவரவர்கொண்ட மு தற்பொருளாய்,—வேறுங்குறியது உடைத்தாய் - அவரினவே றாகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயபோ கமதிகாரமென்னு மூன்றவத்தையின, முறையே சத்தியு முத்தி யோகமும் ப்ரவிர்த்தியுமெனனுந தொழில் வேறுபாடுபெற்றி சி வன் சதாசிவன் மகேஶ்வரன் என்னும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமென்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத் தாய்,—வேதாகமங்களின் குறியிறந்து - சித்தாந்தசைவருக்கு த் தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களினகருத்துக் கதீத மாய்,—அங்கறிவினில்-அவ்விடத்துயிர்க்குயிராய்,—அருளான் மன்னி - அருளாணிலைபெற்றுயிர்கட்கெல்லா மறிவைப்பிறப்பிக் கும்,—அம்மையோடப்பனாகி - அம்மையப்பனாகி,—செறிவொ ழியாதுநின்ற-எஞ்ஞான்றுமெக்காலமுஞ்செறிந்து வியாபகமாய்நி ன்ற,—சிவனடி சென்னிவைப்பாம்-சிவபிரான் திருவடிகளைச்சி ரமேற்கொள்வாம்—எ - று.

இஃது கடவுள்வணக்கம் கூறியது.

* இவ்வுரை சிவஞானயோகியர் பொழிப்பிற் கிணங்கச் செய்திருப்பதை அவ்வுரையாற்காண்க.

மறைஞானதேசிகர் உரை.

இதற்குமேன் முன்னூற்சிறப் புணர்த்துகிறார்.

என்னையிப் பவத்திறசேரா வகையெடுத் தென்
சித்தத்தே, தன்னைவைத் தருளாலே தாளிணை தலை
மேற்சூட்டு, மின்னமர் பொழில்சூழ்வெண்ணெய் மேவி
வாழ் மெய்கண்டானூல், சென்னியிற் கொண்டுசைவ
த் திறத்தினைத் தெரிக்கலுற்றாம். (௨)

என்னையிப்பவத்தில்... .... தெரிக்கலுற்றாம். எ-து ஒன்றாகரு மாகாமலான ஜநநமரணசமுத்திரத்திலே கிடந் தடிபடுகிறவென்னைத் தனது ஞானமாகிற கையைக் கொடுத் தென்னுடைய விதயகமலத்திலே தன்னை யநவரதமு நினைக்கும்படி யிருத்திப் பாசநாசம் பிறக்கும்படி தனது காருண்யத்தினாலே சீர்பாதங்க ளிரண்டினையு மெனதலைமேல் வைத்தருளி, மேகம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரே பதியாகவிராநின்ற ஸ்ரீ மெய்கண்டதேவநாயனா ரருளிச்செய்த ஞானசாத்ரமான சிவஞானபோதத்தை யெமதுதலைமேல் வைத்துக்கொண் டதன்வழியே சைவசித்தாந்தத்தி னுண்மையின் றிறத்தை யாம் தமிழாலே சொல்லப்புகாநின்றோம்—எ-று.

யாமென்ப தெழுவாய், தெரிக்கலுற்றாமென்பது பயனிலை. "சொல்லேயாயினுங் குறிப்பேயாயினுஞ் சொல்லிமுடிப்ப வேண்டுவதெச்சம்." என்பதனால் தமிழாலென்பது சொல்லெச்சம்.

வடமொழி ப்ராக்ருதம் சௌரஜக்யாத்கதி பைசாசி சூலிகாபைசாசி அவப்பிரம்சம் தேசி எனப்பாடபேதம் பலவாயிருக்கவு மிவ்வாசிரியர் தமிழாற் கூறியதென்னெனில்? வட

வேங்கடந்தென்குமரி நடுத்தமிழ்வழங்கும்பூமி யாதலாற் கா
மிகமுதலிய விருபத்தெட்டுத் திவ்வியாகமங்களை யானமாகக
எறிதற்குச் சிற்றறிவாதலால் ஸ்ரீநந்திகேஶ்வரநாயனார் பன
னிரண்டு சூத்ரமாகச் சநற்குமாரபகவானுக சறுககிரகஞ் செ
ய்தருளினா.

அதனைச் சர்வானமாக்களு ளெளிதிலறிந் திடேறும்படிக்
கு ஞானசிந்தாமணியாகிய மெய்கண்டதேவநாயனார் பார்
சது முதனூல் கருத்தனளவு மிகுதிப்பொருள செய்விததோ
ன எனுமிலக்கணததால் முதனூற்பெயரிட்டு வழிநூலாக்கி
யருளிச்செய்தார்.

அவர் மாணுக்கராகிய வருணந்திதேவநாயனார்திருத்து
றையூரொன்னுக திருப்படைவீட்டி லெழுந்தருளியிருந் தம்முன
னூல்வழியே பன்னிரண்டு சூத்ரமாககிச் சிவஞானசித்தியென
னுஞ் சிறப்புத்திருநாமஞ் சாதநித் தமிழாலருளிச்செய்தார்.

அஃதெக்காரணத்தாலெனவில?—

"சீரார்கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமங்கற்
றோராய்வதுவட சொற்பயின்றோர்களே தமமொழியைச்
சாராதவரு'ர்த் தத்துவஞானந் தலைப்படுதற்
கோரார்தமிழ்ச்செய்யுளான மயநிர வெழுதுவனே."

என்பதனாலறிக. (உ)

சிவாக்ரயோகியருடைய வருமாறு.

——0——

குருஸ்துதி.

மேகம்பொருந்துஞ் சோலைசூழ்ந்துள்ள திருவெண்ணெய்
நல்லூரிலே திருவவதாரஞ்செய்து ஒன்றுக்கும் பற்றுதவெலனை
யெழுவகைப்பிறப்பாகிய கடலிலழுந்தாதவகை தனது ஞான
மாகிய கையினாலே யெடுத்து ஸந்ததமுந் தன்னை யென்னித

யத்திலே சிந்திக்கவைத்துக் கிருபையினாலே தம்முடைய ஸ்ரீ பாதங்களை யென்னுடைய புன்றலைமேல்வைத்தருளும் மெய்கண்டதேவநாயனா ரருளிச்செய்த சிவஞானபோதமென்னுஞ் சாஸ்திரத்தை சிரஸாகவஹித்துக்கொண்டு சைவத்திற்றிரிபதார்த்த சதுஷ்பாதங்களையுஞ் சொல்லாநின்றேன் எனறிதனபொருள்.

யாம் - எழுவாய், பயனிலை - தரிக்கலுற்றும்.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

—o—

தமது குருவணக்கங்கூறி முன்னூற்சிறப்பு முறைக்கின்றார்.

(செம்பரத்தைப் பூநிறமா யொருமுகமு மிருபுயமுமுடையராகிச் செம்பட்டுஞ் செஞ்சந்தனமுஞ் சிவந்தமாலையுந் தரித்தவராகிய குருமூர்த்தியா லதிஷ்டிக்கப்பட் டந்த ரூபியாயிருந்து) அருளினாலே - தனது தீக்ஷாகன்மத்திலே விளங்காநின்ற தீக்ஷையென்னு மியற்கைப்பெயரையுடைய சிவசத்தியால்,—என்னை - அநாதியிலே பசுத்துவத்தினாலே யஞ்ஞானியாயிருக்கிற வென்னை,—இப்பவத்திற் சேராவகை - இந்த ஜநநமரணங்களுக் கேதுவாயிருக்கின்ற மலமாயாகன்மங்களோடு பொருந்தாமலிருக்கும்படி ஜடத்வசோதனைசெய்து,—எடுத்து - சமனுந்தம் பாசக்கூட்டங் கூடாதவகை சின்மாத்ர சுத்தகேவலமாய்ச் சேஷிகப்பண்ணிச் சேஷித்துநின்ற,—என்சித்தத்தே - வித்யாதத்வமென நிசைக்கப்படு முன்மனாமூலத்துச் சின்மாத்ரமா யான்மாவென்று செப்பப்படு மெனதான்ம தத்வத்திலே,—தன்னைவைத்து - உன்மனாகார வித்யாதத்வத்து பரியுந் தனது பரசிவஸ்வரூபத்திற் கொத்து விரிதலமுதலாகிய குணங்களோடுகூடிப் பரமென்றுரைக்கப்படு மெனது வித்யா தத்வத்தை விளக்கித் திரும்ப,—அருளினாலே - தனது சத்தி

சங்கற்பத்தினாலே,—தாளிணை - ஒவ்வொன்று மும்மூன்றாய்ச் சுத்தசிவ சாட்குண்ணியரூபமாகிய ஞானசத்தி க்ரியாசத்தி யிருசத்தியாகிய வொருசத்திகளைகொத்து, அப்படி சாட்குண்ணிய பரிபூரணமாகிய சிவதத்வத்தோடு கூட்டிச் சுத்தசிவமென்று செப்பப்படுமென்ற சிவதத்வத்தை,—தலைமேற்சூட்டும் - முன்சொன்ன பரமாகிய வித்யாதத்வத்துக்கும் பரிமுடிபோலச் சிறப்பித்துப் பிரகாசிப்பிக்கும்,—மின்னமர் பொழில்சூழ்வெண்ணெய் - மின்னைப்பொருந்திய மேகங்கள் படியாநின்ற சோலைசூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரினைக்கண்ணே,—மேவிவாழ மெய்கண்டான் - பொருந்திவாசம்பண்ணுகின்ற சத்தியதரிசியென்னும் பெயருடைய பரமாசாரியனது,—நூல் - வடமொழிச் சிவஞானபோதத்தைத் திரித்த தென்மொழிச் சிவஞானபோதத்தை,—சென்னியிற்கொண்டு (சென்னியிற்கொண்டென்பது பூஜ்ய வார்த்தை) செவிக்கேற்கக்கேட்டு மனதிலுட்படுத்திச் சிந்தித்துத் தெளிந்து,—சைவத்திறத்தினை - சைவாகமத்திலே சொல்லுக திரிபதார்த்த லக்ஷணத்தை,—தெரிக்கலுற்றாம் - விரித்துச் சொல்வாம்.

இந்த விருத்தத்திற் கிதுவே கருத்தென்பது காண்பிப்பாம்.

"என்னை யிப்பவத்திற் சேராவகையெடுத்து" என்பதனாற் சமனுதபாசமுத்தி சொல்லப்பட்டது.

"எனகத்தே தனைவைத்து" என்பதனால் உன்மனாவதியுள்ள சிகாசசேதமுனாக நிஷ்கள சர்வாதிக்கிராந்தவிந்துக பரசிவத்திலே யோசனை சொல்லப்பட்டது.

"தாளிணை தலைமேற்சூட்டும்" என்பதனால் சிவத்வாபிவியக்தி லக்ஷண நிஷ்களாதீத சுத்தசிவமாதல் சொல்லப்பட்டது.

இதுவன்றி "என்சித்தத்தே தன்னைவைத் தருளினாலே" என்றது, இருதயத்திற் சிவரூப ஸ்வரூப குருத்யானஞ்செய்வித்து என்றுபொருளுரைத்தாற் சமனுந்த முத்திப் பொருள்கொடுக்கும் எடுத்து என்றதோடு மாறுபடும்.

"தாளிணைதலைமேர்சூட்டும்" என்பதற்குத்தனதுபாதங்களைச் சிரசிலேவைக்கும்என்று பொருளுரைத்தாலும்அப்படிப் பொருள் பகைத்து மாறுபடும்.

அதனாற் பொருள் பகைத்தவிடத்தில் லக்ஷணையினாற் பொருளுரைப்பதே யியல்பு. அதுவன்றிப் பொருள் பகைத்தவிடத்துஞ் சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கிற் கட்டில் கூப்பிட்டதென்றவிடத்து முக்யப்பொருளுரைத்தா லப்பொருள் பகைக்கும்; ஆகலா லப்பொருள்விட் டாதாரலக்ஷணையிற் கட்டிலிருக்கும் புருடன்என்று கவுணப்பொருளுரைக்கவேணுமிடத்து மப்பொருள்விடுத் கட்டில் தானே கூப்பிட்டுதென்று முக்கியப்பொருளுரைக்கவேண்டும். ஆயுக்ருதம் என்றவிடத்துங் காரணலக்கணையினாலே ஆயுவுக்குக் காரணமாகிய க்ருதமென்று பொருளுரையாது ஆயுதானே க்ருதமென்று பொருளுரைக்கவேண்டும். நூலுடுப்புடையன என்றவிடத்துங் காரியலக்ஷணையினாலே நூலினுண்டாகிய புடவையென்று பொருளுரையாது நூல்தானே யுடுப்பனென்று பொருளுரைக்கவேண்டும். கங்கையிலே யிடச்சேரி என்றவிடத்துஞ் சமீபலக்ஷணையினாலே கங்காதீரத்திலே யிடச்சேரியென்று பொருளுரையாது கங்காஜலப் பிரவாகத்தில் யிடச்சேரியென்று பொருளுரைக்கவேண்டும். பிச்சை சிதம்பரத்தில் வசிப்பிக்குது என்றவிடத்து முபகாரலக்ஷணையினாலே பிச்சை. வாசோபகாரமா யிருந்ததென்று பொருளுரையாது பிச்சைபிடித் திருத்தித்தென்று பொருளுரைக்கவேண்டும். சிக்க

நதானே புருடனென்றவிடத்துஞ் சாமர்த்ய சாதுர்யவி லக்ஷணையினாலே சிங்கத்திற்கொத்த சாமர்த்யவானென்றே பொருளுரையாது சிங்கந்தானே புருடனென்று பொருளுரைக்கவேண்டும் இதுவுமன்றி வீடத்தைக்காப்புசி இவன்வீட்டிற் புகுமாதே என்பதுமுதலர்த்தவாதத்துக், மலைதலையினுற் பிளப்பனை என்பதுமுதல் அதிவாதத்தும், சொற்பொருளிருக்கபடி பொருளுரைக்கவேண்டும்; அப்படியுரைத்தாலெல்லாமியம முறைமை தப்பும். ஆகலால் தாளிணைதலைமேற்சூட்டும் என்றவிடத்துஞ் சாம்பவதீக்ஷையிற் றிருவடி சிரசிற்சூட்டுமிடத்து சிவசத்தி ரூபாகத்திற் பூசிக்கப்படுதலாற் குருபாதமாகிய ஆதாரவிலக்ஷணையினுற் சிவசத்தியென்றே பொருளுரைக்கவேண்டும். அப்படிப் பொருளுரைத்தாலுஞ் சிவசத்தி, சங்கிராந்திசொல்லும் பாசுபதிமதமாம். சிவனைக்குறித்தென்றலும் சிவாவேசஞ்சொல்லுங் காபாலமதமாம் ஆதலாற் காரியவிலக்ஷணையினாலே சிவசத்தியால் விளக்கப்பட்ட சிவஸ்வரூப வான்மசித்தித்தைச் சூட்டுமென்று முன்னுரைத்தபடிக்கே பொருளுரைக்க

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

எ-து. பவமாயக்கடலில்மூழ்குகின்ற வென்னை அதன்கணழுந்தாதவண்ணங் கருணைக்கையாலெடுத்து, என்னறிவின கண்ணே தற்சொரூபத்தை விளக்குதற்கெழுந்தருளிவந்து, திருவடி சென்னியிற் சூட்டித் தீக்ஷைசெய்தருளிய வெண்ணெய் மெய்கண்டதேவன் மொழிபெயர்த்துரைத்தருளிச்செய்த சிவஞானபோதநூலை; ஏனையாசிரியன்மார் செய்த பிரமாணநூல்கட்கெல்லாஞ் சித்தாந்தமாகக் கொண்டு, அதனிற் கூறப்படுஞ் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவா மென்பதாம்.

இந்நூலுக்கு வழிகூறியவாறு.

எடுத்தென்றது குறிப்புருவகம்.

வைத்தென்றது உபசாரவழக்கு; "அன்போடியைந்த வழக்கு" என்றாற்போல.

சென்னியின் இன் உவமவுருபு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இதனாற் சொல்லியது சிவஞானபோதத்தி லருளிச்செய்யப்பட்ட சைவசித்தாந்தத்தி னுண்மையை யானு மிந்நூலிலே விரித்துச்சொல்லுகிறேனென்னு முறைமையை யறிவித்தது.

என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத்து - ஒருவருக்கும் பற்றாதவென்னை யிந்தச்சனனங்களில்வந்து பிறவாதபடி யெடுத்து,—எனசித்தத்தே தனைவைத்து - என்னுடைய விதயத்திலே தன்னை யிருத்தி,—அருளினாலே தாளிணை தலைமேற்சூடும் - தன்னுடைய காருண்ணியத்தினாலே தனது ஸ்ரீபாதங்களிரண்டையு மென்னுடைய பொல்லாத தலையின்மேல் வைத்தருளின,—மின்னமர்பொழில்சூழ் வெண்ணெய்மேவிவாழ் மெய்கண்டானூல் - மின்பொருந்தப்பட்ட சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரைத் திருப்பதியாகப்பொருந்தி வாழ்கின்ற மெய்கண்டதேவ நாயனா ரருளிச்செய்த சிவஞானபோதத்தை,—சென்னியிற்கொண்டு - என்னுடைய தலைமேல் வைத்துக்கொண்டு,—சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றும் - சைவசித்தாந்தத்தி னுண்மையைச் சொல்லப்புகாநின்றேன்—எ-று.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

என்னை - பவமாயக்கடலு ளழுந்துகின்றவென்னை,—இப்பவத்திற் சேராவகை - இப்பவக்கடற்க ணழுந்தாதவண்ணம்,—அருளினொடெடுத்து - கருணைக்கையா லெடுத்து,—என சித்ததே - என்னறிவின்கண்ணே,—தன்னைவைத்து - தற்சொரூபத்தை விளக்குதற் கெழுந்தருளிவந்து,—தாளிணை - திருவடிகளை,—தலைமேற்சூட்டும் - சென்னியிற்சூட்டித் தீக்கைசெய்தருளிய,—மின்னமர் - மின்பொருந்திய மேகந்தங்குதற் கிடமாகிய,—பொழிற்சூழ்-சோலைகள் சூழ்ந்த,—வெண்ணெய்மேவிவாழ் -திருவெண்ணெய்நல்லூரென்னுந் திருப்பதியில் விரும்பி வாழ்கின்ற,—மெய்கண்டானூல் - மெய்கண்டதேவன மொழிபெயர்த்துவைத்தருளிச்செய்த சிவஞானபோதநூலை,—சென்னியிற்கொண்டு - ஏனையஆசிரியர்கள்செய்த ப்ரமாணநூல்கட்கெல்லாஞ் சிரத்தானமாகக்கொண்டு,—சைவத்திறத்தினை - அதனிற் கூறப்படுஞ் சைவாகமப்பொருட்கூற்றை,— தெரிக்கலுற்றும் - விளக்குவாமென்பதாம்.

இது நூற்கு வழிகூறியது.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

அவையடக்கம்.

நீடுபுகழுலகுதனினைமைந்தர்மாதர்
கேயமொடுகோம்பயந்தபுதல்வர்வாயிற்
கூடுமொழிமழலையொடுகுழறியொன்றுங்
குறிப்பரிதாயிடினுமிகக்குலவிப்போற்றி

மாடுமிக்கிதவென்றுகொண்டுவாழ்வ
ரதுபோலமன்னுதமிழ்ப்புலமையோரென
பாடுகவிகுற்றங்களபாராரிக நூல்
பாராட்டாநிற்பரருட்பரிசினாலே.

பெரிதாகிய புகழையுடைய வுலகத்தினகண் மக்களுமக விர்களும் விருப்பத்தினாலே தாயகளபெற்ற குழந்தையினது வாக்கிலுண்டா மதலைச்சொல்லானது அவ்யத்தமாகச் சப்தத்தையு மருத்தத்தையுந் தெரியவரிதாயினு மகிழ்ந்து துதித்திதர வாககினாலே வியததமாயிருககிற சப்தங்களைக்கேட்பதினு மிப்பிள்ளையினுடைய மழலைச்சொல்லே நமககினிதென்று சந்தோஷித்துக்கொண்டு வாழ்வர். அதுபோலத தமிழுணாந்த பெரியோருமெனனுற் சொல்லப்பட்ட விந்நூலுக் கெழுத்துச் சொர்பொருளியாப பலங்காரமெனனப்பட்ட பஞ்சாதிகாரக் குற்றங்கள பாரார்களா; சிவனருளாற்பண்ணுங் க்ருத்யங்களை யிந்நூலிற் கூறுகையா லவ்வியல்பினு லிந்நூலைப் பரிபாலநம் பணணுநிற்பர்.

நூற்கதிகாரியும் - நூல்வழியும் - நூற்பெயரும்.

போதமிகுத்தோர்தொகுத்தபேதமைக்கே
பொருந்தினரியவர்ககனறிசகதிப்பாற்செல்ல
வேதநெறியெனு மவர்கட்சறியமுனனு
ளிறைவனருணந்திகணத்தியம்பநந்தி
கோதிலருட்சநற்குமாரர்க்குக்கூறக்
குவலயத்தினவ்வழியெங்குருநாதன்கொண்டு
தீதகலவெமக்களித்தஞானநூலைத்
தேர்ந்துரைப்பன்சிவஞானசித்தியென்றே

ஞானாதிகாரியாகிய சாம்சித்தர்க்கும், உலகவாழ்வே மெய்யெனாறுந் தேகமே யான்மாவென்றுமிருக்கும் ப்ராகருத ஜனங்களுக்குமன்றி; மோக்ஷத்துக்கேது வென்னையென்று சிந்திக்கும் வைநயிகர்க்கறியும்படி யாதிகாலத்திற் சர்வலோக ஸ்வாமியாகிய ஸ்ரீகண்டபரமேஶ்வரன ஸ்ரீநந்திகேஶ்வரர்க்கநுக்கிரகம்பண்ண அவர் க்ருபாமூர்த்தியாகிய சநற்குமாரபகவானுக்கு அநுக்கிரஹிக்க, அக்குருபரம்பரையிலே என்னுடைய குருவாகிய மெய்கண்டதேவ சிவாசாரியரெனக் குபதேசம்பண்ணின ஞானசாஸ்த்ரத்தை யதார்த்தமாகவுணர்ந்து சிவஞானசித்தியென்னு நாமமாக விச்சாஸ்த்ரத்தைக் கூறுகின்றேன.

சாம்சித்தராவார் - சாமாந்யமான இஷ்டாபூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான விசிஷ்ட சிவதருமமாகிய சரியை க்ரியா யோக மியற்றி யதனான் நின்மலாங்கக்காரணராய்; அந்தத் தேகம்விட்டு மந்தஞானங்கெடாமன் மீளவும் ஜநிக்கும்பொழுது மந்தஞானத்துடனே ஜநித்து சிவபாவனை பண்ணுமவர்.

வைநயிகராவார் - விநயசீலரா யுலகத்துக்குயர்ந்தோர் போதிக்குஞானத்தினாலுங் குருபதேசத்தினாலுஞ் சிவசாஸ்திரத்தினாலு நித்யாநித்யவஸ்து விவேகிகளாய், மனோவாக்குக்காய வ்யாபாரங்களினாற் சர்வகன்மங்களையுந் துடைக்கப்பட்டவர்களாகிக் கிரமத்தின் மோக்ஷத்தையடைபவர்.

ப்ராக்ருதராவார் - பூமியில்ஜநித்த மேற்சொற்பனத்தின் ஞானம்போ லறிந்தறியாமலுங் கிளிஞ்சலை வெள்ளியென்று அறிவதுபோல விபரீதஞானியுமா யதனாலே தேகாதிகளை யானமாவென்றும் ப்ரகிருதி § ஐக்கியவஸ்துக்களையே பரமென்று மெண்ணுமவர்.

* தது-க்தம் கௌர்மே — விஶிஷ்டயாத்வைஸாங்க்யா
ஸௌத்ரீ [illegible] | [illegible]
ஹாவாபியே விஷ்ணவ: || [illegible]
[illegible] | [illegible]
[illegible] || ப்ராக்ரு
தா [illegible].

§ ஜங்கியவஸ்துக்கள் - உண்டானவஸ்துக்கள்.

* "நீடுபுகழ்" "போதமிருத்தோர்" எனனுமிவ் விரண்டு செய்யுளும் பரபக்ஷத்தன; இவவுரையாசிரியர் இதனை வருவித்துரையுரைத்தனர்.

மறைஞானதேசிகர் உரை.

மேனூற்பய னுணர்த்துகின்றார்.

பண்டைநற் றவத்தாற்றோன்றிப் பரமனைப் பத்
திபண்ணும், தொண்டரைத்தானேதாய கதியினின்
றெருகுப்பன் மார்க்கர், கண்டநூ லோதிவீடு காதலிப்
பவர்கட்கீசன், புண்டரீ கத்தாள்சேரும் பரிசினைப
புகலலுற்றும். (க)

(இ-ள்.) பண்டை ஆன்மாக்கள் முன்ஜநநத்தி லார்ஜ்ஜி
கற் றவத் த தபோபலத்தாற் பூமியின்க ணற்சாதி
யாற் றோ யிற்றோன்றி ஞானாசாரியனை யடைந்து சரி
வந்திப் பரமனைப் பை முதலியவற்றாற் சிவனை வழிபடாநின்

பத்தி பண்ணுந்
தொண்டரைத்
தானேதுய கதி
யினிற் றெருப்
பன

ற வெண்வகைப்பத்திலைபயுடைய பக்தஜ
னங்களைச் சிவன் றானே தூயகதியாகிய சுத்
தாத்வாவிலுண்டாகிய போகங்களைப் புசிப்
பிப்பன்

மார்க்கர் க
ண்ட நூலோதி
விதிகாதலிப்பவ
ராகட்டீசன புண்
டரிகத தாள்சே
ருமபரிசினைப் பு
கலலுற்றும்

அணு சதாசிவ ரட்டவித்யேஶ்வரர்களா
ற் பரம்பரையாக வுண்டாக்கப்பட்ட இவ்
யாகமங்களை யோதி மோட்சத்தை யடை
வோமென றிச்சையுடைய வானமாக்கடகு
முனனுள்ள சிவத்வாபிவியத்தியைப் பொரு
ந்துமுறைமையை யாஞ் சொல்லப்புகாநின
றேம்—எ-று.

மாாககரெனபது ஆசாரியர்களையுஞ் சொல்லப்பெறும்.

ஈசன - எழுவாய், தொகுப்பன - பயனிலை.

யாம்-தோனறுவெழுவாய், புகலலுற்றும்-பயனிலை. (௩)

சிவாக்ரயோகியரு[illegible]ா வருமாறு.

—o—

மேல்விஷயப் பிரயோசன சம்பந்தாதிகாரிகளைக் கூறுகின்றது

பன்னைடநற் றவததாற்றேன்றிப் பரமனைப்பத்திபண்ணுந தொணடரைத் தானேதுய கதியினிற் றெருப்பன் - பூர்வஜக் மததிற் சரிதை கிரியா யோகஙகளைச்சாதித்த பெயர் வரப்பிர சாதததிறைற் சுக வாமதேவ ஜடபரதாதிகளைப்போற் பூர்வ ஜகம ஸ்மரணையுடனே பிறந்து,சிவனிடத்தநந்ய பத்திபண்ணு ஞ சாமசித்தரை; யாசாரியமூர்த்தியை யபேக்ஷியாமற் சிவன

றன்மையிற்றானே விஞ்ஞானகலர் ப்ரளயாகலர்க் கநுக்கிரஹம் பண்ணுவதுபோல வநுக்கிரகம் பண்ணுவர்,—மார்க்கண்டரு மேலாதி விடுகாதலிப்பவர்கட் கீசன் புண்டரீகத்தாள்சேரும் பரிசினைப்புகலலுற்றும் - பூர்வஜந்மத்திலே சிவதர்மங்களை யநுஷ்டித்து ஞானசித்தியின்பொருட்டு பூமியிலே ஜநித்து குருவினாலே தீக்ஷிதராகிச் சன்மார்க்கஸ்தரா யுள்ளவர்கள் பண்ணப்பட்ட ஞானசாஸ்த்ரத்தை யோதி யறிந்து மோக்ஷத்தை யடையவேணுமென்கிற விச்சையுடைய வைநயிகர்க்கு பரமேஸ்வரனுடைய ஸ்ரீபாதகமலங்களைப் பொருந்துமுறைமையைச் சொல்லுகின்றேன்.

சிவன - எ-ய், தொகுப்பன் - ப-லை. யாம் - தோ-எ-ய், புகலலுற்றும் - ப-லை.

ஈசன எனவே பதி, புண்டரீகத்தாள்சேர எனவே சேர்பவன-பசு என்று சொன்னது, சேரும் பரிசு எனவே பாசத்தை நீங்குமுறைமை என்றது; இது த்ரிபதார்த்தம்.

இந்தச் சாஸ்த்ரத்திற்கு விஷயம் திரிபதார்த்தம், ப்ரயோசநம் - சிவசாயுச்யம், அதிகாரி - வைநயிகன், சம்பந்தம் - சொல்லப்படுகிறதுஞ் சொல்கிறது எனனும் ப்ரதிபாத்ய ப்ரதிபாதகபாவம், நற்றவம் - கன்மநிஷ்ட தபசன்றியே ஞானநிஷ்டமான தபசை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

டண்டைநற்றவத்தால் - மாபாதகபோக சம்பந்தநினாலே முந்திய ஜன்மத்திலே மலபரிபாகமானது சத்தேதோற்றுகின்றளவி லதற்கநுகுணமாகிய தீக்ஷைமுன்னாகத்தா னிலக்காமற்றான் சைவப்பிரகாரமாய்த்தான் வைதிகப்பிரகாரமாய்த்தான் பூசாவிரதமுதலியவற்றினாலே சிவலோகமுதலாகிய ஸ்தானங்களிலே போகம்புசித்துத் திரும்ப,—தோன்றி - பூலோ

கத்திலே வந்த ஜன்மித்துத் தீவிர தீவிரதர மலபரிபாகத்தி
னாலே,—பரமனைப் பத்திபண்ணும் - சிவனைக்குறித்துத் தியா
நம்பண்ணும்,—தொண்டரை - அடியார்களை,—தானே - கு
ருவதிஷ்டானமன்றியிலே நிராதிகரணமாகத் தானே சத்திசங்
கற்பமாத்திரமாயிருக்கின்ற நிராதிகரணதீக்ஷையினாலே தீக்ஷித்
துச் சுத்தபுவநத் திருத்தியு மிருத்தாமலும்,—தூயகதியில் -
சிவசமானரூபவியத்த சிற்சத்திரூப சிவதத்வத்திலே,—தொகு
ப்பன் - கூட்டுவன், சாத்திரந் தேவையில்லை. தீவிர தீவிரதர
மந்த மந்ததர மலபாகத்தினாலே சாதி காணசத்தியோ நிர்
வாணதீக்ஷையினாலேதான, சதத்தியோ போகதீக்ஷையினாலே
தான், தீக்ஷிதற்கட்கு மொனறும் வேண்டுவதில்லை யாதலால்
சாதி கரணவசத்தியோ நிர்வாணதீக்ஷையினாலே தீக்ஷித்துக்
கொண்டு ஆரியபாஷை தெறியாதபடியால்,—மார்க்கர் - சைவ
சித்தாந்தமார்க்கதரிசிகளா யிருக்கின்ற தேசிகர்,—கண்ட நூ
லோதி - தமிழ்ப்பாஷையிற் பண்ணின சாத்திரத்தைப்படித்
ததனாற் பதிபசுபாசலக்ஷணங்களை யறிந்துதான், ஒருபிரதேச
ங்களையறிந்துதான், அவரவர் மரியாதியில்வந்த வந்தந்த ஞா
னங்கொண் —டதந்திஞானஞ் சாக்ஷாத்காரரூபமாய்ப் பலத
துககுவருப்பொருட்டு ஒனறுக்கொன்று ஐககாரியாயிருக்கின
ற சரிகை க்ரியை ஸாலம்ப நிராலம்ப சிவயோகங்களை யநுஷ்
டித்து,—வீடுகாதலிப்பவர்கட்கு-முத்தியை விரும்புமவர்களுக்
குச் சாக்ஷாத்கான பதமுத்தியிலிருந்து பாரம்பரியத்தினாலே
தான்,—ஈசன்புண்டரீகத்தாள - ஓதனத்தினது பாகந் தேவ
தத்தனதுபாகம் எனபதுபோல ஈசன் புண்டரீகத்தாள் என்
றுஞ் சொல்லப்படுமாதலால், இருளிரூற்கு வித்து சூரியனது கி
ரணத்தினு லலர்ந்த தாமரைப்பூபோன்று மலசத்தியினர்கு
விந்த தீசனது சத்தியா லலர்ந்த ஞானக்கிரியாரூபசொரூப சிற்

சத்ருபவியத்த சிவதத்வத்தை,—சேரும்பரிசினை - பொருந்து முறைமையை,—புகலலுற்றும் - சொல்லுவாம்.

ஆகையாலன்றே சத்தியோ நிர்வாணதீக்ஷையிலே தேசிகனுக்கன்றி சாதகனுக்கு ஞானம் வேண்டுவதில்லை; யாதலாற் றேசிகனுக்கு ஞானம் ப்ரதாநம்.

சாதகர்களுக்கு தீக்ஷை ப்ரதாநமென்றும் ஸ்வாயம்புவ வியாகநத்திற் சத்தியச்சோதிபாகங்களால் விஸ்தரித்திருக்கையால், ஞானம் தீக்ஷாகன்மத்துக்கங்கம், தீக்ஷாகனமமங்கியென்பதும்; மலம் திரவ்யமாகலால் நேத்திரபடலம்போல ஞானகோடிகளாலும் போகாதென்பதும் மேல்விஸ்தரித்துச்சொல்வாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. சாமுசித்தர் வைநயிகர் ப்ராகிருதரெனனுமிவருள், ஆற்றலுமறிவுங்காதலுமில்லாத ப்ராகிருதரையொழிந்து, ஒழிந்தவிருவருள் முற்செய்தவவிசேடத்தாற் சாமுசித்தராய்ப் பிறந்து வீடு காதலிக்குஞ் சிவபத்தரை: விஞ்ஞானகலர் ப்ரளயாகலரைப்போல நூல்வழிபானறித் தானே சிவசத்தியிற் சேர்த்துவனாகலின் அவர்க்கு நூல் வேண்டாமையான், முறைமையின் மந்ததரமுதலிய சத்திநிபாதமுடையவராய் நூல்வழிபான் முத்தி பெற விரும்பும் வைநயிகராயினாருக்குச் சிவசத்தி கூடு முறைமையினை ஈண்டு வகுத்துக் கூறுகின்றுமென்பதாம்.

சன்மார்க்கரை மார்க்கரென்றது தலைக்குறை.

சன்மார்க்கராவார் ஞானிகள்.

கண்டநூல் அவர்களெல்லாம் பிரமாணமென்றறிந்து கைக்கொண்ட நூல்.

இதனானே நுதலியபொருளுங்கேட்போரும்பயனுங் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இதனாற் சொல்லியது இன்னாலார்க்குச் சொன்னதென்னை? வினவுவார்க்கென்று மேலருளிச்செய்கின்றார்.

பண்டைநற் றவத்தாற்றோன்றி - முன்னைஜன்மங்களிற் சாத்திரஞ்சொன்ன முறைமையிலே நன்றாக தவங்களைப்பண்ணி யந்த பலத்தாலே பூமியின்கண்ணே வந்தவதரித்து,—பரமனைப் பத்திபண்ணுந் தொண்டரை - பரமேஸ்வரனளவிலே மிகுந்த வழிபாடுசெய்யு மடியார்களாயுள்ளார்களை,—தானே தூய கதியினிற் றிருப்பன - அந்தப் பரமேஸ்வரனானவனே சுத்தமாயிருக்கிற சாயுச்சியத்திலே கூட்டுவன,—மார்க்கர் கண்டநூலோதி வீடு காதலிப்பவர்கட்கு - சன்மார்க்கத்திலுள்ளாராலாராயப்பட்ட ஞானசாத்திரங்களையோதி மோக்ஷத்தை யெப்படியே பெறுவோமென்கிற வாசையினுடனே கேட்டதையுடையவர்களுக்கு,—யீசன புண்டரீகத்தாள் சேருந்தரிசினைப் புகலலுற்றும் - தம்பிரானுடைய ஸ்ரீபாதகமலங்களைப் பொருந்து முறைமையைச் சொல்லப்புகாநின்றேன்—எ-று.

இதனாற் சொல்லியது இன்னூலுத்தமர்க்கு மதமர்க்கும் வேண்டாவேண்டும் மத்திமர்க்கு வேண்டுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(சாமுசித்தர், வைநயிகர், ப்ராகிருதரென்னுமிவருளாற் றனுமறிவுங் காதலுமில்லாத ப்ராகிருதரை யொழித் தொழிந்த இருவரில்) பண்டைநற்றவத்தால் - முற்செய்த தவவிசேடத்

தால்,—தோன்றி - சாம்சித்தராய்ப் பிறந்து,—பரமனை - முத
ல்வனிடத்தில்,—பத்திபண்ணும் - வீடுகாதலித்துப் பத்திபண்
ணுகின்ற,—தொண்டரை - சிவபத்தரை,—தமனே-விஞ்ஞான
கலர் ப்ரளயாகலரைப்போல நூல்வழியானறித் தானே,—
தூயசதியினிற் றொகுப்பன் - சிவகதியினிற் சேர்த்தருளுதலின்
அவர்க்கு நூல்வேண்டாமையின்,—மார்க்கர் - ஞானிகள்,—க
ண்டநூலோதி-ப்ரமாணமென் றறிந்தகைக்கொண்ட நூலோ
தி யதன்வழியான்,—வீடுகாதலிப்பவர்கட்கு - முறைமையின்
மந்ததரமுதலிய சத்திநிபாதமுடையவராய் முத்திபெறவிரும்
பும வைநயிகராயினார்க்கு,—ஈசன் - சிவனுடைய,—புண்டரீக
தகாள்சேரும் பரிசினை - தாமரைமலர்போன்ற திருவடிகூடுமு
றைமையினை,—புகலலுற்றும் - வகுத்துக்கூறலுற்றும் எனப
தாம்.

இதனானே நுதலியபொருளுங் கேட்போரும் பயனும் கூ
றியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

மேலவையடக்க முணர்த்துகிறார்.

மறையினா லயனான்மாலான் மனத்தினான் வாக்
கான்மற்றுங், குறைவிலா வளவினாலுங் கூறொணா தா
கிநின்ற, விறைவனார் கமலபாத மின்றியா னியம்புமா
சை, நிறையினார் குணத்தோர்க்கெல்லா நகையினை விளை
த்துமன்றே. (௪)

மறையினால்.........நிறுத்துமன்றே. எ-து. நாலுவேத
ங்களாலும் பிரமாவாலு மாயவனாலு முக்குணங்களுடன் கூடிய

சுருதிவிட்ட முதலிய சூக்ஷ்மமான மனத்தினாலும் வாக்கியமா கிய வுரையளவைகளாலு மற்றுக் காண்டல்முதலிய வளவை களாலு மினையவென றளவிடற் கரிதாகியன நிலைகளா லளவிடப்படாதிருக்கின மிப்பொழுதியான் கத்தாவினுடைய ஸ்ரீபாதகமலங்களை யடைகையின்பொருட்டு நாவினாற் ஸஞ் சயித்துச்சொல்லு மாத்ரவுரைத் தன்மைக் கோக்கு மின்? நி றைவினையடைந்த வியர்க்கையையுடைய ஞாதாக்களானவர்கரு ஞ சிரிப்பையுண்டாக்கும்—எ-று.

அவையடக்கந் தானெல்லார்க்கும் வழிபடுகிளவி சொல்லுத லவையடக்கமெனப்பெறும். "அவையடக்கியலே யரிறபத்தெரி யின - வல்லார்கூறினும் வகுத்தனர் கொண்மினென - றெல்லாமா ந்தர்க்கும் வழிமொழிந்தன்றே" எனறூர் தொல்காப்பியனா ரெனவுணர்க.

அலனென கிளவியு மின்றென கிளவியு மாமென கிளவியு மா குமெனப.

ஆசை - எழுவாய், சிரித்தும் - பயனிலை. (௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலவையடக்கமும், சிவஞானச்சுருதிதனென்பது மு-து.

வேதாகமங்களினாலு மனத்தினாலுங் குற்றமற்ற வநுமா னங்களினாலும் சருஷ்டி ஸ்திதி கர்த்தாக்களாகிய ப்ரம்ம விஷ் ணுக்களினாலு மறியப்போகாத கர்த்தாவினுடைய கமலமலா போன்ற ஸ்ரீபாதத்தினுடைய தன்மையை யானிவ்விடத் தா ழ்சயுடனே சொல்லுகிறேனென்கிறது; பரிபூரணஞானமுடைய வர்களுக்கு ஒழிவற்ற விநயத்தை யுண்டாக்குமென் றிதன பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அவையடக்கம்கூறுகின்றார்.

மறையினால்-பதியினாற் பாரம்பரியமா யதிஷ்டிக்கப்பட்டுத் தனதவதி சர்வஞ்ஞனாயிருக்கின்ற பசுவினாற் பண்ணப்பட்டபடியாற் சிறிதிடத்து பதிஞானமென்றும் பசுஞானமென்றும் பதிப்பிரமாணமென்றும் பசுப்பிரமாணமென்றுஞ் சொல்லப்பட்டிருந்தாலும், இயற்கையாய் காதரூப பாசரூபமாதலானுமானமஞானத்தை விளக்குதலால் ஞானமென் றுபசரித்தலாலும் பாசஞானமென்றும் பாசப்பிரமாணமென்றுஞ் சொல்லப்பட்டியல்பினாலானமசிற்சத்தியைப் பொருந்திப் பசுபாச பதார்த்தமாத்திரத்தையே படிக்கும் வேதங்களால்,—கூறொணாதாகி - சிறிதிடத பொருப்ரகாரத்துப் பதிபதார்த்தத்தைக்கூறி வேறாய்க்கூறுமாகினு மியல்பாகிய விலக்ஷணதத்தாற் சொல்லப்படாததாகி,—அயனால்மாலால் - சிவானுக்கிரகம்பெறற நிரஞ்சனவிதி விஷ்ணுக்களுக்கு வேறாகிச சாஞ்சனராயிருக்கின்ற விதிவிஷ்ணுக்களுக்குப் பசுத்துவ நீங்காதபடியினாலே பாசஞானத்தால் விளங்கிப் பசுஞானப் பசுப்பிரமாணமாகிக காணடல்முதலிய த்ரிப்பிரமாணமாகி யவரவர்களது சிறசத்திமானங்களா லவர்களா லறியப்படாதாகி,—மனத்தினால - பாசஞானம் பாசப்பிரமாணமெனகின்ற மனமுதலிய வுட்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் கேத்ரமுதலிய புறக்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் பாசயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் பசுயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலு மறியப்படாததாகி,—வாக்கால் - உலோகவாதஞ் சத்தியமு மசத்தியமுமா யிருக்குமாதலால், அதற்குச் சத்திய மாகமப்பிரமாணத்தி லடங்குமாதலாற் பொதுவாகு மந்த உலோகவாதத்தினா லறியப்படாததாகி,—மற்றுங்குறைவிலா

வளவினாலும் - பசுசாத்திரங்களிற் படிக்கப்பட்டுப் பசுப்பிரமாணங்களாகிப் புத்திப்பிரகாசமாகிய லிங்கபார மரிச்சித்த விருத்திமுதலாகிய பஞ்சாவயவங்களினால் நிறைந்த பாசாநுமானங்களினாலும்,—கூடொணாதாகி - அறியப்படாததாகி,—நிறை - நிலைபெற்ற,—இறைவனாற் - சிவனாரது,—கமலபாதம்- தாமரைபோல விரிந்த சத்தியென்னுஞ் சிவதத்துவ லக்ஷணத்தை,—இன்றியா னியம்புமாறை - இப்போது நானசொல்லவேணுமெனகிற விருப்பம்,—நிறையினாற் குணத்தோர்க்கெல்லாம்- சமத்தினாலே நிறைந்த நீர்மையராகிய சகலர்க்கும்,— நகையினை - சிரிப்பினை,—நிறுத்துமன்றே - நீங்காதுண்டாக்குந் தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. வேதமுதலியவற்றானு மறிதற்கரிய முதல்வனதியல்பையான சொல்லுவலென்றெழுந்த எனது புல்லியவாசை; சால்புடையா ரெல்லாரும் ஏயே யிஃதோவிவனறிவென் றெள்ளி நகையாடுதற்கேதுவா மென்பதாம்.

அயனான் மாலான் மனத்தினான் வாக்காலென்புழி, ஆனுருபு முன்னையவிரண்டும் வினைமுதற்பொருண்மையினும், பின்னையவிரண்டுங் கருவிப் பொருண்மையினும் வந்தன: சாத்தனாற் கண்ணானோக்கப்பட்டதென்றாற்போல.

ஈண்டளவென்றது அநுமானப்பிரமாணத்தை. அயன்மாலென்றது உபலக்கணம்.

கூடொணாதென்றது உபசாரம்.

இனி, அடலென்றது அவ்வேதத்திற் கங்கமாய் அயனாற் செய்யப்பட்ட பதினெண் புராணநூலையும், மாலென்றது

மாயோனவதாரமாகிய வியாதனாற் செய்யப்பட்ட இதிகாசநூலையும், மனமென்றது மனுமுதலிய இருடிகளான் மனத்தானினைந்து செய்யப்பட்ட மிருதிநூலையும், வாக்கென்றது அவ்வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டமென இருவகைப் படுத்தெடுத்துக்கொண்டு அதனபொருளை நிச்சயித்துரைக்குஞ் சாத்திரமாகிய பூர்வமீமாஞ்சை யுத்தரமீமாஞ்சைகளையும், அளவென்றது அளவைநூலாகிய தர்க்கசாத்திரத்தையும். ஆகுபெயரா னுணர்ந்தினவெனக்கொண்டு, வேதத்தானு மதற்கங்கமான புராணமிதிகாசமிருதி மீமாஞ்சை தருக்கங்களானுங் கூறொணாத பாதமெனவுரைத்தலுமொன்று.

அவையடக்கங் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலவையடக்க மருளிச்செய்கிறார்.

மறையினால் - இருக்கு எசுசு சாமம் அதர்வம் என்கிற நாலுவேதங்களினாலும்,—அயனால் - பிரமாவாலும்,—மாலால் விஷ்ணுவாலும்,—மனத்தினால் - மனத்தாலும்,—வாக்கால் - வாக்கினாலும்,—மற்றுங் குறைவிலா வளவினாலும் - வேறுங் குறைவற்ற வளவைப் பிரமாணங்களினாலும்,—கூறொணாதாகிநின்ற - சொல்லப்படாத தொன்றாயெங்கும் பரிபூரணமாய்ச் சற்றுமசைவற்றுநின்ற,—இறைவனார் கமலபாதம் - அப்படி குறைவற்றுநின்ற தம்பிரானாருடைய ஸ்ரீபாதகமலங்களை,—இன்றியானியம்புமாசை - இப்போ தொன்று மறியாதயான் ஒருசாத்திரத்திலே சொல்லுவதாகத் துணிந்தவாதரவு,—நிறையினார் குணத்தோர்க்கெல்லாம் நகையினை நிறுத்து

மனறே- சர்வகுண சம்பந்நராயிருக்கிற ஞாதாக்களுக்கெல்லா மெப்பொழுதுஞ் சிரிப்பினையுண்டாக்காநிற்கும்—எ-று.

இதனாற் சொல்லியது வேதங்களாலு மரிப் பிரம்மாதிகளாலு மளவைகளாலு மறியப்படாம லிருப்பதொருவஸ்துவை யான் சொல்லுவேனென்கிற வாசை பெரியோர்களுக்குச் சிரிப்பினையுண்டாக்குமென்னு முறைமை யறிவித்தது.

இது சான்றோர் அவையடக்கம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மறையினால் - வேதங்களினாலும்,—அயனால் - அயனாலும்,—மாலால் - மாலாலும்,—மனத்தினால் - மனத்தினாலும்,—வாக்கால் - வாக்காலும்,—மற்றுங் குறைவிலா வளவினாலும்-வேறுங்குறைவில்லாத ப்ரமாணங்களினாலும்,—கூறொணா தாசிநின்ற -அரிதற்கரிதாகிநின்ற,—இறைவனார் - முதல்வனது,—கமலபாதம் - கமலம்போலும் பாதமென றுபசரித்துக் கூறப்படு மருளிபல்லை,—இனறி பாவியம்புமாசை - இன்றியானசொல்லுவேனென்று எழுந்த எனது புல்லியவாசை,—நிறையினார் குணத்தோர்க்கெல்லாம் - சால்புடையராய குணத்தினை யுடையாரெல்லார்க்கும்,—நகையினை நிறுத்துமன்றே - ஏயே? இஃதோஇவனறிவென றெள்ளி நகையாடுதற்கேதுவாமென்பதாம்.

(இனி மற்றொருவிதம்.)

மறையினால் - வேதங்களாலும்,—அயனால் - அவ்வேதத்திற்கங்கமாய் அயனாற்செய்யப்பட்ட பதினெண்புராணங்களாலும்,—மாலால் - மாயோனவதாரமாகிய வ்யாதனாற் செய்யப்பட்ட இதிகாசங்களாலும்,— மனத்தினால் - மனுமுதலிய

விருடிகள் மனத்தால் நினைந்து செய்யப்பட்ட மிருதி நூல்களாலும்,—வாக்கால் - அவவேகத்தை கருமகாண்ட ஞானகாண்டமென் றிருவகைப் படுத்தெடுத்துக்கொண் டதன் பொருளை நிச்சயித்துரைக்குஞ் சாத்திரமாகிய பூர்வமீமாம்சைகளாலும்,—மற்றுங் குறைவிலாவளவினாலும் - வேறுங்குறைவில்லாத அளவைநூலாகிய தருக்கசாத்திரங்களாலும்,—கூறொணுதாகிநின்ற - சொல்லுதற் கரிதாகிநின்ற இறைவனுற கமலபாதம் என்றாலுமொன்று

இதனானே அவையடக்கங் கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

இப்படிச் சிவனை யறிப்பபோகாதெனப்பீராயி ஞாசதத்திறபூப்போ லபாவபகார்த்தமாய்விடுமெனற மாணுககனைக்குறித தாகமமுதலியவற்று லறியலாமென றுணர்த்துகிருர்.

அருளினு லாகமத்தே யறியலா மளவினாலுந்
தெருளலாஞ் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்
ளே, மருளெலா நீங்கிககண்டு வாழலாம் பிறவிமாயா,
விருளெலா மிரிக்கலாகு மரியரோ டிருக்கலாமே. (ரு)

(இ-ள்.) அருளினுலாக மத்தேய றியலாம் - ஞானுசாரிய னநுக்கிரகத்தைப் பெற்றவர்கள் அபரஞானத்திற் சொல்லப்பட்ட வாகமப் பிரமாணத்தாலும் சிவனை யறியலாம்.

அளவினாலுந் தெருளலாஞ் சிவனை - புகையைக்கொண் டனலை யநுமித்தறிந்தாற்போலச் சத்தியினது காரியத்தைக்கொண்டு சத்திமானாகிய சிவனையு மறியலாம்

ஞானச்செய்	ஞானமாகிற தீபம் பிரகாசிக்கவே யாண
தியாற் சிந்தை	வாதியாலுண்டாகிய மயக்கவிகற்பநீங்கித்
யுளே மருளெ	தன்னுள்ளே பலகாலு மநுசந்தானம்பண்
லா நீங்கிக்கண்டு	ணிக்கொண்டு பரமமான நிட்டையைப்பொ
வாழலாம்	ருந்தி நாடோறும் வாழுவே
பிறவிமாயா	பிறப்பை யுண்டாக்குகிறதற்குக் காரண
விருளொடா மிரி	மாகிய கன்மமு மாயையு மாணவமு மோ
க்கலாகும்	ட்டலாம். இங்ஙனம் பாசக்ஷயம்பிறக்கவே
அடியரோடி	சிவாநுக்கிரஹத்தைப் பெற்ற முத்தான்
ருக்கலாமே.	மாக்களைப்போலச் சிவானந்தாநுபூதியைத்
	திளைத்திருப்பார்கள்—எ-று.

அளவினாலுமெனற வும்மையால் யோகக்காட்சியாலுஞ் சிவனை யறியலாமெனவறிக.

சிவனை எ-து. நடுநிலைத்தீபமெனவறிக.

இவை யைந்தும் பாயிரம்.

"ஆயிரமுகத்தாலகன்றதாயினும் - பாயிரமில்லது பனுவலன்றே". "வகுத்தமதிகாரமெனவிரண்டென சொல்லச் சிறப்பெனும் பாயிரமாஞ்சீர்" என்றாராகலிற் சிறப்புப்பாயிரமாயிற்று.

*"ஆக்கியோன்பெயரேவழியேயெல்லை - நூற்பெயர்யாப்பேநுதலியபொருளே - கேட்போர்பயனோடாயெண்பொருளும் - வாய்ப்பக்காட்டல்பாயிரத்தியல்பே" எனபதனால் ஆக்கியோன்பெயர் - அருணந்திதேவநாயனார், வழி - சிவஞானபோதம், எல்லை - நடுநாட்டுத் திருத்துறையூர், நூற்பெயர் - சிவஞானசித்தி, யாப்புத்தொகைவிரிநுதலியபொருள் - பதிமுதலிய முப்பொருளினிலக்கணம், கேட்போர் - அவர் மாணா

க்கருட் டலைமையாகிய மறைஞானசம்பந்தநாயனார், பயன்வீடு பேறு; மேல்வர்தவாறுகாணக. * தொல்காப்பியம் பாயிரம்.

யாதானு மொருநூற்குப் பொருளுரைக்குங்கால் உரைவகை விருத்திவகை காண்டிகைவகையென மூவிதப்படும். ஈண்டிந்நூற் குரைக்கப்பட்டது காண்டிகைவகையெனவறிக.

அஃதாவது:—"பழிப்பில்சூத்திரப்பட்ட பண்பிற் - கரப்பின்றிமுடிப்பதுகாண்டிகையாகும - விட்டகல்வின்றிவிரிவொடுபொருந்திச் - சுட்டியசூத்திரமுடித்தற்பொருட்டா - வேறுநடையினுமெடுத்துககாட்டினு - மேவாங்கமைந்தமெய்ந்நெறித்ததுவே" எனமுர் தொல்காபபியனார், பொருள்-மரபியல். (ரு)

உரையாசிரியர் அவையடக்கம்.

"ஓரா தெழுகினே னாயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாநதர் கடன்".

ஓர்வகையானே பாயிர முற்றிற்று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

இப்படி யறியப்படாதபொருள் கர்த்தாவென்னில்? இல்லையாம்; அதனாற் பயனுமில்லையாம். அஃதனறியும்வேத சிவாகமங்களும் ப்ரமாணங்களு மேதுக்காகவென்னில்? அவையனைத்தும் * அர்வாசீநபதாவாச்யமாய் ஜகத்சிருஷ்டியாதிகளைப் பண்ணுஞ் ஸதாசிவாதிமூர்த்திகளைப்போதிக்கும் பரமசிவம் †ஸ்வரூபஞானகரூபவைகவேத்ய மென்பதை மேற்கூறுகின்றது.

* அர்வாசீநபதவாச்சியமாய் - கீழ்ப்பட்ட பதத்தினாலே சொல்லப்படுகிறதாய், † ஸ்வரூபஞானாநுபவைகவேத்யம் - ஸ்வரூபஞானத்தினாலே யுண்டாகிற வநுபவமொன்றினாலே யறியப்படும்.

அருளினா லாகமத்தே யறியலாம் - கருணையினாலே தரித்த சதாசிவ மகேஸ்வராதி மூர்த்திகளினுடைய லக்ஷணங்களை யாகமத்திலே யறியலாம்,—அளவினாலுந் தெருளலாம் - ப்ரத்யக்ஷமன்றி யாகமங்களினாலு மநுமானங்களினாலு முணரலாம்,—சிவனை ஞானசெய்தியாற் சிந்தையுள்ளே மருளெலா நீங்கிக்கண்டு வாழலாம்-பரமசிவனை யவனது க்ரியாசத்தி ‡ சம்யோகத்தா லானமக் கிரியாசத்தியினாலே பாசங்களைநீங்கி, யவனது ஞானசத்தி சம்யோகத்தா லான்மஸ்வரூப ஞானசத்தியினாலே யானமாவிற் சிவனை யநந்நியமாகக்கண்டு, சிவாநந்தாநுபவியாகலாம். ஆதலாற் பரமசிவம் அநுபவைகவேத்யம்,—பிறவிமாயா விருளெலா மிரிக்கலாகும் - அவ்வாறு சிவாநுபவமுண்டாகவே ஜனமத்துக் கேதுவாகிய § மலமாயாகன்மங்க ளெல்லாவற்றையுங் கெடுக்கலாம், இப்படிப்பட்ட ஞானத்திற்குப் பக்குவமுண்டா மாறெங்ஙனமெனில்? அடியரோடிருக்கலாமே - சிவபத்தர்களுடனேகூடி யவர்களை வணங்கி வழிபட்டு அவர்களுபதேசித்தபடி நடக்கவுண்டாம். இவ் விரண்டு விருத்தத்திற்கும் சம்மதி.

‡ சம்யோகம் - கூட்டரவு, § மல மாயா கன்மம் - ஆணவம் மாயை வினை.

*[illegible]

[illegible] ॥ *

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவனிப்படி ப்ரமாணதீதராலாற் சூந்யப்பொருளோவெ ன்ன? அன்று; பதிப்பிரமாணத்தாற் பார்க்கப்படுமே பொருளெ ன்று கூறுகின்றார்.

ஆகமத்தே-பிறன்படிக்கும் வன்னபதவாச்யங்களைக் கே ட்கும் வ்யோமபௌதிகாகமவெழுத்தைப்பார்க்கு நினைக்குந் தீக்ஷாவான்களாகிய நமது மனச்சங்கற்பத்தினால், வ்யோம பௌதிகத்தொனியோடு கிளம்பிய புத்தியினாற்பொருந்தப்பட்ட வன்னபதவாக்யமயமா யுச்ஞாரோசையாகிய மந்திரவைவா க்குருபமா யிருதயத்திற்றோற்று மாத்மியான்மிக சடாகமத்தி ல், கரியிலக்கினிபோலவந்த வன்னபதவாக்யக் கிரமத்தினாவி ப்பவித்தப் பொருள் போதிப்பதாய்; மஹாப்ரளய பரியந்த நாசமில்லாமற் சுத்தவித்தையிலிருக்கு மாதிதைவிக திவ்யாக மத்திலேவந்த சாந்நித்யமாகிய,—அருளினால் - சிவசத்தியாகிய வாதிதைவிக திவ்யசித்தாகமத்தினால், திரும்ப விதுகாரியலக்ஷ ணையாதலா லதினால் விளக்கப்பட்ட நமது சிற்சத்தியாகிய வாதியான்மிக சிவாகமத்தினாற் சிவனை,—அறியலாம் - பரோ க்ஷமாய் நிச்சயிக்கலாம்,—அனாவினாலும் - திவ்யசிவாகமத்திற் சிவனாற் காண்பிக்கப்பட்டுச் சிவசத்தி யதிஷ்டித புத்திப்பிர காச கலுஷித லிங்கபராமரிச வ்யாபாரசீலமான நமது சிற்ச த்தி யநுமானத்தினாலும்,—தெருளலாஞ் சிவனை - பரோக்ஷ மாயறியலாம்,—த்யானசமாதிபெனு மங்கயோகவாசனையில்வ ந்து பதிந்த சிவசத்தியினா லக்ஷ்சமாதிசமய மாத்திரத்தி

ல்,—மருளெலாநீங்க - மலமூல வஞ்ஞானங்களெல்லாம் போக,—சிந்தையுள்ளே - திரும்பவந்தச் சிவசத்தியினால் விளங்கிய நமது சிற்சத்தியிலே,—ஞானசெய்தியால் - அந்த நமதுசிற்சத்தி விருத்திலக்ஷண சதேகஜீவன முத்தி சாக்ஷாத்காரத்தினால்,—கண்டு - சாக்ஷாத்கரித்து பரோக்ஷமாகப் பார்த்து,—வாழலாம் - நமதந்தச் சிற்சத்தி வ்யாபார சாக்ஷாத்காராகார சிவாநுபூதியினது பூரித்தலாகிய நமது சிவாநந்தத்தின தநுபூதிலக்ஷண ஸ்வாநுபூதிமானகளா யிருக்கலாம்,—சரீராந்தசமயத்திலே யநந்தஜீவனமுத்தி சாக்ஷாத்கார சாமர்த்யத்தினாலே சேவித்துத் திரும்பத்திரும்பவாராதபடி, பிறவி மாயாவிருளெலாம் - (பிறவிஎன்றதாகுபெயர்) ஆதலால், பிறவிக்கேதுவாகிய கனமமலம்,—மாயாவிருள் - மாயாமலம், திரும்பமாயாவிருள எனறெடுத்துக்கொண்டு மாயாவிருள் - கெடாத வநாதிசித்தவாணவமல மிவைகளெல்லாம்,—இரிக்கலாகும் - நம்மைப் பந்தியாமற் பொருளுண்மைமாத்ரமா யிருக்கப்பண்ணலாம்,—அடியரோ டிருக்கலாமே - நிரதிசயவிதேக பரமுத்தி பலசர்வார்த்தவிஷய சிவசாக்ஷாத்கார வ்யாபாரகாரமா யிருக்கின்ற நமது சிற்சத்தி சமவேத சிவாநுபூதியினது பூரித்தலாகிய சிவாநந்தாநுபூதியாகிய ஸ்வாநுபூதிமான்களாய்க் கொண்டு அடிமை சிவசத்திசமான தமது சிற்சத்தியையுடையராகிய முத்தான்மாக்களோ டொத்து நாம்வயாபிக்கலாமே.

முனசொன்ன ஜீவன்முத்தியவத்தையிலேயாகிற் சிவபத்தர்களோடு கூடியிருக்கலாம். பரமுத்தியிலே பரதந்திரியங் கைகழிபந்தமெனறு ஞானாமிர்தத்தி விருத்தலினா லடிமைத்திரமில்லாதபடியினாலே சிவன்கனொன்றல்லா தடியர்களென்று சிவசமான முத்தான்மாக்களைச் சொல்லப்படாதென்பது திக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும், அவனை அவ்விறைவனுரையெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தினுபயவு முடைய தேசிகரருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம், கேட்டதனை அதற்கநுகூலமானவளவையாற் சிந்தித்துமறியலாம்: சிந்தித்ததனைத்தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான் மாசறத்தெளிந்தறியலாம்; அதனாற் பாசக்ஷயம்பண்ணி நிட்டைகூடிச் சிவானந்தாநுபூதியும் பெறலாமென்பதாம்.

உம்மை எண்ணின்கண் வந்தது. மேல் அவையடக்கத்துட் கூறியதுபற்றி நிகழுமாசங்கையை நீக்கிற்று.

இக்கடவுள்வணக்க முதலாயினவெல்லாம் பரபக்கத்து நூன்முகத்தாற் கூறிப் போந்தனவேயாயினும்; பரபக்கஞ் சுபக்கமென விதனை இருநூலாதலுங் கொள்ள வைத்தமையின் ஈண்டும் வேறு கூறினார்.

அறுவகைச்சமயத்தென்னு முதற்செய்யுளிற் கடவுள்வணக்கங்கூறுமுகத்தாற் சுபக்கத்திறைவனுவானிவனென்பதூஉம், ஏனை நான்குசெய்யுளினும் வழிமுதலியன கூறுமுகத்தான் அவ்விறைவனுலியம்பப்படும் நூலிவையென்பதூஉம், அவற்றுட் பொதுநூல் சிறப்புநூலெனும் வேறுபாடுமுணர்த்தப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்தவத்தந்தன்னை யறியுமுறைமை யெங்ஙனேயென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கின்றார்.

அருளினூலாகமத்தே யறியலாம் - தம்பிரானார் திருவருளுண்டானவர்களுக்கு வேதாகமங்களிலுள்ள மந்தப்பொருளை யறிந் தநுபவிக்கலாம்;—அளவினாலும் தெருளலாம் - அளவை

ப்பிரமாணங்களினாலுஞ்சிந்தித்தறியலாம்,—சிவஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளொலாநீங்கக்கண்டு வாழலாம்- மகத கதாவை யிப்படி ஞானம் ப்ரகாசித்தமுறைமையாலே அஞ்ஞானங்களெல்லாம் விட்டுநீங்கத் தன்னுடைய விருதயத்திலே பேரின்பத்தையுந் தரிசித்தநுபவிக்கலாம்,—பிறவிமாயா விருளெலாமிரிக்கலாகும் - ஜநநங்களையுண்டாக்குகிற மலமாயாதிகளைமங்களையு மோட்டலாம்,—அடியரோடிருக்கலாமே - இப்படிப்பெற்ற திருவடியடியார் திரட்சியிலே கூடியிருக்கலாம்—எ-று.

இதனாற் சொல்லியது சிவனுடைய திருவருளுண்டானவர்களுக்கு வேதாகமங்களினாலு மளவைப்பிரமாணங்களினாலுந் தங்களிருதயத்திலுங்கண்டநுபவிக்கலாமென்றுஞ் சநநங்களையுண்டாக்குகிற மலங்களைப் போக்கிக்கொள்ளலாமென்றும், இப்படிப்பெற்ற வடியார்களுடைய கூட்டத்திலுங் கூடியிருக்கலாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(இறைவனியல்புஅப்பெற்றித்தாயினும்)சிவனை - அவ்விறைவனை,—ஆகமத்தே - அவ்விறைவனூலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தை,—அருளினு லறியலாம் - அநுபவமுடைய தேசிகர் அருளிச்செய்யு முபதேசத்தால் கேட்டறியலாம்,—அளவினாலும் - கேட்டதனை யதற்கநுகூலமான அளவையாலும்,—தெருளலாம்-சிந்தித்து மறியலாம்,—சிந்தையுள்ளே - சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே,—ஞானச்செய்தியால் - சிவஞானத்தால்,—மருளெலாநீங்கிக் கண்டுவாழலாம் - மாசறத் தெளிந்து மறியலாம்,— பிறவிமாயா விருளெலா மிரிக்கலாகும் - அதனால் பிறவிமாயாமைக்கேதுவாகிய பாசக்ஷயமும் பண்ணலாகும்,—அடியரோடிருக்கலாமே - அதனாலவனடியாரோடு கலந்து நிட்டைகூடி சிவானந்தாநுபூதியும் பெற்றிருக்கலாம்.

இதனானே பொதுநூல் சிறப்புநூலென்று வேறுபாடுகூறி யவாறு.

"ஐந்துதுதி"
என்னும பாயிரம ஐந்தும்
முற்றிற்று.

---

* 'ஐந்துதுதி' என்னும் சுபக்ஷசெய்யுட்டொகைச்செய்யுள் வரையறுத்தது 'அறுவகை' 'என்னை' 'பண்டை' 'மறையினால்' 'அருளினால்' எனனும் ஐந்து செய்யுட்களேயே! இச்செய்யுட்களைந்தினையும் பெரியவெழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு எல்லாவுரையாசிரியரும் உரையிட்டிருக்கின்றனர்.

மற்ற 'ஆதிநடு' 'ஈசனருள்' 'அருமறை' 'நீடுபுகழ்' 'போதமிகு' இவ்வைந்தும் பரபக்ஷ செய்யுட்டொகைச்செய்யுள் வரையறுத்த 'முகவுரையிற்றசம்' எனபதனுளடங்கியவை. இவற்றில் முதல் மூன்றுசெய்யுட்கும் சிவாக்ரயோகியர் ஞானப்பிரகாசர் இருவரும் உரையிட்டிருக்கின்றனர். பின் இரண்டிற்கு சிவாக்ரயோகியர் ஒருவரே உரையிட்டனர். இச்செய்யுட்களைச் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

'ஒருகோட்டன' என்னுஞ் செய்யுள் தொகைச்செய்யுளிரண்டினு மடங்காமையானும், விநாயகனை யெவ்வெக்காரியங்கட்கு மிடையூறு நீங்குதற்பொருட்டு முன்னர்த் தியானிக்கவேண்டுமையானும், உரையாசிரியர் யாவரும் பரபக்ஷ சுபக்ஷ மிரண்டிடத்தும் வைத்துரையிட்டனர். ஆதலால் இச்செய்யுளையும் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டது.

'முகவுரையிற்றசம்' ஐந்துதுதி'என்னும்இரண்டுசெய்யுளும் பரபக்ஷத்திற்கு முன்னர்க் கூறியிருப்பதை மறைஞானதேசிகர் 'ஒருகோட்டன்'எனனுங்காப்புச்செய்யுட்குப்பின்னர்க்கூறி, இவற்றின் கருத்தாய 'சித்திதன்' என்னும் அகவலைக்கூறினர், சுபக்ஷ அதிகார மினிது விளங்குதற்பொருட்டு. இதனையும் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டது.

உ

சிவமயம்.

அளவை.

மறைஞானதேசிகர் உரை.

மேலதிகார மென்னுதலிற்றோவெனின்? பதிமுதலிய முப்பொருளையும் விளக்குவதாயுள்ள வளவைபபிரமாணங்களைப் பதினொரு திருவிருத்தத்தாற் பெயரு முறையுந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

அளவையென்பது - அளந்தறியப்படுவது. அஃதெவ்வாறெனின்? உலகத்துப்பதார்த்தங்களை யெண்ண லெடுத்தன முகத்த லீட்டலென்னு நால்வகையளவினு லளந்தறியுமாறு போலப் பதிமுதலிய பொருள்களைப் பக்குவான்மாக்கட்களந் தறிவிக்கையினபொருட் டளவைப்பிரமாணங்களை முதற்கட் கூறியதெனவறிக. "பண்ணிலாற்கில்லாத பாட்டியற்பயப்போன்று, கண்ணிலார்க்கில்லாக் கவின்போன்று—மெண்ணிலா வஞ்சொலளவை யறியாதவர்க்கில்லை, செஞ்சொலளவின் சிறப்பு." என வளவைவிளக்கத்தி லறிக.

இத்தலைச்செய்யு ளென்னுதலிற்றோவெனின்? காண்டன்
முதலிய வளவைப்பிரமாணங்களைப பத்துவகை
யானே பெயரு முறையுந் தொகுத்துக்கூறி
அவைகளைக் காண்டன முதலிய
மூன்றி லடக்கியுணர்த்திற்று.

அளவைகாண்டல் கருதலுரை யபாவம்பொரு
ளொப் பாறென்ப, ரளவைமேலு மொழிபுண்மை யைய
மீகத்தோ டியல்பெனநான், களவைகாண்ப ரவையிற்
றின் மேலுமறைவ ரவையெல்லா, மளவைகாண்டல்
கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே. (க)

(இ-ள்.) அளவை அளவைப்பிரமாணம் வல்லார்கள் அறுவ
காண்டல் கைத்தெனபர்கள். அவையாவன? காண
கருதலு டலெனவு மநுமானமெனவு முரையெனவு
ரையபாவ மபாவமெனவும் அருத்தாபத்தியெனவும் உ
ம் பொருளொப் பமானமெனவும்வரும். அவை வருமாறு.—
பாறெனபர்

காண்டலாவது - ப்ரத்தியக்ஷம், பரைந்து மலத்திற் கர
ணம் வாய்த்திடவு மத்கமறிநதிடுங்கால் காண்டலாம்.

கருதலாவது - கண்டபொருளை யநுமித்தறிதல்.

உரையாவது - ஆகமப்பிரமாணம்.

அபாவமாவது - "ஒன்றனைமற்றொன்றென்றொருவிப்பி
னுண்மையின்றொடொன்றனபாவமெனவோர்". இதனை விரித்
தறியி லைவகைப்படும் என்றுமபாவமு மில்லதனபாவமு மொ
ன்றிடென்றபாவமு முள்ளதனபாவமு மழிவுபட் டபாவமு
மென வைந்தபாவம்.

முயற்குக்கோடில்லையென்கை என்று மபாவம்.
பெரியோர்வாயிற் பொய்யில்லையென்கை இல்லத
னபாவம்.

கடத்தின்கட் படமில்லை படத்தின்கட் கடமில்லை
யென்கை ஒன்றிலொன்றபாவம்.

ஆனைப் பந்தியிற்சண்டிலமென்கை உள்ளதனபாவம்.

கட முடைந்தா லஃதில்லையென்கை அழிவுபட்ட
பாவம். எனவுணர்க.

பொருளென்பது - அருத்தாபத்தி, அஃதாவது? "எடுத்துலகோதும் பொருளருத்தாபத்தி யாமிதுதா, னெடுத்தமொழியினஞ் செப்புவதாகும இவ்வூரிலருள், படைத்தவரெனவிற் படையாதவருள ரொன்றுமிவன், கொடுப்பவனெனவிற் கொடாதாருமுண்டென்று கொள்வதுவே". எனவறிக.

ஒப்பாவது - "கண்ணன்கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக் - கண்ணுமுனர் வொப்பனவேகாண்" எனவறிக.

அளவைவேறு மொழிபுண்மை யைதிகத்தோடி யல்பெனநான்க ளவைகாண்பர்

இங்ஙனங் கூறிய வறுவகைப் பிரமாணத்தில் மொழியெனவு முண்மையெனவு மைதிகமெனவு மியல்பெனவும் நால்வகைப் பிரமாணங் கூறுவர்கள்.

அவையிற்றில் ஒழிபாவது:— "சீராரொழிபென்று
செப்பப்படுவது தினபுவிமேற, போராடிநின்று
பொருதாரிருவர்தம் போர்க்களத்துப், பாராரிரா
கவன் வென்றனனிற்றன் பரிசழிந்து, சோராமி
ராவணனை மேற்றசொல்லாயி னிகழ்வதுவே"
எனவறிக.

உண்மையாவது - சம்பவம், அஃதாவது:—தயக்க
ரவுண்மை யெனகாவலர்க டுணிந்துரைப்ப, நிய
ற்கைப்பொருளினையிற்றெனவாமிது தானுரைக்கி

ண், வியக்குற்றகால்சலிக்குந் திச்சுடு நீர்ளுளிரும், வயகருற்றமண்வலி தெனறுபட்டாங்கு வழங் குவதே" எனவறிக.

ஐதிகமாவது— கொன்டயில்வேலைக் கடல்புடைசூழுங் குவலயத்தோரன்புடனுலி லலகையுடெனபாக ளெனபதவு,மினடயில்புர்றில் விடநாகமுண்டெனபொன்பதவு, மெனபாகளுவல ரெனபது மைதிகமெனபர்களே". எனவறிக.

இயல்பாவது.— "மாமேலிருந்தொரு கோனுவெனிற்சுவளிக் கோறரலுந், துமேலிருநதொரு கோருவெனிற் றரவேதுணிந்து, பூமேவுங்கண்ணழுந் தங்கோல்கொடுத்தலும் பூதலத்தே, நாமேவியல்பென்று கூறுவர்நலலசொன் னுவலரோ".

இங்ஙன நால்வகைப் பிரமாணங்களையு றிக.

அவையிற்றின் மேலு மறைவர் — இங்ஙனங்கூறிய பத்துப்பிரமாணத்தின் மேலும் ப்ரமாணமுண்டென்று சொல்லுவர்கள.

அவையெல்லா மளவை காண்டல் கருதலுரை யெனறிம்மூன்றி னடங்கிடுமே. — அந்தக்காண்டன்முதலிய பத்தும் ப்ரத்தியக்ஷ மநுமான மாகமம் மூன்றினுள்ளு மடங்கும்—எ-று.

முற்கூறிய வபாவமு மியல்புங் காண்டலிலடங்கும். அஃதெங்ஙனமென்னில்? இங்ஙனங்கூறிய வபாவம் இருவிதப்படும்; கண்ணுற் காணப்படுவதெனவும் காணப்படாததெனவு மென.

இதன்முந்தியது கண்ணாற் காணப்பட்டிருக்கிற கடாதியினுடைய தோற்றரவு கண்ணுக்குக் காணப்படுகையினாலே காண்டலிலடங்கும். மற்றையது கண்ணாற் காணப்படுவதற்கு விடயமாகாதிருக்கிற பரமாணுவாதிகளினுடைய தோற்றரவினறியிருத்தலா லநுமானத்திலடங்கும்.

இயல்பும் பதார்த்தத்துக்கொடுக்கையாற் காண்டலிலடங்கும்.

மற்றவநுமானத்தி லருத்தாபத்தியு முன்மையு மொழிபும் அடங்கும்.

அஃதெங்ஙனமெனில்? தேவதத்தன் பருத்திருக்கையா லிராத்திரி புசிப்பன்; பகற் புசியாதிருக்கையினும் பருத்திருக்கிறானெனனும் வியாத்திபைக்கிரிகிக்கையா லநுமானத்திலடங்கும்.

ஒழிபு - பாரிசேடம். அஃதெங்ஙனமென்னில்? ஜகத்கர்த்தா மாயையுங் கர்மமு மானமாவு மன்றெனவே, சிவனே கர்த்தாவெனறு பாரிசேடத்தால் அநுமித்தறிதலால் அநுமானத்திலடங்கும். அஃதெக்காரணத்தாலென்னில்? மாயையுங் கன்மமுஞ் சடமாதலானு மானமா தானுக வறியு மறிவிலாமையானும் சர்வஞ்ஞன கர்த்தாவே சிவனெனவறிக.

சம்பவம் ஆயிரத்தினுள்றென்னு மெண்ணிக்கையான தவிகாபாவமாயிருக்கையா லநுமானத்தி லடங்கும்.

ஐதிகம் அப்ரமாணமெனவும் ப்ரமாணமெனவு மிருவிதமாம்.

இதன் முந்தியது ஆலின்கட் பேயுண்டென்கை யொருவருமதனைக் காணாதிருத்தலால் அப்பிரமாணமெனப்பெறும். மற்றது சான்றோர் வாக்கியமே மூலமாக விருந்தவாலிற் பேயுண்டென் றறுதியிட்டறிகையாலிதுவு முனாயி லடங்குமெனவறிக.

சமயிகளிந்தப்பிரமாணங்களை வேறுபடுத்திக் கூறுவர்கள்.

உலகாயிதன் - காண்டலொன்றுமே கொள்வன்.

பௌத்தனும் வைசேஷிகனும் - காண்டலுட னநுமானமுங் கொளவன.

சாங்கியன - காண்டலு மநுமானமு முரையுமாக மூன்று ப்ரமாணமுங் கொள்வன.

நையாயிகன - அம்மூன்றுட னுபமானமுங்கொள்வன

அருகனும் ப்ரபாகரனும் - அநநாலுட னருத்தாபத்தியுங் கொள்வன.

பாட்டனும் வேதாந்தியும்- அவ்வைந்துடன் அபாவமுங் கொள்வன

பௌராணிகன் அவ்வாறுடன் சம்பவமு மைதிகமுங் கொள்வன்.

இப்படிச் சமயிகள் பேதப்படுத்திக கூறுமையா லிவவாசிரியரும் பத்துப் பிரமாண முண்டென்று ஓதினாரெனவறிக.

இதனுட் பலவெழுவாயும், பலபயனிலையுங் காண்க (ச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ப்ரமாணங்களினாலே ப்ரமேயங்களை யறியவேண்டுகையான முதல் ப்ரமாணங்களின துத்தேசலக்ஷணங்களைக் கூறுகின்றது.

அளவையென்பது அளந்தறியப்படுமது. அஃதெவ்வாறுமெனின்? உலகத்துப் பதார்த்தங்களையெல்லா மளக்குமிடத்து எண்ணலெடுத்தல் முகத்தல் நீட்டல் எனனும் நால்வகையளவினு லளந்தறியுமாறுபோலப் பதிபசு பாசமுதலிய பொரு

ன்களைப் பக்குவானமாக்களுக் களந்தறிவிக்கையின் பொருட்டு
அளவைப்பிரமாணங்களை முதற்கண் கூறியதெனவறிக.

அல்லாமலுந் தர்க்கயுக்தியாயுள்ளவையு மிந்தவளவையிலே
சொல்லப்படுமென் றறிந்து அதற்கப்பிரயோகம் பண்ணவேண்டுமா
கையான முதற்கண் கூறிற்றெனவுமறிக.

"இராகமறியார் இசைப்பயன் தானறியார்
தராதரமறியார் சர்க்காரியமறியார்
ஓராளவை யொருபானுந் தானறியார்
ராரசங்கதளவை யறிந்துகொளீரோ."

அளவை-பரமாணம். ப்ரமாணமாவது சிற்சத்தி.—அச்சி
ற்சத்திக் கதிஷ்டானங்களாவன? காண்டல் கருதலுரை -
ப்ரத்யக்ஷம் அநுமானம் ஆகமம் என்று மூன்றுவிதமாம்.—இ
தற்குமேல் நையாயிகாதிகள் சொல்லும் பரமாணம், (அ
பாவம் பொருளொப் பாறெனபா) அபாவமானது - உண்டெ
ன்று ஞானத்தினில்லாமை, அநுபலத்தி;—பொருள் - அர்த்
தாபத்தி,— ஒப்பு - உவமானம், இவைகள்கூட வாறென
று சொல்லுவர்கள்,—(மேலுமளவை மொழிபுண்மை யைதிக
த்தோடியல்பென நான்களவை காண்பர்) பௌராணிகாதிக
ள் முன்சொன்னவாறு பரமாணத்திற்கு மேலுமளவை ஒழிபு-
பாரிசேஷம்,—உண்மை-சம்பவம்,—ஐதிகம் - சர்வபரம்பரை
யாகவரும் வாக்கியம்,—இயல்பு-ஸ்வபாவலிங்கம், என்றிந்நாலு
ங்கூட்டிப் பத்தாகச்சொல்வர்கள்,—அவையிற்றின மேலுமுறைவ
ா - இந்தப் பத்துக்குமேலும் ப்ரமாணமுண்டென்று சொல்
வாருமுளர் (அவைகள் "போதுகாற்றத்தா லறிதல்" என்னும்
இதனபின்வரும் - கஉ - வது விருத்தத்திற் காட்டுதும்) அ
வையெல்லாம் - இவ்வாறுசொல்லும் ப்ரமாணங்களைத்து
ம்,—காண்டல் கருதலுரையென் றிம்மூன்றிலடங்கிடுமே-ப்ர

த்யக்ஷம் அநுமானம் ஆகமமென்று மூன்று ப்ரமாணத்திலு * மந்தர்ப்பவிக்கும். * அந்தர்ப்பவிக்கும் - அடங்கும்

மேலிதற்கு விரிவுரை — இதன்மேல் ப்ரத்யக்ஷமொன்றுமே ப்ரமாணமென்னுஞ் சார்வாகனையும், ப்ரத்யக்ஷமு மநுமானமுமொழிந் தாகமம் ப்ரமாணமல்லவென்னும் பௌத்தனையு மூன்று ப்ரமாணமுமென்று காட்டி நிராகரித்து; ப்ரத்யக்ஷாநுமானாகமங்களுக்கு மேற்சொல்லும் ப்ரமாணங்களையும், இம்மூன்றுப்ரமாணங்களிற்குள்ளே யந்தர்ப்பவித்து, இம்மூன்று ப்ரமாணங்களினுடைய ஸ்வரூபங்களையுங் கிஞ்சிக் விஸ்தரித்துக்கூறுவாம்.

அளவையென்பது ப்ரமாணம். ப்ரமாணத்தின் ஸாமாந்ய லக்ஷணம், சம்சய விபரீய ஸ்மிருதி வ்யதிரிக்தையான ஆன்ம சிற்சத்தியே.

* தத்ரோக்தம் பௌஷ்கரே — ஸம்ஸயாதி விநிர்முக்தா விமர்ஶாத்மா த்ருஷ்டிருக்தா இதி.

இதன்விருத்தத்திலே ப்ரத்யக்ஷம் அநுமானம் ஆகம மூன்றும் ப்ரமாணமென்று சொல்லியிருக்கச் ¶ சிற்சத்தி ப்ரமாணமென்று சாதித்ததென்னையோவெனின்? இம்மூன்றுஞ் சிற்சத்திக் * கபிவ்யஞ்சகமாகையா லுபகாரலக்ஷணையாக வவைகளைப் பிரமாணமாகக் கூறியதே. இப்பிரமாணங்களினா லறியப்பட்ட வஸ்துக்களில் அநிஷ்டமானதை விடுகையும் இஷ்டமானதைப் பற்றுகையும் இஷ்டாநிஷ்ட மிரண்டுமல்லாததை உபேக்ஷிக்கையும் ப்ரமாணத்துக்குப் பலம்; ப்ரமாண சாமாந்யலக்ஷணம்.

¶ சிற்சத்தி - ஞானசத்தி, * அபிவ்யஞ்சகம் - விளக்குவது

† ப்ரமாகரணம் - ப்ரமாணமென்று நையாயிகர் சொல்லுவர்கள், ப்ரமைக்குக் கரணமாகிறது; ‡ சக்ஷுராதி ப்ரமா

ணமாமபொழுது தீபாதிகளும் ப்ரமாணமாம், ஆகையால் சக்ஷுராதிகள் சிற்சத்திக்கு ப்ரமேயமுமாய் § பதார்த்தாபிவியஞ்சகமுமாவதன்றி ப்ரமாணமாகமாட்டாது.

† ப்ரமா-ஞானம் ‡ சக்ஷு - கண், § பதார்த் தாபிவியஞ்சகம் - பொருள்களை விளக்குவது,

ஆகில் கண்ணாலே காண்கிறேனென்கிற தெப்படியென்னில்? விளக்காலே காண்கிறேனென்கிறதுபோல வுபகாரம் ஆகையினாலே சக்ஷுவானது சப்தத்தையறியாது + ஸ்ரோத்ரமானது ரூபத்தையறியாது இவ்வாறு பஞ்சேந்திரியங்களு மொன்றையொன்றறியமாட்டாதபடியாலும், ஒன்றினுடைய விஷயத்தை யொன்றறியாதபடியாலும், எல்லாவிஷயத்தையு மறிகிறதியாதொன்றது ப்ரமாணமாக வேண்டும். ஆகில் எல்லாவற்றையு மறிகிறது புத்தியாகையால் புத்தியே ப்ரமாணமென்னில்? புத்தியும் ப்ராகிருதி ஜடமாகையால் சக்ஷுராதிகளுக்கு மிதற்கும் பேதமில்லை. இதனறியும் புத்தியானது சுகதுக்கரூபையாய சிற்சத்திக்குப் பிரமேயமானபடியாலும், ஜடமேயல்லது சித்ரூபமான ப்ரமாணமாகமாட்டாது ஆகையால் சிற்சத்திக்குப் பிரத்தியக்ஷாதி ப்ரமாணங்களிலே அவ்யாத்திதோஷமும், நாநாப்பிரகாரமாயிருக்கிற ப்ரமேயங்களிலே அதிவ்யாத்திதோஷமும், தான் நித்திய வ்யாபக சித்ரூபமாகையா லசம்பவதோஷமு மில்லாதபடியாலே இந்ததோஷத் திரய ரஹிதமான ஆன்மசிற்சத்தியே ப்ரமாணம்.

+ ஸ்ரோத்ரம் - காது.

* [illegible]
[illegible]
[illegible] ॥ [illegible]

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌂𑌮𑌤𑌃 । 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌂
𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍀𑌯
𑌤𑍇𑌤𑌤𑍍𑌰 𑌭𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌵𑌤𑌃 । 𑌯𑌸𑍍𑌯𑍇𑌯𑌨𑍁𑌹𑌿𑌤𑌂
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌸𑍍𑌤𑍋𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌜𑍍𑌞𑍀𑌯𑌤𑍇 ॥ 𑌪𑌶𑍍𑌚𑌾𑌜𑍍𑌞𑌿 𑌦𑍍𑌰𑍁𑌪𑌾
𑌮𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍂𑌪𑌕𑌾𑌰𑌤𑌃 । 𑌨𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌦𑌾
𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍𑌨𑌾𑌭𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾 ॥ 𑌤𑌦𑍇𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌷𑌵𑍍𑌯𑌕𑍍𑌷
𑌰𑍂𑌪𑌾𑌦𑌿 𑌨𑌤𑌾𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 । 𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌭𑍂𑌤𑌦𑍍𑌭𑌾𑌸𑌮𑌿𑌤𑌿
𑌨𑌮𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌰𑌂 𑌰𑌜𑌪𑌮𑌯𑌦𑍇𑌨 ॥ 𑌸𑌵𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑍀
𑌸𑌂𑌵𑌿𑌤𑍍 𑌮𑍇𑌸𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑍍𑌞𑍇𑌤𑌾𑌜𑍍𑌞𑌤𑌾 । 𑌯𑌤𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌵𑌿𑌦𑌂𑌸𑌿
𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌨𑌕𑌿𑌞𑍍𑌚𑌨 ॥ 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌰𑍍𑌥𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾
𑌨 𑌕𑍍𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌂𑌨 𑌚𑍇𑌷𑍍𑌟𑍇𑌤 । 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌭𑌿
𑌷𑍇𑌣 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌦𑍇 𑌰𑌵𑌿𑌭𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌸𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌤𑍍𑌤𑌕
𑌸𑍍𑌵𑍇𑌨 𑌨𑌹𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌾 । 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍍𑌚𑍇𑌵
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌿𑌕𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌃𑌦𑌰𑍍𑌵𑌾𑌦𑌿 𑌰𑍂𑌪𑌤𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣
𑌕𑌾𑌙𑍍𑌕𑌤𑌾𑌤𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍂𑌪𑌿𑌨 𑌸𑌂𑌯𑍁𑌤𑌾 ॥ 𑌕𑍍𑌷𑍍𑌰𑌾
𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌞𑍍𑌚 𑌕𑌥𑌾𑌞𑍍𑌚𑌨 𑌸𑌂𑌭𑌵𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯
𑌕𑍍𑌷𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌷𑍁 𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌨𑌾 𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌤 𑌦𑍋𑌷𑌣𑌃 ।
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑍍𑌚 𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍇 𑌨𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑍇𑌷𑍍𑌵𑌤𑍍𑌤𑍁
𑌨𑌾𑌤𑍍 ॥ 𑌨𑌾𑌨𑍍𑌯𑌾 𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌪𑍍𑌯𑌪𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌞𑍍𑌚
𑌤𑍍𑌤𑌿𑌦𑍍𑌭𑍍𑌰𑌮𑌾 𑌇𑌤𑌿.

பின்னுமொருவன் அந்தக்கரணங்களும் * பாஹ்யேந்த்ரியங்களும் விஷயங்களும் ப்ரமாதாவும் இந்தநாலுமுண்டானாலொன்றையொன்றறிகையுமிவைகளிலே யொன்றில்லாவிடினுமறியமாட்டாமையுமாகையால் ப்ரமா சாமக்கிரியே ப்ரமாணமென்னில்? மறுத்தால் அப்பொழுது † ப்ரமாணம் ப்ரமேயம் ப்ரமாதா ப்ரமிதியெனனும் வ்யவஹாரமில்லாமற்போம் யாதொன்று யாதொன்றைக் காட்டிலுமதிக மாவதற்குப் ¶ பின்னமெனகிற வ்யாபதியுமில்லையாம். ஒன்றினாலே யொன்றையொன்றறிகிறதெனகிறது மில்லையாம். ஆகையாலே சந்தேகாதிகளில்லாத ஆன்மசிற்சத்தியே ப்ரமாணம்.

* பாஹ்யேந்த்ரியங்கள் - வெளியே தோற்றுவிக்கும் பஞ்சேந்த்ரியங்கள், † ப்ரமாணம் - அளவை, ப்ரமேயம் - அறியப்படும் பொருள், ப்ரமாதா - அறிகிறவன், ப்ரமிதி - மெய்யறிவு, ¶ பின்னமெனகிற வ்யாபதி - வேறெனகிற நியமம்.

* [illegible]

அசித்துக்கு * உக்ததோஷமுண்டு, உம்முடைய மதத்திலே ஆன்மா ஞானஸ்வரூபனாகையால் ப்ரமாணமும் ப்ரமாதாவும்

ப்ரமேயுந் தானேயாகவேண்டு மாகையாலென்னில்? அப்படிய ன்று; ஆன்மசிற்சத்தியானது வித்யாராகாதி †கலுஷிதையாய் ‡ விஷயாபிமுகியானபொழுது கலுஷிதாம்சசிற்சத்தி ப்ரமாணமேயாம். புத்தியின § வ்ருத்தியோடேகூடி விஷயத்தைப் பரிச்சேதிக்கிறபோது ப்ரமையாம். இந்தவுபாதிகளிருபோ ¶ அகலுஷித சைதந்நியம் ப்ரமாதாவாம். இந்த வுபாதிவ்ருத்தியினாதி சிற்சத்தி × சிவோன்முகியானபொழுது சிவஞ்ஞான + பிவியத்தியினாற் சூரியகிரணத்தாற் சூரியனையும் சாவயதாசதத்தையுங் கண்டதுபோலச் சிவனையு மந்தச்சிவஞானத்தையுந் தன்னையுந் தானேகாணும்பொழுது அது ப்ரமையாய் அந்த ப்ரமையை யறிவிக்கிற சிவஞானம் ப்ரமாணமும், சிவைக்கியாநு சந்தாநம் ப்ரமிதியும், ஆன்மா ப்ரமாதாவுமேயாம்.

* உக்ததோஷம் - மேற்சொன்னதோஷம், † கலுஷிதை - கூடிக்கலங்கல், ‡ விஷயாபிமுகியாதல் - விஷயத்தை விசாரித்தல் § வ்ருத்தி - வியாபாரம், ¶ அகலுஷிதம் - கூடிக்கலங்காதது. × சிவோன்முகியாதல் - சிவனை விஷயமாகப்பண்ணுதல், + அபிவியத்தி - ப்ரகாசம்.

இதனால் ஆன்மசிற்சத்தி கலுஷிதமாய் விஷயாபிமுகியானபொழுது அந்தவம்சம் ப்ரமாணமேயொழிய ப்ரமாதாவாகாதென்றும், அகலுஷிதையாய் பரோன்முகியானபொழுது ப்ரமாதாவொழிய ப்ரமாணமாகாதென்றுங் கூறப்பட்டது

* 𑌤𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸 𑌵𑌾𑌰𑌿𑌵𑍇

𑌕𑍍𑌷𑍋𑌭𑍍𑌯𑌾𑌣𑌵𑌦𑌸𑍍𑌥𑌾𑌵𑌶𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍀 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌂

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌿 ॥ 𑌵𑌿𑌷𑌯𑌾𑌹𑍀 𑌚

𑌸𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌾 । 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌂

சைதந்யம் ஸ்வாத்மைவ நஸ்வாத்மனா த்ருஶ்யதே
ஜநா || *

* ஸூத்ராவலி — ஶிவாக்ர ஶக்தி தீபிகா
ஸூத்ர க்ருத விவ்ருதி ஶா | ஶிவம் ஶக்தாதி ஸம்ஹாரம்
பஶுத்ராதா ப்ரதாவ்ருதிஸிதி.

அத்ர சிரசதஇப்பிரமாணமென்றும் பொதுப்பிரமாணமான து ப்ரமிதியாகாது, பரமிதியானது ப்ரமையாகாது, ப்ரமையானது ப்ரமாதாவாகாது; பெத்தமுத்தி யிரண்டிலுமா த்ரம ப்ரமாதா அகரப்ரதிகஞான பேதத்திலே ப்ரமிதியாம்.

ஸ்வரூபஞானமான சிற்சத்தி முகத்திலே ப்ரமிதிபேதத்திலே சிவனுடைய இச்சாஞானக்கிரியை ப்ரமாணம். முத்தியிலே சிவனுடைய பராசத்தியாகிய ஸ்வரூபசத்தி சிர்சத்திப்பிரமாண பேதத்திலே மாயாபதார்த்தங்களே ப்ரமேயம் முத்தியிலே சிவனே ப்ரமேயம் இப்படியன்றி அத்ரசிற்சத்தியைத்தானே யோரவசரத்திலே ப்ரமாணமென்றும், ஓரவசரத்திலே ப்ரமையென்றும், ஓரவசரத்திலே ப்ரமாதாவென்றும், ஓரவசரத்திலே பரமதியென்றுஞ் சொல்வது விருத்தமாம் மமத்வாசரயம் ஒரு வஸ்துவுக்குச் சொல்லுகிறது உசிதமல்ல. இதற்குச் சம்மதி சிவப்பிரகாசத்திலே "இத்தனையிறையருளால்" எனனும் பாட்டிலே "பொருந்தியிடும்வகைபுணரும்புனிதசத்திபுணர்ந்தே" எனறும் "பேசரியவராகந்தன்கனமததுசகிடாய" எனனும் பாட்டிலே "இறைசத்தியுடனாய் நின்றே" எனறும், "பன்னிரங்கவருங்கன்னை" என்னும்பாட்டிலே படிகத்தின ப்ரகாசத்தை விளக்குவிக்கிற ஆதித்தப்பிரகாசம் அது பல வன்னதனைக் கூட்டியும் உருமத்திலே

அதை நீக்கித் தனது பிரகாசத்தைப் பதித்தும் நின்றதுபோ
லச் சிவஞானம் பெத்தத்திலே விஷயத்தைக்கூட்டியு முத்தியி
லே யதை நீக்கி ஞானமாய்நின்று நேயத்தைக்காட்டி நிற்ப
துஞ் சொல்லுகையானும்; சிவசத்தியே ப்ரமாணமாத்ரசத்தி
ப்ரமிதியென்றே கொள்ளவேணுமெனவறிக.

அவ்யாத்தி அதிவ்யாத்தி அசம்பவதோஷ முண்டா
யிருக்கையாலு மத்ரசிற்சத்தியைப் பிரமாணமென்பது கூடா
து. அஃதெப்படியெனில்? சிவனை அந்த ஆன்மசிற்சத்தி யறி
யப்போகாது என்கையினாலே யவ்யாத்தி தோஷமும், சிவ
ஞானமல்லாத விஷயாதிகளையு மறிவிசத்துச் சிவனையு மறிவிக்
கையினாலே ப்ரமேயமல்லாதவஸ்துச சிவனென்பதொன்று
ண்டாகையினாலே அதிவ்யாப்திதோஷமும் வந்தது. ஆன்ம
சிற்சத்தி தானே சிவனை யறியமாட்டாதாகையினாலே அசம்ப
வதோஷமுண்டு. நித்ய வ்யாபக சித்ரூபனானவனாலும்
சிவஞானத்தினாலே மலதோஷம நீங்கியும் சிவஞானமறிவித்
தாலல்லது தன்னையும் சிவனையும் பாசத்தையு மறியமாட்டாத
படியாலும் அசம்பவதோஷமுண்டு. ஆகையால் சிவசத்தியே
பெத்தமுத்தி யிரண்டிலும் ப்ரமாணமெனவறிக.

* ஶிவாக்²யா ஶக்திரீஶஸ்ய ஸர்வஜ்ஞத்வ விதா⁴யி
நீ । ஶிவம் ஶக்த்யா ஹி ஸாக்ஷாத் பஶ்யத்யாத்மா
நமாத்மநா ॥ இதி.

என்றது சிவரூபி ஆதித்தனானவன் சத்தியினாலே அத்ர
சிற்சத்தி மலம் நீங்கினவிடத்துச் சிவனையு மந்தச் சத்தியையும்
ஆன்மாவையும் பாசங்களையு மறியுமென்றார்.

பௌத்தர் † அவிசம்வாதியானவர்கள் அறிவு விஞ்ஞா
னம் ப்ரமாணமென்பர்கள். அப்படிசொல்லி ஆகமப்பிரமா

ணமில்லையென்பன்; அப்படியன்று. பரலோக பாதாளலோகங்களை யறிவிப்பது ஆகமமாதலால் ஆகமப்பிரமாணமுண்டென வறிக. அதாவது?—அர்த்தக்கிரியாஸ்திதி இதன்பொருள், யாதொருபதார்த்த * தரிசனத்தினாலே ஞானமானது † பாதிக்கப்படாமலிருக்கும் அதுவே அர்த்தக்கிரியாஸ்திதி அதுகூடாது, ‡ பூதபௌஷியத விஷயங்களாயிருக்கிற அநுமானங்களிலே அவ்யாப்திபாஷையாலே இந்தஆற்றில் வெள்ள மழைபெய்ததன்டானது எனகிறவிடத்தில் வெள்ளமுண்டு, அவ்விடத்து மழையில்லாதபடியாலே அர்த்தமுண்டு,க்ரியையில்லையாகையால் அந்தகாலத்தில இது அவ்யாப்தி, அவன § ஸ்மிருதிஞானமும சவிகற்பஞானமும ப்ரமாணமல்லவென்கையாலவனுக்கலக்ஷியமான விவரண்டினும் அர்த்தக்கிரியாகாரித்வமுண்டாயிருக்கையா லதிவ்யாப்தியுமாமாகையால் ¶ பூர்வோக்தசித்தியே ப்ரமாணம்.

| அவிசம்வாதி விஞ்ஞானம் - யாதொருபதார்த்தத்தைக் கண்டதனாலே ஞானமானது கெடுக்கப்படாமலிருத்தல், * தரிசனம் - காண்பது, † பாதிக்கப்படாமல் - கெடுக்கப்படாமல், ‡ பூதபவிஷியத்விஷயம் - செல்கால எதிர்காலவிஷயம், § ஸ்மிருதிஞானம் - முன்னினைவு, ¶ பூர்வோக்தம் - முன்சொன்னது.

மேல் ப்ரபாகரர்-அநுபூதியே ப்ரமாணமென்பர்கள் அநுபூதியாவது-¶ஸ்மிருதி வியதிரிக்தஞானம். ஸ்மிருதியாவதேதெனில்? §பூர்வாநுபவ ஜநிதசமஸ்கார ஜநியஞானமென்பர்கள்; அதுகூடாது அஃதெவ்வாறென்னில்? *பதார்த்தஸ்மரண பூர்வகமாக வேதவாக்யார்த்த ஞானத்துக்கு ஸ்வதப்ரமாணியம் சாதித்தவனே ஸ்மிருதிவ்யதிரிக்தஞானம் ப்ரமாணமென்கையால் ‡ பூர்வோத்தரவிரோதம். மேலும் ஸ்மிருதிகளுக்கு

ம் × ஆன்மஸ்வாத்மாம்சங்களிற் ப்ரமாண்யமு மில்லையாமாகில் தோஷமேதெனனில்? + ஸ்வமதத்தி லபசித்தாந்தமாகையால் அநுபூதியே ப்ரமாணமென்பது † நிரஸ்தம.

¶ ஸ்ம்ருதி வ்யதிரிக்தஞானம் - முன்னினைவில்லாதஞானம், § பூர்வாநுபவ ஜநித ஸம்ஸ்காரஜந்யம் - முன்னனுபவித்த ததாலே யுண்டா யிருக்கிற, * பதார்த்த ஸ்மரணபூர்வகம் - சப்தார்த்தத்தை நினைத்து அதுமுன்பாக, ‡ பூர்வோத்தரவிரோதம - முன்சொன்னதற்கு பின்சொன்னது விரோதம × ஆன்மஸ்வாத்மாம்சம - தனனுடைய வேகதேசம், + ஸ்வமதம-தனனுடையமதம, † நிரஸ்தம-கூடாமை.

மேல்பாட்டர் - அநதிகதார்த்தகந்தருப்ரமாணமென்பர்கள். இதன்பொருள் ஒருககாலுமறியாதவஸ்துவை யறிவிக்கிறது ப்ரமாணம்; அதுகூடாது ஒருகார்க்கடகடத்தை யிதுகடம் இதுகடமென ரொழுங்காகவருகிற ஞானங்களிலே யிரண்டாவது முதலாயிருக்கிற ஞானங்களுக்கு ப்ரமாண்யமில்லையாம இந்தனறியும் தையாதீனமாக § அர்த்தசம்வாதத்தை உண்டில்லையென்றவாதம்உடைத்தாயிருக்கிறதோஷத்தையுடைய சக்ஷுராதிகளுக்கும் *ப்ராந்திவிப்ரலம்பக வாக்யங்களுக்கும் ப்ரமாண்யமவந்துவிடும். ஆகையாலிதுவுநிரஸ்தம். பூர்வோக்த ஆன்மசிற்சத்தியே ப்ரமாணமாகில் சிற்சத்தியானது இந்த்ரியார்த்தக் கரணங்கள சம்பந்தமன்றி தானே ¶ பதார்த்த தாமிழுகியாகாது. ஆகையாலே சிற்சத்திக்குக் கடாதிவிஷயங்களோடு சம்பந்தமெப்படியென்னில்? ஒக்கும். சிற்சத்தியான தானவமலத் தாற் றகையப்படுகையாலே † ஸ்வநிஷ்டமாகவே யிருக்கும். கலையினாலே ‡ கிஞ்சித்சஞ்ஞான ம்ககப்பட்டு வித்தையுமராகமுங்கூடினபொழுது புத்தியாதியோடேகூடி விஷயா ‖ பிமுகியாய் ஞானேந்திரியங்களோடேகூடி விஷயசம்பந்தமாம்.

இவ்வாறன்றித் தனியே +கேவலபதார்த்தேந்த்ரிய×சம்யோகங் கொண்டு ப்ரத்யக்ஷப்ரமையுமுண்டாமென்று சொல்லப்போகாது. பதார்த்தேந்த்ரிய சம்யோகமுண்டாகியும் புருஷனுக்கு விஷயசுகமுண்டானபொழுது அந்தப்பதார்த்த ௱ஞானமில்லாமல் சம்யோகம் ‖நிஷ்பலமாகையாலே சித்தசந்நி விஷயசம்யோகமே ‡ப்ரத்யக்ஷாதி ப்ரமாணம்.

§ அர்த்தசம்வாதம - உண்டில்லையென்னும் வாதம், * ப்ராந்த விப்ரலம்பகவாக்யம - பித்தர் விகடாசொல்லும் வார்த்தை, ¶பதார்த்தாபிமுகம்-பதார்த்தத்திற் கெதிர்முகம், †ஸ்வநிஷ்டம்-தன்னிஷ்டம், ‡கிஞ்சித்கஞ்ஞான நீக்கப்பட்டும ¶ சற்றேமலத்தை நீக்கப்பட்டு, | அபிமுகம்-எதிர்முகம், + கேவலபதார்த்தேந்த்ரியம் - தனியே பதார்த்தங்களும் இந்த்ரியங்களும், × சம்யோகம்-கூட்டுறவு, ௱ ஞானம்-அறிவு, ‖நிஷ்பலம - ப்ரயோசநமில்லாமை, ‡ ப்ரத்யக்ஷம்-காண்டல்.

*[illegible]

இந்தப்ரமாணம் § நிர்விகற்பகமென்றும் *சவிகற்பகமென்று மிரண்டுவிதமாம். நிர்விகற்பமாவது ¶ சாமாந்யமாகவொரு, ‡ வஸ்துவைககாண்பது. பிறகு † சமசய ○ விபர்யயஸ்திரிதி ● நிவிர்த்தியினபொருட்டு ⁑ நாம ‖ ஜாதியாதிபோசனைப்பண்ணு 1 மவாந்தர வ்யாபாரம். இந்த நாமஜாதியாதி விகற் 2 பாநந்தரம் வஸ்துவை 3 யதாவத்தாக வறிகிறது சவிகற்பகஞானம் இந்த ப்ரத்யக்ஷந்தான் இந்த்ரிய 4 சாபேக்ஷமென்றும் அந்தக்கரண சாபேக்ஷமென்றும் இந்த்ரியாந்தக்கரண 0 நிரபேக்ஷமென்று மூன்றுவிதமாம். இதில் இந்த்ரியாந்தக்கரண நிரபேக்ஷ ப்ரத்யக்ஷமாவது ஒருக்காலு ¶¶ மாவரணமேலசமற்றிருக்கிற ஈஸ்வர சிற்சத்தியாலே சிவாநந்தத்தை ஆன்மா வநந்யமாக வநுபவிப்பது. இதற் கந்யமான விந்த்ரியசாபேக்ஷ ப்ரத்யக்ஷமாவது ஆணவமலா §§ வ்ருத்தியைந கலையாலே சிஞ்சித் நீக்கப்பட்டு அந்தக்கரண ஞானேந்த்ரிய †† த்வாரா வஸ்துக்களை யறிவது அந்தக்கரண சாபேக்ஷமாவது ‡‡ பாக்யேந்த்ரியங்களினாலே கண்டபதார்த்தங்களை சிற்சத்தியானது அந்தக்கரணங்களோடுகூடிநின்று சிந்திப்பது.

§ நிர்விகற்பம் - விகற்பமில்லாதது, * சவிகற்பம் - விகற்பத்துடனே கூடினது, ¶ சாமாந்யம - பொது, ‡ வஸ்து-பொருள், † சம்சயம் - ஐயம, ○ விபர்யயம் - திரிவு, ● நிவிர்த்தி - இல்லாமை, ⁑ நாமம - பெயர், ‖ ஜாதியாதி - குலம குணமுதலான, 1 அவாந்தரம - நடுவேயுண்டானது. 2 அநந்தரம் - பிற்பாடு, 3 அதர்வத் - உள்ளபடி, 4 சாபேக்ஷம்-கூடினது, 0 நிரபேக்ஷம் - கூடாதது, ¶¶ ஆவரணமேல சமற்றிருக்கிற - மறைப்பில்லாமலிருக்கிற, §§ வ்ருத்தி - அதிகமாதல்அதாவது மறைதல், †† த்வாரா - வழி, ‡‡ பாக்யேந்த்ரியம்-வெளியிந்த்ரியம். அதாவது கண்முதலிய ஞானேந்த்ரியங்களே.

* [illegible] ஜ்ஞதி.

இக்கப்ரமாணம் ¶ அபிவியஞ்சகமானது ப்ரத்யக்ஷமென்றும் அநுமானமென்றும் சப்தமென்றும் சைவத்திற்கு மூன்றுவிதமாம்.

¶ அபிவியஞ்சகம் - வெளிப்படத்தோற்றுகிறது.

* [illegible] ஜ்ஞதி.

மேல் உலோகாயிதன் ப்ரத்யக்ஷமொன்றுமே பொழிந்தது மாநுமாநங்கள் ப்ரமாணமல்லவென்பன் அதற்கவனுடைய மதத்தை நிராகரித்தநுமானாகம ப்ரமாணங்களுண்டென்பது பரபக்ஷத்தி லவனுடைய மதநிராகரணத்திலே கூறப்பட்டது.

நாலு பூதங்கூடினதே ஆன்மாவென்பன் "பூதங்கூடின தைக் கண்டாயோ இந்தப் பூண்டபூத வுடம்பினவநெழு போ கமெனக்கொடு கண்டனை" இதெல்லாம் அநுமானமெனவறிக.

அநாவாகையுங் க்ரஹணந்தீண்டலும சுததப்ரமாணத்தி னாலேயே அறிந்தாய்; ஆகையால் உரையுண்டு.

இனி ப்ரத்தியக்ஷநுமானங்களமங்க ளல்லாமல் உபமானம் § ப்ரத்தகப்ரமாணமென்று நையாயிகர் சொல்லுவர்கள். அந்த உபமானம் அநுமானத்திலே * யந்தர்ப்பவிக்கும்படி ‡ ப்ரகரிசிப்பிப்பாம். உபமானமாவது கவயமாகிய மரையை யறியவேண்டின பட்டணஸ்தனானவன வநத்துக்குப்போய் வநத்திலுள்ளவனானவனை யொருவனை மரையெப்படியிருக்குமென்று கேட்கப் பசுவைப்போலிருக்குமென்றவன் சொல்லக்கேட்டு வநத்திற்குப்போய் மரையைக்கண்டு இது ¶ கோசத்ருஶ்யமாயிருக்கின்ற மரை கவயமென்றறிகிறது. இது ப்ரத்யக்ஷாநுமானங்களினாலே † யசாத்யமாகையாலே ப்ரத்யக்ஷப்ரமாணமெனிலோ? சாஸ்த்ரஸ்யஞான முபமானமேயாமெனில்? இந்த மரை பசுவுக்கு சமானமாமெனகிறபொழுது ப்ரத்யக்ஷமேயாம். அல்லது 1அதிதேசவாக்ய சரவணத்திற்குப் பிறபாடு கவய 2வாச்யபதவ பரிச்சேதமான துபமானமெனில்? அநுசப்ந்தி னாலே தானேவருமே. இந்தப்பசுவுக்குச்சமான மரை யென்கிற துபமானமெனில்? அந்தமரை யிந்தப்பசுவுக்குச் சமானம் சுத்தத சாஸ்த்ரஸ்ய ப்ரத்யோகியாலே யென்றுசொல்லி யநுமிக்கையாலே அம்ஶநுமானத்தி லந்தர்ப்பவிக்கும்; ப்ரத்யக்ஷ ப்ரமாணமல்ல.

§ ப்ரதக் - தனியே, * அந்தர்ப்பவித்தல்-அடங்குதல், ‡ ப்ரகரிப்பித்தல் - சொல்லுதல், ¶ கோஸத்ருஶ்யம் - பசுவுக்குச் சரியாயிருக்கிறது, † அசாத்யம் - (அறிகிறது) கஷ்டம், அ.ர

வது அறியக்கூடாதென்பது கருத்து, 1 அதிதேசவாக்ய ச்ரவணம்-வந்ததிலிருப்பவனை சொன்னதைக் கேட்டது, 2 வாச்சிய தவபரிச்சேதம் -சொல்லினாலே சொல்லப்படுகிறது.

ப்ரபாகரர் *அர்த்தாபத்தி பரதக்பரமாணமென்பர்கள். அர்த்தாபத்தியாவது ஒருபுருஷன பகலெல்லாம் போஜனம் பணணவில்லை பருத்துமிருக்கிறான ஏனறதுகொண்டு பகல் போஜநம பண்ணுதவனுக்கு தேகபுஷ்டி ராத்ரி புசியாவிட்டால் கூடாதாகையா லிநத வறுபவததினாலே ராத்ரிபுசிப்பானென்று நிச்சயிக்கபபடுவது. இதுப்ரத்யக்ஷாதி ப்ரமாண சதுஷ்டயங்களிலு × மகம்மியமானபடியாலே அர்த்தாபத்தி ப்ரதக்ப்ரமாணமெனின? அஃதல்ல இநத அர்த்தாபத்தியானது கேவல வ்யதிரேகியநுமாநத்தி லநதர்ப்பவிக்கும். அஃதெபபடியெனனில்? தேவதத்த னிராத்ரி புசிப்பன், பகல்புசியாமலிருக்கவும் பருத்திருக்கையாலே. எவன ¶திவாராத்ரம் புசியாமலிருநதா னவனுக்கு ‡பீநதவங்கூடாது, §மாசோபவாசியைப்போல வெனகையால் கேவல வ்யதிரேகியி லநதர்ப்பவிக்கும். ஆகையாலே ப்ரதக் ப்ரமாணமல்ல.

* அர்த்தாபத்தி - பொருள், × அகம்மியம் - அறியப்படாதது, ¶ திவாராத்ரம் - பகலுமிரவும், ‡ பீநதவம் - பருத்திருத்தல், § மாசோபவாசி - மாசப்பட்டினி யிருப்பவன.

மேல் பட்டாசாரியர் ப்ரத்யக்ஷாதிக ளைந்தும் ப்ரமாணமுமன்றி யபாவமான † தநுபலப்தி வேத்யமாகையா லபாவம் ப்ரதக் ப்ரமாணமெனபர்கள்; அதுகூடாது, சக்ஷுசம்யுக்தமான விக்தபூதலம் ¶ கடா பாவத்தையுடையதென்று பூதலத்துக்கு விசேஷணமாகத்தான், இந்த பூதலததிலே கடமில்லையென்று பூதலத்துக்கு விசேஷியமாகத்தான், கரஹி

க்கப்படுகையா லிந்த வபாவம் ப்ரத்யக்ஷத்தி லந்தர்ப்பவிக்கு ம்; ஆகையாலே ப்ரதிக் ப்ரமாணமல்ல.

† அநுபலப்திவேத்யம் - இல்லாமையைக்கொண் டறியப் படுகை, ¶ கடாபாவம் - (கட அபாவம) கடமில்லாமை.

பௌராணிகர் பாரிசேஷமும் சம்பவமும் ஐதிகமும் ஸ்வ பாவலிங்கம் இவைநாலும் ப்ரதக் ப்ரமாணமெனபாகள். இவைகள் முன்சொன்ன மூன்றுப்ரமாண த்ரயத்தி லந்தர்ப்ப விக்கையால் ப்ரதகப்ரமாணங்களல்ல. அஃதெவ்வாறெனனி ல்? ஆயிரமியானையின பலமுடையவர்கள் சல்லியன சராசந்தன கீசகன பீமசேனன இந்த நாலுபேருமாகையா லிவர்களு க்குள்ளே கீசகனை வதைத்தவனுறென்றவிடத்தில் அவவிடத் தில் சல்லியனுஞ் சராசந்தனு மில்லாதபடியால் * அஞ்ஞாத வாசியாகிய பீமசேனனேயென்று நிச்சயிப்பது பாரிசேஷம். ஆ யிரமியானையின் பலமுண்டான கீசகன தனக்கு சமபலமான வன கையாலே கொல்லப்படுவன; அத்தனை பலத்தை யுடை த்தாகையாலே சராசந்தனைப்போலே யெனகிறது வயாப்திமூ லகமானபடியாலே யிந்தப்பாரிசேஷம் அநுமாநத்தி லந்தர்ப் பவிக்கும். சம்பவமானது ஆயிரத்திலே நூறுண்டென்கிறது, இதுவும் வ்யாப்திமூலகமாகையா லநுமாநத்தி லந்தர்ப்பவிக் கும். ஸ்வபாவலிங்கமானது - தேமா ¶ வ்ருக்ஷமாம். தேமா ஸ்வபாவ மாகையால் வ்ருக்ஷமாகாதபோது தேமாவாகாது. ‡ இலைபோல என்பது அந்வய வ்யதிரேக வ்யாப்தியுண்டாயிரு க்கையால் இதுவும் அநுமாநத்தி லந்தர்ப்பவிக்கும். ஐதிகமா வது இந்தஅரசிலே †ரக்ஷ வுண்டெனபது. இது ப்ரத்யக்ஷமு மல்லாமல் அநுமானமுமல்லாமல் வாக்யமூலமாகையால் சப் தத்தி லந்தர்ப்பவிக்கும்; ஆகையால் முன்சொன்ன ப்ரத்யக்ஷ முமாகமங்கள் மூன்றுமே ப்ரமாணம்.இந்தப்பிரமாணங்களி

னுடைய ப்ரமாண்யமானது § ஸ்வதோவா பரதோவாவென்னில்? இந்த மூன்றுப்ரமாணத்திலும் ‖ அநுசூதமாயிருக்கிற ஞானமசிற்சத்தியானது + ஸ்வசம்வேத்ய மாகையாலே × ஸ்வதகப்ரமாணமே.

* அஞ்ஞாதவாசி - அறியாமல் வசவாசம்பண்ணுவோன, ¶ வ்ருக்ஷம் - மரம், ‡ சிலை - கல்லு, † ரக்ஷஸ் - பேய், § ஸ்வதோவா பரதோவா - தன்னைக்கொண்டுவருமோ வேறொன்று கொண்டுவருமோ, ‖ அநுசூதம்-கூடியிருத்தல், + ஸ்வசம்வேத்யம் - தன்னாலே யறியப்படுகிறது, × ஸ்வதகப்ரமாணம் - தன்னைக்கொண்டறிகிறதே ப்ரமாணம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பதிபசுபாச திரிபதார்த்தமாகிய ப்ரமேயசித்தி ப்ரமாணமன்றி யில்லை யெனபதனாற் ப்ரமாணங் கூறுகின்றார்.

அளவை - ப்ரமாணம், ஆறென்பர்,—காண்டல் - ப்ரத்தியக்ஷம்,—கருதல் - அநுமானம்,—உரை - ஆகமம்,—அபாவம் - அநுபலத்தி—பொருள் - அர்த்தாபத்தி,—ஒப்பு - உபமானம், இப்படி பாட்டனும் வேதாந்தியும் ப்ரமாணமாறென்பர்கள். அருகனும் ப்ரபாகரனும் அவைகளுக்குள் அபாவப் பிரமாண மொன்றையுந் தள்ளிப்பிரமாணம் ஐந்தென்பர்கள், நையாயிகன் அவற்றுள் அர்த்தாபத்திப் பிரமாண மொன்றையுந்தள்ளி நாலென்பன, சாங்கியன அவைகளுள் உபமானப்பிரமாண மொன்றையுந் தள்ளிப் பிரமாண மூன்றென்பன், பௌத்தனும் வைசேஷிகனும் அவையிற்றுள் ஆகமப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிர

மாண மிரண்டென்பர்கள்,உலோகாயிதன் அவற்றினுள் அநு'மானப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிரமாண மொன்றென்பன்,—அளவைமேலும் - சொல்லியவாறுப் பிரமாணங்களுக்கு மேலுட்,—ஒழிவு - பாரிசேஷ்யம்,—உண்மை - சம்பவம்,—ஐதிகம் - உலோகவாதம்,—அதனோடியல்பு - ஸ்வபாவம் என நான்களவை காண்பர்,—அவையிற்றினமேலு மறைவர் - சொல்லிய விப்பத்து ப்ரமாணங்களுக்கு மேலும் ப்ரமாணங்களைச் சொல்லுவார்கள்,—அவையெல்லாமளவை - அந்த வெல்லாப் பிரமாணங்களுஞ் சாங்கியத்திலேபோல சைவசித்தாந்தத்திலே,—காண்டல் கருதலுரை யெனறிம்மூன்றின் - ப்ரதியக்ஷம் அநு'மானம் ஆகமமெனகின்ற மூன்று ப்ரமாணங்களின்,—அடங்கிடுமே - அந்தர்ப்பவிக்குந்தானே.

இந்தப் பிரமாணங்களினது பகுப்பிலக்ஷணம் அடக்கம் உதாஹரணங்கள் விரித்து,சுருங்கியவுரையி லுரைக்கில் விபரீதமாய் விரியும்; அதலால் முனசொல்லிய முனனோருரையில் முதிர்ந்தோருரைக்க வொருநெறியாலறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி,நிறுத்தமுறையானே பொருளுண்மைக் களவுகூறுவான்றொடங்கி, அவ்வளவையினியல் புணர்ந்தார்க்கன்றி அதனை யெடுத்துக்காட்டலாகாமையின், முதற்கண் அளவையினியல்பு பதினொன்று செய்யுளாற் கூறுகின்றார்.

எ-து. பிரமாணமாவது காட்சிமுதல் அறுவகைப்படுமென்பாரும்,அவ்வறுவகைப் பிரமாணங்கட்குமேலும் பாரிசேடமுதலிய நான்குபிரமாணமுளவென்பாரும், அப்பத்துக்குமேலும்

பிரமாணங்களுளவென்பாருமுளர். அவையெல்லாம் பிரமாண மேயாயினுங் காட்சிமுதலிய மூன்றனுளடங்குவனவன்றி வேறுவனவல்லவென்பதாம்.

இம்முறைபற்றி ஆகமமு மநுமானத்தி லடங்குமெனப் புத்தர் முதலாயினோர் கூறுப. அஃததனுளடங்காதென்பது "நூலுரைத்தானொருவனுளன", என்னும் பரபக்கத்துச் செய்யுளானுணர்க. பௌத் - சௌத் - மறுதலை - கஉ—செ.

இது சொற்பொருட்பின்வருநிலை.

இதனானே பிரமாணமினைத்தெனபது கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

அளவைப்பிரமாணங்களினாலு மறியலாமென்ற தெப்படியென்ற மாணாக்கனைநோக்கி மேலருளிச்செய்கிறார்.

அளவை - அளந்தறியத்தக்க ப்ரமாணம்,—காண்டல் - ப்ரத்தியக்ஷம்,—கருதல் - அநுமானம்,—உரை - ஆகமம்,—அபாவம் - உள்ளதை யில்லையெனகை,—பொருள் - அர்த்தாபத்தி,—ஒப்பு - உவமானம்,—ஆறென்பர் - இப்படி ஆறுவகையாகச் சொல்லுவர்கள்,—அளவைமேலும் - இந்தப்பிரமாணங்களையொழிய மேலும்,—ஒழிவு - பாரிசேஷம் (பாரிசேஷம் - மூன்றுபெயரிலே யிருவரைக் கள்வரல்லவென்றால் நின்றவொருவனைக் கள்வனென் றறிகை),—உண்மை - சம்பவம் (சம்பவம் - நூற்றிலே தொண்ணூறுண்டென் றறிகை),—ஐதிகம் - மரத்திலே பே யுண்டென்று லதுபோல் ப்ரதிவாதிக்கை,—இயல்பு - மா பூத்ததென்றால் மரத்தின்மேல் நிற்றல்,—என

நான் களவைகாண்பர் - என்று நாலுவகையாகவு மளக்கறிவர்கள்,—அவையிற்றின்மேலு மறைவர் - அவையிற்றுடனே வேறேயுஞ் சொல்லுவர்கள்,—அவையெல்லா மளவை - அப்படிச் சொல்லப்பட்டவையெல்லாம ப்ரமாணங்கள்,—காண்டல் கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே - இவைதான் ப்ரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்றுசொல்லப்பட்ட மூன்றினுள்ளு மடங்கும்:

இதனாற்சொல்லியது ப்ரத்தியக்ஷம்முதலான பத்தும் மற்றுமுள்ள ப்ரமாணங்களுங் காண்டல் கருதலுரை யென்னு மூன்றினுள்ளு மடங்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

அளவை இலக்கணம்.

அளவை - ப்ரமாணமாவது,—காண்டல் - காட்சியும்,—கருதல் - அநுமானமும்,—உரை - ஆகமமும்,—அபாவம் - இன்மையும்,—பொருள் - அருத்தாபத்தியும்,—ஒப்பு - உவமையுமென,—ஆறெனபா - ஆறுவகைப்படுமெனபர்,—அளவைமேலும் - அவ்வாறுவகைப் பிரமாணங்களுக்கு மேலும்,—ஒழிபு - பாரிசேஷமும்,—உண்மை - சம்பவமும்,—ஐதிகத்தோடு - உலகவாதத்துடன்,—இயல்பென - சகசமுமென,—நானகளவை காண்பர் - நான்குப் பிரமாணமுளவென்பாரும்,—அவையிற்றின் மேலுமறைவர் - அப்பத்திற்கு மேலும் ப்ரமாணங்களுளவென்பாருமுளர்,—அவையெல்லா மளவை - அவையெல்லாம் ப்ரமாணமேயாயினும்,—காண்டல் - காட்சியும்,—கருதல் - அநுமானமும்,—உரை - ஆகமமும்,—என்றிம்மூன்றி னடங்கிடுமே - என்று இம்மூன்றி னடங்குவனவன்றி வேறுவனவல்லவென்பதாம்.

இதனானே ப்ரமாணமின்னதெனக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேனிறுத்த முறையானே காண்டல் முதலிய
மூன்றினையும் வகுத்துணர்த்துகிறார்.

மாசறு காட்சியையந் திரிபின்றி விகற்பமுன்றூ,
வாசற வறிவதாகு மநுமான மவினுபாவம், பேசுறு
மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகுங்,காசறு
முறையிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும்.(உ)

(இ-ள்.) மாசறு காட்சியை யந்திரின்றி விகற்பமுன்றூ வாசற வறிவதாகும் — குற்றமில்லாத காட்சியாவது,ஐயந் திரிபு மிகுதி முதலிய குற்றத்தையின்றி யான்மாவினது சிற்சத்தியா லறிவது.

அநுமான மவினுபாவம் பேசுறு மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும் — அநுமானமாவது தன்னைவிட்டு நீங்காத வ்யாத்தி பொருந்தின வேதுவைக்கொண்டு மறைந்தபொருளை யறிவது

காசறுமுறை யிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும். — குற்றமற்ற வாகமப்பிரமாணமாவது முற்கூறிய காட்சியானு மநுமானத்தானு மறியப்படாதிருக்கிற ஸ்வர்க்க நரகாதிகளை யீதென் றறுதியிடுவிப்பது—எ-று.

வினு - விட்டுநீங்குவது, அவினு - விட்டுநீங்காதது, பாவம் - உள்ளது; இது வடமொழி.

பசு சாத்திரஞ் சொன்னவர்கள் சர்வஞ்ஞரல்லாதபடியாலு மிராகத்வேஷத்துடன் கூடினவர்களாதலாலுஞ் சிவனுக் கஃதில்லாமையாற் சிவவாக்கியங் குற்றமில்லாதவாக்கியம் ஆதலாற் காசறுமொழியெனச் சிறப்பித்ததெனவறிக. (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ப்ரத்யக்ஷாநுமானாகமங்களுடைய லக்ஷணங்கூறுகின்றது.

மாசறுகாட்சி - குற்றமற்றப் பிரத்யக்ஷமாவது,—ஐயம்-சந்தேகம்,—திரிவு - ஒன்றை மற்றொன்றாகக் காண்பது,— ¶ அனதி - பூர்வஸ்மரணையன்றி,—விகற்பமுனனு- நிர்விகற்ப * தரிசனாந்தரம் சவிகற்பமாக விசாரித்து,—ஆசறவறிவதாகும்-முனசொன்ன ‡ சம்சயாதிதோஷங்களின்றிக்காண்பதாம்,—அநுமானம்-அநுமானமாவது,— † அவிநாபாவம் -காரணகாரியங்களுடைய பிரிவின்மை,—பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள பெறுவதாகும் - த்ரடவ்யாப்தியாகச் சொல்லப்பட்ட ப்ரத்யக்ஷமாகிய காரியவேதுவைக்கொண்டு அப்ரத்யக்ஷமாகிய காரணமவ்விடத்துண்டென்று நிச்சயிப்பது,—காசறுமொழியிம்மாணத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - சிற்றறிவனும் வஞ்சனுமன்றி சர்வஞ்ஞனுக்கு சர்வாந்த்ரியாமியுஞ் சர்வஜீவ தயாபரனுமாகிய வீஸ்வரன் வாக்யமான வேதாகமங்கள் ப்ரத்யக்ஷாநுமானமாகிய விவ்விரண்டினாலு மறியப்படாதபொருளை யறிவிக்கும்.

¶ அன்றி - இன்றிஎனவும்பாடம், இன்றி - இவ்விரண்டுமின்றி எனப் பொருளுரைப்பதுவுமொன்று, * தரிசனாந்தரம் - கண்டபிறகு, ‡ சம்சயாதி தோஷங்கள் - ஐயந்திரிவுகளாகிய குற்றம், † அவிநாபாவம் பேசுறுமேதுக்கொண்டு - ஏனோனருகச் சேர்ந்த பிரிவினைசொல்லுகிற காரியகாரணத்தைக்கொண்டு தாடவயாப்தியாகச் சொல்லப்பட்ட,—மறைபொருள் பெறுவதாகும் எனக் கூட்டிமுடிக்கவும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேனிறுத்தமுறையானே காண்டலமுதலிய ப்ரமாண மூன்றினையும் வகுத் துணர்த்துகின்றார்.

மாசறுகாட்சி - குற்றமில்லாதபொறி புணர்ந்த சிற்சத்திக்குறி ப்ரத்யக்ஷமாவது,—ஐயந்திரிவின்றி - சந்தேகவிபரீதமிருதிகளன்றி,—விகற்பமுணர - நிர்விகற்பத்துக்குமேற் சவிகற்பமாக,—ஆசற - குற்றமின்றி,—அறிவதாகும் - பொருளைப் போதிப்பதாகும்,—அநுமானம் - தூமமுதற்சாதநம் புணர்ந்த சிற்சத்திக்குறி யநுமானமாவது,—அவிநாபாவம் பேசுறுமேதுக்கொண்டு-வ்யாப்தியோடு சொல்லப்படுமந்த தூமமுதற்சாதநங்கொண்டு,—மறைபொருள் பெறுவதாகும் - ப்ரத்யக்ஷத்துக்கு யோக்யமுமயோக்யமுமா யொளித்தவஸ்துவை யறிவிப்பதாகும்,—மாசறுமுறை - குற்றமற்ற அர்த்தவாக்யம் புணர்ந்த சிற்சத்திக்குறிச் சிவாகமமாவது,—இம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - ப்ரத்யக்ஷத்தைக் கடந்து அநுமானாதீதமாகிய பதார்த்தத்தையும் போதிக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-று. அம்மூன்றனுள், நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு ஐயவுணர்வும் விபரீதவுணர்வுமின்றி விடயங்களை நேரேயறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி காட்சியளவையெனப்படும். அங்ஙனம் நேரேயறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்து நின்ற பொருளை அதனை விட்டு நீங்காது யாண்டுமுடனாய் நிகழுமேதுவைக்கொண்டு அவ்வாறுணர்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி கருதலளவையெனப்படும். இவ்விரண்டானுமறியப்படாத பொருள்களை ஆத்தனவாக்கியங்கொண்டு அவ்வாறுணரச்செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி உரையளவையெனப்படுமென்பதாம்.

அடங்கிடாப்பொருள் பரலோக பாதாளலோகமுதலாயின. இம்மானத்தடங்கிடும் பொருளையும் ஆத்தவாக்கியங்கொண்டறிவது அருத்தவாதம். ஐயந்திரிவின்றி விகற்பமூன்றுமெனபதனை யாண்டுங் கூட்டியுரைத்துக்கொள்க.

விகற்பமென்றது தலைக்குறை.

இதனானே இம்மூன்றற்கும் இலக்கணங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

காண்டல் கருதலுரையென்ற விம்மூன்றினு மெல்லா மடங்குமென்னில்? இம்மூன்றையும் விரித்துணர்க்கவேணுமென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

மாசறுகாட்சி - குற்றமற்றப் பிரத்யட்சமானது—ஐயந்திரிவின்றி விகற்பமூன்று மாசறவறிவதாகும் - ஐயக்கா

ட்சியுந் திரிவுக்காட்சியுமற விகற்பக் காட்சியும் விசாரியாமல் பொருளைக்கண்ட மாத்திரத்திலே குற்றமற வறிவதாகும்,—அநுமானம் - அநுமானமானது,— அவிநாபாவம் - அவிநாபாவமென்றும்,-பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும்- பிரிவில்லாதகுணமாகச்சொல்லப்பட்ட வேதுக்களைக் கொண்டு காணாதபொருள்களைக் காணப்படுவதாகும்,—காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - குற்றமற்ற வாகமமானது முன்சொல்லப்பட்ட விரண்டுப்ரமாணங்களினு மடங்காதவத்தத்தைக் காட்டாநிற்கும்.

இதனாற்சொல்லியது ஐயக்காட்சி திரிவுக்காட்சி விகற்பக்காட்சி மூன்றுங்கூடாமற்காண்கிறது மாசறுகாட்சியென்றும், அநுமானம் ஏதுக்களைக்கொண்டு மறைந்தபொருள்களைக காண்கிறதென்றும், ஆகமம் இந்தவிரண்டு ப்ரமாணத்திலு மடங்காத பொருளைக் காட்டிநிற்குமென்னு முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(அ-ம்மூன்றனுள்) விகற்பமுமூன்று-நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு,—ஐயந்திரிபின்றி - ஐயவுணர்வும விபரீதவுணர்வுமில்லாமல்,—ஆசறஅறிவது-விடயங்களை நேரே யறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி,—மாசறுகாட்சியாகும்-குற்றமற்ற காட்சி யளவையெனப்படும்,—மறைபொருள்-அங்ஙன நேரே யறியப்படுவதின்றிச்சாதித்துப்பெறற்பாலதாய் மறைந்துநின்ற பொருளை,--அவிநாபாவம் பேசுறுமேதுக்கொண்டு -அதனைவிட்டு நீங்காது யாண்டுமுடனிகழுமேதுவைக்கொண்டு,—விகற்பமூன்று வையந்திரிபின்றிப் பெறுவது -அவ்வாறு நிருவிகற்ப வுணர்வைத்தனக்கு மூன்னாகக்கொண் டையவிப

ரீதக்குற்றமின்றி யுணர்வதாகியவான்மாவினது ஞானசத்தி,—அநுமானமாகும்-கருதலளவையெனப்படும்,—இம்மானத்தடங்கிடாப்பொருளை - இவ்விரண்டு ப்ரமாணங்களாலு மறியப்படாதபொருளை ஆப்தவாக்கியங்கொண்டு,— விகற்பமூன்று வையந்திரிபின்றிக்காட்டும் - அவ்வாறு நிருவிகற்பத்தைத் தனக்கு முன்னாகக்கொண்டு ஐயவிபரீதக்குற்றமின்றி யுணரச்செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி,—காசறுமுரை - குற்றமற்ற வுரையளவை யெனப்படும் - எ-று.

மறைஞானதேசிகர் உரை.

ஐயக்காட்சி திரிவுகாட்சி யிருவிதமெனபதும் சவிகற்ப நிர்விகற்ப மிருவிதமென்பது முணர்த்துகிறார்.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையந் திரியவே, கொண்டறிவாம் பெயர்சாதி குணமேகன்மம் பொருளெனவைந், துண்டவ்விகற்ப வுணர்விறுகுப் பொருளினுண்மை மாத்திரத்தின், விண்டவில்லா வறிவாகும் விகறபமில்லாக் காட்சியே. (௯)

(இ-ள்.) கண்ட பொருளை யிரட்டுறவே கருதலையம் — ஐயக்காட்சியாவது - தோன்றினதொரு பொருளைக் குற்றிகொல்லோ மகன்கொல்லோவென் றிரண்டுறக்கருதுமது

திரியவே கொண்டறிவாம் — திரிவுகாட்சியாவது - தோன்றினதொரு பொருளை விபரீதமாகக் கருதுதல்.

அஃதாவது? இருளின்கண் மயக்கத்தாற் பழுதையைக் கண்டு பாம்பென றச்சமுறுதல். இங்ஙன மாறுகொளக் கருதல் பிறவும் வந்துழிக்காண்க. விகற்பகாட்சி இருவிதமாம் அஃதாவது?

பெயர்சாதி குணமேகன்மம் பொருளெனவை நதுண்டவவிகற்பவுணாவினுக்கு

பெயர்முதலிய வைநதையுங் கூடியறியுமறிவு சவிகற்பக்காட்சி. அஃதாவது? பெயர் மாவென்பது, சாதி மாவினதுதனமை. குணம் வணணம் வடிவு முதலாயின, கனமம் அசைதல் நிற்றன முதலாயின, பொருள் மரம்

பொருளினுணமை மாத்திரத்தின விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே.

சவிகற்பம்போலப் பெயர்முதலியவற்றைக் கூட்டி யுணராமற் பொருளினுண்மை மாத்திர முணரு முணர்வு நிர்விகற்பக்காட்சியாம்—எ-று.

அஃதாவது இஃதொன்றென்கை. இப்படி யைந்துவகையாக விகற்பியாதறிகை யெனவறிக.

ஆனலிதுதான் பாலமுகாதிகள் ஞானத்தைப்போலவோ வென்னில்? அவர்களுக்குள்ளே விகற்பித்தறியு மறிவும் பிரியாப் பிரியமு முண்டாகையால் விகற்பஞானமெனவறிக.

ஏகார மீற்றசை.

உதாரணம் "அவிகற்பஞ் சவிகற்பமென்றிரண்டா மக்காட்சி-யவிகற்பங் காட்டுமம்பா ரீண்டு."

"அவிகற்ப மத்தமுள தென்ற றிகை பின்பறிகை- சவிகற்ப நாமாதி சார்ந்து" எனவறிக. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் ப்ரத்யக்ஷலக்ஷணங் கூறுகின்றது.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையம்-இரண்டு †வஸ்துவுக்குப் பொதுவாயுள்ள வடையாளத்தை யொன்றினிடத்திலேகண்டிது வெதுவோவென்பதுவும், ஒருதருமத்தை யிரண்டு வஸ்துக்களிடத்திலே கண்டு சந்தேகப்படுவதும். அஃதாவன? சாயம் ப்ராதம் சந்தியாகாலத்திலே தூரத்திலே மரையைக் கண்டிதுமரையோ பசுவோவெனபதாதியும், கடக மகுடகேயூராதி ராஜசின்னாபரணங்களை சமனுகத்தரித்துள்ள ராஜாவும் தண்டநாயகனுமோரிடத்தினிற்பதைக்கண்டு இவனராஜாவோ இவன்தண்டநாயகனோ வென்பதாதியும்,—திரியவே கொண்டறிவாம்-மரையைப் பசுவெனக்கருதலும் தண்டநாயகனை ராஜாவாகக் காண்பதாதியுந் திரிவுக்காக்ஷி, இவ்விரண்டுடனே கூடி யேற்றப்பட்ட * பூர்வானுபவ ஜநிதமாகிய முன்னினைவும் "ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னுஞ் சூத்ரத்தாற் கூட்டிப் பொருளுரைக்கவேண்டியது. அதுவருமாறு—காமுகனுககுக் காமினியுரு வெளியாதி. இதுவும் ப்ரத்யக்ஷாபாசம். மேல்புத்தி கூடாமல் வித்யாதத்வமாத்ரங்கொண்டு காண்பது சாமாந்ய ப்ரத்யக்ஷமெனபதற்காக,—பொருளினுண்மைமாத்திரத்தின் விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக்காட்சியே - ஒருவஸ்துவை நாமஜாதியாதி நிர்த்தேசமறி யிஃதொன்றென்று காண்பது நிர்விகற்பக ப்ரத்யக்ஷம்,மேல் புத்திதத்வத்தைக்கூட்டி நாம ¶ஜாதியாதி விசேஷத்தோடேகாண்பது விசேஷ ப்ரத்யக்ஷமென்பதற்காக,— § விகற்பவுணர்வினுக்குப் பெயர்சாதிகுணமே கன்மம்பொருளென வைத்தண்டு - சவிகற்பக ப்ரத்யக்ஷத்துக்கு நாமஜாதிகுண ‡ கன்

மவஸ்துவென்றும் இவைகளையும் பகுத்தறிவது ஸவிகல்பப்ரத்யக்ஷம். அஃதாவது மதனபாணமான புஷ்பத்தையும், பரிமளத்தையும், கோகில ○ கூஜிதத்தையு முடைத்தாகையா லித்வஸந்த ருதுவென்றறிவது.

ஏகாரம் ஈற்றசை.

† வஸ்து - பொருள், * பூர்வாநுபவ ஜநிதம் - முன்னநுபவத்தா லுண்டாயது, ¶ ஜாதியாதி விசேஷத்தோடே - ஜாதிகுணக்கிரியையுடனே எனபதாம், § இம்மூன்றுவது கண்ணழிவை இரண்டாவதினும் இரண்டாவதை மூன்றுவதினும் பாடபேதற்கேற்ப சிலப்ரதிகளி லுணாயிட்டிருக்கும், ‡ கனமம் - க்ரியை, ○ கூஜிதம் - த்வனி, ஓசை.

* 𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — [illegible]
[illegible] । [illegible]
[illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥ [illegible]
[illegible] ।

* 𑌕𑌾𑌮𑌿𑌕𑍇 𑌚 — [illegible]
[illegible] ।

* 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — [illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ [illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ [illegible]
[illegible] । [illegible]
[illegible].

பெயர் - மாவெனபது, ஜாதி - வ்ருக்ஷஜாதி, குணம் - வண்ணம் - வடிவு - பூககாய் பழமுதலாயினவை, கன்மம் - அசைதல்- நிற்றல் - பூத்தல் - காய்கருமது, பொருளாவது - இன்னது பெறும் விலை-இன்னத்துக்கானபொருளென்பது.

ஞனப்பிரகாசருரை வருமாறு.

---o---

ஐயந்திரிபின திலக்கணமும், நிர்விகற்பஞானம் சவிகற்ப ஞானமெனறு ஞான மிருவிதமென்றும்பண்ணி யதிவிலக்க ணமும், உணர்த்துகின்றார்.

ஐயம் - சந்தேகமாவது,—கண்டபொருளை - பொதுவில லக்ஷணமாகப் பார்த்த பதார்த்தத்தை,—இரட்டுறவேதுருதல்- குற்றிகொல்லோ மகன்கொல்லோவென்று குறித்தல்,—திரிவு- விபரீதம்,—திரியவே கொண்டலாம் - சிப்பியை வெள்ளியென றுக்ரகித்தலாம்;—அவ்விகற்ப வுணர்விறுக்கு - அந்தச்சவிகற் ப ஞானத்துக்கு;—பெயர்சாதிகுணமே கன்மம் பொருளான வைந்துண்டு -தாண்டவனென்னும் பெயர், ப்ராம்மணனென்னு ஞ் ஜாதி, சிவப்பனென்னுங் குணம், தேவபூஜகனென்னுங் கன் மம், இவனென்னும் பொருளெனவைந்துண்டு,—விகற்பமில்லா க்காட்சிபே - நிர்விகற்பஞானமாவது,— பொருளினுண்மைமா த்திரத்தின் - ஒன்றிதென்று வஸ்துவினது சத்வமாத்திரத்தி லே,-விண்டவில்லா வறிவாகும்-முன்னிர்விகற்ப காரணத்திலே சவிகற்பகாரியந் தோற்றுதாகி லுத்தரகாலஞ்சவிகற்பமுண்டா காதாமென்னுஞ் சற்காரியவாதவார்த்தையினாலே காமஜாதி குண க்ரியைகட்குத் தன்னிடத்திற் சற்றேதோற்றுத லுண்டா யிருந்தாலும் வசனித்தலுக் கேதுவல்லாத ஞானமாகும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. மேற்கூறியபோந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள், பெயர்முதலியவற்றைப் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுகின்றதெனப் பொருளுண்மை மாத்திரையேயறியும் ஞானசத்தி நிருவிகற்ப மெனப்படும். அங்ஙனமறிந்த பொருளை இஃதியாதோவென ஒன்றிற்றுணிவுபிறவாதாராயும் ஞானசத்தி ஐயமெனப்படும். அதனை அதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசத்தி திரிபெனப்படும். பெயர்முதலியவைந்தும் பொருளோடொருமையுண்மையின் அவைந்தும் அப்பொருட்கணுள்ளவாறினிதுவிளங்க வுணரும் ஞானசத்தி சவிகற்பமெனப்படு மென்பதாம்.

முன்கண்ட வாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு இவ்விடத்துக் கண்ட பொருளின்கணிகழ்வதன்மையின், அதனையீண்டெடுத்தோதி விலக்காராயினார்.

இதனானே காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்குரிய நிருவிகற்பமுதலிய நான்கிலக்கணங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்சொன்ன ஐயக்காட்சி திரிவுகாட்சி விகற்பக்காட்சி நிருவிகற்பக்காட்சியென்னு நாலு மேலருளிச்செய்கிறார்.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையம் - தோன்றினதொருபொருளை யிரண்டுபடக் கருதுகிறது ஐயக்காட்சி,—திரியவே கொண்டல் திரிவாம் - தோன்றின வந்தப்பொருளைத் திரியக்காண்கிறது திரிவுகாட்சி,—பெயர்ச்சாதி குணமேகன்மம் பொருளெனவைந் தூண்டவிகற்ப வுணர்விற்கு - பெயர்மாவென்றும் சாதிசந்தனமென்றும் குணஞ்சுகந்தமென்றும் இந்த

மரத்தைக்கண்டவ னிதைக்கொண்டுபோனா லிதனால் நமக்குப் பயனுண்டென்றும் இதைமரமித்தனைபோன பெறுமென்றும் இப்படி நாதுவகையாக வறிகிறது சவிகற்பப பிரத்யட்சம்,—பொருளினுண்மை மாத்திரத்தின விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக காட்சியே - தோன்றின பொருளினுண்மை சற்றுஞ்சொல்லுதற் கொண்ணாத வறிவாயிருக்கிறது நிரவிகற்பப் பிரத்யட்சமாம்

இதனாற் சொல்லியது ஐயக்காட்சியும் திரிவுக்காட்சியும் விகற்பககாட்சியும் நிருவிகற்பக காட்சியுமென்று சொல்லப்பட்ட நான்கினது முறைமையுமறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

(மேற்கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள்)விண்டலில்லா-பெயர்முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி,—பொருளினுண்மை மாத்திரத்தி னறிவாகும்-இஃதொன்று தோன்றுகின்றதெனப்பொருளுண்மை மாத்திரையே யறியு ஞானசத்தி,—விகற்பமில்லாககாட்சியே - நிருவிகற்பக்காட்சி யெனப்படும,—கண்டபொருளை இரட்டுறவே கருதல் - இஃதியாதோவென வொன்றிற் றுணிவுபிறவாதாராயு ஞானசத்தி,—ஐயம - ஐயக்காட்சியெனப்படும,—திரியவேகொண்டல் - அதனையதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கு ஞானசத்தி,—திரிவாம் - திரிவுகாட்சியெனப்படும்,—பெயர்சாதி குணமே கன்மம்பொருளென வைந்துடன் - பெயருஞ் சாதியுங குணமுங கன்மமும் பொருளுமெனவைந்தும் பொருட்டோறுமுண்மையின் அவவைந்து மப்பொருட்சணுள்ளவா றினிது விளங்கவுணரு ஞானசத்தி,—அவ்விகற்ப வுணர்விலுக்காம - சவிகற்பக்காட்சி யெனப்படும் என்பதாம்.

இதனுள் காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்கரிய நிருவி கற்பமுதலிய ஞானவிலக்கணம் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் காண்டல் நால்வகையெனபதூஉ மனுமான மிருவகைத் தெனபதூஉ முரை மூவிதமெனபதூஉ மிலக்கண மிருவித மெனபதூஉ முணர்த்துகின்றார்.

காண்டல்வாயின் மனந்தன்வேதனையோ டியோ
கக் காட்சியென, விண்டிநாங்கா மநுமானந் தனக்கும்
பரார்த்த மென்றிரண்டா, மாண்டவுரை தந்திரமந்திர
முபதேசச்சொ லெனமூன்றும், பூண்டவள
வைக் கெதிர்புலனாறனை யியல்புபொதுவென் றிரண்
டாமே. (௩)

(இ-ள்) காண்டல்வாயின — காண்டல் இவ்விடத்து நால்வகைப்படும். அஃதாவது?—

மனந்தன
வேதனையோ டி
யோகக் காட்சி
யென விண்டிநா
னகாம

இந்திரியக்காட்சி மானதக்காட்சி வேதனைக்காட்சி யோககாட்சி எனவரும். காட்சியெனபதனை முற்றுங்கூட்டுக. ஒழிந்தன.

அநுமானந் தனைக்கும் பிறர்க்கு மெனவிரண்டாம்.

தன்னநுமானம் பிறரநுமானமெனவு மிரு விதமாம்.

மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச் சொலென மூன்றும்

அழுசிய வாகமப்பிரமாணந் தந்திரகலை மந்திரகலை யுபதேசகலையென மூவிதமாம்.

பூண்டவளவைக் கெதிரா புனை னியல்புபொது வென விரண்டாமே.

இப்படிச்சொல்லப்பட்ட ப்ரமாணங்களாலே யளந்தறியப்பட்ட பொருள்களிரு விதப்படும். அஃதாவது?—தனியல்பென்றும் பொதுவியல்பென்று மிரண்டாம்.

எதிர்தல் - தோன்றுதல், புனை - ப்ரமேயமெனவறிக.

(௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் ப்ரத்யக்ஷ நாலுவகையு மநுமானமிருவகையு மாக மமூன்றுவகையுமென்னு முறைமை கூறுகின்றது.

காண்டல் வாயில் மனந்தன் வேதனையோ டியோகக்காட்சியென வீண்டு நான்காம - ப்ரத்யக்ஷமாவது, இந்த்ரியப்ப்ரத்யக்ஷமென்றும் மானஸப்ப்ரத்யக்ஷமென்றும் ‡ஸ்வவேதநா ப்ரத்யக்ஷமென்றும் யோகப்ரத்யக்ஷமென்றும் நான்குவகையாம்.

[illegible]

என்றும், ஸதத்வம்ஶீர்ய ஸாபேக்ஷம் நிரபேக்ஷ ஞ்சேதிதேவச | ஶுத்தகரண ஸாபேக்ஷம் த்விதீயம் த்ரிவிதம் த்விஷ்டமிதி || என்றும் ப்ரத்தியக்ஷ மூன்றாக சிவாகம வசநமிருக்க இவ்விடத்திற் ப்ரத்யக்ஷ நாலுவிதமென்று சொன்னது விரோதமெனில்? ஸ்வவேதனப்ரத்யக்ஷ மாநஸப்ரத்யக்ஷத்தில் அந்தர்ப்பவிக்கும். ஆகையால் விரோதமில்லை,—அநுமானந்தனக்கும் பிறர்க்குமெனவிரண்டாம - அநுமானமானது ¶ ஸ்வார்த்தாநுமான மென்றும் + பரார்த்தாநுமானமென்று மிருவகைப்படும்,—மாண்டவுரைதந்திரமந்திரத்தோடுபதேசச்சொல்லென மூன்றும்-ஆகாமக்ஷாதி யுழைகையுடைய ஆகமமானது கன்மகாண்டமென்றும் உபாசனாகாண்டமென்றும் ஞானகாண்டமென்றும் மூன்றுவிதமாம்,—பூண்டவளவைக்கு - பொருந்தப்பட்ட ப்ரமாணத்துக்கு,—எதிர்புவன - முன்னேகாணப்பட்ட ப்ரமேயமானது,—தனியியல்பு பொதுவென விரண்டாமே - தனியியல்பு என்பது அவ்யாப்தி ஸம்பவதோஷ *ரஹிதமான × அஸாதாரணலக்ஷணம். பொதுவியல்பு என்பது ஸாதாரணலக்ஷணமாம். இயல்புஎனபது நடுநிலைத்தீபகம். லக்ஷணத்திற்குக் குற்றமூன்றுண்டு அவைகாவன — லக்ஷ்யைகதேசே லக்ஷணஸ்யாவர்த்தநம் அவ்யாப்தி: | அலக்ஷ்யே லக்ஷணஸ்ய வர்த்தநம் அதிவ்யாப்தி: | லக்ஷ்யமாத்ரே அவர்த்தநம் அஸம்பவ: | என்றிதன் பொருள்.

‡ ஸ்வவேதன - தன்வேதனை, ¶ஸ்வார்த்தம்- தன்பொருட்டு, + பரார்த்தம் - பிறர்பொருட்டு, * ரஹிதம்-இல்லாமை, × அஸாதாரணம்-உண்மை.

இலக்கியத் தோரிடத்தி லக்ஷணமிராமை யவ்யாப்தி - இலக்கியமில்லாதவிடத்தி லக்ஷணமிருப்ப ததிவ்யாப்தி - இலக்கியத்தோரிடத்து மிலக்ஷணமிராமை யசம்பவம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

நிர்விகற்ப சவிகற்பஞானமெனும் ப்ரமிதிபலவத்தாகிய ப்ரத்யக்ஷப்பிரமாணமுதலாகிய ப்ரமாணத்தினது பேதங்களைக்கூறுகின்றார்.

காண்டல்-ப்ரத்யக்ஷப்பிரமாணமாவது,—வாயில்-இந்த்ரியப்ரத்யக்ஷம்,—மனம்-மானதப்ரத்யக்ஷம்,—தன்வேதனை - சுவசங்வேதநப்ரத்யக்ஷம்,—அந்தச்சுவசங்வேதநப்ரத்யக்ஷத்தோடு யோகக்காட்சியென-யோகப்பிரத்யக்ஷமென,—ஈண்டு நான்காம்-இந்தசைவத்தில் நான்காம்,—அநுமானம்-அநுமானப்பிரமாணமாவது,—தனக்கும் பிறர்க்குமென்றிரண்டாம்-தனனுமானமெனவும் பிறநுமானமெனவு மிருவிதமாம்,—மாண்டவுரை - மாட்சிமைபொருந்திய வாகமப்பிரமாணம்,—தந்திரமந்திரத்தோ டுபதேசச்சொல்லென - தந்திரகலை மந்திரகலை யுபதேசகலையென,—மூன்றாம் - மூன்றுவிதமாம்,—பூண்டவளவைக் கெதிர்புலன் - பொருளோடு பொருந்திய ப்ரமாணக்கட்கு முன்னாகிய ப்ரமேயம்,—தன்னியல்பு பொதுவென்று - அசாதாரணலக்ஷணத்தை யுடையது சாதாரணலக்ஷணத்தை யுடையதென்று,—இரண்டுமே - இரண்டுவிதமேயாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

எ - து. அம்மூன்றனுள், காட்சியளவை-வாயிற்காட்சிமுதல் நான்கு வகைப்படும்; கருதலளவை-தனபொருட்டுப் பிறர்பொருட்டென இருவகைப்படும்; உரையளவை-தந்திரகலைமுதன மூவகைப்படும். இப்ரமாணங்களா னறிப்படும் ப்ரமேயங்களியல்பு - சிறப்பியல்பு பொதுவியல்பென இருவகைப்படுமென்பதாம்.

இதனுனே, காட்சிமுதலிய மூன்றும் படும் பாகுபாடும், அவற்ருனளகப்படும் பொருள்களின் பாகுபாடும், தொகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மீளவும் ப்ரத்யக்ஷ மநுமான மாகமமென்ற மூன்றையும் பாரித்து விரித்தருளிச்செய்கிருர்.

காண்டல்வாயில் மனந் தன்வேதனையோ டியோகக்காட்சி யெனவீண்டு நானகாம் - இந்த்ரியப் பிரத்யக்ஷமென்றும் மானதப்பிரத்யக்ஷமென்றும் தனவேதனு ப்ரத்யக்ஷமென்றும் யோகப்ரத்யக்ஷமென்றும் இவ்விடத்துப் பிரத்யக்ஷம் நாலாம்,—அநுமானம் - அநுமானமென்று சொல்லப்பட்டது,—தனக்கும் பிறர்க்குமென்றிரண்டாம் - அந்தவநுமானந்தான ஸ்வார்த்தாநுமானமென்றும் பரார்த்தாநுமானமென்றும் இரண்டு வகையாம்,— மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச் சொல்லென மூன்றும் - மாட்சிமையுடைத்தாகிய வசனமாகமமானதுதான் தந்திரகலையென்று மந்திரகலையென்றும் உ

பதேசகலையென்று மூன்றுப்பிரகாரமாம்,—பூண்ட வளவைக் கெதிர்புலன் றன்னியல்புபொதுவென் றிரண்டாமே - இப்படி பொருந்தப்பட்டப் பிரமாணங்களுக்கு மாறுபாடாகச்சொல்லப்பட்ட விஷயங்களானது தனவியல்பெனறும் பொதுவியல்பெனறு மிரண்டுவகையாம்.

இதனாற்சொல்லியது ப்ரத்யக்ஷம்நாலுப்பிரகாரமாயிருக்குமெனறும் அநுமானமிரண்டுப்பிரகாரமாயிருக்குமென்றுமதுகமம மூனறுப்ரகாரமா யிருக்குமெனறும் இந்தப் பிரமாணங்கள் தனவியல்பெனறும் பொதுவென்று மிரண்டுவகையாயிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(அம்மூன்றனுள்) காண்டல் - காட்சியளவையானது,—வாயிற்காட்சி - வாயிர்காட்சியுர்,—மனக்காட்சி - மானதககாட்சியும்,—தனவேதனைககாட்சி - தனவேதனைக்காட்சியுர்,—யோகக்காட்சியென - யோகக்காட்சியுமென,—நானகாம் - இங்ஙன நானகுவகைப்படும்;—அநுமானம் - கருதலளவையாவது,—தனக்கும் பிறர்க்கும் - தனபொருட்டநுமானமும் பிறர்பொருட்டநுமானமும்,—என்றிரண்டாம் - என்றிருவகைப்படும்;—மாண்டவுரை - மாட்சிமைப்பட்ட வுரையளவையாவது,—தந்திரச்சொல் - தந்திரகலையும்,—மந்திரச்சொல்லோடு - மந்திரகலையும்,—உபதேசச்சொல் - உபதேசகலையும்,—எனமூன்றும் - எனமூன்றுவகைப்படும்;—பூண்ட வளவைக் கெதிர்புலன் - இப்பிரமாணங்களால் அறியப்படும் ப்ரமேயங்களி னியல்பு,—தன்னியல்பு பொதுவென்று - சிறப்பியல்பு பொதுவியல்புனை,—இரண்டாமே - இருவகைப்படுமென்பதாம்.

இதனானே காட்சிமுதலிய மூன்றும் படும்பாகுபாடு மவற்றா னளக்கப்படும் பொருள்களின் பாகுபாடுந் தொகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய தன்னியல்பும் பொதுவியல்பு மென விருவிதமுணர்த்துகிறார்.

அன்னிய சாதியுந் தன்சாதியு மகன்றுநிற்ற, றன்னியல் பந்நியத்தைத் தவிர்ந்துதன் சாதிகொத்த, றன்னிய பொதுவியற்கை சொன்னவிவ் விரண்டி னுள்ளே, மன்னிய பொருள்களியாவு மடங்கிடு மானமுற்றுஞ். (௫)

(இ-ள்.) அன்னிய சாதியுந் தன் சாதியு மகன்றுநிற்ற றனியல்பு	அந்யசாதியாகிய விருப்பையுந் தன்சாதியாகிய மாவையு மகன்று தேமாவென்னுஞ் சிறப்புப்பெயர்பெற்றுநிற்ற றன்னியல்பெனப் பெறும்.
அந்நியத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கொத்து றன்னிய பொதுவியற்கை	அந்யசாதியாகிய விருப்பைமுதலியவொழிந்து தன் சாதியாகிய மாமரமெனப் பொதுப்பெயர்பெற்றுநிற்றல் பொதுவியல்பெனப்பெறும்
சொன்னவிவ் விரண்டினுள்ளே	இந்தவிசேடஞ் சாமாந்யமெனச் சொல்லிய விரண்டினுள்ளே யுலகத்து நிலைபெற்ற

மன்னிய பொரு பொருள்களெல்லா மளக்தறியுங்கா லிவற்
ன்கனியாவு மட றிறு ளடங்கும்—எ-று.
ங்கிடு மானமுற்
ருல்.

ஈண்டிதனுற் ப்ரயோசநமியாதோவெனின் ? அந்ய
சாதியென்பது - பாசவர்க்கம், தனசாதியெனபது - ஆனம
வர்க்கம், தனவியல்லெனபது - அநயசாதியாகிய பாசத
தை யொழித்துத் தனசாதியாகிய விஞ்ஞானகலர் ப்ரளயாகல
ர் சகலரென நிற்றல், பொதுவியல்லெனபது - அந்யசாதியா
கிய பாசத்தைதத தவிர்நது தனசாதியாகிய சகலரென்னும் பெ
யரையு மொழித்துப் பசுவென நிற்றலெனவறிக. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———)———

மேல் அசாதாரணலக்ஷண மிவ்வாறு சாதாரணலக்ஷண
மிவ்வாறு என்பது கூறுகின்றது.

அனனியசாதியுந் தனசாதியு மகன்றுநிற்றல் தன்வியல்பு-க
பிலைப் பசுவானது அந்யஜாதியான எருமைமுதலானவைக
ளினுடைய லக்ஷணத்தையுந் தன்சாதியாகிய வெள்ளை கறுப்பு
சிவப்புமுதலான வர்ணங்களையுடைய பசுக்களுடைய லக்ஷண
ங்களையு மன்றிக்கபிலைப்பசுவென்று நிற்பது தன்வியல்பென்னும்
¶ அசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தைத் தவிர்ந்து தன்சாதிக்
கொத்த றுனவியபொதுவியற்கை-அந்யஜாதியாகிய வெருமை
குதிரை முதலானவைகளின் லக்ஷணங்களையன்றிக் கழுத்தில்
தான்ற கொம்பு குளம்பு வால் குட்டேறு இந்த வைந்துலக்ஷ
ணங்களையுமுடையது பசுவென்பது பசுக்களுக்கெல்லாஞ் * சா
தாரணலக்ஷணம்,— சொன்ன விவ்விரண்டிலுள்ளே மன்னிய

பொருளியாவு மடங்கிடுமானமுற்றால் - இந்த அசாதாரணஞ் சாதாரணமென்னு மிரண்டுலக்ஷணத்துக் குள்ளே ப்ரமேயத்ரி பதார்த்தமான பதார்த்த த்ரயங்களின் பேதங்களெல்லாம் ப்ரமாண § புரஸ்ஸரமாக விசாரிக்குங்காலத்தி லறியப்படுமாகையால் பதியினுடைய ஸ்வரூபலக்ஷணத்தையும் சத்தர் உதாஸீ யுக்தர் ப்ரவர்த்தரொன்னும் பதி † யவஸ்தாத்ரயா சாதாரணலக்ஷணங்களையும் தச்சத்திபேதங்களினுடைய அசாதாரணலக்ஷணங்களையும் விஞ்ஞானகலர் ப்ரளயாகலர் சகலரென்னு மானமவர்க்கங்களினுடைய அசாதாரண லக்ஷணங்களையு மவஸ்தாத்ரயா சாதாரண லக்ஷணங்களையும் ஆணவாதி ‡ பாசபஞ்சகத்தினுடைய அசாதாரண சாதாரணலக்ஷணங்களையும் சுத்தாசுத்த மாயாகாரியங்களாகிய தத்வதாத்விகங்களினுடைய அசாதாரண சாதாரண லக்ஷணங்களையும் × பரீக்ஷாபூர்வகமாக வறிந்தவன + ப்ரமாணஞ்ஞன் ஆகையாலிந்த ஸாஸ்திரத்தில் முதல்சூத்ரந் தொடங்கி ஏழாஞ்சூத்ரபரியந்தம் இந்த லக்ஷணங்களவந்த விடங்கடோறுங்கண்டுகொள்க.

¶ அசாதாரணலக்ஷணம் - உண்மைலக்ஷணம், * சாதாரணலக்ஷணம் - பொதுலக்ஷணம், § புரஸ்ஸரமாக - முனவிட்டுக்கொண்டு, † அவஸ்தாத்ரயம் - மூன்றவத்தைகள், ‡ பாசபஞ்சகம்-பஞ்சபாசமென்னமாறுக, × பரீக்ஷாபூர்வகமாக வறிந்து-பரீக்ஷித்துப்பார்த்து, + ப்ரமாணஞ்ஞன் - ப்ரமாணத்தை யறிந்தவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

தன்னியல்பு பொதுவியல்பென்று சொல்லிய ப்ரமேயப் பொருளின் இயல்புகளைக் கூறுகின்றார்.

பதிபதார்த்தத்துள் - அநாதிமுத்த சிவனுக்கு:—அன்னிய சாதியும் - பசுபாசங்களையும்,—தன்சாதியும் - ஆதிமுத்தசிவனை அபரமுத்தசிவ னிவர்களையும்,—அகன்று - நீங்கி அநாதிமுத்தசிவனென்று,—நிற்றல், - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பசுபாசங்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - ஆதிமுத்தசிவனை அபரமுத்தசிவ னிவர்களுக்குச் சமமாகிச்சிவனென்று,—நிற்றல - இருத்தல்,—தன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

ஆதிமுத்தசிவனுக்கு.—அன்னிசாதியும் - பசுபாசங்களையும்,—தனசாதியும - அநாதிமுததசிவனை அபரமுததசிவ னிவர்களையும்,—அகனறு - நீங்கி, ஆதிமுத்தசிவனெனறு,—நிற்றல்-இருத்தல்,— தனனியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பசுபாசங்களை மாதரம்,—தவிர்ந்து - நீங்கி,— தனசாதிக்கொத்தல் - அநாதிமுததசிவன் அபரமுத்தசிவ னிவர்களுக்குச் சமமாகிச் சிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—தனனியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

அபரமுத்திசிவனுக்கு:—அன்னியசாதியும் -பசுபாசங்களையும்,—தன்சாதியும் - அநாதிமுத்தசிவன் ஆதிமுத்தசிவ னிவர்களையும்,—அகன்று - நீங்கி, அபரமுத்தசிவனென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை- பசுபாசங்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தனசாதிக்கொத்தல் - அநாதிமுத்தசிவன் ஆதிமுத்த னிவர்களுக்குச் சமமாகிச் சிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

பசுபதார்த்தத்துள் விஞ்ஞானகலனுக்கு:—அன்னியசாதியும் - பதிபாசங்களையும்,—தன்சாதியும் - பிரளயாகலன் சகல

லியர்களையும்,—அகன்று - நீங்கி விஞ்ஞானகலனென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு-தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பதிபாசங்களைமாத்ரம்,—தவிர்த்து - நீங்கி,—தன சாதிக்கொத்தல-ப்ரளயாகலன்சகலவியர்களுக்குச்சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியபொதுவியற்கை-பொருந்திபசாதாரணலக்ஷணம்.

ப்ரளயாகலனுக்கு:— அந்நியசாதியும் - பதிபாசங்களையும்,— தனசாதியும் - விஞ்ஞானகலன் சகலவியர்களையும்,—அகன்று - நீங்கி,—ப்ரளயாகலனென்று,—நிற்றல் - இருத்தல்,— தனவியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பதிபாசங்களை மாத்ரம்,—தவிர்த்து - நீங்கி,—தன சாதிக்கொத்தல் - விஞ்ஞானகலன சகலவியர்களுக்குச் சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்வியபொதுவியற்கை - பொருந்திப சாதாரணலக்ஷணம்.

சகலனுக்கு —அந்நியசாதியும் -பதிபாசங்களையும்,—தன் சாதியும் - விஞ்ஞானகலன் பரளயாகல வியர்களையும்,—அகன்று - நீங்கி சகலனென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை -பதிபாசங்களை மாத்ரம்,—தவிர்த்து- நீங்கி,—தன்சாதிக்கொத்தல்-விஞ்ஞான கல ப்ரளயாகல வியர்களுக்குச் சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—தனவியபொதுவியற்கை - பொருந்திப சாதாரணலக்ஷணம்.

பாசபதார்த்தத்துள், மூலத்துக்கு:—அன்னியசாதியும் - பதிபசுக்களையும்,—தனசாதியும்-மாயாகன்மங்களையும்,—அகன்று-நீங்கி மலமென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு-தனது சாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை- பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்த்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - மாயாகன்மங்களுக்

குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னிய பொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

மாயைக்கு:—அன்னியசாதியும்-பதிபசுக்களையும்,—தன்சாதியும்-மலகன்மங்களையும்,—அகன்று-நீங்கிமாயையென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு-தனதசாதாரணலக்ஷணம்,—அடங்கித்தை - பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்ந்து-நீங்கி,—தன்சாதிக்கொத்தல்-மலகன்மங்களுக்குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

கன்மத்துக்கு:—அன்னியசாதியும் - பதிபசுக்களையும்,—தன்சாதியும் - மலமாயைகளையும்,—அகன்று - நீங்கிக் கன்மமென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அநிபத்தை - பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - மலமாயைகளுக்குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்,—

சொன்ன விவ்விரண்டினுளளே-கூறிய பொதுச்சிறப்பென்கின்ற விந்தவிரண்டினுள்ளே,—மன்னிய பொருளியாவும்-நிலைபெற்ற பதார்த்தங்களெல்லாம்,—மானமுற்றுல் - அளவைப் பொருந்தில்,—அடங்கிடும் - அந்தர்ப்பவிக்கும்'

சிவஞானயோகியருரை வருமாறு.

———○———

எ-து. சிறப்பியல்பு பொதுவியல்பென்ற இரண்டனுள், ஒருபொட்கு வேற்றுச்சாதிப்பொருளினுந் தன்சாதிப்பொருளினுஞ் செல்லாது தனக்குமாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந் தன்மை சிறப்பியல்பெனவும், வேற்றுச்சாதிப்பொருண்மாத்திரையிற் செல்லாது தன்சாதிப்பொருட்கெல்லாம் ஒப்ப நிலை

பெறுந்தன்மை பொதுவியல்பெனவுங் கூறப்படும். காட்சிமுதலிய பிரமாணங்களாற் பிரமேயப்பொருள்களை யறிதலுறுமிடத்து அவையெல்லாம் இவ்விரண்டியல்பினு ளொன்றுபற்றி அறியப்படுமென்பதாம்.

எனவே, இவ்விரண்டின் வேறாகிய வேறியல்புபற்றி அறியப்படுமாயின், அவ்வறிவு பிராமாணியமன்றாய்ப் போமென்பதாயிற்று. பிரமேயத்தை யறிந்தவறிவே தான் பிராமாணியமென்பதனையு மறியுமெனவும், தான் பிராமாணியமாகாதவழி அவ்வாறாகாமைமாத்திரையே பிறிதொன்றா னறியப்படுமெனவும், இவ்வாறன்றித் தனது பிராமாணியம் பிறிதொன்றா னறியப்படுமேயென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதம் அடாதெனவுங் கொள்க. இவற்றை வடநூலார் சுதத்துவம் பரதத்துவமென வழங்குப

சாதியாவது ஒருங்கிரனவாகிய பலபொருட்குப் பொதுவாவதோர் தன்மை.

இதனானே, மேற்றன்னியல்பு பொதுவியல்பெனவற்றி னிலக்கணங் கூறப்பட்டது.

இச்செய்யுள் சூசிகடாக நயம்பற்றி முன் வைத்தவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

தன்னியல்பென்றதேது பொதுவென்றதேது என்னமே லிரண்டு மருளிச்செய்கிறார்

அன்னிய சாதியுந் தன்சாதியு மகன்றுநிற்றல் தன்னியல்பு - தனக்குவேறான சாதியென்றுசொல்லப்பட்ட விருப்பையுந் தனக்கு வேறற்றிருக்கிற தன்சாதியாயிருக்கிற மாவையு மிவை யிரண்டையு நீங்கித் தேமாவென நிற்றல் தனக்குள்ள விய

ல்பு,—அந்நியத்தைத் தவிர்த்துதன் சாதிக்கொற்றல் துன்னிய பொதுவியற்கை-தனக்குவேறான சாதியென்றுசொல்லப்பட்ட விருப்பைபொழிந்து தனக்கு அநயசாதியென்று சொல்லப் பட்ட மாயெனநிற்றல் பொருந்தின சாமாந்யத்தினுடைய வியல்பாம்,—சொன்னவிவ் விரண்டினுள்ளே மன்னிய பொரு ளியாவு மடங்கிடு மானமுற்றால் - இப்படிச்சொல்லப்பட்ட தனியல்பு பொதுவெனற விரண்டினுள்ளு நிலைபெற்ற பொ ருள்களெல்லா மடங்கிடு மளக்குங்காலத்தில்.

இதனாற்சொல்லியது தனியல்பு பொதுவென்று சொல் லப்பட்ட விரண்டினுள்ளு மெல்லாப் பிரமாணங்களு மடங்கு மெனனு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(சிறப்பியல்பு பொதுவியல்பு எனவிரண்டனுள்)அன்னியசா தியும் -ஒருபொருட்கு வேற்றுச்சாதிப்பொருளினும்,—தனசாதி யும்-தனசாதிப்பொருளினும் செல்லாது,—அகனறுநிற்றல்-தன க்கு மாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந்தன்மை,—தனியல் பு-சிறப்பியல்பு எனவும்,—அந்நியத்தைத் தவிர்த்து - வேறுச் சாதிப்பொருள் மாத்திரையின் செல்லாது,—தன்சாதிக்கொ ற்றல் - தனசாதிப் பொருட்கெல்லா மெய்நிலைபெறுந் தன மை,—துன்னிய பொதுவியற்க - பொருந்திய பொதுவியல் பெனவுங் கறகப்படும்,—மானம் - காட்சிமுதலிய பிரமாணங் களால்,—பொருள்கள்-பொருந்திய பிரமேயப்பொருள்களே,— உற்றால் - அறிபவுறுமிடத்து,—யாவும் - அவையெல்லாம்,— சொன்னவிவ் விரண்டினுள்ளே யடங்கிடும் - கண்டிக்கூறிய விவ்விரண் டியல்பினு ளொன்றுபற்றி யறியப்படும்.

இதனானே மேற் றன்வியல்பு பொதுவியல்பென்றவற்றி விலக்கணம் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேல்வரன்முறையானே யிந்திரியக்காட்சி மானதக்
காட்சி யிரண்டினையு முணர்த்துகிறுர்.

உயிரினோ டுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றி
ச், செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந் திரியக்கா
ட்சி, யயர்விலிந் திரியஞான மைம்புலன் சார்ந்துயிர்க்
கண், மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே.(௬)

(இ-ள்) உயிரினோடுணர்வு வாயிலொளியுரு வாதிபற்றிச் செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந்திரியக்காட்சி — ஆன்மாவுடனே விட்டுநீங்காத சிற்சத்தியாலே யிந்திரியமுங் கலாதிகளுஞ் சோமசூரியாக்கினிப் பிரகாசங்களுமாகக் கூடி யுருவமுதலியவற்றை ஐயக்காட்சிமுதலிய குற்றமின்றி யறிவ திந்திரியக்காட்சி;

"வாயிலிடனும்புலனுமாகும்" என்பதனு லிந்திரியக்காட்சி யெனினும் வாயிற்காட்சியெனினு மிழுக்கா.

சாமானிய விசேடமென விருவிதமாம்.

இதிற் சாமாந்யமாவது - சமுதாயமாயறிவது. அஃதாவது? சமவாயகுணத்தோடேகூடித் தலகன்மங்களை யறிகை.

விசேடமாவது - அதனைப்பிரித்தறிகை. அஃதாவது? ஆன்மா மனதோடேகூடித் தேசகாலவவத்தைகளுட னிந்திரிய விசத்துக்கு விடயமானபொருளை யறிகை.

இந்த விந்திரியக்காட்சியினுடைய சம்பந்தத்தை யறியுமிடத் தறுவகைப்படும். சையோகம் - சையுத்தசமவாயம் - சையுத்தசமவேதசமவாயம் - சமவாயம் - சமவேதசமவாயம - விசேடணவிசேடியபாவம்.

இவையிற்றிற் சையோகமாவது - யாதொருபொழுது கடம் விடயமாயிருக்கிற ஞானமான துண்டாகாநின்றதப்பொழுது கண் இந்திரியம் கடம் விடயம் இந்த விரண்டினுடைய கூட்டரவு. இது பிரிந்திருக்கிற வத்துக்களினுடைய சம்பந்தமாகையாலே சையோகமெனப் பெயராயிற்று

சையுத்தசமவாயமாவது - யாதொருபொழுது கண்ணாலே கடத்திலே யிருக்கிற ரூபமான தறியப்படுகின்றதப்பொழுது கண் இந்திரியம் கடத்தையடைந்திருக்கிற நீலாதிரூபம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம். அஃதெந்தப்போலவெனவில்? கண்ணுடனே கூடியிருக்கிற கடத்திலே ரூபமானது சமவாயமா யிருக்கையினாலே யெனவறிக.

சையுத்தசமவேதசமவாயமாவது - யாதொருபொழுது கண்ணாலே கடத்தை யடைந்திருக்கிற ரூபத்திலேயிருக்கிற ரூபத்துவமான தறியப்படுகிறது, அப்பொழுது கண் இந்திரியம் ரூபத்துவம் விடயம் இவைகளினுடைய சம்பந்தமெனவறிக

சமவாயமாவது - யாதொருபொழுது சோத்திரேந்திரியத்தினாலே சத்தமான தறியப்படுகிறது, அப்பொழுது சோத்திரம் இந்திரியம் சத்தம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம் சோத்திர மாகாசமயமாக விருக்கையினாலெனவறிக.

சமவேதசமவாயமாவது - யாதொருபொழுது சோத்தி ரத்திலே சத்தத்தின் றன்மையைக் காணப்படுகிறது, அப்பொழு து சோத்திரயிந்திரியம் சத்தத்வசாமாநியம் விடயம் இவை களினுடைய சம்பந்தம் சோத்திரத்திலே சமவேதமாயிருக்கிற சத்தத்திலே சத்தத்துவஞ் சமவாயசம்பந்தமாயிருக்கையினு லெனவறிக.

விசேடணவிசேடியபாவமாவது - யாதொருபொழுது க ண்ணுடனே கூடியிருக்கிற பூமியிலே கடத்தினுடைய வில்லா மையான தறிபப்படுகிறது. அஃதாவது, இந்தப்பூமியிற் கட மில்லையென்றால் அப்பொழுது கண்ணுடனேகூடின பூமி விசே டணம், கடாபாவம் விசேஷியம் ; கடாபாவத்தையுடைய து பூதலம் என்றபொழுது கண்ணுடனே கூடினபூமி விசேஷி யம், கடாபாவம் விசேடணம்

இங்ஙன மிந்திரியக்காட்சி யறுவிதமான சம்பந்தமாய்வந் தவாறுகாண்க. சம்பந்தமெனினும் சன்னிகரிடமெனினுமொக் கா. உ-ம். "இந்திரியமத்தத் திணங்கும்பொழுதாறு-பந்தமு றும பாரறிவிப்பாம்" "இந்திரியமத்தத் திணங்குதலேசையோ க-மிந்தப் பொருளுணர்ச்சியாம்" "சாதிகுணந்தன்னிற் சை யோகசமவாயமாம்-போதமுளார் தாங்காணும்போது" "சை யுதகசமவேத சமவாயசம்பந்த-மெய்துங்குணதத்துவத்திலே" "சத்தஞ்சமவேதத் தாலேசெவிப்புலத்துக்-கத்தமா மென்றே யறி" "சத்தத்திற்சாமாநி யத்தைத்தருமதனிற்-வைத்தசம வேதசமவாயம்" "தவாதசமவாய சம்பந்தந்தருங்கா-ணபாவ விசேடணத்துவம்". இதனைப்பௌட்கரத்திற் கூறினு ரா ண்டுக்காண்க.

அயர்வி லிக்தி குற்றமில்லாத ஞானேந்திரியங்களினாது ரியஞான மூற்ம் ஞானமானது சத்தாதிவிடயங்களைப் பொ புலன் சார்ந்துயி ருக்கி யரன்மாவிவிடத்து மயக்கமறவந்து

ர்க்கண் மயர்வற அக்க மனத்தா லறியு மறிவு மான்தக்காட்சி
வகதருான மா யாம்—எ-று. (சு)
னதக காண்ட
லாமே.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிந்த்ரியப்பிரத்யக்ஷ மானஸப்பிரத்யக்ஷங்களி னுடை
ய க்ரமங் கூறுகின்றது.

உயிரினோடு ணர்வுவாயி லொளியுருவாதியபற்றிச் செயிரின்றி விகற்பமோடு தெரியதிந்திரியக்காட்சி—ஆன்ம சிற்சத்தியானது ப்ராணவாயு மனசுடனே §பாஹ்யேந்த்ரியத்வாரா ரூபாதிப் பிரகாசங்கள் சகாயமாக ரூபாதி பாவைஸ்துக்களை சம்பந்தித்துக் குற்றமாகிய ‡சம்சயமும் ¶ விபர்யயமும் †பூர்வாநுபவ ஜநிதமாகிய ஸ்ம்ருதியு மன்றி நாமஜாதியாதி விசிஷ்டமாகக் காண்கிறது இந்த்ரியப்ரத்யக்ஷம். "வாயிலிடனும் புலனுமாகும்" எனவறிக.

§ பாஹ்யேந்த்ரியத்வாரா -புறவிந்த்ரியங்களை முன்னிட்டுக்கொண்டு, ‡ சம்சயம் - ஐயம், ¶ விபர்யயம் - திரிவு, † பூர்வாநுபவஜநிதம் - முன்னினைவு.

இவ்விந்த்ரியப் பிரத்யக்ஷத்திற் கேதுவான விஷயேந்த்ரிய சந்நிகர்ஷம் விஷயபேதத்தினாற் சம்பந்தபேதமாறும். அவையாவன ? சம்யோகம் சம்யுக்தசமவாயம் சம்யுக்தசமவேதசமவாயம் சமவாயம் சமவேதசமவாயம் விசேஷணவிசேஷ்யபாவம்.

மேலிவையிற்றின் தரிசனம்:—கடதரிசனத்திலே சக்ஷுவுக்கும் கடத்துக்குமுண்டான சம்பந்தம் * சம்யோகம்.

* சம்பந்தமென்னுஞ்சொல்-அவைகளைத்தழுவிநிற்கும்.

கடத்ரூபத்திற்குஞ் சக்ஷுவுக்குமுண்டான சம்பந்தம் ஸையுக்தசமவாயம்.

கடத்ரூபத்தில் ரூபத்வாதி சாமாந்யத்திற்கும் சக்ஷுவுக்குமுண்டான சம்பந்தம் ஸையுக்த சமவேத சமவாயம்.

சப்தத்திற்குஞ் ஶ்ரோத்ரத்திற்கு முண்டான சம்பந்தம் சமவாயம்.

சப்தத்வஜாதிக்கும் ஶ்ரோத்ரத்துக்கு முண்டான சம்பந்தம் சமவேதசமவாயம்.

அபாவத்தையும் சமவாயத்தையுங் க்ரஹிக்கிறபொழுது சக்ஷுவுக்கும் சமவாயாதாரமான படத்திற்கும் அபாவாதாரமான பூதலத்திற்கு முண்டாகின சம்பந்தம் ஸையோகம்.

சக்ஷு ஸையுக்தமானபடத்தில் படத்துவம் சமவாயமென்கிறபொழுது ஸையுக்தவிசேஷ்யத்வம் சம்பந்தம்.

இந்தபடத்திலே படத்வம் சமவேதமென்று க்ரஹிக்கிறபொழுது ஸையுக்தவிசேஷணத்தை சம்பந்தம்.

சக்ஷு ஸையுக்தமானபூதலத்தி லிப்பூமியிலே கடமில்லையென்கிறபோது பூதலம் விசேஷணம், கடாபாவம்விசேஷ்யம்.

அந்த அபாவத்துக்கும் சக்ஷுவுக்கும் ஸையுக்தவிசேஷ்யதை சம்பந்தம் கடாபாவத்தையுடையது பூதலமென்கிறபோது, அபாவம் விசேஷணம், பூதலம் விசேஷ்யம். இதற்குண்டான சம்பந்தஞ் ஸையுக்தவிசேஷணத்தை

* प्रत्यक्षं चक्षुरादीन्द्रियेण संबन्धः षड्विधो
ऽक्षसंज्ञितः । घटादिद्रव्यविज्ञाने चक्षुःसं
योगमात्रतः ॥ संयुक्तसमवायश्च गुण
सामान्ययोर्धियः । संयुक्तसमवेतसम

வாயாத் ஸந்நிகர்ஷயோ: || ஶப்தஸ்ய ஶ்ரவணம் ஶ்ரோத்ர ஸமவேத தயா ஸித்தம்| ஶப்தத்வ ஸமவேததாய-ஸமவாயாத் த்ருதீயகே || விஶேஷண தயா ஏவ ஸமவாய ஸித்தா | விஶேஷ்யத்வேந வா ஏவ ஸமவாய ஸித்திதே இதி,—

சம்பந்தமெனினும் சந்நிகர்ஷமெனினுமொக்குமெனவறிக.

அயர்வி லிந்திரியஞான மைம்புலன் சார்ந்துயிர்க்கண் மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே-குற்றமில்லாமற் பார்க்கிற ஞானேந்திரியமானது சப்தாதி பஞ்சவிஷயங்களைப் பொருந்தி சம்சயாதி மயக்கங்களற வுண்டான அநுபவத்தை மனசினாலே அநுசந்தானம்பண்ணுவது மானசப்பிரத்தியக்ஷம்.

"இந்திரியமத்தத் திணங்கும்பொழுதாறு-பந்தமுறும் பாரறிவிப்பாம்" "இந்திரியமர்த்தத்திணங்குதல் சையோகமுதலந்தப் பொருளுணர்ச்சியாம்" "சாதிகுணந்தன்னிற் சையோகசமவாயமாம்-போதமுளார் தாங்காணும்போது" "சையுத்தசமவேத சமவாயசம்பந்த-மெய்நுங் குணத்துவத்திலே" "சத்தஞ்சமவேதத் தாலேசெவிப்புலத்துக்-கத்தமா மென்றேபதி" "சத்தத்திற்சாமாநியத்தைத்தருமதனில்-வைத்தசமவேதசமவாயம்" "தவாதசமவாய சம்பந்தத்தருங்கா-ணபாவவிசேடணத்துவம்".

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ப்ரத்தியக்ஷத்தின் இலக்கண மிரண்டு திருவிருத்தத்தாற் கூறுகின்றார்.

உயிரினோடு - ஆன்மாவாகிய ப்ரமாதாவோடு,—உணர்வு-சிற்சத்தியாகிய ப்ரமாணம்,—வாயில் - மலத்தைச் சிறிது நீக்கி யதைச் சிற்சத்தியைச் சிறிது விளக்காநின்று தனக்குப் ப்ரேரகமாயிராநிற்குங் கலை வித்தை ராகங்களோடுகூடிய மனசினாலே செலுத்தப்பட்ட இந்திரியம்,—ஒளி - காட்டாகிய சோமசூரியாக்நிப்பிரகாசம்,—உருவாதி - உருவ சத்த ஸ்பரிச விரச கந்தங்க ளிவைகளை,—பற்றி - பொருந்தி,—செயிரொடு விகற்பமின்றி - ஐயந்திரிவோடு சவிகற்பமின்றி,—தெரிவது - நிர்விகற்பமாகக் காண்பது,—இந்திரியக்காட்சி - வாயிற் ப்ரத்தியக்ஷம்;—அயர்விலிந்திரியஞானம் - முன்சொன்னவாயிற் ப்ரத்தியக்ஷமாகிய நிர்விகற்பஞானம்,—ஐம்புலன்சார்ந்து-சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களைப் பொருந்தி,—மயர்வற-ஐயந்திரிவுகளின்றி,—உயிர்க்கண் -ஆன்மாவினது புத்திகலுஷித சிற்சத்தியிலிடத்தது வித்துவாய்,—மயர்வறவந்தஞானம் - விளங்கிய சவிகற்பஞானம் பௌத்தப்ரமிதி ப்ரத்தியக்ஷமாயிருந்தாலு மீதின்னரூபமாகவேணுமெனு மனசினது சங்கற்ப சந்தேகஞான முன்னாகவுண்டாதலினால்,—மானதக்காண்டலாமே - மானதப் ப்ரத்தியக்ஷமுமாமே.

புத்திசுகி மனசென்றும் பெயர் பொது, பௌத்தமென்று செம்மைப்பொருள்.

தத்துவ வியாபாரமுறைமை சிறிது சாற்றுகின்றோம்:—ஒரு சிற்சத்திரூபமாகிய வோர்ஞானந்தானே தற்பொருளறிவென்றும் பிறப்பொருளறிவென்று மிருவிதமாயிருக்கும்.

அப்படியிருந்தாலும் பிறப்பொருளறிவாயிருந்த தான்றானே தற்பொருளறிவாயிருந்து பகுப்பற் றிருதன்மையாயிருக்கும். பிறப்பொருளை யறியுமிடத்துத் தற்பொருளறிவானது தற்பொருளறியுஞ் சமுதாய சித்ரூப மாத்ரரூப முன்னமைந்த சுத்தரூப சிவரூப வான்மரூப ப்ரத்தியக்ஷ சிற்சத்தியென்கின்ற

ப்ரமாதா. பிறப்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூபவான்மசத்திரூப பராக்ரூப சிற்சத்தியென்கின்ற ப்ரமாணம். ப்ரமாணத்தின தறிதற்றொழிலானது க்ரியையென்கின்ற ப்ரமிதி. பிறப்பொருளென்கின்றது கர்த்ருகரணக் கிரியைகட்கேயமாகிய கன்மமென்கின்ற ப்ரமேயம்.

தற்பொருளை யறியுமிடத்துத் தற்பொருளறிவு பிறப்பொருளறிவெனகின்ற விரண்டிற்கும் பொது நடுச்சித்ரூபமாதிர வங்கு ரான்ம ப்ரேரகவறிவானது கர்த்ரூப மாத்ர சிவரூபானமரூப சிற்சத்தியெனகின்ற ப்ரமாதா. இப்பிரமாதாவோடு மணந்து பிறப்பொருள் ப்ரமாதாவாயிருந்த தற்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூபான்மசத்திரூப ப்ரத்யக்ரூப சிற்சத்தியென்கின்ற ப்ரமாணம். ப்ரமாணத்தின தறிதற்றொழிலானது க்ரியையென்கின்ற ப்ரமிதி. பிறப்பொருளறிவான பராக்ரூப சிற்சத்தியென்கின்ற பிறப்பொருட் பிரமேயம்போ லல்லாமற் பிறப்பொருட் ப்ரமாணரூபமாக வறியப்படும் ப்ரமேயம்.

சிவன் முத்தசிவன் அபரமுத்தசிவன் ஜீவன்முத்தசிவன் ஜீவான்மாவென்னு மைவர்க்கும் அவரவர்க் கஞ்யமாகிய வவ்வர் பிறப்பொருட் சித்சிற்பிரமேயம் ஸ்வரூபமன்று, பின்னைப் பொருள். அவரவர் ப்ரமாதிரூபம் ப்ரமாணரூப மிரண்டும் ஜீவான்மாவுக்கும் ஜீவன்முத்தசிவனுக்கும் அபரமுத்தசிவனுக்கு மாத்திரஞ் செப்பப்படுவதாகிய தடதக பௌத்த சவிகற்ப ஞான மௌபாதிகமாதலாற் பௌத்த தூல விகற்பமாத்திரத்தைத் தள்ளி நீங்காமலிற்குமுன் னற்பசாத்த சவிகற்ப நிர்விகற்பஞான ப்ரமிதிரூபமும், பிறப்பொருட் ப்ரமாணமாகும் தற்பொருட் சித்ப்ரமேயரூபமுமாக காலும் பகுப்பற்று வேறுவேறு மவரவர்க்கு சான்றாய்த் தடத்தலக்ஷணமன்றி ஸ்வரூபலக்ஷணமாய்த் தானேயிருக்கும். இவையாற் காரதத்துவஞ்

சிற்சத்திவிருத்தியிற் சிறிது மலத்தைநீக்கிப் பிறப்பொருளறி தலைய பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று ஞானசத்திதனமே லிச்சாசத்திகோத்த கிரியாசத்திரூப விரோருகரணரூபியா யிருக்கின்ற பராகரூபப்பெயரெய்திய வெதிர்முகியாகிய சிற் சத்தியைப் பொருந்தி யதனிடத்தினுள் ளற்பசவிகற்பநிர்விக ற்பஞானமா யினிமே லிந்திரியத்வாரத்தால் விஷயாந்தவத்தி னால் மலவாசனைமாற்றிப் பிறபொருளை யிதுவென்றறியும்படி க்கு மேலிராகத்தவங்கோத்த கலாதத்வமெனகின்ற தனனால் மலவாசனையைமாற்றி யிதுகாரியமென றுதயோகித் தினன தாக்ககடவதெனறு சங்கற்பித்துப் பண்ணும்படிக்கு மறிசல் பண்ணுதற்றொழில்களை மலவாசனைமணககச் சிறிது விளக்கி யபோதமாத்ரங் கரணகாரகமாயிருந்தது.

பின்னுட னுள்முகமாய்த் திரும்பிப் பிறப்பொருளறிதல் பண்ணுதலைக் குறித்துப் பகுப்பற்று ஞாதிருகர்த்ருரூப விரோ ருகாதருரூபியாயிருக்கின்ற பிரத்திபகரூபிப் பெயரெய்திய திரு ம்பியமுக சிற்சத்தியைப் பொருந்தி யதினெதிர்முக சிற்சத்தி கரணங்கொண் டறிதற் பண்ணுதற்றொழில்களைப் பண்ணுவிக் குஞ் சாமர்த்தியத்தையு மச்சிற்சத்தி பிறப்பொருள்காட்ட வச்சிற்சத்திகொண்டு பிறப்பொருளறியும் சாமர்த்தியத்தையும் விளக்கி யக்கலை காதருகாரகமாயிருந்தது.

தற்பொருளறிதல பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று ஞானசத்தி தன்மேலிச்சாசத்திகோத்த க்ரியாசத்திரூப வீ ரோருகரணரூபியாயிருக்கின்ற ப்ரத்யக்ரூபிப் பெயரெய்திய திரும்பியமுகமாகிய சிறசத்தியைப்பொருந்தி யதிலறிதல் பண் ணுதற்றொழில்களைச் சிறிதுவிளக்கிக் கரணகாரகமாயிருந்தது.

பின் னங்க வெதிர்முகசிற்சத்தி திரும்பியமுகசிற்சத்திக ளிரண்டிற்கும் பொதுவேச் சித்ரூபமாத்ர வந்தரான்ம கர்த்ரு

ரூபமாத்ர சிற்சத்தியைப்பொருந்தி யதிற் றிரும்பியமுக சிற்சத்தி கரணங்கொண் டறிதல்பண்ணுதற் றொழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையும அச்சிற்சத்தி தற்பொருள்காட்ட வச்சிற்சத்திகொண்டு தற்பொருளறியுஞ் சாமர்த்தியத்தையும் விளக்கி யக்கலை கர்த்ருகாரகமாயிருந்தது.

அப்படியிருந்து நானறிவேன் நானறியாநிற்கின்றேன் நான் பண்ணுவேன் நானபண்ணாநிற்கின்றேனென்றும், அறிந்தபின்னும் பண்ணியபின்னும் நானறிந்தேன் நானபண்ணினேனென்றும், முன் னற்ப சவிகற்ப நிர்விகற்பஞானமாய் அஹங்கார தூலவிகற்பார்ப்பதமா யறிதல் பண்ணுதற் கிரமத்தில் கர்வித்துச சங்க்ரமப்பித்து நிற்கும்; ஆதலாற் கலை கர்த்ருகாரகமெனபதே முககியம்.

பிறப்பொருட் ப்ரமாணமென்கின்ற தற்பொருட் ப்ரமேயந்தான ஞானே ப்ரத்யக்ரூப தற்பொருட்பரமாதிருப் ரமாணரூபமா யதி லதிரூக்குமித்து மேயவிலக்ஷணமாய்ப் புரித்து ஸ்வயம் ப்ரகாசமாய் நிரந்திரமாய்ச் சடிதிவிளங்கி விடுதலா லநவத்தையினறித் தற்பொருட்ப்ரமேய விஷயத்திற் ப்ரமாதாமுதலிய நான்கும் ஸ்வரூபமாயிருந்தாலும்ப்ரமாதாவல்ல; ப்ரமாதா ப்ரமாணமல்ல, ப்ரமாணம் ப்ரமிதியல்ல, ப்ரமிதி ப்ரமேயமல்ல, ப்ரமேயமெனவறிக. பிறப்பொருட் சிற்ப்ரமேயவிஷயத்திலேயுஞ் சிறிது சிறப்பொப்பிருத்தலா லப்படி யொருபடியறிக.

பின்பு வித்தியாதத்வங் கலையிரு லொருபடி விளங்கிய கர்மரூப பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி மலவாசனையை நீக்கித் தெளிவுபண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும். ராகதத்வங் கரணரூப பார்க்ரூப

விச்சாசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி போக்யப்பொருளி லுபரஞ்சிப்பித்துக் கலாகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

காலதத்வ நியதிதத்வத்தாற் போக்கியப்பொருளில் நியமித்த புருடனை யேவி நியதியோடு கரணகாரகங் கர்த்ருகாரக முமன்றிக் காரணமாத்திரமாயிருந்தாலு மொருப்ரகாரத்தாற் கர்த்ருகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

புருடதத்வம் அவிவேக ப்ரதிபத்தி விபரீத சுகதுக்க ரூ வேதனை போகக்கிரியையைப் பண்ணும் போகதாவா யோடுகூடிக் கர்த்ருகாரகமென்று பெயர்பெற்று நிற்கு

ப்ரகருதிதத்வஞ் சாதாரணாசாதாரணமுமாய்ப் ப்ரவிருத்தி நியம வியாபாரசீல குணகாரியத்வாரத்தி னக்குக் கீழுள்ள போக்கியபோகப்பொருள்களை யுண்டா குணதத்வத்தோடுகூடக் காரணமாத்திரமாய் நிற்கும் மாத்திரைகளும் பூதங்களுமாகிய தேரிற் றேராளிபோ கும்.

சக்ஷுராதி தத்வமுதலிய ஞானேந்த்ரியம் இச்சாசத்திரூபசுற சத்தியைப்பொருந்திய விராகதத்வத்தாற் செலுத்தப்பட்டுக் கிரியாசத்தியைப்பொருந்திய விராகதத்வமணந்த மனசினாலே வப்பட்டு பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி முன்சொல்லிப்புறபோக்கியப்பொருள்களைக்காண்பித் தந்த சிற்சத்திபொருந்திய வித்யாதத்வத்தினாற் புருஷனுன்றிது வென றறியும்படி பண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

அந்தவறிவு நிர்விகற்பஞானமென்று மிந்திரியப்ரத்தியக்ஷமென்றுஞ் சொல்லப்படும்.

அவ்வறிவை யவ்விராகதத்வங் கலக்கும்.

திரும்ப அராகதத்வத்தோடு கோத்துநிற்கும் மனதத்வ மந்தநிர்விகற்பஞானத்திற் றோற்றும்பொருள்களி லொன்றை விகற்பித்துத் தாக்கி யிது வின்னதையின்னது ரூபமாகவேணுமென [illegible]துமுதல் ரூபங்களைச் சந்தேகமாய்ச் சங்கற்பித்து அஹங்கார புத்திப்ரேரகமாய்க் கரணகாரகமென்று பெயர்பெற்றுநிற்கும்.

கலாதத்வத்தோடு கோத்துநிற்கு மஹங்காரதத்வம் புறப்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞாதிரு கர்த்ருரூப கர்த்ருரூபீ மாத்திரமாய்த் தற்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞானசத்திமே லிச்சாசத்திகோத்த க்ரியாசத்திரூப கரணரூபியாயு மிருக்கின்ற ப்ரத்யக்ரூபியெனப்பெய்திய திரும்பி யமுகமாகிய சிற்சத்தியையு மெதிர்முகசிற்சத்தி திரும்பிமுக சிற்சத்திகளிரண்டுக்கு மந்தரானமசித்கர்த்ருரூபமாத்ர சிற்சத்தியையுங் கலாதத்வத் துவாரத்தாற் பொருந்தி, யதினாதினிடத்தி லறிதல் பண்ணுதற்றொழில்களையு மந்தத்தொழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையு முறைமையிற் சமர்த்தித்த திகதவிருத்திய நிர்விகற்பஞான மதைப்பற்றிவந்ததோ வதை நிச்சயமாய் நானறிவே நானறியாநிற்கின்றேனென நானபண்ணுவேன நானபண்ணாநிற்கின்றேனென்றும்; அறிந்தயினும் பண்ணினபினனும் நானறிந்தேன நானபண்ணினேனென்றும்: அந்தச கலையின் றூர்ப்பவித்த தற்பொருள்விஷய நிர்விகற்பஞானத்தைப்பற்றிப் பிறக்குஞ் சவிகற்பஞானமாய்ப் பிறப்பொருள்விஷய வித்தியாகலாகலுஷித பார்க்ரூப ஞானக்கிரியாசத்தியை விஷயீகரித்து கர்வித்து சங்க்ரமப்பித்து நிற்குமாதலா லொருப்ரகாரத்தாற் கரணகாரகமென்றும் ப்ரதானமாய் கர்த்ருகாரகமென்றும் பெயர்பெற்றுநிற்கும்.

பின்பு வித்யாதத்வத்தோடுகோத்துநிற்கும் புத்திதத்வம் கரணரூப பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி

இவ்வனைத இருமாலை இருசந்தனம் இருசர்ப்பம் இருமுள் இருவிடம் இருசிவகாதம் என்றிவைமுதற்பொருள்களை நிச்சயித்துக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

அந்த நிச்சயிக்கப்பட்டபொருள் ஞேயமாத்திரத்திலே தான போகத்துக்குப் பொருந்திய கன்மேந்திரியங்களாற் காரியப்பட்டுத் தான புத்தியிற் ப்ரதிபிம்பிக்கும்.

புத்தி யதனாற் சுகரூபையாயுந் துக்கரூபையாயும் மோகரூபையாயு மிருக்கும்.

அந்த சுகமுதலாகிய மூன்றை யொவ்வொன்றுப் பார்க்ரூபஞானசத்திபொருந்திய வித்தியாதத்வமான திதுவென்று நிர்விகற்பமாயப் பார்க்கும்

அந்தப்பார்வையைப் பார்க்ரூப விச்சாசத்திபொருந்திய விராகதத்வ முபரஞ்சிப்பித்துக் கலக்கும்.

அந்த விராகதத்வத்தோடுகூடித் தங்கவிச்சாசத்திபொருந்திய மனதத்வ மிது சுகரூபமாகவேணும் இதுதுக்கரூபமாகவேணும் இதுமோகரூபமாகவேணுமென்று விகற்பித்து ஒவ்வொன்றைத் தாங்கிச் சங்கற்பிக்கும்.

கலாதத்வத்தோடுகூடித்து ப்ரத்திபக்ரூபஞானசத்திபொருந்திய வஹங்காரதத்வம் வித்யாதத்வத்திலுற ஞேற்றி நிர்விகற்பஞான மதை விஷயீகரித்து வந்ததோ வந்தவஸ்துவை நானிச்சையிப்பேனென்று கர்விக்கும்.

பின்பு தற்ப்ரகாச பிறப்ரகாசமாயிருக்கின்ற புத்திதத்வத்தினது முன் ப்ரபஞ்சித்த பார்க்ரூபசிற்சத்தி விருத்திக்குறி நிர்விகற்ப பிறப்ரகாசத்தோடுகூடித் தற்ப்ரகாசத்தி லந்தச் சுகதுக்கமோகங்க ளிதுசுக மிதுதுக்க மிதுமோகமென்று தோற்றும்.

அந்தச் சுகதுக்கமோகங்களோடு பகுப்பற்றிருக்கு மந்தப் புத்தி யத்யவசாய சவிகற்பஞானத்தினின்று மந்தப்புத்தி ப்ரகாசத்தோடுகலந்துநின்று அதனறிகற்றெழிலோடும வித்யாதத்வத்தோடுசேர்த்துக் கிளம்பி யந்தப்புத்திப்பிரகாசாங்கி சமாதர போக்கியத்தினமேல்விழுந்த வெதிர்முகஞானசத்தியில் அந்தப்புத்திப்ரகாசத்தினது விகற்பந்தோய்ந்து சற்றே சவிகற்பஞானமாய்வரும்புத்தி யத்யவசாய முற்றுப்பொருந்திய பௌத்தசுகதுக்க மோகபோகமெனகின்ற வேதனையினது சுபூர்த்தி துடபூர்த்திச சொரூப சுபாநந்த துராநந்தமாய்த் தோற்றும்போகத்தை யாங்காரத்தோடுசேர்த்தத திரும்பிய முகசிற்சத்தி,கலையிருந் றன்னிடத்தின முனசேற்றிய வுள்ளற்ப சவிகற்பஞானமான சுவசம்வேதன ப்ரத்தியக்ஷத்தைத யகங்காரவிகற்ப சவிகற்பமாகசி, நானசுகி நானதுக்கி நானமோகி யென்று பெயாககோப்பபோகமாய் ; புசிககும் அநுபவிக்கும் பார்கரூபியென்றும் பரோனமுகியென்றும் பாசங்விததென றும சத்தியென்றும் மெதிாமுகசிற்சத்திககுப் பெயரொன்றறிக.

ப்ரத்யக்ரூபி யென்றும் ஸ்வயோனமுகி யென்றும் ஸ்வசங்வித்தென்றும் சத்திமானென்றும் சிவான்மாவென்று திரும்பியமுகசிற்சத்திக்குப் பெயரென்றறிக

அந்த வெதிர்முகசிற்சத்தித் திரும்பியமுகசிற்சத்திகளிரண்டின் தந்த்ரானமசித்தானமாவுக்கு மவரவ சீர்ருசத்திக்குள்ளருஞ் சிதகான்மாவென்பதைக் குறித்துச் சிவனென்று மானமாவென்றும் பெயரொனறறிக.

பின்னுமொரு சிற்சத்தியினுடைய வெதிர்முகரூபந் திரும்பிய முகரூபமே சத்தியென்றுஞ் சிவனென்றுஞ் சொல்லப்படுமாதலாற் றனதுசத்தியைத்தவிர சிவன் றனென்பதில்லையென்

பது மப்படியாதலாற் றனுசத்தியைத்தவிர வான்மாத் தா னென்ப தில்லையென்பதுமறிக.

இரும்ப வந்தவஹங்காரங் கலையினால் விளங்கிய கரிபாச த்திலைப்பொருந்தி மனோசங்கற்பமுடையனாகப் பிராணவாயு க்களைக் கன்மேந்திரியங்களைச்செலுத்தி ஞானசத்தியாலறிந்த கடமுத ற் காரியபதார்த்தங்களைப் பண்ணும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. மேற்கூறிப்போந்த காட்சி நான்கனுள்ளும், தன்னை நோக்கிநிற்குமறிவாகிய ஆன்மாவினையும் விடயங்களை நோக் கியோடுமறிவாகிய சிற்சத்தி, சோத்ரமுதலிய பொறிகளையும், அவ ற்றிற்குத் துணையாய் வலிசெய்துநிற்குந் தேயுமுதலிய பூதங் களையும், அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்குதலின்றி உடனாய்வருவமுதலிய தன்மாத்திரைகளையு மதி ட்டித்துக்கொண்டு, ஐயவிபரீதக் குற்றங்களும் பெயர்சாதிமு தலிய விகற்பமுமின்றி, உருவமுதலியவைம்புலன்களை நிருவிக ற்பமாயறியுமறிவு வாயிற்காட்சியெனப்படும். அங்ஙனமைம்புல ன்களை இயைந்தறிந்த பின்னர் மீளமறத்தலின்றிச்சித்தத்தா ற் சிந்திக்கப்பட்டு நிலைபெறுவதாகிய அவ்வாயிற்காட்சியறிவு; பெ யர்சாதி முதலியவற்றான் விபரீதமாதலின்றி நிச்சயமாய்ப் பு த்தித்தத்துவத்தின்கண் வருதலாகிய சவிகற்பவுணர்வாய் உயிரி னோடுணர்வு தெரிவது மானதக்காட்சியெனப்படுமென்பதாம்.

ஐம்புலன்சார்ந்தயர்விலிந்திரியஞானமென மாறுக.

இன ஐந்தாமுருபு.

ஓடுணர்வு வினைத்தொகை.

ஒளி ஆகுபெயர்.

ஆதியெனபதனை ஒளிபோடுங் கூட்டுக.

சாரகதபிஷெனபது சாரக்தெனத்திரிநது காரியத்தின்மே னின்றது.

உயிர்க்குப் பற்றுககோடாகிய புததியை உயிரென்றுபசரிததார்.

வந்தஞானமென்னும் பெயரெச்சம் ஆறுசென்றபெயரெனமுற்போல நின்றது.

மனத்தினெழுதிற்பாடு முனனுக நிகழ்தலின மானததககாட்சியெனப்பபட்டது.

அதிகாரமுறைமை'மயென்னுமுத்தியான் உயிரிஞேடுணாவு தெரியதெனபதனை அளவையதிகாரமுழுதினு முய்த்துரைகக.

நிரம்பவழகியருளை வருமாறு.

---o---

முனசொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாணம் நாலில் வாயில் காட்சியு மானதககாட்சியு மேலருளிச்செய்கிறர்

க உயிரிஞே டுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றிச் செயிரொ
வி விகற்பமின்றித தெரிவ திநதிரியக்காட்சி - ப்ராணவாயுவும்
மனமபோதமு மிந்திரியங்களுஞ் சோமசூரியாக்கிப்பிரகாசமுமாக வுருவமுதலானவையிற்றைப் பொருந்திக் குற்றத்தோடுகத்திரியவிகற்பமுமினறியே காண்பது இந்த்ரியப்பிரத்தியக்ஷம்,—அயர்வி லிந்திரிய ஞான மைம்புலன சார்ந்துயிர்க்கண் மயர்வற வநதஞான மானதக் காண்டலாமே- குற்றமில்லாத விந்த்ரியங்களினது அறிவுகளானது பஞ்சவிஷயங்களையும்பொரு

ந்தியான்மாவினிடத்திலே மயக்கமற வந்தவறிவு மானதப் பிரத்தியக்ஷம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(மேற்கூறிய போந்த காட்சிஞானங்களுள்ளும்) உயிரின் - தன்னைநோக்கி நிற்குமறிவாகிய வான்மாவினின்றும்,—ஒடுணர்வு - விடயங்களை நோக்கியோடு மறிவாகிய சிற்சத்தி,—வாயில் - கண்முதலிய பொறிகளையும்,—ஒளியாதி - அவற்றிற்குத் துணையாய் வலிசெய் துடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும்,—உருவாதிபற்றி - அப்பூதங்களுக்கு முதற்காரணமா யவற்றைவிட்டு நீங்குதலின்றி யுடனாகிய வுருவமுதலிய தன்மாத்திரைகளையு மிடைப்படுத்துக்கொண்டு,—செயர் - ஐயவிபரீத குற்றங்களும்,—உறுவிகற்பமின்றி - பொருந்திய பெயர்சாதி முதலிய விகற்பமுமின்றி,—தெறிவது - உருவமுதலிய வைம்புலன்களை நிருவிகற்பமா யறியுமறிவு,—இந்திரியக்காட்சி - வாயிற்காட்சியெனப்படும்,—ஐம்புலன்சார்ந்து - அங்ஙனமைம்புலன்களை யியைந்தறிந்த பின்னர்,—அயர்வில் - மீளவுமறத்தலின்றி,—இந்திரியஞானம் - சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறுவதாகிய அவ்வாயிற்காட்சியறிவு,—மயாவற - பெயர்சாதி முதலியனவற்றொடு விபரீதமாதலின்றி நிச்சயமாய்,—உயிர்க்கண் - புந்தித்தத்துவத்தின்கண்,—வந்தஞானம் - வருதலினாலாகிய சவிகற்ப வுணர்வாயுயிரினோடுணரவு தெரிவது,—மானதக்காண்டலாமே - மானதக்காட்சியெனப்படும்.

இதனானே வாயிற்காட்சி மானதக்காட்சிகள் இயல்பு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேவிருத்தமுறையானே வேதனைக்காட்சியும்
யோகக்காட்சியு முணர்த்துகின்றார்.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாகி, தருந்தன்வே தனையாங்காட்சி சமாதியான மலங்கள்வாட்டிப், பொருந்திய தேசகால வியல்பகல் பொருளகளெல்லா, மிருந்துணர் கின்றஞானம் யோகநற் காண்டலாமே. (எ)

(இ-ள்) அருந்தின்பத்துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாகி தருந்தனவே தனையாங்காட்சி	ஆன்மஞானத்தாலே யிராகம் விதனை கலையிவற்று லுண்டாக்கு மின்பதுனபங்களைப் புசித்தலே தனவேதனைக்காட்சி
சமாதியான் மலங்கள்வாட்டிப் பொருந்திய தேசகால வியல் பகல் பொருள்களெல்லா மிருந்துணர் கின்றஞானம் யோகநற் காண்டலாமே.	யோகிகள் பலகாலுஞ் சமாதியைப் பண்ணப்பண்ண மலசத்தி கடைப்பட்டுத தாம் பொருநதியிருக்குந தேசங்களுடையவும், செல்காலம் வருகால மதுகளுடைய தனமையையும், அநயதேசத்திலுண்டாய வ்யாபாரங்களையு மிருந்தவிடத்திலேயிருந் தெல்லாவற்றையு மறியத்தக்கவறிவு நனமுனை யோகக்காட்சியாம்—எ-று.

சுவசங்வேதநமாகிய தற்சொரூபதரிசநமுஞ் சுவசங்வேத்யமாகிய சிவாநுபூதியு மிவைகள் சாக்ஷாத்காரியாதலால் இவைகாண்டலி லடங்கும்.

இஃதொப்பின முடித்தலாற் கூறியதெனவறிக. (எ)

காண்டல் முடிந்தது

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் நிறுத்தமுறையானே ஸ்வவேதனுப்ரத்தியக்ஷம் யோகப்ரத்தியக்ஷங்களுடைய க்ரமங்கூறுகின்றது.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந்தனவே தனைபாங்காட்சி - விஷப * ஜநயங்களாயிருக்கிற சுகதுக்கங்களை யிராகதத்துக்காதியான வித்யாதத்வம் ஆன்மஞானத்திலிடத்திலே செலுத்த நான்சுகி துக்கியென்பது முதலாக வருகிற ஞானம் † ஸ்வவேதனுப்ரத்யக்ஷம்,—சமாதியான மலங்கள்வாட்டி - வித்யாராகாதி நிரபேக்ஷையாக § அநாவித இயம நியம ஆசன ப்ராணாயாம ப்ரத்தியாகார தாரணை தியான சமாதி என்னு மிவையை † சிற்சத்தியாகிய சிவஞானந்த யோகத்தினாலே மலங்களை நீக்கி,— பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்களெல்லா மிருந்து[illegible]ரா கினறஞான மியோகநற் காண்டலாமே - பொருந்தப்பட்ட த்ரிபுவநத்திலுண்டான வஸ்துக்களையும் பூதபௌதிய வர்த்தமாநமென்னும் த்ரிகாலங்களிலே வருகிறவிஷயங்களையும் தூரத்ருஷ்டி தூரச்ரவணங்களை யியல்பாக விரிவுடனேகூட யேககாலத்தி லதீந்த்ரியமாகவே கரதலாமலகம்போல வறிவது ஸவிகற்பஞானம். ஞாதுருஞ்ஞாதுருபவஸ்வபாவமாகவே நிற்பது நிர்விகற்பஞானம். இப்படி யோக ‡ ப்ரத்யக்ஷ மிரண்டுவகைப்படும். ஸவபாவமென்பது தாதாத்மியம்.

* ஜந்யம் - உண்டாதல், † ஸ்வவேதனை - தன்வேதனை, § அநாவிரதம்-தடையில்லாமல், ‖ சிற்சத்தி-ஞானசத்தி, ‡ ப்ரத்யக்ஷம் -காக்ஷி.

ததுக்தம் — தத்தேந்த்ரியாண ப்ரத்யக்ஷத்வ ஸ்வஸ்வ-
ஜாதஸ்ய ஸமயயா | விவக்ஷாஞ நக்ஷேயோமாஜு யோ
ம ஸ்வாஹாவிஷ்ணோஜக ஜதி.—

இதனாற் பஞ்சேந்த்ரியங்களு மொவ்வொருவிஷயத்தை யறிகிறதொழிய அந்யவிஷயத்தை யறியமாட்டாதபடியாலும், அந்தக்கரணங்களு மப்படியே யொன்றறிந்த தொனறியாதாகையாலும், மனசு பற்றவும் அஹங்காரங் க்ரஹிக்கவும் புத்தி நிச்சயிக்கவும் புத்தியினாலே நிச்சயிக்கப்பட்ட விஷயத்திலே யிராக மிச்சையைப்பண்ணுவிக்கவும் வித்தை விஷய ¶ கடநம் பண்ணவுமாய் நிற்பதாகையால் இவையெல்லாத்தையும் வியாபித்து சர்வவிஷயத்தையும் பரிச்சேதம்பண்ணுதாகையிலும், இந்தக்கரணங்களெல்லாத்தையு நிரபேக்ஷமாகவே × பூதபௌஷ்யத்வர்த்தமாந ‡ காலீனமாயிருக்கிற விஷயங்களை யறிகையினாலும், தன்னுடைய ஸ்வரூபத்தையும் சிவனையும் அங்ஙனமாகத் தரிசிக்கையாலும், ஆன்மசிற்சத்தியே * நிருபாதிதமான ப்ரமாணம்.

¶ கடநம் - பொருந்துதல், × பூதபௌஷ்யத்வர்த்தமாநம் - செல்கால நிகழ்கால வெதிர்காலம், ‡ காலீநம் - காலங்கள், * நிருபாதிதம் - உபாதியில்லாதது.

இவையொழிந்து சொல்வாருமுளர். அவைவருமாறு.— கண்டுணராமை உணர்ந்ததை யுணர்தல் நினைப்பு என்னும் போலிகளும் கூறும்.

கண்டுணராமையாவது - சிலவற்றைக் கண்டதின்பின் பெயரறியார்;

உணர்ந்ததையுணர்தலாவது - முன்பு குளிர்வந்துற்றகாலத்து நெருப்பு மருந்தென்று அறிந்தான், பின்பு மதற்கிது மருந்தென உள்ளங்கொள்ளல்.

நினைப்பாவது - குழவிப்பருவத்தே தந்தைதாயை யிழந்தோன் காரணங் கருதாது நினைக்கின்றார் தந்தைதாயென்று பிறர்சொல்ல விதனைக்கருதிக் கொள்ளல். இதுபோலிகள்; இம்முறையறியுமாறுங் காண்க.

இதனுடைய பூர்வபக்ஷசித்தாந்தம் விஸ்தாரம், இவ்விடத்து க்ரந்தவிஸ்தாரபயத்தினாற் சொன்னதில்லை; ஆகையால் சித்தாந்ததீபிகையிலே விஸ்தரித்துச்சொன்னோம், கண்டுகொள்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—)—

(முன்சொன்ன முறைமையிற் புறம்பே பார்க்குபசிற்சத்தியைப்பொருந்தி நிர்விகற்பமாய்ப்பார்க்கும் வித்யாதத்வத்திற்பினகோத்த விராகமுதற் புத்திதத்வ முடிவாகிய தத்வங்களினால் முன்சொன்ன முறைமையில்வரும் இதுமாலை இது சந்தனம் இவள்வனிதை இதுபாம்பு இதுமுள்ளு இதுவிஷம் இதுசிங்காதமென்று புத்தி நிச்சயபுத்தி ப்ரதிவிம்பங்களினாற் புத்திதத்வத்துதிக்கும்.)

அருந்தின்பதுன்பம் - போக்கியமாகிய சுகதுக்கமோகந்தனை,—

இராகமாதி - திரும்ப வுள்நிர்விகற்பமாய்ப் பார்க்கும் வித்யாதத்வத்திற்பின்னோதத விராகதத்வமூகற் புத்திதத்வ ஸ்வப்பிரகாசமந்தமாகிய தத்வங்கள்,—

உள்ளதறிவினுக்கு-ஆன்மாவினதெதிர்முகசிற்சத்திக்கு,—

தரும் - கொடுக்கும், (திரும்பத்தன்னோடு பிரித்தற்கரிதாகிய சுகமுதலியவற்றைத் தனது சுகாதிவேதனாபூர்த்திசுருதி போகத்தோடெதிர்முகசிற்சத்தி முன்சொல்லியபடிக்குத் திரும்பியமுகசிற்சத்திக்குக் கொடுக்குமது முன்சொல்லியபடியநுபவிக்குமந்த வநுபவம்),—

தன்வேதனைபாங்காட்சி-ஸ்வசம்வேதனப்ரத்தியக்ஷம்,—

பலவிதமாயிருக்கின்ற சுத்தாவத்தைகளைச்சுருக்கிக் கீழாலவத்தைமுதலவத்தைகளிற் சாக்ராவத்தைமுதலைந்தகளையுந் தனது சாக்ரமுதலைந்தவத்தைகளினால் ஜயம்பண்ணும் சுத்தாவத்தையிற் சாக்ரமாவது—ஆசநப்ராணாயாமங்களைப்பண்ணி யிந்திரியங்களைச் சத்தாதிவிஷயங்களினின்றுந் திரும்பித் தன்வசமாய் நிறுத்தலாகிய ப்ரத்யாகாரம்.

ஸ்வப்நமாவது.—சாலம்ப சிவயோகத்திற் ஸ்வரூப சிவரூப சகள சகளாகள சாகாரசிவனிடத்தில் ப்ராகருதமனத்தைவைத்து நிறுத்தலாகிய தாரணை, திரும்ப நிராலம்ப சிவயோகத்திற் ஸ்வரூப சிவரூப நிஷ்கள நிஷ்களாதீத நிராதார நிராகாரசிவனிடத்தில் முறைமையிற் ப்ராகிருதமனதை நிர்விஷயமாய் ஜ்வலிதமாயிருக்கும்படி பண்ணித் தியானத்தினலெதிர்ப்புக்குள்ளாம்போய்த் தாக்குஞ் சிவசத்தியாகிய மனசினல விளங்கிய தனதுசிற்சத்தியாகிய மனதைச் சின்மாத்ரானமாவில்வைத்து சிவசத்திக்கொப்ப விரித்துத் தேடசிவத்தில் வைத்தலாகிய தாரணையுஞ் சுழுத்திக்குள்ளாந் தாக்குஞ் ஸ்வபநமாம்.

சுழுத்தியாவது:—சவிகற்பமாயு நிர்விகற்பமாயு மந்தநால் வகை ஸ்வரூப சிவரூப விருசிவனைகளை முறைமையிற் சிந்தனைபாவனைபண்ணுவதாகிய வங்கசிவயோகமென்கின்ற தியானம்.

துரியமாவது—தியானதசை வருதலாகிய வங்கசிவயோகமென்கின்ற சமாதி.

துரியாதீதமாவது — சமாதிசாமர்த்தியத்தினால் முறைமையிற் சவிகற்பமாயு முனனற்ப சவிகற்ப நிர்விகற்பமாயு மந்த நால்வகை ஸவரூப சிவரூப சிவபரத்தியக்ஷமாகுஞ் ஸ்வரூப சிவரூப சிவாபரோக்ஷமெனகினற ஸ்வரூப சிவரூப சிவசாக்ஷாத்காரமாகிய வங்கிசிவபோகம்.

இப்படி சிவயோகமுறைமைசுருக்கியிருத்தலால்,—

சமாதியால் மலங்கள்வாட்டி - சமாதிசாமர்த்தியத்தினால் மலமாயாகனம சாமர்த்தியங்களைத் தடுத்து,—

பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்களெல்லாம் - தானிராநின்றவிடம் தானிராநிற்குங் காலம் இநததேச காலங்களினது முறைமையை நீங்கியு நீங்காமலு மிருக்கின்ற சிவமுதல் நித்தியபதார்த்தமுதற் பதார்த்தங்களையெல்லாம்,—

இருந்து -தானிருந்தவோரிடத்திருந்து,—

உணர்கின்ற ஞானம்-சாலம்ப நிராலம்ப சிவயோக முறைமையிற் சவிகற்பமாயு முன்னற்பசவிகற்ப நிர்விகற்பமாயுஞ் சாக்ஷாத்காரியாநின்ற சாக்ஷாத்காரம்,—

யோகநற் காண்டலாமே - யோகக்காட்சியென்கின்ற போகப்பிரத்தியக்ஷமாமே; அந்த விந்தசுவசங்வேத்யமாம் பராநுபூதி டரியாய பரசங்வேதனுகார சிவரூப சிவாநுபூதி விசேஷஆகமாகிய சுவத்தை விஷயீகரித்துவருஞ்சுவசங்வேத ஸ்வரூப ஸ்வரூப சிவாநுபூதி ஸ்வாநுபூதி ப்ரத்தியக்ஷமுமாமே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து. அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேம்பட்டு நிகழுஞ் சத்துவகுண முதலியவற்றின் விளக்கமாகிய இன்பதுன்பங்கள் புருடனதறிவிற்கு விடயமாம்படி அராகமுதலியவைத் தத்துவங்களானும் புணர்க்கப்படுமதனை உயிரினோடுணர்வு தெரிவது தன்வேதனைக்காட்சி யெனப்படும்; இவ்வாறன்றி அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயமநியமமுதலிய அட்டாங்கயோகசமாதியான் ஒருவாறுகெடுத்து ஓரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையுங் காண்கின்ற காட்சியாய் உயிரினோடுணர்வு தெரிவது யோகக்காட்சியெனப்படுமென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானும் மேலெடுத்துக்கொண்ட நால்வகைக் காட்சிகளதியல்பு கூறப்பட்டது.

—

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாண நாலில் வாயில்காட்சியு மானதக்காட்சியு மருளிச்செய்து மேல் தன்வேதனைக் காட்சியும் யோகக்காட்சியு மருளிச்செய்கின்றார்.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந தன்வேதனையாங்காட்சி - புசிக்கத்தக்க விதாவகிதங்களை யான்மாவினுடைய ஞானத்துக் கிராகத்வேஷாதிகளாலே யுண்டாக்கிறவிது விவனுடைய வேதனாப்பிரத்தியக்ஷம்,—சமாதியால் மலங்கள்வாட்டிப் பொருந்திய தேசகால வியல்பகல்

பொருள்களெல்லா மிருந்துணர் கின்றஞானம யோகநற் கா ணடலாமே - சமாதியாலே யசைவறவிருந்து அந்தச்சமாதியி ளூலே மலமாயாதிகளமங்களைக் கீழ்ப்படுத்தித தானபொருந தப்பட்ட தேசங்களிலுள்ள வியல்புகளுந தான்பொருந்தப்ப ட்ட காலங்களிலுள்ள வியல்புகளுந தான்பொருநதியிருக்கப் படாத மற்றுமுள்ள விராஜ்யங்களிலுள்ள வியல்புகளுந் திரிகாலங்களிலுள்ள பொருளகளெல்லாத்தையுந் தானிருநத விடததிலே யிருந்தறியத்தக்கவறிவு நன்முனயோகப்பிரத்தி யக்ஷம

இதனுற்சொல்லியது தன்வேதனைக்காட்சியு மியோகக் காட்சியு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேற்பட்டு நிகழும் சததுவஞுனமுதலியவற்றின விளக்கமாகிய) அருந்தின்பதது னபம் - நுகரப்படு மினபத்துனபங்கள்,—உள்ளதறிவினுககு - புருடன தறிவிற்கு விடயமாம்படி,—அராகமாதிதரும் - அரா க முதலிய வைசுதுதததுவங்களாலும் புணர்க்கப்படுவதனை யுயிரினேடுணர்வுதெரிவது,—தனவேதனைக் காட்சியாம் - தன வேதனைககாட்சியெனப்படும்,—மலங்கள் - இவ்வாறினறி யறி வைததடைசெய்து நின்றமலசத்திகளை,—சமாதியான்வாட்டி - இ யம நியமமுதலிய வட்டாங்கயோக சமாதியானெருவாறு கெ டுதது,—இருநது - ஓரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து,— பொருந்திய - பொருந்தப்பட்ட,— தேசகால வியல்பகல் பொ ருள்கள் எல்லாம் - மூவிடத்து முக்காலத்து மியல்பாகவிரிந்து

பொருள்கள் எல்லாவற்றையும்,—உணர்கின்றஞானம் - காண்கின்ற காட்சியா யுயிரினோடுணர்வுதெரிவது,—நல்யோகக் காணலாமே - நன்மையாகியயோகக்காட்சி யெனபதாம்.

இதனானே தன்வேதனைக்காட்சி யோகக்காட்சிகளி னியல்புகூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலநுமானமுணர்த்துவானன்றொடங்கிப்பக்கமூன்றெனவு மியல்புமுதலிய வேதுமூன்றினையுந் தெகுத்துப் பொருநத வநுமானந் தன்னநுமானம் பிறரநுமானமாக விரண்டினையும் வகுத்து, அந்வயவெதிரேகமிருவித மெனபதனையுந தொகுததுணர்த்துகிறார்.

பக்கமூன்றின் மூன்றேது வுடையபொருளைப்
பார்த்துணரத், தக்கஞானந் தன்பொருட்டாம் பிறர்
தம்பொருட்டா மநுமானந், தொகுக்கவிவற்றுற பிறர்
தெளியச் சொல்லலாகு மச்சொல்லு, மிக்கவந்து வய
த்தினொடு வெதிரேகச்சொ லெனவிரண்டாம். (அ)

(இ-ள்.) பக்கமூன்று	பக்கம் சபக்கம் விபக்கம் எனப்பக்கமூன்றும்
மூன்றேது	இயல்பேது காரியவேது அநுபலத்தியேதுஎன வேது மூன்றும்
உடையபொருளைப் பார்த்துணரத் தக்கஞானம்	இங்ஙனங்கூறியபக்கங்க ளேதுக்களாலு மதற்கேற்றப் பொருள்களுடனகூடத் தானே வியாத்தியைக் கிரகித்தறிகிற தநுமானம் இருவிதப்படும்

தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டாமநுமானந் தொக்கவிவற்றாற் பிறர்தெளியச் சொல்லலாகும்

அந்தவநுமானந் தன்னாலநுமித் தறியப்படுவதெனவும், பிறராலநுமித் தறியப்படுவதெனவும் இருவிதமாம்

சுவார்த்தாநுமானமாவது—சுவர்த்தஞ் சுவப்பிரதிபத்தியேதுவாகையாலிது பரோபதேசமன்றி முன்பு தான புகை கண்டவிடத்திலேயனலைக்கண்டு பினபு தானேயாதாமோரிடத்திலே புகையுண் டவ்விடத்திலேயனலுமுண்டென்று வியாத்தியைக் கிரகித்தறியு மறிவு தன்னநுமானம். இஃதன்றித் தானே சிவனுண்டென் றறுதியிட் டறிகிறதுமாம்.

முற்கூறிய பக்ஷம், ஏதுக்களினாலும் பிறரறியும்படி யறிவிக்கு மறிவு பரார்த்தநுமானம். இஃதன்றிக் குரவன் மாணாக்கற்குச் சிவனுமான்மாவும் பாசமுமுண்டென் றறிவிக்கு மறிவுமாம்.

அச்சொல்லு மிக்கவந்நுவயத்தினொடு வெதிரேகசொல லெனவிரண்டாம்.

அச்சொல்லு மிருக்க வந்வயச்சொல்லெனவும் வெதிரேகசொல்லெனவு மிருவகையாம்—எ-று.

மூன்றுபக்கமும் எ-து. மூன்றும் பரார்த்தாநுமானத்துக்கு வேண்டுகையாற் றொக்கவிவற்றாலெனச் சிறப்பித்தார் அந்வயவெதிரேகிக்குப் பஞ்சரூபமுடைத்தாதலின 'மிக்க வந்வயம்' எனச் சிறப்பித்தாரெனவறிக. (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

முன்னஞ் ஸ்வார்த்தானுமானம் பரார்த்தானுமானமென் றுத்தேசங்கூறி யதற்குமே விலக்ஷணங் கூறுகின்றது.

பக்கமூன்றின் - பக்ஷ சபக்ஷ விபக்ஷ மென்னுமூன்றிலே,— மூன்றேது வுடையபொருளைப் பார்த்துணரத் தக்கஞானம் - இயல்பு காரியம் அநுபலப்தி என்னு மேதுத் * த்ரயங்களினு ¶ லேதுமத்தாகிய சாதநியங்களைத்ருடவியாப்திகளினுலே நிச்சயிக்கு மநுமிதிஞானம்,—தனபொருட்டாம் பிறர்பொருட்டா மநுமானம் - † ஸ்வார்த்தாநுமானமெனவும் ‡ பரார்த்தாநுமானமென்று மிருவகையாம், ஸ்வார்த்தாநுமானவாவது பரோபதேசமின்றி முன்புதான புகையைக்கண்டவிடத்திலே அனலைக்கண்டு, பின்புதானே யாதாமோரிடத்திலே புகையுண் டவ்விடத்திலே யனலுமுண்டென்று வியாத்தியை கரஹித்தறியு மறிவு_ ஸ்வார்த்தாநுமானமெனனும் தனபொருட்டநுமானம் - இஃதனறித்தானே சிவனுண்டென் றறுதியிட்டறிகிறதுமாம. முற்கூறிய பக்ஷத்துள் பரார்த்தாநுமானமென்பது இவைகளினுலே பிறரறியும்படி யறிவிக்குமறிவு பரார்த்தாநுமானம் எனனும் பிறர்பொருட்டநுமானம்; இஃதன்றிக் குரவன மாணுக்கனுக்கு சிவனும் ஆன்மாவும் பாசமு முண்டென்று அறிவிக்கு மறிவுமாம்,— தொக்கவிவர்முற் பிறர்தெளியச் சொல்லலாகும் - பஞ்சாவயவ § யுக்தவாக்யரூபமாயிருக்கிற வநுமானத்தினு லந்யருக்குந்தெரியும்படி சொல்லலாம்,—அச்சொல்லு மிக்க + வந்வயத்திறனுமெதிரேகச்சொல்லெனவிரண்டாம்-அந்தப்பஞ்சாவயவவாக்கியமானது அந்வயவ்யதிரேகி கேவலவ்யதிரேகியென்னு மேதுவாம்.

*த்ரயம்-மூன்று,¶ஏதுமத்தாகிய-ஏதுகூடிய,†ஸ்வார்த்தம் - தனபொருட்டு, ‡பரார்த்தம்-பிறர்பொருட்டு, § யுக்தம் - கூடிய, + அந்நுவயத்திஞெடு வெதிரேகச் சொல்லெனவிரண்டாம் - அந்வயமென்று மேதிரேகமென்று மிரண்டுவிதமாம்.

மூன்றுபக்கமும் பகார்த்தாநுமாநத்திற்கு வேண்டுமையால் "தொக்கவிவற்றால்" எனச்சிறப்பித்தார்.

அந்வயவெதிரேகிக்கும் பஞ்சரூபமுடைத்தாதலின் "மிக்கவந்நுவயம்" எனச்சிறப்பித்தார் எனவறிக.

அந்வயம் - பொருத்தமுள்ளது, வெதிரேகம் - பொருந்தாது. இவை மேல்விரித்துக்கூறுமிடத்தறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அநுமானப் பகுப்புணர்த்துகின்றார்.

பக்கமூன்றின - பக்ஷம் சபக்ஷம் விபக்ஷமென்கின்ற மூன்றினுள் மலை யுலகுமுதலிய பக்ஷத்தின்,—உடையபொருளை - அந்த பக்ஷத்தினது சாத்தியதன்மமாகச் சாதிக்கப்படு மக்நி காத்தா முதலிய பதார்த்தங்களை,—பார்த்துணர - ஊகித்தறிய,—மூன்றேது -இயல்பேது காரியவேது அநுபலத்தியேது வெனக் காரணவேது கன்மவேது வாசகவேது முதலியவேதுபேதங்களையுந் தோற்றுவிக்குமேதுமூன்று, தன்பொருட்டநுமானம் பிறர்பொருட்டநுமானமென வநுமானமிருவிதமாதலால்,—தக்கஞானம் - சொல்லியமூன்றேதுவினது தகைமைபொருந்திய தனதுசிற்சத்தி,—தன்பொருட்டாம் - தன்பொருட்டநுமானம்,—பிறர்பொருட்டாம்- பிறர்பொருட்டநுமானம்,—தொக்கவிவற்றால் - மூன்றுபக்கத்தோடுகூடின மரியாதிபெற்று

ந்திய முன்சொன்ன மூன்றேதுக்களால்,—பிறர்தெளிய - பிற ரது சிற்சத்தியநுமானம் ப்ரகாசித்துப் பிறர்மறைத்த வகுளி யீஸ்வரன்முதலிய பொருள்களையறிய,—சொல்லலாகும் - ப்ரி திஞைஞ யேது திருஷ்டாந்தம் முபநயம் நிகமநமெனனும் பஞ் சாங்கத்தைப் படித்தலாகும்.—அச்சொல்லும் - அந்தப்பட்ட மும்,—மிககவந்நு வயதிரேகுடு வெதிரேகச்சொல் லெனவிர ணடாம் - மிக்கவங்வயச்சொல் சாதந சாத்தியங்களினது மேனமையாகிய வுள்ளமையைச் செப்புதல், வெதிரேகசசொல் மாறியில்லாமையைச சொல்லுதல்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து இயல்பு முதலிய மூன்றனுள் ஓரேதுவுடைய சாத்தி யத்தைப்பக்கமுதலிய மூன்றின் வைத்து அவிநாபாவம்பற்றி ஆ ராய்தற்குரிய ஞானமாய் உயிரினோடுணர்வு தெரிவது தனபொ ருட்டநுமானமாம்·அவ்வேதுக்களானே தானறிந்ததனைப் பிறர றியப்போதித்தலையுயிரினோடுணர்வு தெரிவது பிறர்பொருட்டநு மானமாம். அங்ஙனம் பிறரறியப் போதிக்குஞ் சொல்லும் உட ம்பாடு மறையென்று இருவகைப்படுமென்பதாம்.

இதனானே மேலெடுத்துக்கொண்ட இருவகையநுமானங் களியல்பு கூறப்பட்டது·

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாணமானது ஐயக்காட் சி திரிவுகாட்சி விகற்பக்காட்சி நிர்விகற்பக்காட்சி வாயிற்கா

ட்சி மானதக்காட்சி தன்வேதனைக்காட்சி யோகக்காட்சி ஆக எட்டாயிருக்குமென்றுசொல்லி; மேலநுமானமாவது ஏதுக்களைக்கொண்டு மறைந்தபொருளை யறியலாமென்ற தெப்படியெனின்? அநுமானத்தை விரித்தருளிச் செய்கிறார்.

வர்ணத்தி லவர்களுக்குமோவெனின்? ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர சுத்த சைலோத்பவா இதிவசநாத். என்பது § த்ரைவர்ணிகரு முபகுலசுத்தருமாய் பரம்பரையாக ஸ்திரீகளும் புருஷரு ௦ மபேயபாநாதிரகிதருமாயிருக்கிற சூத்திரரிலும், இவ்வர்ணத்தி லவர்களிலுஞ் சத்திநிபாதமுடையரும் சிவதீக்ஷையுடையவர்க ளதிகாரிகள்.

§ த்ரைவர்ணிகா-மூன்றுவர்ணத்தார், ௦ அபேயபாநாதி-மதுமாமிசாதி.

இதற்குச்சம்மதி யெட்டாஞ் சூத்திரத்திற் றீக்ஷாப்ரகரணத்திற் கூறுவாம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

ஆகமத்தினது பகுப்பிலக்கண முணர்த்துகின்றார்.

ஆகமந்தான் - சத்தப்பிரமாணந்தான்,—அநாதியே மலருய - அநாதிமலமுத்தசிவனாகிய,—அறிவனூல்-சர்வஞ்ஞனது சாத்திரம்,(அந்தவாகமம் தந்திரகலையென்றும், மந்திரகலையென்றும், உபதேசகலையென்று மூன்றுவிதமாம்.) அம்மூன்றினுள்,—தந்திரம்-தந்திரகலையாவது, சரியாகிரியாபாதப் பகுப்பாதலால்,—நிருத்திமாறின்றிப்பேணல்-சத்தசாமர்த்யம் அர்த்தசாமர்த்யம் வத்துசாமர்த்யங்களால் பின்முன் னுகமாக்ரவிரோதமின்றிச் சரியா கிரியா க்ருத்யம் போதிப்பது.—மந்திரந்தான் - மந்திரகலையாவது, யோகபாதப் பகுப்பாதலால்,—மனுதிரளடக்கி - ஆசன மந்திர ஜபத்தோடு ப்ராணாயாமம் ப்ரத்தியாகாரந் தாரணை யிவைகளால் சித்தேந்த்ரியங்களை நிறுத்தி,—தெய்வம் வழிபடும் வாய்மையாகும் - சத்தபஞ்சாக்ஷர

ஜப சிவத்தியான சிவசமாதி ஜீவன்முத்தசிவன் சிவசாட்சாத்காரங் காங்கி யோகங்களையுள்ள முறைமை போதிப்பதாகும் —உபதேசஞான - உபதேசகலையாவது,—தனாதி யீறிலாதானறனமை யுணர்த்துவது-பசுபாச பதார்த்தங்களினிலக்கணங்களோடு கூடித தனதுற்பத்திநாசங்கள் காணுன திலக்கணத்தைப போதிப்பது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

௧-து. அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனருளிச்செய்த வேதாகமங்கள், கருமகாண்டம் உபாசனகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும். அவற்றுள், கருமகாண்டம்பற்றிப் பின்னொடுமுன் மாறுகோளின்றி அநுட்டித்தலை உயிரினொடுணர்வு தெரிவது தந்திரவுரையளவையெனப்படும்; உபாசனகாண்டம்பற்றி மனாதிகளடக்கித் தெய்வம்வழிபடும் வாய்மையை உயிரினொடுணர்வு தெரிவது மந்திரவுரையளவையெனப்படும்; ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலுமுடிவுமில்லாத இறைவனை தன்னினவேறல்லாத எண்குணமுடையனாதல் தன்னினவேறாகிய பசுபாசங்களையுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் உயிரினொடுணர்வு தெரிவது உபதேசவுரையளவையெனப்படுமெனபதாம்.

வேதமும் ஆகமமெனப்படுமென்பது சீகண்டபாடியத்துள்ளுங்காணக. ஆத்தவாக்கியமெனபதுணர்த்துதற்கு அநாதியே யமலனாயவறிவனென்றார்.

அறிவனூலெனபுழி ஆறாவதுசெய்யுட்கிழமைக்கண்வந்தது.

இவ்வாறன்றி, பதிபசுபாசங்களுக்குப் பிரமாணமுமிலக்கணமும் பின்முன் மாறுகோளின்றிப் பாகுபாடு தக்கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது தந்திரவுரையெனவும், மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையெனப்படுஞ் சாதகமாகிய வேண்டுஞ்செய்திமுறைமைகளைக் கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது மந்திரவுரையெனவும், தகுதியீறிலாதானறனையுணர்ந்ததெனப்படும் நிட்டையினியல்புகூறும ஆகமவாக்கியங்களைத் தெரிவது உபதேசவுரையெனவும், இவ்வாறு ஞானகாண்டமொன்றனையே மூவகைப்படுத்துரைப்பாருமுளர் அவர்க்கு மற்றையுபாசனாகாண்டமுங் கன்மகாண்டமும் பிரமாணத்துளகப்படாமையறிக.

இனித் தார்க்கிகர்முதலியோர் குடம்படமுதலிய உலகச்சொற்கள்பற்றி அவ்வப்பொருள்களையுணர்தலும உரையளவையெனபர். அவை, காட்சியநுமானங்களினடங்கிடாப்பொருளைக் காட்டுவனவன்மையின், மாமரத்தைக் காட்டல்போலும் இயல்பேதுபற்றிப்பிறவதாகிய அநுமான விசேடமாவனவன்றி உரையளவையாதற்கேலாமையறிக.

சொல்லானறிந்தேன் என்றனுபவநிகழ்தலின் அது வேறளவையாவதன்றி அநுமானத்துளடங்காதெனபார்க்கு, குளிரினமையனியினமை முதலியன அநுபலத்தியாலறிந்தேனென்று அநுபவநிகழ்தலின், இன்னோரன்னவற்றை வேறுபிரமாணமென்று காட்சிமுதலியவற்றுளடக்குதல் பொருந்தாதாய் முடியுமென்றொழிக.

இதனானே உரையளவை மூன்றென் றவற்றதியல்புகூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

காண்டல்வாயில் என்றெடுத்த திருவிருத்தத்திற் றன்பொருட்டாமநுமானம் பிறர்பொருட்டா மநுமானமென்ற பக்கத்துக்கு, பக்கமூன்று மூன்றுபக்கம் ஏதுமூன்று புகையாம்போதநாற்றம் என்ற ஐந்து திருவிருத்தத்தளவும் வியாக்கியானம் வந்துமுடிந்தது, ஆகமப்பிரகார மூன்றுவகையாயிருக்குமென்றதெப்படியென்ன மேலருளிச்செய்கிறார்.

அநாதியேயமலனுயவறிவனூலாகமந்தான் - ஆகமமானது அநாதியே நின்மலனுயிருக்கிற சர்வஞ்ஞனாலே சொல்லப்பட்டசாத்திரம்,—பிறந்திமா றினறிப்பேணல் தந்திரம் - முன்னொருபிறவியின் மலைவற விதனை யாராய்ந்துபார்த்துச் சொல்லுவது தந்திரகலையாம்,—மந்திரங்கள் மநாதிகளடக்கித்தெய்வம் வழிபடும் வாய்மையாகும் - மந்திரகலையாவது மனமுதலாகிய கரணங்களையடக்கி யவரவர்க்குவேண்டின தெய்வங்களை வழிபடுகிற வுண்மையாம்,—தனாதியிலாதானாண்மை புணர்த்துத லுபதேசந்தான் - தனக்கொரு முதல்நடுவிறுதி மூன்றுமில்லாத பரமேஸ்வரன உண்மையை யறிவிக்கிறவிது உபதேசகலையாம்.

இவனுர்சொல்லியது சாத்திரங்களை முன்னொருபிறவியின் மலைவறக் கொள்ளுகிறது தந்திரகலையாமென்றும், கரணங்களுடைய வியாபாரங்களை யடக்கி யவரவர் தங்களுக்குவேண்டின தெய்வங்களை யந்தந்த மந்திரங்களினாலே வழிபடுகிறது மந்திரகலையாமென்றும், தனக்கு முதலு முடிவுமில்லாத பரமேஸ்வரனுடைய சிவஞானத்தைப் பக்குவான்மாக்களுக்குப் போதிப்பிக்கிறது உபதேசகலையா மென்னுமுறைமையையு மறிவித்தது.

———

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

ஆகமம் - உரையளவையாவன?—அநாதியே யமலனாய வறிவனாருள - அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச்செய்த வேதாகமங்களாம் அவை கருமகாண்ட முபாசனாகாண்ட ஞானகாண்டமென மூவகைப்படும்,—சுருதிமாறின்றிப்பேணல் - அவற்றுட் கருமகாண்டம்பற்றி பின்னேருமுன மாறுகோளின்றி யநுட்டித்தலை, யுயிரினுக் குணர்வுதெரிவது,—சாத்திரம் - தந்திரவுரையளவை யெனப்படும்,—மருதிகளடக்த் தெய்வம் வழிபடு வாய்மை - உபாசனாகாண்டம்பற்றி மருதிகளடக்கித் தெய்வம் வழிபடு வாட்டமை, யுயிரினுக் குணர்வு தெரிவது,—மந்திரங்களாகும் - மந்திரவுரையளவை யெனப்படும்,—தருதியீறில்லாதான - ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலு முடிவுமில்லாத விறைவன,—தன்னையுணர்த்துதல் - தன்னின் வேறல்லாத வென்னுணர்வுடையருமல தலைவினையேயுற்ற பசுபாசங்களையுடையருந்தன் முதலிய தன்னையறியாத காருணருமறும் பிரகாசகுணர்த்துமாறு முயிரினுக் குணர்வுதெரிவது,—உபதேசந்தான் - உபதேச வுரையளவையெனப்படு மென்பதாம்.

இதனானே வுரையளவை மூன்றென்றமைற்ற றியல்புகூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் காண்டமுதலிய வளவைப்பிரமாணங்களைக் கூறி, மேற் பக்கப்போலி முதலியவற்றைத் தொகுத் துணர்த்துகிறார்.

ஈண்டுப்பக்கப் போலிநான் கேதுப்போலி யொ
ருமூன்றும், வேண்டுமொழிமூன் றுகும்விளங் குவமை
ப்போலி யீரொன்பான், காண்டுந்தோல்விக் தானமிர
ண டிருபத்திரண்டாங் கருதிலிவை, யாண்டுமொழிவ
ரவையெல்லா மளகயிலறுபத் தைந்தாகும். (கச)

(இ-ள்) ஈண்டு பக்கப் போலி — இவ்விடத்து அநுமானம் ப்ரயோகிக்குமிடத்துப் பட்சாபாச நாலாயிருக்கும்.

நான்கு

ஏதுப்போலி ஒருமூன்றும — ஏதுவாபாசம் மூன்று மிருக்கும்.

வேண்டுமொழி மூன்றுகும — அசித்தனமுதலிய பகுதியை வருத்தறியுமிடத்து திருபத்தொரு பேதப்படும்

விளங்குமுவமைப்போலி யீரொன்பான காண்டும — அனமாகங்களுக்கு விளங்கப்படாணும் திருட்டாந்தாபாசம் பதினெட்டுப் பேதப்படும

தோல்வித்தானமிரண்டு — செப்புவழு விளுவழுவால்வரு நிக்ரஹத்தானமிரண்டாம

அஃதாவது? அப்பிரதிபத்தியெனவும் விப்பிரதிபத்தியெனவும பெறும

இருபத்திரண்டாங் கருதிலிவை — இவைகளிரண்டினை பிரித்தறியுமிடத்துப் பிரதிஞ்ஞைஹானி முதலிய பதினமூன்றும், அநநுபாஷணமுதலிய வொன்பதும், ஆகவிருபத்திரண்டாம்

ஆண்டுமொழி வா இவையிற்றின மேலும் வாதத்தில் வாராதது, அத்தாந்தர முதலிய வாறுமுடெ னறும் சொல்லுவார்கள

அவைவெல் அவைகளின பகுதியை விசாரித் தறியுமிலா மளககி லறு டத தாகவறுபத்தைந்தாம். இககுற்றம் வாபத் தைநதாகும. ராமற ப்ரயோகிப்பதே நல்ல தது. எ - று.

போலி அறுபத்தைந்தாவன·—பட்சாபாசம் - ச, ஏதுப்போலி - உச, உவமைப்போலி - கஅ, நிகரஹஸதாநம் - உஉ, ஆகவறுபததைந்தையு மறிக.

ஆபாச மெனபது வடமொழி.

"ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்" என்றார் - தொல்காப்பியனார். இவையிற்றின வயாததியை யறியுமிடத்துப் பெயருமுதாரணமும வருமாறு —

பட்சாபாச நானகாவன ?

படசாபாசம்	க	ப்ரதிஞ்ஞாபாசம்	௩
அநுமானுபாசம்	உ	வசனுபாசம்	ச

இதற்கு முறையானே - உ-ம்.

பட்சாபாசமாவது - அநாஷணம்வன்னி, ஈதநுமானம். எ - து. பட்சமாயுள்ள வகநியிடத்துசூடில்லாமை யாபாசமாகையா லறிக. (க)

அநுமானுபாசமாவது-அநித்தியம் சத்தம் கண்ணுற்காணப்படுகையினுலே யென்கிறவநுமானம். (உ)

ப்ரதிஞ்ஞாபாசமாவது-சுத்தியிலிரசிதமென்னுமறிவு.(௩)

வசனுபாசமாவது - ப்ராம்மணனாலே சுராபானம்பண்ணப்பட்டது த்ரவத் திரவியமாகையாலே பால்போலறிவது. (௪)

பௌவியமெனநும்பெயர் இதுகுறைவு

ஆகப் பட்சாபாசம் நாலும் வந்தவாறுகாண்க

இதனை

அபிரசித்த விசேடணம்	௧	அப்ரசித்தோபயம்	௩
அபிரசித்த விசேஷியம்	௨	அபரசித்த சம்பந்தம்	௪

எனக்கூறுவாருமுளர்

ஏதுபோலி மூன்றாவன?

அசித்தன் விருத்தன் அனைகாந்திகன் - ௩

இதில் அசித்தனாவது - நிச்சயிக்கப்படாத பட்சவிருத்தியையுடையது (௧)

விருத்தனாவது பட்சத்திலும் விபட்சத்திலுமுடைத்தாயிருக்கை. (௨)

அனைகாந்திகனாவது பட்சத்திரயத்திலும் விருத்தியிருத்தல் (௩)

இதில் அசித்தபேதம் பன்னிரண்டாவன?

சொரூபாசித்தன்	௧	ஆசரய ஏகதேசாசித்தன்	௭
வியாத்திகரணாசித்தன்	௨	வியாத்த விசேஷ்யாசித்தன்	௮
விசேஷ்யாசித்தன்	௩	வியாத்த விசேஷணாசித்தன்	௯
விசேஷணாசித்தன்	௪	சந்தேகாசித்தன்	௧௦
பாகாசித்தன்	௫	சந்திக்தவிசேஷ்யாசித்தன்	௧௧
ஆச்ரயாசித்தன்	௬	சந்திக்தவிசேஷணாசித்தன்	௧௨

ஆக அசித்தபேதம் - ௧௨.

விருத்தபேதமிரண்டாவன?

பட்சவிபட்ச வ்யாபகவிருத் பட்சவிபட்ச ஏகதேசவிருத்
தன ௧ தன ௨

ஆக விருத்தன் - ௨

அநைகாந்திகபேதமேழாவன?

பட்சத்திரய வியாபகவிரு ஏசதேசவிருத்தி ௪
த்தி ௧ பட்சத்திரய ஏகதேச விரு
பட்சவ்யாபக சபட்சவிபட்ச த்தி ௫
ஏகதேசவிருத்தி ௨ பட்சசபட்ச வேகதேசவிருத்
பட்சசபட்ச வ்யாபகவிபட்ச தி விபட்சவ்யாபகன ௬
ஏகதேசவிருத்தி ௩ பட்சவிபட்ச வேகதேச விரு
பட்சவிபட்ச வ்யாபகசபட்ச த்தி சபட்சவ்யாபகன ௭

ஆக அநைகாந்திகல - ௭.
ஆக ஏதுப்போலி - ௨௧

இவ்முறையானே யிதற்குதாரணம் —
அசித்தபேதம் பனவிரண்டும் வருமாறு —

சொரூபாசித்தனுவது-சத்தமநித்தியம காணப்படுகையா லே யநித்தியத்தைச சாத்தியமாயிருக்கிற சத்தத்திலே காணப்படுகையெனகிற வேதுசொரூபமாகவில்லை, சத்தஞ்சிரவணமாகையாலே, இதுமுதற்சொரூப சித்தனெனவறிக (௧)

வ்யாத்திகரணசித்தனுவது - அநித்தியம் சத்தம் படம் பண்ணுகையாலே; இந்தவேது சத்தமெனகிறபட்சத்துக்குப் பின்னமாயிருக்கிற வாதாரத்தையுடைய படத்திலே யிருக்கை யினுலெனவறிக. (௨)

விசேஷியாசித்தனுவது - சத்தமநித்தியம் சாமாந்யத்தை யுமுடைத்தாய்க் காணப்படுகையினாலே; இந்தவேதுவிலே விசேஷியங்காணப்படுகை யசித்தமாகையினு லெனவறிக (௫)

விசேஷணு சித்தனுவது - சத்தம அநித்தியம் காணப்பட்டுச் சாமாநயத்தை யுடைத்தாகையினுலே, இந்தவேதுவிலே விசேஷணங் காணப்படுகை யசித்தமாகையினு லெனவறிக (௬)

பாகாசித்தனுவது - சத்தம் அநித்தியம் ப்ரயத்னத்துக்குப் பின்புண்டாகையினுலே; இந்தவேதுவிலே யரலவாதிசத்தங்களுக்கு ஈஸ்வரப்பிரயத்னம பூர்வத்துவமுண்டாயிருக்கையினு மமானுடப் பிரயத்னத்தாலே யுண்டாயிருக்கிற தீவிரத்துவ மந்தரத்துவ முதலாயிருக்கிற சுந்தாலோட்டங்களின வயாபாரத்தினுலே ஐகயத்துவ மில்லாதபடியா லெனவறிக (௭)

ஆச்ரயா சித்தனுவது - தனக்குமாமுய்நின்ற வாதிகருத்தறிப வேதுவுக்குப் பொருந்திய தனமமில்லைபாகிய வேதுவைக்காட்டல் அஃதாவது, சாங்கியன - பரகிருதியுண்டு, விசுவபரிணுமிபாகையினுலே ; இந்தவேதுவிலே ஆச்ரயமாயிருக்கிற ப்ரதானந்தானக்கினுக் கில்லாதபடியினுலெனவறிக. (௮)

ஆச்ரய வேகதேசாசித்தனுவது - ப்ரதானமு மானமாவுமீசுரனுநித்தியம, ஒருவராற் பண்ணப்படாதிருக்கைகயினுலே ; இந்தவேதுவிலே பட்சமாயிருக்கிற ப்ரதானம் ஜீவனீஸ்வரனிவாகளுக்குளளே ப்ரதான மசித்தமாகையினு லெனவறிக (௭)

வயாத்தசித்த விசேஷியாசித்தனுவது - சத்தம் அநித்தியம் பண்ணப்பட்டுச் சாமாந்யவத்தாகையினுலே ; இந்தவே

துவிலே சாமாந்யவத்தெனகிற விசேஷியம் வ்யர்த்தமாகையி ஞலெனவறிக. (அ)

வயாததவிசேஷண சித்தஞவது - இந்தப்பட்சததிலே யிந்தவேதுவை முனபினஞகச் சொல்லுகை இநதவிரண்ட சிதகனு மீமாஞ்சகனமதத்திற் சொல்லுகிற தெனவறிக. (கு)

சநதேகாசித்தஞவது - தானகூறுகிறவேது ஐயமாய்நிறக வுமப்பொருளைச் சாதிததல் அஃதாவது-அவியோ பனியோ தோனறுகினறதென ஐயமுறுகினறவிடத்து, அதுபுகையென றுதியிட்டு அவவிடத்து நெருப்புண்டென்று கூறுதலெனவ றிக. (௧௦)

சந்தித்தவிசேஷியா சித்தஞவது - கபிலரிப்பொழுது ரா கத்வேஷாதியுடனே கூடினவர், புருடததவதநோடு கூடி னததவஞான மில்லாத புருடஞகையாலே எனவறிக. (௧௧)

சநதித்த விசேஷணசித்தஞவது - கபிலரிப்பொழுதிசா தியுடனே கூடினவர், ததவஞானமில்லாத புருடஞகையி ஞலே, இநதவேதுவிலு மிதற்குமுன்சொனன வேதுவிலும புரு டததவததிற்கு விசேஷியமாயும் விசேஷணமாயு மிருககிற த தவஞானமில்லாமையெனகிற வேது. இப்பொழு தும்—ரகா தேயிருககிற ததவஞானததை யுடையவனெனகிறதும, எபபொ ழுதும ததவஞான மில்லாதவனெனகிறதுஞ சநதேகமாயிருக் கையிஞலே; இரண்டிஞலும் பெறற பெயரெனவறிக. (௧உ)

ஏதுப்போலியில் அசித்தபேதம்—௧உ, ம் முற்றிற்று.

இனிவிருத்தபேதம இரண்டுவருமாறு:—

பட்ச விபட்ச வ்யாபக விருத்தஞவது? சத்தம் நிததி யம் காரியமாகையிஞலே; இந்தகாரியத்துவ மெனகிறவேது நித்யமெனகிற சாததிபத்துககு விபரீதமாயிருககிற அநித்யத்

தோடு வியாப்தமாகையாலும், பக்ஷவிபக்ஷ வியாபகனாகையாலு மெனவறிக. (௧)

பக்ஷவிபக்ஷ ஏகதேசவிருத்தியெனகிற விருத்தனாவது? நித்தியனு சத்தம ப்ரயத்தனாநந்தர மாகையினாலே; இதுவே வாயு முதலான சத்தமாயிருக்கிற பக்ஷ ஏகதேசத்திலும், த்ரணமாதியாயிருக்கிற விபக்ஷ ஏகதேசத்திலும், இல்லாதபடியினாலெனவறிக (உ)

ஏதுப்போலியில் விருத்தபேதம் உ-ம் முற்றிற்று.

அநைகாந்திகனேழும் வருமாறு —

அநைகாந்திகன - ஒன்று பலவாதல். எனவே அவ்விரண்டிற்கு நிற்றலின் அநைகாந்திகமாயிற்று.

பக்ஷத்திரயவியாபக அநைகாந்திகனாவது? சத்தம் அநித்தியம் அறியப்படுகையினாலெனகிற வேது, பக்ஷமாயிருக்கிற சத்தத்திலும், சபக்ஷமாயிருக்கிற கடத்திலும், விபக்ஷமாயிருக்கிற ஆகாசத்திலும், இருக்கையினா லெனவறிக. (௧)

பக்ஷவியாபக சபக்ஷவிபக்ஷ ஏகதேச விருத்தியெனகிற அநைகாந்திகனாவது? சத்தம் அநித்தியம், ப்ரத்யக்ஷமாகையினாலே யெனகிறவேது; ப்ரத்யக்ஷத்துவம் பக்ஷமாயிருக்கிற சத்தமெல்லாத்திலு மிருக்கையினாலும், சபக்ஷவிபக்ஷங்களிலேகதேசமிருக்கையினாலு மெனவறிக. (உ)

பக்ஷசபக்ஷவ்யாபக விபக்ஷ ஏகவிருத்தியென்கிற அநைகாந்திகனாவது? இஃது பசு, கொம்பை யுடைத்தாகையினாலெனகிற விருத்தவேது, பக்ஷமாயிருக்கிற விருத்தப்பசுவினிடத்தும், சபக்ஷமாயிருக்கிற பசுக்களெல்லாத்திலும், வியாபித்திருக்கையினாலும்; விபக்ஷ ஏகதேசமாயிருக்கிற கோஜாதியி லிருக்கையினாலு மெனவறிக. (௩)

பட்சவிபட்சவ்யாபக சபட்ச ஏகதேச விருத்தியென்கிற அனைகாந்திகமாவது? இது கோவல்ல கொம்புடைத்தாகையினாலே என்கிறவித்தவேது, பக்ஷமாயிருக்கிற வித்தியபசுவினிடத்திலும் பசுவாகாமலாகையினாலே, விபட்சமாயிருக்கிற வெல்லாப் பசுவினிடத்திலும் வ்யாபிக்கையினாலும். சபட்ச ஏகதேசமாயிருக்கிற யானைமுதலானவைகளிடத்திலு மிருக்கையினாலெனவறிக. (௪)

பட்சத்திரய ஏகதேசவிருத்தியென்கிற அனைகாந்திகமாவது? பூமிநித்தியம், நாசம ப்ரத்யட்சமாகக் காணுகையினாலே என்கிறவேது, பட்சமாயிருக்கிற பூமியி னேகதேசத்தினிடத்திலும், சபட்ச ஏகதேசமாயிருக்கிற விரணடணுவாதியினிடத்திலும், விபட்ச ஏகதேசமாயிருக்கிற வானமாவினிடத்திலும்; இருக்கையினாலெனவறிக. (௫)

பட்சசபட்ச ஏகதேசவிருத்தி விபட்ச வ்யாபகமாவது? திக்கு காலமானது, இவைதிரவியம், அமூர்த்தமாகையினாலெனகிறவேது. பட்ச ஏகதேசமாயிருக்கிற மனதினிடத்திலும், சபட்ச வேகதேசமாயிருக்கிற பூமியாதியிடத்திலு மிராமலிருக்கையினாலும், விபட்சமாயிருக்கிற வானமா வாகாசத்திலே வ்யாபித்திருக்கையினாலு மெனவறிக. (௬)

பட்சவிபட்ச வேகதேசவிருத்தி சபட்சவ்யாபகமாகிய அனைகாந்திகமாவது? திக்குக காலமானது திரவியமல்ல; மூர்த்தமாயிருக்கையினால். என்னவே, பட்ச வேகதேசமாயிருக்கிற மனதிலும் விபட்சவேகதேசமாயிருக்கிற வான்மாவினிடத்திலு மிருக்கையாலும், சபட்சமாயிருக்கிற குணாதிகளையெல்லாம் வ்யாபித்திருக்கையினாலும், சபட்சமுதலிய விருத்தியுமிவைக

ளிரல்வந்த வ்யாபிக்குமாகையினாலே அனைகாந்திகமென்ப் பெற்றது (எ)

ஏதுப்போலியில் அனைகாந்திகன்—எ-ம், முற்றிற்று.

பௌடகரததிலே ததுடணமஞசெனரேறுதியிருககவிவவாசிரியர்மூனறுசக்கூறியதெனனெனில்?விருத்தமபபிரகரணம் சாதய சமமதீதகாலா யெத்துவாபாசாதிகள்-கரு-ம, சூதரவிரோததநதினாலும் எத்துவாபாச மூனறுதானே. அஃதெப்படியெனில ? சமானுதிதுல்லிய பல விகற்பததினாலே சற்பிரதிபட்சமெதநுவாபாச மாகாதபடியினாலும, பாதிதவிஷயங விருததிரனிலேஅநதர்ப்பவிககையாலும,இவையிவவாசிரியர்சொலலியதெனவறிக.

ஆகவேதுப்போலி - உக - முற்றிற்று.

மேல்திருட்டாந் தாபாசமாவது.—

திருட்டாந்தம் - ஏதுவுக்குஞ்சாத்தியத்துக்கும்வ்யாப்தியைக்ரகிககுநதலம்.

வயாததிசமவேத நஸகுய்ய நதிருஷ்டாந்த மிதிரீயதே எனறார். வாதராச்யக்காரனா. இவவிலககண மினறியிலேதிருட்டாநதம் போலதநோனறுமவைகளெல்லாநதிருட்டாந்தாபாசமெனபபெறும்; அவைபதினெட்டாம. அவையாவன ?

சாததியவிகலன	க	சாத்தியா வ்யாவிருத்தன்	எ		
சாதகவிகலன	உ	சாதனவ்யாவிருத்தன	அ		
உபயவிகலன	௩	உபயவியாவிருததன	௯		
ஆசரியவீனன	ச	ஆசிரயவிஹீனன	௧௦		
அவவியாததியபிதானன்	ரு	வயாவிருததியபிதானன்	கக		
விபரீதவயாததியபிதானன	சு	விபரீதவயாத்தியபிதானன்	கஉ		

சந்தித்த சாத்தியன்	கரு	சந்தித்த சாத்தியா வ்யாவி
சந்தித்தசாதனன்	கசு	ருத்தன் கஎ
சந்தித்தவுபயன	கடு	சந்தித்தசாதனு வ்யாவிருத்த
சந்தித்தவாச்ரயன	கசு	ன கஅ

ஆடு சாதடவிகலாதி - கஅ-ம், உத்தேசமெனவறிக.

மேலிலக்கணம் வருமாறு

சாதத்தியவிகலனென்னுந் திருட்டாந் தாபாசமாவது? மனது அநித்தியம் மூர்த்தமாகையினாலென்கிற வேதுவிலே, பரமாணுவைப்போலென்கிற திருட்டாந்தம், அநித்தியத்துவமென்கிற சாத்தியமில்லாதபடியினா லெனவறிக. (க)

சாதகவிகலனாவது? மனது அநித்தியமூர்த்தமாகையினாலே யென்கிறவேதுவுக்குக் கனமம்போலவெனகிற திருட்டாந்தம், மூர்த்தத்துவமெனகிற சாதநமில்லையா மெனவறிக (உ)

உபயவிகலனாவது? இந்தச்சாத்தியத் துக்கு மிந்தவேதுவுக்கு மாகாசம்போலெனகிற திருட்டாந்தத்தினாலே, சாத்தியமாயிருக்கிற அநித்தியமும், சாதநமாயிருக்கிற மூர்த்தத்துவமும் ஆக விரண்டுமில்லாமையா லெனவறிக. (ங)

ஆச்ரயனீனனாவது? இந்தவேதுவுக்குத்தானே ஆகாசத்திற் பூப்போலவெனகிற திருட்டாந்தமாயிருக்கிற வாகாசபுட்பமில்லாதபடியினா லெனவறிக. (ச)

அவ்யாதித் யபிதானனாவது? இந்தவேதுவுக்குத்தானே கடம்போலென்கிற திருட்டாந்தத்தினாலே யாதொன்றுமூர்த்தம் அதுநித்தியம், கடம்போலெனகிற தலத்திலேயொழியப் புறத்தில் வ்யாத்திதோன்றாதபடியினா லெனவறிக. (ரு)

விபரீதவ்யாத்தி யபிதானனாவது - இந்தவேது சாத்தியங்களுக்கே யாதொன்றுமூர்த்தம் அது அநித்தியமென்று வயா

ததிசொல்லாமல்,இதற்கு விபரீதம் யாதொன்று அநித்தியம் அதுமூர்த்தம என்று வ்யாததிசொல்லுகையினு லெனவறிக (சு)

சாதனவ்யாவிருத்தனாவது - இந்த வேதுசாததியங்களு கருததானே யாதொன்று அநிததியமல்ல அதுமூர்த்தமுமல்ல, பரமாணுவைப்போலவெனகிற திருஷ்டாநததினுலே சாதநமாயிருக்கிற மூர்த்தத்வம வயாவிருததமாகாமல் அதிலேயிருககையினு லெனவறிக. (எ)

சாத்யா வயாவிருத்தனாவது - இநதவேதுசாத்தியங்களுககே கனமவதெனகிற திருஷ்டாந்தததிலே இப்படிககொதத வெதிரேகவ்யாததியினுலே சாததியமாயிருக்கிற அநித்யத்வ வயாவிருததமாகாம லிருக்கையினு லெனவறிக (அ)

உபய வ்யாவிருத்தனாவது - இந்தவேது சாத்தியங்களுககு கடாதியைப்போலவெனகிற திருஷ்டாநதம் பொருநதுகையா லெனவறி (கூ)

ஆச்ரயவிஹீனமாவது-இந்தவேது சாத்தியங்களுககு ஆகாசததிற் பூபோலவெனகிற திருஷ்டாநதம் பொருந்துகையா லெனவறிக. (கo)

வயாவிருததி யபிதானனாவது - ஆச்ரயம்போலவெனகிற வயாததியுண்டாகையா லெனவறிக. (கக)

விபரீத வ்யாததி யபிதாநனாவது - இந்தவேது சாத்தியங்களுககே விபரீதவ்யாத்தியிலே ஆகாசவதெதெனகிற திருஷ்டாநதம் பொருநதுதலா லெனவறிக. (கஉ)

சந்தித்த சாததியமாவது - இவன் மகாவிராஜாவாகப் போகிறுன,சோம வமசோற்பநனுகையினுலே யிராஜ்யபாரத்துக்குக் கர்த்தனுன விராஜபுதத்ரனைப்போல. இந்தவேது இவனிராஜ்யபாரத்துக்குக் கர்த்தனுகப் போகிறுனென்கிறசா

த்தியத்தோடேகூட வ்யாதிக்குந் திருட்டாந்த நிச்சயித்து இராஜ்யபாரத்தை யுடையவனுகையா லெனவறிக (சங)

சந்திக்தசாதநமாவது-இவன அசர்வஞ்ஞன அசேகதகா ரணத்தா லெனிப், இராகத வேஷாதிகளுடன கூடினவனு கையாற் றெருவிற்போகிற புருடனைப்போல. இந்தவேதுவுசகு த் திருட்டாந்தமாயிருக்கிற தெருவிற் புருட னிசசிந்தசாதனனு கையாலு ம,சாதநியமாயிருக்கிற விநதப்புருடனிடத்திலே யசர் வஞ்ஞ லடசணமுண்டோ வில்லையோவென்று சயகிக்க மு றுதலா லிது திருட்டாந்தாபாச மெனவறிக. (கஎ)

சந்திகதோபயனுவது - இவன் சுவர்க்கத்தை யடையப் போகிறான, முற்ஜநநத்திற் றேடப்பட்டிருக்கிற சற்கன்மபல ததை யுடையவனுகையினுலே, தேவதத்தனைப்போல இந்த திருட டாந்தத்திலே யேதுவாயிருக்கிற முனபார்ஜித்த சுகத கன மத்வமுநு சாத்தியமாயிருக்கிற சுவர்க்காதித்வமும் சந்தி த்தமாகையினு லெனவறிக. (கரு)

சந்தித்தவாச்ரயமெனனுந் திருட்டாந் தாபாசமாவது-இ வன் சர்வஞ்ஞனல்ல,அசேதக காரணத்தாலெனில்,வெகுவசுத் தாவா யிருக்கையினுலே ஜநிக்கப்போகிற தேவதத்தனைப்போ லவென்கிற திருட்டாந்தமாயிருக்கிற தேவதத்தன ஜநிக்கிறதி லே ப்ரமாணமில்லாதபடியா லெனவறிக. (கசு)

சந்தித்த சாத்தியா வ்யாவிருத்கனுவது - யாதொருவன மகத்சாயிருக்கிற விராஜ்யம் பணணவில்லையவன் சோமவம் சோற்புதனுமல்ல, வேறேயொரு ராஜபுருடனைப்போலவென்கி ற திருட்டாந்தத்திலே திருட்டாந்தமான விராஜபுத்திரனிடத் திலே சாத்யா வ்யாவிருத்தியமுண்டாய் சந்தேகமுண்டா கையினு லெனவறிக. (கஎ)

சந்தித்தசாதஞ வ்யாவிருத்தஞவது - யாதொருவன் சுராவகக்கியன அவனே ராகததுவேஷமில்லாதவன, சகலசாத்திரக்கியனைப்போலவென்கிற திருட்டாந்தத்திலே யிருக்கிற சமஸ்த சாத்ரக்கியனுக்கு இராகாதியில்லாததிலே ப்ரமாணமில்லாதபடியா லெனவறிக (கஅ)

இப்படித திருட்டாந்தாபாசம் பதினெட்டும் வநதவாறுகாணக.

மேற் றெகையானே நிக்கிரகத்தானம
அப்பிரதிபத்தியெனவும
விப்பிரதிபததியெனவும்
இரண்டாம்

அப்பிரதிபத்தியாவது - வாதியானவன் முன்சொன்னதும், ப்ரதிவாதியானவன சொன்னது மறியாதிருததல்

விப்பிரதிபததியாவது - வாதியானவன முனசொன்னவசநத்தையும், ப்ரதிவாதியானவன சொனனவசநதததையும், உள்ளபடி யதனையறியாமல் விபரீதமாக வறிகை

இந்தவிரண்டும் வகையானே யறியுமிடத்து, அப்பிரதிபத்தி-ப்ரதிஞஞஹானிமுதலான பதின்மூனறும், விபபிரதிபததி-அந்நு பாடனமுதலான வொன்பதும், ஆகநிக்கிரகத்தான மிருபததிரண்டாம்

நிக்கிரகத்தானமென்பது ஒருவராலுங் கண்டிக்கப்படேனென்று மவன்மதத்தைப் பிறருற் கண்டிக்கப்படுகை நிக்கிரகத்தானம். அவையாவன?

ப்ரதிஞ்ஞஹானி	க ப்ரதிக்கியாவிரோதம்	ந
பரதிக்கியாநதம்	உ ப்ரதிக்கியாசந்யாசம்	ச

எத்துவாந்தரம்	ரு	அஞ்ஞாதம்	கரு
அர்த்தாந்தரம்	சு	அப்பிரதிபை	கசு
நிரர்த்தகம்	எ	விக்ஷேபம்	கஎ
அவிக்கியாதார்த்தம்	அ	மதாநுக்கியை	கஅ
அபார்த்தகம்	கூ	பரியநுயோச்சியாபேக்ஷ	
அப்ராத்தகாலம்	க0	ணம்	ககூ
நூனம்	கக	நிரநுயோச்சியானுபேக்ஷ	
அதிகம்	கஉ	ணம்	உ0
புனருத்தம்	கங	அபசித்தாந்தம்	உக
அநநுபாடன	கச	எத்துவாபாசன	உஉ

இவையிற்றுக் கிலக்கணம். வருமாறு —

பரதிஞாஹானியாவது - வாதிகதையிலே வாதியானவன் சபக்கமுதலியவற்றைச் சொல்லி, யதனை முட்டச் சாதிக்கமாட்டாமலுடனே யதனைவிடுகை யெனவறிக. (க)

ப்ரதிக்கியாந்தரமாவது - வாதியானவன் விசேஷியாமல் சொன்ன ப்ரதிக்கியாதிகளைப் ப்ரதிவாதியானவன் அதனைத்தூஷித்தளவில் அந்தப்பிரதிக்கியாதிகளைப் பின்பு விசேஷணத்துடனே கூட்டிச்சொல்லுகை யெனவறிக (உ)

ப்ரதிக்கியா விரோதமாவது - யாதொருவன் பதவாக்கியங்களினாலே ஜகத்கர்த்தாவை யங்கீகரித்துப் பினபந்த வீஸ்வரனைக கர்த்தாவல்லவெனகை யெனவறிக. (ங)

ப்ரதிக்கியா சந்யாசமாவது - தான்சொன்ன ப்ரதிக்கியாதிகளை ப்ரதிவாதியானவனிந்தித்துள்ள வினுவதனைச் சொல்லவில்லையென்கை யெனவறிக. (ச)

எத்துவாந்தரமாவது - வாதிசொன்ன சாத்தியாம்சமாயிருக்கிற வேதுமுதலியவற்றைப் பிரதிவாதியானவன் தூஷிக்கையிலவன் பின்னையுமொரு விசேஷணத்தோடே கூடத் தா

ன முன்சொன்ன வேதுவை திடப்படுத்திச் சொல்லுகை யென வறிக. (௬)

அர்த்தாந்தரமாவது- ப்ரதிவாதி சொன்ன தூடணத்துக் குத் தானதற்கேற்ற வசனஞ் சொல்லாமலதற் குபயோகமில் லாத வார்த்தையை யவ்விடத்திற் சொல்லுகை யெனவறிக. ()

நிரர்த்தகமாவது-ப்ரதிவாதியானவன ஒன்றுஞ் சொல்லா திருக்கையிற முன் வீண்வார்த்தையைச சொல்லுகை யெனவ றிக. (எ)

அவிக்ஞாதார்த்தமாவது-ப்ரதிவாதியானவன் ஒரு ஏது வை மூன்றுதரஞ் சொல்லுகையிலுஞ் சபையிலே யிருக்கிற பரீ க்ஷித்துக்க ளறுவாதிக்கையிலும், ப்ரதிவாதியானவன எனக்கிந்த வேது தெரியாதெனகை யெனவறிக. (அ)

அபார்த்தகமாவது - அந்வயத்தில் அர்த்தமாகாதிருக்கிற பதவாக்கியங்களைச் சொல்லுகை. அதாகு - உ - ம் குண்ட மாதத்திமதே சடாடிமானிவிட பூபாம எனகை யெனவறிக.(கூ)

அப்ராப்த காலமாவது - வாதம்பண்ணுமிடத்து வாதி யானவன் பஞ்சாவயவங்களை யடைவில் மாறிப் பிரயோகித்த லெனவறிக. (க0)

நூனமாவது-ஸ்வசித்தாந்தத்திற் கூறிய அவையவங்களை யறிந்து ப்ரயோகியாமல் மாறிக் குறைத்துப் பிரயோகித்த லெ னவறிக. (கக)

அதிகமாவது - ஏது முதலியவற்றுடனே கூட வுதாரண தூடணுவாதங்களுக்கதிகத்தைப் பிரயோகிக்கை யெனவறிக.

புனருத்தமாவது- சத்தத்திலேதான் அத்தியாகாரத்தி லேலே தானசொன்ன வசநங்களைப் பிரயோசநமின்றியில் மீள வு மதனையே சொல்லுகை யெனவறிக. (கரு)

அநுபாடணுவது - வாதியானவன் சொன்னபொருளக ளைச் சபையிலிருக்கிறவர்களுக்கு அநுவதித்த சதத்ததை நானறியேனென்றாமல் சொல்லாதிருக்கை யெனவறிக. (கச)

அஞ்ஞானமாவது - வாதியும் சபையிலுள்ளவர்களும் வாக்கியார்த்தத்தை யறியாதிருத்த லெனவறிக. (கரு)

அப்பிரதிபையாவது - வாதிசொன்னதற்குத் தானுமங்கீகரித் திருக்கையின்றி யுமதற் குத்தரஞ் சொல்லாதிருக்கை யெனவறிக. (கசா)

விக்ஷேபமாவது - வாதியானவ னொன்றைச் சொல்லத்தொடங்கி, யதனைமறந்து, வேறொரு வயாசசியத்தையிட்டு அதைச்சொல்லாதிருக்கை யெனவறிக. (கஎ)

மதாநுக்ஞையாவது - வாதியானவன் தன்னுடையமதத்துக்கு வருந் தூடணம் பரிகரியாமல், பிரமதத்துக்கு இட்டதைத் தூடணமாகச் சொல்லுகை யெனவறிக. (கஅ)

பரிபநுயோச்சியா பேக்ஷணமாவது - வாதம்பண்ணவந்தவிடத்து அந்தவாதம் பிறனாலே நிக்கிரகிக்கப்படுகையி னானும் நிக்கிரகிக்கப்பட்டோமென்று பரிபவமின்றியிருக்கை தானெனவறிக. (ஙக)

நிரநுயோச்சியாநுபோகமாவது - நிக்கிரகத்தாற் ப்ராப்தனாகாதவனை நிக்கிரகஞ் செய்யவேணுமென்று நிக்கிரகிக்கிறது. ஏவப்படாதவனை யேவுதலெனவறிக. (உ0)

அபசித்தாந்தமாவது - ஒருசித்தாந்தஞ் சொல்லத்தொடங்கி யதற்கு விருத்தமாயிருக்கிற சித்தாந்தவசநஞ் சொல்லுகை யெனவறிக. (உக)

எத்துவாபாசனாவது - அவாந்தர பேதங்களுடனேகூட அசித்தாதிகளான பஞ்சரூபப் பிரகாரமான யாதொருரூபங்க

ளாலே காணப்பட்டிருக்கிறதோ அவைகளந்தந்த ரூபங்களினு லேதானே யெனவறிக. (உஉ)

இப்படி நிக்கிரகத்தான மிருபத்திரண்டையு மறிக.

அளவைகாண்டலெனறது முதல் ஈண்டுப் பக்கப்போலியீறாக வளவை பதினொலுக்குப் பிரமாணஞ் சித்ததந்திர மெனவறிக

அளவைப்பிரமாண முடிந்தது

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலநுமானப்ரமாணங்கள வயாத்திலை நன்றாகவறிந்து நிர்தோஷமாக ப்ரயோகிக்குஞ் சாதநமானது சாத்திய சமாதானத்திற் பரியாபதமாம். யாதொருமார்க்கமேனும் வ்யாத்தியங்கம்வரு மநுமானத்தைக்கூறி லஃதேதுவாபாசனும். இஃதநுமானத்திற்கு முதற்றூஷணமாகலின பக்ஷஹேது திருஷ்டாந்தங்களை யவிரோதமாக ப்ரயோகித்து வாதகதையிலும பஞ்சாவயவ பௌர்வாபரிய விபர்யயவாதியான நிக்கிரகஸ்தானங்கள வாராமற் கூறவேண்டும். ஆகையாற் பக்ஷாபாசாதிகளுக்குத தொகையாகப் பௌஷகராநுசாரமாகத் தோஷங்களினது ஸ்வரூபங்கூறுகின்றது.

* தர்க்கம் பக்ஷாதி — வ்யாப்த்யாத்யநுமாவபி
ஜ்ஞாந ஹாயநம் ஸாத்யவிதயே | பக்ஷாப்ரம் தத்வ
தோஹதோ யேநகேநாபி வத்ஸ்நா || வ்யாப்தி
ஹாநமாநநிராஸஸ்ய தூஷணம் ப்ரயுஜ்ஜதி.

ஈண்டு பக்கப்போலிதானகு - [ஈண்டு-இவ்வடத்து] இவ்வநுமானத்திற் பக்ஷலக்ஷணம் சேஷமாக வில்லாமையிருந்து

மேகதேசத்திலுற் பக்ஷம்போற்காண்பித்துப் பரீக்ஷித்தளவிற் பக்ஷமல்லாமற்போம் பக்ஷாபாசநானகு. [ஆபாசம் போல எனபது பரியாயநாமம்]

அவையாவன:—

ஓரிடத்திற் பக்ஷமில்லாமையினுலே
ஓரிடததிற் பக்ஷததன்மையில்லாமையினுலே [லே
ஓரிடததிற் பக்ஷம் பக்ஷததனமை யிரண்டுமில்லாமையினு
ஓரிடத்தி லிரண்டுமிருநதும் வயாத்தியில்லாமையினுலே

இவற்றுள பக்ஷமில்லாமைக் குதாரணம்.—ஆகாயததாம ரை வாசனையுளளது; தாமரைத்தனமையால் குளத்திலுண்டா ன தாமரைபபோல வெனபது. (க)

பக்ஷததனமை யில்லாமைக்கு - உ-ம். ஆன்மாநிததியன அனுருபமாகலினெனபது. (உ)

பக்ஷம் பக்ஷத்தன்மை யிரண்டுமில்லாமைக்கு-உ - ம். முயற்கோடு காதமுள்ளது, ப்ருதிவி விகாரமாகலினெனபது (ங)

பக்ஷம் பக்ஷததன்மை யிரண்டுமிருந்தும் வயாத்தியில்லாமைக்கு - உ-ம். ப்ருதிவிநித்யம், கண்ணிற்கு விஷயமாகலினெனபது. (ச)

இநநான்கு முபலக்ஷணம்.

'இவ்வாறுவந் தழி வந்தழி யுய்த்துணர்க,—

ஏதுப்போலியொருமூன் ருய்வேண்டுமெமூமூன் ருகும்-எ-து. ஏதுலக்ஷணமில்லாதிருநது மேதுப்போற்ருேனறி பேதுவல்லா மற்போ மேதுவாபாசனுவது, முன்னே அசித்தன விருத்தன் அநைகாதிநகனென் று மூன்றுவிதமாய் மேலுமிவற்றிற் சிறிது பேதமாய்க் காலாத்தியாபதிஷடன், ப்ரகரணசமனென் றிர ண்டுங்கூடி யைந்துவிதமா யிவைக ளவாந்தரபேதங்களினு லிருபத்தொன ருகும்.

அவைவருமாறு:—

ஆகாசத்தாமரை வாசனையுள்ளது, தாமரைத்தன்மையால், தடாகத்தாமரைபோல, இதற்குப் பக்ஷமாகிற வாகாயத்தாமரையில்லையாகலின் ப்ரதமமான வாசரயாசித்தன். (க)

கடமுதலானவை பரமாணுரூபங்களாகக் கூடும், அநித்தியத்தன்மையால். பாஞ்சராத்திரிமதத்தி லானமாவைப்போல என்றால் சாவசம்மதமா யநித்தமாயிருக்கிற கடத்தினித்தியத்தன்மை யேதுஸ்வரூபத்தினால் சித்தமாகலின ஸ்வரூபாசித்தன. (உ)

சத்த மநித்தியம், கண்ணிற்குத்தெரியுங் குணமாகலின; ரூபம்போல இந்த கண்ணிற்குத் தெரியுமெனகிற விசேஷண மேதுவி லசித்தமாகலின விசேஷணாசித்தன. (௩)

சத்தம் அநித்தியம, அறிவிற்கு விஷயமான திரவியமாகலின; கடம்போல இந்த விசேஷியமாயிருக்கிற திரவியத்தன்மை யசித்தமாகலின விசேஷயாசித்தன் (௪)

மேலும் விசேஷண விசேஷ்யாதி யென்கிற வாதிபக்ஷத்தினாலும், அவயவரூபமென்கிற பக்ஸ்வாரஸ்பதினாலும், இவவிருத்தத்தி னிருபத்தோனறெனறு கணக்காயிருக்கையினாலும், விருத்தன அநைகாந்திக ஹேத்துக்களையசித்தனபதினாறுக்கு முதற்சொன்ன நான்குநீங்கலாக நின்றபனிரண்டும வருமாறு கூறுவார்.—

கட மநித்தியம் குணமாயு மிந்திரியங்களுக்கு விஷயமாகாமலு மிருத்தலின, விசேஷணமாயிருக்கிற குணத்தன்மையும் விசேஷ்யமாயிருக்கிற விந்திரியவிஷயமாகாமையு மசித்தமாகலி னிந்த வயாசித்தன. (க)

சிவனுடைதேகமு மநித்தியம், காரியமாகலின், கடம்போல, இது பக்ஷமாகச்செய்யப்பட்டிருக்கிற ஜீவதேகங்களுள் ஜீ

வனிடத்திற் காரியத்தன்மையேது அசித்தமாகலிற் பாகாசித்தன. (௨)

தேவதத்தன் பகுதனமுள்ளவன், அதற்கேதுவாகிய வதிருஷ்டனுளனாகலின யஞ்ஞதத்தன்போல, அதிருஷ்டமுளனெனகிற ஹேது நம்மா லறியொணாதாகலி னிஃ தேதுவஞ்ஞானாசித்தன (௩)

இப்போ திவ்வாகாயத்திற் பரமாணுவொருக்காற் றிரவியத்தையுண்டாக்கும் பரமாணுவாகலின, கடத்தை யுண்டாககுகிறபரமாணுப்போல ஆகாயமிடமாயிருக்கிற வேதுவுக காச்ரயமாயிருக்கிற பரமாணுவிஷயமான ஞானமின்மையி னிஃ ததிகரணஞ்ஞானாசித்தன. (௪)

எல்லாம்க்ஷணிக மசத்தாகலின், நீர்க்குமிழிபோல; அசத்துக்கும் க்ஷணிகத்திற்கும் வியாத்தியைப்புரிவிக்கிற பிரமாணமில்லாமையி னிஃதுவியாப்பியத்து வாசித்தான். (௫)

கருப்பத்திலிருக்கிறவன கறுத்தவன மயித்திரைபிள்ளையாகலின முனபிறந்த மயித்திரை பிள்ளைபோல கறுப்பைச்சாதிக்குங்காற் சாகாதியாகார பரிணாமபேதமெனகிற வுபாதியுண்டாகலி னிஃ தௌபாதிக வியாபபியத்து வாசித்தான (௬)

யாகமுதலியவை சுவர்க்கசாதகங்களல்ல கிரியையாகலின்: ஹீன கிரியைபோல இதற்குச் சாத்திய மாகமத்தினாற பாதிதமாகலி னிஃ தாகம பாதித விஷயசாத்தியாசித்தன (௭)

கவயமெனபது பசுவுக்குச்சமானமல்ல வஸ்துவாகலின, இதற்குச் சாத்தியமுவமானததினாற் பாதிதமாகலி னிஃ துவமான பாதிதவிஷயசாத்தியாசித்தன். (௮)

நூறுவருடஞ் சீவித்திருக்கிற தேவதத்தன் வீட்டினுமில்லை வெளியினுமில்லை, பிரத்தியக்ஷமாகத் தோற்றுமையின இஃ தார்த்தாபத்தியினாற் சாத்தியம் பாதிதமாகலின் அர்த்தாபத்தியபாதித விஷய சாத்தியாசித்தன். (௯)

விஶ்வமானது சந்தானபரம்பரையாயிருக்கும், வஸ்துவா கலி னென்கிற ஹேது தன்சாத்தியசாதனத்தி லப்பிரயோசக மாகலினிஃது நித்திய வசிதனென்கிற பிரயோசகாசித்தனை(௧0)

சகதம் அநித்தியம், செய்யப்படுதலின, கடம்போல- எனபுழி யிஃது மீமாம்ச கர்மத்திற் செய்யப்படுகிற ஹேது அசித்தமாகலி னிஃது நந்நியகாசித்தன. (௧௧)

ஆகவசித்தபேதம் - ௧௫.

ஆத்மாவிபுவல்ல - சேதநத்தி லடங்காமையின் என்னுமே து பக்ஷமாயிருக்கிற வாத்மாவினிடத்தும் விபக்ஷமாயிருக்கிற வாகாயத்தினிடத்தும் வியாபயமாயிருக்கலினிதுவிருத்தன.

விருத்தன - ௧.

ஆதமாநித்தியன பிரமேயனாகலின, பிரமேயத்துவமென கிறவேது மூன்றுபக்ஷத்தினு மிருக்கலினிது சாதாரணநைகாந் திகன. (௧)

இதனு லசாதாரணநைகாந்திகனுஞ் சூசிக்கப்பட்டது. அஃதாவது? பூமி நித்தியம கந்தமுடைமையி னென்கிற வே து தார்க்கீகமதத்திற் சபக்ஷமாயிருக்கிற வாகசாதிகளினும் வி பக்ஷமாயிருக்கிற கடாதிகளினு மிராமற் பக்ஷமாயிருக்கிற ப்ரு திவிமாத்திரத்தி னிருப்பதாகலி னிஃ தசாதாரணநைகாந் திகன. (உ)

ஆக அநைகாந்திகன்-உ.

காரியமெல்லா முபாதானமில்லாத வாகந் துக்மாகலி னென்கிறவேது சர்வகாரியத்திற்கு முபாதானத்தை யறிவிக் கிற பிரமாணத்தினாற் பாதிதவிஷயமாகலி னிஃது காலாததிய யாபதிஷ்டன்.

அக்கினி சூடில்லாதது பதார்த்தமாகையால் ஜலத்தைப் போல எனபது சூட்டையறிவிக்கிற பிரத்தியக்ஷ பாதிதமாதலி னிஃதுங் காலாததியயாபதிஷ்டன.

கன்ம நித்திய மனுநியாதலி ஞாத்மாபோல வென்கிற வநுமானத்திற்கு, கனம மநித்திய மஞோவாககுகாய வியாபார ஜநயமாகையால் கடமபோலெனகிற வநுமானததாற் சாத யன வேறுசாதிககபபடுகிறவி னிதுபிரகரணசமன -

ஆ௸-அநைகாநதிகபேத காலாதயாபாதிஷடன

ப்ரகரணசமன - உ.

ஆ௸ ஏது வாபாசன - உக.

மேல் திட்டாநதாபாசஙகளை கூறுகினறது,—

விளங்குவமைப்போலியீரொனபானகாணபெம் எ-து. உவமைபோற் பரகாசித துவமாபாசமாகபபோவது, ¶சாததிய விகலன - ‡சாதநவிகலனென றிரணடுவகையாகப் பதினெனை பேதமாம.

அவை வருமாறு.—

¶ சாததியவிகலனுவது-தானுண்டெனறு சாதிககிற பொருளிலலாமை

‡ சாதநவிகலனுவது-தானசாதிககிற பொருளுககுச் சொல்லும் ஹேது இல்லாமை.

சாசருமிய திட்டாநததிற்குச, சாததியவைகல்லியம்-சாதநவைகல்லியம உபயவைகலலியம் - ஸ்வரூபவைகல்லியமெ ன நானகுவிதமாம்.

வைதருமிய திட்டாநதத்திற்குச, சாத்தியாபாவவைகல்லியம் - சாதநாபாவவைகலலியம - உபயாபாவவைகல்லியம்- ஆசரயாபாவவைகல்லியமெனறு நானகுவிதமாம்.

அவற்றுள், அநவயதிட்டாநதத்திற் சாதயவைகல்லியததிற்கு. உ - ம. ஆதமாநித்தியன விபுவாகைல் ஆகாயமபோல இதறகு வைதிகசைவாதிகளிலாகாயத்திற்கு நித்யதவமில்லாமை

இந்த திட்டாநவயசாததியவிகலனே, வெதிரேகதிட்டாநதத்திற் சாத்தியாபாவவிகலன.

அன்வயதிட்டாந்தத்திற் சாதநவைகல்லியத்திற்கு. உ - ம். விமதங்காரியம் பிரததியக்ஷமாகையால் திருஷடம்போல வி

வன் திட்டாந்தமானது சாதநமாயிருக்கிற பிரத்தியக்ஷமல்லாதது.

இதுவே வெதிரேகதிட்டாந்தத்திற் சாதனாபாவ வைகல்லியத்திற் குதாரணம்

உபயவைகல்லியத்திற்கு. உ-ம் விமதங்காரியம் பிரத்தியக்ஷமாகையான மாயைபோல இவண சாதபமாயிருக்கிற காரியத்துவமுஞ் சாதநமாயிருக்கிற பிரத்தியக்ஷத்வமுமில்லை.

இதுவே வைதருமியதிட்டாந்தத்திற்கு முதாரணம்.

ஸவரூபவைல்லியத்திற்கு. உ-ம் விமதஙகாரியம் பிரத்தியக்ஷமாகலி னாகாயபுஷ்பம்போல இவண் திட்டாந்தமாயிருக்கிற வாகாயபுஷ்பமே யில்லை

இந்த வெதிரேக திட்டாந்தத்திற்கு முதாரணம்

அனவயதிட்டாந்தத்திற்குவேறுய்ச்சொல்லுகையு மனனுவயவெதிரேகவியாத்திகளுக்குவேறுப்ச்சொல்லுகையு மவ்வியாத்திகளிற்றுனே சாத்தியசாதனங்களை வேறுய்ச்சொல்லுகையுஞ் சாத்தியத்தைச்சாதனமாகச்சொல்லுகையுஞ் சாதனத்தைச்சாத்தியமாகச்சொல்லுகையுமென றனவயானுமானத்திலுக்திதோஷமைந்துவிதம்.

இப்படியே வெதிரேகானுமானத்து மைந்துவிதம் ஆகப்பத்துவிதம்.

திட்டாந்த விபரிப யோகத்தியாவது? மலைநெருப்புள்ளது புகையிருலென்று மநுமானத்தி லனவயவியாத்தியைச் சொல்லி மடுவைப்போலவெனகை அவ்வநுமானத்தில் வெதிரேகவியாத்திசொன்னபினபு பாகசாலைபோலவெனகை. அவ்வனுமானத்திற்றுனே எங்கேஎங்கே அக்கினி, அங்கேஅங்கே புகையாகசாலைபோலவென்கை. அவ்வநுமானத்திற்றுனே மலை

புகையுள்ள தக்கினியினுலென்று சாதிய + விபர்யயத்திற்குஞ் சாதனவிபரியபததிறகுந திட்டாந்தம்.

+ விபர்யயம் திரிபுக்காட்சி

வெதிரேகததிறு மிப்படியே சத்நார்த்தநோஷ வசததி லுறு மனனுவயவெதிரேகத்திறுனுந திட்டாநதாபாசம் பதி னெண்விதம்.—

தோல்விததான மிரண்டிருபத்திரண்டாங் கருதில் எ-து. தோல்விததானமாவது விசாரிசருமிடதது † அப்பிரதிபததி - § விப்பிரதிபததியெனறு மிருவகைப்பேகத்திறு லிருபததிரண் டாம்; இதற்குத தத்துவாபபிரதிபததியெனறு சாமானியலட்ச ணம்.

† அப்பிரதிபத்தி - அர்த்தந்தெரியாதது, விப்ரதிபத்தியா வது-வேறொயொனருகச் சொல்லுகை.

சததமநித்தியம் இநதிரியககிராஹ்யமாகலின், கடம்போ ல; என்னுமனுமானத்திறகுப் பிரதிவாதி இந்திரியககிராஹியமா னது நித்தியமாயிருக்கிற சப்தததவஜாதிபோலே வியாததமா யிருக்கையினிவவேது விபிசாரிபெனறு தூஷித்தவுடனே யா கில் சததநதானு மநித்தியமாகிடுமெனபது பிரதிஞ்ஞாஹானி யெனனு நிககிரஹஸ்தாநம். (௧)

வர்ண மநிததியஞ் சுரோததிரேந்திரியக் கிராஹ்யமாகலி ன்சத்ததுவசாதியைபபோலவெனகிற வநுமானத்திற்கு? தவ னிகளுட † னவ்வியாத்தியாயிருதகலின் னவ்விபிசாரியெனறு தூஷித் தவளவில் ஆகில் த்வனிகளோடு வர்ணங்க ளநித்தியமெ னபது பிரதிஞ்ஞாநதரமெனனு நிககிரகஸ்தாநம். (உ)

† அவ்யாத்தி - பிரிக்கக்கூடாதது.

குணத்திற்குவேறுயது திரவிய மதற்குவேறுகாமையின் ரூபத்தைப்போலென்றது குணத்திற்குவேறெண்கிறபிரதிஞ்

ளைக் கதற்குவேறுகாமையி னென்பது விரோதமாகலி னிஃது பிரதிஞ்ஞாவிரோதமென்று நிக்கிரகஸ்தானம். (௩)

சததமான துநித்தியம் §வியாபாரஜந்யமாகலின ஆகாசம்போலெனபுழி யனித்தியததோடு ¶வியாத்தமாய் வியாபாரசனனியத துவமான து நித்தியத்வத்திற் கெங்ஙனமேதுவாமென றுதூஷித்தவிடத்து வியாபாரசனனியமென்று நாஞ்சொல்லவில்லையெனபது பிரதிஞ்ஞாசன்னியாசமென்று நிக்கிரகஸ்தானம். (௪)

§ வியாபாரஜந்யம்-தொழிலாற்பிறந்தது, ¶ வ்யாத்தம்-கூடினது

சத்தமநித்தியம் நாம்முதலானது பாக்யேந்திரிக் கிராகியமாகலி னிவ்வேதுநித்தியமாகிய சததத்வஜாதியோடு வ்யாத்தமாகலின விபசாரியென று தூஷித்தவிடத்து சாமாநயவஸ்துஜாதியுள்ளதாயுமெனகிற விசேஷணத்துட னவ்வேதுவைச் சொல்லுத லேதுவந்தரமென்னு நிக்கிரகஸ்தானம். (௫)

சத்தமநித்திய மிந்திரியக் கிராஹியமாகலின் கடத்தைப் போலவெனற விவவநுமானத்திற கேதுவான விந்திரியக கிராஹியத்துவமானது நித்தியமாயிருக்கிற கடத்துவ ஜாதியோடு விபசாரியென்று சொன்னவளவி லிச்சத்தமாகாசத்தின்குணமாகாசத்தினுற் க்ரஹிக்கப்படுஞ் சமவாயசம்பந்தத்தினு லச்சமவாய சம்பந்தமு மநித்தியமென்று ‡ ப்ரகிருதோபயோகியாகாதவாக்கியத்தைப் பிரயோகிப்ப தர்த்தாந்தரமென்று நிக்கிரகஸ்தானம். (௬)

‡ ப்ரகிருதோபயோகி-முன்சொன்னதை.

கட மநித்தியம் அகார ககார யகார ரேபாத்மகமா யிருக்கிற சததமான தகார்ய ரூபமாயிருக்குமென்னும் ப்ரகிருதார்த்தத்தைச் சொல்லமாட்டா தசத்தத்தைச்சொல்லுகை நிரர்த்தகமென்னு நிக்கிரகஸ்தானம். (எ)

வாதியானவன் மூன்றுப்ரகாரஞ் சொல்லியிருக்கையிலு மத்தியஸ்தருக்கும் ப்ரதிவாதிகளுக்கு மர்த்தந்தெரியாத சதரஞ் சொல்லுகை யவிஞ்ஞாதார்த்தமென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது- *ஸ்வேதோயாவதியென்கிற வாக்கியத்திற்கு வெள்ளை நாய் வழியேபோகிற தென்றும், வெள்ளையாயிருக்கிற குதிரைபோகிறதென்றும், ஸ்வேதனென்னு நாமமுடைய புருஷ னபோகிறானென்று நிச்சயிக்கப்போகா வாதத்தைப ப்ர யோகிக்கை (அ)

* ஸ்வேதேயாவதி-வெள்ளைபோகிறது.

விசேஷண விசேஷயபாவத்தினு லன்வயம்பண்ணுகைக் கு யோக்கியமாகாமலு மொன்றிற்கொன்ற †ஆகாமக்ஷா சந்நி தியோக்கியதை யில்லாதனவாகிருக்கும் வாக்கியத்தையும், அஸம்பந்தமாயிருக்கிற வாக்கியத்தையும் சொல்லுகை யபார்த் தகமென்னு நிக்கிரகஸ்தானம்.

† ஆகாம்க்ஷா சந்நிதியோக்யத்தை - பதசமூகம் வாக்யசமூகம்

அஃதாவது- பத்துமாதுளம்பழம், ஆறப்பம், ஒரு குதிடா டுத்தோல், மாமசபிண்டம், இந்த சல்லடம் குரியுடைய து, ஸைதரிபகருதனென்கிற புருடனுடைய பிதா பராதிசீகனென் றும், அசநமோடையிலுண்டு, குளித்துப்போகிறான், என் னும் வசனம்போ லொத்தவாக்கியம் ப்ரயோகிக்கை. (கூ)

ப்ரதிஞ்ஞையாதி யவயவங்களையு மவற்றி னம்சங்களையு ங் க்ரமந்தப்பி முன்பின்னாகச்சொல்வ தப்பிராப்தகாலமென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது? புகையினு லடுக்களைப்போல மலையினு நெருப்புண் டென்பதுபோலச் சொல்லும் வசனங்கள். (க0)

பாதிஞ்ஞைமுதலிய வவயவங்களுக்குட் சிறிதுசொல்லியும் மறாமையைசொல்லாமை * நயூநமெனனு நிக்கிரகஸ்தாநம்

மலைநெருபபுளளது புகையினல் அடுக்களைபோல வெனறு சொல்லி மற்றதுசொல்லாமை. (கக)

* நயூநம-குறைவு

உபயோகமாயுங கூட்டரவுடைததாயு மிருக்கிற சொற்களைப் புனருததமாகசசொல்லுத லதிகமெனகிற நிக்கிரகததானம

அதாவது பர்வதமானது வககிநியைபயுடையது, புகையும் வெளிசசததைய முடைததாகையால் எபபடியானல்? அடுதகளை - கொல்லனுலைமுதலியதுகளைபோல (கஉ)

வெளிபாயிருககிறவர்தததை ப்ரயோசநமில்லாமல் திருபபிபும வேறேயொரு சததங்கொண்டு இரண்டிததுச சொல்லுதல் புனருதத்மெனகிற நிக்கிரகததானம.

அந்நிரண்டு விதமாயிருககும சததததிலேயு மர்த்தத்திலேயு முநதின வநததிய ஞ் சததமனிததியம இரண்டாவதனிததியஞ் சததஙகாசமாயபபோம (கங)

வாதியிலுலே சொல்லப்பட்டு வறிவுடையவலுலே யறிய பபட்ட வாககததை யுடைய சததததைத மூடனுயிருககிறவன வனசொனனபடி திருமபசசொல்ல வறியாமலிருததல் கூடச சொலலாமையெனகிற நிக்கிரகததானம. இதுவேஅநநுபாடம.

வாதியாற் சொல்லபபட்டு மததியஸ்தராற் பொருளறியப்பட்டு மறுபடி வாதியினுற் சபையாராற் சொல்லப்பட்டுஞ் சொலலவகையாயு மிருககிற சொல்லுககுப பதில்சொல்லாமை யஞ்ஞாபாஷணமெனனு நிக்கிரகஸ்தாநம.எனபதுமொனறு.(கச)

வாதியிலுலே சொல்லப்பட்டு வறிவுடையவ னறிநதிருநதாலும் வாதியினுடைய பாஷயார்த்தத்தை யெப்படிசெறிஞ்

அதில்லையென்று ப்ரதிவாதிசொல்லுதல் அக்கியானமென்கிற
நிக்கிரகஸ்தானம். (௧௫)

வாதிமூன்றுதரஞ்சொல்லி மத்தியஸ்தர் பொருளறிந்தி
ருக்கையிலு மப்போது ப்ரதிவாதி நானறியவில்லையென்று த
ன்னறியாமையை வெளிப்படுத்துகிறானே அப்போதவனுக் கப்
பிரதிபையென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது? தேவதாதரிசனஞ் செய்வோர்போற் பேசா
திருக்கை, இராஜகார்யஞ்சொல்லுகை, ஸ்லோகமுதலானவை
படித்தல், மயிராற்றுதல், ஆகாசம்பார்க்கை, தரையிலெழு
துகை முதலியவைகளைச் செய்கை (௧௬)

வாதம் பண்ணவேண்டுமென்று வந்த வாதி, ப்ரதிவாதிக
ளிலொருவன் வாதமாரம்பித்தபின்பு, காலதாமசம்பண்ணத்
தக்கதாக மத்தியஸ்தராயிருக்கிற வித்துவான்கள் வரவில்லையெ
ன்றும், சபைக்கு நாயகராயிருக்கிற இராஜா வரவில்லை யவன்
வருதற்கேதுவாகிய வெக்காளையின் சத்தமுங் கேளாமென்று
ம், காலக்ஷேபம்பண்ணுவது விக்ஷேபமென்னு நிக்கிரகஸ்தா
னம். (௧௭)

தனது சித்தாந்தத்தி லெதிராளிசொன்ன தோஷத்தை
நீக்காம லெதிரிக் கனிஷ்டபுத்தியினாற் றனதிஷ்டத்தைக் கா
ட்டல் மதானுஞ்ஞையென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது? சிலர் தனக்குச் சோரத்தன்மையைப் பொ
ட்புக்கொண்டு ப்ரதிவாதியைப்பார்த்து புருஷனையார் சோ
ரத்தன்மை யுனக்குண்டென்றுசொல்ல, அவனே வாதியை நீயு
ஞ் சோரனென்றுசொல்லுகை (௧௮)

ப்ரதிவாதியானவ னிக்கிரகயோக்கியமான வாக்கியத்தை
ப் பிரயோகித்திருக்கையிலு மஃதையறியாத ஸபியரமையாத

னிக்கிரகித்துப் பரியாசம்பண்ணுதிருப்பது பரியநுயோச்சியோபேக்ஷணமென்னு நிக்கிரகஸ்தானம். (௧௯)

வாதியானவ னிக்கிரகஸ்தானத்திற் கியோக்கியமல்லாமற்றருந்த வாக்கியஞ்சொல்லியிருக்கவு மாபாசமாக நிக்கிரகத்தைச்சொல்லிப் பரியாசம்பண்ணுகை நிரநுயோச்சியாநுபேக்ஷண நிக்கிரகத்தானம். (௨௦)

யாதாவதொரு சாஸ்திரத்தின சித்தாந்தத்தைக்குறித்து வாதமுண்டாயிருக்கையி னடுவிற் சித்தாந்தவிரோதமான வாத்தத்தை யொப்புக்கொள்ள லபசித்தாந்தமென்னு நிக்கிரஹஸ்தானம்.

அஃதாவது? மகத்தாதியா யிருக்கிற விகாரங்க ளேகப்பிரகிருதியி லுண்டானவைக ளேகரூபமாக காணகையின ஏகஜாதியாயிருக்கிற மண்ணுண்டையி லுண்டான கட மண்ணினது விகாரமா யிருக்குமாப்போலவென்ற சாங்கியனை; ப்ரகிருதியாவதேது விகாரமாவதேதென்று கேட்டுழி, யாதொன்றிலிருந்து மகத்துக்களாயிருக்கிற விகாரங்க ளுண்டாகின்றன வதுப்ரகிருதி யாவை சில வுற்பத்தியு நாசமு முண்டாயிருக்கின்றன வவை விகாரங்களென றுத்தரஞ்சொன்னானாகி லவனுக்கசத்காரியாங்கீகாரமாகிய வபசித்தாந்தமென்று நிக்கிரகஸ்தானம். (௨௧)

௨௨ - வது எத்வாபாசன உதாரணம் ப்ரதிகளில் விடப்பட்டிருக்கிறது. இதற்குதாரணம் மறைஞானதேசிகருரையுடாற் காண்க —

இவை யாண்டு மொழிவர்-இவ்வாறுசொன்னபக்ஷாபாசம் ஏதுவாபாசம் உவமாபாசம் பராஜயஸ்தானமென்னு நான்கு

லக்கையின் பேதங்களையு முண்மையா யறிந்து வாதசமயத்திற் குற்றங்களவாரா தறிந்தோ ருரைப்பர்.—

× பராஜயம் - நிக்ரகம்.

அவையெல்லாமரைக்கி லறுபத்தைந்தாகும்-இந்நால்வகை யிற் பேதத்தொகையுமாபதி னறுபத்தைந்தாமென றிதனபொருள்.

மேலிச்சாஸ்திரம் பன்னிரண்டுசூத்திரத்திலும் பூர்வபக்ஷமாகச் சொன்னவிடமெல்லா மிந்தோஷங்களிரு னிராகரித்ததையுஞ் சித்தாந்தத்தி லிந்தோஷங்களில்லா துரைத்ததையுங் கண்டுகொள்க.

அளவை காண்ட லநுமான மாகம
முளவை மேலுரை செய்வ திதற்குளாம்
விளைவு தோன்ற விளம்பின னன்பாக
தெளியு மாறு சிவாக்கிர யோகியே

இவ்வுதாரணங்கள் சமஸ்கிருதவாகப் பிரயோகங்களாகச் சிலப்பிரதிகளி லெழுதப்பட்டிருக்கின்றன அவைகளை முறையானேகுறிப்பிட டிகனடியிற றவியே சோகக்கப்பட்டது.

வருமாறு —

* தத்ர ந்யாயாவதாரே — பக்ஷலக்ஷண ரஹிதோ஽பி பக்ஷவதாபாஸமாந: - பக்ஷாபாஸ இதி.

பக்ஷாபாசம் - ௬ -உம், அவற்றி னுதாரணமும்.

[illegible]விருத்த: பக்ஷாபாஸ:- [illegible]விருத்த: பக்ஷப்[illegible]பாஸ: [illegible]விருத்த:-பக்ஷ[illegible] [illegible]

[illegible] - [illegible]
[illegible],

[illegible] - [illegible]
[illegible]. ௧

[illegible] ௨

[illegible] ௩

[illegible] ௪

ஏதுவாபாச - ௪ - உம், அ-உ-ம்

[illegible]
[illegible]. ௧

[illegible]
[illegible]. ௨

[illegible]
[illegible]. ௩

[illegible]
[illegible]. ௪

அநித்தபேதம் - கஉ - உம், அ-உ-ம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible] உ

[illegible]
[illegible] ௩

[illegible]
[illegible]
[illegible] ௪

[illegible] ௫

[illegible]
[illegible] ௬

[illegible]
[illegible] ௭

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௦

[illegible] ௧௧

விருத்தன - க் - உம், அ-உ-ம்.

ஸ்த்ரீஸம்ஸர்க்கவர்ஜிதேப்ராணவிஷ்டாஹ. ௪

அனேகாந்தகன - க - உம, அ-உ-ம்.

ஸ்த்ரீரிக்தா பஹுரூபாஹ. ௫

மாலாதயாபாதிஷ்டண - க - உம, அ - உ - ம்

காயஸ்ய ஸம்ஸ்ரிதி உபாதாநாஹந்தம் . ஸ்மரணே காஹ.

காலாத்ரா யபத்திஷ்டு - கஷ்டாநுஷ்டாஹ் பதாயஸ்காஹ. ௬

பரகரணசமன - க - உம், அ - உ - ம்.

கர்மநிக்ருத்யம் - கநாதிகாஹ் ஸ்த்ரீவஹ.

கர்மநிக்ருத்யம் ஸந்நாவர்காய வ்ருத்தாபராஜந்த்யகாஹ் வடிவஹ. ௨

* தத்ரோக்தம் தந்த்ரே — வக்ஷ்யதே விரோஷவத்ர ஸெத்யோ: பக்ஷவிபக்ஷயோ: | வ்ருத்தகோ வ்ருத்தகோஜ நவஜங்கஸ்மேதத: || பக்ஷாதி த்ரைதம் வக்ஷ்யதே நகாதிஸகோஹவேஹ | ஸ்த்ரீநிதத்ருத்யேயகா நித்ருத்ராதாஹா ரதாஷிஜா:|| ஸாஹ்ருத்யாஜக: பக்ஷவணாநஸ்ரவஸாயக: || ஸஹத்ருத்வ தத்தஷ்டம் வஸ்துகா நித்ருத்ராஹரதா: காலாதீதஸ்த பக்ஷஸ்ய பக்ஷோநநவிரோயத:

[illegible]

திடடாந்தாபாசங்கள் - உஉ - உம், அ-உ-ம்.

* [illegible]

இதற்சாந்த - சாதநிபவிகல - ச - உம், அ - உ - ம்

[illegible] க

[illegible] உ

[illegible] ங

[illegible] ச

[illegible]

மேல் நிக்கிரஹஸ்தாநம் - உஉ - இ உ - ம்.

[illegible]

க

[illegible]

[illegible] ௨

[illegible] ௩

[illegible] ௪

[illegible]

ஶ்ரோத்ரோக்தஸ்ய ப்ரோக்தோ ஸ்வாத்யாயோ நேத்ர ப்ரஹ்மசா
ரஜதி தோஷதோக்த ஸ்வாத்யாயப்ரோக்தஸ்வஸ்தீக்ஷி விஶேஷ
ணப்ரோக்ஷணம். ௫

உபக்ரமஸ்ய ப்ரோக்தோத்ஸர்ஜனஸ்ய ஸ்வாத்ம
ப்ரயோக்தம் யஜ்ஞ தஸ்ய பதனம் - ஸம்ப்ராப்தநாம நித்ய
ஹோமஸ்தானம் ஸஹித ப்ரோக்தம் ப்ரோக்ஷ்ய யஜ்ஞாங்க படிவ
ஞ் ஸ்யஞ்ஜமேத ப்ராஸ் ஸ்வாத்யாயேன ப்ரஹ்மசாரிண இதி
த்ருஷ்டே ஸமாகார பஞ்சம: தேநப்ரக்ஷம
தே ஸமாப்யஸம்பந்தேந ஸமஸ்த ப்ரஹ்ம ஸம்பந்த
இதி. ௬

ஸமாவர்தனம் ப்ரயோஜனஸ்ய யாதிநாம் நித்ய
ஸம்யக்ஞான நித்ய ஹோமஸ்தானம் ஹவதி. ௭

யாதிநா நித்ய ஹோம ப்ரோக்ஷணா ஸியா தேவீ ப்ரோக்த
ஶௌசம் ப்ரதியாதிநா ச ஸஞ்ஜாதம் ஸஞ்ஜா தா ஸம்
நாம நித்ய ஹோமஸ்தானம் - தத்வ பரஞ்ஜாநாபாதந ப்ர
ஜாஹாதிநா ப்ரயோக்தம் ஶ்ரோத்ரியாயதீக்ஷி யாக ப்ர
தேர்தஜந ப்ரயாஸேநாவ மந்த்ரா ஸம்யக்ஞம் யாகப்ர
ரதம். ௮

பத்ஜாதம் யாகப்ரஜாதந்தம் - பாதஸம்யக்ஞம் வி
ஶேஷண விஶேஷ்ய ஹோமவேநாந்தம் - யோமப்ர நா

[illegible] ௯

[illegible] ௰

[illegible] ௧௧

[illegible] ௧௨

[illegible]

ரக்தஜாத நிரூட ஸம்யஸாநம் — தத்வதிமியா ஸ்பர்ஶவ-
நாரக்தம் அமுபநாரக்தமேத்தி. தத்ராத்ரயோ
அநித்ரஸ்யோர்ஶோ நித ஸ்பர்ஶதி. அயமயோ அநித்ர
ஸ்யோர்ஶாவிநாஶீதி. ௧௩

வாதிநோக்தஸ்ய ப்ராமாண்யே கலீஜாநாமுபஸ்ய
பாநபத்திநா வாமிஷ்டா தேஸ்யாக்தேஸ்யா ஷாரண
யோரஸ்ய யத்ப்ரத்யுஷாரணம் — தத்நூஷாஷ-
ணம் நாகுநிரூஹயாநம். ௧௪

வாதிநாயகேந ப்ராமாண்யே கஜாதாமேபூஸ்த
வி ஹாதிவாக்யாமேபூ ப்ரதிவாதியோ ஹாஜா நடா
விஷ்கோராதி நஜாயதே உதேயதி தநா தஸ்யா ஜாநம்
நாக நிக்ரஹஸ்யாநம் பவதி. ௧௫

வாதிநோக்தஸ்ய தேதநாநாஹ்ஷிதஸ்யா ப்ரதி
ஷேயரூப உத்தரம் யதா ப்ரதிவாதி நப்ரதிவ
க்தீஷே தநா தஸ்யாப்ரதிவாநாக நிக்ரஹஸ்யா
நம் பவதி - ததாயோ தேவதாஸ்யாந வக்தவ்ய ஷேணம்
ஹாஸ்த ராஜவாதப்ரவதரண ப்ரூவாகாதி வாம் கேப
ப்ரமாணம் மமநஸ்ய வநம் ஸம்தவாதிஷு மே
வநாதியத் கிந்தித் க்ரியாகரணீதி. ௧௬

அழ ஸம்வே மஹநாநஜும் கார்யாவந தே த-

[illegible] கஎ

[illegible] கஅ

[illegible] ககூ

[illegible] உ0

[illegible]

ந்யாயாவயவாபாஸாஶ்ச வாதி ஸ்திதவலயோஷ்ச
காயபோவாதி பரிக்ராஹாதிவலீஷாஜ்ஞாக்ஷி. உக

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கண்டன முதலிய வளவைகளின் இலக்கணங்களைக்கூறி யநுமானப் பிரமாணத்தில் வரு மாபாசங்களைச் சொல்கின்றார்.

ஈண்டு - அநுமானப் பிரயோகம் பண்ணுமிடத்து,—பக்கப்போலிநான்கு-முன்சொன்ன பக்கம்போலத்தோன்றி யல்லவாய்ப்போம பக்கபாசம நான்கு,—ஏதுப்போலி யொருமூன்றும்-முன் சொன்ன வேதுபோலத் தோன்றி யல்லவாய்ப் போமேது வாபாச மூன்றும். அந்த மூன்றுநானே,—எழுமூன்றுவேண்டும - இருபத்தொன்றாக விரும்பப்படும்,—விளங்கு முவமைப்போலி - முன்சொன்ன திருட்டாந்தம போலத் தோன்றி யல்லவாய்ப்போம திருட்டாந்தாபாசம,—ஈரொன்பான காண்டும் - பதினெட்டாகப் பார்ப்போம்,—தோல்வித்தானமிரண்டு,—நிக்கிரகத்தானமிரண்டும்,—உருவில் - விசாரிக்கில்,—இவை-இந்த நிக்கிரகத்தானங்கள்,—இருபத்திரண்டாம-இருபத்திரண்டாம்,—ஆண்டு மொழிவர் - இவற்றின்மேலுஞ் சொல்வார்கள்,—இவையெல்லாம்-முன்சொல்லிய பக்கப்போலி முதலிய வெல்லாம்,—அளக்கில் - பகுப்புத்தொகை பண்ணிப் பார்க்கில்,—அறுபத்தைந்தாகும் - அறுபத்தைந்தாம.

இவற்றிற் குதாரணங்கள் காட்டில் விரியும். திருமறைஞானதேசிகரது விரிந்த உரையில் முதிர்ந்தோர் காண்பிக்க வொருப்ரகாரங் காண்க.

இப்படி யளவைகளின திலக்ஷண மறிவிக்கப்பட்டபடியால் நேத்திர முதலிய விந்திரிய விளக்கு, புகைமுதலிய காரியலிங்கவிளக்கு, சிவாகம முதலிய சத்த விளக்கு, இந்த மூன்றுவிளக்கிற் பின்முன் சோதத சிவசத்தி விளக்கு

இந்த நான்கு விளக்குக்களோடு விளக்க விளங்குஞ் சம்பந்த வதிபாருஞ் ஜீவான்ம சிற்சத்தியும் ஜீவன்முத்த தான்ம சிற்சத்தியும் கவிந்த்வி இந்திரியப பிரத்தியக்ஷப் பிரமாணமென்றும், அநுமானப் பிரமாணமென்றும், சத்தப்பிரமாணமென்றும், ஜீவன் முத்தான்ம சிற்சத்தி மாத்திர மேரகிப் பிரத்யக்ஷப பிரமாணமென்றும், தடத்த லக்ஷணமா முபாதிபாறு ன சாயுசவொருஸ்வரூப லக்ஷணப் பிரமாணமாயிருக்கும்.

ஆதலால் அந்த நான்கு விளக்குந் தனது தனது சாமாத்தியமுறைமையிலும் மலவிருளினது வாசனைபோக ஜீவான்ம ஜீவன்முத்தான்ம சிற்சத்திப் பிரமாணத்தை விளக்கு முபகாரத்தா லவாகளைக் குறித்த துபகாரோப காரபபிரமாணம், சிவசத்தி சிவனைமாத்திரம குறித்தது முக்கியப் பிரமாணம், நிருபாதிகமாய் நிரபேக்ஷமாயிருக்கும்படி இரும்பந் திருமபச சிவசத்திவிளக்கு விரும்பாம லொருங்கே சிவசத்தி விளக்கினால் விளக்கப்பட்டுச் சுவயம பிரகாசமாய் நிரதிசயமாய, சிவன்முற்ற சர்வபதார்த்தப பிரத்தியக்ஷியாயிருக்கின்ற சிற்சத்திப பிரமாண மொன்றுமாத்திர முடையனாய், நிரபேக்ஷனாய சிவதல்லிய சிவனாயிருக்கின்ற முத்தான்மாவைக் குறித்தது சிவசத்தியுபகாரோபசாரங்களினாலும பிரமாணமன்று சிவனுக்கு மப்படி வேறொரு சிவசத்தி பிரமாணமாய் வருமதனா லநவத்தையடா மாதலால்.

இப்படியிருக்கச் சிலர் ஆன்மாவுக்குப் பெத்தாவத்தையிற் சிற்சத்தியினது வித்தியாதத்துவ கலுஷிதாம்சம் பிரமாண

ரூபம், வித்தியாதத்துவ கலுஷிதமல்லாத அம்சம் பிரமாதிரு ரூபம். அதனால் முத்தியவத்தையிற் பிரமாதிரு ரூபமாத்திரமே பிரமாண ரூபமில்லையாதலான முத்தான்மாவுக்குச் சிவனைப் பார்க்குமிடத்துச் சிவசத்தியே பிரமாணமென்றும், சிலர் ஆன்ம முத்தான்மாக்களிருவர்க்குஞ் சிவசத்தி முக்கியப் பிரமாணமென்றும், சங்கிராந்தவாதி-ஆவேசவாதி-பிரயோச்சிய கர்த்திருத்துவவாதி-மதமென்கின்ற மும்மதப் பிசாசாவேசிகளாய்ப் பிரஞ்ஞையின்றிப் பிரலாபிக்கின்றார்கள், அவர்கள் சுத்த சிவ சித்தாந்த மந்திரவாதிகளாலந்தப் பிசாசோட்டப்பிரஞ்ஞை பெறுவார்கள்.

அந்த மந்திரவாதிகள் மந்திரோபதேசமாவது, வித்தியாதத்துவ கலுஷித ஸ்வரூபம் பிரமாண லக்ஷணமென்று பேசுதனன்றன்று, அது சிவசத்திக்கில்லாமையாற் சிவசத்திப் பிரமாணமே யில்லையாமென்று சிவனுக்கும்; முத்தான்மாவுக்கும் பிரமாணக் கண்ணில்லாமையால் அந்தகர்களாய் விடுவார்களாதலால். வேறொரு பிரகாரத்தினாலே சிவசத்திப் பிரமாணமுண்டென்றால், அது சிவனுக்கு முத்த சிவன் முதற்பொருள்களைப் பார்க்குமிடத்துப் பிரமாணம், முத்தான்மாவாகிய சிவனுக்குச் சிவன் முதற்பொருள்களைப் பார்க்குமிடத்துப் பிரமாணமன்று. ஆயிரம் விளக்கு வந்தாலு மந்தகனானவன் அந்த விளக்குக் கொண்டு பொருள்களைப் பார்ப்பதின்று; அந்த விளக்கினால் விளங்கிய கண்ணுள்ளவன் அந்தக் கண்கொண்டு விளக்கையும் பொருளையும் பார்ப்பன்.

பின்னுமொன்று—சிவசத்தி சிவனுக்குக்கண். அது பிறக்கண்ணாதலால் முத்தான்மா அதுகொண்டு சிவன்முதற்பொருள்களைப்பாரான். பார்ப்பானாயினும், பார்த்தற் கிரியைப் பிரமிதப் பிரயோசன மவனதன்றாம். சிவானன்னிய வைக்கியத்தினால் அக்

நப பிரயோசன மவனதாமென்னில்? அது கூடாது. சிவனுடை யிச்சைய சிவசமான சாதியாகிய சிவசாதிருசயம வேறென றனறென்று சித்தாந்த சிகாமணி பிரமாண தீபிகை முதலான வைகளிலே அநேக பிரகாரத்தாற் சாதிக்கப்பட்டிருக்கையால், சிவனுடைய சிவசத்தியும் சிவசத்தி விளக்கினால் விளங்கி, திரும்ப அவ்விளக்கு விரும்பாமலிருக்கின்ற முத்தானமாவினது பிறப பொருளறியாகிய வெதிர்முக சிற்சத்தியா லறியப்படுந் தன் மையின்றி, யறியும் பொருளாக வறியப்படும்

முத்தானமாவினது தற்பொருளறிவாகிய திரும்பிய முக் சிற்சத்தியால் அறியப்படாது அறியப்படுமாகில் நிருபசரிதவை க்கியம் வருமாதலால் ஏகானமப பிரசங்கம் வந்து சித்தாந்த மாறி வேதாந்தமாய் விடுமாதலால், முத்தானமாக்களே விர க்ஷிக்கிறா எனனுமேகதேசவசனத் துக்கும், பரமுத்தராகிய அப ர முத்தராகிறோமென றாதுகமாதலால், பரமுத்தானம சிவசிற்ச த்தி, திரும்பச் சிவசத்தி விளக்கு விரும்பாமற ஸ்வயமபிரகாச மாய ஸ்வதந்திரமாய ஸ்வரூபப பிரமாணமா யிருக்குமென்று சித்தாந்தம் ஆகையால், சிவன முற்றறிவனமா வந்தமான சி ற்பொருளெல்லோருக்கெல்லா முன்சொன்ன முறைமையிற பிரமாதி ருரும பிரமாணரும பிரமிதிரும மூன்றும சொருபந்தானே தடந்தமன்று

ஆகலாம் அவரவ ரெதிர்முகியாயிருக்குங்கரணக்குறிச் சிற சத்தியே பிரமாணம், பிரமிதி பிரமாணமென்று அது பிரமாண வியாபாரசூறிப பிரமாண பலமாதலால் பிரமிதிதானே பிர மாணம பலமேதென்னில்? ப்ரமாதிருகோடிப் பிரமிதி பர மாணம். பிரமேயக்குறி விஷயகோடிப் பிரமிதிதான், விஷய வியாபாரந்தான், பலமென்னும் பிறர்மதமும்; அதுவன்றி காதவி ருத்தி வித்தியா ராகாதிகளாற் கலக்குண்ட சவிகற்ப நிருவிக

ற்பப் பிரமிதிதானே பரோன்முக சிற்சத்தி, அதுதானே பிரமாணமும் ஆமென்றுபாகாதே பேக்ஷாபுத்தியே பிரமாண பலப்பிரமிதி நாதவிருத்தி விருத்தியாராகாதிகளாற் கலக்குண்டுத ஸவஸ்வயம்போனமுக சிற்சத்தியே ப்ரமாதிருரூபம், பரமாதிருரூபமாத்ருரு சொரூபம் முத்தியிலிருப்பது பிரமாணப் பிரமிதிரூபமிரண்டும் பட்டத்தும முத்தியிலில்லை, சம்சாரத்திலிருப்பது. முத்தாக்களாவுக்குச் சிவன் முதற்பொருள்களை யறியுமிடத்துச் சிவசத்தியே பிரமாணமென்னும் பிரமாதமும் பேசாமற்போயின

திரும்ப ஆகித்துப் பார்க்குமிடத்து சிவசத்திமுத்தானம் சிவன் முதற் பிறபொருள்களைப் பார்க்குமிடத்துச் சிவனுக்குப் பிரமாணம், தற்பொருளாகிய தன்னைப் பார்க்குமிடத்துச் சிவனுக்குச் சிவசத்தி பிரமாணமன்று. அது பிறபொருளறியாதலால் சிவன் சத்திக்குப் பின்னப் பொருளாயப் போவாராகலின், சிவன் தன்னறிவாகிய தனது சொரூப சிற்சத்திப் பிரமாணத்தினாற் பிறவறிவாகிய தனது சத்ரூப மெனகிற சிவசொரூபப் பிரமேயத்தைத் தற்பொருட் பிரமாணம் பிறப்பொருட் பிரமாணமாகும் அந்த இரண்டிற்கும் அந்தரானம் சித்ரூப சிவரூபப் பிரமாதாவாயிருந் தறியா இந்த நித்தியமுத்தானம் சிவன் முதற் சிற்பொருள்களுக்குஞ் சமமாகும்

ஆகையால், சிவன் முதல் சித்த சிவயோகி நிருபாதிக சிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்திய பிரத்தியக்ஷப் பிரமாண சிவப்பிரமாணத்தி லூர்ப்பவித்த அபரோட்ச சாட்சாத்கார சிவ லக்ஷண லக்ஷிய ஸிபதித சிவயோகப் பிரத்தியட்சப் பிரமிதியின்ற சிவனைப் பார்ப்பான.

சிவன் முதற் சாத்திய சிவயோகி, திவ்வியாதிசைவிக சிவ, காம சத்தாநு விருத்தாத்தியானமிக சிவாகம சதவிஷய வாச,

னுபூரித புத்திப் பிரகாசத் திரியிற்பற்றி, சிவாகமப் பேர்பெ றுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்தி நேத்திர சிவாகமப் பிரமாண சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோக்ஷ சத்தப் பிரமிதியினுற் சிவலக்ஷணக் கேள்வி வழியால்; சிவனை யறிந்து தியானசமாதி பண்ணுவன.

அறிந்தபினனும்,அவன் வாதிப் பிரதிவாதி விப்பிரதிபத்தி க சலகங்களால்வருஞ் சந்தேகம் போம்படி காரிய லிங்கவிஷய வாசனுபூரித புத்திப பிரகாசத் திரியிற் பற்றி யனுமானப பேர் பெறுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்தி நேத்திரானு மான சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோக்ஷானு மிதியினுற பரீக்ஷித்துப் பரீக்ஷையின தேககோடியில் விழுந்தறிந்து தியா ன சமாதி பண்ணுவன.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து மேற்கூறிப்போந்த அநுமானசாமக்கிரியைகளுள் து ணிபொருட்கிடனுதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடிடை த்தாயும் ஒருபுடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவதாகி ய பக்கப்போலி

துணியும்பொருட் கிடனுகாததூஉம்
துணியும்பொருட் கொருமருங் கிடனுகாததூஉம்
துணிந்தபொருட் கிடனுவதூஉம்
துணிந்தபொருட் கொருமருங்கிடனுவதூஉ

மென நான்குவகைப்படும்.

சாத்யப்பொருளோடு வ்யாத்தியுடைத்தாய்ப் பக்கத்தி லிருத்தலாகிய ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒரு புடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி

துணியப்படாததூஉம்
மறுதலைக்கட் படுவதூஉம்
ஒருதலைப்படாததூஉ
மெனமூவகைப்பட்டு, விரியா விருபத்தொன்றும்.

அவையாவன.—

சார்பில்லதூஉம்
சார்புண்மை யறியப்படாததூஉ
மெனச் சார்புபற்றிய குற்றமிரண்டும்
சொரூபமில்லதூஉம்
சொரூபமுண்மை யறியப்படாததூஉம்
சொரூபத்தின் விசேடணமில்லதூஉம்
விசேடணமுண்மை யறியப்படாததூஉம்
விசேடியமில்லாததூஉம்
விசேடியமுண்மை யறியப்படாததூஉம்
ஒருமருங்கில்லதூஉம்
ஒருமருங்குண்மை யறியப்படாததூஉம்
பரனோக்குடம்பாடில்லதூஉ
மெனச் சொரூபம்பற்றிய குற்றமொன்பதும்
சாத்தியத்தோடு வ்யாத்தியுண்மையறியப்படாததூஉம்
செயற்கைபற்றி வயாத்தியுடையதூஉ
மென வயாத்திபற்றிய குற்றமிரண்டும்
ஆகியபக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலி
யின் விரிபதின்மூன்றும்
மறுதலைப்பொருள் சாதிப்பதூஉம்

மகாமகோபாத்யாய, டாக்டர்

மறுதலைப்பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவை உடன்கொண்டு வருவதூஉம்

காட்சியளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவதூஉம்

உரையளவையான் மறுக்கப்பட்டுக் கொண்டுவருவதூஉ

மென மறுதலைத்தலையுடையவேதுப்போலி விரிவைந்தும

பக்கசபக்கமாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடையதூஉம

சபக்கத்திற் சேறலின்றிப் பக்கமாத்திரையினுள்ளதூஉம்

சபக்கவிபக்கங்கள் கிடைக்கப்பெறாததூஉ

மென ஒருதலைப்படாத வேதுப்போலி விரிமூன்றும்

இனி வியாத்தி நிச்சயித்தற்கிடனாகலாகிய உவமையிலக்கணமின்றியும் உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப்போலி, அந்நுவயம்பற்றியும் வெதிரேகம்பற்றியும் இருவகைப்பட்டு, விரியானொரோவொன்றொன்பதாய்ப் பதினெட்டு வகைப்படும்.

அவையாவன —

சாத்தியமுடைத்தாகாததூஉம்

சாத்தியமுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

ஏதுவுடைத்தாகாததூஉம்

ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

இரண்டுமுடைத்தாகாததூஉம்

இரண்டுமுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

சொரூபமில்லதூஉம்

சொரூபமுண்மை பரனுக் குடம்பாடாகாததூஉம

செயற்கையானாகிய வியாத்தியுடையதூஉ

மென அந்நுவய வுவமைப்போலிவிரி ஒன்பதும்

சாத்தியமின்மை யுடைத்தாகாததூஉம்

சாதத்தியமின்மை யுடைத்தெனபது நிச்சயிககபபடாதது உம்

ஏதுவின்மை யுடைத்தாகாததூஉம

ஏதுவின்மை யுடைத்தெனபது நிசசயிக்கப்படாததூஉம்

இரணடினமையு முடைததாகாததூஉம

இரண்டினமையு முடைததெனபது நிச்சயிககப்படாததூஉம்

சொரூபமில்லதூஉம்

சொரூபமுனமைப பரறுக் குடம்பாடாகாததூஉம

வெதிரேகவியாத்தி செயறகையாறுடையதூஉ

மென வெதிரேக வுவமைபபோலிவிரி

யொனபதுமாம

இவிந கருக்கவாததத்தினசட பேசத தெரியாமையாசிய. கோல்வித்தானம், மயங்கப்பேசுதலும வாளாவிருத்தலுமென றிருவகைபபட்டு, விரிபாவிருபத்திரணடாம

அவையாவன —

தாமெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக வேடுவரப் பேசுதலும

பிறிதொரு மேற்கோளைக் கூறுதலும்

மேறகோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும்

மேற்கோளை விட்டுவிடுதலும்

தான்கூறிய ஏதுவுக்குக குற்றம் வந்துழி வேறோராற்றன ஏதுக கூறுதலும்

தனக்கு வருந்தோல்வியைப் பிறிதொன்றுபேசி மறைத்தலும்

படரொடுபடாதன பேசுதலும்

பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டுபேசுதலும்

அவாய்நிலை தகுதிபண்மையில்லனவாய்ப் பேசுதலும

மேற்கோண்முதலிய வைந்தினையும் முறைபிறழப் பேசுதலும

அவற்றுட் சிலகுறையப் பேசுதலும்

ஒன்றற்குப் பல கூறுதலும்

சொல்லை இரட்டித்துச் சொல்லுதலும்

பொருளையிரட்டித்துச் சொல்லுதலும்

பிறன்கூறிய பொருளை அநுவதிக்கமாட்டாமையும்

பிறன்கூறியபொருளை யறிந்தும் அறியான்போன்று வினுதலும

விடைசொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையன போன்றிருத்தலும்

வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப் பொழுதுபோக்கலும்

சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுவிட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம்பேசுதலும்

தோல்வித்தானமெய்தியோனைத் தோல்வித்தானமெய்தினானென்றறிந்துகூறாதிருத்தலும்

தோல்வித்தானமெய்தாதானை எய்தினானென்று கூறுதலும்

தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்
தாந்தஞ் சாதித்தலு
மெனவிவை

இங்ஙனம் நான்கும், இருபத்தொன்றும், பதினெட்டும் இருபத்திரண்டுமாகிய அறுபத்தைந்தும்; அனுமான வளவைக்குக் குற்றங்களா மென்பதாம்.

....

இவை குற்றமாகலின் ஆகமவளவைக்கு முன்னாக வையாது இறுதிக்கண் வைத்தார். இவற்றிற்குதாரணம் உய்த்துணர்ந்துகொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இன்னும் இப்பக்கவேது வுவமைகளை எடுத்துச் சொல்லும் வழிப் படுஞ் சொற்குற்றங்களெல்லாந் தோல்வித்தானத்து ளடங்கும்.

ஈண்டுக்கூறும் பக்கப்போலி உவமைப்போலிகளெல்லாம் ஏதுப்போலியுளடங்குமெனத் தார்க்கிகர் கூறுவர். பக்கவுவமைகளி னிலக்கணத்தை நோக்கிக் காணும்வழி, அவை பக்கப் போலி யுவமைப்போலியெனப் படுவனவன்றி ஏதுப்போலியெனப் படாமையறிக.

இதனானே அநுமானப் பிரயோகத்தின் கட்படுங் குற்றங்களிவையென்பது தெரித்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

'கொண்டல் வாயில்'என்ற திருவிருத்தத்துக்கு 'அறுதியே யமலனாய்' என்ற திருவிருத்தமளவும் வியாக்கியானம் வந்து

முடிக்கறது. மேலிந்தப் பிரமாணங்களுக்குத் தொகை யருளிச் செய்கிறார்.

ஈண்டு பக்கப்போலி நானகு - இவ்விடத்துப் பட்சம் நாலாயிருக்கும்.

அவையாவன —

பிரத்தியட்சாபாச மென்றது - அநுஷ்ணோயம் அக்நிதி யனுமானம், ஸஹா பிரத்தியட்சாபாசம்.

அனுமானாபாசம் .. அநித்திய சத்தம் சாக்ஷுஷத்து வாது, இதிய மனுமானாது

ஸ்வனுமானாபாசம் பிரதத்தியாபாசம் .. சுத்திகையிலே ரஜிதமிதி ஞானம், ஸஹா பரத்தியாபாசம்.

வசனாபாசம் . பரம்மணோ சுராபேயா திரவத் திரவியாத் வாது க்ஷீரவது இதி யநுமானம், இது வசனாபாசம்.

ஆ௨ ச

ஏதுப்போலி யொருமூன்றாய் வேறுவ மெழுமூன்றாக - ஏத்துவாபாச மூன்று பிரகாரமா யிருபத்தொன்றும்.

அவையாவன —

அசித்தம் . அசித்த பட்சவிருத்தி
அநேகாந்திகம் .. பட்சத்திரய விருத்தி
விருத்தம் . பட்ச விபட்ச விருத்தி.

யென்று மூன்றும் —

அசித்தபேதம்-கஉ
அநேகாந்திகம்-எ,
விருத்தபேதம்-உ.

ஆக இம்மூன்றுபேதமும் இருபத்தொன்று —

விளங்குவமைபோலி யீரொன்பான் காண்டும் - விளங்கத்தக்க திருட்டாந் தாபாசம்-௧௮-ஆகக் காணப்படும்.

அவையாவன —

சாத்திய விகலாதி பதினெட்டுமாம்.—

தோல்வித்தான மிரண்டிருபத் திரண்டாம் - நிக்கிரகத்தான மிரண்டுவகையா யிருபத்திரண்டாம்.

அவையாவன ?—

பிரதிஞ்ஞா ஹானி முதலான-௧௪,

அனனுபாஷண முதலான-௮,

ஆக இருபத்திரண்டாம்.

இதற் குவமை,

பிரதிஞ்ஞாஹானி — சுதநா வுண்டென்ன வேறே யொருவனில்லை யென்று சாதிக்க வுடன்படுதல். ௧

பிரதிஞ்ஞாந்தரம் — ஒரு பிரதிஞ்ஞையைப்பண்ணி அதனைச் சாதியாமல் வேறேயொன்றைப் பிரதிஞ்ஞை பண்ணுதல். ௨

பிரதிஞ்ஞா விரோதம் — தான் சொன்ன பிரதிஞ்ஞைக்கு ஏது சொன்னதுக்குத் தானே விரோத முரைத்தல். ௩

பிரதிஞ்ஞா சந்நியாசம் — ஒன்றை பிரதிஞ்ஞைபண்ணி அதனை வாதியானவன் தூடணமடன்னி யுள்ளவளவில் ஆர் சொன்னதென்கை ௪

ஏத்துவாந்தரம் — வேதம் நித்தியமென்று சொல்லி யுக்திக்கு ஏதுக்காட்டி அதற்குத் தூஷணம்வர வேறே ஒன்றை ஏதுவாகக்கொள்ளல். ௫

அத்தாந்தரம் வாதியானவன் தனக்குத் தோல்விவர ஏதுவென்ற சத்தத்துக்குப் பொருளேதென்று வினவிக் கேட்டவை தன்னை மறைத்தல். ௬

நிரர்த்தகம் ... அர்த்தமல்லாத வசனங்களைப் பேசல். ௭

அவிஞ்ஞாதார்த்தம்...வாதியானவன் தனக்குவந்த தூஷணமறைத்தற்காக தெரியாதசத்தங்களைக் கொண்டு பேசல். ௮

அபார்த்தகம்...பூர்வபாஷை சம்பந்தமின்றி யிருக்கின்ற வசனங்களைப் பேசுதல். ௯

அப்பிராத்தகாலம் ... பஞ்சாவயவங்களை யடைவொழித்து மாறிப்பிரயோகித்தல். ௰

நியூனம் ... பஞ்சாவயவங்களைக் குறையப் பிரயோகித்தல். ௧௧

அதிகம் ... ஏது உதாரணங்களைப் பலவாகப் பிரயோகித்தல். ௧௨

புனருத்தகம் ...சொன்னபொருளை மீண்டுஞ்சொல்லுதல்.

அந்தப் புனருத்திகம், சத்தம தொனி கேடின்றியிருக்குமென திரட்டித்துச் சொல்லுதலுமாம். ௧௩

அநநுபாஷணம் ... வாதியானவன் சொன்ன பொருளையறிந் தநுமதியாதிருத்தல். ௧௪

அஞ்ஞானம்...ஒன்று மறியாதிருத்தல். ௧

அப்பிரதிபை ... உத்தரஞ்சொல்லாமல் திகைத்தல். ௨

விட்சேபம்...ஒன்றைச் சொல்லுவதாகத் தொடங்கி வேறேயொரு வியாசத்தையிட்டுச் சொல்லாமலிருத்தல். ௩

மதானுஞ்ஞை...தன்னுடைய மதத்துக்குவருக தூஷணம் பரிகரியாமல் பிரமதமெடுத்துத் தூஷிக்கை. ௪

பரியனுயோச்சியா பேட்சணம்...நிக்கிரகத்தான பிராந்தி யினையறிந்து நிக்கிரஹியாயிருத்தல். ௫

நிரனுயோச்சியானுபேக்ஷம் ... நிக்கிரகத்தான பிராந்தனுகாதவனை நிக்கிரகித்தல். ௬

அபசித்தாந்தம் ..சித்தாந்தஞ் சொல்லத் தொடங்கி வேறேயொன்றைச் சொல்லுதல். ௭

* எத்துவாபாசன - உதாரணம். விடுபட்டிருப்பதை மறைஞானதேசிகருரையிற் காணக. ௮

சூ. உ௨.—

கருதலிவை யாண்டுமொழிவா ரவையெல்லா மளக்கிலறு பத்தைந் தாகும்—பிரமாணத்தைக் கொண்டு பிரமேயத்தை யறியுங் காலத்தி லப்படியே யனுபவித்துச் சொல்லுவார்கள், அவையிற்றையெல்லா மறியுங்காலத்து அறுபத்தைந்து பிரகாரமாம். இந்த வறுபத்தைந்து குற்றமும் வாராமல் பிரயோகிப்பது எ-று.

இதனுற் சொல்லியது பக்கப்போலி
பிரத்தியட்சாபாசமென்றும்
அநுமானுபாசமென்றும்
பிரத்தியாபாசமென்றும்
வசனுபாசமென்றும்

ஆக நாலென்றும,

ஏதுபக்க மூன்றுயிருக்குமென்றும், அவை
அசித்தம்
அனேகாந்திகம்
விருத்தம்

ஆ -மூன்றுக்கு வகை

அசித்தபேதம் - ௧௨

அநைகாந்திகம் - ௭

விருத்தம் - ௨

ஆ ௨௧ - என்றார்,

இதில்திட்டாந்தாபாசகம் சாத்தியாகலாதி முதல் பதினெட்டுப்பேதமென்றும்;

தோல்வித்தானமென்றது, இரண்டு வகையான பிரதிஞ்ஞாஹானிமுதற்-௧௪.

அனனுபாஷணமுதல்-௮

ஆ ௨௨ - என்றும்,

பிரமாணத்தைக் கொண்டு பிரமேயத்தை யறியுமிடத்து இவையெல்லாவற்றையும் பெரியோர்கள் அனுபவித்து அளவைப்பிரமாணமாக - ௬ எனபொன்று முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

மேற்கூறிப்போந்தவனுமான சாமக்கிரிகளுள்,—ஈண்டுப்பக்கப்போலி - துணிபொருட் கிடனாதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்துப் பக்கப்போல்தோன்றுவதாகிய பக்கப்போலி,—நான்கு -நான்குவகைப்படும்,— ஏதுப்போலி - சாத்தியப்பொருளோடு வியாத்தியுடையத்தாய் பக்கத்திலிருத்தலாகிய ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தொருபுடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏது

ப்போலி,—ஒருமூன்றாய் - ஒருமூவகைப்பட்டு,—வேண்டுமெழு மூன்றாகும் - விரியா னிருபத்தொன்றாகும்.—விளங்குவமைப் போலி - இனி வியாத்தி நிச்சயித்தற்கிடனாதலாகிய உவமை யிலக்கணமின்றியு முவமைபோலத் தோன்றுவதாகிய விளங்கு வமைப்போலி,—ஈரொன்பானகாண்டும் - அன்னுவயம்பற்றியு ம் எதிரேகம்பற்றியும் இருவகைப்பட்டு, விரியா லொரோவொன் றென்பதாய்ப் பதினெட்டுவகைப்படும், — தோல்வித்தானம் - இனித் தருக்கவாதத்தின்கட் பேசத்தெரியாமையாகிய தோல்வித்தானம்,—இரண்டிருபத்திரண்டாம் - மயங்கப் பேசுதலும் வாளாவிருத்தலுமென் றிருவகைப்பட்டு, விரியா லிருபத்திரண்டாம் — அவையெல்லா மளக்கில் - அவைகளை யளவிடுமிடத்து,— அறுபத்தெட்டாகும் - இங்ஙன நான்கு மிருபத்தொன்றும் பதினெட்டு மிருபத்திரண்டுமாகிய அறுபத்தெட்டாம்,—இவைகருதில் - இவைகளை விசாரிக்கின்,—பான்மொழிவா - அனுமானவளவைக்கெவ்விடத்துங் குற்றங்களாமென்றுமொழி - என்பதாம்.

இதனானே யனுமானப்பிரயோகத்தின்கட் படுங் குற்றங் களிவையென்பது தெரித்துக் கூறப்பட்டது.

அளவை-௧௪.

பாயிரமுட்படச் செய்யுள்-௨௦.

"ஈரேழுமளவையாகும்"

என்னும் அளவை பதினாலும் முற்றிற்று.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்

மறைஞானதேசிகர் உரை.

க—சூத்திரம். பதியிலக்கணம்.

மேலிச்சூத்திர மென்னுதலிற்றோவெனின்? அளவை யை யுணர்த்தி, அதனா லனுமிக்கப்படும் பதி யிலக்கண முணர்த்துத னுதலிற்று

அச்சூத்திரத் திலக்கண மியாதோவெனின்? "அவற்றுள், சூத்திரந்தானே யாடிநிழலி னறியத்தோன்றி, நாடுதலின்றிப் பொருணனிவிளங்க, யாப்பினுட்டோன்ற யாத்தமைப்பதுவே" என்றார் தொல்காப்பியனார்.

மேலித்தலைவிருத்த மென்னுதலிற்றோ வெனின்? இப்பிரபஞ்சத்துக் கொரு கத்தாவுண்டென்றும், அந்தக்கர்த்தா சங்காரகர்த்தாவென் றுணர்த்துத னுதலிற்று.

ஒருவனோ டொருத்தியொன்றென் றுரைத்தி
டு முலகமெல்லாம், வருமுறை வந்துநின்று போவது
மாதலாலே, தருபவ னொருவன்வேண்டுந் தானுமு
தலீறுமாகி, மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னிநி
ன்றே. (க)

(இ-ள்.) ஒருவ ஒருவனோ டொருத்தியாகிய வுயர்திணையு
னோடொ ம், ஒன்றென்று சொல்லப்பட்டநின்ற வஃறிணை

ருதலியொன்றெ யுமாய், சொல்லிய பிரபஞ்சமெல்லாம்
ன றுனாதகதிமு
லக மெல்லாம

வருமுறை வந்துநின்று போவதுமாதலாலே	உபாதானத்தினின்று தோன்றுமுறைமையிலே தோன்றி, நிற்குமுறைமையிலே நின்று, ஒடுங்குமுறைமையிலே யொடுங்கி வருகையினாலே, தோன்றியு மொடுங்கியு மிப்படிக் காணப்படுகையினாலே
கருபவ னொருவன வேண்டும	இவையிற்றைத் தோற்றி நிறுத்தி யொடுக்குவிக்குங் காரிபடுத்துகையா லொரு கர்த்தாவைக் கருதவேண்டும்.
தான்முதலீறுமாகி மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே	ஆனமாக்களைப்போல வாதிமுத்தனன்றி யநாதிமுத்தனுமாய், ஞானமே தனக்கு வடிவாய், நிலைபெற்று நிற்கு மந்தக்கர்த்தா தானே, சிருஷ்டி திதி சங்காரங்கட்கு முரியனாய் நிற்பன். எ - று

"ஒருமொழியொழி தனினங்குகொளற்குரித்தே" எனவே, திதியுங் கூறிபதாயிற்று.

உம்மை யிறுதிக்கணின்று விளக்கின வெண்ணும்மை.

ஏகாரம் ஈற்றசை.

அநாதிமுத்தன் எழுவாய், மருவிடும் பயனிலை.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் - க - சூ - ம், எனவறிக

இதனை யநுமித்தறியுமிடத்துக் கேவலாந்வயி யநுமானத்தா லறிக.

அஃதாவது? இப்பிரபஞ்சத்துக்குக் கர்த்தா வுண்டென பது - பிரதிஞ்ஞை.

அதற் கேது யாதெனின்? ஒருவனோ டொருத்தி யொன் றென நவயவப்பட்டிருத்தலா லென்பது - ஏது.

அஃதெனபோலவெனனின்? கடாதி காரியத்துக்குக் கு லாலனைப்போலென்கை - திருட்டாந்தம்.

இக்கடாதி காரியத்துக்குக் குலாலனுளனென மதித்தாற் போல, ஒருவனோடொருத்தியெனனுங் காரியத்துக் கொருகர் த்தா வுளனென மதிக்கை - உபநயம்.

முன்சொன்ன திருட்டாந்தத்துக் கிந்தத் திருட்டாந்திர பொருந்திருக்கையா லேதுவாகிய காரியத்துக் கொருகர்த்தாவு ளனென்ற பிரதிஞ்ஞை திடம்பண்ணுகை - நிகமநம். (க)

சிவாக்ரயோகியருளா வருமாறு.

இவ்வாறு ப்ரமாணலட்சணங்களைக் கூறி, மேற் ப்ரமேய மாகிய பதிபசுபாசமெனனும் பதார்த்தத்திரயங்களிற் பரத மோத் திஷ்டமான பதிபதார்த்தத்தை; வேதபூர்வமாக நிரு பிக்கின்றது.

பதி யென்றது,இந்திரனென நாமைகதேச நாம 'கிரஹ ணமாகத் தேவேந்திரனெனப் பெற்றதுபோல; பதி எனவே. பசுபதி யெனப்பெறும்

பசூநாம்பதி, பசுபதி என்னும் வசநத்தினால்,

பசு பசுத்துவ சம்யோகாத்-என்னும் வசநத்தினால், அநா தியே பசுத்துவமாகிய வாணவப் பிரதி பந்தத்தினால் ஜீவான் மாக்களெல்லாம் பசுவெனப்பெறும்.

பந்தநாத் பாசமுச்சியதே - என்னும் வசனத்தினால், ஆன்மாக்களுடைய விபுத்துவ சர்வஞ்ஞதையை யநாதியே பந்தித்திருக்கையா லாணவாதிகளைப் பாசமென்றது.

ஆணவாதியென்றது, ஆணவங் காமிகம் மாயை யென்றது

பந்தமொன்றினை லென்னுமன் மூன்றைச்சொன்னது கற்பனை கௌரவமெனின? அற்றன்று உபசர்க்க வசத்தினு லர்த்தபேதமுண்டு அஃதெப்படியெனனில்? ஆணவம் ஆன்மாவினது சர்வஞ்ஞதையைத் தடைகையாலே ப்ரதிபந்தம்.

காமிகம் ப்ரவாகாநாதியாக வான்மாவைப் பினபற்றிக் கொண் டானமாவினுடைய புத்தியை, முத்தியி லிச்சைசெல்லவிடாமல், போகததிற் ப்ரவாததிப்பிகைகயினு லநுபந்தம்.

மாயை யான்மாவின் விபுத்வத்தை யாவரித் தேகதேசவர்த்தியாகப் பண்ணுகையாற சம்பநதம். இநதபந்தங்கள் சமயோகமென றிப்படி பேதமாக வறியப்படும்.

* ஸஹஜாஹ் ப்ரதிபத்தயே க்ஷயம்ஸ்தேந ஸஹ-
க்ரியா காயிகீ ஜாதஜாநந்தோ தோஷ ஸஹி-
தேநக்ரியாதே ப்ராணேஸ்வத: | யிம்ஹா ஶஸ்ந-
த: ப்ராக்ஷ விஷயோ ப்ரத்யக்ஷ ஸ்ரோதஸம்ப்ய
அதிப்ரஸரே: ஶிவாப்ருயத்ராத் ஸேவம் ஸம்ஸ
யேதே ||

சொல்லிப்போந்த பிரமாணங்களினுற் ப்ரமேயங்களை யறியப்பெறவேண்டும்.

அவைவருமாறு:—

ப்ரத்தியக்ஷாநுமா னாகமங்களுட் பிரத்தியக்ஷமாவது, இந்திரியக் காக்ஷியாகையான, முதற் பதியுண்டென்பதின் ப்ரமாணத்தையு மிலக்கணத்தையு முதற்சூத்திரத்தில் தொகுத்துக் கூறுகின்றது.

(ஒருவனோடொருத்தி—மன்னினரே) எ-து. ஆண்பெண்ணலி தேகமுதலான காரியரூபப் பிரபஞ்சமெல்லாம் வேதாகமங்களி லின்னதின்னபடி தோன்றி, இன்னபடி புசித்துநின்று, இன்னபடி யழியுமென்று சொன்னபடியே, தோன்றிநின் றழியக் காண்கையால்; இப்பிரபஞ்சத்தை யுண்டாக்குவா னொருகர்த்தாவேண்டும். அக்கர்த்தாதா னிப்பிரபஞ்சத்தைச் சம்ஹரித்து, மீளவு முண்டாக்குவன. அவனிலக்கண மேதெனின்? அநாதிநின்மல ஞானஸ்வரூபன். ஆதாரமேதெனின்? சர்வவியாபியாய் நின்றே ஜடசித்துக்களைப் பிரேரிப்பன. அவன நாமமேதெனின்? அஞ்ஞானத்தை யரிக்கிறவனாகலின் அரனென்னும் யோகநாமத்தை யுடையவன்—இதுபொழிப்பு.

இனி விருத்தி—அதனிலக்கணமாவது, சூத்திரத்துட் பொருளன்றியு மாண்டைக் கின்றியமையா தியாவையும் விளங்கத் தன்னுரையானும் பிறநூலானு மையமகல வைங்காண்டு கையுறப்போடு மெய்யினை யெஞ்சாதிசைப்பது விருத்தி

பதிபசுபாசமூன்று பொருளும் பிரத்தியக்ஷமாகக் காணப்படாமையி னநுமானத்தினா லறியவேண்டும்.

இனி யன்வய வியதிரேகி யநுமானத்தினாற் பதியுண்டென்னும்படி வருமாறு.—

முதற்சூத்திர மெழுபதுவிருத்தமாகையான் முதல் விருத்தமன்றி, நின்ற விருத்தங்களினு மெடுத்துக் கூட்டிப் பொருளுரைக்கப்படும். "குளகப்பலபாட் டொருவினைகொள்ளும்" என்பவாகலின்.

அந்வய வ்யதிரேகி யநுமானத்திற்கு
பிரதிஞ்ஞை
ஏது
திட்டாந்தம்
உபநயம்
நிகமநம்
என வைந்து ரூபமுண்டு.

இவற்றுள் 'தருபவனொருவன் வேண்டும்' என்றது-ப்ரதிஞ்ஞை. க

'வருமுறைவர்துநின்றுபோவதுமாதலாலே' என்றது-ஏது.

'ஒருவனோடொருத்தி யொன்றென றுரைத்திடு முலகமெல்லாம்' என்றது-காரியத்துவசாதனே.

'மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே' என்றது - திட்டாந்தம். ங

'எண்ணிய வுருவமெல்லா மியற்றுவன' என்றது-உபநயம்.

'கண்ணுகாரியங்க ளெல்லாங் காரணமதனிற் காண்பன' என்றது-நிகமநம். ரு

'ஈசனுமேனே' என்றது - பக்ஷதருமத்தின் பலத்தினுலே மகேஸவரன் ஏகனே ஜகத்கர்த்தா வென்றது.

இனி ஹேதுவுக் கைந்துகுணமு மைந்துதோஷமு முண்டு. இத்தோஷங்கக் குணம்வருமாறு:—

க - பக்ஷதருமத்துவம், பிரபஞ்சங் காரியரூபமாகலிற் பக்ஷத்திலேயுண்டு; அதனுல் - அசித்தினென்கிற வேத்துவாபாச நிரஸ்தம்.

உ - சபக்ஷசத்துவம், அது கடாதிகளிலுங் காரியத்துவமாகக் காண்கையால் - விருத்தன் ஏத்வாபாச நிரஸ்தம்.

௩ - விபக்ஷாத் வியாவிருத்தி, ஆத்மாவிற் காரியத்வமில்லாதிருக்கையால் - அனைகாந்திக ஹேத்வாபாச நிரஸ்தம்.

௪ - அபாதித விஷயத்துவம், பிரபஞ்சத்திற் குற்பத்தி லயங் காணப்படுகையா லீஸ்வர கர்த்திருத்துவ மில்லாமையி னென்ற தபாதிதமாகலில் - காலாத்தியயாபாதிஷ்ட ஹேத்வாபாச நிரஸ்தம்.

௫ - அசத்பிரதிபக்ஷத்துவம், உபாதான காரணமான மாயையுந் துணைக்காரணமான கன்மமும் ஜடமாகையினாலும், பசுக்களுடைய ஞானக்கிரியை யாணவத்தினாற் றடுக்கப்பட்டிருக்கையினாலும், இரண்யகர்ப்ப நாராயணாதிகள் சிருட்டியந்தர மீஸ்வரனா லுண்டாக்கப்பட்ட தேகேந்திரியாதிகளை யுடையவராகையாலும், பரமேஸ்வரனுடைய கர்த்திருத்துவஞ் சாதிக்கிறதற்கு - ப்ரகரணஸமனென்னு ஹேத்வாபாசநிரஸ்தம்.

இனி அநுமானந்தான்

தருமாதருமி யநுமானமென்றும்
காரணாத காரியானுமானமென்றும்
காரியாத் காரணானுமானமென்றும்
உபயாநுமானமென்றும்
நான்குபேதப்படும்.

இவற்றுள் ஈஸ்வர கர்த்ருத்வஞ் சாதிக்கிறதற்குப் பிரபஞ்சங் காரியசித்தமாகையா லிக்காரியத்தை யறிந்து பண்ணுவதாக ஞானக்கிரியா ஸ்வரூபமாகிய சத்தியுண்டு இச்சத்திக்குஞ் சத்திமானாகிய வீஸ்வரனுண்டென்று தருமா தருமியநுமானத்தினா லறியப்படும்.

எப்படியெனின்? மண்ணுந் திரிகையுந் தண்டுங் கடாதிகளை வேண்டினவனுங் குலாலனுமிருக்க, குலாலனுடைய வியாபா

ரமுண்டானாற் கடாதிகளுண்டு இல்லாதிருக்கவில்லை; அப்படி யே மாயையுங் கன்மமு மானமாக்களு மீஸ்வரனு மெப்போது முண்டாயிருக்கையினு மீஸ்வரனுடைய சமவேதசத்திப் பிரவிருத்தியுண்டாயிற் பிரபஞ்சமுண்டு இல்லையாகிற் பிரபஞ்சமில்லை யென்னு மன்வய விபதிரேகியனுமானத்தினால், ஜகத்கர்த்தா மகேஸ்வரனென்று நிச்சயிக்கப்பட்டது.

சர்வகர்த்தா மகேஸ்வரனென்று ப்ரதிஞ்ஞைபண்ணிக் குலாலனைத் திட்டாந்தம்பண்ணி யது பிரதிஞ்ஞாவிரோதமென்னை? அற்றன்று கர்த்திருத்துவம்.

† பிரயோசககர்த்திருத்துவமென்றும்.

* பிரயோச்சிய கர்த்திருத்துவமென்று

மிருவகைப்படும்.

† பரயோசகர்த்ருத்வம் - ஏவுகிறது.

* பரயோச்சிய கர்த்திருத்தவம - ஏவப்படுகிறது.

இவற்றுள் --

ஈஸ்வரனேவவிட்டதும் பிரயோசகர்த்தா, குலாலாதிகள் பிரயோச்சியகர்த்தாக்கள்

ஆகலிற் பிரதிஞ்ஞாஹாநியில்லை; திட்டாந்த விரோதமுமில்லை —

'மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே -அநாதியே யாணவத்தினுடைய தடையற்ற ஞானஸ்வரூபியா யான்மாக்களையும முபாதாநங்களையும் பொருந்திநின்று சிருட்டியாதியைந்தொழில்களையுஞ் சத்தியாலேபண்ணுமென் றிதன்பொருள்.

ஒருவ னொருத்தி யென்றென் றுருமையாகக் கூறிய வாசிரியர்கருத்து, இணையற்ற வீஸ்வர னிமித்தமு மீஸ்வர சமவாயு

சத்தி யோனியும், ஆன்மாக்களுடைய கன்மந் துணைக்காரண மும், ஒடென்றதனால் விந்து வுபதானமாகுமளவி லிவ்வேதுவி னாற் பிரபஞ்ச முண்டாயிற்றென்பது.

இதற்குச்சம்மதி

* 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌕𑌃 𑌪𑌰𑍋 𑌯𑍋
𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 । 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌦𑍀𑌶𑍍𑌵𑌰 𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂
𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌸 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌸 𑌸𑌹𑌕𑌾𑌰𑍀
𑌸𑌂𑌤𑍍𑌤𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑌾𑌯𑌞𑍍𑌚 𑌸𑌮𑍈𑌹𑌤𑍍𑌤𑌕𑌃 ।

இதனால் - ஜகத்து நிமித்தகமென்றது தள்ளப்பட்டது.

வருமுறை வந்துநின்று போவது மாதலாலே - என்றத னால் பிரபஞ்ச நித்தியம், இதற்கொரு கர்த்தாவும் வேண்டா! என்கிற சார்வாகமதமும், பூர்வமீமாம்சமதமுநிரஸ்தம்.

தருபவ னொருவனவேண்டும் - என்றதனால் நிரீஸ்வரவாதி கண்மதமும், ஒருவனென்றதனான் - அநேகேஸ்வரவாதி மதமுந் தள்ளப்பட்டது.

தானமுத லீறுமாகில் - என்றதனால் நித்தியனென்று கூறப்பட்டது

மருவிடும் - என்றதனால் சகலவ்யாபி யென்னப்பட்டது.

அநாதிமுத்தன - என்றதனால் ஆதிமுத்தரான வனந்தேஸ் வராதிகளைப் போலன்றி ஸ்வதந்திரனென்று கூறப்பட்டது.

சித்துரு - என்றதனால் தேஹேந்திரியாதி சஹிதரெல்லாம் பிரயோச்சியகர்த்தாக்கள். தேஹேந்திரியாதி ரஹிதனாய்ச் சுத் தசைதன்னிய ஸ்வரூபியாயுள்ள சிவனேபரம். தத்சந்நியோக பலத்தினாலபரராயுள்ள வனந்தேஸ்வராத் தியதிகார புருஷ

ரெல்லாங் கிருத்யங்களைப் பண்ணுவார்கள். சிவனுக்குக் கேவல சைதந்யவிபமே ஸ்வரூபமல்லது ஸதுலசூக்கும ரூபயருபமி வென்றனறது.

* तदुक्तं देवीकालोत्तरे — [illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

ஆகையாற் சாத்திரத்தினலறியு மறிவிற் சந்தேகம் வாராதபடி யனுமானத்தினுற் சிவனை யறியுமுறைமையை யுணர்த்துகின்றார்.

உலகமெல்லாம் தருபவன் ஒருவன்வேண்டும் - சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவ மீறாகும் தத்துவ தாத்துவிகமாகிய உலகொரு கர்த்தாவையுடையது. இது...பிரதிஞ்ஞை.

காரியத் தனமையால். இது வருவித்த.. ஏது.

உலகிது காரியமன்று; உமதேதுச் சுவரூபா சித்தம், நமதேதுச் சுவரூபா சித்தமன்று; உலகு காரியம்.—

ஒருவனொடொருத்தி யொன்றென் றுரைத்திடு மாதலாலே - சரீரத்தைப்பற்றி யசேதனமாகவு மொருவனொடொருத்தி யொன்றென் றசேதமாகவு மறையப்படு மாதலால்,—

வருமுறை வந்துநின்று போவது மாதலாலே-இவ்வுளதாகி உளதிலதாகி உற்பத்தி, திதி, நாசமுறு மாதலால்;

இப்படிக் காரியத்துவ நிச்சயமாதலால் யாதொன் றியாதொன்று காரிய மது கர்த்தாவையுடைத்து, எப்படி ? கடம், இது ... திருட்டாந்தம்.

அப்படி யுலகிது காரியம். இது உபநயம். ஆகையால் அப்படி யுலகிது கர்த்தாவையுடைத்து...இது நிகமனம்.

அந்தக் கர்த்தாவின திலக்கண மெப்படியென்னில்,—

தான்-அந்தக் கர்த்தாவானவன்,—

முதலீறுமாகி மருவிடும் - சிவதத்துவ முதற் சுத்தவித்தியா தத்துவ மீருகுஞ் சாதாரண வசாதாரண சாதாரணாசாதாரணங்களாகிய தத்துவதாத்துவிக புவன சூக்குமதேக தூலதேக போக்கிய சுத்தாத்துவப் பொருள்களைச் சுத்தமாயையினின்றுஞ் சிருஷ்டித்துத் திதித்துச் சங்கரித்து,

ஸ்ரீமத் அநந்தேசுரத் துவாரத்திலே மகாசிருட்டியிற் காலதத்துவமுதற் பிருதிவிதத்துவ மீருகுஞ் சாதாரண வசாதாரண சாதாரணாசாதாரணங்களாகிய தத்துவ தாத்துவிக புவன சூக்குமதேக தூலதேக போக்கிய சுத்தாசுத்த வசுத்தாத்துவப் பொருள்களை அசுத்தமாயையிலே நின்றுஞ் சிருஷ்டித்துத் திதித்துச் சங்கரித்து,

குணதத்துவத்துள்ளும் மத்திமப் பிரளயத்திற் பிரகிருதியின தக்கிரத்து நிலயராகிய, ஸ்ரீமத் ஸ்ரீகண்ட நாதத்துவாரத்திலே, மத்திம சிருஷ்டி தோறும் அசாதாரணம் மகாப்பிரளயபரியந்தம் இருக்குமென்றுகொண்டு, குணதத்துவ முதற் பிருதிவி தத்துவ மீருகுஞ் சாதாரண அசாதாரண சாதாரணாசாதாரண தத்துவ தாத்துவிக புவன திவ்விய தூலதேக போக்கிய அசுத்தாத்துவப் பொருள்களையும், பின்னும் குணதத்துவத்துள் மத்திமப் பிரளயத்திற் பிரகிருதியின தக்கிரத்து நிலயராக.

கிய பிரம விட்டுணுத் துவாரத்தினாலேயும் பிரமாண்டத் துண்ணிலையராகிய பிரமவிட்டுணுத் துவாரத்தினாலேயும், சில திவ்யாதிவ்விய தூலதேக போககியவசுத்தாத்துவப் பொருள்களையும் பிரகிருதியிலேநின்றுஞ் சிருஷ்டித்துத் திதித்துச் சங்கரித்து —

முதனடு வீறுமாகி மருவிடும் -என்றுகொள்ளுதலால், முதலென்று சொல்லும் சிருட்டி கர்த்தாவாயும், நடுவென்றுசொல்லும் திதிகர்த்தாவாயும், ஈறென்று சொல்லும் சங்காரகர்த்தாவாயும் பொருந்திடும்.

அதுவன்றிச் சுவபாவத்தினாலேயும் அநந்தேசுவர த்வாரத்தினாலேயும் திரோபாவ கர்த்தாவுமாம், சுவபாவத்தினாலேயும் அநந்த ஸ்ரீகண்டாதித் துவாரத்தினாலேயும் அநுக்கிரக கர்த்தாவுமாம்.

சரீரிகளே கர்த்தியம்பண்ணுதலால், அசரீரியாயிருக்கின்ற உமது கர்த்தாவுக்குக் கிருத்தியமெப்படிக் கூடும்? சத்தியம். மூர்த்தி யிரண்டுவிதம் —சலமென்றும் அசலமென்றும். சலமாயிருக்கின்ற மூர்த்தி யவர்க்கில்லாதபடியினாலே,—

அநாதிமுத்த சித்துருமன்னி நின்றே - அசலையாகிய நித்தியமுத்த சிற்சத்தி மூர்த்தி பொருந்தி நின்றே.

தான் முத லீறுமாகி மருவிடுமென்று பொருட்புணர்ச்சி போதிக்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இங்ஙனம் அளவையிலக்கணங் கூறியவாசிரியர், அவ்வளவையா லுணரப்படு மிப்பொருள்களுண்மை மூன்றனுக்கிரத்

தா னுணர்த்துவான் றொடங்கி, முதற்சூத்திரத்துப் பதியுண்மைகூறு அளவை கூறுகின்றார்.

எ - து. அவனவளதுவெனனும் அவயவப்பகுப்புடைய பிரபஞ்சம், தோனறுதற்குரிய சற்காரிய முறையாற் றோன்றிநின்று அழிதலுடைமையால், அதுதன்னைத தோற்றுவிப்பா னொருவினை முதலை அவாய்நிற்கும். ஆகலான, அவ்வுலக மொடுங்குதற்கு ஏதுவாய் நின்ற சங்காரகாரணனே! அஃதொடுங்கிய பினனும அநாதிமுத்தசித்துருவாய் நிலைபெற்று நின்று, அநாதிபெத்த சித்துருவினபொருட்டு மீளவு மவ்வுலகத்தை முனபோல மருவுவிசகும அதனால் அவனேயுலகிற்கு முதற்கடவுளெனபதாம்.

"கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுககளே" என்பதனுட் கொள்ளப்படாதெனபதுபோல, போவதென்னுமொருமை அததொழின்மேனினறது

உம்மை இறந்தது தழீஇயிற்று.

ஒருவனையெனறு மிரண்டாவதும், தானேயென்னும் பிரிநிலையேகாரமும் விகாரததாற றொக்கன.

ஈறு ஆகுபெயர்.

உம்மைசிறப்பு. ஆதியென்பதுபெயர்.

மருவுவித்தல் முனபோலவே தோன்றச்செய்தல்.

"குடிபொன்றிக்-குற்றமு மாங்கே தரும்" என்றாற்போல விவ்விகுதி விகாரததாற் றொககது.

முழுவதுமொடுங்கியபின முதல்வனெவ்வாறு நிற்பனென்; னுங் கடாவைவிடுத்தற்கு அநாதிமுத்த சித்துருவாய் மன்னிநின்று என்றார்.

ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

அநாதிமுத்த சித்துருவென இனம்பற்றி யடையடுத்தலின், அநாதிபெத்த சித்துருவுமுண்டென்பதூஉம், மீளவுமருவுவித்தல் அதனைப்பொருட்டென்பதூஉம் பெற்றாம். "மலத்துளதாம்" என்றார் முதனூலாசிரியரும்

ஒருவனோடொருத்தியொன்றென்றுரைத்தலாகிய அடைமொழி, வந்துநின்று போதலாகிய ஏதுவைச் சாதிக்குங் குறிப்பேதுவாய் நின்றது.

இது மூன்றெழுவாயும் மூன்றுபயனிலையுமுடைத்தாய் முதனூல் முதற்சூத்திரம்போல முக்கூற்றதாமாறுகாண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் சிவஞானபோதமும் சிவஞான சித்தியும் ஒரு கருத்தா விருக்குமென்று பரபட்சத்தி லிந்த நூலுக்குச் சொன்ன பாயிரத்தில் நூற்பெயர்சொன்ன திருவிருத்தஞ் சொல்லும்.

அஃதெங்ஙனே யென்னில்? போத மிகுத்தோர் — முற்சனனத்திற் செய்த சரியை கிரியா யோகங்களின முதிர்ச்சியினா லுண்டாகிய சிவஞானத்தின் மிகுதியாலே பூலோகத்திலேவந்தவதரித்த பெரியோர்களுக்கும்,—தொகுத்த பேதமைக்கேபொருந்தினோர் — அநாதியே பொருந்தி யிருக்கிற அஞ்ஞானத்தோடே கூடி யொன்று மறியா திருக்கிறவர்களுக்கும்,— இவர்க்கன்றி - இந்த இரண்டு பேர்க்கு மன்றி, — சதிப்பாற் போகவேதுநெறியெனு மவர்கட் கறிய - ஜநந மரண துக்கத்துக்கஞ்சி மோக்ஷத்தைப் பெறுகைக்கு வழியே தென்று தேடுகிற விருப்பத்தை யுடையவர்களுக் கறியத் தக்கதாக, —

மூன்று ளிறைவ னருணந்தி தனக் கியம்ப - முற்காலத்திலே ஸ்ரீகண்ட பரமேஶ்வரன ஸ்ரீ நந்திகேஶ்வர் தம்பிரானாற்கு அருளிச்செய்த ஞானசாத்திரத்தை, — நந்திகோதிலருட் சனற்குமாரர்க்குக்கூற - ஸ்ரீநநதிகேசதேவ தம்பிரானார் குற்றமற்ற திருவருளினோடே கூடியிருககிற சனற்குமார பகவானுக்கருளிச் செய்ய,—குவலயதது லவ்வழி யெங்குருநாதன்கொண்டு - சனற்குமார பகவானுதியாகச சத்தியஞான தரிசனிகள் பூலோகத்திலே யந்தச்சாத்திரத்தைக் கொண்டெழுந்தருளி வந்து எனனுடைய வாசாரியனாகிய மெய்கண்டதேவ தம்பிரானாற்கு அநதக் கிரமத்திலே அருளிச்செய்ய,—தீதகல வெமக்களித்த ஞானநூலைத் தேர்ந்துரைப்பனசிவஞான சித்தியெனறே -மெய்கணடதேவ தமபிரானார் எனனுடைய வஞ்ஞான நீங்க வொனறுக்கும் பற்றாத வெனக்குத் திருவுள்ளம்பற்றின சிவஞானபோததிலுண்டாகிய சம்பிரதாயத்தை யாராய்ந்து பார்த்து, ஒன்றுமறியாத நானுஞ் சிவஞான சித்தியென்று ஒருசாத்திரமாகச் சொல்லாநின்றேன.

எனவே சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரமும் அந்தச் சூத்திரங்களுக்குச் சூர்ணிகளு மந்தச் சூர்ணிகளுக்கெண்பத் திரண்டு வெண்பாவு மாகச் சொல்லும் இந்த மூன்றுவகையிலு முள்ள வாத்ததைத் தாமெடுத்துக கொண்டு, சுபட்சம் பன்னிரண்டு சூத்திரத்துக்கு மாக முன்னூற் றிருபத்தேழு திரு விருத்தமாக வருளிச்செய்தா ரென்பது கண்டு கொள்க.

அளவைப் பிரமாணத்தில் 'அநாதியேயமலனாய்' என்ற இருவிருத்தத்தில் 'உணர்த்துதலுபதேசந்தான்' என்றுசொல்லுகையால், மேல்உலகாயுதன் அப்படியொரு பதியுண்டென்றும், ஒரு

பசுவுண்டென்றும், நீர்சொன்னது உள்ளதொன்றல்லவென்னு; பினனையுள்ளதேதென்ன, பிரத்தியட்சமாயுள்ள நாலுபூதங்களுமே யுள்ளது, அது நித்தியமுமாய் ஜடமுமாய் நிற்குமென்று சொல்ல: இல்லையென்ற கர்த்தாவை யுண்டென்றும்,அவன் நித்தியமென்ற பிறவஞ்சத்தை யனித்தியமென்றும், மேல் மறுத்தருளிச் செய்கிறா.

ஒருவனோ டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம் - நீ நித்தியமென்ற பிரவஞ்சம் அவ னவ ளென்ற யுயர்திணையாயும், அது வென்ற அஃறிணையாயும், மூன்றுவகை யாகச் சொல்லப்பட்ட பிரவஞ்சங்க ளெல்லாம்,—வருமுறை வந்து நின்று போவது மாதலாலே -தோன்றுகிற கிரமத்திலே தோன்றி, நிற்கிற கிரமத்திலே நின்று, அழிகிற கிரமத்திலே யழிவதுமாய் வரும். ஆகையாலே பிரவஞ்ச நிமித்தியம். அதுவன்றியும் பிரவஞ்சம் ஜடமா யிருக்கபடியாலே இதுதானே காரியப்படமாட்டாது. ஆகையாலே,—தருபவன ஒருவன் வேண்டும் - இவயிர்றை யுண்டாககுவா ளொரு கர்த்தாவுண்டாகவேணும். பாஞ்சராத்திரி பிரபஞ்சஞ் சிருட்டி கத்தாவாலே யுண்டாவதொழிந்து சங்காரகாத்தாவாலே யுணடாகுமோ வென்ன? அவனைமறுத் தருளிச்செய்கிறார்,—தானமுதலீறுமாகி மருவிடும் - சங்காரகத்தாதகானே சிருட்டி காத்தாவாயும்,திதிகத்தாவாயும், தோற்றிவிககவு மிரட்சிககவுங் கர்த்தாவாய்ப் பொருந்திநின்றுசெய்வன. அப்படிச்செய்யில்,அவனையுமொருகத்தாப் படைககவேண்டுமென்று பாஞ்சராத்திரிசொல்ல,அவனை ஒரு கததாப்படைக்கவேண்டுவதில்லை; அஃதெங்கனே என்னின? அநாதிமுதத சித்துரு மன்னிநின்றே - அநாதியே சர்வத்தையும் பொருந்திநின்று காரியப்படுத்துகச் செய்தேயுந் தானொன்றுடனும் தோய்வற நிற்கிற ஞானமே தனக்குத் திருமேனி

யாக வுடையவன். ஆகையாலே தனக்குவேண்டின வடிவு தானேகொண்டு நின்று செய்வன.

இதனாற்சொல்லியது உலோகாயுதன் பிரவஞ்ச நித்திய மெனறுங் கத்தாவில்லையெனறு மவனை மறுததது; பிரவஞ்ச மநித்திய மெனறுங் கத்தாவுண்டென்றும் சங்காரகததாதானே சிருட்டியையுஞ் செய்வனெனறு முறைமையையு மறிவிததது. ()

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

ஒருவனே டொருத்தியொன்றென றுரைத்திடும்உலகமெல்லாம்-அவனென்றும் அவளென்றும் அதுவெனறும இவவாறுஅவயவப் பகுப்புஉடைத்தாய்ககூறபபடுமபிரபஞ்சத்தொகுதி,—வருமுறை-தோனறுதற்குரிய சற்காரிய முறையால்,— வந்துநினறுபோவதுமாதலாலே-தோனறிநினறழிதலுடைமையால்,—தருபவ னொருவனவேண்டும - அதுதனனைத தோற்றுவிப்பானொரு வினைமுதலை யவாய்நிற்குமாகலான,—ஈறுமாகி - அவ்வுலக மொடுங்குவதற் கேதுவாய்நினற சங்காரகாரணனே,—அநாதிமுத்த சித்தரு மன்னிநின்றே - அஃதொடுங்கிப் பின்னும் அநாதிமுத்த சித்தருவாய் நிலைபெற்றுநினறு,—மருவிடும்- அநாதிபெத்தசித்தருவின் பொருட்டு மீளவு மவ்வுலகததை முன்போல மருவுவிக்கும்,—தானே முதல் -அதனா லவனே யுலகிற்கு முதற்கடவு ளெனபதாம்.

இஃது முதனூன் முதற்சூத்திரம் போல மூன்றெழுவாயு மூன்றுபயநிலையுமாய் முக்கூற்றதாமாறுகாண்க.

மறைஞானதேசிகர் உரை.

உலகாயுத னிப்பிரபஞ்சத்துக்குத் தோற்ற மொடுக்க மில்லா திருக்கவு மஃதுண்டென்று சொன்ன தெப்படியென்று சொல்ல; அவனை மறுத்து மூன்று விருத்தத்தால் உரைத்தருகிறார்.

உதிப்பது மீறுமுண்டென் றுரைப்பதி கென்னைமுன்னோர், மதித்துல கநாதியாக மன்னிய தென்ப னென்னி, னிதற்கியா னநுமானத்தி யெடேனிப் பூதாதி யெல்லாம், விதிப்படி தோற்றிமாயக் காணலான் மேதி னிக்கே. (௨)

(இ-ள்) உதிப்பதுமீறுமுண் டென்றுரைப்பதிகென்னை — இப்பிரபஞ்ச மொருகர்த்தாவாலே தோன்றிநின் றொடுங்குமென்று நீர் சொல்லிய தென்னை, அஃதெக்காரண மென்னில்?

முன்னோர் மதித்துல கநாதியாக மன்னிய தென்பனென்னில் — ப்ரகஸ்பதிபகவான் முதலிய வாசிரியமார் இப்பிரபஞ்சத்தை யநாதியென்று தணிக்க சொல்லுவர்கள் என்று நீ சொல்லில்?

இதற்கியானநுமானத்தி யெடேன் — இந்த விசுவந்தானே தோன்றிநின் றொடுங்குமென்பதற் கநுமானமுதலிய பிரமாணங்களை யெடுத்துக்காட்டிச் சொல்லுவதில்லை. அஃதெக்காரணமென்னில்?

இப் பூதாதி யெல்லாம் விதிப் — நீ பிரத்தியட்ச வாதியல்லோ, உனக்கநுமான மெடுத்துச் சொல்லுவதில்லை; இந்தப்பூ

படி தோற்றிமா மியினங்களை பூதாதியான சரீரங்களெல்
யக் காரணமான லாமீசுரன விதிக்கப்பட்டபடியே தோன்றி
மேதினிக்கே நின்றழியக் காரணமானதையாவிதனை யுள்ளபடி
யுணர்வாயாக எ-று

இதற்குப் பிரமாணம் ஸ்வாயம்பு வாகமம் எனவறிக (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இச்சூத்திரத்தி லர்த்தங்களை யொவ்வொருமதத்தினவா களொவ்வொருபதத்தைப்பற்றிச் சங்கைபண்ணி யதற் குத்தரஞ்சொல்லி ஜகத்கர்த்தா வீஸ்வரன ஏகனே அநேகானமாக களுடைய மலாதன் றானு குணமாகச சுத்தாசுத்தமாயைகளிற் றனு காண புவன போகங்களை யுண்டாக்கிப் + பாலித்தழிப் பனெனபதை மேற்கூறுகின்றது

+ பாலித்தல் - திதித்தல்

இதில் 'வருமுறைவந்துநின்று போவதுமாதலாலே' என பதற்கு, லோகாயுதன சங்கையு முத்தரமுமாக, மேன மூன்று விருத்தத்தாற் கூறுகின்றது.

உட்மை இறுதிக்கணின்று விளக்கினவென்னும்மை

ஏகாரம் ஈற்றசை.

சித்துரு என்பது எழுவாய், மருவிடும் என்றது பயனிலை

* இக்கருத்து - க - செய்யுளினகுறை, ஈண்டு சிங்க நோக்காய் இச்செய்யுளில் அதிகாரமாய் எழுதப்பட்டுள்ளது.

(உதிப்பதுமீறு ... எனவில்) - இச்சூத்திரத்திற்குத் தோற்றமுறைசமு முண்டென்றென்னை, பெரியோர்கள் விசாரி

த்துப்பார்த்து ஜகத் தநாதியுமாய் நித்தியமுமாயுள்ளதென்று சொல்லுவர்களென்று சொல்லின்? (இதற்கியானறுமாறுதி .. மேதினிகதே) எ - து நீ தோற்றமுமொடுக்கமுமில்லை ஸ்பாவமாமென்ற வசநத்திற் கறுமாறுகமங்கள்கொண்டுசொல்லேன; பிரத்தியக்ஷமாகப் பூதங்களை முதற்காரணமாக நரபசு பக்ஷி கிருமி கீடாதி தேகங்களும், விருக்ஷகுள்ம லதா தாபரபாஷாணுதிகளெல்லாம், இன்னதிலின்னபடிரூபமாயினவடிபலித்து இன்னபடிநசிக்குமென்று வேதாகமங்கள் சொன்னபடியே, மகாபூதங்களினின்றுந் தோற்றமுமொடுக்கமும் பூமியினகண்ணே காணலால் பூமிபாதிமகாபூதங்களுங் காரியவஸ்துவாயிருக்கையினுல், இதற்குமொருகாரணமும், அக்காரணத்திற்காரியத்தையுண்டாக்குங் கர்த்தாவுமுண்டென்றிதன்பொருள்.

பூதாதியென்றதில் வேற்றுமை தொக்குநின்றது.

இதனுல்ஜகத்து-சாதியே! வேதத்தில்ஜகத்தநாதியென்றிருக்க விவன்சாதியென்றதுவேதவிருத்தமெனின்? அநாதியென்றவாக்கியத்திற்குப பிரபாகரன் ஆதியிலே தாற்பரிய மாகையால் விரோதமில்லை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

---0---

உலகொரு கர்த்தாவையுடைத்து, காரியமாதலால், உலகு காரியம், ஒருவனுலொருதி யொன்றெனறுணைத்திடுமாதலாலும், வருமுறைவந்து நின்று போவதாதலாலும், என்று காரியத்தைச் சாதித்து அதனுற் கர்த்தாவைச் சாதித்தீர்; அது கூடாது. பிருதிவிமுத லுலகிற் றேற்றநாசங் காணேமென்று லோகாயுதன் ஆருகதன்முதலோர் சொல்ல, மறுத்துணர்த்துகின்றார்.

உதிப்பது மீறு முண்டென் றுரைப்பதிங் கென்னை - உலகுக்கு உற்பத்தியாதலு நாசமாதலு முள்ள தென நிசைப்பதேது,—முனனோர் - தர்கக முதற்சாததிர முணர்ந்தோர்,—மதித்து - தர்க்கித் துநிச்சயம்பண்ணி,—உலகு - பிரபஞ்சம்,—அநாதியாக - எப்போது மிப்படியிருப்பதாய்,—மன்னியதெனபர் - நிலைபெற்றதெனறு நிகழத்துவர்,—எனனில் - எனறு நீ சொல்லில்,—இதற்கு - நீ சொல்லு மிநதவார்த்தைக்கு,—யான - நான் நீ பிரததியக்ஷவாதி யாகையினாலும், இது பிரத்தியட்ச சித்தமாகையாலு ம,பிரத்தியக்ஷப் பிரமாணமாததிரமன்றி,—அநுமானாதி யெடேன - அநுமானுகமப்பிரமாணங்களைத் தொடேன, பின்னை யறியுமாறெப்படி யெனனில்—இப்பூதாதியெல்லாம் - பூதங்களையாதியாகக் காரணமாக வுடைதாய பூதபரிணாமமாகிய உட லூர்மர முதலிய விவவுலகிற்பொருநதிய பொருள்களெல்லாம்,—விதிப்படி தோற்றிமாயக்காணலான மேதினிக்கே - பூமியின கண்ணே கன்மமுறைமையி லீசுரசங்கற்பத்தினு லுற்பத்தி நாசமாகப் பிரததியட்சப் பிரமாணமாகிய சிற்சததிபொருநதிய நேததிரத்தினுற் பார்த்தலால்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனி அம்முனறனுள் முதற்கூற்றை இருபத்தேழுசெய்யுளான் வலியுறுத்துவான றொடங்கினுர்.

எ - து. உலோகாயதநூலுணர்ந்தோர் காட்சியளவைக்கெய்தாதன பிரமாணமாகாவென மதித்து உலகம் நித்தமென்பாராகலான், நிலைத்தொழிலான்றேயன்றி ஏனையிரண்டு தொழில்களுதன்மை பெறப்படாதெனின்?—ஈண்டு நீ விதித்த விதி

யாகிய நிலைத்தொழில்போலவே ஏனையிரண்டு தொழிலும் உடனிகழுக காண்டலான, இதனைச் சாதித்தற்கு நீ கொண்ட காட்சியளவை யொன்றே அமையுமாகலின், ஈண்டு வேறு பிரமாணங்க ளெடுத்துக்காட்டல் வேண்டாமென்பதாம்.

படி உவமவுருபு.

"தோற்றமுமீறு முள்ளதனபாலே கிடத்தலின்" என்றார் முதனூலாசிரியரும.

மேதினிக்கென்பது உருபுமயக்கம்.

இதனானே உலோகாயதன மதம்மறுத்து நிகழுமாசங்கையைப் பரிகரித்து முத்தொழிலுண்மை சாதிக்கப்பட்டது.

பரபக்கத்துட் சித்தாந்தப் பார்வையாற் பரபக்கத்தாரை மறுக்கார்; ஈண்டுப் பரபக்கப் பார்வையால் அவர் கூறு மறுப்பைப் பரிகருத்துச் சித்தாந்தத்தை நாட்டுகின்றார் இவை தம்முள் வேறுபாடையாகலிற் கூறியதுகூறலன்மையுணர்க.

வேதாந்தநூ லிரண்டாமத்தியாயத்துள் இரண்டாம் பாதத்தினும் முதற்பாதத்தினுங் கூறியனவு மிவ்வாறே கொளளப்படும்.

நிரம்பவழகியருளா வருமாறு.

———o———

மீளவு முலோகாயதன் பிரபஞ்சத்துக்குத் தோற்ற மொடுக்க மில்லையாயிருக்க வுண்டென்ற தெப்படியென்று சொல்ல, அவன் மதமறுத்து மேலருளிச்செய்கிறார்.

உதிப்பதுமிறுமுண்டென் றுரைப்பதிங்கென்னை முன்னோர் மதித்தில கருதியாக மன்னியதென்பர் - பிரபஞ்சத்துக்குத்

தோற்றமுமொடுக்கமு முண்டென்று சொல்லுகிறபடி யெப்படியே! ஞாதாக்கள் விசாரித்துப் பார்த்துஇந்தப்பிரபஞ்ச மநாதியே நிலைபெற் றுள்ளதென்று சொல்லுவர்,—எனனில்-என்று நீசொல்லில்,—இதற் கியானநுமாதியேடெனு-நீயிப்படி நித்தியமென்று சொல்லுகிற பிரபஞ்ச மநித்தியமென்று காட்டுகிற விதனுக்கு நான அநுமான முதலான பிரமாண மெடுத்துசசொல்லவேண்டுவதில்லை,—இப்பூதாதி யெல்லாம் விதிப்படி தோற்றிமாயக காணலால் மேதினிக்கே - இந்தப் பூதகாரியமான தேகங்களெல்லாம் பரமேசுரனாலே விதிக்கப்பட்ட விதியின வசத்திலே இந்தப் பூமியினகணனே தோனறி நின் றழியப் பிரத்தியட்சமாகக் காணலாம்

உலகாயுதனே நீர்சொன்ன கத்தாவென்ப தொன்றில்லை நானு பூதங்களுமே யுள்ளது அது நித்தியமாயிருப்ப தொனறென னை;ஒரு வடிவிலேநின்று மொருவடிவு தோனறி நின் றொடுங்குகலால் பிரபஞ்ச மநித்தியமெனறும்,இது ஜடமானபடியினாலே இதைக்கொண்டு செய்வா னொரு கர்த்தாவுண்டெனறும், அவனை மறுத்தற்குப் பிரமாணம்—சிவஞானபோதம் "பூதாதியீறு முதலுந்துணையாகப்,பேதாய்த்திதியாகும் பெத்திமையின்-மேலாதாரோ, வொனறொன்றிற் றோனறி யுளதாயிறக்கண்டு, மனறெனறு முண்டென்ன வாய்ந்து."என்றும, பரபட்சம் "பூதமானவை நித்தமென்று புகன்றதெனனை யுருககளா, யாதாலோடழிவாகுமாதலி னாககுவோரவர் வேண்டுடுங், காதலோடுகடாதிமண்கொடியற்றுவோருளர்கண்டனஞ்,சிதனீரி னொழுகதகொப்புனிகழ்ந்தமாருக செய்கையே." என்றும் "பூதமானவைகாரியங்கள் பொலிந்துமன்னியழிந்திடு, மாதலாலொரு நாதனிங்குளனென்றறிந்துகொளையனே, பேதமான கடாதிமண்ணினி

ல் வந்தவாறு பிடித்திடிற், கோதிலாத குலாலனுல்வருசெயி னையென்று குறிப்பதே." என்னுமது கண்டுகொள்க."

சித - ப, ௫ - ௨௪ - செ.

இதனாற் சொல்லியது உலகாயுதன் பிரபஞ்ச நித்தியமென்றும கத்தா வில்லை யென்றுஞ் சொல்ல, அவனை நோக்கிப் பிரபஞ்ச மநித்தியமென்றுங் கத்தா வுண்டென்று மறுத் தருளிச்செய்த முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

முனைந்தோர் - உலகாயதநூ லுணர்ந்தோர்,—மதித்து-காட்சியளவைக கொப்பதாதன பிரமாணமாகாவென மதித்து,—உலகநாதியா மனாதியதென்பார்- உலகம் நித்தமாக நிலைபெறுமென்பர் ஆகலான,—உதிப்பது மீறு முண்டென் றுரைப்பது-நிலைதொழிலேயன்றி யேனைத்தோற்றநாசங்களு முண்மைகூறுவது,—இங்கெனனை யென்னில் - இவ்விடத்துப் பெறப்படாதெனின,—விதிப்படி-நீவிதித்தவிதியாகிய நிலைத்தொழில்போலவே,—மேதினிக்கு-இவ்வுலகின்கண்,—இப்பூதாதியெல்லாம்-இப்பூதமுதலிய பிரபஞ்சங்களெல்லாவற்றிற்கும்,— தோற்றிமாயக காணலான - தோற்றநாசங்களாகிய இவ்விரண்டுதொழிலு முடனிகழுக காணலான்,—யானதற்கு-யானிதனைச் சாதித்தற்கு, — அநுமானாதியெடேன் - நீகொண்ட காட்சியளவையொனறேயமையுமாகலி னீண்டநுமானமுதலிய வேறுபிரமாணங்க ளெடுத்துக்காட்டுவே னல்லே னென்பதாம்.

இதனானே உலகாயதமதம்பற்றி நிகழு மாசங்கையைப் பரிகரித்து, முத்தொழிலுண்மைசாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இயல்புகாண் டோறறிமாய்கை யென்றிடி னியல்பினுக்குச், செயலதின் றியல்புசெய்தி செய்தியே லியல்பதினுறு, மியல்பதாம் பூதந்தானே யியற்றிடுஞ்செய்தியென்னிற, செயல்செயவ ொருவன்வேண்டுஞ் செயற்படும் சேதனத்தால். (௩)

(இ-ள்.) இயல்புகாண்டோ றறிமாய்கை — இந்தப் பிரபஞ்சந் தானேதோன்றித் தானேயழிகை யியல்புகாணும், இதற்குக் கர்த்தா வேண்டுவதில்லை

என்றிடின — என்றுநீ சொல்லின்?

இயல்பினுக்குச் செயலதினறு — நீசொல்லுகிற வியல்பாகிய பூமிமுதலிய நாலுபூதத்திற்குந் தாந்தாஞ்செய்யுந் தொழிலில்லை.

இயல்புசெய்தி — பூதங்களினது தத்தம் வ்யாபாரந்தானே யியல்பெனின?

செய்தியே லியல்பதின்றும் — நீசொல்லுகிற தொழிலையே யியல்பென்று சொல்லுவையாகில்? அதனைவிட்டுவிடு.

இயல்பதாம் பூதந்தானே யியற்றிடுஞ் செய்தியென்னின — சுபாவமா யிருக்கப்பட்ட பூதங்கடானே தந்தந்தொழில்களைச்செய்யாநிற்குமெனின்? பூமிகம்பிப்பானேன், ஓரிடத்திலேநீர்சுடுவானேன், ஓரிடத்திலே யக்நி சுடாதிருப்பானேன், வாயு சலியாதிருப்பானேன், இப்படிக் காண்கையிருலே

செயல் செய் வாரொருவன் வேண்டுஞ் செயற்படுஞ் சேதனத் தால்	பூதங்கள் ஜடமாகையால் வித்தத்தொழில்களைச் செய்வா ரொருகர்த்தாவேண்டுங்காண்; ஜடமானபூதந்தானே காரியப்படமாட்டாது. ஆகலால் ஒருசேதனன காரியப்படுத்தக் காரியப்படும். எ - று.

ஏகாரம் தேற்றம்.

இதுமுதலாறு திருவிருத்தத்துக்கும் ப்ரமாணம் பார்க்கையையனுமாகமமெனவறிக (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——(——

இயல்புகாணே டோரறிமாய்கையெனறிடி லியல்பினுக்குச் செயலதினறு - மஹாபூதங்களிற் றேகாதிகடோற்றுகிறது மொடுங்குகிறதும் ஸ்வபாவமே யெனின ? ஸ்வபாவமானது ஷட்பாவவிகாரம பொருநதாது,—இயல்புசெய்தி செய்தபே லியல்பதினாறும-இங்ஙனந்தொழிற்படுவதே ஸ்வபாவமெனின ? விகாரப்படுகிறது ஸ்வபாவமல்லவாம்,— இயல்பதாம் பூதந்தானே யியற்றினு செய்தியெனனிற் செயல்செய்வா ரொருவனை வேண்டும் - இயல்பாயுள்ள பூதங்கடானே தேகாதிகளைத் தனனிடத்திலுண்டாக்குமெனின்? இநதக்காரணத்திற் காரியத்தைஉண்டாககுகிறவ னொருவன்வேண்டும்,— செயற்படுஞ்சேதநத்தால் - பூதங்க ளசேதநமாகையாற் கர்த்தாவினாலே காரியப்படுமென் றிதனபொருள்.

இதனாற் சுவாபாவிக மன்று ஜகத்ஏதுக மென்றது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

உலகுக் குற்பத்தி நாசமுளது, அஃதொரு கர்த்தாவை விரும்பாமலியல்பி லாமெனின் ; மறுத்துணர்த்து கின்றார்.

இயல்புகாண் டோற்றி மாய்கை யென்றிடில் - உபாதான காரணத்திற் றோற்றி யொடுங்குவது காரியப்பொருளினது சுபாவமென்றுநீ சொல்லில்,—

இயல்பினுக்குச் செயலதின்று - இயல்பாயிருக்கும் பொருளுக் கொருபோதுண்டாய் ஒருபோதின்றாய்க் காரியப்படுந் தன்மையின்று,—

இயல்புசெய்தி - அப்படிக்காரியப்படுவ தப்பொருட் சுபாவமென்று நீசொல்லில்,—

செய்தியே லியல்பதின்றாம் - காரியப்படுமாகில் அப்பொருட்குச் சுபாவ மில்லையாம். அப்படிச் சொல்ல வேண்டுவதில்லை, செய்தி யியல்பதாம்; உற்பத்திநாச யோக்கியமாகிய வியல்பில்லாத பொருள் சர்வ சாமர்த்தியமுடைய கர்த்தாவினாலுந் தோற்றுவித் தொடுக்கப்படாது ; ஆதலால் காரியப்பொருளுற்பத்தி நாசமாகு மோரியல்புடையது, ஈரியல்புடைய தன்று. அப்படியாயி னுற்பத்தி காலத்து நாசம், நாசகாலத் துற்பத்தி காணா திருப்பானேன்? உள்ளது. தற்காலத் துற்பத்தி ரூபமாயும் நாசரூபமாயும் நாசோற்பத்திகளோரியல்பாயிருக்கும் பொருளுக்குப்போல, தற்காலத் திரியல்பாயிராது. அந்த வுற்பத்தி நாசங்கள் காரியப்பொருளிற் காணப்படுதலாற் காரியமாய், செயற்படும் பொருட்செய்பவனை விடாததலால்; அந்தவுற்பத்தி நாசங்களொருங்கே

யொருகாலத் தோரியல்பாயிருந்தாலுந் தனது தனது காரியம றைதலாகு முரூபந் தனது கர்த்திருகாரக முதற் காரகங்களி னறி முதற்காரணத்தினின்றுந் தோன்றாது. ஆதலாற் கர்த்தா வை விரும்புதல் காரியத்துக்குண்டு. சம்மதமே! இதெல்லா முமசத்துமாதலால்,—

செய்தி இயல்பதாம் - காரியம் இயல்பதாம், சிருட்டி திதி சங்காரங்களை பூதந்தானே கர்த்தாவாய்,—

இயற்றிடுமெனில் - பண்ணுமென்று லோகாயுத பக்ஷத்து யிருக்கும் நீ சொல்லில், அப்பூதங்கள்,—

செயற்படுமசேதனத்தால்-காரியமாகுஞ் சடமாதலால்;—

செயல் செய்வானொருவன் வேண்டும் - பூதகாரியத்தினது தோற்றம் நிற்றல் போதற் றொழில்களைப் பண்ணுமொரு கர்த்தாவை விரும்பும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

---o---

எ - து. அத்தோற்றக்கேடுகள் உலகிற் கியல்பாகலின அவற்றிற்கு வினைமுதல் வேண்டப்படுவதனறெனில்,—தோன்றலு ங் கெடுதலும் விகாரமாகலின விகாரமாத லியல்பிற்குக் கூடா து. அங்ஙனம் விகாரமாதலாலே உலகிற்கியல்பெனின? அவ் வாறியம்புவார்க்கு விகாரத்தின வேறாய் இயல்பென்பதொன் றில்லையெனப்படும். படவே, தோற்றிமாய்கைஇயல்பெனபது விட்டுப்போய்த் தோல்வித்தானமாய் முடியும். இனி இயல் பும் விகாரமும் வேறெனவே கொண்டு, பூதநான்கும் இயல்பா யுள்ளன.அவை தோற்றிமாய்தலாகிய விகாரத்தைச் செய்யுமெ னின? நன்றுசொன்னாய்; அவை அங்ஙனந் தொழிலுற்று நிற்

குஞ் செயப்படுபொருளாகலிற் செயப்படுபொருட்கு வினைமுதல் வேறு வேண்டப்படுமெனபதாம்.

படுமென்பது செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

அசேதனமென்பது செப்யப்படு பொருளென்னுந் துணையாய் நின்றது

சாதகன் தனனைக் குத்தினுனென்புழியும், குத்தியது கையும் குத்தப்பட்டது பிறிதோருறுப்புமாகலின; வினைமுதலுஞ் செயப்படுபொருளுமொனறுதல் யாண்டுமினமையுணர்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பிரபஞ்சத்துக்கு அகையு மழிகையு மியல்புகாணும், அதற்கொரு கத்தா வேண்டுவதில்லையெனறு உலோகாயதன சொல்ல; அவனை நோக்கி மேலு மறுத தருளிச்செய்கிறார்.

இயல்புகாண் டோற்றிமாய்கை யென்றிடின் - பிரபஞ்சந் தானே தோன்றுகையு நிற்கையும் அழிகையுமாய் வருகிறது அதற்குள்ள வியல்புகாணும், இதற்கொரு கத்தாவேண்டுவ தில்லையென்று நீசொல்லில்,—இயல்பினுக்குச் செயலதின்று - நீஇயல்பென்று சொல்லுகிற பிரபஞ்சம் சடமாகையாலே தானாகத் தோன்றி யழியமாட்டாது,—இயல்புசெய்தி - பிரபஞ்சத்துக்குத் தோன்றி நின றழிகிறது தானே இயற்கை காணுமென்று, நீ சொல்லில்,—செய்தியே யியல்பதின்றாம் - பிரபஞ்சத்துக்குத் தோன்றிநின றழிகிறது செயற்கையாகையால் இயல்பென்ற தில்லையாம்,—இயல்பதாம் பூதத்தானே யியற்றிடுஞ்செய்தியே

னனில்-பூதகாரியமல்லோ தொழில், பூதங்க ளியல்பதாகையாலே எப்பொழுது மொருசுபாவமாயிருக்கச்சக்க பூதங்களு தானே தொழில்களையெல்லா முண்டாக்கா நிற்குமென்று நீ சொல்லில்,—செயல்செய்வாரொருவன வேண்டுஞ் செடற்படுஞ் சேதனத்தால் - அந்தபூதங்கள சடமாகையாலே இந்தத்தொழில்களை யுண்டாக்குவா ரொரு கத்தாவேணும் ஆகையாலே சடமான பூதங்கள் இவனாலே செய்யப்பட்ட தொழில்களுக் கிடமாக நின்று தொழிற்பட்டுவரும்.

இதனாற் சொல்லியது பிரபஞ்சந் தானே தோன்றுவகையும் தானே யொடுங்குவகையும் இதற்குள்ள வியல்பென வுலகாயதன சொல்ல, அவனை மறுத்து இது சடமானபடியினாலே இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கவும் ஒருகத்தாவுண்டென்னு முறைமையு மறிவித்தது

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

தோற்றிமாய்கை -அததோற்றக்கேடுகள்,—இயல்புகாணென்றிடில் - உலகிற்கியல்பாகலி னவற்றிற்கு வினைமுதல் வேண்டப்படுவதன்றெனின்,—செயல் தியல் பிறக்கின்று - தோன்றலுங் கெடுதலும் விகாரமாதலின் விகாரமாத வியல்பிற்குக் கூடாது,—செய்தி யியல்பெனநிற்கின் - அங்ஙனம் விகாரமாதலே யுலகிற்கியல்பெனின்,—செய்தியே வியல்பதின்றாம் - அவ்வாறு இயல்புவார்க்கு விகாரத்தினவேறு மியல்பென்ப தொன்றில்லையெனப்படும். படவே தோற்றிமாய்கை யியல்பென்பது விட்டுபோய்த் தோல்வித்தானமாய் முடியும். இனியியல்பும் விகாரமும் வேறெனவேகொண்டு, பூதத்தானே யியல்பதாம்

பூதநான்கு மியல்பாயுள்ளன,—செய்தியியற்றிடு மென்னின் - அவைதோற்றி மாய்தலாகிய விகாரத்தைச்செய்யு மெனின், நன்று சொன்னாய்,—செயற்படும்-அவையங்ஙனந் தொழிலுற்றுநிற்கும்,—அசேதனத்தால் - செயற்படுபொருளாகலான,—செயல் செய்யாதொருவன் வேண்டும் - செயப்படு பொருட்கு வினைமுதல் வேறுவேண்டப்படுமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

—o—

பூதங்கள் சிருட்டியாதிகாரிகளென்று உணர்த்துகிறார்.

நிலம்புன லனல்காலாண நிறுத்திடு மழிக்குமாக்
கும், பலந்தரு மொருவனிங்குப் பண்ணிட வேண்டா
மென்னி, னிலங்கிய தோற்றநிறுத லிறுதியிவை யிசைத
லாலே, நலங்கிளர் தோற்றநாசந் தனக்கிலா னாதன்வே
ண்டும். (௪)

(இ-ள்.) நிலம்புனலனல்காலாண நிறுத்திடு மழிக்குமாகும் பலந்தரு மொருவனிங்குப் பண்ணிட வேண்டாமெனில் நாலுபூதமும் ப்ரதியட்சமாகப் பிரபஞ்சத்தைத் தோற்றியு நிறுத்தியு மழித்தும பிரயோசனங்களைத் தாராநிற்கும், ஒருகர்த்தா விவற்றை யுண்டாக்கிக் காரியப்படுத்த வேண்டுவதில்லையென்று நீசொல்லில்?

இலங்கியதோற்றநிற்றலீறிவை யிசைதலாலே	நாலுபூதமும் விளங்காநின்ற தோற்றமுதலிய கருத்தியம ப்ரத்யட்சமாகக் காரியப்படக காண்கையாலே
நலங்கிளர் தோற்றநாசந் தனககிலா நாதன வேண்டும்	உற்பததியு நாசமுந் தனக்கில்லாத கருத்தாவே யிவற்றையுண்டாககவேண்டும்.எ-று.

(௭)

சிவாக்கிரயோகியருரை வருமாறு.

—0—

(நிலம்புனல் .என்னில்) -ப்ருதிவி அப்பு தேஜசு வாயுவென்னுநானகுபூதங்களே பிரததியக்ஷமாசத தேகாதிகளை யுண்டாககி நிறுததிப பலங்கொடுத்தழிககும் வேறொகர்த்தாவுண்டாககவேணடாவெனின,—(இலஙகிய தொற்நிற்ற லீறிவை... நாதன் வேணடும)-விளங்கப் பட்ட வுற்பததியையுந திதியையுநாசததையு மிநநானகு பூதங்களும் பொருநதுகையா லுற்பததி நாசமில்லாத நலத்தையுடைய கர்த்தாவானவ னொருவனபன்னுவான வேண்டுமென றிதன்பொருள்.

இமமூனறு விருத்தத்தினுஞ் சங்கிரகமாகச்சொனன வுலோகாயுத மதமுந தததுவஷணமும் விஸ்தரிததுப் பரபக்ஷததிற் கூறினோ மாஙகுணர்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பிரத்தியக்ஷப் பிரமாணகோசரமாகபபூதங்கடாமே பொருள்களைத்தோற்றுவித்து நிற்பித்துப் போக்கும்; சேதனனாகிய வொருகர்த்தா வேண்டுவதில்லை யென்ன மறுதலைாத்துகின்றார்

நிலம்புன லனல்கால் - பிருதிவியப்புத் தேயுவாயுக்கள்,—காண - பிரத்தியட்சமாக சரீராதிப்பொருள்களை,—[நிறுத்திடுமழிக்குமாக்கும் பலந்தரும] - ஆக்கும் சிருட்டிக்கும,—நிறுத்திடும் - திதிக்கும,—பலந்தரும் - அந்தற போகத்தைக் கொடுக்கும்,— அழிக்கும் - சங்கரிக்கும்,— ஒருவன - அபிரத்தியக்ஷனாய்ச் சேதனனு யொருகர்த்தா,— இங்கு - இந்தககாரியத்து,— பணணிடவேண்டாம் - செய்யத்தக்கதில்லை,—என்னில் - என்று நீ சொல்லுகில், "பூதாதியீறு முதலுந துணையாகப் பேதாய் திதியாகும்" என்று சிவஞானபோதத திருத்தலால்,நிற்றலாகிய திதி தோற்றமீருகிய சிருட்டி சங்காரங்களை முனபின காணபியாதிராது. அப்படிப் பூதங்களினிருக்குந திதியும் அப்படி யன்று,—இலங்கியதோற்ற நிற்ற லீறிவை யிசைதலாலே-மணந்தி லுதித்த சிருட்டி திதி சங்கார சமபந்ததினுல், பூதங்களுங காரியமென்றுகொணடு அவற்றைத் தோற்றுவித்து நிற்பித்துப் போக்கும்பொருட்டு,—தனக்குத் தோறற நாசமில்லாத,—நலங்கிளர் நாதன - சாட்குணணிய பரிபூரணனு யிருக்கின்ற கர்த்தா,— வேண்டும் - விரும்பபபடுவன.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. நான்கு பூதங்களுள், வாயு ஒழிந்த மூன்று பூதங்களையும் நிலைபெறுத்தித் தான் அவற்றது சமூகத்தி னிலைபெ

றும். அங்கி ஏனை மூன்று பூதங்களையுமழித்துத் தான் அவற்ற
து சமுகத்தி னழிவெய்தும். அப்பு ஏனை மூன்றுபூதங்களையுந்
தோற்றித் தான் அவற்றது சமுகத்திற்றோன்றும். பிருதிவி ஏ
னை மூன்றுபூதங்களினின்று நுகரப்படும் பயனைப் பயப்பித்து
த் தானுமவற்றது சமுகத்திற் பயன்படுதலையுடைத்தாம். இ
ங்ஙனஞ் செயப்படுபொருட்கு வினைமுதல் வேறாய் நின்று காரி
ய நிகழ்த்துதல் கண்கூடாக நிகழ்தலின், இவையே தம்முள்
ளொன்றனை யொன்று பண்ணவமையும், வேறொருவன் ஈண்டைக்கு
வினைமுதலாதன் மிகையாமெனின்? அற்றன்று. இந்நான்கு
பூதங்களுமொப்ப முதற்றொழிற்படுதலான் இவை ஒன்றனைக்
காரியப்படுத்துமாற்றல் உடையனவன்மையின், இவைபோல
முத்தொழிற் படுதலின்றி மேம்பாடுடையானொருவனே இவற்
றைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேண்டப்படுமென்பதாம்.

எதிர்நிகழ்வினையாக வைத்துரைக்க.

இவ்வாறன்றி மேலைச்செய்யுளின் பொருளே பொருளாகக்
கொண்டு கூறியதுகூறலென்னும் வழுப்படவுரைப்பாருமுளர்.

நலங்கிளர்நாதனென வியையும். நலம் மேம்பாடு.

இவையிரண்டு செய்யுளானும் உலகம் முத்தொழிலுடைத்
தென்பதனை யுடம்படுத்த தருபவொருவன் வேண்டாவென்
னும் உலோகாயதரிலொருசாரார்மதம்பற்றி யாசங்கித்துப்
பரிகரிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மீளவுலகாயுதன் நாலுபூதங்களுங் கூடின சமவாயத்தி
லே பிரபஞ்சந் தோன்றிநின் றழியும், ஆகையால் ஒரு கத்தாவே

ண்டுவதில்லையென்று சொல்ல; அவனை நோக்கி மேல் மறுத்தரு ளிச்செய்கிறார்.

நிலம்புன லனல்கால்காண நிறுத்திடு மழிக்குமாக்கும் பல க்கருமொருவனிங்கு பண்ணிடவேண்டாவெனவில-பிருதிவி யப் பு தேயு வாயுவென்று சொல்லப்பட்ட நாலு பூதங்களுங் கூடி ன சமவாயத்திலே எல்லோருங் காணவே தோற்றிவித்தும் நிறுத்தியும் அழித்தும் பல பிரயோசனங்களையும் தராநிற்கும்; ஆகையாலே இந்த நாலுபூதங்களுமொழிய வேறேயொருவனா லிவையிற்றை யுண்டாக்க வேண்டுவதில்லையென்று நீ சொல் லிய?—இலங்கிய தோற்றநிற்ற லீறிவை இசைதலாலே - விளங் காநின்ற சிருட்டியும் திதியுஞ் சங்காரமு மிவை மூன்றும் பிரப ஞ்சத்துக் குண்டாயிருக்கையாலே,—கலங்கிலா தோற்றநாச ந்தனக்கிலா நாதனாலே யடும-இந்த மூன்று தொழிலையுஞ் செ ய்கைக்கு நன்மை மிக்கிருக்கப்பட்டாநின்ற முதலு முடிவுந் தன க்கில்லாததொரு கர்த்தாவுண்டாக வேணும்.

இந்தத் திருவிருத்தமிரண்டிற்கும் பிரமாணம் 'உதிப்பது மீறும்,' என்ற திருவிருத்தத்துக்கு இட்டப் பிரமாணத்திலே கண் டுகொள்க இது வன்றியும் சிவபுராணம் "ஆக்கமளவிறுதியில் லாதனைத்துலகு-மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்" என்னு மது கண்டுகொள்க.

திருவாசகம்-௧-செய்.

இதனாற் சொல்லியது நாலுபூதங்களுங் கூடின சம வாயத்திலே சிருட்டி திதி சங்காரமுண்டாகா தென்றும், இந் த மூன்று தொழிலுந் தானசெய்கச் செய்தேயும் இவையிற்றிற் றேய்வற நிற்கிற கர்த்தா வுண்டென்னுமுறைமையையு மறிவித் தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

கால்காணுன்றுத்திடும் - நான்கு பூதங்களுள் வாயு வேனைமூன்று பூதங்களையு நிலைபெறுத்தித் தானவற்றது சமுகத்தினிலைபெறும்,—அனலழிக்கும் - அங்கி யேனைமூன்று பூதங்களையு மழித்துத் தானவற்றது சமுகத்தி னழிவெய்தும்,—புனலாக்கும்-அப்பு வேனை மூன்றுபூதங்களையுந் தோற்றித் தான் அவற்றதுசமுகத்திற் றோன்றும்,—நிலம் பலந்தரும - பிருதிவி யேனைமூன்று பூதங்களினின்று றுகாப்படும் பயனைப் பயப்பித்துத் தானவற்றது சமுகத்திற் பயன்படுதலையுடைத்தாம். இங்ஙனஞ் செயற்படு பொருட்கு வினைமுதல் வேறாய்நின்று காரியநிகழ்த்துதல் கண்கூடாகநிகழ்தலின - ஒருவனிங்குப்பண்ணிட வேண்டாவெனில்,—இவையே யொன்றனையொன்று பண்ணவல்லவையும், வேறொருவனீண்டைக்கு வினைமுதலாதன் மிகையாமெனின்? அற்றன்று,—இலங்கியதோற்றநிற்ற லீறிவை யிசைதலாலே - விளங்கியவிந்நான்கு பூதங்களுமொப்ப முத்தொழிற்படுதலா லிவை யொன்றனைக்காரியப்படுத்து மாற்றலுடையன வன்மையின - தோற்றநாசந் தனக்கிலா நலங்கிளர் நாதன் வேண்டும்,—இவைபோல முத்தொழில் படுதலின்றி மேம்பாடுடையானொருவனே யிவற்றைத்தொழிற்படுத்தற்பொருட்டு வேண்டப்படுமெனபதாம்.

இவை யிரண்டு செய்யுளானும் உலக முத்தொழிலுடைத்தென்பதனை யுடன்பட்டுத் தருபவனொருவன்வேண்டா வென்னு முலகாயதரி லொருசாரார் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை

மேற் புத்தரிற் சௌத்திராந்திகனைநோக்கிக் கர்த்தா வனறியிலே நிகழாதெனறுணாத்துகிறூர்.

சார்பினிற் றோன்றுமெல்லாந் தருபவ னில்லை
யென்னிற, றேரினில் லதறகோதோறற முள்ளதற
கோநீசெபபாய, யோரினில் லதுவுநதோன்று துள்ள
தே லுதிககவேணடா, சோர்விலா திரண்டுமின்றி நிற
பது தோன்றுமனறே. (௫)

(இ-ள்) சாரபி னிற் றோன றுமெல்லா ந் தருபவனில்லை யெனனில்	பஞசகநதங்களுடைய வாச்ரயவிசேடத தாலே பூதங்கடோனறுவதன்றி வேறொருக ர்த்தா வுண்டாக்க வேண்டுவதில்லையென்று நீசொல்லில் ?
தேரினில்லத ற்கோ தோற்ற முளள தற்கோ நீசெப்பாய்	அது தோற்றமில்லாதபொருட்கோ உள் ளபொருட்கோ வதனை நீவிசாரித்துச்சொல் லாய்
ஓரினில்லதுவு நதோனறாது	உணருங்காலத் தாகாசத்திற் புட்பம் போல வில்லாத தொருக்காலு முண்டாக மாட்டாது
உள்ளதே லுதி க்கவேண்டா	காரியமெப்பொழுதுமுள்ளதாகி லிப்பொ ழுதுலகத்தினகட் காரியப்பட்டு வரவேண டுவதில்லை
சோர்விலா தி ரண்டுமினறி நிற் பது தோன்றும னறே	இவ்விரண்டுமின்றிப் பாரிசேட வநுமா னததான் மாயையினிடத்திலே யுதியாநிற் பதியாதொன றதுவேதோன்றும்.எ-று (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

"தருபவனொருவன் வேண்டும்"

என்ற பதத்திற்குப் பௌத்தரிற் சௌத்திராந்திகன் சார்பினாற் சகத்துண்டாவதொழிய வேறொருகர்த்தாவேண்டாவென்னை; அதைநிராகரித்துச் சகத்திற்குக் கர்த்தாவுண்டெனவிதனை மேன மூன்றுவிருத்தத்தினாலே கூறுகின்றது.

சார்பினிற் றோற்றமெல்லாந் தருபவனில்லையெனவில் - ரூப ரஸ கந்தமாவது மூர்த்தமாயிருக்கிற பூதங்களுடைய சந்தானம்

இந்த ரூபாணுக்களினுடைய உபசயமானது † ஸ்தம்ப கும்பாதியாயிருக்கிற பாஹ்யார்த்தம்

† தூண்கலசமுதலாயிருக்கிற வெளியானபொருள்.

ப்ருதிவியின் தருமம் §ஸ்தைரியமும், ரூபமும்,

§ உரம்.

ஜலத்தின் தருமம் * த்ரவத்வ ஸ்நேஹாதி

* பெருகல், தொட்டால் ஒட்டுதல்

தேஜசுக்கு ¶ கௌஷ்ணிய சுக்லபாஸ்வரத்வாதி

¶ சூடு வெளுத்த பரகாசமுதலிய.

வாயுவுக்கு ¶ சமீபகரண வேகாதி

¶ திரட்டல் ஓடல்.

வர்ணம் - கந்தம் - இரசம் - உரூபம் - ஓஜசுக்களாயிருக்கிற நான்கு பூதங்களின் சங்காதமே பிண்டம்

அப்பிண்டத்தினின்றும் பிருதிவ்யாதி யுண்டாம்.

அப்பிருதிவியாதிகளாவது - பரமாணுக்களின் சமூகம்.

சுரோத்திர துவக்கு சக்ஷு சிங்ஙுவை யாக்கிராண மைந்திற்கும் பிரதய பஞ்சகமென்று பெயர்.

வாக்கு பாத பாணி பாயு உபஸ்தங்க ளைந்திற்குங் காரக பஞ்சகமென்று பெயர்.

சைதன்னிய சமுதாயத்திற்குப் புத்தியென்று பெயர்.

அதிற் காரணபூதமாயிருக்கிற வேகதேச மனசு.

இப்படியே யொன்றினுடைய சாரமொன்றாகத் தானேயுண்டாவதன்றி யிதனை யுண்டாக்குவா ரொருவ ரில்லையெனின்,—

தேரி னில்லதற்கோரோற்ற முள்ளதற்கோர் நீசெப்பாய்—விசாரிக்குமிடத் துள்ளதற்கோ வில்லாததற்கோ நீதோற்றமென்றுசொல்லுகிறாய்,—

ஓரி னில்லதுவுந்தோன்று துள்ளதே லுதிக்கவேண்டா—அறியுமிடத் தில்லாத தாகாய—குசுமம்போல வொருகாலு முண்டாகாது உள்ளதே யாமாகிற தோற்றஞ் சொல்ல வேண்டுவதில்லை,—

— குசமம் - பூ

சோரவிலா விரண்டுமின்றி நிற்பது தோன்று மன்றே—அழிவற்ற காரியரூப மல்லாததுமா யசத்துமன்றி நின்ற தொருகாரணத்திற் காரியமான துண்டாக வேண்டுமென நிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பௌத்தன் புத்ததேவனை குருவாயிருந்தன் மாத்திர மன்றி உலககர்த்தாவல்லன், பஞ்சகந்தங்களினது கூட்டத்தினு

லுலகுண்டாம்,கர்த்தா வேண்டுவதில்லை யென்ன; மறுத்துணர்
த்துகின்றார்.

சார்பினிற் றோன்றுமெல்லாம் -பஞ்சகந்தத்தினது கூட்ட
விசேடத்தாற் பூதமுதலாகிய பொருள்களெல்லா முதிக்கும்,—
கருபவனில்லையெனனில் - சிருட்டிமுதற் கிருத்தியகிருத்தாய்
முன்னீசொன்ன முறைமையனாகிய கர்த்தாவில்லையென்று நீ
சொல்லில், கர்த்தாவுண்டில்லை யென்பது பின்பேசுவோம். இப்
போது நீ நிருபாதான வாதியன்றே,—தேரிலசத்கோதோ
ற்ற முளதறகோ நீ செப்பாய்-விசாரிக்கிற் றோற்ற முள்ளபொ
ருட்கோ இல்லாதபொருட்கோ நீ சொல்,—ஓரில் -
ல,—இல்லதுவுந் தோன்று துள்ளதே லுதிக்கவேண்டா -இல்
லாத முயற்கொம்பு முதலியவு முண்டாகாது, உதித்துளதாயி
ருக்கின்ற கடபடாதியு முண்டாகமாட்டாவாம்,—சோர்விலா
திரண்டுமின்றி நிற்பது - அப்படியுள்ளது மில்லது மின்றி யுள
ளதாயிருப்பது,—தோன்றுமன்றே - உண்டாகுந்தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. க்ஷணபங்கமாகிய வெல்லாப் பொருள்களுள்ளு
ம் முற்க்ஷணத்திற்றோன்றிய பொருள பிற்க்ஷணத்திற்றோன்றும்
பொருட்குச் சார்பாய் மேம்படுதலின், எல்லாப் பொருளும் வி
த்தின்கேட்டினங்குரம்போல அவ்வச்சார்பிலே தோன்றுமெ
ன்ச் சவுத்திராந்திகா முதலியோர் மதம்பற்றிக் கூறலமையும்;
இதற்கொரு கருத்தாத் தோற்றநாசமின்மைபற்றி மேம்பாடு
டையதொன்றுளதாதல் வேண்டாவெனின்? அற்றன்று. நீசார்பி
ற்றோற்றங்கூறியது இல்பொருட்கோ உள்பொருட்கோ? இல்.

பொருட்காயின், அது முயற்கோடுபோல ஒருஞான்றுந் தோ
ன்றுமாறில்லை. அற்றேற் குடம்போல உள்பொருட்குந் தோ
ற்றம் வேண்டாமையின், மாத்திரிகர்மதம்பற்றி இல்லதுமன்றி
யுள்ளதுமன்றி அநிர்வசனமாய் நிற்பதொருபொருள் தோன்று
மெனக் கோடுமென்பதாம்.

இல்லதுவுமென்னுமும்மை சிறப்பு.

உடம்படுமெய்பெறுதல் இலேசாற் கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பஞ்ச கந்தங்களுங் கூடின சமவாயத்திலே, உருவம் வீடு
வழக்கு என்னும் நாலும் தந்தஞ் சார்புகளிலே பிரபஞ்சத்
தோன்றுமதொழிந்து ஒருகர்த்தா வேண்டுவதில்லையென்று சொ
ன்ன புத்தரில் சௌத்திராந்திகனை நோக்கி; மேல் மறுத்தருளி
ச்செய்கிறார்.

சார்பினிற் றோன்றுமெல்லாங் கருத்தவனில்லையென்னில் —
சர்வமும் உருவம் அருவம் வீடு வழக்கு என்று சொல்லப்பட்ட
நாலினுந் தந்தந்த சார்புகளிலே ஒன்றாய்த்தோன்றி சொல்லா
நிற்கும்; இவை பிறவையுண்டாக்குகைக்கு ஒரு கர்த்தா வேண்டுவ
தில்லையென்று நீசொல்லில்,—தோன்றியதற்கோ தோற்ற மு
ள்ளதற்கோ நீசெப்பாய்-விசாரித்துப் பார்க்கில் நீதோன்றுமெ
ன்கிறதாய் உள்ளது தோன்றுமென்கிறாயோ இல்லாதது தோ
ன்றுமென்கிறாயோ சொல்லாய்,—ஓரிடத்தில்லதுவுந்தோன்றாது -
ஆராயுமிடத்து இல்லையாயிருப்பதொன்று, ஒருகாலத்திலு முண்
டாகமாட்டாது,—உள்ளதே லுதிக்கவேண்டாம்-எப்பொழுது
முண்டாயிருப்ப தொன்று புதிதாகத் தோன்ற வேண்டுவதில்

லை,—சோர்விலாவிரண்டுமின்றி நிற்பதுதோன்றுமன்றே - இப்படி யுண்டாயு மில்லையாயு நிற்கத்தக்க பொருள்க ளிரண்டுமின்றியே ஆவதுமழிவதுமாய்நிற்ப தொருபொருள அதற்கே தோற்றம். எ-று.

சாரயினிற் றோன்றுமெல்லாந் தருபவ னில்லையென்றும் புத்தன சொன்னதற்குப் பிரமாணம் பரபக்ஷம். "ஒருவனென றோதப்பட்டா னுருவாதி யைந்துங்கூடி, வருபவனென்றுரைத்தல் தொகையுண்மைவழக்கதாகு, முருவமங்காதியாய வைகளை யுமொருவனென்று, தருவதுதொகையினின்மை வழக்கதாஞ் சாற்றுங்காலே" என்றும் "உளவழக் கிலவழக் குளதுசார்ந்த வுளவழக்கோ, டுளது சார்ந்தவின்மை வழக்குடனின்மைசார்ந்த, வுளவழக்கின்மைசார்ந்த வில்வழக்கெனவோராறு, முளவழக் குணர்வுண்டென்கை முயற்கோடின்றிவ்வழக்கே." என்றும், "உணர்வுசார்ந்துணர்வுதிக்கை யுள்ளதுசார்ந்தவுண்மை, யுணர்வு பினின்றுமென்கையுள்ளதுசார்ந்தவின்மை, யுணர்வுமுன்பின்றித் தோன்றலில்லதுசார்ந்தவுண்மை, யுணர்வில்லதுசாரின்மை யுள்ளங்கை ரோமகாணே." என்னுமதுங் கண்டுகொள்க.

சி.த - பர - சௌ - மதம், ௭ - ௧௦ - ௧௧ - செ.

இரண்டுமின்றிநிற்பதுதோற்றமன்றே-அவனைமறுத்தது இதற்குப் பிரமாணம் "என்றுமிலா தொன்றின்றாய் வருமுருவம் வித்தின்முளைபோலே நின்ற-வித்தினுண்டாய்நின்றெழுங்காண்ணறதேல் வித்தினமரங்களுட னில்லையென்னி னெற்கமுகாய்க் கீளாது நெல்லாயே நீரு, மொன்றிலொன் றங்கிலாமையினு முதியா காரணம்பெற்றிருப்பது காரியமதுவு முள்ளதாகு, மன்றாமதிககலைபோலக் கந்தமைந்து மருவியுள தெனு முறையு மாகதனையோ வினரே." எ-ம். உருவாதி கந்தங்க ளைந்துங்கூடி யொருவனவே யொருவனில்லையென்றுரைக்கும்புத்தா, வருவா

தியைத்தினையு முணர்பவராமென்ன வுணரும் விஞ்ஞானமெனாருய் ஞானமுணர்ந் தவரா, ருருவாதி பொருள் காட்டித் தனைககாட்டுஞ் சுடர்போ லுணர்வுபிறி தினையுணர்த்தித் தனையுணாததுமெனனி, னுருவாதிபொருளினையுஞ் சுடரினையுங்காணு முலோசனமபோ லுணர்வுபொரு ளுணர்பவன வேறுணடே”
எ-ம். கண்டுகொள்க. சித-பர-சௌத-மறுதலை-௧௬-௨௬-செ.

இதனாற்சொல்லியது பிரபஞ்சம் சநதானத் தொடாச்சியாக வொனறிலே யொனருசுததானே தோனறுமென்ற சவுத்திராநதிகனை மறுதது; பிரபஞ்சம் தானேதோன்றுமெனறும, தோறறிவிகககை கொருகருத்தருணடெனறும, உள்ளது மில்லதுதோனறுமெனறும், உள்ளகாலததிலே உள்ளகாரியந தோனறுமெனனு முறைமையையு மறிவிததது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(கணபங்கமாகிய வெல்லாப்பொருளகளுள்ளும் முற்கணத்திறநதொழிநதிய பொருள் பிற்கணததிற்றோனறும பொருடகுச் சார்பாய்மேமபடுதலின) எல்லாஞ் சார்பினிற்றோனறும்-எல்லாபபொருள்களும் விததினகேட்டி னங்குரமபோல அவ்வச்சார்பிலே தோனறுமெனச சவுத்திராநதிகா முதலியோர் மதம்பறறிக கூறவமையும்,—தேரின - ஆராயுமிடதது,—தருபவனில்லையென்னின் - இதற்கொருகருத்தா தோற்ற நாசமினமைபற்றி வேம்பாடுடையனுயுளனுதல் வேண்டாவெனின்? அற்றன்று,—தோற்ற மில்லதற்கோ வுள்ளதற்கோ நீ செப்பாய் - சார்பிற்றோற்றங்கூறியது இப்பொருட்கோ வுள்பொருட்கோ, நீகூறுவாயாக,—ஓரின் - உணருமிடத்து,—இல்லதுவுந் தோனறுது - இல்பொருட்காயி னதுமுயற்கோடுபோல வொருஞான்

றுந் தோன்றுமாறில்லை,—உள்ளதே யுதிக்கவேண்டா - அற்றே ல் குடம்போல வுள்பொருட்குந் தோற்றம் வேண்டாமையி ன,—சோர்விலாதிரண்டுமின்றி நிற்பது - மாத்திமிகர் மதமப ற்றி யில்லதுமன்றி யுள்ளதுமன்றி அநிர்வசநமாய் நிற்பதொரு பொருள்,—தோன்றுமன்றே - தோன்றுமெனக் கோடுமெனப தாம.

மறைஞானதேசிகர் உரை.

மேலதற்குச் சற்காரியவாதஞ் சாதித்
துப் புறனடை யுணர்த்துகிறா.

உள்ளது மிலதுமின்றி நின்றதொன் றுளதேயு
ண்டா, மில்லதே யில்லையாகுந் தோற்றமு மிசையாதா
கு, முள்ளகா ரணத்திலுண்டாங் காரிய முதிக்குமண
ணி. யில்லதாம் படங்கடாதி யெழுமறு மியறறுவா
றால். (௩)

(இ-ள்.) உள்ள துமிலதுமி ன்றி நின்ற தொன் றுளதே யுண்டாம	யாதொருபொருளுண்டானதுமன்றி யில் லையானதுமன்றி நிற்பது யாதொருகாரண மாகிய மாயையிற் பரம்பராயாகிய பௌதி கத்துக்குத் தோற்றமுண்டாகாநிற்கும்.
இல்லதே யில் லையாகுந் தோற் றமு மிசையாதா கும்	உவர்ப்பூமியின்கண் வித்துண்டா யிருந்த தாயினு மதினிடத் தங்குரோற்பத்திக்குக் காரணமில்லாதபடியாலே யவ்விடத்தில்லை யாகும்
உள்ளகா ரண த்திலுண்டாங்	பசுவின்கொம்பிலே யங்குரோற்பத்திக் குக் காரணமுண்டாகையால் காரியமாகிய

காரிய முதிக்கும் காரண லவ்விடத்துண்டாகாநிற்கும். அஃதெ வைபோலவென்னில்?

மண்ணி லில் லதாம் படங்க டாதி யெழுற்ரு மியற்றுவானல் — மண்டொழி னன்றுகவல்ல குலாலன் கடத்தையுண்டாக்குவ தொழிந்து படத்தை யுண்டாக்கமாட்டான, படகாரியமவல்ல குவிந்தன றாதுவினசட் படத்தை யுண்டாக்குவதொழிந்து கடத்தை யுண்டாக்கமாட்டான, காரியோற்பத்திக்குக் காரணமில்லாமையால். எ-று.

இதற்கு மதங்கத்தும வாயுவவியத்து மறிக.

“இல்லாதன பிறக்குளளன மாயுமென றிம்மயக்க, நல்லாகம வறிவாரகில்லை” எனனும திருவாக்கினுமுணர்க. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

உள்ளதுமிலதுமன்றி நின்றதொன்றுளதே லுண்டாம்-காரியரூபமாக வுள்ளது மல்லாமற் காரணதமனுதி யில்லாததுமல்லாம லொருபதார்த்த முண்டானு லதிற்பிரபஞ்சமுண்டாம,—

இல்லதே லில்லையாகுந் தோற்றமு மிசையாதாகும் - அப்படி யொருவஸ்து வில்லையாகிற் பிரபஞ்சமு மில்லையாம்,உற்பத்தியுண்டென்று சொல்லுகிறதுங் கூடாது,—

உள்ளகாரணத்தி லுண்டாங்காரியம் - சத்தாயுள்ள காரணத்திற் காரியரூபமாகிற பிரபஞ்சமுண்டாம்படி யொருபாதானகாரணமாக வொருவஸ்து வுண்டாகில்,—

உதிக்கும் - அக்காரணத்திற் றானே பிரபஞ் சமுண்டாம். ஒரு கர்த்தா வேண்டாவெனின்? கர்த்தாவின்றி யல்ல துண்டாகா தெனபதற் குதாரணம்

மண்ணில்லாதாம் படங்கடாதி யெழுதரு மியற்றுவானும்- பூமியிற் படத்திற்குச் சமவாயி காரணமான தந்துசகளும் கடத்திற் குபாதான காரணமாகிய மிருத்பிண்டமு மெப்படி யுண்டாயிருக்கவுந் தானே படமுங் கடமு முண்டாகாது. தந்துவாய குலாலனு லுழுமெற வெப்படி யுண்டாயிற் றப்படியே யுபாதான காரணமாகிய மாயையினின்றும் பிரபஞ்ச மீஸ்வரனாலுண்டாமென றிதனபொருள்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஆகச் சற்காரியவாதத்தைத்தானே சமுத்தரித்து நிறுத்துகின்றார்.

உள்ளது மிலதமின்றி நின்றதொன்றுளதேல் உண்டாம்- வியக்திரூபமென்கிற காரியரூபத்திலே உளதுமின்றி, சத்திரூபமென்கிற காரணரூபத்திலே யில்லது மின்றி, இருப்பதொரு பொருளுண்டாமாகில் அது உற்பத்தியாம்.—இல்லதேல் - இப்படி பொருபொருளின்றேல்,—இல்லையாகும் தோற்றமு மிசையாதாகும - உற்பத்தியும் பொருந்ததாதாகும்,—பின்னைச்சித்தாந்த மெப்படியென்னிற சொல்வாம்.—உள்ளகாரணத்தில் - காரியகாலத்தில் வியத்திரூபமாய்ச் சத்தாயிருக்கு முதற்காரணத்தில்,—உண்டாங் காரியம் - காரணகாலத்திற் சத்திரூபமாய்ச் சத்தாயிருக்குங் காரியம்,—உதிக்கும் - உற்பத்தியாம். காரியங் காரணத்தில்லா துண்டாமென்னில்?—மண்

ணிலில்லதாம் படம் - சத்திருபமாய் முன்னதில்லாமையால் நூலையடாமல், மண்ணைக் குலாலனெடுக்கும்படி முனகூர்க்கு மித்த இருந்து இதுகாரண மதுகாரண மல்லவென்றறியுமிகரு ய காரியமாகும்,—சடாதி இயற்றுவானால் - குலாலனால்,—எ ழிரும - பிரகாசித்துண்டாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருடானொன்று உண்டோ இல்லையோவெனக் கடாயினார்க்கு, உண்டெனி னுளபொருளேயாம், இன்றெனி னில்பொருளேயாமெனப்பட்டு அநிர்வசனமென்றது போலியாயொழியும் அல்லதூஉம், அநிர்வசனப்பொருள் சூனியமாகலின் அதற்குத் தோற்றமுங் கூடாது: இவ்வாறு சவுத்திராந்திக முதலியோர் கூறும இப்பொருட்கும், மாத்திமிக முதலியோர் கூறும் அநிர்வசனப்பொருட்குந் தோற்றங் கூடாமையின், பாரிசேட வளவையாற் காரணங் காரியமிரண்டும் உள்பொருளேயாய், காரணத்தினின்றுங் காரியம் ஒருகருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றுமென்பது, குயவனுவான திரிமுதலிய துணைக்காரணங்களை மஅனுகிய முதற்காரணத்தினைக் குய்ப்ப, அதனினின்றும் ஆடைமுதலிய காரியங் தோன்றுறு குடஞ் சால் கரகமுதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுதலின், அவ்வெதிர்மறை முகத்தானும் உடம்பாடு முகத்தானும் அறியப்படுமென்பதாம்.

உள்ளது மிலதுமின்றி நின்றதொன்றுளதேயென்றது அநுவாதஞ் செய்துகொண்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

உள்ளதுந்தோன்றாது இல்லாததுந் தோன்றாதென்றால், பிரபஞ்சந் தோன்றுகிறபடி யெப்படியென்ற புத்தனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

உள்ளதுமில்லதுமின்றி நின்றதொன்றுளதேலுண்டாம் - இயாதொருபொருளுண்டானதுமன்றி யில்லையானதுமன்றி நிற்பது, அப்படி யொருபொருளுண்டாகில் அசற்கே தோற்றமுண்டாகா நிற்கும்,—இல்லதே யில்லையாகுந் தோற்றமு மிசையாதாகும் - இப்படியே பொருளுமதமில்லையாகில், பிரபஞ்ச காரியமு மோராக வில்லையாய் விடும். இதனை யொழிந்து அதற்கொரு தோற்றமுண்டாகாது—உள்ள காரணத்திலுண்டாங் காரியமுதிக்கும்-அதுஉண்டாகத்தக்க காரணத்திலேஉண்டாகப்பட்ட பிரபஞ்ச காரியங்களுண்டாம். அதெனபோலவெனில்? மண்ணிலில்லதாம் படங் கடாதி யெழிற்று மியற்றுவானல்- மண்தொழிலிக்குவல்ல குலாலனெனினும் மண்ணைக்கொண்டு கடாதிகளை யுண்டாக்குவன, இதனையொழிந்து படாதிகளையுண்டாக்குவதில்லை, அதுதனைப்போலும். எ-று.

இதனாற் சொல்லியது உள்ளது தோன்றவேண்டுவதில்லையென்றும், இல்லதற்குத் தோற்றமில்லையென்றும், இவ்விரண்டுமன்றி இருப்பதொரு காரணத்திலே காரியமாகிய பிரபஞ்சம் கர்த்தாவாலே உண்டாமென்னும் முறைமையையுமறிவித்தது உடு

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

உள்ளதுமில்லதுமின்றி நின்றதொன்று - அங்ஙனம் உள்ளதுமில்லது மல்லவா யதிர்வசனமாய்க் கூறப்படும் பொரு

டானென்று உண்டோ இல்லையோவெனக் கடாயினார்க்கு,—உளதேலுண்டாம்-உண்டெனி னுள்பொருளே யாம்,—இல்லதேலில்லையாகும்-இன்றெனி னில்பொருளையா மெனப்பட் டனிர்வசன மென்பது போலியா மொழியும்,—தோற்றமு மிலையா தாகும்-அல்லதூஉம் இவ் வநிர்வசநப் பொருள் சூனியமாகலி னதற்குத் தோற்றமுங்கூடாது. இவ்வாறு சவுத்திராந்திகர் முதலியோர்கூறு மில்பொருட்கு மாத்திமிகர் முதலியோர்கூறு மநிர்வசனப் பொருட்குந் தோற்றங் கூடாமையிற் பாரிசேட வளவையால்,—உள்ள காரணத்தில் உண்டாங்காரிய முதிக்கும் - காரணகாரியமிரண்டும் உள்பொருளேயாய்க் காரணமாய்க காரணத்தினின்று முண்டாகும் காரியம் ஒருகருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்று மெனபது,—இயற்றுவானான மண்ணில்-குயவனாவான் திகிரி முதலிய துணைக்காரணங்களை மானுகிய முதற் காரணத்தின்க ணுய்ப்ப வதனினின்றும்,—படமிலதாம் - ஆடை முதலிய காரியந் தோன்றாது,—கடாதி யெழிறரும் - குடஞ்சால்கரகமுதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுதலின் அவ்வெதிர்மறை முகத்தானு முடம்பாட்டு முகத்தானு மறியப்படுமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மீளவு மவனை நோக்கிக் காரணரூபமுங் காரியரூப
மென் றிரண்டுளவென் றுணர்த்துகிறா.

ஒருபொரு ளொருவனின்றி யுளதில தாகுமென்
னின், மறுபொரு ளுண்டேலின்றுந் தன்மையின் றின்
றேலுண்டாய், வருதலி னிலதுகாரிய முதலுள தாகு

மெனனிற, கருதுகாரியமுமுண்டாய்த் தோற்றமுங் கருத்தாவாலாம். (எ)

(இ-ள்) ஒருபொருளொருவனின்றியுளதிலதாகுமெனின் — ஒரு கர்த்தாவையின்றி யொருபொருளுண்டாயு மில்லையாயும் வருமென்று நீ சொல்லில்?

ஒரு பொருள் ஒடுங்கலின்றாந் தன்மையினால் — எப்பொழுது முண்டாயிருக்கத்தக்க பொருளொன்றாகி யில்லையாகத்தக்க முறைமையில்லையாம்.

இன்றேல் உண்டாய் வருதலின்று — எப்பொழுது மில்லையான தொன்றுண்டாய்ப் பின்பு வருவதுமில்லை.

இலது காரியம் உளதாகுமெனில் — காரியமானது அழிந்துபோங்காலங் காரணமானது அழியாமல் கிடக்குமென்னில்?

கருது காரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தாவாலாம் — நீ காரணத்தையுங் கொண்டு அங்கீகரித்த போதே காரியமுண்டாகையினாலே வினையினாலே கொண்டு ஒரு கர்த்தாவாற் றோற்றமுண்டாமென்று கருதுக. எ-று.

இதற்கு நிச்சுவாசோத்தரம். (எ)

சிவாக்கிரயோகியருரை வருமாறு.

—o—

ஒருபொருளொருவனின்றி யுளதிலதாகுமெனில் - ஒரு வஸ்துவானது ஜகதீஸ்வரனை யன்றித் தானே யுற்பத்தியையு நாசத்தையு மடையுமெனின்,—ஒருபொருளுண்டே லின்றாந்

ன்மையின்று - ஸ்வதச்சித்தமாக வுண்டான வஸ்துவுக்கு நாசமவாராது.—இன்றேலுண்டாய் வருதலின்று - நாசத்தையடையுமாயின மீளவுமுண்டாகமாட்டாது —இலதுகாரிய முதலுளதாகுமெனனில் - நீர் காரணரூபமாக முதலுண்டாமென்ற தில்லை,முதலேகாரியமே யாமெனின்,—கந்துகாரண முண்டாய்த் தோற்றமுங் கர்த்தாவாலாம் - விசாரித்துப்பார்; காரியமுண்டானதையின் றதற்கொரு காரணமுமுண்டு, அக்காரணத்திற் காரிய முண்டாவது மொரு கர்த்தாவினாலென றிதன்பொருள்

இம்மூன்று விருத்தத்தினுமை புதநாக ஞல்வருடைய மதத்தையு மறுத்தது.

இதன விஸ்தாரமு மறுப்பும் பரபக்ஷத்திற் சொன்னோ முணர்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

முதற்காரணத்தின் முன்னிருந்த காரியந் தோன்றுமென நீர், அது நிமித்தகாரணமின்றித் தானே பிரகிருதியிற் றோன்று மென்று சாங்கியன் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

ஒருபொருள் - காரியம்,—ஒருவனின்றி - நிமித்தகாரணனை யன்றி,—உளதிலதாகுமென்னில் - முதற் காரணத்திற் றோற்றி யொடுங்குமென்று நீ சொல்லில்,—தருபொருள் - அந்த முதற் காரண முற்பவிப்பித்த வஸ்து,—உண்டேல்-உள்ளதேல்,—இன் றுந்தன்மையின்று - நாசத்திற்குக் காரணமில்லாமையால் நிலை பெற்றிருக்குந் தானே,—இன்றேல் - நாசமானால்,—உண்டாய் வருதலின்று - நிமித்த மில்லாமையால் காரணரூபமாயிருப்பத ன்றிக் காரிய ரூபமாய்த் தோற்றுவதில்லை,—முதலுளதாகும் - முதற்காரண முள்ள பொருளாகும்,—இலது காரியம் - அதிற்

றோன்றுங் காரியம், [சிப்பியிற் றோன்றும் வெள்ளிபோல ஆபாசமாய் அசத்தியமாம்,]—என்னில் - என்றுநீசொல்லில், அது அசத்தியமன்று,—கருது காரியமு முண்டாய்த் தோற்றமுங் கர்த்தாவாலாம் - குற்றமற்ற பிரத்தியக்ஷப் பிரமாண முதற் பிரமாணங்களினா லுள்ளபொருளென்று பரீக்ஷிக்கப்பட்ட காரியம், முன் சூக்குமித்து முதற்காரணத் துள்ளதா யதினுற்பத்தியுஞ் செய்பவனாலாகும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து. அற்றேல்-அவையிரண்டு மேலாமையிற் காரியப்படுவதோர் பொருள் உண்டுமா யில்லையுமாய் நிற்கும், ஈரியல் புடையதாகலின் இதற்கொரு கருத்தா வேண்டப்படுவா னல்லனெனச சமணர்மதம் பற்றிக் கோடுமெனின்? அற்றன்று உண்டு மில்லையுமாமென மாறுபட்ட இரண்டுதன்மை ஒருபொருட் கிசைதல் கூடாது. இனிக் காரணரூபமாயுண்டு, காரியரூபமா யில்லையென்பதே உண்டுமில்லையுமென்றதற்குப் பொருளெனின்? நன்று சொன்னாய். காரண காரியங்கட்குத் தம்முள் வேற்றுமையின்மையிற் காரண முள்பொருளாகவே காரியமு மதன்கட் சூக்குமரூபமாயுள்ளதாய் அது பின்னர்த் தூலரூபமாய் விளங்கித் தோன்றுதல் ஒருவினை முதலானாமென்பது தானே போதருமென்பதாம்.

இன்னுமிச் சற்காரிய வாதத்தின்கட் படுங் கடாவிடைகளெல்லாம் "தந்துமுதல் காரகம்" என்னும் ஞானாமிர்த முதலியவற்றுட் காண்க.

இவை மூன்று செய்யுளானும் முறையே, இல்லது தோன்றுமென்னுஞ் சவுத்திராந்திகர் முதலியோர் மதமும், இல்லது முள்ளதுமல்லது தோன்றுமென்னும் மாத்திமிகர் முதலியோர்

மதமும், இல்லது முள்ளதுமாயது தோன்றுமென்னுஞ் சமணர் மதமும் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து; வருமுறை யென்பதனு ற்பெறப்பட்ட சற்காரிய வாதத்தை வலியுறுத்தி கருபவனொ ருவன் வேண்டுமெனபது சாதிககப்பட்டது.

நிரம்பவழகியருளை வருமாறு.

—o—

மீளவும் புத்தன் ஒரு காரணத்திலே நின்று பிரபஞ்சகாரி யங் கோனறுமிடத்துத் தானேதோனறிக தானேயொடுங்கா தோ, இதற்கொரு கர்ததா வேண்டுவ திலலையென்று சொல்ல; அவனைநோக்கி மறுத் தருளிச்செய்கிருர்.

ஒருபொரு ளொருவனினறி யுளதிலதாகு மென்னில் - ஒரு கத்தாவை யினறியே தேகாதிப் பிரபஞ்சங் தானே தோன்றி யொடுங்கும் என்று நீசொல்லில்,—தருபொருளுண்டேலின்ருந் தன்மையின்று - இந்தப் பிரபஞ்சங் தோன்றத்தக்க முதலுண் டாகில் இல்லையென்றுசொல்லு முறமை யுண்டாகாது.—இன் றே லுண்டாய் வருதலின்று-இல்லையான தொன்றிலே பிரபஞ் சங் தோன்றுமென்னில் உண்டாய் வருவது முண்டாகாது,— இலதுகாரிய முதலுளதாகுமென்னில்-காரியமழிந்து காரணங்கி டக்குமென்று நீசொல்லில்,—கருதுகாரணமு முண்டாய்த் தோ ற்றமுங் கத்தாவாலாம் - ஆராய்ந் தறியுமிடத்து ஒருகாரணமு முண்டா யிந்தக் காரணத்திலே நினறு பிரபஞ்ச காரியமும் ஒ ருகர்த்தாவாலே யுண்டாம்.

இதனுற் சொல்லியது பிரபஞசங் தானேதோன்றி யொடு ங்காதென்றும், உள்ளதொன்று எப்பொழுது முண்டாயிருக்கை யினுல் தோன்றவேண்டுவ திலலையென்றும், இல்லாத தொன்

றும் எப்பொழுது மில்லையாயிருக்கிறதற்குத் தோற்றமில்லையாயிருக்குமென்றும், காரணத்திலே நின்றுங் காரியம் ஒரு கர்த்தாவாலே யுண்டாமென்று முறைமையு மறிவித்தது.

இதற்குப் பிரமாணம் "சாரபினில்" என்ற திருவிருத்தத்துக்கிட்ட பிரமாணத்திலே கண்டுகொள்க.

'சார்வு' 'உள்ளது' 'ஒருபொருள்' இம்மூன்றும் புத்தன்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஒருபொருளொருவனின்றி-அற்றேலவையிரண்டு மேலாமையின,—ஒருபொருளுளதிலது - காரியப்படுவதோர் பொருளுண்மை யில்லையுமாகிநிற்கு மீரியல்புடைய தாகலின்,—ஒருவனின்றியாகுமென்னின் - இதற்கொரு கருத்தா வேண்டப்படுவதின்றியே யுண்டாமெனச் சமணர் மதம்பற்றிக் கோடுமெனின்? அற்றன்று,—தருபொருளுண்டேல்-தரப்பட்டபொருள் உளபொருளாயின,—இன்றுந் தன்மையின்று - இல்லையாந்தன்மை யின்மையி னுள்ளதேயாம்,—இன்றேல் - இல்பொருளாயின்,— உண்டாய் வருதலின்று - உண்டாய் வருதலின்மையி னில்லதேயாம்,—ஆதலின் உண்டுமில்லையுமாமென மாறுபட்ட விரண்டு தன்மை யொருபொருளுக் கிசைதல் கூடாது,— முதலுளதாகுங் காரிய மிலதெனின்- இனிக் காரணரூபமா யுண்டுக் காரியரூபமாயில்லை யென்பதே யுண்டு மில்லையென்பதற்குப் பொருளென்னின்?என்றுசொன்னாய்; காரண காரியங்களுக்குத் தம்முள் வேற்றுமை யின்மையின் காரண முன்பொருளாகவே,—கருதுகாரியமுமுண்டாய்-கருதுகின்ற காரியமும் அதன்கண் சூக்குமரூபமாயுள்ளதாய்,—தோற்றமும் கருத்தாவாலாம்-அது பின்னர்த்

துலரூபமாய் விளங்கித் தோன்றுத லொரு வினைமுதலானு மெ னபது தாமே போதருமென்பதாம்.

இவை மூன்று செய்யுளானு முறையே இலது தோன்றுமெ ன்னுஞ் சவுத்திராந்திகர் முதலியோர் மதமும், இலது முளது மலலது தோனறுமென்னு மாத்திமிகர் முதலியோர் மதமும, இலதுமுளது மாயது தோனறுமெனனுஞ் சமணர்மதமும் பற் றி யாசங்கித்துப பரிகரித்து; வருமுறை யெனபதனுற் பெறபப ட்ட சற்காரிய வாததகை வலியுறுததி, தருபவன ஒருவன வேண்டுமெனபது சாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலிரண்டு திருவிருததததாற் பட்டாசாரியன
மதமறுத் துணர்த்துகிறா

காயத்தி னழிவுதோறறங கண்டன முலகிறகா
னே, நீபித்தை யுரைத்தவாறிங கென்னெனி னிகழ்
த்துமுண்மை, மாயத்த வுலகம்பூநீர் தீவளி வானமா
தி, யாயித்தா னென்,னின்று தோன்றினின றழிதலாலே (அ)

(இ-ள்) காயத்தி னழிவுதோ றறங் கண் டன முலகிற்கா னேம் — இதகச் சரீரம ஜடமானையினாலே தோற் றுமழிவுங் கண்டோம், பிரபஞசததின கட்டோர்றமு மழிவுங் கண்டிலம

நீயித்தையுரைத்வாறிங்கென் னெனின் — நீ யித்தைச் சொனன தெப்படி யென்று சொல்லுகிறாயாகில் ?

நிகழ்த்துமுண்மை — அகதப் பூதங்கட்குத் தோற்றமு மிறு முள தென்பதனை யெனக்குள்ளபடியே சொல்லும்.

மாயத்தவுலகம் பூநீர்தீவளிவானமாதி, யாயித்தா மொன்றிலொன்று தோன்றிநின்றழிதலாலே. — பூமி நீர் தீ வளி வான மிவைகள், ஆகாச முதலாக வொன்றி லொன்றாகத் தோன்றிக் காரியப்பட்டு நின் றுதித்தமுறையா லுதித் தொடுங்கு முறைமைக் காணகையா லான மாக்களுக்கு மயக்கத்தைப் பண்ணும் பிரபஞ்சமு மழிந்துவிடுங்காண் எ-று.

உலகெனபது - பஞ்சபூதக் கூட்டத்தை.

அழிவு தோற்றமெனபதனை யிருபாலும் கூட்டுக.

பூதோற்பத்தியை யவன மதானுசாரமாகக் கூறி மறுத்த தென வறிக

ஏகாரம் தேற்றம்.

இதற்குச் சித்தியாகமமென வறிக. (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

முதல் விருத்தத்திற்
"போவது மாதலாலே"

என்ற பதத்திற்குப் பட்டாசாரிய மதானுசாரிகள் - ஈசுரசித நிதருசஞ்சகத்-என்று காரியரூபமாயிருக்கிற தேககடாதிகளுக்கே யுற்பத்தியுநாசமும், காரணரூபமாயிருக்கிற பிருதிவியாதி மகாபூதரூபமாகிய வுலோகங்களுக்கு நாசமில்லையென்றபக்ஷத்தை மேலிரண்டு விருத்தங்களான் மறுத்துக் கூறுகின்றது.

(காயத்தினழிவு ...சென்னெனின்) தேகங்களிற் றோற்றமு நாசமுங் கண்டோம், உலோகங்களுக்குத் தோற்றநாசங்கண்டதில்லை, நீயிதனை யுண்டென்று சொல்வதென்னையோவெனின்,—

நிகழ்த் தருமுண்மை - உள்ளபடி சொல்வாம், — மாயத்தவுலகம் ∴..றழிதலாலே-மயக்கத்தைப் பொருந்து முலகங்களான பிருதிவி யப்பு தேஜோ வாயு வாகாச மைந்தும் ஆகாசாதியாக வொன்றிலொன்று தோன்றிநின றழியுமென்று வேதஞ் சொல்லுகையால்; வேதப்பிரமாண்ய வாதியாயிருக்கிற வுனக் கிஃதன்றெனப் போகாதென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பட்டாசாரியன் மத மாசங்கித் திரண்டு திருவிருத்தத் தான் மறுத் துணர்த்துகின்றார்.

காயத்தினழிவு தோற்றங் கண்டன முலகிற்காணேம்- ஒருவனொடொருத்தி யொனறென் றுரைத்திடும் சரீரமுதலிய பொருள்களி னுற்பத்திநாசங் கண்டோம், பூமிமுதலிய சகத்திற்காணேம,—நீ யித்தை யுரைத்தவாறிங் கெனையெனில்-உலகமுங் காரிய மாதலால் அதற்கொரு கர்த்தா வுண்டென்று நீர் சொல்லுவ தேதென்று நீ சொல்லுகில்,—மாயத்த வுலகம்- மயக்கத்தைப் பண்ணும் பிரபஞ்சம்,—பூநீர் தீவளி வானமாதி யாயில் - பிருதவி யப்புத் தேயு வாயு வாகாச முதற் பொருளாகில், சைவத்திற்குத் தன மாத்திரையிற் றோற்றமொடுக்கம். அதுநிற்க, நமக்குப் பொதுவும் உனக்குப்பொதுவன்றிச் சிறப்பு மாகும் வைதிகமார்க்கத்தில்,—ஒன்றி னொன்று தோன்றி நின றழிதலாலே - ஆன்மாவிலாகாயம், ஆகாயத்தில் வாயு, வாயுவிலக்கினி, அக்கினியி லப்பு, அப்புவிற் பிருதிவி இந்த முறைமையி லுண்டாயிருந் தத்த முறைமையிலொடுங்

கு மென்று சொல்லுதலாலே அந்தவுலகம், —உண்மை நிகழ்த்தும் - தனக்குத் தோற்றம் நிற்றல் ஈறு இது சததியமென்று சாற்றும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இதுகாறும் வந்தநின்று போவதென்றதூஉம், வருமுறையென்றதூஉம், தருபவனொருவன் வேண்டுமென்றதூஉம், வைதிசப்புறத்தார் மதத்தான இகந்துபடாமைக் காத்தார்; இனிவை திசத்துட்பட்ட மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியர் மதத்தான முறையே அவை யிகந்துபடாமற் காக்கின்றார்.

எ-து. காயமுமுலகுமென்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்துள், ஆண்பெண்ணலியென மேற்கூறிய அவயவப்பகுப்புக காயததிற்கேயன்றி ஏனையுலகத்திற்கின்மைபால், அவயவப்பகுப்புடைமைபற்றித் துணியப்படுந தோற்றக்கேடுகளுங் காயததிற்கேயன்றி உலகிற்கில்லையெனபது துணியப்படுவதாயிருக்க; தோற்றக்கேடுகள் இரண்டற்கு மொப்பக்கூறுதல் அடையாதென்று நீ சொல்லில், அற்றன்று. இவ்வாறுனக்கு மயக்கத்தைச் செய்வதாகியவுலகமும் நிரவயவமாகவின்றி நிலநீர்தீவளிவான டென நற்றொடகத்துப் பகுப்புடைத்தாகியவிதனுன, அவ்வுண்மையே நீகூறு மிருகூற்றுப் பிரபஞ்சத்து ளொன்றாகியவுலகமும் ஏனைக்காயம்போலத் தோனறிநின்றழிதலை உணர்த்துமெனப தாம்.

ஆயவென்னும் பெயரெச்சத்துளகரமும், இதனுனென்புழி னன் அன்சாரியையும், விகாரத்தாற்றொக்கன. "பெற்றத்தாற் பெற்றபயன" என்றாற்போல.

ஆயிற்றுனென்று பாடமோதுவாருமுளர்.

ஒன்றினென்னும் இன் உவமவுருபு.

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருளவயின்-மெய்யுருபு தொகா விறுதி யான" என்பதோத்தாகலின், இரண்டாவது இறுதிக்கட் டொக்கது.

ஆல் அசை.

ஒன்றொன்று தோன்றிநின் றழியுமென்னுஞ் சுருதி உனக்குப் பிரமாணமாதலா லென்றுரைப்பாருமுளர்.

வேதத்துள் விதிவாக்கியமொழிந்த தொழிந்தனவெல்லாம் புனைந்துரை வகையானன்றிப் பிரமாணமாகாவெனக் கொண்ட மீமாஞ்சக மதத்தார்க்கு, அவ்வுபநிடதச் சுருதி பிரமாணமன்றென்பது அவரறிந்திலர். அல்லதூஉம ஈண்டுக் கூறுவன வெல்லாம் பொருந்துமாறு பற்றியன்றி ஆகம வளவைபற்றி யன்மையானும் அவ்வுரை போலியாதலறிக.

நிரம்பவழகியருரை வருமாறு.

உலகாயுதன் சரீரங்களுக்குத் தோற்றமு மொடுக்கமுங் கண்டதொழிந்து பிரபஞ்சம் ஆகவுமழியவுங் கண்டதில்லையே யென்று சொல்ல; அவனை நோக்கி மேல் மறுத் தருளிச் செய்கிறார்.

காயத்தினழிவுதோற்றங்கண்டனமுலகிற்காணேம் - தேகங்கள் ஆகியுமழிகையுங் கண்டோம், பிரபஞ்சத்திற் கண்டோமில்லை,—நீயித்தையுரைத்தவாறிங் கெனனெனில் - நீ யிந்த பிரபஞ்சந் தோன்று மொடுங்கு மென்று சொன்னபடி யெப்படியென்று கேட்கிறாயாகில்,—திகழ்ந்த முன்னை மாயத்துலகம்

பூ நீர் தீவளி வானமாதி யாயிற்றொன்றொன்று தோன்றினி
ன றழிதலாலே - ஆராயில் மயக்கத்தையுடைய பிரபஞ்சம் பிரி
திவு அப்பு தேயு வாயு ஆகாசம் ஆதியாயிருக்கும்; ஆகையாலே நீ
யழியுமென்று சொல்லுகிற பஞ்சபூத பரிணாமமாகிய தேகாதி
யுள தான ஒன்றிலே ஒன்றுதோற்றி யழிகையாலே, அந்தப் பிர
பஞ்சத்துக்கும் அழிவுண்டாமென்று இந்த தேகாதிகள் தானே
யறிவியா நிற்கும்.

ஆயிதர் ரொன்றிலொன்று தோன்றிநின் றழிதலாலே
என்-து. உலகாயுதன. இதற்குப் பிரமாணம் சிவஞான போ
தம. "பூதாதியீறுமுதலூந் துணையாகப், பேதாய்திதியாகும்பெ
றறிமையி—லோதாரோ, வொனறொன்றிற் றோன்றி யுளதாயிற்
கணடு, மென்றெனறுமுண்டென்னவாய்ந்து" எனனுமது கணடு
கொள்க.

இதனாற் சொல்லியது பூதகாரியமாகிய சரீரங்கள் தோ
ன்றிநின றழியக் காண்கையினாலே பிரபஞ்சத்துக்கும் ஆக்கையு
மழிகையு முண்டெனனு முறமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

(காயமுமுலகு மென்னுமிருகூற்றுப் பிரபஞ்சத்துளாண்
பெண் ணலியென மேற்கூறிய அவையவப்பகுப்புக் காயத்திற்
கேயன்றி யேனையுலகத்திற் கின்மையால்) அழிவு தோற்றங்
காயத்திற் கண்டனம் - அவயப்பகுப்புடைமைபற்றித் தணி
யப்படுந் தோற்றக்கேடுகளுங் காயத்திற்கே யன்றி,—உலகிற்கா
னும் - உலகத்திற் கில்லையென்பது துணியப்படுவதாயிருக்க,—
நீயித்தை யுரைத்தவாறிங் கென்னெனில் - தோற்றக்கேடுகளி

ண்டற்கு மொப்பக்கூறாத லமையாதென்று நீ சொல்லில்? அற்றன்று,— மாயத்தவுலகம் - இவ்வாறுனக்கு மயக்கத்தைச் செய்வதாகிய உலகமு நிரவயவமாதலினாற்,—பூ நீர் தீ வளி வானமாதியா யிததான-நில நீர் தீ வளி வானமென்றற் றொட கத்துப் பகுப்புடைத்தாகிய விதனால்,—உண்மை - அவவுண்மையே,— ஒன்று - நீகூறுமிறுகூற்றுப் பிரவஞசத்தொன் றாகியவுலகமும்,— ஒன்றின - ஏனைககாயம்போல,— தோனறி நின்றழிதல் - தோன்றிநின்றழிதலே,— நிகழ்ததும் - உணர்தது மெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஓரிட மழியப்பின்னு மோரிடநிற்கு மொக்கப்,பா
ரிட மழிவதின்று மென்றிடிற பயில்வித்தெல்லாங், கா
ரிட மதனிறகாட்டு மங்குரங் கழியும்வேனிற், சிறுடை
த் துலகுகாலஞ் சேர்ந்திடப் பெயர்ந்துசெல்லும். (௯)

(இ-ள்.) ஓரிடமழியப் பின்னுமோரிட நிற்கும்	இப்பிரபஞச மொரு பிரதேசமழியப் பின்னுமொரு பிரதேச மழியாமனிறகும்
ஒக்கப் பாரிடமழிவதின்றும்	பூமிமுதலிய பூதங்களெங்கு மொக்கவழிந்துபோகாது
என்றிடில்	எனறுநீ சொல்லுகிறாயாகில்?
பயில் வித்தெல்லாங் காரிடமதனிற் காட்டுமங்குரம்	பூமியின கண்ணே செறிந்திருந்த வித்துக் களெல்லாம் கார்காலத்தி லங்குரோற்பத்திகளை யெங்குமொக்கக் காட்டாநிற்கும்

சுழியும் வேவில — வேனிற் காலத்திலே முன்பே முளைத்துப் பயிரானவைகளெல்லாஞ் சோவழிந்து போகக் கண்டாமே

சிருடைத்தல குகாலஞ் சோர்ந்திடப் பெயர்ந்து செல்லும் — சிவசத்தியினுடைய கூட்டரவினாலே சிறப்பினையுடைத்தாகிய விசித்திரப் பிரபஞ்சமும் அப்படியே சிவன் சிருட்டிக்கிறபொழுது சேரவுண்டாயும், அதனைச் சங்கரிக்கிற காலத்திற் சேர வழிந்தும், இப்படிக் காலங்கடோறு மாறிமாறியுண்டாயும் பின்பழிந்தும் வாராநிற்குங்காண் எ-று.

இதற்குச் சிந்தியத்தும், சுவச்சந்தத்துங் காண்க. (௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

சைவத்திலே அகங்கார வுற்பத்தியாகிய பூதாதி யாங்காரத்திலே பஞ்ச தன்மாத்திரையிற் பூதோற்பத்தி சொல்லியிருக்க, ஆகாசத்தில் வாயுவும், வாயுவி லக்னியும், அக்னியி லப்பும், அப்புவிற் பிருதிவியுமாக வொன்றி லொன்றடைவே தோன்று மென்று சொல்வாரை மறுப்பானேனெனின்? பூர்வமீமாம்சகருக்குச் சம்மதமாக வெவ்வாற்றானும் பிரபஞ்ச முற்பத்திநாசமுடைத் தென்பதற் காகக் கூறியது. ஆயினுமக் கந்தவேத வாக்கியஞ் சம்மத மன்றோவெனின்? ஆம். வேத சிவாகமங்களிரண்டு வாக்கியத்திற்கு மவிரோத மிரண்டாஞ்சூத்திரத்திற் பூதோற்பத்திக் கிரமத்திற் கூறுவாம்.

ஓரிடமழியப் பின்னுமோரிடத்திற்கு மொக்க வழிவதின்றாம்- உலகமான கழியுமென்ற வாகம வாக்யத்திற்குப்பொருளிப் பூதங்களி லொன்றழியுமென்று சொன்னதன்றி யெல்லாமொக்

கெழுபுமென்று சொன்னதன்று, பின்னை யழிவ தேதெனி ன,—பாரிடம்- பூமியானது §ஜலமக்கினமாகச் சிறிதுகாளிருக் குமென்றதெனின்? அஃதற்றன்று,— டயில்வித்தெல்லாங் காரி டமதனி லங்குரங்காட்டுமே வேனிற் கழியுஞ் சிறுடைதலகு காலஞ் சேர்ந்திடப போகது செல்லும் - பூமியினுண்டான பீஜங்களெல்லம் வருஷாகாலத்தின முளையானதுண்டாம், வே னிற்காலத்திற் பட்டுப்போம், அப்படிப்போல சிறைப்புடைத் தான வுலகங்களுஞ் சிருட்டிகாலம் பொருந்தினபொழு துண் டாம், சம்ஹாரமானது பொருந்தினபோது நாசத்தை யடை யுமென் றிதன்பொருள்.

§ ஜலமக்கம் - நீரி லழுந்தியிருத்தல்

இவவிரண்டு விருத்தத்தினாலும் பூர்வமீமாம்சருடைய மதமு நிராகரணமுஞ் சங்கிரகமாகக் கூறப்பட்டது.

இதனவிஸ்தாரம் பரபக்ஷத்திற் சொன்னோமெனுணர்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பஞ்ச பூதங்கட்கு நாசஞ் சொல்லுஞ் சுருதிக்குத தாற்பரியஞ்சொல்ல மறுத் துணர்த்து கின்றார்.

இதனபொருள் வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. நில மலை கடன் முதலிய வடிவிற்றாகிய வுலகமுங் காயம்போல் அவயவப் பகுப்புடைமையான் அதுபோலத் தோன்றிநின்றழிதல்பெறப்படுமென்றதொக்கும்; அங்ஙனமாயினும்,

பார்த்தறியப்படுமுலகமெல்லாம் ஒருங்கேயழிவதெனின்? உலக மநாதியென்னுஞ் சுருதியோடு முரணுதலானும், மீளத் தோன்றுதற் கேதுவின்மையின்றாய் முடியுமாகலானும், அவ்வாறன்றி உலகத்திலொருபக்கமழியினும ஒரு பக்கம் நிற்குமென்றலே பொருத்த முடைத்தெனின,—அற்றன்று; தமமு ளொருசாதிப் பல பொருளாகிய வித்துமுதலிய சடங்கள் ஒவ்வொருகாலவிசேடத்தின ஒருங்கே தோன்றுதலு மொருஙகேயழிதலுங் கண்டாமாகலின, அவ்வியல்பிற்றாகிய வுலகமும் அவவககாலம் வந்துழி அவவாறு முழுவது மொருங்கே தோனறி ஒருங்கேயழியுமெனபதாம்.

பாரிடம் வினைத்தொகை.

சீர உவமவுருபு, அசசீரெனறாற்போல.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

ஒரு தேசமழிய ஒரு தேசபழியாதிருக்கும், ஆகையாலே யெங்குமொக்க அழியாதெனற பட்டாசாரியனை நோக்கி; மேல் மறுத தருளிச் செயகிறார்.

ஓரிடமழியப் பினனுமோரிடநிற்கு மொக்கப்பாரிடமழிவதினறும் - பிரபஞச மொருதேசமழிய பின்னுமொரு பிரதேசநில்லாநிறகும், எங்குமொக்கப் பிரபஞ்ச மழிந்து போகாது— எனறிடில் - எனறு நீசொல்லுகிறாயாகில்,— பயில்வித் தெல்லாங் காரிடமதனிற்காட்டு மங்குரம்- பூமியிலே சொரியத்தக்க விதைகளெல்லாம், சேரக் கார்காலத்திலே யங்குரங்களைக் காட்டாநிற்கும்,—கழியும்வேனில் - வேனிற்காலததிலே அவையெல்லாஞ் சேர வழிந்துபோகா நிற்கும்,—சிருடைத் துலகுகாலஞ்

சேர்ந்திடப் பெயர்ந்துசெல்லும்- அப்படியே சிறப்பை யுடைத்தாகிய பிரபஞ்சஞ் சிருட்டிகாலத்திலே சேரவுண்டாயும், சங்காரத்திலே சேரவழிந்தும், காலங்கள் தோறு மிப்படியே மாறிநிற்கும்.

இதனாற் சொல்லியது ஒருதேசமழிய ஒருதேசமழியாமல் நிற்குமென்று சொல்லுகிறது ஆகாதென்றும்; சிருட்டிகாலத்துஞ் சர்வமுந் தோன்றும் சருவசங்காரத்தி லெல்லாமழியு மென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(நிலமலைகடன்முதலிய வடிவிற்றாகிய வுலகமுங் காயம்போல வவயவப் பகுப்புடைமையா லதுபோலத் தோன்றிநின் றழிதல் பெறப்படுமென்ப தொக்கும், அங்ஙனமாயினும்) பாரிடமொக்க வழிவதின்றாம் - பாரத்தறியப்படு முலகமெல்லா மொருங்கே யழிவதில்லையாம், அழியுமெனின்? உலக மநாதியென்னுஞ் சுருதியோடு முரணுதலான மீளத்தோன்றுவதற் கோரிடமின்றாய் முடியுமாகலானும்,—ஓரிடமழியப்பின்னு மோரிட நிற்குமென்றிடின்-அவ்வாறின்றி யுலகத்தி னொருபக்க மழியினும் ஒருபக்க நிற்குமென்றலே பொருத்த முடைத்தெனின், அற்றன்று,—பயில்வித்தெல்லாம்-தம்மு ளொருசாதிப் பலபொருளாகிய பயில்கின்ற வித்துமுதலிய சடங்கள்,—காரிடமதனில் வங்குரங்காட்டும்-கார்காலமாகிய வோர்காலவிசேடத்தி னொருங்கே முளைதோன்றுதலும்,—வேனிற்கழியும்-வேனிற்காலமாகிய வோர்காலவிசேடத்தி னொருங்கேயழிதலுங் கண்டாமாகலின்,—சீருடைத்துலகு - அவ்வியல்பிற்றாகியவுலகமும்,—கா

லஞ்சோநதி — அவ்வக்காலம்வந்தழி, — பெயர்ந்துசெல்லும் — அவ்வாறு முழுவது மொருங்கேதோன்றி யொருங்கேயழியுமெனபதாம்

மறைஞானதேசிகர் உரை.

உமது கர்த்தா செய்யவேண்டுவ தில்லை, காலந்தானே
கர்த்தா வென்று காலவாதி சொல்ல,
அவனைமறுத் துணர்த்துகிறார்.

காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக்கென்
னிற, காலமோ வறிவின்றாகு மாயினுங் காரியங்கள்,
காலமே தரவேகாண்டுங் காரணன் விதியினுக்குக், கா
லமுங் கடவுளேவ லாற்றுணைக் காரணந்தான். (௧0)

(இ-ள்) காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக்கென்னில் — இந்தப் பிரபஞ்சத்துக்கு மூன்று காலந் தானே சிருட்டிமுதலிய தொழில்களைப் பண்ணும், அதற்கு வேறு கர்த்தா வேண்டுவதில்லை, அது நித்தியமா யிருக்குமென்று நீ சொல்லில்?

காலமோ வறிவின்றாகும் — நீ சொல்லிய காலம் சடமுமா யநேகமுமாய் நித்தியமுமா யிருக்கையாற் றானாக வொரு தொழிலைச் செய்யமாட்டாதுகாண்.

ஆயினுங் காரியங்கள் காலமே தரவேகாண்டும் — அது சடமேயா யிருந்ததேயாயினு மான்மாக்களுக்குப் பருவங்கடோறுமரங்களிற்பூக்கவுங் காய்க்கவும் பழுக்கவும் வால யவ்வன விருத்தமெனப் பேதமும் பிரயோசனமுங் கண்டோம். அது தானாகக் கொடுக்க வற்றோ வெனில்?

காரணன் வி பரமகாரணனாகிய சிவனது ஜநநி ரோ
திபினுக்குக்கால தயிதரி ஆரணி யென்னுஞ் சத்திகளினாலே
முங் கடவுளைவ யதிட்டிக்கப்பட்டுத தானே சிருட்டி முத
லாற் றலைக்கா லிய கிருத்தியங்களுக்குத் துணைக்காரண
ரணாதான். மாம் எ-று.

தான எ-து. அசை.

இதற்குப் பரமத நிராகரணம் காரணகமத்தும், பௌட்க
த்ரதும் காண்க

"இறப்பே நிகழவே யெதிர்வே யென்னுந், திறத்தியன
மருங்கிற் றெளிந்தன ருணரப், பொருணிகழ புணாபபது கால
மாகும்" என்றார் தொல்காப்பியனார் இந்தக் காலம் சமணனை
யுங்களுக்கும் அட்சபாதனையும்போல நித்தியத்துவஞ் சொ
ல்லப்பட்டதில்லை எனவறிக. (கo)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் முதல் விருத்தத்தில்,

"தருபவ ஒருவன வேணடும"

என்ற பதத்திற்குச் சிருஷடி திதி சமஹாரத்திற்குக் கால
மே கர்த்தா வல்லது வேறில்லையென்னுங் காலேஸ்வர வாதி
யை மறுத்தல்.

காலமே கடவுளாகக் கண்டனர் தொழிலுக்கென வில்-கா
லமானதே பிரபஞ்சத்தை யுண்டாக்கும், காலமேதிதிபண்ணு
ம், காலமேசம்ஹாரத்தையும் பண்ணும், † பிரபஞ்சோப சமமா
ராந்தரமுங் காலமேநித்தியமாயிருக்கும், காலத்தை யொருவ
ராலுங் கடக்கப்போகாதாகையாற் காலமேகர்த்தாவெனின?-

† ப்ரபஞ்ச மழிந்தபின்னுங் காலமே நித்தியமாயிருக்கும்.

ததுக்தம் — காலஸ்ஸ்ருஜதி பூதாநி காலஸ்ஸம்ஹரதி ப்ரஜா: | கால: ஸுப்தேஷு ஜாகர்தி காலோ ஹி துரதிக்ரம: இதி ||

இப்படிச் சொல்லிற் காலமோவறிவின்றாகும் - காலமானதறிவில்லாதாகையானுஞ் ‡ ஜகத்து புத்திமத் கர்த்ருகமாகையானு மிவ்வசேதன வியதிரேகத்தினாற் காலத்திற்குக் கர்த்ருத்வங் கூடாது,—ஆயினுங் காரியங்கள் காலமேதரவேகாணேம் - காலம் ஜடமாயினுங் காரியங்களெல்லாங் காலத்தினாலுண்டாகக் கண்டோமெனின?—காலமுங்கடவுளேவலாற் காரணன விதியினுக்குத்துணைக்காரணங்காண் - அக்காலமானது பரம கர்த்தாவாகிய சத்தருடைய ஜநநீ ஆரிணீ ரோதயித்ரீ யென்னுஞ் சத்தித்திரயத்தினு லதிஷ்டிக்கப்பட்டுக் கொண்டு சதாசிவாதி காரணேஸ்வரர்பண்ணுஞ் சிருஷ்டியாதிக்கு ஸககாரிகாரணம் என்றிதன்பொருள்.

ததுக்தம் . கர்த்ருத்வேஷு நகாலோ யஜ்ஞமுக்ஷ்ய ஷட்த்ரிம்சாணி | ஜநகஸ்ஸ்வதந்த்ரகாரண த்ரீணி ச பௌஷ்கரம் இதி.

பௌஷ்கரேபி ப்ரோக்தம் — நித்யத்வே நியதாஸ்த்யா ச நாம ஸ்வர்த்தே காலேயாமத: | சிவ: காலாத்மநஸ்ஸ்வயோநிரூபயாத: ஸ்வீயசக்தித: || உத்பாதயதி விச்வம் ச காலாத் ப்ருத்வ்யாதிகம் க்ரமாதிதி.

‡ ப்ரபஞ்சம் புத்திமானாலே செய்யப்படுகையானும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

காலேசுரவாதி காலமே கர்த்தாவென்று சொல்ல, மறுத் துணர்த்துகின்றார்.

தொழிலுக்கு - சிருட்டி ஸ்திதி சங்காரங்களுக்கு,—காலமே கடவுளாக - கர்த்தாவாக,—கண்டனமெனில் காலமோ அறிவின்றாகும் - இதுகேட்டு காரணங் காரியம் கரணம் பிரயோசனமென் றறியுமறி வில்லாததாம்,—ஆயினும காரியங்கள்-ஆயினும், தாத்துவிகபோக்கியப் பொருள்களை,— காலமே தரவேகாண்டும் - கால முற்பத்திபண்ணக் கண்டோமாகையால்,—காரணன் விதியினுக்கு - முதற்காரணமாகிய தத்துவங்களினின்று தாத்விகமாகிய போக்கியப் பொருளினது தோற்ற நிலை யீறுகச் சொல்லப்படும் நிமித்த காரணனாகிய சிவனது கிருத்திபத்துக்கு,—காலமும் கடவுளேவலால் - கர்த்தாவினது செலுத்துதலால்,—துணைக காரணங்காண் - சககாரி காரணங்காண்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ - து. காலஞ்சேர்க்கிடைப் பெயர்து சேறலான் அத் தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தாவாய் முடியுமெனின? அஃதொக்கும். அங்ஙனமாயினும் அது சடமாகலாற் கருத்தாவாகாது சேதனனாகிய கருத்தாவினதேவலான் அவன செய்யுமத்தொழிற்குத் துணைக்காரண மாமென் றறிவாயாக வென்பதாம்.

இது சொற்பொருட்பின் வருநிலை.

ஒகாரஞ் சிறப்பின்கண் வந்தது.

காலமேதரவே என்னும் ஏகார மிரண்டினுள் முன்னையது பிரிநிலைக்கண்ணும், பின்னையது தோற்றத்தின் கண்ணும் வந்தன.

இவை மூன்றுசெய்யுளானும் மீமாஞ்சகர் மதம்பற்றியாசங்கிதத்துப் பரிகரித்து, வந்துநின்றுபோவது சாதிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மீளவும் பட்டாசாரியன் பிரபஞ்சங் காரியப் படுகைக்கு வேறோர் கருத்தா வேண்டுவதில்லை, நீர்சொல்லுகிற காலங்கள் தானே கர்த்தாவாமென்ன; அவனை நோக்கி மேல் மறுத் தருளிச்செய்கிறார்.

காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக் கென்னில் - பிரபஞ்சகாரியத் துக்கு வேறே கர்த்தா வேண்டுவதில்லை, இந்தக் காலங்கள் தானே கர்த்தாவாகக் கண்டோமென்று நீசொல்லில்?—காலமோ வறிவின்றாகும் - காலங்கள் சடமாயிருக்கையினாலே பிரபஞ்சகாரியங்களை உண்டாக்குகைக்கு அதற்கொரு பிரஞ்ஞையுமில்லை, காலத்துக்கொரு பிரஞ்ஞையுமில்லையானால் காலம்வேண்டுவதில்லை என்று நீசொல்லில்?—ஆயினுங் காரியங்கள் காலமேதரவேகாண்டும் -பிரஞ்ஞை யில்லையாயினுங் காலங்களிலே அந்தந்தக்காரியங்கள் கைகூடக் காண்கையாலே, இந்தப் பிரபஞ்ச காரியங்களைக் காலமே யுண்டாக்கவேணும். ஆனால் கர்த்தாவேதுக்கு என்று நீசொல்லில்?—காரணன்

விதியினுக்குக் காலமுங்கடவுளேவலாற்றுணைக்காரணங்காண்-கர்த்தா நிமித்தகாரியத்துக்குக் கர்த்தாவினுடைய ஏவலினாலே இந்தக் காலங்களும் பிரபஞ்ச காரியத்துக்குத் துணைக்காரணமாம்; இதனை ஒழித்துக் காலங்கள் நிமித்தகாரணமென்று சொல்லப்பட்ட கர்த்தா வாகா

இந்தவிரண்டு திருவிருத்தமும் பட்டாசாரியன். இதற்குப் பிரமாணம் பரபட்சம் அவனமதம் "போககோடி வரவுகால மொன்றினிப் புணர்வதின்றி, யாக்குமோரொருவனின்றி யருந்தியா மணுக்களாகி, நீக்கிடாவினையிற்கூடி நிலமுதலாகநீடி, யூக்கமாருலகமென்று முள்ளதென் றுரைக்கலாமே" என்றும். அவனமறுப்பு "அறிகின்ற பான்மையவை யவநின்றதாகிலணுவழியுங்கடாதி யெனவே, செறிகின்ற வாறதிலை யெனில்வந்து சேருமது திடமன்றுகூட லொருவன, குறிகொண்டுகாரின்முனே வருகின்றபீசமவை கொலைவொன்றி யேனிலழிய, முறுகின்றகாலமவை யுடனின்றுபோயழியு முலகென்று நீடியிலதே" என்னுமது கண்டுகொள்க.

பட்டா-மத, அ-செய். பட்டா-மறு, எ-செ

இதனாற் சொல்லியது பிரபஞ்ச காரியத்தை யுண்டாக்குகைக்குக் காலங் கத்தாவாகாதென்றும்; இந்தக் காலங்களோடே கூடாற்றுங்கத்தா தன்னுடைய ஆஞ்ஞையினாலே பிரபஞ்சத்தையெல்லாம் உண்டாக்குவனென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(காலஞ்சேர்ந்திடப் பெயர்ந்துசேரலான) தொழிலுக்கு-அத்தோற்றக்கேடுகட்கு,—காலமேகடவுளாகக் கண்டமெ

னனின்-காலமேகருத்தாவாய் முடியுமெனின்? அஃதொக்கும்,—ஆயினும் - அங்ஙனமாயினும்,—காலமோ வறிவினறுகும - அககாலமறிவில்லாத சடமாகலாற் கருத்தாவாகாது,—காரியங்களைககாலமே தரவேகாணடும - காரியங்களைக் காலமேதரக் காணடலின,—கடவுளேவலால் - சேதனனாகிய கருததாவினேவலால்,—காரணனவிதியினுக்கு - அவனசெய்யு மதனெதாழிற்கு,—காலமுந் துணைககாரணங் காண்-காலமுந் துணைககாரணமாமென றறிவாயாகவெனபதாம்.

இவைமூன்று செய்யுளானு மீமாஞ்சகர்மதம்பற்றி யாசங்கிததுப பரிகரிதது "வந்துநின்று போவது" சாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலருகன மத மறுத் துணர்த்துகிறார்.

அழிந்தபி னனுக்கடாமே யகிலமாய் வந்துநின்
று, கழிந்திடுங கன்மத்தெனனிற கன்மமு மணுவுங்கூ
ட, மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலான் முடியா
செயதி, யொழிந்திடு மணுருபங்க ளுலகெலா மொடு
ஙகுமன்றே. (கக)

(இ-ள்) அழிந்த — சிருட்டியாங் காலத்தி லான்மாக்கள்க
பினனுக்க — ன்மத்துக்கீடாகப் பரமாணுவிலே பரிணமி
டாமே யகி — த்த பிரபஞ்ச மழிந்தபினனும் பரமாணுக்க
லமாய் வந்து நி — ளாய்ச் சூக்குமித்து நின்று, சிருட்டிமுதலிய
ன்றுகழிந்திடுங்க — வவ்வொரு காலங்களிலே கருமத்துக் கீடா
ன்மத்தெனனில் — கப் பிரபஞ்சமாகத் தோன்றி நின்று, பின்

பொரு காலங்களிலே யழியா நிற்குமென்று நீசொல்லில்?

கன்மமு மணு
வுங்கூட மொழி
ந்திடுஞ் சடமே
யாகி முடிதலா
ன் முடியா செ
ய்தி
ஒழிந்திடு மணு
ரூபங்க ளுலகெ
லா ` மொடுங்கு
மன்றே

நீசொன்ன கன்மமும் பரமாணுவுஞ் சடமாகையினாலே இந்த விதியை யறிந்து பிரபஞ்ச காரியத்தைத் தானாகத் தோற்றுவியாது;

அவ் வணுரூபங்களெல்லாஞ் சங்காரகாலத்திலே சேர வழியுமாதலாலவை இப்பிரபஞ்சத்துக்குக் காரண மாகா. எ-று

அணுக்கடாமே எனனும் ஏகாரம தேற்றம்.

இந்தவிருத்த முதற் "கருதுகாரணம்" எனனும்விருத்த மீருக வாறுககுங் காரணகமப் பிரமாணமென வறிக. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பரமாணு†புஞ்சமே பிரபஞ்சமென்கிற ஆருகதமதத்தை மறுத்தல்.

† புஞ்சம்-கூட்டம்.

ஓர் பரதியில்:—மேற் பரமாணுக்கூட்டமேப்ரபஞ் சோற்பத்தி, மாயை யல்லவென்பன். அதற்கு முதல் விருத்தத்தில்

"வருமுறை வந்துநின்று போவது"

என்ற பதத்துக்கு அருகமதக்காரர் பமாணுவே கூடுகிற முறைமையிலே கூடிப் பிரபஞ்சமாயும், பிரிகிற முறைமையி

லே பிரிந்து நாசமாயும் போமென்ன ; அப்படியல்ல, மாயையிலே கர்த்தாவினாலே ப்ரபஞ்சோற்பத்தி யென்றும் ஒருபாட்டினாலே மறுத்துணர்த்துகிறார். எனறெழுதப்பட்டிருக்கிறது.

அழிந்தபின னணுக்கடாமே யகிலமாய்வந்துநின்று கழிந்திடுங் கனமதென்னில் - பிரபஞ்சோப சம்மாரானந்தர மீஸ்வரனன்றியிற் பரமாணுக்கடானே யானமாக்களுடைய கனமானுகுணமாகப் புஞ்சமாக ‡ தருணகுல்மலதாதிகளின் கூட்டமே வனமானது போலப் பிரபஞ்சரூபமாய்ப் பினனுங்கனமானுகுணமாகவே * யுபசமஹிருந்தமாம்,—

* உபசங்காரம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இப்படியெனனில்? கனமமு மணுவுங் கூட வொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலால் முடியாசெய்தி - கருமமும் பரமாணுக்களும் ஜடமென்று வேதாகமங்கள் சொல்லுகையினாலும், அவைகள் பிரளயகாலத்தி லுசத்தை யடைகையினாலும், திரும்பவுற்பத்திக் கிரியை யுண்டாகாது,—ஒழிந்திடு மணுரூபங்களாலகெலா மொடுங்குமன்றே - அதையாற சர்வலோகோப சம்ஹாரகாலத்தி லணுக்களெல்லா நாசத்தை யடையுமென் றிதன பொருள்.

‡ புல்சிறுகொடிமரங்கள்.

இவண்குறிக்கப்பட்ட சைனனுடைய மதத்தையு மறுப்பையும் விஸ்தரித்துப் பரபக்ஷத்திற கூறினு மாங்குணர்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

ஆருகதரி லொருவன் மத மறுத் துணர்த்து கின்றார்.

(அருகேசுரனுக் குபதேச கர்த்திருத்துவ மாத்திரஞ் சக த்கர்த்திருத்துவ மில்லையாகலால்) அழிந்தபின - பிரளயத் துலக மொடுங்கின பின, ஒடுங்காது நின்ற,—அணுக்கடாமே - முதற்காரணமாகிய பரமாணுக்கடாமே,—கன்மத்து - நிமித் தகாத்தாவாகிய பாப புண்ணியங்களினாலே,—அகிலமாய் - எல்லாவுலகுமாய்,—வந்து நின்று கழிந்திடு மெனனில் - தோற் றியிருந் தொடுங்குமென்று நீ சொல்லுகில்,—கன்மமு மணுவு ங்கூட - நிமித்தகாரண முதற்காரண மிரண்டு மொத்து,—மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலால் - சொல்லப்படும் அசே தநமாகி யநித்தியமாதலான,—முடியாசெய்தி - கிருத்தியம் நிறைவேறாது,—உலகெலா மொடுங்குமன்றே - உலகமெல்லாஞ் சங்கார மாமபோதே,—அணு ரூபங்கள் - பரமாணுக்கள், சை வத்துக்குப் பூத காரிய மாதலால்,—ஒழிந்திடும்-ஒடுங்கும்; பூத முதலிய வுலகத்துக் கெப்படிக் காரணமாம், காரணமன்று தானே.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

எ - து உலகமழிந்தபின்னர் மீளப் பரமாணுக்கடாமே கன்மமேதுவாகப் பிரபஞ்சமாய்த் தோன்றிநின்றழியும், கனம ங்காலங்கள்போல் இறைவனிச்சையும் ஒருகாரணமாமத்துணை யே பிறிதில்லையெனின்? அற்றன்று; கன்மமுமணுவுஞ் சடமே யாகலான், அவை தம்முட்கூடித்தொழிற்படுதல் சித்தாகியு

முதல்வன்றொழிலையின்றி அமையாது. அதுவன்றியும், உலக மொடுங்கும்போது அணுவுங் கூடவேயொடுங்குமாதலால், அது பின அகிலமாய்வந்து கழியுமாறு யாண்டையதென்ப தாம்.

இவ்வணுகாரணவாதஞ் சவுக்திராந்திகர் வைபாடிகர் ஆசீவகர்கரு மொக்குமேனுந் தலைமைபற்றித் தார்க்கிகர்மேல் வைத்து மறுத்தவாறு

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மீளவும் பட்டாசாரியன பரமாணுவிலுலே பரிணமித்த பிரபஞ்சம் ஒடுங்கினபினனும் இந்த வணுக்களிலுலே ஆனமாககள் கனமததுசுகீடாக மீளவும் உண்டாமெனறுசொல்ல; அவனைநோக்கி மறுத தருளிச்செய்கிருர்.

அழிந்தபின னணுக்கடாமே யகிலமாய் வநதுநினறு கழிந திடுங்கனமததெனனில் - அணுபரிணாமமான பிரபஞ்ச மழிநத பின்னும், பரமாணுக்களாய்ச் சூக்கமததிலே நினறும் கனமங்களுக கீடாக ஒவ்வொரு காலங்களிலே பிரபஞ்சமாகித் தோன றிநின்று; பினபு ஒவ்வொரு காலங்களிலே அழிபாநிற்கும் என று நீ சொல்லில்?—கனமமுமணுவுங்கூட மொழிந்திடுஞ் சடமே யாகி முடிதலால் முடியாசெய்தி - நீசொன்ன இந்தக் கனமங் களும் பரமாணுக்களுஞ் சேரச் சொல்லப்பட்ட சடமேயாய் விடுகையாலே, இவையிற்ருல் பிரபஞ்சகாரிய முண்டாகாது.— ஒழிந்திடு மணுருபங்க ளுலகெலா மொடுங்குமன்றே - பிரபஞ்ச ஙகளெல்லா மழியுங்காலத்து அந்த பரமாணுக்களுங் கூடவழி ந்துபோம்.

இதனாற் சொல்லியது பிரபஞ்ச மொடுங்கினவிடத்து பரமாணுக்கள் மீளவுங் கன்மத்துக் கீடாகத் தோன்றி நின் றொடுங்காதென்றும், அந்தக் கன்மமு மணுக்களுஞ் சடமானபடியாலே தானாகத் தோன்றமாட்டா தென்றும்; சருவசங்காரத்திற் பூதவணுக்களும் பிரபஞ்சமும் சேரவொடுங்குமென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அழிந்தபின்-உலகமழிந்தபின்னர்,—அணுக்கடாமெ-மீளப் பரமாணுக்கடாமெ,—கன்மத்து-கன்மமேதுவாக,—அகிலமாய்-பிரபஞ்சமாய்,—வந்துநின்று கழிந்திடும்-தோன்றி நின் றழியும்,—என்னின்-கன்மங்காலங்கள்போ லிறைவனிச்சையு மொருகாரணமாம். அத்தனையே பிறிதில்லை யெனின்? அற்றன்று,—கன்மமு மணுவுங்கூட-கன்மமும் அணுவுங்கூடினும்—மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலான-சொல்லாநின்ற சடமாயே முடிதலின்,—செய்திமுடியா-அவை தம்முட்கூடித் தொழிற்படுதல் சித்தாகிய முதல்வன தொழிலையின்றி யமையாது,—உலகெலா மொடுங்குமன்று-அதன்றியு முலகம் ஒடுங்கும்போது,—அணுருபங்க ளொழிந்திடும்-அணுவுங்கூடவே யொடுங்குமாகலான் அது பின் னகிலமாய் வந்து நின்று கழியுமாறியாண்டைய தென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இப்பிரபஞ்சத்துக் குபாதான மாயையென றுணாத்துகின்ளுர்.

காரண வணுக்கள்கெட்டாற் காரிய வுலகின்றே
னனிற, காரண மாயையாகக் காரியங் காணலாகும்,
காரண மாயையென்னை காணபதிங் கணுவேயென்
னிற, காரண மாயையேகாண காரிய மணுவிற்கண்
டாய். (௬௨)

(இ-ள்.) காரண வணுக்களகெட்டாற் காரிய வுலகின றெனனில் — இப்பிரபஞ்சத்துக்குக் காரணமாயிருக்கிற பரமாணுக்களை சங்காரகாலத்திலே யழிகிறதுபோனால் காரியமாய் வருகிற பிரபஞ்சம் பின்னையெப்படி தோனறப்போகிறதென றுநீ சொல்லில்?

காரணமாயையாகக் காரியங் காணலாகும் — நித்தமாயிருக்கிற மாயை காரணமாயிருக்கையினாலே, காரியமபினனுண்டாதற்குக குறையில்லை;

காரணமாயையெனனை காணபதிங்கணுவே பெனனில் — மாயை காரணமெனறு நீர் சொல்லுகிறதென்ன, வணுக்களை காரணமாகக் கண்டிருக்கிறோமே யெனபாயாகில்?

காரணமாயை காரிய மணுவிற் கண்டாய் — அணுக்கள் காரியமா யவயவத்தோடே கூடியிருக்கையினாலே யவயவமில்லாத மாயையே பரமகாரண மாகவேண்டு மென்று காண்பாயாக எ-று. (௬௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் நியாயவைசேஷிகரும் பிரபஞ்சத்திற்குப் பரமாணூபாதான வாதிகளாகையால் பரமாணுகாரணவாதமாகிய வாருகதமதத்தை நிராகரித்துக்கொண்டு பரமாணுவுக்குநாசஞ் சொல்லின் மேற்பிரபஞ்ச முண்டாகாதென்றும்; பரமாணுநித்தியமென்றும், அதுவே ஜகத்துபாதான காரணமென்றுஞ் சொல்லும் வாக்கியத்தை யநுவதித்து நிராகரித்தல்

காரணவணுக்கள் கெட்டாற் காரியவுலகின் றெனனில் - காரணமாயிருக்கிற பரமாணுக்கள் பிரளயகாலத்தி னாசத்தை யடையிற் காரியமாகிய பிரபஞ்ச மேலுமுண்டாகாதெனின்?— காரணமாயையாகக் காரியங்காணலாகும் - காரணமாகியமாயை நித்தியமாகையாற் காரியமாகிய பிரபஞ்ச முண்டாகக்காணலாம் —காரணமாயையென்னை காணப்படுவதணுவேயெனனில் - காரணமாயையென்று சொல்லுகிறதெதற்காக, நாங் காரணமாகக்காண்பது பரமாணுவேயெனின்?—காரிய மணுவிற்கண்டாற் காரணமாயையேகாண் - காரியமாகிய ரூபத்துவமுமேகதேசமும் பரமாணுவிற் காணப்படுகையால், ரூபத்துவமுமேகதேசமு மல்லாதமாயையே சகத்திற்குக் காரணமாகவேண்டுங்காணென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

உலோகாயத னுலகுக்குக் காரணமென்னும் பூதமும், நையாயிகன் முதலோர் உலகுக்குக் காரணமென்னும் பரமாணுவு

ம், பிரளயத் தொடங்குமென்றீர்; பின்காரணமேதெனறு வினவ செப்புகின்முர்.

காரண வணுக்கள் கெட்டால் - நாங்காரணமாகக் கற்பித்த வணுக்கள் சங்கரிக்கப்பட்டால்?—காரியவுலகின்றெனவில் -காரிமாயய்த தோற்றும் பிரபஞ்சமு மில்லையாயவிடும்; அஃது ணடாகும் பொருட்டுக காரணம் வேணடு மெனின?—காரணமாயையாக;அதினினறு முற்பவிக்குங்காரியங் காணலாகும்,—காரணமாயையென்னை - மாயைகாரணமெனபதேது,—இங்கு, காரியத்திற்குக காரணமாக,—அணுவே காண்பதெனவில, அணுவில் காரிபவு கண்டால்-காரியததனமையறியப்பட்டால்,—காரணமாயையே காண.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ - து. சத்திரூபசமுகமாய் நிலைபேறுடைய மாயையே உலகிற்கு முதற்காரணமாதலால் அணுக்களழிதகமைபற்றி உலகு மீளக் காரியப்படுதற் கோரிழுக்கில்லை யெனவும்; அணுக்கள் காரிபப்பொருளாகலால் அவை யுலகிற்கு முதறகாரணமாதல் செல்லாதெனவு முணர்கவெனபதாம்.

இது சொற்பொருட்பினவருநிலை.

காண்டாலாலென்பது கண்டெனத்திரிந்தது, „மயலாகுமர்றும் பெயர்தது,, என்றுற்போல.

ஆல் அகச.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

பிரபஞ்ச மழிவதன்றியே, பிரபஞ்ச காரணமாயுள்ள பரமாணுக்களுங்கூட வழிந்தால், மீளப் பிரபஞ்ச முண்டாகாதென்றவனை நோக்கி; மேலு மறுத் தருளிச் செய்கிறார்.

காரணவணுக்கள்கெட்டால் காரியவுலகின்றெனனின்- பிரபஞ்ச காரணமா யிருக்கத்தக்க பரமாணுக்கள் கெட்டால் காரியப்பட்டு வருகிற பிரபஞ்சமனைத்தையும் உண்டாகாதென்று நீ சொல்லில்?—காரணமாயையாகக் காரியங்காணலாகும் -இந்தப்பிரபஞ்சத்துக்குக் காரணம் மாயை யாகையாலே பிரபஞ்ச காரியங்களுந் தானே யுண்டாகாநிற்கும்,—காரணமாயை என்னை காண்பதிங் சணுவேயெனனில் - மாயையைப் பிரபஞ்ச காரணமாகச் சொல்லுகிறது காரணமாக, இவ்விடத்தக் காணப்பட்டது பரமாணுக்களல்லவோவென்று நீ சொல்லில்,—காரணமாயையேகாண காரிய பணுவிரகண்டால் - நீசொல்லுகிற பரமாணுக்கள் காரியப்பட்டு வருகையாலே இந்தவணுக்கள் காரணமாகாது; காரணமாயுள்ளது மாயையென்றறியாய்

இதனாற் சொல்லியது அணுக்கள் பிரபஞ்ச காரணமாகாதென்றும், பிரபஞ்சகாரணமாயுள்ளது மாயையென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

காரணவணுக்கள் கெட்டால்-காரணமாகிய வணுக்கள் அழிந்தால்,—காரியவுலகின்றென்னின் - காரியமாகிய பிரபஞ்சமின்றெனின்,—மாயை காரணமாக - சத்திரூபசமுகமாய் நில

பேறுடைய மாயையே யுலகிற்கு முதற்காரணமாதலால்,—காரி யங்காணலாகும்- அணுக்கள் அழிந்தமைபற்றி யுலகு மீளக்காரிய படுத்தற் கோரிழுக்கில்லை,—இங்குகாண்பதணுவே - ஈண்டு முத ற்காரணமெனக் காணப்படுவ தணுவே,—காரணமாயை யென லெனின் - அங்ஙனமாக முதற்காரண மாயையென்பதென னை யெனின்?—அணுவிற்காரியங் கண்டால் - அணுக்களிடத் தே காரியத்தன்மை காண்டலான, அவையுலகிற்கு முதற்கார ணமாதல் செல்லா தாகலின,— மாயையே காரணங்காண் - மாயையே முதற்காரணமாமென உணர்க வென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

காரிய மென்பதென்னை காரண வணுவையென்
னிற, காரிய மவயவத்தாற் கண்டனங் கடாதிபோலக்,
காரிய வுருவமெல்லா மழிதருங் காரணத்தாற, காரிய
வுறுபாவின்மாயை தருமெனக் கருதிடாயே. (௧௫)

(இ - ள்) காரிய மெனபதெனனைக் காரணவணுவையெனனில்	அவயவத்தோடே கூடின காரியமென்று நீரணுக்களைச் சொல்லுகிற தென்ன, அணுக்க ளுலகத்துக்குக் காரணமன்றோ வென்பையாகில்?
காரிய மவயவத்தாற் கண்டனங் கடாதி போல	பிரபஞ்ச காரியங்கள் கால வவயவமாயிருந்து காரியப்படுகையினாலே கடாதி காரியங்களைப்போலக் காரியப்பட்டு வருமென்றறிகிறோம்;

காரிய வுருவ மெல்லா மழிதரு கு காரணத்தால் — யாதொன்று காரியமுமா யுருவமுமாகக் காணப்பட்டிருக்கின்றது, அவையெல்லா மொவ்வொரு காலங்களில் ஒவ்வொரு காரணங்களாலே யழிந்துவிடு மாதலால்,

காரிய வுறாப் பினமாயை தரு மெனக் கருதி டாயே. — தனக்கொரு காரணமில்லாமற் றானவயவப்படாம லிருக்கிற மாயைதானே, இந்தப் பிரபஞ்ச காரியங்களை யுண்டாக்குமென்று புத்தி பண்ணுவாயாக. எ-று. (கரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

காரணவனுவைக் காரியமென்பதென்னையெனின் - ஜகத் காரணமாகிய பரமாணுக்களைக் காரியமெனபதென்னையோ வெனின்?—காரியமவயவத்தாற் கண்டனங் காரியவுருவமெல் லாங் கடாதிபோல வழிதருங் காரணத்தால் - பரமாணுக்க ளவயவத்தாகக் காணப்படுகையாற் காரியரூபமானதெல்லா மண்குடமுதலியவைபோ லழியுமென்னு மேதவினாற் பரமாணு க்களும் பிரளயகாலத்தி னாசத்தையடைவதேயாதலாற் பிர பஞ்சத்திற்குக் காரணமாகாது. பின்னை பிரபஞ்சத்திற்குக் காரணமேதெனின்?—காரியவுறாப்பின் மாயைதருமெனக் கரு திடாயே - காரியரூபமல்லாத மாயையே பிரபஞ்சத்திற்குக் காரணமென றறிவாயாயாகவென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

திரும்ப விகற்பித்து நிராகரிக்கின்றூர்.

காரண வணுவை - நாங்களுலகுக்குப் பரமகாரணமாகக் கற்பித்த பரமாணுவை,—காரியமென்ப தெனனை யென்னில்? அவயவத்தால் - சாம்சத்தால்,—கடாதிபோலக் காரியமாகக் கண்டனம் - அறிந்தோம்,— நிரவயவமாகிய பரமாணுவைச் சாவயவமாக வெந்தவேதுவினாலே கண்டீர்? திக்கொடு சம்யோகியாயும் மூர்த்தமாயுங் கேட்கப்படுதலாற் சாவயவமென்றும், அதனாற் காரியமென்றும், அதனுலதற்குவேறொரு காரண முண்டென்றும், அறிந்தோ மாகையால்; பரமாணு முதலாம்.—காரியமுருவமெல்லா மழிதருங் காரணத்தால் - அந்தப் பரமாணு முதலிய காரியங்களை,—காரியவுருப்பினமாயை - அசேதனமாய் அநேகமா யிருத்தல், அமூர்த்தமா யிருத்தல், சாவயமா யிருத்தல் முதலான காரிய லக்ஷணமில்லாததாய்; இதற்குச் சேதன மாத்திரமின்றி விபரீதலக்ஷண முள்ளதாகிய மாயை,—தருமென - உண்டாக்குமென,—கருதிடாயே.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

எ-து. அணு காரியப்பொருளாய் அழிதன்மாலைத்தென்பதூஉம், மாயை காரியப்பொருளாதலின்றி நிலைபேறுடையதென்பதூஉம்; முறையேஅவயவமுடைமையானும் அஃதின்மையானு மறிப்படுமென்பதாம்.

இதுவுஞ் சொற்பொருட்பின் வருநிலை.

அணுக்களுக்கு அவயவமுண்டென்பது சையோகப் பதேவாற் பெறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பரமாணுக்கள் பிரபஞ்சத்துக்குக் காரணமாயிருக்க, அவையிற்றைக் காரியமென்று சொல்லுவானேனென்ற பட்டாசாரியனை நோக்கி; மேலருளிச்செய்கிறார்.

காரியமென்பதென்னைக் காரணவணுவையென்னில் - பிரபஞ்ச காரணமாயிருக்கத்தக்க பரமாணுக்களைக் காரியமென்று சொல்லுகிறதெப்படி யென்று நீ சொல்லில்? —காரியமவயவத்தாற் கண்டனங் கடாதிபோல - பரமாணுக்கள் தானே யவயவங்களுமாயிருக்கையாலே கடாதிகளைப்போலே காரியப்பட்டு வருமென்று அறிகிறோம்,—காரியவுருவமெல்லா மழிதருங்காரணத்தால் - காரியப்பட்டு வருகிற பிரபஞ்சமெல்லாம் வியவகாரங்களிலே ஓரோர் காரணங்களாலே அழியத்தக்க முறைமையுண்டாம. ஆதலாலே,—காரியவுருபயின மாயை தருமெனக் கருதிடாயே - பண்ணப்பட்ட அவயவங்களில்லாததொரு மாயையே யின்பு இத்தப் பிரபஞ்ச காரியங்களையுண்டாக்குமென்று புத்திபண்ணுவாயாக.

இதனாற் சொல்லியது பரமாணுக்கள் அவயவங்களாய்க் காரியப்பட்டு வருகையினாலே பிரபஞ்சத் தோற்றுகைக்குக் காரணமாகாதென்றும்; அவயவங்களில்லாததொரு மாயையே பிரபஞ்சத் தோன்றுகைக்குக் காரணமாய் நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

காரணவணுவை - காரணமாகியவணுவை,— காரியமென்பதெனையெனில் - காரியமென்பதெங்ஙனமெனின்,— காரியங்கடாதிபோல - அணுக்கள் காரியப் பொருளாதல் குடமுதலியனபோல,— அவயவத்தாற் கண்டனம் - அவயவமுடைமையா லறிந்தனம்,— காரியவுருவமெல்லாம் - காரியப்பொருள்களெல்லாம்,— அழிதருங்காரணத்தால் - அழிதன்மாலைய வாதலின்,— காரியவுருப்பின்மாயை - காரியப் பொருளெனப்படுதற்கியைபுடைய அவயவத் தன்மையின்மையி னிலைபெறுமியற்கைத்தாகிய மாயையே,— தருமெனக் கருதிடாயே - முதற் காரணமென நீ யறிவாயாகவென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இவ்வுலகு மாயையின் காரியமென்பதற்கு
உதாரணமிட் டுணர்த்துகின்றார்.

தோற்றமு நிலையுமீறு மாயையின் றொழிலதென்றே,
சாற்றிடு முலகம்வித்துச் சாகாதி யணுக்களாக,
வேற்றதே வீண்டிநிற்கு மில்லதே யில்லையாகு,
மாற்றநீ மறந்தாபித்தான் மாயையை மதித்திடாயே. ௧௪

(இ-ள்.) தோற்றமு நிலையுமீறு மாயையின் றொழிலதென்றே சாற்றிடு முலகம் — ஞாதாக்கள் சிருட்டிமுதலிய தொழில்களை மாயாகாரியமென்று சொல்லுவார்கள், அஃதென்போல வெனில்?

வித்துச்சாகாது	சூக்குமமாய்ப் பூமியாதாரமா யிருக்கிற வித்தின்கட் பணை கொம்பு முதலானவைக ளடங்கி நின்று காரியப்பட் டவ்வித்தினாக ளொடுங்கிநின்று பின்புதோன்றுமாறுபோல,
அணுக்க ளாக வேற்றதே வீண்டி நிற்கும்	இப்படி யொழிந் தப்பரமாணுக்க டாமே பிரபஞ்ச ரூபமாகப் பொருந்தில், ஒருகாலத்திலு மழிவின்றியே நிற்கவேண்டும்
இல்லதே வில்லையாகும	அஃதொரு காலங்களி லழியுங்காணு மெனில்? அப்பொழுது காரணகாரியங்கள சேர வழிகையாற் பின்பொருகாலத்தில் தோற்றரு மலொன்றுமில்லையாய்ப் போகவேண்டும்
மாற்றநீ மறந்தாய்	அறிவாலுயர்ந்தோர மாயையே காரண மென்று சொல்லில் இப்பொழுது நீயிந்த வார்த்தையையு மறந்து விடுவையோ!
இத்தான் மாயையை மதித்திடாயே	இதுபோல மாயையே காரணமென றறிவாயாக. எ-று

இத்தானென்பது - அஃறிணைச் சுட்டுப்பெயரின் மூன்றாம் வேற்றுமை யேதுவின்கண் வந்தது. (௧௪)

ஏகார மீற்றசை.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

---o---

இன்னமும் அத்த வாதியை மறுப்பதாக உதாரணமிட்டு ணர்த்துகிறார்.

உலகத் தோற்றமு நிலையு மீறு மாயையின் றொழில தென்றே சாத்திரம் - உலகமான துண்டாகிறது நிலைபெற்றுநிற்கி

றது மொடுக்குகிறது மாயாசத்தி விலாசங்களென்று வேதங்களசொல்லும்,—வித்துச் சாகாதியணுக்களாக வேற்றதேலீண்டுநிற்குமில்லதே விசைவதினரு மாற்றநீமறந்தாய் - சூக்குமமாகிய வடவிசத்திற் றூலமாகிய சாகோபசாகை பத்திரபுஷ்ப பலங்களெல்லா முண்டாவதுபோல த்ருஶ்யமாயிருக்கிறமாயையில் திருஶ்யமாயிருக்கிற பிரபஞ்சம் அகடிதகடனாபடீயசிமாயா என்றுண்டாவ தன்றிப் பரமாணுக்களின கூட்டமே பிரபஞ்சமாமெனின? இவண் வித்துக்களின் கூட்டமே சாகோப சாகையாக நிற்கவேணடும். அப்படிநிற்க நீசொல்லும் பரமாணுக்களின கூட்டங்களும் பிரபஞ்சமாம். அஃதில்லையாகையாற் பரமாணுக்களின கூட்டமும் பிரபஞ்சமெனபது கூடாது இதற்கு நீயுத்தரஞ்சொல்லமாட்டா திருக்கையா லப்பிரதியாநாம நிக்ரகஸ்தானம்,—இததானமானபயை மதித்திடாயே - இந்த நிக்ரகஸ்தான முனக்கு வருகையால் நானசொன்னமாயையே பிரபஞ்சத்திற்குக் காரணமென்று விசாரிப்பாயாக என்றிதன்பொருள்.

இதனாற் சகத்துற்பத்தி * சங்காதரூப மல்லவென்றது.
* சங்காதம் - கூட்டம்

இம்மூன்று விருத்தத்தினாலுஞ் சங்கிரஹித்துச்சொன்ன நியாய வைசேஷிகருடைய மதத்தையு மறுப்பையுஞ் சிறிது விஸ்தரித்துக்கூறுவாம்.

ஈஸ்வரேச்சையினாலும் *போஜகா திருஷ்டத்தினாலும் பரமாணுத்துவயங்களிற கிரியையுண்டாய் ஸஜாதீய பரமாணுக்களுக்குச் சம்யோகம்வந்தபோது த்வியணுகமாம். † த்வியணுகத்திரயத்தினால் —ஜாலஸ்தசூரிய மரீசிப்பிரகாச்யமான த்ருசரேணுவாம். த்ருசரேணுவின் கூட்டங்களா லவயவித்துவாரா மஹா பிருதிவியாதியாம். ¶ஏவம் ஆப்ய தைஜஸ வாயவ்ய

ங்கள் தத் தத் பரமாணுக்களினு லிக்கிரமத்திலுண்டாம். பிரளயமு மீஸ்வரனுடைய ‡ சகசிஹீர்ஷையினுனு மான்மாக்களுடைய போஜகா§திருஷ்டாபாவதகினுனு மஹாபூதசதுஷ்டயாரம்பக பரமாணுக்களிற் கிரியையுண்டாய் கிரியையினுல் +விபாகமுண்டாய் அவ்விபாகத் துவாரா அசமவாயிகாரண சம்போகநாசத்தினுன மஹாபூதங்களுடைய நாசமுண்டாம். ஆகாசம் காலம் திக்கு ஆன்மா இந்நான்கும் விபுவும் நித்தியமும், மன தணுவுமா யநித்தியமு மாயிருக்கும். இஃதவர்கண்மதம்.

* ஆன்மாக்களுடைய புசிப்புக்கு அதருஷ்டம் வந்ததினுலும், † இரண்டணு சேர்ந்தது மூன்று கூடியது, ÷ சாலகவாசசூரிய கிரணத்திலே விளக்குகிற மூவணு, ¶ இப்படி அட்புதேயு வாயு ‡ சங்கரிப்பு, § அதருஷ்ட - அபாவம்=அதிருஷ்டமில்லாமை, + பிரிதல்.

இதற்குமறுப்பு பரமாணுசத்பாவத்திற் பிரமாணமேயில்லை நிரவயவ திரவியத்திற்குச் சம்யோகங்கூடாது. சாவய மாகி னுசவத்ஙா யுபாதானத்வங் கூடாதாகையாற் பரமாணுப் புரகசிறியையினுற் சகத்சிருட்டிகூடாது. ஆகாசங் காலந் திக்கு மன நிலைகளுக்கு குற்பத்தி வேதாக மோகத மாகையா விதிதிபதுதுவங் கூடாது. மன தணுவாகின், மஹத்பதார்த்தக்கிரணங் கூடாது, ஆகையான் மன மகத்தே, விபுவே. ஆன்மா நித்தியமும் விபுவுமென்றதே யதார்த்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———ம———

இவ்வுலகமாயையின் காரியமென் றுணர்த்துகின்றார்.

உலகினது தோற்றமு நிலையுமீறும் - சிருட்டியுந் திதியுஞ் சங்காரமும்,—மாயையினுனெழுநிலதென்றே - அன்னத்தினது

பாகஞ் சாத்தனது பாக மென்றாற்போல மாயையினதுகிருத்திய மீசுரனது கிருத்தியமென்றுதானே,—சாற்றிடுமுலகம்-உலகத்தோர் சொல்லுவார்கள்,—வித்து - ஆலம் விதைமுதலியன,—சாகாதி-பனை கொம்புமுதலானவையை,—அணுக்களாக - சூக்குமசத்தி ரூபங்களாக,—ஏற்றதேல் -தனவிடத்துத் தரித்திருந்ததானால்,—ஈண்டு நிற்கும்- தனதிடத்து நின்றுந் தூலவியத்திரூபமாகத் தோன்றி நிற்கும்,— இல்லதேலில்லையாகும் மாற்ற நீ மறந்தாய் - முதற்காரணத்திற் காரிய முன் சூக்குமித்துச் சத்திரூபமா யிராதிருந்தா லுண்டாகாதென்று முன சொன்ன வசனத்தை நினையாதிருந்தாய்,—இதனால் - வித்துச சாகாதியெனனுந் திருட்டாந்த முறைமையால்,—மாயையை மதித்திடாயே - மாயை தனது காரியத்தை முன் சத்திரூபமாகஏற்றதேல் அந்தக் காரியத்துக்குக் காரணமாம். இல்லையேற் காரணமாகாதென்று மாயையைச் சற்காரியவாதியாகித் தானே விசாரித்துப் பார்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ - து. மாயைதருமென்றற்கு, மாயையே பிரகிருதியென்றறிக வென்னும வேதமொழியும், வித்துச்சாகாதி முதலியவற்றின வைத்து, உடம்பாட்டானுமெதிர்மறையானும் வழங்குகின்ற உலகமொழியும் சான்றாகலின்; இதனுனும அணுகாரணவாதத்தை விட்டு மாயையே காரணமெனபதனை அறிவாயாகவென்பதாம்.

பிரமாணங்கூறி வலியுறுத்திபவாறு.

வேதத்துமொழிப் அதனை யுணர்ந்தார்மேலேற்றிக் கூறப்பட்டது.

ஏனையவற்றைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

இத்தாலென்புழி விகாரத்தாற்றொக்கவும்மை, காரிடவுருப்பினவும் மாத்திரையேயன்றி யென இறந்ததுதழீஇயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பிரபஞ்சந் தோன்றிநின்றொடுங்குகைக்கு மாயையே யுபாதானமென றெங்ஙே காணப்பட்டது என்றவனை நோக்கி; மேலருளிச் செய்கிறார்.

தோற்றமு நிலையு மிறு மாயையினொழிலதென்றே சாற்றுமுலகம் - பிரபஞ்சந் தோன்றிநின்றழிகிற விதனை ஞாதாக்கள் மாயாகாரியமென்றே சொல்லுவார்கள். அதெனபோலவெனில்?—வித்துசசாகாதி - விதையிலே சாகைகள் முதலானவை தோன்றுகிறப்போலே,—அணுககளாக வேற்றதே வீணடு நிற்கும் - அப்படியொழிந்து அந்தப் பரமாணுக்கள் தானே பிரபஞ்சமாய்ப் பொருந்தில், ஒரு காலத்திலு மழிவின்றி நிற்க வேணும்,—இல்லதே விசைவதின்றும் - ஒருகாலங்களிலே யழியுங்காணு மென்னில்? காரணகாரியங்களசேர வழிகையாலே பினபு ஒருகாலங்களிலுண்டாகாமற் போக,இல்லையாய்விடவேணும்,—மாற்றநீ மறந்தாய் - ஞாதாக்கள் மாயையைக் காரணமென்று சொல்லிப்போதுகிறவிது காண்கையாலும், நீ காரணமென்று சொன்ன பரமாணுக்களுக்கு அழிவுண்டாமெனறிகையாலும்,—நீ தான் மாயையே மதித்திடாயே-இனிமாயையேபிரபஞ்சத்துக்கேத்தீகாரணமென்றுநீபுத்திபண்ணுவாயாக,

இதனாற் சொல்லியது பிரபஞ்சத் தோன்றுகைக்கு மொடுக்குகைக்கு மாயையே காரணமென்றும், பரமாணுக்கள் காரணமெனின் பிரவஞ்ச மொரு காலத்திலு மழியாதிருக்க வேணுமென்றும், ஒருகாலத்திலே யழியில் பின்னை யொருகாலத்திலுந் தோனறாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

தோற்றமுநிலையுமீறும் - தோற்ற நிலை யிறுதியென்னு முத்தொழிலும்,—மாயையினன்றிலதென்றே சாற்றிடும் - மாயை தருமென்றார்க்கு மாயையே பிரகிருதியெனறறிதென்று கூறுகின்ற வேதமொழியும்,—வித்துச் சாகாதியணுக்களாக வேற்றதேல் - வித்தினகண்ணே சாகைமுதலியன சூக்குமரூபமா யடங்கிநின்றனவாயின,— ஈண்டுநிற்கும் - அவைதூலரூபமாக வெளிப்படுமெனவுடம்பாட்டாலும்,— இல்லதேல் - அவ்வாறு சூக்கும ரூபமாயடங்கி நிற்றலிலவெனின்,— இவைவதின்றும - அவைதூலரூபமாக வெளிப்படுதலுமின்றாமென வெதிரமறையாலும்வழங்குகின்ற,—உலகமாற்றம் - உலகமொழியுஞ் சான்றுகளின,—நீமறந்தாய் - அதனைநீமறந்தாய்,—இதனால் - காரியவுருடபின்மை மாத்திரையன்றி வேதமொழி யுலகமொழி சான்றுதலாகிய விதனுனும்,—மாயையை - அணுக்காரணவாதத்தை விட்டு மாயையேகாரணமென்பதனை,—மதித்திடாயே - அறிவாயாகவெனபதாம.

மறைஞானதேசிகர் உரை.

மாயையின்கணின்று தோன்றி யொடுங்குவதில்லை
யென்றவனை நோக்கித் திருட்டாந்தமிட்
டுணர்த்துகிறார்.

மாயையி லுள்ளவஞ்சம் வருவது போவதாகும்,
நீயதிங் கில்லையென்னி னிகழ்ந்திடு முயலிற்கோடு
போயுகு மிலைகளெல்லா மரங்களிற் புகுதப்போதி, ஞா
யிறு மதுவுமென்னிற் காரணங் கிடக்கவாமே. (கரு)

(இ-ள்) மாயையி லுள்ள வஞ்சம் வருவது போவதாகும்	காரணமாகிய மாயையிலே நின்று தோன்றும் பிரபஞ்சம் பரிணமியாமற் முன்னே தோன்றியும் பின்பழிவது மாகாநிற்கும்.
நீயதிங் கில்லையெனில்	இந்த விசுவந் தோற்றுமதற்குக் காரண மில்லையென்று நீ சொல்லில்
நிகழ்ந்திடு முயலிற்கோடு	இல்லாதது தோன்றுமாயின் அது முயலுக்குக் கொம் புண்டென்று சொல்லுகிறதற் கொக்குங்காண்.
போயுகு மிலைகளெல்லா மரங்களிற் புகுதப் போதி ஞாயிறு மதுவுமெனில்	மரத்தின் கணின் றுதிர்ந்த விலைகளும் மரத்திலே பொருந்தித் தானே மீளவுந் தோன்றுமாயின், இவ்விடத் தழிந்துபோன வுலகமு மாயையின்கட் சென்று தோன்றுமென்னில்?
காரணங் கிடக்கவாமே	அவ்விடத்திலே காரணமுண்டாயிருக்குமாகிற் பின்பு காரியமு மப்படியே யுண்டாம். எ-று.

பிரவஞ்ச மெனபதனை வஞ்சமெனத் தலைகளுரைத்தலாக் கினறென வறிக. (௫௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——) ——

மேல் லப்தாவகாசனாச, சூனியவாதி நீவி ரிருவருஞ் சொல்லும்பரமாணுவு மாயையும், பிரபஞ்சத்திற்குக் காரணம ல்ல; சூநயமே! சகத் துபாதானகாரணமெனனும் வசனத தை யொருவிருதசததிரு லநுவதிததுத் தூஷிததல்.

மாயையி னுள்ளவஞ்சம் வருவது போவதாகும் - மாயை யின் கணுண்டாம் பிரபஞ்சமானது, உண்டாய்வருவது நாசமா ய்ப்போவதுமாம்;—நீயதிங்கில்லையெனவி னிகழ்ந்திடு முயலிற் கோடு - இவிடதது நீசத்தாக வொருமாயை யெனப கோ ரு பாதானகாரண மினறெனின? அத்திபநகாபாவமாகச சொல் லு முயற்கொம்புககு குணநாமக கிரியைக ளில்லாதது போல வுபாதானகாரணைரு சூநயமாகிற் பிரபஞ்சமுஞ் சூநயமேயா ம் இதுகாரிய முண்டு காரணமில்லையென்று சொல்லுகிறது கா லாத தியபாதிஷட வேத்வாபாச மாகையால் இப்பக்ஷம் நிரஸ்தம்,—போயுதி ரிலைகளெல்லா மரங்களிற புகுப் போ திருயிடு மதவுமெனனில் - அதிற் பிரவஞ்சமானது மாயையி லொடுங்கி மீண்டு மாயையிலுண்டாமெனபது, மரங்களினின் றும் பழுதது விழுந்த விலைகள் மீண்டு மம்மரங்களிற் புக்கவிதே சனிராகத் தோனறுமாயின,நீர்சொல்லியமாயையிற் பிரவஞ்ச மிலபத்தையடைநது மறித்து மம்மாயையிலினறு முற்பத்தி யடெனின்?—காரணங்கிடககவாமே - அங்ஙனங் காரியரூப மானதெல்லாஞ் சூக்குமரூபமாகக் காரணத்திலிருந்து மீளவும

ண்டாமென்று சொல்லுமவர்களுக் கித்திட்டாந்தமுந் துஷணமு மெம்மதமானது. காரணமாகிய சமுத்திரத்தில் +வாயுவசாத் தரங்க பேநபுற்புத துஷாரங்களுமுண்டாய் மீண்டு மதிலயிப்பதுபோ லீஸ்வரசத்தி மாயையை க்ஷோபிக்கப்பண்ணவின்றதகூடீப்துப் பிரதேசத்திற் றனுகரண புவனபோக சதுர்விதரூபப்பிரபஞ்ச முண்டாமென்பதேயாம்.

ததுக்தம் — [illegible]

+ வாயுவசத்தினால் திரை நுரை குமிழி விந்துத்திவலை.

பிரவஞ்சம எனபது. வஞ்சம் எனக் குறைந்துநின்றது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அப்படி தானே,மதிதுதலைவெளிப்படண்ணிச் காட்டுகின்றார்.

மாயையின உள்ளவஞ்சம் - சத்திருபமாய் முன் சூக்குமித்திருந்த பிரபஞ்சம் வியத்திருபமாய்த திருமபச் சத்திருபமாய், மாயையின் - மாயையிலிடத் திருநது,—வருவது போவதாகும - தோற்றிபொடுங்குவதாகும்,— நீயதிக்கில்லையென்னில் - மாயையிற் காரிய முனசத்திருபமாயிருந்து வருவதுபோல தில்

லையென்று நீசொல்லில்,— முயலிற்கோடு - முயலின்கண்ணே கொம்பு,—நிகழுந்திடும் - உண்டாம்,—மரங்களில் உகுமிலைகளெல்லாம்-உதிரும் பத்திரங்க ளெல்லாம் மரங்களிலே,—போயப்புக்குப் போதின - சென்றொடுங்கி வருமாகில்,—அதுவும் ஆயிடுமென்னில் - மாயையிற் பிரபஞ்சம வருவது போவதாகுமென்று நீ சொல்லில், மரங்களி லுதிர்ந்தவிலைகள் தங்களுக்குக் காரணமாகும் மரங்களுக்குக் காரணமாகிய பிருதிவியிலொடுங்கும். அப்பேது மரங்களி லிலைகளினது தோற்ற மெப்படியெனனில்?உதிர்ந்த விலைகள்வந் தொடுங்காதிருந்தாலும்,—காரணங்கிடக்கவாமே - அவைகளினறிப் பினனுமனந்த பத்திரசத்திருபமாகிய மரத்திற்க வேறுவே றிலைகளுண்டாகாநிற்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அதுவன்றியுஞ் சற்காரியகாரணங் கொள்ளாது இல்லது உற்பத்தியாமெனபாரக்கு முயலின்கண்ணுங் கோடுளதாதல் வேண்டும்; அற்றேல் உள்ளபிரபஞ்சமே மாயையிலொடுங்கி மீளத் தோன்று மென்பார்க்கும், அவ்வாறே மரத்திலின்றுதிர்ந்த விலை,தானே மரத்தி லொடுங்கி,மீளத் தோன்றுதல் வேண்டுமெனின்? அஃதொக்கும். அங்ஙனமுதிர்ந்த விலைகள் சத்திருபகாரணமாய் நிலைபேறுடைமையின, அது மீளத் தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லம் அதனொடொருங்கு கூடியவழி, அவ்வாறே தோன்றும்; அல்வழித் தோன்றுதாகலின் ,அதுபற்றிக் கடாவென்னையென்பதாம்.

தருக்கங் கூறி வலியுறுத்தியவாறு.

பிரவஞ்சம் வஞ்சமெனக் குறைந்து நின்றது.

பிறகாரணங்களாவன, கன்மங் காலம் முதலாயின.

கிடத்தல் முதற்காரணத்தோடு ஒருங்கியைதல்.

கிடக்கவாமென்பது மழைபெய்யக் குளநிறையுமென்றாற்போல நின்றது.

அதுவே தோன்றுதற்குரியகாரணவிலைபபு இல்வழியும், மாத்தின்கண் அதுபோல மற்றுஞ்சத்திகள் பலவுளவாகலின, இயைபுடைய வேறுவேறிலைகள் தோன்றுதற் கிழுக்கின்மையு முணர்க.

நிரம்பவழகியருளை வருமாறு.

—o—

மாயையிலே நின்றும் பிரவஞ்சம் தோன்றுகிறதும் ஒடுங்குகிறதும் உள்ள தொன்றல்லவென்றவனை நோக்கி; மேலுமருளிச் செய்கிறார்.

மாயையினுள்ளவஞ்சம் வருவதுபோவதாகும் - இப்படிக் காரணமான மாயையி னின்றுங் காரியமான பிரவஞ்ச மாவது மழிவதுமாயும் வாராநிற்கும்.—நீயிதிங்கில்லையெனி னிகழ்ந்திடு முயலிறகோடு - இப்படிக காரணமான மாயையினின்றும் காரியமான பிரவஞ்ச மாவதாயு மழிவதாயும் வருமென்று சொல்லாமல், பிரபஞ்சந் தானே காரணமுமாய்க் காரியமுமாயிருக்குமென்று நீ சொல்லுகிற விது; முயலுக்குக் கொம்புண்டென்று சொல்லுகிறதுக் கொக்கும்;—போயுகுமிலைகளெல்லா மரங்களிற் புக்குப்போதி ஞாயிடுமதுவுமெனில் - உதிர்ந்துபோகிற இலைகளெல்லா மரத்திலே புகுந்து மீண்டு மிலையாகப் புறப்படில், நீர் சொல்லுகிற பிரபஞ்சகாரியமு மிப்படியே யாமென்று சொல்லில்?—காரணங் கிடக்கவாமே - காரியப்பட்டவை காரணத்திற் செல்லவேண்டுவதில்லை, காரண முணர்கவே காரியமுந் தானே யுண்டாகாநிற்கும்.

இதனாற் சொல்லியது மாயையினாலே நின்றும் பிரபஞ்சந் தோன்றியுமீளவு மந்த மாயையிலே யொடுங்கியும் பிரபஞ்சங் காரியப்படுமென்றும்; மரங்காரணமாகத் தோன்றின விலைகளும் பூக்களும் காய்களும் மரத்திற்சென் றொடுங்க வேண்டுவதில்லையென்றும் மரங்காரணமா யுண்டானாற்போல மாயையென்கிற காரணங் கிடக்கவே, காரியமு முண்டாகா நிற்குமென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நீ பதிங்கில்லையென்னின் - அதுவன்றியு நீசற்காரியகாரணவதைக்கொள்ளாது இல்ல துற்பத்தியா மென்பையாயின,—முயலிற்கோடு நிகழுந்திடும் - முயலின்கண்ணுங் கோடுண்டாதல்வேண்டும்,—உள்ளவஞ்சம் - அறதேல் உளதோ பிரவஞ்சமே,—மாயையின் போலுதுவருவதாகும்-மாயையினொடுங்கி மீளத் தோன்றுமென்பாகரும,—மரங்களினுத மிலைகளெல்லாம் - அவ்வாறே மரத்தினின்று உதிர்ந்தவிலைகள,—போய்ப்புக்கு - தானே மரத்திலொடுங்கி,—போதின - அசற்குரியகாலத்தில்,—ஆயினு மதனுமென்னில்-மீளத்தோன்றுதல் வேண்டுமெனின் அஃதொசுரும,— காரணங்கிடக்க - அங்ஙனமுதிர்ந்த விலைகள் சத்திரூபகாரணமாய் நிலைபெறுடைமையின்,—ஆமே - அதுமீளத் தோன்றுதற்குரிய கன்மங் காலமுதலிய பிறகாரணங்கள் எல்லா மதனோ டொருங்குகூடியவழி யவ்வாறேதோன்றும்; அல்லுழித் தோன்றாதாகலி னதுபற்றிக் கடாவென்னையென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மாயை காரிய காரணத்துடனே கூடியிருக்கையா லநாதி யெனபதூஉம், பிரபஞ்சமுஞ் சிருட்டியாதி கிருத்தியங்களு மாதியெனபதூஉம் உணர்த்துகின்றது.

கருதுகா ரணமுண்டாகக் காரிய முள்ளதாகி, வருதலா லநாதியைய மற்றொரு கடவுளித்தைத், தருதலா லாதியாகச் சாற்றலு மாகுமாயைக், கொருவனு ளெனினென்னி லுள்ளவா றுரைப்பக்கேணீ. (கரு)

(இ-ள்.) கருதுகா ரணமுண் டாகக்காரி யமுள்ளதாகி வ ருதலாலநாதி	இந்த மாயை யநாதி, யெக்காரணத்தாலெனனில்? கருதப்பட்ட காரணத் துடனுங் காரியத்துடனு மனறே கூடிவருகையினாலே?
வையய மற்றொ ரு கடவுளித்தை த் தருதலா லாதி யாகச் சாற்றலு மாகும்	இந்தப் பிரபஞ்சம் ஜடமாகையா லதனை யொரு கர்த்தா சிருஷ்டித்துக் காரியப்படுத் துகையா லாதியென்று சொல்லப்படும்.
மாயைக்கொ ருவனு ளெனனி க்கெனனின	இந்த மாயை தானே போதாதோ, ஒரு கர்த்தா வாவெனனில்?
உள்ளவா று ரைப்பக் கேணீ.	கர்த்தா வுண்டெனபதனை யுனக்குள்ளப டி யாஞ் சொல்வ மதனைக் கேட்பாயாக எ-று. (சகூ)

மற்றென்ப தசைநிலை

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பிராபாகரன் ஜகத் தநாதிய நித்தியமும், இதற்கு நிமித்தோபா தானங்கள் சொல்லவேண்டுவ தின்றெனபதைக் குறித்துக் கூறல்.

கருதுகாரணமுண்டாகக் காரியமுள்ளதாகி வருகலாலி னாதி வையம் - புத்திபண்ணு முபாதான காரணமாகிய மாயை சத்தா யநாதியாயுள்ள விககாரியமாகியபிரவஞ்சமு மம்மாயை யினின்று முண்டாய் வருகையாற் பிரபஞ்சமும் ‡பிரவாகா நாதி,—மற்றொருகடவு ளிதனைத் தருகலா லாதியாகச் சாற் றலுமாகும் - [மற்றுவினைமாற்று] காததாவானவனுண்டாக் கலிற் பிரபஞ்சத்தை யாதியென்று சொல்லவுங் கூடும்,—மா யைக்கொருவனு ொனனிங்கெனனின - நிரீஸ்வரசாங்கிய கா பிலர், அங்குராதிகளுக் கொருசேதனனை யபேக்ஷியாமற் பீ ஜாதிகள் சாமககிரியையானதுபோல் மூலபபிரகிருதியானது தி ரிகுணாத்மக மாகலின மகதாதி பிரபஞ்சோற் பததியுந் திதியு மிலயமுந் தானேயாயிருககுமாகலி னிதற்கோ ரீஸ்வரனை வே ண்டா. ஈஸ்வரனொருவன ஜகத்கர்த்தாவாக வுணடாமாகி லி ப்பிரகிருதி யேதிற்கென்று சொல்லுவர்,—

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 - 𑌯𑌥𑌾𑌹𑍍𑌯𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍇𑌕𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌤𑌤𑍍𑌰
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌥𑌾 । 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑍇𑌕𑍍𑌷 𑌬𑍀𑌜𑌾𑌦𑌿 𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌤𑌶𑍍𑌚
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌕𑍃𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌤𑍇𑌨 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃.

உள்ளவா றுரைப்பக்கேணீ - இப்பிரகிருதி ஜகத்துருபமாகப் பரிணமியாது,ஜகத்துண்டாமாறு சொல்லுதுங்கேள என்றிதன பொருள்.

‡ ப்ரவாகாநாதி-ஆற்றிலே தண்ணீர் முன்னேவந் தத்தண்ணீரோடிப்போகப் பினனேயு மொழியாமல் வருவதென வறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பிரபஞ்சம் பிரவாகாஞதி யென்பதிசைக்கின்றார்.

கருது காரணமுண்டாக - இதற்குக்காரியத்துக் கிதுவேகாரணமென்று பரிசிககப்பட்ட மாயை யெக்காலத்து முள்ளதாயிருகக,—காரியமுள்ளதாகி - காரியஞ் சத்தி ரூபத்திஞலேயும் வியத்தி ரூபததிஞலேயு மெப்போது முளளபொருளாகி,—வருதலால் - சததிரூபந்திரிந்து வியததிரூப மாதலால்,—வையம - பிரபஞ்சகாரியம்,—அநாதி - நிததியம,—வியத்திரூபத்திஞலே யொனறுபோகவொனறு பிரவாக மாய்வருதலாற் பிரவாகா நித்தியமெனறு சொல்லபபடும்; மற்றொருகடவுள்-நிமித்தகாரணஞகிய கர்ததா,—இத்தை - இந்தவையத்தை,—தருதலால் -சததிரூபத்தை வியததிரூபமாகத் திரிததுநீககி வியத்திரூபமாக்கலால்,—ஆதியாகச சாற்றலுமாகும் - அநித்திய மாகவுஞ சொல்லப்படும், —மாயைக கொருவஞரென்னிங் கெனனில்-மாயை யொவ்வோரோவவோர் பிரதேசங்களிலே, சத்திரூபந்திரிந்து வியததி ரூபமாதலுககு நிமித்தகாரண னெவனெனறு நீர்சொல்லுமெனறு நீசொல்லில்,—உள்ளவாறுரைப்பக் கேணீ-சத்தியமாகச் சொல்லுவாம் நீ கேள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அற்றேல் இங்ஙனஞ் சற்காரியவாதங் கூறுவார்க்கு உலக மழிபொருளென்றல் பொருந்தாதாய் முடியுமெனின்? அற்றன்று; காரணங்காரியமிரண்டும் உள்பொருளேயென்பது மேற்கூறியவாற்றான் இனிது விளங்குதலிற் காரியப்பிரபஞ்சமும் நித்தப்பொருளேயாம். ஒருகருத்தாவால் ஒருகாலத்து விளங்குதலு மொருகாலத்து மறைதலுமாகிய அவத்தை வேறுபாடுபற்றி அழிபொருளென்றுஞ் சாற்றப்படும். அவ்வவத்தை வேறுபாடு கருதாதவழி உண்மையால் நித்தப்பொருளென்பதே துணிபென்பதாம்.

மாயைக்கொருவனு ரெனினிங் கென்னி னுள்ளவாறுரைப்பக் கேணீ என்பதுதொடுத்து அழிந்திடுமெனுங்கடாமே என்பது முதல் இவையாறு செய்யுளானுந் தார்க்கிக மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, வருமுறை என்பதனாற் பெறப்பட்ட சற்காரியவாதத்தினியல்பு வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மாயையிற் றோன்றுமென்ற பிரபஞ்சம் ஆ போவதாதி யோவென்று கேட்ட பட்டாசாரியனை நோக்கி; மேலருளிச்செய்கிறார்.

கருது காரணமுண்டாகக் காரியமுள்ளதாகித் தருதலா லதாதிவையம் - கருதப்பட்ட வுபாதான முண்டாகவே அந்தக் காரியப்படுகிற பிரபஞ்ச முண்டாய் வருகையா லதாதியேயுள்

௭௯.—மற்றொரு கடவுளித்தைத் தருதலா லநாதியாகச் சாற்றலுமாகும் - முன சொன்னதொரு கத்தா சிருஷ்டிகாலத்திலே இந்தப் பிரவஞ்சத்தை யுண்டாக்குகையினாலே இதனை யாதியென்றுஞ் சொல்லுமாம்,—'அழிதசயின்'' காரணவனு' 'காரியமெனபது' 'தோற்றமும்' 'மாயையின்' என்ற அஞ்சுதிருவிருத்தமும் பட்டாசாரியன. இதனை மறுத்ததற்குப் பிரமாணம்-பாபட்சம். "அழிகினற தால்வினைக ளாகினறவாறெனெரு வதுமக்கியானபரிசே, யொழிவின்றியோதனமு மறவுணடுநாமவினைகளுறுகின்றவாறதெனலாங், சழிகின்றதாலறிவு வினைதந்திடாவினைஞர் கருமங்கருடியுரவோா, பழுதினறியேயுதவு மதபணபதாகவருள பரமனகணுகும் வினையே," எனனுமது கண்டுகொள்க. நிரீச்சுர சாங்கியன் மாயை தானே யுருககளாகிற சொழிநது இசற்கொரு கத்தா வேண்டுவதில்லையெனன அவனை மறுத் தருளிசசெய்கிறார்,—மாயைக் கொருவனு ரென்னிலெனனில் - மாயையாலே பிரவஞ்சமுண்டாமாகில் இதற்கொரு கததாவும்வேணும் என்றிவ்விடத்திற் சொல்லுகிறது எப்படியென்று நீகேட்கில்,—உள்ளவாறனைப்பக் கேணி - தாமுளளபடிசொல்ல நீ கேட்பாயாக

பட்டா-மறு, கூ-செ.

இதனாற் சொல்லியது பிரபஞ்ச மநாதியென்றும் ஒருகாலத்திலே கர்த்தாவினாலே காரிபப்படுகையாலே ஆதியெனறும்; இப்படி சாரிபப்படுகைக்கு கர்த்தா வேண்டாமெனன கர்த்தா வேண்டுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

கருதுகாரணமுண்டாகக் காரியமுள்ளதாகிவருதலால்-கருதுகின்றகாரண முள்பொருளாக வதனகட்டோனறுங் காரியமுமுள்பொருளே யெனபது மேற்கூறிய வற்றா னினிது விளங்குதலில்,—வையமனாதி - காரியபிரவஞ்சமு நிததப்பொருளேயாம,—மற்றொருகடவு ளித்தைத்தருதலால் - ஒருகர்த்தாவாலொரு காலதது விளங்குதலு மொருகாலத்து மறைதலுமாகிய அவததை வேறுபாடுபற்றி,—ஆதியாகச் சாற்றலுமாகும்-அழிபொருளெனறு சாற்றவும்படும. அவ்வவத்தை வேறுபாடு கருதா வழி யுடைமையா னித்தப பொருளென்பதே துணிபெனபதாம். ஆகலின,—இங்கு-இவ்விடத்து,—மாயைக்கொருவ னாரெனனெனின - மாயையே தனகாரியத்தைத்தரும் இதற்கொருகருத்தா வெற்றுக்கெனின?—உள்ளவாறுணர்ப்பர் - அததனை யுள்ளவா றுரைத்தலை,—நீகேள் - நீகேட்பாயாக என்பதாம்.

மாயைக் கொருவனா,ரென்னிங் கென்னி னுள்ளவாறுணாப்பகேணீ எனப தொழிதத; அழிந்திடு மனுக்கடாமெ யெனபதமுத லிவை யாறுசெய்யுளானுந் தார்க்கீகர்மதம்பற்றியாசங்கித்துப் பரிகரிதது வருமுறையெனரதனாற் பெறப்பட்ட சற்காரியவாதத்தி னியல்பு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

பூதாதியாகிய பிரகிருதியும் புருடனுங் கிருத்திய
கர்த்தா வாகாதென றுணர்த்துகிறார்.

புத்திமற் காரியங்காண் பூதாதி புருடன்றானு, மத்தனு கரணம்பெற்றா லறிதலா லவற்றைமாயை, யுய்

த்திடு மதனுன்மாயைக் குணர்வொன்று மில்லையென்றே, வைத்திடு மதனுலெல்லாம் வருவிப்பா னொருவன்வேண்டும். (௧எ)

(இ-ள்.) புத்திமற் காரியங்காண் பூதாதி — பரமாணு முதலிய பூதாதியாகிய விசுவம் புத்திமானுகிய கத்தாவினது காரியங்காண்.

புருடனுறும் — ஆன்மாவு மஞ்ஞானனுகையாற் பிரபஞ்சந்தானுக வுண்டாக்க மாட்டான், அதுவும் புத்திமான காரியங்காண்.

அத்தனுகரணம்பெற்று லறிதலால் — அந்த வானமாவுந் தனுகரணங்களையும் பெற்றகாலத்து விடயங்களை யறியவேண்டுகையினுலே

அவற்றை மாயையுய்த்திடும் — அந்தத் தனுவாதிகளை மாயைதானே செலுத்தாநிற்கும்;

அதனுன மாயைக்குணர்வொன்றுமில்லையென்றேவைத்திடும் — அந்த மாயை சடமாகையாற் சரீரவவயமு மாயாகாரியமாய்த் தனுவாதிகளைத்தானுக வறிந்து கூட்டுதற்கறிவில்லை யென்று வேதாமங்கள சொல்லும்

அதனு லெல்லாம வருவிப்பா னொருவன வேண்டும். — ஆதலா லானமாவையு மாயையினையுங் கூட்டிக காரியப்படுத்துவான் பசுபாச விலக்கணனுகிய வொரு கத்தா வேண்டுமென்று புத்தி பண்ணுவா யாக எ-று.

புத்திமான் எ-து. வடமொழி.
ஏகாரம் தேற்றம்.
உம்மை - எதிரததழீஇய வெச்சம்.

இதற்குப் பிரமாணம். பார்க்கியையும் வாயுவ்விய சங்கிதையுமென வறிக. (௧எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

பூதாதி - பிருதிவிமுதலான பிரவஞ்சம்,—புத்திமற்காரியத்தால் - தடையற்ற ஞானக கிரியாவாறு வுண்டாகவேண்டும்,—புருடன் - ஞானககிரியாவானுமாவல்லவோ, அவனுற்ப்ரவஞ்சமுண்டாமெனின,— தானும்-[அந்தவானமா தானுமென்பது தொகைநிலை],— அதனுகரணம்பெற்று லறிதலால் - கேவலத்திலொன்று மறியாமலிருந்து அப்பூதாதிகளினின்றுங் கனமத்திரகிடான காயத்தையும் புறககரணங்களையு முட்கரணங்களையுமுண்டாகப்பெற்று லடபோதொனறை யறியுமறிவுண்டாதலா லானமாககளாற் சிருட்டிககக்கூடாது,—அவர்றை மாயை யுப்ததிடுதலால் - அக்காயாதிகளுக்கு மாயை யுபாதான காரணமாகையினாலும் மாயையாமவைகளைச் செலுத்துகையினாலும், அதனால்,—மாயைக்குணர்வொன்று மில்லையென்றே வைத்திடுதலால்-வேதாகமங்களின மாயைக்கோ ரறிவுமில்லையென்று ஸ்தாபித்திருக்கையினாலும்,—எல்லாம் வருவிப்பானொருவன்வேண்டும் - எல்லாப்பிரபஞ்சத்தையு மாயையினின்றும் பிறப்பிப்பானொருகர்த்தாவேண்டுமென்று பாரிசேடப்பிரமாணத்தினாற் ஜகத்தீஸ்வரகருத்திருகமென்று கூறப்பட்டது.

[illegible]

——

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

உள்ளமுறைமையை யுணர்த்துகின்றார்.

பூதாதி-சங்காரக்கிரமத்தில் பூதத்திற்குப் பூர்வமாகவும், பிருதிவி தத்துவாதி சிவதத்துவாந்தமாகியவுலகு.

புத்திமற் காரியத்தால் - [புத்திமதென்னும் தகாராந்த வடமொழிபதம்.] இலக்கணையாற் புத்தியென்றது, ஞானமன்றிக் கிரியையுங் காட்டுதலால்; சர்வசிருட்டி ஸ்திதி சங்காரத்தொழில்அறிவுடையவொரு கர்த்தாவையுடைத்து-இதுபிரதிஞ்ஞை.

காரியப்படுந்தன்மையால்-இது ஏது.

காரியானுமானத்தால் முன்கர்த்தாவைவிஸ்தரித்துச் சாதித்திருக்க, கூறியது கூறலென்னுங் குற்றம் வரத் திரும்பக்கூறுவானேன்? உளது. இப்போது காரியானுமானங்கொண்டு பா சேஷியானுமானத்தாற் சாதித்துச் சிறப்பிக்கின்றார்.

ஞானவான் கர்த்தாவாகவேண்டுமென்று அறிவுள்ளவராய்ப் பிரசித்தருமானவான்மாதலானே கர்த்தா, பிரசித்தனான்றியிருக்கும் வேறோரீசுரனவேண்டியதில்லையென்று மீமாஞ்சகன் சொல்ல; மறுத்துணர்த்துகின்றார். விஞ்ஞானகலர் பிரளயாகலர்களறிவின்றியப்பிரசித்தராதலால்.—

புருடன்றானும் - சகலன்றானும்,—

அத்தனுகரணம்பெற்றால்- அந்தவேறொரு கர்த்தாச் சிருட்டித்துக்கொடுத்த தூலதேக சூக்குமதேக பரதேகங்களைப்பெற்றிருந்தானால்,

அறிதலால் - அவனறிவுக்கு நிமித்தமாக முன்னொரு சுவதந்திர வறிவனாகியகர்த்தாச் சித்தித்தலானும்.

அவன் கர்த்தாவல்லன் முதற்காரணந்தானே கர்த்தாவென்று சாங்கியனமுதலோர் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.—

அவற்றை - அந்தத்தனுகரணாதிகளை,

மாயைமுதற்காரணமாயிருந்து நிமித்தகாரணனாலேவப்பட்டு,—

உய்த்திடும் - உண்டாக்கும்,—

அதனால் - முதற்காரணமாகையால், யாதொன்று முதற்காரணமஃதறிவில்லது மண்போலவென்று —

மாயைக்கு உணர்வொன்று மில்லையெனறே வைத்தனர் - பெரியோர் நிச்சயித்தார்கள்,—

அதனால் எல்லாம் வருவிப்பானொருவன் வேண்டும் - சகலத்தையு மறிந்துண்டாக்கு மொருகர்த்தாவிரும்பப்படுவன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஈண்டுக் கூறியவற்றுள ஏனையவெல்லாமொக்கும், மற்றொருகடவுளித்தைத் தருதலாலென்றது பொருந்தாது. மாயையேதனகாரியத்தைத் தரும்,இதற்கொரு கருத்தா எற்றுக்கெனின ? அறியாது கூறினாய் குடங் குயவனாற் செய்யப்படுங் காரியமானாற்போலப் பூதமுதலிய பிரபஞ்சமெல்லாம் ஒருசேதனப்பொருளாற் செய்யப்படுங் காரியமேயாகலானும், புருடன் சேதனப்பொருளாயினும் அவன் அப்பூதாதியானாகிய தனுகரணாதிகளைப் பெற்றாலன்றி யறியமாட்டாமையானும், மாயை அவற்றிற்கு முதற்காரணமாகலின் அது சேதனப்பொருளாதல் செல்லாமையானும், பாரிசேடவளவையான் இவ்வனை

த்தினும் வேறாய் மாயையினின்றும் பூதமுதலிய பிரபஞ்சமெல்லாவற்றையுந் தோற்றுவிப்பா னொருகடவுள் வேண்டப்படுவ னென்பதாம்.

புத்திமற்காரியமென்பது வடசொன்முடிபு.

ஈண்டுத் தொக்குநின்ற ஆறனுருபு காரகப்பொருண்மையின் வந்தது.

புத்திமான் சேதனனென்பன ஒருபொருட் கிளவி.

ஒன்றுமென்பது சிறிதுமென்னும்பொருள்பட நின்றது.

ஏகாரந் தேற்றம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மாயையிலே நின்றும் பிரபஞ்சந் தோன்றுகைக்குக் கர்த்தா வேண்டாம், தானே தோன்றுமென்றவனை நோக்கி, மேல் மறுத்தருளிச்செய்கிறார்.

புத்திமற்காரியத்தாற் பூதாதிபுருடனாறு மத்தனுகரணம்பெற்று லறிதலால் - [அவயவம்] பூதங்கள் முதலான தனுவுங்கரணமும் புருடனபெற்ற காலத்து,புத்திமற் கிருத்தியமாயிவனறிபத்தக்கவை யெல்லாத்தையு மிவனறிகையாலே,--அவற்றைமாயையுய்த்திடும்-அந்தத்தனுகரணாதிகளை யிவன்பொருட்டாகமாயை கொடாநிற்கும்.—அதனால் மாயைக் குணர்வொன்றுமில்லையென்றே வைத்திடும்-இப்படி கொடுத்தாலும் அந்தமாயைக்குப் பிரஞ்ஞை சற்றுமில்லையென்றே வேதாகமங்கள் சொல்லாநிற்கும்.—அதனாலெல்லாம் வருவிப்பா னொருவனவேண்டும் -ஆகையா லிவையெல்லாத்தையு முண்டாக்கிவிப்பானுமொரு கர்த்தா வேணும்.

இதனாற் சொல்லியது, ஆன்மாவுக்கறிவு மாயை கூட்டினறியுமதொழிந்து தானேயறியாததுகொண்டு மாயை அசேதனமாகையாலும், இரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்துகிறது கர்த்தாவென்று முறையையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

(என்றுகூறியவற்றானேயெல்லா மொக்கும், மற்றொருகடவுள் இச்சைத்தருதலால் என்றது பொருந்தாது, மாயைபோதனகாரியத்தைத்தரு; இதற்கொரு கருத்தாவேறுண்டெனில்? அறியாது கூறினாய் குடங்குயவனாற் செய்யப்படுவ காரியமானாற் போல),—பூதாதி - பூதமுதலிய பிரவஞ்சமெல்லாம்,—புத்திமற்காரியத்தால் - ஒருசேதனப் பொருளாற் செய்யப்படுவ காரியமேயாகலானும்,—புருடனுனும் - புருடன் சேதனப்பொருளாயினும்,—அதற்றனுகரணமபேற்றுலறிதலால்-அவன்பூதாதி பலஞ்சிய தனுகரணாதிகளைப் பெற்றுலன்றி யறியமாட்டாமையானும்,—மாயையவற்றையுந்தருமதனால்-மாயையவற்றிற்கு முதற்காரணமாகலின்,—மாயைக்குணர்வொன்று மில்லையென்றே வைத்திடும் - மாயைக்குணர்ச்சியின்மையின் அது சேதனப்பொருளாதல் செல்லாமையானும்,—அதனுலெல்லாம் வருவிப்பான் - பாரிசேடவளவையா லிவ்வனைத்தினும்வேறாய் மாயையினின்றும் பூதமுதலிய பிரவஞ்சமெல்லா வற்றையுந் தோற்றுவிப்பான்,—ஒருவனவேண்டும்-ஒருகடவுள் வேண்டற்பாலனெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இந்தக் கர்த்தா பிரபஞ்ச காரியத்தை யுண்டாக்கு மிடத்துத்
தானே யுண்டாக்குவானோ, ஒரு காரணங்களா
லுண்டாக்குவானோ வெனின்? குலாலனைத்
திருட்டாந்தமிட் டதுபோலக் காரணத்
திரயத்தா லுண்டாக்குவனென
றுணர்த்துகின்றது.

காரியங் காரணங்கண் முதறுணை நிமித்தங்கண்டாம்,
பாரின்மண் டிரிகைபண்ணு மவன்முத றுணைநிமித்தம்,
தேரினமண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக, வாரி
யன் குலாலனாய்நின் றாக்குவ னகிலமெல்லாம். (கஅ)

(இ-ள்) காரியங் காரணங்கண் முதறுணை நிமித்தங்கண்டாம் — இந்த லோகத்தை யுண்டாக்கு மிடத்துக் கருத்தாக காரணத்திரயத்திலே நின்றுங் காரியங்களை யுண்டாக்குவன. அக்காரணம் முதற்காரணமெனவுந் துணைக்காரணமெனவு நிமித்தகாரணமெனவு மூவிதப்படும். அவை யாதெனின்?

பாரின் மண் டிரிகை பண்ணு மவன்முத றுணை நிமித்தம் — நிறைநிறையே மண்ணை முதற்காரணமாகவும், திரிகையைத் துணைக்காரணமாகவும், குலாலனை நிமித்த காரணமாகவும், பூமியின்கண் கண்டனம், அதுபோலச் சிவனும் பிரபஞ்சகாரியத்தை யுண்டாக்குமிடத்து.

தேரின மண் மாயையாக — இதனை விசாரித் தறியுமிடத்து மண்ணை மாயையாகவும்,

திரிகை தன் சத்தியாக — திரிகை தண்டு முதலானவைகளைக் கிரியா சத்தியாகவும்,

ஆரியன் குலாலனும்பின் முசகு வனகிலமெல்லாம்.

சிவனுங் குலாலனைப்போலச் சுத்தமசுத்த மாகிய விருவிதப்பட்ட வத்துவாவி லுண்டான வண்டமாகிய பாண்டத்தை யுண்டாக்கிக் காரியப்படுத்தாநிற்பன. எ-று.

காரணமெனினுங் கரணமெனினு மொக்கும். முதற்காரணத்தை உபாதான காரணமெனப்பெறும். காரண மென்ற சொற்பொருளியாதெனின்? யாதொன்று காரியத்துக்கு முன்னே யுண்டாய், இஃதில்லாவிடத்திற் காரிய நிறைவேறா தெனப்படுவதுமாய், வேறேயு மொன்றை யுண்டாக்காததுமாய், இருக்குமியாதொன்று காரணமெனப் பெறும். உ-ம். "சட்டிகுடஞ் சால் கலசந் தோண்டி சார்வாதி யெனப், பட்டவிவை தோன்றும் பதம்பண்ணி—விட்டமுக, விந்தவிந்தனனையிலக்கிய மண்ணினொருழிலே, இந்தவியல் காரியமெனும்" "குலாலன்றனைகைபற்றிக கோலாற் சுழற்றவுலாவுந் திகிரியதனமேலுற்-றுலாவுமனு, மந்தமணிற் கைத்தொழிலாலாக்குமவன சாலாதி, யிந்தவினை காரணமென றெண" என விதனுட் காரியகாரணத்தின் முறையையறிக.

இதற்குப் பிரமாணம் பார்க்கிலை மதங்கம் நிசுவாசமென வறிக. (கஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———०———

மேல் காரியத்திற்குக் காரண பதங்களைத் திட்டாந்த பூர்வகமாகத் தொகுத்துக்கூறுகின்றது.

காரியம் - காரியமாகிய பிரவஞ்சத்திற்கு, [இவண் நாலம் வேற்றுமை தொக்குநின்றது,]—காரணங்கள் முதறுணை நிமித்த

தி மண்டிரிகை பண்ணுமவன் முதற்றுணை நிமித்தம் பாரிற்கண்டோங்குதேரின் மண்மாமையாகத் திரிகை தனைசத்தியாக வாரியன குலாலனும்பினருக்குவனகிலமெல்லாம் எனக்கூட்டிப் பொருளுரைக்க,—* உபாதானகாரணஞ் சககாரிகாரண நிமித்தகாரணமென மூவிதமாம் அவைகள், கடாதிகளுக்குபாதானகாரண மண்ணுடையும், சககாரிகாரணந் திரிகையாதிகளும், நிமித்தகாரணங் குலாலனுமாகப் பூமியினிடத்திற் கண்டோம், அதுபோலவே இதிலும், கடாதிகளுக்கு மண்போலப் பிரபஞ்சத்திற்குபாதானகாரண மாயையும், திரிகையாதிகளைப் போல சககாரிகாரண மீஸ்வரனுடைய கிரியாசத்திப் பிரேரிதமானகாலமும் [இக்கருத்தே "காலமுங்கடவுளை லாற்றுணைக் காரணம்" என்றது.] குலாலன்போல சர்வலோக பூஜ்யரான வீஸ்வர னிமித்தகாரணமாக வநாதிபமாசநின்று சகலப் பிரபஞ்சங்களையு முண்டாக்குவன.

மண்போலவெனுமன மண்ணென்றதாதிமுதல் வேற்றுமையி லொத்தவென்றபொருள்.

இவன் சொன்ன கர்த்தா சதாசிவேஸ்வர னுருஞானபரி பாலகரான அநந்தேஸ்வரரை யசுத்தமாயா கிருத்தியத்திற்குச் சொன்னது.

[illegible]
[illegible]
[illegible]

* முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என்வுமாம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

காரியோற்பத்தியிற் காரணம் மூன்றுமுறைமையா யிருக்குமென் றுரைக்கின்றார்.

காரியங் காரணங்கள் - கடமுதற்காரியங்களினது காரணங்கள்,— முதறுணை நிமித்தங்கண்டாம் - முதற்காரணமென்றுந் துணைக்காரணமென்றும் நிமித்த காரணமென்றும் மூன்று பகுப்பாகப் பரீக்ஷித்துப் பார்த்தோம், § அதெப்படி?— தேரின் - பரீக்ஷிக்கின்,— மண்மாமாயையாக - மண்போல முதற்காரணஞ் சுத்தமாயை யசுத்தமாயையாக,— திரிகை தன்சத்தியாக - திரிகைபோலத் துணைக்காரணந் தன்னது சத்தியு மதனோடேவப்பட்ட வநந்தேசுர சத்தியுமாக,— ஆரியன் - நிமித்தகாரணமாகிய சிவன்,— குலாலனாய் - மண்மகன்போல, நின்று,— அகிலமெல்லாம் - சகலலோகமெல்லாம்,— ஆக்குவன் - உண்டாக்குவான்.

முதற்காரணம்-உபாதானகாரணமென்றும், சமவாயி காரணமென்றும்; துணைக்காரணம்-சககாரிகாரணமென்றும் பெயர்பெறும்.

§ இவ்விடத்தில் —பாரின் மண் திரிகை பண்ணுமவன் (முறையே) முதல்துணை நிமித்தம். இக்கண்ணழிவுபதம் பிரிப்பிலே விடப்பட்டிருக்கிறது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

அல்லதூஉம், ஒருகாரியநிகழ்ச்சிக்கு முதறுணை நிமித்தமென்னுங் காரணமூன்றுந் தம்முளொன்றையின்றி யமையாவென் பதூஉம், மூன்றுந் தம்முள் வேறுதலுங் குடமுதலிய காரியத்தி

த் காட்சிப்புலனா யறியப்படுதலானும், பிரபஞ்சகாரியத்திற்கு மெவ்வாறே முதற்காரணந் துணைக்காரணங்களின் வேறாய் நிமித்தகாரணமும் ஒருதலையான வேண்டப்படுமென்பதாம்.

காரியகாரணங்களென்னும் ஆறாம்வேற்றுமைத்தொகை வடநூன்முடிபு

மாயைக்கொருவ னென்னிக்கெனவி னுள்ளவாறுரைப் பக்கேன் என்பதன்பட்ட இவை விரைவிசெய்யுளானும், சாங்கியமதமுற்றி யாசங்கித்துப் பரிகரித்துத் தருமமொருவனை வேண்டுமென்றது வலியுறுத்தப்பட்டது.

இங்ஙனம் உதிப்பதமிருமென்பதுமுதல் இதந்துணையும், உலோகாயதர் புத்தர் சமணரெனும் வைதிகபுறத்தார்மதமும் பற்றியும், மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியரெனனும் வைதிகத்துட்பட்ட முதத்திரத்தார் மதமபற்றியும் ஐயங்கழாமல்; வருமுறைவந்துநின்று போவதுமாதலாலே தருமமொருவனையே வேண்டுமென்ற முதனூற்றுப் பொருளையுங் காத்துக்கொண்டு, இனியச காரணகாரியங்கள் தருமமொருவனாற் றரப்படுமாறும் அவற்றியல்பும் யாங்ஙனமென்பார்க்கு. அரியன கூறாலனுப் பிவருகுமாறு என்பது செய்யுளாற் றெருக்கதுணர்த்துகின்றார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

நிரீச்சுரசாங்கியன் நீர்சொன்ன கர்த்தாவே பிரவஞ்சத்துக்குக் காரணமெனனில் மாயை வேண்டுவதில்லை யென, மாயாகாரணமும் வேண்டுமென் றருளிச்செய்கிறார்.

காரியங்காரணங்கள் முதல் துணை நிமித்தங்கண்டாம் - காரணங்களிலே நின்றுங் காரியமுண்டாமிடத்து முதற்கார

ணமென்றுந் துணைக்காரணமென்றும் நிமித்தகாரணமென்று மூன்றுப் பிரகாரமாயிருக்கும். அதெங்ஙனே யென்னில்,— பாரில் மண் திரிகை பண்ணுமவன் முதல்துணைநிமித்தம் - பூமியின்கண்ணுண்டான மண்ணுந் திரிகையும் வனையுமவனும், முதற்காரணமுந் துணைக்காரணமும் நிமித்தகாரணமுமென்று மூன்றுவகைப்பட்டு வருகிற முறைமையைத்;—தேரின் மண்மாயையாகத் திரிகை தன்சத்தியாக வாரியன் குலாலனாய்நின்றாக்கு வனகிலமெல்லாம் - இப்படியிந்த முறைமையையெல்லாம் விசாரித்துப் பார்க்கில், மாயைக்கு மண்ணுவமையாகவும், சத்திக்கு திரிகையுவமையாகவும், கர்த்தாவுக்குக் குலாலனுவமையாகவுஞ் சொல்லும். இப்படியே நின்று பிரபஞ்சமெல்லாம் உண்டாக்குவான.

எனவே மாயையுங் கர்த்தாவு மிரண்டும் வேண்டுமெனபது கருத்து.

“மாயைக் கொருவனொனினிங் கென்னி லுள்ளவாறுரைப்பக் கேளாய்” என்ற பத்தும், “புத்திமற் காரியங் காண்” என்ற திருவிருத்த முத லிரண்டும் மாயாவாதத்தில் நிரீச்சுர சாங்கியனை மறுத்தது. இதற்குப் பிரமாணம் பரபட்சம் “அறியான்புருடனபிரகிருதி யசேதனங்காரியத்தினுக்குக், குறியாய்நாதனுளனென்று கூறுமுத்தி விவேகமெனிற், செறிவாந்தனைப்போ காதறியிற் சேர்ந்தோனவேண்டுஞ் செயலிற்போ, நெறியாற்பணிசெய் துடற்பாசம் நீக்கிக்கொணரு நிமலனருள்” என்னு மதுங் கண்டுகொள்க.

பர-நிரீ-மறு, ௩-செ·

இதனுற சொல்லியது கர்த்தா பிரபஞ்சத்தை யுண்டாக்குமிடத்து மாயை முதற்காரணமாகவும், தனது சத்தி துணைக்

காரணமாகவும், தா னிமித்தகாரணமாகவு முண்டாக்குவனெ ன்று முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

காரியகாரணங்கள் - அல்லதூஉ மொருகாரிய நிகழ்ச்சிக்கு வேண்டுங்காரணங்கள், -- முதறுணைநிமித்தம் - முதற்காரணந் துணைக்காரண நிமித்தகாரணமென மூவகைப்படும், — பாரின மண் திரிகைபண்ணுவன - இவ்வுலகினகண்ணே குடமாகிய காரியத்திற்கு மண்ணுந் திரிகையுங் குலாலனும், — முதறுணை நிமித்தங்கண்டாம் - முறையே முதற்காரணமுந் துணைக்காரணமு நிமித்தகாரணமுமாதல் காட்சிப்பளவையா லறிந்தாம், — தேரின் - ஆராயுங்கால், — அகிலமெல்லாம் - பிரபஞ்சகாரியத்திற்கு மவ்வாறே, — மாயைமண்ணாக - மாயை மண்போலமுதற்காரணமாகவும், — தனசத்தி திரிகையாக - தனசத்தியே திரிகைபோலத் துணைக்காரணமாகவும், — ஆரியன் குலாலனாய்நின்று - சிவபிரான் குலாலன்போல நிமித்தகாரணமாய்நின்று, — ஆக்குவன் - தோற்றுவிப்ப னென்பதாம்.

மாயைக்கொருவ னொருவனிங்கெனனி னுள்ளவாறுரைப் பக்கேணி என்பதுளப்பட விவையிரண்டு செய்யுளானுஞ் சாங்கியர்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்துத் தருபவனொருவன் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

அந்தக்கர்த்தா ப்ரபஞ்சத்தை யுண்டாக்கு மிடத்
துபாதானகாரண மூன்றெனபதூஉம், அவற்
றிற் றோன்றுங்காரியங்க ளிவையெனப
தூஉம், தொகுத் துணர்த்துகிறார்.

விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம்
வந்திடும் விந்துத்தன்பால் வைகரி யாதிமாயை
முந்திடு மிராகமாதி முக்குண மாதிமூலந்
தந்திடுஞ்சிவனவன்றன்சன்னிதிதன்னினின்றே. (௧௬)

(இ-ள்) விந்து வின் மாயையாகி — சுத்தமாயையைப்போல வசுத்தமாயையு முபாதான காரணமாகி

இன ஐந்தாமுருபு ஒப்பினகண் வந்தது. "இனைத்தே மதுவெல்லை சீகரு மூவமைமெனப் - பனுைதலு முன்னடக்கிப் பார" எனவறிக.

மாயையி னவ்வியத்தம் வந்திடும் — மாயையைப்போலப் பிரகிருதியு முபாதானகாரணமாய்வரும்.

விந்துத்தன்பால் வைகரியாதி — முற்கூறிய விந்துவிலே சூக்குமைமுதலிய நாலுவாக்குக்களிடத்திலொலியான முதற் காரியரூபமாய்த் தோன்றும்

மாயைமுந்திடு மிராகமாதி — அந்த வசுத்தமாயையிலே யிராகதத்துவமுதலிய வைந்துமுண்டாம்.

முக்குணமாதி மூலந் தந்திடும் — அந்தமூலப் பிரகிருதியிலே குணமுதலிய தத்துவங்களெல்லாந் தோன்றும்.

இக்கருமன் றுபாதானங்களுந் தத்தங் காரியங்களைத் தாமாகத் தோற்றுவிக்கவற்றோ வெனின்?

சிவனவன்றன் சன்னிதி தன்னினின்றே — ஆதித்தன் சன்னிதியிற் ப்ரபஞ்சங் காரியப்படுமாறுபோல, சிவனது சன்னிதிமாத்திரத்திலேதானே தத்துவங்களையுந் தாத்துவிகங்களையு முண்டாக்கிக் காரியப்படுத்துவன. எ-று

“பெருமாயை விந்து பரசிருதியென்ன-வொருமூன் றுபாதானமுண்டு” எனவறிக.

மூன்றுமென்பதனை விந்துவினிடத்துங் கூட்டுக.

இதிற் பலவெழுவாயும் பலபயனிலையும்.

இதற்குப்பிரமாணம் விசுவசாரோத்தர மெனவறிக (௪௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் ஒன்பது விருத்தத்திலும் உபாதானத் திரவியங்களினின்றுங் காரியரூபப் பிரபஞ்சமுண்டாம்படி தொகுத்துக் கூறுகின்றது.

விந்துவின் மாயையாகி மாயையின் அவயவிபதத்தம் வந்திடும்-விந்துவாகிய சுத்தமாயையினதோபாக மசுத்தமாயை அவ்வசுத்தமாயையினிடத் தவயவிபதமாகிற மகானுண்டாம் இவ்வாறு விஞ்ஞானகலா பிரளயாகலர் சகலரென்னு மூவாசருக் தனுகரணாதிக ளுபாதானமாகிய விந்து மோகினி மகானென்னு மூன்று சித்தியுள்ளளவி லிவையிற்றின காரியமுண்டாம்படி சொல்லில்,—

விந்துத்தனபால் வைகரியாதி மூன்றிடும் - விந்துவினிடத்தினின்று நாதாதித்தத்துவங்களுதிப்பதற்கு முன்னே வைகரிகாதிகாரணமான சூக்குமை பைசந்தி மத்யமையுண்டாம்,—

மாயை யிராகமாதிதந்திடும் - மோகினியாகின்ற வதோமாயை யிராகதத்துவத்திற் காதிகாரணமான காரணமாயை, காலம், நியதி, கலை, வித்தைகளொடுபெற்றிடும்,

சூ-ம் யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள் சென்மருங்கில் வேற்றுமைசாரும். என்பவாகலின், இராகமென்றதற் கிராகத்திற்கு என்று நான்கனுருபாகப் பொருளுரைக்கப் பட்டது —

மூல முச்சுணமாதி தந்திடும் - மூலப்பிரகிருதியாகிற வவ்வியத்தஞ் சாத்மீக விராசத தாமதகுணங்கள் முதலிய வாணமுத்தத்துவ மிருபத்துநான்கையும் பெற்றிடும்.

பிரகிருதியினின்றும் புத்திமுதலாக வொன்றினொன்று தோன்றுவதைப் பிரகிருதி தருமென்றதும், கலையினுண்டான பிரகிருதியை மாயைதருமென்றதும், காரியத்திற் காரணோபசாரலக்ஷணை இவ்வுற்பத்திக் கிரம மேல்விரித்துக் கூறப்படும். இவ்வாறுபாதானத்திரவியங்களே பிரபஞ்சத்தை யுண்டாக்குகிற கர்த்தா வொருவனேதுக்கெனின்.—

சிவன் - சிவனேயிவ்வுபாதானங்களினின்றுங் காரியங்களை யுண்டாக்குகிறவன். சிவனுக்கிச் சிவன் கிரியாவானுவ னெனின்?—

அவன்றன் சந்நிதி தனிலன்றே - அச்சிவனது சந்நிதிமாத்திரத்திற் காரியப்படுவதாம்.

சூ-ம். அன்றெனகிளவி யாமெனத்தகுமே

ததுக்தம் - யதார்க்க: ஸர்வசேஷ்டாநாம் ஸந்நிதௌ
ஸ்வகாரக: | ததா ஸந்நிதிமாத்ரேண விதத்தே
விஶ்வம் ஶிவ: || இதி.

விந்துமோகினி மஹானென்று மூனறுபாதானமாகச் சொல்லுகிறது கற்பனுகௌரவம்

மாயையொன்றே போதுமெனின்? அப்படியன்று சுததாத வாவுககு விநதுவே யுபாதானமாக வேண்டும். மிச்ராத்வாவுகரு மோகினி யுபாதான மாகவேண்டும். அசுததாத்வாவுககுப் பிரகிருதியே யுபாதானமாகவேண்டும் அஃதெப்படியெனனில்? பருததிநூலிற படடுப் புடைவையுங் கோணியு மாகாததுபோல, மாயையிலே மிசராததுவா வொழிய சுததாதவாவு மசுததாதவாவுங் கூடாது

இதற்கு சிவாதவைதவாதி - ஈஸ்வரனே ஜகத்துபாதான காரணமெனறும்

வாமாத்வைதவாதி - சிற்சத்தியே ஜகத்துபாதானகாரண மெனறும.

பாசுபதி - மாயையேஜகத் துபாதான காரணமெனறும்.

நியாய வைசேஷிகா-பரமாணுவே யுபாதான காரணமெனறும்

சாங்கியனும் பாஞ்சராத்திரியும - பிரகிருதியே யுபாதான காரணமெனறும சொல்லுவார்கள்

* அருகன-அணுவே யுபாதான காரணமெனபன.

புததன-பஞசகந்தமே காரணமெனபன்;

உலகாயுதன-நாலு பூதமே காரணமெனபன்.

அதுகூடாது. இவை சுத்தாததுவாவுககு விந்துவே யுபாதானகாரணம்.

* அருகன மதமுதல் சேர்த்து சில ப்ரதிகளிலெழுதி யிருக்கிறது. இது, யுக்தமனறு. இவவிடத்து மாயையின் பேதங் கூறியது, மாயையுண்டென்பவர்களே யாகலின.

தது³க்தம் பௌஷ்கரே — ந மாயா நேஶ்வரோ நா-
ணு: ந ஶக்தி: ஸ்தி²தா ஸ்வதஸ்து ந: | உபாதாநமதோ விந்
தூ: பரிணாமேந ஶுத்⁴யதே || நாதா³ச்ச²க்திப்ரபா⁴வா
தா நத்ர ஸ்ரூபேண வைகல்யாத் ப்ராப்யதே | மாயாவிநா ப⁴வே
வாதா³ந் ஸூக்ஷ்மாகல்யாத்ஸ்வதோஜ்ஜ்வலதி.

மேலுஞ் சுத்தாத்துவாவுக்கு விந்துவேகாரண மென்பது ச்ருதியுக்தி. பிரபுத்தராகிய விஞ்ஞானகலருடைய தனுகரணாதிகளுக்கு சுத்தமாயை காரணமல்ல. விஞ்ஞானகலர் தேகேந்திரியாதிகளை யுடையவர்களாகிலுஞ் சிவானுக்கிரகத்தினாற் சாவதாபிரபுத்தரோ அசுத்தமாயை சாமானுகுணமான தனுகரணாதிகளை யுண்டாக்குவதாகையாலுஞ் சுத்தாத்துவ வாசிகளாகிய விஞ்ஞானகலருக்குக் கருமமில்லாமையாலு மவர்களுடைய தனுகரணாதிக்குச் சுத்தமாயிருக்கிற விந்துவே காரணம். சுத்தாசுத்தமென விரண்டே யாகலின், அசுத்தம் மாயையாகலின், சுத்தமென்று விந்துவைச் சொல்லுகையா லீஸ்வரனுக்குச் சமவாயசத்தியேயெனின்? அது சுத்தமாயையாகிலும் ஜடமுமா யுபாதானகாரணமு மாகையாற் குலாலனுக்கு ம்ருத்பிண்டம்போல வீஸ்வரனுக்குப் பரிக்கிரகசத்தியல்லது சமவாயசத்தியல்ல.

இஃதன்றியு மசுத்த மாயையை க்ஷோபிப்பித் தான்மாக்களுக்குக் கர்மானுகுணமாகத் தனுகரணாதிகளை யுண்டாக்குகிற வநந்தேஸ்வரருடைய தனுகரணாதிகளுக் கியாதொன்று காரணம், அது பிந்து. அநந்தருத்திரரான பேர்கள் யாதொரு தனுகரணாதிகளினாற் பந்திக்கப்படுகிறார்கள், யாதொரு தனுவாதிகளை விட்டு பரமமுத்தியையடைகிறார்க ளத்தனுகரணாதிகளுக்குபாதானம் விந்துவே.

ஈஸ்வரனுடைய லயபோகாதி காரங்க ளியாதோ ருபாதியிலுண்டாயிற் றதுவும் விந்துவே.

ஆகையாற் சுத்தாத்வாவுக்கு விந்துவே யுபாதான காரணம் மிச்ராத்துவாவுக்கு அசுத்த மாயையே யுபாதான காரணம் அசுத்தாத்துவாவுக்கு மாயாஜந்யமான ப்ரகிருதியே யுபாதான காரணம.

ஆகையால் விந்து யோகினி மாயாவென்று முபாதானத் திரயமு மங்கீகரிப்பேம

[illegible]

𑌤𑍍𑌕𑌂 || 𑌯𑌥𑌾 𑌵𑌾𑌦𑌾𑌨𑌤𑍋 𑌜𑌾𑌤𑌂 𑌸𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿 𑌮-
𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 | 𑌕𑌿𑌞𑍍𑌚𑌾𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌣𑌵𑍋 𑌯𑍇𑌨𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰
𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌃 || 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍋 𑌵𑌾𑌯𑌂 𑌸𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿-
𑌕𑌿𑌮𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 | 𑌮𑌾𑌯𑌾𑌤𑍋𑌹𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌯𑌦𑌾 𑌵𑌾
𑌯𑌶𑌿𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 || 𑌸𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿 𑌉𑌭𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌵
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍀𑌠𑌿𑌤𑌂.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிலசைவாசாரியர்கள் சுத்தமாயையொன்றுமே முதற்காரணத்துள நித்தியமாகும் பரமகாரணம், அசுத்தமாயை பிரகிருதியிரண்டும், சுத்தமாயையினின்று முறைமையிற்றோற்றி அநித்தியமாகு மவாந்தரகாரணமென்று சொல்லுவார்கள், மற்றுளள சைவாசாரியார்கள் சுத்த மாயைபோல் அசுத்த மாயையும் நித்தியமாகும் பரமகாரணம், பிரகிருதிமாத்திரம அநித்தியமாகு மவாந்தரகாரணமென்று சொல்லுவார்கள் என்று இரத்திநத்திரயத்திற் சொல்லியிருத்தலால், அசுத்தமாயையும் நித்தியமெனபாா கருத்து இரண்டாஞ் சூத்திரத்தில் 'நித்தமாயருவா' என்றும் திருவிருத்த முதல் விருத்தங்களினால் விஸ்தரிக்கின்றார்.

அநித்தியமென்பார்கருத்தி'போ தறிவிக்கின்றார்.

விந்துவின்மாயையாகி - சுத்தமாயையி வின்றும்அசுத்தமாயைதோற்றி —

மாயையினவ்வியத்தம் வந்திடும் -அந்தவசுத்தமாயையி னின்றும் பிரகிருதி தோன்றும்,—

விந்தத்தனைபால் - திரும்பச் சுத்தமாயையி னின்றும்,—

வைகரியாதி வந்திடும் - (எனக்கூட்டுக) சங்காரக்கிரம கணனைக்கு வைகரிமுதல், சிருட்டிக்கிரம கணனைக்கு அதிசூக்குமை முதலாதலால், மகாமாயையி லின்றும் மகாசிருட்டியினுண்டாய் மகாப்பிரளயபரியந்தம் அவரவர்க்கு வேறுவேறு யான்மாக்களைப்பற்றிப் பிரணவகலாசத்தி சதுஷ்டய ரூபவிருதய பங்கஜத்திருக்கும் பிரணவ பஞ்சம நாதகலாசத்தி கர்ப்பப் பிரதான நாதத்துக்குள் ளாலையுருட்டுப்போ லப்படிச் சத்திரூப மாயடங்கிச் சிவதத்துவமைந்தின் இடமாயிருக்கின்ற நாதவிந்து மகார உகார அகாரபெயர்ப் பிரணவகலைக ளைந்தையும் பற்றிக்கொண்டு அதிசூக்குமை சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி யென்கின்ற வாக்குக்கடோற்றும்.

அவ்வாக்கு நான்கென்றெடுத்து; உகார அகாரங்களிரண்டினையும் பற்றி வைகரிவரும், அதிசூக்குமை சூக்குமையினடங்கும்—

மாயைமுந்திடும் ராகமாதி - சங்காரக்கிரம கணனைக்கு ராகமுதல், சிருட்டிக்கிரம கணனைக்குக் காலமுதலாதலான், மாயையினின்றுங் கால நியதி கலை வித்தை ராகங்கள் புருடதத்துவத்தோடு மேற்சொல்லு முறைமையில்,—

முந்திடும் - உண்டாம்,—

முக்குணமாதி மூலந் தந்திடும்-பிரகிருதி, முக்குணதத்துவமுதற் பிருதிவிதத்வ மீறாக தத்துவங்களை மேற்சொல்லு முறைமையிற் றோற்றுவிக்கும் நிமித்தமின்றி யாமோ வாகாது,—

சிவனவனறன் சந்நிதி தன்னிலின்றே - சிவனது சங்கற்பத்திலும், சிவனதியற்றுதற் கர்த்தாவாகிய அனந்தேசுரர் சங்கற்பத்திலும் முன்னின்றே

சிவனவனைத் தெனு மாறும்வெற்றுமைத் தொகை விரிவுவிட்டு சிவனுகிய வவனென்று பண்புத்தொகை மாத்திரம விரிவு பண்ணினுல் மாறுபடும், அசுத்தாத்துவா அனந்தேசுரற் கர்த்துவமாதலால்

சிவஞானயோகியருரை வருமாறு.

—— o ——

சுத்தஞ் சுத்தாசுத்தம் அசுத்தமெனக் காரியப்பிரபஞ்சம் மூத்திறப்படுதலின், அவற்றிற்கு முதற்காரணங்களுந் தம்முள் வேறுதலைபெறும். அவற்றுள், மலகன்மங்களோடு விரவாது முதற்காரணமாய் நிற்பது சுத்தமாயையென்றும், அஃதொழிந்த விரண்டனையும் வியாபித்து மேலாய்நிற்ப அவ்விந்துவினுளொடுங்கி மலகன்மங்களோடு விரவி முதற்காரணமாவது அசுத்தமாயையென்றும், அவ்வசுத்தமாயையது ஆலபரிணாமமாய்த் தோன்றுவது பிரகிருதிமாயையென்றுங் கூறப்படும். அவற்றுள், சுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி வைகரி முதல் வைத்தெண்ணப்படு நாலு வாக்குந் தோன்றும. அசுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி அராகமுதல் வைத்தெண்ணப்படுங் காரணத்தத்துவமேழுந் தோன்றும். பிரகிருதிமாயையினின்றுஞ் சிருட்டிமுறைபற்றிக் குணதத்துவமுதல் வைத்தெண்ணப்படும் போககிய தத்துவமிருபத்துநாலுந் தோன்றும். இங்ஙனங் கூறப்பட்ட விகாரமோகினி மானமூன்றுந் தத்தங் காரியங்களைச் சிவசத்தி சங்கற்பரூப சாந்நித்தியினின்றுந் தோற்றுவிக்குமென்பதாம்.

விந்துவின மாயையாகிய என்புழிக் கீழென்னும் பொருள்பட வந்த கண்ணுருபு விரித்துரைக்க. இன் சாரியை. அதோமாயையென்பதும் இப்பொருள்பற்றியென்க. இஃதறியாதார்

விந்துவைப்போல மாயையாகியென உவமையுருபாகக்கொண் டுரைப்பாரும், விந்துவினின்று மாயை தோன்றுமென நீக்கப் பொருட்டாகக் கொண்டுரைப்பாருமாயினார். இரத்தினத்திர யமென்னும் வடநூலின் அவ்விரண்டனையும் பிறர்கருத்தாக வைத்தோதுதலின் அவைபொருந்தாமையறிக. அநந்தர் சீக ண்டர் செய்யுந் தொழிலுஞ் சிவசந்நிதியையின்றி யமையாவெ ன்னுங்கருத்தான் மூலநூற்குஞ் சிவசந்நிதியே கூறினார்.

அவண் பகுதிப்பொருள் விகுதி.

இதனுள், முதற்காரண மூன்றுமாறும், அவை தத்தங் காரியங்களைத் தோற்றுவிக்குமாறும், அது முதலவனையின்றி யமையாவாறுந் தொகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

இப்படி மாயையிலே நின்றும் கர்த்தாப் பிரபஞ்சத்தை யுண்டாக்குகிறபடி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

விந்துவின் மாய்கையாகி - விந்துவாகிய சுத்தமாயையை ப்போல அசுத்த மாய்கையும் நித்திய வுபாதானமாகி,—மா யையினவ்வியத்தம்வந்திடும் - அந்த அசுத்தமாயையிலே அவ் வியத்தமாகிய மூலப்பிரகிருதி தோன்றும்,—விந்துதனைப்போல் வைகரியாதி - முன்சொன்ன விந்துவிலே நின்றும் வைகரிம த்திமை பைசந்தி சூக்குமையென்கிற நாலுவாக்குந் தோன்று ம்,—மாயைமுந்திடுமோராகமாதி - முன்சொன்ன மாயையிலே அராகம் வித்தை கலை நியதி காலம் என்கிற தத்துவம் அஞ்சுந் தோன்றும்,—முக்குண மாதிமூலந் தந்திடும் - சாத்துவித இ

ராசத தாமதம் என்கின்ற மூன்றுகுணமுதலான தத்துவங்களு டங்கலையும் மூலப்பிரகிருதி தோற்றுவிக்கும் இந்த வுபாதானங்களிலே இவைதானே தோன்றுமோ வெனனில்?—சிவனவன்றன் சன்னிதி தன்னிலன்றே - இவையித்தனையெல்லாங் கர்த்தாவினுடைய சன்னதியிலே தோற்றுவிக்கும்

மாயையி னவ்வியத்தம் வந்திடுமென்றது எல்லா தத்துவங்களுந் தோன்றுமுன்னே மூலப்பிரகிருதிக்குத் தோற்றஞ்சொல்லவேண்டினது, இதுவும் உபாதானமாகையினு லெனக்கொள்க.

மாயைமுந்திடு விந்துத் தன்பால் வைகரியாதி என்றது சுத்தமாயா காரண காரியங்களுக்குப் பின்னமற் றிருக்கையினாலும், சிவதத்துவ மஞ்சும காரியப்படு மிடத்து நாலு வாக்குகளாகக் காரியப்படுகையினாலும் எனக்கொள்க

மாயை முந்திடு மராகமாதிம என்றது வித்தியாதத்துவமேழுக்குள் அஞ்சுக்குத் தோற்றஞ்சொல்லி, இரண்டிற்குத் தோற்றஞ் சொல்லியிருந்த புருடன் தனித்தொரு முதலல்லாதது கொண்டு தோற்றஞ்சொன்னரில்லை, காரியப்படு மிடத்திலே கண்டுகொள்ளவேணும் ஆகையினாலும், ப்ரகிருதிக்கு முன்னே தோற்றஞ் சொல்லுகையினாலு மெனக்கொள்க.

முக்குண மாதிமூலந்தந்திடும், முக்குணமு மொத்தவிடம் அவ்வியத்தமாயும், அவ்வியத்தந், தானே சித்தமாயும் ஒருகுண மேறினவிடம் புத்தியாய் முக்குணமும் புத்தியிலே சென்று பொருந்த புத்தியிலே நின்று ஆங்காரந்தோன்றியும், இந்த வாங்காரந் தான் மூன்றுவகைப்பட்ட வாங்காரமாய் இதிலே முக்குணஞ்சென்று பொருந்த மனதும் சோத்திராதியும் வாக்காதியும் சத்தாதியும் இந்தச் சத்தாதியிலே பூதாதியும் இவையெல்லா

ந்தோன்றுமையினால் சித்தமுதல் பிருதிவி ஈறாயின. ஆன்மதத்துவம் இருபத்துநாலுக்கு முக்குணங்களே முதலென்றறிந்துகொள்க.

இதனாற் சொல்லியது விந்து மோகினி மானென்று சொல்லப்பட்ட மூன்று தானத்திலும்; வைகாரியாதியான நாலு வாக்குகளும், அராகமாதியான தத்துவங்களேழும், குணமாதியான தத்துவங்களிருபத்துநாலும், ஆக மூன்று வகைப்பட்ட தத்துவங்களும் சிவனுடைய சந்நிதியிலே தோன்றுமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் எனக் காரியப் பிரபஞ்சம் முத்திறப் படுதலின், அவற்றிற்கு முதற்காரணங்களுந் தம்முள் வேறுதல்பெறும். அவற்றுள் மலகன்மங்களோடு விரவாது முதற்காரணமாய்நிற்பது சுத்தமாயையென்றும், அஃது ஏனையிரண்டையும் வியாபித்து மேலாய்நிற்ப) விந்துவின மாயையாகி- அவ்விந்துவின் கீழாயடங்கி மலகன்மங்களோடு விரவி முதற்காரணமாவது அசுத்தமாயையென்றும்,—மாயையி னவ்வியத் தம்வருதிடும் - அவ்வசுத்தமாயையினது தூலபரிணாமமாய்த் தோன்றுவது பிரகிருதிமாயையென்றுங் கூறப்படும் அம்மூவகையுள்,—விந்துத்தன்பால் - சுத்தமாயையி னின்றும்,—வைகரியாதிமுகதிடும் - சங்காரமுறைபற்றி வைகரிமுதல் வைத்தெண்ணப்படும் நாலுவாக்குந் தோன்றும்.—மாயை - அசுத்தமாயையினின்றும்,—அராகமாதி முகதிடும் - சங்காரமுறைபற்றி யராகமுதல் வைத்தெண்ணப்படும் காரணதத்துவ மைந்து

ந்தோன்றும்.—மூலப்பிரகிருதிமாயையினின்றும்,—முக்குணமொ
டு முந்திடும் - சிருட்டிமுறைபற்றிக் குணதத்துவமுதல் வைத்
தெண்ணப்படும் போக்கியதத்துவ மிருபத்துநாலுந் தோன்று
ம, இங்ஙனம சடரூபமான விந்து மோகினி மானென்னுந் த்
தத்துவ காரியங்களை,—சிவனவன் தன சந்நிதிதனிலினிதே-
சிவசத்தி சங்கற்பரூப சந்நிதியினின்று,—தந்திடும் - தோற
றுவிக்கு மென்பதாம்

இதனானே மூன்றுகாரண மென்றவாறும், அவை கத்தங்கா
ரியங்களைத் தோற்றுவிக்குமாறும், அதுமுத லவனையின்றி ய
மையாதவாறும தொகுத்துக்கூறப்பட்டன

மறைஞானதேசிகர் உரை.

மேற் றொகுத்துப போந்தவற்றுள் வைகரி
யென்னும வாக்கின திலக்கணங் கூறு
காரணக்கிரமத்தாலுணர்த்துகின்றார்

வைகரி செவிப்புறங் கேட்பதாய்த் தவசனமாகி, மெ
ய்த்துருத்தானவாயு மேவிட விளைந்தவன்னம், பொய
யற வடைவுடைத்தாய்ப் புந்திகாரணமதாகி, யையபி
லப்பிராணவாயு வடைந்தெழுந் தடைவுடைத்தாம்.(௨0)

(இ-ள்) வைகரி — வைகரியென்னும் வாக்குச் செவிக்குக் கே
செவிப்புற — ட்கப்படுவதாகி
கேட்பதா
ய்

அத்தவசன — அந்தக்க வத்தங்களைப் பொருந்திய சத்
மாகி — தசொரூபமாய்

மெய்தரு முதானவாயுவே விட விளைந்த வன்னம்	மெய்தரும் உதான வாயுவைச் சார்ந்து பல்லு மிதழு நாவு மூக்கு மண்ணமுமாகிய முயற்சியையும், தானத்தினையும் பொருந்தி; ஐம்பத்தோரக்ஷரமாம்
பொய்யற வடைவுடைத்தாய்	விரிந்தமற அகாரமுதலிய வெழுத்திற் றாய்வெழுந்த வெட்டிவர்க்கத்தையும் பொருந்திநிற்பதாய்,
புந்தி காரண மதாகி	யாவனொருவனொன்றை யறியுமிடத் தவ னுடைய வறிவே தனக்குக்காரணமாக வுள்ளதாய்,
ஐயமில் பிராணவாயு வடைந்தெழுந் தடைவுடைத்தாம்.	சந்தேகமறப் பிராணவாயு மூலாதாரத் தினின்று பிரமாந்திரமளவாக முட்டிநின்று காரியப்படுத்தி வருகிறதே யிதற்கு முறைமையாம் எ-று

உதானவாயு - எழுவாய், அடைவுடைத்தாம் - பயனிலை

வைகரிசெவியிற் கேட்பதாம் என்ற விருத்தமுதலெட்டு மிதற்கும் இரத்தினத்திரயமென்னும் பிரகரணமே பிரமாணமெ னவறிக (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் நூலாருக்கதி †நியாயேன வைகரி முதலானவாக்குக ணான்கினையுந் தரிசிப்பிக்கின்றது

† நியாயமாக.

(வைகரி...வுடைத்தாம்)-வைகரிவாக்கானது பிறர்செவிக் குக் கேட்பதுமாய்த் தேகத்தி லுதானவாயுவுடனேகூடித் தூ லாக்ஷர வ்யாத்தியாய்ப் புத்தியினால் வர்ணோச்சாரண ரூப

மாக நிச்சந்தேகமாகப் பிராணவாயுவுடனேகூடி யர்த்தத்திற் கு வாசகமுமாய் வசனிக்கிறவனாக குபகாரத்தைப்பண்ணுவது மாயிருக்கும். எ - று

தத்ர ஸ்தூலம் வைக²ரீ — வைக²ரீ ஶ்ரோத்ரவி ஷயா [illegible] | ஸ்தாநேஷ்வி [illegible] தே வாயௌ [illegible] || [illegible] [illegible].

———o———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சங்காரகிரமத்தில் வாக்குகளில் வைகரிவாக்கின திலக்க ணை முணாத்துகின்றார்

வைகரி செவியிற் கேட்பதாய் - வைகரிவாக்குக் கேட்பவ னசெவியிற் கேட்பதாய்,—அர்த்தவசனமாகி - கேட்பவனு நாத்தத்திலுரைந்த முறைமையின மதிநிலையாக்கி,—அவனுசகு ப் பினபொருளைப் போதிப்பதால், முனசொலபவனது கிரியா சத்தி பொருந்திய வகங்காரப் பிரயத்தினப் பிரேரிதமாய்,—மெ ய்தரும - உண்மைகொடுக்கும்,—உதானவாயு.—மேவிட - பொ ருந்த, இச்சாசத்தி பொருந்திய மனச்சங்கற்பத்தால்,—விளங் குவனனம் - வைசந்தியிற் பரிணமித்த வககரங்கள்,—புந்தி கா ரணமதாகி-ஞானசத்தி பொருந்திய புத்திபோதங் காரணமா க —பொய்யற வடைவுடைத்தாய் - விபரீதமற் றொழுங்குபெ ற்று மதிநிலையாய்,— ஐயமில்பிராணவாயு வடைந்தெழுந்த டைவுடைத்தாம்- பிராணசம்சய காரக விரேசகமற்ற பிராண வாயுவைப பொருந்திப் புறம்பே புறபபட்டு வைகரியாயுர்பவி த்த முறைமையிற் கேட்பவனுக்குக் கேட்கப்படும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

மேற்கூறிய வைகரியாதி நான்கனுள், வைகரியாவது தன் செவிக்கும் பிறர்செவிக்குங் கேட்கப்பட்டு நினைத்தபொருளைச் சொல்லுஞ் சொல்லாய்; அச்சொல்வானுக்குங் கேட்பானுக்குஞ் சவிகற்பவுணர்வுண்டாதற்கு ஏதுவாதலும், உதானனென்னுங் காற்றானுந்தப்பட்டு மத்திமைத்தானத்துச் சூக்குமரூபமாய்ப் பிறந்து தோன்றிய வக்கரங்களை அகங்காரத்தாற்செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்றானுந்தப்பட்டெழுந்து புறத்தே கேட்டலுடைத்தாதலுமாகிய இரண்டும் இலக்கணமாகவுடைத்தென்பதாம்.

மெய்தருமுதானவாயு மேவிடவிளைந்தவன்னம் என்றது அனுவாதம்.

விளைதல் உருவெய்தித் தெரிதல்.

மெய் உடம்பு.

பொய் விபரீதம்.

ஐயமில் பிராணவாயு, மனத்தின்றொழிற்பாடாகிய ஐயமின்றாதற்கேதுவாய் அகங்காரத்தாற்செலுத்தப்படும் பிராணவாயுவென ஏதுப்பெயர்கொண்ட குறிப்புவினைத்தொகை.

எழுந்து பொய்யறவடைவுடைத்தாயென மேலேகூட்டுக.

அடைவு பின்னையது இலக்கணம்.

ஈண்டுப் புத்தியென்றது ஏற்புழிக்கோடலாற் பிறர்க்குரிய சவிகற்பவுணர்வினை யேற்றுயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

சுத்த மாயாகாரியங் காரியப்படுகிற முறைமை மேலருளிச் செய்கிறார்.

வைகரி செவியிற்கேட்பதாய் - வைகரிவாக்கானது இவனுடைய சோத்திரத்துக்கு விஷயமாய்,— அத்தவசனமாகி - அர்த்தங்களை பொருந்தின சத்தமுமாய்,—மெய்தரு முதானவாயு மேவிட விளைந்தவன்னம் - தேகத்திலே யுண்டாய்நிற்கிற வுதானவாயுப் பொருந்த வுண்டானவாக்காம,—பொய்யறவுடைத்தாம் - சத்தியமாக வடைவே யொழுங்குபட வுடையதாய்,—புந்திகாரணமதாகி-இவனுடைய வறிவைக் காரணமாக வுடையதாய்,—ஐயமில் பிராணவாயு வடைந்தெழுந் தடைவுடைத்தாம - சந்தேகமற்ற பிராணவாயுவுடனே கூடிவருகிறதே இதுக்கு முறைமையாம.

இதனாற் சொல்லியது, வைகரிவாக்கானது உதானவாயுக் கூடின பிராணவாயு தன்னோடு கூடிவந்த வசனம் சூக்குமமுதலாயுள்ள வாக்குகளைச் செவியினாலே கேட்க, நினைந்தபொருளை யறிவியா நிற்குமென்று முறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

மேற்கூறிய வைகரியாதி நான்கனுள்,—வைகரி - வைகரியாவது,—செவியிற்கேட்பதாய் - தன்செவிக்கும் பிறர்செவிக்கும் கேட்கப்பட்டு,—அத்தவசனமாகி - நினைந்தபொருளைச் சொல்லுஞ்சொல்லாய்,—புந்திகாரணமதாகி - அச்சொல்வானுக்குங் கேட்பானுக்குஞ் சவிகற்பவுணர்வுண்டாதற் கேதுவாதலால்,—மெய்தரும்-உடம்பினகண்ணிருக்கும்,— உதானவாயுமேவிட-உதானனென்னுங்காற்று லுந்தப்பட்டு,—விளைந்தவன்னம்-மத்திமைதானதூச் சூக்குமரூபமாய்ப் பிரிந்தோன்றிய வக்கரங்கள்,—ஐயமில்பிராணவாயு - மனத்தின ரெழிற்பாடாகி

ய வையமின்றாகற்கேதுவா யகங்காரத்தைச் செலுத்தப்படுர பிராணனென்னுவகாற்றால்,— அடைந்தெழுந்து - உந்தப்பட்டெழுந்து,—பொய்யற வுடைவுடைத்தாய் - விபாகமறப் புறத்தே யடைதலுடைதராதலுமாகிய விரண்டுமே,—அடைவுடைத்தாம்-இலக்கணமாக வுடைத்தெனபதாம

மறைஞானதேசிகர் உரை.

மேன முறையானே மத்திமையெனனும்
வாக்கின திலக்கண முணாத்துகிறா.

உள்ளுணர் வோசையாகிச் செவியினி லுறுதல்செய்யா, தொள்ளிய பிராணவாயு விருத்தியை யுடையதன்றித், தெள்ளிய வக்கரங்கள் சிந்நிடுஞ் செயலின்றி, மெள்ளவே யெழுவதாகு மத்திமை வேறதாமே. (௨௧)

(இ-ள்) உள்ளுணர் வோசை யாகிச் செவியினி லுறுதல்செய்யாது — மத்திமையென்னும் வாக்கு வைகரிக்குக் காரணமா யிதற்கு வேறுமா யிவனுடைய கண்டத்தின்கண்ணின் றறிவா யுள்ளேயே ர்தொனியுமாய்ச் சோத்திரத்துக்கு விடயமாகாமற் சவிகற்ப சொரூபமாய்ப் புத்தியி னக ணெழுத்துக்களை யொழுங்குபட நிறுவி

ஒள்ளிய பிராணவாயு விருத்தியை யுடையதன — நல்ல பிராணவாயுவைச் சார்ந்து புறம்பே பேசுவிக்குந் தன்மையினைப் பொருந்தாமல்,

றி

தெள்ளிய வக்கரங்கள் சிந்திடு செயலின்றி மெள்ளவே யெழுவதாகு மத்திமை வேறதாயே

வைசந்தியினின்றும் விளங்கப்படாத வக்கரங்களை மிடறுமுதலிய தானங்களைப் பொருந்தி நாநாவிதமாகப் புறம்பே புறப்பட்டு ஜீவிகருந் தொழில்களுமின்றி புத்திபு முபாதானமாய் மெத்தென்று தோன்றுவதாய் நுலவொலிக்குக் காரணமாய் வேறுபட் டெழுந்திருப்பதியாது அது மத்திமையாம். எ-று. (௨௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

(உள்ளுணா...வேறதாயே) - மத்தியமைவாக்கான திவ்வைகரிவாக்கிற்சனனிபமுமாய்ப் பிறர்செவிக்குக்கேட்கப்படாமலக்ஷரக்கிரமமான சத்தத்தையுடைத்தாய் வர்ணானுசந்தானமுமின்றிப் பிராணவாயு விருத்தியுடன்கூடாததுமாய் மந்தசுவாசத்தையுடையதுமாயிருக்கும்.

தது³க்தம் தத்ரைவ - ப்ராணவ்ருத்தி ஸமாயுக்தா வாசீ மாஷ உபாம்ஶுஸம்ஜ்ஞிதா | வர்ணைர்வா ந ஸமாயுக்தா ஸூக்ஷ்மா ஸம்ஜ்ஞிதா .

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மத்திமைவாக்கினது லக்ஷணங்கூறுகின்றார்.

உள்ளுணர்வோசையாகி - சொல்பவனது இருதயாதி கண்டாந்தத்துக்குள் அவனதறிவுக் கறியப்பட்டு, அவனாற் சொல்லப்படும் பொருளில் அவனறிவைவிளக்குந் தொனியாகி,—செவி

யினிலுறுதல் செய்யாது-கேட்பவன்செவிக்கேறுதகாய் வைகரியாய்த் திரிந்து மேலவனுக்குக் கேட்கப்படுவதாய்,—ஒள்ளிய பிராணவாயு விருத்தியை யுடைய தன்றி-உதானவாயு வியாபாரமாத்திரமுடையதாய் பலமுடைய பிராணவாயு வியாபாரத்தினது விடுதலுடையதாய்,—தெளியவக்கரங்கள் சிதறிச் செயலதின்றி-தெளிவாகிய வனனங்கள் சிதறுதலின்றி யொழுங்குபெற்று,—மத்திமை,—வைகரிசகும பைசந்திசகும,வேறாய்,—மெள்ளவே யெழுவதாகும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

செவியிற் கேட்கப்படாதாயும் மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்குதலுடைமையாற் சொல்லுவானானுள்ளே யுணருஞ் சவிகற்பவுணர்புக்கேதுவாய் உள்ளேயுணரப்படுமோசையாதலும், பிராணவாயுவின தொழிற்பாடின்றி உதானவாயுவின தொழிற்பாடுமாத்திரையே ஆண்டுண்மையிற் சூக்குமரூபமாய் அக்கரங்களை பிரித்து தோன்றினும் பல்லிதழ்நாவண்ணங்களிற் பட்டுச் சிதறிப்போதலின்மையுமாகிய அவ்விரண்டிலக்கணத்தானு முறையே பைசந்திகசும் வைகரிகசும் வேறுபடுத்தியப்படுவது மத்திமைவாக்கென்பதாம்.

இரட்டுறமொழிதலான உணரோசையென்னும் வினைத்தொகையின ஓசையென்பது ஏதுப்பெயராயுஞ் செயப்படுபொருட்பெயராயு நின்றது.

தெள்ளுதல் ஈண்டுவடிவு விளக்குதல்.

அதுவிரண்டும் பகுதிப்பொருள விகுதி.

"உயிரிற் சேர்ந்துவருமலை மருவுமுரு வெனையுந் தெரிந்துமுந்தியிடுஞ் செவியுவுறு தள்ளுணர்வா யோசை முழங்கி

மெத்திமை" என்றார் புடைநூலாசிரியரும் §உயிரிற்சேர்ந்து ஞமலை பெறாது முன்னர்க் கூறப்படும் வைகரியை

§ சிவப்பிரகாசம்-௨௬-செ.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மத்திமை காரியப்படுகிற முறைமை மேலருளிச் செய்கிறார்

உள்ளுணர் வோசையாகி - இவனுக்குள்ளே யறிவுமாய்த் தோன்றியுமாய்,—செவியினி லுறுதல்செய்யாது - இவனுடைய சோத்திரத்துக்கும் விஷயமாகாமல்,—ஒளிய பிராணவாயு விருத்தியை யுடையது - தன்றன பிராணவாயுவினது தொழிலையு முடையதாய்,—அன்றித் தெள்ளிய வக்கரங்கள் சிந்திடுஞ் செயலின்றி - அதுவுமன்றி ஞானமாவுக்கு மயக்கமறத் தெளிந்த வக்கரங்களைச் சிதறும லொழுங்குபடக் கூடிக் கொள்ளுகிற தொழிலையு முடைத்தாய்,—மெள்ளவேயெழுவதாகு மத்திமை வேறதாகியே - வைகரியாகக்குக்கு வேறுபட்டு மெத்தனவே யெழாநிற்கிறது மத்திமையென்றது.

இக்கூற சொல்லியது பிராணவாயுவிலே கூடிவருகிற அக்கரங்களைப் பொருந்தத்தக்க ரூபங்க ளெல்லாவற்றையும் ஒழுங்குபட நிறுத்திச் செவிக்குக் கேளாமல் இவனுக்குள்ளே யறிவாய்த் தோற்றியுமாய், நாவிலே பிறக்கு மத்திமையென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

செவியினி லுறுதல்செய்யாது - செவியிற்கேட்கப் படாதாயும்,—மெள்ளவேயெழுவது - மெல்லோசையாகக் கண்டத்

தில் விளங்குதலுண்மையால்,—உள்ளுணரோசையாகி-உள்ளே யுணரப்படும் ஓசையாதலும்,—ஒளிப்பிராணவாயு விருத்தி யையுடையதன்றி - விளங்கியபிராணவாயுவின தெழுச்சிப்பாடின்றி யுதானவாயுவின தெழுச்சிப் பாடொன்றினாலே யானதுண்மை யின,—தெளியவக்கரங்கள - சூக்குமரூபமாய் வடிவுவிளங் கிய வக்கரங்கள,—சிந்திடுஞ்செயலதின்றி - பிரிந்துதோன்றிநு யபல்விதமா வணுக்களிற்பட்டுச் சிதறிப்போத லின்மையு மாகிய விவ்விரண்டிலக்கணத்தானும்,—வேறதாய் - முறை யே வைசந்திக்கும் வைகரிக்கும் வேறு பட்டுள்ளது,—மத்தி மை யாகும் - மத்திமைவாக்கென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேன முறையானே வைசந்திவாக்கி
லிலக்கண முணர்த்துகின்றார்

வேற்றுமைப் பட்டவன்னம் வெவ்வேறு விபா கமாகித், தோற்றுத லடைவொடுக்கிச் சொயம்பிர கா சமாகிச், சாற்றிடு மயிலெண்டந் தரித்திடு சலமே போன்றவ, காற்றவே யுடையதாகிய வைசந்தி யமர்ந் திருக்கும். (உஉ)

(இ-ள்) வேற்றுமைப் பட்டவன்னம் — வைசந்தியெனனும் வாக்கு மத்திமையைப்பற்றி விளங்காதிருக்கிற விந்துரூபமாகித் தனனிடத்துக் காரியங்களெல்லாம் விளங் காத புத்திபாற் சுட்டியதென்றறிப்படா

வெவ்வேறு விபாகமாகி — த வக்கரங்களை பொன்றொன றொவ்வாத வடிவாக வுடையதாய்,

தோற்றுத லடைவொடுக்கிச் — சூக்குமையாகிய வாக்கே தனக்குக் காரணமாய்த் தன்னிடத்திற் றோற்றப்பட்ட வ

சொயம்பிரகாச மாகி — க்கரங்களினுடைய முறைமையைச் சற்றுந் தெரியாதபடி தனனிடத் தொடுக்கிற தன விடத்தெல்லாம் விளங்கும் ப்ரகாசத்தினை யுடைத்தாய் நிற்கும். அஃதெனபோலவெனி ன?

சாற்றிடு மயி லினண்டத் தரி த்திடுஞ் சலமே போனறங் காற் றவே யுடை-யதா கிப் பைசநதியம ர்ந்துநிற்கும். — மயிலினண்டத்தின்கண் மயில் சொருபி கரித்துத் தோற்றுமையினுஞ் சலமாயவாறு போல எழுத்துக்கள சொருபிகரித்துத்தோ னறி விளங்காநிற்கும். எ-று.

பைசந்தி-எழுவாய், நிற்கும்-பயனிலை. (உஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

---o---

(வேற்றுமை . நிற்கும்) - அகவயம் வேற்றுமைப்பட்டவ ன்னம் வெவவேறு விபாகமாகித் தோற்றுக லடைவொடுக்கி சாற்றிடுமயிலினண்டத் தரித்திடுஞ் செயலேபோனறு சொயம் பிரகாசமாகி யாற்றவே யுடையதாகிப் பைசந்தியமர்ந்து நிற் கும் - நீலாதிபாகிய பலவர்ணங்களையும் வெவவேறாகக் கா ணப்படுகனறி மயூராண்ட ஜலமான தேகரசமாக நின்றது போலப் பைசந்திவாக்கான நேகபஞ்சாசத வர்ணத்தினுடை ய பேதத்தையுங் கிரமத்தையு மடக்கிக்கொண்டு விஞ்ஞானப் பிரகாசமாய் மேன மத்திமைவாக்கிற்குக் காரணமுமாய்ப் பி ராணவாயுவுடனேகூட உத்தானமின்றி நிற்கும்.

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

வைசந்திவாக்கின் இலக்கணமுணர்த்துகின்றார்.

வைசந்தி - வைசந்தி,—வேற்றுமைப்பட்ட வன்னம் - வெவ்வேறு குறியாயிருக்கு மக்கரங்கள்,—சாற்றிய மயிலின் அண்டத்திரசத்திற் சலமேபோன்று வெவ்வேறு விபாகமாகித் தோற்றுதலடையொட்டாக்கி யாற்றலே யுடையதாகி - சொல்லிய மயிலின் அது முட்டைதாங்கிய நீரிற் சிறகுமுதலிய வுறுப்புகளைப் போல வெவ்வேறுபிரிந்தொழுங்கு பெற்று மத்திமையாய்த் திரிந்தினிமேல் வருகலையிப்போ நடக்கி யந்த வன்னங்களை நிலைபெற வுடைத்தாகி,—சொயம்பிரகாசமாகி-சொல்வோர்க்குங் கேட்போர்க்குமுறைமையில் மத்திமையும் வைகரியுமாய், புத்தியசங்காரங்களோடு கூடிச் சவிகற்பஞான காரணமாய், வைசந்தி விதனையோடுங்கூடி நிருவிகற்ப ஞானகாரணமாய், பின் மனத்தோடுகூடிச் சவிகற்ப ஞானத் துத்தியோகிக்கும் சூக்குமை விதனையோடுகூடி நிருவிகற்ப ஞானகாரணமாயிருக்கும். ஆதலால், புருடப்பிரயத்தினம் பொருட்டாமற் சற்றேபொருந்தி தானே விளங்கி,—அமர்ந்துநிற்கும்- நிருவிகற்ப ஞானவிளக்காய்ச் சவிகற்பஞானத் துத்தியோகித்து நிலைபெற்று நிற்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——0——

பைசந்திவாக்காவது, மேல் விளங்கித் தோன்றுவனவாகிய பதங்களனைத்தையுஞ் சூக்குமரூபமாய் அடைவுபடவொடுக்கி நிற்குமயிலமுட்டையிற்போலப் பலவகைப்பட்ட வெழுத்துக்களை மத்திமைத்தானத்துப் பிரிவுபட விளங்கித்தோன்று முறைமையினை அடக்கி, மிகவுஞ் சூக்குமரூபமாய்க் கொண்டு சிந்தையினகணிற்றலும், நிருவிகற்பவுணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டிலக்கணமுமுடைத்தென்பதாம்.

விபாகம் - பிரிவு.

நிரம்பவழகியருரை வருமாறு.

——0——

பைசந்தி காரியப்படு முறைமை மேலருளிச் செய்கிறார்.

வேற்றுமைப்பட்டவண்ணம் வெவ்வேறுவிபாகமாகி - ஒன்றுக்கொன்று வேறாயிருக்கிற சுபாவத்தையுடைத்தாகிய அக்கரங்களை வேறுவேறான ரூபங்களை யுடையதாய்,—தோற்றுதலையொடுக்கி - தோன்றுகிற முறைமைகளை அடைவிலே கூட்டி,—சொயம்பிரகாசமாகி - அந்த வக்கரங்களுக்குள்ள பிரகாசமேயாய்,—சாற்றும் மயிலினண்டந்திரதத்திற் சலமேபோன்று - சொல்லப்பட்ட மயிலின முட்டைக்குள் ஜலத்திலே பஞ்சவணங்களுந்தோன்றி உருத்தெரியாது நின்று உடைத்தால் ஜலமான தன்மைபோல,—ஆற்றலை யுடையதாகி - அக்கரங்களைத் தோன்று இருக்கச்செய்தே உள்ளே சிக்கினவே உடைத்தாய்,—பைசந்திபமர்ந்து நிற்கும் - பைசந்தி வாக்கானது ஆன்மாவுக் கறிவாய் இப்படியே பொருந்திநிற்கும்.

ந இதனாற் சொல்லியது மயிலின் முட்டைக்குட் ஜலத்திலே மயி லுருசெரித்துத் தோன்றி உடைந்தால் ஜலமான தன்மைபோல, சித்ததிலே போருணாவுமாத்திரமாய் நிற்கும் வைசந்தி வாககானதென்ற முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

வைசந்தி-வைசந்திவாககாவது,—வேற்றுமைப்பட்ட வன்ணம்-சொல்விளங்கிததோன்றுவனவாகிய பஞ்சவன்னங்களையும்,—அங்காற்றலையுடையதாகி-சூக்குமரூபமா யடைவுபடவொடுக்கிநிற்கும்,—சாதிமயிலி னண்டகதிருதிடுஞ் சலமேபோன்று-நுறுநிற மயிலின முட்டையிற்றரித்திடுநீர்போல,—வெவ்வேறு விபாகமாகி-பலவகைப்பட்ட வெழுத்துக்கண் மத்திமைத்தானத்துப் பிரிவுபட,—தோற்றுதலையொடுங்கி-விளங்கித்தோன்று முறைமையினைப்பட்டு,—சொயம்பிரகாசமாகி-பிரவுஞ்சசரூபராய்க்கொண்டு,—அமாகநூறாகும்-சிந்தையின்க ணிறாது நிருவிகற்பவுணர்வுந் தேதுவாகலுமாகிய விரண்டு மியக்கமாகவுடை—ததென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

பேன் முறையானே சூக்குமவாக்கினமுறைமையுணர்த்துகிறார்.

சூக்கும வாக்கதுள்ளோர் சோதியா யறிவதன்றி, யாக்கொடு மதிகாரத்துக் கறிவினை தன்னைக்கண்டா, ளீக்கமி லறிவானந்த முதன்மையித் தியமுடைத்தாய, போக்கொடு வரவிளைப்பு விகாரமும் புருடனின் றும். (உக)

(இ-ள்) சூக்கும வாககதுள்ளோர் சோதியாய் — சூக்குமையென்னும் வாக்கான துள்ளே, யதத்யாத்திரத்தை விளக்குகிறதாய்

அழிவதன்றி — மற்ற வாக்குகளைப்போலத் தோன்றுவது மொடுங்குவதுமின்றித் தானிலைபெற்றியல்பாயிருக்கும்

ஆகுமதிகாரத்தை கழிவினை தன்னைக கண்டால் — அதிகாரத்தை யுண்டாக்கி யத்தை யழிக்கிற விந்தச் சூக்குமவாக்கினுடைய வுண்மையா தொருபுருடன விவேகஞானத்தினாலே யிது பரமமான பந்தமென்று விசாரத்தி தற்கு மேலான விந்துவையுங் கடந்திருக்கிறதந்தப்புருடற்கு

நீக்கமிலறிவானந்த முதன்மை நித்திய முடைத்தாய்ப் போகமொடு வரவினைப்பு விகாரமும் புருடனினும் — நீங்காதபேரறிவும் பரமமான வானந்தமுஞ் சுதந்தரத்தையு நித்தியத்துவத்தையு பெறறு ஜனனமரணங்களையும் விட்டு நீங்கி யானமவிந்தா யிருப்பர்கள. எ-று.

இதுமுதலிய பந்தம் நீங்கவே மோட்சமடைவனெனபது கருதது. உ-ம் 'அநாதிமுதத சின்மய ஞேககா ஞதாமாகு மகாதிசுத்த மாயையி ஞனமாககண - மஞதியினை, யாக்கப் புவிதமந்த நாதத்தாம் விந்துவினும், வாகதொருநான் கென்றூர் மதிதது.' 'சூக்குமைநம பைசந்தி மத்திமைசொல் வைகரி யென், ருக்கு மிவற்றினபே ரடைவறிக - சூககுமைதான்,பந் திதரன் மாவுணாவைப் பைசந்தி மத்திமையா, மந்தத்தித்

நூல வெழுத்தாம்' 'வாக்கி னுதித்துப் பொருளை மதிப்பிக்கை க், காக்கும பதத்தி னவயவமாய் - வாக்கியமாய்ப், பாவா யி யலாகி நூலாய்ப் பரந்திலங்கு, மோவாதே மதத்திடையி னுற று.' என விவைகளை யறிக. (உரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சூக்குமவாக்கதுளளோர சோதியாயழிவதின்றி - சூக்கு மவாக்கான தந்தாகதமாய் விஞ்ஞானப்பிரகாசமாய்த் தன னுடையகாரியவிருத்தியான பைசந்தி மத்திமை வைகரியென னு மூன்றுவாக்கு மொடுங்கிய காலத்துந் தானொடுங்குவதின்றி நிற்கு மானமஞ்ஞானக்கிரியாப் பிரதிபந்தகமான வாணவமலநி விர்த்தியுடனே நிவிர்த்தியாகையாற் முனே யானமாக்களுக்குப பரமானபந்தமுந் தன்னுடையநிவிர்த்தியே பரமானமோக்ஷமு மாகப் பிரதயானம நியதமாய்நிற்கும்,—

தத்ரோக்தம் - ஸர்வாக்ஷாதிமனஸ்கஸாரணா நிவ்ருத்தாசைவ ஷவ்ருத்திகா | சிவஹ்ருத் நவார்ணோ ஸம்ய சிவஹ்ரு த்துக்தஸ்த நரவாரா || ஜனிவ்ருத்த்ய வினா ஸர்வ தா த்ருக்க்ரியாவாரணோ யதஜ்ஞ.

தன்னைக் கண்டா லதிகாரத்திற் கழிவினையாக்கிடும் புரு டனினும் போககொடுவரவிளைப்பு விகாரமு மினும் நீக்க மிலறிவானந்த முதன்மை நித்திய முடைத்தாம். (எனமாறுக) இச் சூக்கும வாக்கிற் கனனியமாக வானமாக்க டங்களைச் காண்ப தருமை குருகடாக்ஷத்தினாற் கலாசேரதனை பண்ண ப்பெற்ற வானமா வானவன் சூக்கும வாக்கிற் கந்யமாகத் தன்னைக் கண்டாற் போகாதி காரத்திற் கழிவினை யுண்டாக்கு

மவ்விடத்துப் பும்ஸத்வமல நிவிர்த்தி யாகையா லான்மாவு
க்குப் புருட னென்னும் பெயரில்லையாம். ஆன்மாவைக் கஞ்சு
கம்போல வாவரித்த தேகதேச விருத்தி பண்ணிக்கொண்டு இரு
யும் பும்ஸத்வமலம் போகையால் ஜநந மரணமு மதனாலுண்
டான பாரதந்திரியமு விகாரமு மில்லையாம். இது அநிஷ்ட நிவி
ருத்தி. நையாயிகரைப்போ லாத்தியந்திக துக்க சம்சேதமே
மோக்ஷ மென்ப தன்றி சைவ சித்தாந்தத்திற்கு ஸ்வதந்தி
ரத்தையும் ஞானானந்தானுபவமாகிற இஷ்டவ்யாப்தியு முண்
டென்பதனு னிரபேக்ஷ சாவஞ்ஞதையும் பரமானந்தஸ்வரூப
வமுஞ் ஸ்வாதந்திரியமு நித்யதையுமுண்டாமென் றிதன
பொருள்

[illegible]
[illegible] विधुः । सर्व[illegible]ज्योति[illegible]
[illegible] । यस्यां दृष्टौ सर्व[illegible]
[illegible] ॥ [illegible]
[illegible] विमुक्तिदः । [illegible]
[illegible] ॥
नास्ति [illegible] नास्ति [illegible]
[illegible] ॥

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சூக்குமைவாக்கின திலக்கணமுணர்த்துகின்றார்.

சூக்குமைவாக்கது உள்ளோர் சோதியாய் - தூலசரீரத்தி
ன இருதயாதாரத் திருக்கும் பார்த்திவபங்கசப்போகுட்டினை து

ஞூழியிற்பற்றி, அதனது அழிவில் வேறொன்றுபற்றி, பிரளய பரியந்தமிருக்கு முன்சொன்ன பரசீர விந்துசத்திசதுஷ்டய பஞ்சகத்திலிருக்கும் பிரதான நாத கர்ப்பத்திருக்கும் பிரணவ கலாநாத சத்தியைப் பற்றி யிருந்தலா லொப்பற்ற அந்தரங்க பிரகாசமாய்,—

அழிவின்றி - பிரளயபரியந்த மின்றி இருக்கும்.—

(அது) தன்னைக்கண்டால்,—

முறைமையிற பிரகிருதிபுருட விவேகஞானத்தார் சாங்கியன் பாதஞ்சலன வேதாந்தி இவர் முதலோர்க்குப புருடதத்துவப பிராப்தி.

மலபரி பக்குவமின்றிக் கேவலங் கலாதத்வாந்த தீக்ஷா சுத்தி மாயாபுருஷ விவேக ஞானத்தாற் சைவதேசிகட்கு விஞ்ஞானகலப் பிராப்தி

மலாந்த தீக்ஷாசுத்தி மலபுருஷ விவேகஞானத்தால் மந்திராதி தீவிராந்த மலபரிபாகமுடைய மகாவிரதா முதலோர சாமானியசைவர், சைவசித்தாந்திகளிற் சிலர்க்குஞ் சுத்தத்துவப பிராப்தி.

மகாமாயாந்த தீக்ஷாசுத்தி மகாமாயா புருஷவிவேக ஞானத்தாற தீவிரதர மலபரிபாக முடைய சைவ சித்தாந்திகட்குப பரமோக்ஷப பிராப்தி.

நாதபுருடவிவேகஞானமே மகாமாயாபுருட விவேகஞானமாதலா லந்த நாதத்தோடு பற்றியிருக்கும் சூக்குமை வாக்கை நான்வே றிது வேறென்று விவேகித்துத் தரிசித்தால்,—

அதிகாரத்துக் கழிவில்லையாகும்-மோக்ஷாதிகாரங் கொடுத்துப் போகாதிகாரத்துக்கு நாசத்தைப் பண்ணும்தானி

ங்குவதே கொடுப்பதும். அப்போது புருஷன் சர்வபாச முத்தனாய்ச் சின்மாத்ரனாய்.—

நீக்கமிலறிவானந்த முதன்மை நித்திய முடைத்தாய்-சங்காரத்திற பசுத்துவ ஸ்வரூப சிற்சத்தி விளக்கமே போகானந்தம் முத்தியிற் சிவனுக்குப் போல, சிவத்துவ ஸ்வரூப சிற்சத்தி விளக்கமே மோக்ஷானந்த மாதலால நீக்கமிலென்றது; மலமறைப்பிலும் ஸ்வநிட்ட மாய்ப் புருடனோடு சமவாயசம்பந்தமாயிருந்த தென்றதனால்,—

[நீக்கமிலறிவானந்தம் - சர்வஞ்ஞத்துவ சிவரூப சர்வஞ்ஞதை நிருத்தி, அநாதிபோதம முதற்குண வடிவாகிய ஞானசத்தியபிவியத்தி,

நீக்கமின் முதன்மை - சர்வ கர்த்திருத்துவ சிவத்துவரூப ஸ்வதந்திரதை யநுத்தசத்தி யனந்தசத்தி முதற்குண வடிவமாகிய கிரியாசத்தி யபிவியத்தி இப்படி யறிவிதமாம. இருவிதமாய் ஒருவிதமாயிருக்கின்ற சிவத்துவரூப சிற்சத்தி யபிவியத்தி யென்கின்ற சிவத்துவ விளக்கமாகிய சிவானந்தத் தொத்த தனது சிவானந்தத்தை.

நித்தியமுடைத்தாய் - சிவசத்தி விளக்கினாற் றிரும்பச்சிவசத்திவிளக்கு விருப்பினறிச சர்வப்பிரகாரமாய் மலமறைப்பு நீங்கி விளங்குதலாற கெடாதிடைவிடாது அநுபவிப்பானாகி,]—

போககொடுவரவிளைப்பு விகாரமுமின்றும் - இறப்புப் பிறப்பில்வருந தொய்விற்றேன்றும வேற்றுமையு மில்லாதவனாம்.

போக்கொடு வரவிளைப்பு விகாரமானதும் புருடனுக்கின்றுமென்றும் எழுவாய் பயனிலை யிசைத்துப் பொருளுரைக்கனுமாம்.

சிவத்துவமெனாநின்ற சிவகுண விளக்கமே சிவானந்தமென்று சித்தாந்தஞ் சித்தித்திருக்கவும், சிவகுணமே சிவானந்தமென்று சிலர்சொல்லுவார்கள், அதுமாறுபடு மென்பது பிரமாணதீபிகை சித்தாந்தசிகாமணி சிவஞானபோத வியாக்கியான மிவைகளிலே காணப்பட்டது கண்டித்தனம், இதுசொல்லியபடேது? சிவத்துவசின்ன குணவிளக்கமும் குணமாகாதோ! குணமாமே! உள்ளது குணமானாலுங் குணியிலிருப்பதென்று கந்தாதிகளிடத்தது தீவிராதி தன்மம்போல சிவத்துவ லக்ஷணங் குணத்திலிருக்கு மதனால் மாறுபாடில்லை.

சிவஞானயோகியருரை வருமாறு.

பரசரீரத்திலுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும் ஞானமாத்திரைக்கேதுவாதலுமாகிய இலக்கணத்தையுடையது சூக்குமவாக்கு அதுதான், பைசந்தி மத்திமை வைகரியாய் விருத்திப்படுவதாகிய தன்னதிகாரமாத்திரைக்கேழுவுண்டாக, தான சுத்தமாயாரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவதாம த்வவிசேடத்தால் அதனையுள்ளபடி காணப்பெறுவார்க்குச் சுத்தமாயாபுவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போக முண்டாமென்பதாம்

ஆய இன்றி ஆக்கிடுமெனவும், கண்டால் உடைத்தாயினருமெனவும், வேறுவேறு வினைமுடிபு செய்க.

அழிவினை வினைத்தொகை.

புருடனென்பது "கால மூலகம்" என்னுஞ் சூத்திரவிதியால் அஃறிணைச்சொல்லாயிற்று.

சுத்தமாயா புவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போகத்தினியல்பிதுவென அதன்பெருமை கூறுவார், நீக்க

மிலறிவானந்த முதன்மை நித்தியமுடைத்தாய்ப் போக்கொடு வரவிலாப்பும் விகாரமும் புருடனின்றும் என்றார்.

தானழிவதின்றித் தன்னதிகாரமாத்திரைக்கு அழிவினைச் செய்யுமெனவே, அதுசிவதத்துவம்போலச் சுத்தமாயையின் வேறன்மை பெற்றாம்.

தன்னை உள்ளபடி காண்டலாவது அதிசூக்குமவாக்கினை வியஞ்சகவோசைபற்றித் தூலமாய்க் காணும் நம்மனோர் போலன்றி, நம்மனோர்க்குக் குடம்படமுதலியன காட்சிப்புலனாமாறுபோலத் தன்னியல்பானினிது விளங்கக் காண்டல் கண்டாலென்னெ அங்ஙனங் காண்டல் அரிதென்பது பெற்றாம். இவ்வாறன்றி, ‘ஒவ்விடவிந்துஞான முதிப்பதோர்ஞானமுண்டேற சேவுயர் கொடியிருன்றாளு சேவடிசேரலாம்’ என்பதே ஈண்டைக்கும் பொருளாகக்கொண்டு, ‘கண்டாலாகசிடும்’ எனக்கூட்டித் தமக்குவேண்டியவாறே யுரைப்பாருமுளர். அவர், ‘அழிவதின்றியழிவினைடாக்கிடும்’ என்னுந் தொடர் அவ்வாறு பொருள்படுதற்கேலாமையும், கூறியதுகூறலாதலும், உண்மையதிகாரத்திற் கூறப்படும் பரமுத்திவிலக்கணம் ஈண்டு வகுத்துக்கூறுதற் கோரியைபின்மையையும் நோக்கிலர்

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மேல் சூக்குமைவாக்குக் காரியப்படுகிற முறைமையருளிச் செய்கிறார்.

சூக்குமவாக்கத்துள்ளோர் சோதியாய் - சூக்குமைவாக்கென்று சொல்லப்பட்டதுதான் ஆன்மாவுக்குள்ளே அவரவரறிவுக்குத்தக்க பிரகாசத்தினையுடைத்தாய்,—அழிவதின்றியாக்கி

ம்-கேடின்றியே மேலுண்டான மூன்று வாக்குகளையும் அந்த வாக்குகளுக்குண்டான காரியங்களையு முண்டாக்காநிற்கும்,—அதிகாரத்திற் கழிவினை - இப்படித்தான கொடுக்கத்தக்க பிந்த அதிகாரங்களுக்கு அழிவுண்டாங் காலத்து அவையிற்றை ஒடுக்கிக் கொள்ளுவதுமாய்,—தன்னைக் கண்டால் நீக்கமிலறிவானந்த முதன்மை நித்தியமுடைத்தாய்ப் போக்கொடு வரவிளைப்பு விகாரமும் புருடனின்றும - தன்னை யுள்ளபடி தரிசித்தால் ஒருகாலத்திலும் பிரியாத வறிவினையுற்ற சொரூபத்தையும் பிரபஞ்சத்துக் கெல்லாம் மேற்பட்டிருக்கிற முதன்மையும் அழியாத முறைமையையு முடைத்தாய,இப்படிக் கொத்திருக்கிற தனனுண்மையைத் தரிசித்த பசுவானமாக்களுக்குச் சுகதுக்கங்களுக் கிடாகச் சொர்க்க நரகங்களிற் போகையும்,அது தொலைந்தவாறே பூலோகத்திலே வருகையுமாய், கொள்ளிவட்டம்போலவும் கரங்குபோலவும் வட்டஞ்சுத்தித் திரிகிற இந்த விகாரங்களும் இளைப்புகளு மெத்தனை யில்லையாய் விடும்.

இதனாற் சொல்லியது சூக்குமவாக்கானது ஆன்மாவுக் குள்ளே யிருப்பதொரு பிரகாசமுமாய் அறிவுமாய் மற்றுள்ள வாக்குகளுக்கெல்லா முதன்மையுமாயத் தன்னை யுள்ளபடி தரிசித்த பெரியோர்களுக்கு நிர்விகாரத்தையு முண்டாக்கி அவர்களுக்கு ஜநந மரண துக்கமெனகிற இளைப்பும இல்லையாக்கு மென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சூக்குமவாக்கது - சூக்குமவாக்கானது,—உள்ளோர்சோதியாய் - பரசரீரத்திலுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குத

னும் ஞானமாத்திரைக் கேதுவாதலுமாகிய விலக்கணத்தையுடைத்தாய்,—அழிவின்றி - தானசுத்தமாயாரூபமாய்க் கேடின்றி நிலைபெற்று,—அதிகாரத்திற கழிவில்லையாகவிடும்-அதுதான் பைசந்தி மத்திமைவைகரியாய் விருத்திப்படுவதாகிய தன்னதிகாரமாத்திரைக்கே யழிவுண்டாகக்கும்,—தன்னைக்கண்டால்-தன்விசேடத்தா லதனையுள்ளபடி காணப்பெற்றால்,—புருடன்-அப்புருடனுக்கு,— நீக்கமில்லறிவானந்த முதன்மை நித்தியமுடைத்தாய - நீங்காதபேரறிவு மானந்தமுஞ் சுதந்தரமு நித்தியத்துவமுமுடையதாய்,— போககொடுவரவிளைப்பும் விகாரமுமின்றி-நாசோற்பத்தியானவருமிளைப்பும் விகாரமுமுற்றுமில்லையாய்,—ஆம - சுத்தமாயா புவனத்தின கண்ணதாகிய பரமுத்தி-ஒருப்போகமு முண்டாமெனபதாம்,

---

மறைஞானதேசிகர் உரை.

இந்தவாக்கு நான்கும், நிவிர்த்திமுதலிய பஞ்சக
லைகளி லிருப்பார்க்குக் காரியத்துவாரத்தா
ல் சீவிக்கு முறைமை யுணர்த்துகிறார்.

நிகழுந்திடம வாக்குநான்கு நிவிர்த்தாதி கலையை
ப்பற்றித், திகழுந்திடு மனுசத்தாகச் செயல்பரிணமமன்
று, புகழுந்திடும் விருத்தியாகும் படங்குடி லாறு
போல, மகிழுந்திடும் பிரமமன்று மாமாயை யென்பர்
நல்லோர். (௨௪)

(இ-ள்) நிகழுந் விளங்காநின்ற வாக்கு நான்கும் நிவிர்த்திம்வாக த்திமுதலிய கலைகளி லிருப்பார்க் கஞ்சுவிக்குநானகு தமாய் சீவியாநிற்கும். அஃதெங்ஙனமெனி

நிவிர்த்தாதி கலையைப் பற்றித் திகழுந்திடு மஞ்சதாக ல்? நிவிர்த்திமுதலான புவனவாசிகளுக்கு மிகவுந் தூலமாயும், ப்ரதிட்டாகலா புவனவாசிகளுக்குத் தூலமாயும், வித்தியாகலா புவனவாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்திகலா புவனவாசிகளுக்கு அதிசூக்குமமாயும், சாந்தியாதீதகலா புவனவாசிகளுக்கு அதிசூக்குமதரமாயும் சீவியாநிற்கும்.

இங்ஙன மூவகை யான்மாக்களுக்கும் சீவிக்குமுறைமை யறிக

செயல்பரிணாமமன்று அவை காரியமாகிறபோது பரிணாமவாத மன்று

அஃதாவது, பாலானது தயிராயும், தயிர் மோராயும் இப்படி யொருபொருளான முன்னிருந்தவடிவைப் பேதித்து மற்றொருவடிவாகை. உம் 'வாளாகை தாளாகை பரிணாம மண்ணிற்-பிள்ளை மூளையாதி பெறும்'. எனவறிக.

புகழுந்திடும் விருத்தியாகும படக்குடி லாற்றபோல மடிப்புடைவையைத் தானே விரித்துக் கூடாரமாய்க் காரியப்படுமென்று சொல்லும் விருத்திகாரியமுமன்று,

மகிழ்ந்திடும பிரமமன்று மகிழ்ச்சியைப் பொருந்திப் பிரமந்தானே விவர்த்தமாகுமெனனும் விவர்த்தவாதமுமன்று, பரிணாமமாயிற் பாலுக்கு நாசம் வருமாறுபோல வுபாதானத்துக்கு நாசம் வருமாதலா லதுகூடாது

விருத்திகாரியமென்னில்? படமாய்க் காரியப்படும்போது குடிலுக்குக் காரியமில்லாமற் போமாதலாற் கூடாது.

விவர்த்தவாதமெனவில்? காரியத்துக் கசத்தாய் விடுமாதலா லிதுவுங் கூடாது.

மாமாயையென்பா நல்லோர் — வாயு வடிக்கிறபோது சமுத்திர மெப்படி யொரு ப்ரதேசத்திலே விகாரப்படும் அதுபோலச் சிவஞானத்து பரிக்கிரகசத்தியாயிருக்கிற குண்டலினி யனேகதேசத்தைப் பரிணமிப்பித்துத் தத்துவ தாத்துவிதங்களைத் தோற்றுவித்துக் காரியப் படுத்துவிப்பனென் றறிவா லுயர்ந்தோர் சொல்லுவர்கள் எ-று (௨௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———0———

நிகழ்ந்திடுமெ வாக்கு நாலு நிவிர்த்தாதிகலையைப்பற்றித் திகழ்ந்திடு மைந்தசாக - முன்சொன்னவைகரியாதி வாக்குநான்கு நிவிர்த்தாதி கலைகளுடைய ஸ்வரூபமாகக்கொண் டைந்து பேதமாய்த் தத்தத்கலாவாசிகளுக் கவ்வாறே தாரதம்யமாகச் சத்தார்த்தப் பிரகாசகமாயிருக்கும்,—

தத்ராத்³யா பௌஷ்கரே — வைக²ரீ வாசகா விப்ரா வ்ருத்தி நிவ்ருத்த்யாதி கலாஶ்ரயாத் । பஞ்சதா ஹி ஶிவேச்ச²யா இதி

காமிகேச — ஶாந்த்யதீதாதிஷு ச நிவ்ருத்த்யந்தேஷு ஸம்ஸ்தி²தா: । வாச: ஸூக்ஷ்மாதய: ப்ராணஶக்த்யா வ்யாபாரஸ்து ஸம்ஸ்தி²தா இதி-

ஶ்ரீமத்³ரௌரவவ்ருத்தௌ - வைக²ரீ ஸ்தா²லிகா ஸூக்ஷ்ம

உக்தவ்ருத்தி நிவ்ருத்த்யாதி கார்யாணாம் சூக்ஷ்மநாதே ரூதம் ஹாவெந வஸ்துயஜ்ஞாநேநாவகாசிகெத்யுச்ய இதி.

செயல் பரிணாமமன்று புகழ்ந்திடும் விருத்தியாகும் படங்குடிலானாற்போல — இவ்வாக்கானது விந்துவின் பரிணாமமல்ல. பரிணாமமாகிய † க்ஷீரந் ததியாய்த் ததி தக்கிரமானாற்போல விந்துவுக்கு நித்தியத்தன்மை யில்லாமற்போய்விடும்; போகில், புநஸ் ஸிருஷ்டி யுண்டாகாது. ஆகையாற் புடைவையே கூடாரமானதுபோல விந்து வாக்குகளா விந்துவிருத்திரூபமே,—

† பால் - தயிர் - மோர்.

ததுக்தம் வாஸிஷ்டே — ஸவிகல்பம் விஜாநாதி த்வமேவாமோஹயாநந்த: | வாக்ருந்தவதாஸிந்நா: விடவெத்வகஷ்டத இதி.

மகிழ்ந்திடும் பிரமமன்று மாமாயையெனப்பெயர் நல்லோர் — இவ்வாக்கு விந்துவிருத்தியென்று சொல்லவேண்டுவதில்லை, பிரமாணமாகவே வாக்குரூபமென்றும் வாக்கே பிரமாணமாமென்று சுருதியர்த்தங்கள் கேட்கப்படுகையினாற் சத்தம் பிரமமேயெனின்? பரமானந்த ஸ்வரூபமாயுள்ள பிரபஞ்சத்திற்குச் * சமவாயிகாரணமன்று. அஃதெவ்வாறெனின்? வாக்கானது விகாரியாகையினாலும் ஜடமாகையினாலும் பிரதி புருட நியதமாக அநேகமாகையினாலும், பிரமமும விகாரியும் ஜடமுமநேகமுமாய் விடுமாகையால் மஹாமாயையே வாக்குவிருத்திக்குச் சமவாயி காரணமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ததுக்தம் ததைவ - வாஸோதைவ வாக்ரூபாவ ரேவாமேதத்ருவுஸ்தெத: |

இது பூர்வபக்ஷம்.

மேல் சித்தாந்தம்

நஹ்யகாரணகா ஸர்வா ஸாஹ்யெயம்: கதாசந ॥
தேஷாம் யத்காரணம் விப்ரா ஸூக்ஷ்மஸித்தம் ஸித்தித்வா
தாதிதி.

* முதற்காரணம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

பஞ்சகலைகளில் வாக்கிருக்கும் முறைமை வகுத் துணர்த்துகின்றார்.

நிகழ்ந்திடும் வாக்குநான்கு நிவிர்த்தாதி கலையைப்பற்றித் திகழ்ந்திடும் அஞ்சதாக - நிவிர்த்திகலா கர்ப்ப புவன வாசிக ளுக்குத் தூலதரமாயும், பிரதிஷ்டாகலா கர்ப்ப புவன வாசிக ளுக்குத் தூலமாயும், வித்யாகலா கர்ப்ப புவனவாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்திகலா கர்ப்ப புவனவாசிகளுக்குச் சூக் குமமாயும் சாந்தியதீதகலா கர்ப்பபுவனவாசிகளுக்குச் சூக் கும தமமாயு மிருக்குமென் றிதன்பொருள்,—செயல் - காரிய படுதல்,—பரிணமமன்று - மண்ணினின்றுங் கடகலசமுதலா னவைபோல மகாமாயையினின்றும் வாக்குற்பத்தி தூலபரி ணதிரூபமன்று,—படங்குடிலானதுபோலப் புகழ்ந்திடும் விரு த்தியாகும் - புடைவை கூடாரமானதுபோல விருத்திரூபமா ம, விருத்திக்கும் பரிணமத்துக்கும் அத்தியந்தம் பேதமில்லா மையால் முற்றுவமையன்று, சூக்கும பரிணமமாகுமென் றிதன் பொருள். அந்தவாக்கு விருத்திக்குக் காரணம்,—மகிழ்ந்திடும் பிரமமன்று - சத்தப்பிரமவாதி சொல்லுமான்மாவன்று,— நல் லோர் மாமாயை யென்பர்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இங்ஙனங் கூறிப்போந்த வைகரி முதலிய நான்கு வாக்குகளும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளை பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்சதத்துவங்களி னிருக்கும். இவைசுத்தமாயையினின்றும் விருத்தியாய்க் காரியப்படுவனவன்றி அசுத்தமாயா காரியம்போலப் பரிணாமமாய்க் காரியப்படுவனவல்ல இவ்வாக்குகளைச் சத்தப்பிரமவாதிகள் பிரமமென்பர்; சைவசித்தாந்திகள் பிரமமாகலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தியெனப்படுஞ் சுத்தமாயாரூபமாமென்று கூறுவரென்பதாம்.

காரியப்பாட்டிற்கு எள்ளாகிய குப்பைபோலப் புத்தர் சமணர் கூறுஞ் சமுதாயவாதமும், நூலாகிய வாடைபோலத் தார்க்கிகர் கூறும் ஆரம்பவாதமுங், பேய்த்தேராகிய நீர்த்தோற்றம் போல மாயாவாதிகள் கூறும் விவர்த்தவாதமும், சித்தாந்தத்திற்கேலாமையின் அவற்றையொழித்து, சித்தாந்தத்திற் கொள்ளப்படும் பரிணாம விருத்தியென்னு மிரண்டினுள் இச்செயலியாதோவெனின்? ஐயநீக்குதற்பொருட்டுப் பரிணாமமன்று விருத்தியாகுமென்றும், அஃதேற் பிரமம்போலுமென்னுங் கடாவையாசங்கித்துப் பிரமமன்று, மாமாயையாமென்றுங் கூறினார்

அன்றியென்னும் வினையெச்சத் திகரம் உகாரமாய்த் திரிந்தது.

ஆகுமென்றது பின்னருஞ்சென்றியையும்.

பரிணாமம் விருத்தியென்னு மிரண்டனுள், மலகன்மங்களோடு விரவாத சுத்தமாயையின் காரியம் படகுடிலாகு

ற்போல; விருத்தியெனவே அனைப்பரிணாமம் அவற்றோடு விரவிய அசுத்தமாயையின் காரியத்திற்கெனபதூஉம் பெறப்பட்டது. பாலினுண்டாகிய தயிர்போல முழுவதும் பரிணமித்தலும், நெய்யினுண்டாகிய புழுப்போல ஏகதேசத்திற்பரிணமித்தலுமென பரிணாமமிருவகைப்படும். அவற்றுள் பின்னையதே அசுத்தமாயையிற் கொள்ளப்படுவதூஉமெனக.

விருத்தியென்பது சூக்குமபரிணாமமெனப.

நிவிர்த்தாதி கலைபற்றித் திகழுந்திடுமஞ்சதாக என்பதற்கு, நிவிர்த்திகலையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலதமமாயும், பிரதிஷ்டையுட்பட்ட புவனவாசிகட்கு தூலதரமாயும், வித்தையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலமாயும், சாந்தியுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்குமமாயும், சாந்தியதீதகலையுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்குமதரமாயும், இங்ஙனம் நால்வகை வாக்கும் ஐவகைபடுமென்றுரைத்தலுமொன்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் வாக்குகள் நாலும் கலைகளைந்தாலும் காரியப்படுகிற முறைமை அருளிச்செய்கிறார்.

நிகழ்ந்திடும வாக்குநான்கு நிவிர்த்தாதி கலைபற்றித் திகழ்ந்திடுமஞ்சதாக-இந்தக் கலைகளைந்தாலும் ஆன்மாவுக்குள்ள அறிவு விளங்காநிற்கும்,—செயல் பரிணாமமன்று புகழ்ந்திடுமவிருத்தியாகும படங்குடிலானாற்போல-சுத்தமாயாகாரியம் அசுத்தமாயாகாரியமப்பரிணாமமிராது, சொல்லப்பட்ட விருத்திதானே காரியமாயிருக்கும் அதென்போலவெனனில்? புடவை தான் குடிலானாற்போல. இப்படியேயிருந்ததாமாயினும்,—மனி

ழ்ந்திடும் பிரமமன்று மாமாயையெனபர் நல்லோர் - சர்வான்மாக்களிடத்திலும் அநுக்கிரக மூர்த்தமாயிருக்கிறகத்தாவல்ல, மகத்தான சுத்தமாயையென்று சொல்லுவார்கள் ஓதியுணர்ந்த பெரியோர்கள்

வாக்கு நாலும் நிவிர்த்தாதி கலையைப்பற்றித் திகழ்ந்திடு மஞ்சதாகளென்றது நிவிர்த்தி வைகரியைக் காரியப்படுத்தும், பிரதிட்டை மத்திமையைக் காரியப்படுத்தும், வித்தை பைசந்தியைக் காரியப்படுத்தும், சாந்தி சாந்தியாதீதை சூக்குமையைக் காரியப்படுத்து மென்னுமது கண்டுகொள்க

மகிழ்ந்திடும் பிரமமன்று மாமாயையெனபர் நல்லோர்-கர்த்தர் கொள்ளப்பட்ட திருமேனியெல்லாஞ் சுத்தமாயையிலே கொள்ளுகையினாலும், வேதாகமங்களிலே நின்று தோன்றுகையினாலு மெனக்கொள்க.

இதனாற் சொல்லியது பஞ்சகலைகளினாலே நாலுவாக்குங் காரியப்படுகிற முறையையும், சுத்தமாயா காரணகாரியங்களுக்கு தன்னிற் பின்னமில்லையென்றும், இந்த மாயை கர்த்தாவாகா தென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

நிகழ்ந்திடும் வாக்கு நான்கும் - இங்ஙனம் கூறிப்போந்த வைகரி முதலிய நான்கு வாக்குகளும்,—நிவிர்த்தாதி கலையைப்பற்றி - நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து,—அஞ்சதாகத் திகழ்ந்திடும் - ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்ச தத்துவங்களின் இருக்கும்,— படங்குடிலானாற்போல - படமே குடிலானாற்போல,—புகழ்ந்தி

லம் விருத்தியாகும் - இவை சுத்த மாயையி னின்றும் புகழ த்தக்க விருத்தியாய்க் காரியப் படுவன வன்றி,— செயல் பரிணாம மன்று - அசுத்த மாயா காரியம் போலப் பரிணாமமாய்க் காரியப்படுவன வல்ல,— மகிழ்ந்திடும் பிரமமென்பர் - இவ்வாக்குகளைச் சத்தப்பிரமவாதிகள் மகிழ்ந்திடும் பிரமமென்பர் — நல்லோர் - சைவசித்தாந்திகள்,— அனுமாமாயையென்பர் - பிரமமாதலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தியென்னப் படுஞ் சுத்தமாயாரூப மென்று கூறுவரென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனம் விந்து காரியமுணர்த்தி, மேல் விஞ்ஞான கலாகருக் கனுயாகியையுந்தவமென றுணர்த்துகிறார்.

வித்தைகள் வித்தையீசர் சதாசிவ ரென்றிவர்க்
கு,வைத்துறும் பதங்கள்வன்னம் புவனங்கண் மந்திரங்
க,டத்துவஞ் சரீரம் போகங் கரணங்க டாமெலாமு,முய்
த்திடும் வயிந்தவந்தா னுபாதான மாகிநின்றே. (உரு)

(இ-ள்) வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் — சுத்தவித்தையிலிருக்குஞ் சத்தகோடி மந்திர மூர்த்திகளுக்கும், ஈசுரதத்துவத்திலிருக்கும் அனந்தர் சூக்குமர் சிவோத்தமர் ஏகநேத்திரர் ஏகருத்திரர் திரிமூர்த்தி சிரீகண்டர் சிகண்டி என்னும் அட்டவித்தேசுர ராகிய வெண்மர்க்கும், சதாசிவ தத்துவத்தி லிருக்கும் பிரணவர் சாதாக்கியர் தீத்தர் காரணர் சுசீவா ஈசர் சூக்குமர் காலர் தேசேசர் அம்பு என்கை கூறிய வனுசதாசிவர் பதின்மர்க்கும்

என்றிவர்க்கு வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்திரங்கள் தத்துவஞ் சரீரம் போகங் கரணங்களாமெல்லாமும் — என்று சொல்லப்பட்டவிவர்களுக்குப் பதமுதலானதெல்லாம் பொருந்தும். அஃதி யாதெனில்?

உய்த்திடும் வயிந்தவந்தானு பாதானமாகி நின்றே. — சுத்தமாயை யுபாதானமாய்நின்று தநுபோகங்களை யுண்டாக்கி யவைகளைச் செலுத்தாநிற்கும். எ-று.

அட்டவித்தியேசர் அணுசதாசிவரென்றது வித்தையீசா சதாசிவரென்றது தலைக்குறைத்தல்.

தான் - அசை.

ஏகார மீற்றசை.

சுத்தருபதத்துடனே மந்திரங்களைக் கூட்டிச் சொல்லாமற் பின்னாகக் கூறியதென்னையெனில்? தலைதடுமாற்றமென்னுந் தந்திர யுத்தியெனவறிக. (௨௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——0——

மேல் விந்து உபாதான காரணமாய்க் காரியப்பட்டுத் தத்துவ தாத்விகங்களுண்டாவது இன்னவகையென்றுணர்த்துகிறார்.

வன்னம் பதங்கள் மந்திரங்கள் வித்தைகள் வித்தையீசர் சதாசிவரென்றிவர்க்கு வைத்துறும் தத்துவஞ் சரீரங் கர

ணம் புவனம் போகமென்பட்டவெலாமும் வயிந்தவந்தானுபாதா னமாகிநின்றேயுற்பத்திக்கும் (எனமாறுக.) வர்ணங்களும் பதங் களும் மந்திரங்களும் மந்திரேஸ்வரர் மந்திரமகேஸ்வர ரனுசதா சிவாதிகளுக்கதிட்டானமான தத்துவங்களுஞ் சரீரங்களுங் கரணங்களும் புவனங்களும் போகவஸ்துக்களுஞ் சுத்தமாயை யாகிற விந்துபாதானமாகிநின்றீஸ்வரசத்தி ப்ரேரகத்தினு லுண்டாகுவதாம்.

எல்லாமென்ற திராகாதி தத்துவமில்லாதபொழுது போ சுக கூடாதாரையா லசுத்தாத்துவாவிலேபோல சுத்தாத்துவா விலும் காலம் நியதி கலை வித்தை இராகம் புருடதத்வம் அந்தக் கரணங்கள் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் எல்லா முண்டென்றது.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍋𑌹𑍍𑌯𑌤𑍍𑌰 𑌉𑌦𑍍𑌦𑍀𑌷𑍍𑌟𑌾 𑌭𑍋𑌗𑌾𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌤𑌃 ॥ 𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌷𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌕𑌂𑌭𑍋𑌗𑍇𑌜𑍍𑌞𑍈𑌶𑍍𑌵𑌰 । 𑌸𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑌿 𑌨𑍃𑌪𑍇𑌯𑌾𑌯𑌾 ॥ 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑍀 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌿 .

ஆனால் கலாதி சம்பந்த முண்டாகையினாலே இவர்களும் சகலரோ எனனில்? விஞ்ஞான கலர்க்குக் கலாதிசம்பந்தமுண் டாயிருந்துங் கலாதிபரதந்திர ரல்லாதபடியா லகலரே.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 - 𑌕𑌲𑌾𑌦𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 𑌸𑌕𑌲𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌂 𑌸𑌕𑌲𑌾𑌕𑌲𑌾𑌕𑌵𑌿 ॥ 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌲𑌾𑌦𑌿 𑌯𑍋𑌗𑍇𑌪𑌿 𑌨𑌾

தந்த்ரேஷ்வேவம் கர்த்தாநமேத: | விஜ்ஞாநகேவலா ஜ்ஞேயா ஸகலாஸ்ஸகலாஸ்ஸ்ம்ருதா இதி .

இவ்விடத்து போகமாவன? இரத்தினகசிதமான சிங்காதனங்களும் * சருக்கு சந்தன வனிதாதிகளும் சர்வமு மசுத்தமாயாவிலேபோல, சுத்தமாயாவினுஞ் சுத்தமுமாய் திவ்வியமு மாய் நுகர்ந்தாலும் கிலேசவாஜமுமாய தீக்ஷையினாலே லிவனா யோசிக் கப்பட்ட பேர்களுக்கு வித்யாதித்தத்துவங்களில் ஞானகிரியா சத்தி யபிவிர்த்தி தாரதம்மியமையாக வுண்டாம * மாலை

துஷ்டம் தத்ர வஸாநேஷு ஸாமிஸ்வாமி ராமானுஜோநாம ஸஹஸ்ராணி நா[illegible] | விசித்ர ஸம்பாதாமா ஷீம் வஸதாமி ஸஹஸ்ராம்ஸிச || சிவ ரூபா ஹ்யஜோ ஹரா ஸ்தோத்ர ஸோமோ ஹஸ்தவிவர்ஜிதை: கந்தோ ஹாமோஷீ பாதோரூப வஸதாநாம்ஸிச || பொமாயி கா ரயோமாஸ்திரஸிவ ரூபகே ஷடீக்ஷயா | யேஷாம் தேஷா ஞ்சோ ஹாமாயம் பரிவேந ஸ்பரிகல்பிதமிதி .

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இப்படி மாமாயையினின்று மசாதாரணசுத்த சிருட்டிசொல்லிச் சாதாரண சுத்தார்த்த சிருட்டியைச் சாற்றுகின்றார.

வித்தைகள் - சத்தகோடி மகாமந்திரர்கள்,—வித்தை யீசர் - அநந்தாதி மந்திர மகேசுவரர்கள்,—சதாசிவர் - அனுச தாசிவர்கள்,—என்றிவர்க்கு வைத்திம்பதங்கள் - சாதாரண

ங்களா யிருக்கும் பதங்கள் எண்பத்தொன்று.—வன்னம் ஐம்பத்தொன்று,—புவனங்கள் இருநூற்றிருபத்துநான்கு,—மந்திரங்கள் பன்னிரண்டு,—தத்துவம் அசாதாரணமா யிருக்கும் சுத்தகலாதி சுத்த பிருதிவியந்தம் முப்பத்தொன்று.—சரீரம் - சாதாரண சாதாரணமாயிருக்கும் தூலதேகம்,—போகம்- போக்கியப்பொருள்,—கரணம் - முன் சொன்ன தத்துவங்களில் விசேடமாகும் இந்திரியங்கள்,—காமெலாமும் - இவைகளெல்லாவற்றையும்,— வயிந்தவந்தான - சுத்தமாயையி லுண்டாகிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னுஞ் சிவதத்துவமைந்துந்தானே தானேதங்களாக்கப்பட்ட திருப்பவர்க்கு முறைமையிடம்,—உபதானமாகின்றே உய்த்திடும்-சமவாயி காரணமாய்நின் றுண்டாக்கும்.

மாயையிற்பிரபஞ்சம் மாயையிற்தோத்துண்டாவதுபோல, மாமாயையிற் தோத்துண்டாகவேண்டுவதில்லை. விஞ்ஞானகலருட் பரிபக்குவ மலர்களி லநுக்கிரகப்பட்டு மலபாகமின்றிப் பதிபதாதத்துக்குட் பிரவேசித்துப் பதியாயிருக்கின்ற மந்திரங்கள் மந்திரமகேசுவரர்கள் அநுசதாசிவர்கள் என்னும் இவர்களை விஞ்ஞான கலர்களென்று சிலர் வியாக்கியானம் பண்ணினார்கள் அது முன்னிலை மலையும். ஒருமலத்தார் விஞ்ஞானகலர் என்று சொல்லியிருக்க, மலம் நீங்கி அதிகாரமல மாத்திரர்களாய அபரபதிகளாய்க்கடந்துபோனவர் எப்படி விஞ்ஞானகலராவார்கள், ஆகார்களா அப்படியாகிற் சிலவிடத்தப்பிச்சொல்லி யிருப்பதேதென்னை. பூர்வத்தி லிருப்பைநோக்கிய புறப்பட்ட வசனம். இப்போதிருப்பை நோக்கி யெழுந்த வசனமென்று விஞ்ஞானகலர் மாயைக்குமேற் சுத்த வித்தைக்குக் கீழ் நடுத்தானத்திலே யெண்ணிறந்திருப்பார்கள் என்றறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

சுத்தமாயை முதற்காரணமாவது ஈண்டுக் கூறிப்போந்த வாக்குமாத்திரைக்கேயன்று, மந்திரேசுரர் மந்திரமகேசுரர் அணுசதாசிவர் முதலிய அபரமுத்தர்க்கு வேண்டப்படுஞ் சுத்த தத்துவங்களெவற்றிற்குஞ் முதற்காரணமாமென்பதாம்.

விந்துவை வைந்தவமென்றது பகுதிப்பொருள் விகுதி பெற்றது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மேலுஞ் சுத்தமாயையி லுண்டான தோற்ற மருளிச் செய்கிறார்.

(அந்வயம்) மாமாயையானது தான உபாதானமாகி நின்று நாதம் விந்து சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தைகளென்கிற சிவதத்துவங்க ளைந்தும் பஞ்சகலைகளும் நாலுவாக்குகளும் ஐம்பத்தோ ரக்கரங்களும் வேதாகமங்களிலே சொல்லியிருக்கிற பொருந்தப்பட்ட எண்பத்தொரு பதங்களும் சத்த கோடி மந்திரங்களும் மந்திரர் அட்ட வித்தியேசுரர் அணுசதாசிவர்களுக் குண்டாகிய தனுகரண புவனபோகங்களும்; விஞ்ஞான கலர்க்குத் தனுகரண புவன போகங்களுந் தோன்று மென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

வயிந்தவந்தான - சுத்தமாயை முதற்காரணமாவது,— வித்தைகள்-ஈண்டுக்கூறிப்போந்த வாக்குமாத்திரைக்கேயன்றி

மந்திரேசுரர்,—வித்தையீசர் - மந்திரமகேசுரர்,— சதாசிவ
ரென்றிவர்க்கு-அனுசதாசிவர்முதலிய அபரமுத்தர்க்கு,—வை
த்துறும்பதங்கள்-வேண்டப்படும் பதங்களும்,—வன்னம்-அக்க
ரங்களும்—புவனங்கள்-புவனங்களும்,—மந்திரங்கள் - மந்திர
ங்களும்,—தத்துவம்-தத்துவங்களும்,—சரீரம்-சரீரங்களும்,—
போகம்-போகங்களும்,— கரணங்கடாமெல்லாமும் - கரணங்க
ளுமாகிய சுத்தாத்துவாக்க ளெவற்றினுக்கும்,—உபாதானமா
கிநின்றே யுபத்திமே-முதற்காரணமாய்நின்று செலுத்துமென்
பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

அந்த விந்துஞான மூவகைப்பட்ட வான்மா
க்களுக்குத் தாரதம்மியமாகச் சித்திக்
கு முறைமையை யுணர்த்துகின்றார்

மூவகை யணுக்களுக்கு முறைமையால் விந்துஞான
மேவின தில்லையாகில் விளங்கிய ஞானமின்று
மோவிட விந்துஞான முதிப்பதோர் ஞானமுண்டேற்
சேவுயர் கொடியினான்றன் சேவடி சேரலாமே. (௨௯)

(இ-ள்) மூவகை யணுக்களுக்கு முறைமையால் விந்துஞான மேவின தில்லையாகில் விளங்கிய ஞானமின்றும்	மூவகைப்பட்ட வான்மாக்களுக்கு வந்த த்தகாரியமாய் நாலுவிருத்தியையு முடைய சுத்தஞானந் தாரதம்மியமாகப் பொருந்தி சீவியாதிருக்குமாகில், அவர்களுக்கு ஞானமுண்டாகாது.

இவிட விந்து ஞான முதிப்ப தோர் ஞானமு ண்டேற் சேவுய ர் கொடியினுன றன சேவடி சே ரலாமே.

விந்து ஞானம் பரமமான பந்தத்துக்குக் காரணமாகையா லந்த ஞானத்தைவிட்டுச் சுத்தமாயைக்கு மேற்பட்டிருக்கிற சிவனது பராசத்தினாலே சிவஞான மிவாகளுக்குப் ப்ரகாசிக்குமாயின; உயர்ந்த விடபக்கொடியையுடைய சிவனது சிபாதகமலங்களை யடையலாம். எ-று.

ஏகாரம் ஈற்றசை.

முறைமை எனபதனுற் ப்ரணவாதிகளைப்பற்ற வந்நாதிகளுக்குக் குறைய சீவிக்கும், அவர்களைப்பற்ற சததகோடி மகாமந்திரங்களுக்குக் குறையும, அவர்களைப்பற்ற மண்டலாதிகளுக்கு, அவர்களைப்பற்ற கணேசாதிகளுக்கு, அவர்களைப்பற்ற பரமாண்டதாரகராகிய வுருத்திராதிகளுக்கும ப்ரமாதிகளுக்குங் குறையககுறைய சீவிக்குமெனவறிக.

இங்ஙனஞ் சுத்தாசுத்த வாசிகளான வான்மாக்களுக்கு மறியுங் குறைந்தும் விளங்குமெனவறிக. (உ௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

(மூவகை...சேரலாமே)-விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரெனனுமிவர்களுக் கடைவே சுத்தாதவா மிசிராத்வா அசுத்தாதவா தாரதமமியமாக வாச்சியவாசகஞானமானது பொருந்திற்றில்லையாகி லறிவேயில்லையாம். இவவாச்சிய வாசகஞானமாகிய விஞ்ஞானம் பிரகாசித்து, மேல் விஞ்ஞானப்ரகாசமு மப்பிரகாசமாம்படி சிவானந்தானுபவ ஞானோதயமுண்டா

மாகில் ருஷபக்கொடியை யுயர்த்த சிவனது செய்ய தாமரைம
லர்போன்ற சிரீபாதத்தையடையலாமென திரண்டபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—௧—

முன்சொல்லிய மந்திரர் முதன மூவகையானமாக்களு
க்குஞ் சர்வஞ்ஞத்துவம், முன்சொல்லிய வாசகவிருத்திமுதல்
விந்துகாரியமின்றி உண்டாகாதென றுணர்த்துகின்றார்.

(சாவானமாக்களுக்குஞ் சூக்குமைவாசகு முதலிய விந்து
ஞானமிருந்தாலுங் கன்மத்தினால் மாயையி லுண்டாகிய தூல
சரீர சூக்குமசரீர சம்பந்தத்தினாலே சர்வஞ்ஞத்துவம் பிரகா
சிக்கவில்லையாதலால்.) மூவகையணுக்களுக்கு - மந்திர மந்
திரேசுவரர் அனுசதாசிவர்களுக்கு,—முறைமையால் விந்து
ஞானமேவியதில்லையாகில்-சூக்குமைமுதல் வாக்கு விர்த்தி ச
ம்பந்தக்கிரமத்தில் ஞானத்தை விளக்குதலான் ஞானமென
று பெயருடைய முன்னெடுத்த விருத்தத்திற் சொல்லிய வயிந்த
வ சூக்குமதேக தூலதேக புவனாதிகாரிய சம்பந்த மில்லாதி
ருந்தால்,—விளங்கிய ஞானமின்றாம - சர்வஞ்ஞத்துவ சத்தி
யிற் சமுற்பன்ன சவிகற்ப சர்வவிஷயஞானம் அவர்களிடத்
திற் காணப்பட்ட தில்லையாய் விடும்,—விந்துஞானம்-இப்போ
து சொல்லிய வயிந்தவ தத்துவகாரியமாகிய வாக்குருபவியஞ்
சக ஞானமுமவாக ருபாதி பொருந்திச் சர்வஞ்ஞத்துவசத்தியி
ற் சமுற்பன்ன சர்வவிஷயவியங்கிய சவிகற்ப ஞானமும்,—
ஒவிட-நீங்கிட,—உதிப்பதோர் ஞானமுமுண்டேல்-பரமுத்திக்க
ருகராமிவர்களுக்குச் சிவசிரீகடாக்ஷபாத்ர நிர்விகற்ப சமாதி சமு
ற்பன்ன நிர்விகற்ப சீவன்முத்தி சாட்சாதகார ஞானமும்.

சகலர்க்கு முன்சொல்லிய மகாமாயாந்த தீக்ஷாசத்தி மகாமாயாபுருஷ விவேகஞான சிவத்தியான சிவசமாதியினுற்பவிக்கு மொப்பற்ற சிவவிஷய சீவன்முத்தி சாக்ஷாத்கார ஞானந்தான, சமாதிஞான மாத்திரந்தான, தியானஞானமாத்திரந்தான, விவேகஞான மாத்திரந்தான, உள்ளதேல்! அந்த மூன்றைமயினும,—சேவுயர் கொடியினனான,—சேவடி சேரலாமே-திருவடியைப் பெறலாகுந்தானே!

சரிய லக்ஷணையினால் முன்சொல்லிய அறிவானந்த மூன்மை யென்கின்ற சிறசத்தி லக்ஷண சிவத்துவாபி வியத்தி பெறலாகுந்தானே!

சத்தியோநிருவாண தீட்சாசத்தியாகில், அசத்தியோநிருவாண தீக்ஷா மாத்திரத்துக்கங்கமாகிய விவேகஞானத்தியான சமாதி சீவன்முத்தி சாக்ஷாத்காரங்களின்றிப் பெறலாம.

மூவகைபசுக்களாவார் விஞ்ஞானகலர் பிரளயாகலா சகலாக ளெல்லர், விதேகிகளாகும. முதலிருவர்க்கும் விந்துஞானமில்லாமையால் விந்துஞான மென்றது வாசகமாத்திர மென்றுபணனி, அஃதெல்லாக்கு முண்டென்று சகலர்க்குள் உத்தம மத்திம அதமர்கள மூவகை பசுக்களென்று பொருளுரைத்தாலு மாறுபாடில்லையே! உள்ளது; ஒருபிரகாரத்தாலப்படியும் பொருளுரைகலாம.

சிவஞானயோகியருரை வருமாறு.

மேற் கூறிப்போந்த வாக்குகள் சவிகற்ப ஞானத்துக்கேதுவாகலால், ஈண்டுக் கூறியது சுத்தப் பிரபஞ்சம்போல வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் மாத்திரைக்கே யன்றி, விஞ்ஞானகலா பிரளயாகலர் சகலர்க்கும் ஒருதலையான் வேண்ட

ப்படும் சவிகற்ப ஞானத்திற் கேதுவாகிய அவ்வாக்குகள் தன்னின் வேறாகக் காணப்பட்டு நீங்க; அதற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அவனப்பொழுதே பரமுத்தியைத் தலைப்படுவனென்பதாம்.

எனவே, இவ்வாக்குகள் பரமபந்தமென்பதாயிற்று.

முறைமையின் மேவுதலாவது, வித்தைகள் வித்தையீசர் முதலியோர் போலன்றிச் சகலர் முதலிய மூவர்க்கும் வியஞ்ச வேறுபாடுபற்றி முறையே தூலதமமாயுந் தூலதரமாயுந் தூலமாயும் பொருந்துதல்.

ஞானத்திற் கேதுவாகிய வாக்கை ஞானமென் றுபசரித்தார்.

பிரளயாகலர் விஞ்ஞானகலரொத்துத் தனுவில்லையென மயங்கிக் கூறுவாருமுளர், அஃது ஆகம வசனங்களோடு முரணுதலின் அவசித்தாந்தமென் றொழிக.

இவை யேழுசெய்யுளானுஞ் சுத்தமாயையிற் றோன்றுங் காரியங்களும் அவற்றதியல்பும் வகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

முன் சொன்ன சுத்தமாயையா லொழிந்த மூன்று வகைப்பட்ட ஆன்மாக்களுக்கு மறிவுண்டாகா தென்று மேலருளிச்செய்கிறார்.

மூவகையணுக்களுக்கு முறைமையால் விந்துஞான மேவினதில்லையாகில் விளங்கிய ஞானமின்றாம் - ஆன்மவர்க்கெல்லா மவசம்பந்திகளாயிருக்கையினால் மூன்றுவகைப்பட்ட ஆன்மாக

களுக்கும் அவரவ ரறியும் பகுதிக் கேற்றாக வயிந்தவ ஞானங் கூட்டநின்று அறிவிக்கிறதில்லையாகில் இவர்களுடைய விச்சா ஞானக்கிரியைகளாலே பிரகாசிக்கப்பட்ட வறிவுண்டாகாது.— இவிட விந்துஞான முதிப்பதோர் ஞானமுண்டேற் சேவுயர் கொடியினானன சேவடிசேரலாமே - இப்படி சிவதத்துவங்களைந்தாலும் வேதாகம சாத்திர புராணங்களினாலும் அறியப்பட்ட வயிந்தவஞானத்தினாலேயும் ஒழியும்படிக்கு ஈடாக யிவனிடத்திலே பிரகாசிக்கத்தக்க தொரு சிவஞான முண்டாகில், உயர்ந்த விஷபக்கொடியை யுடைய தம்பிரானுருடைய ஸ்ரீபாதத்தைப் பொருந்தலாம்.

இதனாற் சொல்லியது மூன்றுவகைப்பட்ட வான்மாக்களுக்கு வயிந்தவஞானத்தா லொழிய அறிவுண்டாகா தென்றும், இந்த ஞானமு மொழியும்படி யிவர்களிடத்திலே சிவஞானம் பிரகாசித்த காலத்து சிவனுடைய திருவடியைச் சென்று கூடலாமென்னு முறைமையு மறிவித்தது.

'விந்துவின் மாயை' என்ற திருவிருத்தத்தில் 'விந்துதனபால் வைகரியாதி' என்ற பதத்துக்கு வியாக்கியானம் இவ்வளவும் வந்து முடிந்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

விந்துஞானம் - மேற்கூறிப்போந்த வாக்குகள் சவிகற்ப ஞானத்திற் கேதுவாதலால்,—மூவகையான்மாக்களுக்கும் - முன் கூறிய சுத்தப் பிரவஞ்சம்போல, வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் மாத்திரைகளேயன்றி, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்கட்கும்,—முறைமையான மேவினதில்லையாகில்-மூன்றேயே துலமாயுந் தூலதரமாயுந் தூலதமமாயும் பொருந்தியதி

தவில்லையாயின்,—விளங்கியஞானமின்றாம் - சவிகற்பஞானத் திற்கேதுவாகிய அவ்வாசகங்களா லுண்டாகுமஞானமில்லை யாம்.—விந்துஞானமோவிட - விந்துஞானம் பரமபந்தமாத லின் றனினவேறாகக் காணப்படுதலின்,—உதிப்பதோர் ஞா னமுண்டேல் - அதற்குமேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங் குமாயின்,—சேவுடைக் கொடியினான்றன் சேவடி சேரலாமே- அவனப்பொழுதே யிடபக்கொடியையுடைய சிவபிரான் திருவ டி சேர்தலாகிய பரமுத்தியைத் தலைப்படுவனென்பதாம்.

இவை ஏழு செய்யுளானும் சுத்தமாயையிற் றோன்றுங் கா ரியங்களுமவற்றினியல்பும் வகுத்துக்கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனம் வாக்கின் முறைமையைக் கூறி யருவமாயிருக்கிற
மாயையினின்றும் பரபஞ்சகாரியந் தோன்று
முறைமையை யுணர்த்துகிறார்

அருவினி லுருவந்தோன்றி யங்காங்கி பாவமா
கி, யருவினி லுருவமாயே யுதித்திடு முலகமெல்
லாம், பெருகிடுஞ் சுருங்கும்பேதா பேதமோ டபேத
மாகு, மொருவனே யெல்லாமாகி யல்லனு முடனுமா
வன. (உஎ)

(இ-ள்) அருவி அருபமாகிய மாயையினின் றுருவமாகிய
வி லுருவந் தனுவாதிகள் தோன்றித் தேகமுந் தேசியும்
தோன்றிய போன்று, அஃதாவது தனுவாதிகள் சரீரம்
ங்காங்கி பாவமா போலவும் மாயை காரணமாவைப்போலவுங்
கி யுருவினி லுரு கலந்து பிரிவற்று நின்று, பின்பொரு வடி

வமாயே யுதித்திடும்	விலே நின்றாக தூலவுருவம் பரிணமித்த தோருவடிவாகித் தோன்றிநிற்கும்
உலகமெல்லாம் பெருகிடும்	இந்த முறையே விசுவமெல்லா மாயைதானே நராமிருகாதியான வெண்பத்து நான்கு நூறாயிரம பேதமாய் விரியும.
சுருங்கும் பேதாபேதமோ டபேதமாகும	பேதமு மபேதமுமாகிய வாண்பெண்ணாகியும அந்தப் பேதமாகிய வாண்பெண்போலத் தோன்றுகையிலேலே பேதமல்லாத வலியாகியுந் தோன்றிப் பெருகாநிற்கும.
ஒருவனே யெல்லாமாகி யல்லனு முடனுமாவன	அநதக காதநாதனே யிவைகளெல்லா மாகியிநதப் பிரபஞசத்துக கயனுமாய் யாதுதியிலே யநாயனுமா யிருப்பன (உ௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

அருவினிலுருவந்தோன்றி யங்காங்கிபாவமாகி யுருவினிலுருவமாயே யுதித்திடும்-அருவமாகிய மாயையின முதல் சூக்குமருபந்தோன்றி, தோன்றினவளவிற் சூக்குமரூபமங்கமு மானமாவங்கியுமென்கிற தன்மையைப்பொருந்தி, மேற்சூக்குமரூபத்திற் றூலரூபமானதுண்டாம்,— உலகமெல்லாம் பெருகிடுஞ்சுருக்கும - உலகங்களுக்கு மிப்படிப்பே சூக்குமமாகிய தத்துவங்களுண்டா யதிலேதூலமாகிய வுலகமுண்டாயவிரியும் விரிந்தவுடனேவ தூலஞ்சூக்குமத்திலுஞ் சூக்குமங்காரணத்திலுமொடுக்கும். இனி யந்தக் காரணமான மாயையுங் காரியமாகிய பிரபஞ்சமு மெவ்வாறு நிற்குமெனின் ?—பேதாபேதமோ டபேதமாகும் - காரிய காரணங்களாயிருக்கிற வவசரத்தின் மாயை

யென்றும் பிரபஞ்சமென்று மிரண்டுபெய ருளாக்கவுண்டாய் காரிய காரணங்களைப் பிரிக்கப்படாத தன்மையாற் பேதாபேத முமாம், வஸ்துக அபேதமுமாம். வஸ்து ஒருமுதலாகையா லிப்படி மாயைதானே யிவ்வாறுகிற் கர்த்தா கேவல நிமித்தமே போமெனின்?— ஒருவனே யெல்லாமாகி யல்லவா யுடனுமாவன - சிவனொருவனே மாயாப் பிரபஞ்சமெல்லாமாய்ப் ப்ரபஞ்சத்தன்மையுந் தானல்லவா † யனுப்பிரவிஷ்டனாகி நின்று ஸ்திதியையும் பண்ணுவனென்ற திதன்பொருள்.

† உள்ளே நின்று.

ஒருவனென்றது ஒருவனேயென்ற ஏகாரத்தி லநேகேஸ்வர ‡ வியாவிருத்தி.

‡ தள்ளப்படுதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இவ்விடத்து மகாமாயாகாரியத்தைச் சிறப்பித்து மேற் செப்பும்படிக்குப் பொதுவாயுரைத்து, மாயாகாரியத்தையும் அப்படிச்செப்பும்படிக் கப்படியுரைக்கின்றார்

அங்காங்கிபாவமாகி-காரியசத்தி சமூகமே மாயையாதலான மாயையாகி,காரியங்க ளங்கமொன்றான தன்மையாகி,— அருவினில் - காரியசத்தி ரூபமாகிய மாயையின்,—உருவம்-அந்தக்காரியசத்தி வியத்திரூபமாகிய கலாதிகாரியம்,—தோன்றி - உற்பத்தியாய்,--உருவிலுருவமாயே-அந்தக்கலாதி காரியத்தினின்றும் பிரகிருதி முதலாகியகாரியமாகித்தானே,—உலகமெல்லாம்-கலாதி பிருத்வி யந்தமாய தத்துவதாத்விகப் பொருளையெல்லாம்,—உதித்திடும்-உற்பத்தியாம்,--பெருகிடுஞ்சுருங்கும்-

சிருட்டிகாலத்தில் வியத்திருபமாயும் சங்காரகாலத்திற் சத்தி
ரூபமாயுமிருக்கும்,— பேதாபேதமோ டபேதமாகும் - வியத்
திருபமாய்க் காரணம் பெருகிக் காரியமான காலத்திற்கடலும்
மிருத்தும்போலக் காரியகாரணங்கள் விசேஷா விசேஷமாய்த்
த்தோற்றும், சத்திரூபமாய்க் காரியஞ் சுருங்கிக் காரணமா
னகாலத்திற் காரிய காரணங்கள் அவிசேஷங்களாய்த் தோற்
றும், நிமித்தகாரணனன்றி யாமோ வாகாதென றுணர்த்துகி
ன்றார்,—ஒருவனே யெல்லாமாகி யல்லனு முடனுமாவன்-சிவன
ருவனே அநந்த துவாரத்தாலே மாயா காரியமெல்லாவற்றையு
மபண்ணுகிறவனுக் குலாலன் தண்டு முதலியவற்றைக் கைக்
கொண்டு பிரதிரூப பண்ணுவது போலம பண்ணுகிறவனுமாய்த்
தனது சத்திரூப சரண சங்கற்ப சலனமாற தொழிலினாற் ப
ண்ணுகிறவனுமாவன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சூக்குமமாகிய மாயையினின்றுந் தூலமாகிய கலாதியும்,
அவற்றினுந் தூலமாகிய மூலப்பகுதியும், அதனினுந் தூலங்களா
கிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றும் அத்தூலங்களினி
னுந் தோன்றுங் காரியம் அவற்றினுந் தூலமேயாம். இவ்வா
றே காரியப் பிரபஞ்சமெல்லாந் தோன்றி, நிலம் நீர் தீ வளி
விசும்பு ஆண் பெண் அலி என்றற்றொடக்கத்து அவயவப்பகு
ட்புடையனவாய், வளர்ந்துந் தேய்ந்தும் பரிணமித்துவரும்.
இத்தன்மையவாகிய காரியகாரணங்கட்குத் தம்முட்பெரும்பா
லும் வேற்றுமை கூறும நையாயிகர் முதலியோர் மதம் அடா
து. மற்றென்னெனில்? பரிணமமாதலை நோக்கிப் பேதாபேத

மாம், சற்காரியமாதலை நோக்கி அபேதமாம், மேற்சிவனவன்றன் சந்நிதி தனிலின்றே தோன்றுமென்பதனாற் பெறப்பட்ட நிமித்தகாரணனாகிய முதல்வன், அநந்தர் ஸ்ரீகண்டர் முதலி தான அவற்றைக் காரியப்படுத்துங்கால், கலப்பினாலொன்றாயும் பொருண்மையால் வேறாயுஞ் செலுத்துதலான உடனாயு நிற்பனென்பதாம்.

எல்லா மென்றதனாற் சுத்தமாயா விருத்தியினும் அவ்வாறு நிற்பனென்பது பெறுதும்.

உருவினிலருவாய்த் தோன்றுமென்னப் பிரித்தமையின், ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

ஒருவனே யென்னும் ஏகாரம் தேற்றம்.

அங்காங்கிபாவமாகிய பெருகிடுஞ் சுருங்குமெனக் கூட்டுக.

அநிர்வசனத்தின் உலகந் தோன்றுமென்னு மாயாவாதத்தை மறுப்பார் அருவினிலுருவந் தோன்றியென்றும், அவயவமே பொருளாய்த் தோன்றுவதன்றி அவயவியென்பதொன்றில்லை யென்னுஞ் சமுதாயவாதத்தை மறுப்பார் அங்காங்கிபாவமாகியென்றும், நிலமுதலிய உருவம் பொருளினின்றுஞ் சந்தகுணமுதலிய அருவந் தோன்றுமென்னும் ஆரம்பவாதத்தை மறுப்பார் உருவினிலருவமாயே யுதிக்குமென்றுங் கூறினார்.

பெருகிடுஞ் சுருங்குமென்றதனாற் பெருக்கஞ் சுருக்கம்பற்றி ஒருபொருளே பெயர்பெறாலும் வேற்றுமைகூறும், அவ்வாதத்தை மறுத்தற்பொருட்டு, பிறவுமன்ன.

இதனானே மாயை முதனிமித்தகாரணமாதி முக்குணமாதிமூலங் கருதிடும் என்றதனைக்கட்டுப்பியல்பு தொகுத்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

சுத்தமாயையிற் றோற்றமு மது காரியப்பட்ட முறைமையு மருளிச்செய்து, மேல் அசுத்தமாயையினின்று பிரபஞ்சந் தோன்றுகிற முறைமை யருளிச்செய்கிறார்.

அருவினி லுருவந் தோன்றி - அருவமாயிருக்கிற மாயையினின்று மாயாகாரியமான பிரபஞ்சரூபந் தோன்றி,—அங்காங்கிபாவமாகி - இவையிரண்டுந் தேகமுந் தேகியும்போலப் பிரியாது நின்றதாய்,—உருவினி லருவமாயே யுதித்திடு முலகமெல்லாம் பெருகிடுஞ் சுருங்கும் பேதாபேதமோ டபேதமாகும் - இந்தப் பிரபஞ்ச மனாதியான வடிவாகப் பெருகித் தூலாகாரமாய் நிற்கும், ஒடுங்குங்காலத்திற் சூக்குமமா யற்பமாய் விடும், இந்த வடிவுகள்தாம் ஒன்றாகச் சொன்னால் இருளும் வெளியும்போல பேதங்களுமாய், சொல்லும் பொருளும்போலப் பேதாபேதங்களுமாய், பொன்னும் பணியும்போல அபேதங்களுமாய், இப்படியே தோன்றுநிற்கும். இந்தப் பிரபஞ்சந் தானே நின்று காரியப்படுமோ வென்னின்?—ஒருவனே யெல்லாமாகி யல்லவாயுடனுமாவன் - கர்த்தா தானே முன் சொல்லப்பட்டவை யெல்லாந் தானேயாய் விசாரித்துப் பார்த்தால் இவை யிறைவனுக்கு ளொன்றுமில்லவுமாய் இப்படித் தோய்வற நிற்கச்செய்தேயும் இவை யெல்லாத்தையும் விட்டு நீங்காமல் பிறிவறும்.

இப்படி எண்ணிறந்த வடிவமாயிருக்கிற விசுவத்தோடே கர்த்தாவுங்கூடி விசுவரூபியாய் நிற்பனென்பதற்குப் பிரமாணம் திருப்பாட்டு. "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமொடு பெண்

ணுமாணும் பிறருருவுந் தம்முருவும் வேறதாகி, நெருணலை யாயினமுகி நாளையாகி நிமிரபுனசடையடிக ணின்றவாறே" கீரததித திருவகவல். "வேறுவேறுருவும வேறுவேறியற்கையும்,நூறுநூருயிர மியல்பினதாகி" எனறும், திருவண்டப்பகுதி, "நாடொறு-மருக்கநிற்சோதி யமைததோனறிருதகசு - மதியிற்றண்மை வைததோனறிண்டிறற - றீயின வெமமை செய்தோனபொய்தீர-வானிற்கலப்பு வைததோன மேதகு-காலினூக்கங் கண்டோ னிழறிகழ்-நீரினினசுவை நிகழ்நதோன வெளிப்பட-மண்ணிற் றிண்மை வைததோ னனறென-றெனைபபலகோடி யெனைப்பலபிறவு - மனைத்தனைததவவயி னடைததோன." திருத தோணேகசம. "நிலநீரொடுப்புயிர் நீள்விசும்புநிலாபபகலோன், புலனாயமைநதனொ டெணவகையாய்ப் புணர்ந்துநினறு முலகேழெனத் திசைபததெனத தாமொருவனுமே, பலவாக நினரவா தோணேகசமாடாமோ" எனறும், திருக்களிற்றுப் படி "ஏதேனுங்காரணத்தா லெவ்வுலகிலெத்திரமு, மாதேயும் பாக நிலைச்சினையே—யாதலினாற், பேதமேசெய்வா யபேதமே செய்திடுவாய், பேதாபேதஞசெய்வாய் பின" என்னுமதுங் கண்டுகொள்க

இதனாற் சொல்லியது அருவமாகிய மாயையிலே நினறும் உருவமாகிய பிரவஞ்சம கர்த்தாவாலே தோனறுமெனறும்,கர்ததா விந்தப பிரவஞ்ச தானேயாய் இவை யல்லவுமாய் இப்படி நிற்கச்செய்தேயும் விடடு நீங்காமற் பிரிவற நிற்பனெனனு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———0———

அருவினுலுருவந்தோன்றி - சூக்குமமாகிய மாயையினின்றுந் தூலமாகிய கலாதியு மவற்றினுந் தூலமாகிய மூலப்பகுதியு மதனினுந் தூலங்களாகிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றும்,—உருவினிலுருவமாயேயுதித்திடும்-அந்தத் தூலங்களினின்றுந் தோன்றுங்காரிய மவற்றினுந் தூலமேயாம்,—உலகமெல்லாமங்காங்கிபாவமாகி - இவ்வாறே காரியப்பிரவஞ்சமெல்லாந் தோன்றி நில நீர் தீ வளி விசும்பு ஆண் பெண் அலியென்றற்றொடக்கத்தனவை யவ்வப் பகுப்புடையனவாய்,—பெருகிடுஞ் சுருங்கும்-வளர்ந்து நந்தேயந்தும் பரிணமித்துவரும் இத்தன்மையவாகிய காரியகாரணங்கட்குத் தம்முட்பெரும்பாலும் வேற்றுமை கூறு நையாயிகர் முதலியோர் மதமடாது மற்றென்னெனில்,—பேதாபேதமோ டபேதமாகும்-பரிணாமமாதலைநோக்கிப் பேதாபேதமாம், சற்காரியமாதலை நோக்கி யபேதமாம்,—ஒருவனே-மேற் சிவன்றன் சந்நிதி தன்னினின்றே தோன்றுமென்பதனாற் பெறப்பட்டநிமித்தகாரணனாகிய முதல்வன,—எல்லாமாகி - அநந்தர் சீகண்டர் முகத்தா னவற்றைக் காரியப்படுத்துங்காற் கலப்பினாலொன்றாகியும்,—அல்லவாய் - பொருண்மையால் வேறாகியும்,—உடனுமாவன - செலுத்துதலாலுடனாகியு நிற்ப னென்பதாம்.

இதனானே ‘மாயை மூந்திரோதகமாதி முக்குணமாதிமூலந் தந்திடும்” என்றதனைக்கட்படு மியல்பு தொகுத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

அந்தமாயையிற் ப்ரபஞ்சந் தோன்றுவதில்லை, பிர
மத்தினின்றும் ப்ரபஞ்சந் தோன்றுமென்னு
ம் பாற்கரியனை நோக்கி யுணர்த்துகிறார்.

அருவுரு விரண்டாகும் விகாரமு மவிகாரத்தில்,
வருவது மில்லையென்னின் வானவெளி யாதிபூதந், த
ருவது தன்னின்மேக சலனசத் தங்களோடு முருவின்
மின் னுருமேறெல்லா முதித்திடு முணர்ந்துகொள்
ளே. (உஅ)

(இ-ள்) அருவுரு விரண்டாகும் விகாரமு மவிகாரத்தில் வருவது மில்லையெனில் — முற்கூறிய வருவத்திலே நின்று முருவந் தோன்றுமோ? அவிகாரமாகிய மாயையினின்றும் விகாரமாகிய ப்ரபஞ்சந் தோன்றுகைக் கொரு காரணமுமில்லையென்று நீ சொல்லில்;

வானவெளி யாதிபூதந் தருவது — அருவாயுள்ள வாகாசத்திலே வாயுமுதலிய பூதங்க ளுண்டாகாநிற்கும்.

தன்னின் — இன்னு மவ்வானில்,

மேக சலனசத்தங்களோடு முருவின்மின் னுருமேறெல்லா முதித்திடும் — அந்த வாகாசத்திலே மேகமுஞ் சலனத்தையுந் திரட்சியையுமுடைய மின்னுமிடியு மிவையெல்லாந் தோன்றாநிற்கும்.

உணர்ந்து கொள்ளே. — அதுபோல வருவமாயுள்ள மாயையிலே யுருவமாயுள்ள ப்ரபஞ்சந் தோன்றுங் காணென் றறிந்துகொள்வாயாக. எ-று.

இதற்குப் பிரமாணம் விசுவசா ரோத்திரத்தி லெனவ
றிக. (உ-அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலு மதற்கோர் புறநடை.

அருவுருவினுதாரும் விகாரமு மவிகாரத்து வருவதுமில்லை யெனனின -அரூபத்திலுரூபமுண்டாகாது அவிகாரத்தில விகாரமுண்டாகாது. ஆகையா லரூபமாயிருக்கிற மாயை ரூபமாயிருக்கிற பிரபஞ்சத்தைப்பெறாது அவிகாரியாயிருக்கிற சிவனிடத்திற்கிருத்தியமாகிற விகாரமுமவாராதெனின?—வான - ஆகாசமவிகாரரஹிதமாயிருக்க,—வளியாதிபூதந் தருவதுமேகம் - ¶பாரதத்திவமாயிருக்கிறதுமதனையும ஜலத்தையுந் தேஜஸையும் அரூபமாயிருக்கிறவாயு வருபந்தித்துக்கொண்டு மேகத்தையுண்டாக்கும — தனனிறசலனசத்தங்களோடு முநவினமின னுநமேறெல்லாமுதித்திடும-அம்மேகத்தினிடத்தில் வாயுதருமமாகிய சலனமும, இவைகளுக் ×கவகாசப்பிரதமாயுள்ள வாகாயகுணமான சத்தமும, தேஜஸினுடைய தர்மமான மினனிடியும்,—ஆப்பியதருமமானஜலமும, பிருதிவிதருமமானரூபமு முணடாக்கக்கண்டோம்,— உணாந்துகொளளே -இவவாறுசொனனதிருஷ்டாநதத்தினபடியே தாஷ்டாநதிகத்தையு மறிந்துகொள்வாயாக. அவையாவன? மாயையுங் கனமமு மாணவமுமானமாவுஙகூடி நித்தியநினமலநிர்விகாரியாயிருக்கிற வீஸ்வரனுடைய சந்நிதியிற் பிரபஞ்சமுண்டாம் உண்டாம்படி, மாயாகாரியமாகிய தனுகரணாதிகளுங் கனமபலமாகிய சுகதுக்கங்களும், ஆணவதர்மமாகிய மோகாதிகளும், ஆன்மதர்மமாகிய ஞாதிருத்வ கர்த்திருதவ போக்திருத்துவங்களும், ஈஸ்வரசிற்சத்தி இ

ருத்தியமாயிருக்கிற ஞானப்பிரகாசமுமுண்டாய்; இவையைந்து ங்கூடிய பிரபஞ்சமா மென்றிதனபொருள்.

¶ ப்ருதிவிவிகாரம், × இடம்கொடுக்கிற, ÷ மப்பு,

இங்ஙனமன்றி வானவெளியாதி பூதந்தருமென்பது, ஆகாசத்தில்வாயுவும் வாயுவிலக்கினியு மக்கினியிலப்பு மப்புவிற பிருதிவியுமுண்டாமென்று சொல்லலாகாதோவெனின்? மேற்பிரபஞ்சபூதோற்பத்தியி லாகாசாதிகளி லொன்றிலொன்று தோன்றுமென்பதை நிராகரித்து, பஞ்சதன்மாத்திரையிற் பஞ்சபூதங்களுந் தோன்றுமென்று சமாதித்திருக்கையால் பூதங்களொன்றி லொன்று தோன்றுமென்று சொல்லில், ஸ்வமத அஞ்ஞானமும பரமதாப்பியனுஞ்ஞையு மிரண்டு நிக்கிரகஸ்தானமுண்டாம

[illegible]

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தந்துமுதலிய வுருவத்தினின்றும் படமுதலியவுருவந் தோன்றுதல் கண்டிருந்தும, அருவினி லுருவந் தோன்று மென்பதடாதென சங்கித்து மறுத் துணர்த்துகின்றார்

அரு-மாயை,— உருவிளைதாகும் - கலாதிகளை யுண்டாக்கமாட்டாது,—விகாரமும்-பரிணமமும்,— அவிகாரத்தில் - பரிணாமமல்லாத பொருளின,—வருவதுமில்லை யெனவில்-வாராதென்று நீசொல்லில், வைதிகமதத்திருன மறுக்கின்றார்,—வான-அருவாகிய ஆகாசமானது,—வளியாதி பூதந்தருவது-வாயுவாதி பூதங்களை யுண்டாக்குவது,—தனவில் - அதனிடத்தில்

அநேகப் பூதவிகாரங்களாகிய தூம தூளி படல முதலியவற்றின,—மேகசாலஞ் சத்தங்களோடு முருவின் மின்னுருமேறெல்லா முதித்திடு முணர்ந்துகொள்ளே

அந்தமேகத் தசைவு தொனிகளோடுகூடி, உருவென்பது வருவித்தது, உருமின், உருவில் உருமேறென்றபொருள்கள்கொண்டு இவையெல்லா முதித்திடுமென்று கூட்டுக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அருவெனவே அவிகாரமாதலும் பெறப்பட்டமையின், அப்பெற்றித்தாகிய மாயையினின்றும் உருவமாய் விகாரியுமாகிய பிரபஞ்சந் தோன்றுமென்றல் பொருந்தாதெனின்? அறியாது கூறினாய்; உன்மத்தத்தில் அருவமும் அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும் உருவும், விகாரியுமாகிய வாயுமுதலிய பூதங்கண் முறையே தோன்றும். அதுவேயுமன்றி அவ்வாகாயத்தினின்றும் பல முகில்களும் முகிலின்கட் பல விகாரங்களும் பலவோசைகளும் பலமின்களும் பலவிடிகளும் இன்னுமிவைபோல்வன பலவுந் தோன்றுமாதலான், அதனை மறந்து அங்ஙனங் கூறுதல் உனக்கே வழுவாய் முடியுமென்பதாம்.

சற்காரியங்கொண்ட வெமக்காயின் அதுவழுவன்றென்பது கருத்து.

இதனானேமாயாவாதி மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மாயையிலே நின்றும் பிரபஞ்சந் தோன்றுமென்கிறது அர்த்தமல்ல, பிரமத்திலேநின்றும் பிரபஞ்சந் தோன்றுமென்ற பார்க்கரியனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

அருவுருவிலாதாகும் விகாரமு மவிகாரத்தில் வருவதுமில்லை - மாயையிலே நின்று பிரபஞ்சந் தோன்றுமென்பானென்னில்? அதிசூக்குமமா யிருக்கிற மாயையிலே நின்றும் எண்ணிறந்த ரூபங்களாயிருக்கிற பிரபஞ்சந் தோன்றப்படாது அதெப்படியென்னில்? அவிகாரமா யிருப்பதொருபொருளிலே நின்று விகாரமா யிருக்கப்பட்ட பல பொருள்களு முண்டாகைக் கேதுவுமில்லை,—என்னில் - என்று நீ சொல்வாயாகில்,—வானவெளியாதி பூதந் தருவது - ஆகாசத்திலே வாயுபூத முதலான பூதங்களெல்லா முண்டாகாநிற்கும். இதுவன்றியும்,— தனியே மேகசலனச் சத்தங்களோடு முருவில் மின்னுருமேறெல்லா முதித்திடு முணர்ந்துகொள்ளே - அந்த ஆகாசந் தனியிலே சலிப்புந் திரட்சியும் பொருந்தியிருக்கிற மேகமும் உருவத்தையுடைய வில்லும் பிரகாசத்தையுடைய மின்னும் இடியும் இவையெல்லாந் தோன்றாநிற்கும்; இந்த முறைகளையு மாராய்ந்தறிவாயாக.

பார்க்கரியன —பிரமத்திலே நின்று பிரபஞ்சந் தோன்றி யொடுங்கி யொழிந்து மாயையிலே நின்றும் பிரபஞ்சந் தோன்றினதற்குப் பிரமாணம், பரபட்சம்; அவன் மதம். "சித்தேயுலகாய்ப் பரிணமித்துச் சிவனாகித் திகழுந்தன்மையால், சத்தேயெல்லாமுதித்தினைச் சாரக்கண்ட ஞானங்கள், வைத்தே மொழியு மாமறைகள் சொன்ன மரபே வந்தக்கால், லொத்தே கேட்டுப் பிரமத்தோடொன்றாய்ப் போமென் றுரைத்தனனே."

சித்-பர-பார், உ - செ.

அவன் மறுப்பு—உன்னுகின்ற பிரமத்திலே சிரித்திவ் வுலக மானதென வோதினீ, மன்னுகின்ற சில காலமோடழியு மழிய வந்ததவு மாயையாற், றனிலொன்றொன்றில வருதலோடிறுதி தருதலாலது சடத்ததா, மின்னமுஞ்சமி துவைமையன்றுசட மெனவேயுறுதி மனனுமே" என்னுமதுங் கண்டுகொள்க.

சித - பர - பாற் - மறு, - உ - செ.

இதனுற் சொல்லியது அருவத்திலே நின்று முருவந் தோன்றாது, அவிகாரத்திலே நின்றும விகாரந் தோன்றாதாற்போலவென்று பாற்காரிபன சொல்ல, அவனை மறுத்து, அருவமாயிருக்கிற வாகாசத்திலே நின்றும் உருவமாயிருக்கிற பூதங்களும், உருவமாயிருக்கிற மேகமுதலானவையுந் தோன்றுகிற முறைமைபோலே, அருவமாயிருக்கிற மாயையிலே நின்றும் உம்முடைய கர்த்தாவாலே பிரபஞ்ச முண்டாகிற தெப்படியெனில்? எண்ணிறந்த ரூபங்களாயுள்ள பிரபஞ்சந் தோன்றுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அருவவிகாரத்தின - அருவும் அவிகாரமென்னும் பெற்றித்தாகி, மாயையினின்றும்,—உருவிகாரம் - உருவமாய் விகாரியுமாகிய பிரபஞ்சம்,—ஈறுதுவருவது மில்லையாகுமென்னிற்- தோன்றுமென்றல் பொருந்தாதெனின்? அறியாது கூறினாய்,—வான வளியாதிபூதந்தருவது - உன்மதத்தில் அருவும் அவிகாரியுமாகிய வாகாயத்தினின்று முருவமும் விகாரியுமாகிய வாயுமுதலிய பூதங்கண் முறையேதோன்றும்,—தன்னின் - அதுவேயுமன்றி யவ்வாகாயத்தினின்றும்,— மேகசலனசத்தங்களோடு

ம் - பலமுகில்களு முகிலினகட் பலவிகாரங்களும் பலவோசைகளோடும்,—உருமின்னுமேறெல்லா முதித்திடும் - உருவமாகிய பலமின்னுக்களும், பலவிடிகளும், இன்னும் இவைபோல்வனதோன்றுமாகலான,—உணர்ந்துகொள்ளே - அதனைமறந்து நீயங்ஙனங்கூறுத லுனக்கே வழுவாய்முடியுமென்பதனை யறிவாயாகவென்பதாம்.

இதனானே மாயாவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்தது மேலது வலியுறுத்தப்பட்டது.

☞ க - சூத்திரம், க - அதிகரண முடிந்தது

மறைஞானதேசிகர் உரை.

அவிகாரமாகிய மாயையினின்றும் விகாரமாகிய
பிரபஞ்சந் தானாகத் தோற்றவற்றோவெனி
ல்? ஒருகர்த்தாவா லுண்டாமென்பதற்
குதாரணமிட் டுணர்த்துகிறார்.

மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே, யெண்ணிய வுருவமெல்லா மியற்றுவா னீசனன்றே, கண்ணுங்காரியங்களெல்லாங் காரண மதனிற் காண்பன், பண்ணுவதெங்கேயென்னிற் கேண்மதிப் பகர்கேனீ. (உசு)

(இ - ள்) மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே — பூமியின்கண் மண்ணின் விகாரமாகிய கடாதி காரியங்களெல்லாங் குலாலனாலுண்டாக்கப்படுமதுபோல

எண்ணிய வுருவமெல்லா மியற்றுவா னீசனும

சிவன் குலாலனைப்போலக் கரண விருட்டியின்றிச் சங்கற்பமாத்திரத்திலே மாயையினிடத்துத் தனுவாதிகளை யுண்டாக்காநிற்பன

கண்ணுகாரியங்களெல்லாங் காரண மதனிற் காணபன

தான் கருதப்பட்ட சகத்திலுண்டாகிய காரியங்களெல்லாவற்றையுந் தத்தங்காரணங்களிலே நின்றுதிப்பிப்பன

பண்ணுவ தெங்கேநின்றிங் கென்றிடிற் பகரக் கேண்

உமது கர்த்தாவோ அகண்ட பரிபூரணனாயிருக்கிறவன், எவ்விடத்தே யெந்தவடிவை யெடுத்துக்கொண்டு நின்று பண்ணினானென்று கேட்கிறாயாகில்? யாமதனை விளங்கச் சொல்வாம், அதனைக்கேட்பாயாக எ-று.

இதற்கு நிச்சுவாசமும் பௌஷ்கரமு மெனவறிக (உக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் விரித்தபொருளைத் தொகுத்துரைத்தல்.

மண்ணின்ற கடாதியெல்லாம் வருவது குலாலனாலே யெண்ணியவுருவமெல்லா மியற்றுவனீசனூனும் - பூமியினிடத்தின மிருத்துகடமுதலான பாண்டங்களெல்லாங் குலாலனாலுண்டாம், அப்படிபோல பூசர்தேவமனுஷ்ய தேகாதியவயவங்களாகப்பண்ணப்பட்ட பிரபஞ்சமெல்லா மீஸ்வரனுண்டாக்குவன் எங்கனெனின்?—கண்ணுகாரியங்களெல்லாங் காரணமதனிற்காணபன - கருதப்பட்ட காரியங்களெல்லாங் காரணங்களிலுண்டாக்குவன.— பண்ணுவதெங்கேநின்றிங் கென்றிடிற்

பகரக்கேணீ - இப்பிரபஞ்சத்தை யுண்டாக்கும்பொழுது கத்தா வெங்கேநின் றுண்டாக்குவனென்னிற் சொல்லக்கேளென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

திருஷ்டாந்தமுன்னாகச் சிவன்கிருத்தியம் பண்ணுமுறைமையறிவிக்கின்றார்.

மண்ணினின் - பிருதிவியினிடத்தினின்றும்,— கடாதியெல்லாம் - கும்பகலசமுதலிய காரியங்களெல்லாம்,— குலாலனாலே வருவது - மண்மகனாலுண்டாவது, அப்படி,— ஈசனாலும்-சிவனால்,— எண்ணியவுருவமெல்லா மியற்றுவன - நினைந்தகாரியங்களெல்லாம் நிருமிப்பன. முதற் காரணமின்றி முடிப்பானோவெனில்? சர்வசாமர்த்தியமிருந்தாலு மது கூடாது பின்னெப்படியெனனில்?—கண்ணுகாரியங்களெல்லாங் காரணமதனிற்காண்பன-நினைத்த காரியங்களெல்லாம் முதற்காரணமாகிய மாயையினின்று முண்டாக்குவன —குலாலன் பூமி யாதாரமாக நின்று கடாதிகாரியம் பண்ணக்கண்டோமே,—ஈசனும் எங்கே நின்றுபண்ணுவ னென்றிடில்,—பகரக்கேணீ - சொல்லுவாம் நீகேள்

சிவஞானயோகியருரை வருமாறு.

இவ்வாறு, உதிப்பதுமீறும், என்பது முதல் 'அருவுரு' என்பதீறாகிய இருபத்தேழு செய்யுளானும், முதற்செய்யுளின் 'ஒருவனோ டொருத்தியொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம் வருமுறை வந்துநின்று போவதுமாதலாலே தருபவனொருவன் வே

ண்டும்' என்ற முதற்கூற்றை, முறையே அவ்வவர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி; இனி 'ஈறுமாகி யநாதி முத்த சித்துருவாய் மன்னிநின்று மருவுவித்திடும்' என்னும் இரண்டாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்துவான்றொடங்குகின்றார்.

இங்ஙனம் அகிலமெல்லாம் ஆரியன் குலாலனைப்போலின்று ஆக்குவனாயின், குலாலன் கடாதி காரியங்களையெல்லாம் அவற்றிற்குக் காரணமாகிய அந்நிலத்தினின்றுஞ் செய்யக் கண்டோமே! ஆரியன் யாங்ஙனநின்று செய்வனென்பதாம்.

மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலேயெண்ணியவுருவமெல்லா மியற்றுவ னீசனானும் என்றது அநுவாதம்

ஆயின் என்பது சொல்லெச்சம்.

காரணம் என்றது நிலமென்னுந் துணையாய்நின்றது.

காண்டல் செய்தல்.

நின்றென்பது மேலுங் கூட்டப்பட்டது.

இதுவினா இதற்குப் பிறரெல்லாங் கூறியதுகூறலென்னும் வழுப்படவுரைத்தார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

புத்தன் மாயையிலே நின்றும் உம்முடைய கத்தாவாலே பிரபஞ்சமுண்டாகிறபடி எப்படியென்ன மேலருளிச் செய்கின்றார்.

மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே—மண்ணினி லுண்டான கடாதிகளெல்லாங் குலாலனாலே யுண்டாகிற முறைமைபோல,—எண்ணிய வுருவமெல்லா மியற்றுவ னீசனானும்—முன்சொல்லப்பட்ட எண்ணிறந்த வடிவுகளெல்லா

வற்றையுங் கத்தா அநத மாயையைக்கொண்டே யுண்டாக்கா நிற்பன,—கண்ணுகாரியங்களெல்லாங் காரண மதனிற்காண்பன - கருதப்பட்ட காரியங்களெல்லாவற்றையுங் காரணத்திலே யுண்டாக்கா நிற்பன,—பண்ணுவ தெங்கேநின்றிங்கு - இந்தப் பிரபஞ்சத்தை உம்முடைய கத்தாவானவன் எவ்விடத்திலேநின் றுண்டாக்கினன்,— என்றிடிற்பகரக்கேள் - என்று கேட்பாயாகில் நாமசொல்ல நீ கேட்பாயாக.

இதற்குப் பிரமாணம பரபட்சம அவனமதம் "உள்ளது கடாதிபோல வுதிப்பித்தா னென்றுரைக்கின, மெள்ளவேயெங் குநின்று விதித்தனனுலகிலைமீது, வள்ளருனிமாறுனென னில் வந்ததாமுலக முன்னே, தள்ளிடாதெங்குநிறைந்தெவகுமுன நந்ததாமே". என்னுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - பொத - சௌ, உஉ - செ.

இதனுற் சொல்லியது குலாலன மண்ணிலே நின்றுங் கடாதிகளை யுண்டாக்குகிற முறைமைபோல, கததாவு மாயையாகிய காரணத்திலேநின்றும எண்ணிறந்த வடிவுகளாயுள்ள பிரபஞ்ச காரியங்களை யுண்டாக்குவனென்றும, இப்படி யுண்டாக்கு மிடத்து எங்கேநின் றுண்டாக்குவனென்று கேட்டவனைப் பார்த்து மேல்சொல்லுகிறேம் கேட்பாயாகவென நருளிச்செய்த முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

இவ்வாறு 'உதிம்பதமீறும்' என்பதுமுதல் அருவுரு என்ப தீருகிய விருபத்தேழு செய்யுளானு முதற் செய்யுளின் 'ஒருவ னுெடொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம வரு

முறைவந்துநின்று போவதுமாதலாலே தருபவ னொருவன்வே ணடும்,என்ற முதற்கூற்றை முறையே அவ்வவர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி,இனி, ஈறுமாகி யனாதிமுத்தசித்துருவாய் மன்னிநின்று மருவுவித்திடும்' என்னு மிரண்டாங் கூற்றை யவ்வாறு வலியுறுத்துவான்றொடங்கினார்.

குலாலனாலே - குயவனால்,—மண்ணினிற்கடாதியெல்லாம்வருவது - மண்ணினிற்கடமுதலிய காரியமனைத்தும் வருதல் போல,—ஈசன - அரியனும்,—எண்ணியவுருவமெல்லா மியற்றுவன - அகிலமெல்லாவற்றையு மாக்குவனாயின,— தானுப்கணணு காரியங்களெல்லாம - குயவனுருவங் கருதியகடாதி காரியங்களையெல்லாம,— காரணமதனிறகாணபன - அவற்றிற்குக்காரணமாகிய வந்நிலத்தினின்றுஞ் செய்யக்கண்டோமே. அதுபோல,—இங்கு-அரிபணியவிட்டது,—எங்கேநின்று பண்ணுவது - யாங்கணின்றுசெய்யவன,—என்றிதற்பகரக்கேணீ - என்ற விருவிற்கு விடை மேற கூறப்படுதலி னீயறிவாயாக வெணபதாம.

மறைஞானதேசிகர் உரை.

சாங்கியன் உமது கர்த்தாவுக்கு வடிவில்லையென்றீர், அவ
னொருதொழிலை யெப்படி யியற்றுவனென்று
சொல்ல; அதற்குத் திட்டாந்த பூர்
வமாக வுணர்த்துகிறார்.

சீலமோ வுலகம்போலத் தெரிப்பரி தததனிற்
குங், கோலமு மறிவாரில்லை யாயினுங் கூறக்கேணீ,
ஞாலமே ழினையுந்தந்து நிறுத்திப்பின் னுசம்பண்

னூங, காலமே போலக்கொண்ணீ யச்செயல் கடவுட்க
ணேணே. (௩௦)

(இ-ள்) சீரோமோ வுலகம்போலத் தெரிப்பரிது — அந்தக் கர்த்தாவினுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்து மூர்த்த மாகையாலுஞ் செயல் காணப்படாதபடியாலு மின்னபடி யென றாவிட்டுச் சொல்லுதற்கரிது;

அதனுநிற்குங் கோலமு மறிவாரில்லை — ஆதலா லவனது சொரூபத்தையு மவனிற்கு நிலைமையினையு மொருவராலு மறாவிட்டுச் சொல்லுதற கரிது;

ஆயினுங் கூறக்கேணீ — ஆனாலு மவனது நிலைமையை யானுஞ்சொல்வாம, அதனைக் கேட்பாயாக

ஞாலமே ழினையுந்தந்து நிறுத்திப்பின னுசம பண்ணுங் காலமே போலக்கொணணீ யச்செயல் கடவுட் கணே — பூலோகம புவலோகம சுவலோகம மகாலோகம சனலோகம் தபோலோகம் சத்தியலோகமெனக கூறிய வேழுலோகங்களையுஞ் சிருட்டித்துந் திதித்துஞ் சங்கரித்துஞ் செய்கை கூடிநிற்கிற காலமெப்படி வடிவற நின்றும எப்படிப பலத்தைக்கொடுத்தது, அதுபோலச் சிவனு மமூர்த்தனாயினு மவனிச்சாசத்தியாலே சகத்தைப பண்ணுநிற்பன

ஞால மேழினையும என்ற உம்மையால் அதலவிதல முதலிய வேழினையு மெனவறிக.

ஓகார மெதிர்மறை.

உடமை எதிரது தழீஇய வெச்சவும்மை.

ஏகாரம் ஈற்றசை.

இதற்குக் கிரணகம மெனவறிக. (௩௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் கர்த்தாவினுடைய நிலைசகுஞ் செயற்கு முதாரண முரைத்தல்.

சிலமோவுலகம்போலத் தெரிப்பரிதனுனிற்குங் கோல முமறிவாரில்லை-பமேஸ்வரனுடைய சரித்திர முலோகத்திலுண் டாகிய பிரமாதிதேவாகளைபபோலத தெரிப்பரிது, அதனுலப் பரமேஸ்வரனுடைய நிலைபெறறஸ்வரூபததையும நிர்குணிலையை யும் ஒருவராலு மறியப்போகாது,—ஆயினுஙகூறகசேணி - அப படி பிரததியக்ஷமாகக காணபபடாதாயினுந திடடாநதத்தி ஞற்சொல்லுகிறேம நீ கேள,—ஞாலமேழினையுநதநது நிறுத திப பினருசம பண்ணுங காலமே போலகெொணணீ - எழுவ கைப் பிரபபிருகிய ஜநதுகக ணிறைநத பூலோகமுதலிய ஏழு பிரபஞசததை யுணடாககி நிலைபெறுவித தழிககுங் காலமே போல, சிவனு மருபமுமாய் வியாபியுமாய்நினறு பணணுவனெ ன்று நீயறிநதுகொள்,—நிலைசெயல் கடவுடசணணே - சிவனே சர்வாதாரமுமா யிருககச சாவமுஞ் சிவனிடததிலேயே நிலைபெ றுமெனறிதனபொருள்.

கடவுட்கண்ணே யென்னுமஏகாரத்திஞற் சிவனிடத்தி லெல்லா மிருப்பதனறிச் சிவனுககோ ராதாரமில்லை யென்றது.

ததுக்தம் ஶ்ரீமந்ம்ருகேந்த்ரே. யதா காஷ்டா ஸ்ருஷ்டி தேவாதி ஹ்ருத்ஸ்தே ஸம்ஸ்தாயக: | ஏவம் ஶிவோ ஸ்ருஷ்டி தேவாதி கர்த்ருதே காயஸ்தித்யா||ஸ்வதா யாதனாயாத இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கர்த்தா நிற்கும் நிலைமையை நிர்வசனிக்கின்றார்.

சிலமோ வுலகம்போலத் தெரிப்பரிது - பரமேசுவரனுடைய சரித்திரம் உலகத்திலுண்டாகிய பிரமாதி தேவர்களுக்குப் போலச் சொல்லுவது அல்லபம், அமூர்த்தமாகையால்,—அதனு விற்குங் கோலமுமாறிவாரில்லை -ஆகையால், இந்தப்பரமேச்வரனுடைய சகளவிக்கிரக தடத்தலக்ஷணத்தையுங் காண்பாரில்லை, ஸ்வரூபலக்ஷணந்தானென்பது சொல்லவேண்டுமோ!—ஆயினுங் கூறக்கேணீ-அப்படியிருந்தாலுஞ் சொல்லுகிறோம் நீங்கள்,—ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப் பின்னுஞ்சம் பண்ணுங் காலமேபோல - தாத்துவிக சகலப்பிரபஞ்சத்தையுந் தோற்றுவித்து நிறுத்தித் துடைப்போகரும், அமூர்த்தமாய், அப்பிரத்தியட்சமாய், நிராதாரமா யிருக்குங் காலமேபோல,—கடவுட்கண்ணே - காரியம்பண்ணும் சிவனிடத்திலே,—நிலைசெயல் கொண்ணீ - நிராகாரமாய்நிற்கு முறைமையுஞ் சங்கற்பமாத்திர சந்நிதானத்தாற் கிர்த்தியம் நிகழ்த்தின முறைமையுங் காண்பாயாக.

அப்போ காலத்துக்குப்போற் புக்கிமற் கர்த்திருத்துவம் பொருந்துவ தினமென்னின்? அப்படிச் சொல்லவேண்டாம். காலமென்பது அமூர்த்தமாய் ஸ்வதேகத் தசைவுபண்ணும் ஆன்மாவைப்போலவென்று போதிப்பது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவன் உலகம்போலன்றி வாக்குமனாதீத கோசரப்பொருளாகலான், அவனிற்கு நிலையும் அயலியல்பிற்றேயாம்; அங்

ணமாயினும், ஒருவாற்று னுவமையில் வைத்து உனக்குக் காட்டுதும். உலகமெல்லாங் காலத்தாற் காரியப்படுமென்பது எல்லார்க்கு மொக்குமன்றே, அக்காலம் அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாபொருட்குந் தா னாதாரமாய்த் தனக்கோராதாரமின்றி நிற்றல்போல, சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே காரியப்படுத்துமுறைமை உணர்ந்துகொள்க வென்பதாம்.

சீலம் தன்மை.

ஓகாரம் சிறப்பின்கண் வந்தது.

சோலமுமென்ற உம்மை இறந்தது தழீஇயற்று.

ஞாலமேழினையு மென்றது உபலக்கணம்.

கண் அறிவு

ஒற்றுமைபற்றிச் சிவசத்திமேல் வைத்துக் கூறினார்.

உயர்திணைக்கட் சிறுபான்மை ஏகாரந் திரிதல், மக்கட்பண்பு முதலியனபோல இலேசாற் கொள்க.

நிலைசெயலென்பது நிற்றலென்னும் பொருட்டாய் இரண்டாவது தொக்குநின்றது. அற்றேல் ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப்பின் னாசம்பண்ணுங் காலம், அத்தொழில் வேறுபாடு பற்றிச் செல்காலம் நிகழ்காலம் எதிர்காலங் கணம் இலவங் துடியென்றற் றொடக்கத்தனவாயப் பலவகை யவதைப்படுமென்பது சித்தாந்த நூற றுணிபாகலின், அதுபோல உலகத்திற்காதாரமாய் நின்றுசெய்யு முதல்வனும் அவ்வத்தொழில்பற்றிப் பலவகையவைத்தப்பட்டுத் துடக்குறுவனபொலு மெனின்? அதற்கன்றே வருஞ் செய்யு ளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

கத்தாவினுடைய வுண்மை பிரவஞ்சத்தின முறைமைபோலச் சொல்லுதற் கரியதெனகிறமுறைமையை மேலருளிச்செய்கிறார்.

சிலமேயுலகம்போலத் தெரிப்பரிது - அந்தக் கத்தாவினு டைய சுபாவம் பிரபஞ்சத்தை யிதுவென றறுதியிட்டுச் சொல் லுதற் கெளிதல்ல,—அதனால் நிறகுங் கோலமு மறிவாரில்லை - அப்படியிருக்கையினாலே அவனுடைய நிலைபெற்ற சொரூபமும் ஒருவ ராலறியப்படாது,—ஆயினுங் கூறக்கேளினி - ஆனாலுஞ் சொல்ல நீ கேட்பாயாக,— ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப் பின்னுஞ்சமய மனுங் காலமேபோலக்கொள்நீ நிலைசெயல் கடவு டகணினை - ஏழுமென் றென்னப்பட்ட உலகங்களை சிருட டித்தும திதித்தும சங்கரித்துஞ் செய்கைக்குங் கூடிநிற்கிற காலங்களி னுண்மைபோல, கர்த்தாவினுடைய வாக்கினையினது நிலையும அவனுடைய நிரதிசயங்களையும புத்தி பண்ணுவா யாக

இதற்குப் பிரமாணம பரபக்ஷம, அவனை மறுப்பு "கா ரியமா யுலகமெலா மிருத்தலாலே கடாதிகளபோற் காரிய கத் தாவொருவன்வேண்டு, மாரியமா யுறபொருளோ டினபமனை டெல்லா மறைந்துயிர்கட் கறிவுசெயலளிப்பதுநூ லநூல், கூ ரியராயுள்ளோர்க ளோதவோதிக் கொண்டுவரலான முன்னே குற்றமிலா தறிச, சீரியபே றறிவுடையோன செப்பவேண்டுஞ் செ யலினுக்குங் காவேண்டுஞ் சிவனனெனறறிமே". என்னுமதுங் கண்டுகொளக

சித-பர-சௌ-மறு, ௫௬-செ

இதனற சொல்லியது கர்த்தாவினுண்மை பிரபஞ்சத்தினு ளள முறைமைபோல அறிதற் கெளிதல்லவெனறும, ஆயினுஞ் சொல்லுமிடத்தில் உலகங்களெல்லாந் தோனறுகைக்கும நிற் கைக்கும் ஒடுங்குகைக்குங் கூடிநிற்கிற காலங்களின முறைமை போலத் தனனுடைய வாக்கினையாலே எல்லாக் கிருத்தியங்களை யுஞ் செய்வன எனகிற முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சீலமோவுலகம்போலத் தெரிப்பரிதகலல்- அவனறனைமையுலகம்போலன்றி வாக்குமனக்கடந்த கோசரப்பொருளாகலான,— நிற்குங்கோலமு மறிவாரில்லை - அவனிற்குநிலையு மவனியல்பிற்றேயாம்,—ஆயினுங்கூறக்கேண்மி - அங்ஙனமாயினு மொருவாற்றானவையிலவைத்து உனக்குக்காட்டுதும்,—ஞாலமேழினையுந்தந்து நிறுத்திப்பின்னுஞ் சம்பன்னும் காலமேபோல் - உலகமெல்லாங் காலத்தாற் றோன்றி நின்று மழிந்தும் காரியப்படுமென்றெல்லோர்க்கு மொக்குமன்றே அக்காலமவற்றைக் காரியப்படுத்துங்கா லெல்லாப்பொருட்குந் தானே ஆதாரமாய்த் தனக்கோராதாரமின்றி நிற்றல்போல,—கடவுட்கண் - சிவசத்தி,—நிலைசெயல்கொண்மின் - நிராதாரமாய் நின்றே காரியப்படுத்து முறைமையுணர்ந்துகொள்க வென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

அசரீரியுமாய் நிர்விகாரியுமுமா யிருக்கிற சிவன் சிருட்டியாதிகளைச் செய்யுமதற்குத் திட்டாந்த
பூர்வமா யவனைமறுத் துணர்த்துகிறார்

கற்றநூற் பொருளுஞ்சொல்லுங் கருத்தினி லடங்கித்தோன்றும், பெற்றியுஞ் சாகரத்தி லுயிரினம் பிறந்தொடுங்க, முற்றதும் போலவெல்லா வுலகமு முதித்தொடுங்கப், பற்றொடு பற்றின்றி நின்றனன் பரனுமன்றே. (௬௧)

(இ-ள்.) கற்றநூற் பொருளுஞ்சொல்லுங் கருத்தினிலடங்கித்தோன்றும் பெற்றியும — யாதாமொருவன் கற்கப்பட்ட வேதாகமங்களின் சத்தமர்த்தமாகிய விரண்டினையுங் கற்றவனறிவிலே யிருந்து வருத்தமற வவனிடத்திற்றோன்றி யொடுங்குமுறைமை போலவும,

சாக்கிராதி யுயிரிலிற பிறந்தொடுக்க முற்றதும்போல — சாக்கிரமுதலிய வவத்தைகளைந்து மான்மாவினிடத்தே ப்ரயாசமற வொடுங்கித் தோன்றுகிற முறைமைபோலவும,

எல்லா வுலகமு முகிழ்த்தொடுங்கப் பற்றொடுபற்றின்றி நின்றனன் பரனுமன்றே. — நிர்விகாரியான சிவனுடைய சன்னிதிமாத்திரத்திலே யெல்லாப் பிரபஞ்சங்களையுந் தோற்றியொடுக்கினனேயாயினுந் தானொரு செயலுஞ் செய்யாது பணியாநிற்பன. எ-று.

"அன்றெனகிளவியு மின்றெனகிளவியு மாகுமென்ப."
இதற்கு விசுவாசோத்தர மெனவறிக. (௯௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—()—

எல்லாஞ் சிவனிடத்தில்நிற்ப தெவ்வாறெனின்.

கற்றநூற் பொருளுஞ்சொல்லுங் கருத்திநிலடங்கித்தோன்றும் பெற்றியும் - படிக்கப்பட்ட சாத்திரங்களிற் சத்தமுமர்த்தமும, நினைக்கும்போது தோன்றி யல்லாதநேரந் தோன்றாத முறைமைபோலவும்,—சாக்கிராதி யுயிரிலிற்பிறந்தொடுக்க மு

ற்றதும்போல - சாக்கிராதியவத்தைகளிற் கருவிகளான்மா வினிடத்திற் கூடிப் பிரிந்தொடுக்க முற்றதுபோலவும். [சாக்கிராதியென்றது ஆகுபெயர்]—எல்லாவுலகமு முதித்தொடுங்கப் பற்றும்பற்றதின்றி நின்றானன பரனுமன்றே - பிரபஞ்சமெல்லாந் தோன்றிநின்றொடுங்கப் பிரபஞ்சத்திற் றானபற்றுதலின்றி, அதிற்பற்றிய வான்மாவினோடே தானைக்கியமாகப் பரனாகியே நின்றனனென்றிதன் பொருள்

கற்றனூற்பொருளுஞ் சொல்லுங் கருத்தினிலடங்கித்தோன்றல்போல வென்றது சிவன் பிரபஞ்சத்தையினன்படி யுண்டாக்கவேண்டுமென்று நினைத்தபொழுதுண்டா யல்லாதபொழு தில்லையாதலுக்குத் திட்டாந்தம்.

சாக்கிராதி யுயிரினிற் பிறந்தொடுக்க முற்றதுபோலவென்றது சத்தா உதயுத்தா பிரவிருத்த ரவசரங்களிற் சத்திகளபிவியத்தியானதற்கு மந்தர்க்கதமானதற்குந் திட்டாந்தம்

தது-க்தம் தத்வப்ரகாசே — ஸத்வ்யாவ்ருத்தி ஹே ஊறுதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—௧—

சிவசங்கற்பத்தான மாயையில் விகாரமாய்ச் சிவனுக்கு விகாரமின்றிப் பிரபஞ்சந்தோற்று முறைமையை விரிக்கின்றார்.

கற்றனூர்பொருளுஞ் சொல்லுங் கருத்தினிலடங்கித்தோன்றும் பெற்றியும்-முன்படித்துப் பழகிய சாத்திரச் சொல்லனுபூதி பொருளனுபூதிகள் புத்தியிற் கூட்டிய வாசனையொடுங்கிக்

கன்னெழுத்திலையபு முதலிய காரணத்தில், திரும்ப அந்தவாச னை கிளம்பி மதியினினைவு வருவிக்க, நினைத்தவரு வுயிர்தனை வி மனத்தி லிச்சிக்க, சூக்குமைவாக்கிற் சொல் முனைதோற்ற, மதிமணிவிளக்கின மலர்ந்த சிற்சத்தியிற் சொல்லனுபூதி பொ ருளனுபூதிகள் பின்றோற்றுமுறைமையும் போல,—சாக்கிருதி - சாக்கிரமுதலிய அவத்தைகளைந்தும்,—உயிரினிற்பிறந்தொடுக்க முற்றதும்போல-அருவாகி நிமித்தநாகிய வானமாவிற் பொருந் திய கருவிகளிற் றமோகுணங் கிளம்பிக்கிளம்பி மெள்ளமெள் ள மேலிட்டமேலிட்ட சத்துவகுணஞ் சற்றே சிறசத்தி மனச்ச ஙகற்பத்தோடு குன்றிக்குன்றி மூவர் முறைமையிற் றோற்றி, திரும்பத் தமோகுண சத்துவகுணங்களின் தோற்றுதல் கு றைதல் மாறிவர மறைந்ததும் போல,— பரனார்-சிவனும்,—எ ல்லாவுலகமு முதித்தொடுக்க - சகலகாரிய பிரபஞ்சமுற்று ம மாயையிற் றோற்றியழிய, அந்தப்பிரபஞ்சத்தோடு,—அன றே - அநாதியே,—பற்றொடு பற்றகின்றி - தனது சத்தியாகிய சொரூப காரணத்தினது சத்திய சங்கற்பத் தொழிலாகிய ச ன்னிதிச் சொரூப சம்பந்தியாய் நின்று, கடத்தொடுகொட்டு க ளைக்கொடுபிடித்த தண்டசக்கிராதி கடத்தி னைசந்தர் றொழி ற் சம்பந்திபோற் சம்பந்தியன்றி,— நின்றனன-வியாபித்திருப் பன

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

கரணங்களாகிய சாக்கிரமுதலிய வவத்தைகள் ஆன்மா வினொடுங்கித் தோன்றும்வழி ஆன்மாவும் அவத்தைப்படத் த டக்குறுதல்போல,முதல்வன எல்லாவுலகமுந் தனபாலொடுங்

கியுதிப்பத் தானுமதுபற்றி இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைப்படுத் தடக்குறுவோனுசியும், கற்றனூற்பொருளுஞ்சொல்லும் வாதனுரூபமாய்ப் புத்தித்தத்துவத்தை பொட்டிநின்று ஆன்மபோதத்தின்கண் ஒடுங்கித் தோன்றும்வழி அவவான்மபோதம் அதுபற்றித் தடக்குருகவாறுபோல, ஆணவத் தடக்குறுதலின்றியே நின்றனனென்பதாம்.

எதிர்நிரனிறையாகக்கொள்க

என்டுக கருத்தென்றது உயிருணர்வை

பற்று முதனிலைத்தொழிற்பெயர்

இவைமூன்று செய்யுளாலும மண்ணினிற்மேமருவிடு மென்றது தடைவிடைகளாற் றெறித்துணர்த்தப்பட்டது

இவைபற்றி இதனைமுன்வைத்தார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

நிருவிகாரியா யிருக்கிற கர்த்தா சிருட்டி திதி சங்காரமென்கிற மூன்று தொழிலையுஞ் செய்யுமிடத்து அவனுக்குப் பாரமாகாதோவென்ற ஆசீவகன சொல்ல, அவனை மறுத்து மேலருளிச் செய்கிறார்

கற்றனூற் பொருளுஞ் சொல்லுங் கருத்தினி லடங்கித் தோன்றும் பெற்றியும்- கற்கப்பட்ட சாத்திரங்களிற் சத்தமுமத்தமுமிரண்டும் ஆன்மாவினுடைய வறிவிலேயொடுங்கி யுண்டாகிற முறைமையும்,—சாக்கிராதி யுயிரினிற் பிறங் கொடுக்கமுற்றதும்போல - சாக்கிரமுதலான அஞ்சவத்தைகளும் ஆன்மாவினிடத்திலே தோன்றியொடுங்குகிற முறைமைபோல,—எல்லாவுல

கழு முதித்தொடுங்கப் பற்றொடுபற்றாதின்றி நின்றனன் பரனும் னறே - அந்தக் கர்த்தாவுந் தன்னாலே எல்லாப் பிரபஞ்சமுந் தோன்றி யொடுங்கும்படி தானே கூடிநிற்கையிலேயுந் தனக்கொரு பணியற நின்ற முறைமை; ஆன்மாவினறிவிலே சத்தார்த்தங்க ளொடுங்கித் தோன்றுகையிலும் நினைவுமாத்திர மொழிந்து அந்தறிவுக்கொரு பாரமற்று நின்றாற்போலவும், ஆன்மா அஞ்சவத்தைப்பட்டு அவத்தை நீங்கி விழித்தவிடத்து அந்த வவத்தையினுக்கு நினைவுமாத்திரம் மெய்யாயப் பயனில்லையானாற் போலவும், கர்த்தாவும் சிருட்டி திதி சங்காரமென்கிற மூன்று தொழிலையுஞ்செய்க்ச செய்தேயும் அவனுக்குப் பாரமற்று நின்ற முறைமையும் இத்தன்மையது

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் "நோக்காது நோக்கி நொடித்ததன்றே காலத்திற், றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ-னாக்காதே; கண்டநனவுணவிற் கண்டகனவுணராக், கண்டவனி லிற்றினறுங் கட்டு" என்னுமது கண்டுகொள்க.

சிவ-போ, க - சூ, ௪-செ

இதனாற் சொல்லியது, கர்த்தா சிருட்டி திதி சங்காரமென்கிற மூன்று தொழிலையும் செய்யுமிடத்துந் தனக்கு பாரமற நின்று செய்வனென்னு முறைமை அறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

சாக்கிராதி - கரணங்களானாகிய சாக்கிரமுதலிய அவத்தைகள்,—உயிரினி லொடுக்கமுற்றும் பிறந்ததும்போல - ஆன்மாவினொடுங்கித் தோன்றும்வழி யான்மாவுமவத்தைப்பட்டுத் தொடக்குறுதல்போல.—பரனும் - முதல்வனும்,— எல்லாவுலக

முதித்தொடுங்க - எல்லாவுகரூப தனபா லொடுங்கயுதபப,— பறஞெருடுநின்றனன - தானுமதுபற்றி யிலயம போக மதிகார மெனறு மவதனதபபடுத தொடசகுறுவோஞகியும்,— கறற நூற்கி ருளுஞ்சொல்லுங கருத்தினிலடங்கி - கற்றகற்றநூ ற பொருளுஞசொலலும வாதஞரூபமாய்ப் புத்தித்ததுவத் தை பொடடிநின் றுனம போகத்தினகண் ஒடுஙகி,—தோ னறும்பெற்றியுமபோல - தோனறும்வழி யவ்வான்ம போக மதபாறிகுதொடகுருத வாறுபோல— பற்றின்றி நினற னன-ஆணடுத்தொடகுறுதலினறியே நினறன னென்பதாம.

இவைமூனறு செய்யுளானு மனனிநினறே மருவிடுமெனப தனந பைவிடைகளாற் றெரித்துணர்த்தபபடடது

மறைஞானதேசிகர் உரை.

புதத னவத்தையிலொடுங்கின வானமாககண் மீளவுந் தோனறுவா னெனனறு சொல்ல,

மறுத துணர்த்துகிருர்.

உயிரவை யொடுங்கிபபின்னு முதிப்பதென் னர ன்பாலெனனிற, செயிருறு மலத்திஞகுஞ சிதைந்த தே தெனனிறசித்தத், தயர்வொழி காரியங்க ளழியுங கா ரணங்கிடககும், பயிறரு காரியம்பின் பணடுபோற் பண்ணுமீசன. (கூஉ)

(இ - ள்.) உயிர வை யொடு ங்கிப் பினனு மு திதெப்ப னரன பா லெனனில் பரமேசுரன் சன்னிதியிலே யழிந்துபோன விப்பிரபஞ்சமுமானமாக்களு மறித்துத் தோனறுவ தென என்று கேட்கிருயாகில்,

செயிருறு மலத்திருக்கும்	குற்றத்தைப் பொருந்திய வாணவமலங் காரணமாக வுண்டாகாநிற்கும்.
சினைந்ததே தெனனில்	ஆறு லானமாக்களுக்கு மலங்களுக்கு ம ழிவில்லாதிருக்குமாயி னந்தச் சங்காரந்த னிற் சங்காரப்பட்ட தேதென்று நீ சொல்லில்?
சித்தத் தயர் வொழி காரியங் களழியும	ஆன்மாவினது ஞானக் கிரியைகளை மறைக் கின்ற காரியரூபங்களழியும்
காரணங் கிடக்கும	காரியத்தை யுண்டாக்கப்பட்ட காரண மழியாது நிற்கும்
பயிறரு காரியம் பின பண்டு போற் பண்ணுமீசன.	அந்தக்காரணங் கிடக்கையாலே யந்தக் காத்தா செய்யத்தக்க காரியங்களை மீண்டு முன்புபோல சிருட்டிகளை யுண்டாக்காநிற் பன. எ-று. (௬௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் ஜநககாரண முணர்த்துதல்.

உயிரவையொடுங்கிப் பின்னுமுதிப்பதெ னரன்பாலென்னில் - ஆன்மாவானவைகள் சாவசங்கார காலத்திலன்னமயம் ப்ராணமயமநோமயமாகிய கோசத்திரயமுஞ் சம்ஹாரத்தையுடைய வினைவயிரதைச் சம்ஹாரமபண்ணின அரனிடத்திலொடுங்கின முத்தனொனறு திருப்ப வுற்பத்தி சொல்லுங் காரண மேதெனின ?— செயிருறு மலத்திருக்கும் சினைந்ததே

தெனின் - குற்றமாகிய வாணவமலநீங்குவதே மோக்ஷம், மலநீங்காமற் றனுவாதி யுபசம்ஹாரப்படுகையாற் சிவனுடன்கூடியிருந்துஞ் சிவானுபவம் விளங்காதது காரணத்தினாற் புநருற்பத்தியாகவேண்டியது, அப்பொழுது கோசத்திரயமு நாசத்தையடைகையா லெவ்வா றுண்டாமெனின்?—சித்தத் தயர்வொழிந்தாரியங்க ளழியுங்காரணங்கிடக்கும் - ஆணமாவி னியாவெனனு மஞ்ஞானத்தை நீக்கு மாயாகாரியங்கெட்டுங் காரணமாகியமாயை சம்ஹாரகாலத்தினு நிற்குமாதலால்,—பயிரருகாரியமபின பண்டுபோற்பண்ணுமீசன - அம்மாயை கைக்கொண்டு பூர்வம்போலச் சங்காரத்திற்குப்பின்புந் தனுவாதி காரியங்களைப் பரமேஸ்வரன் பண்ணுவனென்ன றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சித்துக்கும் அசித்துக்கும் தோற்ற மொடுக்கஞ் சாத்திரஞ் சொல்லுமாதலான் மாயையிற் றோற்ற மொடுக்க முயிர்க்கு மதிக்கப்படாது, சித்துக்குச் சடத்தன்மை வருமாதலாலே பாரிசேடத்தாற் சிவனிடத்திற் செப்பவேண்டும், சிவனிடத்தொடுங்கினால் முத்தியடைந்து போகாமற் றிரும்பச் சித்துப் பானேனென்றாசங்கித்துப் பரிகரிக்கின்றார்.

உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதே னரன்பாலென்னில் - சிவனிடத்திற் சித்துக்குத் தோற்ற மொடுக்கம் பிரமத்தில் நாராயணப் பிரகிருதியிற் பரிணத வேதாந்தி பாஞ்சராத்ராத்திரிபோல, சித்தாந்திகள் செப்பார்கள். பின்னெப்படி?—செயிருறுமலத்தினுக்கும் - ஆன்மாக்களுக்குத் தோற்றமொடுக்கம் மாயையிற் கலாதிதத்துவங்க டோற்றி யொடுங்கிக் கட்டவி

டமோகமுற்ற மலமொருபிரதேசத்தில் நீங்க மறைக்க, அதனுல் ஞானக்கிரியைகள் விளங்க மறைய உபசரிக்கப்படுமே விகாரமின்றி, ஞானக்கிரியைகட்குக் கலையினுல் விளங்குதல், மலத்தினுன் மறைதல், சித்துக்கு ஜநந மரணம் சிவனிமித்த மாதலால் அரனபாலென் றுபசரிக்கப்பட்டது சடத்துக்குச் சிவசங்கற்பத்தால் விகாரமாய்த் தனதுகாரண ரூபத்திற் காரியரூப மறைதல், காரணரூப மறையக் காரியரூபம் விளங்குகல், நாச முற்பத்தி,—சிதைந்த தேதெனனில் - ஆணவ முதலிய மலங்களிருக்கிற சங்கரிக்கப்பட்ட தேதெனில்,—சித்தத்தயர்வொழி - மனசில மயக்கத்தைவிடு,—காரியங்களழியும்-காரியப்பொருளொடுங்கும்,—காரணங் கிடக்கும் - முதற்றுணை நிமித்தமென்கின்ற காரணத்திரய மிருக்கும் அதனுல்,— பயிரரு காரியங்களபின பண்டுபோற் பண்ணுமீசன - சிவனிமித்தகாரணனாய் நின்று போசகபோக்கியங்களாக முன்பழகிய காரியப்பொருள்களை முந்திய சிருட்டியிற்போல முற்காரணத்தினின்று துணைக்காரணத்தினுற் றேற்றுவிப்பன.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனி இருசெய்யுளான் ஈறுமாகி மருவிடுமென்றதனை வலியுறுத்துகின்றார்

ஈறுசியோடு வீறெய்திய வுலகம் ஈறெய்தியவாறே யொழியாது மீளவுமவன்பானின்று தோன்றுதல் எற்றுக்கெனின்? மலபரிபாகம் வரும்பொருட்டுத் தோன்றும். அற்றேல், மீளவுந்தோன்றற்பாலது முனைழியாது நிலைபெறவே யமையும். அவ்வாறன்றி அழித லெற்றுக்கெனின்? உயிரிளைப்பு ஒழித்த

ற்பொருட்டு. முன் இளைப்பினைச் செய்துநின்ற காரியங்கள் அழியுமாகலான, அழிந்தவழியும் முன்னை வினைத்தொடர்ச்சிக்குரியனவாய்த் தத்தங் காரணங்களிற் கன்மத்தோடு பயின்று கிடக்கின்ற அக்காரியங்களை ஒடுங்கியவாறே உதிக்கச் செய்வனென்பதாம்.

ஆக்க மவ்வவர் கன்மமெல்லாங் கழித்திடல் என முன்னர்க் கூறுவாராகலின், அதற்குரியவிளைபு நன்றுடயுணர்த்துவார் காரணங்கிடக்கும் பயிற்றுகாரியமபின் பண்டுபோறபண்ணுமீசன என்றார்.

உயிரவை உயிரோடுங் கூடிய உலகமென்றவாறு
ஏதெனபது எற்றுக்கெனனும் பொருட்டாய் நின்றது.
சித்தத்தயர்வு அறிவினகணணதாகிய இளைப்பு
உழிபவெனனும் வினைபெசசத்தகரம் விகாரத்தாற்றொக்கது
கிடக்குமென்பது பெயரெச்சம.
இறறுகுப பிறரெல்லாஞ் சற்காரியத் தியல்பினவைத்துக் கூறியதுகூறலெனனும் வழுப்படவுரைத்தார.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

புத்தன உம்முடைய கர்த்தாவினிடத்திலே யொடுங்கின ஆனமாக்கள மீளவுந் தோனறுவா னெனனெனறுசொல்ல, அவனைமறுத் தருளிச் செய்கிறார்.

உயிரவையொடுங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பாலென்னில் - கர்த்தாவினிடத்திலே யொடுங்கினவானமாக்கள் மீளவுந் தோனறவேண்டுவானேனென்று நீ சொல்லில்,—செயிருறுமலத்தினுதும்-குற்றத்தைப் பொருந்தினஆணவமலங் காரணத்தா

னுண்டாகாநிற்கும்,— சிதைந்ததேதென்னில் - ஆன்மாக்களுக்கு மலங்களுக்கும் அழிவில்லையாயிருக்குமாகில் அந்தச் சங்காரந்தன்னில் சங்காரப்பட்டதேதென்று நீ சொல்லில்,—சித்தந்தயாவொழி காரியங்களழியும்-ஆன்மாக்களுக்கு அநாதியே மறைப்பையுண்டாக்கி மடக்கிக்கொண்டு நிற்கிற ஆணவமலத்தின சத்திகளை நீக்குகிற மாயையின் காரியமாகிய முப்பத்தொரு தத்துவங்களுமழியும்,—காரணங்கிடக்கும் - அந்தக் காரியங்களையுண்டாக்கப்பட்ட காரணமாகிய மாயை கிடக்கும்,—பயிருகாரியமின் பண்டுபோற்றனனுமீசன - அந்தக் காரணமாகிய மாயைக் கிடக்கையிலே அந்தக் கன்மங்களுக்கீடான தேகாதி பிரபஞ்சங்களைக் கர்த்தா மீண்டும் முன்போலே யுண்டாக்காநிற்பன்

செயிருறு மலத்திற்கென்று புகன்ற மற்றதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் "இலயித்ததனி னிலயித்ததாமலத்தா லிலயித்தவாறுளதா வேண்டு-மிலயித்த,தத்திதியிலென னிவழிபாதவைவழியது, சத்திதியு மாதியு மாமங்கு" என்றும்,பரபட்சம் எப்பொருளுமளித்தவென வியம்பினவைவித்த மில்லதற்கோ வுளதற்கோ வுளதிலதானதற்கோ, செப்பிடினில்லதற்கில்லதென்றுமில்லை செனறடைவ துளதற்கே யுளதென்றுமுண்டா,மப்படிதானுளதிலதா மப்பொருளுக்கென்னி னுளதிலதாகா விலது முளதாகா, திப்பொருளுக் கிருதன்மை யென்றொன்றைக் காட்டா யெனிற்றேறுன்றும் பொருணின்றிய கிறுதியாமே" என்னுமது கண்டுகொள்க.

சிவ - போத - க - சூ, உ - செ.

சித் - பர - சௌ - மறு, கங - செ.

இதனாற் சொல்லியது ஒடுங்கிய பிரபஞ்ச மலங்காரணத்து னுண்டாமென்றும், ஆன்மாக்களுக்கு மலத்தாலுண்டான மறைப்

மை நீக்கின மாயாகாரிய மழியுமென்றும், மீளவு மாயா காரண ததிலேநின்றும் பிரபஞ்சத்தைக் கர்த்தா வுண்டாக்குவானென்னு முறைமையையு மறிவித்தது

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

ஈசன - ஈருகியோனால்.—ஒடுங்கியுயிரவை - ஈறெய்திய வுயிரோடுங்கூடியவுலகம் பின்னும் ஈறெய்தியவாறே யொழியாது மீளவும்,— அரனபாலுதிபப தெனனெனில் - அரனபா னின்று தோன்றுத லெற்றுக்கெனின்,—செயிருறு- குற்றமபொருந்திய,— மலத்திலுகும் - மலபரிபாகம வருதற்பொருட்டுத் தோன்றும்,—சிதைந்ததேதெனனில்-அதரேன, மீளவுந் தோன்றுதபாலது முன்னழியாது நிலைபெறவேயமையும், அவவாறன்றியழித லெற்றுக்கெனின்?,—சிததத்துக்கு இளைப்பொழிகாரியங்க ளழியும் - உயிரினிளைப்பொழிதற் பொருட்டு முன்னிளைப்பினைச்செய்து நின்ற காரியங்க ளழியுமாகலான் —காரணமபயிருகிடக்கும் - அழிந்த வழியு முன்னை வினைத்தொடர்ச்சிக் குரியனவாய் தத்துவகாரணங்களிற் கன்மத்தோடு பயின்றுகிடக்கின்,—காரியப்பின - அக்காரியங்கள்பின்பு,—பண்டுபோற் பலனும - ஒடுங்கியவாறே யுதிப்பச் செய்வனென்பதாம

மறைஞானதேசிகர் உரை.

பஞ்சாராத்திரி யுமது கர்த்தா கிருத்தியஞ் செய்யுமிடத்து விகாரியாகாரோ வென்ன, அவிகாரியெனறு திருட்டாந்தமிட் டுணாத்துகிறா.

தோற்றுவித் தளித்துப்பின்னுந் துடைத்தருள் தொழில்கண்மூன்றும், போற்றவே யுடையனீசன புகுந்த

து விகாரமென்னிற, சாற்றிய கதிரோனிற்கத் தாமரை யலருங்காந்தங், காற்றிடிய கனலைநீருங் காந்திடிய காசினிக்கே. (௬௬)

(இ-ள்) தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தருடொழில்கண்மூன்றும் போற்றவே யுடையனீசன — ஈசுரனே சிருட்டிமுதலிய மூன்று சிருத்தியங்களையுஞ் செய்தற்குரியனென்றெல்லாராலுங் கொண்டாடத்தக்க மகிமையையுடையன.

புகுந்தது விகாரமெனில்? — விகாரியாவனென்று நீசொல்லில்? அவன் விகாரியல்ல, அவிகாரியே; அஃதென்போலவெனில்?

சாற்றிய கதிரோனிற்கத் தாமரையலருங் காந்தங் காற்றிடிய கனலைநீருங் காந்திடிய காசினிக்கே — இந்தப் பூமியினகண்ணே யவிகாரியாகிய வாதித்தன சந்நிதியிலே சூரியகாந்த மணிகனலையுமிழாநிற்கின்றது, முகுளித்தமான முளரியலராநின்றது, சலமானது மண்ணினகண்ணே சுவறிச் செல்லாநின்றது; இந்தமுறையிலே கர்த்தா வவிகாரியாய்நின்று பரபஞ்சத்தை நடத்துவான் எ-று (௬௬)

உவமை முற்றுவமை

இதற்குப்பிரமாணம் விசுவசாரோத்தர மெனவறிக

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சிவனிர்விகாரியென்பதுணர்த்துதல்.

தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தருடொழில்கண்மூன்றும் போற்றவேயுடையனீசன புகுந்தது விகாரமென

யில் - சிருஷ்டி திதி சம்ஹாரமென்கிற மூன்றுகிருத்தியத்தையு மீசுவரன்பண்ணுவானாகில் அவனுக்கு விகாரமுண்டாயிற்றென்று சொல்லின, —காசினிக்கே சாற்றியகதிரோனிற்கத் தாமரையலருங் காந்தங்கானுமிழுங்கனலே நீருங்கரந்திடும்-ஆதித்தனிர்விகாரியாய் நிற்க, இவ்வுலகினைச் சட்டாமரையானது விகசிக்கும், சூரியகாந்தமான கல்லனலையுமிழும், நீரானது சுவறிடும், இப்படிப்போலச் சிவனிர்விகாரியாய்நிற்க விப்பிரபஞ்சமானது விதமாக வவனசந்நிதிமாத்திரத்திற் காரியப்படுமென்றறிக

[illegible] ||

தாமரையலருமென்றது- சங்கோசமாயிருந்தமாயை சிருட்டிகாலத்திற் றனுவாதிவிகாசமாதலுக்குத் திட்டாந்தம்

காந்தமனலையுமிழுமென்றது- கன்மம் ஸ்திதிகாலத்திற் பலோதயமாதலுக்குத் திட்டாந்தம்

நீர்சுவறுமென்றது- சங்காரகாலத்திற் பிரபஞ்சமொடுங்குதற்குத் திட்டாந்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவன் கிருத்தியகிருத் தாவாலும் விகாரியல்லனென்று விளம்புகின்றார்.

தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்-சிருட்டி திதி சங்காரமென்கின்ற மூன்று கிருத்தியங்களையும், சொல்லாமல் சித்திக்கும் திரோபாவானுக் கிரகமென்கின்ற விரண்டு கிருத்தியங்களையும்,— ஈசன - சிவன,— போற்றவேயுடையன - பண்ணுதற்குரியன.— புரிந்ததுவிகாரமெனவில - குலாலாதிகளுக்குப் போல முன்னிருந்த முறைமைவிட்டு வேறொரு முறைமை யாகுதலாகிய விகாரிவந்ததென்னில், அஃதில்லை,— சாற்றிய கதிரோனிற்கத் தாமரையலருங் காந்தங் காற்றிடுங் கனலை நீருங் கரந்திடுங் காசினிக்கே-உலகத்தினக்கண்ணே காரணமாகக் கற்பிக்கப்பட்ட சூரியன் முன்னின்ற முறைமையி லிருக்கக் கமல மலரும், சூரியகாந்தக் கல்லுந் தானும் அசைவற்றிருந்து அக்கினியைக் கக்கும், காசினிக்கே யென்னின்றுமெடுத்துப் பூமிக்குள்ளே நீருஞ்சுவறும்

நீ சொன்ன துபக்குத் திட்டாந்தமன்று, சூரியனுக்குக் கமலமலரக்கடவது, காந்தக்கல்லைக் கக்கக் கடவது, நீர் நிலத்திலே சுவறக்கடவது என்றொரு சங்கற்பமில்லை; காரியம் நிகழக்கண்டோம், இதுகொண்டு பூதங்கார்த்தா, பிரகிருதிகார்த்தா, கன்மங்கார்த்தா, காலங்கார்த்தா என்கின்ற வாதங்கள் வந்துலாவ; புத்திமான் கார்த்தாவென்பது பொய்யாய்த் தூரம் போயிற்று சத்தியம். நீ சொல்லியது சூரியனுக்குக் கமனசங்கற்பத் துவாரத்திருந்து கமலவிகாசாதி சங்கற்ப காரியமாமென்று காணுதலால் வேறுமாறில்லை

கடகாரியம் நிருமித்தலிலே குலாலனுக்கு விகாரமுண்டென்றீர், சகத்காரிய நிருமித்தலிலே சிவனுக்கு விகாரமில்லையென்றீர், சேதனப்பொருளாக விரண்டி லொன்றி லுமக்கு பட்சபாதமேன்? சத்தியமே நீ சொன்னது. கடவிகிர்தியிலே குலா

லதூல சரீர விகிரதி காரணம், குலால தூலசரீர விகிர்தியிலே குலாலசூக்கு மசரீரவிகிரதி காரணம், குலாலசூக்கும சரீரவிகிதியிலே விகிரதியில்லாத குலால சிற்சத்தி யசலசங்கற்பமேகாரணம அவவிடத்தும விகிர்தியில் விகிரதியுளள பொருள காரணமெனனில் அநவஸதைவரும குலாலதூல சூக்கும சரீரவிகிரதித துவாரததிலுமே குலாலனுககு விகிரதி சொனனோம, சடசாக்ஷாதசததி சரீரததில்லையெனபதே பரமார்ததம்.

சிருஷடியாவது சாததுவிக குணாதிகத்தாற் கர்ததிரு சங்கறபததால் முற்காரணததிற் காரியபபொருள வெளியாதல்

திதியாவது ராசத குணாதி கததாற ரேறறிய அந்தநதப பொருள அந்தநததசெதாழிலி லமைநது முதற்காரணம பற்றுக நிற்றல்.

சங்காரமாவது தாமதகுணாதிக்கத்தாற் றனது தனது தொழில்களை விடடு முதற்காரணததில் முழுகிமறைதல்.

திரோபாவமாவது பிருதிவியும நிநதிதமாகியபோககியப்பொருளினு மிது நனறென்று நழுவாதிருததல்

அநுக்கிரகமாவது பாசவீடுசிவததுவ விளககமெனவறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஒருகடவுண் மூன்று தொழி லிடையறாது செய்வானாயிற் பாரமெய்தி விகாரிபாவானபோலுமென்பார்க்கு, அஃதில்லையெனபது; தனக்குரிய முத்தொழில் செய்யுமதுபற்றி விகாரமெய்தாத ஞாயிற்றினவைதது அறியப்படுமெனபதாம்.

காசினிக்கென்பது உருபுமயக்கம்

இவையிரண்டு செய்யுளானும் புத்தர்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து ஈறுமாகி மருவுவித்திடுமாறு வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—— ൧ ——

பஞ்சராத்திரி இந்தக் கிருத்தியங்களை உம்முடைய கர்த்தா செய்யுமிடத்து விகாரியாகானோ வென்றுசொல்ல, அவனை மறுத்தருளிச்செய்கிறார்

தோற்றுவித்தளித்துப்பின்னுந் துடைத்தருள் தொழிற் கண்மூன்றும் போற்றவே யுடையனீசன்-பிரபஞ்சத்தைச் சிருட்டித்துந் திதித்துஞ் சங்கரித்துஞ் செய்கிற விந்தக் கிருத்தியங்கண் மூன்றும் நீ சொல்லுகிறதாக உம்முடைய கர்த்தாவுக்கு அநாதியே யுண்டாயிருக்கில்,—புருடன் விகாரமெனில் - ஆன்மாக்களைப்போலே கர்த்தாவுக்கும் விகாரமுண்டானதென்று நீ சொல்லில்? இந்தத் தொழில்களைச் செய்கைச்செய்தேயும் விகாரங்களிலகப்பட்டால், அதென்போலவெனில்?—சாற்றிய சந்திரோவிற்கத் தாமரையலருங் காந்தங்காற்றிடும் கனலீருங் காந்திரியகாசினிக்கே - சொல்லப்பட்ட ஆதித்தன் சன்னதியிலே தாமரையானது அலராநிற்கவும், சூரியகாந்தக் கல்லானது அக்கினியை யுமிழாநிற்கவும், சலமானது சுவராநிற்கவும், இந்தப் பூமியிலே மூன்று தொழிலும் ஆதித்தனாலே தொழிற்படுகைச் செய்தேயும் ஆதித்தனுக்கு விகாரமில்லா திருந்தாற்போல; கர்த்தாவும் முன்சொல்லப்பட்ட கிருத்தியங்களைச் செய்கைச் செய்தேயும் விகாரமற்றிருப்பன.

இந்தக் கிருத்தியங்களைச் செய்கச்செய்தேயும் கர்த்தாவுக்கு விகாரமில்லை யென்பதற்குப் பிரமாணம். திருவண்டப்பகுதி, "படைப்போற்படைக்கும் பழையோன்படைத்தவை-காப்போற்காக்குங் கடவுள்காப்பவை-கரப்போன்கரப்பவை கருதாக்-கருத்துடைக்கடவுள்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது கர்த்தா சிருட்டி திதி சங்காரமென்கிற மூன்று கிருத்தியங்களையுஞ் செய்கைச்செய்தேயும் விகாரமற்று நிற்பனென்னு முறைமை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

ஈசன் - ஒருகடவுள்,—தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தருந் தொழில்கண் மூன்றும் - தோன்றச்செய்து நிலைபெறுத்துப் பின்னு மிறுதியைச்செய்விக்கின்ற விம்முத்தொழிலும்,— போற்றவேயுடையன் - இடையறாது செய்யவாற்றலின்,—புகுந்து விகாரமெனினே - பரமெய்தி விகாரியாவான் போலுமெனப்பாற்க் கஃதில்லையென்பது,— சாற்றிய கதிரோனிற்க - யாவராலும் புகழப்படுகின்ற ஞாயிற்றினைச் சந்திக்கண்,— காந்தங்கனலைக்காற்றிடும் - சூரியகாந்தக் கல்லினக்கனெருப்பைக்காலச்செய்தலும்,—தாமரைபலரும் - தாமரையலரச் செய்தலும்,—காசினிக்கு - பூமியினகண்,—நீருங்காந்திடும் - நீரைக்காந்திடச் செய்தலுமாகிய தனக்குரியமுத்தொழில்செய்தும் அதுபற்றி விகாரமெய்தாத ஞாயிற்றினைத் தறியப் படுமென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானும் புத்கர்மகம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து ஈறுமாகி மருவிதிடுமாறு வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

உரைத்தவித் தொழில்கண்மூன்று மூவருக் குலகமோத, வரைத்தொரு வனுக்கேயாக்கி வைத்ததிங் கென்னையென்னில், விரைக்கம லத்தோன்மாலு மேவலான மேவினோர்கள், புரைதந்தி காரசத்தி புண்ணிய னணையலாலே. (கூச)

(இ-ர) உரைத்தவித் தொழில்கண் மூன்று மூவருக் குலகமோத வரைத்தொருவனுக்கேயாக்கி வைத்ததிங் கென்னையெனனில்

ஞானாசாரிய னித்தொழில்கண் மூன்று மூவருக்கு முரித்தென்று சொல்லச் சிவனுக்கேயிம்மூன்று வகைக் கிருத்தியமென்று வரையறுத்துக் கூறியதென்னையென்று நீசொல்லுவாயாகில்?

விரைக்கமலத் தோன்மாலு மேவலான மேவினோர்கள் புரைந்ததிகார சத்தி புண்ணிய னணையலாலே

மேலான சிவனுடைய வதிகாரசத்தி, பிரம விஷ்ணுக்களுக்கு அவனுடைய வேவலினாலே பொருந்தி யவரவர் கிருத்தியங்களைச் செய்வார்கள். எ - று.

அதிகாரசத்தியாவது, முக்குணன்மிகையாகிய வாமை பிரமாவை யதிட்டிக்கை, சேட்டை மாயனை யதிட்டித்துக் கிருத்தியங்களைச் செய்கை.

உம்மை எண்

ஏகார மீற்றசை.

இதற்கு விசுவசாரோத்தரமும் வாயவிய சங்கிதையும் சுவச்சந்தமு மெனவறிக. (௩௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சிவனுடைய வேவலாற் பிரமவிஷ்ணுக்கள் கிருத்தியங்களைப் பண்ணுவார்களென்பதுரைத்தல்.

உரைத்த வித்தொழில்களமூன்று மூவருக்குலகமோத வரைத்தொருவனுக்கேயாக்கி வைப்பதெங் கெனையெனில் - சொல்லாநின்ற சிருட்டி திதி சங்காரமென்னு மிம்மூன்றுகிருத்தியமும் பிரமவிஷ்ணுருத்திரா மூவர்க்கு முலகத்தார் சொல்ல, பிரமாதிகளை நீக்கி யொருவற்கே மூன்றுகிருத்தியமு மிவ்விடத்துச் சொல்லுவானேனெனின்,—விரைக்கமலத்தோன் மாலு மேவலால் மேவினோர்கள் - கமலோற்பவனும் விஷ்ணுவும், [உமையினுடைய சந்நிதியோக விசிஷ்டதையினுடைய காலருத்திரனும் இம்மூவரும்] சிரீகண்ட பரமேஸ்வரனுடைய வேவலினு லித்தொழில்களைப் பொருந்தினபேர்கள் அஃதெங்ஙனெனின்,—புரைத்ததிகாரசத்தி புண்ணியனண்ணலாலே - புண்ணியனாகிய பரமேஸ்வரனுடைய வதிகாரசத்தியானது, பிரமாசிருட்டிக்கவும் விஷ்ணுவிரக்ஷிக்கவுங் காலருத்திரன் சங்கரிக்கவும் பொருந்துகையாலே, ‡ அயோதஹத்தியென்றாற்போல சிவசத்தி யிவர்களை யதிட்டித்துச் செய்கையா லிவர்களே செய்ததெனப்பெறும். இப்பிரமாதிகளும் பதிபதார்த்தத்தி லந்தர்ப்பாவமெனவுமறிக. சிருஷ்டிகாலத்திற் சிரீகண்டபரமேஸ்வரர்

பிரகிருதியிற் சூக்குமசிருட்டியைத் தாமுண்டாக்கித் தூலசிருட்டியாதிக்குத் தம் அதிகாரசத்தியைப் பிரமாதிகளிடத்தில் வைத்து, ஸ்தூலமாயிருக்கிற சிருட்டிஸ்திதி சங்காரங்களைப் பண்ணுவிப்பர்.

‡ இரும்பு சுடுகிறது.

தது³க்தம் ஶ்ருதௌ ப்³ராஹ்மணே — யதா² ஜ்யேஷ்டோ ஜக³த்ஸ்ரஷ்டா விரிஞ்சி: பாலகோ ஹரி: । ஸம்ஹர்த்தா காலருத்³ராக்²யோ ந்ருத்யஸ்தே ஶைவ பிநாகிந: ॥

அல்லதூஉம், பிரமவிஷ்ணுருத்திரர்கள் அதிகாரசத்திக்குத் தக்க புண்ணியத்தைப் பண்ணிப் பெற்றவர்களென்று முன்மையாகக்காட்டிச் சொல்லுவார்கள். அதற்கு வேதாகமங்களில் பல விரோத முண்டு. அஃதன்றியும் பிரசாதத்திரத்திலும் 'நவந்தருபேதத்தை நாதனே நடிப்பன' என்பதற்கும் விரோதமாதலால். பிரமாவினிடத்திற் கிரியாசத்தி பதிந்து கருமப்பிரதானமும் ஞானப்பிரதானமுமாயிருக்கும், விஷ்ணுவினிடத்தில் ஞானக்கிரியைகள் சமானமாய்ப் பதிந்து ஞானகருமசாமியமாயிருக்கும், காலருத்திரனிடத்தில் ஞானசத்தி பதிந்து ஞானப்பிரதானமாயிருக்கும். சிவனமாயாதீதர். பிரமா சிருஷ்டித்த பிரபஞ்சத்தை விஷ்ணு பாலனம் பண்ணுவர், காலருத்திரர் சங்காரம் பண்ணுவர். ஆகையாலவர்கள் சாஞ்சனர்களிற் பிரகிருதியிற் குணத்திரயத்தைச் சிஷ்டித்துக்கொண்டு பிரமாண்டவர்த்திகளாயிருப்பார்கள்

தது³க்தம் - ப்³ரஹ்மாணம் ப்³ரஹ்மவித்³யாஸ்யா ஶ்ரேஷ்டம் விஷ்ணும் த்ரியாம்பி³ந ॥ ஸாத்த்விகம் ருத்³ரம் ஸ்யாஸ்ய ஸ்யாச்ச வாராஜஸம் தாமஸாஸ: । இதி.

வஸ்து பேதமில்லாதிருந்தும் ஞான தாரதம்மியத்தினு ம் ஸ்தான தாரதம்மியத்தினுங் கிருத்திய தாரதம்மியத்தி னும்பேதமாய் குருசிஷ்ய நியாயமாகவுஞ் சுவாமி பிருத்ய நி யாயமாகவு நடப்பதுமென் றறிகவென்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிருட்டி திதி சங்காரங்கள் பிரம விஷ்ணு காலாக்கினிரு த்திர வியாசகருக்குச் சொல்லியிருக்க மூன்றுந்தொழிலுஞ், சிரீக ண்டமூர்த்திக்குச் சொல்லியதென்னையெனின்? அதற்கு உத்தரமு ரைக்கின்றார்.

உரைத்தவித்தொழில்கள் மூன்றும மூவருக் குலகமோத- சிருட்டி திதி சங்காரமென்கிற கிருத்திய மூன்றும், பிரமவிஷ் ணு காலாக்கினிருத்திர வியாசருக்கு லுகஞ்சொல்ல,—

வரைந்தொருவனுக்கேயாக்கி வைத்தது மென்னையெ னில் - குணமத்திய நிலையராயும், பிரகிருதி யக்கிர நிலையரா யும்,இராகாந்த நிலையராயுமிருக்கின்ற, ஸ்ரீகண்டமூர்த்தி யொ ருவருக்கே நியமித்துச் சொல்லியதேதென்னில்? முறைமை யிற சொல்லுவாம.

பிரம்ம மகாசிருஷ்டி காலத்திற் பரசிவன் சுத்தமாயையி லின்றும பொருட் பிரபஞ்சஞ் சொற்பிரபஞ்சமுமாயிருக்கு ம சுத்தத்துவமஞ்சையுஞ் சுத்தாத்துவவாசிகட்குச் சிருஷ்டித் ததில் புவனங்கள ஞசகுப்தேகங்கள் தூலதேகங்கள் போக்கிய ப்பொருள்களிவைகளைப் பொதுச்சிறப்பாசப் பண்ணிப் பொரு ந்தி, சுத்த சுத்தாசுத்த வசுத்தாத்துவ வாசிகளெல்லார்க்கு

ம் வேறுவேறு நாதமாகிய பரதேகங்களைச் சிறப்பாகப்பண்ணிப்பொருந்தி, அநந்தப் பரதேகத்துக்குள் ளிருக்கும் பிரணவகலா பஞ்சகரூபமாகிய சிவதத்துவ மஞ்ஞையு மிருக்கப் பண்ணிக் காத்து, மஹாப்பிரளயத்தின் முற்று மவாந்தரத்துஞ் சிலதேகாதிகளையுஞ் சங்கரிப்பர்

பின்னந்த மஹாசிருட்டி காலத்தி லநந்தேசுரர் அசுத்தமாயையினின்றும் புவனக்கோத்தாயுஞ் சூக்குமதேகக்கோத்தாயும் இருவகையா யிருக்கின்ற கலாதிபிருதிவியந்த தத்துவங்களையுந் தூலசரீரங்களையும் போக்கியப் பொருள்களையும் பொதுச்சிறப்பாகப் பண்ணிப் பொருந்திக் காத்து, மஹாப்பிரளயத்தின் முற்று மவாந்தரத்துஞ் சிற்சில தேகங்களையும் ஸ்ரீகண்டாதித் துவாரத்தினாலுந் தாமாயுஞ் சங்கரிப்பர்

மத்தியம சிருஷ்டிகாலத்தில் ஸ்ரீமத் ஸ்ரீகண்டருத்திரர் பிரகிருதியினின்றும் புவனாகாரக் கோத்துமாத்திரமா யிருக்கின்ற குணாதி பிருதிவியந்த தத்துவங்களைப் பொதுவாகப் பண்ணிப் போக்கியப் பொருள்களைத் தூலதேகங்களைப் பொதுச்சிறப்பாகப் பண்ணிப் பொருந்திக் காத்து மத்தியமப் பிரளயத்தில் முற்றுஞ் சங்கரிப்பர்

அவரேவலால் குணநிலையர்களா யிருக்கும் பிரமவிஷ்ணுக்களும், பிரமாண்டத் தலைநிலையர்களாயிருக்கும் பிரமவிஷ்ணுக்களும் குணாதிபிருதிவியந்த புவனங்களிற் றூலதேகங்களையும் போக்கியப்பொருள்களையும் பொதுச்சிறப்பாகப் பண்ணிப் பொருந்திக் காப்பார்கள் பிரதமப்பிரளயத்தில் ஸ்ரீகண்டரேவலாற் றமதிருப்புத்தொடங்கிச் சுவர்க்கபரியந்தஞ் சங்கரிக்குங் காலாக்கினிருத்திரரே அவாந்தரத்தும் பிரமாண்டத்துட் டேகசரீரங்களோடு போக்கியப் பொருள்களைச் சங்கரிப்பர். ஆதலால்,—

புண்ணியன - பரசிவாநுக்கிரகம் பெற்றுப் பரிசுத்தரா ய்ச் சிவருயிருக்கு முன்சொல்லிய ஸ்ரீகண்டபரமேசுரன்,—

புரைத்ததிகார சத்தி நண்ணலாலே - பரசிவனிடத்தினி னறும பரசிவனுக கொத்திருக்கும பிரகிருதிகாரிய சிருஷ்டியா தி கிர்த்தியஞ் செய்யுஞ் சாமாத்தியம பெறலாலே, அவரோவுதற் காத்தா,—

விரைக்கமலத்தோன மாலு மேவலான மேவினோர்கள- காலாகனிருத்திரரோடு பிரமவிஷ்ணுககளியற்றுந காத் தாககள ஆதலால், அவரொருவருக்கேயாகவைத்தது அதுவ னறி

புண்ணியன - ஸ்ரீம தநந்தேசுராநுக்கிரகம பெற்றுப் பரி சுத்தாயச சிவருயிருக்கும பிரமாணடத்துட் சிவலோக கை லாச மேருசிகர நிலையராகிய ஸ்ரீகண்டபரமேஸ்வரன,

புரைத்ததிகாரசத்தி நண்ணலாலே-ஸ்ரீம தநந்தேசுரரிட த்தினினறு மநந்தேசுரருககொத்திருக்கும் பிரமாண்டத்துட் பிரமவிஷ்ணுமுதலோாகளுககு நிகராஹநுக கிரகம டணணுஞ சாமாத்தியம பெறலாலே அவரோவுதற காத்தா

விரைக்கமலத்தோனமாலு மேவலான மேவினோர்கள்-பிர மாணடத்துள்நிலையராகிய காலாககினி ருத்திரரோடு கூடியிரு க்கும் பிரமவிஷ்ணுக்களியற்றுந்தற காத்தாககள. அது வனறி யும,

புண்ணியன - பரசிவாநுககிரகம் பெற்றுப் பரிசுத்தரா ய்ச சிவருயிருக்கும் ஈசுரதத்துவ நிலையராகிய ஸ்ரீகண்டபர மேசுரன,

புரைத்ததிகார சத்தி நண்ணலாலே-பரசிவனிடத்தினின றும் பரசிவனுக கொத்திருக்கு மநந்தேசுரரோடுகூடி மாயா

காரிய சிருட்டியாதி கிருத்தியஞ் செய்யுஞ் சாமர்த்தியம் பெறா லலே, அவர் ஸ்வயமாயுங் குணநிலைய பிரமாணடநிலைய விரு ஸ்ரீகண்டதுவாரத்திலேயு மேவுதற் கர்த்தரா,

விரைசகமலத்தோன மாலு மேவலான மேவினோர்கள்-கு ணத்தள பிரமாணடத்த விருவகைய பிரமவிஷ்ணுக்களு மி யற்றுதற் கர்த்தாக்கள்,

இப்படி ஸ்ரீகண்டத் திரியம பிரேரகம், காலாக்கினி ருத் திரரோடு பிரம விஷ்ணு சதுட்டயம பிரேரிடம் எனவறிக

பரசிவ னேவுதற்கர்த்தா, அநந்தேசாதிசேரோடுகூட ஸ்ரீ கண்டத்திரயம பிரமவிஷ்ணு சதுஷ்டயமெல்லா மியற்றுதற கர்த்தாவாயிருக்கும

* இவ்விடத்து ஞானப்பிரகாசர் ௩௯-௩௭-வது செய்யு டகளை வைத்து, ௩௪-௩௫-வது செய்யுட்களை ௩௯-௩௭-வதாக அமைத்து உரையாடம கூறியிருக்கின்றனர அது சிருஷ்டியா திகளைக் கூறி அதன்காரண முணர்தற்கேவண்டு மெனபதுபோ லும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அயனமாலிருவரும், புண்ணிய விசேடத்தான முதல்வனு டைய அதிகாரசத்தி அவனதேயலாற் பெற்றுடையாரன்றி அத் தொழிற்கு சுதந்திரரல்லராகலான, முத்தொழிலுஞ் செய்தற் குரிய சுதந்திரமீறுமாகி யொருவனுங்கேயுண்டெனபதாம்

நல்வினைக்கண் வாழ்நாளின்மாலயனுகி" என்றார் புடை நூலாசிரியரும். வேதம் புராணம்இதிகாச முதலியவற்றிற்கும்

இதுவே கருத்தென்பது சதுர்வேததாற்பரியசங்கிரக முதலிய வற்றுட் காண்க.

வரைந்து வரைந்தென வலித்தது.

புரைத்தவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது

புரைத்தல் உயர்தல்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலும் பஞ்சராத்திரி இந்த மூன்றுதொழிலும் பிரம்மா விட்டுணு உருத்திரன் என்கிற மூன்றுபேர்க்கு முள்ளதென்று பெரியோர்கள் சொல்ல, சிவ னொருவனுமே செய்வானென்று சொல்லுவா னேனென்றுசொல்ல, அவனை மறுத் தருளிச் செய்கிறார்.

உரைத்தவித்த தொழில்கள் மூன்று மூவருக்கு முளதென - சொல்லப்பட்ட விந்தக் கிருத்தியங்கள் மூன்றும் பிரமாவுக்கும் விட்டுணுவுக்கும் உருத்திரனுக்கும் உள்ளதென்று ஞாதாக்கள் சொல்ல,—வரைந்தொருவனுக்கேயாக்கி வைப்பதியங்கென்னை யெனில் - இந்த மூன்று தொழிலுஞ் சிவனொருவனுக்குமே யுள்ளதென்று நீ நியமித்துச் சொன்னதெப்படியென்று சொல்லுகிறாயாகில், சிருட்டித்தி யிரண்டும் பிரம விட்டுணுக்களுக்குச் சிவன் கற்பித்த வதிகாரமாகையால், மூன்று தொழிலுஞ் சிவனுக்கேயுள்ளது அதெங்ஙனே யெனில்,—விளைக்கமலத் தோன்மாலும் மேலலானமேவினோர்கள புரைத்ததிகாரசத்திபு

ண்ணிய னண்ணலாலே- மணம்பொருந்தின தாமரைப் பூவிலே இருக்கும் பிரமாவும் விட்டுணுவுங் கர்த்தாவினுடைய வேவலி னாலே தந்தாங் கிருத்தியங்களைச் செய்கிற வர்கள், பொருந்தப்பட்ட புவனங்களிலுண்டான ஆஞ்ஞாசத்திகளை அநாதியே தம்பிரானார் பொருந்தி நின்று அவரவர் கிருத்தியங்களைச் செய்விக்கையினாலே, அவர்களுக்கு ஒரு முதன்மையில்லை, சிவனுக்கே யெல்லா முதன்மையும்

வைத்தொருவனுக்கே யாக்கியென்பதற்குப் பிரமாணம் திருவாசகம்-சதகம் "ஆமாறுன மறையவனு நீயேயாத லறிந்தியா னியாவரினுங் கடையனாய், நாயினேனாதலையு நோக்கிக்கண்டு நாதனே நானுனக்கோ ரன்பனென்பே, னாயினேனாதலா லாண்டுகொண்டா யடியார்தா மில்லையே யன்றிமற்றோர், பேயனேனிதுதானும் பெருமையன்றே யெம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே" என்றும், பரபட்சம் நாரணனயனையீன்றுமயனும் நாரணனையீன்றுங், காரணமொருவருக்கங் கொருவர்தா மிருவருக்கும், வாரணமுரித்தவனால் காரணமென்றுமன்றத், தாரணை முளைக்கும்பக்கத் தவர்களுடைந்தாரன்றே." என்னுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - பாஞ் - மறு, எ - செ.

"விரைக்கமலத்தோன் மாலு மேலாமேவினோர்கள், ரபுரைத்தக்காரசத்திபுண்ணியனண்ணலாலே" என்பதற்குப் பிரமாணம் திருப்பாட்டு "பாராழிவட்டம் பகையால் நலிந்தாட்டவாடி, பேராழியானதிடாச்சடருசெய்தவாபேணி, நீராழிவிட்டேற நெஞ்சிடங் கொண்டவர்க்குப, போராழியீந்தபுகழும் புகழுற்றதன்றே" என்றும், திருவாசகம்-சதகம். சாவமுன்னுட்டக்கன் வேள்வித்தகர்தின்றுநஞ்சமஞ்சி, யாவவென்றாவெ

ன் றவிதாவிடுமவரவர்க்கே, மூவரொன்றே யெம்பிரானொரு
மேனி விண்ணு மடுமேனமேற், றேவரொன்றேயிறுமாந் தென்
னை பாவந் திரிவரே." என்றார், திருத்தோணோக்கம். "பங்கய
மாயிரம் பூவினிலோர் பூக்குறையத், தங்கண்ணிடந்தரன் சேவடி
மேற் சாற்றுதலுஞ், சங்கரனெம்பிரான் சக்கரமாற் கருளிய
வா, றெங்கும்பரவிநாந் தோணோக்க மாடாமோ" என்றும்,
திருச்சாழல் "சலமுடையசலந்தரன் றுடறடிந்ததல்லாழி,
நலமுடையநாரணற்கன் றருளியவாறென்னேடி, நலமுடைய
நாரணன்ற னயனமிடந்தரனடிக்கீழலராக விடவாழி யருளின
னகாண்சாழலோ." என்றும், பரபட்சம், "சீவனகளசனன
ம்போலச் சிலயுடறுகித்தமாலைத், தேவெனறே யுலகங்காக்க
ச்சுவேச்சையால் சனித்தானெனவீர், பூவனபின படைக்கமாட்
டா தரனடிபோற்றவேதக, கோவந்தமுகத்திற்றுனறிச் சிரு
ட்டியைக்கொடுத்தல்கூறும்," என்றும், வானங்கீழ்மண்ணுமெல்
லாமாயனே கத்தாவெனபாய், தானஞ்சுஞ்சலந்தரனற னுடல்
கீண்டசக்கரத்தை, யானைஞ்சுமாடுவானபாற் பெற்றுலகளிக்க
வார்த்தை, தானெங்ஙனாகுமெல்லாஞ் சங்கரன காப்பேயா
கும்," என்றும், அஞ்சியனறிந்தாருடைய சுரனைக்குமரனாலே,
தஞ்சிவித்தொருபெண்ணாலே தாருகனுடறணிப்பித்த, தஞ்சிட
ப்புரந்தீமூட்டிச் சலந்தரனுடல்கீண்டோச, நஞ்சினை யுண்டுமன்
ரே நாயகனுலகங்காத்தான." என்னுமதூஉங் கண்டுகொள்க

சித் - பாஞ - மறு, சூ - கூ - உஉ - செ

இதனாற் சொல்லியது சருவசிருட்டியில் மூன்றுதொழி
லும் சிவனே செய்வனென்றும், பிரம விட்டுணுக்களுடை
ய சிருட்டியுந் திதியுஞ் சிவனகொடுக்க வவர்கள் செயவார்களெ
ன்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

உரைத்த இத்தொழில்களுமூன்றும் - சொல்லப்படுமிம்மு த்தொழில்களும்,—மூவருக்குலகமோத - மூன்றுகடவுளுக்குமியற் றுமென வுலகத்தார் சொல்லாநிற்பவும்,—வரைந்து தொருவனுக்கே யாக்கிவைத்ததிங் கென்னையெனில்- வரையறுத்து ஒருகடவு ளுக்கேமுத்தொழிலுஞ் சுதந்தரமெனப் பதென்னையெனில்?--விரை சுகமலத்தோனுமாலும்-வாசனைபொருந்திய கமலத்தின்கணுள்ள அயனு மாலுமிருவரும்,—புண்ணிய நல்வலாலே - புண் ணிய விசேடத்தான்,—புரைத்ததிகாரசத்தி - முதல்வனுடைய உயர்ந்த அதிகாரசத்தி,—ஏவலான மேவுவோர்கள் - அவனதே வலாற் பெற்றுடையாரன்றிச் சுதந்திரரல்லா ஆகலான் முத் தொழிலும் செய்தற்குரிய சுதந்திர மீறுமாகி ஒருவனுக்கே யுண்டென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

இறுதியாங் காலந்தன்னி லொருவனே யிருவரு க்க, முறுதியி னின்றுமீள வுலகினை முன்போலாக்கா தா, மறுதியி லரனேயெல்லா மழித்தலா லவனுலீ ன்றும், பெறுதுநா மாகமோகம் பேரதி காரணத் தாலே. (௧௫)

(இ-ள்) இறுதி யாங் காலந் தன்னி லொருவனே — எல்லாரு மொடுங்கிய சங்காரகாலத்தி லே சிவனொருவனுமே யுளன்.

இருவருந் தமு றதிபி னின்றொ ழியில்

உம்முடைய சிவனைப்போல விவ்விருவருங் காத்தாவாய்ச் சங்காரப்படார்களோ வென்னில?

இறுதி தானுண்டாகாதாம்

அப்பொழுது ப்ரகிருதி மட்டு மழிகிற முக்கினசங்காரமும், மாயைமட்டு மழிகிற மத்திமசங்காரமும், நாதமட்டுமழிகிற மகாசங்காரமுமாக இவை மூவிதமான சங்காரமுண்டாகமாட்டாது;

அறுதிவி லரனே யெல்லா மழித்தலால்.

இம் மூவிதமான சங்காரத்தையுஞ் சிவனே சங்கரிக்கையால்

அவருவினனும் பெறுதனா மாக்க நோக்கம் பேரதி கரணத் தாலே.

அந்தக் கர்த்தாக்களானே மேலுஞ் சிருட்டியுந் திதியு மவ்விருவரையு மதிட்டித்துக் கொண்டு கிருத்தியங்களை யுண்டாக்காநிற்பன. எ-று

அதிகரண மென்பது வதிட்டித்து நடத்துவதென்ன வறிக

இதற்குச் சுவாயம்புவத்திலும் காந்தபுராணத்திலுங் காண்க. (௫௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இதுவுமது

இறுதியாங்காலந்தன்னி லொருவனே - மஹாப்பிரளயத்திற் பரமேஸ்வர னொருவனே நிற்பன. [ஏகாரத்தினாற் பிரம

விஷ்ணுக்களு முபசம்மாரத்தைப் பொருந்துவர்கள்,]—இருவ ருந்தம முறுத்பினொன்னி லிறுதிதானுண்டாகாதாம் - பிரமாவும் விஷ்ணுவுந் தங்கள பலத்திலுலழியாம லினருர்களென்னில், சிருஷ்டி ஸ்திதி நிமித்தமா யுண்டானபேர் நிற்கிலசிருஷ்டியுந் ஸ்திதியுமாயுள்ள பிரபஞ்சஞ் சம்ஹாரப்படாது. ஆகையா லம்மூர்த்திகளு முபசம்மாரப்படும். சிருட்டி ஸ்திதி கர்த்தாக்களு முபசம்மாரப்படுகையால் மேல் சிருஷ்டியாதி கிருத்தியமின்றிப் பிரபஞ்சஞ் சூனியமாமெனின்?—அநாதியிலரனேயெல்லா மழித்தலா லவனு லினமமபெறுதனா மாகக்கோகம்பேரதிகரணத்தாலே - தனக்கநிமலாகவரனே சிருஷ்டி ஸ்திதி கர்த்தாக்களையும் பிரபஞ்சத்தையுஞ் சம்ஹரித்து நிற்கையாலும், புனர்ச்சிருஷ்டியுண்டென்று கேட்கப்படுகையினுலும், பாரிசேஷப்பிரமாணத்தினு லவ்வரனே சூக்ஷும சிருஷ்டியையுண்டாக்கி ஸ்தூல கிருத்தியத்திற்குப பிரமாதிமூர்த்திகள் திரயங்களையுமுண்டாக்கி யம்மூர்த்திகளி லதிப்பிரவிஷ்டரா யக்கிருத்தியங்களைப் பண்ணுவா. ஆகையாற் றடையற்ற விச்சாஞானக்கிரியைகளை யுடைய பரமேஸ்வரனு லானமாக்கவெல்லா முர்பத்தியாதி தருமங்களைப் பெறுவர்கள் நாமெனவையால் சகலமென நிதன பொருள்.

ஸ்ரீமஹாபாரதே — சுருதிபாரதே

ஸர்வே ப்ராதாஸ்து தாவத் ஸர்வே ப்ராதாவிதா ஸ

மா: | மரீசயாசயாஸ்ஸர்வே ப்ராதா ஸக ஸக ஸமே

ஷா: || த்ரைலோக்யே ஸர்வஜீவேஷு ஜீவேஷு ஜீவோ ஸ்ரீசிவ

ராத்ஜா | ஸகா ஸா ஸாக்ஷிணீ ஸம்மா ஸிந்தே

த்வஹிக்ஸ்ருஷ்டி: ||

இம்மூன்று விருத்தமும் பாஞ்சராத்திமத நிராகரணம், அம்மதத்தின் விஸ்தாரம் பரபக்ஷத்திற் சொல்லினோம் கண்டு, கொள்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆகையால் மகாப்பிரளயத்தில் பரசிவமொன்றுமே பதிகளுக்குட் பாரிசேஷிகருமென்று படிக்கின்றார்.

இறுதியாங் காலந்தன்னில்-மகாமபிரளயத்தில்,—

ஒருவனே - பரசிவனொருவனே, பதிகளிற் பாரிசேடித்து நிற்பா,—

இருவருந் தாமுறுதியி னன்றொன்னில் - பிரம விஷ்ணுக்களிருவரும், (தாமென்பது பவுராணிகமதப் பழக்கத்திற் படித்தது,) சிவசாஸ்த்திரீயத்திற்கு அநந்தாதி அதிகாரகாத் தாக்களினவருந்தமதுகிருத்தியங்களோ டிருந்தாக்களாகில்,—

இறுதிதானுண்டாகாதாம்-மகாமபிரளயம் வாராதாகும். ஆதலால்,—

அறுதியில் - அத்திதிகால முடிவில்,—

அரனே-பரசிவனே,

எல்லா மழித்தலால் - சிவதத்துவமுதற் பிருதிவி தத்துவ பரியந்தம் பிரபஞ்சமுற்றுஞ் சங்கரிப்பித்துச் சங்கரித்தலால்,—

அவனால் - அந்தப்பரசிவனால்,—

போதி காரணத்தாலே-“அதபத்யாதிஷ்டாநம்” என்று ஸ்ரீ மன் மதங்காகமவசனத்தால் தாதான மியத்தினால் அந்தப்பர சிவனுக்குப்பெரிதா மிருப்பாருஞ் சத்திகரணத்தினாலே தானே.

திரும்பவெடுத்துக்கூட்டுக.

போதிகரணத்தாலே-போதிகரணத்தினின்று மென (வே ற்றுமைமாறுக) "நித்யாதிஷ்டேயரூபிணி" என்று பஞ்சகரவ சனத்தினாற் பரிக்கிரக சத்தியாதலா லந்தப் பரசிவனுக்குப் பெரிதாமிருப்பாகுஞ் சுத்தமாயையினின்று சிவதத்துவ மஞ் சுக்கும்,

இன்னும்-இனிமேலும்,—

ஆக்கநோக்கம் பெறுதும்—சிருட்டி திதிகளைக் காண் போம்

திரும்ப வெடுத்துக்கூட்டுக.

போதிகாரணத்தாலே - பரிக்கிரகசத்தியினால் அந்தப் ப ரசிவனுக்குப் பெரிதாயிருப்பாகு மிபற்றுதற காரணராவாகும் அநந்தேசுரனாலேதான்.

திரும்பவெடுத்துக் கூட்டுக

போதிகரணத்தாலே - தாதானமியத்தினாலந்த வநந்தே சுரருக்குப் பெரிதாமிருப்பாகு மநந்தவநந்தேசுரசத்தி காரணத் தினாலேதான்

திரும்பவெடுத்துக்கூட்டுக

போதிகரணத்தாலே- (போதிகரணத்தினின்றுமென வே ற்றுமைமாறுக) பரிக்கிரகசத்தியினால் அநந்தவநந்தேசுரருக்கு ப்பெரிதாமிருப்பாகும அசுத்தமாயையினின்றுங் காலேகாலத த்துவமாதியாய்ப் பிருதிவி தத்துவமந்தமாகுந் தத்துவங்களு க்கு,—

இன்னும்,—

ஆக்கநோக்கம் பெறுதும்-திரும்பச் சிருட்டி ஸ்திதிகளைக் காண்பாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சங்காரகாலத்தில் ஏனையிருவருந் தத்த மாற்றலோடு நிலை பெறுவாராயின உலகஞ் சங்காரமாதலின்மையான, அக்காலத்து அவ்விருவரும் உளரல்லரென்பது பெற்றாம். அல்லதூஉம், சங்காரகடவுளெனப்படுவோன், சிலவற்றை யொழித்துச் சங்கரிப்பானல்லன். அப்பெற்றியனாகிய சங்காரகடவுளை வேறு சங்கரிப்பாரில்லை யாகலான் முழுவதுஞ் சங்கரித்தவழி அவ னொருவனே எஞ்சிநிற்றல் பெறப்படுதலானும், ஒடுங்கியவுலகங் கட்குப் பெரியதோராதாரம் அவனேயாகலானும், ஒடுங்கியவு லகத்தை மீளத் தோற்றுதற்கும் நிறுத்துதற்கும் அவனேயுரிய னென்பது தானே போதருமென்பதாம்.

அறுதியிலரனென்னும் பெயரடையானும் ஓரேதுக் கூறிய வாறு.

இன்னும் மீளவும்.

ஆதாரம் அதிகாரமென்பன ஒருபொருட்கிளவி.

பேரதிகரணமென விசேடித்தார், முதற்காரணமும் அதி காரமாதலுண்மையின்.

இவையிரண்டு செய்யுளானும் பௌராணிகர் மதமும் பாரி சேடமுஞ் சடாவை முறையே ஆகமவளவைபற்றியும் பொருந்து மாறுபற்றியும் பரிகரித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

இதனானே பஞ்சராத்திரமதமும் இரணியகருப்ப மதங்க ளைப் பரிகரித்தவாறுமாயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

——0——

சிருட்டிகாலத்துக்குப் பிரமாவும் திதிகாலத்துக்கு விஷ்ணுவும் சங்காரகாலத்துக்கு உருத்திரனுமாகத் தந்தாங் கிருத்தியங்களைச் செய்கிறது கண்டிருக்கச்செய்தே, மூன்று காலத்துக்குஞ் சங்கார கர்த்தாவேயுள்ள தியாங்கனங் காணப்பட்டதென்ற பாஞ்சராத்திரியை நோக்கி மேலு மருளிச்செய்கின்றார்.

இறுதியாங்காலந்தனி லொருவனே - சங்காரகாலத்தனில் சிவன் ஒருவனுமேயுள்ளன். காக்கிறவனிருக்கக் காவலழியுமோ! ஆகையாலே,—இருவருந் தம் முறுதியாய் நின்றாரெனில் - அந்தச் சங்காரகாலத்திலும் பிரமவிஷ்ணுக்க ளிருவருந் தங்கள் பலத்தினாலே அழியாமல் நிற்பாரகளென்று நீ சொல்லில்,—இறுதிதானுண்டாகாதாம் - சங்காரமென்கிற கிருத்திய முண்டாகிறது நோக்கவில்லையாம். ஆகையா லவர்களையும் அவர்கள் கிருத்தியங்களையும் அழிப்பன். கிருத்தியங்களை யழியாமற் கிருத்திய கர்த்தாக்களையு மழித்தால்,மேல கிருத்தியமுண்டாம்படி யெப்படி யெனில்,—அறுதியிலரனேயெல்லா மழித்தலா லவனாலின்னம் பெறுவது நாமாக்கம் நோக்கம் - அந்தச் சங்காரகாலத்தில் சிவனே சருவத்தையும் சங்கரிக்கையினாலே அந்தச் சிவனாலே மேலும் சிருட்டி திதியும் நாமெல்லாரும் பெறத்தக்கதுண்டாம். சங்காரகர்த்தாவாலே சங்காரமொழியச் சிருட்டி திதியுண்டாம்படி எப்படியெனில்,—பேரதிகரணைத்தாலே - இந்தக் கிருத்தியங்களைக் கொடுக்கத்தக்க மேலான வதிகார சத்திகளைத் தனக்கு கருவிகளாக வுடையவனாகையினாலே.

இதற்குப் பிரமாணம் முன்னின்ற திருவிருத்தத்துக்கிட்ட பிரமாணங்களைக் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது சங்காரகாலத்திற் பிரமவிஷ்ணுக்களையு மவர்களுடைய கிருத்தியங்களையு மழித்துத் தானொருவனுமேயாய் நிற்பனென்றும், சிருஷ்டிகாலத்திலே அவர்களையும் அவர்கள் தொழில்களையு முண்டாக்குவனென்றும், திதிகாலத்தி லவர்களுடைய வதிகாரத்தையுஞ் சங்காரகர்த்தாவே கொடுப்பானென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

இறுதியாங்காலந்தன்னில்-சங்காரகாலத்தில்,—இருவருக்கும்முறுதியி னின்றானில்-ஏனையிருவரும் தத்தமாற்றலோடு நிலைபெறுவாராயின்,—இறுதிகா ணுண்டாகாதாம் - உலகஞ் சங்காரமாதலின்மையானக்காலத்தவ்விருவருமுளரல்லரென்பதூஉம் பெற்றாம்,—அறுதியிலரனே எல்லாமழித்தலான-அல்லதூஉஞ் சங்காரக் கடவுளெனப்படுவோன் சிலவற்றையொழித்துச் சங்கரிப்பானல்லன் அப்பெற்றியனாகிய சங்காரக்கடவுளை வேறு சங்கரிப்பாரின்மையாகலான்முழுதுஞ் சங்கரித்வழி,—ஒருவனே-அவ்வொருவனே எஞ்சிநிற்றல் பெறப்படுதலானும்,—பேரதிகரணத்தானே - ஒடுங்கிய உலகங்கட்குப் பெரியதோராதாரமவனே யாகலானும்,—ஆக்கநோக்க மவனாலினும் பெறுதும் - ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுதற்கு நிறுத்தற்குமவனே யுரியனென்பது தானேபோதருமென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானும் பவுராணிகர்மதப்பற்றி நிகழுங் கடாவை முறைமேயாகமவளவைபற்றியும் பொருந்தமைபற்றியும் பரிகரித்து மேலதுவலியுறுத்தப்பட்டது.

இதனானே பாஞ்சராத்திரிமதம் இரணியகருப்ப மதங்களைப் பரிகரித்தவாறு மாயிற்று.

மறைஞானதேசிகர் உரை.

இந்தத்தொழில்க ளென்னபயனைக்கருதிச் செய்
கிறு னென்றவனை நோக்கி யுணர்த்துகிறார்

சொன்னவித் தொழில்களென்ன காரணந் தோற்
றவென்னின், முன்னவன் விளையாட்டென்று மொழி
தலு மாமுயிர்கட்கு, மன்னிய புத்திமுத்தி வழங்கவு ம
ருளான் முனமே, துன்னிய மலங்களெல்லாந் துடை
ப்பதுஞ் சொல்லலாமே. (௩௬)

(இ-ள்) சொன்னவித்தொழில்களென்ன காரணந் தோற்றவென்னிற்	இக்கிருத்தியங்கள் கர்த்தாவாலுண்டாச்சுகைக்குக் காரணமென்னென்று நீ சொல்லில்
முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம்	அந்தக்கர்த்தா வொருப்ரயோசனத்தைக் கருதிச்செய்யாதபடியாலே யவனது லீலையென்று சொல்லப்படும்.

இவ்விளையாட்டுச் சிறுபிள்ளைகளாட்டம்போலப் பலத்தைக்கொடாதோவென்னில்?

உயிர்கட்கு மன்னிய புத்திமுத்தி வழங்கவு மருளான் முனமே	அவனதருளாலான்மாக்களுக்கு நிலைபெற்ற பராபரபோகங்களைப் புசித்துத் தொலைதற்பொருட்டும், அநாதியே செறிந்துநின்ற மலங்களை யொழிக்கையின் பொருட்டும்,

துன்னிய மலங்க மோட்சத்தை யடைவிக்கைக்குக் காரண
ளெல்லாந் தூ மென்றுஞ் சொல்லலாகும். எ - று.
டைப்பதுஞ்சொ
ல்லலாமே

இதற்குச் சுவாயம்புவ மெனவறிக. (௩௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சிருட்டியாதி சூக்ஷ்மகிருத்தியங்கட் கேதுகூறல்.

சொன்னவித தொழில்க ளெனனகாரணந் தோற்றவென னில் - கீழ்ச்சொல்லிப்போந்த சிருட்டியாதிபஞ்சகிருத்தியத் தையும் பண்ணுவதான கிரியை நிர்விகாரியான சிவனுடைய சத்தித்துவாரா வுண்டாகவேண்டிய வேதுவேதெனின்,—மண ணிபவுயிராக கருளாற்புத்திமுத்திவழங்கவும் -அநாதியே யாண வாதிபாசங்களைப் பொருந்தித் துக்கிக்கிற வான்மாக்களுக்குக் கருணையினுன மாயையினின்றுங் கலாதிகளையுண்டாக்கி யாண வசத்திகளை பேகதேசநீக்கிப் போகத்தையு மாணவமாயைக ளையுஞ் சாவாணமறநீக்கி யத்தனுன மோக்ஷத்தையுங் கொடுப் பது, (உபமை யெண்ணும்மை) ஆகிற்கர்த்தாவுக்குப் பிரயாசமு ண்டாமெனின்? இல்லையெனபதற்காக,—முன்னவனவிளையாட் டென்று மொழிதலுமாம் - மூன்றுபொருள்களுக்குள் முந்தி னபொருளாகிய பதியினுடைய லீலாமாத்திர மென்று சொல் லலுமாம் (சொல்லலுமாமென்றது சந்நிதிமாத்திரத்திற் கிருத்தி யமுண்டாமெனபது கருத்து) நித்தியமாகிய வாணவமாயைக ளிற் சத்திசமூகங்களைச் சிருட்டிகாலத்தி லுண்டாக்கிச் சங் காரகாலத்தி லொடுக்குவ ரென்று கீழ்ச்சொல்லிப் போந்து, இவ்விடத்துக் காரணங்களை நீக்குவ தென்ற தெவ்வாறெ னின?—ஆங்கேதுன்னிய மலங்களெல்லாந் துடைப்பதுஞ்சொ

ல்லாமே - அச்சத்திகளை நீக்கினதுபோல அநாதியே யான்மாக்களை நெருங்கியிருக்கிற ஆணவமாயைகளையும் அவையற நீக்குவர்.

துடைப்பதும் என்றவும்மையாற் பக்குவான்மாக்களிடத்திற் பாசங்களையெல்லா நீக்கியு மபக்குவான்மாக்களிடத்திற் பாசங்க ணிற்கையாற் பாசங்களுடைய நித்தியமுங் கெடா தென்பது கருத்து. அல்லது ஏகமுத்தியிற் சர்வமுத்திப்பிரசங்கம் வரும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிருட்டி முதலியகிருத்தியமேதுநிமித்தம் மியற்றுவதென்னும் பலம இரண்டு நிறுத்ததா விசைக்கின்றார்.

தோற்றமென்னகாரணமென்று கூட்டுக.

விளையாட்டென்பது சிலர்கருத்து.

இது வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

சங்காரககடவுள் இங்ஙனங் கூறிப்போந்த தோற்றமுதலிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் யாதெனில், "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குகள் பற்றி ஒருசாரார், அத்தொழிற்குக் காரணம் விளையாட்டிற் கருத்தென்பர். ஒருசாரார், "ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டின், உய்வார்களுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்," என்பது முதலிய திருவாசகங்கள்பற்றி. விளை

யாட்டென்றது, ஐங்கலப் பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல, அதனை யெளிதிற்செயப்படுதலை நோக்கியேயாகலின் அக்கருத்தும் உயிர்கட்குப் பெத்தகாலத்துச் சுவர்க்காதி போகமும் பதமுத்திகளும், முத்திகாலத்து வீடுபேறுங் கொடுத்தற்பயத்தென்பர். அவ்விரண்டுந் தம்முன் முரணுமையான் உயிர்கண்மேற்சென்ற கருணையே ஆண்டைக்குக் காரணமென்பதாம்.

மொழிதலுமென்னுமும்மை எதிரது தழீஇயது.

ஏனைய எண்ணும்மை.

வழங்கவுமென்னுமும்மையோடு இயைதற்கேற்பத் துடைப்பதாகவுமென ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

அருளாலென்பதனை மேலுங்கூட்டுக.

காரணமென்னையெனக் கடாயினார்க்குப் பயன்கூறிவிடுத்தல் செட்புவழுவாம் போலுமெனின், ஆகாது; அருளானன்றே வழங்கவுந்துடைப்பவுமவைத்த அவ்வருள் காரணமென்பது தாற்பரியமாகலின். அற்றாயினும் அநுக்கிரகமொழித்த தொழிற்றொழில்களெல்லாம் பிறப்பிறப்புக்களிற் படுத்துத் துயருறுத்துவனவாகலின், அவற்றைச் செய்வது அருளாமாறியாங்ஙனமெனின்? அதற்கன்றே வருஞ்செய்யு ளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்தத் தொழில்களை என்ன பயனைக்கருதிச் செய்கிறார் உம்முடைய கர்த்தாவென்று புத்தன்சொல்ல, அவனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

சொன்னவித் தொழில்களென்ன காரணத்தோற்றவெ னனில் முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம் - அந் தக் கர்த்தாவினுடைய திருவிளையாட்டென்று சொல்லுமாம். ஆயினுமமுடைய கர்த்தாப் பாலரைப்போலப் பயனற்ற கா ரியஞ் செய்வானேனென்னில்? கர்த்தா அப்படிப் பயனற்ற காரியஞ் செய்யான். அதெங்ஙனே யெனனில்?—உயிர்க்கு ம னளிப புத்தி முத்தி வழங்கவு மருளால் முன்னே துன்னிய மலங்களெல்லாம துடைப்பதுஞ் சொல்லலாமே - தன்னுடை ய காருண்ணியத்தினாலே ஆன்மாக்களுக்கு நிலைபெற்ற போக மோக்ஷங்களைக் கொடுக்கைக்கும், இதுவுமன்றி அநாதியே சகச மாயிருக்கிற மலங்களைப் போக்குகைக்கும் காரணமாகச் செய் தானென்று சொல்லலாம், பெரியோர்களப்படிச் சொல்லப்ப டுகையால்.

முன்னவன் விளையாட்டென்றது இந்தத் தொழில்களைச் செய்யுமிடத்துப் பாரமறநின் றெளிதாகச் செய்தலென்று கொ ள்க. இதற்குப் பிரமாணம் திருவெம்பாவை "மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே னென்னக், கையாற் குடைந்து கு டைந்துன் கழல்பாடி, யையா வழியடியோம் வாழ்ந்தோங்காணா ரழல்போற், செய்யாவெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல், மையார் தடங்கண் மடந்தை மணவாளா, வையாநீயாட்கொண் டருளும் விளையாட்டி, லுய்வார்களுய்யும் வகையெல்லா முய்ந் தொழிந்தோம், எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பா வாய்" என்றும் "ஆர்த்தபிறவித் துயர்கெட நா மார்த்தாடுந், தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங், கூத்தனிவ்வா னுங் குவலயமு மெல்லோமுங், காத்துப்படைத்துங் கரந்து ம் விளையாடி, வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைக, ளார் ப்பரவஞ்செய்ய வணிகுழல்மேல் வண்டார்ப்பப், பூத்திகழும்

பொய்கைக் குடைந்துடையான பொற்பாத, மேத்தியிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்," என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லிய கர்த்தா தனது காருணியத்தினாலே ஆன்மாக்களை இரட்சிக்கை காரணமாக பஞ்சகிருத்தியஞ் செய்தானென்றும்; இது செய்யுமிடத்துப் பாரமற நின்று செய்தானென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சொன்னவித் தொழில்கள் - சங்காரக்கடவுளின்கண் கூறிப்போந்த தோற்றமுதலிய தொழில்களை,—தோற்றக்காரண மெனனில்-செய்தற்குக் காரணம் யாதெனின்,—முன்னவனை விளையாட்டென்று மொழிதலுமாம் "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குகளாற் அறி,(விளையாட்டென்பது ஐங்கலப்பாரஞ்சுமத்தல் சாத்தனுக்கு விளையாட் டென்பதுபோல) அத்துணை எளிதிற் செய்யப்படுதலை நோக்கியே யாதலின் அக்கருத்தும்,—உயிர்க்குமுன்னமே - உயிர்கட்கு பெத்தகாலத்து,—மன்னிய புத்திமுத்தி- தங்குதற்கேதுவாகிய சுவர்க்காதி போகமும் பதமுத்திகளும்,—துன்னிய மலங்களெல்லா மருளாற றுடைப்பதும் - முத்திகாலத்துள் பொருந்திய மும்மலங்களு மருளானீங்குதலாகிய வீடுபேறல்,—வழங்கவும் - கொடுத்தர்ப்பத்தென்பர்,—அருளாற் சொல்லாமே - அவ்விரண்டுந் தம்முன் முரணாமையாலுயிர்கண்மேற் சென்ற கருணையே யாண்டைக்குக் காரண மென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

சிவன்செய்யும் பஞ்சகிருத்தியமு மான்மாக்க
ளுக்க னுக்கிரகமென றுணர்த்து கிறார்.

அழிப்பிளைப் பாற்றலாக்க மவ்வவர் கன்மமெல்
லாங், கழித்திட நுகரச்செய்கை காப்பது கன்மவொ
ப்பிற், றெழித்திட மலங்களெல்லா மறைப்பருட் செய்
திதானும், பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடி னரு
ளேயெல்லாம். (௩௭)

(இ-ள்.) அழிப்பிளைப்பாற்றல் — சங்காரமாவது, சுத்தாசுத்தமாகிய மாயையிற் காரியங்களைத் தத்தங் காரணங்களி லொடுக்கி ஜநநமரணப்பட்டுத் திரியாம லான்மாக்களை யிளைப்பாற்றுகை.

அஃதெங்ஙனமெனின்? பகலெல்லாம் வேலைசெய் திளைத்தவ ரிராத்திரி நித்திரைசெய் திளைப்பாறுமாறுபோல.

ஆக்க மவ்வவர் கன்மமெல்லாங் கழித்திட — சிருஷ்டியாவது, ஒடுங்கியிருக்கிற கருவிகளையு மநுஷ்வான்மாக்களையுங் கூட்டி யவரவர் கன்மங்களை யநுபவிக்க, அவ்வவர் யோனிகடோறும் புகுழன்று திரிகை.

நுகரச்செய்கை காப்பது — திதியாவது, அந்தக்கன்மபலங்களை யேறுமற் குறையாமற் றத்தம் விடயங்களைப் பொருந்திப் புசித்துத் தொலைக்கை.

கன்மவொப்பிற் றெழித்திட மலங்களெல்லா மறைப்பு — திரோபாவமாவது, கன்மசாமீபமான்மாக்களுக்குப் பிறந்தகாலத்தும் பரிபாகமான மலங்களினது வீரியத்தைத் தடுத்தல்.

அருள் செய்தி அநுக்கிரகமாவது. ஆன்மாக்களுக்காணவ
மாணும் பழிப் முதலிய குற்றத்தைப் போக்கி ஞானத்தை
பொழி பந்தமகி க்கொடுத்து வீட்டை யடைவிப்பிக்கை
யே
பார்த்திடின இந்தப்பிரபஞ்ச கிருத்தியங்களும் விசா
ருளேயெல்லாம். ரிக்கி லநுக்கிரகத்தின பொருட்டாம். எ-று.
இதற்குச் சுவாயம்புவமும் மிருகேந்திரமு மெனவறிக. (௩௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

ஆன்மாக்களுக்குக் கிருபையினாற கிருத்யங்களைப் பண்ணு
வரென்றதெங்ஙனம், சமஹாரமும் மறைப்புங் கிருபையோவெ
னின? அதுவு மாமென்று கூறல்.

ஆக்க மவைவர்கன்மெல்லாங் கழித்திட-சிருஷ்டியில் தனுக
ரணாதிகளை யுண்டாக்குவது அவ்வானமாக்கள் பண்ணிய கன்ம
மெல்லாம் புசித்துத் தொலைப்பதற்கு,--காத்திடல் நுகரச்செய்
தல்-ஸ்திதிபண்ணுவ தவ்வககன்மங்களைப் புசிப்பிக்கிறதற்கு,—
அழிப்பிளைப்பாற்றல்-சங்கரிப்பது சநந மரணத்தினாற் சகலாவ
ஸ்தையிலுண்டாகிய விளைப்புநீங்கத் தத்துவங்களெல்லாமொடு
க்கி யானமாக்ககளைக் கேவலாவஸ்தையிற கிடத்துகின்றது,—

தது³க்தம் ஶ்ரீம்ருʼகே³ந்த்³ரே — [illegible]
[illegible]
[illegible]
[illegible]

மறைப்புக் கன்ம வொப்பின் மலங்களெல்லாந் தெழித்
திட - திரோதானம் பண்ணுகிறது கன்மசாம்மியத்தின் மல

ங்களெல்லாவற்றையு நீக்குவதாகையாற் கன்மசாம்ய மாமளவுங் கன்மபலத்திலே ஹேயபுத்திவாராமற் புசிப்பிக்கும்படி களுக் கன்மசாம்ய மானபொழுது திரோதான சத்தியே யநுக்கிரக சத்தியாம்;—

தத்ரோக்தம் தந்த்ரே — பரிணாமயதீ தாம்ஸ்வரோ
ய ஷம் காகவிக்ஷா | யதோர்த்தோ நாயதே தஸ்மா
த்ராஹிகோ ச்ருதஜூதி.

அருள்-அநுக்கிரகம் பண்ணுகிறது ஆன்மாவுக் குபாதியாயுள்ள வாணவாதி பாசபந்த நிவிர்த்தித்துவாரா ஸ்வஸ்வரூபமான சச்சிதானந்தாபிவியக்தியாக்குவது,—பழிமொழி-ஆகையாற சங்காரம்பண்ணுகிறது தாமதகுணமென்றும், மறைக்கிறது வஞ்சனமென்றும், பஞ்சராத்திரி சிவதூஷணஞ் சொல்லுகின்றதைத் தவிர்,—பார்த்திடிற் பந்தம்வீடெல்லாச் செய்திதானு மருளே-விசாரிக்குங் காலத்துக் கலாதி தத்துவங்களினுலான மாயகலேப பந்திக்கிறது மக்கலாதிபந்தத்தைச் சங்காரகாலத்தில் விடுவிப்பதுங் கிருபையினாற்செய்யுங் கிருத்தியமென்றித னபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—— o ——

அழிப்பு - சங்கரித்தல்,—இளைப்பாற்றல் - பூமியின் கண்ணே சரீரேந்திரியங்களோடே சநநமரணங்களிற்கூடுதல் பிரிதல், சுவர்க்கநரகபூமிகளிற் போதல் வருதல் முதற்றொழில்களான வருத்தநோவுதீர்த்தல், சத்திகுன்றிய மாயைக்குத் திரும்பச் சாமர்த்திய முண்டாக்கலுமாம், கன்மபாக நிமித்தமு

மாம்.—ஆக்கம்-திரும்பச்சிருட்டித்தல்;—அவ்வவர் கன்மமெல்லாங்கழிந்திட - பிரளயத்திற் பக்குவப்பட்ட அவரவர் கன்மங்கள் முற்றும் மலபரிபாகத்திற்கு நிமித்தமாய்ப் புசிப்பித்துத் தொலைக்க,—காப்பது - திதிசெய்வது;—நுகரச்செய்கை- கன்மபலத்தைப் புசிப்பித்தல்;— மறைப்பருள் செய்திதானும் - மலபாகம் வரும்பொருட்டுக் கன்மபலபோக்கியப் பொருள்களி லமிழ்த்துதலாகிய திரோபாவகிருத்தியமும், தீக்ஷை பண்ணுதலாகிய அநுக்கிரக கிருத்தியந்தானும்,—கன்மவொப்பில் - மலபரிபாகம்வர வரும் உபகாராபகாரகன்மபலசமத்தில்,—மலங்களெல்லாந் தெழிந்திட - மலமாயா கன்மங்களை நீக்கிச் சிவத்துவத்தை விளக்க, திரோபாவ கிருத்தியத்தாற் கன்ம சமத்துவம் வருவித்தல், அநுக்கிரககிருத்தியத்தால் மலம் நீக்கிச் சிவத்துவம் வருவித்தல் எனப்பொருள்கொள்க. பழிப்பொழி முதல் பொருள் வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென்னும் ஐந்தும்; முறையே இளைப்பாற்றலும், கன்மங் கழியுமுகத்தான் மலபாகம் வரச்செய்தலும், கன்மங் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்மவொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதிப்பயத்தனவாகலான், ஐந்தொழிலு மருட்செயலேயாகலின், இவற்றுட் சில மறத்தொழிலேயாமெனப் பழித்தலையொழிவாயாக வென்பதாம்.

மேன் மூத்தொழிற் கூறி ஈண் டைந்தொழிலென்றது ம[illegible]ம். பிறவெனின், ஆகாது; மறைப்பையு மருளையும் நிலை யி

றதிகளினடக்கி ஆண்டு முத்தொழிலென்றார், தம்முள் வேற்றுமையுடைமைபற்றி ஈண்டைந்தொழிலென்றாராகலின்.

இவையிரண்டு செய்யுளானும், சங்காரக்கடவுள் செய்யுந் தொழில் மறமாய் முடியுமெனனும் நாத்திகர்மதமும், வீண்டொழிலெனனும் மாயாவாதிகள் மதமும், தன்பொருட்டெனனும் பரிணாமவாதிகள் மதமும்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, மேலது சிறப்பிக்கப்பட்டது

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி ரட்சிக்கிற கர்த்தா சங்கரிப்பானேனென்றும் புத்தன்சொல்ல, அவனை நோக்கி மேலு மருளிச்செய்கிறார்.

அழிப்பிளைப்பாற்றல் - சஞ்சரிக்கிற காமத்தினாலே அலைப்புண்ணு மானமாக்களை இளைப்பாற்றும்படி சிறிதுநாளையைவிற்றை நீக்கிவிட்டு வைக்கிறது அப்படியிளைப்பாறிவிடாமல், ஆன்மாக்கள் துக்கத்தையநுபவிக்க மீளவுஞ் சிருஷ்டிப்பானேனென்னில்?—ஆக்கமவ்வவர் கன்மமெல்லாங் கழித்திட - சிருஷ்டிக்கிறது, மலம் நீங்காதபடியாலே மலநீங்குகைக் காரணமாக ஆன்மாக்களுக்குத் தநுகரண புவன போகங்களைக் கொடுத்துக் கன்மத்தைத் தொலைப்பித்தல். அப்படி சிருஷ்டித்தாற்போல மலத்தைப் பாகம் வருத்தினது திருவடியிலே கூட்டிக்கொள்ளாமல் நெடுங்காலந் திதியென்று நிறுத்துவானேனென்னில்?—நுகரச்செய்கை காப்பது - ஆன்மாக்கள் செய்தகன்ம மிகுதியாயிருக்கையினாலே, அந்தக் கன்மம் புசித்துத் தொலைப்பிக்க வேண்டி இரட்சித்தது. இப்படிசெய்யிற் கர்த்தா மறைப்பிப்பானேனென்னில்?—கன்மவொப்பித்தெழித்திட மலங்களெல்லா

மறைப்பு - திரோபவிக்கிற அந்தபாகத்தைப் புசித்துத் தொலைப்பித்துக் கன்ம வொப்பிலே மலங்களெல்லாம் போக அநுக்கிரகமென்றது என்னில்,—அருளாசெய்திதானும் பழிப்பொழிபந்தம்வீடு - அநுக்கிரக முறைமைதானும் குற்றத்தைப்பொருந்தியிருக்கிற பாச பந்தங்களைப் போக்கி முத்திநெறியைக் கொடுக்கை இதுவொழிந்த முன்சொல்லப்பட்டவை அநுக்கிரகமல்லவோ வெனனில்?—பார்த்திடிலருளேயெல்லாம் - பார்க்குமிடத்திவனுக்கு நிக்கிரகமன்றி முன் சொல்லப்பட்ட நாலுகாரியமும் அநுக்கிரகமென்றே சொல்லப்படும்.

இந்தக் காரியமும் அநுக்கிரக மென்றதற்குப் பிரமாணம் தத்துவவிளக்கம், "கனமந்தனைக் கனிவிக்குங் காழிபிரான் கருணை, பன்மைப்படுந்தொழி லைந்துபடைப்பு நிலைகொடுத்த, வின்மையிழந்த வொளிப்புத் துயாநின றெடுத்தலென்ப, வன்மைபடாநிலைமை பெரியோனுக் கமைந்தனவே." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மாக்களை யிரட்சிக்கை காரணமாகக் கர்த்தா பஞ்சகிர்த்தியங்களைச் செய்தானென்னு முறைமையை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அழிப்பு - ஒடுக்கமாவது,—இளைப்பாற்றல் - இளைப்பாற்றலும்,—ஆக்கம் - தோற்றமாவது,— அவ்வவர் கன்மமெல்லாம் - அவரவர் கன்மங்கழியு முகத்தான,—கழித்திட - மலபாகம் வரச்செய்தலும்,—காப்பது - நிலையாவது,—நுகரச்செய்கை - கன்மங்கழியுமா றதனை நுகர்வித்தலும்,—மறைப்பு-மறை

ப்பாவது,— கன்மவொப்பின் - கன்மவொப்புவருவித்து,—மல ங்களெல்லாந் தெழித்திட - மலங்களை முதிர்வித்தலும்,—அரு ள - அருளாவது,—பந்தம் வீடு - பந்தம் விடுவித்தலுமாகிய வுத விப் பயத்தன வாகலான,—பார்த்திடின - பராவுமிடத்து,— எல்லாசெய்திதானு மருளே - ஐந்தொழிலும் அருட்செயலேயா கலின,—பழி-பொழி - இவற்றுட் சில மறந்தொழிலே போலு மெனப் பழித்தலை ஒழிவாயாக வெனபதாம்.

இவையிரண்டு செய்யுளானும் சங்காரக்கடவுள் செய்யுந் தொழின் மறமாய்முடியுமெனனும் நாத்திகர்மதமும், வினைதொ ழிலெனனு மாயாவாதிகள் மதமும், தனபொருட்டெனனும் பரிணமவாதிகள் மதமும் பற்றி ஆசங்கித்தும பரிகரித்து; மேல துசிறப்பிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனம் பஞ்சகிருத்தியம பண்ணுகிற கர்த்தா
வுக்கு வடிவு யாதெனறு வினவ, அவனை
நோக்கி யுருமேனி யெனற விருத
தமிருக வொரு தொடராக
வுணர்த்து கிறார்.

அருவமோ ருபாருப மானதோ வன்றிநின்ற வு
ருவமோ வுனக்குநாகத்தா வடிவெனக் குணர்த்திடு
கென்னி, லருவமு மருபாருப மானது மன்றிநின்ற,
வுருவமு மூன்றுஞ்சொன்ன வொருவனுக் குள்ளதா
மே. (௬௮)

(இ - ள்) அருவ உர்முடைய கத்தா நிட்களமோ, சகளநி மோ ருபா ட்களமோ, இவையல்லாத வெல்லாவவயவ

ரூப மானதோ
வன்றி நின்றவு
ருவமோ வுனா
க்குங் கத்தாவ
டிவெனக் குண
ர்த திங் கென
வில்

ஞ்சளுங் காணப்பட்ட சகளமோவென் றெனக்கு நீ ரறிவிக்க வேண்டுமெனறு நீ சொல்லில்,

அருவமு மரு
பாரூப மானது
மன்றிநின்றவுரு
வமு மூன்றுஞ்
சொன்ன வொ
ருவனுக் குள்ள
தாமே.

முற்கூறிய நிரதிகாரியாகிய பரமகத்தாவுக்கு நீ முன்னஞ் சொல்லிய மூவிதமுந திருமேனியாம் எ-று.

உம்மை எண்.
ஓகாரம் விஞவின்கண் வந்தது
இதற்குச் சுப்பிரபேதமு மதங்கமுமெனவறிக (௩௮)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

உபக்கிரமததிற் கர்த்தா சித்ரூபியென றுபசம்மாரமு மவ்வாறே சமர்த்திப்பதான் மத்தியே பராமர்சை கூறுகின்றது.

அருவமோரூபாரூப மானதோவன்றிநின்றவுருவமோவுனைக்குங்கர்த்தா வடிவெனக் குணர்த்திப் கெனனில் - நீசொல்லுங்கர்த்தாவின் ஸ்வரூபம் அரூபமோ ரூபாரூபமோ வல்ல தருவத்தாரூ விவனெனக் கறிவியுமெனில்?—அருவமு மரூபாரூப

மானது மன்றிநின்ற வுருவமு மூன்றுஞ் சொன்னவொருவனுக் குளதாமே -முன்சொல்லப்பட்ட மூன்றுருபமு மொப்பற்ற பரமேஸ்வரனுக்கு லயபோகவதிகாரங்களிற் சுவேச்சையினு லுளதாம, அவன் ஸ்வரூபஞான சிதாநந்தப் பிரகாசமே யென் றிதனபொருள.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌾𑌤𑍁𑌲𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 — 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌸𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 । 𑌸𑌕𑌲𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌸𑌾𑌕𑌾𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌵𑍃𑌤𑍇 ॥ 𑌮𑌹𑍇𑌶𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இதனுல் கர்த்தாசசரீரியல்லனென்பது சொல்லப்பட்டு, சில வாதிகள் சரீரியல்லாத கர்த்தாவுக்குக் காரியகர்த்திருத்துவங் கூடாதென்று சொல்லுவார்கள், அஃதெப்படியென்று வினவ, உத்தரமுரைக்கின்றார்.

இது வெளிப்பொருள்

வினவின சிஷ்யனகருத்து இவை —கர்த்தா சரீரியோ, அன்றி யசரீரியோ, அன்றிச்சரீரியசரீரியோ, அன்றிச்சரீரியசரீரியல்லாதவரோ; இந்த நாலு பக்ஷத்துள சரீரியசரீரி யல்லாதவனு கிற் சூனியபபொருளாய்ப் போவன, சரீரியசரீரியாகில் விருத்தனமம் இரண்டுஞ் சீதமும் உஷ்ணமுமபோல ஒருபொருளிலிரா. அப்படியிருக்குமாகிலுஞ் சரீரிகளும் அசரீரிக்குஞ் சொல்போகிறகுற்றஞ் சொல்லாமறருனே வரும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இவ்வளவும் ஆறுசெய்யுளான ஏருமாகி மருவிடுமென்றதனை வலியுறுத்தி, இனி அநாதிமுத்த சித்துருவென்றதனை இருபத்திரண்டு செய்யுளான் வலியுறுத்துகின்றார்.

ஐந்தொழில் செய்யுமுதல்வனுக்கு வடிவம் இன்றியமையாமையின், அவ்வடிவமாவது அருவமுதலிய மூன்றனுள் யாதென்னின்? அவனுக்கு அம்மூன்றும் வடிவேயாமென்பதாம்.

இது சொற்பொருட்பின்வருநிலை.

உள்ளவென்றது அன்பெறாத வகரவீற்றுப் பலவறிசொல்.

சொன்னவொருவன் அநாதிமுத்த சித்துருவென மேற்கூறப்பட்ட வொருவன்

இதனானே அநாதிமுத்த சித்துருவாகிய சங்காரக்கடவுளுக்குத் தடத்த வடிவமிவையென்பது கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இங்ஙனஞ் சொல்லிப்போந்த கர்த்தாவினுடைய வடிவு அருவமோ உருவமோ அரூபாரூபமோ வென்று கேட்டவனை நோக்கி; மூன்று மவனுக்குளதென் றருளிச் செய்கிறார்.

அருவமோரூபாரூப மாவதோவன்றிநின்ற வுருவமோவுரைக்குங்கர்த்தா வடிவெனக் குணர்த்துகென்னில் — நீர்சொல்லுகிற கர்த்தாவுக்கு வடிவு அருவமென்று சொல்லுமோ! உருவமென்று சொல்லுமோ! இவையிரண்டுமல்லவாய் நிற்கிற அரூபாரூபந்தானோ என்று எனக்கு விளங்கச் சொல்லவேணுமென்று நீ

சொல்லில்?--அருவமு மருபாரூபமானது மன்றிநின்றவுருவமு மூன்றுஞ்சொன்ன வொருவனுக்குள்ளதாமே-அரூபமாயிருந்துள்ள திருமேனியும், அரூபாரூபமாயிருந்துள்ள திருமேனியும்,இவையிரண்டு மல்லவாய் நிற்கிற உருவமாயிருந்துள்ள திருமேனியும், ஆகயிவைமூன்று திருமேனியும முன்சொன்ன கர்த்தாவுக்கு அநாதியே யுள்ளதாயிருக்கும.

இதனுற் சொல்லியது அருவம் உருவம் அரூபாரூப மென்றுசொல்லப்பட்ட இந்த மூன்று திருமேனியும் சிவனுக்கே யுள்ளதென்று முறைமையை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

உரைக்குங் கர்த்தாவடிவு-ஐந்தொழில் எப்படி, முதல்வனுக்கு வடிவமின்றி யமையாமையி னவ்வடிவமாவது,— அருவமோவுருவருபமானதோவன்றி நின்றவுருவமோ-அருவாகியவடிவமோ அருவுருவாகிய வடிவமோ அவ்விரண்டுமின்றி நின்றவுருவாகியவடிவமோ இம்மூன்றனுள் இவ்வடிவென,—இங்கெனக் குணர்த்தெனனில் - இவ்விடத்து எனக்குணர்த்தவேண்டுமெனில்,— சொன்னவொருவனுக்கு - அநாதிமுத்த சித்துருவென மேற்கூறப்பட்ட வொருவனுக்கு,— அருவமு முருபாரூபமானது மன்றிநின்றவுருவமு மூன்றும - அருவும அருவுருவும் உருவுமென்கின்ற மூன்றும்,—உள்ளவாமே - வடிவாமெனபதாம்.

இதனுலே அநாதிமுத்த சித்துருவாகிற சங்காரக் கடவுளுக்குத் தடத்த வடிவ மிவையென்பது கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறியவற்று ளுருவத்தின் முறைமை யுணர்த்துகின்றார்

நண்ணிடு முருவமென்னி னமக்குள வுருவம்போலப், பண்ணிட வொருவன்வேண்டு மிச்சையேற் பலருமிச்சை, கண்ணிய வுருவங்கொள்ளேம் யாம்பெருங் கடவுடானு, மெண்ணிய யோகசித்தர் போலுரு வினைப்பனான்றே. (௬௯)

(இ-ள்.) நண்ணிடு முருவமென்னில்	அந்தக் கர்த்தாவுக் குருவந்தானே திருமேனியென்று சொல்லில்?
நமக்குள வுருவம் போலப் பண்ணிட வொருவன் வேண்டும்	நமக்கொருவ ருண்டாக்கின வடிவுகள் போல, வவருடைய சரீரமும் ஒருவனா லுண்டாக்க வேண்டும் ஆதலா லநவஸ்தா தோஷ முண்டாம்.
இச்சையேற் பலருமிச்சை	இச்சையினாலுமது கர்த்தா வடிவுகொள்ளுவனென்று சொல்லுகிறீராகில், ஆன்மாக்களெல்லாருந் தங்கடங்களிச்சையினாலே வடிவுண்டாக்கிக் கொள்ளவேண்டும்.
கண்ணிய வுருவங் கொள்ளேம் யாம்	யாம் நினைத்ததொரு வுருக்கொள்ளமாட்டோங்காண,
பெருங் கடவுடானு மெண்ணிய யோகசித்தர் போலுரு வி	எல்லார்க்குங் கண்ணாற்காணவு முவமிக்கவு மளவிடவும் படாதேயிருக்கிற பெருமையினையுடைய யோகசித்தர் நினைத்தகோருருவைச் சமஷ்டிரூபத்தாற் கொள்ளுமா

ளைசப்பன் ருனே றுபோல, கர்த்தாவுந் தனது காருண்ணி யததிருவே யானமாககளை யிரடசிககையி னபொருட்டுத் தனககுவேண்டிய தோருரு வைத தானே கொள்வன எ-று. (௩௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

இவவாறு வ்ருதத தருமமாயிருககிற ரூபமும ரூபாரூபமு மரூடமு மொருவனுக குணடெனின அநேகாநதிக தோஷமு ணடாமெனன, மேலு முரூபாதிகளை யொவவொனருகப் பூரவ பகூஷத்தி லாகேஷபிததுச சிததாநததததில் சமாதானங் கூறம்.

நமககுமுருவமெனனின மககளவுருவமபோலப பணணி டவொருவன வேணடும - பொருநதப்பட்ட ரூபவான பரமே ஸ்வரனெனின? தம்முடைய வுருவததை யொருவனுணடாக கினதுபோல வவனுடையரூபததை யுணடாககுவா னொருவன வேண்டும,—இச்சையேற் பலருமிசசை-சுவேச்சையினு லுருப ங்கொள்வரெனின? எல்லாருஞ சுவேசசையினு லுருபங்கொள ளலாமெனின, அங்ஙனமனறு — கணணியவுருவங் கொள்ளே மியாம் - நாமெல்லா நினைதத வுருவங்களை யெடுககமாட்டோ ம,—பெருங்கடவுடானு மெணணிய வியோக சித்தர்போ லு ருவிசைப்பன ருனே - மஹாதேவராகிய கர்த்தாவும் யோக சிததாக டாங்கணினைதத வுருவமான துபோலத் தமமுடைய விச்சையினல் ரூபததைப் பொருநதுவரெனறறி.

பாகதஞ்செலவொடுவரவு மென்பதனு லிசைவனென்பதற்கி ளைசப்பனெனறிருகாலததையுங் குறித்துச்சொல்லியதெனவறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சரீரியுமாம் அசரீரியுமாம் சரீரியசரீரியுமாம் என்று நாம் சொன்னோம், சரீரியசரீரியாகிற் சரீரிகளும் அசரீரிகளுஞ் சொல்லுங் குற்றம் வருமென்றது ஏதென்று குரு வினவ சீஷன் கூறுகின்றதற்குக் கூறுகின்றார்.

நண்ணிடு முருவமென்னில் - கர்த்தாவைச் சரீரம் வந்து பொருந்துமென்னில்,—நமக்குள்ள வுருவம்போல - நம்போல்வார்க்குள்ள சரீரத்திற்குப்போல்,—பண்ணிடவொருவன் வேண்டும் - சிருட்டிக்க வேறொரு கர்த்தா விரும்பப்படுவன் அப்படியாகி லவனுக்கும் வேறொருகர்த்தா வேண்டுமென்று அநவஸ்தை வரும்,—இச்சையேல் - தமது சங்கற்பத்தாற்றமக்குச் சரீரத்தைப் பண்ணிக்கொள்வாரென்று நீர் படித்துப் பேசில், தாம்சரீரியாயிருந்து தமக்குச் சரீரத்தைப்பண்ணிக் கொண்டாரோ, அன்றி யசரீரியாயிருந்து பண்ணிக்கொண்டாரோ; சரீரியாயிருந்து தமதிந்தச் சரீரத்தைச் சிருட்டித்தாரானால், அந்தச் சரீரத்தையுஞ் சரீரியாயிருந்து சிருட்டிக்க வருமென்றனவஸ்தை வரும். அசரீரியாயிருந்து சங்கற்பத்தாற்றமது சரீரத்தைப் பண்ணிக்கொண்டாரென்னில், அப்படிச் சங்கற்பத்தாற் சர்வப்பிரபஞ்சத்தையும் பண்ணுவரென்று சரீரகற்பனை நிஷ்பலமாம். அப்படி யாயினும்,—பலரு மிச்சை - நாமெல்லாரும் நமது சங்கற்பத்தால் நமக்கு வேண்டிய சரீரங்களைப்பண்ணிக் கொள்வோம். அப்படி நீ சொல்லவேண்டியதல்ல,— யாம் - நாமெல்லாரும்,—கண்ணிய வுருவங்கொள்ளோம் - கருதிய திவ்விய சரீரங்களை மலாதி தகைந்த சாமர்த்தியர்களாதலாற் பண்ணிப் பொருத்திக் கொள்ளமாட்டோம்,—பெருங்கடவுளும் - பரமகர்த்தாத்தானும்,—எண்ணிய யோ

காசித்தர்போ லுரு விசைப்பன்காணே - எண்ணிக்கையாயிருக்கின்ற யோகர்கள சித்தர்களபோல வேண்டிய சரீரங்களை யெடுப்பன.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இவ்வுரையில் (௩௧ ௪) இரண்டு செய்யுளையும் குளகமாக்கி உரையிட்டிருப்பதால் இச்செய்யுட்கு (௪0) செய்யுளின் உரை வரிசையிற் பார்க்கவும்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

உம்முடைய கர்த்தாவுக்கு ஒரு வடிவுண்டென்று சொல்லில், நம்முடைய வடிவுகளபோல அவனுடைய வடிவையும் ஒருவர் படைக்கவேண்டுமென்று சொல்ல, அவனது திருமேனி ஒருவர் படைப்பிலகப்படாதென்று அருளிச்செய்கிறார்.

நண்ணிடுமுருவமெனில் நமக்குளவுருவம்போலப் பண்ணிட வொருவனவேண்டும் - கர்த்தாவுக்கு உருவமுண்டென்று நீர் சொல்லில் நமக்குண்டான வடிவுகளைப்போல அவனுடைய ரூபத்தையும் ஒருவருண்டாக்கவேணும். கர்த்தா சுவேச்சா விக்கிரகனாகையாலே அவனுக்கு ஒருவடிவு ஒருவர் கொடுக்கவேண்டுவதில்லை தன்னுடைய திருவுளத்துக்குப் பொருந்தின திருமேனி தானே யெடுத்துக்கொள்வ னெனில்?—இச்சைபேற் பலருமிச்சை - அவனது சுவேச்சையினாலே உருவங்கொள்ளுவனென்று நீர் சொல்லில்? சர்வான்மாக்களுக்கும் தங்கள் தங்கள் இச்சையினாலே வடிவுகளை உண்டாக்கிக் கொள்வார்கள். —

கண்ணியவுருவங் கொள்ளேம்யாம் - இப்படி சருவான்மாக்களுக்குங் கர்த்தா மிசையினாலே தங்களுக்குக் கருதப்பட்ட வடிவுகளையுண்டாக்கிக் கொள்ளுவர்களென்று நீ சொன்னதை நாங் கொள்ளுவதில்லை ஆனாலுமுன்னுடைய கர்த்தா வடிவு கொள்ளுகிறபடி யெப்படியெனில்?—பெருங்கடவுளானுமெண்ணியயோகசித்தர் போலுருவினைப்பண்ணுவன் - எல்லார்க்கு மேலாய் மகத்தாயிருக்கிற கர்த்தா தானும், சொல்லப்பட்ட யோகசித்தர்கள் தங்களுக்கு வேண்டின வடிவு ஒருவர் கொடாமலிருக்கச் செய்தே தாங்களே யெடுத்துக்கொள்ளுகிற தனைப்போல; சிவனுந் தனக்கு வேண்டின திருமேனி தானே கொள்ளுவான்.

நண்ணிய முருவமென்றது, புத்தன் அவன் கர்த்தாவில்லை யென்றும் உண்டானாலும் உருவமுமல்ல வருவமுமல்லவென்று சொன்ன விதற்குப் பரபட்சம், அவன்மதம் “ உருவொடுதினருவென்னி லுருவமுன் படைத்தாவேண்டு, முருவவலிலசையெனி லுலகெலா மிசையாகு, முருவுலகத்துளோர்சட் டுருவதுகனமாமெனி, லுருவுடை யோர்கட்கெல்லா முற்றதுகன்மத்தாமே ” என்றும், “ அருவெனிற்பவத்தினின்று மெடுத்திடாகாசம்போல், மருவினனிழல்போலெனில் மாறுவினார்க்காகுமாட்சி, பெருகியவறிவுண்டென்று பேசிடினெசத்தோடுங், கருதிடவுருவமவேண்டு மில்லையேற் கருதலின்றே ” என்னுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - சௌ - மத - உரு - உகூ.

இதனாற் சொல்லியது கர்த்தாவினுடைய திருமேனி கன்மத்துக்கிடமான ஆன்மாக்களுக்குள்ள வடிவுபோல் ஒருவரால் சிருட்டிக்கப்பட்டதென்றும், தன்னுடைய திருவுளத்துக்குப் பொருந்தினதொரு திருமேனியைத் தானே கொள்ளுமென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(௩௯-௪0) செய்யுளிரண்டுமே ஓர்முடிபாகவுரையிட்டிருப்பதால் இவ்வுரை (௪0) செய்யுள் வரிசையிற்பின் வைக்கப்பட்டது

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

வித்தக யோகசித்தர் வேண்டுருக் கொள்ளுமா
போ, லுத்தமன் கொள்வனென்னி லவர்களி லொருவ
னுவ, னத்தனை யவர்களெல்லா மாக்குவ தருளாலாங்
கு, வைத்தது மாயையென்னில் வடிவெலா மாயையா
மே. (௪0)

(இ-ள்) வித்தக யோகசித்தர் வேண்டுருங் கொள்ளுமாபோ லுத்தமன் கொள்வனென்னில் — யோகசித்தர்களைப்போலக் கர்த்தாவுந் தனக்கு வேண்டியதோருருவத்தைக் கொள்வனென்னில்?

அவர்களிலொருவனுவன் — அந்தயோகசித்தர் ராகத்துவேஷத்துடன் கூடினவர்களாகையால், அவ்வியல்பினையுஞ் சியறுமுடையவனுவன்.

அத்தனை யவர்களெல்லா மா — அத்தனைமைப் பாட்டினையுடைய யோகசித்தர்களெல்லாருஞ் சரீரத்தை யெடுக்கிற

க்குவ தருளால் — தாம் விடுகிறதுங் கர்த்தாவின தருளினாலே காண

ஆங்குவைத்த — அவ்விடத்துச் சரீரமெடுப்பதெல்லா மா

து மாயையெனின் — யையென்று நீர் சொல்லுவீராகில்,

வடிவெலா — யாதொருவன் கொள்ளுகிற வடிவுகளெ

மாயையாமே. — ல்லா மாயாதேகமொழிந்து வேறில்லைகாணை எ - று

இதற்குக் கிரமுக்கமம (௪௦)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———0———

மேலிதுவுமது,

வித்தகபோக சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோ லுத்தமனை கொள்வானெனனிலவானின் ஒருவருயனை - சமர்த்தராயுள்ள போகசித்தர்களைப் போலத் தேவானமயுள்ள பரமேஸ்வரன் வடிவு கொள்வனெனில், அசித்தர்களின் லொருவனுவன,—அத்தனை யவர்களெல்லா மாக்குவ தருளால்-உத்தமனையுடைய சித்தர்களெல்லாந் தாங்களேவேண்டுருக் கொள்ளுகிறது பரமேஸ்வரனுடைய பிரசாதத்தினாலே அல்லதுமம,—ஆங்கே வைத்த மாயையெனில் - அவ்விடத்துச் சித்தர்களுக்குண்டாக வைத்த தேக மாயையெனின,—வடிவெலா மாயையாமே- உருவங்களெல்லா மாயையே யாம் என்றதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

நீ சொல்லிய திட்டாந்தஞ் செப்பமன்றென்று செப்புகின்றார்.

வித்தகயோகர்சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோ லுத்தமன் கொள்வனெனனில் - அவர்களி லொருவனுவன் - அந்த வித்தகயோகர் சித்தர்களுக்குள்ளே யொருவனுவன. ஆனுலேது? அவர்கள் பிராகாமிய சித்தியினுலே தங்களுக்குச் செயற்கையாகிய திவ்வியசரீரங்களை யெடுத்துவிடுவார்கள்; தங்களியற்கையினுற் செயற்கையாகிய சரீரங்களைவிட்டு இயற்கையாகிய திவ்விய சரீரங்களை யெடுக்கமாட்டார்கள்,—அத்தகையவாக வொல்லா மாயகுவ னருளா லாங்கே வைத்தது மாயை யெனனின - அதுவனறியு மயாகளை, ஆங்கே - அவ்விடத்து,— அத்தகையெல்லாம - பிராகாமிய சித்தியினு லெடுக்குஞ் சரீரங்களனைத்து முபாதான காரணமி யறியுமுடையாகாதென்ன,— அருளால் - சிவாஞ்ஞையினுல் காரியப்படுத்துவதாலே,— மாயைவைத்த தென்னில் - மாயையுண்டாக்கிக் கொடுத்ததென றுரைத்தாரு சொல்லில், அதசிருட்டாந்தம்போல் அச்சிவனுக்கும்,— வடிவெல்லா மாயையாமே - சரீரமுற்று மாயாமயமாமே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி இரணைனாரும் பிறர் கூறுங் குற்றங்களைப் பரிகரிப்பாராய் உருவத்தினைக் கூறுங் குற்றம் பரிகரிக்கவே, ஏனையவும் பரிகரிக்கப்பட்டனவாமென்னுங் கருத்தான், உருவத்தின்கணுச் சங்கித்துப் பரிகரிக்கின்றார்.

முதல்வனுக்கு உருவமுண்டென்னின்? உருவமெல்லாம் ஒருபெற்றியவாகலின் உருவமுடைய நம்மனோர்க்குளதாகிய பரதந்திரம் முதல்வனுக்குமுளதாதல்வேண்டும்; அஃதன்றயின் முதல்வனுக்குளதாகிய சுதந்திரம் நம்மனோர்க்குமுளதாதல்வே

ண்டும். இனி, நம்மனோர்க்கும் யோகிகட்கும் உள்ளதாகிய வேறுபாடு பெரிதாயினாற்போல, யோகிகண்முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்குமுள்ளதாகிய வேறுபாடு பெரிதாகலின்; ஒப்புமை கூறுதல் பொருந்தாதெனின்? அங்ஙனமாயினும், உருவடிவெல்லாம ஒருபெற்றியாமையின் உருவத்தின் வேற்றுமையிவ்வழி அவவேறுபாட்டாற் போந்த பயன் என்னையென்பதாம்.

வித்தகயோகசித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோ லுத்தமன்கொள்வனென்னின் என்றது அநுவாதஞ் செய்துகொண்டது.

இவையிரண்டு செய்யுளுந் தடை. (௫௧-௫௨)

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படியுமுடைய கர்த்தா யோகசித்தர்களைப்போல வடிவங்கொள்ளுவனாகிலவாகனி யொருவனென்று சொல்ல அல்லவென்று மறுத்து மேலருளிச்செய்கிறார்.

வித்தகயோகசித்தர் வேண்டுருக்கொள்ளுமாபோ லுத்தமன்கொள்வனென்னிலவாகனிலொருவனுக்கு - சாத்திரஞ்சொன்ன முறைமையிலே சித்திபெற்றதக்க தபசுகளைப்பண்ணின யோகசித்தர் தங்களுக்கு வேண்டின வடிவுகளைக் கொள்ளுமாப்போல் சிவனும் அப்படி வேண்டின வடிவுகளைக் கொள்ளுவனென்னில்? இவனும் இந்த யோகசித்தர்களிலே ஒருவனவனோ. அப்படியல்லகாணும், சிவனுடைய வடிவு அந்த வடிவுகளுக்குள்ளானதல்ல. அதேதென்னில்? அந்தவடிவுகள் சிவனுடைய காருணியத்திலேபெறுகிற வடிவுகளுமாய் மாயாதேகமுமாயிருக்கையினாலெனக் கொள்க.—அத்தகையவர்களெல்லா மாக

ருவதருளாலாங்கு வைத்ததமாயை - அந்த முறைமையினையுடைய யோகசித்தர்களெல்லாம கர்த்தாவினுடைய வருளினுலே வேண்டின வடிவுகொள்ளுவர்கள அப்படி கொள்ளுகைச் செய்தேயு மவர்கள கொள்ளுகிற தேகங்களெல்லா மாயாதேகமாயிருக்கும்,— எனனில் வடிவெல்லா மாயையாமே - என்று நீர்சொல்லில் கர்த்தாவாகிலும வடிவுகொள்ளுவனாகி லந்த வடிவுகளெல்லா மாயாதேகமாம்.

இதனாற் சொல்லியது சித்தர் யோகிகளைப்போலச் சிவனும் தனக்கு வேண்டின வடிவுகொண்டாலும, அந்த வடிவுகள் போலச் சிவனுடைய வடிவு மாயாதேகமலவென்ன; அவனு மொரு வடிவுகொள்ளவேணுகையிருந்தாலே வடிவுகளெல்லா மாயாதேகமு மாமென்றவன்சொன்ன முறைமையு மறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

உருவகாணோமெனனில் - முதல்வனுக் குருவமுண்டெனவில,— உருவகாணுமோபோல - உருவமெல்லாமொரு பெற்றிய வாகலி னுருவமுள — பாதகமமேரோர்க் குளதாகிய பாதகத்திரம் போல,— பண்டி யொருவன யோகமுற - முதல்வனுக்கு முருவுண்டாதற் கொரு சருத்தாவு மடையைப்பட்டு பாதகத்திரமாதல் வேண்டு,— இசைமேயம்-முதல்வ னினைக்க வடிவம் கொள்ளுதல் சுதந்திரமெனனில்,— பவருமிச்சை - முதல்வனுக்கு குளதாகிய சங்கிராமமேஹாசகுமுளதாகல் வேண்டும்,— யாங்களெண்ணிய வுருவங் கொள்ளோம் - நம்மனோர் கருதிய வடிவமெடுத்தல் முடியா,— பெருங் கடவுளதாகும்-முதல்வனும்,— யோகசித்தர்போல் எண்ணிய வுருவினைசப்பனகாண - யோகிசித்தர்

போலத் தான்கருதியதொரு வடிவத்தை எடுத்துக்கொள்வன்,—வித்தகயோகசித்தர் வேண்டுருக்கொள்ளுமாபோல்-சதுரப்பாடுடைய யோகசித்தர்கள் வேண்டுருக் கொள்ளுமாறுபோல,—உத்தமன் கொள்வானென்னின் அவர்களிலொருவனாவன்-முதல்வனிந்த வடிவங் கொள்வானாயின் அவ்வியோகசித்தர்களிலொருவனாய் முடியுமெனின்,—அதனை யவர்கட்கெல்லாமாக்குவதருளால்-அத்தன்மையுடைய யோகசித்தர் முதலியோர் வேண்டுருக் கொள்வது முதல்வனருளானன்றி முடியாமையானும்,—இங்குவைத்த மாயையெனவில் - அவ்வறிவுடையவிடத்தில் யோகசித்தர்கட்குண்டாகிய உருவ மாயாகாரியமாய் முதலானோர்,நம்மனோர்க்கும் யோகிகட்கு முளதாகிய வேறுபாடு பெரிதாயினுற்போல யோகிகள் முதலிய நம்மனோர்க்கு முதல்வனுக்கு முளதாகிய வேறுபாடு பெரிதாகலின் ஒப்புமை கூறுதல்பொருந்தாதெனின்?— வடிவெல்லாமாயையாமே-அங்ஙனமாயினுமுருவடிவெல்லா மொருபெற்றியாகிய மாயாகாரியமேயாகலின் உருவத்தின் வேற்றுமை இல்வழி அவ்வேறுபாட்டாற்போந்த பயனென்னையென்பதாம்

இவையிரண்டு செய்யுளுந் தடை (௩௧-௪௰)

மறைஞானதேசிகர் உரை.

ஆகலா லெமதுகர்த்தா மாயாரூபியென றுணர்ந்தநிருர்.

மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகு
மாயவா ணவமகன்ற வயிவொடு தொழிலையார்க்கு
நாயக னெல்லாஞானத் தொழின்முத லெண்ணலாலே
காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்.(௪௧)

(இ-ள்.) மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவமாகும் — நீசொல்லிய மாயை கன்மத்துக் கீடாக வடிவை யெடுப்பிப்பதன்றித் தனித்தொரு வடிவை வேறொன்று மெடுப்பிக்கமாட்டாமையால் மலத்தைச்சார்ந்து வருவதொரு வடிவைப் பொருந்தும்.

ஆயவா றணவமகன்ற வறிவொடு தொழிலியார்க்கும் — இப்படி யான்மாக்களைப் பொருந்திநின்ற வாணவமலமானது அவர்களது ஞானக்கிரியைகளைத் தடுத்துப் பிரகாசியாதபடி நிற்கும்.

நாயக னெல்லா ஞானத் தொழின்முத லனைத்தாலே — ஆன்மாக்களைப் போலக் கிஞ்சிஞ்ஞத்தையு மறைப்பையு மில்லாத கர்த்தாவானவன் சர்வஞ்ஞத்தையு மறிகையினாலுஞ் சர்வகிருத்தியங்களைப் பண்ணுகையாலும்

காயமோ மாயையன்று — அவனதுவடிவு மாயையினா லெடுக்கப்பட்டதாயி னவனு நம்மைப்போல வொருவனாய் விடுவன்,

காண்பது சத்திதன்னால் — யாங்காணப்பட்ட திருமேனி யவனது சத்தி சொரூபமாயிருந்ததாற் கொண்டது. எ-று.

ஏகாரந் தேற்றம்

அவனுக்கு வடிவுண்டாகப் படுவது சத்தியா லெனவறிக (சக)

இதற்குக் கிரணாகமத்திலும் பார்க்கிறையிலுங் காண்க.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—()—

மேல் உத்தரங்கூறல்.

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவதாகும்.

மாயையான தஞ்ஞான சம்பந்தியாயிருக்கிற வான்மாக்களைப்பற்றி வருவதொருரூபமாகும்,— ஆயவாணவ மகன்ற வறிவொடு தொழிலையார்க்கும் - அஞ்ஞானமாகிய வாணவம் பெரிதாகிய ஞானத்தையுங் கிரியையு மறைக்கும் அஃதன்றி,—நாயகனெல்லா ஞானத்தொழின் முக லண்ணலாலே காயமோ மாயையன்று காண்பது சத்திதனால்-சர்வலோகநாயகனான சிவன் சர்வஞ்ஞனுஞ் சர்வகர்த்தாவு மாகையினால் அவனுடைய தேகம் மாயையல்ல பின்னையேதெனின்? சிற்சத்தியேயென றிதன்பொருள்.

தஸ்மாத் ஶ்ரீமஹேஶஸ்ய — யோகே வபுஷோ ஜா-
ஜ்ரயதே க்ருத ந்தோஷ வ்யஹாரிவம் ॥ ஆகந்துகோஷ்ட்
ஸம்ஹவாஸ்யாஸ்ய வபுஶ்சேந்த்ராத்ருஶ்யபிலோக: இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஏகதேசவுவமையிற் முற்றுவமைக்குள்ளஉரை யுரைக்கப்படாதென றுரைக்கின்றனர்.

மாயைதானமலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும் - ஆணவமல நிமித்தமாக வாராநின்றிருக்கும் ஆன்மாக்களுக்குச்சரீரமாகும். எதுக்காக?—ஆயவாணவம - அந்த ஆணவமலம் பசு ஆன்மாக்களுக்கு,— அகன்ற வறிவொடு தொழிலையார்க்கும் - சிவனுக்குப்போல விரிந்த சர்வஞ்ஞத்துவஞ் சர்வகர்த்திருத்துவ மென்கின்ற சிவத்துவமாகிய பேரறிவைக் கட்டும். அதனாலதைப் பசுவானமாக்களுக்கு மல பரிபாகம் வரும் பொருட்டுப் போகம்புசிக்கச் சிற்றறி வுண்டாகச் சிவனருளால் மாயை த

ல சூக்கும சரீரமாம்,—நாயகன் - சிவன்,—எல்லா ஞானத் தொழில்முதல் நண்ணலாலே - சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவத்துவத்தில் நின்று நிமித்தமின்றி விளங்குஞ் சகலஞான கிரியாநுக்கிரகங்களைப் பொருந்தலாலே,—காயமோ மாயையன்று - அவனுக்குச் சரீரமாமோ? அன்றென்று. அதற்கு நிமித்தமாகு மலமில்லாமையால், மலமில்லாம லிருக்கவும் ஸ்ரீமத் ஸ்ரீகண்ட பரமேசுரன் முதலோர்க்கு மாயாசரீரம் வருவானேனென்னின்? மலவாசனையால் அதிகாரகாரணமாய் ஸ்ரீமத்கண்டாதிகட்கு மகாமாயா சரீரம்போல மாயாசரீரம் அநித்தமாய்வரும். சிவனுக்கு மலவாசனைரூபமான அதிகார மலமில்லாதபடியால் காயமோ மாயையன்று, அப்போது நீர் அவனுக்குச் சொன்ன வடிவேது? சொல்லுவாம்,—காணப்படு சத்திதனால் - சிவனது சமவேதசத்தியினாலே யவனுக்கு வடிவு கண்டாக்கப்படும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

இனி விடை.

நீயங்ஙனங் கூறுதல் பொருந்தாது அங்கிகளது ஏற்றத் தாழ்வால் அங்கங்களுக்கு ஏற்றத்தாழ்வுண்டாவதன்றித் தம்முளொப்பனவல்ல கூறுவீரேல், அவ்வேற்றத்தாழ்வுக ளொன்றனையெனிற் கூறுதும். யோகிகள் தம்மேருவெல்லாரும் மலத்தைப்பற்றிக் கிடக்கும் பசுக்கள், அதுவன்றியும் ஒன்றையோரே யறிதலும் ஒன்றையே செய்தலும் ஒவ்வொன்றே முன்னையதாதலுமாகிய அற்பஞான தொழின்முதலுடையராம். முதல்வனாயினான அம்மல நீங்கியவறிவிற் றங்கின்று உணர்த்துவோனாகிய பசுபதி; அது

வுமன்றி எல்லாவறிவும் எல்லாத்தொழிலும் எல்லா முதன்மையுமுடையன். இங்ஙனம் அவைகட்குத் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மையின், அதற்கேற்ப மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு அதனொடு தொடக்குடைத்தாய ஏகதேசவறிவைச்செய்யு மாயை யுருவமும், அநாதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு மலநீங்கியவுயிர்க்கு வியாபகவறிவைச் செய்யுஞ் சத்தி யுருவமுமாதலே அமைவுடைமையின், அங்கவ்விரண்டற்குந் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மை இனிது விளங்குதலான், அதனையறியாது இச்சையேற பலருமிச்சையென்றும், மாயை தொடக்கிய வடிவெல்லா மாயையாகுமென்றுங் கூறுதல் அடாதென்பதாம்.

தானென்பது அநுவதித்தலையுணர்த்தி நின்றது.

பற்றியென்பதுபெயர் "ஈங்கவித்தாற்றால்" என்புழிப் போலப் பற்றிக்கொண்டு நின்றனுருபு விரித்துரைக்க.

காயசக்கெல்லாஞானந் தொழின்முதன்மை யெல்லாமெனவே, உயிர்கள் ஒருஞானத் தொழின்முதலே நண்ணுவனவென்பது பெறாம்.

அகறல் நீங்குதல்.

ஆதல் பொருந்துதல், அஃது உபசாரத்தாற் காரியத்தின் மேனின்றது.

ஓகாரம் சிறப்பின்கண் வந்தது.

ஏகதேசவறிவைச் செய்தல் ஏகதேசப்படுந் தகுதியுடைய பொருட்கேயன்றி ஏனையதற்குரித்தன்று, வியாபகவறிவைச்செய்தல் வியாபகப்பொருட்கேயன்றி ஏகதேசப்படுந் தகுதியுடையதற்கு உரித்தன்றாகலான் ஏகதேசத்திலறியும் பசுக்களுக்கு ஏகதேசப்படுந் தகுதியுடைய மாயையே உருவமாயிற்று; வியாபகமாயறியும் பசுபதிக்கு அதுபோலேகதேசப்படுந் தகுதியில்லாத சத்தியே உருவமாயிற்றெனக் கொள்க.

இனி, ஆணவமகன்ற வறிவொடு தொழிலையார்க்கும் என்பதற்கு, வியாபகஞானத் தொழில்களை ஆணவமலந் தடுக்குமென் றுரைப்பாருமுளர். முன்னும் பின்னும் பொருளியைபுபடுத்தற்கேலாது நின்றுவற்றுமாகலின் அஃதுரையன்மையறிக.

நிரம்பவழகியருரை வருமாறு.

மீளவும் புத்தர் உம்முடைய கர்த்தாவுக்கு மாயாதேகமல்லவோவென்று சொல்லில், எம்முடைய கர்த்தாவுக்கு மாயாதேகமல்ல, சத்திவடிவுகாணும். அப்பொழுது சத்திவடிவென்றும் மாயாவடிவென்றும் ஒவ்வாதோவென்று சொல்ல, ஒவ்வாதென்று மறுத்தருளிச்செய்கிறார்.

மாயைதானமலத்தைப்பற்றி வருவதோர் வடிவதாகும் - மாயாதேகமானது ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக ஆணவமலங் காரணமாகவுண்டாய் வருகிறவடிவுகளாயிருக்கும். எம்முடைய கர்த்தாவுக்குச் சத்திவடிவு காணும். அப்போ சத்தியாலே கொள்ளப்பட்டவடிவு அப்படியல்லவோ, அல்ல. அதெப்படியெனில்?— ஆணவமகன்றவறிவொடு தொழிலையார்க்கும் நாயகன் - இப்படி அநாதியே யுண்டாய்வருகிற ஆணவமலத்தால் மறைக்கப்படாமல் மலாதீதனாயிருக்கிற ஞானசத்தியையுங் கிரியாசத்தியையு முண்டாக்குகிற கர்த்தாவானவன்,-- எல்லா ஞானத் தொழில்முதல் தன்னாலாலே காயமோ மாயையன்று - அந்தக் கர்த்தா சருவஞ்ஞத்தையும் சருவ கிருத்தியத்தையும் சருவ முதன்மையையுமுடையவ னாகையாலே அவனுக்கு வடிவு மாயையல்லவாகையாலே,—காண்பது சத்தியினால் - அவனுடைய வருளை யவனுக்குத் திருமேனியாம் என்றறிவாயாக.

இதனாற் சொல்லியது மாயா சரீர மலசம்பந்தமாயிருக்கிற ஆன்மாக்களுக் கொழிந்து சிவனுக்கில்லையென்றும், அவன் மலாதீதனாயிருக்கிறபடியினாலே தனது சத்தியே வடிவாகச் சகளீகரித்துப் பிரபஞ்சத்தை நடத்துவனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

இனி விடை.

நீ யிங்ஙனங் கூறுதல் பொருந்தாது, அங்கங்களேற்றத் தாழ்வா லங்கங்க ளேற்றத்தாழ் வுடையனவன்றித் தம்மு ளொப்பனவல்ல, அற்றேலவ்வேற்றத்தாழ்வு கொன்னனே யெனிற் கூறுதும். போகிகளம்மனோரெல்லாருமலத்தைப் பற்றிக்கிடக்கும் பசுக்கள், அதுவன்றி யொன்றையே யறிதலுமொன்றையே செய்தலு மொன்றிலே முதன்மை யாதலு மாகியஅற்பஞானத் தொழின்முத லுடையராம் அபமுதல்வருவான,— ஆபஆணவ மகன்ற - இவ்வாணவமலம் நீங்கிய,— அறிவொடு தொழிலையார்க்கு நாயகன் - அறிவிற்றங்கி நின்றுணர்த்தவோனாகிய பசுபதி —எல்லா ஞானத்தொழின் முதன்மையானாலே - அதுவுமன்றி யெல்லா அறிவு மெல்லாத்தொழிலு மெல்லா முதன்மையு முடையன் இங்ஙனமங்கிகட்குத் தம்முளேற்றத் தாழ்வுகளுண்மையி னதறிகேறப,—மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு,—வருவதோர் மாயைதானவடிவமாகும்-அதனோடியைபுடைத்தா யேகதேசஅறிவைச்செய்யு மாயை யுருவமாதலும், அநாதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு,—காயமோ மாயையன்று-வடிவ மேகதேசத்தைச்செய்யு மாயையல்ல ஆகலின,— சத்திதனால் காண்பது - மலநீங்கிய வுயிருக்கு வியாபக அறி

வைச்செய்யும் சத்தியுருவமு மாதலே யமைவுடைமையின் அங் கங்களினுந் தம்மு ளேற்றத்தாழ்வு மை இனிது விளங்குதலா ன அதனையறியாது இச்சைசேற பலருமிச்சை யென்றும, மா யையெனனில வடிவெலா மாயை யாகுமென்று கூறுதல் அடா தெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

அவனுக்கு வடிவுண்டாகப பரிவது சத்
தியாலென வுணாததுகிறா

சத்தியே வடிவென்றாலுந் தானே பரிணாமமாகு,நி
த்தமோ வழியுமத்தா னிமல னருவேயெனி, னத்
துவா மாக்கத்துள்ளா னெவ்வ னருமைதன்னைப்,புத்
திரா வடையைப்போல விருந்தனை புகலக்கேணீ.(௪௨)

(இ - ள்.) சத்தியே வடிவென்றாலுந் தானே பரிணாமமாகு நித்தமோ வழியு மத்தா னிமல னருவே யெனில்	அந்தச் சத்தியாகுஞ் சத்தியானே வடிவாமெனில்? அப்பொழுது பரிணாமமென்றாகுங் குற்றமுண்டாம அதற்கு நித்தியத்துவமில்லையாயவிடும அந்த நிமலனாகிய சிவன் ரூபமொழிந்து ரூபங்கொள்ளானென்று நீ சொல்லில்?
அத்துவா மாக்கத்துள்ளானென்று	அரூபமாகி லான்மாக்களுக்குப் பாவனை கூடாது.

ஆகையால் வடிவுடையவனையே பாவித்துப் பூசிக்கையின பொருட்டு மயிர் தோல் முதலியவாறுங் கலைமுதலியவாறுக இ

ருமேனியாகையால்; அத்துவாமூர்த்தியென்று வேதாகமங்கள் சொல்லுகிற தில்லையாய விடங்காண

இவனருமை நீ புத்தியை யுடையவர்களைப்போல விருந்தனைப் புத்தி கடையா லவனுடைய ஸ்வரூபத்தையும் வ்தா னுடைமை யாபகத்தையு முனக்குணர்த்துதும் அதனைக் போலவிருந்தனை கேட்பாயாக எ - று.

புகலக்கேணி.

இதற்கு மேற்கந்தத்திலுஞ் சுவாயம்புவத்திலு மறிக (சுஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

சத்தியே வடிவென்றலுங் காண பரிணாமமாகு நிதசமோ வழியும் - சத்தியே தேசமென்றும் பொழுது மேகம் பாவியா தியவத்தையை யுடைய வேண்டும், அடைந்தபொழுதே பரிணாமியாய் நித்தியத்வ வானியும்வரும் —அதற்கா யின்மலனருமை யென்னி லத்துவாமாகத் துள்ளானென்று - அதனையுள்ள சங்கை பரிகாரமாகக் காதரா லுருபமெனில், சடத்துவாருப பிரவிஷ்ட னல்லவாமென, உத்தரமாக,— இவனருமை தன்னைப் புத்தி காருடைமைபோல விருந்தனை புகலக்கேணி - இவ்வாறு சங்கிதமாயுள்ள சிவஸ்வருபத்தி னருமையைச் சொல்லுகின்றோம், நீபுத்தி யுடையவனைப் போ லிருக்கிறாய் கேளென்று மேற்கூறுதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

அப்போது பரிணாமதோஷம் வருமென்று சொல்லப் பரிகரிக்கின்றார்.

சத்தியே வடிவென்றாலுந் தான்-சிவனுக்குச் சிவசத்தியே சரீரமென்று சொன்னாலும் அகண்டித மூர்த்தியாகச் சொல்லலாம், கண்டிதமூர்த்தியாகச் சொல்லின்,—பரிணாமமாகும்-திரிவதாகும். அதனால்,—நித்தமோ வழியும் - நித்யமென்கிறதுபோய் அநித்தியமாகும் மாயை கலாதி காரியமாவதுபோல ஏகதேசத்திற் கண்டித மூர்த்தியாமெனனில்? மாயைபோற் சடமாம்,— அதனால் - அந்தக்குற்றம் வருதலால்,—நின்மலனருவேயெனனின் - நீ சொன்ன வுருவமன்று, நீ சொன்ன வருவே யெனனில்?—அத்துவாமார்க்கத்துள்ளானன்று - சிவன சடத்துவா மார்க்கத் திருவுருவாயிருக்கும் பொருள்போ லல்லன, ஆவனெனனில்,—இயனுமை தன்னைப் புத்திரனுடைமைபோல விருந்தனை புலகமேனி - மாறுபடுமென்பது சொல்ல நீ கேள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அங்ஙனமாயினும் உருவமெல்லாங் கண்டிதப்பொருளாகலிற் பரிணமித்தழிவெய்தாதது சிவசத்திக்குத் தகாமையால், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் முதற்கட் கூறப்படும் அருவப்பொருளாதன் மாத்திரையானே அமைவுடைத்தெனின்? அத்துவாவையுஞ் சடப் பொருளை அவற்றோடொப்ப வைத்து அங்ஙனங் கூறுதல் பொருந்தாதென்பதாம்.

புத்திரனுடைமைபோல விருந்தனையென்பது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி

அன்றென்பது பாடமாயின், அத்துவாமார்க்கத்துள்ளானென்பது. அத்துவாமார்க்கத்துள் ஒன்றாகக் கருதப்பட்டானை

ன்றுரைத்து, அன்றியென்பது அவயவத்துவாக்கள் இயல்போடு மாறுபட்ட இயல்பின்ன வினைத்தொகையாக வைத்துரைக்க. அன்றுதல் அப்பொருட்டாதல் "அன்றினார்புரமெரித்தார்க்கு" எனபதனானறிக. அற்றேல், முதல்வன் அருவமேயெனில் அத்துவாக்களின் வேறுருவும் முடையனென்றல் யாங்ஙனமெனின்? அது வருஞ்செய்யுளிற் கூறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

தனது சத்தியே வடிவாக வுடைமையால் உருவமுண்டாம், உருவமுண்டானபொழுதே அதற்கொரு அழிவுமுண்டாம், ஆகையால் சிவனுக்கு வடிவு அருவமென்று புகலுனசொல்ல; அருவமல்லவென்று மறுத்து அருளிச்செய்கிறார்.

சத்தியே வடிவென்றாலும் ஞானபரிணாமமாகு நித்தமேயாவழியும்-அந்தச் சாதாக்கியத்துக்குத் திருமேனி சத்தியேயென்று சொல்லினும் அதற்குப் பரிணாம முண்டாதல் நித்தியமென்கிற முறைமையும் நிலையாயவிடும்,—அதனால் நீ மேலென்றுமேவ பெனவில லத்துவாமாகத்துள்ளானென்று- அநாதி நிமலமே சிவன், அருமியாயிருப்பானென்று நீ சொல்லின், ஆறத்துவாவிடத்துமாயிருக்குள்ள அத்துவாமூர்த்தியென்று வேதாகமங்கள் சொல்லுகிற முறைமையுண்டாகாது சிவனுடைய திருமேனி யுருவமானாலும் அதுக்கழிவில்லையென்றும், அத்துவாமூர்த்தியாகையினாலருவமல்லவென்றுஞ்சொல்ல, இவையிரண்டுமல்லவென்னில்? பின்னையேதென்று கேட்க,—மேலுமருளிச்செய்கிறார். இவனருமை தன்னைப் புத்திமானுடையைபோல விருக்கிறானை புகலக்கேணீ - ஆகையால் நீ புத்தியுடையவர்களைப்போலே யிருந்தாய், அதைக்

கர்த்தாவினுடைய வருமையை நானுனக்குச் சொல்ல நீ கேட்பாயாக.

இதனாற் சொல்லியது சிவஞானது சத்தியே வடிவாகச் சகளீகரித்தாலும், அது ஒரு காலத்திலு மழியாதென்றும்; அது அரூபமாயிராதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சத்தியே வடிவென்றாலும் - அவனுடம்பு சத்திவடிவாயினும்,— தான்பரிணாமமாகு நித்தமோவழியும் - உருவமெல்லாங் கண்டதப்பொருளாதலின் பரிணமித் தழிவெய்தும்,— அதனால் - அதுசிவசத்திக்குத் தகாமையால்,— நின்மல னருவேயென்னில் - அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் முதற்கட் கூறப்படும் அருவப்பொருளாகன் மாத்திரை யென்றலே அமைவுடைத்தென்னில்,— அத்துவமார்க்கத்துள்ளா னன்று - ஆறத்துவாவையுங் கடந்தபொருளை யவற்றோடொப்பவைத்து அங்ஙனங்கூறுதல் பொருந்தாதென்னில்,— இவனருமை தன்னை - இவன்றன்மையை,— புத்திதானுடையை போல இருந்தனை - புத்தியுடையாய்போல விருந்தவனே,— புகலக்கேளாய் - கூறுவாம் நீ கேட்பாயாக என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலைக்கோர் புறனடை யுணர்த்துகிறார்.

உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோ டருவமாகி, இலகிடு மொன்றொன்றாக நின்றவன் நிலையே.

போல, வலகிலா வறிவன்றூனு மருவமே யென்னிலா யந்து, குலவிய பதார்த்தத்தொன்றாய்க கூடுவன் குறித்திடாயே. (சரு)

(இ-ள்.) உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோ டருவமாகி நிலவிடு — விசுவத்திலுண்டாகிய பதார்த்தமெல்லா முருவமாயு மருவமாயும் பொருந்தாநிற்கும்.

ஒன் றொன்று கா நின்ற வசுநிலேயேபோல — அநாமும் ரூபமுங் கூடிநின்றாலும உருவ த்திரவிய மருவத்திரவிய மாகாது, அருவத்திரவிய முருவத்திரவிய மாகாது நின்ற முறைமைபோல;

அலகிலா வறிவன்றானு மருவமே யெனவிம் — சாவஞ்ஞனான சிவனு மருவத்தன்மையுடையனென்றால் அப்பொழுது

ஆய்ந்து — ஆராய்ந்து,

குலவிய பதார்த்தத்தொன்றாய்க் கூடுவன குறித்திடாயே — ஆன்மாக்களாற் கொண்டாடப்பட்ட சிவனும், விசுவத்திற் பதார்த்தங்களோ டொன்றாய் விடுவனகாண் எ-று.

இதற்கும் பந்தமுமென்ற விருத்தத்துக்கு மதங்காகமமெனவறிக (சரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோடருவமாகி நிலவிடு மொன்றொன்றாகா நின்ற வசுநிலேயேபோல வலகிலாவறிவன்.

ருவு மருவமே யெனனில் - உலகத்திலுண்டான வஸ்துக்களெ ல்லா முருபமாகியு மருபமாகியுமுள்ளதாம் உருபமான தருபமா காது, அருபமான துருபமாகாது,அது நின்ற நிலையேபோல வ ளவிறந்த ஞானஸ்வரூபியாகிய சிவனு மருபமே யென்று சொ ல்லில்,—ஆய்ந்து குலவிய பதார்த்தத் தொன்றுக்கு கூடியவன - விசாரித்துப் பார்க்கிற பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களு க்கு ஒன்றாகப் பொருந்துவன,—குறித்திடாயே - அப்படி யறி யவன சாவவியாபி யாகையா லெல்லா ருபமுந தானாகி நின்ற பதியினுடைய ஸ்வபாவ ருபமானது சிற்பிரகாச மான தமது சமவாய சக்தியே

ததுக்தம் - [illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—∩—

மாறுபடுநிலை வரைந்துரைக்கின்றார்

உலகினிற் பதார்த்தமெல்லாம உருவமோடருவமாகி நில விடும் - மாயை முதலிய வருவமும பூத முதலிய வுருவமுமாகி நிற்கும்,—ஒன்றொன்றாகா நின்ற வந்நிலையேபோல - அருவுரு வாகாது,உருவருவாகாது நிற்கும அந்தமுறைமையேபோல,— அலகிலாவறிவன றுனு மருவமே யெனனில் - ஒப்பற்ற ஞானமூ

டைய சிவனு முருவில்லாப்பொருளென்று சொல்லில்,—ஆய்ந் து முலகிய பதார்த்தத் தொகுதியுட் கூடுவன் - விசாரித்துக் கொண்டாடப்பட்டனவாகிய மாயா மாயாகாரியப்பொருள்களினொ டொருப் அப்பொருள்களோடு கலப்பில்லாத கலப்பன,—குறித் திடாவோ - விசாரித்துப்பார்.

சித்துரு சடவருபோ லன்றென்று தாற்பரியம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

ஆகாயமுதலிய அருவப்பொருள் உருவத்தினியல்புடைய தாகாது, நிலமுதலிய உருவப்பொருள் அருவத்தினியல்புடைய தாகாது, சந்திரன்முதலிய அருவுருவப்பொருள் அருவியல்பேயு டையதுமாகாது உருவியல்பேயுடையதுமாகாது. இங்ஙனம் ஆ ராய்ந்துணரப்பட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றினி யல்புடையதாகமாட்டாது ஆகலான், அநாதிமுத்த சித்துரு வாகிய முதல்வனை அருவப்பொருளேயெனின்? அவனுடைமை போல மாட்டாமையுடையனெனப்பட்டு அவற்றுளொருவனா ய் முடியுமென்பதாம்.

உருவமோருருவமெனப்பதனை இரட்டுறமொழிந்துரைத் துக்கொள்க.

ஒன்றினியல்பு ஒன்றுடைத்தாகாதென்பார், ஒன்றொன்று காவென வுபசரித்தார்; இவ்வாறுரையாதார்க்குச் சற்காரியவா தமுரணுமாறுணர்க.

இதனானே நின்மலன் அருவேயென்பார் மதமும், அருவு ருவேயென்பார் பக்ஷமும் மறுக்கப்பட்டவாறுமாயிற்று. அங்ங னமாக, சத்தியேவடிவென்றால் பரிணாமமாகவே அநித்த

மும் ஆய் விடுமெனக்கூறிய குற்றத்திற்குப் பரிகாரமென்னையெனின், அது வருஞ்செய்யுளிற் பெறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

அந்த முறைமையைத் தெளிய வெனக்குச்சொல்லவேணுமென்ன மேலருளிச்செய்கிறார்.

உலகினிற்பதார்த்தமெல்லா முருவமோடருவமாகி நிலவிடும் - பிரபஞ்சத்திலுண்டான திரவியமெல்லாம் விளங்கப்பட்ட அருவமும் அதற்குடனேயுருவமாயிருக்கும்,— ஒன்றொன்றாக நின்றவந்நிலையேபோல - எந்தப் பதார்த்தங்களுந்தான் அருவமுருவமாகாமல் உருவ மருவமாகாமல் அருவமருவமாயும் உருவமுருவமாயும் நிற்குந்தன்மைபோல,— அலகிலாவீசனொன்று மருவமேயெனவிலாய்ந்து—எண்ணிறந்த திருமேனிகளெல்லாந் தானாய்நிற்கிற பரமேசுரனையுடனேயருவமென்றே யாராய்ந்துசொல்லில்,— குலவியபதார்த்தத்தொன்றாய்க் கூறுவன குறித்திடாயே— ஆகையாலந்தக் கர்த்தாவும் ஆன்மபோதத்தாலே அறிந்துசொன்னபட்டப்பட்ட பிரபஞ்ச பதார்த்தங்களிலே ஒன்றாய் விடுவன் இதனையப்படியாகாதபடியினாலே கர்த்தா வருவமல்லவென்று புத்திபண்ணிக் கொள்வாயாக.

இதனாற் சொல்லியது பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களெல்லா மாயாபதார்த்தமுமா யருவமு முருவமுமா யிருக்கும், சிவன அவையிற்றி லொன்றாகாதபடியாலே அருவமல்லவென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

உலகினிற் பதார்த்தமெல்லாம - உலகிற்காணப்பட்ட பதார்த்தமெல்லாம்,—உருவமோ டருவமாகி நிலவிடினும் - உருவும் அருவும் அருவுருவமாகி காணப்பட்டுநிற்கும்,—ஒன்றொன்றாகா நின்ற அந்நிலையேபோல - ஆகாயமுதலிய அருவப்பொரு ளுருவத்தி னியல்புடையதாகாது, நிலமுதலிய வுருவப்பொருள அருவத்தி னியல்புடையதாகாது, சந்திரன்முதலிய அருவுருவப் பொருள அருவியல்பேயுடையது மாகாது, உருவியல்பேயுடையது மாகாது, இவ்வண்ண மாறாந்துவாவுடபட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றனியல்புடையதாக மாட்டாதாகலான்,—அலகிலா அறிவனாருரு மருவமேயெனனில் -அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனை அருவப்பொருளேயெனின்,—குலவிய பதார்த்தத்தொன்றுப்ப கூடுவன - அவனுங் கொண்டாடப்பட்ட பதார்த்தங்களைப்போல மாட்டாமையுடைய னெனப்பட்டவாறு ளொருவனாய் முடியும்,—ஆய்ந்து குறித்திடாயே - நீ சிந்தனையாராய்ந்து குறிவாயாக வெனபதாம

இதனானே நின்மலன அருவேயென்பார் மதமும் அருவுருவேயெனபார மதமும் மறுக்கப்பட்டவாறு மாயிற்று.

மறைஞானதேசிகர் உரை.

அநந்தக் கர்த்தாவினவடி வினைதன்மையென்
றளத்தற்கரிதென றுணர்த்துகிறார்.

பந்தமும் வீடுமாய பதபதார்த் தங்களல்லாவந்
தமு மாகியில்லா னளப்பில னாதலாலே, யெந்தைகா

னின்னனென்று மின்னதா மின்னதாகி, வந்திடானெ
ன்றுஞ்சொல்ல வழக்கொடு மாற்றமின்றே. (௬௪)

(இ-ள்.) பந்தமும் வீடுமாய பந்தபதார்த்தங்க ளல்லான் — ஆன்மாக்களைப் பந்திக்கப்படும் பந்தமும் அவர்களை மேலானபதத்தை யடைவிக்கப்படு மோட்சமுமெனக் கூறிய சொலலும்பொருளு மல்லாதவன்,

அந்தமு மாதி யில்லான் — முடிவெனனும் பதத்தி னுடையவு முதலெனனும் பதத்தினுடையவும் பொருளல்லாதவன்,

அளப்பிலன் — அளவைப் பிரமாணங்களா லளவிடற் கரியவன்,

ஆதலால் — இத்தன்மையை யுடையனாதலாலே;

எந்தைதா னின்னனென்று மின்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே. — எமதுகர்த்தா வொருவராற சுட்டியறிதற் கரியனாகையாலு மின்னதாகுமென றறிவிடற் கரிதாகையாலு மின்னவனாகா னென்று சொல்லுதற் கேதுவுடன் கூடியதொரு சொல்லில்லை. எ - று.

ஏகாரம் தேற்றம்.

உ-ம். மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான்வார்சடையான் மாசொனறில்லா, னொப்புடைய னல்லனொருவனல்ல னோரூரனல்ல னோருவமையிலலி, யப்படிய னவ்வுருவ னவ்வண்ணத்த னவனருளே கண்ணாகக் காண்பதல்லா, லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே. (௬௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் சிவஸ்ரூபத்தை யத்த வியாவிருத்தியினாற் றொகுத்துக் கூறல்.

பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான் - ஆன்மாக்களைப் பந்திப்பதுமா யாணவத்தொடு நீங்குவதுமாய சத்தார்த்த ஸ்வரூபமான வாமயவிஞ்ஞான ரூபியென்று சத்தப்பிரமவாதி சொல்லுவதுமன்று.

இதற்குச் சம்மதி வாக்குக்களைமேற்சூத்திரத்திலெழுதினோம்.

சத்தமே ப்ரம்மமென்பதற்குச் சம்மதி.

[illegible]

அந்தமு மாதியில்லான - உற்பத்தி திதிநாசத்தையுடைய தேகமில்லாதவன்,—அளப்பிலனாதலாலே - காலதேச வஸ்துக்களினாற் பரிச்சேதிக்கப்படுகிறவனல்லனாகையால்,— எந்தைதானின்னனென்று மின்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே - எம்முடைய ஸ்வாமிதானதிகார கர்த்தாக்களுக்குளொருவரென்று மின்னதாவரென்று மின்னதாகாரனென்றுஞ் சொல்லுதற்குச் சங்கையு முத்தரமுமில்லை.

இதனாற் சத்தமே பிரமமென்பவனையு மதிகாரகர்த்தாக்களு ளொருமூர்த்தி யெனபவனையு மறுத்தது.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சாங்கரியமுண்டென் றுரைக்க வில்லையென்றும், பிரகாராந்தரத்தினு ளுண்டென்று முரைக்கின்றார்.

பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான் - மோகமும் போதகமுமாயிருக்கும் மாயா மகாமாயா காரியமாகிய சொற்பொருளாகும் பொருள்களல்லான,— அந்தமு மாதியில்லான் - நித்தியன,— அளப்பிலன - வியாபகன,— ஆதலாலே எந்தைதான - எமது சுவாமிதான,— இன்னனென்றும் - இக்குறியுடையனென்றும,— இன்னதாம - இப்படியாவதென்று சுட்டியறியப்படும பொருளாமென்றும,— இன்னதாகிவந்திடான -வியாபகத்தால் எல்லாந் தானாய்வா யிருந்தலால் இப்பொருளாய் வாரான,— என்றுஞ் சொல்லவழக்கொடுமாற்றமின்றே - சங்கையுத்தரங்களில்லை அனுமா னாகமங்களில்லையென்றுமாம.

சிவஞானயோகியருரை வருமாறு.

அநாதிமுத்த சித்துருவாகிய எந்தை, கட்டு வீடென்னும் பதங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடையனல்லனாகலானும், எழுவாயிறுவாய் இலனாகலானும, அவையிலனாகவே அளவைகட் கெட்டாமையானும், அருவம் உருவம் அருவுருவமென்னும் முக்கூற்றுள் இன்னனென்று தான் அம்முக்கூற்றும்படும் விருத்தி பரிணாமம் விவாத்தனமென்பவற்றுள் ஒன்றிற் படுவன படானென்று தான கூறுதற் கோராசங்கையுமில்லை, ஆசங்கையின்மையின அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லையென்பதாம்

அருவமெல்லாம் உருவமாய்த் தோன்றுதலும் உருவமெல்லாம் அருவமாயழிதலு மொருதலை. அதுபற்றி அவை அளவைகட்கு வரம்பு படுவனவுமாம்.

அநாதிமுத்த சித்துருவாகிய எந்தைக்குத் தோற்றக் கேடுகளின்மையானும, அவையின்மையின் அளவைகட்கு வரம்புப

டாமையானும், அவன் முக்கூற்றி னொருகூற்றினும் வைத்து மொழியப்படா னென்பார், அந்தமுமாதியில்லா னளப்பிலனு தலாலே, யெந்தைதானின்னனென்று சொல்ல வழக்கொடு மாற்றமின்றே. என்றும்; கட்டு வீடுகளிலனாகலின் எவ்வாறுமா மெனபார், பந்தமும்வீடுமாய பதபதார்த்தங்களல்லான் இன்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்வழக்கொடு மாற்றமின்றேயென்றும் கூறினார். எதிர் நிரனிறை "எந்தையாரவரெவ்வகை யார்கொலோ" என்றருளிச்செய்த பாசுரமுமிது

பதபதார்த்தமென்றது குழைக்காதுபோல் இரண்டாம் வேற்றுமைத்தொகை பதம் அவயவச்செவ்வி.

ஆதியுமென்னு மும்மை விகாரத்தாற்றொக்கது அற்றேல், உருவமுடையாரெல்லாம் விகாரப்படுதலும் ஏகதேசமாதலுந் தொடக்குறுதலு முடையராதல் காணப்பட்டமையின், முதல்வனுக்கு உருவமுண்டாயின் அவையு முளவெனப்படு வழுவாமா லெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சொல்லப்பட்ட உம்முடைய கர்த்தாவினுண்மை எப்படியென்ன, அவனுண்மையை ஆன்மபோதத்தால் அறிந்து சொல்லப்படாதென றருளிச்செய்கிறார்.

பந்தமும்வீடுமாய பதபதார்த்தங்களல்லான்-ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக அவர்களைத் தொந்திக்கப்பட்ட பந்தங்களுமாய், அது புசித்துத் தொலைந்தால் விட்டு நீங்குவதாயிருக்கத்தக்க லோகங்களுமாய், அந்த லோகங்களிலுள்ள பொரு

ள்களுமல்லாத தத்துவாதீதனுமாய்,—அந்தமு மாதியில்லான்- மற்றுள்ள வடிவுகளைப்போலத் தனக்கொரு முதலு முடிவுமில்லா தவ னாகையினாலே,—அளப்பிலன் - ஒருவராலு மின்னபடியெ ன் றளந்தறியப்படாதவன்,—ஆகலாலே எந்தைதானின்னனெ ன்று மின்னதாமின்னதாகி வந்திடானென்றுஞ்சொல்ல வழக் கொடு மாற்றமின்றே - அப்படியிருக்கையினாலே எம்முடைய சுவாமிதான இன்னானென்று மின்னுருவானென்றும் இன்னதா மென்று மின்னதாகாதென்றும இன்னதாகி வருவனென்றும் இன்னதாகி வாரானென்றும சொல்லுகைக்கு அதற்குண்மை யாதொரு வழக்குமில்லை அதற்கோ ருத்தரமு மில்லை.

எந்தைதா னின்னனென்று மின்னதாமின்னதாகி வந்தி டானென்றுஞ்சொல்ல வழக்கொடு மாற்றமின்றே என்றதற் குப் பிரமாணம தேவாரம, "மைப்படிந்த கண்ணாளுந் தானுங்க ச்சிமயானத்தான்வார்சடையான்மாசொன்றில்லா,னொப்புடை யனல்லனொருவனல்ல னோரூரனல்ல னோருவமனில்லி, யப் படியனவ்வுருவனவ்வண்ணத்த னவனருளேகண்ணாகக் காணினல் லா, லிப்படியனிவ்வுருவனிவ்வண்ணத்த னிவனிறைவனென்றெ ழுதிக் காட்டொணாதே." என்றுஞ், சிவபுராணம். "இன்பமுந் துன்பமு மில்லானேயுள்ளானே-அன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்-சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமைய னே-யாதியனே யந்த நடுவாகியல்லானே" என்றும், திருச்சு ண்ணம். "வேதமும்வேள்வியுமாயினார்க்கு மெய்ம்மையும்பொய் மையுமாயினார்க்குச், சோதியுமாயிருளாயினார்க்குத் துன்பமுமா யின்பமாயினார்க்குப், பாதியுமாய்முற்றுமாயினார்க்குப் பந்தமுமா ய்வீடுமாயினார்க்கு, ஆதியுமந்தமுமாயினார்க்கு ஆடப்பொற்சுண் ணமிடித்துநாமே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது கர்த்தா சடசித்துக்க ளிரண்டினும் நிறைந்து அவை தானேயாய் நிற்கச்செய்தேயும் அவையொன றுடனுந் தோய்வற நிற்பன் ஆகையால், அவனுண்மையை அவ னறிவிக்க வறியும் தொழிற்கு ஆன்மபோதத்தால் இன்னபடியெ ன்றுணர சொல்லப்படானென்னு முறைமையை யறிவித்தது.

'சொன்ன' 'அழிப்பு' 'அருவமோ' 'கண்ணிடும்' 'வித்தக' 'மாயைபதான' 'சத்தியே' 'உலகினில' 'பந்தமும்' ஆகத் திருவிருத்தம் ஒன்பதும் புத்தன.

அவன் கர்த்தா வில்லையென்றால், பிரபஞ்சம் ஒருவர் படைக்கவேண்டுவ தில்லை அநாதியேயென்றும் சொன்ன விதற்குப் பிரமாணம் பரபக்ஷம், அவனமதம "பெறுவதிங் கெனபடைத்துப் பெற்றதுவிளையாட்டெனவிற, சிறுமழைவிறையதாகுந் செய்திடுங்கனமதனெனவி, னுறுபெருங்கணமஞ்செய்வோர முன்புளராவருஞானம், யறிவுறுஞாலமெல்லா மநாதியென றறிகிடாயே" என்னுமதுவ கண்டுகொள்க.

சித - பர - சௌ - மத, உ௬

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

எங்கைதான் - அநாதிமுத்த சித்துருவாகிய வெங்கை,— பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான - கட்டுவீடெனும் பகங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடைய னல்லனுதலானும்,—அங்கமுமாதி யில்லான-இறுவாயு முதலாயிலனுகலானும்,— அளப்பிலனுதலாலே - அளவையிலனுகலானும்,— இன்னனென்றும் - அருவமுருவ மருவுருவமென்னு மூக்கூற்றுள் இன்னனுவனென்றுதான்,—இன்னதா மின்னதா

கிவநிடானென்று சொல்ல - அம்முக்கூற்றுப்படும் விருத்தி பணமம்விவர்த்தன மென்பவற்றுள் ஒன்றிற்படுவ படானென்றுதான கூறுவதற்கு,—வழக்கொடுமாற்ற மின்றே - ஒராசங்கையு மில்லை, யாசங்கை யின்மையி னதற்கு மறுமொழியாகிய பரிகாரமு மில்லையெனபதாம்

மறைஞானதேசிகர் உரை.

மேல முடிநததுமுடித்தலென்னு நதந்திர
வுத்தியா லுணாத்துகிறார்

குறித்ததொன் றுருகமாட்டாக் குறைவில னாதலா
னு, நெறிப்பட நிறைந்தஞானத் தொழிலுடை நிலை
மையானும், வெறுப்பொடு விருப்புத்தன்பான் மேவு
த லிலாமையானு, நிறுத்திடு நினைந்தமேனி நின்மல
னருளினாலே. (௬௫)

(இ - ள்) குறித்த தொன் றுருகமாட்டாக் குறைவில னாதலானும் — ஆன்ம போதத்தாற் குறிக்கப்பட்டன வெல்லாமாய் நிற்கின்ற நிறைவினையுடையனாதலானும்,

நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும் — தன்னிடத்தொருக்காலும் பிரிவற்றிருக்கிற ஞானக்கிரியைகளை யுடையனாய் நிற்றலானும்,

வெறுப்பொடு விருப்புத்தன்பான் மேவுத லிலாமையானும் — ஆன்மாக்களைப்போ லிராகத் துவேஷாதிக டன்னிடத் தில்லாதவனாகையாலும்,

நிருத்திடு நி — நிட்களனான சிவன் றனதுகாருண்ணிய
னைந்த மேனி நி — த்தினாலே தனக்குப் பொருந்தினதொரு தி
னமல னருளினா — ருமேனியைக் கொண்டருளுவன. எ-று.
லே.

இதற்குச் சித்தியத்தனுசுத்தாக்கியையிலுங் காண்க (சாரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

ஆயினுஞ் சிவனுக்கு ரூபமுண்டென ஆகமங்களிற் சொல்லுவது முண்டேயெனின்? உண்மை. அஃதெப்படி யெனின்?

சுத்தக தொன்றுக்கமாட்டாத குறைவிலனாகலானும்-ஆன்மாக்களைப்போலொன்று நினைத்து, அது கூடாதென்னுங் குறைவில்லாதவனாகையினாலும்,—நிறைந்த ஞானத்தொழிலுடை நிலைமையானும்-மாறுபாடில்லாத பூரணஞானக்கிரியை நித்தியமாக வுடையனாகையானும்,—வெறுப்பொடு விருப்புத் தனபான தேவதிலாமையானும் - கோபமான நிக்கிரகத்தையும் பிரியமான வநுக்கிரகத்தையும் பண்ணுகையினுமவையாற் பாவபுண்ணியங்க ளணைவிடத்திற் பொருந்தாதவனாகையானும்,—நிருத்திடு நின்னைந்த மேனி நின்மல னருளினாலே-நின்மலனாகிய சிவனானவன் பாசிசுகுரு சீவன்முத்தர்களுடைய தேகத்தைக் கிருபையினாற் றமது திருமேனியாக வதிஷ்டித்துக்கொண்டு நின்று கிருத்தியங்களைப் பண்ணுவன. இதனால் லகுத்தேஸ்வராதிகளை யநுக்கிரகித்த தர்மாத்துக்களை யதிஷ்டித்துக் கொண்டு கிருத்தியங்களைப் பண்ணுவன. பூமியினு மாசாரியமூர்த்திகளை யதிஷ்டித்துக்கொண் டநுக்கிரகம்பண்ணுவனென்றிதன் பொருள்.

[illegible] — [illegible]

க்ருʼ: பதீநாம் ஸ்ருʼஷ்ட்யாதிக்ருʼத்யக்ருʼத: | காமாத்ருʼஷ்டா ரூப்யே ஷே
ஷூநாம் கர்மாத்ருʼஷ்டாதிபம் பரம் || ஶாந்தப்ராவி
ப்ரஹ்மவாந்து ஸம்ஜநாந்து ஸ்வநாயிவாந்து | யேஹ ப்ர
ஸ்வச்சேதிதம் யேஷாம் ஸ்ருʼஷ்டிக்ரியா நிம்ஸ்யதா || ப்ரணே
த்ருஷு பஸ்ய ஸாத்தாம் பஸ்யம் ஸேதநம் வதந்
காந்து | ஸஸோஸப்ரகாஶகோபே தாந்து காமஸாஸா பயி
ஸித்தாந்து || ஸித்தள வகாஶ காஷேதாந்து ஸஸ்யாக்ருʼத்ர
ஸமீதஜஸா | யதந்த்ரிஸர்வஸ்ய ஸிஸ்ப்ர ஸஷ்டி ஹர்ஷ
மிதாஶநஸ்வேச்சித தஜதி ||

சூத்ராவி - சைகாரியா ஹேதுகாந்யுஸாரதி.

சிவஞானபோதம் "நானவனென் றெண்ணினர்க்கு நாடு முளமுண்டாதல், னினைவொன் றின்றிப் தானதுவாய்— நானெனவொன், றின்றென்று தானே யெனுமவனாத் தன்னடியவைத், "தல்லென்று தானு மிறை" என்ம் சிவஞா-௧௦-சூ,க-செ தியானநிப்பவர் மனமகோயிலாகக் கொள்பவன் என்பதனும்

த்யாயிநாம் ப்ரதிதேஹம் பதி: ஸ்ரீ ஜாநமிஶ்ருʼதே: |
ஸூக்ஷ்மத்ருஷ்டேகதேஹபரிதம் ஸ்வம் ப்ருஷ்டிம் ஸ்ருதி ||

எனபதனும கணடுகொளக

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மேல் அதற்கோர் ஏது கூறுகின்றார்.

நிமலன - சிவன்,—குறிக்கதோன் ருகமாட்டாக் குணவிலனுகலானும் - ஏதுசற் கர்த்தாவாயிருக்கிற சிவன

இயற்றுதற் கர்த்தாக்களாயிருந் தடதேசகர்த்தாக்களுஞ் சிருட்டிமுதலிய கிருத்தியகர்த்தாக்களுமாயிருக்கின்ற அனுசதாசிவர் அநந்தேசுரர் ஸ்ரீகண்டருத்திரர் பிரம விஷ்ணு புத்தர் அருகர் கபிலர் கணாதர் முதலிய கர்த்தாக்கள் சரீரங்களெல்லாஞ் சாக்ஷாத்தும் பாரம்பரியமாயு மதிட்டித்துத் தனது சரீரமாகப் பண்ணிக்கொண்டு அவர்கள் பண்ணுகிற கிருத்தியந் தனது கிர்த்தியமாய் முடித்தலால் அந்த நமது சரீரமென்று,—குறித்த - சங்கற்பித்த சரீரங்களுக்குள் ஒன்றொரு சரீரமும் நமதல்லவென்னுங் குறைவின்றி நிறைவாகி நிற்பவனாதலானும்,—செறிப்பட நின்ற ஞானத்தொழிலுடைமையானும் - எல்லாமாகத்தானே செல்லப் பூரணமாகிய சிற்கிரியாசத்தி சுபசத்தியுடைய தன்மையனாதலானும்,—வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதலிலாமையானும் - இராகத்துவேஷ விசையுந் தன்னிடத்தில்லாமையானும்,—அருளினால் - தன்ற சத்தி சங்கற்பத்தால்,—நினைந்த மேனி - சங்கற்பித்த காரியத்திற்கேற்ற அனுசதாசிவர் முதலோர் திருமேனியை,—நிறுத்திடும் - தனது திருமேனி போலத் தரிக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

விகாரப்படுதற்குக் காரணம் பரதந்திரம், ஏகதேசமாதற்குக் காரணஞ் சிற்றுணர்வு சிறுசெயல்களும், குற்றமுறுதற்குக் காரணம் விருப்புவெறுப்புக்களுமேயாகலின், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன்மாட்டு அவ்வுபாதிகளின்மையின்; அக்குற்றங்களுக்குச் சேயனாகிய அவன், ஆணவமலமற்ற வறிவொடு தொழிலையார்ந்து நிற்றலின், தானினைந்ததோரு திருமேனியைத் தனதாகக்கொண்டருளுவனென்பதாம்.

குறித்ததொன் றாகமாட்டாக் குறையே பரதந்திரமாவ தெனவறிக.

அற்றேல், அக்குற்றங்களிலனாகிய முதல்வன் உருவமின்றி நின்றே எத்தொழிலுஞ் செய்ய வல்லுமாகலான, உருவங் கோடலாற் போந்த பயனென்னையெனின், அஃதுணர்த்துதற் கன்றே வருஞ்செய்யுளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

உம்முடைய கர்த்தாவினுண்மையை அவனறிவிக்க வறியும தொழிந்து ஒருவராலு மறியப்படாதென்ன, சகளீகரித்துப் பிரபஞ்சத்தை நடத்த வேண்டுகையினால் அவனையு மொருவர் படைக்கவேண்டுமென்ற பஞ்சராத்திரியை நோக்கி, அவனொரு வரா படைப்பி லகப்படானென்று அருளிச்செய்கிறார்

குறித்ததொன்றாகமாட்டாக குறைவிலனாதலானும- ஆன்மபோதத்தால் அறிவித்து வென்று சுட்டி யறியப்படாத குறைவற்று நிறைந்த ஞானமே தனக்குத் திருமேனியாக வுடையவனாகையாலும,—செறிப்படநிறைந்த ஞானத் தொழிலுடைநிலைமையானும் - போந்துசெய்யாமல் எப்பொழுதும் ஒருதன்மையாயிருக்கிற சருவஞ்ஞத்தையும சருவகிருத்தியத்தையும ஒருமைத் தனக்குள்ளவனாகையாலும்,—வெறுப்பொடுவிருப்புத் தன்பால் மேவுதலிலாமையானும-பிரியாப்பிரியங்கள் தன்னிடத்துப் பொருந்தப்படாதவனாகையாலும்,—நிறுத்திடுநினைந்தமேனி நின்மலனருளினாலே - இங்ஙனஞ் சொல்லிப்போந்த முறைமைகளையுடையவனாதலா லவனுக்கொருவ ரொருவடிவு கொடுக்க வேண்டுவதில்லை; தனக்கு வேண்டின வடிவு தானே யெடுத்துக் கொள்ளுவன் மலரகிதனாகையால்.

குறித்ததொன் றாகமாட்டாவென்றது, மீன் ஆமை கேழல் நாரசிங்கம் ஆதியாயுள்ள தசாவதாரமும் எனக்கொள்க.

வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதலிலாமையானு மென்றது, அவன் பசுமுதலல்லவெனக்கொள்க.

இன்னும் சொல்லியது ஆமாபோந்ததால் சுட்டியறிய வொண்ணாத முதலாகையாலே, சகளீகரிக்கு மிடத்துந் தனக்கேற்ற திருமேனி தானே படைத்துக்கொள்ளுமென்றது மற்றொருவரால் படைக்கப்பட்டவனன்றென்னு முறைமையை யறிவித்தது. இதற்குப் பிரமாணம் தேவாரம் "அண்டமாரிருளூடு கடந்தும்பர், உண்டுபோலுமோ ரொண்சுடர் அச்சுடர், கண்டிங்கா ரறிவா ரறிவார்க்கெலாம், வெண்டிங்கட் கண்ணி வேதியனென்பரே." என்றும் "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணுநிலனுந், திரிதருவாயுவல்லர் செறிதீயுமல்லர் தெளிநீருமல்லர் தெரியி, லரிதரு கண்ணியாளை யொருபாக மாக வருளகாரணத்தில் வருவா, ரெரியரவாரமார்ப ரிமையாருமல்ல ரிமைப்பாருமல்ல ரிவரே" என்னுமதனுங் கண்டுகொள்க.

சுப்ரமணியதேசிகருரை வருமாறு.

குறித்ததொன் றாகமாட்டாத் துறையில் ஒருதலானும்-தானினைந்த தொன்றாகமாட்டாது விகாரப்படுதற்குக் காரணமாகிய பரதந்திரமில்லாகிய தன்வயத்த ஒருதலானும்,—நெறிப்பட்ட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும் - முறைமைப்பட்ட ஏகதேசமாதற்குக் காரணமாகிய சிற்றுணர்வு சிறுசெயல்களின்றி முற்றுணர்வு மளவிலாற்றலு முடைய ஒருதலானும்,—வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதலிலாமையானும் - தொ

-கருதற்குக் காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள் தன்மாட்டிலனாகிய பொருளுடைய னாகலானும்,—நின்மலனருளினாலே - அத்தன்மைத்தாகிய அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் கருணையான,—நினைந்தமேனி நிறுத்தி - நினைந்த தொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருளுவன்

மறைஞானதேசிகர் உரை.

சிவஞானமாகமங்களை யநுக்கிரகஞ்
செய்கையின் பொருட்டுத் திருமேனி
கொண்டதென வுணர்த்துகின்றார்

ஆரண மாகமங்க ளருளினா லுருவுகொண்டு
காரண னருளானாகிற் கற்பனை யில்லையாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாஞ்
சீரணி குருச்சந்தானஞ் செய்தியுஞ் சென்றிடாவே. (௪௬)

(இ-ள்) ஆரணமாகமங்களருளினா லுருவங்கொண்டு காரணனருளானாகிற் கற்பனையில்லையாகும் — சிருட்டிகாலத்திற் சதாசிவதேவநாயனார் தமது காருண்ணியத்தினாலே திருமேனியைத் தரித்துக்கொண்டு வேதாகமங்களை யருளிச்செய்தாரில்லையாகில், அவரைப்போலச் சருவஞ்ஞத்துவமுடையவர்களாயவை யிற்றைச் சொல்லுதற்கு வேறொருவருமில்லையாகும்.

நாரணன்முதலாயுள்ள சுரர்நரர்நாகர்க்கெல்லாஞ் சீரணிகுரு — ஆகையால் அப்பொழுது மாயன் முதலாகவுள்ள தேவர்களு மானுடரும் பாதாளத்திலிருக்குஞ் சேடனிவர்களெல்லார்க்குஞ் சிறப்பினைப் பொருந்திய குருபரம்பரை சமுகி

சங்காரஞ் செய் தாக்கிரமமென்றக் கிரமமென விருவித
தியுஞ் செனறி மாக வாகமத்தை யுண்டாக்கி, அதனைப பா
டாரே சபந்தமுதலிய வறுவிதமாயும் பஞ்சவிதமா
யுமொருவாகசோருமேசத திலலாவிடத்துக்
தவாகமங் கேட்டறிய பயிரமபோாயவிடம குருசந்தான ப
ரமபரையுமில்லாதே போமாயிருக்கும் எ - று

சமஹிதாசம்பிரமமாவது — சதாசிவ தேவநாயனாா காமிக முதலிய சிவபேதம் பதினையும் முச்சகன் அநந்தசதாசிவர்க்கு மபிவபு அநாதிசிவா ஞானமுதலான பதினெட்டிருத்திரர்க்கு மனுக்கிரகஞ்செய்வது

கெளசிகசம்பிரமமாவது — சிவன் அட்டவித்தியேசுரர்க்கு முதலனுக்கிரகஞ்செய்வது, பின்பு சிமூலன் வருத்திரர்க்கு குறைப்பது

சம்பந்தமாருவன — பரசம்பந்தமாவது — சிவனுக்கும் அனுசதாசிவர்க்கும்

மகாசம்பந்தமாவது — அனந்ததேவர்க்கும் சிகண்டர்க்கும்

அந்தராளமாவது — சிகண்டர்க்கும் தேவர்க்கும்

திவ்வியமாவது — தேவர்களுக்கு மிருஷிகளுக்கும்

திவ்வியா திவ்வியமாவது — முனிக்கும் மனுடர்க்கும்

அதிவ்வியமாவது — குருக்களுக்குஞ் சீஷனுக்கு மெனவறிக.

இவற்றுள் ளாதியி லனுசதாசிவனை நீக்கி மற்றது பஞ்சசம்பந்தமெனப் பெறும்.

இவ்விருவிதத்தானுஞ் சிவன் திருமேனிகொண் டநுக்கிரகஞ் செய்யாவிடத்துக் குருபரம்பரை சிவபேதத்துக்கு ௩௦-

உருத்திரபேதத்துக்கு-௩௬, ஆக-௬௬-உ-ம், இல்லையென்பது கருத்து

இதற்கு வாதுளாகமம் கிரணம் (௪௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் அப்பரமசிவ னனந்தாதிமூர்த்திகளையும் பூமியிலாசாரிமூர்த்திகளையுந் தனது திருமேனியாக வதிஷ்டித்துக் கொண்டு நிற்பானேனெனின்? வேதாகமங்களை யனுக்கிரகம் பண்ணிக் குருசிஷிய சாம்பிரதாயப் பிரவிருத்தியைப் பண்ணுவித்துத் தத் துவாரா போகமோக்ஷங்களைக் கொடுப்பதாக வென்பது கூறுகின்றது.

(அந்வயம்) காரணனருளினால் உருவுகொண்டாரண வாகமங்கள் ஞானமுதலாயுள்ள சாதனங்கட்கெல்லா மருளாநின்ற கற்பவரில்லையாகுஞ் சீரணி குருசந்தானஞ் செய்திருஞ் சென்றிடாவே - பரமகாரணனாகிய சிவன் கிருபையினாலனந்தேஸ்வர ஸ்ரீகண்டேஸ்வரராதி மூர்த்திகளைத் திருமேனியாகக் கொண்டு நாராயணாதி தேவர்களுக்குஞ் சனற்குமாராதி தேவருஷிகளுக்கும் வசிஷ்டாதி மனுஷ்யருஷிகளுக்குஞ் சேஷன் முதலிய சர்ப்பராஜாக்களுக்கும் வேதாகமங்களை யுபதேசியாதிருந்தாற் சொல்லுவாரு மறிவாருமின்றிக் குருசிஷ்ய சம்பிரதாயப்பிரவிருத்தியு மின்றித் தருமார்த்த காமமோக்ஷமென்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களையு மடைவாரற்றுப் போமென்றிதன்பொருள்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

இப்படி குருக்கங்களை அதிஷ்டித்துத் தீக்ஷோபதேசஞ் செய்யாதிருந்தால், முத்தராவாரில்லை யென்று குருசந்தானமுங் கடவாதென்று கூறுகின்றார்.

காரணனை - சிவனை,—அருளின் உருவுகொண்டு - தன்னுடைய சங்கற்ப மாத்திரத்தினா லுருவு கொண்டு, இதனாமதென்று குருக்கங்களைக் குறிக்குஞ் செலுத்தி,— ஆரணாகமங்க ளருளாரெனில் - வேதாகமங்களை யுபதேசியாராகில்,— கதிப்பவரில்லை - முத்தராவாரில்லை.

மற்றது வெளி - பொருள்.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

உயிர்க்குத் தன்னுடம்பை இயக்குதற்கண் வேறோ ருருவம் வேண்டாமைபோல, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுந் தனக்குருவாகிய உலகத்தைத் தொழிற்படுத்தற் பொருட்டு வேறோருருவம் வேண்டப்படுவதன்றாயினும், பிரளயாகலர் சகலரென்னும் பசுவர்க்கமிரண்டும் முறையே முன்னிலையினும் நின்றுணர்த்தினலன்றி உணரமாட்டாமையின், உயிர்வர்க்கங்கள் பொருளியல்புணர்ந்து வீடுபெறுமாறு வேதாகமங்களைக் கோவைப்படச் செய்தற்பொருட்டும், அதனைக் குருபரம்பரையின் சணவைத்தற்பொருட்டும், திருமேனி ஒருதலையான் வேண்டப் படுமென்பதாம்.

கதித்தல் கதியடைதல்.

அற்றேல், இவ்வாற்றால் அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தனுவுண்டாகவே தனுவினாலுறிய தொழில் கரணம் புவனம் போகங்களுமுளவாமாகலின், அவைபற்றி நம்மனோர்போலச் சுட்டியுணரப்பட்டு வாக்குமனாதீதனென்றல் வழுவாம்போலுமெனின்? அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

உம்முடைய கர்த்தா சகளீகரித்து இந்தக் கிருத்தியங்களைச் செய்யவேணுமோ! நிட்களமாய் நின்று செய்யவொண்ணாதோவென்றவனை மறுத்து மேலருளிச்செய்கிறார்.

ஆரணமாகமங்களருளினாலுருவுகொண்டு காரணனருளானாகிற் கதிப்பவரில்லையாகும் - கர்த்தா தன்னுடைய காருண்ணியத்தினாலே ஞானமே திருமேனியாகக்கொண்டு வடவிருக்ஷத்தின் கீழே எழுந்தருளியிருந்து நாலுவேதங்களையும் இருபத்தெட்டாகமங்களையும் அவையிற்றிலே விரிந்த பொருள்களையும் அருளிச்செய்தானில்லையாகில், அவனையொழிந்து மற்றொருவரிந்த இரண்டு நூல்களையுஞ் சொல்லத்தக்கவரில்லையாகும் — நாரணன் முதலாயுள்ள சுரர்நரர்நாகர்க்கெல்லாஞ் சீரணிகுருச்சந்தானஞ் செய்தியுஞ்சென்றிடாதே - பிரம விஷ்ணுக்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள் மற்றுமுள்ள தேவர்களாயுள்ளவர்கள் நாகலோகத்திலுள்ளவர்கள் இவர்களுக்கெல்லாஞ் சனன மரணங்களைப் போக்குவதாயுள்ள சிறப்புப்பொருந்தியிருக்கப்பட்டநின்ற குருபாரம்பரியத்தின் முறைமையுமுண்டாகமாட்டாது.

இதனாற் சொல்லியது கர்த்தா சகளீகரித்திருந்தே வேதாகமங்களை அருளிச்செய்யாதபொழுது மற்றொருவரால் சொ

ல்லப்படாதென்றும், அதுவனறியும் சருவாக்ஞவ குரு பாரம்பரியமுண்டாகாதென்னு முறைமையையு மறிவித்தது.

இதற்குப் பிரமாணம். திருவம்மானை, "பாரார்விசும்புள்ளார் பாதாளத்தார்புறத்தார், ஆராலுங்காண்டற் கரியானெமக்கெளிய, பேராளன்றென்னன் பெருந்துறையான்பிச்சேற்றி, வாராவழியருளிவந்தெனனுளம்புகுந்த, வாராவமுதா யலைகடல் வாய்மீன்விசிறும், பேராசைவாரியனைப் பாடுதுங்காணம்மானாய்" என்றும், திருவெண்பா, "மூவருமுப்பத்து மூவருமற்றொழிந்த, தேவருங்காணாச் சிவபெருமான் - மாவேறி, வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க, மெய்யகத்தே யின்பமிகும்" என்றும், திருக்களிற்றுப்படியார், "ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே, யோகங்க ளெங்கே யுணர்வெங்கே - பாகத், தருளுவடிவுந்தானுமா யாண்டிலனே லந்தப், பெருவடிவை யாரறிவார் பேசு" என்னுமதுவுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(உயிர்க்குத் தன்னுடம்பை யியக்குதற்கண் வேற்றுருவம் வேண்டாமைபோல, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தன்னுருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேற்றுருவம் வேண்டப்படுவதன்றாயினும்) — காரணனருளினு லுருவுகொண்டு - முதல்வனருளால் உருக்கொண்டு, — ஆரணாகமங்களருளானாகில் - வேதாகமங்களை கோவைப்பட அருளிச் செய்திலனேல், — கதிப்பவரில்லையாகும் - பிரளயாகலர் சகலர் என்னும் பசுவர்க்கமிரண்டு முறையே முன்னிலையினும் படர்க்கையினு நின்றுணர்த்தினு லன்றி யுணரமாட்டாமையின்; உயிர்

வாசகங்கள் பொருளியல்புணராது வீடுபேறடைதலில்லை யாதலால் — காரணன் முதலாயுள்ளசுரர் - அதுவன்றித் திருமான்முதலிய தேவர்களும், — நரர் - மானுடர்களும், — நாகர்களெல்லாம் - நாகர்முதலியோர்களும், — சீரணி குருசந்தானச் செய்தியும் - சிறப்புப் பொருந்திய குருபரம்பரையின் வைத்தருளுதலால், — சென்றிடாவே - செல்லாமையின், திருமேனி யொருத்தலையான வேண்டப்படும்.

மறைஞானதேசிகர் உரை.

சிவனொருவனேயிருந்து, சிருட்டிமுதலிய கிருத்திய
நிமித்தமாகத் திருமேனி கொண்டதெல்லா ம
னுக்கிரகமென றுணர்த்துகின்றது

உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற்
றோன்றுங், கருமமு மருளானறன்றன் கரசர ணாதிசா
ங்கந், தருமரு ளுபாங்கமெல்லாந் தானரு டனக்கொன்
றின்றி, யருளுரு வுயிருக்கென்றே யாக்கின னசலன்றா
னே. (சஎ)

(இ-ள்) உருவருள் — சிருட்டிமூர்த்தி யைந்தும் திதிமூர்த்தி யைந்தும சங்காரமூர்த்தி யாறுமாகப் பதினாறு திருமேனிகொண்டது மநுக்கிரகத்தின் பொருட்டு பிறவு மெனவறிக.

குணங்களோடு முணர்வருள் — அவனிச்சாஞானமு மநுக்கிரகம்

உருவிற்றோன்றுங் கருமமு மருள் — சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களு மருளே

அரன்றன் கர சரணாதி சாங்கந் தருமருளா

அவனது பாதம் பாணி யங்குலி சடை செவி நாசி கண்ட மகுடமுதலான சாங்கமு மருளே.

உபாங்கமெல்லாந் தானருளா

பரிவட்டம் பூணூல் மாலை ஆயுதங்கள் ஆபரணங்கள் சந்தனம் கங்கா பவானி ஆசனம் முயலகன் நாகம் ஆமை இவைமுதலாயின வெல்லாவுபாங்கங்களையுந் தரிக்குமது அருளே

தனக் கொன்றின்றி

இவைகளைத் தரித்ததெல்லாந் தனக்கொரு பிரயோசனத்தைக் கருதிக்கொண்டதன்று. ஆனால் எக்காரணமோ வெனில்?

அருளுரு வுயிருக்கென்றே யாக்குவனமலன்றானே

நிட்களனாகிய சிவன் றனது காருணியத்தினாலான்மாக்களை யீடேற்றுகைக்காகப் பொருட்டுத் திருமேனிகொண்டது எ-று.

சாங்கமென்பது—அங்கத்துடன் கூடிய வுருப்புக்களென்றவாறு.

உபாங்கமென்பது—அவனைவிட்டு நீங்காமற் சமீபத்திலிருக்குமது

ஒடு எண்.

தான அசை

ஏகாரம தேற்றம்

இதற்கு வாதத்துங் காரணத்துங் காண்க (௬௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— ா ——

மேல் கர்த்தாவானவனுக்கு ரூபாதிகளில்லை யெனனில் நினைக்கவும்போகாதானாகையால் அவனைவழிபட்டுப் பிழைப்பதெவ்வாறெனின்? உத்தரம்.

உருவருளாவு - சிவனுடைய அங்கமுமானமாகங்களின் அநுக்கிரகார்த்தமாகச் சிற்சத்தி ஸ்வரூபமானதே,—கரசரணாதியருள - கரசரணாதியான பிரத்தியங்கமுங் கிருபையினாலான ஞானஸ்வரூபமே,—குணங்களோடு சாங்கமுணர்வருள - தேசகுண ஸ்வரூபமான சாங்கமுங் கிருபையாலுண்டான ஞானஸ்வரூபமே,—உபாங்கமெல்லாந் தானருளாவு - உபாங்கமானவைகடானும் அருளினாலுண்டான ஞானஸ்வரூபமே,—உராவிறந்தோனுங் கருமமுமருள் - இத்திருமேனியிறந்தோவாகனமுதலானவைகள் தோற்றுவிப்பதுங் கிருபையினாலேயே,—தனக்கொன்றினறி யருளுருவுயிருக்கென்றே யாக்குவனகிருதனன்றே-இங்ஙனமானதிருமேனிக்கு மாயோபாதியு மில்லாமற் றனக்கொரு பிரயோசனமு மில்லாமலான்மாக்களின் போகமோக்ஷார்த்தமாகப்பண்ணுந் தியானபூசையின்பொருட்டுக் கிருபையினாலுண்டாகிய பாவனாரூபசைதந்நிய விக்கிரகத்தை யுடையவனாகையினாலே சிந்திக்கப்படாதவனென்னறி தனபொருள.

அங்கங்களாவன.—சிரசு முகமு மிருதயமுமாம்.

பிரத்தியங்கமாவன —வக்ஷசுங் கண்டமும் ஸ்தனங்களுந் தோள்களு நாபியு முதரமுங் குஹ்யமு நேத்திரமு நாசியுஞ் சுரோத்திரங்களு மஸ்தகங்களும பாதங்களு மங்குலிகளு மூருக்களு முழந்தாள்களுங் கணைக்கால்களுமாம.

சாங்கமாவது —குணமூர்த்திகளான பத்தும். அவையாவன? ஆநிஸ்வணியாதி குணத்திரயம-திரிசூலம், சத்தியம்-பரசு,

பிரதாபம்-கட்கம், துரபேதத்தியம்-வச்சிரம், அநுக்கிரகம் -அபய முத்திரை, ருத்தியாதிசுந்தராயை - நாகம், அகோரமாயை-பாசம், விவாணம் அங்குசம், சதந்நாதம் - கண்டை, பாசசங்காரம் - அக்னி.

உபாங்கமாவன — ஸௌசிரம் உபவீதம் மாலை கந்தம் ஆபரணம் ஆசனம் ஆயாசம் இவையேழுமாம்.

* [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] || இதி.

இவ்வாறு கிருபையினாற் கொண்ட சதாசிவரிடத்திலுண்டான மகேசுவரனுடைய திருமேனியி னிருதயத்தினின்று சகசராம்சமாக ருத்திரதேவர் தோன்றுவர். கோடி யம்சமாகவாமதக்ஷிண பார்சுவங்களில் விஷ்ணுவும் பிரமாவுந் தோன்றுவர்கள். தக்ஷிணவாம லலாட நேத்திரங்களிற் சூரியசோமாக்கினி தேவர்கள் தோன்றுவார்கள். பிராணனில் வாயுபகவான் றோன்றுவன். சுரோத்திரியங்களின் மந்திராதி சாவகாசமானதிக்குகந் தோன்றும். முகத்தில் வேதாதி சாஸ்திர ரூபமான வபரஞானந் தோன்றும். கண்டத்திற் கணேசுவரர் தோன்றுவர். இருதயத்திற் சுப்பிரமணியர் தோன்றுவர். நாபியி னிந்திர யமவருண குபேரர் தோன்றுவார்கள். பிருஷ்டபாகத்திற் பஞ்சாசத் கோடி தேவர்களுந் தோன்றுவர். உரோமகூபங்களிற் கோடிருஷிகள் தோன்றுவார்கள்.

முப்பத்து முக்கோடி தேவர்களென்றும் நாற்பத்தெண்ணாயிர மிருடிகளென்றும் மிகவுங் கேட்கப்பட்டிருக்கையி லதிகசங்கையாகச் சொல்லுவானென்னையெனின்?

அதிகசங்கையெல்லாம் கண்டத்திற்குப் புறம்பென் றறிக.

சூரிய சோமேந்திராதி தேவர்களுக்குக் காசியபாதத்திரியாதிகளிடத்தி லுற்பத்தியென்றிருக்க மகேஸ்வரனிடத்தி லுற்பத்தியென்றதென்னையோவெனின்? காசியபாதியுற்பன்ன சூரியாதிதேவர்கள் ஈஸ்வராங்கோற்பன்ன தேவர்களுக் கதிஷ்டேய ஸ்தானமென்றறிக.

ஈஸ்வராங்கோற்பன்னரான தேவர்கள் சுத்ததத்துவ வாசிகளாயிருந்து அசுத்ததத்துவ வாசிகளாயிருக்கிற வித்தேவர்களை யதிஷ்டித்துக்கொண்டிருப்பார்கள்.

இப்படி யீஸ்வரனிடத்தி லுருத்திராதி சகல தேவர்களு முண்டானாற்போல, ஈஸ்வரியாளிடத்திலு முமாதி சமஸ்த தேவதாஸ்திரீகளுங் கோடிசக்திகளு முண்டாமென வறிவாயாக.

[illegible]

போக்த வ்யக்தவா: | கேநாநந்த ஸஹஸ்ராம்ஸாக் மூர்த்திஜா சக்திர்வஸ் த்ருத: || ஸர்வஸாமர்த்ய ஸம்பூர்ணா ஜ்ஞாநேச்சா க்ரியாத்மிகா | ஸர்வேச்வரஸ்ய ஸம்பூர்ணா தேவதா ஸ்வத: ஸித்தா | வஸ்தாதேவ தேவஸ்ய ஸித்தா மூர்த்திஸ்வ வபுரீர் வா ||

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

இப்படிச் சிவனுக்கு வாஸ்தவ தேகமில்லாமையால் இப்பாணபூசாதி நிமித்தங் கற்பனைத் தேகம், அனுசதாசிவாதி தேகங்களைப்போலக் கற்பிக்கவேண்டுமோ அதெத்திறத்திற் கற்பிக்க வேண்டுமென்று வினாவி, அவன்றன் சத்தியாற் றிருமேனி கற்பிக்கப்படுமென்று சாற்றுகிறார்.

நிரவயவிகைகளாய், நிருபிகளாய், நிரம்ச நிர்ப்பேதவஸ்துகளாய், நிஷ்காடிகைகளாய், நிஷ்பிரபைகளாய், நிராசமலகளாயிருக்கின்ற சாதாக்யாதி மூர்த்திகளுக்குப் பஞ்சசத்தி சமுற்பன்ன சஷ்டியாதி அஷ்டத்ரிம்சத் கலைகளாயிருக்கும் முன்பின் மூலாக்கிரகங்களில் முறைமையிற்கோத்த ஞானசத்தி இச்சாசத்திமத்தாகிய கிரியாசத்தி கலைகள் விண்ட அகண்ட பிண்டாசல ஸ்வசரீர சாவயவிகளாய், சரூபைகளாய், சாம்சபேதவஸ்துகளாய், சகாடிகைகளாய், சசமபைகளாய், சசலைகளாயிருக்கும் மாயாகலைகள் விண்ட கண்ட பிண்ட சல சுபசரீரம்போல், அயக்காந்தம்போல் அசைவறவிருந்துங் கிருத்திய கர்த்தாதலால், கஷிணாண்டிக சவித சரீரமாக உபசரிக்கப்பட்டது.

ஆதலால், அஞ்சு பதினைந்து பத்து இரண்டு ஆகிய முச்சே த்திர கரசரணுதிகளிற் காட்டிய கண்டிப்பு சலனம் வெண்மை நிறமுகம் நிறமாதிகளால் வருஞ் சகளாதி பேதங்கு சகலமு ம கற்பிதங்கள அசத்தியங்களாம

ஆகையால் கிரியாசத்தி லக்ஷண சிவசரீரத்துக்கு இச்சா சத்தி சங்கற்ப ரூப பிரவிர்த்தி லக்ஷண சகளாதிகார சதாசிவநாமாசுவரூபமும, கிரியாசத்தி சமுத்தியோகரூப பிரவிர்த்தி நிவிர்த்தி லக்ஷண சகள நிஷ்களபோகாதார சிவநாம சதாசிவ ரூபமும், ஞானசத்திகர்த்திருக்கமமா இருப்பு ரூபநிவர்த்தி லக்ஷண நிஷ்கள இலய சிவநாம சாந்தரூபமும, விர்த்தி பரிணதி வியாத்தாரமயமன்று

ஆதலால் அநித்தியங் கற்பித அசத்தியங்களுமன்று.

ஆகையால் அந்த இலயபோகாதிகார முச்சொரூபமும் நித்திய சத்திய ஸ்வரூபலக்ஷணந்தானே!

ஆதலால் அந்தச் சகளமுஞ் சத்திகலா சாகித்தியத்திஞற் சகளம், மாயாகலா ராகித்தியத்திஞல் நிஷ்களமாதலாற் சகள நிஷ்களமாம

ஆகையால் சிவனது

உருவு - அங்கமும,—அருள - சத்திரூபம் —சாங்கத்தருங் குணங்களோடும் உருவிற்சேருமுடம்,—உணர்வுங் கருமமும்-சர்வத்தையும அறிதலும்பண்ணுதலும்,— அருள - சத்திவியாபார ரூபம்.—அரனறன கரசரணுதி,—சிவனது பிரத்தியங்கமும,—அருள - சத்திரூபம்.—உபாங்கமும்அருள்.—எல்லாந்தானருள்-இறைவனிச் சிவனுக்குச் சொல்லப்படு மது யாதொன்றுண்டு அதெல்லாஞ் சத்திரூபமேதான. இப்படி,—அங்கத்தை-சிவன்,—அருளு-சத்திசரீரத்தை,—தனக்கொண்டிறி - தர்ப்பிரயோசனம்

குறியாமல் பிரயோசனம உயிருககெனறே,—ஆககுவன்,

அது வாதுளததில் விததரிககப்படடது

அது வருமாறு

"அஙகபரதயஙகஸாஙகஞ்ச உபாஙகஞ்சதுரோபவேத
சிரோவகதராஞ்ச ஹிருதயம அஙகஞ்சேதிபரகீர்ததிதம
வக்ஷகண்டஸதனௌபாஹூ நாபிகுஹயோதரநததா
நேதரநாஸாஸபகர்ணௌச பாணிபாதௌததாஙகுலீ
ஊருசஜாநுஜஙகேச பரதயஙகஞ்சேதிகதயதே
மூரததிநாயகுணரூபநது ஸாஙகஞ்சேதிபரகீர்திதம்
குணருட்னனமிதிஞ்ஞேயம தத்குணஞ்சததாபவேத
குணைரஸதயமபரதாபஞ்ச தாபமேதயாநுசரஹநதா
ருததிமாயாவியாணஞ்ச நாதாரஸமஹிருதரோவச
வ்ருததசகுஹயரோகதகா தேஷாமலக்ஷணமுசயதே
திரிகுணமருலமிஷயுகதம சததியமபரகரிஷயதே
சடகமீசபரதாபோயம தாபமேதயமவஜ்ரமிஷயதே
ஈசஸயாநுக்ரகபசைவ அபயமசபரசஸ்யதே
ருததிஸ்யாமநாசருநது பாசமமாயாஸவரூபகம
விவர்ணமஙகுசஞ்சைவ கஙடாநாகாதமகமவிது
ஸமஹாரமகநிருபமஸயாத பாசாநாமபஸமஸாதசிருதி
ஏதேவைகுணருபாசச ஸாஙகமசேதிபரகீரததிதம
வஸதரோபவீதமாலாஸச கநதமாபரணநததா
ஆஸநாவரணமசைவ உபாஙகஙசேதிகீரததிதம. இதி"

சிவஞானயோகியருளா வருமாறு.

அரனறனை அருளாகவான, உயிர்கட குணர்வளிப்பதாய் அவ்வவுருவிற் சேரவருஙதொழில்களுங குணங்களுமாகிய கர

ணமும் அருள்வடிவே, கைகால் முதலியவுறுப்புக்களும் அருள வடிவே, உபாங்கமாகிய புவனபோகங்களும் அருளவடிவே, இவ் வருள்வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றித் தன்பொரு ட்டன்மையான் இவைபற்றிச் சிந்தித்தருயினும் அசிந்திதமே யென்பதாம்.

அருளுரு முன்னையது வினைத்தொகை, ஏனையது இருபெய ரொட்டுப் பண்புத்தொகை.

குணம் வாய்மை முதலியன. அவையேயவனுக்குச் சூல மழுமுதலிய படைக்கல மாகலின் அவை கரணமெனப் பட்டன.

காரசர ணாதிசாங்கந் தருமருளென்பது முன்னவைக்கற்பா லதாயினும் செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்

ஆதியென்றதனால் ஏனையங்கப் பிரத்தியங்கங்களுந் தழு வப்பட்டன. இவற்றைச் சாங்கமென்றது உபசாரம

அசிந்தமென்னும் வடசொல் அன்மொழித் தொகை

அன்றே அசை

இவையென்பது செய்யுளானும் முதல்வனுக்கு உருவத் திருமேனியுண்டென்பது பிறர்கூறுங் குற்றங்களானிகழ்ந்துபடா மைக் காத்து வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படியும்முடைய கர்த்தா வடிவுகொண்டது என்னைபய னைக் கருதி என்றவனை நோக்கி; யவனுக்கொரு பயன் வேண்டுவ தில்லை, ஆன்மாக்களை இரட்சிக்கைப் பொருட்டாகத் தனது கா

ருணியமே திருமேனியாகக் கொண்டதென் றருளிச் செய்கி
றார்.

உருவருள் - அவனுடைய திருமேனி காருண்ணிய மூர்த்த
ம்,— குணங்களோடு முணர்வருள் - குணங்களும் அதனுடைய
ஞானங்களும் ஞானம்,—உருவிற்றோன்றுங் கருமமு மருள் - அவ
னுடைய திருமேனியாலே செய்யப்படுவதாகப்பட்ட கிருத்திய
ங்களும் அந்த ஞானந்தான்,—அரன்றன் கரசரணாதி சாங்க
மருளே - கர்த்தாவினுடைய கரசரணமுதலான சாங்கவுறு
ப்புகளும் அவனாலே உண்டான ஞானமாம்,— உபாங்கமெல்
லாந் தானருளே - இந்தத் திருமேனியிலுண்டான இரண்டாமங்
கமான அடையாளங்களும் மற்று முள்ளவையும் இந்த ஞானந்
தானாம்,—தனக்கொன்றின்றே - இப்படிச் சர்வத்திலும் தோய்
ந்திருந்தாலும் தனக்கொரு விகாரமற்று நிற்பன —அருளுருவு
யிர்க்கென்றே யாகுவ னமலனன்றே.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அரனுருவருள் - அரனுடைய உருவு அருளாகலான்,—உணர்வரு
ளுருவிற்றோன்றும் - உயிர்கட் குணர்வளிப்பதாய அவ்வுரு
விற்றோன்றும்,—கருமமும் குணங்களோடு மருளுரு - தொழி
ல்களும் வாய்மை முதலிய குணங்களுமாகிய கரணமும் அருளா
கியவடிவே,—கரசரணாதி சாங்கந் தருமருளுரு - கைகால்முத
லிய உறுப்புகளு மருளாகிய வடிவே,—உபாங்கமெல்லாந் தா
னருளுரு - உபாங்கமாகிய புவனபோகங்களும் அருளாகிய வ
டிவே —அருளுரு வுயிர்க்கென்றே - இவ்வருள்வடிவெல்லாமு
யிர்களின் பொருட்டன்றி,—தனக்கொன்றின்றி யாக்கின னதி

ங்களன்றே - தன்பொருட்டன்மையா னிவைபற்றி சித்திதரு யினும் அசிந்திதனேயெனபதாம்

இவை ஒன்பது செய்யுளானும் முதல்வனுக் குருவுதத்திரு மேனி யுண்டென்பது பிறர்கூறுங் குற்றங்களான இசுந்தபடா மைகாட்டி வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

உலகினை யிறந்துநின்ற தாதுரு வென்பதோரார், உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடு மென்பதோரார், உலகினுக் குயிருமாகி யுலகுமாய் நின்றதோரார், உலகினி லொருவனென்ப ருருவினை யுணராரெல்லாம். (சஅ)

(இ-ள்) உலகினை யிறந்துநின்ற தாதுரு வென்பதோரார் — இந்தப் பிரபஞ்சத்தைக் கூடிநிற்கையினாலே இந்தப் பிரபஞ்சத்திற்கு மதீதமாயிருக்கு மவனுடைய திருமேனியென்று மறியார்,

உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடு மென்பதோரார் — இந்தப்பிரபஞ்ச மந்தக்கர்த்தாவின் றிருமேனியிலே தோன்றி யருளிலே யொடுங்குமென்று மறியார்,

உலகினுக் குயிருமாகி யுலகுமாய் நின்றதோரார் — பிரபஞ்சத்திலுள்ள வான்மாக்களுக்குப் பிராணனுமாய்ப் பிரபஞ்சத்திற்கு ப்ரபஞ்சமுமாய் நிற்குமென்று மறியார்,

உலகினி லொருவனென்ப ருருவினை — அப்படிப்பட்ட கர்த்தாவினுடைய ஸ்வரூபஸ்வபாவத்தை யுணராதவர்களெல்லா ம

வினை யுணரானெ வனையு மிந்தப்பிரபஞ்சத்திலே யொருவனெ
ல்லாம் ன்றுசொல்லாநிற்பர். எ-று. (௬௮)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் விஸ்வமூர்த்தியும் அந்தர்யாமியும் விஸ்வகாரண னும் விஸ்வாதீதனுமாய் நிற்பனென்பதுணர்த்துதல்.

(அநவயம்) உலகுமாய்நின் றதோரா ருலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடுமென றுமோரா ருலகினுக் குயிருமெனறோரா ருலகினை யிறந்துநின்ற தானுரு வென்பதோரா ருலகினிலொருவனென்ப ருருவினையுணராரெல்லாம்-சிவனுடைய திருமேனியான சிற்சத்தி அபின்னேனு நிமித்தோபாதானமையினாலே விஸ்வாத்மகமாக நின்றமையுநு, சிவனுடைய திருமேனியாகிய சிற்சத்தி மாயையைப் பதிந்தபொழுது பிரபஞ்சந்தோன்றி சத்திபராமுகையானபொழுது பிரபஞ்சம் ஒடுங்குமென்பதும், பிரபஞ்சானுபிரவிஷ்டையினாலே பிரபஞ்சத் தக்கு நியந்தாவாகிய உயிராய் நின்றதும், அசமகோசர சிந்தையினாலே விஸ்வாதீதனுக நின்றமையும் அறியார்கள், சிவனுடைய ஸ்வரூபமாகிய அகண்டாகார சச்சிதானந்தத்தை யறியாதபேர் உலகத்தில் பிரம்மாதி தேவர்களைப்போலே யொருவனென்பர்களென் றிதன்பொருள்.

𑌤𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑍇 — 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌸𑌰𑍍𑌵
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀 𑌸 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 । 𑌵𑌿
𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌕𑌾𑌰𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤
𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 । 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌤𑍀𑌤 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃 ॥

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவன ஸ்ரீகண்டப் பிரேரகராகும் அநந்தேசுரராகிய மூர்த்தியானமாவிலநதரானமாவாய்த் திரும்ப வநதஅநநதேசுரராகிய மூர்த்தியானமாவைப் பிரமாண்டாநதராதிபதியாகும் ஸ்ரீகண்டராகிய மூர்த்தியான்மாவிலநதரானமாவாக்கி யந்தஸ்ரீகண்டசரீரசரீரியாய்ச சத்தியகாடிந்ய கண்டிப்புடைய காயகரணகலைகளாற சகளராயிருந்து பிரமவிஷ்ணு முதலோர்க்கும், ஸ்வேதோபமன்னியப் பிரபிருதிகட்கும், கிருஷ்ணார்ச்சுனதியர்க்கும, அருபத்துமூவா முதலோாக்கும், நிககிரகா நிக்கிரகங்களைப்பண்ணி விளையாட்டு விளைதது பின்னகம் பிரதமர்சகும் அர்பசொற்ப அததியற்புதப் பிரசாத ப்ரதராயிருந்து சரிக்குஞ் சரித்திரங்களிற் சிரிது பவுராணிக மதம் பாஷிப்பதற் குபக்கிரமிககினறுர்.

அரனுரு - ஸ்ரீகண்டசரீரமாகிக கண்டிப்புப் பொருந்திய சிவசரீரம்,—உலகினை யிறந்துநினறது - சீவான்ம கிருத்தியவிலக்ஷண கிர்த்தியங்களை யுடையது,—எனபது ஓரார் - விசாரியார்,—உலகு-பிரபஞ்சம்,— அவனுருவிற் றோன்றி யொடுங்கு மென்று போரார் - அந்தச் சிவனது கண்டிப்பில்லாச் சம தசிற்சத்தி சரீராதிட்டித வகண்டித பரிக்கிரக மஹாமாயா மாயாசத்தி சரீரத்தில் நின்றும் பிறந் திறந்திருக்குமென்பதும் விசாரியார்,--உலகினுக்குயிருமாகி யுலகுமாய் நினறதோரார்-சிதசித் பிரேரகராய் வியாபியாயிருப்பது முணரார். இப்படியிருக்கும்,— உருவினையுணராரெல்லாம்-விவேகித்தறியா ரனைவரும் ஸ்ரீகண்டருபியாயிருககின்ற சிவன் அதிஷ்டாகார ராதலால்,— உலகினிலொருவ னெனபர்-நம்மைப்போலே யொருவனென்று சொல்லுவார்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனிச்சித்தினுஞ்சியு மசித்தினே யென்றதனை வலியுறுத்து முகத்தான் அவ்வுருவடிவின பேதங்களும் அவற்றினைக் கண்ட முந் தொழில்களும் அவற்றுறுமுடைய பயன்களுந் தொகுத்துணர்த்துகின்றார்.

சித்தினுமிறும் அசித்தினே யென்பதற்கு, வேதத்துள் உருத்திரன் விசுவாதிகனென்றும், விசுவகாரணனென்றும், விசுவசத்திற் கந்தரியாமியென்றும், விசுவரூபியென்றுங் கூறுஞ் சுருதிகளே சான்றென்பதாம்.

மாயையிற் றோற்றியொடுங்குமுலகம் அதற்காதாரமாய் நின்ற முதல்வனுநவிற் றோற்றி யொடுங்கியதூஉ மாமென்பது, கிழங்கினின்று தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனு னுர்த்திக.

நிரம்பவழகியருரை வருமாறு.

உலகினையிறந்துநின்ற தரனுருவென்றுமோரார் - ப்ரபஞ்சத்திற் கப்பாற்பட்டு நின்றது சிவனுடைய உருவமென்று இங்ஙனஞ்சொல்லி விசாரித்தறியவு மாட்டார்கள்,—உலகவுருவிற் றோற்றி யொடுங்குமென்றுமோரார் - இந்தப் பிரபஞ்சம் கர்த்தாவருளினாலே தோற்றி யொடுங்குமென்று நிரூபித்தறியவு மாட்டார்கள்,—உலகினுக்குயிருமாகி யுலகுமாய்நின்றதோரார் - பிரபஞ்சத்திலுள்ள சருவான்மாக்களுக்கும் பிராணனுமாய் விசுவத்துக்கு விஸ்வரூபியுமாய் நிற்பனென்று நிரூபித்த

றியவு மாட்டார்கள்,—உலகினிலொருவனென்பருருவினையுணராரெல்லாம் - அவனுடைய சொரூபத்தை ஆராய்ந்து அறிதற்குப் போதமில்லாதவர்களெல்லாம் அவனையு மிந்தப் பிரபஞ்சத்திலுள்ள வான்மாக்களைப்போல வொருவனென்று சொல்லுவார்கள்.

இதனாற் சொல்லியது விஸ்வாதிகனுமாய், விஸ்வந் தோன்றுகைக்கும் ஒடுங்குகைக்குங் காரணனுமாய், விஸ்வத்திலுண்டான வான்மாக்களுக்குப் பிராணனுமாய், விஸ்வரூபியுமாய் நின்ற கர்த்தாவினுண்மை அறியமாட்டாதவர்கள், அவனையும் விஸ்வத்திலே ஒருவனென்று சொல்லுவார்களென்று முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அரனுரு - சிந்திக்கவியலும் அசிந்த்யனே யென்பதாகு வேதத்து ளருத்திரனுருவாம்,—உலகினை யீன்று நின்றதென்ப தோரார் - விசுவாதிகனென்று கூறுஞ் சுருதியினையு முணரார்,— அவனுருவில் - அவனவடிவத்தில், - உலகுதோன்றி யொடுங்குமென்று மோரார் - உலகந்தோன்றி யொடுங்குதலால் விசுவ காரணனென்னுஞ் சுருதியினையு முணரார்,—உலகினுக்குயிருமாகி நின்றதோரார்-விசுவத்திற் கந்தர்யாமியென்று கூறுஞ் சுருதியினையுமுணரார்,—உலகுமாய் நின்ற தோரார்-விசுவரூபியென்று கூறுஞ் சுருதியினையுமுணரார்,—உருவினை யுணராரெல்லாம் - இங்ஙனங் கூறுஞ் சுருதிகள் சான்றாகவுந் திருமேனியியல்புணராரெல்லாம்,—உலகினி லொருவனென்பர்-உலகத்திலுள்ளார் கூறுங்கடவுளரி லொருவனென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

உமது கர்த்தா தேவர்களு ளொருவனென்ன
அனறென றுணர்த்துகிறா.

தேவரி னொருவனென்பர் திருவுருச் சிவனைத்
தேவா, மூவராய நின்றதோரா முதலுருப் பாதிமா
த, ராவது மறியராதி யரியயற் கறியவொண்ணு, மே
வரு நிலையுமோரா ரதனுரு விளைவுமோரார். (௪௯)

(இ - ள) தேவரி னொருவனெ னபா திருவுருச சிவனை	இப்படி திருமேனி யெடுத்திருக்கிற சிவனை யந்த முப்பத்து முககோடி தேவர்களுக்குளளே யொருவனென வறிவில்லாத வாகள சொல்லா நிறபர்கள்.
தேவர் மூவராய் நினறதோரார	அந்தத் தேவர்களுட் சிறப்பினையுடைய மும்மூர்த்திகளையு மவன திட்டித்துக்கொண்டு நின்று தந்தாங்கிருத்தியங்களையு மறியார்கள்.
முதலுருப் பாதியாத ராவதும றியார	மகேஸ்வரவிக்கிரகத்திற் றோன்றிய விருபத்தஞ்சி லத்தனு ரீசுரமா யிரண்டாநின்ற முறைமையினையு மறியார்கள்.
ஆதி யரியயற் கறிய வொண்ணு மேவரு நிலையு மோரார்	சகலத்துக்கு மாதியான வமூர்த்தி சாதாக்கிய மனற் றம்பமாய்ப் பிரமவிட்டுணுக்களுக் கடிமுடிகாணப தரிதாய்நின்றது மறியார்கள்.
அதனுரு விளைவுமோரார்.	அந்தத் தழற் பிழம்பிற்றோன்றிய லிங்கோற்பவமூர்த்தியென றறியார்கள் என

இதற்குச் சுப்பிரபேதத்தும் வாயவ்யத்துங் காந்தத்துங் காண்க. (சக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிதவுமது.

திருவுருச் சிவனேதேவர் தேவரி லொருவனென்பார்-ஞானஸ்வரூபியான சிவனை ப்ரம்ம விஷ்ணு ருத்திரனென்னும் மூர்த்திகளுக்குள்ளே யொருவனென்பர்,—தேவர் மூவராய் நின்றதோரார் - ஸத்தியோ முக்த ப்ரவாத்தனென்றும் லயபோகாதிகார ஸ்தானங்களிலே சிவன் சதாசிவன மஹேஸ்வரன் என நின்ற மூன்று ஸ்வரூபத்தையும் அறியாதபேர்,—முதலுருப்பாதிமாது ராவது முணரார் - ஸ்ருஷ்டாதியிலே சத்தி சிவாத்மகமாக இந்திரதனுசுப்போல நீலமும் பொனமையுமாய் நின்றது மறியார்,—ஆதி அறியற் கறியவொண்ணு மேவருநிலையுமோரார் - சகளத்துக் காதியான அமூர்த்தி சாதாக்கியம் அனல் ஸ்தம்பமாய் ப்ரமவிஷ்ணுக்களுக்கு மடிமுடி காண்பரிதாய் நின்றது மறியார்,—அதனுரு விளைவுமோரார் - அநதமூர்த்தி சாதாக்கியத்திலே சகலப்ரபஞ்சமு முண்டாகிறது மொடுங்குகிறது மறியார் என்றிதன் பொருள்.

[illegible]

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இதுவுமது

திருவுருச்சிவனை - ஸ்ரீகண்ட சரீரியாயிருக்குஞ்சிவனை தேவர் மூவர்களைச்செலுத்தி அவரவராய்த் தியானம் பண்ணப்படுவதெனபதறியார்,— முதலுருபபாதி - சத்திசியானமகம்,— மேவுருநிலை - இலிங்கத்தம்பாகிருதி,— அதனுருவிலாவு - சதாசிவரூபம்.

மற்றது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

விச்சுவாதிக னென்பது முதலிய நான்கு சுருதிகளையும் முறையே வலியுறுப்பனவாய், அரியயனும் அடி முடி தேடியறியாவண்ணம் நீண்ட திருவுருவி லிலகுறும் புராணவசனமும், மும்மூர்த்திகளுந் தன்னுறுப்பிற்றோன்றி நின்ற வடிவினியல்பு கூறும் புராணவசனமும், அவ்வடிவிலே விளங்குவானை

மே உலகிற்கு விளைவு கூறும் புராணவசனமும், அர்த்தநாரீசுர வடிவு கூறும் புராணவசனமுமாகிய இவையுமதற்குச் சான்றென்பதாம்.

இவையிரண்டு செய்யுளும் அசிந்திதனென்றதற்கு உரைய எனைக் காட்டியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

உம்முடைய கர்த்தாவும் தேவர்களுக்குள்ளே ஒருவரென்று பிரித்து வேறே ஒருவனென்று சொல்லவேண்டியதில்லை என்றவனை மேல்வருத்தருளிச் செய்கிறார்.

தேவரிலொருவனென்பர் திருவுருச்சிவனை - ஞானமே திருமேனியாகவுடைய பரமேசுவரனை மாயையே வடிவாகவுள்ள பிரம்ம விஷ்ணுக்களுடனே கூட்டி அவனையுமவர்களைப்போல ஒருவனென்று சொல்லுவார்கள் போதத்தை யாயுளாவார்கள் இப்படிச் சொல்லுவார்களை அறிவற்றவர்களென்பானேனென்னில்?—தேவர் மூவராய் நின்றதோரார்-பிரம்ம விஷ்ணுக்களுக்கு ப பிராணனுமாய இவர்களுக்குக் கர்த்தாவுமாயிவர்களுடனே கூட்டி எண்ணப்பட்டமுறைமையுமறியார்கள் அதுகொண்டேயாயிருக்குமறிவற்றவர்களென்றது இதுவன்றியும்,—மூன்றுருப்பாதிமாதராவதுமுணரார்,—அந்தக் கர்த்தாவினுடைய திருமேனி அர்த்தநாரீசுரமாயிருந்த காரணமும் ஏதுக்கென்றறியார்கள்—அதியரிபயற்கரியவொன்றே மேவருநிலையுமோரார்-பரமேஸ்வரன பிரமம விஷ்ணுக்களுக்கு மறியப்படாத தழற்பிழம்பாய் நின்றது ஏதுகாரணமென்று மறியார்கள் இதுவன்றியும்,—அவனுருவிளைவு மோரார் - அவனுடைய திருமேனியாலுண்டான பிரயோசனங்களையுமறியார்கள்.

இதற்குப் பிரமாணம். திருச்சதகம், "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை, மூவர்கோனாய்நின்ற முதல்வன்மூர்த்தி மூதாதைமாதாளும் பாகத்தெந்தை, யாவர்கோனென்னையும்வந் தாண்டுகொண்டா னியாமார்க்குங் குடியல்லோ மியாதுமஞ்சோம், மேவினோமவ னடியா ரடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது பரமேஸ்வரனுக்குத் திருமேனி ஞானமே யாகையினாலுஞ் சத்தி சிஞானமயமாயிருந்து ஆன்மாக்களுக்குப் போகமோட்சங்களைக் கொடுக்கிறவனாகையாலும், பிரம்ம விஷ்ணுக்களா லறியப்படாதவனாகையாலும் தேவர்களி லொருவ னல்லவென்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

ஆதியரிபயற்கறிய வொண்ணா மேவுருநிலையுமோரார்-விசுவாதிகனென்பது முதலிய நான்கு சுருதிகளையு முறையே வலியுறுப்பனவாய் அரியுமயனு மடிமுடி தேடி யறியாவண்ணம் நீண்ட திருவுருவி னிலைகூறும் புராணவசனத்தினையு முணரார்,—தேவர் மூவராய்த் திருவுருநின்றதோரார் - மும்மூர்த்திகளுந் தன்னுருப்பிற்றோன்றி நின்றவடிவி னியல்பு கூறும் புராணவசனத்தினையு முணரார்,—அவனுரு விளைவுமோரார்-அவன்வடிவிலே விளைந்தவண்ணமே யுலகிற்கு விளைவுகூறும் புராணவசனத்தினையு முணரார்,—முதலுருப் பாதிமாதராவதுமுணரார் - அர்த்தநாரீச்வரவடிவு கூறும் புராணவசனத்தினையு முணரார்,—சிவனைத் தேவரி லொருவனெபர்-இங்ஙனங் கூறும் புரா

வசனங்கள் சான்றாகவும் இவ்வுண்மை யறியாதவர் சிவபிரானைக் கடவுளரில் ஒருவனென்பர் என்பதாம்.

இவையிரண்டு செய்யுளாலும் அசிந்திதனென்பவர்க்கு உரையளவை காட்டியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரித
லோரார், யோகியா யோகமுத்தி யுதவுத லதுவுமோ
ரார், வேகியானாற்போற் செய்த வினையினை வீட்ட
லோரார், ஊகியா மூடரெல்லா மும்பரி லொருவனெ
ன்பர். (௫0)

(இ-ள்) போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிதலோரார் — சிவன்றான் போகியாயிருந் தான்மாக்களுக்குப் போகத்தைக்கொடுக்குந் தன்மையுமுணரார்கள்.

யோகியாயோகமுத்தி யுதவுதலதுவுமோரார் — சிவன்றான் யோகியாயிருந் தான்மாக்களுக்கு யோகசாதனையார்பெறு முத்தியின முறைமையு மறியமாட்டார்கள்.

வேகியானாற்போற்செய்த வினையினை வீட்டலோரார் — இராகத்துவேட மில்லாத சிவன்றானுங் கோபமுடையவர்களைப்போல வான்மாக்கள்செய்த குரூரகன்மங்களை யறிந்து அதற்கேற்ற துயரங்களைத் துய்ப்பித்ததனை விடுவிப்பிக்கு முறைமையுமவன் செயல்களென்றுணரார்.

ஊகியா மூட ரெல்லா முமடரி லொருவ னென்ப ர.	இப்படி நாலுவிதமாக வுபகரிக்குஞ் சிவனது மகிமையை யுள்ளபடி விசாரித் தறியமாட்டாதவர்கள் தேவரி லொருவனென்கருதுவார்கள் எ - று. (௫௰)

சிவாக்ரயோகிபருரை வருமாறு.

—o—

மேலியவாறு நிர்க்குணத்தை ப்ரதிபாதித்து சகலர்க்கு முபாஸ்யமூர்த்தியாய் பரவரத்தகாபேதமாய் கலாமஸ்தகத்திலேயிருந்து ப்ரக்ருதி மண்டல சிருஷ்டியாதிகளைப் பண்ணும் ஸ்ரீகண்ட பரமேஸ்வரனை ப்ரமம விஷ்ணுவாதிகள் அபேக்ஷையாக பரனென்று கூறுகின்றது.

போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார் - உமாமகேஸ்வர மூர்த்தமாயிருந்து உலகத்தி லான்மாக்களுக்கெல்லாம் ஸ்ரீபுருஷ ஸம்யோக மோகத்தை யுண்டாக்குவது நிமித்தமென்றும்,— யோகியாய் யோகமுத்தி புகலுதலுமோரார் - கூஷிசகைவனத்தில் யோகாசனத்திலேயிருந்து போகிகளுக்கெல்லாம் போகசாமர்த்திய முண்டாகித் தத்பலமாகிய மோக்ஷத்தைக் கொடுப்பதற்கும்,— வேகியாகிற் போர்செய்த வினைவினை விட்டோரார் - கோபத்தை யுடையவர்களைப்போலே யானமாகசனைத் தண்டிக்கிறது அவர்கள் பண்ணின பாவங்களைமேலும் வராமல் ஒழிக்கிறதென்றும்,— ஊகியா மூடரெல்லா முமடரிலொருவ னென்பர் - விசாரியாத அஞ்ஞானிகளெல்லாம் இந்தச் சரித்திரங்களைக் கொண்டே தேவர்களி லொருவனென்றே சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

இதுவுமது

போகியாய் - சேவி தேவனாயிருந்து,— யோகியாய் - தக்ஷிணா மூர்த்தியாயிருந்து,— வேசியானாற்போல் - சோரியாரைப்போல்,—ஊகியார் - விசாரிப்பார்.

மற்றது வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

முதல்வன்கொண்ட திருமேனிகளிற் சிலதிருமேனி போகவடிவமும், சிலதிருமேனி கோரவடிவமும், சிலதிருமேனி யோகவடிவமுமாகக்கொண்டது; முறையே உயிர்கட்குப் போகம் புரிதற்பொருட்டும், வினையினை விடுதற்பொருட்டும், போகமுத்தியுதவுதற்பொருட்டுமாமெனப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

உம்முடைய கர்த்தா சத்தி சிவானந்தமயமாயிருந்து போக மோட்சங்களைக் கொடுப்பானென்றவனை நோக்கி, மேலருளிச் செய்கிறார்.

போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார் - பரமேஸ்வரன் தான் போகசொரூபியாயிருந்து ஆன்மாக்களுக்குப் புசிப்புகளைக் கொடுக்கிற முறைமையை யறியார்கள்,—யோகியா யோகமுத்தி யுதவுதலதுவு மோரார் - தானே யோகசத்தி

லேயிருந்து ஆன்மாக்களுக்கு யோகமுண்டாக்கி யதனால் மோட்சத்தையும் கொடுப்பது மறியார்கள்,—வேகியானாற்போற்செய்த வினைகளைவிட்டலோரார் - தான கோபமுடையவர்களைப் போல விருநது ஆனமாககளுக்குக் கோபங்களையு முண்டாக்கி அவரவர் முனசெய்த கனமத்துக் கிடாக வுண்டாக்கிய சுகதுக்கங்களைப் புசிககச்செய்தே உண்டாகிய பிரியாப் பிரியங்களினாலே ஆகாமியத்தையும் ஏற்றுவித்து, இப்படிப் புசிப்பித்துத் தொலைககிற முறைமையையும் அறியார்கள.—யூகியாமூடொல்லா மும்பரிலொருவனென்பர் - இங்ஙனம் பரமேஸ்வரன் ஆன்மாககளுக்குச் செய்கிற உபசங்காரங்களை விசாரித்துப் பாராத புத்தியீனரொல்லா மிவனையுந் தேவர்களிலே ஒருவனென்று சொல்லாநிற்பர்.

இதனாற் சொல்லியது ஆன்மாக்களுக்கு அதுக்கதுக்குத் தக்க திருமேனியாயிருநது போகமோட்சங்களைக் கொடுக்கிற சிவனை த தேவர்களி லொருவனென்று சொல்லப்படாதென்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்- முதல்வன்கொண்ட திருமேனிகளிற் சிலதிருமேனி போகவடிவங்கொண்டது உயிர்கட்குப் போகவடிவம் புரிதற்பொருட்டென்பதனையு முணரார்,—வேகியானாற்போற் செய்தவினையினை வீட்டலோரார் - கோரவடிவங்கொண்டது உயிர்கள்செய்தவினையினை வீட்டுதற் பொருட்டெனபதனையு முணரார்,—யோகியா யோகமுத்தி யுதவுத லதுவுமோரார் - யோகவடிவங்கொ

ண்டது உயிர்கட்கு யோகமுத்தி யுதவுதற் பொருட்டெனபத
னையு முணரார்,—ஊகியா மூடரெல்லாம்-இவ்வாறு திருமேனி
கொளளு முறைமையினை யாராய்ந் தறியுமறிவில்லோர்,—உம
பரி னொருவ னென்பர் - தேவரின் ஒருவனென்பர் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி மஹேசவிக்ரஹ நானாவிதமா யிருக்கு
மென றுணர்த்துகின்றார்.

ஒன்றொன் றொவ்வாவேட மொருவனே த
ரித்துக்கொண்டு, நின்றலா லுலகநீங்கி நின்றனனென
றுமோரார், ரன்றியவ் வேடமெல்லா மருளபுரி தொழி
லென்றோரார், கொன்றது வினையைக்கொன்று நின்ற
வக் குணமென்றோரார். (௫௧)

(இ-ள்) ஒன்றொன் றொவ்வா வேட மொருவனே தரித்துக் கொண்டு நின்றலால் — ஒரு வடிவுக் கொருவடிவு மாயுதங்களு மொவ்வாம லிருபத்தைந்து விக்கிரக மாக வொருத்தனாகத்தானே தரித்துக்கொண்டு நிற்கையால்

உலகநீங்கி நின்றனனென்று மோரார் — சிவன் ப்ரபஞ்சத்துக்கு வேறு யதனை நீங்கி நின்றனென்ற முறைமையினையு மறியார்கள்.

அன்றியவ்வேடமெல்லா மருள் — இங்ஙனங் கூறிய வடிவின்றி வேறேயுண்டாகப்பட்ட திருமேனிகளெல்லா மான

ளபுரி தொழிலெ ன றோரார்	மாக்களுக் கருளைக்கொடுக்கையின பொருட் டென்று மறியார்.
கொன்றது வி னையைக் கொன று நின்றவக கு ணமென றோரா ர்	அரன திரிபுரமுதலியவற்றைச சங்கரித் ததெல்லா மநந்தவானமாக்களை யீடேற் றுகையின பொருட் டவாகள்செய்த கன்மங் களைப் புசிப்பித்துத் தொலைப்பித்ததனறி யி ச்செயலன்றென்று நல்வினை யடைவிப்பித்த

தென்று கருதவுமாட்டாரகள எ-று

இதற்கு வாயவயபசங்கிதை யெனவறிக. (௫௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலிதவு மதற்கே புறநடை.

ஒனறொடொன றுருவாவேட மொருவனே தரித்துக் கொண்டு நின்றலா லுலகுநீங்கி நினறனனென்று மோரார்-பரம்ம விஷ்ணு ருத்திரனென்னு மூன்று விக்ரஹங்களு மொன றொடொன றுருவாததாய், ஒருவனே ஏககாலத்திலே தரித்துக்கொண்டு நிற்கையால்; காமக்குரோதாதிகளுக்குக் காரணமாகிய மாயா பரபஞ்சத்திற்கு அந்யமாகநின்றதையும்,— அனறியவவேடமெல்லா மருளபுரிதொழிலென றோரார் – அனறியந்த விக்ரஹங்களெல்லாங் கருணையினாலே பண்ணப்பட்ட க்ருத்யங்களுக்கென்று மவிசாரியார். கிருபையினாலே பண்ணுகிற க்ருத்தியத்திற்குச் சங்கரிப்பானேனென்னில்?—கொனறது வினையைக்கொன்று நின்றவக்குணமென்றோரார் - அந்தச் சம்ஹார குணமானது ஆன்மாக்கள் பண்ணின கர்மத்தையே நசிப்பித்ததென்று விசாரியார் என்றிதன்பொருள்.

—

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதுவுமது.

ஒன்றொடொன் றொவ்வாவேடம் - கிரீடாதி விக்கிரகபேத ஆயுதபேதங்களை,—கொன்றது - தக்ஷ மதனாதி சங்காரம்,—வினையைக்கொன்றது - இருவினையுட் பாவத்தைப் புசிப்பித்து நாசமாக்குவது.

மற்றது வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனம் போகவடிவுங் கோரவடிவும் யோகவடிவுமாய்த் தம்முண் மாறுபட்ட பலவடிவம் ஒருவனே கொண்டுநிற்றலும், தம்முண் மாறுபட்ட அப்பலவடிவங்களும் அங்ஙனம் போகமும வீடும் யோகமு முசுவுமுகத்தான அநுக்கிரகமொன்றற்கே ஏதுவாதலும், தீமைசெய்வது நன்மையைப் பயத்தலும, உலகத்தினை வைத்தறியப்படாத வதிசய நிலையாகலான்; இதுவுமதற்குச் சான்றென்பதாம்.

உலகினை யிறந்துநின்ற தானுருவ மென்பதூஉம் ஈண்டினிது விளக்கியதூஉமாயிற்று.

நிற்றல் நின்றலென விகாரம்.

அன்றியவெனனும் பெயரொச்சவீறு விகாரத்தாற் றொக்கது.

இவையிரண்டு செய்யுளானும் அசிந்திதனுதற்கு ஏதுக்காட்டியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

உம்முடைய கர்த்தா ஒருவனென்றால் வடிவமொன்றொழிந்து பலவாகச் சொல்லவேண்டுவதில்லை என்றவனை நோக்கிப் பலவடிவு அவனுக்குக் குணமென்றருளிச்செய்கிறார்.

ஒன்றொடொன்றொவ்வாவேடமொருவனே தரித்துக்கொண்டு நின்றவ னுலகர்நீங்கி நின்றனனென்றுமோரார் - ஒன்றை பொன்றொவ்வாமற் பலவாகக் கர்த்தனாகக்கொண்ட திருமேனிகளெல்லாம ஒருவர் கொடுத்ததல்ல, தனதிச்சையாலே தானே உண்டாக்கிக்கொண்டு நிற்கிறவன்; ஆகையால் பிரபஞ்சத்தை நீங்கி நிற்பானென்கிற முறைமையையு மறியார்கள். இப்படித் திருமேனி பலவாக வேண்டுவானேனென்னில்?—அன்றியவ்வேடமெல்லா மருள்புரிதொழிலென்றோரார் - இதுவன்றியும் அப்படி பொன்றையொன்றொவ்வாத திருமேனிகளெல்லாம ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம்பண்ணுகைப் பொருட்டாகக்கொண்ட திருமேனியென்று மறியார்கள். அப்படி யநுக்கிரக மூர்த்தியாயிருக்கிறவன் சங்கரிப்பானேனென்னில்?— கொன்றது வினைப்பகை கொன்று நின்றவக் குணமென்றோரார்-திரிபுரதகன முதலாகச் சொல்லப்பட்ட கொலைகளெல்லாம் ஆன்மாக்கள் கன்மத்துக்கீடான சரீரங்களையெடுத்து சுகதுக்கங்களை யநுபவிக்கிறது யாதனை நீக்கி யிளைப்பாற்றிவைத்தது குற்றமல்ல, குணமென்று விசாரித்தறியவு மாட்டார்கள்.

இதனாற்சொல்லியது கர்த்தா எண்ணிறந்த வடிவுகள் கொண்டது ஆன்மாக்களை யிரட்சிக்கை நிமித்தமாகவென்றும், அவன்செய்கிற நிக்கிரகமும் அநுக்கிரகமே யாமென்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஒன்றுடொன் றெவ்வாவேட மொருவனே தரித்துக்கொண்டு நிற்றலால்-அங்ஙனம் போகவடிவும கோரவடிவும் யோகவடிவுமாய்த தமமுண மாறுபட்ட பலவடிவு மொருவனே தரித்துககொண்டு நிறறலால்,— உலகநீங்கி நின்றன னென்றுமோரார் - உலகத்தின வைத்தறியப்படாத அதிசய நிலையனெனபதனையு முணரார்,--அனறி யயவேடமெல்லா மருள்புரி தொழிலெனவேரார் - தம்முண மாறுபட்ட அபபலவடிவஙகளும் அஙஙனம் போகமும் வீடும் யோகமும உதவுமுகததா னனுககிரக மொனறற்கே யேதுவாமெனபதனையு முணரார்,—கொனறது வினையைக்கொனறு நினறஅக் குணமெனறு ஒரார்-கொல்லுதலாகிய தீமைசெய்வதும வினையைக கெடுததலாகிய நனமையைப் பயததலாகிய குணமெனபதனையு முணரார்.

இவை யிரண்டுசெய்யுளானும அசிந்திதனே யெனபதற்கேது கூறியவாறு

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

நாயகன் கணணயபபா ஞயடு புதைப்பவெஙகும்,
பாயிருளாகிமூடப பரிந்தலகிறுககுநெற்றித், தூ
யநேத திரததினாலே சுடரொளி கொடுத்தபண்பிற,
றேயமா ரொளிகளெல்லாஞ சிவனுருத் தேசதென்
னுர். (டுஉ)

(இ-ள்.) நாயக கைலாயததின் கண் இரத்தினப் பிரத்தன் கண் மென்னுந் தாழ்வரையிற் கணங்களெல்லாங்

ணயப்பா ஞய தோத்திரஞ்செய்யப் பார்வதியாருடன் சி
கிபுதைப்ப வ னெழுந்தருளியிருக்கிற வவதரத்தில் திரு
த்தமுதலிய லீலைகளைப்பண்ணி யெழுந்தரு
ளியிருக்கிற சமயத்திலே, பார்வதியார்விநோதார்த்தமாகச் சி
வன திரு நயனத்தைப் புதைக்க,

எங்கும் பாயி ருளாகிமூட — உலகமெங்கும் பரந்தவிருளாற் றேவர்க ளெல்லாரையுந் தேவவருடத்திற் கோடிவருடமறைக்க; அப்பொழுதவர்க டோத்திரஞ்செய்ய,

பரிந் துலகினுக்கு — உலகத்திலுண்டான வானமாக்களுக் கெல்லாந் துயருறுவதனைக்கண்டு நீக்குகையினபொருட்டுக் கிருபைசனித்து

நெற்றித் துய நேத் திரத்திலே சுடரொளி கொடுத்த தபண்பினை — பாலத்தின ஞானக்கண்ணாற் சுடர்பொருந்திய ப்ரகாசத்தைக் கொடுத்த முறைமையாலே,

தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னுர் — தேசங்களிற் பொருந்தப்பட்ட ப்ரகாசங்களெல்லாஞ் சிவன தநுக்கிரகத்தா லுண்டான ப்ரகாசமேயென்று விசாரியார்கள். எ - று.

இதற்குச் சைவபுராணத்தி லேகாதச வுருத்திர சங்கிதையி லெனவறிக.

உ-ம். தேவாரம். "மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தான மகிழ்ந் தவனகண் புதைத்தலுமே வல்லிருளா யெல்லா, வுலகுடனுறு மூடவிருளோடும்வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த வுத்தமனூர்வினவி, லலையடைந்த புனல்

பெருகி யானைமருப் பிடறி யகிலொடுசந் தந்திவரு மரிசிவின
றென கனாமேற், கலையடைந்து கலிகங்கடியந் தனைமேராமப புகை
யாற் கணமுகில்போன றணிகிளருங சலையநல்லூரா சானே"
எனவறிக. (ருஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் ப்ரபஞ்சத்தில் பரகாசமெல்லாம சிவனுடைய நேத்
ரங்களின பரகாசமெனப துணாத்துதல்.

ஸாவலோக நாயகனாகிய பரமேஸவரனுடைய திருநயன
ங்களிலே லோகநாயகியாகிய பாாவதியாா விநோதததினாலே
மூட வெல்லாலோகங்களும் அந்தகாரமாகையினாலே, லோகங
களுக்கு கிருபையினாலே நெற்றித் திருநயனததினாலே ப்ரகா
சததைக கொடுதத பரிசினாலே ; லோகஙகளிலுணடான பா
காசமெல்லாஞ் சிவனுடைய திருநயனங்களின ப்ரகாசம என
றறி எனறிதனபொருள.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

இதுவுமது.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

அவ்வேடபெல்லாம் அருள்புரி தொழிலெனபதற்கு முதல்

வி திருக்கண்புதைத்த திருவிளையாட்டினகண் ணிகழ்ந்த நிகழ்ச்சியே சானறெனபதாம.

நயப்பு மகிழ்ச்சி
பாக்கல் பரத்தல.
தேயம உலகம.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி உம்முடைய சாத்தா பிரபஞ்சத்தை இரட்சிப்பனென றெங்ஙகேகொளளப்பட்டதென றவனைநோக்கி மேலருளிச்செய்கிறார்.

நாயகனகண்ணையப்பால் நாயகிபுதைப்ப - பரமேஸ்வரனுடைய திருநயனங்களைப் பரமேஸ்வரி விநோதமாக ஜீயத்தகத்தாலே மறைக்க,—எங்கும்பாயிருளாகிமூட - எவ்விடமுமிருளானது பரந்து சர்வத்தையுமூடிக்கொள்ளப் பரிந்து பரமேஸ்வரன ஆனமாக்களுக்காக விரங்கித திருவுளம்வாழ்ந்து உலகினுக்கு,—தூயநேத்திரத்தினாலே சுடரொளி கொடுத்தப்பணியில் - பிரபஞ்சத்துக்கு நெற்றியிலுண்டான சுத்தமான திருநயனத்தாலே விட்டுவிளங்காநின்ற சுடர்பொருந்தின பிரகாசத்தைக் கொடுத்த முறைமையாலே,—தேயமாமொளிகளெல்லாஞ் சிவனுருத தேசதெனனூர் - பிரபஞ்சத்தி லுண்டான சந்திராதித்தாக்கினி நட்சத்திர முதலான பிரகாசங்களெல்லாம பரமேஸ்வரனுடைய திருமேனிப் பிரகாசத்தினாலே காரியப்படுகிற வொளிகளென்று இந்த முறைமையை உள்ளபடி யறிந்து சொல்லுகிறார்களில்லை. அதேதெனனில்? தங்கள் அகங்காரங்களால்.

இதற்குப் பிரமாணம். தேவாரம், "மலைமடந்தை விளையாடி வளையாடுகரத்தால் மகிழ்ந்தவன்கண் புதைத்தலுமே வல்லிருளாயெல்லா, வுலகுடனன்றூடவிருளோட்டும்வகைநெற்றியொற்றைக்கண் படைத்துகந்த வுத்தமனூர்வினவில், லலையடைந்தபுனல்பெருகி யானைமருப்பிடறி யகிலொடுசந்துந்துமரிசி வின்றெனக்காமேல், கலையடர்ந்து கலிக்கடியந் தணரோமப் புகையார கணமுகில்போன் றணிகிளருங் கலையநல்லூர் காணே" எ-ம், திருவாசகம். நீத்தல்விண்ணப்பம், "களிவந்தசிந்தையொ டுன்கழல்கண்டுங் கலந்தருள, வெளிவந்திலேனை விடுதிகண்டாய் மெய்ச்சுடருக்கெல்லா, மொளிவந்தபூங்கழ லுத்தரகோசமங் கைக்கரசே, யெளிவந்தவெந்தைபிரா னென்னையாளுடை யென்னப்பனே". என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது பரமேஸ்வரன் திருநயனத்தைப் பரமேஸ்வரி மறைக்கப் பிரபஞ்சமெல்லாம் அந்தகாரமாய்விடப் பரமேஸ்வரன் நெற்றிக்கண்ணாலே அந்த வந்தகாரத்தைப் போக்குகையால்; எல்லாப் பிரகாசங்களும் பரமேஸ்வரனுடைய திருமேனிப் பிரகாசமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(அவ்வேடமெல்லா மருள்புரி தொழிலெனபதற்கு) நாயகி நயப்பால - முதல்வி மகிழ்ச்சியால்,—நாயகன் கண்புதைப்ப - முதல்வனது திருக்கண்புதைத்த திருவிளையாட்டினகண்,—எங்கும்பாயிருளாகிமூட - எவ்விடத்தும்பரவிய இருளாகிப்போர்க்கவும்,—பரிந்துலகினுக்கு - பரிவுற்றுலகினுள்ளார்க்கு,—தூய நெற்றி நேத்திரத்தினாலே - தூய்தாகிய நெற்றிக்கண்ணால்,—

சுடரொளிகொடுத்த பண்பின் - மிகுந்தபிரகாசத்தினை யளிக்குந் தன்மையால்,—தேயமா ரொளிகளெல்லாம - உலகினுள்ள வொளிகளெல்லாம்,— சிவனுருத்தேசதெனனார் - சிவனற ன திருமேனிய பிரகாசமென றுணரார்.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது

கணணுதல் யோகிருப்பக் காமனின் றிடவேட்கை
க்கு, விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார்மா
று, னெண்ணிவேண் மகனையேவ வெரிவிழித் திமவா
னபெற்ற, பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப பேரின்ப
மளித்ததோரார். (௫௩)

(இ-ள்.) கண்ணுதல் யோகிருப்ப — சிவனிமவானிற் றாழவரையிற் றேவதாரு மரததினிழலிலே வேதிகையிற பரியஙகமெனனுமியோகாதனமாக வெழுந்தருளியிருந்த வவசரத்தில்

காமநின்றிட வேட்கைக்கு விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார் — தேவலோகத்திருக்குந் தேவர்கண் முதலாயினார்க்குக் காமவிகாரமின்றி யதனாலவர்கள் வருத்தமுற்ற முறைமையினையு மறியார்.

மாறு னெண்ணிவேண்மகனையேவ — மாயனானவன் றேவர்களுக்குத் துயரத்தை நீககுதல் காரணமாகத் திருவுளத்தடைத்துத் தன்பிள்ளையாகிய காமராசனை யழைத்து இந்தச் சிவனியோகத்திலிருக்கையா லா

ன்மாக்களுக்குச் சுகமில்லாமற் றுயருறுகிறார்கள்; ஆகையா னீ பேர யிந்தயோகத்திற சிவன கருத்தைத திருப்பென்ன, அவனு மப்படியே யதனைக குலைக்க,

எரிவிழித்து — சிவனுமிப்படி வருவானென்று விசாரித்த ப்பொழுது நெற்றிக்கண்ணாலவ னெரிந்து போமபடி விழித்துபபார்த்து,

இமவான பெற்ற பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப் பேரின்ப மளித்ததோரார். — மேனையுட னிமவான கூடிப்பெற்ற பாரவதியாரைச் சிவன திருககலியாணம்பண்ணி யருளினபின்பு, சர்வானமாக்களுககு மிகுநத போகததிற சுருததுண்டாககிக காருந்தா கொடுகக, அதனைபபெற் றநுபவிக்கு முறைமையினையு மறியாரகள். எ - று.

இதற்குக் காலோததரததுங் காலங்கததுங் காண்க (ருங.)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் காத்தாவினுடைய யோகபோகரூபங்கள் ஆன்மாக்களின பொருட்டல்லது தனககில்லையென் றுணர்த்துகினறது.

கண்ணுதல் யோகிருப்பக் காமனின்றிட வேட்கைகரு விண்ணுறுதேவராகி மெலிந்தனரேயோரார் - நெற்றியிலே நயனத்தையுடைய பரமேஸ்வரன ஸகிதேவியாரை நீங்கி யோகததிலிருக்கவே ஸ்ரீபுருஷர்களை விகாரமுண்டாக்கிக் கூட்டுங் காமனுண்டாயிருக்கவும், தேவர்கள் முதலான பேர்கள் ஸ்ரீபோக மில்லாமல் துக்கிதரானதையும் விசாரியார்.—மாறு னென்னி வேள்மகனையேவ வெரிவிழித் திமவான்பெற்ற பெண்ணினைப் புணர்ந் துயிர்க்குப் பேரின்ப மளித்ததோரார் - திருமால்தானை பரமேஸ்வரன யோகாசனத்தி லிருக்கையிலேலே யெல்லாத்

கரும போகமில்லை யாகச்சுது, அந்த யோகத்தை விலக்கென்று வேளாகிய தம்முடைய பிள்ளையை யனுப்ப; அவன்போய் புஷ்பபாணத்தைத் தொடுப்ப, அவ்வளவில் பரமேஸ்வரன் நெற்றி யனல்விழியாலே யெரித்துப் பின்பு இமவான் மகளாகிய பார்வதியார் தபசுபண்ண அந்தத்தபசினாலே சந்தோஷித்துத் திருக்கலியாணம் பண்ணிக்கூடி, ஆன்மாக்களுக்கு அமைவுபெறுத விஷய சுகத்தைக் கொடுத்ததை விசாரியார் என்றிதன் பொருள்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதுவுமது.

வெளிப் பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பல்வேறுவகைப்பட்ட அருளபுரிகொழிலும் அவ்வேடத்தை யின்றியமையாமைக்குக் கண்ணுதல யோகிருந்துழி உலகத்தின் கண்கழுந்த நிகழ்ச்சியே சான்றெனபதாம்.

உலகினுக்குயிருமாய் நின்றவற்றை இவ்விருவகைத் திருவிளையாட்டினவைத்து இனிது விளக்கியதூஉ மாயிற்று. ஒன்றொடொன்றொவ்வாவேட மொருவனே தரித்துக்கொண்டதும் இதனுட் கண்டுகொள்க

இவையிரண்டு செய்யுளானும் மேலதனைக் கண்கூடாகத் தெளிவித்துச் சிந்திதனும் அசிந்திதனேயென்றதனை வலியுறுத்தியவாறு.

சீகண்டருத்திரர்க்குரிய வடிவங்களும் பெயர்களுந் தொழில்களும் முதல்வனுக்கும் ஒப்பவுளவென்பது வாயுசங்கிதையுட் கூறப்படுதலின், ஈண்டுக் கூறியனவெல்லாம் முதல்வனுக்குரியனவே யாமெனக்கொள்க.

அற்றாகலினன்றே ஈண்டுக் கூறியவடிவங்களெல்லாம் மகேசுரமூர்த்தமிருபத்தைந்தனுள் வைத்தெண்ணப்பட்டனவென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மோட்சத்தையன்றிப் போகமுஞ் சிவனே கொடுக்கவேணுமென்கிற முறைமையை யருளிச்செய்கிறார்

கண்ணுதலியோகிருப்பக் காமனின்றிட வேட்கைக்கு விண்ணுறு தேவராதி மெலிந்தமையோரார்-பரமேஸ்வரன் யோகத்திலே எழுந்தருளியிருக்கக் காமராஜனுஞ் சித்திரம்போலே நிற்க, இன்பத்துக்குத் தெய்வலோகத்திலேயுள்ளதேவர்கள் புவிலோகத்திலுள்ளவர்கள் நாகலோகத்திலுள்ளவர்கள் இத்தனைபேரு மிகவுமெலிந்து வருத்தப்பட்டது மறியார்கள் —மால்தானெண்ணி வேளமகனையேவ - விஷ்ணுவானவர் பரமேஸ்வரன் எழுந்தருளியிருந்த யோகத்தைக் கலைப்பதாக நல்ல விசாரம் விசாரித்துத் தன்னுடைய பிள்ளையாகிய காமராஜனையேவ,—எரிவிழித்து - அந்தக் காமராஜன் வெந்து பஸ்மமாய் போம்படி திருநயனத்தாலே பார்த்து,—இமவானபெற்ற பெண்ணினைப் புணர்ந்து - ஆன்மாக்கள்படுகிற வருத்தத்தைக் கண்டு பரமேஸ்வரன் தானே திருவுளம் வாழ்ந்து பருவதராஜன் புத்திரியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு போகத்தையநுபவித்து,—உயிர்

ச்சுப்பேரின்பமளித்தகோரார் - ஆன்மாக்களுக்குச் சிவனுள்ளவன்றே தொடங்கி அவன் றிருவடியைப் பெறுமளவும் விட்டு நீங்காதிருந்து மாயாபோகத்தைக் கொடுத்தது மறியார்கள்.

இதற்குப் பிரமாணம். திருச்சாழல், "மலையரையன்பொற் பாவை வாணுதலாள்பெண்டிருவை, யுலகறியத்தீவேட்டா னென்னுமது வென்னேடீ, யுலகறியத்தீவேளா தொழிந்தனனேலுலகனைத்துங், கலைநவின்றபொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது பரமேசுவரன் போகியாயிருந்து சர்வான்மாக்களுக்கும் போகத்தைப் புசிப்பிக்கிறவன், யோகத்திலேயிருந்து சர்வான்மாக்களுக்கும் போகத்துக்கும் மிகுதியாகவருந்த; அது கண்டு மிகுதியும் தானே போகியாயிருந்து சர்வான்மாக்களுக்கும் போகத்தைக் கொடுத்தானென்னும் முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(பல்வேறுவகைப்பட்ட அருள்புரி தொழிலுமவ்வேடத்தை யின்றி யமையாமைக்கு) கண்ணுதல்யோகிருப்ப - நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் யோகிருந்தழி,— வேட்கைக்குக்காமனின்றிட-வேட்கைக்குக்காரணமாய்க்காமனிருக்கவும்,— விண்ணுறுதேவராதி-மேலிடத்துள்ள தேவர்கண்முதலியோர்,—மெலிந்தமையோரார் - மெலிவுற்றது மறியாராய்,—மாறுனவெண்ணி வேண்மதனையேவ - மாயனுங்கருதிக்காமனையேவுதல் செய்ய,— எரிவிழித்து - விழித்தெரித்து,—இமவான்பெற்ற பெண்ணினைப்புணர்ந்து - உமாதேவியைக்கலந்து,—உயிர்க்குப் பேரின்பம

ளித்தோரரா - உயிர்களுக் கின்பநிகழ்ச்சி யருளிச்செய்ததும் சானறெனபதுணரார்.

இவையிரண்டுபாட்டானு மேலதனைக் கண்கூடாகத் தெரிவித்துச சிததிதனுயினும அசிநதிதனையெனறதனை வலியுறுததியவாறு

மறைஞானதேசிகர் உரை.

சிவனநுக்கிரகஞ் செய்யு முறைமையைப் பலவாகக்கூறி,
மேலவற்றை யிரண்டு விருத்ததான முடிநதது
முடித்தலென்னுந் தந்திர வுத்தியா
லுணர்த்துகிறார்.

படைப்பாதி தொழிலும்பத்தர்க கருளும்பா வ
னையுநூலு, மிடப்பாக மாதராளோ டியைந்துயிர்க கின்
பமென்று,மடைப்பானு மதுவுமுத்தி யளித்திடும் போ
கும்பாசந், துடைப்பானுந் தொழிலுமேனி துடக்கா
னேற சொல்லொணாதே. (௫௪)

(இ-ள்) படைப்பாதி தொழிலும் — அழிப்பிளைப்பாற்றலென்னும் பஞ்சகிருத்தியத்தின முறைமையினையும்,

பத்தர்க்கருளும்பாவனையும் — எறும்புமுதற் றேவர்களீருயுள்ள வான்மாக்களைத் திருக்கண் சாத்தி யிரட்சிக்கிற பெருமையினையும்,

நூலும் — ஆரண மாகமங்களென்னு மாகமங்களுண்டா யதுவருங் குருமரபின முறைமையினையும்,

இடப்பாக மாதராளோ டியைந் துயிர்க்கின்ப மென்று மடைப்பாரு மதுவும	கண்ணுதல் யோகிருப்ப வென்பதனால் அந்தநாரீசுரனுகச் சிவன பார்வதியாளைப பொருந்திப் போகத்தை யான்மாக்களுக்குக் கொடுக்கு முறைமையினையும்,
முத்தி யளித்திடும யோகும்	யோகியாயிருநதெனறும யோகத்தின முத்தியினபதத்தைப் பெற்றிருக்கு முறைமையினையும,
பாசங் தடைபபாருந தொழிலும்	ஞானதீக்ஷையைச் செய் ததனு லடையு முத்தியினையும்,
மேனி தடக்கானேற் சொல்லொணுதே	சிவன திருமேனி தரித்துக்கொண்டு சிருட்டிமுதலிய தொழில்களைச் செய்யாதிருப பானுகில்; கிருத்தியங்க ளுண்டென்று சொல்லப்படாது எ-று

ஆன சாரியை.

உம்மை எண.

இதற்குக காமிகங் கிரணம் மகுடத்திற்காண்க. (௩௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் ஸ்ரீகண்ட பரமேஸ்வரன திருமேனியைச சிவ னதிட்டித்து நில்லாதபொழுது ப்ரகிருதியில் ஸ்ருஷ்டியாதி கிருத்தியங் கூடாதென்ப துணர்த்துகினறது.

படைப்பாதித் தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையு நூலு மிடப்பாக மாதராளோ டியைந் துயிர்க் கின்பமென்று ம

டைப்பாரு மதுவும - ஸ்ருஷ்டியாதி க்ருத்தியங்களைப் பண்ணுவது பக்தஜநங்கள் தயாகபூஜைக்கும் வேதாகமங்களை யருளுவதும், இடதுபாகத்தி லீஸ்வரியாருடனே கூடியிருந்து ஆன்மாக்களுக்கு எப்பொழுதும் விஷயசுகத்தைச் சேரச்சிறும,—முத்தி யளித்திடும் யோகும பாசந் துடைப்பாருந் தொழிலும்மேனி தடக்காளேற் சொல்லொன்றே - பதிமுத்தியைக் கொடுக்கும் யோகமும், அஞ்ஞானத்தை யொழிக்கும் அநுக்கிரஹமாகிய கிருத்தியமும், ஏதெல்லாம் ஸ்ரீகண்டபரமேஸ்வரன திருமேனியை அதிஷ்டியாதபொழுது ஆமென்று சொல்லொன்றதென றிதன்பொருள்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

சுத்தாத்துவ சிருட்டி திதி சங்காரங்கள் போற் பிரகிருதிகளுள் உள்ள அவாந்தரகிருத்தியம், பிரமாணத்திலுள்ள அவாந்தர கிருத்தியம், சாக்ஷாத் சிவகிருத்திய மாகட்டும், சிகளட ஏகமறையினுற் சிவனுக்குக் கிருத்தியமென்பது வேண்டாம் அது நன்றன்று சக்ரவர்த்தியாயிருக்கின்ற விராசாவுக்கு அந்தரங்க கிருத்தியம் பகிரங்க கிருத்தியம்போல, சிவனுக்கு மப்படி யந்தரங்க கிருத்தியம் பகிரங்க கிருத்திய மிரண்டும் முறைமையிற் சாக்ஷாத் தனாலும் பிறரைச் செலுத்தியவர் தானுகி மறைவாலும் நடக்குமென்று கூறுகின்றார்.

முறைமையிற் பிரதம மஹாசிருஷ்டியில் சிவன் சிவதத்துவ பஞ்சக சிருட்டிபண்ணிப் பின் னநந்தேசுர சரீரசரீரியாய் அசுத்தமாயையி னின்றும் காலதத்துவ முதற் பிருதிவி தத்துவ மந்தமாகிய தத்துவ தாத்துவிகங்களை யுண்டாக்கி, உருத்திர

ரை இருதயத்தினின்றும், விஷ்ணுவையும் பிரமாவையும் பார்ச ங்களினின்றும், சூரிய சோமாக்கினிகளை வல திடது நெற்றி நேத்திரங்களினின்றும, விக்கினேஸ்வரரையுஞ் சுப்ரமணிய ரையுங் கண்டத்தினின்று மிருதயத்தினின்று மிப்படி வாதுளத் திற் சொன்னபடி,மற்றமற்ற அங்கங்களினின்றும தேவர்களி ருடிகள் வேதசாஸ்திரங்கள மற்றுமுள்ளன வுண்டாக்குவா.

நடுவே நடுவே வரும அவாந்தர சிருட்டியில்

மேனிதட்டகாணேல் - பிரகிருதிநிலைய ஸ்ரீகண்ட சரீரசரீர யாயும், பிரமாண்டநிலைய ஸ்ரீகண்டசரீரசரீரியாயும இராநிருந் தால,—படைப்பாதிதொழிலும்-மத்தியமப்பிரளய முடிவினி ற்குணத்ததுவமுகற பிருதிவி ததவமீறுரும் தத்வதாதவிக சி ருட்டி ஸ்திதி சங்காரங்களும்,—பத்தர்ககருளும் பாவனையும்- தீக்ஷாவானகளா யிருக்கும் சிஷ்டருக் குபதேசித்துக காணபி கரும நிராலம்ப சாலம்ப சிவததியானமும்,—நூலும - சிவாக மோபதேசமும;--இடப்பாக மாதராளோ டியைந் துயிர்க்கின பமொன்றும அடைப்பாளுமதவும - உண்டாக்குவதும,—முத தியளிததிடுமியோகும - உபதேசித்துககாண்பிக்கும் சாலம்ப நி ராலம்ப சிவததியானமும்,—பாசநதுடைப்பாளுந் தொழிலு ம-தீக்ஷையைப் பண்ணுவதும்,—சொல்லொணுதே - ஆமென்ற றையப்படாதே.

சூரியனைக் காசிபர் புத்திரனென்பதும, சந்திரனை அத்திரி புத்திரனெனபதும், ருஷிகளைப் பிரமா முதலோர் புத்திராக ளெனபதும, வேதசாஸ்திரங்களைப பிரமா முதலோர் சொன னதெனபதும், சுப்பிரமண்ணியர் விக்கினேசுர ரிவர்களை ஸ்ரீக ண்ட புத்திரர்க ளெனபதும, இவைமுதலிய பலவும்; அவாந் தர சிருஷ்டியில்.

முன் சொல்லியபடி மஹா ச்ருஷ்டியில் மகேசுர புத்திரர்களே.

மாந்திரசாத்திரம் சதாசிவ மாசலால் லௌகிகாதி அதிமார்க்காந்த சாஸ்திரங்கள் சாக்ஷாத்தும் பிராகாராந்தரத்திலும் வந்தாலும் மகேசுர சாத்திரங்களே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆரணமாகமமெனனுஞ் செய்யுளிற் கூறிப்போந்த உபதேசமாத்திரைக்கேயன்றி, உலகவனுருவிற்றோன்றி யொடுங்குமென்பது முதலாக, இங்ஙனங் கூறிப்போந்த தோற்ற மறைப்பு நிலையருளிறுதியெனனும் ஐந்தொழில்செய்தற்கும்; அவ்வடிவம இன்றியமையாச் சிறப்பினவாய் வேண்டப்படுமென்பதாம்.

படைப்புக்கு வாதுளாகமத்திற்கூறியவாறே இயங்கியற்பொருளும நிலையியற்பொருளுமாகிய உலகங்கள், முதல்வனது திருமேனியில் ஒவ்வொருறுப்புக்களினின்று தோன்றுமாறுசெய்யவேண்டுதலானும், மறைப்புக்கு ஊனநடன மியற்றவேண்டுதலானும், திதிக்கு மாதராளோடியைய வேண்டுதலானும், அநுக்கிரகத்திற்கு யோகிருந்து காட்டவேண்டுதலானும், சங்காரத்திற்குத் தோன்றின முறையே அவ்வவ்வுறுப்புக்களின் ஒடுக்கவேண்டுதலானும, உபதேசமாத்திரைக்கேயன்றி இவற்றிற்கும் உருவத்திருமேனி இன்றியமையாச் சிறப்பினவென்பதுகண்டுகொள்க.

ஏனைத்தொழில்களைக் கிளந்து கூறுதலிற் படைப்பாதியென்பதற்குப் படைப்பாகிய ஆதித்தொழிலென்றுரைக்க.

பத்தர்க்கருளும் பாவனையென்பது பத்தர்க்கு இருவினையொப்பின் அருளுதற்பொருட்டுச் செய்யும் பாவனையெனத் திரோதானத்தொழிலையுணர்த்திற்று. பாவனையென்றார், அஃது அவனுக்கு இயல்பன்மையின்.

நூல் என்பது நூலைச்செய்யுமெனப் பெயரடியிற் பிறந்த பெயரெச்சவினையாய் இடைப்பாகமாதராளுக்கு அடையாயிற்று. இவ்வாறன்றி எண்ணும்மை யேற்ற சொல்லாகவே வைத்து, மேற்கூறிப்போந்த ஆரணவாகமங்களைப் பிரித்துக்கூட்டலென்னுமுத்தியால் எண்ணுமுடன்வைத்து எண்ணிறொன்றுரைப்பினுமாம்.

பாசந் துடைப்பர்க்குந் தொழிலென்றது ஈண்டுச் சங்காரத்தின்மேற்றென்பது, கொன்றது வினையைக் கொன்று நின்ற வகருணமென்பதனான் அறிக.

அடைப்பான் துடைப்பானென்பன பானீற்று வினையெச்சம் செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

இவையனைத்துஞ் சுத்தமாயையிற் படுங் காரியங்களை நோக்கிக் கூறிற்றென்றுணர்க.

உலகினையென்பது முதல் இவ்வேழுசெய்யுளானும், மேலைச் செய்யுளின் அசிந்திதனென்றதனை வலியுறுத்துமுகத்தான் அவ்வருளுருவின் பேதங்களும், அவற்றுக்குரிய தொழில்களும் பயனும், அவையின்றியமையாச் சிறப்பினவாமாறும், தொகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

சர்வஞ்ஞனாயிருக்கிற உம்முடைய கர்த்தா அரூபமாயிருந்து ஆன்மாக்களுக்குப் போகத்தைக் கொடுக்கமாட்டானே! உ

ருவமேன் கொள்ளுகிறு னெனறவனை நோககி மேலருளிச் செ
ய்கிருர்.

படைப்பாதிததொழிலும் - சிருட்டி முதலாகிய கிருததிய
ங்களும்,—பததர்ககருளும் பாவனையும - சிவபததாகளுககு அ
நுககிரகமபணணுும ஒருமையும,—நூலும - சாததிரங்களும,—
இடப்பாகமாதராளோ டிசைநதுமிறகினபமெனறு மடைப்பா
ளுமதுவும - பரமேஸ்வரன தனனுடைய இடபபாகததிலே பர
மேஸ்வரியை வைததுககொண்டிருநது ஆனமாக்களுக்கு எப்
பொழுதும போகததைககொடுககிற அநத முறைமையும,—முத்
தியளிததிடுமியோகும்- ஆனமாககளுககு மோட்சததைக கொ
டுககிற சிவயோகமும,—பாசநதுடைப்பாளுந்தொழிலும-ஆன
மாககளுடைய பககுவாபககுவ மறிநது ஆசாரியருக எழுநதரு
ளிவநது பாசஙகளைபபோககுகிற தீட்சைகளும,—மேனிதொட
ககானேற சொல்லொனுதே - இஙஙனஞ சொல்லப்பட்ட இ
வையெல்லாம் பரமேஸ்வரன தனது காருணணியததினுலே
திருமேனிகொண்டானில்லையாகின, ஆனமாக்களுககுப போக
மோட்ச முணடாகாதெனனு முறைமையை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(ஆரணமாகம மெனனுஞசெய்யுளில் கூறிப்போந்த வுப
தேசமாததிரைககே யனறி) படைப்பாதிதொழிலும-படைப்
பாகிய ஆதிததொழிற்கு வாதுளாகமததி ஞேதியவாறே இயங்
கியர்பொருளு நிலையியற்பொருளுமாகிய வுலகங்கள் முதல்வன
து திருமேனியி லொவ்வோ ருறுப்புககளி னினறு தோனறுமா
றுசெய்யவேண்டு மாதலானும்,— பத்தாக்கருளும் பாவனையும்-
பத்தர்களுக் கிருவினையொப்பின அருளும்பொருட்டுச் செய்யும்

பாவனையாகிய திரோதானத்தொழிற்கு ஊனநடன மியற்ற வேண்டுதலானும்,—உயிர்க்கின்பமென்று மடைப்பனுமதுவும- உயிர்களுக்கின்பத்தைச் செய்வதாகிய திதிக்கும்,—நூலுமாத ராளோடிடப் பாகமியந்து - இடையினுக்கு நூலையொப்பாகச் செய்யுந் தேவியோடிடப்பாகத் தியையவேண்டுதலானும்,— முத்தியளித்திடும் யோகும் - முத்தியளிப்பதாகிய அநுக்கிரகத்திற்கு யோகிருந்து காட்டவேண்டுதலானும்,—பாசந்துடைப்பானுந் தொழிலும - பாசநீங்குவதாகிய சங்காரத்தொழிற்குத் தோன்றினமுறையே யவ்வவ்வுறுப்புகளி னெடுக்கவேண்டுதலானும,—மேனிதொடக்கானேற சொல்லொணாதே- இவற்றிற்கு மவ்வடிவமின்றியமையாச சிறப்பினவாய் வேண்டப்படுமென்பதாம்.

உலகினையெனபது முதலிவ்வேழுசெய்யுளானு மேலைச்செய்யுளின அசிந்திதனென்றதனை வலியுறுத்துமுகத்தான அவ்வருளுருவின பேதங்களும், அவற்றுறுய தொழில்களுமபயனும் அவையின்றி யமையாக சிறப்பினவாமாறுந தொகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேற் றலைதடுமாற்றமெனனும் தந்திரவுத்தி.

உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முரு
விறந்த, வருமேனி யதுவுங்கண்டோ மருவுரு வான
போது, திருமேனி யுபயம்பெற்றோஞ் செப்பிய மூ
ன்றுநந்தங்,கருமேனி கழிக்கவந்த கருணையின் விளைவு
காணே. (௫௫)

(இ-ள்) உருமே னி தரித்து க்கொண்ட தென்றாலும்	மெய் வாய் கண் மூக்குச் செவி யிவைக ளையுடைய சகளமே சிவனுக்குத் திருமேனி யென்றது
உருவிறந்த வ ருமேனி யதுவுங் கண்டோம்	கலைகளுடன் கூடாத நிட்களமான திரு மேனியின் முறைமையு மறிந்தோம்,
அருவுருவான போது திருமே னி யுபயம் பெற் றோம்	முற்கூறிய வுருவமு மருவமும் ஒன்றாகக் கூடித் திருமேனி கொண்டவிடத்துச் சகள நிட்களமான திருமேனியின் முறைமையுங் கண்டோம்,
செப்பிய மூன் று நந்தமக்குமே வல் கழிக்கவுங் கருணையின் விளை வுகாணே.	இப்படிச்சொல்லிய மூவிதமான திருமே னியுஞ் சனன மரணப்பட்டு வரு நாது வ டிவைப் போக்கும்படிக்கு அவனது கிருபை யினு லுண்டாயதென் றறிவாயாக. எ-று.

இதில் நிட்களம் பரமென்றும், அபரஞ் சகளமென்றும், பராபரஞ் சகளநிட்களமென்றும் பெறும்.

அஃதென்போல வென்னில்? சகளம் மரமானதுபோலவு வும், நிட்களம் நிழற்போலவும், சகளநிட்களம் பூவும் பூவினது மணம்போலவு மறிக.

ஒருபொருட் கிரண்டுதன்மையு முண்டென்னில்? சித்தா ந்தத்துக்கு விருத்தமான அநேகாந்திகமென்னுங் குற்றமுண் டாம். உருவமாயிருக்கிற புட்பத்தினிடத் தருவமாயிருக்கிற கந் தமாயிருக்கிற கந்தமாச்ரயமாயிருத்தலாற் குற்றமில்லை யென வறிக. (௫௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மூன்று ரூபமும் அநுக்கிரஹார்த்தமென் றுணர்த்து தல்

உருமேனிதரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்தவருமேனியதுவுங்கண்டோம் - சர்த்தா ரூபத்தைத் தரித்துக்கொண்டா னென்கையில் உருவில்லாம லருவமென்பதறிந்தோம்,— அருவுரு வானபோது திருமேனி யுபயம்பெற்றோம் - கண்ணாடி நிழல்போலக் காண வுண்டாய், தீண்டுதற்கு இல்லையாயிருக்கும் ரூபாரூப மானபோது; இருதன்மையாயிருக்கும் திருமேனியைக்கண்டோம்— செப்பியமூன்று நந்நங் கருமேனிகழிக்க வந்த கருணையின் வடிவுகாணே -சொல்லப்பட்ட ரூபம் அரூபம் ரூபாரூபமென்னு மூன்றுதிருமேனியும் நம்முடைய கன்மசாரணாலே வருமசேஷங்களை மாற்றவந்த கருபாசத்தியின் வடிவென்றறி யென்றிதன்பொருள்.

நந்தம என்றது சகலரைச் சொன்னது

ஆகில் ஒருமூர்த்தியாக வநுக்கிரகபண்ணுவ ரென்றால் மூன்றுமூர்த்திகளினாலே அநுக்கிரகஹமபண்ணுவனென்று சொல்வது கல்பனைகளாவமெனனில்? அதல்ல சக்ஷுராதி தீக்ஷை பண்ணுவதற்காக குருமூர்த்தியாயும், தியானபூஜார்த்தமாக சகளாகள மாயும், அந்தர்யாமியாயிருந்து அஞ்ஞானத்தை ஹரிப்பதற்காக அரூபமாகவும் சொலலவேணும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இப்படி மூன்று திருமேனியு மூகிக்கபபட்டதென றுணர்த்துகின்றார்.

உருமேனி தரித்துக்கொண்டதென்றலும் - ஸ்ரீகண்ட சகள சரீரத்தைத் தனது சரீரமாய்ப் பரித்திருக்குமென்று படித்தமாத்திரத்தில், தரிக்கப்படுவது உரு, தரிப்பது அரு, என்று இரண்டுபொருள் சித்தித்தலால்,—உருவிறந்த அருமேனியதுவுங் கண்டோம - உருவாதீதமாய் அருவாயிருக்கும நிட்கள சரீரமனுமிதித்தறிந்தோம,—அருவுருவானபோது - அருவுமுருவுமாயிருக்கு மிசுரசரீரமென்று,—திருமேனியுபயம் பெற்றோம-சகளநிஷ்கள சரீரமுந தியானிப்போம்,—செப்பிய மூன்று நந்தங் கருமேனி கழிக்கவந்த கருணையின வடிவுகாணா-அசலம சலாசலம சலம என்றும, பரம் சூக்குமம் தூலமென்றும, சாற்றிய மூன்று சரீரமும, பாசசீர சூக்கும சரீரத்தோடுகூடப பிதா மாதிரு சுக்கில சுரோணிதங்களினுண்டாகிய ஸ்தூல சரீர சமசாரத்தை நீக்கவந்த சிவசத்திவடிவாயும சிவசத்தி யபிவியத்தி வடிவாயு மிருக்கின்றதுதானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

திருமேனியெல்லாம் ஒருங்கிரனவாகலின, ஏனைய வருவத திருமேனி அருவுருவத்திருமேனிகளதுணை மையுட; அவையும அவ வியல்பினவாமாறும, உருவத்திருமேனிக்கோதிய நயமேபற்றி அறியப்படுமெனபதாம.

உருவமெனப்படுங தூலப்பொருடெல்லாம் அருவமெனப்படுஞ் சூக்குமவவத்தை ஒருங்கேயானுண்டென்றுஞ் சற்காரியத்தினியல்புபற்றி, உருமேனி தரித்துக்கொண்டதென்றலு முருவிறந்த வருமேனியதுவுங்கண்டோமென்றும்; அவ்வருவமெனப்படுஞ் சூக்குமப்பொருள் பின உருவமெனப்படுந் தூலாவத்தையெய்துமபோது அவவிரண்டறகும பொதுவாயதோரவத்

தையும் உண்டென்பது தானேபோதருமென்பது பற்றி அரு வுருவானபோது திருமேனியுபயம பெறறேமென்றும், வேறு பொருளன்மையான அவையும் அவவுருவடிவோ டொககுமெ னபதுபற்றி மூன்று ஈைங்கு கருமேனி கழிககவநத கருணையி ன வடிவென்றும, கூறினார்.

இங்ஙனே ஏனைத திருமேனிகளிரண்டினது உண்மையும் அவற்றியல்பும உருவத் திருமேனியோடொதாகிய இயைபுபற றிச சாதிககப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

உம்முடைய கர்ததாவுககு உருவமொழிநது அருவம் அரூ பாரூபம காணப்பட்ட தில்லையென றவனை மறுதது மேலருளி சசெய்கிருர்.

உருமேனி தரிதுக்கொணட தென்றலு முருவிறநத வரு மேனியதுவுங கணடோம-பரமேஸ்வரன சகளமான திருமேனி யெடுத்துக்கொண்டா னென்றபொழுதே சகளமுமனறிபே நிட் களமான திருமேனி உணடென்று மறிநதோம.—அருவுருவான போது திருமேனி யுபயம்பெற்ருேம்- நிட்களமானபோதே திரு மேனி சகள நிட்களமென்னு முறைமையு மறிந்தோம். இப்படி ஒருவனுககு மூன்று திருமேனியாகச் சொல்லுவானே னென்னி ல்?—செப்பியமூன்று நங்கங் கருமேனி கழிககவநத கருணையி னவடிவுகாணே - இங்ஙனஞ் சொல்லப்பட்ட மூன்று திருமே னியும் நமக்குள்ளதாகிய கர்ப்பாசயத்திற் றெங்களை அநாதியே யொழியாமல் வரப்பட்ட தேசாதிகளைப் போக்குதறகு வநத காருண்ணியமான திருமேனியென் றறிவாயாக.

இதனுற் சொல்லியது ஆன்மாக்களுக்கு அநாதியே யொழியாமல் வரப்பட்ட சனன மரண துக்கங்களைப் போக்குவது காரணமாகப் பரமேஸ்வரனுக்கு சகள நிட்களம் சகளநிட்கள மென்னு மூன்று திருமேனியும் அநாதியே யுள்ளதென்னு முறைமையும் அறிவித்தது.

'குறித்ததொன்று' 'ஆரணம்' 'உருவருள' 'உலகினை' 'தேவரில்' 'போகியாய்' 'ஒன்றொடொன்று' 'நாயகன்' 'கண்ணுதல்' 'படைப்பாதி' 'உருமேனி' ஆகத் திருவிருத்தம் - ௧௧-ம், பஞ்சராத்திரி அவன் சிருஷ்டி திதி சங்காரமென்கிற மூன்று தொழிலும், திதி கர்த்தாவே செய்வன என்றதற்குப் பிரமாணம். பரபட்சம், அவன்மதம். "உந்தியி லயனையீன்று மவனைக்கொண் டுலகுண்டாக்கி, வந்தழிவுலகழிக்க வரனையுமாக்குவித்துத், தந்திடுஞ் சகத்தினுக்குத் திதிகர்த்தாதானேயாகி, வந்திடுந் தோற்றமீறு நிலைமையும் பண்ணுமாயன்." என்றும், அவன் மறுப்பு. "அயன்றனைப் பயந்தானென்ருய் டரியயன் சிரஞ்சேதிப்பப், பயந்திடானறலமாறனும் படைத்திடானசிரத்தைக்கிளரும், சயந்தருமரனைத்தந்தா னயனெனைக்கதப்பேயன்றே, தியங்கிடாதனைராயெல்லாஞ் சிவன்செயலென்றுந்தேர்ந்தே." என்றும், "அழிப்பரியேவலென்று யரிதனையழிக்குமன்றங், கழிப்பதுதவிர்க்கமாட்டா னங்கமுமழித்தேபூண்டா, னழிப்பரியேவலென்றங் கறைந்ததுமழிந்ததன்றே, வழித்திடுமரனேயாக்க நோக்கமுமாக்குவானே." என்னுமது கண்டுகொள்க.

சி - பா - மத-உ, மறு - ௫ - அ.

அருவமேயென்ற திருவிருத்தத்துக்கு வியாக்கியானம் உருமேனியென்ற திருவிருத்தமீருக வந்து முடிந்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

உருமேனி தரித்துக்கொண்ட தென்றாலும் - உருவமெனப் படுந் தூலப்பொருட் கெல்லாம் அருவமெனப்படும் சூக்கும அவத்தை யொருதலையானுண்டென்னுஞ் சற்காரிய வாதத்தினியல்புபற்றி யுருவத்திருமேனி தரித்தமையால்,—உருவிறந்த அருமேனியதுவுங் கண்டோம் - உருவிற்குக் காரணமாகிய அருவத்திருமேனியதனையுங் கண்டோம்,— அருவுருவானபோது திருமேனியுபயம் பெற்றோம் - அவ்வருவமெனப்படுஞ் சூக்குமப்பொருள் பின் னுருவமெனப்படுந் தூலாவத்தையெய்தும்போது அவ்விரண்டிற்கும் பொதுவாய கோரவத்தையுண்மையி னிரண்டாகிய அருவுருவத்திருமேனி யுண்மையும்பெற்றோம்,—செப்பிய மூன்றும் - இங்ஙனங்கூறிய மூன்று திருமேனியும்,—நந்தங்கருமேனிகழிக்கவந்த - நாங்கருவில் வீழாவண்ணங்காத்தற்குக் கொண்ட,—கருணையின் வடிவுகாணே - கருணை வடிவென்பதாம்.

இதனானே யேனைத்திருமேனிக ளிரண்டின தன்மையு மவற்றதியல்பு முருவத்திருமேனியோ டொதாகிய விதியைப்பற்றிச் சாதிக்கப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேற்றொகுத்துப்போந்தவற்றை விரித்
துணர்த்துகிறார்.

அத்துவா மூர்த்தியாக வறைகுவ தென்னையென்னி, னித்தனுப் நிறைந்தவற்றி னீங்கிடா நிலைமையா

னுஞ், சித்துட னசித்துகெல்லாஞ் சேட்டித ஞதலா
னும், வைதத்தா மத்துவாவும் வடிவென மறைகளெல்
லாம். (௫௬)

(இ-ள்.) அதது வா மூாத தியாக வ றைருவ தென் னேயெனில	ஆறததுவாவுஞ் சிவனுக்குத திருமேனியா ன தெபபடியென்று நீ கேடகிருயாகில்?
நிததனாய் நி றைந தவற்றி னீ ங்கிடா நிலைமை யானும	அநதசசிவ னொருகாலதது மழிவினறி யி ருககிறவனுமா யெஙகுமம பூரணனுமா யாங் வா றததுவாககளிலும வியாபிததறகு மேற படடுநிறகையாலும
சிததுட னசி ததுக கெல்லாஞ் சேடடித ஞத லானும	சித தசிததாகிய விரண்டினேயு மநாதியே யுளளபடி யறிந ததனேச சேட்டிப்பிசதுக கொணடு நிற்கையாலும்
வைததததா ம ததுவாவும வடி வென மறைக ளெலலாம	வேதாகமங்கள சிவனுக் காறத்துவாவுந் திருமேனியெனறு சொல்லுங்காண. எ-று.

யாதொருவனுக்கு நிததியததுவமாக விலககணமில்லாம லிருக்கினறது அவனுககுச சிததசிததுககளினது சேடடை கூ டமாடடாதாதலால் நிததியத்துவம் பதம்வைத்ததென வறிக.

அத்துவா வடிவான முறைமை யெங்ஙனமென்னின? சா ந்தியாதீதகலை திருமுடி, சாநதிகலை திருமுகம், வித்தை மார்பு, ப்ரதிஷ்டை குய்யம், நிவிர்தநி முழந்தாளும் பாதமும், இப்ப

டிப பஞ்சகலைகளு மங்கமாகவும்; புவனங்கள் உரோமம், வன்னங்கள் தோல், மந்திரங்கள் சோரி, பதங்கள் நரம்பு, தத்துவம் என்புந்தசையும, இப்படி யாறத்துவாவும் சதாசிவர்க்குத் திருமேனியாகவும், பிராணபூதம் பரமசிவ னெனவுமறிக.

இதற்கு வாதுளத்தும் ப்ரம சமபு பதததியினுங் காண்க.

உ - ம. "அவயவங் கலைகளாகு மாதிய புவனரோமமு, சுவையுறு துவககுவனனஞு சோரிமந் திரமதாகுந, தவமுறு பத நரமபு தத்துவந் தாதுவாகுஞு, சிவமுயர் சதாசிவர்க்குச் சிறந்தவா றுறுப்புந்தானே." எனவறிக. (௫௩)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

---o---

மேல்சிவன ஷடத்வமூர்த்தியென்று வேகங்களிலேசொல்ல, இவவிடத்துசிதரூபனென்று சொல்லுவா னேனெனபதற்குஉத்தரம.

அத்துவாமூர்த்தியாக வறைகுவதெனனேயெனில் - மந்தர பத வாண புவன தத்துவ கலையெனகிற வாறதவாவும் கர்த்தாவுக்கு தேகமென்று வேதங்களசொல்ல, நீ சிற்சத்தியே மூர்த்தியென்று சொனன தெனனவெனனில்?,—நித்தரூய் நிறைந்து தவற்றி னிங்கிடாநிலைமையானும் - சர்த்தாவானவன நித்தியனுமாய் பரிபூரணனுமாய் அந் தத்வாக்களைப் பிரியாத நிலையுடையவனுகையாலும்,— சித்துடனசித்துககெல்லாஞ் சேட்டிதனுதலானும் - சித்தாகிய வானமாக்களுக்கு மசித்தாகிய மாயாகாரியங்களுக்கும் பிரேரகனுகையாலும்,—வைத்ததாமத்துவாவும் வடிவென மறைகளெல்லாம் - அத்துவாவும் கர்த்தாவுக்கு தேகமெனன வேதாகமங்கள ஸ்தாபித்ததென்றிதனபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

செப்பியது நன்றுதான. அவ்வள விவ்வளவில், ஈசானி பூரணி ஆநதி வாமை மூர்த்தி என்னும பஞ்சசத்தி புறவுருவு டைததாய்,ஆரணி சனனி ரோதயித்திரி என்னுந திரிசத்தி உள ளுருவுடைததாயிருக்கும் கிரியாசத்தி சரீரப் புறவுருவி னுந்தக சசினியாதி யஷடத்திரிமசத கலைகளினது பிரவிாத்தி நிவிாத்தி பிரவிருத்திநிவிாத்தி வடிவாயிருக்கும சகளவுருச சரீரம, சகள நிஷகள வருவுருசசரீரம், நிஷகள வருசசரீரம, சொரூபமென று முனசொனனீா, திரும்ப அதுவனறி மூனறுள சகளசரீரமா த்திரஞ சத்திகலா சாசித்தியத்தினுலே சகளமாதலால், மாயா கலா ராகித்தியத்தினுலே நிஷகளமாதலால், சகள நிஷகளமெ னறு முனசொனனீா. திரும்ப வதுவனறி இப்போது ஸ்ரீகண்ட தேகதேகியா யிருக்கினற சிவனுக்கு ஸ்வரூப தடதசங்களிலே நி ஷகளம் சகளநிஷகளம சகளமாயும் சரீரஞ்சொனனீர். திரும் ப அதுவனறி அததுவா மூர்த்தியாக ஆகமங்கள சொல்லுவதே தென ருசங்கிக்க உத்தரஞ் சொல்லுகினருா.

அததுவாமூர்த்தியாக வுரைக்குவது என்னையென்னில் - ஏதெனறு நீ வினவினுல்,—நித்தனுய் நிறைநத வறறி னீங்கி டாநிலைமையானும் - நித்தியனுய் இடைவிடாது வியாபித்துப பிரியாதிருத்தலானும,—சித்துட னசித்துகளெல்லாஞ் சேட டிதனுதலானும்-சேதனசடபதாாத்தங்க ளனைத்திற்கும் பிரேரக னுதலானும்,—அததுவாவும் - ஆறுமாாக்கமுஞ் சிவனுக்கு,— வடிவென - சரீரமாக,—மறைகள்எல்லாம் - சிவாகமங்கள,— வைத்ததாம் - சொன்னதாம்.

அப்படி யனறு. ஆனமாக்களுக்குச் சலையென்றும், அசலை யெனறும் மூர்த்தி யிரண்டு.

அவற்றுள் அசலையாவது-முன் பிரபஞ்சித்திருக்கின்ற ஞானக்கிரியாரூப சிற்சத்தி மூர்த்தி. அது தனது சங்கற்பத்தால் தானசைவின்றி அசைவினுற் கடகாரிய நிகழ்ப்பண்ணும். அதனால் மூர்த்தியென் றுபசரிக்கப்பட்டது

சலையாவது முன்பிரபஞ்சித்திருக்கின்ற பிரணவ கலாபஞ்சக ரூபமாய், நாதத்து ளஞ்சாயிருக்கும் சிவதத்துவ தாத்துவிக பரதேக மூர்த்தியாயும், ஏழு இருபத்துநாலா யிருக்கும் வித்தியாதத்துவ ஆன்மதத்துவ தாத்துவிக சூக்குமதேக மூர்த்தியாயும், பௌவன தூலதேக மூர்த்தியாயும் இருக்கும்

அசலையென்று முன்சொன்ன ஞானக்கிரியாரூப சிற்சத்திமூர்த்தி, சங்கற்பத்தால் அசைந்து சஞ்சரித்துக் காரியப்படும். அதனால், இஃதொன்றுமே நிருபசரித வாஸ்தவமூர்த்தி.

கரசரணாதியாயும் கரசரணாதி சம்பந்தமாயுங் காணப்படுதலால் அப்படிச் சிவன் திரண்டு மூர்த்திகளில் அசலையாவது? ஞானக்கிரியாரூப சிற்சத்திமூர்த்தி. அது தனது சங்கற்பத்தா ற் றானசைவன்றி அசைவினுற சடகாரியம் நிகழ்ப்பண்ணும், அதனால் மூர்த்தியென்று உபசரிக்கப்பட்டது

சலையாவது சுத்தாத்துவ பரதேக மூர்த்தியாயும், சுத்தாசுத்தாத்துவ சூக்குமதேக மூர்த்தியாயும், அசுத்தாத்துவ தூலதேக மூர்த்தியாயும் இருக்கும்.

அசலையென்று முன் சொன்னஞானக்கிரியாரூப சிற்சத்தி; மூர்த்தி சங்கற்பத்தால் அசைந்து சஞ்சரித்துக் காரியப்படும். இதனாலும், லிங்கத்திற் கலாதி சட்தத்துவ நியாசம்பண்ணுதலானும், வாஸ்தவமாக மூர்த்தியல்லாதிருந்தாலும், மூர்த்தியென் றுபசரிக்கப்பட்டது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஈண்டுக் கூறியவாற்றான் முதல்வனுக்குக் கருணைவடிவேயன்றி மாயைவடிவு இல்லையாயின், ஆகமங்களின் அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமென்றது என்னையெனின்? அது எல்லாமாகி யல்லவா யுடனுமா மியல்புடைய முதல்வனுக்குத் தனது திரோதானசத்தியா னவற்றோடுளதாகிய இயைபு நோக்கிக் கூறும் உபசாரமேயாமென்பதாம்.

அத்துவாவும் என்னும்மை உபசாரவடிவென்ப துணர்த்தி நின்றது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

உருவ மருவ முருவாரூப மென்றும் பரமேஸ்வரனுக்குத் திருமேனியாயிருக்க, அத்துவாமூர்த்தியென்று வேதஞ் சொல்லுகிறது எப்படியென்ற மாணாக்கனை நோக்கி, மேலருளிச்செய்கிறார்.

அத்துவா மூர்த்தியாக வுரைக்குவ தென்னையென்னில்-பரமேஸ்வரனுக்கு மந்திரம் பதம் வன்னம் புவனந் தத்துவங் கலையென்கின்ற ஷடாத்துவாக்களே திருமேனியாக வேதஞ்சொன்ன தெப்படியென்று கேட்கிறாயாகில்?—நித்தனாய் நிறைந்தவற்றை நீங்கிடா நிலைமையானும் - அழிவில்லாத சம்பூரணனா யந்த அத்துவாவிலே நிலைபெற்று நிற்கிற முறைமையையுடையனாதலானும்; அதுவன்றியும்,—சித்துடனசித்துகளெல்லாஞ் சேட்டிதனாதலானும் - அநாதியே சித்தாகிய ஆன்மாக்களையும் அ

சித்தாகிய பாசத்தையும் சேட்டிப்பனுகையாலும்,— வைத்ததா மத்துவாவும் வடிவென்ப மறைகளெல்லாம் - பரமேஸ்வரனுக்கு அத்துவாவே திருமேனியென்று வேதாகமங்கள் சொல்லப்பட்டது.

இதனுற்சொல்லியது அனாதியே பரமேஸ்வரன் சட்சித்துக்களிரண்டிலும் நிறைந்துநின்று அவையிற்றைச் சேட்டிப்பிக்கையால் அத்துவாவே திருமேனியென்று வேதாகமங்கள் சொல்லுமென்ற முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

(ஈண்டுக்கூறியவாறு விறைவனுக்குக் கருணைவடிவேயன்றி மாயைவடிவில்லையாயின்),— மறைகளெல்லாம் - ஆகமங்களெல்லாம்,— அத்துவாமூர்த்தியாக அவனுக்குச்சொன்னதென்னையெனில் - அத்துவாக்களாறு முதல்வனுக்கு வடிவமாகக் கூறுதலென்னையெனின்,— நிறைந்தவற்றி னீங்கிடா நிலைமையாலும் - நிறைவுற்றவவத்துவாக்களினுங் கலந்து எல்லாமாகி நிற்றலானும்,— நித்தனாய் - அவையல்லனாய் நிற்றலானும்,— சித்துட னசித்துக ளெல்லாஞ் சேட்டித்தலானும் - சட்சித்துக்களையெல்லாம் செலுத்தியுடனுமாய் நிற்குமியல்புடைய முதல்வனுக்கு,— அத்துவாவும் வடிவென்கவைத்ததாம் - தனதுதிரோதான சத்தியானவற்றோடொன்றாகிய வினையைநோக்கியத்துவாவும் வடிவெனக் கூறுமுபசாரமேயாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஆறத்துவாவினிடைச் சிறந்த மந்திரமே திரு
மேனியென் றுணர்த்துகின்றார்.

மந்திர மத்துவாவின் மிக்கதொரு வடிவமாகத்
தந்தனரா றுகட்கெனின் சகத்தினுக்குபாதானங்கள்
விந்துமோகினிமானமூன் றும்இவற்றின் மேலாகி விந்துச்
சிந்தையார்த்தமான சிவசத்தி சேர்ந்துநிற்கும். (௫௭)

(இ-ள்) மந்திர மத்துவாவின் மிக்கதொரு வடிவமாகத் தந்தனரா றுகட்கெனின்ன

ஆறத்துவாவினுள் மந்திராத்துவாவே சிவனுக்குத் திருமேனியென்று வேதாகமங்கள் சொல்லியதென்று நீகேட்கின்றாயாகில்,

சகத்தினுக்குபாதானங்கள் விந்து மோகினி மானமூன்றும

ப்ரபஞ்சோற்பத்திக் குபாதானகாரணங்கள் மூன்றாயிருக்குங் குண்டலியென்றும அசுத்த மாயையென்றும் ப்ரகிருதியென்றும். அம்மூன்றுந் தன்னிலொக்குமோ வென்னில்?

இவற்றின்மே லாகிவிந்துச் சிந்தையார்த்தமான சிவசத்தி சேர்ந்துநிற்கும.

இங்ஙனங் கூறிய மூன்றினுக்கும், மேலாகிய சுத்தமாயை சுத்தமாயிருந்த கலாலுமானமாகக்கண் மனத்தாற் சிந்திக்கத்தக்கரிதுமாய் நிட்களமுமாயிருக்கும் பராசத்தி யதனை யதிட்டித்துக்கொண்டு வாக்குண்டா யிருக்கின்ற மந்திரங்களே சுத்தனுக்குத் திருமேனியாகாநிற்குமென் றறிவாயாக. எ-று.

இதற்கு வாதுளோத்தரத்திற் காண்க. (௫௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் மந்த்ர ரூப முணர்த்துதல்.

மந்திரமத்துவாவின் மிகுத்த தோராவடிவமாகத் தந்ததெனருளுகென்னில் - அத்வாக்களுக்குள்ளே மந்த்ராத்வாவே முக்கியமான மூர்த்தியாக வருணுக்குச் சொன்னதென்னையெனில்,—சகத்திதுக்குபாதாநங்கள் விந்துமோகினிமானமென்று மிவற்றின்மேலாகிவிந்து சிந்தையாரதீதமான சிவசத்திசோந்து நிற்கும் - பரபஞ்சத்துக் குபாதாநமானது விந்துவென்றும் மோஹிநியென்றும் மஹானென்றும் மூன்றும் இந்த மூன்றுபாதாநத்திற்குள்ளே உத்தமமான விந்துவிலே சிந்திக்கப்படாத பராசத்தி பொருந்தியிருக்கும்.

யாதாமொன்று ஜடமு மநேகமுமாயுள்ளது அஃதெல்லாங் காரியமும் அசத்துமென்னு மநுமானத்தால் ஜடமாக, ஜகத்துபாதாந காரணம் மூன்றென்று சொல்லுகையால் காரியமும் அசத்துமாம். இதனால் சைவம் சற்காரியவாதமென்பதற்கு விரோதமென்னில்? மேயமஹாமாயையென்ப தொன்றே முதற்காரணம். அந்த மஹாமாயை சத்ருபையசத்தி க்ஷோப்தம்பண்ண, அந்த க்ஷோப்தப் பிரதேசம் பரகாசமென்றும் மோஹகமென்றும் ஆஞககமென்றும் திரிவிதமாம் அதற்கே பரியாயமாக சுத்தமென்றும் சுத்தாசுத்தமென்றும் அசுத்தமென்றும் பிந்துவென்றும் மோகினியென்றும் மஹானென்றும் இத்யாதி நாமங்களுண்டு. இந்த உபாதாநங்களுக்குள்ளே பிந்துவிலே நின்று முண்டான சுத்தாத்வா ப்ரபஞ்சத்திற்கு சாந்தாதம

கமென்றும், மோஹினியிலே யுண்டான மிச்ராத்வா ப்ரபஞ்சத்திற்குக் கோராத்மகமென்றும், மஹானிலே யுண்டான அசுத்தாத்வா ப்ரபஞ்சத்திற்கு மூடாத்மகமென்றும் பெயராம். பரமோபாதான காரணம் குண்டலினி மஹாமாயாதி நாமத்தையுடையதொன்றே அபரவிந்து மோஹினி மஹானென்னு மிம்மூன்றும் மூலோபாதானமான குண்டலியிலே நின்று முண்டான குணாத்மகங்களா மிக்கருத்தே "விந்துவின் மாயையாகி மாயையினவ்வியத்தம் வந்திடும்" என்றதும்.

குண்டலினி மூலோபாதான மெனபதற்குச சம்மதி.

பௌஷ்கரே — ஸா சக்திர் பிந்து ஸம்ஜ்ஞா ஸா மோஹா மாயாதிஸம்ஜ்ஞிகா | மோஹின்யாத்ம ஸ்வரூபோ ஹி ஸத்தா ஸ்வப்தவாஞ்சிதகாரயா

குணத்ரயம உண்டான விஸ்வம மூன்றுவிதமாயிருக்கும் என்பதற்கு சம்மதியும அதில்தானே

விஶ்வம் குணாத்மகம் ஸாதோ மோஹின்யாத்மிகயா |

மோகினியே நித்தியம என்றதுஉ, ஆ மோக்ஷஸ்தாயி யாகையினாலும், குண குணி பேதோபசாரத்தினாலும், ஆகையினாலே மூலோபாதான காரணம மஹாமாயை ஏகமே யென்பதற்குச சற்காரிய வாதத்திற்கும விரோதமில்லை என்றிதன பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

வாச்சிய மந்திரமும, அந்தச் சத்தி சரீரமென்று சாதித்ததனால் சங்கிக்கப்படுவ தன்றென்று வாசகமந்திரத்தை மனசில் வைத்துச் சங்கித் துத்தர முரைக்கின்றார்.

அத்துவாவில் - ஆறத்துவாவுக்குள்,—மந்திரம்-மந்திராத்துவா,—அரனுக்கு - சிவனுக்கு,—மிகுத்தொருவடிவமாக - மிகுதியும் ஒப்பற்ற மூர்த்தியாக,—தந்ததென்னெனில் - சொன்னதேதென்று நீ சொல்லில்,— சகத்திற்குபாதானங்கள் - உலகத்துக்கு முதற்காரணங்கள்,—விந்துமோகினி மானமென்றும் - மகாமாயை மாயை பிரகிருதியென்று மூன்று வகையாம்,—இவற்றில் - இம்முதற்காரண மூன்றுள்,—விந்து - மகாமாயையானது,—சிந்தையாரதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும் - சித்தத்தை வியாபித்துக் கடந்திருக்கும் சிவசத்தி சாட்சாத் சன்னிதிப்பட்டிருக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

இவ்வுரை ஐம்பத்தெட்டாவது செய்யுளின் உரையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

பரமேஸ்வரனுக்கு அத்துவாக்களாறும் திருமேனியாயிருக்க மந்திர மூர்த்தத்தை விசேஷமான திருமேனியென்றது,எப்படி யென்றவனை நோக்கி மேலருளிச் செய்கிறார்

மந்திரமத்துவாவின் மிகுத்தொருவடிவமாகத் தந்ததேனானுக்கென்னில் - ஷடாத்துவாக்களிலும் வைத்துக் கொண்டு மந்திராத்துவாவை பரமேஸ்வரனுக்கு சேட்டமான திருமேனியென்றும் வேதாகமங்கள் சொன்னபடி யெப்படியென

னில்?—சகத்திற்குபாதானங்கள் விந்துமோகினிமானென மூன்றும் - பிரபஞ்சத்துக்கு உபாதானங்கள் சுத்தமாயை யென்றும் அசுத்தமாயை யென்றும் பிரகிருதியென்றும் மூன்றுவகையாம் —இவற்றின் மேலாகி விந்துசத்தியாதிகமான சிவசத்தி சேர்ந்திருக்கும் - இவையிற்றுக்கெல்லா மேலுமாய்ச் சுத்தாதீதமான சிவனுடைய பராசத்தியை மாமாயை யென்று சொல்லப்பட்ட விந்துப் பொருந்திற்றாகும்.

விந்துவென்றது விந்துவை, மோகினியென்றது அசுத்தமாயையை, மானென்றது காரியமாயையாகிய பிரகிருதியை விந்துசத்தியாதிகமான சிவசத்தி சேர்ந்திருக்குமென்றது, சிவனுடைய சத்தியைப் பொருந்தி நிற்கிற சுத்தமாயையிற் றோற்றின மந்திரங்களாகையால், மந்திரமூர்த்தமே விசேஷமென்றதெனக் கொள்க.

இதனாற் சொல்லியது எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கிற சிவசத்தியைவிட்டு நீங்காத விந்துவிற்றோன்றின மந்திரங்களே சிவனுக்குத் திருமேனியாயிருக்கையினாலே, அத்துவாமூர்த்தத்திலும் மந்திரமூர்த்தமே விசேஷமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இவ்வுரை ஐம்பத்தெட்டாவது செய்யுளின் உரையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

மறைஞானதேசிகர் உரை.

மேலதற்கோர் புறநடை யுரைத்ததுகின்றார்.

சுத்தமாம் விந்துத்தனிற் றோன்றிய வாதலா
னுஞ், சத்திதான் பிரேரித்துப்பின் றானிட் டித்துக்
கொண்டே, யத்திறற் புத்திமுத்தி யளித்தலா லரனு
க்கென்றே, வைத்ததா மந்திரங்கள் வடிவென மறைக
ளெல்லாம். (௫௮)

(இ-ள்) **சுத்தமாம் விந்துத் தனிற் றோன்றிய வாத லானும்** மந்திரயோனி மகாமாயாவெனனும் வாக்கியமுண்டாகலால் விந்துவினகண் டோற்றமுண்டாகையாலும்,

சத்திதான் பிரேரித்துப்பின் றானிட் டித்துக்கொண்டே அந்தமந்திரங்களைப் பராசத்தி தானே தோற்றுவித்து, பின்பதனைச் சத்திதானே யதிட்டித்துக்கொண்டே நிற்கையாலும்,

அத்திறல் அந்தக் காரணத்தினாலே

புத்திமுத்தி யளித்தலால் இந்த மந்திரங்கொண்டே சிவபூசையதிகாரிகள் சபமுதலியவற்றால் வழிபட்டவான்மாக்களுக்குப் போகமோட்சங் கொடுக்குஞ் சாமர்த்திய முண்டாகையினாலே,

அரனுக் கென்றே வைத்ததா மந்திரங்கள் வடிவென மறைக ளெல்லாம். வேதாகமங்களெல்லாஞ் சிவனுக்கு மந்திரமே திருமேனியென றுறுதியிட்டுச் சொல்லாநிற்கும். எ-று.

அத்து சாரியை

இம்மந்திரத்தின் பகுதியை விரிக்கிற் பெருகும்.

இதற்கு வாதுளோத்தரத்திற் காண்க. (ருஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சுத்தமாம் விந்துதனிற் றோன்றிய வாதலானும் - சுத்த மாயையென்று பெயரையுடைய விந்துவிலே தோன்றினவாகை யாலும்,—சத்திதானபிரேரித்துப்பின் றானதிட்டித்துக்கொண் டே யத்துவாற்புத்திமுத்தி யளித்தலால் - சிவசத்தியானது மந்திரங்களைத் தோற்றுவித்து அநுப்ரவிஷ்டமாய் மந்திரங்க ளையதிஷ்டானமாய் நின்று பிரேரித்து உபாஸகர்க்குப் போக மோக்ஷத்தைக் கொடுத்த லுண்டாகையால்,—அரனுக்கென்றே வைத்தனா மந்திரங்களை வடிவெனமறைகளெல்லாம் - அரனுக்கு மந்திரரூபமென்று வேதங்களாற் சொல்லப்பட்டது என்றித னபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அதனால் ஏதெனனச் சமயந்தஞ் சாதிக்கின்றார்.

சுத்தமாம்விந்து தனிற்றோன்றிய வாதலானும் - சுத்த மாயையினின்றுஞ் சிவசத்தி சங்கர்பதகாற்றோற்றிய காரணத் தினாலும்,— சத்திதானபிரேரித்துப்பின் றானதிட்டித்துக்கொ ண்டே - அந்தச்சிவசத்திதான் தனது சங்கற்பத்திலுண்டாகச் சுத்தவித்தையிலிருக்கும் அந்த ஆதிதைவிக திவ்வியாக்கினிசம

மந்திரங்களைப் பிரேரித்து மாந்திரிகனுச்சரிக்குங் கரிசுகொத்த ஆத்திபானமிக மந்திரங்களிலே செலுத்திப் பற்றுவித்து அவைகளிற்சாணித்தியமாய்த்தானே,—அதனால் - மாந்திரிகனாலே சபிக்கப் பூசிக்கப்பட்ட அந்தமந்திரங்களினாலே,— புத்திமுத்தியளித்தலால் - சித்திமோக்ஷங்களைக் கொடுத்தலால்,—அரனுக்கென்றே வைத்ததாமந்திரங்கள் வடிவெனமறைகளெல்லாம்-சிவனுக்கு மந்திரங்கள் சரீரமென்று வேதாகமங்களனைத்துஞ் செப்பியதாம்

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அத்துவாக்களுள்ளும் மந்திரவடிவத்தனைச் சிறந்தெடுத்தோதியது, தலைமையும் பயனும்பற்றி விசேடவுரிமையாதனோக்கென்பதாம்

சத்தத்தினுக்குபாதானங்கள் விந்து மோகினி மான மூன்று மென்றது அநுவாதம்

ஆர்த்தம் பண்புத்தொகை

சோந்து சேர்ப்பட்டு

விந்துத்தனிற் றோன்றின வென்பது விந்துத்தன்பால வைகரியாதி எனக்கூறிப் போந்தவாற்றானறிக

பிரேரித்தல் சாதகராயவார் கணிக்குமாறு செலுத்துதல்.

அதிட்டித்தல் கணித்தபின் பயன்கொடுத்தற்பொருட்டு அவற்றை வாயிலாகக் கோடல்.

விசேடவுரிமையாதல்பற்றி அரனுக்கென்றே வைத்தவென்றார். (௫௭ - ௫௮)

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மந்திரமோத்தத்தின் விசேஷ மேது மருளிச்செய்கிறார்

சுத்தமாமவிந்துதனலிறே ஞானநியலாதலானும - இப்படிச் சிவசத்தியைப் பொருந்தி சுத்தமாயிருக்கிற விந்துவிலேதோன்றப்பட்ட தானையினாலும்,—சத்தியான பிரேரித்துப் பின்று னதிட்டித்துக்கொண்டு - அந்தப் பராசத்தியானது இந்த மந்திரங்களிலே யதிட்டித்து இந்த மந்திரங்களாக நின்று,—அத்தியாற புத்திமுத்தி யளித்தலால் - விருப்பத்துடனே அந்த மந்திரங்களினாலே ஆன்மாக்களுக்குப் போகமோக்ஷங்களையுங் கொடுத்து நிற்கையினாலும்,—அரனுக்கென்றே வைத்தார் மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம - இப்படி யிந்த மந்திரங்களிருக்கையினாலே பரமேஸ்வரனுக்கு மந்திரமே திருமேனியென்று வேதாகமங்களெல்லாஞ் சொல்லாநின்றது.

இதனாற் சொல்லியது சிவசத்தியானது சுத்தமாயையிலே நின்று மந்திரங்களைத் தோற்றுவித்து, அந்த மந்திரங்களை யதிட்டித்து, அவை தாருக விருந்து மவையினாலான்மாக்களுக்குப் போக மோக்ஷங்களைக் கொடுத்து, இப்படி யிருக்கையினாலே இந்த மந்திரங்களே சிவனுக்குத் திருமேனியென்று வேதாகமங்கள் சொல்லுமென்னு முறைமை யறிவித்தது.

—

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

அரனுக்கு - முதல்வனுக்கு,—அத்துவாவின மந்திரமொரு வடிவமாக - அத்துவாக்களுள்ளுமந்திரத்தை யொருவடிவமா

க,—மிருத்துத்தந்ததெனனென்னில்-சிறந்தெடுத்தோதிய தெனனையெனின,—சகத்தினுக் குபாதானங்கள-உலகிற்கு முதற்காரணங்கள்,—விந்துமோகினிமானமூனறும-சுத்தமாயை,--அசுத்தமாயை பிரகிருதிமாயையென மூனறுகும்,—இவற்றினமேலாகிவிந்து-இமமூனறின மேலாகிய விந்துவினகண்,— சிந்தையாதீதமான - மனாதீதமாகிய,—சிவசத்திசோந்து நிறகும-சிவசத்திசேரப்பட்டு நிற்றலானும்

சுத்தமாம் விந்துதனனில் - சுத்தமாயையில்,— தோனறியவாதலானும - தோற்றியதலைமையானும,— சத்திதானபிரேரித்து-சத்திசாதகராவாா கனிககுமாறு செலுத்தியும,— பினறனதடித்துககொணடே - கனிந்தபின பயன கொடுததற்பொருட்டு அவறறை வாயிலாகக்கொணடு,— அதனிறுற புத்திமுத்தியளித்தலால்- அதனுற் போகமோக்ஷத்தை யளித்தலாகிய பயனும்பற்றி - மறைகளெல்லாமஅரனுககு-ஆகமஙகளெல்லா முதல்வனுககு,—மநதிரஙகள வடிவெனவைதத தெனறேயாம - மநதிரவடிவம விசேட வுரிமையாததெனுககிக கூறியனவேயாமெனபதாம. (ருஎ-ருஅ)

மறைஞானதேசிகர் உரை.

மேற் சிறப்புவிதி யுணாததுகிறுர்.

மந்திர மதனிறபஞ்ச மந்திரம் வடிவமாகத்
தந்திரஞ் சொன்னவாறிங் கெனனெனிறசாற்றக்கேணீ
மூந்திய தோறறத்தாலு மந்திர மூலத்தாலு
மநதமில் சத்தியாதிக யிசைத்தலு மாகுமனறே.(ருக)

(-இ ள) மநதி சுத்தாத்துவாவிற் ருேற்றிய மந்திரங்க
ர மதனிற் ளநேகமுளவாயினு மீசானமுதலிய வைந

பஞ்ச மந்திரம் வடிவமாகத் தந்திரஞ் சொன்னவாறிங் கென்னெனின்	பஞ்ச மந்திரங்களுமே திருமேனியென்று திவ்வியாகமங்கள் கூறியதென்னென்று நீ கேட்கிறாயாகில்,
சாற்றக்கேண்மீ	அதனை யாம் விளங்க வுனக்குச் சொல்வாங் கேட்பாயாக
முந்திய தோற்றத்தாலும்	சிவனருளே சுத்தமாயையிற் றோற்றுவிக்கையாலும்,
மந்திர மூலத்தாலும்	சதகோடி மஹாமந்திரங்களுக்கு மீசான முதலிய மந்திர மைந்துமே ப்ரதானமாகையாலும்
அந்தமில் சத்திபாதிக கிரைத்தலு மாகுமன்றே.	ஆதியாகிய சதாசிவதேவர் முதலாயினோர்க்கு ஈசானி பூரணி ரவுத்திரி வாமைபூ ததி சேட்டையு மதிட்டித்துக்கொண்டு பஞ்சகிருத்தியங்களை நடத்திநிற்கையாலு மிந்த வைந்து மந்திரமுமே சிவனுக்குத் திருமேனி எ - று.

இதற்கு மிருகேந்திரத்து மதங்கத்துங் காண்க.

சிவன் முதற்கண் பஞ்சமந்திரங்களைத் தோற்றுவித்துப் பின்பு பதமந்திரங்களை யுண்டாக்குகையால் மந்திரமூலமெனச் சிறப்பித்தா ரெனவறிக

மந்திரங்களெல்லாஞ் சத்தியின் சொரூபமாயே யிருக்குமென்று ரத்நத்திரயத்திலோதினா ரெனவறிக. (௫௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் பஞ்சமந்திர தனுவென் றுரைத்ததற்கு

மந்திரமென்னிற் பஞ்சமந்திரமே வடிவமாகத் தந்திரஞ்சொன்னவாறிங் கெனவென்னிற் சொற்றாற்கேணீ - சப்தகோடி மஹாமந்திரங்களிலும் பஞ்சப்ரமமாம் மந்திரமே சிவனுக்குத் திருமேனியாக ஆகமஞ் சொன்னதெனவெனிற் சொல்லக்கேள்,—முந்திய தோற்றத்தாலும் மந்திரமூலத்தாலும் பந்தமில்சத்திபாதத்தினைச் செய்தலாலுமன்றே - பராசத்தி முதலாகிய பஞ்சசத்திகளால் சுத்தமாமையிலே பஞ்சமந்திரங்களும் முதற்றோன்றுகையினாலும், நின்ற மந்திரங்களுக்கெல்லாமிந்த ஐந்து மந்திரங்களுங் காரணமாகையினாலும், முடிவற்ற பஞ்சசத்திகள் விகாரமற்றதுக் காதியாகிய சதாசிவத்திற்குத் திருமேனியாகக் கூட்டி நிற்கையாலும், பஞ்சமந்திரங்களே சிவனுக்குத் தனுவாகச் சொன்னதென் றறிவாயாக என்றிதன்பொருள்.

சிவனுக்கு மந்திரதனுவு மாயாதனுவுமில்லாமல் ‡ சித்ஸ்வரூபமேயாயிருக்கவும், சாதகருடைய த்யானபூஜைகளின் நிமித்தமாகச் சொல்லப்பட்ட பஞ்சமந்திரதனு வுபசாரமல்லது ஸ்வபாவமல்ல. பஞ்சமந்த்ரமாவது அநுக்ரஹ திரோதான ஸம்ஹார ஸ்திதி ஸ்ருஷ்டிகர்த்தாக்களாக, ஈசான தத்புருஷ அகோர வாமதேவ சத்யோஜாதங்களும் மூர்த்தா வக்த்ர ஹிருதய குஹ்ய மூர்த்திகளாகச் சொல்லப்பட்டது. ‡ சித்ஸ்வரூபம்-ஞானஸ்வரூபம்.

தான சர்வோத்கருஷ்டமுமாய் தத்பதத்தை ஆன்மாக்களுக்குக் கொடுக்கையினாலே ஈசான மூர்த்தாவென்றது.

பிந்துநாத வருத்தியான சப்தஜாலங்களை ஜகத்திலே பூரிக்கையினாலே தத்புருஷ வக்த்ரமென்றது.

கோரமென்றது - அஞ்ஞானம், தத்விரோதியா யிருக்கிற ஞானம் அகோரம் அகோரம் ஹிருதயபரியாய மாகையால் அகோரம் ஹிருதயமென்றது.

சர்வான்மாக்களுக்கும் பிந்து வருத்தியாகிய விஞ்ஞானாதிகளை யுற்பவிக்கையாலும், இது சூக்ஷ்ம கருத்தியமாகையினாலும் வாமதேவ குஹ்யமென்றது.

விஞ்ஞானாந்த கோசமாகிய காரணதேகத்தில் ஆன்மாக்களுக்கு முகத்துண்டாயுள்ளவில் மனோமயாதி கோசத்திரயமான சூக்ஷ்ம ஸ்தூல சரீரங்களைத் தமமுடைய இச்சாமாத்திரத்தினாலே மந்திரேஸ்வர மந்திரங்களை அதிஷ்டித்துடனே யுண்டாக்குகையினாலே சத்யோஜாத மூர்த்தியென்றது

இந்த மந்திரங்களைந்தும் ஐந்து சத்திகள்

ஹாரணி ஜநநி ரோதயித்ரி என்னும் மூன்று சத்திகளும் பரிக்கிரஹ சத்திகள்

ஆக சத்திகள் எட்டு

இதில் ஹாரிணியானது—ஆன்மாக்களுடைய தனுகரணாதி சர்வத்தையும் மாயையிலே உபசம்ஹாரம் பண்ணுவதுஞ் செய்து, பக்குவமானவரை பரசிவத்திலே யடைவிப்பிக்கையுஞ் செய்யுமாகையால், சம்ஹாரமும் அநுக்கிரகமும் ஹாரணியினுடைய கருத்தியமாயிருக்கும்

ஜநநியானது.—ஜகத் துற்பத்தியைப் பண்ணுகிற ஸ்வபாவமாயிருக்கும்

ரோதயித்திரியானது—ஸ்திதிகாலத்திலே ஆன்மாக்களுக்கு போக நியமனத்தையும், பிரளயத்திலே சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் இவர்களை மாயாதோ பாகத்திலும் மாயாமத்தியத்திலும் மாயோ பரியிலும் வாச நியமத்தையும் பண்ணுவிக்கும்.

தஉக்தம் — ஶாயாஜாவக்ஷ்ரோவாஞ்ச க்ரஜெவேணை ஷாவ ரவஷிதி.

ஆகையால் ஸ்திதியும் திரோதானமும் ரோதயிந்திரியினுடைய கருத்திபமாயிருக்கும்

இஃதனறியும் ஹிருதயாதி அறங்கமும் மூாத்தாதிகளைப போல உபசாரமே.

அவையாவன ?—

அஸ்திதவம் அஃதுவைகமையான சுபாவசத்தி, அது ஹிருதயம்.

ஸர்வோதகர குணமாகிற நிதயத்ருததியாகிற சத்தி சிரசு.

மாயையிற சாவரையும வஜீகரிததுககொணடு தனனுததாருககும வஸவருதது யாகாமலிருககிற சததி சிகையுமாம.

தனனையுந் தானே ரக்ஷிததுககொணடு அநயரையும ரக்ஷிககிற சகதியே கவசம்.

சாவஜ்ஞகததிறகு மூலமாயிருககிற சததி நேததிரம்

பக்தருடைய அருஞானஙகளை ஹரிககிற பரதாப சததியே அஸதரம

இவ்வா றுபசார கல்பனையொழிய சிவனுககு வாஸ்தவமாகச் சரீரமில்லை.

தஉக்தம் வாதுலே — யொமீநாஞு யதீநாஞு யாமிநாம ஶக்ணாம தயா | யாநவ ஞா மிதி த்ராய மிஷ்ஷுகம் ஸகலம் ஸவெஸ் || ஶம் பாந வஸ்ஷாவொா வாஜாதாஜிகாஃ க்ராஸ் | வத தாஃ ஸஜா ஶிவாவஸாஜதி.

[illegible]

[illegible]

ஸாவ ஜகத்திற்கு மேலாயிருக்கிற யாதொரு குணத்தினுலே லோகங்களுக்கெல்லா மீஸ்வரனாயிருக்கிறார்; அதனாலே ஈசானனென்று நாமமாம்.

மூர்த்தாவென்று சொல்லப்பட்டதொழிய சாக்ஷாத் அவயவமல்ல.

தது க்தம் — பௌஷ்கரே — ஈஶே யேந ஜந்மத்ஸ்ய வாக் ஶு மஹேஶ்வராவதிஷ்டிதா । ஸதேஹாஸ் ஸதேஹாஸ்ச தேஹாதிஷ்டாந ஹேதவோ வ்யவஸ்திதா: ॥

தேவநராதி தேஹாவச்சின்னராயிருக்கிற ஆன்மாக்களிட த்திலே அநகர்பாமியா யதிஷ்டித்துக்கொண் டிருக்கையிலு லே தத்புருஷனென்னு நாமமாம.

ததுக்தம் - தஸ்ய தஸ்ய தந்வ்ராவ ஸ்வஸ்ய ஈஷ்டிஶ்ரேயஸ: । தத்ராணா த்யஜநாத்மாவிஸத்ஸ்வபாவஷ்ட்வக்த்ரக ஈதி . கந்த்ராவி . ஸ்வாமே ஸ்வாயம் வஸதி ஸகல ப்ராணிநா ஹ்ருதயே ஶ்ருதி . அகோரஸ்ய ப்ரோக்தோ ஜவந்த்ரோக்த: .

ஆனமாக்களை தாமமார்த்த காமங்களிலுலே வஞ்சித்து அதோமாயையிலே கவிழுகையிலுலே வாமா, பரகாசஸ்வபா வராகையிலுலே தேவா ; ஆனபடியிலுலே வாமதேவர் என றது

வாமோ வாமதேவ ஈத்யுக்தேரிதி .

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——0——

மேற்சிறப் புணர்த்துகின்றார்

மந்திரமதனிற் பஞ்சமந்திரம் வடிவமாக - மந்திரங்களுக் குள்ளே விசேஷித்து ஈசானமுதல் ஐந்து மந்திரமும் சரீரமா

க,—தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனில் - சிவாகமஞ் செப்பிய தேதென்னெனில்,—சாற்றக்கேணீ-சொல்ல நீகேள்,—முந்திய தோற்றத்தாலும் - பிரமசிருட்டியாதலாலும்,—மந்திர மூலத்தாலும்- மந்திரங்களிற் பிரதானங்களாதலானும், விசேஷித்து வடிவென்று செப்பியது மந்திராண தன்மித்துவம், சிவசத்திக்கும் சிவனுக்குமே நாதாகருத்திவாசகங்கள் மந்திரங்களென்றெப்படிச் சொல்லப்படுமெ, சத்தியந்தானே!—அந்தமில்சத்தியாதிக கிரியைத்தலு மாகுமன்றே - நிதத்தி யாஷடத்திரம்சத்கலாபேத ஈசானியாதி மூர்த்தியந்த சத்திபேத சிவசத்திக்கும், ஆதியென்னும் ஈசானியாதி சத்தியோ சாதாந்த சிவபேத சிவனுக்கும், மந்திர மென்பது முக்கியமாய்ச் சொல்லலாகும் ; மந்த்திராண தன்மித்துவஞ் சாட்சா திருக்கையால், சிவம் சத்தியாகிய வாச்சிய மந்திரங்களுக்கு நாமமாதலால், வாசக மந்திரங்களுக்கு மந்திரமென்பதுபசாரம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

மந்திர வடிவுள்ளும பஞ்சப்பிரம வடிவைச் சிறந்தெடுத்தோதியது, ஏனைய மந்திரங்கட்கெல்லாம் முற்படத் தோன்றி முற்படக்கொண்ட வடிவாதல்பற்றி யென்பதாம்.

தந்திரம் ஆகமம்.

இங்ஙனங்கூறிய அத்துவாமூர்த்தி மந்திரமூர்த்தி பஞ்சப்பிரம மூர்த்திகளெல்லாம், அவற்றைச் செலுத்திநிற்குந் திரோதான சத்திக்கிரியைச் செய்த உபசாரவடிவென்பார்; சத்தியாதிக்கிரியைத்தலு மாகுமென இறுதிக்கட் கூறினார்.

சத்தியாதியென்பது முன்பின்னாகத் தொக்க இருபெய ரொட்டுப் பண்புத்தொகை.

ஆதிசத்தியெனினுந் திரோதான சத்தியெனினு மொக்கும்

உம்மை சிறப்பின்கண் வந்தது.

இவைநான்கு செய்யுளானும் முதல்வனுக்கு உபசாரத்திருமேனி இவையென்பது கூறப்பட்டது.

'அருவமோ' என்பதுமுதல் இதுகாறுந் திருமேனியி னியல்பு கூறுமுகத்தால் 'அநாதிமுத்த சித்துருவாதலைத்' தெரித்துணர்த்தியவாறு.

அற்றேல் அயன் முதலியோரையும் அத்துவாமூர்த்தி மானகளாக வைத்துத் தத்தமெல்லை யளவும் அவரவர்வடிவின அத்துவந்யாசஞ் செய்யுமாறும் ஆகமங்களின் விதித்தலின், அவருருவும அரனுருவோ டொக்கும் போலுமெனின்? அதற்கு விடை வருஞ்செய்யுளிற் பெறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்சொன்ன மந்திரங்களெல்லாம் சிவனுக்குத் திருமேனியாயிருக்க அந்த மந்திரங்களுக்குள் ஐந்து மந்திரத்தைத் திருமேனியென்ற தெப்படியென்றவனை நோக்கி மேலருளிச் செய்கிறார்

மந்திரமதனிற் *பஞ்ச மந்திரம் வடிவமாகத் தந்திரஞ் சொன்னவாறிங் கெனனெனிற் சாற்றக்கேணீ - மந்திரங்கள் பலவற்றி னுள்ளும் ஐந்து மந்திரமே சிவனுக்குத் திருமேனி யெ

ன்று சாத்திரங்கள் சொல்லுகிறபடி எப்படியென்று நீ சொல்லுகிறாயாகில்? நாமுனக்குச் சொல்லக் கேட்பாயாக — முந்திய தோற்றத்தாலும் - எல்லா மந்திரங்களுக்கு முன்னே இந்த ஐந்து மந்திரங்களுந் தோற்றப்பட்ட தானையாலும், — மந்திர மூலத்தாலும் - ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்னுமிவை ஐந்துமந்திரமும் மூலமாகையாலும், இஃதன்றியும், — அந்தமில்சத்தியாதிக்கு இசைதலுமாகுமன்றே - இதுவன்றி இந்தமந்திரங்களிருக்கையிலே முடிவில்லாத சத்திகளுக்குக் கர்த்தாவாகிய தம்பிரானுக்கு ஈசானாதி மந்திரங்களைந்தும் திருமேனியாகச் சாத்திரங்கள் சொல்லும்.

இதனால் சொல்லியது மந்திரங்களெல்லாவற்றிற்கு முள்ளும் ஈசானாதி ஐந்து மந்திரமும் முந்தத் தோன்றுகையினாலும், மந்திரங்களுக்கு மூலமாகையினாலும், பரமேஸ்வரனுக்கு இந்த ஐந்து மந்திரமே திருமேனியென்று சாத்திரஞ் சொன்னதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

தந்திரம் - ஆகமங்களில், — மந்திரமதனிற் பஞ்சமந்திரவடிவமாக - மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திரத்தை வடிவமாக, — சொன்னவாறிங்கெனனெனில் - சிறந்தெடுத்தோதியதென்னையெனில், — சாற்றக்கேணீ - கூறுவது நீ கேட்பாயாக. — முந்திய தோற்றத்தாலு மந்திரமூலத்தாலும் - ஏனைமந்திரங்கட்கெல்லாம் முற்படத் தோன்றி முற்படக்கொண்ட வடிவாதல் பற்றியும், — அந்தமில் சத்தியாதிக்கு - அவற்றைச் செலுத்திநிற்கும் ஆதிசத்தியாகிய திரோதான சத்திக்கு, — இ

சைத்தலு மாகுமனறே - இசையச்செய்தல் வடிவென்பதாம்.

அருவமோ எனபதுமுக லிதுகாறுந திருமேனியி னியல்பு கூறு முகததான் அகாதிமூதத சிததுருவாதலைத் தெரிதுணர் த்திபவாறு.

☞ க-சூ, உ-அ-ம், முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙன மநதிரஙகளை யதிட்டித்த சத்தி, கிரு
ததிய கர்ததாககளிடத் ததிட்டததுநிற்
குமென றுணர்த்துகிருர்.

அயன்றனை யாதியாக வரனுரு வென்பதென்னை,
பயந்திடுஞ சத்தியாதி படைத்தலாற் படைப்புமூல,
முயன்றன ரிவரோயாகின் முனனவ னெனனைமுறறு,
நயந்திடு மவனிவர்கரு நண்ணுவ தொரோவொன்று
மே. (௬0)

(இ-ள்.) அயன்றனை யாதியாக வரனுருவென்பதெனனை — பிரமாமுதலிய கிருததியகர்த்தாககளைச் சிவனெனறு சொல்லுகிற தெப்படியெனனில்?

பயந்திடுஞ சத்தியாதி புதிதலால் — சிருட்டிமுதலிய கிருத்தியங்களைச் செய்யுஞ் சிவசத்தி பிரமாமுதலாயினு ரிடத்துப் பதிக தவர்களு முலகங்களெல்லாத்தையுஞ் சிருட்டியுந் திதியுஞ் சங்காரமு மவனுடைய

பிரோரகத்தி லிவர்களுந் தொழிலைச் செய்கையால், இவர்களையுஞ் சிவனென வெண்ணப்படும் ?

அஃதென்னபோலவெனனில்? ஆசாரிடனை யந்தச்சிவனது சத்தி யதிட்டித்துக் கிரியையை நடத்த, அவனைச் சிவனென் றே கருதுமாறுபோ லெனவறிக

படைப்புமுத லயனறன ரிவ ரோயாகின முன னவ னென்னை முற்று நயந்தி டு மவனிவர்க்கு நண்ணுவ தொ ரோ வொன்று மே

சிருட்டிமுதலிய கிருத்தியங்களை யிவர்கள் செய்வார்களாயின பின்னைக் கர்த்தா வேணுமென்று சருத வேண்டுவ தில்லையென்று நீ சொல்லில்

பஞ்சகிருத்தியங்களையு மந்தக் கர்த்தாவே செய்தற்குரித்தாதலால், அந்தக்கர்த்தாவே பிரமன மால் உருத்திரன ஈசுரன் சதாசிவனென்னு மிவர்களுக் கொவ்வொரு கிருத்தியங்களைப் பிரித்துக்கொடுக்க வந்தந்தக் கிருத்தியங்களையே யவர்கள் செய்தற்குரித்து எ-று.

ஏகாரந் தேற்றம்.

இதற்கு வாயவ்யசங்கிதை பெனவறிக. (௬௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சர்வக்ருத்யத்திற்கும் சிவனே கர்த்தாவென்ப துணர்த்துகின்றது.

அயனறனையாதியாக வரனுருவென்பதென்னை - சிவனுடைய விக்ரஹங்கள பரம்மாவே யாதியாகச்சொல்ல, நீர் சதாசிவத்தை யாதியாகச் சொனன தென்னையென்னில்,— பயந்திடுஞ்

சத்தியாதி பதிதலாற்படைப்புமூலம் - ச்ருஷ்டியாதி க்ருத்தியத்திற்கு ஆதியாகிய பரமேஸ்வரனுடைய சத்தி பொருந்துதலால் ஐந்துபேரும் ஐந்து க்ருத்யம் பண்ணுவார்கள், ஸ்ருஷ்டியை முதலாக வெண்ணுகையினாலே தொழின் முதன்மையினாலே ப்ரம்ஹாவை முதலாக வெண்ணப்பட்டது,—முயன்றரனரி வரோயாகின முன்னவனென்னை - ஐந்துபேருமைந்து தொழிலையுஞ் செய்யில இவைவர்க்கு முன்னவனாகி லயாவஸ்திதனாகி ஹரனென்னு நாம முடையவர் செய்கதெனனெனில்,—முற்று நயந்திடுமவன் - பரிக்கிரஹ சத்தியாகிய சுத்தமாயையை காரியோன்முகமாக க்ஷோபம்பண்ணியும், ப்ரளயத்திலே ஆன்மாக்களுடைய கர்மங்கள் சம்ஹாரரூபமாக மாயையிலேயிருந்ததனைப் பலோன்முகமாக்கியும், திரோதானம் பண்ணு யோக்யனைத் திரோதானம்பண்ணியும், விஞ்ஞானகலரில் அதிபக்வாசக்குச சசிதானந்த தாவப சாக்ஷாத்காரத்தைத் தரிசிப்பித்தும், இவ்வாறு பஞ்ச க்ருத்யங்களும் ஏகதேவராகவேணுமவ்வாறு திருவுள்ளத்து நோக்கியிருப்பர் இங்ஙனம் சூக்ஷமமாகிய க்ருத்தியங்களைச் செய்து ஸ்தூல க்ருத்தியங்களுக்கு,—இவர்க்கு நண்ணுவதோரோவொன்றுமே - சதாசிவர் மஹேஸ்வரர் ருத்ரர் விஷ்ணு ப்ரம்ஹா என்னும் பஞ்சமூர்த்திகளுக்கும் அநுக்கிரஹ திரோதான ஸம்ஹார ஸ்திதி ஸ்ருஷ்டியென்னு மைந்து க்ருத்தியங்களு மோவ்வொரு கர்த்தாவுக் கோவ்வொரு க்ருத்தியம் ஸ்வதந்த்ரமாகவும், நின்ற நாலு க்ருத்தியமும் அநுஷங்கிகமாகவும்பரமசிவனது சக்தியாலே பொருந்துமென்றிதன்பொருள்.

ததுக்தம் ம்ருகேந்த்ரே — [illegible]

[illegible]

நுவாசயநு கதி-ரு கஉ-ா ।ஶாயாமுத்தி-ரத்தி யொம ரு ஈஃ
ஶுக-வ-ரநுவமுரு நுஷவ-ரம்யஷ ருமாவஷ-ஜாதஜி திதி.

இந்த விருத்தத்தில் ப்ரம்ஹாதி காரணேஸ்வரரிடத்திலே சிவனுடைய சத்தி பதிந்துநின்று கருத்யங்களைப் பண்ண வேணுமென்றதற்கு, சத்திகளநேகமாகில் சத்திமானு மநேகராகவேணுமாகில் அநேகேஸ்வரத்வம் வருமென்று, மேல் விருத்தத்திலே சங்கைபண்ணி சத்தியொன்றேயென்பது முதலான உத்தரங் கூறுகின்றது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பிரமாதி சாஞ்சன நிரஞ்சனனு மந்திரங்களை நிரஞ்சன சாம்பவ மந்திரரூபங்களாகச் செப்புவதேதென்று சங்கிக்க வுத்தர மூலாகின்றார்

அயனாதியாதிபாக வரனுரு வென்பதென்னை - விதிமுதற் பஞ்சகாரணமூர்த்தி வடிவன சிவனென்று சிவாகமஞ் செப்புவதேதெனின்?— பயந்திடுஞ் சத்தியாதி பதிதலால்-சகனி ஆரணி ரோதயித்திரி என்கின்ற சிவசத்திகளதிஷ்டித்து, அவர்களைக்கொண்டு பஞ்சகிர்த்தியம் பண்ணுவித்தலாலே,— படைப்புமுதல முயன்றன ரிவரோயாயின் முன்னவனென்னை-(எனில்) - சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியம்பண்ணுவ திவராகின் சிவனேதுக்கு, கற்பனை வுரவ தோஷம்வருமாதலால் வேண்டுவதன்றென்று நீ சொல்லில்? அப்படிச் சொல்லவேண்டாம்.— முற்று நயந்திடுமவன - சாம்பசதாசிவன் சுத்தமாயா கிர்த்தியமஞ்சும் சாக்ஷாத்தானும்,அசுத்தமாயை ப்ராகிருதி கிர்த்தியமஞ்சும் அநந்த ஸ்ரீகண்டாதித் துவாரத்தினாலேயும் ப

ஸ்ணுவன்.—இவர்க்கு நண்ணுவது - இவ்வணு சதாசிவ னன ந்தேசுரன ருத்திரன விஷ்ணு பிரமா இவர்களுக்குப் பொருந் துவதாகிய கருத்தியம்,—ஒரோவொன ருமே - ஒவவொனறு தானே.

அவர்க்குள், அணுசதாசிவனுக்கு அனுக்கிரக கிருத்தியமொ ன்றுமே, ஈசுரனெனனு மநந்தேசுரனுககு சுத்தமாயையிற றி ரோதான கருத்தியம நடவாதிருந்தாலும அசுத்த மாயா கிரு த்தியம் அஞ்சும நடந்தாலும் திரோதான கிருத்தியம பிரதான ம், உருத்திர னெனனுஞ் சீகண்டாககுப் பரகிருதிக்குமேற் ச ஙகாரகிருத்தியம் நடவாதிருந்தாலும ப்ரகிருதி கிருத்திய மை ந்தும் நடந்தாலும் சங்கார கிருத்தியம ப்ரதானம், குணநில ய விஷ்ணுவுககும் பிரமாண்ட நிலய விஷ்ணுவுககும பரகிருதி க்கு மேல் திதிகருத்தியம் நடவாதிருந்தாலும பரகிருதிக்குட் டேசரீர போககியபபொருட டிதிகிருத்தியம் ப்ரதானம், குண நிலய பிரமாவுக்கும் ப்ரமாண்ட நிலய ப்ரமாவுககும் பரகிரு திககுமேல சிருஷ்டி கிருத்தியம் நடவாதிருந்தாலும ப்ரகிரு திககுட் டேசரீர போக்கியப பொருட்சிருட்டி கிருத்தியம் ப் ரதானம்; ஆதலால், ஒரோ வொனறொனற தெனவறிக.

சத்தி மூன்றுகில், பஞ்சகிர்த்திய மெப்படி பண்ணும்? எப் படிபணணுவிககும்? சத்தியநதானே! ஜநநிககுச் சிருட்டிகிருத் தியமொனறுமே, ஆரணிககுச் சங்கார கிருத்தியமும் அநுக்கிர ஹக்ருத்தியமும,ரோதயித்திரிக்குத் திதிகிருத்தியமும் திரோபா வ கிருத்தியமும்,என்பதனுல் விரோதமனறு. ஆரணி ரோதயித் திரி ஜநநி மூனறும் சத்திசரீர கற்பனையினுலே சிவனுக்குச் சூ க்குமதேகம்; ஈசானி பூரணி ஆர்த்தி வாமை மூர்த்தியெனனும் பஞ்சசத்தியும் அநுக்கிரகமுத லஞ்சு கிர்த்தியத்தையும் அடை

விற் பண்ணுகின்ற சத்திசரீர கற்பனையினாலே சிவனுக்குத் தூலசரீரம் என்பதறிக.

இருதயாதி யாறுமந்திரமும் சரீரகற்பனைக் குள்ளதன்று, சரீரமும் சரீரியும் சம்பந்தமான விடத்துப் பிரபாவ ஸ்வரூபமா யிருக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இங்ஙனம் 'மண்ணினிற்கடாதி' என்பது முதல் 'மந்திரம் தனில்' என்பது ஈறாகிய முப்பத்தொரு செய்யுளானும், முதற் செய்யுளின் 'ஈறுமாகி மருவிமேலாகி முதற் சித்துரு மன்னினின்றே' என்ற இரண்டாங் கூற்றை, அவ்வவ் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி; இனி 'தானமுதல்' என்ற மூன்றாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்துகின்றார்.

அயனுருவம் அரியுருவ முதலியவற்றையுங், அரனுருவோ டொத்த உருவாக வைத்து, வேதாகமங்களிற் றத்தமெல்லையுளவும் அத்துவநியாசம் மந்திரநியாசம் முதலாயின விதித்தலின்; சங்காரக் கடவுளோடொப்ப அவரும் முதல்வராவார் செல்வர்போலுமென மலையற்க; படைப்பாதித்தொழில் செய்யுஞ் சணிமுதலிய சிவசத்திகள் ஒரோவொன்று அவர்மாட்டுப் பதிந்து நின்று செலுத்துதலான், அவ்வியைபுபற்றி வேதாகமங்களின் அவ்வாறு உபசரித் தோதப்பட்டன வென்பதாம்.

அற்றேல் ஒருதொழிற் கிருவராதல் எற்றுக்கென்பாரை நோக்கி, அமைச்சர் முதலாயினோர்க்கு அரசனையின்றியமையாமைபோல, அயனரிமுதலாயினோர்க்கு அரனருளையின்றி யமையாமை தருக்கமுகத்தான் விளக்குவார், படைப்புமுதல முயன்றனரி

வரேயாயின் முன்னவனென்னை, என்றும். அரசனுக்கு அமைச்சர்முதலாயினாற்போல அரனுக்கு அயனரி முதலாயினாரும் வேண்டப்படுவரென்பது ஏதமுகத்தான் விளக்குவார், முற்றுக யாகிடு மவனியாகக் கண்ணுவதொரோவொன்றுமே என்றுங் கூறினார்.

உவமை வருஞ்செய்யுளிற் பெறப்படும்

ஐ அழகு. அஃதாகுபெயரான அழகுடை யுருவத்தின் மேனின்றது. இரண்டனுருபாக வைத்துரைப்பார், முடிகவென்னுஞ் சொல்லொடு இயைபின்மை நோக்கிலர்.

ஆக வரனுருவென்னு முவமைத்தொகை பையரவல்குல் போனின்றது.

ஆகம் உடம்பு.

பயத்தல் படைத்தல்.

படைப்பு மூலம படைப்பாதியென்க

பயந்திடுஞ் சத்தியாதி பதிகலை பிரிதலைவைத்துக் கூறுகின்றமையின, இவரேயென்னு மேகாரம பிரிநிலைக்கண் வந்தது.

உரைத்தவித தொழில்களென்னுஞ் செய்யுள, பௌராணிகரை நோக்கி இயைபின்மை மாத்திர நீக்கி ‘ஈறுமாகி மறுவிடும்’ என்றதனை வலியுறுத்தியது

இஃது அநேகேசுரவாதிகளை நோக்கிப் பிறிதினியைபு நீக்கி ‘தானமுதல’ என்றதனை வலியுறுத்தியது.

இவை யிரண்டற்குந் தம்முள் வேற்றுமை.

அற்றேல் அநேகேசுரவாதம் பரிகரித்தற்பொருட்டுப் பயந்திடுஞ் சத்தியாதியெனச் சத்திக்குப் பன்மை கூறவே, சத்திமா னொருவனுதல் செல்லாமையின், இது தேனுக்கஞ்சிப் பழ

ந்தள்வாயின் விழுந்தா லொப்ப, மறித்தும் அநேகேசுரவாதமா ய் முடியும்போலுமெனின்? அவவாசங்கை நீக்குதற்கன்றே வ ருஞ் செய்யு ளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்சொன்ன ஐந்து மந்திரமுமே பரமேஸ்வரனுக்குத் திருமேனியென்று சொல்லில்? பிரம்மா முதலாகப் பரமேஸ்வர னுடைய திருமேனி யென்றது எப்படி யென்றவனை நோக்கி மேல் மறுத் தருளிச் செய்கிறார்.

அயனற்னையாதியாக வரனுருவென்பதென்னை - பிரம்மா முதலாகப் பரமேஸ்வரனுடைய திருமேனியென்று சொல்லுகி றது எப்படியெனனில்?— பயந்திடுஞ்சத்தியாதி பதிதலால் - விசுவத்தையெல்லா முண்டாக்குகிற கிரியாசத்தி முதலான சத் திகள் பொருந்துகையாலே,—படைப்புமுல முயன்றனரிவரோ - சிருஷ்டி முதலாகிய கிருத்தியங்களை இவர்களே நடத்துவர்க ள,—ஆயின் முன்னவனென்னை - இவர்களே நடத்துவார்களா யின் உம்முடைய கர்த்தா வேதுக்கென்று நீசொல்லில்,—முற்று ம்நயந்திடுமவனிவர்கள் நண்ணுவதொரோவொன்றுமே-சிருஷ் டி திதி சங்காரமென்கிற மூன்று தொழிலும் பரமேஸ்வரனே யுடையவன். இவையிற்றிலே ஒவ்வொருதொழில்களையுந்தப் பர மேஸ்வரன் கொடுக்க, அந்த வதிகாரத்தினாலே பிரம்ம விட்டு ணுக்கள் சிருஷ்டியுந் திதியுஞ் செய்யா நிற்பர்கள்.

இதனாற் சொல்லியது, பிரம்மாவை சிவனுடைய திருமே னியாக முந்தச் சொல்லவேண்டினது, சிவன் பஞ்சகிருத்தியஞ் செய்யுமிடத்துச் சிருஷ்டி முத்துகையினாலே அவன் சிருஷ்டிகர்

த்தா வாகையினுலென்றும், பிரம்மாவுக்கும் விட்டுணுவுக்குஞ் சிருஷ்டியுந் திதியுஞ் சிவனுடைய சத்தி கொடுக்கச் செய்வாராக ளென்றும், சிவன் எல்லாக கிருத்தியங்களையுந் தானே செய்வனென்னு முறைமையு மறிவித்தது.

'குறித்த தொன்று' என்ற திருவிருத்தத்தில் 'நிறுத்தினு நிலைநதமேனி நின்மல னருளினுலே' என்ற பதத்துக்கு வியாக்யானம் இவ்வளவும் வந்து முடிந்தது

குறித்ததொன்றென்ற திருவிருத்த முதல் அயன்றனை பெற்ற திருவிருத்த முடிவாக பதினுறு திருவிருத்தமும் பாஞ்சராத்திரி சிருஷ்டி திதி சங்கார மூன்றையுஞ் செய்கிறவன சங்கார காத்தாவல்ல, திதி கர்த்தாவே யென்று அவன சொன்னதற்குப் பிரமாணம். பரபட்சம அவன மதம. "உந்தியிலயனை யீன்று மவனைக்கொண்டுலகுண்டாக்கி, யந்தநல்லுலகழிக்கவரனையுமாக்குவித்துத், தந்துணைசகத்தினுக்குத் திதிகாத்தாதானேயாகி, வந்திடுந்தோற்றமீறு நிலைமையும்பண்ணுமாயன" என்றும், மறுப்பு. "அயனானைப்பயந்தானென்று மரியயனசிரஞ்சேதிப்பப, பயந்திடானறலோருணும படைத்திடானசிரத்தைக்கிள்ளுஞ், சயந்தருமானைத்தந்தா னயனென்னைகைதப்பேயனன்று, தியங்கிடாதுணராயெல்லாஞ் சிவன்செயலென்றுநேர்ந்தே" என்றும், "அழிப்பரியேவலென்று மரியனையழிக்குமன்றங், கழிப்பதுதவிரமாட்டா னங்கமுமழித்தேபூண்டான், அழிப்பரியேவலென்றங் கறைந்ததுமழிந்ததன்று, வழித்திடுமானேயாக்க நோக்கமுமாக்குவானே." எனனுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - மத - உ, மறு - ரு - அ.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

இங்ஙனம் 'மண்ணினிற் கடாதி' என்பது முதல் 'மந்திரம தனில்' என்பதீறாகிய முப்பத்தொரு செய்யுளானும் முதற்செய்யுளின் 'ஈறுமாகிமருவிடு மநாதிமுதற் சித்துருமன்னிநின்றே' என்ற இரண்டாங் கூற்றை அவ்வவர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனி 'தானமுதல்' என்ற மூன்றாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்துகின்றார்.

அயன்றனையாதி-அயனுருவ மரியுருவ முதலியவற்றையும்,—ஆக அரனுருவென்பதென்னை - அரனுருவோடொத்த வுருவாக வைத்து வேதாகமங்களிற் றத்த மெல்லையளவு மத்துவநியாச, மந்திரநியாச முதலியன விதித்தலிற் சங்காரக்கடவுளோடொப்ப, அவரு முதல்வனாவான் செல்வர்போலுமென மலையற்க,—பரன்றிரு சத்திபாதி - படைப்பாதித் தொழில் செய்யும் சனனிமுதலிய சிவசத்திகள்,—பதித்தலால் - ஒரோவொன்று அவ்வவர்மாட்டுப் பதிந்துநின்று செலுத்துதலான் அவ்வியைபுபற்றி வேதாகமங்களி னவ்வாறு உபசரிக்கப்பட்டன.—படைப்புமுலமிவரோ முயன்றனராயின் - அற்றேல், படைப்பாதித்தொழில்களை அயனரிமுதலாயினோர் முதல்வனருளின்றியுந் தாந்தாநினைந்தவாறே செய்பவரெனின்,—முன்னவனென்னை - முதல்வனெற்றிற்கு?— முற்றுநயந்திடுமவன் - ஐந்தொழிலுஞ் செய்யுமுதல்வன்,—இவர்க்கு நண்ணுவதொரோ வொன்றுமே - இவர்கட்கு ஒவ்வொரு தொழிலியற்றச் செய்தல், அரசனுக்கு அமைச்சர் முதலாயினோற்போல வேண்டப்படுமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இவர்களை யதிட்டிகளுஞ் சத்தி யொன்றோ பலவோ
வென்ன, அதற் குத்தரமிட்
டுணர்த்துகின்றார்.

சத்திதான் பலவோவென்னிற் றானொன்றே ய
நேகமாக, வைத்திடுங் காரியத்தான் மந்திரி யாதிகளெ
ல்லா, முய்த்திடு மொருவனசத்தி போலர னுடைய
தாகிப், புத்திமுத் திகளையெல்லாம் புரிந்தவ னிணைந
தவாறும். (சுக)

(இ - ள்.) சத்தி தான பல வோவென னில் — அவர்களிடத்திற் பதிந்த சத்தி யொன்றோ பலவோ வென்னில்?

தானொன்றே — அந்தச்சத்தி சிவனிடத்தில் விட்டு நீங்காமலக்கினிக் குட்டணம்போலச் சமவேதமாயிருக்கிற சத்தி யொன்றுதானே!

அநேக மாக வைத்திடுங் காரியத்தான — சிவசத்தி யொன்றாயிருக்கவும் காரியப்பத்தா லவனது கிருபையினாலே கிரியாசத்தி யொன்றுதானே மூன்றாகிய வாமை சேட்டை ரவுத்திரியெனப் பிரிந்து பெயரைப் பெறும்.

ஒன்றுதானே பலவாகக் காரியப்படுவ தெங்ஙனமெனில்?

மந்திரி யாதிக்கெல்லா முய்த்திடு மொருவன்சத்தி போல் — இராசாவினதாகிய சத்தி யொன்றாயிருந்து மந்திரி முதலாயினோரிடத்துப் பலவாகச் சகத்திற் காரியப்படு மதுபோல,

அரனுடைய வாமைமுதலிய மூன்றுசத்தியும் பிரமர்
தாகிப்புத்தி மு முதலாயினோரை யதிட்டிப்பித்துத்தனவழித்
த்திகளை யெல் தாய்நின் றான்மாக்கட்குப் போகமோட்ச
லாம் புரிந்தவ ங்களை யெல்லா மவரவர்செய்த விருவினையி
ளினைந்தவாறும் ன் பலத்துக்கீடாகக் கொடாநிற்பன எ-று

ஏகாரந் தேற்றம்.

இதற்கு சுவாயம்புவத்து மிருகேந்திரத்துங் காண்க (௯௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———○———

சத்திதானபலவோவெனனில் - ப்ரம்ஹாதி காரணேஸ்வர ரிடத்திலே பதிந்து கருத்தியங்களைப் பண்ணும் சத்தியென்கை யால சத்தி யநேகமாகவேணும, சத்தி யநேகமாகில், சத்திமா னுமநேகமாய் அநேகேஸ்வரத்வம வரும அல்லது சக்தியொருவ னோ! சத்தியநேகையெனனில? அநயோந்ய விருத்தாத திரயாச த்திகள ஒருவனுக்கு சமவேதமாகிறபொழுது விகாரித்வம் வரு ம எனனில? அப்படி வாராதெனறும உத்தரம.—மந்திரியாதிக ளெல்லா முய்த்திடுமொருவன சத்திபோ லரனுடையதாகி சத் திதானொன்றே காரியத்தா லநேகமாய் வைத்திடும - ராஜாவி னுடைய ஆஞ்ஞாசத்தியானது மந்த்ரி சேனாபதி கிராமபாலகன் முதலான பேர்களிடத்திலே யிருந்து தனித்தனி தொழில்க ளைப் பண்ணிவைக்கிறாப்போல, ஹரனுடையதாகிய சத்தி யொ ன்றே கருத்திய பேதங்களைச் செய்யுமென்று சொல்லப்படும அப்படிச சொல்லப்படுவதும்,— புத்திமுத்திகளையெல்லாம பு ரிந்தவனினைந்த வாறும் - போகமோக்ஷத்தைக கொடுக்கப்பட் ட ஹரனுடைய சத்தியானது அந்த ஹரனினைவின பேதத்தி

னாலே க்ருத்ய பேதத்தால் பேதமாகத் தோன்றும் என்றதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இப்படிச் சத்தி யநேகமாகிற் சத்திமானு மநேகமாமெனனுஞ் சங்கைக் குத்தர முரைக்கின்றார்.

(ஞானக் கிரியேச்சா சத்தி மூன்றினுட் கிரியா சத்தி ஈசானியாதி யைந்து, ஆரணியாதி மூன்று, ஆகச் சத்தி யெட்டாயிருக்கு மென்றதனால்,) சத்திதான் பலவோ வெனின் அதன்றே - ஒருசத்திதானே,—காரியத்தால்-வியாபார பேதத்தினால்,—அநேகமாக வைத்திடும் - அநந்தமாகச் சொல்லப்படும்,—மந்திரியாதிகளெல்லாம் - மந்திரி சேனாபதி ஊர்க்காவலன் முதலோரிடத்தில்,—உய்த்திடு மொருவன் சத்திபோல் - ஒன்றாயிருந்து செலுத்து மிராசாவினது ஆஞ்ஞாசத்தி யொப்ப,—அரனுடையதாகி - சிவசம்பந்தியாகி,—அவனினைந்தவாறு - அந்தச் சிவன் செலுத்தினபடி,—புத்திமுத்திகளெல்லாம் புரிந்து நினைந்தவாறும் - போகமோட்சங்களைக் கொடுத்திருப்பதாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அரசன் சத்தியொன்றே யமைச்சர் படைத்தலைவர் பாடிகாவலர் முதலாயினோர் மாட்டு நின்று செய்யுங் காரியவேறுபாட்டாற் பலவேறு வகைப்பட்டாற்போல, சிவசத்தியொன்றே

அவ்வவர் மாட்டு நின்றுசெய்யுங் காரியவேறுபாட்டாற் சனனி முதலியவாய்ப் பலவேறுவகைப்படும் சிவசத்தி யொன்றே யெனபதும், அதுவே கடவுளர்மாட்டு நின்று நடாத்துமெனபதும், அமைச்சா முதலாயினர் எவையெவை செய்யினும் அரசனினைத்தவாறன்றி யாகாமைபோல, போகம் வீடுபேறுகளெல்லாம் அரனினைத்தவாறனறி யாகாமைபற்றி அறியப்படுமெனபதாம்.

தானொன்றே யரனுடையதாகிக் காரியத்தால் அநேகமாக வைத்திடு மெனவிளையும்.

அரனினைத்த வாறனறி யாகாமை, தக்கனவேள்வி மார்க்கண்டிவாழநாள் ஆலாலர் தோற்றரவு முதலியவற்றால் இனிது விளங்கக் கிடத்தலின், வருத்துக கூறுராயினர்.

அற்றேல் ஈண்டுக் கூறியவாறால் சனனிமுதலிய பேதமெல்லாஞ் சிவசத்திக்குத் தடத்தமெனறுயவழிச சொரூபமெனனையோவெனின ? அஃதுணர்த்துதற் கனறே வருஞ் செய்யுளெழுந்ததெனபது.

நிரம்பவழகியருளை வருமாறு.

—ɔ—

முன்சொன்ன சத்தி ஒன்றாயிருக்குமோ பலவாயிருக்குமோ எனற மாணக்கனை நோக்கி அருளிச்செய்கிறார்.

சத்திதான் பலவோவென்னில் - சிவனுடைய சத்தியானது இப்படிப் பலபேதமாயிருக்குமோவெனறு நீ சொல்லில்,— தானொனறே யநேகமாக வைத்திடுங் காரியத்தால் - பராசத்தியொன்றுமே எப்பொழுது முள்ளது. இப்படித் தானொன்றாயிருநதும் பெருந்தொழிலும் பலவானது பிரபஞ்ச காரியங்களு

க்கீடாக. அதென்போலவென்னில்?—மந்திரியாதிக்கெல்லாமுய்த்திடு மொருவன் சத்திபோல - காரியப்பொழுதாலாகிய இராசசியத்திலுள்ள வதிகாரங்களுக்கு மற் றுண்டானவர்களுக்கும் இராசாவினுடைய ஆஞ்ஞாசத்தியானது நின்று முறைமைகளிலே நடத்துகிறுப்போல;—அரனுடையதாகி - அந்தப் பராசத்தியும் பரமசிவனுக்குள்ளதாகி,—புத்திமுத்திகளையெல்லாம் புரிந்து - சருவானமாக்களுக்கும் போக மோட்சங்களையும் கொடுத்து,—அவனினைத்தவாறும - அந்தப் பரமசிவன திருவுள்ளத்தடைத்ததுயாதொன்று, தானுமதுவாய் நின்று பஞ்சகிருத்தியங்களைச செய்யும்.

இதனுற் சொல்லியது பரமேஸ்வரனுடைய சத்திதானே பெருநதொழிலும் பலவாய்த தாஞென்றுமிருக்குமெனறும், அவனுடைய திருவுள்ளப்படியே ஆனமாககளுக்குப் போகமோட்சங்களைக் கொடுக்குமெனனு முறைமையும் அறிவிததது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சத்திதான் பலவோவென்னில் - சததிக ளநேகமோவென்றிடின,—ஒருவன்சததி - அரன் சததியொனறே,— மநதிரயாதிக்கெல்லாம் உயத்திடும்போல - அமைச்சர்படைத்தலைவர் பாடிகாவலர் முதலாயினூர்மாட்டு நினறு செய்யுங் காரியவேறுபாட்டாற் பலவேறு வகைப்பட்டாற்போல,—தாஞெனறே-சிவசத்தியொனறே,—அரனுடையதாகிக் காரியததாலநேகமாகவைத்திடும் - அவரவர்மாட்டு நின்று செய்யுங் காரியவேறுபாட்டால் சனனிமுதலியவாய்ப் பலவேறுவகைப்பட்டும் சிவசத்தியொன்றேயென்பது மதுவே கடவுளர் மாட்டுநின்று நடாத்து

மென்பதும்,—புத்திமுத்திகளை யெல்லாம் புரிந்தவனினைந்தவாறும - அமைச்சர் முதலாயினார் எவை எவைசெய்யினும அரசனினைந்த வாறன்றி யாகாமைபோல போகம் வீடுபேறுகளெல்லாம அரனினைந்த வாறன்றி யாகாமைபற்றி அறியப்படும்.

அரனினைந்தவாறன்றி யாகாமை தக்கனவேள்வி மார்க்கண்டு வாழநாள ஆலாலா தோற்றரவு முதலியவற்றா னினிதுவிளங்கக்கிடத்தலின விரித்துக்கூறாராயினார்.

மறைஞானதேசிகர் உரை.

மேற் சத்திரூப முணர்த்துகிறார்.

சத்திதன் வடிவேதென்னிற் றடையிலா ஞான
மாகு, முய்த்திடு மிச்சைசெய்தி யிவைஞானத் துள
வோவென்னி, லெத்திற ஞானமுள்ள தத்திற மிச்சை
செய்தி, வைத்திடு மறைபின்ஞான மருவிடுங் கிரி
யையெல்லாம். (௩௨)

(இ-ள்) சத்திதன் வடிவேதென்னின்	அந்தச் சத்தியினுடைய வடிவேதென்று கேட்கிறாயாகில்?
தடையிலா ஞானமாகும்.	மலத்தினுன் மறைப்புண்டு பின்விளங்கினது போலன்றிப் பூரணமான ஞானமாயிருக்கும.
உய்த்திடு மிச்சை செய்தி யிவை ஞானத் துளவோ வென்னில	இப்படி யுண்டாய விச்சையுங் கிரியையு மந்தஞானசத்தியினக ணுண்டோவென்று கேட்கிறாயாகில்?

எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி — யாதோரிடத்திலே ஞானமுண்டாயவிடத்தி லிச்சையுங் கிரியையுமதோன்றிக் காரியப்படுங்காண,

வைத்திடும்

மறையின ஞானமருவிடுங்கிரியையெல்லாம். — மறைப்பில்லாத ஞானசத்தியினது சாமாத்தியத்தாலே இச்சையுங் கிரியையும் பொருந்தி காரியப்படுங்காண். எ-று

ஓகாரம் விஞ.

இதற்குச் சிந்தியாகமம் (௫௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேலந்தச் சத்திஸ்வரூப மேதென்பதற்கு உத்தரம்.

சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞானமாகும,—சத்தியினுடைய ஸ்வரூப மேதென்னில்? ஜீவானமஞானம்போலத் தடுக்கப்படாமல் எக்காலத்தும் எத்தேசத்தும ஸ்வப்பிரகாசையாயிருக்கும்,—உய்த்திடு மிச்சைசெய்தி யிவைஞானத்தாலேவோவென்னில்-பொருந்தப்பட்ட விச்சையானது குணம, சரியையானது வியாபாரம், இவைகள் ஞானத்திற்குண்டோவென்னில்?—எத்திறஞானமுள்ள தத்திறமிச்சைசெய்தி வைத்தலால் - ஞானமெவ்வளவுண்டு அதன குணமான இச்சையுங் கிரியையு மவ்வள வுண்டென்று சாஸ்த்ரசித்த மாகையினாலே,—மறைப்பில்ஞானால் மருவிடுங் கிரியையெல்லாம் - சத்தியானது அநிவாரித ஸ்வரூபை யாகையினாலே சர்வ கர்த்ருத்வ சாமார்த்தியத்தையும் தத்குணமான விச்சையையும் அடையாததாமாகில்; ஞானதியிச்சாத் திரியப்பிரயகதா என்னும் கிரம ஞாயத்தினு

லே அறிந்ததை யிச்சிக்கவேணும், இச்சித்ததைப் பண்ணவேணு ம் ஆகையால் ஞானேச்சாதகிரியை யென்றுமகிரமஞ் சொல்ல வேணும். இதனறியும,

ஜ்ஞாநேச்சாக்ரியா ஸ்ஸாநவிஷயகஸ்ம ஸ்ஸாநாஷ்டாயகஸ்ஸும்பவமிதி நயாயாத்.

மூன்று பின்ன ஸ்வரூபமுமாய் ஏகாச்ரயமுமா யிருக்கவே ணும. ஆகையால இச்சையாதியாக மூன்று மொன்றே யென று சொல்லுகிறது விரோதமெனனில்? சத்யம [சத்யமென்றது அங்கீகாரம்] ஒன்றை யறிந்து அதையிச்சித்து அதிலேப் ரவர்த்திக்கிறது ஜீவானமாக்களுக்கே! சிவனுக் கப்படியல்ல வென்பது மேற்கூறுகின்றது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஞானக்கிரியேச்சா ரூபி சக்தியென்றீர்! அதுவிருத்தம் தட த்தமு முச்சொரூபமாயிராது. இருக்குமெனனில்? சத்தியெ னப தெடுபட்டுப் போமென்று மனசிலெண்ணிச் சங்கைபண் ணி, உத்தர முரைக்கின்றார்.

சத்திதன வடிவேதென்னில்- சத்தியினது ரூபமேதென்று கேட்கிறாயானால்?—தடையிலா ஞானமாகும் - மறைப்பில்லாத வறிதற்றொழிலைப் பண்ணுமறிவாகும்.— உய்த்திடு மிச்சைசெய் தி யிவைஞானத்துளவோவெனனில் - பண்ணுதற்றொழிலாகும் சங்கற்ப முத்தியோக மிவைகள் வேற்றுத தொழிலாதலால் ஞானசத்தியி லுண்டோவென்று நீ கேட்கில்?— எத்திறஞான முள்ளது - இது காரண மிதுகரண மிதுகாரிய மிதுபிரயோசன

மென் றறிதற்ரெழிலால் யாதொரு பிரகாரம் ஞானசத்தித் தொழிலாகிய ஞானமிருந்தது,—அத்திறம்-அந்தப்பிரகாரம்,—இச்சை - இஃதின்னதாகக் கடவதென மிச்சாசத்தித் தொழிலாகி யுத்தியோகத்திற் பினருகி வருஞ சங்கற்ப ஞான விசேஷமாகவும,—செய்தி - கிரியை,—இதைப்பண்ணு நிற்பேனென்று கிரியாசத்தித் தொழிலாகிய சங்கற்பத்தினமுனருக வரும உத்தியோக ஞானவிசேஷமாகவும,—வைததலால்-சிவாகமம் சொல்லி நிச்சயித்ததனுல்,—மறைப்பினனுல் - தடையற்ற ஞான விசேஷசத்தி சங்கற்பத்தால்,— எல்லாம்-காரியசடபதார்த்த முற்றும்,—கிரியை மருவிடும்-உற்பத்தி திதி ருச சலனத் தொழிலோடு பொருநதும்.

சலனததொழிலுக் கேதுவாயிருக்கும் ஞான விசேஷ நிச்சல நித்திய சத்திய சங்கற்பங் கிரியை யென்றுச் சொல்லப் படும.

சிவஞானயோகியருளா வருமாறு.

—o—

உயிர்கட்கு அநுக்கிரகமாத்திரங் குறித்துப் பொதுவகையானறிந்தும் அறிவித்து நிற்பதாகிய ஞானமொனறே சிவசத்தியின சொரூபம். அதுவே பராசத்தி யெனப்படும். அந்தஞானம் உயிர்கட்கு மலபாகம் வருதறபொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்புவகையான வியாபரிக்குங்கால், ஒருகூற்ருனே திரோதான சத்தியென நின்று, இச்சா ஞானக் கிரியையென முத்திறப்பட்டு வியாபரிக்கும். ஆகலான் இச்சைகிரியைகளும் ஞானத்தின் வேறனமையாற் காரியத்தால் அநேகமாகிய சனனிமுதலிய வியாபாரசத்திக ளெல்லாம்

முற்கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய ஞானமொன்றுமே உளவாவனவேயாமென்பதாம்.

தடை — தடுத்தல்; மறைப்பென்றதும் அது.

தடுத்தற்குச் செய்யப்படுபொருள் வருவித்துரைக்க.

தடையிலா ஞானமெனவே, தடைசெய்யு ஞானமுமுண்டென்பது போந்தமையின், அதுவே திரோதானசத்தி யெனப்படும்.

இதனாற் பஞ்சசத்திகளுங் கண்டுகொள்க.

ஞானத்துளவென்புழி, நீக்கப்பொருட்கண் வரும் இன்னுருபு விரித்துரைக்க.

உளவாதல் நின்று தோன்றுதன்மேற்று.

ஏனையபோலத் தோன்றினவல்லவென்பார், எத்திறஞானமுள்ள தத்திறமிச்சை செய்தியென்றார். ஞானத்தின் வியாபார விசேடங்களே அவையென்பதாம். நீடுபராசத்திநிகழ்ச்சசாஞான நிறைகிரியை கர என்றதூஉம் "கிரியையறிவிச்சைகளந் தத்தசத்தியே கோ-பெரியபரா சத்தியெனப் பேசாய்" என்றதூஉம் இக்கருத்தே நோக்கியெனக.

ஞானமென்பது அம்முச்செட்டுருபேற்று ஞானமென நின்றது. அம்முச்செடுதல் "பெற்றோன் றுயர்த்த பெருமானை" "கோணாகணையானை" என்றாற் போல்வனவற்றுள்ளுங் காண்க. அத்துச்சாரியை விகாரத்தாற் றொக்கதெனினுமாம்.

கிரியை வியாபாரம்.

இதனிற்போந்தபொருளென்னை யெனின்? அது வருஞ் செய்யுளிற் கூறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி முன் சொல்லப்பட்ட சத்திக்கு வடிவேதென்ற வினை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

சத்திதன்வடிவேதென்னிற் றடையிலாஞானமாகும் - அந்தப் பராசத்தியினுடைய திருமேனி யேதென்று சொல்லின் பரிபூரணமான ஞானமேயாயிருக்கும்.—உய்த்திடு மிச்சைசெய்தியிவைஞானத் துளவோவெனனில் - முன்னே பிரபஞ்சத்தை நடத்துமென்று சொல்லப்பட்ட இச்சாசத்தியும் கிரியாசத்தியும் இவையிரண்டும் ஞானசத்திக் குள்ளேயோ வெனனில்?—எத்திறஞானமுள்ள தத்திறமிச்சைசெய்திவைத்தலால்-எவ்வளவு ஞானசத்தியினது நிறையுண்டானது அவ்வளவும இச்சாசத்தியினது நிறைவுங் கிரியாசத்தியினது நிறைவும் உண்டென்று வேதாகமங்கள் சொல்லுகையால்,—மறைப்பில்ஞானால் மருவிடுங் கிரியையெல்லாம் - ஆன்மாவி னறிவுபோல ஆணவமலத்தால் மறைக்கப்படாத ஞானசத்தியினாலே கிரியாசத்திக்குள்ள தொழில்களெல்லாம் பொருந்திக் காரியப்படும்.

இதனாற் சொல்லியது பராசத்திக்கு வடிவு ஞானமென்றும், அந்த ஞானத்தினாலே இச்சாசத்தியும் கிரியாசத்தியும காரியப்படுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சத்திதன்வடிவேதென்னில் - சிவசத்தியின சொரூபம் யாதெனனில்,—தடையிலா ஞானமாகும்,—உயிர்கட் கறுக்கிற

கமாத்திரங்குறித்துப் பொதுவகையானறிந்து மறிவித்து நிற்பதாகிய ஞானமொன்றேயாம். அதுவே பராசத்தியெனப்படும். தடையிலாஞானம,—உய்த்திடும்- அந்தஞான முயிர்கட்கு மலபாகம வருதற்பொருட்டு ஐந்தொழில் செய்தலைக்குறித்துச் சிறப்புவகையான வியாபரிக்குங்கா லொருகூற்றனே திரோதானசத்தியெனநின்று இச்சாஞானக்கிரியையென முத்திறப்பட்டு வியாபரிக்கு மாகலான,—இச்சைசெய்தி யிவைஞானத்துளவோ வென்னில்-இச்சைகிரியையெனகிற இவைகள ஞானத்தினின்று தோன்றுவன வுளவோவெனின?—ஞானமெத்திற முள்ளது-ஞானமெவ்வா றுள்ளதோ,—அத்திறமிச்சை செய்திவைத்தலான-அவவாறே யிச்சைகிரியைகளு நடத்தலின, அவ்விரண்டு ஞானத்தின வியாபாரவிசேடங்களேயன்றி வேறன்மையான,—கிரியையெல்லாம் - காரியத்தா லநேகமாகிய சனனிமுதலிய வியாபாரசத்திகளெல்லாம்,—மறைப்பின ஞானமருவிடும்,—முற்கூறப்பட்ட பராசத்திருபமாகிய ஞானமொன்று ளவாவனவேயா மெனபதாம.

மறைஞானதேசிகர் உரை.

அம்மூன்றினது கிருத்திய முணர்த்துகிறுர்.

ஒன்றதா யிச்சாஞானக் கிரியையென் றெருமூன்
றுகி, நின்றிடுஞ் சத்திபிச்சை யுயிாககரு ணைசமாகு,
நன்றெலா ஞானசத்தி யானயந் தறிவாறுத, னன்றரு
ட் கிரியைதன்று லாக்குவ னகிலமெல்லாம். (சூ௩)

(இ-ள்) ஒன்றா சிவனிடத்தி லவிநாபாவமாயிருக்கிற சமதா யிச்சா வேதசத்தி முதற்கட் பராசத்தி யொன்று ஞானக் கி ய்,அதுதானே யிச்சாஞானக் கிரியையென்று

ரியையென் றொ மூவிதப்பட்டு நிற்கும். இவை யிற்றுக்குத்
ருமூனறாகி நின் தொழிலியாதெனனில்?
றிடுஞ சததி

இச்சை யுயிர்க் அவற்று ளிச்சையாவது சிவன் சர்வான்
கரு ணேசமாகு மாககளையு மோடசததை யடைவிககவே
ம் ணுமென றவர்களிடதது வைத்த கிருபை
யாகும்.

நன்றெலாஞா ஞானசத்தியாவது சிவனுன்மாக்கள் செ
னசததி யானய ய்த விருவினைப் பலஙக ளெல்லாத்தையு ம
ந் தறிவனுதன வர்கள புசிதறத் தொலைக்கையினபொருட்
டு விசாரிபபதாகிறபன.

அன்றருட் கிரி கிரியாசததியாவது அப்பொழுது காத
யைதன்னு லாக் தா தனது காருண்ணியமாகிய கிரியாசததி
குவ னகிலமெல் யாலே சகசிருட்டி முதலிய காரியங்களெ
லாம். ல்லாத்தையு நடததிடுவன எ-று.

இதற்குச் சுவாயம்புவதது மிரதகினத் திரயத்துங் காண்க. (௬௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

ஒன்றதாயிச்சாஞானக கிரியையென் றொருமூன்றாகி நின்றிடும் - பரமசிவனுடைய ஸ்வரூமாய் ஸ்வடரப் பிரகாசையான பராசத்தியொனறே யாயிருந்து, அதனுடைய வ்ருத்தி பேதத்தினாலே யிச்சாஞானக கிரியையென்று மூன்றாகத்தோன்றும்,—சததியிச்சை யுயிர்க்கருணையமாகும் - இச்சாசத்தி யான்மாக்களை யநுக்கிரகம் பண்ணவேணுமென்று இச்சித்த வவசரமாம்,—நன்றெலா ஞானசத்தியால் நயந்தறிவனுதன் - ஆன்மாக்

களைப் பண்ணின புண்ணியங்களையெல்லா மென்றதனாற் பாபங்களையு மந்தப் புண்ணியபாபாநுகுணமான தநுகரண புவனபோகங்களையு மித்தற்கிதுவென்று காத்தாவானவன் பகுத்தறிவது ஞானசத்தியால் — அன்றருட் கிரியைதனா லாக்குவனகிலமெல்லாம் - அநாதியே கருமபயினாலே முன்சொன்ன தநுகரணாதி பிரபஞ்சங்களை யுண்டாக்குவது கிரியாசத்தியாலே கிரியாசத்தியென்றது தன்னுடைய ஸ்பரிசமாத்திரத்திலே பிறந்தவிலே கிரியையுண்டாக்குகையினாலே கூறப்பட்டதன்றி சத்திஸ்வயம கிரியாவதியென்று சொன்னதல்ல ஆகையால் சத்தி யொன்றேயென்று இதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சத்தி யொன்றுதானே அறிதல் பண்ணுதல் இச்சித்தலென்னும் வியாபாரபேதத்தால் மூன்றென்றும், அவாந்தர வியாபாரபேதத்தால் அநந்தமென்றும் சொன்னீர்; தன்மபேதத்தாற் றன்மி பேதிக்கும், காரியபேதத்தாற் காரணம் பேதிக்கும் என்னும் நியமத்தால் சத்தி பேதிக்கும். அநந்தமாயிருக்கின்ற ஞானக்கிரியைகள் சத்திக்குச் சகசதன்மமாய் சகசகாரியமாய தீபசத்திக்குத் தாகப்பிரகாசம் போலிருத்தலால், ஞானாந்திபக் கிரியாநந்தியமுமில்லை, ஞானமென்றுங் கிரியையென்றும் இரண்டு தொழிலில்லை; ஆதலால் சத்தியொன்றென்னில் ஞானக்கிரியாநந்திய சாங்கரியம் பிரமாதிகளாலுந் தடுக்கப்படாததாய் வந்து சாருமென்று சொல்லச் சாற்றுகின்றார்.

ஒன்றதாயிச்சாஞானக் கிரியையென் றொருமூன்றாகி நின்றிடுஞ் சத்தி - ஞானங் கிரியை யிச்சையென்னுஞ் சத்தித்தொ

ழில்கள் பிரிப்பாய்ப் பேதமா யிருக்குமென்று நாம பேசவில்லை, அவை மத்தியத்திற்கு மநந்தஞானமநந்தக்கிரியை யநந்தவிச்சை யெனுமாநந்தியமும் பிரிந்துபின்னமாயிருக்கு மென்றுநாம்பேசவில்லை, தாகப்பிரகாசங்கள் போலப் பிரிப்பின்றிப் பேதமாயிருக்கும் பிரிப்பைக்குறித்த தபேதமாயிருக்கும், ஆகையால் அந்தத்தொழில்களுக்குக் காரணமாகுஞ் சத்தியேகமாய இச்சாசத்தியென்றும், ஞானசத்தியென்றும், கிரியாசத்தியென்றும், அநந்தசத்தியென்றும் பிரிப்பின்றி,மூன்றனந்த பேதமாயிராநிற்கும் சத்திமானாகிய சிவனும், ஏகனாய இச்சிதாவென்றும், நாதாவென்றுங், கர்த்தாவென்றும், அநந்தனென்றும் பிரிப்பின்றி மூன்றனந்த பேதமாயிருப்பன அநந்தசத்தி சத்திமான்கள் பண்ணுந் தொழில்களுக்குள்,—

இச்சை - நியாமிகை என்னுமிச்சாசத்தி பண்ணுந்தொழில் நாமபேசவில்லை,—

உயிர்க்கருணைசமாகும்-இதிப்படியாம், இதிப்படியாகாது, என்பதுமுதல் நியமித்தற் சிதசித்கிருபையாம்,—

நாதன் -சிவன்,—

நன்றெலாம்- கிருத்தியத்துக் கிணங்கும் பொருளெலாம் இதுகாரண மிதுகரண மிதுகாரியம் இது பிரயோசனமென்று,—

ஞானசத்தியால் - ஞானத்தொழிலைப்பண்ணும் ஞானசத்தியால்,—

நயந்தறிவன் - விரும்பிப்பார்ப்பன்.

கிரியாசத்தித் தொழில் கிரியையாதலால், இதை நான்பண்ணுநிற்கின்றேனென்றுத்யோகிப்பன்,—

அன்று அருட்கிரியை தன்னால் - கிரியாசத்தியினுத்தர

கோடியாயிருக்குஞ் சங்கற்பயித்திரியென்னு மிச்சாசத்தி இப்படியாகக் கடவதென்னுஞ் சங்கற்பத்தால்;—

அகிலமெல்லாம் - சகத்தனைத்தும்,—

ஆக்குவன - சிருட்டிப்பன.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பராசத்தியாவது, தடையிலா ஞானமெனப் பொதுமையாலொன்றாய், இச்சாஞானக்கிரியையென வியாபார பேதத்தான் மூன்றாய், அவையே மற்று மவ்வக்காரியபேதத்தாற் பலதிறப்படும். அம்மூன்றும் முறையே உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித்தற்கண்ணுளதாகிய கருணையும், அதற்குச் செய்யக் கடவதான உபாயங்களை யெல்லாம் அறியுமறிவும், அவற்றை யவ்வாறே சங்கற்பித்துச் செய்யுஞ் சங்கற்பமுமா மென்பதாம்.

“உள்ளிடதெல்லாம்” என்றார்போல நன்றெலாமென்பது ஒருமைப்பன்மை மயக்கம்.

நன்மை உபாயம்.

அன்று அறிந்தபோதே யென்க.

இவைநான்கு செய்யுளானும், அயன்றனையாதியாக வரனுருவென்றல் பற்றியும், சத்திபலவாதல் பற்றியும், தானொருவனே முதற்கடவுளென்றல் செல்லாதென்னும் அநேகேசுரவாதிமதத்தை ஆசங்கித்துப் பரிகரித்து; ‘தான்முதல்’ என்றது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

பராசத்தி யொன்று இச்சாஞானக் கிரியை யொன்றும் தன்னிற் பின்னமாயிருக்குமோ என்றவனை நோக்கி, மேலருளிச் செய்கிறார்.

ஒன்றதாய் - பராசத்தி யொன்றுமே யெப்பொழுதும் முள்ளதாய்த் தான் சகளீகரிக்குமிடத்து,—இச்சாஞானக் கிரியை யென வொருமூன்றாகி நின்றிடுஞ் சத்தி - இந்தப் பராசத்திதான் ஆன்மாக்களைப் பிரட்சிக்கை நிமித்தமாக இச்சாசத்தி யொன்றும் ஞானசத்தியொன்றும் கிரியாசத்தியொன்றும் மூன்று சுபாவத்தை யுடைத்தாயிருக்கும். அதெங்ஙனே யெனில்,—இச்சை யுயிர்க் கருணைசமாகும்-இச்சாசத்தியாலே ஆன்மாக்களுக் கநுக்கிரகம் பண்ணவேணுமென்கிற சினேகமேயாயிருக்கும்,—நன்றெலா ஞானசத்தியால் நபந்தறிவன் நாதன் - அந்தப் பரமேஸ்வரனானவன் ஆன்மாக்கள்செய்த கன்மங்களையெல்லாந் தனையுமுறைபிறழாமல் நன்றாக ஞானசத்தியினாலே விருப்பி யறியாநிற்பன்—அன்றருட்கிரியைதன்னாலாக்குவ னகிலமெல்லாம் - அநாதியே கருணாரூபமான கிரியாசத்தியாலே ஆன்மாக்களுக்குக் கன்மத்துக் கீடாகத் தேகாதிப்பிரபஞ்சத்தை யெல்லா முண்டாக்காநிற்பன்.

இதனாற் சொல்லியது பராசத்தி தானே இச்சாஞானக் கிரியையென்று மூன்றும். இச்சாசத்தியாலே சர்வான்மாக்களிடத்திலும் அநுக்கிரகத்தைச் செய்தும், ஞானசத்தியாலே ஆன்மாக்கள் செய்த கன்மங்களை யறிந்தும், கிரியாசத்தியாலே ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கீடாகத் தேகாதிப் பிரபஞ்சங்களை உண்டாக்கியும்; இப்படி இந்த மூன்று சத்தியும் சிவனுக்குக் கருவியாய் நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———0———

சத்தியொன்றதாய்-பராசத்தியாவது தடையிலா ஞானமென்ப பொதுமையா னொன்றாய்,—இச்சாஞானக்கிரியையென மூன்றாகிநின்றிடும் - இச்சாஞானக் கிரியையென வியாபார பேதத்தான மூன்றுகூறு மவையே மற்று மவ்வவ்வக் காரியபேதத்தான பலதிறப்படும்,—இச்சை யுயிர்க்க கருணையமாகும்-அம்மூன்றனு ளிச்சாசத்தியாவது உயிர்கட்கு மலத்தைநீக்கிச் சிவத்தையளித்தற்க ணுளதாகிய கருணையும்,—ஞானமெலா ஞானசத்தியால் நயந்தறிவன-ஞான சத்தியாவது அதற்குச் செய்யத்தக்கனவான வுபாயங்களையெல்லா நயப்பா னறியுமறிவும்,—ஆற்றுகிரியைதனானு லன றகிலமெல்லா நாதனாக்குவன - அருளின் வேறல்லாத சத்தியாவது அறிந்தபோதே யவற்றை யவ்வாறே முதல்வன் சங்கற்பித்துச் செய்யுஞ் சங்கற்பமுமாம்.

இவைநான்கு செய்யுளானும் அயன்றனையாதியாக அரனுருவென்றல்பற்றியும், சத்திபலவாதல் பற்றியும், தானொருவனே முதற்கடவுள் என்றல்செல்லாதென்னும் அநேகேசுரவாதி மதத்தையாசங்கித்துப் பரிகரித்தது; 'தான முதல்' என்றது வலியுறுத்தப்பட்டது

மறைஞானதேசிகர் உரை.

மேற் சிவசமவாதி, உமது சிவனுக் கிச்சாஞானக் கிரியைமூன்று முண்டென்றீ ராயின, அம்மூன்று மான்மாவுக்கு முண்டாகையால், அவ்விருவருமொக்குமென்று சொல்ல; அவனை மறுத்துணர்த்துகிறார்.

சிவனு மிச்சாஞானக் கிரியையாற் சிவனையொப்ப,
னுவனென விடிலநாதி மலமிவற் றினைமறைக்குங், காவ
ல னிவன்செய்கன்மத் தளவினிற் கொடுப்பக்காண்ப
ன, பாவியாம் புத்திமுத்திப் பயன்கொளும் பண்பிற
றாகும். (௬௪)

(இ-ள்) சிவனுமிச் சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்ப னுவ னென்றிடில்	ஆன்மாவுக்கும் இச்சாசத்தி யுளவாதலாற் சிவனோடு நிகர்வனென்று நீ சொல்லில்?
அநாதிமல மிவற்றினை மறைக்கும்	இந்த வான்மாவினுடைய விச்சாஞானக் கிரியைகளை அநாதியாகிய மலமறைக்கப்படுகையால்,
காவல னிவன் செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன	கர்த்தா வான்மாக்கள் செய்த கன்மபலத் துக்கீடாக விருவிதமான போகங்களை யேறுமற் குறையாம லவைகளைப் புசிப்பியாநிற்பன. அதற்கேதியாதெனில்?
பாவியாம் புத்திமுத்திப் பயன் கொளும் பண்பிற்றாகும்	இவன் றனக்கென வொரு சுதந்தரமில்லாதவனாகையாற் றனக்குப் போகமோட்சங்களை யறிந்து கொள்ளு முறைமையில்லையாகையாற் சிவனுக் கிவனெங்ஙனே யொப்பென்றபடி. எ-று.

இற்றாகும் எ-து. வலித்தல்வழி மெலிக்கும் வழியாகிய முறைமையால் இற்றாகு மென்றதாம்.

இதற்குப் பார்ச்சிளை பெனவறிக. (௬௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் பரமேஸ்வரனு மான்மாவும் ‡ ஸ்வாமி ப்ருத்யபாவ மென்ப துணர்த்துதல்.

‡ ஸ்வாமி ப்ருத்யபாவம் - ஆண்டானடிமைத்திரம்.

சிவனுமிச்சாஞானக் கிரியையாற் சிவனையொப்ப னுவனென் றிடில்-ஆன்மாவு மிச்சாஞானக் கிரியாவானுகையாலே சிவனுக்குச் சரியாகையால் ஸ்வதந்த்ரனுவனென்று சொல்லில்?—அநாதிமல மிவற்றினை மறைக்கும் - அநாதியே அஞ்ஞானமானது ஆன்மாவினுடைய இச்சாஞானக் கிரியைகளைத் தகைந்துகொண் டிருக்கும்,—காவலனிவனைச் செய்கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன் - ரக்ஷிதாவான சிவன், இந்த ஆன்மாப்பண்ணின கர் மானுகுணமாக ஞானத்தைப் பிரகாசிப்பிக்க அந்தப் பிரகாசிக்க மான ஞானத்தினாலே விஷயஞாதாவாவன்,—பாவியாம் புத்தி முத்தி படைக்கொளும் பண்பிராகும் - உண்டாவதான போக மோக்ஷமாகிய புருஷார்த்தத்தைச் சிவன் கொடுக்க அநுபவிக் குமுறைமையாவது, சிவன் ஸ்வதந்த்ரனுன ஸ்வாமியும், ஆன் மா ஈஸஸஹாயகித வ்யாபாரனுகிய ப்ருத்யனுமாம் என்றிதன் பொருள்.

ப்ருத்யன் என்பதற்குப் பொருள் வேலைசெய்து கூலி பெறு வதாகையால், இவ்விடத்து ஆன்மாச் செய்கிற கன்மமே வே லையும், அந்தக் கன்மானுகுணமாகச் சிவன் கொடுக்கும் பலமே கூலியுமென வறிக.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———○———

முடிந்தபட்சம் ஞானக்கிரியேச்சாவான சகத்கர்த்தா வென்று சொன்னீர், புருடனும் ஞானக்கிரியேச்சாவா னாதலால், அவனே கர்த்தாவாகட்டும், அப்பிரத்தியக்ஷமா யிருக்கு மீசுரன் வேண்டுவ தில்லையென்று மீமாஞ்சகன் சொல்ல, மறுத் துணர்த்துகிறார்

சீவனும் இச்சாஞானக் கிரியையால் சிவனை யொப்பனுவ னென்றிடில் - விசுவகர்த்தா வாவனெனில்? விஞ்ஞானகலப் பிரளயாகலாவத்தைகளிலே அநாதிமலம்,—இவர்தினை - இச்சாஞானக் கிரியைகளை,—மறைக்கும் - தன்வசமாகப் பண்ணும்,—ஆகையால் அவர் இருவரும் கர்த்தாக்களன்று, சகலன் கர்த்தாவெனனில்?—காவலன் - சிவன்,—அவன் செய் கன்மத்தளவினில் - அந்தச் சகலானமா பண்ணின கன்மத்துக்கிடாய்ப் பரிமிதமா யிச்சாஞானக் கிரியைகளை,—கொடுப்பக்காண்பன - ஏகதேசத்திற் கலைகொண்டு விளக்க, அந்தப் பராக்காயிருக்குஞ் சிற்சத்தி விர்த்திரூப விச்சாஞானக் கிரியைகளைக் கொண்டு பதார்த்தங்களையும், பிரத்தியக்ஷமாய்த் தானிருக்குஞ் சிற்சத்தி விர்த்திரூப இச்சாஞானக் கிரியைகளைக்கொண்டுந்த இச்சாஞானக் கிரியைகளையும் பார்ப்பன.— பாவியாம் புத்திமுத்திப் பயன்கொளும் பண்பினுரும் - வருவதாம் போகமோக்ஷ பலமடையு முறைமையனுவன

சத்தியம்! இஃதிருக்க முத்தான்மா சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்துவ சியத்துவாபி வியத்தியினாலே, சிவனோடே முற்றுபமனாதலால், அவன்போல விசுவகர்த்தா வாகட்டுமென்று சிவசமவாதி அநேகேசுரவாதி முதலோர் செப்புவார்கள்; அஃதறிவி

ணமை. சிவனநுகிருபா சங்கித்த பஞ்சகிர்த்தியத்தோ டியின்று வர்ச்சனீய சங்கித்த பஞ்சகிருத்தியாதி காரண முதலென்று மேலுதாரிக்கையால் விசுவகர்த்தாவன்று; சிவனே விசுவகர்த்தா.

சிவஞானயோகியருரை வருமாறு.

இச்சை முதலிய மூன்றும் முதல்வனோடொப்ப உயிர்க்கு முளவெனப்படு மாத்திரையேபற்றி, உயிர்களும் முதல்வனோ டொக்கும் போலுமென மலையற்க. இவை அவைபோலன்றிக் கேவலத்தின் மூலமலத்தான் மறைப்புண்டு நிற்குந் தன்மையும், சகலத்திற் கன்மத்தளவின ஏகதேசப்பட்டு நிகழ்தற்குரிய தன்மையும், அக்கன்மத்தால் வரக்கடவதாகிய போகப் பயன்போலச் சுத்தத்தின் அதனின் வேறாகிய முத்திப் பயனும், முதல்வன் கொடுப்பவே கொள்ளு முரிமைத் தன்மையும் உடைமையான், இத்தன்மைகளில்லாத முதல்வனுடைய இச்சா ஞானக்கிரியைகளோடு இவற்றிடை வேற்றுமை பெரிதாகலின் என்பதாம்.

பண்பு தன்மை.

பாவி வடசொல்.

புத்திபோலென்னுமுவமவுருபு விகாரத்தாற்றொக்கது.

இங்ஙனமுணராதார் கன்மத்தளவினிற் கொடுப்பக் காண்டலே புத்திப் பயன்கோடலென்ப துணர்ந்திலர்.

இதனானே, சிவசமவாதிமதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றாயினும், ஆகமங்களின் இலயசிவன் போகசிவன் அதிகாரசிவனெனச் சிவப்பன்மை கூறுதலின்; தானமுதலென்று ஒரு பொருண்மேல் வைத்தோதுதல் அமையாதுபோலுமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யுட்களெழுந்தனவென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

——()——

இப்படிச் சிவனுக்குண்டான இச்சாஞானகிரியை மூன்றும் ஆன்மாவுக்குமுண்டாகையால், ஆன்மாவுஞ் சிவனுக்கொப்பனென்று சமவாதி சொல்ல; அவனைமறுத்தருளிச்செய்கிறார்.

சிவனுமிச்சாஞானகிரியையார் சிவனையொப்பனாயினென்றிடில் - ஆன்மாவுக்கு இச்சையுமறியுந்தொழிலும் உடையனாதலாலே இவனும் சிவனுக்கொப்பாவானென்று நீ சொல்லில்? ஆன்மாவினுடைய இச்சாஞானக் கிரியைகள் சிவனுடைய இச்சாஞானக் கிரியைகளைப்போலல்ல. அதெப்படியெனின்?— அநாதிமல மிவற்றினைமறைக்கும் - ஆன்மாவுள்ளவன்றே அநாதியாயுள்ள ஆணவமலம் இவனுடைய விச்சாஞானகிரியைகளை அக்கினியைக் காட்டம் மறைத்தாற்போல மறைத்துக்கொண்டு நிற்கும். இதுவன்றியும்—காவலனிவனசெய் கன்மத்தளவின்றி கொடுப்பகாண்பன பாவியாம்புத்தி - கர்த்தாவானவன் ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாகத் தன்னுடைய இச்சாஞானக் கிரியைகளைக்கொண்டே ஆணவமலத்தை யொதுக்கி இவனுடைய இச்சாஞானக் கிரியைகளை எழுப்ப எல்லாத்தையும் அறிந்து பொருந்தி தனக்கு முறைமையான போகங்களைப்புசிப்பன்,—முத்திப்பயனைகொளும்பண்பிற்றாகும்-மோ

டசத்திலுள்ள பிரயோசனங் கொள்ளு முறைமையு மித்தன்மை

‘காவலனிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக்காண்பன்’ என்றது, ஆன்மா சிற்றறிவுடைமையால் இவனுடைய இச்சாஞானக் கிரியைக்குப் பேரறிவுண்டாகாதென்பது கருத்து.

இங்ஙனம் சமவாதியை மறுத்ததற்குப் பிரமாணம். சங்கற்ப நிராகரணம், “அவனிவ னாகி யிவனவன் செய்தி, யென்றுஞ் செய்வா னென்றியம்புதற்கா, மெல்லாமறிதல்செல்லாதியாகள, சிற்றறிவெனும்பெ சொற்றவருக்கும்” எனுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மாவுக்கு இச்சாஞானக் கிரியைக ளனாதியிலு மலத்தினாலே மறைக்கப்படுகையினாலே இவனுடைய இச்சாஞானக் கிரியைகளுக்குச் சிற்றறிவொழிந்து சிவனுடைய இச்சாஞானக் கிரியைகளுக்குள்ள பேரறிவுண்டாகாதென்று மாகையால்; சிவனும் ஆன்மாவும் தன்னிற் சமமல்லவென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

———o———

இச்சாஞானக்கிரியையால் - இச்சாஞானக்கிரியை மூன்றும்,—சிவனையொப்பனவன சிவனுமென்றிடில்-முதல்வனோடொப்ப வுயிர்க்கு முளவென்பது மாத்திரையேபற்றி யுயிர்களு முதல்வனோடொக்கும்போலுமென மலைவற்க,—அநாதிமல மிவற்றினை மறைக்கும்-இவையனைத்தையும்போலன்றிக் கேவலத்தின் மூலமலத்தான் மறைபடுதற்குரிய தன்மையும்,—காவலனிவன்செய் கன்மத்தளவினிற் கொடுப்பக்காண்பன்-சகலத்தின் முதல்வனிவன் செய்கன்மத்தளவிற்கேற்ற பயனளித்தலி னேகதேசப்பட்டு

நிகழ்தற்குரிய தன்மையும்,—பாவியாம்புத்தி-அக்கன்மத்தான் வரககடவதாகிய போகப் பயன்போல,—முத்திப் பயனைகொ ளும பண்பிற்றுகும் - சுதததி னதனினவேறுகிய முததிப்பய னு முதல்வனகொடுப்பவே கொள்ளுமுரிமைததன்மையு ம்உடை மையான, இத்தன்மைகளில்லாத முதல்வனுடைய இச்சாஞா னகிரியைகளோ டிவற்றினவேறறுமை பெரிதாகலின எ-ம்.

இதனுனே சிவசமவாதி மதம்பற்றி யாசங்கிததுப் பரிகரி த்து மேலது வலியுறுததப்படடது

மறைஞானதேசிகர் உரை.

சிவ னிச்சாஞானக் கிரியா சொரூபனெனபதனை யுணர்த்தி மேற் சுததமாயா காரிய முணர்த்துகிருர்,

ஞானமே யானபோது சிவனெனறிின் ஞானமோ கதி, லினமில் சதாசிவனபே ரீசனுந தொழிலதேயி, னுனமேற கிரியைவித்தை யொளி» சிவ னிலயபோக, மானபே ரதிகாரத்தோ டதிகர ணத்தினுமே. (சுரு)

(இ-ள)ஞானமே கர்ததாக் கேவலஞான ரூபமாகவே யிரு யான போ ககிறு னப்பொழுது சிவதததுவமெனப் பெ து சிவம் றும்.

இந்த ஞானசததியான தவனுடனே யிரண்டற வக்கினிக் கு வெம்மைபோலப் பிறிவறறு நிறறலாற் பிறிததுச் சத்தி தததுவமெனக் கூறிற்றிலர். அஃது சிறுபானமை பெரும்பா ன்மையாகவே ஞானமெனனவே யொழிபினுல் கிரியையான போது சத்திதத்துவ மெனபாருமுளர்.

தொழின் ஞானமொக்கி லீனமில் சதாசிவனபேர் — ஞானசத்தியுங் கிரியாசத்தியுமா யிரண்டு மொத்த வவதரஞ் சாதாக்கிய தத்துவமெனப் பெறும்.

ஈசனுந தொழி லேறின — ஞானங்குறைந்து கிரியையேறிய வவதர மீசுரதத்துவமெனப் பெறும்.

ஊனமேற்கிரியை வித்தை — கிரியைகுறைந்து ஞானமேறின வவதரஞ் சுத்தவித்தை யெனப் பெயர்பெறும்.

செய்யுளொன்பது முற்றுங் கூட்டுக.

ஒளிசிவ னில யபோக மான பேரதிகாரத் தோ டதிகரணே ததிறுமே. — ஞானப்பிரகாசமே திருமேனியாகவுடைய சிவனை, இலயியெனவும் போகியெனவும் மதிகாரியெனவும்; சிவன சதாசிவன் மகேசுரராக விம்மூவருங் கிருத்தியங்களுக் கேற்பப் பெயர்களைப்பெற்று; அந்தந்தக் கிருத்தியங்களை நடத்துவர்கள். எ-று.

அதிகரண மென்பது - வடமொழி. அஃதாவது ஒருவரைப் பரமசிவ னதிட்டித்தல்.

இலயியென்பதனாற் சிவதத்துவமுஞ் சத்தி தத்துவமுமாக விரண்டு மடங்கும்.

போகியென்பதனாற் சதாசிவ தத்துவ மடங்கும்.

அதிகாரியென்பதனாற் சுத்தவித்தையு மீசுரமு மடங்கும்.

ஆக வைந்து மூன்றிலடங்குமென வறிக.

இவனைச் சத்தனெனவும் உத்யுத்தனெனவும் பிரவர்த்தனெனவும், ஈசர் சதாசிவன் சாந்தனெனவும், ஆகமங்களிற் கூறும்; ஆண்டாண்டு வந்துழிக் காண்க.

உருத்திர னிலயபோகமெனப் பாடமோதிற் பரமனிட்டெ

யர்க் கர்த்தமன்றென வறிக. சிவனுக்கே யிலயமுதலிய கிருத்தியங்க ளுரியதெனவறிக. ஆதலா லுருத்திரனென்பதுகூடாது.

அணுசதாசிவனுக்கு மலமுண்டாதலா லீனமில் சதாசிவனெனச் சிறப்பித்தார்.

இந்தச் சிவதத்துவத்தைப் பரமகாரணமென்றும் நித்தியமென்றும் மாமாயையென்றுஞ் சொல்லுவர்கள்.

இதற்குப் பௌட்கரத்தும் சிந்திய விசுவசாதாக்கிய மென்னு மாகமத்துங் காண்க. (௬௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் கர்த்தாவுக்குச் சத்திபேதத்தால் மூர்த்திபேத முணர்த்துதல்

ஞானமேயானபோது சிவன்—ஞானஸ்வரூபமேயாய்நின்றபோது சிவனென்னு நாமம்,—தொழில்ஞானமொக்கி லீனமில்சதாசிவனபேர் - ஞானக்கிரியை சமமாய் நின்றபோது சதாசிவனென்னும் பெயராம்,—ஈசுரதொழில்தேறின - கிரியை யதிசமாகில் ஈஸ்வரனென்னும் பெயராம்,—ஊனமேற் கிரியைவித்தை யுருத்திரன - கிரியைகுறையில் சுத்தவித்யாதி பதியானருத்ரனென்னும் பெயராம்,— இலயபோகமான பேரதிகாரத்தோ டதிகாரணத்தனுமே- லயபோகாதிகாரஸ்தானமான பரநாதம் சாதாக்யம மஹேஸ்வரமெனனும் ஸ்தானங்களை யதிஷ்டித்துக்கொண்டு க்ருத்யங்களைப் பண்ணுவர் என்றதனபொருள்.

இவ்விடத் திச்சாசத்தியைச சொல்லாதிருந்தது ஞானக்கிரியை யுள்ளவிடத்தில் இச்சாசக்தி சித்தம். மூன்றிடத்திலு மிச்சாசக்தி யுண்டாயிருக்குமென வறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவசத்திக்கு லயதத்துவம், போகதத்துவம், அதிகாரதத்துவ முதலிய பேர்வருமாறுணர்த்தினரா

ஞானமே யானபோது - சிவனது கிரியாசத்தி மகாமாயையிலே மகாப்பிரளயத்திலே மகாமாயா காரியமெல்லாமொடுக்கி யொழிந்ததாய், ஞானத்தொழில் மாத்திரத்தைப் பண்ணி ஞானசத்தி ரூபியாயிருந்துள்ளளவில்,—சிவன - சிவதத்துவமென்றும் லயதத்துவமென்றும் சுத்ததத்துவமென்றும் நிஷ்களதத்துவமென்றும் பேர்பெற்றுநிற்கும்,—தொழினுஞானமொக்கில் - திரும்ப மகாமாயாகாரியப் பிரசவாபிமுகியோகிய சிர்த்தியத்திலே யுத்தியுத்தையா யிஃதிப்படியா மிஃதிப்படியாகாது இதுகாரண மிதுகரண மிதுகாரிய மிதுபிரயோசனமென்னுமிச்சாஞானத்தைப்பண்ணு மிச்சாசத்தி சவிகற்ப ஞானசத்தியிற் பின்னிடை ஞானபண்ணு நிற்பனென்று ஞானக்கிரியாதொழிலொத்த கிரியாசத்தி தொழிலைப்பண்ணிக் கிரியாசத்திரூபியாயிருந்துள்ளளவில்,— ஈனமிலசதாசிவன்பேர் - ஒத்த சதாசிவதத்துவமென்றும், போகதத்துவமென்றும், உத்தியுக்ததத்துவமென்றும், சகள நிஷ்களதத்துவமென்றும் பேர்பெற்று நிற்பன.—தொழிலதேறில் - திரும்ப மகாமாயாகார்யோற்பத்தியிலே பிரவிர்த்தியாய், இப்படியாகக்கடவதென்று சிரியாதொழிலேறி ஞானத்தொழில்குறைந்த சங்கற்ப விசாதொழிலைப்பண்ணி யிச்சாசத்திரூபியாயிருந்துள்ளளவில்,— ஈசனும் - ஈசுரதத்துவமென்றும், அதிகாரதத்துவமென்றும், பிரவிர்த்திதத்துவமென்றும், சகளதத்துவமென்றும் போபெற்றுநிர்பன,—ஊனமேற்கிரியை-அநசவிசசைக்குத்தானே ஞானமேறிக்கிரியை குறைந்தகாலையில் அந்தவிச்சாசத்திரூபியா யி

ருந்துள்ளளவில்,—வித்தை - வித்தியாதத்துவமென்றும், தூலவீசுரதத்துவம் தூலாதிகாரதத்துவம் தூலபிரவிருத்தித்துவம் தூலசகளதத்துவமென்றும் பேர்பெற்று நிற்பன,—உருத்திரன்,—சிவன் - இப்படிச் சமவேதசத்தியிற் பிரிப்பின்றிப் பேதமாய்த் தோற்றும்,— இலயபோகமான போதிகாரத்தோடுகூடி அதிகரணத்தனுமே - சமவேத சத்தியெனு மிருப்புடையனாய்க்கொண்டந்தசத்தி யிருப்புத்துவாரத்தினாலே மகாமாயா பரிக்கிரகசத்தியென்று மிருப்புடையனுமே!

ஆதலால், சிவனுஞ் சிவனென்றும், இலயனென்றும், சத்தனென்றும், நிஷ்களனென்றும், சதாசிவனென்றும், போகனென்றும், உத்தியுத்தனென்றும், சகளநிஷ்களனென்றும், ஈசுரனென்றும், அதிகாரனென்றும், பிரவிருத்தனென்றும், சகளனென்றும் பன்னிரண்டுபேரும் முறைமையிற் பெற்றுநிற்பன. சத்தத்தனமாகிய மகாமாயையும் சிவதத்துவமென்பது முதல் சகளதத்துவமென்பதீறாகச் சத்திபோலப் பன்னிரண்டுபேரு முறைமையிற் பெற்று நிற்குமென்பதறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள் யாண்டுமொரு பெற்றித்தாய் வியாபரிக்கும் இச்சையொழித்தொழிந்த ஞானங்கிரியைகளிரண்டும் தனித்தனி வியாபரித்தலானும், ஒத்து வியாபரித்தலானும், தம்முளேறிக் குறைந்து வியாபரித்தலானும்; சிவஞ் சத்தி சதாசிவம் மகேசுரஞ் சுத்தவித்தையென்று ஐவகைப்பட்டு, இலயம் போக மதிகாரமென மூன்றுமடங்கு மவத்தைகளையும், அவத்தைக்கேதுவாய் அங்ஙனம் வேறுபட்ட

ஆகாரங்களையுமுடையனும். உருத்திரனெருவனே அவ்வப்பெயா பெற்று நிற்பனெனபதாம்.

உருத்திரனுமென விகையும்.

ஈண்டு உருத்திரனென்றது மாசங்காரக் கடவுளாகிய பரமசிவனை, அவனுக்கும் உருத்திரனென்னும் பெயருண்மையின அவவிலயபோகமெனச் சுட்டு வருவிததுரைகக.

ஆனபோ தெனபதனையும் பிரிநிலையேகாரத்தையுந் தொழிலெனபதனேடுங் கூட்டுக

பின வநத ஞானஞ சத்திக்குப் பரியாயப்பெயராய நின்றது.

ஒக்கிலெனபதற்கு இவ்விரண்டுமென எழுவாய் வருவிததுரைகக.

பேரீசன் மகேசனென்னும் பொருட்டு

ஆதாரம அதிகரணமெனபன ஒருபொருட் கிளவியெனப து மேலுமுரைததாம; கடைப்பிடிகக

அற்றேல், அவவிலயபோசவதிகாரஙகட்கு ஏதுவாய் நின அதிகரணஙகளியாவை, அவற்றியல்பெனனேயோவெனின ? அது வருஞ செய்யுளிற் கூறப்படும.

நிரம்பவழகியருரை வருமாறு.

இநத இச்சாஞானக கிரியைகளை சிவதத்துவம் ஐந்தையும் பொருநதி, இலயபோகததி லதிகாரமாக அதிட்டித்துக்கொண்டு, சிவனுக்குத திருமேனியா யிருக்குமென்ற மாணுக்களை நோக்கி, மேலருளிச் செய்கிறார்.

ஞானமேயானபோதுசிவம் - ஞானசத்தியொன்றுமேயாய் நிற்கிறவவுதரம் சிவதத்துவமாம். எனனவே கிரியையேயா

னவவதரம் சத்தித்தத்துவமாம்.—தொழில் ஞான மொக்கி லீ ணமயில் சதாசிவம் - இந்த ஞானக்கிரியைக ளிரண்டுந் தனவி லொத்த வவதரம குற்றமில்லாத சாதாக்கிய தத்துவமாம்.— பேரீசனுந்தொழிலதேறில் - ஞானங்குறைந்த கிரியைபேற்றின வவதரமகேஸ்வரனும —ஞானமேற்கிரியைவித்தை - கிரியைகு றைந்து ஞானபேற்றின வவதரம சுத்தவித்தை இந்தச் சிவதத் துவங்களைந்தும சிவனுக்குத் திருமேனியாய் நிற்கிற முறைமை யருளிச்செய்கிறார்.— உருத்திரனிலயபோக மானபேரதிகாரத் தோ டதிகாரணத்தனுமே - சிவனுக்குச் சிவமுஞ் சத்தியும நிட களமாயுள்ள திருமேனி, சதாசிவம் சகள நிட்களமாயுள்ள திரு மேனி, ஈஸ்வரனு முருத்திரனுமான விரண்டு மிக்கவதிகாரத்து டனே கூடியிருக்கிற கரசரணங்களோடே கூடியுள்ள சகளமா ன திருமேனியாம்

பேரீசனுந் தொழிலதேறி னென்றது தத்துவங்களுக்குந் தத்துவ கர்த்தாக்களுக்கும் பின்னமில்லை யென்றதெனக் கொள்க.

இதனாற் சொல்லியது சுத்தமாயையிற் றோன்றின தத்து வங்களுக்கும் தத்துவ கர்த்தாக்களுக்கும பின்னமில்லை யென் றும. இந்தத் தத்துவங்கள் இச்சாஞானக் கிரியா சொரூபமாயி ருக்கிற சிவனுக்குத் திருமேனியாயிருக்குமென்னு முறைமையும அறிவித்தது இதற்குப பிரமாணம், தத்துவவிளக்கம். "போ ற்றும்பரத்திற் பொதிகின்றஞானம்கிரியையொத்தத்,தோற்று ஞ்சதாசிவ முன்னதஞானங் கிரியைகுன்றிற், றேற்றிபவித்தை யவத்தினறிவு பகேசனமையால், மாற்றுஞ்சிரபுரத் தெங்கோ னெறியில் வகுத்தனரோ." என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள் யாண்டு மொரு பெற்றித்தாய் வியாபரிக்கு மிச்சையொழிந்து,ஒழிந்த இரண்டினுள்) ஞானமேயானபோது சிவனும் - ஞானமேயாய் வியாபரிக்கிற சிவமெனவும்,—தொழிலினுமாம் - கிரியையாய் வியாபரிக்கிற சத்தியெனவும்,—ஒக்கிலீனமில் சதாசிவனும - ஞானங்கிரியையிரண்டு மொத்துவியாபரிக்கிற சதாசிவமெனவும்,—தொழிலதேறிற் பேரீசனும் - ஞானங்குறைந்து கிரியையேறின மகேசுரமெனவும்,—கிரியை யூனமேல் வித்தையாம - கிரியை குறைந்து ஞானமேறிற் சுத்தவித்தையெனவும் ஐவகைப்பட்டு,—இலயபோகமான பேரதிகாரத்தோடு - அவ்விலயபோகம் பெரிதாகிய அதிகாரமென மூன்றாயடங்கு மவத்தைகளையும்,—அதிகாரணத்தருத்திரனும் - அவத்தைக்கேதுவா யங்ஙனம வேறுபட்ட ஆதாரங்களையு முடையனாய் உருத்திரனொருவனே அவ்வப்பெயர்பெறு நிற்பனென்பதாம.

மறைஞானதேசிகர் உரை.

—o—

இந்தச் சூத்திரத்துவங்க ளெந்தானு சிவனுக்குத் திருமேனியென வுணர்த்துகிறார்

வித்தையோ டீசர்சாதாக் கியஞ்சத்தி சிவங்களைந்தும், சுத்தத் துவஞ்சிவன்றன் சுதந்தர வடிவமாகு, நித்தமென் றுரைப்பர்கால நீங்கிய நிலைமையாலே,வைத்திலா முறபிறபாடு வருவித்தார கருமத்தாலே.(௬௬)

(இ-ள்.) வித்தை சுத்தவித்தை யீசுரஞ் சாதாக்கியஞ் சத்யோ டீசர் திசிவமெனனு மிவவைந்துஞ் சுத்தமாயை

சாதாக்கியஞ்சத்தி சிவநாயகனாந்து சுத்ததத்துவஞ் சிவனதன சுதந்தர வடிவமாகும்

யிற் றோற்றிய தாதலாற சிவனுக்குச் சுதந்தர விக்கிரகமதாகும்.

நித்தமென்று ரைப்பா காலநீங்கியநிலைமையாலே

அந்தச் சிவதத்துவ மானது காலமின்றி மாயையைப்போல நிற்றலா லறியாதுபாந் தோரதனை நித்தியமென்று சொல்லுவார்கள்.

வைத்திலர் முற்பிற்பாடு

இவை சத்தியினது கிரியா பேதத்தாற் றோற்றிய தாதலா லியாதிநூங் கடைவுபாறித தோற்றஞ் சொல்லப்பட்ட இல்லை

ஆனாற் சொல்லுவா னேனெனனின்:

வருவித்தார் கருத்தாலே.

காரியப் பாட்டினாலே முறைபிறழாமற் கூறியதென வறிக.

சிவதத்துவத்தை முதற்கட் கூறாது சுத்தவித்தையைக் கூறியதெனனெனின்? தலைதடுமாற்றமெனனுந் தந்திர உத்தியாற் கூறியதெனவறிக.

சுதந்தரமெனபது-வடமொழி

அஃதாவது.—சுவம், தான, தந்தரமென்பது-தொழில்; ஆதலாற் சுத்தமாயாகிருத்தியமெல்லாஞ் சிவசிருட்டியெனவறிக.

இதற்கு மதங்காகமம். (௬௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மூர்த்திலக்ஷணமுணர்த்துதல்.

வித்தையோ டீசர் சாதாக்கியஞ் சத்தி சிவங்களைந்தும் சுத்த தத்துவம் - சுத்தவித்தை ஈஸ்வரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்று சொல்லப்பட்ட வைந்தும் சுத்தமாயையிற் றோற்றப் பட்ட தத்துவங்கள் — சிவன்றன் சுதந்தரவடிவதாகும் - சிவன்றானே சுத்தமாயையிலே யுதிப்பித்து அதிலே அநுப்பிரவிஷ்டமாம் விக்கிரஹம், — நித்தமென் றுரைப்பர் காலங்கடந்த நிலைமையாலே - காலாதீதரான சிவனுக்கு அதிஷ்டானமானதுகொண்டும் அசுத்தமாயா காலத்தினால் அபரிச்சேத மாகையாலும் நித்தமென்று சொல்லுவார்கள், — வைத்திலா முறைபிறப்பு வருவித்தார் கருமத்தாலே - இந்தபஞ்சதத்துவங்களுக்கும் சுருதியபேதமாதி முற்பிற்பாடு அல்லது, வஸ்துத முறைபிறப்பாடில்லை

தது_க்தம் தத்த்வப்ரகாசே — ஶுத்தாநாமேவ ஸ்ருஷ்டி
ஞ்ஹிக ஸம்ஹார ஸ்திதி ஹேதுத்வாச்ச வ்ராவாரவ
ஸாமேஷாம் விஹிதாவஸ்தா க்ரமோ நாஸாவஸ்துதி.

சிவதத்துவம் சத்தித்தத்துவமிரண்டும் சிவனுக்கும் சத்திக்கும் அதிஷ்டேய ஸ்தானமாயிருக்கும், சாதாக்கிய தத்துவம் சதாசிவதத்துவத்திற்கு அதிஷ்டேய ஸ்தானமாயிருக்கும், ஈஸ்வரதத்துவம் மஹேஸ்வரனுக்கு அதிஷ்டேயஸ்தானமாயிருக்கும், சுத்தவித்தை ருத்ரதேவருக்கு அதிஷ்டேய ஸ்தானமாயிருக்கும் என்றதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இப்படிச் சத்திதத்துவத்தைச் சிவதத்துவத்துள் ஒடுக்கியிருத்தலாற் காரணசிவதத்துவ மூவைந்துங் காண்பித்துக் காரியசிவதத்துவ மூவைந்துங்காண்பிக்கின்றார். காண்பிக்குமிடத்துக் காரியசிவதத்துவ மூவைந்துந் திருஷ்டமென்றுந் திருச்சியமென்று மிருவிதமாம்.

திருஷ்டமாவது திருச்சிய சிவதத்துவங்களையும் பற்றிப் பரிணமித்துச் செயற்படப் பண்ணுவதாலும், தன்னிடத்தில் விருத்திபரிணதி வியாத்தமன்றி யதனோடு பிரிப்பில்லாமையைந்து பேதமான தனது வியாபார பேதத்தினுவ் அப்படிப் பிரிப்பில்லாமைந்துபேதபின்னமாகிய சிவசத்திப்பேதமுஞ்சிவபேதமாகும்.

திருச்சிய சிவபேதத்துவமாவது 'வித்தைகள் வித்தையீசர்' என்ற விருத்தத்தாற் கூறிய மகாமாயா பரிணதிபேதப்பிரிப்புள்ள வைந்துபேதபின்ன சிவதத்துவமாகும்.

அந்தத் திருட்டமுந் திருச்சியமிரண்டனுள், திருச்சியம் 'வித்தைகள்' என்ற விருத்தத்தால் முன் சொல்லப்பட்டபடியால், திருட்ட சிவதத்துவமாத்திரஞ் செப்பிக் காண்பிக்கின்றார்.

வித்தையோடீசர் சாதாக்கியஞ் சத்தி சிவங்களைந்துஞ் சுத்தத்துவஞ் சிவனறன் சுதந்தர வடிவமாகும்- இந்தத் திருஷ்ட சிவதத்துவமைந்துஞ் சமவேத சத்திரூபமாதலால், சிவனுக்குச் சிறந்தசரீரமாக வுபசரிக்கப்பட்டது,—முன் சொன்ன திருச்சிய சிவதத்துவம் பரிக்கிரக சத்தி ஸ்வரூபமாதலாற் பொதுச்சரீரமாக உபசரிக்கப்பட்டது, இந்தத்திருஷ்ட சிவதத்துவமைந்தும்,—காலநீங்கிய நிலைமையாலே-விர்த்தி பரிணதி விவர்

த்த ரூபமில்லாமையாற் காலவரையறையைக் கடந்திருத்தலால் பெரியோர்,—நித்தமென றுரைப்பர் - நித்தியமென்று சொல்லுவார்கள். அதனால்,—முறபிற்பாடு வைத்திலா - முன்பினனென்கின்றது சொல்லார். ஆகிற் சொல்லுவானேன?—வருவித்தார்கருமத்தாலே - சிருச்சிய சிவதத்துவத்தைப பற்றிய சிவசத்தி வியாபாரக கிரமத்தால் சொன்னார்கள்.

இதனாற் சிருச்கிய சிவதத்துவ மகாமாயா பரிணதிரூபமாய்ச சுத்தகாலவரையறைக் குளளாதலால், அநித்தியமென்றும முன்பினனென்றும சொல்லபபட்டது.

சிருஷ்டம சிருச்சிய மிரண்டுக்கும் பொதுவாகுஞ் சிவதத்துவமுஞ், சத்தித்தத்துவமுஞ், சிவதத்துவமென்றும, லயதத்துவமென்றும, சுத்தத்தத்துவமென்றும, நிஷ்களதத்துவமென்றும, காரண சிவதத்துவ சத்தித்தத்துவப் பேர்பெற்று, காரணவிலய போகாதிகாரங்கள் மூன்றினுள ளிலயத்துக்குக கற்பிககப்பட டிலயத்தடங்கும.

சதாசிவதத்துவம - சதாசிவத்த்துவமென்றும், போகத்தத்துவமென்றும், உத்தியுத்தத்தத்துவமென்றும, சகளநிஷ்களத்தத்துவமென்றும், காரணசதாசிவ தத்துவத்துக்குரைத்த பேர்பெற்றுப் போகத்துக்குக் கற்பிககபபட்டுப போகத்தடங்கும

ஈசுரத்த்துவஞ் சுத்தவித்தியா தத்துவத்தோடுகூட ஈசுரத்த்துவமென்றும், அதிகாரதத்துவமென்றும, பிரவிர்த்தத்துவமென்றும், சகளதத்துவமென்றும், காரணவீசுர தத்துவத்துக்குரைத்த பேர்பெற்று அதிகாரத்துக்குக் கற்பிககபபட்டதிகாரத்தடங்கும.

ஸ்ரீ மதங்காதிகளிற் சத்திதத்துவம் போகத்திலும், சதாசிவதத்துவ மதிகாரத்திலுமடங்குமென்று சொல்லியது மறிக.

காரியசிவனு மிதனோடு பொருந்திச் சிவனென்பதாதியாய்ச் சகளனென்பதந்தமாய்க் காரண சிவனுக்குரைத்த பேர்பெற்றுக் கிரமத்திற் காரணவிலய போகாதிகாரங்களுக்குக் கற்பிக்கப்பட்டு காரணவிலயபோகாதி காரங்கட் குள்ளாகுவன.

இம்மூன்று மொன்பதா யிருக்கின்ற காரிய இலயபோகாதிகாரங்கள் காரணாதி காரத்தாற் கற்பிக்கப்பட்ட தறிக

சிவஞானயோகியருரை வருமாறு.

அவ்வவ் வியாபாரங்கட்கு இடமாய் ஐவகைப்பட்டு மேற்கூறிப்போந்த அவ்வப்பெயரே பெயராக வுடையனவாகு சுத்த தத்துவ மைந்தும், அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய வதிட்டானமாம். முன்பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபாரபேதம்பற்றி இவற்றிற்கு முற்பிற்பாடு கூறப்படினும், இவையைந்துந் தோன்றிய பின்னர்த் தோன்றுவதாய காலதத்துவம் இவற்றது தோற்றத்திற்கு ஏதுவாகாமையின், காலம்பற்றி முற்பிற்பாடு கூறுதல் செல்லாது; காலவரையறையைக் கடந்து நிற்றலால் அதுபற்றி இவை சிவனுக்கு நித்திய வதிட்டானமென் றுரைக்கப்படுமென்பதாம்.

அநந்ததேவர் முதலியோர் வாயிலாக நின்றதிட்டிக்கப்படும் ஏனை மாயேயம் போலன்றித் தானே யதிட்டிக்கப்படுதலின் இவை சுதந்திர வடிவமெனப்பட்டன.

அதிட்டானத்தை வடிவமென் றுபசரித்தார்.

தோற்றக்கேடுக ளுடையனவாய் தத்துவங்கள் இறைவனுக்குச் சுதந்திரவடிவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை

யாசங்கித்து நித்தமென் றுரைப்பதொன்றும், நித்தமாகற்கே துக் கூறுவார் காலநீங்கிய நிலைமையாலென்றும், அற்றேற் காலநீங்கியவழி இவற்றின் றோற்றத்திற்கு முற்பிற்பாடு கூறுதல் செல்லாதென்பாரை நோக்கி ஈண்டு முற்பிற்பாடு கூறியது காலம்பற்றி யன்றென்பார் வைத்திலா முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலென்றுங் கூறினார்.

ஈண்டுக் கருமமென்றது மேலைச்செய்யுளிற் கூறிய வ்யாபாரபேதங்களை.

அந்த வ்யாபாரங்கட்குக் காரணங் கலைவித்கிரியெனப் பெயர்பெற்றுக் காலத்தானமாய் நிற்குஞ் சிவசத்தியேயாகலின், ஆண்டுக் காலமின்மைபற்றி முற்பிற்பாடின்மைக்கு இழுக்கின்மையுமறிக.

அற்றேல் இலயசிவன் முதலிய மூவருந் தம்முள் வேறென்றாது சுத்தசிவ னொருவனே இவ்வதிகாரங்களைப் பற்றிய வ்யாபாரபேதத்தால் அங்ஙனம் மூன்றவதாரஞ் செய்தவனெனின், விகாரியாவான் போலுமெனின்? அவ்வாசங்கை நீக்குதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

இப்படி முன் சொல்லப்பட்ட தத்துவங்களை சுத்த தத்துவமென்றதெப்படி யென்றவனை நோக்கி, மேலுமருளிச் செய்கிறார்.

வித்தையோடீசர் சாதாக்கியஞ்சத்தி சிவங்களைந்துஞ் சுத்ததத்துவம் - சுத்தவித்தையு மதன்றோ டீசுரதத்துவமும் சாதா

க்கிய தத்துவமுஞ் சத்திதத்துவமுஞ் சிவதத்துவமு மென்கிற
தத்துவங்கள் ஐந்திலும் பரமேஸ்வரனுடைய ஞானக் கிரியைக
ள் அதிட்டிக்கையினாலே யிவையிற்றுக்குச் சுத்ததத்துவ மெ
ன்று பேராம்,—சிவன்றன் சுதந்தர வடிவமாகும் - இவைதான்
சிவனுடைய விக்கிரகங்களுக்கு சுதந்தரமான திருமேனியாயிரு
க்கும்,—நித்தமென் றுரைப்பர் கால நீங்கியதின்மையாலே- இந்
தத் தத்துவங்கள் காலங்களிற்படாது; ஆகையாலே யிவையிற
றை நித்தியமென்றே ஞாதாக்கள் சொல்லாநிற்பார்கள் நித்திய
மாயிருக்கிற தத்துவங்களுக்கு முற்பிற்பாடு வருவானேனென்
னில்?—வைத்திலர் முறபிற்பாடு வருவித்தார் கருமத்தாலே -
ஆகையாலே முன்னே தோன்றினது முந்தினதென்றும், பின்
னே தோன்றினது பிந்தினதென்றும் சொல்லுவாரில்லை; இப்ப
டிச் சொல்லப்பட்டது கிருத்தியங்களுக்கிடாக.

இதனாற் சொல்லியது சிவதத்துவங்களை சுத்ததத்துவமெ
ன்றது சிவனுடைய ஞானக்கிரியைகள் அதிட்டிக்கையினாலென்
றும், காலாதீதமா யிருக்கையினாலே நித்தியமென்றும், இந்தத்
தத்துவங்களுக்கு முறபிறப்பாடில்லை யென்றும், கிருத்தியங்க
ளுக்கிடாக முறபிறபாடானதென்றுஞ் சொல்லுவார்களெ
ன்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———0———

வித்தையோடீசர் சாதாக்கியஞ்சத்தி சிவங்களைந்துஞ் சுத்
தத்துவஞ் சிவன்றன் சுதந்திர வடிவமாகும்-அவ்வவியாபாரங்
கட்கிடமா யவகைப்பட்டு மேற்கூறிப்போந்த அவ்வப்பெயரே
பெயராகவுடையனவாஞ் சுத்ததத்துவ மைந்து மவ்விறைவனுக்

கு சுதந்திரமாகிய அதிட்டானமுமாம்.— கருமத்தாலே வருவித்தார் - முனைப்பின்றி நிகழு ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபார பேதம்பற்றி யிவற்றிற்கு முற்பிற்பாடு கூறப்படினும்,—கால நீங்கிய நிலைமையாலே-இவைகளுக்குத் தோன்றிய பின்னாத் தோன்றுவதாகிய காலத்தத்துவமியற்றுந் தோற்றத்திற் கேதுவாகாமையில்,— முற்பிற்பாடு வைத்திலா - காலம்பற்றி முற்பிற்பாடு கூறுதல் சொல்லாது,—நித்தமென நுரைப்பா - காலவரையறையைக் கடந்து நிற்றலா லதுபற்றி யிவை சிவனுக்கு நித்திய அதிட்டானமென றுரைக்கப்படும்.

மறைஞானதேசிகர் உரை.

மேலிந்தச் சுதந்தரதத்துவங்களை யதிட்டித்திருந்தாலு
மதற்கு வேறுபாடு நிற்குமதற் குதாரணமிட்
டுரைத்ததுகிறார்

ஒருவனே யிராவணாதி பாவக முற்றாற்போலத்,
தருவனிவ் வுருவமெல்லாந் தன்மையுந் திரியானாகும்,
வருமிவை யெல்லாஞ்சத்தி சத்திதான் மரமுங்காழ்ப்
பு, மிருமையும் போலமன்னிச் சிவத்திறோ டியைந்து
நிற்கும். (கூஎ)

(இ - ள்.) ஒருவ கூத்தாடி யொருவனுயிரும் திராவணன்
னே யிராவ முதலிய பலகோலங்களையுங் கட்டி நடித்
ணாதி பாவ தானேயாயினு மவன் றன்னுடைய தன்மை
[illegible]ற்றாற்போல குன்றும லதுவதுவாய் நடித்தாற்போல,

தருவனிவ் வுருவமெல்லாந் தன்மையுந் திரியானாகும் — கர்த்தாவுஞ் சுத்த தத்துவங்கடோறும் பிறந்தானேயாயினுந் தனது தன்மை குன்றாமலத் தத்துவமாய்நின்ற அதற்கு வேறுபட்டுநிற்பன்.

வருவடி வெல்லாஞ் சத்தி — அவனியாதொரு வடிவு கொள்ளுகின்றன வவையெல்லாஞ் சத்தியினது சொரூபமே!

அவ்விருவருங் கலந்துநிற்கு முறைமையாதெனில்?

சத்திதான் மரமுங்காழ்ப்பு மிருமையும் போல மன்னிச் சிவத்தினோடியைந்து நிற்கும் — எப்படி மரமும் வயிரமும் ஏகீபாவமாயிருக்கு மப்படியே யிந்தச் சத்தியுஞ் சிவனுடன் பிரிக்கப்படாமல் நிலைபெற்று நிற்கும். எ - று.

ஏகாரந் தேற்றம்.

உம்மை எதிர்மறை.

இதற்கு மதங்காகமம். (௬௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் கர்த்தா அநேக மூர்த்திகளைத் தரித்தும ஏகஸ்வரூபமான தன்மை பிறழானென்ப துணர்த்துதல்.

ஒருவனேயிராவணாதி பாவகமுற்றாப்போலத் தருவனிவ் வுருவமெல்லாந் தன்மையுந் திரியானாகும் - கூத்தாடியொருவனே இராவணாதிகளைப்போல ரூபத்தையும் அபிநயத்தையும் பிறர்க்குக் காட்டித் தான் றன்னுடைய ஸ்வரூபத்தைக் கெடாது

நின்றதுபோல, கர்த்தாவும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட பஞ்ச கிருத்தியத்திற்காக விப்படி யநேக விக்ரஹங்களை அதிஷ்டித்துககொண்டிருந்து கருத்தியங்களைப் பண்ணியும், அகண்டாகாரசச்சிதாநந்த ஸ்வரூப மாறுபாடாகான. அஃதெவ்வாறெனில்?—வரும்வடிவெல்லாஞ்சத்தி சத்திதான மரமுங்காழ்ப்பு மிருமையும்போலமன்னி சிவத்தினோடியைந்து நிற்கும் - இங்ஙனம வரப்பட்ட திருமேனியெல்லாம் சிற்சத்தியே' அந்தச சத்தியானது மரமும வயிரமும்போலப் பிரிக்கப்படாததாய்ச சிவத்துடனே பொருந்தி நிற்குமென றிதனபொருள.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இப்படிச் சடபதார்த்தங்களையெல்லாஞ் சனகருச் சத்தித்துவாரத்தினாலே சரீரம்போலப் பண்ணிக்கொண்டு செலுத்தி யசைத்து வேற்றுமைப்படுத்திக் காரியப்படுத்தினலும், சிவனுக்குஞ் சிவசத்திக்கு மசைவு வேற்றுமையில்லையென றறைகின்றார்

காழ்ப்பு - வயிரம்.

மரமுங் காழப்பும் என்றதில் காழ்ப்பு பிரத்தியக்குரூபம், மரம் பரககுரூபம், அப்படிச சிவமுஞ சத்தியுமென றிதனபொருள்.

மற்றது வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

ஒருவன் கூத்திற்குரிய பலவேடங்கட்டி நடித்தானாயினுந் தன்றன்மையிற் சிறிதுந் திரிபாமைபோல, முதல்வன் ஐந்தொழிற் குரியனவாய் இங்ஙனங் கூறிப்போந்த பேதமெல்லா மெய்தியும் அவ்வேறுபாடெல்லாந் குணகுணிபாவமாயுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படுவனவாகலின், அதுபற்றித் தன்றன்மை வேறுபட்டு விகாரியாவா னல்லனென்பதாம்

ஏகாரந் தேற்றம்.

தன்மையுமென்னுமும்மை சிறப்பின்கண் வந்தது.

இருமையென்றது நானாடென்னினமேனின்றது

சத்தியிற் காணப்படுவனவற்றைச் சத்தியென் றுபசரித்தார்.

அற்றேல், தனது சத்தியிற் காணப்படுவது தனக்காமாறு யாங்ஙனமெனின்? அது வருஞ் செய்யுளிற் கூறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

கர்த்தா வொருவனாயிருக்க விப்படி திருமேனி பலவான தெப்படியென்றவனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

ஒருவனே யிராவணாதி பாவக மூற்றாற்போலத் தருவனிவ்வுருவமெல்லாம் - கூத்தாடி யொருவனாயிருக்க இராவணன்முதலான பல கோலங்களையுங் கட்டி நடித்தாற்போல, இந்தரூபமெல்லாங் கர்த்தாதானே கொள்ளாநிற்பன். இந்தத்திருமே

னிகடோறும் கர்த்தாவும் பலபேதப்பட்டு நிற்பரோவென னில்?—தன்மையுந் திரியாதாகும் - இப்படிப் பலதிருமேனிகொ ண்டு பிரபஞ்சத்தை நடத்துதல் செய்தேயுந் தன்னுண்மையுங் குன்றாமல் ஒருதன்மையாய் நிற்பன். அதெங்ஙனமேயெனில்? வ ரும்வடி வெல்லாஞ்சத்தி - ஆகையால் சிவன் கொள்ளப்பட்ட வடிவுகளெல்லா மிவனுடைய சத்தியே! சத்தியென்றுஞ் சிவ மென்று மிரண்டா யிருக்குமோவெனனில்? சத்திதான மரமு ங்காழ்ப்பு மிருமையும் போலமன்னிச் சிவத்திறே டிசைந்து நி ற்கும் - அந்தச் சத்திதான மரமும் வயிரமு மென்னு மிரண்டு மபோல் நிலைபெற்றுடையதாய சிவனுக்குத் திருமேனியாகவே ஒருகாலத்திலும் விடுநீங்காமல் நிற்கும்

இதற்குப் பிரமாணம் திருக்களிற்றுப்படியார் "பொன் னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ, லந்நிற வண்ணனு மயிசையுஞ்—சென்னிறத்த, வெண்ணிறத்த னாயிருப்ப னெங்க ள சிவபதியு, மன்னிறத்த னாயிருப்ப னாங்கு" என்னுமதனுங் க ண்டுகொள்க. * திருக்களிற்றுப்படியார்—எகூ - செ

இதனாற்சொல்லியது சிவன் கொள்ளப்பட்ட வடிவுக ளெல்லாம தனது சத்தியாகிய வடிவென்றும் சத்திசிவ மிரண் டு பின்னமில்லையென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஒருவனே யிராவணுதி பாவக முற்றாற்போல - ஒருவன் கூத்துக்குரிய விராவணுதி பலவேடங் கட்டி நடித்தாலுமயினு ந் தன்றன்மையிற் சிறிதுந் திரியாமைபோல,—தருவனிய வரு

வமெல்லாம் - முதல்வனைத்தொழிற் குரியவாய் இங்ஙனஞ் சூ திப்போதபேதமெல்லா மெய்தியும்,—வரும்வடி வெல்லாம் - அவ்வடிவு வேறுபாடெல்லாம்,—சத்திதான மரமுங்காழ்ப்பு ம - சத்தியுந் தானு மரமும் வயிரமுமாகி,—இருமையும் போ லமன்னி - அவ்விரண்டும்போல நிலைபெற்று,—சிவசத்தினோ டி யைந்துநிற்குஞ் சத்தி - குணகுணி பாவமா யுடனிற்குந் தன் து சத்தியிற் காணப்படுவனவாகலின்,—தன்மையுந் திரியாது கும் - அதுபற்றித் தன் றன்மை வேறுபட்டு விகாரியாவ னல் லன

மறைஞானதேசிகர் உரை.

அச்சிவன் றனது தன்மை திரியாமற் சத்தி
காரணமாய் நின்று தானுங் காரண
னென் றுணர்த்துகிறார்.

பொன்மைநீ லாதிவன்னம் பொருந்திடப் பளிங்
கிவயற்றின், றன்மையாய் நிற்குமாபோற் சத்திதன் பே
தமெல்லா, நின்மலன் றானுய்த்தோன்றி நிலைமையோ
ன் றுயேநிற்பன், முன்னருட் சத்திதன்பால் முகிழ்க்
குந்தான் முளையானன்றே. (௬௮)

(இ-ள்) பொன் படிகமானது பொன்மை நீலமுதலிய ப
மைநீலாதி ஞ்சவன்னங்களையும் பொருந்தின விடத்து

வன்னம் பொருந்திடப் பளிங்கவற்றின் றன்மையாய் நிற்குமாபோல் — தன்னிறத்தைக் காண்பியாமலந்தவன்னத்தி னிறமாய் நின்றாற்போல,

சத்திதன் பேதமெல்லாந் தன்மலன் றாய்த் தோன்றி நில்மையொன் றாயே நிற்பன — உண்டாக்கப்பட்ட ரூபங்களெல்லாந் தனது சொரூபத்தைக் காட்டாமலந்தச் சத்தியினுடைய ரூபத்தை யதுவதுவாகவே பொருந்தி நின்றாலுந் தனது சொரூபத்தைப் பிறழாது நிற்பன.

முன்னருட் சத்திதன்பான் முகிழ்க்குந் தானுமூலையானன்றே. — சிருட்டிகாலத்திற் றன்னிடத்திலே சத்தியை யுண்டாக்குவதன்றித் தனக்கொருகாரண மில்லாதபடியாலே தானொன்றிற் றோன்றான். எ - று.

சிவன் சத்தி யாதாரமாய் நில்லான், சத்தி சிவனை யாதாரமாகக்கொண்டு நிற்குமென்பதென வறிக.

இதற்குச் சுபிரபேதமு மதங்கமு மெனவறிக. (சுஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேவிதுவுமது வென்றுணர்த்துதல்.

பொன்மை நீலாதிவன்னம் பொருந்திடப் பளிங் கவற்றின் றன்மையாய் நிற்குமாபோல்- பொன்மையாதிவன்னங்களா

கிய வொருவஸ்து சுத்தஸ்படிகத்திலே சம்பந்தித்தபொழுது, அந்தஸ்படிகமும் அந்தநிறமாகவே பார்ப்பார்க்குத் தோன்றின றுபோல்,—சத்திதன்பேதமெல்லா நின்மலனுருவாய்த் தோன்றி நிலைமையானுருவே நிற்பன - சத்திகளபேதமாகிய விக்கிரஹங்களெல்லாம் தானேயாய்க் காணப்பித்தும் பேதமன்றித் தானொரு தன்மையாயே நிற்பன அந்த சத்தி யாதோவெனின்?—முன்னருட் சத்திதன்பான முகிழ்க்குந் தானமுளையானவன்றே - அந்தக்கர்த்தாவினிடத்திலே முந்தலே கிருபையாகிய பராசத்தி உதித்து அநேகபேத சத்திகளாம். தானொன்றிலு முதியாதவனாகி அநாதியே சர்வகாரணத்திற்கும் பரமகாரணனுக நின்றான் என்றிதன்பொருள்.

தந்நித்யம் காலத்ரயே ஸர்வாநபேக்ஷரூபம் ஸ்வயம்
விஜ்ஞாநம் ஶிவஸம்ஜ்ஞிதம் || தஸ்ய ஶக்தி: ஸர்வாபேக்ஷா
ரூபஜ்ஞாநக்ரியாத்மிகா: | ஸ்வகார்யத்வயம் வி-
சித்ரம் ஶேஷஸ்யாபி ஸம்ஸ்த்திதம் || ஸர்வாநபேக்ஷா
பேக்ஷாஹ்யாம் ஶக்திஶக்திமதோர்த்வயா ||

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேலிதுவுமது.

பொன்மை நீலாதிவன்னம் பொருந்திடப் பளிங்கிவற்றின் றன்மையாய் நிற்குமாபோற சத்திதன பேதமெல்லாம் - இஃதேகதேச திட்டாந்தம். சிருச்சிய சிவதத்துவங்க ளாதமுதலான ஞேயகாரியங்கள் சிவசத்தியிலே பிரதிவிம்பித்தாற் சிவ

சத்தியுஞ் சடமாய்ப் போமாதலால் விம்பப் பிரதிவிம்பத்துவ மபரிணத சடங்களுக்கல்லாமற் சித்துக்களுக்கில்லை யென்று பவுஷ்கரத்திற் சொல்லப்பட்டது அதனால், ஞானசத்தி ஸ்வரூபமாயிருக்கின்ற சிவசத்திக்குச் சிருச்சிய சிவதத்துவ முதலான ஞேயபதார்த்தங்களுக்கும் ஞாபியஞாபக பாவ சம்பந்த மாத்திரம், கிரியாசத்தி ஸ்வரூபமா யிருக்கின்ற சிவசத்திக்கு மந்தச் சிருச்சிய சிவதத்துவ முதலான காரிய பதார்த்தங்களுக்குஞ் சங்கற்ப சமுத்திரேக விஷய விஷயீபாவ சம்பந்தமாத்திரம், பிரதிவிம்ப சம்யோக சமவாயாதிகள் சித்துக்குச் சடத்தன்மை வருமாதலாற் சொல்லப்படாது நாஞ்சொல்லிய விருபு சம்பந்தமாத்திரத்தினாலே சிவசத்திக்குப் பிரிப்பில்லா வந்தரங்க வாநந்தியம் இயற்கையாய், நிருபசரிதமாயும் பிரிப்புள்ள பகிரங்கவாநந்தியஞ் செற்கையா யுபசரிதமாயு மிருக்கு மென்றப்படியே சிவசத்திக் காநந்தியமென்று சொல்லப் பட்டவனந்தபேதமறிக,—

நின்மலன் தானாய்த்தோன்றி நிலைமையொன்றுயே நிற்பன் - அநந்த சத்தி பேதபேதனா யிருந் தந்தரங்க பேதஞ் சொரூபமாயும், பகிரங்கபேதந் தடஸ்தமாயு மிருத்தலால்; ஏகஸ்வரூபவானாகத் தானாயிருப்பன்.—

முன்னருட்சத்திதன்பான முகிழ்க்கும் தான்முளையானன்றே - மகாப்பிரளயமாயப் பின்சுவபாவகாலத்திலே தூலபஞ்ச கிருத்தியத்திலே உதாசீனையாய், நிருவிகற்ப ஞானரூபியாய், இலய சிவனிடத்திலே யிருந்த கிரியாசத்தி, திருமபிச சூக்கும பராசத்தி வியத்தி யோக்கியதை முதலாகிய சூக்குமபஞ்ச கிருத்தியத்தைப் பண்ணுநின்று, மகாசிருஷ்டி வருமிடத்து ஸ்தூல பஞ்ச கிருத்தியம் பண்ணும்படி,—

[தன்பால் - சிவன்பால்,— முன்னருட்சத்தி - முந்தவந்த ஸ்தூல பராசத்திரூபியாய்,—முகிழ்க்கும் - சிவன்செலுத்த இச்சாசத்தி சவிகற்பஞானசத்தி கிரியாசத்தியாகிய போகரூபியாய்க்கொண்டுதித்தியுத்தையாம்,— தான்முன்னேயானவன்றே - சிவன் சத்தியாலேவப்பட்டுதித்தியுத்தனாகான், சத்தியையேவி யந்தச் சத்தித்துவாரத்தினாலே யுத்தியுத்தனாயிருப்பன்]

[பின்னுமிதன்பொருள்].—தன்பால்-தற்பொருளறிவாகிய சுத்தசிவனிடத்தில்,—முன்னருட்சத்தி - லயபோகாதி காரியங்களைக் கடந்த புறப்பொருளறிவாகிய முந்திய சுத்த சிவசத்தியானது,—முகிழ்க்கும் - திருசயமின்றித் திருக்குரூபியாய ஸ்புரித்துத் தோற்றியறியப்படும் புறப்பொருளறிவாகிய அநந்த சிவசத்தியிலே;—தான் - சிவன்,—முன்னேயானவன்றே - தான் ஸ்புரித்துத்தோற்றான், தானப்படி ஸ்புரித்துத்தோற்றியறியப்படுவானாயின் புறப்பொருளாய்ப்போவனென்றுமாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பொன்மை நீலாதிகளைத் தன்னிறமே பற்றத் தானும் அத்தன்மைக ளனைத்துமாய்த் தோன்றி வேற்றுமையின்றி நிற்கும் படிகம்போல, முதல்வனுந் தனது சத்தியிற் காணப்பட்ட அப்பேதமெல்லாந் தானாகத் தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன்; அவன் யாண்டுஞ் சத்தியினிடமாகவே தோன்றுவானன்றித் தானாக வேறு தோன்றுனாகலா னென்பதாம்.

வண்ணம் படிகநிறம்.

ஏகாரந் தேற்றம்.

தன்னென்றது இடைச்சொல், கிரியைதன்னு லாக்குவ னென்றாற்போல.

ஆகவென வருவித் துரைக்க.

இவை நான்கு செய்யுளானுஞ் சிவபேதவாதிகள் கூறுங் கூடாமை யாசங்கித்துப் பரிகரித்து மேலது சாதிக்கப்பட்டது.

இம்முத்திறத் தொன்பது செய்யுளும் 'தானமுதல்' என்ற தனை வலியுறுத்தியவாறு

நிரம்பவழகியருரை வருமாறு.

பரமேஸ்வரன் சத்தியாலே கொள்ளப்பட்ட திருமேனிக ளெல்லாம் தான் பலபிரகாரமாய்நின்று நடத்துகைச் செய்கை தன்னுடைமை குன்றாமல் ஒன்றாய்நின்ற தெப்படியென்றவனை நோக்கி ஒருதிட்டாந்தமிட் டருளிச்செய்கிறார்

பொன்மை நீலாதிவண்ணம் பொருந்திடப் பளிங்கவற்றி ன் றன்மையாய் நிற்குமாபோல-பொன்மையுங் கறுப்புமுதலா ன பஞ்சவன்னங்களும் படிகத்திலே சென்று பிரதி விம்பஞ் செய்ய, அந்தப் படிகமானது அந்தவன்னங்களைத் தன்னிடத்தி லே வலித்துக்கொண்டு அதுவதுவாய் நிற்குமுறைமைபோல,— சத்திதன் பேதமெல்லா நின்மலன் றானாய்த்தோன்றி - அந்தச் சத்தியினுடைய வேறுபாடுகளெல்லாம் நின்மலனாகிய சிவ ன் றானாகவே தோன்றி,—நிலைமை யொன்றாயே நிற்பன - இப் படிக் கூடிநிற்கைச் செய்தேயும் தன்னுண்மை குலையாமல் ஒன் றாயே நிற்பன,—முன்னருட் சத்திதன்பால் முகிழ்க்கும் தான முன்னையானன்றே - முற்பட்ட பராசத்தி அந்த பரமேஸ்வரனி

டத்திலே தோன்றுநிற்கும்; தானந்த பராசத்தியி னிடத்திலே தோன்று.

இக்கூறு சொல்லியது படிகமானது பஞ்சவன்னங்களோடே கூடி யதுவதுவாய நிறக்கச் செய்தேயும் தன்னுண்மை குன்றாமல் நின்ற தன்மைபோல், சிவனும் தனது சத்திகளுடனே கூடி அதுவதுவாய நிறக்கச் செய்தேயும் தன்னுண்மை குன்றாமல் ஒன்றாய் நிற்பனென்றும்; பராசத்தி தன்னிடத்திலே தோன்றுமென்றும், தானதில் தோன்றுமென்னும் முறைமையு மறிவித்தது.

சுப்ரமணியதேசிகருரை வருமாறு.

—0—

பொன்மை நிலாதியன்னம் பொருந்திட - பொன்மைநிலா திகளின் தன்னிறமே பற்ற,—அவற்றின் றன்மையாய் நிற்கும் பளிங்குபோல - தானும் அத்தன்மைக ளனைத்துமாய்த் தோன்றி வேற்றுமையின்றி நிற்கும் படிகம்போல்,—நின்மல சத்திக ளபேதமெல்லாம் - முதல்வனுந் தனது சத்தியிற் காணப்படும் அபேதமெல்லாம்,— தானாய்த் தோன்றி நிலைமை யொன்றாயே நிற்பன - தானாகத் தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன,— முன்னருட் சத்தியினபான முகிழ்க்கும் - அவன் யாண்டுஞ் சத்தியி னிடமாகவே தோன்றுவானன்றி,— தான் முளையானன்றே - தானாக வேறு தோன்றுங்கலான

இவை நான்கு செய்யுளானுஞ் சிவபேதவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துப் பரிகரித்து மேலது சாதிக்கப்பட்டது.

இம்முத்திறத்து ஒன்பது செய்யுளுந் தானமுத லென்றதனை வலியுறுத்தியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யைக்கியமாயிருக்கிற சிவசத்திகள் விசுவத்தின் கண்ணே பேதமாய நிற்குமுறைமை யுணர்த்துகிறார்.

சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா,
மொத்தொவ்வா வாணும்பெண்ணு முணர்குண குணி
யுமாக, வைத்தன னவளால்வந்த வாக்கமிவ் வாழ்க்கை
யெல்லா, மிதனையு மறியாவிட்ட லிங்கத்தி னியல்பு
மோரார். (சாக)

(இ-ள்) சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம் — இந்தப் பிரபஞ்சமெல்லாஞ் சத்தியுஞ் சிவமுமாகிய முறைமையை யுடையது,

ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியுமாக வைத்தனன் — சிவ ஞான பெண்ணென்னும் வடிவொத்தாண் குறியாகிய கோசமும் பெண்குறியாகிய யோனியு மொவ்வாதென றறியப்பட்ட குணமுங் குணியுமாகிய பதார்த்தங்களாக வைத்தனன்;

அவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா மிதனையு மறி — ஆகலா லிந்தப் பிரபஞ்சமாகிய சராசரங்க ளாணெல்லாஞ் சிவனாகவும், பெண்ணெல்லாஞ் சத்தியாகவும் வயாபியாநிற்கு முறைமையெல்லாம், இந்தச் சத்தியினுடைய சா

யார் மர்த்தியத்தா லுண்டாயதென் றறியார்கள். இஃதன்றி

பீட லிங்கத்தி னியல்புமோரார. இலிங்கத்தினுடைய பீடம் மனோன்மணி சொரூபமாகவும், சிவலிங்கஞ் சதாசிவமூர்த்தியினுடைய சொரூபமாகவு நிற்கிற முறைமையினையுந் தெளியார்கள். எ - று.

ஞானசத்திமயஞ் சிவலிங்கமெனவுங் கிரியாசத்தி மயம் பீடமெனவு முணரப்படும்.

இதற்கு சு-பிரபேதம் வாயவ்ய சங்கிதையு மெனவறிக. (௬௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—()—

மேல் சத்திசிவமே ப்ரபஞ்சத்திற்குப் பரமகாரணமென் றுணர்த்துதல்

சத்தியுஞ் சிவமுமாயதன்மை யிவ்வுலகமெல்லாம் - சத்தியுஞ் சிவமும் பொருந்தி நின்றமையினாலே இந்த லோகங்களெல்லா முண்டானது பொருந்திநின்ற முறைமை யெவ்வாறெனனில்?—ஒத்தொவ்வா வாணும் பெண்ணும்-சைதன்ய ஸ்வரூபமானது ஒத்திருக்க விக்ரஹங்கள் ஈஸ்வரனென்றும் ஈஸ்வரியென்றும், புருஷரூபமும் ஸ்த்ரீரூபமுமாக பேதமாம் ஆகில்பேதமேனெனனில்?—உணர்குணகுணியுமாக வைத்தனன் - விக்ரஹங்களைறிச் சததராய்நின்ற பொழுது சக்திகுணமும் சத்தன குணியுமாய் நின்று அவ்வாறே வஸ்துக்களெல்லாங் குணகுணிகளாகவே யுண்டாக்கி நிறுத்தினான்,— அவளால்வந்த வாக்

கமிவ் வாழ்க்கையெல்லாம் - ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவனபோக மிவைகளெல்லாம் அந்தச் சத்தியாலே யுண்டாகக் கப்பட்டதோ — இதனையுமறியாத ஈசுவரவாதிகளாயிருக்கிற பெயர்கள் அதனை யறியாமல் அந்யதாவாகச் சொல்லுவார்கள் அப்படிச்சத்தி சிவங்களுண்டாகக் கண்டதில்லை, இவ்விடத்து ஸ்ரீபுருஷ சமயோகத்திலேதானே பிரஜோத்பத்திகளுண்டாகக் கண்டோமென்று ப்ரத்தியக்ஷவாதிகள் சொல்லில்,— அப்படி ஸ்ரீபுருஷ சமயோகத்திலே யுண்டாகிறதும அந்தச் சத்திசிவங்களின்ற முறைமையினாலே அஃதெவ்வாறெனில்?— பீடலிங்கத்தி னியல்பேமோ ராா் - சிவனாதரூபலிங்கமாகவும் சத்தியிந்தரூபமான பீடமாகவும், யோனியும் லிங்கமுமாக எப்பொழுதுங் கூடியிருந்தது இப்படியே யோனிலிங்க சமபந்தத்தி னாலே சகல பரஜோத்பத்திகளை யுண்டாக்குகிறது மறியாதாக ள என்றிதன பொருள்

ததுக்தம் வாதுலே — நாதோ லிங்கமிதி ஜ்ஞேயம்
பிந்து: பீடமிதி ஸ்ம்ருதம் | நாதபிந்த்வாத்மகம் ஸர்வம்
ஜகத்ஸ்தாவரஜங்கமம் || லிங்கஸம்ஸ்தாநமிதி ஜ்ஞேயம்
பீடம் சக்திரிதி ஸ்ம்ருதம் | யோநிலிங்கப்ரகாரேண
ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகாரணம் || ஸதாஸம்யோகதஸ்
தஸ்மாத் ஜகத்ஸர்வம் ப்ரவர்த்ததே | லிங்கே ஸஞ்ஜாய
தே தஸ்மாத் ஜகத் ஸ்தாவரஜங்கமம் || ததா லிங்கம்ஸமஸ்ஸ
ஷேண ஜகத்ஸர்வம் ப்ரவர்த்ததேதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு

——o——

உலகினிற் பதார்த்தங்கள் சிலவவயவங்களொத்துஞ் சில வவயவங்களொவ்வாமலு மிருக்கின்றவாறு பெண்ணீடசியுருட்சி முதலிய குணி குணம் இலிங்கம் பீடம் என்கின்ற சடப தார்த்தங்களிலேயும், சற்பொருளறிவு புறப்பொருளறிவு என்கின்ற சிற்குணி குணங்களிலேயும், சிவனுக்குஞ் சத்திக்கு முறையி லதிட்டானங் கற்பித்திருக்கையால், எல்லாருஞ் சிவ சிவசத்தி மயமென்று செப்புகின்றார்.

வெளிய பொருள்.

——

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

இறைவ னிவ்வாறு சத்தியுஞ் சிவமுமெனத் தானொருவனே இருவேறு வகைப்பட்ட தன்மைகளையுடைத்தலானன்றே, பல வேறுவகைப்பட்ட உயிர்வடிவங்களனைத்துங் குறியானுங் குணத்தானும் ஆண்பெண்ணென அவ்வியோனிகளுள் இருவேறு வகையாயடங்கித் தம்முட் கூடிக் களித்து வாழாநின்றனவாகலான், இப்படியே மீண்டுங் கூறிப்போந்த வாழ்வுகளெல்லாஞ் சிவசத்தி மணந்தருளாகிய வாழ்வென்பதறியப்படும். அச்செலாம் இலிங்சாங்க பகாங்கமாம்படி சிவமுஞ் சத்தியுங் கொண்டருளிய பீடலிங்கவடிவமே அங்ஙனமிருவேறு வகைப்பட வைத்ததனைக் கண்கூடாக வறியச்செய்தல் சான்றென்பதாம்.

ஒத்தொவ்வாமையாவது, அவ்வப் பிறப்புக்கியைய வடி

வங்கவொல்லா மொத்தும் குறிகுணங்களொவ்வாது இருவேறு வகைப் படுதல்.

ஆண்பெண்ணென்பன குறியுணர நின்றன.

உணர்குணகுணியுமாகி யென்பது. அவ்வக்குறிகட்கேற்ப உணரப்படு மிருவேறு வகைக் குணங்களை யுடைய குணியுமாகி யென்பதாம்.

இருவேறுவகைக் குணமுடையன வாதலாவது ஆணெனப் பட்டனவெல்லாம் ஆண்மைக்குணமும், பெண்ணெனப்பட்டனவெல்லாம் அமைதிக் குணமு முடையனவாதல்.

ஈண்டுக் குணியென்றது வாளாபெயராய் நின்றது, கரிகரம் பணிபணம் என்றாற்போல.

ஈண்டுக் கூறிப்போந்த வழக்கையாவன? உலகமெல்லாம் அவயவப்பகுப்புடையனவாதலும், முத்தொழிலுடையனவாதலும், கருத்தாவையுடையன வாதலும், சங்காரக்கடவுளினின்றுந் தோன்றுவன வாதலும், அவனையே முதற்கடவுளாக வுடையன வாதலும் என்னுமிவை.

இதனானே, தான்முதலாதலைக் கண்கூடாக விளக்குமுகத்தான் முதல்வனுக்குரிய பொதுவியல்பினைத் தொகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு

இப்படி முன்சொல்லப்பட்ட சத்தி பலவடிவான அவதரந்தோன்றும் சிவனும் அந்தச்சத்தி தானாகவே தோன்றிநிற்ப

னென்றும் எங்கே காணப்பட்டது என்றவனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

வன், றருமுயி ரவனையாகா வுயிரவை தானுமாகான், மரு
பவ னிவைதானும் வேறுமாய் மன்னினனே. (உ)

(இ-ள)உருவொ	தத்துவங்களுடனே பொருந்திநிற்கிற வா
டு கருவியெ	ன்மாவானவ னிவையிற்றைக் கூடிக் காரிய
லலா முயிரா	ப்படுத்தி நிற்கையிலும், இவையிற்றுக்குத்
கொடு நின்றுவே	தாரகுதாரமுமாய் வேறுமாய் நின்றாற்போ
றாய வருவது	ல,
போல	
ஈச னுயிர்களி	சிவனுமிப்படி யான்மாக்களைப் பொருந்
னொ பருவியொழுவ	தியிருப்பான இருந்தானே யாயினும்,
ன	
ஒருமுயி ரவ	சிவனுமந்த வான்மாவுங் கூடினவிடத்
னையாகா	தந்தவான்மாவாகக் காத்தாவாக மாட்டாது
உயிரவை தா	அந்தக்காத்தா வுயிர்களுடனே கூடி யிரு
னுமாகான	ந்தானேயாயினும், அந்த வுயிர்களுமாகான.
வருபவனிவை	சிவனிப்படி யான்மாக்களுக்கு வேறாயிரு
தானுயும வேறு	ந்தானேயாயினும் வியாத்தியிலே யந
மாய மனனி நி	னியமாய் நிலைபெற்றுநிற்பன. எ - று.
றை	

ஐராரம அசைநிலை
இசாரகு வாதூசோதகரம். (௫)

சிவாகரயோகியருரை வருமாறு.

———o———

சீவசிவர்களுடைய அத்வைதத்திற்கு உதாரணம்

வருபவ னீசன - ஏககாலத்து மெவவிடத்தும் ஆன்மாக்களைப் பிறிவறக்கூடி வருபவனுன ஈஸ்வரன,—வேறுமாய் மன்னிநின்றே - ஆனமாககளுடைய காத்ருத்வ போக்த்ருத்வாதிகளுக்கு அங்யமாக ஆனமாக்களிலே நிலைபெற்று நின்றே, கன

ம்மாறுகுணமான சுகதுக்கபோகங்களைப் புசிப்பிப்பன,—உயிர்க
ளின் மருவியிவைதாமும் வாழ்வன-முத்தான்மாக்களை வே
றறக்கலந்து ஜீவஸ்வரூபந் தோன்றாமற் றானேயாக வாழ்வன.
ஜீவான்மாக்களுடைய மலநீக்கிச் சிவரூபமாக்கென்ன ஆதாரமோ
வென்னில்?—கருமுயிர் ரயனேயாகா - சிவனாற் பிரகாசிப்பிக்க
ப்பட்ட வறிவையுடைய வான்மா சிவனை வியாபியாது அதெ
ன்போல வென்னில்?—உருவொடு கருவியெல்லா முயிர்கொடு
நின்று வேறாய வருவ துயிரவைதானு மாகாபோல - தேகேந்
திரியாந்தக் கரணங்களை ஆன்மா தானாக வபிமானம் பண்ணி
க்கொண்டு நின்று, அதற்கு அந்நியமாய வருவது அவ்வாறு கூடி
நின்ற காலத்தும் தேகேந்திரியாதிக ளான்மா வாகாததுபோ
ல இவைதாமும் வேறுமாய் என்ற இரண்டுமையும் சிவ
னை சீவான்மாக்களு மல்ல அவையிற்றுக்களுக்கு அந்நியமுமல்ல
தானாகமிடமே[1] என்றது. இருவர் கூடியாழ்த லின்புறுபுண
ர்ச்சி யென்றிதன்பொருள்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

சிவனுக்குமான்மாவுக்கு மிப்போது சொல்லிய சம்பந்தத் தினாலே யொரு பிரகார மத்துவைத மறிவிக்கப்பட்ட தாலும், வஸ்துவினாலே பேதப்படுமென் பதுரைக்கின்றார்.

உயிர் - ஆன்மா,— உருவொடு கருவியெல்லாங்கொடு நின்று - தூலதேக சூக்கும தேக பரதேக மிவைகளைக்கொண்டு நின்று, தனது சங்கற்ப ரூபை சன்னிதி மாத்திரத்தாற் செலுத்தித் தொழில்களைப் பண்ணுவித்து நின்று,— வேறாய்வருவது போல - உயிர்வேறு சரீரம் வேறென்று நின்றாற்போல,—ஈச னுயிர்களின் மருவிவாழ்வன - ஆன்மாக்களிடத்துச் சம்பந்தித்

த் தனது சங்கற்ப ரூப சந்நிதிமாத்திரத்தினாலே செலுத்தி நிற்பன. அமூர்த்தமாய், வியாபகமா யிருக்கின்ற வான்மாக்களைச் செலுத்தும் வகை யெப்படி யெனில்? சரீரத்திலவயவங்களை யங்கங்குப் பிரேரித் தான்மாக்களிடத்தி லறிவு தொழில்களை யந்தச் சரீரத்தி லவயவங்களைக்கொண்டு விளக்கிக் காரியம நிகழ்ப்பண்ணுவதே செலுத்துவதென்றபடி. ஆதலால்,—தருமுயிராவனேயாகா வுயிரவை தானுமாகான - செலுத்தப்படும் பொருளாகிய ஆன்மாக்களும், செலுத்தும் பொருளாகிய சிவனும் ஒருபொருளாகா,— வருமவனிவைதானாயும் வேறுமாய் மன்னிநின்றே - அந்தச்சிவன் முன்சொல்லிய வியாப்பியவியாபக சம்பந்தத்தினாலே இந்தஆன்மாக்களாயும், வஸ்துவினாலே வேறாய்த் தனித் தொருபொருளாயும் இருப்பன,—முத்தான்மாக்கள் நிரஞ்சனர்களாதலால், சிவன்போலச் சிவப்பிரேரியர்களன்று.

‘‘வஸ்யோநாவிர்த்த கீர்யாஸ்ய
ஸவதயேவாபிமோக்ஷோருத’’

என்று மோக்ஷ பரியந்தம சிவனுக்கு வசியனென்னும் பெயர் மிருகேந்திர வசனத்தினாலே காணக.

சிவஞானயோகியருரை வருமாறு.

முதல்வன் அங்ஙனம் வேறாகியும், உலகெலாமாகி நிற்றல் அனைவுடைத் தென்பது உடம்பின் கண்ணதாகிய உயிரியல்பினை வைத்துக் கண்டுகொள்க வென்பதாம்.

ற சாரியை

அவை பகுதிப்பொருள் விகுதி.

நின்று வருபவ னெனவியையும்.

இவையிரண்டு செய்யுளானும் பேதவாதம் பேதாபேதவாதம் அபேதவாதமாகிய மூன்றுமதங்களையும் பரிகரித்து, 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' என்ற முதற்கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது.

இன்னும் இதனைச்சுட்டுவன கடாவிடைகளெல்லாம் முன்னர் விரித்தாகக் கூறப்படுமென்பதுபற்றி ஈண்டு விரித்திலர்.

இனி ஒளியாயோயாங்குற்ற கட்படுவ கடாவிடைகளே மேலைச் சூத்திரத்துள் இவைபற்றிக் கூறிய போந்தமையின் ஈண்டுத் தெரித்திலர்.

அஃதங்ஙனமாக, முதனூற்பொருளை முதனூலிற் கிடந்தவாறன்றித் தொகுத்தல் முதலிய நால்வகையாற்பிறழ்ந் தொன்றுபற்றிச் செய்வதன்றே வழிநூலாவது, அவ்வாறன்றி, 'அன்றவை பதிதாமென்றென் றறையும்' எனவும், 'உருவொடு கருவியெல்லாம்' எனவும், பிறாண்டுஞ் சிலவற்றை முதனூலிற் கிடந்தவாறே கூறுதல் வழிநூற்கு மரபன்று போலுமெனின்?—"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கு—முன்னோரின், வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" என்பவாகலின், அப்பயன்பற்றி ஒரோவழி யங்ஙனங் கூறுதலும் வழிநூற்கு மரபாமென விடுக்க.

இதனானே கூறியது கூறலென்னும் வழுவின்மையுங் கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்தப் பரப்பிரமத்தைப்போல் நீர் சொல்லுகிற வான்மாவைக் காணப்பட்டதில்லையே யென்ன, மேலருளிச்செய்கிறார்.

உருவொடு கருவியெல்லா முயிரொடு நின்று வேறுப் வருவது போல - ஆன்மாவானது இந்திரியங்கள் கரணங்கள் முதலான கருவிகளெல்லாங் கூடினதொரு சரீரத்தை யெடுத்துக்கொண்டு நிற்கச்செய்யவே, இந்தச் சரீரத்துக் குள்ளேயெனச் சொல்லியழைக்க, இவையிற்றோடுள்ள வயிக்கியபாவத்தினாலே யிவையிற்றை யுள்ளடக்கி யிவையிற்றுக்கு வேறாயிருக்கிற தானவந்து ஒன்றுறபோல,—ஈசனுயிர்களின் மருவியாழவன-சிவஞானமாகிறதோடுள்ள வயிக்யபாவத்தினாலே ஆன்மாவை யுள்ளடக்கித் தானபிரகாசித்து நிற்பன் ஆன்மாத் தானே அந்நிய கர்த்தாவாய் நிற்பனென்னில்?—கருமுயி ரவனையாகா - உண்டாகப்பட்ட வான்மாவும் சிவனோடே கூடியிருந்தாலுமின்றுஞ் சிவனாக மாட்டான். அந்தக் கர்த்தாத்தானே ஆன்மாவாய் நிற்பனென்னில்?—உயிரவை தானுமாகா-அந்தக் கர்த்தாவும் இப்படி ஆன்மாக்களுடனே கூடியிருந்தாலுமின்று மந்த ஆன்மாக்களாகிறதில்லை. அந்த இரண்டுஞ் சமமென்னில்?—வருபவ னைவைத்தானுயுட வேறுமாய் மன்னிநின்றே-சிவனு மான்மாக்களுமா யவையிற்றுக்கு வேறுமாய் வரத்தக்க சத்தியை யுடையனாய் நிற்பன். அதனைப்போல, ஆன்மாச் சரீரமுமா யதற்குவேறுமாய்நின்ற தன்மைபோல.

இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம் "கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள, மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி, யவனுள்ளமா கில்லா னுள்ளமவனாமாட்டா, தவனுள்ளமா யல்லனுமா மங்கு" "என்றும், "அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ, லுருக்கியுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித், தானே யுலகாந் தமியேனுள்ளம்புகுதல், யானே யுலகென்ப வின்று" என்னுமதுங் கண்டுகொள்க.

சிவஞானபோதம் - உ - சூ, க - ௪ - வெ.

இதனாற் சொல்லியது ஆன்மாச் சரீரத்தை யுள்ளடக்கித் தானே பிரகாசித்து நின்றாற்போலப் பரமேஸ்வரனும் ஆன்மாக்களை யுள்ளடக்கித் தானே பிரகாசித்து நிற்பனென்றும், பரமேஸ்வர னான்மாவுமா யல்லவுமாய் நிற்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

உயிருருவொடு கருவியெல்லாங் கொண்டுநின்று-உயிர்நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படுந் தனுவோ டைம்பொறி முதலிய கருவிகளையுந் தான்கொண்டு நின்றதாயினும்,— வேறாயுரு வதுபோல்-அவ்வாறுடனாய வழியு முயிருயிரே யுடம்புடம்பே யுயிருடம்பா யொழியா துடம்புயிராகமாட்டாததுபோல,—ஈச னுயிர்களின் மருவிவாழ்வன-முதல்வ னுயிர்களோ டபேதமாய்க்கலந்து நிற்பன,— தானுமுயிரவையாகான தருமுயிரவனாகா-அவ்வாறுகலந்து நின்றவழியு முதல்வன் முதல்வனே' உயிருயிரே' முதல்வனுயிரா யொழியான, தரப்பட்ட உயிர் முதல்வனாகமாட்டாது அவ்வாறாயினும்,—இவைகாணும் வேறுமாயு மன்னினின்றே வருபவன்-உயிரவ்வுடம்பின் வேறாயும் அதுவாகிநிற்றல் காணப்படுதல் போல, முதல்வன் அங்ஙனம் வேறாயு முலகெலாமாகி நிற்றலமைவுடைத்தெனக.

இவையிரண்டு செய்யுளானும் பேதவாதம் பேதாபேத வாதம்அபேதவாதமாகிய மூன்றுமதங்களையும் பரிகரித்து, 'உலகெலாமாகி வேறா யுடனுமாய்' நின்றமுதற் கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது.

☞ உ-சூ, க-அ, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யான்மாக்களிடத் திரண்டற நிற்கு
ங் கர்த்தா, விருவினைப் பலன்களைக் கொ
டுக்கு முறைமை யுணர்த்துகிறார்

இருவினை யின்பதுன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து,
வருவது போவதாகு மன்னிய வினைப்பயன்க, டரும
ரன் றரணியோடு தராபதி போலத்தானே, மருவிடா
வடிவுங்கன்ம பலன்களு மறுமைக்கண்ணே. (ச)

(இ - ள) **இருவினை யின்ப துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்** — இவ்வான்மா புண்ணிய பாவங்களுக்கு கீடாகப் பிறந்துவருவது மிறந்துபோவதுமாகும், கன்மரூ சடமாதலால் ருளுக்குச் சரீரத்தினை யெடுக்கவற்றே வெனில்?

மன்னிய வினைப்பலன்க டருமரன் — ஆன்மாக்கள் முற்சனனத்தி லார்ச்சித்த கன்மபலத்துக் கீடாக நிலைபெற்ற விருவினைப் பயன்களை பேருமற் குறையாமற் கர்த்தா வறிந்து கொடுப்பன. அஃதெனபோ லவெனனில்?

தரணியோடு தராபதி போல — விசுவத்தி லானமாக்களுக் கதிபனாயிருக்கிற விராசாவானவர்கள் செயல்களுக் கீடாக நிக்கிரக மநுக்கிரகஞ் செய்யு முறைமை போல;

தாமே மருவிடா வடிவுங்கன — இப்படியொழிர் தான்மாக்களுக்கு வருகிற சகத்துக் கேதுவாகிய சரீரமு மத

மபலன்களு மறு மைக்கண்ணே. ற்கேதுவாகிய கன்மபலங்களுந் தாமேவந் து பொருந்தமாட்டாது, ஆதலா லொருகர்த் தாக கூட்டிக் காரியப்படுத்துவன. எ - று.

ஓடு இடைச்சொல்.

'இருவினை' முதல் 'பெறிழ' ஈருக நாலு மொருதொடர். இதற்குப பாராசுகிரைபெனறு மாகமம (௭)

சிவாகரயோகியருரை வருமாறு.

—o—

மேல மாறிப்பிறந்து வருமா றுணர்த்துதல்.

இவ்வுயி ரிருவினை யினபதுனபத்து பிறந்துவருவது மிற ந்துபோவது மாகும-புண்ணிய பாபத்தின பலமாகிய சுகத்தை யும துககத்தையும புசிப்பதாக பூமியிலே வந்து பிறப்பதும ஸ வாசகத்திலே புண்ணியபலமே புசிப்பதாகவும நரகத்திலேபா பபலமே புசிப்பதாகவும் இறந்து போவதுமாம,—மனனிய வி னைப்பயனக டருமரன - இவ்வாறு பொருந்திய புண்ணியபா ப பலஙகளை ஹரனே கொடுப்பன. எவ்வாறெனனில்,— தரணி போடு தராபதிப போல-பூமியானது விகாரமனறி நினறு அவ ரவர பண்ணின காஷஹுதிகளுககு ஏறறபலத்தைககொடுககிற பபோல காமபலஙகளை யுண்டாககிய பூபதியானவன அவ்வவ ர பணணின கிருஷியாதி பலனகளை யவ்வவர்ககேயாகச செலு த்துமாபோல அவ்வவாபணணின காமபலத்தை அவ்வவரை யே புசிககப்பணணுவன. காமமே பலத்தைககொடுககுமல்லது காமாநுகுணமாக மாயையே பலத்தைக கொடுககும, இதற் கொரு கர்த்தா வேனெனனில்?—தானே மருவிடாவடிவுங் கனம பலஙகளு மறுமைக் கண்ணே - மாயை ஜடமாகை யால் தானே யுருவாகவறியாது, கனமயானது செய்தவுட

னே நாசமாகையால் அநந்தகனமதத்திலே ஒரு அதிருஷ்டத்தை நிச்சயித்து அதை ‡அதிஷ்டானம்பண்ணி மறுமைக்குக் காரணமானே பலங்கொடுப்பதாகையால கருமந்தானே பலங்கொடுக்க மாட்டாது, ஆகையால் ஈசுரனே கருமபலத்தைக் கொடுக்க வேண்டுமென்று இதன்பொருள்.

‡ அதிஷ்டானம் - வழியிலிருப்பது.

இவ்வுயிரென்பது சகலரென்றறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மேல்வினையால் மாறிப்பிறந்து வருமாறு உணர்த்துகின்றார்.

தரணியோடு தராபதிபோல - பூமியோடு கூடிய விராசா கிருஷிபாதிபலங்களை யவரவர் செய்தியறிந்து கொடுப்பதுபோல,— அரன் - மாயையோடு கூடியசிவன்,—மன்னியவினைப்பயன்கள் கருமம் - அவனவனுக்குப் பொருந்திய சுகதுக்க மோகங்களைக் கொடுப்பன்.

தரணியாகிய முதற்காரணமின்றித் தராபதி பலன் கொடுக்கமாட்டான் தராபதியன்றித் தரணிபறிவின்மையாற் பலன் கொடுக்கமாட்டாது கிருஷித்தொழிலும்மப்படியே அப்படிச் சிவனும் மாயையும் கன்மமும் மூன்றுமபிரிந்து பலன்கொடாது.

இருவினை யின்பதுன்பத் தென்றவிடத்து இருவினைகளாலென விரிக்க.

இன்பதுன்பத்து - சுகதுக்க காரண யோனிகளில் வருவது போவது சுவர்க்க நரகங்களில்.

மற்றதுவெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனி நாற்பத்தேழாஞ் செய்யுளான் 'அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையி னமர்ந்து செல்ல' என்ற இரண்டாஞ் சூத்திரத்தை அவ்வா மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்துகின்றார்.

மேற் கூறிப் போந்தவுயிர், முற்பிறவியிற் செய்யப்பட்டுக் கிடந்த இருவினைக்கேற்பப் பிறவியின் வரும் இன்பத்துன்பந் துகர்ச்சியான், மேலும் வினையீட்டலின், அத்துணை மீளமீளப் பிறந்திறந்துழன்று நரகசுவர்க்கங்களிற் சென்று மீளுமுடைத்தாகலான், உடம்போடு நிலைபெறுமவ் வினைப்பயன்களை, மருத்துவனும் வேந்தனும்போல, முதல்வனே யவ்வுயிர்க்குத் தனதாணையாற் கூட்டுவன்; இவ்வாறன்றிச் சடமாகிய அவைதாமே மறுமைக்க ணுய்த்துக் கூட்டமாட்டா வென்பதாம்.

தாணமென்னும் வடமொழி கட்டலென்னும் பொருட்டாகலான், நோயைக் கட்பித்தலின் மருத்துவனுக்குந் தாணியெனக் காரணக்குறியாயிற் றென்பது.

அரசுகளின்னன்றே மருத்துவ னுரைத்த நூலி னென்ன முண்ணா வருத்துக் கூறுவாராயினு ரென்பது.

இதனானே முதல்வ னவ்வாறு மூவகையுமாய் நிற்றலானாய பயன் இதுவென்ப துணர்த்திய முகத்தான், இரண்டாங் கூற்றின்கட் பிண்டியலெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு

எல்லாம் பரப்பிரமமே யென்றும் புண்ணிய பாவங்கள் பரப்பிரமத்துக்கு வேண்டுவ தில்லையென்று மவனை மறுத்தருளிச் செய்கிறார்

இருவினை யின்ப துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்துவருவ து போவதாகும் - முற்சன்னத்திற் செய்த புண்ணியபாவங் களுக்கிடான சுகதுக்கங்களை யநுபவிக்கைக்கு இந்தவான் மாக்கள் சனனமரணப்பட்டுச் சொர்க்கநரகங்களிலே போவ தும் பூலோகத்திலே வருவது முண்டுத்தாயிருக்கும். இந்தச் சு கதுக்கங்க ளிவனுக்கு வந்தடுக்கிறபடி யெப்படியெனில்?— மன்னிய வினைப்பலன்கட்டுமரன் - ஆன்மாக்களுக்கநாதியேநிலை பெற்றுள்ள புண்ணிய பாவங்களின் முறைமைக் கிடான சுகது க்கங்களைப் பரமேஸ்வரன் கொடாநிற்பன் அதென்னபோல வெ ன்னில்?—தரணியோடுராசபதிபோல - இராஜாவானவன் விசு வத்து ளுள்ளவர்களவரவர் செய்த புண்ணிய பாவங்கள் தா னே அதற்குத்தக்க பலன்களைக்கொடுக்கு மென்றொழிந்து கர்த்தா வேண்டுவ தில்லையென்ற பட்டாசாரியனை மறுத்து மேலருளிச் செய்கிறார் —தாமேமருவிடாவடிவுங் கன்மபலன்களு மறுமை க்கண்ணே - இப்படி யொழிந்து வருகிற சந்ததுக்குண்டா ன சரீரமும், புண்ணியபாவங்களுக்குண்டான இன்பதுன்பங்க ளும், இவை யசேதனமானபடியினாலே தானேவந்து பொருந்தமா ட்டாது, ஆகையால் கன்மங்களையும் ஆன்மாக்களையும் பரமேஸ் வரனே அறிந்து கூட்டவேணும்

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் "உள்ளதேதோ ற்ற வுயிரணையுமவ்வுடலி, னுள்ளதா முற்செய்வினை யுள்ளடை வே—வள்ளலவன், செய்பவர்செய்திப் பயன்விளைக்குஞ் செய் யேபோல், செய்ப செயலணையா சென்று" என்னுமதுங் கண்டு கொள்க.

சிவஞானபோதம் - உ - கு, ரு-வெ.

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் கன்மத்துக் கீடாக சனன மரணப்பட்டுச் சொர்க்கநரகங்களிலே போவார்களென்

றும், மீளவும் பூமியின்கண்ணே வருவானாகவென்றும், அந்தக் கன்மங்கள் சடமானபடியாலே ஆன்மாக்களைத் தாமாகச் சென்று கூடாதென்றும், ஆன்மா தனக்கென்ன வறிவில்லாதது சொண்டு தான்செய்த கன்மங்களை யறிந்து கூட்டமாட்டாது; ஆகையால் அவ்விரண்டையும் பரமேஸ்வரனே யறிந்து கூட்டுவனென்னு முறைமையு மறிவித்தது.

‘உலகெலாம்’ ‘ஒன்றென’ ‘உருவொடு’ ‘இருவினையின்பய’ ஆகத் திருவிருத்தம் - ௪, மாயாவாதி இவனைமறுத்து ஆன்மா வுண்டென்றும் புண்ணியபாவங்க ளுண்டென்றும் சொல்லுகிறது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இவ்வுயிர் - மேற்கூறிப்போந்த வுயிர்,— இருவினை - முன் பிறவியிற் செய்யப்பட்டுக் கிடந்த இருவினைக் கீடாக, இன்பத் துன்பத்து - இப்பிறவியின் வரும் இன்பதுன்ப நுகர்ச்சியானே மேலும் வினையேறுதலின்,— பிறந்திறந்து - அதனானே மீளமீ ட்பிறந்திறந்தும்,— வருவது போவதாகும் - நரகசுவர்க்கங்க ளிற் சென்று மீட்டு முடைத்தாகலான்,— மன்னிய வினைப்பல ன்கள் - உடம்பொடு நிலைபெறு மவ்வினைப் பயன்களை,— தா ளீயோடு தராபதிபோல் - மருத்துவனும் வேந்தனும் போல,— அரன்றரும் - முதல்வனே யவ்வுயிர்கட்குத் தன்னாணையாற் கூட்டுவன்,— வடிவுங் கன்மபலங்களும் - இவ்வாறன்றி யுருவுங் கன் மப்பயனுஞ் சடமாகலின்,— தாமே மறுமைக் கண்ணே மருவிடா - மறுமைக்கண்ணே வந்து கூடமாட்டா தென்பதாம்.

இதனானே முதல்வ னவ்வாறு மூவகையுமாய் நிற்றலானு யப்பய னிதுவென்ப துணர்த்து முகத்தா னிரண்டாங் கூற்றின் கட்படு மியல்பெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேல் லோகாயத னின்பதுன்ப மென்ப தொ
ருவர் தரவேண்டுவதில்லை, அவ்விரண்டுமி
யல்பாக வான்மாக்களுக் குண்டா
மென்பதனை யுணர்த்துகிறார்

இருவினை யென்னையின்பத் துன்பங்களியல்பதெ
ன்னின், ஒருதன்மை யியல்புக்குள்ள தொருவனுக் கி
ரண்டுசெய்தி, வருவதென் மலருந்தீயு மருவினல் வா
சம்வெம்மை, தருவதென் னீயென்செய்து தானியல்
பாகுமன்றே. (௫)

(இ-ள்) இருவினை யென்னையின்பத் துன்பங்க ளியல்பதென்னின் — ஆன்மாக்களுக்குச் சுகதுக்கமாகிய விருவினையுஞ் சுபாவத்திலே தானே யுண்டாம், ஒருவன் கொடுப்பனென்பானேன், அவ்விரண்டுந் தானே யுண்டாமென்று நீ சொல்லில் ?

ஒருதன்மை யியல்புக்குள்ளது — நீ யஃதியல்பென்று சொல்லுவையாகி லஃதொருபட் டிருக்கவேணுங்காண்

ஒருவனுக் கிரண்டுசெய்தி வருவதென் — இப்படி யியல் பொன்றாயே யிருப்பதொழிந் தான்மாக்களுக்குச் சுகதுக்கமென்ப திரண்டாய்வருகிற தெப்படியென்னின் ?

மலருந்தியு மருவலின் வாசம வெம்மை தருவதென் னீரென செய்து தானியல் பாகுமன்றே.

நீரானது மலரைப் பொருந்தினபோது வாசனையுண்டாம், அக்கினியைப் பொருந்தின போது வெம்மையுண்டாவானேன், அஃதென்ன கன்மத்தைச்செய்ததற் குண்டாயிற்று.

ஆகையா லான்மாக்கள் சுகியாயிருக்கிறதுந் துக்கியாயிருக்கிறது மொருவன் கொடுக்கவேண்டாம், சுபாவங்களாலும் எ-று (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் லோகாயதன் புண்ணியபாபங்களென்ப தொன்று மில்லை, சுகதுக்கங்கள் தேகத்துக்கு ஸ்வபாவமென்பதை பனிரண்டு விருத்தத்திலும் அநுவதித்து நிராகரித்தல

இருவினையென்னையின்பத் துன்பங்க ளிப்பலபதெனனில்-புண்ணிய பாபங்களென்றிரண்டுண்டென்று சொல்லுவானேன், சுகதுக்கங்கள் ஸ்வபாவமேயெனின்,—ஒருதன்மையியல்புக்குள்ள தொருவனுக்கு இரண்டுசெய்தி வருவதென் - ஸ்வபாவமான தொருபகுப்பாயிருப்பதன்றி யொருவனுக்கு சுகமும் துக்கமு மிரண்டுவகையாயிருப்பதேதெனனில்,— மலருந்தியு மருவலின் வாசம வெம்மை தருவதென் னீரைச்செய்து தானியல்பாகுமன்றே-புஷ்பமானது பொருந்தினபொழுது வாசனையையும் அக்னிபொருந்தினபோது உஷ்ணத்தையும் உண்டாக்குகிற நீரானது என்னபுண்ணிய பாபத்தைப்பண்ணிற்று, ஆகையாலெல்லார்க்கும் சுகதுக்கங்கள் ஸ்வபாவமே யெனில்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

உ. லோகாயதன் மதமாசங்கித்துத் தூஷிக்கின்றார்

இருவினையென்னை - பாவபுண்ணியமென்பதேது,—பிரத்தியக்ஷப்பிரமாணமொன்றுக்குமே விஷயமாகக் காணப்படாததாலும் நிஷ்பிரயோசனம்,—இன்பத்துன்பங்கள் பிறப்பதெனில் - சரீரத்தைத் தவிர ஆன்மாவில்லை, சரீரமான்மாவுக்குச் சுகதுக்கங்களைச் சுபாவமென்று நீ சொல்லில்,— ஒருதன்மையியல்புகளுள்ளது-சீதளம் ஜலத்துக்கியற்கை,— ஒருவனுக்கிரணம் செய்பிவருவதென - ஒருபுருஷனுக்குச் சுகதுக்கானுபவமிரண்டு வருவதேது,— மருந்தியும் மருவலின் வாசமயெமமை தருவதெனவீரன் செய்ததான - ஜலம் என்ன கன்மத்தைப் பயனளித்த தான புஷ்பாசகனிகள் பொருந்தியவிடத்து மண்ஞ்சூடு கொடுப்பது. ஏது காரணம். இல்லை, - இப்பாகு மண்றே - பொருளியற்கைதானே

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

இவ்வுரை - சூ - செ, சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

உளன் தொன்றல்ல, பின்னை யுளனேதது? இந்தச் சரீரத்துக்குச் சுகதுக்கங்க ளிரண்டு மியல்பாக வுண்டாமென்ற உலகாயதன்மத மருளிச் செய்கிறார்.

இருவினை யென்னை யின்பத் துன்பங்க ளியல்பதென்னில்- இரண்டுவினையாகச் சொல்லப்பட்ட புண்ணியபாவங்கள் வேண்டுவதில்லை, இந்தச் சரீரத்துக்கு உண்டாகிய சுகதுக்க மியல்பு காணுமென்று நீ சொல்லில்?—ஒருதன்மை யியல்புக்குள்ளது- இயல்பென்று சொல்லுவையாகில், அக்கினியும் உஷ்ணமும்போல வொருபடிப்பட் டிருக்கவேணும், அப்படியன்றிச் சுகதுக்கங்க ளிரண்டா யிருக்கையினா லியல்பென்ற தாகாது. இதுவன்றியும்,—ஒருவனுக் கிரண்டுசெய்தி வருவதென்ன - ஆனால் ஒருவனுயிருக்குச் சுகதுக்கமென்று இரண்டாய் வருகிறபடி யெப்படி,—மலருந்தியு மருவலின வாசமுமொன்றை சேருவதென்ன நீசொன்செய்து - பூவும் அக்கினியும் பொருந்த சலத்துக்கு கந்தமுமுஷ்ணமு முண்டாவானேன், அந்தச்சலம் என்ன கன்மத்தைச் செய்தது, அதைப்போலந்த சலத்துக்கு இரண்டு மியல்பாக வந்ததுபோல்—தானியல் பாகுமன்றே - புண்ணியபாவங்களால் வரவேண்டுவதில்லை, சுகதுக்கங்க ளிரண்டும் இந்தச் சரீரத்திலே நிற்கிற வறிவுக்கு இயல்பாகவுள்ள முறைமை காணும்

இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் அவனமதம் "இன்பொடு துன்பமெல்லா மெய்துவ கன்மமென்னி, னன்புனல் சந்தனு தி நலுகவு மணுகவொன்று, மின்பொலி யழலினோடு மேவுவ தன்மை தீமை, யென்செய்த தியம்பிடாய்நீ யிவையெலா மியல்ப தாமே" என்னுமதுங் கண்டுகொள்க

சித-பர, லோகா-ம, கா-செ

இதனாற் சொல்லியது ஆன்மாக்களுக்குப் புண்ணியபாவங்களுக் கிடாகச் சுகதுக்கம் வரவேண்டுவதில்லை, சலத்திலே பூவும் அக்கினியுஞ் சென்று பொருந்த கந்தமு முஷ்ணமுமியல்பாக வுண்டானாற்போல், சுகதுக்கங்களு மியல்பாகவந்து பொ

ருந்ததென்று உலகாயுதன் தன்மதஞ் சொன்னானென்னு முறைமையை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இவ்வுரை - ௬ - செ, சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்க.

மறைஞானதேசிகர்.

முன்சொன்ன லோகாயதனை மறுத்துணர்த்துகிறார்.

தன்னியல் பொழியப்பூவுந் தழலும்வந் தணையநீரின்,
மன்னிய விரண்டுசெய்தி வருமிரு வினையினாலு,
முன்னிய வின்பத்துன்ப முறுமுயி ருணர்விலாத,துன்
னிய வசித்தையின்பத் துன்பங்கள்சூழ்ந்திடாவே. (௬)

(இ-ள்) தன்னியல் பொழியப்பூவுந் தழலும்வந் தணையநீரின் மன்னிய விரண்டுசெய்தி — நீரானது தனக்கியல்பாகிய தட்பத்தை யொழிந்து, மணத்தையும் வெம்மையும் பொருந்தியதற் கிரண்டு குணமுண்டாயதாகையால்,

வருமிரு வினையினாலு முன்னிய வின்பத் துன்பத் முறுமுயிர் — ஆன்மாக்கள் செய்யப்பட்ட விருவினையினாலு மவரவருக்குத் தக்க சுகதுக்கபலங்களைப் பொருந்தும்.

உணர்விலாத துன்னிய வசித் — நெருங்கின பூதங்கட்கென்ன வறிவில்லாமையாலுஞ் சடமாதலாலு மதனை யின்பு

தையின்பத்துன் துன்பங்கள் பொருந்தாதான் எ - று.
பங்கள் சூழ்ந்தி
டாவே. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இதற் குத்தரம்.

தனியல் பொழியப் பூவுந் தழலும் வந்தணைய நீரின்மன ணிய திரண்டுசெய்தி-நீருக்குத் தனக்கு இயல்பான குளிர்ச்சி நீங்கப் பூவும் நெருப்பும் பொருந்தியிட மணமும் வெம்மையும் பொருந்தித்து, அப்படியே,— வருமிருவினையினுறு முனிய வினைப்பயன்கள - புண்ணியபாபங்களென்று சொல்லப்பட்ட விரண்டுதொழிலினுலும் சுகதுக்கங்களாகிய கருமபலமான துவரும —உறுமுயிர்-அந்தசுகதுக்கங்களை ஆன்மாவானது பொருந்தும்,—உணர்விலாத தனியவசத்தை யின்பத்துன்பங்கள் சூழ்ந்திடாவே- அறிவில்லாததாய ஆன்மாவிற்கு போகாயதனமாயிருக்கிற தேகத்தை சுகதுக்கங்கள் பொருந்தாது, நீரிற்பொருந்தின வாசனையு முஷ்ணமும் நீருக்கின்றி அந்த நீரை ¶ஸ்வீகரிக்கிற பேர்க்கானதுபோல தேகத்தில் பொருந்தின சுகதுக்கங்கள் தேகிக்கல்லது தேகத்துக்கில்லை.

¶ ஸ்வீகரித்தல் - அங்கீகரித்தல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

நீ சொன்ன திஷ்டாந்தத்தி லான்மாவிற்குச் சுகதுக்கங் களியற்கை யன்று, செயற்கை யென்றுதானே சித்தித்ததென றுசெப்புகின்றார்

சனிபல்பொழிய-தனதியற்கைச் சித்குணமறைய,— பூ வந்தபூதமும் வந்தனைய - பொருந்த,— கிரினமனனிய திரணமு செய்தி-மணத்தொடென்னுஞ் செயற்கைக்குண மிரண்டும் வந் துசேர்ந்தன, அப்படி,—வரு மிருவினையினாலும்-புத்தியில் பொ ருந்திப் புணர்ப்பாயபசரிறாலும்,— உனனியவினப்பத்துன்ப ம் - உண்டாகிய செயற்கைச் சுகதுக்கங்களை,—உயிருறும் - ஆ ன்மா அநுபவிப்பன,— உணர்வில்லாத் துனனியசித்தை யின் பத்துன்பங்கள் சூழ்ந்திடாவே - ஆன்மாவைப்பொருந்திய சரீ ரேந்திரியாதிகள் அறிவின்மையாதலாலந்தச் சுகதுக்கங்களை யநுபவியாது, அசித்தைப் பொருந்தி யிராதென்றுரை பண்ண லாகாது.

சுகதுக்கங்கள் புத்தித்தத்துவத்தி லுண்டாய்ப் பொருந்தி யிருத்தல்

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஒருபொருட்குத் தம்முண் மாறுபட்ட விரண்டுதன்மை காரணத்தானன்றி உளவாகாமையானும், தண்ணீருக்கு வாச மும் வெப்பமுஞ் செயற்கையானுளவானவாகலின் அதுவேயீ ண்டைக்கு உவமையாய முடிதலானும், இன்பத்துன்பநுகர்ச் சி சித்துக்கன்றிச் சடத்துக்குக் கூடாமையானும். அவ்வின்பத் துன்பமிரண்டற்குங் காரணம் வேண்டப்படு மாகலான், இரு வினையெனப்படுஞ் சஞ்சிதமே ஆண்டைக்குக் காரணமென்ப தாம்.

என்னையென்னும் வினா இன்மை குறித்துநின்றது.

அதுவெனனும பகுதிப்பொருள விகுதி அப் பண்பினமே னின்ராது

தனவியல்பு ஈடபம

உணாவிலாத வசிததெனறது "அடியனநதானருபது" என்ருர்போலக கொள்க (ரு—அ)

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இபபடிசசொனனன உலகாயுதனை மறுதது மேலருளிச செய்கிருர்.

தனவியல் பொழிபப பூவுந தணலுமவாந தனையாிின மனவிய இரணடுசெயதி - தனனுடைய சுபாபமொழியப பூவும அகதினியும பொருநத சலததுககு இரணடுகுணமுணடாயது அததனைபோல,—வருமிரு வினையிருனு முனவிய விளைபதுவைய முறுமுயிா - அநாதியே யுணடாகபபடட புணணியபாவங்களிரணடினுலும உளள நினைவுகளூடாக வாததகக சுகதுககஙகளை ஆனமாப பொருநதி அநுபவிககும அப்படி நீாசொல்லுகிற வானமாவை எஙகே யுணடென்று காணப்பட்டது இநத உடமபு காணும சுகதுககஙகளை யனுபவிககிறது எனறு நீ சொல்லில்?—உணாவிலாத தனவிய வசிர்தைபினபத துனபங்களை சூழநதிடாவே - பிரஞ்ஞையில்லாத பூதஙகளினுடைய காரியமுமாய சேதனமுமா யிருககிற சரீரம, நனமை தீமைகளை யறியாது, ஆனபடியாலே யநதச சரீரததைச் சுகதுககங்கள வநது பொருநதாது. ஆகையால் சேதனனுயிருககிற வானமாவே யினபதுனபங்களை யறிந்து புசிக்கும்.

இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் அவன்மறுப்பு" கநதடவெம்மை கலநதிடும்புனல் கனமடென்செய்த தென்றனை, சந்தண

ந்தழல் சாரசீரிரு தன்மையுற்றிடு மாறுபோற், றந்துகன்மமிர
ண்டணைந்து தருஞ்சுகதுக்கமுஞ், சிந்தியாவெழு சீவனு
ற்றிடும் வேறுடற்கிலை தேறிடே." எனுமதுங் கண்டுகொள்க.

சித்-பர, லோகா-மறு, ௬-செ.

இதனாற் சொல்லியது உலகாயுதன சுகதுக்கங்க ளுடலு
க் கொழிந்து ஆன்மாவுக் கில்லையென்ன, அவனை மறுத்து ஆன்
மாவே சுகதுக்கங்களை யனுபவிக்குமென்று முறைமை யறிவித்
தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இருவினையென்னை - இருவினையெனபவே யில்லை,— இன்
பத்துன்பங்களியல்ப தெனவில - இன்பத்துன்பங்க ளியல்பே
யாகுமெனின்,—இயல்புக் கொருதன்மையுள்ளது இயல்பினுக்
கொருதன்மை யுள்ளதன்றி,— ஒருவனுக்கிரணடு செய்தி வருவ
தென,— ஒருபொருட்குத் தம்முண் மாறுபட்ட விரணடுதன்
மை வருவதுயாது,—மலருந்தீயுமருவலின-போதுமனலும் பொ
ருந்துதலான,—வாசம வெம்மை- மணமும் வெப்பமும்,—நீரெ
னசெய்துதருவது - தண்ணீர் யாது காரணத்தாற் றரப்பட்ட
து,—தானியல்பாகுமன்றே- தானேயியல்பாகுமெனின?--நீரின
றனியல்பொழிய-தண்ணீராகியற்கையாகிய தட்பமொழிய,--
பூவுந்தழலும் வந்தணைய - மலருந் தீயும் பொருந்துதலான்,—
இரணடுசெய்தி மன்னியது - வாசமும வெப்பமும் செயற்கையா
லுளவாயின. ஆகலின் துவே யீண்டைக் குவமையாய்முடிதலா
லும,— உன்னியவினபதுனப முயிருறும்-கருதிப இன்பதுன்ப
நுகர்ச்சி யுயிராகிய சித் [illegible] னறி,—உணர்விலாத-உணர்வில்லா

னவாகிய,— தன்னியவசத்தைசூழ்ந்திடாவே - நெருங்கியசட த்திர்குக்கூடாமையாலும்,—இனபதனபங்க ளிருவினையிலுனு மவரும் - அவ்வினபதுனப மிரண்டிற்குக காரணமவேணட ப்படுமாகையால் இருவினையெனப்படும சஞ்சிதமே யாணடைக குகாரணமெனப்படுமெ எனபதாம. (ரு—சு)

மறைஞானதேசிகர் உரை.

அவன மீளவு மிமமையிற் ரெழில் செய்ததனாலே
பொருடேடிப் போகங்களையு மிசசனனத்தி
லனுபவிக்கும தொழிநது, மறுமைபபயனி
ல்லை யெனபதனை யு ணாததுகிறா.

இம்மையின் முயறசியாலே யிருநிதி யீட்டியின்ப, மிமமையே நுகாவாசெயதி யிலாதவர் பொருளுமின்மி, யிமமையே யிடருழபபர் வேயிரு வினையதுணடே, லிம்மையின முயற்சியினறி யெயதிட வேணடுமினுகே. (எ)

(இ-ள்) இம்மையின முயற்சியாலே யிருநிதி யீட்டி — ஆன்மாக்களிந்த வுலகிற் றமது முயற்சியிற் பிரயாசப்பட்டுப பெருகப பொருளை யாாசசித்து

இனபமிம்மையே நுகர்வர் — இம்மையிலே தானே சுகத்தை யநுபவிப்பார்கள்

செய்தி யிலாதவர் பொருளு மினறி யிம்மையே யிடருழப்பர் — இஃகனறி மடிமையை யுடையோர்கள் முயற்சியினமையாற் பொருளும்பெறு திம்மையிற் றனே தமககில்லாதே போயிற்றெனறு துனபத்தையு முறுவார்கள்.

வேறிரு வினையதுண்டேல் — இன்ப துன்பங்கட்குக் காரணமாகிய மடியு முயற்சியுமின்றி முற்சனனங்களிலாச் சித்த விருவினைப்பலன்கள் வேறுண்டாகில்,

இம்மை யினை முயற்சியின்றி யெய்திட வேணுமிங்கே — அதனா லிவ்விடத்து முயற்சியு மடியுமில் லாதிருக்கவும் பொருளுண்டாக வேணுங் காண் எ-று (௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல்சங்கை

இந்தத் தேகத்திலுடைய உச்சாகத்தினாலே பகுவான திரவியத்தைத் தேடி, அதினாலே இந்தத் தேகத்திலே தானே சுகத்தையு மனுபவிப்பார்கள் உச்சாக மில்லாதவர்களுக்குப் பொருளுமில்லாமல் விசனத்தோடே துக்கத்தை அனுபவிப்பார்கள். இந்த உச்சாக மடிமை யென்கிற விரண்டுமில்லாமல் வேறே புண்ணியபாவங்களென நிரனிறை முண்டாமாகில் உச்சாகமன்றியிலே யிப்பொழு திவ்விடத்துண்டாக வேணுமே

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

காரணமாகக் காணப்பட்ட பொருளைக் காரணமாக விதந்தமையுமென்று, கற்பிப்பதே முக்கியம், காணாத காரண கற்பனை நிஷ்பிரயோசனமென் றுசங்கிக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

இவ்வுரை - அ - செ, சோதகப்பட்டிருப்பதைக் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு

———0———

மீளவும் இம்மையிலே தொழில்களைச் செய்து பதார்த்தங்களை யுண்டாக்கி யதனா லுண்டான போகங்களை யிந்த சகத்திலே யனுபவிக்குந் தொழிற் றன்மைப்பய னில்லையென்கிற உலகாயுதன் மதமே லருளிச் செய்கிறார்.

இம்மையின் முயற்சியாலே யிருநிதி யீட்டி - இந்த சகத்தி லுண்டாகிய உற்சாகத்தாலே மிகுதியாகத் தனங்களைச் சேகரித்து,—இம்மையே நுகர்வார் - அந்தப் பதார்த்தங்களி லுண்டாய போகத்தை யிந்த சகத்திலே புசியாநிற்பார்கள்,—செய்தி யிலாதவர் பொருளுமின்றி யிம்மையே யிடருழப்பார் - ஒரு தொழிலுஞ் செய்ய மாட்டாதவர் தனங்களு மில்லையா யிம்மையிலே துயரத்தோடே கூடி வருந்தப்படாநிற்பார்கள்,—வேறிரு வினையுண்டேல் - இதுவொழிந்து வேறே முற்சன்மத்தி லாசரித்த புண்ணியபாவங்க ளுண்டாமாகில்,—இம்மையின் முயற்சியன்றி யெய்திட வேண்டுமிங்கே - இந்த சகத்திலே ஒருதொழிலுஞ் செய்யாமலிருக்கச் செய்தேயுந் திரவிய முண்டாகவேணும், அப்படி யுண்டாகாது அதுகொண்டே மறுமைப்பயனில்லை யாகையால், இந்த சகத்திலே செய்த தொழிலா லுண்டாகிய பயனை இங்கே யனுபவிப்பன.

இதனாற் சொல்லியது, உலகாயுதன் இம்மையிலே தொழில்களைச்செய்து அதனா லுண்டாகிய திரவியங்களைக் கொண்டு

இம்மைப்பயனை யனுபவிக்கிற தொழிந்து மறுமைப்பயனில்லை யென்றான் என்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

இவ்வுரை - அ - செ, சோக்கப்பட்டிருப்பதைக் காண்க.

மறைஞானதேசிகர் உரை.

அவனை மறுத்துரைக்கிறார்.

இருவினைச் செயல்காணிம்மை யிரும்பொருளி
ன்பம்வேண்டி, வருவினை செய்யுங்காலை மடிவரு மடியு
மின்றித், தருவினை யதனிலத்தந் தானுறுந் துயரந்தங்
கு, மொருவினை செய்யாதோரு முடையரிவ் வுலகத்
துள்ளே. (அ)

(இ-ள்) இருவினைச் செயல்காண — நீ முற்கூறிய மடியு முயற்சியு மிருவினையால்வருஞ் செய்திகாண், ஆன்மாக்கடமது முயற்சியா லுண்டாவதல்ல அஃதெங்ஙனமெனில்?

இம்மையிரும் பொருளின்பம் வேண்டி வருவினை செய்யுங்காலை மடிவரும் மடியுமின்றித் தருவினை யதனி — இம்மைக்கணொருவன் மிகவும் பொருட்டேட வாசைப்பட் டதற்கேற்ற வினைசெய்யுங் காலத்தி லவன் முற்சன்மத்தி லாச்சித்த நல்வினைப்பய னுண்டாகாவிட்டத் தம்முயற்சி நீங்கி மடிமைவந்து பொருந்தாநிற்கும் மடிமைவந்த காலத்து மடிமை நீங்கிய பொருள்வரவிற் கேதுவாகிய வைகளா லீட்

லத்தந் தானறு ந் துயரந்தங்கும் — டியதனுமொரோவழி பொருந்தும். முற்சந்தத்தி லார்ச்சித்த சறகணமமில்லையாகிற் களவுமுதலியவற்றாற் பொருள் போனவா றேதுன்பமடையாநிற்கும்

ஒருவினை செய்யாதோரு முடையரிவ்வுலகத் துளளே. — ஆகையா லிப்படிப்பட்டதொரு முயர்ச்சி செய்யாதிருக்கவும், பூர்வத்தி லார்ச்சித்த கனமபலத்தாலே பொருளையுமின்பத்தையு முடையரா யிருப்பார்கள் எ-று

உம்மை யுயர்வு சிறப்பு (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

இதற்குத்தரம்.

இருவினைச் செயல்காண-சுகதுக்கங்கள் வருவதெல்லாம் புண்ணியபாபங்களுடைய தொழிலினாலல்லது இம்முயற்சியால வாராதுகாண, அதெவ்வாறெனனில்?— இம்மையிரும் பொருளின்பம வேண்டி வருவினை செய்யுங்காலை மடிவரும ம டியுமின்றித் தருவினை யவனி லத்தந் தானறுந் துயருந்தங்கும்- இம்மையிலே அதிகமான பொருளைத்தேடி சுகத்தை யனுபவிக்கவேண்டிப பொருளவரு முயாச்சியைச செய்யுங்காலத்து மடிமைவரும. மடிமையைத தவிாந்து உச்சாகத்தைப பண்ணிலும மதனுற பொருளு மில்லாமல் போனாலும போம. பொருளில்லாததனறி அபாயம் வரினுமவரும்,— ஒருவினைச செய்யாதோருமுடைய ரிவ்வுலகத் துளரே-பிராரத்த மல்லது வாராதெனனும் முறைமையை யறிந்த பெரியோர், அயாசிதவிருத்தமாக பூமியினகணணே யிருக்கவும் அவர்களுக்கு ஜீவனம் நடக்கவும் கணடோம்.

ஞானப்பிரகாசரை வருமாறு.

———0———

இம்மையின் முயற்சியாற் செய்யுங்கன்மம் மோரிடத்திற் பலத்தைப் பொருந்தி யோரிடத்தி னீங்கி வியபிசரியாதாதலா லவ்வியபிசரித்த விடத்துக்கருணுத் காரணங் கற்பிக்க வேணு மென்று காணபிக்கின்ருர.

வெளிப்பொருள.

சிவஞானயோகிபருரை வருமாறு.

———0———

அற்றேல் அக்காரணமாவது முயற்சியேயாமென்பது உடம்பாட்டினு னெதிர்மறையினு மைத்துக் கண்கூடாக வறியக் கிடத்தலின் அதுவேயமையும், வேறுமோர் காரணங் கோடன் மிகையா மென்றது பொருந்தாது அஃதெனரோவழிப் பிற முதலுர் அவ்விருதிறத்தினு மைத்தறியக் கிடத்தலின் நிபத காரணம் வேறுண்டென்பது பெறப்படுதலால், அதுவே ஆண்டைச்குப் புலனாகாத சஞ்சிதவினை யென்று அறியப்படுமென்பதாம

ஒருவினை செய்யாதோரு முடையராதல் கிழியீடு நேர்பட்டுப்பெற்ருர முதலாயினூர்மாட்டுக் காணப்படும

ரண்டியவென்றது செய்வினை. இஃது 'உடையார்முனி ல்லாரபோல்' எனபதனுணுமறிக

இவைதானகு செய்யுளாலும் உலோகாயதர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்துச் சஞ்சித மென்பபடு மிருவினை யுண்மை, காரியவேதுவின வைத்துச் சாதிக்கப்பட்டது.

அற்றேல், இருவினையேயாமையுமாகலின் "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை - யின்மை புகுத்தி விடும்" என்பதுபற றிச்செல்லுமெனமெழுக்கிசைக்குப்பயனில்லை போலுமெனின்? அது முன்னறக்கூறப்படும். (எ—அ)

நிரம்பவழகியருரை வருமாறு.

—()—

மேலும் அவனைநோக்கி மறுமைப்பயனுண்டென்று மறுத் தருளிச்செய்கிறார்.

இருவினைச் செய்யல்காண் - நீமுன்னே சொன்னவையெல்லாம் முற்சனநத்திலே செய்த புண்ணியபாவங்களினாலுண்டான முறைமைகாண், — இம்மை யிருவொருவர் பிறப்பேயன்றோ - இந்த சனநத்திலே மிக்க பதார்த்தத்தினாலுண்டாகிய போகத்தை விரும்பி, — வருவினை செய்யுங்காலே மடிவருமா - திரவிய முண்டாகத் தக்கதொழில்களிலே நின்று உராசாக்குநாயுமா, முற்சனநத்திற் செய்த புண்ணியபாவங்களுண்டாயவந்து கூடித இல்லையாகில், உராசாக்கிற வயசாநத்திலே இதற்கு மறுக் கலையாகிய மடிமையென்று கூடாநிற்கும் இதுயன்றியும், — மடியு மின்றித் தருவினை யதனிலதகாந்தாலுந் துயருந்தும் - போ தமுமடியாமல் மிகுந்த விருப்பத்துடனே திரவியமுண்டாகத் தக்க தொழில்களைச் செய்தாலும், முற்சனநத்திலே இவன்செய்த புண்ணியங்கள் மயிலலையாகில், இவனகையிலுள்ள திரவியங்களுமே போய், மேல்வருகிற ஆக்கமு முண்டாகாமல், வியாகுலமேயுண்டாகாநிற்கும் — ஒருவினை செய்யாதோரு முண்டே யரியவுலகத்துள்ளே - இப்படி முன்சொல்லப்பட்ட தொழில்களுக்குள் ஒருதொழில்களுஞ் செய்யாதிருந்தவர்கள் முற்சனந

த்திலே செய்த புண்ணிய கன்மங்களுக்கீடாக மிகுந்த சிங்கா சனபதியா யிருப்பார்கள், பிரத்தியட்சமாக இந்தப் பூலோகந் தனக்குள்ளே

இதனாற் சொல்லியது இம்மையிலுண்டான பதார்த்தங் களு மந்தப்பதார்த்தங்களா லுண்டாகிய புசிப்புகளுஞ் சாவு மு மறுமையிலுள்ள புண்ணியபாவங்களுக் கீடாக வருகிறதொ ழிந்து, இம்மையிலுள்ள தல்லவென்று, உலகாயதனை நோக்கி ம றுத்தருளிச் செய்தாரென்னு முறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அற்றேல்-அக்காரணமாவது முயற்சியே யாமென்பது — முயற்சியாலே யிம்மையின் - முயற்சியா லிம்மைக்கண்,—இரு நிதியீட்டி,—மிகுந்தபொருள்களை யீட்டுதல் செய்து,— இன்ப மிம்மையேநுகர்வர் - இன்பத்தையு மிப்பிறப்பின் கண்ணே ய னுபவிப்பரென வுடன் பாட்டினும்,—செய்தியிலாதவர் பொரு ளுமின்றி-முயற்சி யிலாதவர் பொருளீதலின்றி,—இம்மையி டருழப்பர்-இப்பிறப்பின்கட் டுன்பத்தினை யெய்துவரென எதி ர்மறையினும் வைத்துக் கண்கூடாக அறியக்கிடத்தலி னதுவே யமையும்,— வேறிருவினையதுண்டேல்-அதுவன்றி யிருவினையெ ன்பதொன்றுண்டென வேறுமோர் காரணங்கொள்ளின்,—இ ம்மையின் முயற்சியின்றி-இப்பிறப்பின்கண் யாதொரு முயற்சி யின்றியும்,—இங்கேயெய்திட வேண்டும் - இவ்விடத்துப் பொ ருள் கைகூடவேண்டும். அஃதின்மையா னதுபொருந்தாதெனி ன்,— இம்மை யிரும்பொருளின்பம் வேண்டி - இம்மைக்கட் பெரிய பொருளின்பங்கள்கருதி,—வருவினைசெய்யுங்காலை மடி

வரும் - வருகின்றவினை செய்யுமிடத்துச் சோம்பலுண்டாகலா னும், — படியுமின்றி - சோம்பலேயன்றி, — தருவினை யதனிலத் தகாதானும் - தருகின்ற முயற்சிக்கண் பொருளின்றிப் போத லானும், — நயருந்தங்கும் - அதனாற்றுன்பம் எய்துதலானும், — இவ்வுலகத்துளோர் - இவ்வுலகினுள்ள, — ஒருவினை செய்யாதோ ருமுடையார் - யாதொரு முயற்சி செய்யாதோரும் செல்வரா யத் தங்குதலானும் ஆகிய பிரபஞ்சியமும் இருந்தாற்றிதனும் வை த் திருக்கிடத்தலினி யக்காரணம் வேறுளதென்பது பெறப் படுதலால், — இருவினைச் செயல்கொள் - அதுவேயானவிடைக்குப் புலனாகாச் சஞ்சிதவினையென றறியப்படுமென்பதாம்.

இவைநாலுஞ்செய்யு ளாலு முலகாயதமதம் பற்றி யாசங் கித்துப் பட்டிப்பிறத்துச் சஞ்சிதமென்படும் இருவினையுண்மை கா ரியவேதுவினை வைத்துச் சாதிக்கப்பட்டது (எ—அ)

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மா முன் சன்மத்தில் ஆர்ச்சித்த கன்மபலத்துக்கிடாக
விச்சன்ம மெடுக்குங் காலத்திற் பேறுமுதலிய வாறு
வகையா லனுபவித்துத் தொலைக்கு முறைமை
யுணர்த்துகிறார்.

பேறிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்
று, மாறுமுன் கருவிற்பட்ட தவ்விதி யநுபவத்தால்,
ஏறிடு முன்புசெய்த கன்மமிங் கிவற்றிற்கேது, தே
றுநீ யினிச்செய் கன்மம் மேலுடற் சேருமன்றே. (கூ)

(இ-ள்.) பேறிழவு சன்முதலிய வாறு மானமாச சுக்கில வின்பமோ சுரோணிதத்துடனும் வாயுவுடனுங் கூடிச

பிணி மூப்புச் சாக்காடென்னுமாறு முன்கருவிற்பட்டது சூக்குமசரீரத்துடன் கருப்பாசயத்திற் றங்குமபொழுது சிவனாலக்காலத் தமைத்ததாகும்.

அவ்விதி யனுபவத்தாலேறிடும் இங்ஙனம் விதிக்கப்பட்டவிதி யனுபவித்தே தொலைக்கப்படும்.

முன்புசெய்த கன்மமிங் கிவற்றிற்கேது முற்சன்மத்தி லான்மாக்க ளார்ச்சித்த விருவினைகளு மிப்பொழு திவ்விட்டத் தனுபவிப்பதானவற்றிற்குக் காரணமாம்.

நேருமீ யினிச் செய்மகன்மமேலுடற் சேருமன்றே நிகழ்காலத்திற் சரீரிசெய்கிற கன்மங்களும் வருகிற சன்மத்துக்குக் காரணமாயிருந்து நரகதேகத்திற் கூடுமென்று நீதெளிவாயாக எ-று.

இருவினையென்னையெனனும் விருத்தமுதலிநான்குமொரு தொடர்.

சுப்பிரபேதத்திற் பேதித்துக் கூறிய தாகமபேதமென வறிக.

கருவுட்பட்டனவென்று பன்மை கூறுதொருமை கூறியது, "ஒருமையிற் பன்மையும் பன்மையிலொருமையு மோரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்பதனாற் கூறியதெனவறிக.

"அட்டகவுலகத்தோடே யுயிர்பிதாவருங்கன்றுதி, தொட்டவனுதாரதோசத்துச் சுக்கிலத் துடனேதோன்றிப், பட்டணைபபசத்திற்பட்டுக் கருட்பையிற்பதிந்துமூர்த்திச், சட்டகமென்னத் தோன்றித் தரணியிற்றங்கிச்சாயும்" எனவறிக. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலும்.

பேறு-ஒன்றுண்டாகிறது,—இழவு-போறது,—இன்பம்-சுகம்,—பிணி-துக்கம்,—(ஒடு-இடைச்சொல்)மூப்பு-நரைதிரை,—சாக்காடு-மரணம்,—என்னுமாறு முன் கருவுட்பட்டது-இப்படிச்சொல்லப்பட்ட ஆறும் கருவில் பதிகிறபோழுதே முன் செய்த கருமத்தில் பக்குவமானவை பிராரப்தமாகப் பொருக்கப்பட்டது,—அவ்விதி யனுபவத்தால் ஏறிடும்,— அந்தப்பிராரப்தத்தினுடைய சுகதுக்கானுபவத்தினாலே ஏகாமியமேறிடும்,—முன்செய்த கன்மமிங்கிதனுக்கேது-பூர்வத்திலே செய்த கருமங்களிந்தத் தேகத்திலே யனுபவிக்கிற சுகதுக்கங்களுக்கு கேது,—தேறு நீயினி-செய்கன்மமேலுடற் சேருமன்றே-இந்தத்தேகத்திலே செய்கிற புண்ணியபாபங்களினாலே மேல் தேகாதிகளைப் பொருந்துமென்று தெளிவாயாக

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பிராரத்தம் புசிக்குமிடத் தாகாமிய மேறுமுறைமையும், அது சஞ்சிதத்தோடு கலந்து காலாந்தரத்திற் பலன் கொடுக்கு மென்பதும், பல மாறுண்டென்பதும் படித்தறிவிக்கின்றார்

பேறு - தனக்கு யோக்கிய போக்கியப் பொருளைப் பொருந்துதல்,—இழவு - நியமித்த காலாந்தரத்தி லதைப்பிரிதல்,—இன்பமோடுபிணி - சுகதுக்கம்,—மூப்பு - நரைதிரை,—சாக்காடு-மரணமென்கின்ற,—ஆறு முன் கருவுட்பட்டது-சரீரத்தடைத்தது,—அவ்விதி யனுபவத்தால் - நியமித்தகாரின

தனுபூதியால்,—ஏறிடும் - ஆகாமிய கன்மம் வந்துபொருந்து ம்,—முன்பு செய்த கன்ம மிங்கிதனுக்கேறு - முன் சன்மங் களிற்பண்ணிச் சஞ்சிதமாய்க் கட்டுப்பட்ட கன்மத்துட் பக்கு வமாகிய பிராரத்த கன்ம மிவ்வாக்குறுங் காரணம். கண்டகா ரியமானதனாற் காணாத காரண மநுமிதிக்கப்பட்டது,— தேறுநீ - இப்படி யநுமித்ததறிநீ,—இனிச்செய் கன்ம மேலு டற் சேருமன்றே - இப்போதேறு மாகாமியகன்ம மேற் சஞ்சி தத்தோடு கலந்து சில பக்குவமாயப் பிராரத்தகன்மத்தோடு கூடி மேல்வருஞ் சன்மங்களி லெடுக்குஞ் சரீரங்களிற் பேறி ழவின்பமுத லாறு பலத்தோடும் பொருந்தும்,—கண்ட கார ணமானதனாற் காணாதகாரிய மநுமிதிக்கப்பட்டது

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எடுத்ததோருடம்பின் வரக்கடவனவாகிய இன்பத்துன்ப ங்கட்கு ஏதுவாகிய செல்வ வறுமைகளும், அவற்றான் வரும் உ யர்விழிவுகளும், அவற்றானாய இன்பத் துன்பங்களுமாகிய வா றும் முன்னே தானே சூக்குமமாய்க் கருவினுள்ளே வந்து கிடந்தன வன்றி, அப்போதைப்போது உளவாவனவல்ல. அவைபின்னர்த் தூலமாய்வந்து கூடுதல் அவற்றையனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியானும். அங்ஙனமனுபவித்தற்குத் துணையாகவெழுந் து, முயற்சியும் அவ்வளவினொழியாது மற்றோருடம்பிற் படும் அ வ்வாறுவகைக்கும் வித்தாய வினைபெறும். முற்பிறவியினிகழ்ந்த மு யற்சி இப்பிறவியின் வரும் அவ்வாறிற்கும் ஏதுவாயினாற் போலு மத்துணையேமுயற்சியானாகக்கடவது பிறிதில்லையென்பதாம்.

பிணியென்பது ஈண்டுத் துன்பமாத்திரையே யுணர்த்தி நி ன்றது.

"நோயுமின்பமும்" என்றார் தொல்காப்பியனாரும்."

ஈண்டு மூப்பென்றது உயர்ச்சியின்மேற்று, அது "வினையே னொர்க்கெல்லா மூப்பாய்" என்பதனாலும், மூத்த திருப்பதிகமென்ப தனாலுமுணர்க.

சாக்காடு போறலின் இழிவைச் சாக்காடென்றுபசரித் தார்.

இளைமூப்புச் சாக்காடுகள், பேறிழவின்பம் பிணிபோலத் தாமுன் மறுதலையாகாமையானும், அவற்றின் மறுதலைப்பொ ருள்களை உடன் கூறாமையானும், இவற்றாட்பத்தின் வேறு கூறவேண்டாமையானும், காலம்பற்றி ஒருதலையான் வரும் மூ பினைக்கண் ஐயமறுத்தல் வேண்டாமையானும், அவற்றையுடன் வைத்தெண்ணியுரைசெய்தல் பொருந்தாமையறிக.

ஒடு எண்ணின்கண் வந்தது.

மூன்றாவதனைக்கணிற் பாதுபாடின்மைபற்றிப் பட்டதெ ன்று ஒருமையாலாற் கூறினார்.

கூற்ற்ய வுற்றதென்பது தூலமாய் விளங்குமென்பதாயி ற்று.

இது சற்காரியவாதம்.

அனுபவமென்க காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

முன்புசெய்தகன்ம மிங் கிவற்றிற்கேது என்றது எடுத்துக் காட்டுவமை.

ஈண்டுக்கன்மமென்றது முப்பகுதியை.

மேலே வினையென்றதுமது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முற்சனனத்திற் சரீரத்தா லுண்டான புண்ணிய பாவங்களந்தச் சரீரம் விடும்பொழுது அதுவும் ஒக்கப்போம், அது இந்தச் சனனத்தில் வந்து பொருந்துகிற முறைமை யெப்படியென்றவனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

பேறிழ வின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்று மாறு முன் கருவுட்பட்டது - இவன் பொருட்சார்வு உயிர்ச்சார்வு என்று சொல்லப்பட்ட இரண்டையும் பெறுகிறது, இவையிரண்டையு மிழந்துவிடுகிறதும், ஒருசுகதுக்கத்தை யநுபவிக்கிறதும், அசரேற்று வியாதிமுதலான துக்கங்களை யநுபவிக்கிறதும், விருத்தாப்பியத்தால் வருகிற துக்கங்களும், மரணமும், என்று சொல்லப்பட்ட இந்த அறுகாரியமும் முற்சனனத்திற் செய்தது; இப்பொழுது மாதாவினுதரத்தி லுண்டாகிய கருப்பையிலே ஆன்மா வணுவாகச் சென்று பதிற்றவதாரத்திலே யிவையும் சூக்குமமாகச் சென்று கூடிப் பதியாநிற்கும் —அவ்விதி யனுபவத்தா லேறிடும்-அந்தமுறைமை பரமேசுவரன் விதித்தபடியே யநுபவித்துத் தொலைந்துபோம். இதற்குக் காரணமேதெனில்?—முன்புசெய்த கன்மமிவ கிவற்றிற்கேது-முற்சனனத்திலார்ச்சித்த புண்ணியபாவம இவ்விடத்து இந்த அநுபவத்துக்கும் அதுவே காரணமாம். இந்தவுடலிலே இப்பொழுது செய்கிற கன்மம அநுபவிப்ப தெப்படியெனில்?—தேறுநீ யினிச்செய்கன்மம் மேலுடற் சேருமன்றே - இந்த முறைமைபோல இப்பொழுது நீசெய்கிற கன்மங்களும் வருகிற சனனத்தில் எடுக்கிற தேகத்திலே கூடுமென்று புத்திபண்ணுவாயாக.

இதனாற் சொல்லியது முற்சனனத்திற் செய்த புண்ணிய பாவம இந்த சனனத்திற் பொருந்துகிறபடி யெப்படி யென்ற

வனுக்கு அதுவந்து பொருந்துகிற முறைமையும்; அதனாலுள்ள சுகதுக்கங்களை இந்தவுடலிலே யநுபவிக்கச் செய்தே ஆர்ச்சித்த புண்ணியபாவங்கள் மேலெடுக்கிற வுடலுக்கு அநுபவமாமென னு முறைமையு மறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

பேறிழவு - எடுத்ததோருடம்பின் வரக்கடவனவாகிய இன்பத் துன்பங்கட் கேதுவாகிய செல்வம்வறுமைகளும்,—ஏழ்ப் புச்சாக்காடு-அவற்றுள் வரும் உபாதிநிவர்த்திகளும்,—இன்பமொடு பிணி - அவற்றானாகிய இன்பத் துன்பங்களும்,—என்னுமாறும்- ஆகிய ஆறும்,—முனைக்கருவுட்பட்டது - முன்னே தானே சூக்கும மாயைக் கருவினுள்ளமைந்து கிடந்தவன்றி யப்போதைப்போதுள வாவனவல்ல,—அவ்விதி யனுபவத்தாலேறிடும்-அவை பின்னர்த் தூலமாய் வந்துகூடுதலவற்றை யனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியானும்,—முன்புசெய்கன்ம மிங்கிவனுக்கேற-அங்ஙனமனுபவித்திற்குத் துணையாக எழுந்த முயற்சியும் அவ்வளவிலொழியாது மற்றோருடம்பிற்படும் அவ்வாறுவகைக்கும் வித்தாய்நிலைபெறும்,—இனிச்செய்கன்மமேலுடற்சேருமன்றே-முற்பிறவியி னிகழ்ந்த முயற்சி யிப்பிறவியின் வரும் அவ்வாறிற்கு மேதுவாயிருந்தபோலு மத்தன்மைத்து முயற்சியானுக்கக்கடவது பிறிதில்லையென, நீதேறு-நீ தெளிவாயாக.

மறைஞானதேசிகர் உரை.

இக்கன்மம் பிறவாகாரணாதி யென்பதற் குதார
ணம் பூர்வமாக வுணர்த்துகின்றார்

உடற்செயல் கன்மமிந்த வுடல்வந்த வாறெண்
ணென்னில், விடப்படு முன்னுடம்பின் வினைபிறந்த வு

டல்விளைக்கும், தொடர்ச்சியா லொன்றுக்கொன்று
தொன்றுதொட் டநாதிவித்தி, னிடத்தினின மரமர
த்தின வித்தும்வந் தியையுமாபோல். (௧0)

(இ - ள்) உடற்செயல் கன்மமிந்த வுடல்வந்த வாறென்னெனில் — இவ்விருவினைகளு முடலின் காரியமாக வேண்டும், இனியிவ்வுட லுண்டாதற்குக் காரணமியாதென்று கேட்கிறாயாகில்,

விட்டபடு முன்னுடம்பின் வினையிந்த வுடல் விளைக்கும் — முற்சன்மத்தில் விட்டப்பட்ட தேகத்தினின்று செய்த்கன்ம மிந்த சந்ததை யுண்டாக்குமென்று நீசொல்லில்? இதரேதராச்சிரயமென்னுங் குற்றமுண்டாம் அஃதன்று,

தொடர்ச்சியா லொன்றுக்கொன்று தொட்டநாதி — இந்தமுறையே கன்மமு முடலுமொன்றுக் கொன்று காரணமாய்த் தொடர்ந்து தொடர்ந்து சந்தானகதோற்ற வருகையா லிவை பிரவாகாநாதியாகும் அஃதெனைபோல வெனில்?

வித்தி னிடத்தினின மரமரத்தின வித்தும்வந் தியையு மாபோல். — வித்தினிடத்து மரமுண்டாய் மரத்தினின்று வித்துண்டா யிப்படி யொன்றுக்கொன்று காரணமாய் வந்து தோன்றுமாறு போல் எ - று

பிரவாகம் என்ப திடையறுமல் வரும் பெருக்கெனவறிக.

பிரவாகாநாதி, அநாதியென்பதில் தலைக்குறைத்த லாககினார்.

இதற்குச் சிந்தியமும் பார்க்கியையு மெனவறிக. (௧௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

உடற்செயல் கன்மமிந்தவுடல்வந்தவாறெங்ஙனெனில்-உடலினாலே புண்ணியபாபங்கள் செய்யப்பட்டது, இந்தவுடல் புண்ணியபாபங்களினாலே வந்ததெங்ஙனெனில்? அன்னியோன்னியாசிரயமாகக்கூறு, அதையால் தேகசேஷ்டியாதி யுற்பத்திக்குக்காரணமேதெனனில்?— விடப்படு முன்னுடம்பின் வினையிந்தவுடல்வினைக்குத் தொடாச்சியா யொன்றுக்கொன்று தொன்றுதொட்டநாதி - முன்னேவிடப்பட்ட தேகத்தினாலே பண்ணினகருமமிந்த வுடலுண்டாக்கும், இப்படியே தொன்றுதொட்டு ஒன்றுக்கொன்று ¶ ஸ்வந்தமாய் பிரவாகாநாதியாயுடையது எவ்வாறெனனில்?—வித்தினின்றும் மரம் மரத்தினின்றும் வித்துமாயுண்டாவதுபோல் - ஒருதேசமானதிலே ஒருவிருக்ஷமுண்டாகி அந்தவிருக்ஷத்திலே அநேகவிருட்சங் காரணமாக அநேகதேசங்களுண்டாம், அவ்வாறுகருமமானது பிரவாகாநாதியாய் மும்மலத்தொன்றாய்ப் புண்ணியபாபஸ்வரூபமாய்அத்துவரிஷ்டமாய் இருவினைகளுக்குக்காரணமாயிருத்தலால் இவ்வாறுதேகங்களுங் கருமங்களுமுண்டாம், *அன்னியோன்னியாசிரயதோஷமில்லை.

¶ ஸ்வந்தம்-இரண்டு.

* அன்னியோந்நியாச்ரயம்-தன்னையறிய அதனறிவையும் அதையறியத்தன்னறிவையு மபேட்சிக்கிற ஒருகுற்றம்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சரீர கன்மப் பிரபந்தம் பிரவாகாநாதியென்று பேசுகினார்.

சரீராந்தரங் கன்மாந்தரம்,கன்மாந்தரஞ் சரீராந்தரத்து க்குக் காரணமாதலால், இதரேதராசரய தோஷமு மில்லை யென நிருத்தியம்

வெளிப பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அங்ஙனம் உடலும் வினையும், வித்தும் மரமும்போலத், தம்முட் காரண காரியமாய்த் தொன்றுதொட்டுப் பிரவாகாநாதியாய் வருதலின், அவற்றிற்குத் தம்முண் முறைபிறழ்பாடு முடியா தெனபதாம்.

அற்றேல், வாமபின்றியே யடி அநவத்தையாய போலுமெனமலையற்க, அவ்விரண்டிற்கும் மூலமாகிய சூக்குமவுடம்பு வேறுண்மையின.

நிரம்பவழகியருரை வருமாறு.

கன்மங்களெல்லா முடலாலே யுண்டானது, இந்தவுடல் தான் எதாலே யுண்டானது என்றவனை நோக்கி; மேலருளிச் செய்கிருர்

உடற்செயல் கன்மமிந்த வுடல்வந்த வாறேதென்னில் - கன்மங்களெல்லா முடலிலே நின்று செய்யப்பட்டதா யிருந்தது, எனக்கு இந்த வுடம்புவந்து கூடினமுறைமை எப்படி யெனனில்,—விட்டபடு முன்னுடம்பின வினையிந்த வுடல்வினைக்கும - முற்சனனத்தில் விடப்பட்ட சரீரத்திலே நின்று செய்த கன்மம் இனிமேல் ஒருடலை யுண்டாக்கும். இப்படியே,—

தொடர்ச்சியாய் ஒன்றுக்கொன்று தொட்டு - ஆகையாலே ஒருதேகத்திற் செய்த கன்மம் ஒருதேகத்தை யுண்டாக்கப்பட்டு இப்படித் தொண்டு தொட்டு வாராநிற்கும் அதெனபோல வென்னில்,—அநாதி வித்தினிடத்தின் மரம் மரத்தின் வித்துமங்கு இசையுமாபோல் - அநாதியே விதையினிடத்திலே மரமும் அந்தமரத்திலே விதையுமவந்து தோன்றுகிறதுபோல.

முன்னுடம்பு பின்னையிந்த வுடல்விளைக்கும், கன்மமென்ப தொன்றில்லையென்ற உலகாயதனை நோக்கி, கன்மமுண்டென்று மறுத்து அருளிச்செய்ததெனக் கொள்க.

அதாவது யோனிபேதங்களாகவும் இந்திரியங்கள் ளேற்றக் குறைவாகவும் சாதிபேதங்களாகவும் இப்படி பலபேதப்பட்டு கன்மத்துக் கூடாகையால், கன்மமுண்டென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் "ஐந்துநான்கொரு மூன்றிரண்டொன்றதா முடலங்களின், வந்திடாவுணாவிந்த்ரியங்களும் வன்னபன்னையு மின்னைமையாம், புந்தியோடிய வன்னபோக குணங்களும்பூத புணர்ச்சிதான், நந்திடாதிவை பேதமாயிட வந்தவாவினை தந்தவா.

சித-பர-உல-மறு, கூ-செ.

தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொண்டுதொட்டநாதி, இமையிற் செய்தது இமையிலே யனுபவிக்கிற தொழிந்து முன்புள்ள தல்லவென்றவனை நோக்கி மறுத்தருளிச்செய்ததெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் "அநாதியே லசரவினை ரெனின மலமாயைகன்ம மனுச்சிய, அநாதிகன்ம மனுக்கள் செய்ய வறிந்துகன்ம முடரசெயா, வநாதிகாரிய மாமுடற்க

ளிசேதனமப்பணை யாவற்றிற், றநாதியாதி யமைக்கவேண்டு மமைப்பின்றேனு மநாதியே" என்றதுங் கண்டுகொள்க

சித்-பர-உல-மறு, ௪௮-செ.

இதனாற் சொல்லியது விதையினிடத்திலே மரமுண்டானாற்போலவு மீளவு மரத்திலே விதையுண்டானாற்போலவும், கன்மத்தினாலே யுடலுண்டாயு மீளவு முடலினாலே கன்மமுண்டாயும், இப்படி சரீரமுங் கன்மமும் அநாதியே தொண்டு தொட்டு தொடர்ச்சியாய் வருமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உடற்செயற்கன்மம் - தனுவின்செய்திபாற் கன்மமுண்டாம்,— இந்தவுடல்வந்த வாறேதெனில்-இந்தத்தனுவுண்டாதற்குக் காரணமியாதெனில்,—விட்டுப்படு முன்னுடம்பின்வினை-நீக்கப்பட்ட முற்றானுவின் கன்மம்,— இந்தவுடல்விளைக்கும்-இந்தத்தனுவைவிளைவிக்கும்,—வித்தினிடத்தின்மரம் - விதையினுண்டாமரமும்,— மரத்தின்வித்தும் வந்திடையும்போல்-மரத்தினுண்டாம்விதையும் வந்துபொருந்துமாறுபோல,—ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாய் - தம்முட்காரணகாரியமாய்,—தொன்றுதொட்டநாதி-தொன்றுதொட்டுப்பிரவாகாநாதியாய் வருதலினவற்றிற்குத் தம்முண் முற்பிற்பாடு முடியாதென்பதாம

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யுடலெடுத்துத் திரிகிறவனுக் காகாமிய மேறுமா றுணர்த்துகின்றார்

முற்செயல் விதியையிந்த முயற்சியோ டனுபவி
த்தா, லிச்செயல் பலிக்குமாறெ னிதமகி தங்கண்முன்

ன, ரச்செயலானுவிக்கு மவைசெயின் மேலைக்காகு
ம், பிறசெயா தனுபவிப்ப தின்றுபின் றொடருஞ்செ
யதி. (கக)

(இ-ள்.) முற்செயல் வினையை யிந்த முயற்சியோ டனுபவித்தா லிச்செயல் பலிக்கு மாறென — முற்சந்நதியிலார்ச்சித்த கன்மமிந்தச் சந்ததியின் முயற்சியாற் பிராரத்தம் புசித்துவிட்டாலப்பொழுதிங்கே யநுபவித்து விடுகிறதொழிந்து மேலுமொரு சந்ததிக்குக் காம்யமாகக் கூடு முறைமையே யெப்படியென்று கேட்டிருப்பாகில்,

இதயசித்தங்கள — மறுமைக்கு முண்டாம் வினை யீண்டத்தினைப் புசிக்கு மவசரத்தி லியான பிறரையோ மயினேன பிறரினர்க்குந் தீமைசெய்தானென்று மிதாகிதங்கள்

முன்னரச்செயல் — முற்சந்தத்தி லிதாகிதஞ் செய்ததனா லுண்டாய கன்ம மிப்போ தனுபவமாகும்,

ஆனுவிக்குமவைசெயின் மேலைக்காகும — இப்படிப் பிராரத்தம் புசிக்கையி லுண்டானதாகையா லிப்பொழுது மதனைப் புசிக்கிற காலத்து ளுண்டாகிற விதாகிதமும் வருகிற சந்ததிக்கு கேதுவாகா நிற்கும்

பிற்செயா தனுபவிப்ப தின்று — ஒருகாலத்து மிவனுக்குக் காம்ய மேற்றும் புசிப்புண்டாக மாட்டாது,

பின்றொடருஞ்செயதி — இப்படியே சந்நங்கடோறுந் தொடர்ந்து தொடர்ந்து வராநிற்கும் எ-று.

முற்செயலென்றதுமுதலைந்துக்குஞ் சிந்தியாகமமென வறிக. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

முற்செயல்விதியை யிந்தமுயற்சியோ டனுபவித்தா லிச்செயலபிக்குமாறெனெ-பூர்வத்திற்செய்த புண்ணியபாபங்களை யிந்தத்தேகத்தில் யத்தினத்தினாலே புசிக்கிறதேயானால், இதனால் மேற்கருமமேறும்படி யெப்படியெனின்?—இதமகிதங்கள்-விருப்பு வெறுப்பாம்,—முன்னர்ச்செய்யலானால்-பூர்வத்திலும் புசிக்கையில விருப்பு வெறுப்பா லாகாமிய மேறுகையால்,—இங்கு மனைசெயினமேலைக்காகும்-இவ்விடத்து மந்தவிருப்புவெறுப்பைப்பண்ணினால மேல்சந்தத்துக்கு ஏதுவாம்,—பிற்செயர் தனுபவிப்பதினாறு-சிவஞானசிரகத்தினாலே ராகத்துவேஷ நிருமூலத்தனுக்கொழிய ஆகாமியமேறும்படி புசிக்கிறதுகூடாது, ஆகையா லாகாமியம் பொருந்த அனுபவிப்பதில்லாமையால்,—பின்னொருடருஞ்செயகி - செய்யப்பட்ட தொழிலானது புண்ணியபாவங்களால் சனம தொடர்ச்சியாய்வரும்

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

ஆகாமியம வந்தேறுமாறு கூறுகின்றார்.

முற்செயல் விதியை - முற்சனனத்திற பண்ணின கன்மபல சுகதுக்கங்களை,— இந்தமுயற்சியோடு - அந்தச் சுகதுக்கங்களுக்கு முதற்காரணமாகிய போக்கிய கன்ம சுகதுக்கமாய்ப் பரிணமித்தற்கு நிமித்தமாய்ச் சனகந் தாரகமாகி யந்த முற்செயலுட் டானே யிருக்கும் போசக கன்ம மிப்பிரயத்தனத்தையுண்டாக்கி யதனோடு கூடியுண்டாகக, அந்தச் சுகதுக்கங்களை,—அனுபவித்தால் - புசித்தால்,— இச்செயல் பலிக்குமாறெனை - இவ்வாகாமியம் வருதற்குக் காரணமேது,—முற்செய

லெப்படி வந்தது,—இதமகிதங்களால் - எனனில்; இதமகிதங்க
ள,—முன்னர் - முன்னாக,— அச்செயலானல் - அந்தமுற்ஜன
ம கன்மமுண்டாமாதலால்,—அவைசெயின மேலேக்காகும - அந
த இதமகிதங்களை யிப்போது பண்ணினும் மேலேக்காகும,மேல்
மறுசன்மத்திற் சுகதுக்ககாரணமாகு மாகாமிய மேறும், இத
மகிதமும ஏவுதற்காதகா யனுவிக்கு முற்கன்மபலம பண்
ணன்றே, பின்னுகாமிய மியற்றுதற் காரணமாயிருக்கு மிவ்வாக
குண்டாதற்குக் காரணமேதோ? சத்தியம் விவேகமின்றி நானே
பண்ணுகிற்கினறேன் என்னுங் காய ராக பயாவேசத்தால் சுத
நத்ர கன்ம கர்த்தாவாய்ப் பலனை கொள்பவனுமியும், தனக்குத்
தானே தோற்றியிருத்தலால்,ஆகாமிய மித்தமுனைறுகாரணத்தா
லேறும்,—பிறகியா தனுபவிப்ப தின்று - முற்பண்ணுகைதது பின
னனுபவிப்ப தின்று,—செய்திவினை தொடரும்செய்தி-மனோவா
க்குக்காயங்களிற் சமவாய சம்பந்தியாய் வருமித மகிதமென்கி
ற வியாபாரத்தாலதனமம், கிருஷி கன்மம்போற் றொழிலாதலா
ல் இங்கேகெட்ட தெங்கே போய்ப பின்வந்து தான பலந்தரும்,
கிருஷி கன்மத்தொழில் கெட்டாலும் அதனாற் பூமியிலுண்டா
கும சமஸ்காரம்போல, மனோவாக்குக காயத்தொழிலும்—னே
கெட்டாலும் கெடும், முற்கணத்திற் றொழிலினுல் புத்தித்தத்துவ
த்திற் சமவாயசம்பந்தியாய் வைக்கப்பட்டுப் பலபரியந்த மிருக
குஞ் சமஸ்காரமாகிய அதிருஷ்டமெனனும் பெயர்சகூக்குமக
ன்மம்,— பின்றொடரும்-சொர்க்கநரக பூமிகளிற் சூக்குமதேக
த தேரிலிருந்து போம்வரும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அற்றேல் இத்துணையுங் கூறியவாற்றான் முன்புசெய்தக
ன்மம் இங்கிவற்றிற்கேதுவென்பதூஉம், அவற்றையனுபவித்தற

குத துணையாதன மாத்திரையே முயற்சியெனபதூஉ மொக்கு மாயினும, அவவாறு வினைபபயனுக கிடாக வருகினற முயற்சி மேலுடற சேருதறகுரிய வினையாமாறு யாங்ஙனமெனின? நனறு சொனனாய், முனவினையெனபபடு மிதமகிதமாவன? முற்பிறவியினவவாறு நிகழுமுயறசியேயனறி வேறினமையான, அதனையுடமபடடாய்ககு அநநயமபற்றி இவவுமமுயற்சி நிகழுநதால் அது மேலைககு வினையாமெனபதுகூடமே போதரும் அற்றேல் ஒரோவழி முயற்சியினறி யிருபபாரககு மேல வரககடவதொனறு இல்லைபோலுமெனின? அற்றனறு, அனுபவமாவது முயறசியை யொட்டியே நிகழவதொனறாகலிற பிராரத்தவினையனுபவமுளளளவும் முயறசியும ஒருதலையானுணடெனபது பெறப்படுதலின, அநுபவமுளவழி மேலைககு வரககடவதொனறிலலையென்றல் யாணடையதெனறொழிக வெனபதாம.

ஒருவினை செய்யாதோரு முடையரெனறாலும் வருந்திச் செய்யவேண்டாது எளிதிற பெறுவது நோக்கியே பிறிதனறெனபது கருதது.

மாங்கன் முதலியவற்றிற்கு நுண்ணீர் முதலியவற்றை ஏற்றுக்கோடற்குரிய சூக்குமமுயறசி யுணடெனபது உணாநதுகொளக.

யாண்டும் பிறழாமை யுணாத்துதற்கன்றே பிற்செயாதனுபவிப்பதினறு என எதிாமறை முகத்தான வரைசெயது கூறினரெனபது.

ஆருலெனபது தெளிவின்கண் வநதது; காணபவனசிவனேயாகுவ என்றாற்போல.

அற்றேல் ஒனறனபொருட்டு வந்தது மற்றொன்றன்பொருடடாதல் கணடிலமாதலின, இதமகிதங்கண் முனனரச்செய

லாயவாறுதான் யாங்ஙனமெனின்? அஃதுணர்த்துதற் கன்றே வருஞ்செய்யுளெழுந்ததெனபது.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

இந்தவுடலிலே புசிக்கிற கன்மமெல்லா முன்புள்ளதாகில் மேலைக்குக் கன்மமுண்டாகிறபடி யெப்படியென்றவனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

முற்செயல் விதியைப்பிந்த முயற்சியோ டனுபவித்தால் - முற்சந்நதங்களிலாரச்சித்த புண்ணியபாவங்களை யிந்த சந்ததியிலாரச்சித்த நடுவே புசித்தால்,—இச்செயல் பலிக்குமயாறென - இப்பொழுது இங்கே புசிக்கச்செய்யவே யுண்டான கன்மங்கள் எங்கே பலிக்குமெனில்?—இதமகிதங்கள் முன்னர்ச்செயலாகும் - முற்சந்நத்திற சுகதுக்கங்களை புசிக்கிற வவதாரத்திலே யுண்டான பிரியாப்பிரியங்கள் இந்த சந்தத்துக்குச் சுகதுக்கங்களாய் வந்து பொருந்துகையினாலே,—இங்குமையெயின மேலைக்காகும் - ஆகையால் இப்பொழுதும் பிராரத்தம புசிக்கச்செய்தே யுண்டாகிற இதாகிதங்கள் வருகிற சந்தத்துக்கு ஏதுவாகாநிற்கும்,— பிறசெயா தனுபவிப்ப தின்று - ஒருகாலத்திலும் ஆகாமியம் ஏறாமற் புசிப்ப துண்டாகமாட்டாது;—பின்ஏருடரு செய்தி-ஆகையால் கன்மங்களை தொண்டுதொட்டு வாராநிற்கும்.

இதற்குப் பிரமாணம் முந்தின திருவிருத்தத்துக்கு இட்ட பிரமாணத்திலே கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது முற்சந்நத்தி லுண்டான வாகாமியமிந்த சந்தத்துக்குப் பிராரத்தமாயும் இப்படியே கன்மம்

அநாதியே தொண்டு தொட்டு வருமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

முற்செயல்விதியினையிங்கு முயற்சியோடனுபவித்தால் - அறிவித்ததனையுங் கூறியவாறென்னை முன்செய்த கன்மம் இங்கிவற்றிற் சேருமென்பதூஉம், அவற்றை யநுபவித்தற்கேதுவாகிய னமாகத் திரைமே முயற்சியென்பதூஉம் ஒக்குமாயினும்,—இச்செயல்பலிக்குமாறென -அவ்வாறு வினைப்பயனுக் கிடாகவருகின்ற முயற்சி மேலுடற் சேருதற்குரிய வினையாமாறு யாங்ஙனமெனின்? என்று சொன்னால்,—இதமகிதங்கள் முன்னரச்செயலாலு ல-முன்வினையெனப்படும் இசமகிதமாவன? முற்பிறவியி னவ்வாறு நிகழு முயற்சியே பயனறி வேறின்மையான் அதனையுடம்பட்டாய்க்கு அந்நயம்பற்றி,—இங்கு ரவைசெயின் மேலைக்காகும் - இங்குமம் முயற்சி நிகழ்ந்தாவது மேலைக்கு வினையாமென்பது தானே போதரும் அற்றேல் இரோவழி முயற்சி யின்றி யிருப்பாக்கு மேல்வரக்கடவதொன்றில்லை போலுமெனின்? அற்றன்று,—பிறசெயா தநுபவிப்ப தின்றுசெய்தி பினைருடரும்-அநுபவமாவது முயற்சியையொட்டியே நிகழ்வதொன்றாகலின் பிராரத்தவினையநுபவமுள்ள அளவு முயற்சியு மொருதலையா னுண்டென்பது பெறப்படுதலின், அநுபவமுள்வழி மேலைக்கு வரக்கடவதொன்றில்லையென்றல் யாண்டைய தென்றொழிக என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய கன்மம் புசிக்குமிடத் தத்தாரண பூ
ர்வமாகத் தொகுத் துணர்த்துகிறார்

மேலைக்கு வித்துமாய் விளைந்தவை யுணவுமாகி,
ஞாலத்து வருமாபோல நாஞ்செயும் வினைகளெல்

லா, மேலத்தான் பலமாய்ச்செய்யு மிதமமி தங்கட்கெ
ல்லா, மூலத்த தாயியென்றும் வந்திடு முறைமையோ
டே. (கஉ)

(இ-ள்) மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி ஞாலத்து வருமாபோல — பூமியின் கண்ணே பொருவன செய்யுந் தொழிலா லுண்டாகிய தானியமுதலிய, வருங்காலத்துக்கு வித்தும் நிகழ்காலத்திற் புசிப்புமாகியும் வருதல். அதுவருமாறுபோல

நாளுஞ்செயும் வினைகளெல்லா மேலத்தான பலமாய் — நாமு முற்சனனங்கடோறுஞ் செய்த வினைகளெல்லா மெப்பொழுது புசிப்பதற்குப் பாகமாய், சிறிது சஞ்சிதமாய்க் கட்டுப்பட்டு சஞ்சிதகால மிருந்து மேல்வருஞ் சனனங்களிற் புசிக்கற்குப பாகமாயிருக்கும்.

செய்யு மிதம மிதங்கட் கெல்லா மூலத்த தாகி — யாமெடுத்த தேகத்திற் செய்யுமிதாகிதந் தானே யாகாமியமாயேறிச் சனனங்கடோறுஞ் சரீர மெடுத்தற்குக் காரணமாகி வரும்.

என்றும் வந்திடு முறைமையோடே. — எப்பொழுது மிந்த முறைமையைப் பொருந்தி சனனமரணங்களுக் கேதுவுமாய் வரும். எ-று.

காயா யிலையாயக் கிழங்காய் விளையும் வித்துக்களு முன்டாகையாற் பொதுவாக வுணவெனமுா.

ஏகார மீற்றசை.

இவற்றுட் சஞ்சிதமாவது - சனனங்கடோறு மநாதியே தொடர்ந்து தொடர்ந் தாறத்துவாக்களிற் கட்டுப்பட்டன அளவிறந்து கிடக்கு மிருவினைகள.

பிராரத்தமாவது - அந்தச் சஞ்சிதத்திலே பரிபக்குவத்தைக் குறித்த அதற்கேற்ற தனுகரண புவனபோகங்களை யுண்டாக்கிப் புசிப்பிப்பது.

ஆகாமியமாவது - பிராரத்தத்துக் கிசையவெடுத்த தேகத்தி லதன்பலத்தைப் புசிக்கையில் விருப்பு வெறுப்புகளா லுண்டாய கன்மபலத்தைக் கூட்டுஞ் சிவனை யிகழ்ந்தபராதத்தால் வரும் புண்ணியபாவங்க ளெனவறிக.

முற்கூறிய பிராரத்தம் இச்சை அநிச்சை பரேச்சை என மூவிதமாம்.

இச்சையாவது - இராசாவின் மனைவியைத் தீண்டலால் வருஞ் சுகமுந் துக்கமும்.

அநிச்சையாவது - இடிமுதலியவற்றா லிருபயனையு முறுவது.

பரேச்சையாவது - ஒருவ னொருகாரியஞ் செய்ய வந்தவனை யாக்கினை யபராதமென் றிராசகரஞ்சொல்ல அதற்கொருவன் வினைமுதலியவற்றாலுறு மிருபயனு மெனவறிக.

அஃதன்றித் திருட்டமெனவும் அதிருட்டமெனவும் திருட்டாதிருட்டமெனவும் மூவிதம்.

இவற்றுள் திருட்டமாவது - இப்பொழு திவ்விடத்திற் சீந்தற்றண்டு முதலிய ஔடதங்கள் மந்திரங்களாலு மிம்மையிலே செய்த கன்மமிம்மையிற் பலிக்குமது.

அதிருட்டமாவது - இம்மையிலே செய்தகன்ம மறுமையிற் சுவர்க்கநரகங்களை யநுபவிக்கை.

திருட்டாதிருட்டமாவது - இம்மையிலே அசுவமேதஞ் செய்தவ னிம்மையிற் றானே சுகத்தையடைந்து சுவர்க்கத்தை யடைவது.

இஃதன்றி "குறித்தொருவரைச் செய்த தீவினை கொலை கள் சூழ்ந்த களவெலாஞ், செறித்தொருவரைச் செய்த தீவினை யிம்மையேவருந் திண்ணமே" எனவறிக.

பிரமகத்தி செய்தா னிம்மையிற் றுக்கத்தை யடைந்து மறுமையி னரகத்தினகண் வீழுவது.

இத்தனைவிரிக்கிற் பெருகுமெனவறிக (சஉ)

சிவாகரயோகியருரை வருமாறு.

—0—

மேலிதற் குதாரணம்.

மேலைக்குவித்ததுமாகி விரிந்ததுமாகி ஞாலத்து வருமாபோல— ¶ பனசாமர கர்ச்சூர திந்திரிணியாதி பலங்களானவைகள் இப்பொழுது புசிப்புமாய் † த்பீசங்களா மேலைக்குவித்தங்களுமாய் பூமியினகண் வருமாபோல,—நாஞ்செய்யுமவினைகளெல்லா மேலத்தான பலமாசசெய்யும் - நாம வாக்மனக் காயங்களினாலே பண்ணப்பட்ட ஸ்தூலகருமங்கள் இவ்விடத்து நசிக்க. அதினிடத்திலே நின்றும் சூக்குமரூபமாக அதிருஷ்டமென்றொன்று சனித்துத் தத்தங்காலங்களிலே தருவாதிபலங்களைப் பொருந்தப்பண்ணும். அந்தச் சூக்குமகருமத்திலே சுக்குமமென்று ஒருகருமமுண்டாய் அதுகருமபீசமென்றுபோராட்புத்திநிஷ்டமாய் நின்று புண்ணியகருமபீசம் புண்ணியத்தையும், பாபகருமபீசம் பாபத்தையும் பண்ணுவிக்கும். கருமமானது ஸ்தூலம் சூக்கமம் சுக்குமமென்று திரிவிதமாம்.

இதற்குசமமதி

+ திருமுதகன-விடுபட்டவன

¶ பனசம் - பலா, ஆமரம்-மா, கர்ச்சூரம் - பேரிச்சு, திந்திரிணி - புளி.

‡ பீசம்-கொட்டை.

ஶிவயமிஜா தமெ — கயஜ ஹெஜா விஜெயா ஶ்ரீ தவ ப்ரத்தி ப்ர ஹெஜ தஃ । ஸ ஞ்ஞா ஸ ஞ் க்ஷா ஸ ஸ ஞ் க்ஷ । ஶ்ரு கொடிஹெஜெ ஶ ந கயா ஜதி.

இசமசிதங்கட கெல்லாம் மூலத்ததாகிபென்றும் வந்திடும் முறைமை? — இசமசிதமாகிய புண்ணியபாவங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிய முறைமையையுடைத்தாய் முத்திபரியந்தமும் முறைபிறழாமல் பொருந்திவருவது ஆகுமகாரண கருமமானது

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

ஆகாமியமே, சஞ்சிதம் பிராரத்தமாய் வருமெனபதற்குத் திருஷ்டாந்தம்

விளைந்ததை மேலக்கு வித்துமாகி யுணவுமாகி வருமா போலென்று பொருட்புலாசசி

மற்றைய வெளிபபொருள

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

உலகத்தின உணவினபெருட்டு விளைந்த கனிமுதலாயின உணவுமாய வித்துமாதல கண்டாமன்றே, அதுபோல, நாமெனனுமுனைப்பாற் செய்யப்படுவதாகிய முயற்சியுஞ் செயல்வகையான் வினைக்கீடாக வருமனுபவத்தைப் பயக்கும், கருத்து வகையான இதமகிதமெனப்படும் ஆகாமியவினையைப் பயக்குமெனபதாம்.

இவ்வியல்பு தொன்றுதொட்டு வீடுபேறெய்துமளவும் இடையறவுபடாது தொடர்ச்சியாய் வருமெனபார், என்றுமென்றார்.

மூலத்ததென்னுமொருமை அத்தகருமத்தின் மேனின்றது. இதமகிதமாகவென்பது என வருகின்றது மது

“ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்” என்றாற்போல ஈண்டு ஒடு ஆறாயிற்று

இவை நான்கு செய்யுளானும், முற்சிகத்துப் பயன் இதுவென்பதுணர்த்துமுகத்தான் வருவாயிலமைமையின், வினையுண்மை பெறப்படாதென்னுமவர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, வருவாயினியல்பு கூறி, மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றேல், அம்முயற்சியினாலாகிய இதாகிதங்களியல்பாமாறும், அவை பின்னர்ப்பயப்படுமாறும் யாங்ஙனமெனின், அது முன்னாகக் கூறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படித் தொன்றுதொட்டு வருமென்ற கன்மமொன்றாயிருக்க, பிராரத்தமாயு மாகாமியமாயும் வருமென்றதெப்படியென்ற உலசாயத்தை நோக்கி அருளிச்செய்கிறார்.

மேலைக்குவித்துமாகி விளைந்தவையுணவுமாகி ஞாலத்துவருமாபோல — விசுவத்திலே விளையத்தக்க தானியங்கள், வருகிறவருஷத்துக்கு விதையுமாய், இந்தவருஷத்துக்குப் புசிப்புக்களுமாய் வருகிற முறைமைபோல,— நாஞ்செயும் வினைகளெல்லாம் - நம்மாலே முற்சநநங்களிலே செய்யப்பட்ட கன்மங்களெல்லாம் இத்தன்மைத்து,— ஏலத்தானபலமாம் - இந்த

ஜனனத்திலே வந்தகூடிப் புசிக்கைக்குப் பிரயோசனமுமா ய்,— செய்யு மிதமகிதங்கட்கெல்லா மூலத்ததாகி - இப்படி யனுபவிக்கச்செய்தே ஆர்ச்சிக்கிற பிரியாப்பிரியங்கள் வருகிற ச நநத்தில் அனுபவிக்கத்தக்க சுகதுக்கங்களுக்கு ஏதுவுமாய்,— என்றும வந்தி முறைமையோடே - எப்பொழுது மிப்படி யே முறைமையாகவந்து பொருந்தாநிற்கும

மூலத்ததாகி யென்றும வந்தி முறைமைபோடே என் றது உலகாயதன இம்மையிலே செய்தகன்மம இம்மையிலே அ னுபவிக்கிறதொழிந்து, இப்படித் தொன்றுதொட்டு வாராதெ ன்றதைப பற்றியெனக் கொள்க

இதற்குப பிரமாணம். பரபட்சம. "செய்திடுங்கனமமெ ல்லாஞ் செய்தவா சமைபபறறி, யெய்திடு மெனனினிஙகே மாயந்திடு மேய்வதெங்கன, மெய்தருதுயராகெட்டுச் சுகங்கமா ய்ரேவுமெனனி, லையனே தீபமபோறு லதனொளி யாவதுண் டோ" எனனுமதுங் கண்டுகொள்க.

சித-பர-உல-மறு, எ-ச.

இசனுற சொலலியது இநதப் பூமியிலுண்டான விளைவுக ளெல்லாம இந்த வருஷத்துக்குப் புசிப்புமாய், வருகிற வரு ஷத்துக்கு விதையுமானுறபோல, ஆனமாக்கள செய்யப்பட்ட கனமமும இந்தச சநநத்துக்குப பிராரத்தமாய், வருகிற சநநத் துக்கு ஆகாமியமுமாய் வருமெனறும், பிரியாப்பிரியஙகள் சுகது க்கமாயும சுகதுக்கத்திலே பிரியாப்பிரிய முண்டெனனு முறை மையும் அறிவித்தது.

"இருவினையென்னே" என்ற திருவிருத்த முதல். "மேலைக் கு"என்ற திருவிருத்த மீறாகவும் உலகாயதன.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

ஞாலத்துவினைச்செய்கை - உலகத்திலுணவின்பொருட்டு விளைந்த கனிமுதலாயின,—உணவுமாகி மேலைக்குவித்துமாகி வருமாபோல,—உணவுமாய் மேலைக்கு வித்துமாதல் கண்டாமன்றே அதுபோல,—நாஞ்செய்யும் வினைகளெல்லாம் - நாமெண்ணு முன்னப்பார் செய்யப்பட்டுவந்தசிய முயற்சியும் முறைமையோடே,—ஏலத்தானபலமாகச்செய்யுமா,—செயல்வகையாற் பொருந்த வினைசகிடாய வருமனுபவத்தைப்பயக்கும்,—என்றுமிதமங்கி தங்கட்கெல்லாம்-எக்காலமுங் கருத்துவகையா னிதமகிதமென்னப்படும்,—மூலத்ததாகிவந்திடும்-ஆகாமியவினையைப் பயக்குமென்பதாம்.

இவைநானுசொய்யுளானு முயற்சிக்குப் பயனிதுவென்ப துணாத்து முகத்தால் வருமாயினமையின வினையுண்மை பெறப்பட்டதென்று மவாமகரப்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வருவாயினியல்பு கூறி மேலதுவலியுறுத்தப்பட்டது

மறைஞானதேசிகர் உரை.

—•—

முற்கூறிய விதமகிதங்க ளிவையென்ப தூஉ
மதனாற் சிவனிருபயனையுங் கொடுப்பனெ
னபதூஉ முணாத்துகிருர்.

இதமகி தங்களெப்படிக்கன்மன வாக்குக்காயத் திகமுயிர்க்கு றுதிசெய்த லிதமற் றதுசெய்யாமை, யிதமகி தங்களெல்லா மிறைவனே யேற்றுக்கொண்டு, இதமகி தத்தாலின்பத் துன்பங்க ளீவனன்றே.(௧௧)

(இ-ள்.) **இதமகிதங்களென பது** அச்சனனத்துக்குக் காரணமாகிய கன்மமிதமகிதங்களென இருவிதமாகச் சொல்லப்படும்.

இதனமனவாக்கு காயம அவ்விருவிதமு மனசாலினைப்பதும், வாக்காற் சொல்லியதும், காயத்தினாற் செய்வதும், தம்மி லொன்றுக்கொன்று வேறுபாடாய வருவன.

இம்மூவிதத்தா லியற்றுவது தூலகன்ம மெனப்படும் மனாதிக ளொவ்வொன்று தொகையான மும்மூன்று பேதமாய்வரும்.

"அவைவருமாறு —பேசிய தூலபேதந் தனித்தனி நான்கு பேக, மூசமூன நான்குபேத முற்றும்ம் மூவாறுமின்னு, மாசிலோரறியுமவேலை விரிநதிடுமநேகமாக, நாசமாநரகபேதத அயரினைக் கொடுக்குநாளில"

மற்றச் சூக்குமமு மதிசூக்குமமும பதிபசுபாசப் பனுவலிற்கூறிரு ராண்டுக்காணக.

இதமுயிர்க்கு றுதிசெய்தல் ஆன்மாக்க டமக்குயிர்க் குறுதியாகப் புண்ணியத்தைச் செய்த லிதம.

அகிதமற்றது செயயாமை ஆன்மாக்கட் கிதமாகிய புண்ணியத்தைச் செய்யா தகிதமாகிய பாவஞ்செய்த லகிதம அவைதானே பலத்தைக் கொடுக்கவற்றோ வெனின்?

இதமகி தங்க ளெல்லா மிறை வனே யேற்றுக் கொண்டிங் கித மகி தத்தாலின் பத் துன்பங்க ளீ வனன்றே. அவ்விதாகிதங்க ளாகிய கன்மபலங்களை யெல்லாங் கர்த்தா வறிந்துகொண் டான்மாக்களுக்கு இருவினைப் பலங்களை யேறுமாற் குறையாமற் றுய்ப்பிப்பன். எ-று.

ஆன்மாக்கட்குப் புண்ணியபலமே யிதமாதலா லிதமென்றார்,

பாவபலந் துக்கத்துக்குக் காரணமாதலா லகிதமென்றானறிக

ஏகாரந் தேற்றம்

இதற்குச் சுவாயம்புவத்துக் காண்க. (சரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இதமகிதங்களைப் பகுதல்மனவாக்குக்காயம் - இதாஹிதங்களாவன, சொற்றமமாகிய மனவாக்குக்காயங்கிளாலே வருவது உதவுகாரென்னில்,—இதமுயிர்க் குறுதிசெய்த லகிதமற்றது செய்யாமை-இதமாகிறது ஆன்மாக்களுக்கு மனசினாலே நன்மையைநினைத்தலும், வாக்கினாலே நல்வசனத்தையுரைத்தலும், காயத்தினாலே நன்மைகளைச்செய்தலும், அந்நாதிகளைக் கொடுத்துமுறுதிசெய்தல். இதனறி அகிதமாவது ஆன்மாக்களுக்கு மனசினாலே ஒருபொல்லாப்பை நினைத்தலும், வாக்கினாலே நிஷ்டூரஞ்சொல்லியும், காயத்தினாலே பீடைபண்ணியும் பரத்திரவியங்களை யபகரித்தலுமாம்.

ஹிதம் - பரோபகாரேண ப்ரவ்ருத்தி ரஹிதம் து பரபீடா | பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம்.

மற்றது செய்யாமையென்றது கொண்டு யாதொருவான்மாவிற்கு வருத்தம்வந்தகாலத்து அதைமாற்றத் தனக்கு சக்தியுண்டாயிருக்கவும் உபேட்சைபண்ணினாகில் அதுவும் தான்பண்ணின அகிதமேயாம்.

தது³க்தம் - ஸ்நாயாத்³ விஷ்ணோத்³ ருத்³ராத்³ ப்³ராஹ்மணாத் ஸக்ரஸ்யாத் புத்³தா⁴த் | யாநுஷ்டா²பயந்தி யத்கர்மாணி தேஷாம் ஸிவ ஏவ ப²லதா³தேதி.

இதமகிதங்களெல்லா மிறைவனே யேற்றுக்கொண்டிங் கிதமகிதத்தாலின்பத் துன்பங்களீவனன்றே - இங்ஙனஞ் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்களெல்லாத்தையும் கர்த்தா திருவுளத் தடைத்துக்கொண்டு அந்தப் புண்ணிய பாவங்களினாலே சுகதுக்கங்களைக் கொடுப்பன.

அன்றே என்பது நிச்சயமாகவென் றறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

இதமகிதங்களிவையென்பது மதையறிந்து சிவனே பலங்கொடுப்பனென்பது முணர்த்துகின்றார்.

இதமகிதங்களென்பதே தெனில்?—இகல் - ஒன்றுக்கொன்று மாறுபாடு அதற்குள்,—இதம மனவாசகக் காயத்து - மனவாக்குக் காயங்களினாலே,— உயிர்க்குறுதி செய்தல்- ஆன்மாக்களுக்கு நன்மை பண்ணுதல்,—அகித மற்றது செய்யாமை - அகிதமாவது நன்மைசெய்யாமற் றீமை செய்வது. அவற்றுள், மனத்தினாற் செய்தல் பிரியங்கோபமுதலியன, வாக்கினாற் செய்தல் துதி நிந்தை முதலியன, காயத்தினாற் செய்தல் அடித்த லணைத்தல் முதலியன,— இதமகிதங்களெல்லாம் - இதமகிதங்களால் வரும் பாவ புண்ணியங்களனைத்தையும்,— இறைவனேயேற்றுக்கொண்டு - சிவனே கண்டுகொண்டு,—இதமகிதத்தால் - வரும் சனகம் தாரகம் போக்கியமெனு முத்திறவினைகளினாலே,—இன்பத் துன்பங்களீவனன்றே - சுக

க்கங்களைப் போக்ய கன்மத்திலே நினறு முண்டாக்கிப் புசிக்கப் பண்ணுவனாருனே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உயிர்களுறுதியென வேதாகமங்களின் விதித்தவற்றைச் செய்தலே இதம், அவற்றது மறுதலையைச் செய்தலே அகிதமாகலான, அவ்விரண்டனையுமறியவல்ல முதல்வனே அவற்றைக் கைக்கொண்டு பயனளிப்பனென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சொல்லிவந்த இதமென்றதேதென்றும் அகிதமென்றதேதென்றும் கேட்ட மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

இதமகிதங்களெனப் திகல்மனவாக்குக் காயத்து - இவனுக்கு இதாகிதங்களென்று சொல்லப்பட்டது ஒன்றுக்கொன்று மாறுபட்டு வருகிற மனத்திலுள்ள நினைவாலும், வாக்கிலுள்ள வசனத்தாலும், காயத்திலுள்ள தொழிலாலுமுண்டாம் இதமாகச்செய்கிறதேது அகிதமாகச் செய்கிறதேது எனலின்? — இதமுயிர்க் குறுதிசெய்தல் - இதமென்பது ஆன்மாவுக்கு நன்மைப் பகுதி யுண்டாகத்தக்க வுறுதியான காரியங்களை யறிந்துசெய்கிறது,—அகிதமறிந்துசெய்யாமை- அகிதமென்பது ஆன்மாவுக்கு நன்மைப்பகுதி யல்லாத காரியங்களை யறிந்து ஒன்றையுஞ் செய்யாதிருத்தல். இதமகிதங்களாலுண்டாகிய சுகதுக்கங்களசேதனமாகையாலும் இவனுக்குத் தனக்கென்ன வறிவில்லா

சபடியாலுமிவை தனவிற்கூடாது. இவைகூடுகிறபடி யெப்படியெனனில்?—இகமகிதங்களெல்லா மிறைவனே யேற்றுககொண்டு - அநத இதாவகிதங்களெல்லாம் பரமேஸ்வரன திருவுளமபற்றிககொண்டு,—இங கிதமகிததகாலின பதனபஙகளீவன வன்றே - பரமேஸ்வரன இநத நசகுத துகக சுகததையும அகி தததுசகுததககக துககததையுங கொடாநிற்பன

இகனூற் சொலலிபது மனவாசகுக காயஙகளினுலே விருபபு வெறுப்பு உணடாமெனறும,ஆனமாவுககு உறுதியானகாரியஞ செயகிறது விருபபெனறும, உறுதியான காரியஞ் செய்யாமலிருககிறது வெறுபபெனறும், இநத விருப்பு வெறுட்புககுணடான சுகதுககஙகளைப பரமேஸ்வரன றனனுடைய திருவுளததினுலே கணடு ஆனமாவுககுமாள முறைமையினுலேகூட டுவன எனறுமுறைமையும அறிவிததது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—— ௱ ——

இதமகிதங்களெனபது - இதமகிதங்களாகிய கனமமயாவையெனின,—இசன மனவாககுக காயதது - மாறுபட்டமனவாககுக காயஙகளால்,—உயிாககுறுதி செய்தலிதம் - உயிர்ககுறுதியென வேதாகமங்களில் விதிததவறறைச செய்தலேயிதம,—மற்றது செய்யாமையகிதம் - அவறறது மறுதலையைச் செய்தலே யகித மாதலால,—இதமகிதங்க ளெல்லாம - இதமகிதமாகிய அவவிரண்டினையும,—இறைவனே யேற்றுக்கொணடு - அறிபவல்ல முதல்வனே யவற்றைக கைக்கொண்டு,—இதமகிததால் - அவ்விதமகிதமா யககனமததிற் கேற்ப,—இனபததுனபங்களீவ னனறே - இனப துனபமாகிய பயனளிப்பன.

மறைஞானதேசிகர் உரை.

மேற் பட்டாசாரியன், கன்மந்தானே வந்து
கூடிய தொழிற் றமக்குக் காத்தாக் கொடுக்க
வேண்டுவதில்லையென அவன்றானே
யாண்டதுவென்ன றனைத்
தருகின்றார்

இறைவனிங் கேற்பனவை யிதமகிதங்களெ
ண்ணின், நிறைபர னுயிர்க்குவைத்த நேசத்தி னில்லைமை
யாகும், அறமலி யிதஞ்செய்வோருக் கனுக்கிர கத்தைச்
செய்வன, மறமலி யகிதஞ்செய்பவர்க் கிக்கிர கத்தை வை
ப்பன. (கச)

(ள-இ) இறைவனிங் கேற்பனவெனவை யிதமகிதங்களெண்ணின — ஆன்மாக்கள் செய்த ஹிதாஹிதமாகிய இருவினைப்பலங்க ளந்தக் கர்த்தாவைக்கொண்டே ஏதுகாரணமாக அவ்வான்மாக்களுக்குப் புசிப்பிக்கிறானதனை யெனக்குச் சொல்லுமென்னில்?

நிறைபர னுயிர்க்குவைத்த நேசத்தி னில்லைமை யாகும — எங்கும் பூரணனாய நிற்குஞ்சிவ ஞானமானச்சனிடத்தினில் வைத்த கிருபையனந்த கனகென வொரு பிரயோசனத்தைக் கருதிச் செய்கிறதல்லக் காண்.

அறமலி யிதஞ்செய்வோருக் கனுக்கிர கத்தைச் செய்வன — மிகுந்த புண்ணியத்தைச் செய்தவர்களுக்குக் கதியையளித் தனுக்கிரகத்தைப் பண்ணுவன்,

மறமலி யகித — அறமல்லாத மறமாகிய தீவினைசெய்தவர்
ருக்கு

ஞ்செய்யி னிக்கி களுக் கதனபலத்தையறிந் தவர்களுக்குத்
ர கத்தைவைப்ப துன்பத்தை யுறுவிப்பன. எ-று. (௧௭)
ன.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

இறைவனிங் கேற்பதென்னை யிதமகிதங்களென்னி னிறை பரனுயிர்க்குவைத்த நேசத்தி னில்லைமையாகும-கர்த்தாவானவ ன் ஆன்மாக்கள் பண்ணின புண்ணியபாபங்களை கிரகிப்பானே னென்னில்? சர்வாந்தரியாமியாகிய பரமேஸ்வரன் ஆன்மாக்க ளினிடத்தில பிரிவற்றிருக்கிற நிலைமையினாலே யவர்களிடத்தி ல கிருபாவசமாக கிரகிப்பன,—

அறமலி யிதஞ்செய்வோருக் கனுக்கிரகத்தைச் செய்வன- மிகுந்த தர்மமாகிய யிதங்களைப் பிறர்க்குச்செய்த பேர்களுக்கு க்கிருபையினாலே நன்மையைப்பொருத்துவன,—

மறமலியகிதஞ்செயயில் நிக்கிரகத்தைவைப்பன - மிகுந்த அதர்மமாகிய அகிதங்களை யார்க்குஞ்செய்த பேர்களுக்கு துக்க த்தைப் பொருத்துவன.

அறமலியிதமென்றது சற்சனருக்குப் பண்ணு மிதம்.

மறமலியகிதமென்றது யஞ்ஞாதிகளுக்கன்றி ஆன்மார்த்த மாக இம்சையைப் பண்ணுகிறது அகிதம்.

தது₃க்தம் ஸௌக்ஷேர — ஸர்வேஷாம் ப்ராணினாம் ஸ்
வார்த்தோ ஹிம்ஸா ப்ராணஸம்ஸ்தேதவி । ஸா நஹிம்
ஸேதி விஜ்ஞேயா யாஹிம்ஸா ஸாஸ்த்ரசோதிதேதி ॥

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

மீமாஞ்ச ஞசங்கிகக உததரமுரைக்கினறா

இறைவனிங கேறபதெனனை-சியனபி மானிபபதேது,—அ னுக்கிரகம - இனபம,—நிககிரகம - துனபம,—வைப்பன - ப ணுவன.

மறறதுவெளிபபொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

முதல்வன அவற்றையேற்றுககோடறகுக காரணம் உயிர் கள் வீடுபெறெய்தறபொருடடு வைதத கருணையேயாம

கருணையாயினும காரண மிருவேறுவகைபபட நிகழநத மையிற பயனு மிருவேறுவகைபடச செயயுமெனபதாம.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

இஙஙனஞ சொல்லப்பட்ட கனமங்களுக்கீடான சுகது க்கங்கள ஆனமாவுககுத தானேவநது கூடுமெதொழிநது, காத தாவறிநது கூட்டவேணடுவ தில்லையெனறு சொனன படடா சாரியனை நோககி யருளிச்செய்கிறா.

இறைவனிங கேறபதெனனை இதமகி தங்கனெனனில் - ப ரமேஸ்வர னிவ்விடதது இநத இதாகிதங்களை யறிநது கூ ட்டுவது யெனனைபயனைக கருதியெனறு நீ சொல்லில?—நிறை பர னுயிர்களுவைதத நேசத்தி னிலையதாகும் - சித தசிததுகக

ளிரண்டினுங் குறைவற நிறைந்துநிற்கிற பரமேஸ்வரன், ஆன்மாக்களையில் வைத்த கிருபையினுடைய வுறுதியாலே, இப்படி கூட்டிக் கன்மங்களைப் புசிப்பித்ததாம். இப்படி யனுக்கிரக மூர்த்தியா யிருக்கிற சாத்தா, சிலர்க்கு அனுக்கிரகமும் சிலர்க்கு நிக்கிரகமுமாகச் செய்வானேனென்னின்?—அறமலி யித்தருச்செயலோருக் கனுக்கிரகத்தைச்செய்வன் - தன்மத்தினை வழுவிலே மிகவும் பிரியமாயிருந்து புண்ணியங்களைச் செய்தவர்களுக்கு மிகவும் அனுக்கிரகமே செய்யாநிற்பன்,— மறமலி யக்கருச்செயலி னிக்கிரகத்தை வைப்பன் - மிகுந்த கொடுமைகளாலே அப்பிரியமா யிருந்துள்ள பாவங்களைச் செய்தவர்களுக்கு நிக்கிரகங்களாகிய நரகத்திலே போடாநிற்பன்; ஆகையால் பட்சபாதமுமல்ல.

இக்கூறு சொல்லியது, பரமேஸ்வரன் ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கீடான சுகதுக்கங்களைத் தன்னுடைய திருவுள்ளத்திலே யறிந்து, அவரவர் கன்மத்துக் கீடாகக் கூட்டுவனென்று, இப்படிக் கூட்டிவிடத்தான் ஆன்மாக்கள் மேல்வைத்த கிருபையினாலே அவரவர் கன்மங்களை யறிந்து புசிக்கையினாலே பட்சபாதியல்லனென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இறைவன் - முதல்வன்,—இதமகிதங்கள் - ஆன்மாக்கள் செய்தவிதமகித மாகிய கன்மத்தை,—இங்கேற்ப தென்னையெனின் - இவ்விடத்தேற்றுக் கோட்டற்குக் காரணம்யாதெனின்,—நிறைபர னுயிர்கட்குவைத்த நேசத்து னிலைமையாகும்-முதல்வ னுயிர்கள் வீடுபேறெய்தற்பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினுங் காரணமிருவேறுவகைப்பட நிகழ்தமை

யின பயனு மிருவேறுவகைப்படச் செய்ய வேண்டுதலின,—அறமலியிதஞ்செய்வோருக்கு-அறமிகுந்த விதமாகிய வினைசெய்வோர்க்கு,— அனுக்கிரகத்தைச் செய்வன்-அநுக்கிரகத்தைப் புரிவன்,—மறமலி யகிதஞ்செயினை-மறமிகுந்த அகிதமாகிய வினைசெய்வோர்க்கு,—நிக்கிரகத்தை வைப்பன-நிக்கிரகத்தைச் செய்வன

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மாக்களை நிக்கிரகஞ்செய்வது மனுக்கிரக
ஞ்செய்வது மெங்ஙனமென்று வினவ, அ
வனைக்குறித்து துணர்த்துகிறார்.

நிக்கிர கங்கடானு நேசத்தா லீசன்செய்வ, தக்கி
ர மத்தாற்குற்ற மடித்துத்தீர்த் தச்சம்பண்ணி, யிக்கி
ர மத்தினாலே யீண்டற மியற்றிடென்ப, வக்கிர மத்
தினாலு மிறைசெய லருளேயென்றும். (கரு)

(இ-ள்) நிக்கிரகங்கடானு நேசத்தா லீசன்செய்வது — சிவஞானமாக்களிடத்து வைத்த கிருபையினாலே நிக்கிரகங்களையுஞ் செய்வன. அஃதெங்ஙனமெனில்?

அக்கிரமத்தாற்குற்ற மடித்துத்தீர்த் தச்சம்பண்ணி யிக்கிரமத்தினாலே யீண் — பிரமா நானே கர்த்தாவென்ன வவனைந்தாவதாகிய தலையைச் சீகண்டபரமேசுவரன் றனது நகத்தாற்கிள்ளிப் போட்டும், மாயனு நரசிங்கவடிவை யெடுத்தகங்கரித்த வப்பொழுது சரபமாய் வந்து சிற

டற மியற்றிடெனபன	காலடித்தவனுடையவிதயத்தைப்பிளந்திவைமுதலிய பயஙகளைப பண்ணி, பின பவாகளை முறையி னிறுவி யறதனையு மியற்றுஙகளென்று புத்திசொல்வன,
எசகிர மந்தி ருலுமனறசெய லருளெயெனறும	சிவ னிராகதது வேட மில்லாகபடியால் ஆனமாககடகுச செயயுஞ செயல் வெறுப்பு விருபபன றஂஂறிதெல்லா மாதலா லவனெறுசெய்தாலு மனுககிரகமெனறே கொளளவாயாக. எ - று

உமமை எதிரது தழீஇய வெசசம.

ஏகாரந தேறறம.

இதறகு வாயவயசஙகிதை யெனவறிக. (௧௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

ஈஸ்வரன சர்வானமாககளிடத்திலும் பிறிவற்றிருநறுக்கையினுலே அவாகளுககுப்பணணின இதாகிதஙகளை கிரகிப்பனெனகையால், தாமந்த ஆனமாககளை யெவவாறு நிககிரகிககிறுறெனனில்? தனனுடையதேகத்தில் கிரந்தியைத தானே கீறியும் வெதுப்பியும் தீாபபதுபோல, ஆனமாககளை தனடிப்பதும வினைதீாப்பதறகாய.

நிககிரகங்கடாமு நேசததா மீசனசெயவது-பரமேஸ்வரன நிககிரகம பண்ணுவது கிருபையினுலேயே! அதெவ்வாறெனனில்?—அக்கிரமததாற் குறற மடித்துத் தீர்த் தச்சம்பண்ணி யிககிரமத்தினுலே யீண்டறமியற்றிடெனபன-கிரமஹீனங்களாகிய தொழில்களைச்செய்தோர்களை தண்டித்துப் பயமுறுத்தி முனபுசெய்ததோஷங்களை யந்த தண்டத்தினுலே யொழித்த

து, மேல் இவனிடத் தினனபடி தருமத்தைப்பண்ணென் ருருளு வன,—எககிரமததிருனு மிறைசெயலருளேயெனறும் - நிக்கி ரகம்பண்ணுவதும அநுககிரகமபணணுவதும கர்ததாவினுடைய செயலானதுகிருபையே.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இறுவுமது.

வெளிபபொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

அங்ஙனம் அகிருஞசெய்தாரைக் கண்டித்தல் நல்வழிப்படுததற் பொருட்டேயாகலின, அதுவுங கருணையாதற் கிழுக்கில்லையெனபதாம.

தான அசை

உமமை இறநததுதழீஇயிறறு, சிறப்புமாம்.

திரோபவிததல் சஙகரிததலுடபட்ட செயல்களும் அருளேயெனபார், எககிரமததிருனு மிறைசெய லருளேயெனறுர்.

ஏகாரந தேற்றம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

உம்முடைய கர்ததாவுக்குப் பாவஞ்செய்கிறவர்க ளிடத்திலே யப்பிரியமும், புண்ணியஞ் செய்கிறவர்க ளிடததிலே

பிரியமுமுண்டா யிருக்கையினால், அவ னனுக்கிரக மூர்த்தியல்ல வென்ற பட்டாசாரியனை மறுத்து அருளிச்செய்கிறார்.

நிக்கிர கங்கடோறு நேசத்தா லீசனசெய்வது - பரமேஸ்வர னிப்படி செய்கிற நிக்கிரகந்தானு மான்மாக்க ளளவிற் சினேகமேயென் றறிவாயாக அதெங்ஙனே யெனனில்?—அக்கிர மத்தாற்குற்ற மடித்துத்தீர்த்த தச்சம்பண்ணி - அந்த வகிதமாயிருக்கிற கன்மத்துக்கும் இதமாயிருக்கிற கன்மத்துக்கும் துக்கத்துக்குத் தக்க கிரமங்களாலே குற்றமான கன்மஞ் செய்தவர்களைக் கோபித்து மடித்தும் பயப்படப் பண்ணி யவ்வ வகிதமான வினைகளைப் போக்கி, மேலுமகிதமான கன்மங்களைச் செய்யாதபடி நிறுத்தி,—இக்கிர மத்தினாலே யீண்டறமியற்றிடென்பன - ஆன்மாக்களுக்கு இந்த விதமான கிரமங்களினாலே மிகவுங் கன்மங்களைச் செய்யென்று வேதாகமங்களை யருளிச்செய்து, இவைசொன்ன முறைமையிலே நில்லுங்களென்று கற்பியா நிற்பன;—எக்கிர மத்தினானு மிறைசெய லருளே யென்றும் - எல்லாக் கிரமங்களினாலும் பரமேஸ்வரன் செய்வது அனுக்கிரகமேயென் றறிவாயாக

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் செய்த பாவத்துக்குத் தக்க தண்டங்களைத் தண்டிப்பித்து அவர்கள் பாவங்களைப் போக்கியும், இந்தக் கிரமத்தினாலே தன்மங்களைச் செய்யென்று வேதாகமங்களையு மருளிச்செய்து, இவைசொன்ன முறைமையிலே நில்லுங்களென்று கற்பித்தும், இப்படி யனுக்கிரகமே பண்ணுகையால் பரமேஸ்வரனே செய்கிற நிக்கிரகமு மனுக்கிரகமே யாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஈசன - முதல்வன்,— நிக்கிரகங்கள்தானுஞ் செய்வது - அநுக்கிரகஞ் செய்தலேயன்றி யங்ஙனாக்கி னுஞ் செய்தானாகக் கண்டித்தலும்,— நேசத்தால் - கருணையினாலேயாம்,— அக்கிரமத்தாறுறும - அக்கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களை,— அடித்துத் திருத்த நச்சாபண்ணலி-கண்டித்து நீக்குதலா லச்சம் உண்டாகச்செய்து,— இக்கிரமத்திலே யீண்டற வியற்றிடெனப்பன - இம்முறையா லிதனைமறந்தினைச் செய்திடல்வேண்டுமென வுணர்த்துவன,— எக்கிரமத்திலும - எம்முறையாலும்,— இறைசெய லருளே யென்றும - முதல்வன் செய்தி கருணையாதற் கிழுக்கில்லை

மறைஞானதேசிகர் உரை.

மேலதற் குதாரணமி— டுணர்த்துகிறார்.

தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்க டஞ்சொ
லாற்றின், வந்திடா விடிலுறுக்கி வளாரினா லடித்துத்தீ
ய, பந்தமு மிடுவரெல்லாம் பார்த்திடிற் பரிவேயா
கு, மிந்தநீர் முறைமையன்றோ வீசனார் முனிவுமென்
றும். (கசு)

(இ-ள்) தந்தை தாய் பெற்ற தத்தம்புதல்வர்கடஞ் மாதாபிதாக்க டமது பிள்ளைகளைக் கோபித்து மார்பிலே யடித்து விலங்குகை யிட்டு இப்படி நிக்கிரகஞ்செய்யினும், அதனை விசாரிக்கில், அஃதெல்லா மவர்கள்பேரில் வை

சொலாற்றின் வ
ந்திடாவிடி லுறு
கக் வளாரினா ல
டித்துத் தீயபந்
தமுமிடுவ ரெ
ல்லாம பாதத்திடி
ற் பரிவேயாகும்
இநக்ஙாமுறை
மையனரே ஙீச
ஞா முனிவுமெ
னறும்.

ந்த வனுக்கிரகத்தின் பொருட்டாம். அது போல,
சிவனுஞ்செய்யு நிக்கிரகங்களு மான்மாவி னிடத்துவைத்த கிருபையின் முறைமை காண். எ - று

பரிவே யென்னு மேகாரந் தேற்றம்.

அனறே வெனனு மேகாரம் வினா. எமமையு மாளவரோ எனபதுபோ லெனவறிக.

இதற்குககாரணகமதது மவாயவபசங்கிதையிலுமறிக. (௧௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதற்குகாரணம்.

தநதைதாய் பெறற தத்தம்புதல்வர்க டஞ்சொலாற்றின் வந்திடாவிடி லுறுக்கி வளாரினாலடித்துத தீயபந்தமுமிடுவா ரெல்லாம் பாதத்திடிற் பரிவேயாகும - தத்தம் புதல்வர்கள் தாங்கள்தாங்கள் சொனன நீதிமார்க்கத்தில நடவாதிருக்கில், பெற்ற தாயுந தந்தையுமே நிஷ்டூரஞ்சொல்லி மிலாற்றினாலுமடித்துப் பொல்லாதாகிய விலங்கையுமிடுவார்கள. இதுவெல்லாம் விசாரித்துப்பார்க்கில் பிளளையானவன நீதியில்நடநது அந்த விம்மையிலும் மறுமையிலும் சுகததைப்பெறவேணு மென்னும்

பரிவினுலாகும்,— இந்தநீர் முறைமையன்றோ வீசனூர்முனிவரென்றும்-இப்படிமாதாபிதாக்கள்செய்யுமநீர்மைபோலொத்த முறைமையல்லவோ பரமேஸ்வரனுடைய நிக்கிரகமு மென்றி தனபொருள

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதுவுமது

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இன்றோரன்னவை செயல்வகையான் வெருளிபோலத் தோன்றினுங் கருத்துவகையான அருளேயாதல் கடைக்கா லறியப்படு மென்பதாம்.

நீர்முறைமை உவமைத்தொகை.

நீர்மை இயல்பு

இவை நான்குசெய்யுளானும் மீமாஞ்சகர்மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, 'மன்னியவினைப்பலன்க டருமரன' என்றது பொருந்துமாறும் அதுபற்றி அவனுக்கிழுக்கின்மையுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிக் கர்த்தாச் செய்கிற வனுக் கிரகத்தை ஆன்மாக்க ளளவில்வைத்த பரிவென்று சொல்லுவ தொழிந்து, நிக்கிரகத்

யையும் பரிவென்ற தெப்படியென்றவனை நோக்கி யருளிச்செய்கிறார்.

தந்தைதாய்பெற்ற தத்தம்புதல்வர்க டஞ்சொலாற்றின வந்திடா விடின - மாதாவும் பிதாவும் தாம்பெறப்பட்ட பிள்ளைகள் தாங்களசொன்ன கிரமத்தின்வழி வாராதவிட்டது,— உறுக்கி வளாரினு லடித்தத் தீயபந்தமு மிடுவர் - கோபித்து மாறாலே யடித்தும கொடிதான விலங்குகளிலே யிட்டு வைத்தும இப்படி செயவர்கள்,—எல்லாம டாத்திசிடில் பரிவேயாகும - இவையிற்றை யெல்லாம் விசாரித்துபபார்ககில் மாதாவும பிதாவும பிளளைகள மேலேவைதத சிநேகமாயிருககும்,—இந்நிர முறைமையனறோ விசனா முனிவுமெனறும - ஆகையா லானமாக்களைத் தம்பிரானா பாவத்துககுத் தகக தககப்களையும புசிபபிககிறதும் கோபிக்கிறது மிநத முறைமை போல

இதனாற் சொல்லியது மாதாபிதாங்கள் தங்கடங்கள் பிள்ளைகளை யவரவாசெய்த குற்றத்துககுத தககதாகக் கோபித்துப் பயபபடபபணணி யநதக் குற்றத்தைத் தீரத்துப் புத்திசொல்லிக் கற்பித்து மீளவும பிறிபபட்டாப்போலப பரமேஸவரனும் ஆனமாககளவில்வைத்த கோபபிரியமு மிதுதனைமைத்தென்னுமுறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

தந்தைதாய் - உலகத்துத்தந்தை தாயர்கள்,— பெற்ற தத்தமபுதல்வர்கள்-பெறப்பட்டதமமுடைய புதல்வர்கள்,—தஞ்சொலாற்றின வந்திடாவிடின்,— தம்முடையசொல்வழி நடவாவிடின,—உறுக்கிவளாரினாலடித்து - அதட்டிவளாரினா

டித்து,—தீயபகதமுமிடுவர்-தீயவிலக்குமிடுவர்கள்.—எல்லாம் பார்த்திடின-இன்னோரன்னவை பார்க்குமிடத்து,—பரிவேயாகும் - செயல்வகையான வெகுளிபோலத் தோன்றினும் கருத்துவகையா னருளேயாதல் கடைக்காலறியப்படுவதுபோல,—என்று மீசனார்முனிவும்-ஈசகாலமும் முதலிய விக்கிரகமும்,—இதன்தாமுறைமையன்றே-இந்தமுறைமைபோலு மியல்பாமென்பதாம.

இவைநான்குசெய்யுளானும் மீமாம்சகர் மதம்பற்றியாசங்கித்துப் பரிகரித்து 'மன்னிய வினைப்பலன்கள் தருமரன்' என்றதுபொருந்துமாறும், அதுபற்றிவருமசங்கைகளையுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மீமாஞ்சகனும் உமதுகர்த்தா கன்மபலத்தைக்
கொடுக்கவேண்டுவ தில்லையென்ன; அவ
னைக் குறித் துணர்த்துகிறார்.

செயல்களே பலத்தைச்செய்யுந் தெய்வம்வேண்
டாவிங்கென்னின், முயலுமிச் செயல்களிங்கே முழுவ
து மழியுமெய்கே, பயனளிப் பனவழிந்தே பலங்களைப்
பண்ணுங்கெட்டே, வயலிடுந் தழையுந்தின்னு மருந்
தும்பின் பலிக்குமாபோல். (கள)

(இ - ள்.) செய ஆன்மாக்கள்செய்த யாகாதி கன்மபலங்
ல்களே பல கடானே யபூர்வமாக சனித் தவர்களுக்
த்தைச் செ குப பிரயோசனத்தைக் கொடுக்கும்.
ய்யும்

தெய்வம் வேண்டா விங்கெனில் அவரவர்கள் செய்த கன்மத்துக்கீடான பலங்களை யுமதுகர்த்தாக கொடுக்கவேண்டுவதில்லை யென்று நீசொல்லில்?

முயலுமிச் செயல்களிங்கே முழுவது மழியும் ஒருவன் முயற்சியாற் செய்யப்படுந் தண்ணீர்ப்பந்தர் முதலாயின கன்மங்களெல்லாமிவ்விடத்தே தானே நாசமாய்ப் போகாநிற்கும்.

எங்கே பயனளிப்பன அப்போ தக்கன்மத்தா லுண்டாய பலத்தை யுன்கடவுளிடத்தே வந்து தருமென்று சொல்லுகிறாயாகில்,

அழிந்தே பலங்களைப் பண்ணும் அக்கன்ம மிங்கேதானே யழிந் திங்கே தானே பலத்தைக் கொடாநிற்கும்.

கெட்டே வயல்விடு தழையுந்தின்னு மருந்தும்பின் பலிக்குமா போல். ஒருவன் வீரபோகமாக விளைதற்பொருட்டு வயலில்விட்ட தழைமுதலாயினவும், ஒருவன் சீவிக்கு மருந்தும்,இங்கேதானே கெட்டுப் பின் பிங்கேதானே யதற்கேற்ற கன்ம பலங்களை யுண்டாக்கும். அதுபோல உமது கர்த்தாவால் பிரயோசனம் எ-று.

ஏகாரந் தேற்றம்.

இதற்குச் சர்வதோப நியாசத்தூங் காமிகத்து மறிக.

இந்த விருத்தமுதற் 'காணபவன்'எனனும் விருத்த மீறாகப் பதினொன்றுக்குங் காமிக மெனவறிக. (கஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

கருமமேபலத்தைக் கொடுக்கும் கர்த்தாவேண்டாவென்னும் பூர்வமீமாம்சகரை கர்த்தாவினாலே யல்லது கருமபலம்

பொருந்தாதென்று மேலிருபத்திரண்டு விருத்தத்திலே சாதித்தல்.

செயல்களே பலத்தைச்செய்யுந தெய்வம்வேண்டாமியங்கெனில்-ஆன்மாக்கள் செய்த வினைகளே யிவ்விடத்துப் பலத்தைக்கொடுப்பது, கர்த்தாவொருத்தன வேண்டாவெனனில,--முயலுமிச்செயல்க ளிங்கே முழுவதுமழியுமெங்கே பயனளிப்பன - இவ்விடத்துப் பண்ணப்பட்ட கன்மங்களெல்லாம மழியும் இனி யெங்கேபலத்தைக்கொடுக்கும,--அழிந்தேபலங்களைப்பண்ணும்-கருமமானது நசித்தே பலத்தைக்கொடுக்கும. அதெவ்வாறெனனில்'—கெட்டேவயலிடுந் தழையும் தின்னு மருந்தும் பினபலிக்குமாபோல்-வயலிலேமிதித்ததழையும வியாதியுடையவனுசசுக கொடுத்தஔஷதமும, ஸ்தூலரூபங்கெட்டுசூக்குமமாய்நின்றே பயிருக்குற்றபலத்தையும தேகத்துக்கு சௌக்கியத்தையுங் கொடுத்தாறபோலவறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மீமாமசன் கன்மந்தானே கர்த்தாவென்று சொல்ல மறுத்துணர்த்துகிறர்.

செயல்களே பலத்தைச்செய்யும் - அவரவர் பண்ணின கன்மங்களே சுகதுககங்களைக் கொடுக்கும்,— தெய்வம் வேண்டாவிங்கெனனில் - ஒருகர்த்தா வேண்டுவதில்லை யென்று நீ சொல்லில,—முயலு மிச்செயல்களிங்கே முழுவது மழியும் - பண்ணப்பட்டவிந்தச கன்மங்களெல்லாம் மனோவாக்குக காயத்தொழில்க ளாகையாற் பண்ணின விடத்தது முற்றுங் கெடும்,—எங்கேபயனளிப்பன - சுகதுக்கங்களைக் கொடுப்பதெங்கே,—

வயலிடுந் தழையும் இன்னு மருந்தும் கெட்டே பலிக்கும்போல் - அழிந்தே பலன்களைப் பண்ணும் கன்மங்களுங்கெட்டே பலத்தைக்கொடுக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இவ்வுரை - ௪௮ - வது செய்யுளிற்காண்க

நிரம்பவழகியருரை வருமாறு

ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடான பிரயோசனங்களைக் கர்த்தாக் கொடுக்க வேண்டுவதில்லை, அந்தக் கன்மங்களே தானே கொடுக்குமென்ற பட்டாசாரியனை நோக்கி யருளிச்செய்கிறார்.

செயல்களே பலத்தைச் செய்யும் - ஆன்மாக்களாற் செய்யப்பட்ட கன்மந்தானே அவரவர்க்குத் தக்க பிரயோசனங்களைக் கொடுக்கும்;—செய்யவேண்டாமிறைவனென்னில் - இவ்விடத்து ஒருகர்த்தா வேண்டுவதில்லை யென்று நீசொல்லில்?—முயலுமிச் செயல்களிங்கே முழுவதுமழியும் - அவரவர்கள் முயன்று அருமையாகச் செய்யப்பட்ட புண்ணியகன்மங்களும் பாவகன்மங்களும் எல்லாமிங்கே யழிந்துபோகாநிற்கும்.—எங்கே பயனளிப்பன - ஆகையாலிவை யெவ்விடத்திலே யுனக்கு வந்து சுகதுக்கங்களைத் தருவன என்று நீ கேட்கில்?—அழிந்தே பலன்களைப் பண்ணும் - அதுதான் கெட்டுக்காணும் பிரயோசனங்களைத் தருவது. அதென்போல வென்னில்?—கெட்டே வயலிடுந் தழையும் இன்னு மருந்தும் பின் பலிக்குமாபோ

ல் - கழனியிலே யிடப்பட்ட தழையும் ஒருவியாதிக்காக்கப் புசிக்கப்பட்ட வமிழ்தமுந் தான கெட்டுப்போய்ப் பின்பு பிரயோசனங்களை யுண்டாக்கு முறைமைபோல்.

“இதற்குப் பிரமாணம் பரபட்சம் அவன்மதம் “செயறரும்வினைகண மாய்ந்து சிந்தையிற் சேர்ந்துநின்று, பயனொடு பலியாநிற்கும் பலாலமுந் தழையுமெல்லாம், வயறனின் மருவிநாசம் வந்தபின் பலத்தைவந்திங், கியல்பொடு தந்தாற்போல வென்றும் பின் னியமபுகினமுன” எனனுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - பட்டா - மத - ௧௦ - செ.

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கிடான பிரயோசனங்களை யந்தக் கன்மங்கள் தானே கொடுக்குமாகையால், ஒருகர்த்தாக் கொடுக்க வேண்டுவதில்லையென்று தன்மதங் கூறினானென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

இவ்வுரை-௧௮-வது செய்யுளிற் காண்க.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

செய்க்கிடுந் தழையுந்தின்னுந் திரவிய மதுவும்
போல, வுய்த்திடு செய்திகெட்டே யுறுவிக்கும் பல
த்தையென்னின், வைத்திடுஞ் சோறும்பாக்கு மருந்தி
னர் வயிற்றின்மாய்ந்தான், மெய்த்திடும் பலமுனக்கு
மலமலால் வேறுமுண்டோ. (௧௮)

(இ-ள்.) செய்க்கிடுந் தழையுந் தின்னுந் திரவிய மதுவும் போல	ஒருவன் செய்யிலிட்ட தழைமுதலாயவும் புசித்த வெள்ளாடதும் மந்தநத் தானத்தைப் பொருந்தினாலு தனது வீரியங் கெட்டுப்பின்பு பலத்தைக் கொடுத்தாற்போல,
உய்த் திடுஞ் செய்தி கெட்டே யுறுவிக்கும் பலத்தையெனின்	நீசெய்யும் யாகாதிகன்மங்களு மீண்டுக்கெட் டாணுப் பலத்தைக் கொடுக்குமென்று நீசொல்லில்?
வைத் திடுஞ் சோறும்பாக்கு மருந்தினா வயிற்றினமாய்ந்தால்	உனக்கொருவ னூகனம்போட்டு வைத்துப் பரிந்திட்ட சோறும் பாக்கும் வெற்றிலையுஞ் செரித்தால்,
மெய்யதத்திடும் பலமுனக்கு மலமலால் வேறுமுண்டோ.	நீ புசித்துக்கெட்டது மலமாகக் கண்டதே பலமொழிந்து வேறுண்டு கண்டதுண்டோ? ஆகலாற் கன்மங் கெட்டுப் பலத்தைக் கொடாதுகாண் எ-று.

ஓகாரந் தேற்றம். (கஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

செய்க்கிடுந்தழையுந் தின்னுந் திரவியமதுவும்போல வுய்த்திடுஞ் செய்திகெட்டே யுறுவிக்கும் பலத்தையென்னில்-வயலிலே யிட்டதழையும் வியாதியுடையவன் தின்ற மருந்தும்போலச், செய்யுங்கருமமானது அழிந்தே பலத்தைப் பொருந்துவிக்குமென்னில்?— வைத்திடுஞ் சோறும்பாக்கு மருந்தினர் வயிற்

றின் மாய்ந்தால் மெய்த்திடும் பலமுனக்கு மலமலால் வேறுமு
ண்டோ-இது வெளிப்பொருள.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அதுதன்னைத்தானே யனுவதித்துத் தூஷிக்கின்றார்.

செய்க்கிடுந் தழையும் தினனுட் கிரவிய மதுவும்போல - த
ழையும் மருந்துந் தாங்களேபோய்ப் பொருந்திவிட்டதுச் சார
த்தை வைத்துக் கெட்டுச் சாரத்துவாரத்தினாலே விளைவு வியா
திரீங்கள் முதலிய பலங்களைக் கொடுப்பதுபோல,—உய்த்திடுஞ்
செய்திகெட்டே யுறுவிக்கும் பலத்தை யெனனில் - புண்ணியக்
கன்மந்தானேபோய்ப் பொருந்தியவிட்டதுச் சாரத்தை வைத்
துக்கெட்டுச் சாரத்துவாரத்தினாலே சுவர்க்கநரக சுகதுக்கப
லங்களைக் கொடுக்குமெனனில்?—வைத்திடுஞ் சோறும பாகரு
ம் - நல்ல பாத்திர மியாதொன்று குறித்துப் பாத்திரத்திற் ப
டைத்து விபஞ்சன வித்தோடு கூடிய அன்னமும் பாகரு வெ
ற்றிலை கர்ப்பூர முதலிய முகவாசங்களும,—அருந்தினா வயிற்
றில்மாய்ந்தால்-பொருந்தியசாரத்தை வைத்துக் கெட்டுச் சா
ரத்துவாரத்தினாலே,—வைத்திடும பலம் - வரும்பிரயோசன
ம்.—உனக்குமலமலால் வேறுமுண்டோ-சுவர்க்கநரக சுகதுக்க
ங்கள் விளைவு,தழை யிட்டபூமியிற்போல், அவர்கள வயிற்றி லு
ண்டாய் நீபுசிப்ப துண்டோ.

சிவஞானயோகியருரை வருமாறு.

அற்றாயினும், வினைகளே தம்பயனைத் தோற்றுவிக்க வல்
லுமாதலின, ஆண்டைக்கு முதல்வன் மிகையாம்போலுமென்ற

ல் பொருந்ாது. செய்தவினை செய்தபொழுதே கெட்டொழி வதாகலிற பினனின்று பயனறருதல் செல்லாமையானும், கெ ட்டுப பயனறருதலே உலகததுப் பொருளகளிற் கண்டாமெனி ற் கெட்டவை பயனறருமெனபது சிலவற்றினனறி யாண்டுஞ் செல்லாமையானு மெனபதாம

செய்க்கிடந் தழையுந் தினனுந் திரவியமதுவுமபோல வுய்த் திடுஞ்செய்திகெட்டே யுறுவிக்கும பலத்தையெனறது, அனுவா தஞ்செய்து கொணடது.

மெய்திடும் பலம மெய்யினைகண்ணதாய்' வரும் பலம.

அற்றேற் கெட்டுப்பயன றருதல் சிலவற்றிற்குயினுங் காண ப்படுதலின, வினையு மவ்வாறு கெட்டுப் பயனறருமெனபது அ மைவுடைத்தெனபாரை நோக்கி, அதனை மறுத்தற்கெழுந்தது வருஞ் செய்யுளெனபது. (௧௭—௧௮)

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிசொன்ன பட்டாசாரியனை நோக்கி மறுத்தருளி ச்செய்கிறார்.

செய்க்கிடந் தழையுந் தினனுந் திரவிய மதுவும்போல-வய லி லிடப்பட்ட தழையும் புசிக்கப்பட்ட வவுஷதங்களு மவை யிரண்டும் நாசமாய்ப் போய்பினபு பிரயோசனத்தை யுண் டாக்கு முறைமைபோல,—உய்த்திடுஞ் செய்திகெட்டே யுறு விக்கும் பலத்தையெனனில் - செய்யப்பட்ட கன்மங்கள் கெ ட்டுப்போய்ப் பின்பு பிரயோசனங்களைத் தருமென்று நீசொ ல்லில்?—வைத்திடுஞ் சோறும்பாக்கு மருத்தினர் வயிற்றின்மா ய்ந்தால் - சற்காரத்துடனே ஒருத்தனை யழைத்துவந்து அவ

னுக்கிட்ட அசனமும் பாக்கும் வெற்றிலையு மிவையிற்றைப் புசித்தவனுடைய வுதரத்திலே செரித்துவிட்டால்,— மெய்த்திடும் பலமுனக்கு மலமலால் வேறுமுண்டோ - பிரத்தியக்ஷமாக வுனக்குக் காணப்பட்ட பிரயோசன மலமொழிந்து வேறுமுண்டோ' என்னவே இவை திட்டாந்த விரோதமாகையால் நீ முன்புசெய்த கன்மங் கெட்டுப்போய்ப் பின்பு பலிக்குமென்பது அத்தமாகாது.

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் செய்த கன்மங்க ளழிந்துபோய்ப் பின்பு பலிக்குமென்று சொல்ல, ஒருவனுக்கிட்ட அசனமானது அவனுதரத்திலே செரித்துப் பின்பு மலமாய்ப் போனது கண்டோம், அதொழிந்து வேறொரு பிரயோசனமுங் கண்டதில்லை யாகையால், இந்த வாதத்தமாகாதென்று அவனை மறுத்த முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

செயல்களே பலத்தைச்செய்யும் - அற்றாயினும் வினைகளே தம்பயனைத்தோற்றுவிக்க வல்லுமாகலின்,—தெய்வம்வேண்டாவிங்கென்னின் - ஆண்டைக்குமுதல்வன் மிகைபோலுமென்றல் பொருந்தாது,—முயலும்செயல்க ளிங்கேமுழுவது மழியும்-செய்தவினைசெய்தபொழுதே கெட்டொழிவதாகலின்,—எங்கேபயனளிப்பன - பின்னின்று பயனளித்தல் செல்லாமையானும்,—வயலிடுந்தழையுந்தின்னு மருந்தும்-செய்யினகணிட்ட தழைகளும் தின்னப்பட்ட மருந்துகளும்,—கெட்டுப்பின்பலிக்குமாபோல் - கெட்டுப்பின் பலிக்குமாறுபோல், அழிந்தேபலன்களைப்பண்ணும். கெட்டுப்பலனறுகலே யுலகத்துப் பொருள்களிற் கண்டாமென்னில்?—செய்க்கிடுந்தழையுந் தின்

னுந திரவிய மதுவும்போல - வயலின்கணிட்ட தழையுந் தின்னைப்பட்ட பதார்த்தங்களும்போல,—உய்த்திடுஞ்செய்தி கெட்டே-முயற்சியாகிய வினைகெட்டே,—பலத்தை யுறுவிக்குமெனின-பலத்தைப்பொருந்தச் செய்யுமென்றிடின,—வைத்திடும்சோறும்பாகமும்-வைத்திடப்பட்ட சோறுமுதலிய வுணவுகளும் பாகடைமுதலியனவும்,—அருந்தினர் வயிற்றினமாய்ந்தால்-உண்டாரவயிற்றினகண் மாயப்பெற்றால,—உனக்குமெய்த்திடும்பலம்-உனக்கு மெய்யின கண்ணதாய்வரும் பலன,— மலமலால்வேறுமுண்டோ-மலமன்றி வேறில்லையாகலின, கெட்டு அவைபயனறருமெனபது சிலவற்றினறி யாணடுஞ் செல்லாமையானுமெனபதாம். (கஎ—கஅ)

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது மறுத் துணர்த்துகிறார்.

திரவிய முவமையன்று செய்திக்கட் டிரவியங்க
ள்,விரவிய விடத்தேயீபந்து பலந்தரு மிம்மையம்மை,
பரவிநீ பார்நீரங்கி பாத்திரத் திட்டவெல்லாங், கரவிடு
மிங்கேயெங்கே பலன்கொளக் கருதினாயே. (ககூ)

(இ-ள்) திரவிய முவமையன்று	அவற்றினுக்குப் பலம வேறாதலிற் கன்மதத்துக் கநதத திரவிய முவமித்துச் சொனனதல்ல காணும்,
செய்திக்கட் டிரவியங்கள் விரவிய விடத்தே யீய்நது பலந்தரு மிம்மையம்மை	ஒருவனசெய்த தானதன்மங்க ளிம்மைக்கண் ணழிந்துபோய் மறுமைக்கட் பயன் கொடுக்குமென்று நீ சொல்லில்?

பரவிநீபார் யாழுத்தரஞ் சொல்வாம். அதனை விசாரி
த்துப்பாராய்.

நீரங்கி பாத்தி புண்ணியதீர்த்தக் கரையினுஞ் சற்பாத்
ரத் திட்டவெல திரதநி னிடத்தினுஞ் செய்கதானமுந் தன
லாங் கரவிடு மி மமு மியாகாதியிற் குணடதநி லோமஞசெ
ங்கே ய்வது மிங்கே காணப்பட்டுவ காணப்படா
மலு மிருககிற திரவியஙகளெல்லா மிஙகே
தானே யழிநதுபோகாநிற்கும;

எங்கே பலன் ஆசலா னியிமமையினகண்ணேயோ மறு
கொளகக் கருதி மையினகண்ணேயோ பலஙகொள்ள விசா
ஞயே. ரித்தாய். எ - று.

ஏகாரம் வினு (சுகூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

திரவியமுவமையன்று-நீ புசிததவன வயிற்றில் திரவிய
ம்பலம்மெனற தவமையல்ல,— செட்டிககட்டி ரவியஙகள வி
ரவியவிடத்தே வியர்துப்பலந்தரு மிமமையம்மை-இமமையிலே
தன்மததினகண்ணே கொடுககுந் திரவியங்கள் பொருநதியவி
டத்தேமாய்நது மறுமையிலே பலததைததருமெனனில்,—
பரவி நீ பார் நீ ரங்கிபாததிரததிட்ட வெல்லாங கரவிடு மிங்
கே யெங்கே பலனகொளககருதிஞயே-நீ விசாரிததுப்பாா,ஜல
த்திலும்அக்கினியிலும் *பிரதிக்கிரஹிப்போர்கையிலுங் கொடுத்
ததெல்லா மிங்கேயழியக்கணடோம்; எஙகேபலன்பொருந்த
நினைத்தாயெனறிதன்பொருள்.

* பிரதிக்கிரஹிப்போர் - தானம்வாங்குவோர்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

அதுவன்றியுந் திஷ்டாந்த விரோத முண்டென்றுசெப்புகின்றார்.

செய்திக்கண் - இருவினையாகிய குணப்பொருளில் செய்கதிடுந்தழையுந் தின்னு மருந்துமென்று சொல்லிய,—திரவியம - குணிப்பொருள — உவமையன்று - திருஷ்டாந்தமன்று வினையென்றுசொல்ல வேண்டியதில்லை,—திரவியங்கள் - தழைமருந்து முதலியனவும், எள்ளு நெய் அன்னமுதலியவும்,—விரவிய விடத்தே வீய்ந்து - தாங்கள பொருந்திய விடத்தே கெட்டு,— இம்மை அம்மை - பூமியிலும் சுவாகக நரகங்களிலும,— பலந்தரும் - பிரயோசனத்தைப் பண்ணும்,—பரவி நீ பார் - பண்ணுமென்பது விசாரியாது சொன்னாய், நன்றாய் விசாரித்துப்பார்.—நீரங்கிபாத்திரத்திட்ட வெல்லாம்-நீரிலிட்ட திலகாப்பணமுதலானவும், அங்கியிலிட்ட ஆச்சியவோமாதி, பாத்திரத்திட்ட அன்னபானுதிதானம் இவைமுற்றும்,— இங்கே - இந்தலோகத்திலேதானே,—கரவிடும் - கெட்டுப்போம்,—எங்கே - எப்படி சுவாககநரகங்களிலே,— பலன கொளக கருதினாயே - சுகமனுபவிக்கத் துணிந்தாய்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

ஈண்டெடுத்துக் காட்டிய தழைமுதலிய பொருள்களுந் தாங்கிடந்தவிடத்தே கெட்டு ஆண்டேபயன்றருவனவாம்; வினையுவ்வாறன்றி இவ்வுடம்பிற் செய்வ தீண்டே கெட்டு மற்றொரு

டம்பிற் பயன்றருமாதலின், அவையிரண்டுந் தம்முளொவ்வாமையானும்; அற்றேற் சோகவிடத்திற் பயனுறாத கேடுமாத்திரமுடைய பொருள்களும் பலவுளவாகலின அவை மற்றோரிடத்துப் பலிக்குமெனக்கொண்டு அவற்றோடுவமிக்கவமையுமெனின்? ஓரிடத்திற் கெட்டபொருள் மற்றோரிடத்திற் பலித்தலில்லையென்பது தீப்பொழுக்க காய்ந்த கலத்தில்வாக்கிய நீர் முதலியவற்றிற் காணப்படுதலானும், வேறிடத்துப் பயனுகற்குரியவினை தானே பயனும் வருமெனறல் கூடாதென்பதாம்.

செய்திக்கெனபது செய்திகசண்ணென உருபுமயக்கம்.

பரவிப்பார்த்தல் புடைபடவொற்றியாராய்தல்.

அற்றேல், இம்மையம்மையாதல்பற்றி வேறிடமென வேண்டாம, இருமையினும் வினைசெய்தாரின வேற்றுமையினலமயிற் செய்தார்வினை செய்தவரறிவினகண்ணே யடங்கிச்செய்கின் தழைமுதலியனபோல ஆண்டே பயனைத் தோற்றுவிக்குமென அமையுமாகலின; திரவிய முவமையனறென மறுத்தல் பொருந்தாதென்பானை நோக்கி, அதனைப் பரிகரித்தற்கெழுந்தது உருஞ்செய்யுளெனபது.

நிரம்பவழகியருளை வருமாறு.

மீளவுந திரவியங்களைக் கொண்டு தானஞ்செய்ய அது தானே பலிக்குமெனறவனை மறுத்தருளிச் செய்கிறார்.

திரவிய முவமையன்று - தானஞ்செய்த பதார்த்தங்களை யுவமையிட்டுச் சொனனது அர்த்தமாகாது. அர்த்மாங்காணும் அதெப்படி யென்னில்?—செய்திக்கட் டிரவியங்கள் விரவியவிடத்தே வீய்ந்து பலந்தரு மிம்மையம்மை - தானமுதலான

வை செய்யுமிடத்து அந்தத் திரவியங்கடானே தான மேற்க ப்பட் டவர்களிடத்திலே சிலவழிந்து இம்மையிலே கெட்டும் அம்மையிலே பிரயோசனங்களைத தாராநிறகும் எனறு நீ சொல்லில்?— பாவிநீ பார் - நான சொல்லுகிறதனை விசாரித் துப் பாராய். நீசொன்னது திடடாந்த விரோதம், அதெப்படி யெனனில்?—நீரங்கிப் பாததிரத திட்டவெல்லாங் கரவிடு மி ங்கே - நீரிலிடட திரவியங்களும் நெருப்பிலிட்ட திரவியங்க ளும் பாததிரததிலிட்ட திரவியங்களும் எல்லாத் திரவியங்க ளு மிஙகே யழிந்துபோகா நிற்கும்;—எங்கே பலனகொளக க ருதினையே - எவவிடததிலே பிரயோசனங கொளள விசா ரிததாய். எனனவே உனககு அநதப்பயன அவ்விடததிலே தெரி யாது, ஆகையால் கர்த்தாவே யறிந்து கூடடவேணும்.

இதனுற் சொல்லியது மீமாங்கிசன் தான விதிசொன் ன முறைமையிலே திரவியங்களைக கொண்டு தானஞ்செய்ய, அநதத் திரவிய மிம்மையிலே கெடடு மறுமைப்பயனைக கொடுக் குமெனறு சொல்ல; அநதத் தானஞ்செய்ததுக குண்டான மறு மைப்பயன இவனுக கினனவிடமெனறு தெரியாது, ஆகையால் கர்ததா வறிநது கூட்டவேணுமெனறு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

திரவியங்கள் - ஈண்டெடுத்துக்காட்டிய தழைமுதலிய பொருள்களும்,—விரவியவிடததேவீ்நது - தாங்கிடத்தவிடத் தேகெட்டு,—பலன்றரும் - ஆணடேபயன்றருவனவாம்,— இம் மையம்மை-வினை யவ்வாறனறி யிவ்வுடம்பிற் செய்வதினடே கெட்டு மற்றே ருடம்பின்பயன் றருமாகலின்,—செய்திகட்டி

வியமுவமையன்று-அவையிரண்டுந் தம்முளொவ்வாமையானும் அற்றேல் சேர்ந்தவிடத்திற் பயனுறாது கேடுமாத்திரமுடைய பொருள்களும் பலவுளவாகலின அவைமற்றோரிடத்தில் பலிக்குமெனக்கொண்டு அவற்றோடுவமிக்க அமையுமெனின்?—அங்கிபாத்திரததிட்ட நீ ரொல்லாமிங்கேகரவிடும்-ஓரிடத்தில் கெட்டபொருள மறறோரிடததில் பலிததலில்லையெனபது தீயொழுக்கராய்நத கலததில்வாக்கிய நீர்முதலியவற்றிற் காணப்படுத லானும்,—எங்கேபலனகொளக கருதிஞயே-வேறிடத்திற் பயஞசிற்குரிப வினை தானே பயனுகிவருமெனறல் கூடாதெனபது,—நீபரவிப்பார்-நீபுடைபடவொற்றி யாராய்வாயாக.

மறைஞானதேசிகர் உரை·

இங்ஙனஞசெய்தகனமந் தானே கெட்டுச் சூக்குமிதது நினறு·பலததைக கொடுக்குமெ னறவனே நோக்கி யுணர்த்துகிறர்.

செய்தவர் மனத்தேயெல்லாச் செய்தியுங் கிடந்துபின்ன, ரெய்தவே பலங்களீனு மென்றிடி லிருஞசுவர்க்கம், பொய்யர்வாழ் நரகம்பூமி புகுதியிற் கிடந்து போந்த, தையனே யழுகிதுன்சொ லிந்திர சாலமாய்த்தே. (உ0)

(இ - ள்) செய்தவர் மனத்தேயெல்லாச் செய்தியுங் கிடந்துபின்ன ஆன்மாக்கள் செய்த தானதன்ம பலங்களெல்லாம், அவரவர்கள் புத்தியிலேதானே சூக்குமரூபமா யடைந்திருந் தவரவர்க்கேற்றபலங்களைக் கொடாநிற்குமென்று நீசொல்லுவாயாகில்,

ரெய்தவே பலங்களினு மென்றிடின

இருஞ் சுவர்க்கம் பொய்யர் வாழ் நரகம்பூமி புந்தியிற் கிடந்து போந்தது — புண்ணியத்தா லடையும் பெரியசுவர்க்கமும், பாவத்தாற் பொருந்து நரகமும், அவ்விரண்டிலும் பொருந்துமம் பூமியுமாகிய விம மூன்றும், உனது புத்தியை யடைந்திருந்தோ புறப்பட்டது; அவையெல்லா மந்தப்புந்தியிற் கிடக்க விடமெங்கே, இதற்கேது சொல்லுவாயாக.

ஐயனே யழகிது னசொ லிந்திர சாலமாய்த்தே. — வாராய் நீயப்பனே! அழகாகச் சொல்லிய சொல்லான திந்திரசால வித்தை காட்டுவானைப் போன்றுவிட்டதுகாண். எ - று.

ஓகார மெதிர்மறை. (உ0)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

செய்தவர்மனத்தே யெல்லாசசெய்தியுங்கிடந்து பின்னரெய்தவேபலங்களினு மென்றிடின -கருமத்தைபபண்ணினவர்களுடையபுத்தியிலே யாதக் கருமரூபமானது இருந்துமறுசன்மத்திலே யவர்களுக்குப் பொருந்தப்பண்ணுமென்னில்,— இருஞ்சுவர்க்கம் பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற்கிடந்து போந்தவையனேயழகிது - பெரியபோகத்தையுடைய சுவர்க்கத்திலும், பொய்யைமெய்யென்பார்புகும் நரகிலும்,பூமியிலும், போய்வந்த நீ, உன்னுடையபுத்தியிலே அவ்விடங்களிலேபுசித்த சுகதுக்கரூபங்களும் நீபண்ணின கருமங்களுமிருந்ததாமாகி லழகியதா

யிப்பொழுதுசொல்லு; உனக்குத்தெரியாதாதலின்,— உன்சொ லிந்திரசாலமாய்த்தே-நீமுனபண்ணினகருமங்களெல்லாம் புத் தியிலேயிருந்து தானேகூடிப்புசிப்பனென்றது இந்திரசாலவி த்தைப்போலவாச்சுது.

ஐய்யனேயென்றது இழிபுரை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தன்மதத்திலே வந்து விழப்பண்ணித் தழுவிவிளையாடு கின்றார்.

எல்லாச் செய்தியும் - கன்மங்க ளெல்லாம்,— செய்தவர் மனத்தே கிடந்து - கன்மம பண்ணினவர்களது புத்தித்தத்துவ த்திலே தங்களால் வைக்கப்பட்ட சமஸ்கார ரூபமா யிருந் து,— பின்னரெய்தவே பலங்களினுமெனறிடில் - பிற்பாடு பொ ருந்தவே சுவர்க்கநரகபூமி சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்றுண்டாக்கு மெனில்?—சுகதுக்கமோகங்களை போசககன ம நிமித்தமாக முதற்காரணமாய்,போககிய கனமங்களுண்டா க்கு மெனபது மாத்திரஞ் சத்தியம். அதுவன்றி போசக கன ம நிமித்தமாய் மாயாகாரிய பூதங்களினுண்டாகும்,—இருஞ்சு வர்க்கம் பொய்யர் வாழ் நரகம் பூமி இவைகள் புத்தியிற்கிடந் து போந்த உன்சொல்-புத்தி தத்துவத்தி லிவைகளைக் குறித் து நிமித்தகாரணமாகிய சமஸ்காரரூப கன்மங்களில் நின்றும் பு றப்பட்டனவென்னும் உன்சொல்,— ஐயனே-அப்பனே!—அமுதி து-மிகுதியும் நல்லது,— இந்திர சாலமாய்த்தே - கடைசியிற் பொய்யாய்ப்போயிற்று.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

வினைக்குப் பயனுவன? துறக்க நிரய நிலமெனனுமவற்றுட் பட்ட பலவேறுவகைப் புவனபோகஙகளாமனறே! அவையினை ததம் வயலின வினைவுபோல ஆனமபோததகினகட கிடநதுள வாமெனறல் சொனமாததிரையே யனறிப பொருளபடாதென பதாம.

ஐயனேயென்பது இழிததறகண வநத குறிப்புமொழி.

செய்தவர்மனத்தைக கூறவே, இனம்பறறி ஏறபோர்ம னமுங் கொளளப்படும.

அற்றுகலினனறே மறுதாறகட புநதியிற்கிடந்துபோநத தெனப் பொதுவகையா னெடுததோதி விடுததது உமெனக.

நிரம்பவழகியருரை வருமாறு

———o———

முனசொல்லப்பட்ட புணணியபாவங்கள் செய்தவர்க ளிருதயத்திலே யடங்கிககிடநது, பினபு ஒருசநநததிலே பய னைக கொடுக்குமெனறவனை நோககி மேல் மறுத் தருளிச்செய்கி ருர

செய்தவர்மனத்தே யெல்லாச் செய்தியுங்கிடந்து பின னெய்தவே பலனகளீனு மெனறிடின் - புண்ணியபாவங்களை ச் செய்தவர்க ளிருதயததிலே அநதச்செய்திகளுக் குண்டா ன பயனகளெல்லா மடங்கிக்கிடந்து மற்ற சநநத்திலே யி வர்களை புசிக்கும்படி பிரயோசநங்களைக் கொடாநிற்கும் எ னறு நீ சொல்லில்?— இருஞ்சுவர்க்கம் பொய்யர்வாழ் நரக

ம் பூமி புந்தியிற் கிடந்தபோந்த - மகத்தாகிய தேவலோகம், அசத்தியராயுள்ள பாவிகள் துக்கத்தை யனுபவித்துக்கொண் டிருக்கிற நரகம், இந்த இன்பதுன்பங்கள் புசித்துத் தலைந்தா ல் மீளவும் வருகிற பூமி, இந்த மூன்றுலோகமும் இவையிற்றுக் குத் தக்க கன்மங்களு மிவாக விருதயத்திலே கிடந்து போ நததாகவேணும். ஆகையால்,—ஐயனே யுழுக்குதனசொல் இந் திர ஞாலமாயததே - என்னுடைய சுவாமியே! நன்முயிருந்த து நீ சொன்னது,பொய்யை மெய்யாகச் சாதிக்கிற இந்திரஞா லமாய் விட்டதே

இதனாற் சொல்லியது இம்மையிலே யான்மாக்கள்செய்த கன்மங்களெல்லா மவரவர் கருத்துக்களிலே யடங்கிக்கிடந்து மறுமைப்பயனைக் கொடுக்குமாகில், அந்தப்பயன மூன்றுலோக த்திலு முண்டா யிருக்குமாகையால், ஒருவரி விருதயத்திலே யவைகளெல்லா மடங்காதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

செய்தவா மனததே - வினைசெய்தவர் மனத்தின்கண் ணே,—எல்லாஞ்செய்தியுங்கிடந்து - எல்லாவினைகளுந்தங்கி,— பின்னரெய்தவே பலன்களீனுமென்றிடின் - பின்னர்பொருந்த வே பயன்றருமென்னின்,—இருஞ்சுவர்க்கம் - வினைக்குப்பயனு வன பெறியதுறக்கம்,—பொய்யர்வாழ்நரகம்-பொய்யர்வாழ்கி ன்றநிரயம்,—பூமி-நிலமென்னு மிவற்றுட்பட்ட பலவேறு வ கைவபுவனங்களாமன்றே,—புந்தியிற்கிடந்து போந்தது-அவை யனைத்தும் வயலின்விளைவுபோல ஆன்மபோதத்தினகட் கிடந் தனவாமென்றல்,—ஐயனேயுஞ்சொல் அழுகிது-ஐயனேயுஞ்சொ

ல்மிகவும் அழகாம்,—இந்திரஜாலமாய்த்தே,— சொன்மாத்தி ரையேயன்றிப் பொருள்படாதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஒருவன் கூலிவேலைசெய்தா லதனருமையறிந்து வே
லைகொண்டவன் கொத்தளக்கு மாறுபோல,
கர்த்தாவுந் தத்தங் கன்மத்துக் கீடாக
ப் பலங்களை யறிந்து கொடுப்பனெ
ன் றுணர்த்துகிறார்.

தானஞ்செய் பொருடரித்தோர் செய்தவர் தக்க
செய்தி, யூனம்பி னுறவேகாண்டும் பலமுறு விப்பா
ன்வேண்டு, மீனமில் செய்தியீச னிடும்பணி யிவைநா
ளுஞ்செய்தா, ரூனங்க ளதிகநோக்கி நுகர்விப்பன் வினை
நோய்தீர. (௨௧)

(இ - ள்.) தானஞ்செய்பொருடரித்தோர் செய்தவர் தக்கசெய்தி யூனம்பின் னுறவேகாண்டும் பலமுறுவிப்பானவேண்டும் — ஒருவன் றானஞ்செய்த திரவியமதனை யேற்றவர்க டானஞ்செய்தவர்க ளிவ்வகையானே பொருந்தப்பட்ட கன்மங்களெல்லா மழிந்துபோனது. திரும்பச் சொர்க்காதிபோகங்களைக் கொடுக்கவுங் கண்டோமாகையாற் றிரவியமுதலிய தானங்களையுங் கூட்டிப் புசிப்பிப்பா னொருவனாகவேண்டும்,

ஈனமில் செய்தியீச னிடும்பணி — அனாதியே மலமில்லாத சர்வஞ்ஞனாதலால் வேதமுதலிய சாத்திரங்க ளின்னகன்மஞ்செய்தா லின்னதாமென்று விதித்த வழியாயிருக்கும்.

இவைநாஞ் செய்தால்	அவன் விதித்த நூலின்வழியே கன்மங்களை யறிந்து நியாயஞ்செய்தால்,
ஞானங்க ளிக்கோக்கி நுகர் விப்பன வினை கோய்தீர	எப்படி வைத்தியருடைய ஞானமாகக்கள் வியாதியை யறிந்து தக்கதேற்ற வௌடதங் களைக் கொடுத்துத் தீர்ப்பன, அதுபோலச் சிவஞானமாகக்கள் செய்த கன்மங்களினேற்றக்குறைவையறிந்து தந்து ஊறுங் கிலேசந் தீருமபடி புசிப்பியாநிற்பன. எ-று.

தானஞ்செய பொருளையுந் தரித்தோரையுஞ் செய்தவனை யுந் தக்க செய்தியை யுமென்று தோஇயது எண்ணுமைத் தொகை.

ஏகார மிசைநிறை. (௨௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

தானஞ்செய்பொருள - தானதிரவியம்,—சரித்தோர்-தானம்வாங்கினோர்,—செய்தவர் - தானஞ்செய்தவர்,—தக்க செய்தி - தானவேளையிற்பண்ணின கிரியைகள்,—ஊனமுறாமே காண்டும-கெடவேகாணடும ஆதலால்,—பினபலமுறுவிப்பானே வேண்டும-பினபுபலத்தைப்பொருந்துகிறவனை ஒருகாததாவேண்டும்,—ஈனமில்செய்தி யீசனிடும்பணி - குற்றமற்றதானதரு மாதிவிதி பரமேஸ்வரனாலே சொல்லப்பட்டது,—இவைநாஞ் செய்தால்-இந்ததானாதிகளை நாஞ்செய்தால்,—ஞானங்களிக் கோக்கி நுகர்விப்பன வினைநோய்தீர-ஒருதருமஞ்செய்யுமிடத் து மந்திரம் கிரியை திரவியம் மூன்று வகையாயிருக்கும். இதி லே மந்திர §லோப கிரியாலோப திரவியலோபம் வரினுந்தோ ஷமுண்டு. இவைகள் †உக்தப்பிரகாரமன்றி அதிகமாகிலுந்தோ

ஷமுண்டு ஆதலால்கர்த்தாவானவன மிகுதிகுறைவைவிசாரித்து வினையாகிய ஆனமட்டிலே திருவதாகப் புசிப்பிப்பான என்றிதனபொருள.

§ லோபம-குறைவு, † உக்தப்பிரகாரம்-சொன்னவிதம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சத்தியம்! நீருமது வாக்காலும் போசக கன்மம் மாயாகாரிய முண்டாதற்கு நிமித்தகாரணமென்று சொன்னீர், அதனால் கன்மமேகர்த்தா, ஈசுரனொருவன வேண்டுமென்ற விகற்பனை வேண்டாமென வுத்தரமுரைக்கின்றார்.

தானஞ்செய் பொருள் தரித்தோர் - தானத்திரவியம்வாங்கினோர்,—செய்தவர்-தானத்திரவியங் கொடுத்த பெரியவர்களிருவர்களுக்கும்,— தக்கசெய்தி-யோக்கியமாகிய வாங்குதல் கொடுத்தற் கிரியைகள்,— ஊனமபினனுறவே காண்டும்-நாசமுறக் காணாநிற்கின்றோம், (பின்னென்பது பினனுங்கூட்டுக)— பினபலமுறுவிப்பான வேண்டும - கெடுமுன பலங்கொடுப்ப தில்லாமையினாற் காலாந்தரத்தில் வினைப்பலனாகிய சுகதுக்கங்களைக் கூட்டுவானொரு கர்த்தா விரும்பப் படுவன. மனோவாக்குக காயங்களினாற் பிறக்குந் தூலகன்மங் கெட்டாலும் புத்திதத்துவத்திற்கெடு முற்கணம் அவைகளால் வைக்கப்பட்ட சமஸ்காரரூப சூக்கும கன்மங்கள் பலபரியந்த மிருக்குமவைகள் பலத்தைகொடுக்குமென்று முன்சொன்னோமே, சத்தியம்! சூக்குமகன்ம மிப்படி யிருந்தாலும் அசேதன மாதலால், சுவதந்திரமாய் பலத்தைக்கொடாது,—ஈனமில்செய்தி-புண்ணியகன்மம்,— ஈசனிடும்பணி - சிவன் பண்ணென்று கற்பித்தது. அதற்

குமாருபாடாயிருக்கும் பாவத்தைப்பண்ணுதேயென்று கர்பித்தது—இவைநாஞ்செய்தால்-இந்தககிரியைகளை நாம்பண்ணினுல்,—நூனங்க ளதிகம் நோககி-ஏற்றக்குறைகளைப பார்த்து,—வினைநோய்தீர - அந்தமஞுவாக்குக் கிரியைகளால் புதிதத்துவத்தி லுண்டாகப்பட்ட வாசனுகார சூக்கும கனமஞ சுகதக்கருபமாய் பரிணமிததுப் புசிககப்பட்டுக கெடுமபடி,—நுகர்விப்பன - புசிப்பிப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அற்றேல், அவ்வச்செய்தி அவ்வச்செயப்படு பொருளிற் கிடந்து,பினனர்ப் பயன்றருமெனக கோடுமெனின? செயபபடு பொருணமுதலிய வனைததும் நிலைபேறின்றிக கெட்டொழிவனவேயாகலான, நிலைபேறுடையனுய்ப் பயனறரு முதற்கடவுள வேறு வேண்டப்படும். அற்றேல், முதற்கடவுள பயனறருதற்கியைபெனனையெனின ? முயற்சியாவது முனனைவினை அனுபவித்தற்பொருட்டுத தரப்படு முதல்வன தேவல்வினையாகலான அதனை நாமாக முனைநதுநின்று செய்தால்,அது தீர்தற்பொருட்டு அச்செய்தியானுய பாவபுண்ணியஙகளையறிநது அவை தீர்தற்குரிய பயனறருதல் அவ்வேவுவானுககுக் கடப்பாடெனபதாம்.

தானஞ்செய்பொருளென்றது உபலக்கணம்.

அற்றேல் இச்செய்தி ஈசனிடும்பணியென்றற்குப் பிரமாணமெனனையெனின? அதுகாட்டுதற்கன்றே வருஞ்செய்யுளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன குற்றமன்றியும் இம்மையிற்செய்த கன்ம பல மறுமையிற் றானே வந்து பலியாது; பல பிரகாரத்தாலுங் கர்த்தாவே யறிந்து கூட்டவேணுமென்று அருளிச்செய்கிறார்.

தானஞ்செய் பொருள் - தானங் கொடுக்கப்பட்ட திரவியம்,—தரித்தோர் - தானம் பெற்றவர்கள்,—செய்தவர் - தானம் பண்ணினவர்கள்,— தக்கசெய்தி - இப்படி பொருந்தப்பட்ட முறைமைகளெல்லாம்,— ஊனமின் றறவே காண்டும் - இவ்விடத்திலே யழிந்துபோகக் கண்டோம். இப்படி இவர்களுந் தானஞ்செய்யப்பட்ட பொருள்களு மழிந்துபோகையினால்,— பலமுறுவிப்பான் வேண்டும் - இந்தத் தானகன்மங்களுக்குத் தக்க பிரயோசனங்களை யறிந்து தருவிப்பா னொருகர்த்தாவேணும் ஆன்மாத்தா னறிவல்லோ! தானஞ்செய்த கன்மங்களுக்குத் தக்கபயன்களை யறிந்து கூட்டுவனென்னில்? இவன் பாசசம்பந்தியாகையினாலும் பரமேஸ்வரன் கற்பித்ததொழில் செய்கிறவனாகையினாலும் இவன்றானாக வறிந்து கூடமாட்டான்,பரமேஸ்வரன் கூட்டிப் புசிப்பிக்கவேணும். அதெங்ஙனே யென்னில்?—ஏனமில் செய்தியீச னிட்டபணி - ஒரு குற்றமில்லாதவனாய் எப்பொழுது மொருதன்மையா யிருந்துள்ள பரமேஸ்வரன் நமக்குக்கற்பித்த தொழில்,—இவைநாஞ் செய்தால்-அவன்கற்பித்த விந்தக்கன்மங்களை நாஞ்செய்யுமிடத்து,—ஞானங்களிக்கநோக்கி நுகர்விப்பன் வினைநோய்தீர - நாஞ்செய்த கன்மங்களினா லுண்டாகிய ஏற்றல் குறைச்சல்களைத் திருவுள்ளத் தடைத்துக் கன்மமென்கிற வியாதி தீரும்படி, நம்மையுங் கன்மத்தையுங் கூட்டிப் புசிப்பியாநிற்பன்.

இதனாற் சொல்லியது தானமேற்கப்பட்டவர்களும் தானமிடப்பட்டவர்களும் அநந்தகத் தானஞ்செய்த திரவியங்களும் இங்கே யழிந்துபோகையினாலும்; ஆன்மாதான்செய்த கன்மத்துக்குத் தக்கபயனை யறிந்து கூட்டிப் புசிக்கைக்குத் தனக்கென்ன வறிவில்லாதபடியாலும், சர்வஞ்ஞனுயுள்ள பரமேஸ்வர னறிந்து கன்மத்தையும் ஆன்மாவையுங் கூட்டிப் புசிப்பிப்பனென்னு முறைமையு மறிவித்தது.

'இறைவனிவரு' என்ற திருவிருத்தமுதல் 'தானஞ்செய்' என்ற திருவிருத்தமீறாக எடுக்கப் பட்டாசாரியன். இதற்குப பிரமாணம் பரபட்சம அவனமதம் "செயற்கும் வினைகணமாய்ந்து சிந்தையிற் சோர்ந்துநின்று, பயனொடு பலியாகிறகும் பலாலமுந் தழையுமெல்லாம், வயறணின மருவிநாசம் வந்தபின பலத்தைவந்திய, கியல்பொடுந் தந்தாற்போல வென்றுமபிவிய ம்புகின்றன." என்றும்.

சித் - பர - பட்டா - மத, ௩௦ - செ.

அவனமறுப்பு "அழிகின்ற தால்வினைக ளாகின்றவாறெனொருவ றமங்கியானபரிசே, லொழிவின்றி யோதனமு மறவுண்ணநாம்வினைக ளூறுகின்றவாறதெனலாங், கழிகின்றகாலறிவு வினைதந்திடாவினைஞர் கருமங்க ளுடியுறவோர், பழுதின்றியேயுதவு மதுபண்பதாகவருள் பரமனக ளுருமவினையே" என்றுமதுங் கண்டுகொள்க.

சித் - பர - பட்டா - மறு, ௯ - செ.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(அற்றேல், அவ்வச்செய்தி யவ்வச்செயப்படு பொருளிற் கிடந்து பின்னர்ப் பயன்றருமெனக் கோடுமெனில்?) தானஞ்செய்

பொருள்-தானமளித்த பொருளும்,—தரித்தோர் - அதனையேற்றாரும்,—செய்தவர் - ஈந்தவரும்,—தக்கசெய்தி-தக்கசெய்தியுமாகிய அனைத்தும்,— ஊனம்பிறுறவேகாண்டும் - நிலைபேறின்றிச கெட்டொழிவனவேயாகலான,—பலமுறு விப்பானவேண்டும்-நிலைபேறுடையனாய்ப் பயனருமுதற்கடவுள் வேறுவேண்டப்படும். அற்றேல் முதற்கடவுள பயனருதற் கியைபுயென்னை யெனின?— ஈனமில்செய்தி - குறைவில்லாதமுயற்சியாவது,—ஈசனிடும்பணி-முன்னைவினையனுபவித்தற்பொருட்டுத் தரப்படு முதல்வனது ஏவல்வினையாகலான,—இவைநாளுசெய்தால் - அதனைநாமாக முனைத்து நின்றுசெய்தால்,—வினைநோய்தீர-அதுதீர்தற்பொருட்டு அச்செயதிபாலுய பாவபுண்ணியங்களையறிந்து அவை தீர்தறகுறிய,—நானங்களதிகநோக்கி நுகர்விப்பன,— தக்கபயனருத லவவேவுயானுக்குக் கடப்பாடெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலதற்கோர் புறநடை யுணர்த்துகிறார்.

உலகுடல் கரணங்கால முறுபல நியதிசெய்தி, ப
லமிவை கொண்டுகன்மம் பண்ணுவ துண்பதானு, னி
லவிடா விவைதானுசென்று நினைந்துயிர் நிறுத்திக்
கொள்ளா, தலகிலா வறிவனாணை யணைத்திடு மருளி
னாலே. (உஉ)

(இ-ள்.) உலகுட ல் கரணங் கால முறு — புவனமும், தனுவும், கரணமும், காலமும், அதனாலுறுவிக்கும் விடயத்தையும், அவ்விடயத்தை வரையறுத்துப் புசிப்பிக்கு நியதி

பல வியதிசெய்தி	தத்துவமும், இவையிற்றின் ருெழிலும்,அத்
பலமிவை கொ	தொழிலிஞற் பலனும்,இப்படி யெண்விதமா
ண்டுகன்மம் பண்	ண கரணங்களைக் கொண்டு சிவ ஞனமாக்
ணுவ துணபதா	களைக் கனமஞ்செய்விப்பதுஞ் செய்த கன்
ஞல்	மபலங்களைப் புசிப்பித்தலும்.

அஃதென்போல வெனவில்? "வினையே செய்பவன் செயப்படும்பொருளே-நிலனேகாலங் கருவியெனாஅங்-கின்னதற்கிது பய ஞகவெனனு-மன்னமரபி னிரண்டொடுந் தொகைஇ - யா யெட்டென்ப தொழின்முதனிலையே" என்னு மிலக்கணத்தா ஞெருவன ருெழில் செயயுமிடத் திவவாறு காணக.

விணையென்ப தானமாக்கள செய்யுந தொழில்

செய்பவ ஞனமா.

செயப்படும்பொரு ளிருவினை.

நிலனென்பது அவாக ளிருக்கும்புவனம்.

காலமுகநாலததைய முண்டாககுங் காலதத்துவம்.

கருவி முப்பத்தாறு ததுவம்.

இன்னதற்கென்ப திருவினைப்பயன்களைப் புசிககவேண் டிய காரணம.

இதுபயனென்ப திச்சுகதுக்கங்களைப் புசித்துத் தொலைந் தபின் கன்மக்ஷயம்பிறந்து மோக்ஷத்தையடைகையெனவறிக.

நில விடா வி	இவை சடமாதலா லானமாவைச் சென
வைதாஞ் சென	று தானே பொருந்தமாட்டாது.
று	
வினை ந் துயிர்	ஆன்மாவுந் தனக்கெனச் செயலில்லாதப
நிறுத்திக் கொள்	டியாலே நாமிந்த கன்ம மார்ச்சித்தற்குரிய
ளாது	தல்லோவென் றறிந் தக்கனமங்களைக் கூ
	ட்டிக காரியப்படுத்தவு மாட்டான்.
அலகிலா வறி	எண்ணிறந்த ஞானத்தையுடைய சிவன்ற
வனுணை யிணைத்	னதாக்கிஞ சத்தியாலே தனுவாதிகளையு மா
திடுமருளிஞலே.	ன்மாவையுங் கூட்டிப் போகங்களைப் புசிப்

பித்தத் தொலைப்பித்து மோட்சத்தை யடைவிப்பன. எ - று.

இதற்குப் பார்க்கியையிலு மறிக. (௨௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

(மேற்கூறியவாற்று னிருவினை முதலாயின அழிவெய்துவன ஆகலானும், இதம் அகிதங்களெல்லாம் சிவபிரானேயேற்றுக் கோடலானும், அவனே யின்பதுன்பங்களீவனென்பது போதந்து) மறைகளென்சொல்-அதுவன்றியும வேதாகமங்களாவன? சிவபிரான கற்பித்தருளிய மொழியே!—மாநிரயம் - பெரிய நரகமாவது,—அச்சொல்வழி வாராவுயிரை - அம்மொழிவழி நடவாதாரை,—வைகுருஞ்சிறைகள் - தண்டித்தற்பொருட் டவனால் வைக்கப்பட்ட சிறைகளமே!—உம்பருலகங்கள் - துறக்கவுலகமாவது —இட்டபணிசெய்வோர் - அம்மொழிவழி நடப்போரை,—செல்வத்தோடு முறையுமாபதிகள் - செல்வத்தோடு வாழ்வித்தற்பொருட்டு அவனால்வைக்கப்பட்ட பெரியதோர் நகரமேயாகலானும,— யோனிக்கெல்லா மின்பத்துன்பங்கள்- உயிர்கட் கின்பதுன்பங்கள்,—இறைவனாணையா லியைவதாகும் - அவனா லாகற்பாலனவேயென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய சிவசத்தி நடத்துமதற் குதாரண
மிட் டுணர்த்துகிறார்.

ஆணையா லவனிமன்ன னருமறை முறைசெய்யா
னை, யாணையிற் றண்டஞ்செய்து மருஞ்சிறை யிட்டும்
வைப்ப, னாணையின் வழிசெல்வோருக் கரும்பதி செல்
வநல்கி, யாணையும் வைப்பனெங்கு மாணையே யாணை
யேகாண். (௯௧)

(இ-ள்.) ஆணையா லவனி மன்னன ருமறைமுறை செய்யானை யாணையிற் றண்டஞசெய்து மருஞசிறையிடுமை வையபனா

பூமியின்கண் வாழாநின்ற ராசாவானவ னரிய வேதததின வழியாகிய மனுமுதலிய மிருதிகளிற கூறப்பட்ட சாமபேதந் தான தண்டமெனனு நால்வகையினு ளொருகுணமா கவே தனதாகஞையாற் சிலரைத தண்டித துங் காவலில்வைப்பனுஞ செய்வன்.

ஆணையின வழி செயயேோருக் கருமபதி செலவ நலகி யாணையுட வைப்பன

இராசா சற்பிதகவழி நடப்போருககுப் பெருஞாகரிய விராசவரிசை யுண்டானதுவ கொடுத இராசசியபாரத்தி னிறுவியே யவ னுந் தனதாகஞைசகதிபுங கோடாமற் செ ஙகோ னடததாநறபன.

எங்கு மாணையே யாணையேகாண.

அந்த ராசாவினுடைய வாக்கினுசத்திரா னே யவனுடைய தேசமெஙகு முனமையா கவே யவனதாணை நடக்கும. எ-று.

இராகுத சநதிரசார மெனவநிக (நக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலுமதறகே உகாரணம்.

ஆணையா லவநிமனன னருமறை முறைசெய்யானை யாணை யிற்றண்டஞ்செய்து மருஞசிறை யிடுவையபன-சிவனுடையஞு ஞானசததியானது பொருந்துகையால் பூபதியாயுள்ளான் வே தத்திலுடையவழியிலே வர்ணுச்ரமதருமமானது நடவாதபே ரை சிவாஞ்ஞையானவேதததிலே யினனஅபாரததுக்கு இன்

ணதண்டம் இத்தனைநாளின்னபடிச் சிறைவைக்கவென்றுசொன்னபடியே தண்டித்துச் சிறையிலும்வைப்பன.— ஆணையினவழிசெய்வோருக் கருமபதி செல்வநல்கி யாணையும்வைப்பன் - சிவாஞ்ஞையாகிய வேதமாகமத்திலே நடக்கச்சொல்லி ராசாவானவன் கட்டளையிட்டபடியே நடப்பவருக்கு, அவர்களுக்கு முன்னரிதாயிருந்த கிராமாதிகளையும் கொடுத்து, ஐசுவரியத்தையுங்கொடுத்துத் தன்னுடைய அதிகாரசத்தியையும் வைத்து பிரபுவாகப்பண்ணுவன் ஆகிலராசாவும் நிக்கிரகானுக்கிரககர்த்தாவாகையால் ஈஸ்வரனுக்கு சர்வ நியந்திருத்துவ மில்லையெனில்? உத்தரமாக,—எங்குமானையே யானையேகாணை- எவ்விடங்களிலு மிருக்கு மதிகாரசத்தியெல்லாம் சிவனுடைய ஆஞ்ஞாசத்தியாமென்றறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மேலதற் குதாரணம்

ஆணையும் வைப்பன - சிட்டர்களை அநுக்கிரகம் பண்ணுவோம் துஷ்டர்களை நிக்கிரகம் பண்ணுவோம் என்று தனதிடத்திருக்கு மாஞ்ஞாசத்தி சாமர்த்தியத்தை யுலகத்துக் கறிவிப்பன இப்படி இராஜாவிற்கு நிக்கிரகானுக்கிரக கர்த்திருத்துவம் சொன்னால் சிவனுக்குச் சர்வ கர்த்திருத்துவம் எப்படிப்போம். அதுஇல்லை,— எங்கு மானையே யானையேகாணை- இராஜாக்கள் முதலோரிடத் திருக்கு மாஞ்ஞாசத்தியே சிவன தாஞ்ஞாசத்தி.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

உலகத்து வேந்தர் ஆணையாற் கிளந்த தமது மொழிவழி நடவாதாரை ஒறுத்துச் சிறைக்களப்படவும் வைப்பர். அம் மொழிவழி நடப்போரை வாழ்வித்துத் தங்கி முதிகாரமுஞ் செய்யவைப்பர். அமைச்சர் முதலாயினோர்மாட்டு அவ்வாறு காணப்படுமாணையும் அவ்வேந்தராணையேயாம். அதுபோல முதல்வன்மாட்டுங் கண்டுகொள்கவென்பதாம.

ஈண்டு மறையென்றது மொழிமாத்திரைபையுணர்த்தி நின்றது

ஏகாரம் முன்னையது தேற்றம், பின்னையது அசைநிலை.

இஃது ஒட்டென்னுமலங்காரம்.

அற்றேல், அரசனுணை வேறுள்வழி இறைவனுணையே யாண்டுமென்றல் செல்லாதென்பாரை நோக்கி; அஃதுணாத்து தற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

பரமேசுரனுடைய ஆக்கினையு மிப்படி இருக்குமென்று ஒரு திட்டாந்தமிட் டருளிச்செய்கிறார்.

ஆணையா லவனிமன்ன னருமறை முறைசெய்யானை யா ணையிற் றண்டஞ்செய்து மருஞ்சிறை யிட்டுவைப்பன் - பொது வற விராச்சியம் பண்ணுகிற விராசாவானவன தன்னுடைய வாக்கினையாலே யரிய வேதத்தின்வழி வாராதவர்களை யந்த வாக்கினையாலே தண்டித்துச் சொல்லுதற்கரிய துயரத்தைப்

பொருந்தியிருக்கிற சிறைச் சாலையிலே யிட்டுவைப்பன்,—ஆணை
யின் வழிசெய்வோருக் கரும்பதி செல்வநல்கி யாணையும் வைப்
பன - தன்னுடைய வாக்கினையின வழியிலே தப்பாமல் நடக்
கிறவர்களுக்குப் பெறுதற்கரிய விராச்சியத்தையும் ஐஸ்வரியத்
தையுங் கொடுத்துத் தன்னுடைய வாக்கினைக்குங் கர்த்தராக
வைப்பன,—எங்கு மாணையே யாணையேகாண-இந்தமுறைமை
போல, எவ்விடத்தும் சத்தியமே பரமேசுரனுடைய வாக்கினை
யென றறிவாயாக.

இதனாற் சொல்லியது உலகியல்பு வேத நூலொழுக்கமா
கையால், இராசாவானவ னந்த நூலின வழியிலே வந்தவர்க
ளுக்கு வேண்டத்தக்க பாக்கியங்களைக் கொடுத்தும், அந்த நூ
லின வழி வாராதவர்களை யருஞ்சிறையிலே யிட்டுவைத்துத்
தண்டிக்கிற முறைமைபோல; பரமேசுரனுடைய வாக்கினையு
மித்தன்மைத்தென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அவனிமன்னன - உலகத்துவேந்தர்,—ஆணையாலருமறை
முறைசெய்யானை - ஆணையார்கிரந்தத்தமது மொழிவழிநடவா
தாரை,—ஆணையிற்றண்டஞ்செய்து மருஞ்சிறையிட்டும் வைப்ப
ன்-ஆணையிறொறுத்து அரியசிறைக்களப்படவும் வைப்பர்.—ஆ
ணையினவழி செல்வோர்க்கு - அம்மொழிவழி நடப்போரை,—
அரும்பதிசெல்வநல்கி - அரியபதியுஞ்செல்வமுமீந்து வாழ்வித்
து,—ஆணையுமவைப்பன - தனதிகாரமுஞ் செய்யவைப்ப
ன்,—எங்குமாணையே யாணையேகாண்-அமைச்சர்முதலாயினா
மாட்டவ்வாறுகாணப்படு மாணையு மவ்வேந்தர் தாணையேயா
ம்; அதுபோல முதல்வன்மாட்டுங் கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

சிவஞானமாக்களிருவினைப்பலத்தைத் துய்ப்பித் தனுக்கிரகஞ்செய்யு மதற்குதாரணமி ட்டுணர்த்துகிறார்.

அரசனுஞ் செய்வதீச னருள்வழி யரும்பாவங்
க, டரையுளோர் செய்யிற்றீய தண்டலின் வைத்துத்த
ண்டத், துறைசெய்து தீர்ப்பன்பின்பு சொல்வழி நடப்
பரீதுபோல், நிரயமுஞ் சேர்ந்த நிலையினீர்மை
யிதாம். (௫௨.)

(இ-ள்.) அரசனுஞ் செய்வதீச னருள்வழி	இராசாவானவ ஞானமாக்கள் செய்த கன்மபலத்துக் கீடாக நிக்கிரகஞ்செய்வது மனுக்கிரகஞ்செய்வதுஞ் சிவனதாக்கினை யாயினையித் ஞானமாக்களை யுறுவிப்பது மனுக்கிரகமாமோவெனில்?
அரும்பாவங்கடரையுளோர்செய்யில்	பூமியினுள்ள ஞானமாக்கள் பரதாரகமன முதலிய பாவங்களைப் பிறரறியச் செய்யின,
தீய தண்டலின் வைத்து	இன்னபாவஞ் செய்தவர்களுக் கின்ன வபராதமென்னு மனுநூல் விதிப்படி யறிந்தத் தற்கேற்ற தண்டத்தைக் கொண்டு விடுவன.
தண்டத்துறைசெய்துதீர்ப்பன	சிலர்செய்த பாவத்துக் காக்கினையிட்ட தனு லதனை யிம்மைக்க ணனுபவிப்பித்துத் தீர்ப்பன்.
பின்பு சொல்வழிநடப்பர்	இராசாவாற் புத்தி கற்பிக்கப்பட்ட பின்னும் பாதகத்தைச் செய்யா தின்னமுங் …

ண்டிப்பனெனப் பயந்தவர்கள், வேதாகமங்களில் விதித்தபடியே நடப்பார்கள்.

ஆயோர்கிளையுமுறை சேரார

ஆதலாற் சுத்தரும் பாவங்களைச் செய்யாது நடக்கவே நரகத்திற் றுக்கமுறார்கள்.

அந்நியாய மிந்நியாயமேயாம.

சிவனேயிந்த வான்மாக்களை நரகவாதனைப்படுத்தித் துயருறுவிப்பது கருணையானதுபோல, இந்தராசாவு மிந்தவான்மாக்களைத் துயருறுவிப்பது மத்தன்மைத்து எ-று

அரசனுமென்றவும்மையாற் புண்ணியவான்களாயிருக்கிறவர்கள் செய்த தீவினையை யறிந்த ஆசாரியன் பரிகாரஞ்செய்து தீராநிற்பன.

இராசாவுங் குருக்களுமாக விவ்விருவரு மறியாமற் செய்த பாவத்தை யியமதன்மராசன் போக்குவது மவன்றருள் வழியென் றறிக.

இதற்குச் சிவதன்மோத்தர மெனவறிக. (௩௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதற் குதாரணம்

அரசனுஞ் செய்வதீச னருளாவழி யரும்பாவங்களைத் தனையுளோர்செய்யில் - ராசாவானவன் செய்கிறதும் சிவனுடைய ஆஞ்ஞாசத்தி பிரேரணையால். அதெவ்வாறெனனில்? தங்களாற்றீர்த்துக் கொள்ளுவதற்கு அரிதாகியபாவங்களை பூமியிலேயுள்ளபேர்கள்செய்தால்,—தீயதண்டலின்வைத்துத் தண்டத்தைசெய்து தீர்ப்பன - தண்டிக்கச்சொன்ன வுரையின்படியே பொல்லாததாகிய வருத்தத்தைச்செய்து அவர்கள் பண்ணின

பாபத்தைத்தீர்ப்பன,—வினைபுசொல்வழிநடப்பர் தூயோர்-சுத்தரானவர்கள் முன்னாமின்னபடி அபராதத்தைச் செய்து இனைத்தண்டப்பட்டோமே, மேலேவேதாகமங்கள் சொன்னபடியே நடக்கவேணுமென்று நடப்பார்கள் — நிரையமுஞ் சேரார் - முன்பண்ணினபாபம் ராசதண்டத்தினாலே போகையினாலும், மேல் பாபத்தைப்பண்ணாம லிருக்கையினாலும், அவர்கள் நரகத்தைச்சேரார்கள் பாபம்பண்ணினபேர்க்கு நரகாநுபவமென்று முன்சொன்னீரே யெனின்?— அந்தநிரைய முன்னீரையீதாம்-அந்தநரகத்தில் தண்டமு மிந்த ராசதண்டம்போலாகையால.

இந்தராசதண்டம் பட்டவர்களுக்கு நரகயாதனையில்லை. அதெவ்வாறெனனின்? ஆதியிலேகர்த்தாவானவன் பூமியின்கண் தான அருளினவேதநீதி வழுவினோர்க்கு மூன்றுவகையாக பிராயச்சித்தங் கற்பித்தார்

வர்ணாசிரமதர்மத்திலே நடக்கிறபேர்க்கு ¶ பிரமாதாத் பாபம்வந்தால் குருவினாலே பிராயச்சித்தாதி யநுஷ்டானத்தினாலே சுத்தி.

துர் ஞானமார்க்கமா யிருக்கிறபேர்கள் பண்ணினபாபத்திற்கு ராசதண்டத்திலே சுத்தி

ராசாவினாலறியப்படாத பாபத்துக்கு யமதண்டத்தினாலே சுத்தி.

¶ பிரமாதாத - அபுத்திபூர்வமாக

[illegible]

[illegible]

[illegible] ||

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

அஃதேதிரு வென்னை சியெனின் ஆஞ்ஞாசத்தி யவா... ஞ்ஞாசத்தியை விடாது செலுத்திநிற்றலாலென்று கொட்புண ருர்

தண்டத்துறை - தண்டிக்கு மிடத்துக் குறாயவாற்றை, மனுசாத்திராதிவசனமும்மாம் — நிரயமும் நீர்மையீதாம் - நர கத்திலுந் தண்டிக்கு முறைமையு மிராசதண்டனைபோல, இ ராசதண்டனைப் பட்டார்க்கு நரக மில்லாமையால்.

மற்றது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அரசன் தண்டம் வைத்தது நரகத்தண்டம் வாராமற் பாதுகா த்தற்பொருட்டாகலானும், நரகத்தண்டத்தை அறிவுறுத்தற் பொருட்டாகலானும், அவ்வரசனையும் முதல்வனாணையின்வ ழித் தாவகன்றிச் சுதந்திரமன்றென்பதாம்.

பாவஞ்செய்யிற் றண்டலின் வைத்தது தண்டத்தை செய்து தீர்ப்பன. நிரயமுன்னீர்மையீதாமெனவே, புண்ணிய ஞ் செய்யின் அதற்குரிய வரிசையின் வைத்துத்தீர்ப்பன; அந்த த்துறக்கமுன்னீர்மை யீதாமென்பதூஉம் பெறரும்.

நிரயமுமென்னுமும்மை சிறப்பு

தண்டத்துறைசெய்தலாவது மேலும் பாவஞ் செய்யின் இத்துணையின்னறி இன்னுங் கொடிதாகச் செயவலென அத்த ண்டத்தைச் சொல்லி அச்சுறுத்தல்.

சரியையுள்வழித் தன்னுருபு நிலையாது வருதல் இலேசாற் கொள்க.

மோனையெதுகைக்கேற்பத் தண்டமாகிய துரையைச்செய்தெனினுமமையும்.

தரை மருத்துப்பாடு, அது "என்னுடைய துரைமாண்டவா பாடி" என்பதனானுமறிக.

முன்னீர்மை ஏறுப்பெயரோடு முடிந்த வினைத்தொகை.

நீர்மையுடையதனை நீர்மையென்றுபசரித்தார்.

இவை மூன்றுஞ்செய்யுளானுந் தராட்டிபோலத் தருமாறு வெளிப்படக் கூறப்பட்டது.

அற்றேல், பாவமாத்திரமையேயன்றிப் புண்ணியத்தையுந் தீர்த்த லெற்றுக்கெனின்? அது முன்னர்க் கூறப்படும்.

நிரம்பவழகியருரை வருமாறு

இதனாற் சொல்லப்பட்ட விராசாவினுடைய வாக்கினை போல பரமேசுரனுடைய வாக்கினையுமென்றது எப்படியென்ற மாணாக்கனை நோக்கி, மேலருளிச்செய்கிறார்.

அரசனுஞ் செய்வதீச னருள்வழி - இராச்சியம்பண்ணுகின்ற இராசா செய்கிற வாக்கினையும் பரமேசுரன் கற்பித்த முறைமையாயிருக்கும். அதெங்ஙனமெனில்?— அருமபாவங்கள் தனையுமோரார் செய்யில் - அனுபவிக்கைக்கு அரிதாயிருக்கத்தக்க மிகுந்த பாவங்களைப் பூமியிலுள்ள மானுடர்க்கள் செய்தார்களாகில்,— தீய தண்டலின் வைத்து - பொறுக்கவொண்ணாத கொடிய தண்டங்களைப் பண்ணி,— தண்டத் [illegible]செய்து

தீர்ப்பன் - செய்த குற்றத்துக்குத் தக்க தண்டங்களைச் சொல்லிக் கற்பித்து வினையும் படுத்திப் பின்பந்தக் குற்றங்களையுந் தீராநிற்பன்—பின்பு சொல்வழி நடப்பர் ஆயோர் - பின்பு சுதந்தரரானவர்கள் இன்னமும் குற்றஞ்செய்தால் வினைம வருமென்று அறிந்து கற்பித்த முறைமையிலே நடவாநிற்பார்கள்,— நிரையமுறு சேரார் - அவர்கள் பூமியிலே பிரத்தியட்சமாயிருக்கிற விதத்த சிறையிலும் பொருந்தார்கள்.— அந்த நியாய முறைமையிற்காம - பரமேசுரனருளிச்செய்த வேதாகமத்தின் வழியிலே வாராதவர்களை யிடங்கையைக்கிற அந்தகாரமும் இந்த முறைமையினை யொக்கும்.

இதனாற் சொல்லியது, இராசாவானவன் இராச்சியத்திலுள்ளவர்கள் குற்றஞ்செய்தால் அந்தந்தக் குற்றங்களுக்குத் தக்கத் தண்டங்களைத் தண்டித்துப் புத்தி கற்பித்தால் புத்தியுள்ளவர்கள் அந்த முறைமையிலே நடந்துவருவார்கள். அதுபோலப் பரமேசுரனும் ஆன்மாக்கள் செய்த பாவங்களுக்குத் தக்க இயம தண்டங்களையும் பண்ணுவித்து பின்பேயும் அனுக்கிரகிப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

தரையுளோ ரரும்பாவங்களைச் செய்யின் - இவ்வுலகத்துள்ளார் அரிய பாதகங்கள் செய்தால்,— நியதண்டவினைவைத்து - அரசனானவன் நியாயமாகிய தண்டஞ்செய்து,— தண்டத்தினைச் செய்தும் தீர்ப்பன் - மேலும் பாவஞ்செய்யி னிதனையினன்றி யின்னுங்கொடிதாகச் செய்வலென்று தண்டத்தையெடுத்துச் சொல்லி யச்சுறுத்தியொழிப்பன்.—ஆயோர் பின்புசொல்வழி நட

ப்பர் நிரயமுஞ்சேரார்-அறிவுடையார் பின்பு விதிவழிநடந்து நிரயத்தினுமழுந்தார்,—அந்நிரய முன்னீர்மையீதாம்-அந்நரகத்தண்டமும் ராசதண்டம்போலாம். இங்ஙனம் ராசதண்டம் வைத்து நரகத்தண்டம் வராமற் பாதுகாத்தற்பொருட்டு நரகத்தண்டத்தை யறிவுறுத்தற்பொருட்டு மாகலான,— அரசனுஞ்செய்வதீசனருள்வழி-அவ்வரசனாணையு முதல்வனாணை வழித்தாவதன்றிச் சுதந்திரமன்றென்பதாம்.

இவை மூன்றுசெய்யுளானுந் தராபதிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இராசாவைப்போலச் சிவனுக்கும் பட்சபாத
மில்லையென் றுணர்த்துகிறார்.

அருளினா லுரைத்தநூலின் வழிவாரா ததன்மனு
செய்யி, னிருளுலா நிரையத்துன்பத் திட்டிரும் பாவ
ங்தீர்ப்பன், பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற்
புணியந்தீர்ப்பன்,மருளுலா மலங்கட்க்கு மருந்திவை
வயித்தியநாதன். (௯௧)

(இ-ள்.) அருளினா லுரைத்த நூலின — ஆன்மாக்கள் சனனமரணக் கடலைவிட்டுக் கரையேற்றுகையின் பொருட்டுத் தனது கருணையினாற் றிருவுளஞ்செய்த வேதாகமங்
வழிவாரா ததன்மனுசெய்யின — கள்வழி நடவாமற் பாவத்தைச்செய்யின,

இருளுலா நிரையத் துன்பத் — இருள்பொருந்திய நரகவேதனையிற் கிடந்து துயருறு மகத்தாகிய பாவங்களைப்புசி

இட்டிடும் பாவந் தீர்ப்பன — ப்பித்துத் தொலைத்தவாறே, யதனைத் தீர்ப்பன.

பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந் தீர்ப்பன — அந்த நூலிலருங்கூறிய முறையினடக்குமவர்களைப் போகத்துக்கு கேதுவாகிய பொருள்களனைத்தையுமுடைய சொர்க்கமுதலிய போகங்களைப் புசிப்பித்துத் தொலைப்பியா நிற்பன இவ்விரண்டு காசத்தாற் பயனியாதெனில்?

மருளுலா மலங்கடர்க்கு மருந்திவை வயித்திய நாதன. — வயித்தியநாதனாகிய சிவன் மலமாயாதியாகிய வியாதியை யான்மாக்களுக்குப் பட்சபாதமின்றியே போக்காநிற்பன எ-று.

வயித்தியநாதன - எழுவாய்.

தீர்ப்பன - பயனிலை.

இதற்குக் காரணாகமும் வாயவியசங்கிதையு மெனவறிக.

"விண்ணுளார் நரா மற்றை விலங்குமோ, பண்ணும் பாவ பலத்தைக் கொடுப்பவ, ரெண்ணமே யமனே ரேசிகன் றீர்த்திடும், பண்ணிற் பாவ விதஞ்சிவ பத்தரும்" "பிண்ணக்கந் தனையும் பெறற்வா தமமிடைக், கண்ணகிலாரையுங் களவாக டம்மையும், வண்ணத்து வானமன்னன் மறையையர் தங்களை, யிணக்குவா னரசத்து னியமனே" எனவறிக. (௫௫)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

—o—

மேல் வைத்யனை யுகாரணமாகக் கூறுதல்.

அருளினுலுரைத்தநூலின்வழிவரா ததனமஞ்செய்யின்-பரமேசுரன் ஆன்மாக்களுக்கு தருமார்த்த காமமோக்ஷமாகிய அ

துர்விதபுருஷார்த்த சித்தியின்பொருட்டுக் கருணையினாலே யருளிச்செய்த வேதத்தின்வழிநடவாமல் அசற்கர்மத்தைச்செய்தில்,—இருளிலா நிரயத்துன்பத்திடர்தரும்பாவந்தீர்ப்பன-அந்தகாரம்பொருந்தியிருக்கிற நரகத்திலே யிடும் பெரியதாகிய பாவத்தையொழிப்பன,—பொருளிலாருசுவர்க்கமாதி போகத்தால் புண்ணியந்தீர்ப்பன-எல்லாப்பொருளுமுண்டாகிய சுவர்க்காதிபோகங்களில் போகத்தினாலே புண்ணியத்தையொழிப்பன,—மருளாமலங்கள் தீர்க்குமருந்திவை-†துச்சமாயிருக்கிற விஷயசுகத்திலே பரமசுகபுத்தியாக மயக்கத்தைப்பண்ணுவதாயிருக்கிற கருமங்களாகிய மலங்களையொழிக்குமருந்து இந்த ஸ்வர்க்கநரகங்கள் — வைத்தியநாதன்-சிவன்

ஸ்வர்க்கநரகமாகிய ஔஷதத்தைக் கொடுத்துக் கருமங்களாகிய வியாதிகளைநீக்குவோன் வைத்தியனென்றது-தேகத்தில் வியாதியைப் போக்குகிறவனுக்கு வைத்தியனென்று பேராகையால், தேகத்துக்குக்காரணமாகிய கருமத்தைப் போக்குகையால் வைத்தியருக்குமஸ்வாமியென்பது கொண்டு வைத்தியநாதன் என்றது.

† துச்சம் - நிஷ்பலம்.

௯௨௯ம்-[illegible] ஷஜ்ஜிதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பின்னு முதாசரிக்கின்றார்.

அருளினுலுரைத்த நூல் - வேதாகமங்கள்,—இருளிலாநிரயம் - அந்தகாரம் பொருந்திய நரகம்,—மருளுலாமலம் - [illegible]

க்கம்பொருந்திய பாவபுண்ணியங்கள்,— மருந்து - நரகசுவர்க்கம்,—சிவஞானிகளை,—வைத்தியன் - பண்டிதனை மற்றதுவெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

வேதாகம நூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழி நில்லாமைப் புண்ணியம் இரண்டினுமுற்ற நோயாளர், அவரவர் பக்குவமுறைமைபெறும்பொருட்டு சிவாசாரியார் வைத்தியன் இன்பதுன்பங்களாகிய மருந்தை நுகர்விப்பனென்பதாம்

இஃது ஏகதேச உருவகம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

ஆன்மாக்களுக்குப் பரமேசுரன் இங்ஙனஞ் சொல்லிப் போந்த பாவகன்மத்தைப் போக்குமொழிந்து, புண்ணியகன்மத்தைப் போக்கவேண்டுவதில்லையென்று சொல்ல; அவனே நோக்கிப் பக்குவான்மாக்களுக்குப் புண்ணியகன்மமும் ஆகாது ஆகையால் அதுவும் போக்குகிற முறைமை யருளிச்செய்கிறார்.

அருளினா லுணர்த்த நூலின் வழிவாரா தன்மஞ்செய்யி னிருளுலா நிரயத்துன்பத் திட்டிடும் பாவந்தீர்ப்பன் - பரமேசுரன் தனது காருண்ணியத்தினாலே யருளிச்செய்த வேதாகமத்தின் வழியிலே வாராமல் தன்மமல்லாதவையிற்றைச் செய்கிறவர்களை, மயக்கம்பொருந்தி இருக்கப்படாநின்ற நரகவே

னையிலே யிட்டுப் பெரிய பாவங்களைப் போக்குவன்—பொருளலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந்தீர்ப்பன - மிகுத்த பதார்த்தங்களை யுடைத்தா யிருக்கப்படாநின்ற சுவர்க்க முதலான போகங்களைப் புசிப்பித்தே புண்ணியங்களையும் போக்காநிற்பன,— மருளலா மலஞ்சடாக்கு மருந்திவை வயித்திய நாதன் - அஞ்ஞானமே பொருந்தி யிருக்கப்படாநின்ற மலங்களைச் சுவர்க்க நரகமென்கிற அவுஷதங்களைக் கொண்டு போக்குவன, ஒருத்தராலுந் தீர்த்தற்கரிதாகிய பிறவிப் பிணியைப் போக்குகைக்கு வயித்திய நாதனாகிய பரமேசுரன்.

இன்னுஞ் சொல்லியது, பரமேசுர னருளிச்செய்த வேதாகமத்தின் வழி வாராத பாவிகளை நரகத்திலே யிட்டுத் தண்டிப்பித்துப் பாவங்களைப் போக்குவனென்றும், புண்ணியஞ்செய்தவர்களைச் சுவர்க்காதி போகங்களிலே வைப்பித்துச் சுகத்தை யநுபவிப்பித்துப் புண்ணியங்களைப் போக்குவனென்றும், இந்தப் புண்ணியபாவமென்கிற விரண்டு விஷயத்தாலும் அஞ்ஞானமே பொருந்தி யிருக்கப்பட்ட மலங்களைப் போக்குவனென்னுமுறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(வேதாகமநூல்வழி நில்லாமைபாவம். நூல்வழிநின்றும் அருள்வழி நில்லாமைபுண்ணியம். அவ்விரண்டுநோயாகலான),— அருளினூலுரைத்த நூலின் வழிவராது - உயிர்கட்குக் கருணையாலளித்தருளிய வேதாகமநூல்வழி யொழுகாது,— அகன்று செய்யின் - பாவஞ்செய்யின்,—இருணிரயத்துன்பத் திட்டு - இருணிறைந்த நரகத்துன்பத்தினை யழுத்துவித்து,—இரும்பாவந்தீர்ப்பன் - பெரிய பாவத்தினைத் தீர்ப்பன்,—பொரு

ளுலாஞ்சுவர்க்கமாதி போகத்தால் - பொருள்கள்தங்கிய சுவர்க்காதிபோகத்தால்,—புண்ணியந்தீர்ப்பன - புண்ணியத்தினைத்தீர்ப்பன,—வயித்தியநாதனை - சிவபிரானாகிய வைத்தியனை,— மருளுலாமலங்களை - மருட்சியுண்டாதற் கேதுவாகிய மலநோய்களை,— தீர்க்குமருந்திவை - போக்கு மருந்துகளிவையென்பதனைப்பங்களால் என்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

சிவவாக்கியத்தின்வழி நடப்பாருக்கும் நடவாதோர்க்கும் உதாரண முணர்த்துகின்றார்

மருத்துவ னுரைத்தநூலின் வழிவரிற் பிணிகள் வாரா, வருத்திடும் பிணிகடப்பிற் றப்பிய வழியுஞ்செய்யத், திருத்துவன் மருந்துசெய்யா துறும்பிணி சென்றுநீர்ப்ப, னுரைத்தநூற் சிவனுமின்னே யுறுங்கன்ம முடித்திரப்பன். (கச)

(இ-ள்.) மருத்துவ னுரைத்த நூலின	தன்வைத்திய சங்கிதைமுதலிய வாகடத்தின் வழி நடக்குமவர்க்குப் பிணிகள்வந்து பொருந்தாவாம
வழிவரிற் பிணிகள் வாரா	
வருத்திடும் பிணிகடப்பில்	அந்நூலின்வழி நடவாமல் அபத்தியமாய் நடக்கிறவர்களை யந்த வியாதி வருத்தாநிற்கும்.
தப்பிய வழியுஞ்செய்யத் திரு	அந்தவயித்தியன் சொன்னபடி நடவாத பத்தியமாக வொன்றைச்செய்யி னதற்கே

த்துவன் ற்ற வௌடதங் கொடுத்துந் தீர்ப்பன்.

மருந்துசெய் மருந்து பண்ணுமன மந்திரங்களாலுந்
யா தறும்பிணி தானபோயு மாளப யோகவிட்டுமபோக்
சென்றுந தீரபப ருவன:
ன

அஃதென்னைபோல வெனனில்? பேயமுதம்பியவர் முற் றுய ருறுவார்க கிருநதவிடதஇற் திருநீறு கொடுத்துத தீக்குமா றுபோல

உரைததநூற் அதுபோலச் சிவனருளிச்செய்த திவவி சிவனுமினேனயு யாகமஙகளின வழி நடககுமவாகள செய் துங்கனமஅற்ற கனமததைப புசிபபிததுப பிணிணை மேலா டித்தீபபவ ய போகததை யடைவிபபன.

அதினவழி நடவாமற் றபபினபேருக கக்கனமம் போகை யினபொருட்டு ஆசாரிய ரிடமாகப் பரிகாரததைசசெய்துக க னமததைப புசிபபித்துத தொலைப்பிப்பன. எ-று

செய்யுமெனபது - செய்தெனத திரிநதுநினறது.

அருததல் - தீரததல்

உறுபபிணி சென்றுந தீரப்பன எனபசர் கககாலததுமரு ந்திறகு வசமாகாப் பிணிகளை நாளிடைவிட்டுத தீரபபன. இ பபடிப பிராயசசித்ததசா னிங்காதனவறறை யனுபவிக்கப்ப ணணித் தீரப்பன சிவனெனபாருமுளர.

சென்றுமெனறு மும்மை எதிாமறை

இதறகுச சிவஞானபோததரததும பௌஷ்கரததுங் கா ண்க. (௩௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மருத்துவனுரைத்தநூலின வழிவரிற் பிணிகள்வாரா-தக்க த்தரிபகவான பணணின வைத்திய சாத்திரப்படி நடக்க

பேருக்கு வியாதிபொருந்தாது.— வருத்திடும்பிணிகடப்பில் - அந்தசாத்திரப்படி தப்ப நடக்கில் பிணிகள்வந்து வருத்தத்தைப் பண்ணும்,—தப்பியவழியுஞ் செய்யாத திருத்தி னைமருந்துசெய்யாது துறும்பிணிசென்றுதீர்ப்பன - வைத்தியசாத்திரஞ் சொன்னபடி தப்பினவழியால் வியாதியவசகாலத்து அச்சப்பிணி யுற்றவனபாற்சென்று மருந்தைச்செய்துகொடுத்துமு தீர்ப்ப ன் தானசெல்லாது மருந்துருப்பியுந் தீர்ப்பன —உரைத்தநூற் சிவனுரிமையோர் யுறுங்கன்மமூட்டித்தீர்ப்பன - வேதாகமத்தை யருளிச்செய்த சிவனும் பசு வேதாகமத்தின்படி நடவாது ற கருமவியாதிகளுக்கு நரகாதிபோக துக்கங்களாகிய ஔஷதத்தைக் கொடுத்துத்தீர்ப்பன

வைத்தியன் வியாதியாளரிடத்திலே சென்றுஞ்செல்லாம லுந்தீர்ப்பனென்றாற்போல, பரமசிவனும் புமகன்மம் சுகதுக்கங்களைக்கொடுத்து புண்ணியபாவங்களை யொழிக்கிறதற்குச் செல்லாமற் றீரப்பட்டுச் சென்றுதீர்ப்பனென்பது, ஆசாரியமூர்த்தியாய் வெளிப்பட்டருளி யெல்லாருடைய கன்மங்களையும் ஏககாலத்திலேயொழித்து மோக்ஷத்தைக்கொடுப்பனென்பது கருத்து

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——0——

வைத்தியனென்றதேதிருவெலனன வொப்புரைகக்ளருர்

மருத்துவ னுரைத்த நூல் - வைத்தியசாத்திரம —தப்பிற் பிணிவருத்திடுமென்று மாறுக உறுங்கன்ம மூட்டித் தீர்ப்பன- பிராயச்சித்தம பண்ணுதவிடத்தேறின கன்மத்தைப் புசிப்பித்துத் தொலைப்பன்.

மற்றது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வாகட நூல்வழி யொழுகாது தப்பியவழி யொழுக, அங்ஙன் மானமிகத்தானும் பௌதிகத்தானும் வரும் பிணிகளை அதற்குத் தக்க மருந்துகளைத் திருத்தியும், தப்பியவழி யொழுகாதிருப்பவுந் தைவிகத்தான் வரும் பிணிகளை அவற்றிற்குத் தக்க உபாயங்களிலே செலுத்தியும், தீர்த்திடுவன மருத்துவன. இவ்வாறே, சிவபிரானும் உயிர்கட்கு வரும் இருவினையைப் பலித்தக்காலு மூட்டித் தீர்ப்பனென்பதாம்.

மேலுருவகஞ் செய்ததனைத் தெரித்துணர்த்தியவாறு.

தப்பியவழியுமென்றவும்மை இழிவுசிறப்பின்கண் வந்தது.

திருத்தியென்பது முற்றெச்சம்.

நன்மருந்தென்பதூஉம் பாடம்.

சென்றும் உம்மை இறந்தது தழீஇயிற்று.

சென்றுமென்புழி விவ்விகுதி விகாரத்தாற் றொக்கது; "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்றாற்போல.

அவற்றிற்குத் தக்க வுபாயங்களிலேயென்பது அவாய்நிலையான் வந்தது.

அவ்வுபாயங்களாவன, தானம் பூசை யோகமுதலாயின.

செய்யாதென்னு மெதிர்மறை செய்வெனெச்சத்திரிபு.

அற்றாயினும், துன்பநுகர்ச்சியேயன்றி இன்பநுகர்ச்சியும் மருத்தோடொக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி; அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலும் வயித்தியன் சொன்ன நூலின்வழி வந்தவர்களுக்கு வியாதி வாராதென்றும், அந்த நூலின்வழி வாராதவர்களுக்கு வியாதி வருமென்றும், நடக்கிற தன்மைபோல, பரமேசுரனருளிச்செய்த வேதாகமத்தின் வழிசெய்தவர்களுக்கும் செய்யாதவர்களுக்கும் முன்சொன்ன முறைமைபோலவென்று தோன்ற அருளிச் செய்கிறார்.

மருத்துவனுரைத்த நூலின் வழியரிற் பிணிகள் வாரா — வாகட சாத்திரத்தின்படியிலே வயித்தியன்சொன்ன முறைமையிலே செய்தவர்களுக்கு வியாதிகளுண்டாகாது.—வருந்திடும் பிணிகட்பிற் றப்பிய வழியுளுசெய்யத் திருத்துவன—அந்தச் சாத்திரத்தின்படிக்குத் தவறுவந்த விடத்தும் ஔஷதஞ் செய்யு முறைமையுந் திருந்தச்சொல்லிவைத்தன — மருந்து செய்யாதுறுமபிணி சென்று தீர்ப்பன-ஔஷதங்களுக்கு மட்டுப்படாத வியாதிகளையும் அதுக்குத்தக்க வுபாயங்களினாலே சென்று தீராநிற்பன.— உரைத்தநூற் சிவனுமனனே யுறுங்கன்ம மூட்டித் தீர்ப்பன - வேதாகமங்களை யருளிச் செய்யப்பட்ட பரமேசுரனும் இந்த முறைமையிலே பொருந்தத்தக்க சுகதுக்கங்களைப் புசிப்பித்துத் தொலைப்பியா நிற்பன.

இதற்குப்பிரமாணம் சிவஞானபோதம் உ-சூ, எ-வெ. "நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ், சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி, மலகன்ம மன்றுளவாம் வள்ளலார் பொன்வா, ளலர்சோகஞ் செய்க மலத்தாம்", என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது வயித்தியன் கற்பித்த சாத்திரத்தின் கிரமத்திலே வந்தவர்களுக்கு வியாதி வாராதென்

றும், அந்தச் சாத்திரத்தின் வழியிலே வாராதவர்கள் வியாதியினாலே வருத்தப்படுவாராக என்றும், அந்தச் சாத்திரத்தின் வழி தவறினாலும் ஒரோக்கமப்பன்று முறைமையுங் கற்பித்தானென்றும், ஒரோவொருவர்களுக்கு மட்டுப்படாத வியாதிகளைத் தானென்று தீர்ப்பனென்றும், இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமைபோல், பரமேசுரனும் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை யுணரா முறைமையிலே கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பிப்பனென்னு முறைமையு மறிவிப்பது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

உரைத்த நூலின் வழியில் - யாக்க நூலின் வழியொழுகில், — பிணிகளையாதல் - பிணிகளை யடைதலும், — தப்பில் - தப்பிய வழியொழுகில், — வருந்திப் பின்னை - அங்ஙனம் ஆன்மிகத் தானும் பொறுத்துத் தானும் வாராப் பிணிகளை, — செய்யமருந்து திருத்தினன் - அதற்குத்தக்க செய்யத்தகிய மருந்துகளைத் திருத்தியும், — தப்பியவழிப்புக்கு ஒப்பாது - தப்பியவழியொழுகாதிருப்பவும், — உறும்பிணி - தைவீகமானவரும் பிணிகளை, — சென்றகற்றப்பண்ணும் மருந்துவன் - அவற்றிற்குத்தக்க வுபாயங்களாகிய தானம் பூசை யோகம் முதலானவைகளிற் செலுத்துந் திறத்தியன மருத்துவன் — போலே - இவ்வாறே, — உரைத்த நூற்சிவனும், — வேதாகமங்களி னுரைத்திய வண்ணஞ் செய்பிரானும், — உறுங்கன்ம மூட்டித்தீர்ப்பன் - உயிர்களுக்கு வருமிருவினையைப் பலித்துத்தானு மூட்டித்தீர்ப்பன்.

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மாக்கள்செய்த கன்மந்தைப் புசிப்பித்துத்
தொலைக்குமதற்கேற்றவினைசெய்யா

விடத்தைத் தீர்க்கப்படாவென்பதற்
குக் காரணமிட்டுணர்த்துகின்றார்.

மன்றுளே சிலவியாதி மருந்துவ னருத்தியோ
டுந், தின்றுமா யருத்துகையித் தீர்த்திடுஞ் சிலநோ
யெல்லாங், கன்றிய கட்டும் பாலுங் கலந்துடன் கொடு
த்துத் தீர்ப்பன், வைவாறே யிப்பதுவும் மருந்தியே வி
னையறுப்பன. (௫)

(இ-ள்) மன்று ளே சிலவி யாதி மரு ந்துவ னருந்தி போடுந் தின்று மா யருத்துகை யித் தீர்த்திடும — பரிசாரியானவனானவர்களுடைய வியாதிகளைப் பிரதி சஞ்சீவியாதி மருந்துகளைப் பிரயோகவெதுட யுந் தீர்க்கிறவன். அது அல்லாமல் கட்டமாயிருக்கவும் நோயுடையவி டாதிருப்பதைப் போக்கிறதென் றயறுக்குஙன னொடை கொடுக்கவும் கண்டோம்.

சிலநோயெல் லாங் கன்றிய கட்டும் பாலுங் கலந்துடன் கொ டுத்துத் தீர்ப்ப ன — அவனொருவனே சிலவியாதியின் குணமறிந் தெல்லோருங் கருதவொணாக் கருப்புக்கட்டியோடு ம் பாலோடும் மருந்தைக்கலந்து கொடுத்து வியாதியைத் தீர்க்கிறவன்

ஆதலா லிவனிடத்தில் விருப்பு வெறுப்புக் சம்பந்தமும், அ வனிடத்திற் பட்சபாத மில்லாமையால்

அவ்வண்ணமு மி னபத்தனைப மரு ததியே வினைய றுப்பன. — அத்தனைப்போல் வெமது சிவனு மான மாக்களைக் கன்மத்துக் கேற்க விருவினைப்பல னகளையும் புசிப்பித்துத் தொலைப்பன. எ-று.

அண்ணலு மெனறவும்மை - எதிரது தழீஇய வெச்சம்.

இதற்கு மிருகேந்திரமும் வாயவ்ய சங்கிதையு மெனவுநிக. (கூரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதற்குகாரணம்

மண்ணுளே சிலவியாதி மருந்தவனருத்தியோடு திண்ணமாவறுத்துத்தீய்த்துந் தீர்த்திடு சிலநோயெல்லாம - பூமியினகண்ணிலே வைத்தியஞானவன வியாதி தீரவேணுமெனனும் பிரியத்தாலே கூசசமற அறுத்தும காய்கோல்போட்டு சிலவியாதிகளை நீககுவன —கன்னிபகட்டிபபாலுங் கலநதுடனகொடுத்துத தீப்பன-இச்சையாய் கருதபபட்ட கருப்புககட்டி பாலுடனே கலநதுகொடுத்துச சிலவியாதிகளை நீககுவன இவவாறே,—அண்ணலுந துனபவினப மருததியேவினையறுப்பன-ஸ்வாமியும் சுகதுககஙகளை புசிப்பித்தே வினையொழிப்பன.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இனபத துனப மூட்டி யிருவினை தொலைத்தற் குதாரணம்.

வெளிப்பொருள

சிவஞானயோகியருரை வருமாறு.

அவ்வக்நோய்கட்கேற்ப மருததுவன்செய்யு மிருவேறுவகையும் மருந்தாதல் உலகத்துக காணப்படுதலின், அவ்வாறே

முதல்வ னுகர்விக்கு மென்பத்தனபமிரண்டும் மருந்தாக வுணர்ந்துகொள்க வெனபதாம்.

இவை மூன்று செய்யுளானுந் தரணிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பரமேசுரன் ஆன்மாக்கள்செய்த கன்மத்தை சுகதுக்கமாகிய ஔஷதங்களைக் கொண்டு போக்குகிறபடியென்ற மாணுக்கனை நோக்கி, ஒருதிட்டாந்தமிட்டு அருளிச்செய்கிறார்.

மன்னுளே சிலவியாதி மருந்துவ னருந்தியோர்ந் தின்னமா யறுத்துக்கீறித் தீர்த்திடும் - விசுவத்திலே சிலவியாதியை யாசையுடனே வயித்தியனானவன் செய்து கைகண்டபடியே நிச்சயமாக வறுத்துங் கீறியும் பரிகாரஞ்செய்துதீராநிற்பன — சிலநோயெல்லாங் கன்னிய கட்டிப்பாலுங் கலந்துடனகொடுத்துத் தீர்ப்பன - சிலவியாதிகளுக்கெல்லாங் கருகப்பட்ட கருப்புக்கட்டியும் பாலுங் கலந்துகொடுத்துத் தீராநிற்பன. அத்தன்மைபோல,— அண்ணலுந் துன்பமின்ப மருந்தியே வினையறுப்பன - பரமேசுரனு மப்படியே ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களுக் கிடாக சுகதுக்கங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைத் தொலைப்பிப்பன.

இதனாற்சொல்லியது, பிரவஞ்சத்திலே வயித்தியனானவன் வியாதிகளைத் தீர்க்குமிடத்து விப்புருதிமுதலான வியாதிகளையறுத்துக்கீறிப் பரிகரித்தும், பித்தமுதலான வியாதிகளைக் கருப்புக்கட்டியும் பாலுங் கலந்துகொடுத்துப் பரிகரித்தும் செய்கிறமுறைமைபோல; பரமேசுரனும் ஆன்மாக்கள் செய்த புண்

னியபாவத்துக்குத்தக்க சுகதுக்கங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைப் போக்குவனென்னு முறைமையு மறிவித்தது.

'தாபரம்' 'அரனடி' 'மறைகள்' 'ஆணையால்' 'அரசனும்' 'அருளிருல்' 'மருத்துவன' 'மண்ணுளே' ஆக எட்டுத் திருவிருத்தமும் சிஷ்யன.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மருத்துவன - மருத்துவனுவான,— மண்ணுளே சிலவியாதி - இவ்வுலகத்துள்ளார்க்குண்டாகிய சிலவியாதிகளை,— அருத்தியோடுந் திண்ணமாய் - ஆதரவோடுமுறுதியாய்,— அறுத்துக்கீறித்தீர்த்திடுமே - அறுத்துக்கீறித் தீர்த்திடவுஞ்செய்வன,— சிலநோயெல்லாம்-சிலவியாதிகளை,— கன்னிபகட்டிப் பாலும் - கருத்திய சர்க்கரையும்பாலும்,— கலந்துடன கொடுத்துத் தீர்ப்பன-கலந்துக் கொடுத்துத் தீர்ப்பன,— அன்னதுமின்பத் துன்ப மருந்தியே - அவ்வாறே முதல்வனு மின்பதுன்பமாகாகிய மருந்தை நுகர்வித்து,— வினையறுப்பன-இருவினையாகிய நோயைத் தீர்ப்பன.

இவை மூன்றுபாட்டானுந் தரணிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படிக் கன்மம் புசித்துச் சரீரம்போனு லான் டனுபவிப்ப தேதென்று வினவ; மேலுணர்த்துகிருர்.

பூதனு சரீரம்போனாற் புரியட்ட ரூபந்தானே,யா
தனு சரீரமாகி யின்பத்துன் பங்களெல்லா, நாதனு ரா
ணையுய்க்க நரகொடு சுவர்க்கந்துய்த்துத், தீதிலா வனு
வாயோனி சேர்ந்திடுஞ் சீவனெல்லாம். (௩௬)

(இ - ள்.) பூதனு சரீரம்போனால் — இருவினைக்கீடாக வெடுத்த பஞ்சபூதமய மான தூலவுடல்விட்டு நீங்கினால், ஆங் கனுப விக்குஞ் சரீரம் யாதெனில்?

புரியட்ட ரூபந்தானே — கலைமுதலிய வசாதாரணமாகிய தத்துவங்கண் முப்பதும், ஆன்மாக்கடோறுந் தனித்தனியாய்ச் சிருட்டிதொடங்கிச் சங்காரமளவு மதுதானேயின்ன றங்கங்குள்ள சுகதுக்கங்களை யநுபவித்தற்கு

யாதனு சரீரமாகி இன்பத்துன் பங்களெல்லா நாதனு ராணையுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்து — சிவன தாக்கினாசத்தியானது செலுத்தக், ஆன்மாக்கள் புண்ணியகன்மத்துக் கீடாக ப பூதசாரமென்னுந் தனுவை யெடுத்துச் சுவர்க்கபலங்களைப் புசித்தும், பாவபலத்துக் கீடாகிய பூதமென்னுந் தனுவை யெடுத்து நரகமுதலிய வாதைகளைப் புசித்துத் தொலைந்தவாறே

தீதிலா வனுவா யோனிசேர்ந்திடுஞ் சீவனெல்லாம. — குற்றமில்லாத வான்மா புரியட்டதேகியாய்ச் சுக்கில சோணிதங்களுடன் கூடிப பூதபரிணாமமாகிய சரீரத்தைக்கன்மானுகுணமாகக் கர்த்தாவின தாக்கினையா லந்தப்புரியட்டகமே யோனிகடோறு மதற்கதற்கேற்ற சரீரத்தை யெடாநிற்கும். எ-று.

தான் - அசை.

ஏகார மீற்றசை.

உய்க்கல் - செலுத்தல்.

இதற்குக் காரணாகமத்துஞ் சிவதருமோத்தரத்து மறிக.

“புரியட் டகமே புரிந்தங்கங் குண்ண-வுரியவுட றனை விளைக்கும்” எனவும், “அருந்துயரக் குழியினூழ்வா ராகமே பாவத்தாகும், பொருந்திய பூதத்தாலே யிமைத்திடும் போதுதன்னுட், புரிந்தவின் புகுவாராகம புண்ணியத் தாலேயாகும், பொருந்திய பூதசாரத் தொருகணப் போதுதன்னில்.” “புண்ணிய பாவத்தாலே பூதத்தின் பரிணாமத்தா, மண்ணினிடை மனிதராக மற்றைய வடிவமெல்லாம” எனவறிக. (௩௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேவிந்த ஸ்தூலதேகம்விட்டால் ஸ்வர்க்கநரகத்துக்கு தேகமுண்டாம்படியும், காயத்திலேபதியும்படியு முணர்த்துதல்.

பூதனாசரீரம்போனாற் புரியட்டரூபந்தானே யாதனாசரீரம்-இந்தஸ்தூலதேகம்விட்டால் சூக்குமமாகிய பஞ்சதன்மாத்திரையும் மனோபுத்தி யகங்காரமாகிய புரியஷ்டகத்திலேதானே நரகானுபவத்துக்கு யாதனாசரீரம்உண்டாம, ஸ்வர்க்கானுபவத்துக்கு பூதசாரமாகிப் பிரகாசரூபமாகிய சரீரமுண்டாம,—இன்பத்துன்பங்களெல்லா நாதனாராணையுய்க்க நரகொடு சுவர்க்கத்துய்த்து-நரகத்திலும் சுவர்க்கத்திலும் துன்பத்தையு மின்பத்தையும கர்த்தாவினுடைய சத்தியினாலே பொருந்தப் பட்டுப்புசித்து,—தீதிலாவணுவா யோனிசேர்ந்திடுஞ் சீவனெல்லாம்-பரமாணுவெனனுந் தன்மையும் மத்தியமபரமாணுவெனனுந் தன்மையுமாகிய குற்றமன்றியில் சூக்குமரூபியாய், பூமியிலே கருமத்துக்கீடான கர்ப்பத்தையடையும்.

ஆன்மாக்கள் தேவதேகமுண்டாமென்று மூலத்திற்சொல்லாதி ருக்கவும் சொன்னது, ஸ்வர்ககநரகத் திலனுபவஞ்சொல்லுகை யால் நரகத்துக்குயாதநாசரீரம் சொல்லப்படுகையால், சுவர்க் கத்துக்கு தேவசரீரமழைத்துககூட்டிப் பொருளுரைத்தல்.

யாதநாசரீரம்பூதசரீரமெனபதற்கும், பூதபரிணமம் மனு ஷ்யசரீரமெனபதறகும, பூதசரீரம் தேவசரீரமெனபதற்கும்ச ம்மதி

𑌶𑌿𑌵𑌯𑍋𑌗𑍇𑌽𑌤𑍍𑌰 — 𑌸𑌯 𑌨𑌾𑌰𑌕𑌿𑌣𑌾𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂

𑌯𑌾𑌤𑌨𑌾𑌦𑍇𑌵 𑌭𑍋𑌗𑌾𑌶𑍍𑌚 । 𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑍇

𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌵𑌪𑍁𑌃 𑌕𑍃𑌤𑍇 ॥ 𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌦𑍇𑌹𑌂 𑌚 𑌭𑍋𑌗𑍇𑌨

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌗𑌵𑌾𑌹𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌸𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂

𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌮𑍍

𑌶𑌰𑍀𑌰𑍇𑌣𑍈𑌵 𑌭𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂

𑌦𑍇𑌹 𑌇𑌤𑌿.

இவ்விடத்து பூதபரிணம மென்றது தேகமானது பால் யாத் யவஸதாந்தரங்களை யடைகையிருலே தேகத்துக்குச் சொனனது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கன்மபலத்தையனுபவிக்கு முறைமையை யறிவிக்கின்றூர்.

பூதனு சரீரம் போனல் -பஞ்சபூத பரிணம சமுத்பூதமா ய துலசரிரம் விட்டால்,—புரியட்ட தேகந்தானே - சூக்கும சரீரந்தானே,— காதனுராவேயுக்க - சிவாஞ்ஞை செலுத்

து,—யாதனு சரீரமாக - பூதோத்பூத நரக சரீரத்தைத் தான், பூதசாரசமுத்பூத சுவர்க்க சரீரத்தைத் தான் பொருந்த, அவற்றோடு பொருந்தி,— சீவனெல்லாம் - சகலான்மாக்களும்,—இன்பத்துன்பங்களெல்லாம் - சுகதுக்கங்களைத்தும்,—நரகொடு சுவர்க்கந்துய்த்து - நரக சுவர்க்கங்களி னனுபவித்து, பின்னர்ந்த யாதனு சரீரம் விட்டு,—தீதிலா வனுவாயோனிசேர்ந்திடும் - குற்றமற்ற சூக்கும தேகியாய்ப் பூலோகத்திற் பூதபரிணாம சமுத்பூத தூல தேகத்தில் வந்து பொருந்தும்.

இப்படியன்றி, யாதனு சரீரமாக வென்கின்ற பாடங்கொள்ளாமல், யாதனு சரீரமாகி யென்று பாடங் கொண்டாற் பொருளிசையா தெனபதறிக. புரியஷ்ட தேகந்தானே யாதனு சரீரமாக வெனபதற்கு, சுத்த மாயையில் அசுத்த மாயை தோன்று மெனனுஞ் சைவ பவுராணிக மதானுசாரியாயிருக்கு மாசாரியர் கருத்துக்கு யாதனு சரீரமாய்ப் பரிணமிக்க வென்று பொருள் கொள்க. சுத்த சைவ சித்தாந்தியாகிய வாசாரியர் கருத்துக்கு யாதனு சரீரத்தைப் பொருந்த வென்றுபொருள் கொள்க.

சிவஞானயோகியருளா வருமாறு.

—o—

இனி, அன்னலருத்துமவ்வின்பத்துன்பங்களை உயிருந் துமுறைமை எவ்வாறெனபார்க்கு; இன்பத்துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவதுபோவதாமாறு கூறுகின்றார்.

இத்தூலவுடம்பு கழிந்தவழித் தானுமுடன்கழிதலின்றி, நிலைபெற்றுள்ளதாகிய சூக்குமவுடம்பினையும், அவ்வினைப்பயு

ங்களை அனுபவித்தற்குரிய வெவ்வேறுடம்புகளுளவாதலான், உயிர்களவ்வுடம்போடு நாதனாணை செலுத்தச் சென்று துறக்கநிரயத் தின்பத்துன்பங்களை நுகர்ந்து, பின்பு அவ்வினைச் சேடமனுபவித்தற்பொருட்டுச் சூக்குமவுடம்போடு நிலத்திற் சென்று கருப்பாசயத்தைத் தலைப்படுமென்பதாம்.

ஆகியென்பது காரியகாரணப் பொருள்பற்றி வருஞ் செயவெனெச்சத்திரிபு

பொன்விலங்குபோறலின் துறக்கவுடம்பையும் யாதனா சரீரமென்றார்·

நிலவுலகத்துக்கு வரும்போது அணுவாயோனி சேர்ந்திடு மெனவே, துறக்கநிரயங்களிற் செல்லும்போதும் யாதனாசரீரத்தைப்பற்றியே சொல்லுமென்பது பெற்றாம்.

இங்ஙனம் பூதனாசரீரம் போனவழி யாதனாசரீரத்தைப் பற்றுதற்கும், யாதனாசரீரம் போனவழிப் பூதனாசரீரத்தைப் பற்றுதற்கும், காலமிடையீடில்லைபோலுமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யுளெழுந்ததென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

பரிபூரணமாயிருக்கிற வான்மாவுக்கு ஒருவன் சுகதுக்கங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைப் போக்கிறானென்றதென்னென்ற பட்டாசாரியனை நோக்கி மேலருளிச்செய்கிறார்

பூதனா சரீரம்போனால் - ஆன்மாவுக்கு இந்தப் பூமியிலுள்ள புசிப்புத் தொலைந்து பூதங்களினுடைய காரியமாய்வருகிற தேகம்போனால்,—புரியட்ட தேகந்தானே யாதனா சரீமாகி-சூக்குமசரீரந் தானே அனுபவிக்கைக்-கொருதேகமாகி,—இன்பத்

துன்பங்களெல்லா நாதனு ராணையுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்து-சுகதுக்கங்களெல்லாம் பரமேசுரனுடைய வாக்கினை செலுத்த நரகத்திலுஞ் சொர்க்கத்திலு மனுபவித்து,—தீதிலா வனுவா யோனிசோந்திடுஞ் சீவனெல்லாம்-அங்குள்ளது தொலைந்தால் மீளவுங் கன்மசேஷம் புசிக்கத்தக்கதாகக் குற்றமற்ற சூக்ஷ்மரூபியாய் பின்பு கன்மங்களுக் கிடான யோனி † வேரங்களிலே ஆன்மாக்களெல்லாம் வந்து பதியாநிற்கும்.

† வேரம் - சரீரம்.

புரியட்ட ரூபந்தானே யாதனு சரீரமாகின்றது இப்படி கன்மத்துக்கு கிடாகச் சுற்றிக்கொண்டு வருமென்றதற்குப் பிரமாணம் தத்துவவிளக்கம் "பற்றியசத்தப் பரிசமுருவ மிரதகந்த, மற்றமனம்புத்தி யாங்காரமென நிவை வலவினையாற், சுற்றியமைந்த புரியட்டகமென்று சொல்லுவர்வான, பெற்றியமைந்த பிரமபுரந்தொழப் பெற்றவரோ." என்றும், சிவஞானபோதம். உ-சூ, அ-வெ. "கண்ட நனவை கனவுணர்விற் றுனமறந்து, விண்படா தத்தூடு வினையினாற் — கண்செவிகெட், டுளதே தோற்ற முளமனுவாய்ச சென்றுமனந், தள்ள விழுங் கருவிற் றுன" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற சொல்லியது, ஆன்மா தூலதேகத்தை விட்டுச் சூக்ஷ்மதேகத்தோடும் போய்ச் சொர்க்க நரகங்களிலுள்ள விஷயதுன்பங்களையு மனுபவித்து; மீளவுங் கன்மத்துக் கிடாக வொரு சரீரத்தை யெடுக்கும் என்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பூதவுசரீரம்போனல் - இத்தூலவுடம்பு கழிந்தவழி,—புரியட்டரூபந்தானே - தானுமுடன கழிதலின்றி நிலைபெற்று

ளதாகிய சூக்குமஉடம்பினின்றும்,—யாதனுசரீரமாகி - அவ்வி
னைப்பயன்களை யனுபவித்தற்குரிய வெவவேறுடம்புகளுளவாத
லான்,—சீவனெல்லாம் - உயிர்களெல்லாம்,—நாதனுராணையுய்
கக - அவ்வுடம்போடு நாதனுராணை செலுததசசெனறு,—சுவ
ர்க்கநரகொடு மினபதுனபங்களெலலாம் துய்தது-தறகக நி
ரையத தினபத்துனபங்களை நுகாநது,—திதிலாவணுவாய்-பி
னபவவினைச்சேட மனுபவித்தறபொருட்டு குற்றமிலலாத சூ
க்குமவுடம்போடு நிலததிறசெனறு,—யோநிசேர்நதிடும்-கருப்
பாசயத்தைத் தலைப்படும.

மறைஞானதேசிகர்உரை

இந்த வானமா தனமாதனமத்துக் கிடாக
சனிக்கு முறைமை யுணர்த்துகிறார்.

உடல்விடா யோனிபறறி யுதிப்பினு முதிக்கு
மொன்றிற, படர்வுறு துறும்பாவத்தாற பாடாணம்
போறகிடந்து, கடனதாங காலஞ்சென்றுற் கடுநர கத
னில்வீழ்நதங, கிடருறு முருவாயகன்மத் தளவினி லெ
டுககுமன்றே. (கஎ)

(இ-ள.) உடல்விடா யோனி பற்றி யுதிப்பினு முதிககும் — இநதப் பூதத்தா லுண்டாகிய துலவுடலை விட்டு, சாணளப்பான புழுப்போல வந்த வான்மா வககணமே வேறொருடலைக் கனமத்துக் கிடாகப் பூமியிற் பற்றினுலும் பற்றும். அன்றிக் கனமபரிபாகமில்லாவிடத்து

ஒன்றிற் படர் — சூக்குமதேகத்தட னொருவினையுமுறுமற்

வுறு துறும்பாவ — பாவமிகுதியால் வேறொரு யோனியையும்

த்தாற் பாடா சென்று பொருந்தாம லதிகப்பட்டுப் பந்
ணம் போற்கிட டாணம்போலச் சிறிதுகாலங் கிடந்து,
ந்து

கடனதாங்கா இப்படிக் கிடந் தந்தக்காலந் தொலைந்த
லஞ்செனஞற் க வாறே பாவபலம் பாகம்வந்தால், அக்கண
டோ கதனில்வீழ் த்தினிற்றுனே கொடிய நரகத்தில் வீழ்ந் த
ந்தங் கிடருறும் திலுள்ள துயரத்தைத் துய்க்கும்.

உருவங் கனம ஆகலாற் பழம்புடைவையைப் போட்டு
த் தளவினி லெடு நவமான வத்திரத்தை யெடுக்குமாறுபோல;
க்குமனறே. மீளவுங் கன்மத்துக் கீடாகப் பூதபரிணாம
தேகத்தை யெடாநிற்கும். எ-று.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்-பல்விருக மா கிப் பறவையாய்ப் பாம்பாகிக்-கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்-வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் - செ லாஅநின்ற வித் தாவர சங்கமத்து-ளெல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தே னெம்பெருமான" எனவறிக. திருவாசகம் சிவபுரா ணம்.

உம்மை எண்.

இதற்குச் சிவதன்மோத்தரம் சுப்ரபேதமுங்காண்க.(கள)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

---o---

மேலிந்தவுமது.

உடல்விடா யோகிபற்றி யுதிக்கினும் உதிக்கும் - இந்த ஸ்தூலதேகம் விட்டவுடனே கருவிற்பதித்து பிறக்கினும் பிறக் கும்;— ஒன்றிற்படர்வுறு துறும்பாவத்தால் - பூமியில் ஜனிக்

கவும் ஸ்வர்க்கநரகத்திற் செல்லவுமொண்ணாத பாபமானதுபக்குவமாயின்,—பாடாணம்போற் கிடந்துகடனதாங் காலஞ்சென்றாற் கடூர கதினில்வீழ்ந்தங் கிடருறும் - புரியஷ்டகரூபியாய் பாஷாணம்போல ஸ்பரிசவேதனையே யொழிந்து ஒருணர்வுமில்லாமல்கிடந் திருக்கவேண்டுங்காலங் கிடந்து இறுதியில் கொடியநரகத்தில் வீழ்ந்து துக்கத்தை யனுபவிக்கும். துக்கானுபவகாலந் துலைந்தளவிலே,— உருவங்கனமதகளவினிலெடுக்குமன்றே - பக்குவமானவினைக் கிடானதேகத்தையெடுக்கும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சூக்கும தேகத்தோடுங் கூடிய வுடல்விட் டுடனுட னெடுக்கு மென்றும், தூல சரீரத்துக் கேற்ற கன்மம் பரிபக்குவ மில்லாதிருந்தாற் சூக்கும சரீரத்தொடுங் கூடி யறிவின்றி யாகாசத்தைப்பற்றி யநந்தரானமாவா யிருந்து கன்ம பரிபாகத்திற் காலாந்தரத்தி லுடலுறு மென்று முரைக்கின்றார்.

வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்வவ்வினைகளது வன்மைமென்மைகட்கேற்பப் பூதனுசரீரம் போயவாறே யாதனுசரீரத்தையெடாது, மற்றுமோர் பூதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு. யாதனுசரீரம் போயவாறே பூதனுசரீரமெடாது, மற்றுமோர் யாதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு. இவையெல்லாம் இடைவிடாது நிகழ்தலுமுண்டு; இடைவிட்டுநிகழ்தலுமுண்டென்பதாம்.

உம்மை எதிரது தழீஇயது.

பாவப்பயன் கூறவே, இனம்பற்றிப் புண்ணியப்பயனுமவ் வாறுதல் பெறப்படும்.

அற்றேல் இறந்தவுயிர் தானே மீளப் பிறக்குமெனின்? உடம்பு முதலியனவு மிறந்ததைத்தானே மீளத்தோனறுமெனல் வேண்டும்; அஃதின்மையின, அதுவுமில்லையெனக் கிரீடாப்பிரமவாதி முதலியோர கூறுங் கூற்றை யாசங்கித்து உவமை முகத்தாற் பரிகரித்தற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி தூலதேகத்தை விட்டுச் சூக்கும் தேகத்தோடும் போய்ச் சொர்க்கநரகங்களி லுள்ள பயனகளை யநுபவித்துத் தொலைத்தால், மீளவு மொருதேகத்தை யெடுக்குமதொழிந்து; இந்தத் தேகம் விட்டவுடனே வேறே யொருதேகத்தை யெடுக்கிறது முண்டோவென்ற மாணக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

உடல்விடா யோனிபற்றி யுதிப்பினு முதிக்கும்-இந்தத்தேகம் விட்டவுடனே சொர்க்க நரகங்களிற் போகாமல் கன்மத்துக் கீடாக மீண்டு மொருயோனியிலே வந்து சனிக்கிலுஞ் சனிக்கும்.அதுவன்றியும்,—ஒன்றிற் படர்வுறு துறும்பாவத்தாற் பாடாணம் போற்கிடந்து - ஒருயோனியிலுஞ் சென்று பொருந்தாமல் மிகுத்த பாவத்தினாலே கல்லுப்போலே கிடந்து,—கடைதாங் காலஞ்சென்றால்-இந்தப் பாவத்துக்கு விதிக்கப்பட்ட

காலங்களெல்லாம் அநுபவித்துத் தொலைந்தால்,—கடுநரகத்தில்வீழ்ந்து - கொடிய நரகங்களிலே விழுந்து,—அங்கிடருறும்- அதிலேயிருந்து துயரத்தை யநுபவியாநிற்கும்.—உருவங்கன்மத் தளவினி லெடுக்குமன்றே - அப்படி அநுபவிக்கிற கன்மந் தொலைந்தவாறே மீண்டுங் கன்மத்துக் கிடான தொருதேகத்தை யெடுத்துக்கொள்ளாநிற்கும்.

இதனாற் சொல்லியது, ஆன்மா தூலதேகத்தை விட்டவுடனே யோனியிலே சென்று பதிந்து ஒருதேகத்தை யெடுக்கினு மெடுக்குமென்றும், ஒருயோனியிலே சென்று பதியாமல் கல்லுப்போலே எண்ணிறந்த காலங் கிடந்து அது தொலைந்தால் கொடிய நரகத்திலே விழுந்து துயரத்தை யநுபவிக்குமென்றும், அது தொலைந்தால் கன்மத்துக் கிடாகத் துயரத்தைப் பொருந்தின தொரு தேகத்தை யெடுக்குமென்னு முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

கன்மத்தளவினில் - அவ்வவ்வினைகளது வன்மைமென்மை கட்கேற்ப,—உருவமெடுக்குமன்றே - பூதனுசரீரம் போயவாறே யாதனுசரீரத்தை யெடாது மற்றுமோர் பூதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு. யாதனுசரீரம் போயவாறே பூதனுசரீரமெடாது மற்றுமோர் யாதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு.—உடல்விடா தியோனிபற்றி - இவ்வுடம்பினை விட்டு மற்றொருடம்புக் சேதுவாகிய மற்றொருயோனியிற்றங்கி,—உதிப்பினுமுதிக்கும்-உதித்தல் இடைவிடாது நிகழ்தலுமுண்டு,—ஒன்றிற்படருறுது-ஒருயோனியிற்றங்காது,— உறும்பாவத்தா

ல்-பொருந்தியபாவத்தால்,—பாடாணம்போற்கிடந்து-பாடா
ணம்போற் சிறிதுகாலந்தங்கி,— கடனதாங்காலஞ்சென்றும் -
அக்காலஞ்செல்லுங்கால்,—கடுநரகதனில்வீழ்ந்து - கொடியநர
கத்தினகண்வீழ்ந்து,— அங்கிடருறும் - அவவிடத் துன்புறுத
லாகிய இடைவிடடு நிகழ்தலுமுணடு.

மறைஞானதேசிகர் உரை.

அசசரீரயக ளெடுக்குமிடத துதாரணமிட் டுணர்த்துகிருர்.

பன்னக மண்டசங்கள பரகாயந் தன்னிறபாய
வோர், துன்னுதோன முட்டையாககை துறந்துசெல்
வதுவேபோல, வுன்னிய வுயிர்கடேலை வுடல்விட்டு வா
னினூடு, மன்னிடு நனவுமாயிக் கனவினை மருவுமா
போல். (௩௮)

(இ-ள்.) பன்னக மண்டசங் கள பரகாயந் தன்னிற்பாய்வோா துன்னு தோன் முட்டை யாக்கை துறந்து செல் வதுவே போல	பஞ்சபூத பரிணாம சரீரத்தை விட்டுசூ க்குமதேகத்தோடே போகிற தெப்படியெ னனில்? பாம்பானது தோலை யுரித்துப்போ ட்டும் அண்டசங்கண்முட்டையைவிட்டுப்புற ப்படுவித்தும் பரகாயப் பிரவேசம் பண்ணு வோர்க ளந்தக கூட்டைவிட்டு வேறொரு ச ரீரத்திற் பிரவேசிக்கு மாறுபோலவும் போ கிறத்துக் குவமித்தது.
உன்னிய வுயிர்கடேலை வுடல்விட்டு வானினூடு மனனிடு நனவு	ஆனமா வொனறைவிட் டொன்றைப்பற் றுமிடத் தக்கவுறிவுடனே போமோ மயங் கிப்போமோ வென்னில்? தூலவுடலாகிய பூ தபரிணாம வுடலைவிட்டுப் பூதசாரமான சூ

மாறிக் கனவினை சூக்குமவுடலைப் பொருந்திப் போகாநிற்பர்கள், மருவுமாபோல்.

அப்போது சாக்கிராவஸ்தையை சற்றுந் தெரியாமற் கனவைப் பொருந்திநிற்கு முறைமைபோல். எ-று.

இதற்குக் காரணுகமம். (௩௮)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேல் ஆன்மா ஸ்தூலதேகத்தைவிட்டு சூக்குமதேகத்துடனே தேகாந்தரத்தை யடையும்படி யுணர்த்துதல்.

பன்னகமண்டசங்கள் பரகாயந்தனிற்பாய்வோர் தனதான முட்டையாகத்தைத்துறந்து செல்வதுவேபோல-ஆன்மா ஸ்தூலதேகத்தைவிட்டு சூக்குமதேகியாய்ப்போமாறு பாம்புதோலுரித்துப்போட்டுப் போறாற்போலவும் பட்சியானது முட்டையினின்றும்புறப்பட்டுப் போறாற்போலவும் யோகசித்தர்க்கள் தங்கள்தேகத்தைவிட்டு அந்நியதேகத்திற் செல்லுமாபோலும்,—தன்னியவுயிர்கள் தூலவுடல்விட்டு வானினூடு மனனிடு கனவுமாறிக் கனவினை மருவுமாபோல் - தேகங்களிலே பொருந்தியிருக்கிற ஆன்மாக்களானவைகள் ஸ்தூலதேகத்தை விட்டு சூக்குமதேகத்தோடே ஆகாசத்தே பொருந்தும்; சாக்கிராவஸ்தையொழிந்து ஸ்வப்நாவஸ்தையிலே வந்தபோது ஸ்தூலதேகானுபவமின்றி சூக்கும தேகானுபவமேயாய் சாக்கிராவஸ்தையில் நினைவில்லாததுபோல வென்றிதன்பொருள

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

தூலதேகம்விட்டுச் சூக்குமதேகத்தோடு போய்த் அன்னியதேகாந்தரத்தைப் பொருந்துதற் குவமையுரைக்கின்றார்.

பன்னகம் - பாம்பு,—அண்டசங்கள் - பக்ஷிகள்,—பரகாயந்தன்னிற் பாய்வோர் - வேறொருவர் சரீரத்திற் பிரவேசிக்கும் யோகிகள், இவர்கட்குப் பொருந்திய தோல் முதலிய மூன்றும் நிரனிறையாகக் கொள்க.

மற்றது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

முன்னைத் தோன்முதலியவற்றை விட்டுச் சென்று மற்றொன்றனைப் பற்றும் பாம்புமுதலியனபோல, உயிர்களும் முன்னுடம்புவிட்டு வானெறிச் சென்று மற்றோருடம்பினிலே பெறும் நனவுணர்வு மாறிக் கனவுணர்வைத் தலைப்படுமாறுபோலறிவு வேறுபட்டென்பதாம்.

சென்றென்பது சொல்லெச்சம்.

அறிவுவேறுபட்டென்பது அவாய்நிலையான் வந்தது.

நனவு கனவென்பன ஆகுபெயர்.

பன்னகமுதலிய நான்குந் தான்வேறுதலின்றியுந் தன்னுடலும் இடமும் அசைவும் அறிவும் வேறாதற்கும், முறையே உவமையாயின.

இவைமூன்று செய்யுளானும் இவ்வுயிர் பிறந்திறந்து வருவதுபோவதாமாறு வகுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு 'இருவினையென்னை' என்பது முதல் 'பன்னகமண்டசம்' என்பதீறாகக் கிடந்த முப்பத்துநான்கு செய்யுளும், 'இருவினையின்பத் துன்பத்து' என்னு மேலைச்செய்யுளிற் கூறிய பொருள்களை; அவ்வமதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி வகுத்துக் கூறினவெனக் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

பரப்பிரமந்தானே குடாகாசம்போல நின்று காரியப்படு மென்றும், மாறிப்பிறந்துவருகிறதொரு வானமாய் நிற்குமென்ற மாயாவாதிகளை நோக்கி, அருளிச்செய்கிறார்

பன்னக மண்டசங்கள் பரகாயந் தன்னிற்பாய்வோர் தனுநோல் முட்டை பாசத்தை துறந்துசெல் வதுவேபோல-பாம்பு தோலுரித்துப் போமாறுபோலவும் முட்டையாகிய சம்பந்தப்பட்ட பறவையானது பறந்து போமாறுபோலவும் பரகாயப்பிரவேசம் பண்ணுகிறவர்கள் தேகத்தைவிட்டுப் போகா முறைமைபோலவும், —தன்னிலுயிர் வுயிராக லெவுடல்விட்டு யாவிலூடு மனமிசை-எண்ணிறந்த வானமாகவுளும் தூலதேகத்தைவிட்டுப் போகிற சூக்கும தேகத்துடனே ஆகாயத்தின் கண்ணே பொருந்தி அங்ஙனே போகாநிற்கும் அதெனபோல வெளியில் கனவுமாறிக் கனவினை மருவுமாபோல்- கனவுகாண்கிறவர்கள் நனவை மறந்தாறபோல அறிவு மாறுகிறபடியு மித்தனைத்து

பன்னகமென்றது தூலவுடல்விட்டு சூக்குமத்துடனே போகிறதுக் குவமை அண்டசமென்றது சூக்குமதேகம் விட்டுத் தூலதேகத்துடனே பொருந்துகிறதற் குவமை. பரகாயந்தனிற்பாய்வோ ரென்றது பரகாயப் பிரவேசஞ்செய்து மீளு மாறுபோல, நினைவு மாத்திரத்திலே சூக்கும தேகத்தோடே சென்று தூலதேகத்தைப் பொருந்துகிறபடி. கனவுமாறிக் கனவினை மருவுமாபோல் ஒருடலிற் செய்த காரிய மற்றோருடலிற் றெரியாததுக் குவமை.

இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம். உ-சூ, ௩-வெ.
'அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு, பரகாயம் போய்வரும்

ப்பன்பு—பரவிற, குடாகாச வாகாசக் கூத்தாட்டா மென
ப, கடாகாசமே போயாற று" என்றும், சங்கற்ப நிராகரண
ம் "உடல்விட்ட கடத்துட படுவெளி போலெனில்-விட்டெ
ன பெறவுடற படட்டென படமற்-றிகலற வொருவ னிவ்வகை
யெளிட-யச்சமு முதந்த யடைாதிட வேண்டு - மறிந்தோ முத
ந்தனைடந்தோ ராயிற - பிறிந்தோ ருபாபல பேதத கனறே"
என்றமைறு மாயாவாதி நிராகரணத்திற கண்டுகொளக

இதனறு சொல்லியது, பரப்பிரமங் காணே குடாகாச வா
காசமாதலபோல விளத காரியபபடும் தொழிந்து, ஆன்மாவென
ப வொன்றில்லை யென்ன, பலபிரகாரத்தாலும் ஆன்மா வுண
டென்று முறைமை யறிவித்தது

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

ஞானதநதால் - நெருங்கிய முன்னைத்தோலாகிய வுடலி
னை விட்டிடப் புகுதொருதோலினைப் பற்றியும், — பன்னகம்போ
ல் - தானேவேறுகாக பாம்புபோலவும், — முட்டை-முட்டை
யாகிய முன்னையிடத்தினைவிட்டும், — அண்டசங்கள்போல-தா
மவேறுபாக பறவைகள போலவும், — யாக்கைதுறந்து செ
ல்வது - பரகாயமாகிய முன்னையசசினைவிட்டுச் சென்றும், — ப
ரகாயநதன்னிற பாய்வோர்போல - தாமவேறுகாக பரகாய
நதன்னிற பாய்வோர்போலவும், — உலவிட உயிர்கள - கருதியவு
யிர்கள், — தூலவுடல்விட்டு வானிறுமே - தூலஉடலாகிய முன
னையுடம்புவிட்டு வானேறிச்சென்றும், — மன்னிடும் - மற்றொ
ருடம்பினிலபெறும், — கனவுமாறிக் கனவினைமருவுமாபோல் -
கனவுணாவுமாறிக் கனவுணாவைத் தலைப்படுமாறுபோ லறி
வுவேறுபட டென்பதாம்.

இவைமூன்று செய்யுளானு மிவ்வுயிர்பிறந்திறந்து வருவது போவதாமென்று வகுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு 'இருவினை' என்பது முதல 'பனைக் கண்டசம்' என்பதீறாகக்கிடந்த - ௩௭ - செய்யுளும், 'இருவினையின்பதனை ...த்து' என்னு மேற்செய்யுளிற் கூறியபொருள்களை யவ்வம் பெற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி வகுத்துக்கூறி ரவெனக்கொள்க

மறைஞானதேசிகர் உரை.

இயனங் கனமவிருத்தியை யுணர்த்தி யகன்
மயிலசகண முனாத நகிரா

தன்மமோ டதன்மமாகித் தானிரு பயனுந்தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக்காணா
முன்னமே யான்மாவினோடு மும்மலந் தொடர்ந்ததாகிக்
கன்மமு மூலமாகட்டிக காமிய மலமாய்நிற்கும். (௩௧)

(இ - ள்) தன்மமோடதன்மமாகி - ஆன்மாக்கள் சங்கற்பத்தோடு மாசசித்துச் செய்யப்படாநின்ற கன்மங்கள் புண்ணியகன்மமென்றும் பாவகன்மமென்று மிருவிதமாய்,

தானிரு பயனுந்தந்து - அவ்விரண்டினது பிரயோசனங்களையு முண்டாக்கி,

நன்மை தீமையினு மின்பத் துன்பினு நாடிக்காணா - பேறிழவாகிய நன்மை தீமையினும், இவை யிடமாகவந்த தாரதா மனுபவிக்கப்பட்ட சுகதுக்கங்களினும், பாவபுண்ணியமுண்டென் னறிமமைக்கண்ணே குறித்த தறியப்படும்.

முன்னமே யான்மாவினோடு - அநாதியே யான்மாக்களுக்குண்டாகிய மலத்திரயங்களிற் றொன்றாகி,

னை மும்மலத்தொ
ன்றதாகி

கன்மமும் மூல
ங்காட்டிக் காமி
ய மலமாய்நின்று
ம.

மனோவாக்குக் காயங்களா லியற்றப்படுகையாற் கன்மமென்ன பெயர்பெற்றிருக்கிற பலங்களைப் புசித்துத் தொலைக்குமளவுந் தான் கெடாமற் சரீரமெடுத்தற்குக் காரணமாயநாதியாய்க் காமியமென்னும் பெயரைப்பெற்றுக் காத்தாவினுடைய இச்சையாற் புசிக்கப்படாநிற்கும் எ-று.

ஒடு - உடனிகழ்ச்சி.

ஏகாரந் தேற்றம்

கன்மசம்பந்த மாதலாற் காமியமென்றார்

இதற்குக் காரணந்தானே சுவாயம்புவசத்து மறிக (௫௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இவ்வாறு கருமானுகுணமாக ஈஸ்வரனே தேகாதிகளையுண்டாக்கி ஸ்வர்க்கநரகங்களைப் புசிப்பிப்பனென்பதும், ஆன்மா ஸ்தூலதேகத்தைவிட்டுப் போமுறைமையும், காயத்திற்பதியுமுறைமையும் உரைத்து, மேல்சிஷ்னுக்குக் கருமத்தினுடைய லக்ஷணமிரண்டு விருத்தத்தினாலே கூறுகின்றது.

தன்மமோடதன்மமாகி - கர்மமானது சத்தியமாகிய ஆன்மஞானமும் அசத்தியமாகிய மாயாகாரியமும் கூடினவிடத்திலே உண்டானதாகையால், புண்ணியபாபஸ்வரூபமாகி; பிரளயகாலத்திலே ¶ சமஸ்காரா ‡வஸ்தையாய் மாயையிலேயிருந்து சிருஷ்டிகாலத்திலே ஆன்மாக்களுக்கு தநுவாதியுண்டாவதற்கு உபயோகமாவதாம்.

¶ சமஸ்காரம் - மறைந்திருத்தல்.

‡ அவஸ்தை - தசை.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌾𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 — [illegible]

இநதகர்மமெனபது ஒனறுவேண்டா' ரீஸ்வரப் † பிரசா தத்தினலேதான, §பராகிருதபுத்திதர்மபோவாதியிருலேதான' சுகதுக்கபோக முணடாமெனபவனா பூர்வபக்ஷம்டண்ணி சித தாநதங்கூறுவாம். போக கர்த்ருத்துவமானது எல்லார்க்கும சரியாயிருக்கையிலே சிலர் ஸ்வர்ககாநுபவிகளாகவும், சிலர் நர கயாதநா நுபவிகளாகவும உண்டாகையிருலே, இதற்கு எது வாகவொருகர்மம்வேணடும்.

† பிரசாதம் - அநுக்கிரகம்.

§ ப்ராகிருதம் - ப்ரகிருதியிலுண்டானது.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 [illegible]

இதனறியும், கருஷியாதி பண்ணுகிறபேர்களுடைய கருஷி ஞதிககிரியைகள் சமமாயிருக்கையிலும் ஒருததனுக்கு அதிகப லமும் ஒருத்தனுக் கற்பபலமுமாயிருப்பதற்கும் ¶ பூர்வதன க்ரமமே காரணம்.

¶ பூர்வதனம் - முன்னிருக்கிறது.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 — 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌕𑍃𑌷𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 [illegible] 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 𑌇𑌤𑌿 ।

ஈஸ்வரப்ரசாதரமே காரணமென்னில்? ஈஸ்வரனுக்கு ¶வைஷம்ய நைர்க்ருண்யகுண மில்லாதிருக்கையால் ஈஸ்வரனுங் கர்மாநுகுணமாகவே ஸ்வர்க்கநரக சுகதுக்கங்களை புசிப்பிப்பான். பராக்ருத புத்திதருமாதியே காரணமெனனில்? பராக்ருதங்களுக்குப் புசிக்கப்படுவதாய் நிற்பதனறி,†புசிப்பிக்கிறதாதாதல் கூடாது. ப்ரக்ருதிஜந்யமாக புத்திதர்ம ரூபமாயிருக்கிறகாமம், †பாவரூபமாக போக்கியம், கருமரூபமாக போசகமெனனில்? ஒருவஸ்துவிலே போக்கியத்துவமும் போஜகத்துவமும் கூடாது §ஸ்வாத்மநி க்ரியாவிரோதம். அது எந்தசமார்த்தனுக்குந்தாடியாகிலும் தனதோளிலே தானேயிருந்து கூத்தாடப்போகாதது போல,—

¶ வைஷம்ய நைர்க்ருண்யம் - பக்ஷப்பிரதிபக்ஷம.

† பாவரூபம் - கனமரூபம.

§ ஸ்வாத்மநி - தனனிடத்தில்.

தத்ராத்யம் பக்ஷே — ந தாவத் ப்ரக்ருதிர்ஹே-
துர்ஹேதுமத்வேநாயதஃ | யஸ்மாத்ஸா
ஜடத்வேந தஸ்யாஃ ஸ்வாதந்த்ர்யாஸம்பவாத் | ப்ரக்ரு-
தேஃ புண்யாபுண்யவசவர்த்திநோ ஸாக்ஷிகஃ ||
ஸர்வாஸ் ஸ்வர்கநரகப்ராப்தயோ ஹேதவஸ்ஸ்யுர்யதி ப்ரக்ரு-
திஸ்ஸ்யாத் | தத்வஸ்யாபி ஹேதுநாம் ப்ரக்ருத்யா ஸ்த-
தாயதஃ || ப்ரக்ருத்யாநேச வியோகஃ ப்ராப்தோ-
ண்டஷண்டஸ்வத்வா | நஸைவஸ்து கேநாபி ஹேதுநா வாஸ்யதஜஸ் || நசைவம் ஸ்வமேவைகேத்ரதேத்த-
த்வஸ்ய நவஷ்யேதிதி .

தானிருபடனுகதகது - பணணினபுரணபபாபங்ளுககு சுகதுககஙகளாகிய பலததைப்பொருததுவதறகு ஹேதுவுமா ய,—

[illegible] மிடடததனை [illegible] செய்யுமிடததுபன பதுணபஙகள புசிக்கும் [illegible] ய் நிற்கும்,—

[illegible]

[illegible] ||

[illegible] - இவவாறு [illegible] துபபாாசசி,—

[illegible] முனனமே யானமாவினறன [illegible] றதாகி-இந்நகரு [illegible] மலததிலெ [illegible],—

மூலமாகாடிக [illegible] வியாபாரமாகிய காரிககாமததுககு [illegible] ல் காரணமலமெனறு பெயராய் [illegible]

[illegible]

[illegible]

[illegible]

காணமிகமலமாய் நிறகு மெனறுமபாடமுணடு [illegible] னபிழையாகவே [illegible],

[illegible]

காணமிகமெனறு உபபததி

ததோக்தம் — விஶ்வஸாரோத்தரே — கர்மவ்யாபார
ஜந்யோ ஹ்யத்ருஷ்டம் ஸூக்ஷ்மஸாவத: | ஜநகம்போகம்
ஹேதுஶ்ச ஸம்ஸாரஜாதி த்ரிதாயநீதி.

செய்தகிரியை நசிக்க சூக்ஷ்மரூபமாக உண்டாகையால் அதிருஷ்டமென்றும், அசுத்தமாயாபோகத்துக்கு ஹேதுவாகையால் மலமென்றும் பெயராய்நிற்கும்.

ஆத்தியாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகமென்னும் தாபத்திரயத்துக்கும் ஏதுவாய்நிற்கும்.

ஆத்தியாத்மிகமாவது ¶ சரீரமென்றும் மானசமென்று மிருவகைத்தாம்.

இதில் சரீரமாவது குன்மம் வாதம் அதிசாரம் ஜ்வரம் சூலை இதுமுதலியன.

மனுஷியராலே மிருகங்களினாலே பிசாசங்களினாலே பசுக்களினாலே பட்சிகளினாலே சோரராலே ராக்ஷசராலே வருந்துக்கம்.

மானசமாவது சோகம் § அசூயை அவமானம் † ஈரிஷை மாச்சரியம் இவைகளாலுண்டான துக்கம்.

ஆதிபௌதிகமாவது குளிர் உஷ்ணம் காற்று மழை மின் இடி இத்தியாதிகளினாலே வரும் துக்கம்.

ஆதிதைவிகமாவது கர்ப்பம் ஜனனம் மரணம் நரை திரை அஞ்ஞானம் நரகம் இவைகளினால் வரும் துக்கம்.

¶ சரீரம் - சரீரத்திலுண்டானது.

§ அசூயை - குணத்திலேகுற்றங்கூறல்.

† ஈரிஷை - பொறாமை

ததோக்தம் கிரணே — ஆத்யாத்மிகமாதிபௌதிக
மாதிதைவிகமேவ ச | த்ரிவிதம் து:கஸம்ப்ராப்திரிதே

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கன்ம சுவரூபங்காண்பிக்கின்றார்.

தன்மமோடதன்மமாகி-பாவபுண்ணியமென் றிருவிதமாய், திருமபச் சனகம் தாரகம் போக்கியமென்று திரிவிதமாய், திரும்பத் திருஷ்டபோக்கியம் அதிருஷ்டபோக்கியம அநியத போககியமென்று மூவிதமாய், திருமபச் சஞ்சிதம் பிராரதத்ம் ஆகாமியமென்று மூவிதமாய், பிலனுமனந்தவித மா யிருக்கு

ம,—கன்மம் - கன்மமானது,—தானிருபயனுந்தந்து - தான்றா னே முதற்காரணமாயும், நிமித்த காரணனாகிய சிவனுக்குத் துணைக்காரணமாகிய நிமித்த கரணமுமாய், சுகதுக்கங்களையுண்டாக்கித் தானபிரத்தியக்ஷமில்லாத பொருளாகையால்,—நன்மை தீமையினு மின்பத்துன்பினும் நாடிக்காண-பேறிழவு சுகதுக்கமென்கின்ற காரியாறு மானத்தா லநுமித்தறிய,—முன்னமே யானமாயின்றன மும்மலத்தொன்றாகி - அநாதியே அணவம மாயையம கான்மியமென்கின்ற திரிமலத்தொன்றாய்,—மூலங்காட்டி - தானு மலைகளைப்போ லநாதியெனப்பகுத்த தோற்றுவித்து,—கான்மிய மலமாய் நிற்கும.

கன்மமென்கின்ற மலம காண்மிய மலம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

இத்துணையுங் கூறியவாற்றாற் போகத்த கன்மமெனப்படுவது, சஞ்சிதமாற செய்யப்படுவினை அறமபாவமென்றிருவகைத்தாய், இருவகைக்குமுரியபயன் றருதலாற் செயப்படுபொருளாகியக்கன்மத்துக்கு முதற்காரணமுண்டென்பது காட்டிக் கான்மியமலமெனப்பட்டு, பத்தமுற்றுத்தலொப்புமையான மும்மலத்துளொன்றென் உடன்வைத்தெண்ணப்பட்டு; காரணவேதுவானுங் காரியவேதுவானும அனுமித்தறியுமாறு நிற்குமெனபதாம்.

மூலகன்மமு காரியமாய்ப் பரிணமித்தன்றிப் பயன்றராமையின் ஏனையபோல வேறுவைத் தெண்ணப்படாதாயிற்று.

உம்மை சிறப்பு.

கான்மியம் காமியமென மரீஇயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சொல்லுகிற வான்மா கன்மத்தாலேயாக மாறிப்பிறந்து வருமென்று சொல்ல, அந்தக் கன்மமுண்டென்றுனக்கே காணப்பட்டதென்ற உலகாயுதனை நோக்கி யருளிச்செய்கிறார்.

தன்மமோ டதன்மமாகி - சநநங்கள் தோறு மார்ச்சித்தவாக்கிய இதாகிதங்களாகி,—தானிரு பயனுகர்ந்து - முற்சநநத்திற் செய்த இதாகிதங்களை தான இந்த சநநத்துக்குச் சுகதுக்கங்களையு முண்டாக்குவதாய், மீளவு மிந்தச் சுகதுக்கங்களைப் புசிக்கிறவிடத்திலே,— நன்மைதீமையிற் பின்பற்று வாசனாதிகாரம்-பிரியாப் பிரியங்களிற் அகத்திலுண்டாகிய சுகதுக்கங்களாலும் இந்த முறைமையிலே கன்மமென்ப தொன்றுண்டென்று ஆருயிர் தறியத்தக்கவர்களுக்கு அறியப்படுவதுமாய்,—முன்னமே ஆன்மாவினதான மும்மலத் தொன்றாகி - அநாதியே யான்மாவுக் குண்டாகிய மலத்திரயங்களிலே யொன்றாய்,— கன்மமு மூலங்காட்டிக் காமிய மலமாய்நிற்கும் - ஆணவமலம்போல் அந்தக் கன்மமலமும் அநாதியென்னும் படியுந் தோற்றுவித்து காமியமலமென்று பேரையு முடைத்தாயிருக்கும்.

இதனாற் சொல்லியது, ஆன்மாவுக் கநாதியே பொருந்தி நிற்கத்தக்க விதாகிதங்களாயும், அது புசிக்கிறவிடத்திலே மீளப் பிரியாப்பிரியங்களாயும் வருகையினால் கன்மமென்ப தொன்றுண்டென்றும், ஆணவம்போ லநாதியென்றும், ஆணவமாயை காமியமென்று சொல்லப்பட்ட மூன்று மலங்களிலே யொன்றாய் நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

கன்மமும் - இதுதுணையுங்கூறியவாற்றாற் போந்த கன்மமெனப்படுவது,—முன்னமே யான்மாவினான் - முற்பிறவியிற் சத்தசத்தாற் செய்யப்படுதலின்,—தன்மமோ டதன்மமாகி- அறம்பாவமென்னு மிருவகைத்தாய்,— தானிருபயனுநல்கி-இருவகைக்கு முரியபயன் றருதலான்;-மூலங்காட்டிக் காமியமலமாய் - செயப்படுபொருளாகிய தனக்கு முதற்காரணமுண்டென்பது காட்டிக் காமிய மலமெனப்பட்டு,—மும்மலத்தொன்றதாகி-பந்தமுறுத்த லொப்புமையான மும்மலத்து ளொன்றென வுடன்வைத்தெண்ணப்பட்டு,— நன்மைதீமையினும் இன்பத்துன்பினும் - நன்மைதீமையாகிய காரணத்தானும் இன்பத்துன்பமாகிய காரியவேதுவானும்,— நாடிக்காணிற்கும் - அனுமித்தறியுமாறு நிற்குமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

அநாதியாகிய கன்மஞ் சங்காரகாலத்தின் மாயையை யடைந்திருந்து, சிருட்டிகாலத்திற் புத்தியை யடைந்து, காரியப்படு முறைமை யுணர்த்துகின்றார்.

இருவினை யநாதியாதி யியற்றலா னுகர்வாலந்
தம், வருமலஞ் சார்ந்துமாயா வுருவுகண் மருவியார்
த்துத், தருசெயன் முறைமையாலே தான்பல பேதங்
காட்டி, யருவதாய் நின்றரன்ற னாணையி னமர்ந்துசெ
ல்லும். (௪0)

(இ-ள்.) இருவினையநாதி	இந்த விரண்டுவினையு மாணவத்தைப்போல வநாதியென்று சொல்லப்படும்
ஆதியியற்றலால்	ஆன்மாக்களுடைய வியாபாரத்தா லுண்டாகையா லாதியென்று சொல்லப்படும்
நுகர்வாலந்தம் வரும்	ஆன்மாக்க ளநேக கன்மங்களை யாசரித்தார்களே யாயினு மதுவரு பக்குவமாகவே யதனைப் புசித்துத் தொலைக்கையால நாசத்தை யடையும்
மலஞ்சார்ந்து	சங்காரகாலத்தின மாயையைப் பொருந்தியது.

அஃதெங்காரணத்தா லெனில்? யாதாமொருவன விதையைக் காசசிக் கட்டிவைக்குமாறுபோலச் சிவனுஞ் சிருட்டிகாலத்துக் கங்குரோற்பத்தி நிமித்தமாக மாயையிற பாகம்பண்ணிவைப்பது

மாயாவுருவுகளை மருவியார்த்து	சிருட்டிகாலத் தான்மாக்க ளொடுக்கு மாயாதேகத்தைச் சூக்குமமாய்ப் பொருந்தி, திதிகாலத்திற் புத்தியிடமாக நின்றான்மாக்களுக்குச் சீவித்து,
தருசெயன் முறைமையாலே	இப்படிச் சங்காரகாலத் தொடுங்கியுஞ் சிருட்டிகாலத்துந் திதிகாலத்துஞ் சீவித்தும் வருகிற முறைமையினாலே,
தானபல பேதங்காட்டி	ஆன்மாக்கள் போகம் புசிக்கை நிமித்தந் தூலஞ் சூக்கும மதிசூக்குமமென்கை கன்மமூவிதமாகப் பொருந்தி,
அருவதாய் நின்று	சூக்குமமாய்க் காணப்படா திருத்தலா லருபமாய் நின்று,
அரன்றனாணையி னமர்ந்துசெ	அந்தக் கர்த்தாவினுடைய வாக்கிஞைசத்தியைப் பொருந்தி யவரவர்கள் கன்மபலத்

ல்லும் ...க் கீடாகச் சங்காரத்தைப் பொருந்தி நிற்கும் எ-று.

மலமென்பது மாயாமலத்தை யீண்டுத் தலைக்குறைத்த லெனவறிக.

சுரர் நரர் மிருகாதியாகிய சாதிபேதம்.

ஆனைக்கு நாக்குக் குறுகியிருக்கிற விந்திரியபேதம்.

பாம்புக்குக் கட்செவியாயிருத்தலும், கோட்டானுக் கொளியு மிருளாதலும், கூகை விரிவா யிடல்பாயிருக்கவுந் தெரியாதிருத்தலும் விடயபேதம்.

சாதகப்புள் வானத்தி னீரையே யபேட்சித்திருக்கையும், மயிலின மேகோதயத்தாற் பிரியம் வருகையும், கோழி குப்பையைக் கிளறிச் சீவிக்கையும், வண்டினங் குருகுந் தாமரைப்பூவின் ரசத்தாற் சீவிக்கை.

இப்படிச் ஜன்ம வைசித்திரியமுண்டாகையாற் றனு பலபேதங் காட்டி யெனச் சிறப்பித்தார்.

இதற்குக் கிரந்தத்து மிருகேந்திரத்திலும் சிவதர்மோத்தரத்திலும் சித்தாந்தசாராவளியிலு மறிக. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் அநாதியாயுங் கருமத்துக்குக் கந்த முண்டென்பதையுணர்த்துதல்.

இருவினையநாதி - புண்ணியபாப ஸ்வரூபமானகருமம் தொன்றுதொட்டு வருகையினாலே பிரவாகாநாதி,— இயற்றலாதி-மனோவாக்குக்காய வியாபாரங்களினாலே ஜநிக்கையினால் ஆதியாம். ஆதியநாதியிரண்டு மொன்றுக்குச்சொல்லுகிறது விருத்தகருமமென்னில்? ‡ சமுதாயாத்மநா அநாதியும் † பி

ரத்தியேகபரியா வசாநேந ஆதியுமெனகையால் விரோதமி லை,—நுகர்வாலந்தம் வரும்-சுகதுக்கபோகங்களினாலே புண்ணி யபாவங்கள் நசிக்கும்,—மலஞானாந்த - ஆணவமல நாசமாகி ய ரோகாதிகளினாலே வாரிப்பதாய்,—மாயாயுருவுகளை ம ருவியாராத்தத தருசெயல்முறைமையாலே தானபலபேதங்க ளடி - ஆன்மாக்கள் மாயாதேகத்தைப்பொருந்தி யாவென் றென்று அபிமானித்துச்செய்யுந் தொழில்களுடைய முறைமை யினாலே அநேகபேதமாய், அவ்வாறே விசித்திரபலங்களுமா ய்,—அருவதாய் நின்றான்ற னுண்யினமர்ந்து செல்லும்—பிரள யகாலத்திலே அதிருஷ்டமாய மாயையிலே பொருந்திநின்று சிருட்டிகாலத்திலே சிவனுடைய சத்திப்பிரேரணையினாலே அவ் வவ்வான்மாக்களை சேரும் பலயத்தாய நடக்குமென்றின் பொருள்.

‡ சமுதாயாத்மநா - கூட்டமாக

† பிரத்யேகபரியாவசாநேந - தனித்தனிமுடிவதினால்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

கன்மமானது மலமாயைகளைபோலக் கூட்டத்தை நித்திய வ நாதியோ, மாயாகாரியம்போலப் பிரவாகாநித்திய வநாதியோ வென்று வினவ, பிரவாகாநாதியென்று பேசுகின்றார்.

இருவினையநாதி - சமுதாயத்தினாலே முற்கோடி பிற் கோடி காணப்படாத படியினாலே,—கன்மம் அநாதி ஆதி இய ற்றலாய் நுகர்வாலந்தம் வரும - தனித்தனி பண்ணப்படுகிறப டியினாலும், புசிக்கப்பட்டுச் சில நாசமாதலானும், விஞ்ஞான கைவல்லிய மடையவனைக் குறித்தும் முத்தி யடையவனைக்கு

நிதலும் முற்றும் நாசமாதலானும், முற்கோடி பிற்கோடி காணலா னாதியுமாம் அநந்தமுமாம் ஆகலாற் பிரவாகாநாதி,—அநந்தக்கன்மம் மலஞ்சார்ந்து - ஆணவமலத்தோடும் பொருந்தி,—மாயாவுருவுகண் மருவி யார்த்து-மாயாசரீரங்களை யுண்டாக்கி யவைகளோடு பொருந்தியநந்தத் துவாரத்திரு லானமாக்கங்க கட்டி,—கருசெயல் முறைமையாலே - மனவாக்குக் காயங்களா லியற்றப்பட்ட வியாபாரக் கிரமத்தினுலே,—தான பல பேதங் காட்டி - தா னருவாயிருந்தாலுந் தனது காணப்பட்ட மறுதி காரண பேதத்திலேயுந் தனது சுநாதி சரீர பேதத்திலேயுந் தனது வைசித்திரியத்தைக் காவெபித்து,—அருவசாய்நின்று - புத்தியி லதிஷ்ட வாசனையாயிருந்து பலித்துக்குப்போம்போது சடமாதலால் சுவதந்திரிய பிரவிருத்தி இல்லாமையால்,—அரனற னாணையி லமர்ந்து செல்லும் - சிவாஞ்ஞை செலுத்தப் புத்தியோடு நடக்கும்

சிவஞானயோகியருரை வருமாறு.

அவ்வினைதான நாசோற்பத்தி பண்ணப்பட்டுச் சந்தானமாய வருதலாற் காரியப்பிரபஞ்சம்போல் ஆதியந்தமுடைத்தாயும், பிரவாகாநாதியாய், ஏனை யிருமலங்களின காரியங்களோடு கூடி உயிரைப் பந்தித்தத தனது காரியவேறுபாட்டிற் கேற்ப அவ்வுயிர்க்குப் பலவேறுவகைப்பட்ட யோனிகளைத் தோற்றுவித்துச் சூக்குமமாய் நின்று; இறைவனாணையினடக்குமெனபதாம்.

அரன்றனாணையினமர்ந்து செல்லுமென்றது முடிந்தது முடித்தல்.

இவை இரண்டு செய்யுளாலும் அவ்விருவினையின் சொரூபம் இதுவென்பது கூறப்பட்டது

நிரம்பவழகியருரை வருமாறு

—0—

இப்படிச் சொல்லுகிற வான்மாக்கள் கன்மத்தினாலேதான் மாறிப் பிறந்துவருமென்று சொல்ல, அந்தக் கன்மமுண்டென்று எங்கே காணப்பட்டதென்ற உலகாயுதனை நோக்கிப் பரிகாரஞ்செய்கிறார்

இம்மையிலே செய்த கன்மம் இம்மையிலே அனுபவித்து அழிந்துபோகக் கண்டிருக்கச்செய்தே அனேகமுண்டாமென்று சொல்லவேண்டியதில்லையென்ற உலகாயுதனை நோக்கிப் பின்னும் அருளிச்செய்கிறார்

இருவினை யநாதி-இந்தப் புண்ணியபாவங்கள் அநாதியாய் ஆன்மாவுள்ளவன்றே யநாதியேயுள்ளனவாம்,— ஆதியியற்றலால்- இந்தப் புண்ணிய பாவங்களை ஆன்மாக்கள் செய்கையினாலே தோற்றப்பட்டதென்றுஞ் சொல்லலாம். தோற்றின் அழியாதோவெனில்?— நுகர்வால் அந்தமுமாம் - புசிக்குந் தொழிலையிலே முடிவுமுண்டென்று சொல்லப்படும்,—மலஞ்சார்ந்து - மலங்களுக்குக் காரணமாயிருக்கிற ஆணவமலத்தைப் பொருந்தி அதுவுங் காரியப்படும்படி பேதமெனெனில்?— மாயாவுருவுகள் மருவியார்த்து - மாயையின் காரியமான தனுகரண புவனபோகங்களையும் ஆன்மாக்களையுங் கூட்டிப் பிணிப்பதாய், தானொன்றாயிருந்து பலபிரகாரமா யிருக்கிறது எப்படியெனில்?—தருசெயல் முறைமையாலே தானபல பேதங்காட்டி-ஆன்மாக்கள்தோறும் பொருந்திவருகிற முறைமையா

லோகாரென்னுருயிருந்தும் வெகுவிதங்களான முறைமையையுடைத்தாயிருந்து- இருக்கச்செய்தேயும்,—அருவதாய் நின்றனாருளையின் மாத்திரத்திலும்-தனக்கென்ன வொரு சொரூபமுமற்றுத் தத்துவங்களைப் பொருந்தி நின்று பரமேசுரனுடைய ஆக்ஞையைவிட்டு, ஏகதேசமாயப் போகாமல் நின்று காரியப்படும்.

இருவினை யநாதியென்றது, இம்மையிற்செய்த கன்மமிம்மையிலே யநுபவிப்பதென்றிந்த முன்புள்ள தென்றல்லதே யாயினுந் நோக்க, முன்புள்ளதென்றும் இது அநாதியென்றது மென்க் கொள்க

இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் உலோகா - மறு, கஅ-செ. “அநாதிமேன்மை வினைமலமும் மாயைகன்ம மனுசரிவன காதிகளாம் பலநுகர்வெய்ய வறிந்துகன்ம முட்டிச்செயா, வநாதியா முடாக வேதனையுமவை யாயவறிந்த,சாதியாதி யாகைவேறு பலமேய்திருடு மநாதியே” என்னுந்துங் கண்டு கொள்க

இதற்குச் சொல்லியது, கன்மமில்லையென்றவினை நோக்கி இக் கன்மமுண்டென்றும், இப்படியுள்ள கன்மம் புதிதல்ல வநாதியென்றும், ஆணவமலத்தைச் சார்ந்து நிற்குமென்றும், மாயையிலுண்டாகிய தநுகரண புவனபோகங்களையு மானமாகக் கொள்ளுச் சம்பந்தஞ் செய்வித்துக்கொண்டு நிற்குமென்றும், வெகுவிதமான யோனி பேதங்களுமா யருவுமுமாய பரமேசுரனுடைய ஆக்கினையினாலே நின்று காரியப்படுமென்னு முறைமையு மறிவித்தது

‘கன்மமோ’ ‘இருவினை’ என்ற திருவிருத்த மிரண்டும் கன்மமலத்தின் காரணம்.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

இருவினை நுகர்வாலிப்பா லமல - அவ்விருவினைதான கா சோறுபசுதினனைப்பட்டிச சந்தானமாய்வருதலான,—ஆதிய நதமயவரும - காரிய-பிரவஞசமபோல பிடிக முறை—தகாயு ம,—அநாதிமலருகாரணது மாயவுருவுக்கமருவி-பிரவாககாநாதி யாய வினைபிருமலயகளின காரியாகககாரிகூடி,—ராதமுந ருசெயயன முறைமையாமேல-உயிகளாயபபந்திதது தவதுகாரியவே று பாடடித்தீதறப,— பாவபாவ பங்காட—அவ்வுயிககுபய லவேறாவகைப்படட யோனிவேறுநோகாதயம்ந்து,—அருவசா யினறு - சூக்குமருபமாயநினறு,— அவ்வுருவாயிவைமாகது செல்லும-இறையருளாயிவைடயநெறியெனபாம்

இவையிரணடுசெய்யுளானு மிருவினைவியல்வெசான்றுமிறுவெ வைபறு கூறபபட்டது

மறைஞானதேசிகர் உரை.

மேற் பட்டாசாரியனைச்சுமாருமென, கனமத்துக
கிடாக வாசகமாறுமென அனாகதகிறா

சஙகமந தாவரஙக டத்தஙகன மதது்ககிடா
வஙகுறு யோனிமாறு மச்சமா ருதியகெனறி
ளிஙகுமா றுடரியறும புணணியாதி னபவிட்ட
மஙகுவானசுரர்களாயோநராகளாயருநதுவாரே. (௪௧)

(இ-ள்) சங்கம நிற்பன நடப்பனவாதிகளாயுள்ள வெண
க தாவரங் பத்துநானகுநூறாயிர யோனிபேதங்களை
க டத்தங் ல்லா மவ்விடத் தவ்விடத்துத் தோன்றின

கன்மத்துக்கீடா வங்குரு யோனி மாறு மசுமாறு திங்கெனனின

சரீரங்களழியும், அழிந்தாலும் பின்பு தோன்றும்பொழுது மாமோடாமபடியே மனுடா மனுடராமபடியே முனபுபோலேதானே யோனிமாறுமற பிறக்கும தொழிந்து மாறிடபிறவாதென்று நீ சொல்லில்?

இங்குமா று டரியற்றும் புண்ணியத் தினபலி ட்ட மயக்குவான சுராகளாமோ ந ரர்களா யருந்து வாரே.

யாதாமொருவ ரிவ்விட்டத்தாரச்சித்த கன்மபலத்தின் மிகுதியை யநுசசொாக்கத்தது தேவர்களாயப் புசிப்பார்களோ மனுடராயப் புசிப்பார்களோ சொல்லாய் எ-று.

ஒகாரம் விரு

இற்றுக காரஞ்சகரத்தி னொவறிக (சுக)

சிவாகரயோகியருணா வருமாறு.

—o—

மேல் தத்துவாதி நரமிருக பசுபட்சி ஸ்தாவராதிகள் கர்மத்துக்கீடாக அந்தந்த யோனிகளிலே பிறப்பதன்றி, சராதிசாதிகள் கைவல்ய பதமாகிய வைகுண்டத்திலும் மாறுதெனபதையேழுவிருத்தத்திலே நிராகரித்தல்.

சங்கமதாபரங்க டதங்ய கன்மத்துக்கீடா வங்குருவி யோநிமாறு மசுமாறு மிங்கெனனில்-சஞ்சரிக்கப்பட்ட தேவ நர பசு மிருக பட்சியாதிகளும், ஸ்தாவரமாகிய செவிருட்சகுமலதாதிகளும், தாங்கள்தாங்கள் பண்ணின புண்ணியபாபங்களுக்கு கீடாக அந்தந்ததேகங்கள் மாறிப்பிறப்பதன்றி யிவ்விட்டத ஒருவர்க்கமானது ஒருவர்க்கத்தில் மாறிப பிறவாதெனவி

ன்?—இங்கு நானுடரியாரும் புண்ணியஞ் செய்பவிட்ட மக்கு வான சுரர்களாயோ நரர்களாயிருந்து துய்வாரோ-இவ்விடத்து மனுஷ்யர்பலனுறும்பலன்களையத்தார் சேட்டப்பட்ட இன்பமானது அவ்விடத்து ஸ்வர்க்கத்திலுக்கு மேன தேவர்களாய்ப்புசிப்பார்களோ மனுஷ்யராயிருந்தே புசிப்பார்களோ?

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

மேற் சுத்துவவாதி மதத்திலே, சரீரத்துக்க பசு ஈதி தாபராதிகள், கன்மத்துக்கு கீடாக வந்தந்த யோனிகளிலே மாறிப் பிறப்பதன்று மனுஷர் முதலிய சாதிகள் மோக்ஷத்தானமாகிய வைகுண்டத்தினும் மாறுமென்பதை யேமு திருவிருத்தத்தினாலே நிராகரிக்கின்றார்

பௌராணிகம வெளிப்பொருளாசலாச் 'அகலிகை கல்லுதானாள்' என்ற திருவிருத்தமட்டாய்ப் பொருளுரித்துணாந்துகொள்க

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

வினைக்கீடாக அயலவுயி ரயலயோனியின் மாறிப்பிறதலன்றி, அசசுமாறி புறகிருந்தயோனியிற் பிறத்தலில்லையென பாரக்குக் கன்மறுகாசசியாமாறு யாங்ஙனமெனபதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

இப்படிக் கன்மத்துக்கு கீடாக யோனிமாறுது,தாபரங்கள் தாபரமாயுஞ் சங்கமங்கள் சங்கமமாயும் சனிக்குமென்ற பட்டாசாரியனை மறுத் தருளிச்செயகிறார்.

சங்கமந் தாபரங்க டத்தங் கன்மத்துக்கீடா யங்குரு யோனிமாறும் - சரிக்கப்பட்ட யோனிகள் முதலானவை, கன்மத்துக் கீடாகச் சரியாமல் நிற்கிற தாபரங்களாயும், அந்தத் தாபரந்தான் சங்கமமாகியு மாறிப்பிறக்கும் — அச்சுமாறு திலதென்னில் - தெய்வசரீரம் மானுடசரீர மாகாது, மானுடசரீரந் தெய்வசரீர மாகாது, என்று நீ சொல்லில்:— இங்குமானுடரியற்றும் புண்ணியத்தின் பலிட்டம் - இந்தவுலகத்தில் மானுடராலே செய்யப்பட்ட புண்ணியத்தா லுண்டான சுகத்தின் மிகுதியை,— அங்குவான சுரர்களாயோ நரர்களா யருந்துவாரோ - அவ்விடத்துத் தேவலோகத்தி லுண்டாகிய போகத்தைத் தேவர்களாயிருந்து புசிப்பார்களோ? என்னவே மானுட சரீரமாயிருந்து புசியார்கள், தெய்வசரீரமா யிருந்து புசிப்பர்கள்.

இதனாற் சொல்லியது, பட்டாசாரியன் தெய்வயோனி மானுடயோனி யாகாதென்றும், மானுடயோனி தாபரங்க ளாகாதென்றும், அந்தந்த யோனி அந்தந்த யோனியாகவே சனிக்கும் தொழிந்து அச்சுமாறுதென்று சொல்ல, அவனைமறுத்து அச்சுமாறிப் பிறக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தத்தங்கன்மத்துக்கீடா - தத்தமவினைக்கீடாக,—சங்கமந் தாபரங்கள் - சராசரமாகிய அவ்வவ்வுயிர்கள்,—அங்குறுயோனிமாறும் - அவ்வவ்யோனியின் மாறிப்பிறத்தலன்றி,—அச்சுமாறுதிலதென்னில்-அச்சுமாறி மற்றொருயோனியிற் பிறத்தலில்லையென்றிடின்'—இங்குமானுடரியற்றும் - இவ்வுலகத்து மநு,

ஒட்டிற்செய்யும்,—புண்ணியத் தினைப்பட்டவர்-புண்ணியத்தின பயனாகிய வினைப்பிரதிசையை,— அங்குவான சுரர்களாயோ நரர்களாயிருந்துவாரோ - மேலுலகத்தின வாழ்க்கைத்தேவர்களாயனுபவித்தல்லயன்றி நரர்களாயனுபவித்தலில்லை.

மறைஞானதேசிகர் உரை

இதுவுமது

நரர்களாய்த் துய்ப்பனெல்லாம் நரபதி சுரருலோகத்து, சுரர்களாய்த் துய்ப்பனெல்லாஞ் சொன்னவச் சுழியுமாகும், சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத் தாமிங்குத் தோன்றும்போது, நரர்களாய்ப் பிறப்பர் முன்செய் தன்மராய நலனெண்ணிடாமே. (சஉ)

(இ-ள்.) நரர்களாய்த் துய்ப்பனெல்லாம் நரபதி சுரருலோகம் — தேவலோகத்திலுள்ள பிரயோசனங்களை மனிதராகவிருந்து புசிப்பதெல்லாம் இந்த பூலோகமாகவேயாம்.

சுரர்களாய்த் துய்ப்பனென்னும் சொன்னவச் சுழியுமாகும் — மானுடராயிருந்ததைவிட்டுத் தேவர்களாயவர்கள் போகங்களைப் புசிப்பதெல்லாம் நீ சொல்லுகிற வசுக்களெல்லாமிருந்தபோகமாம்.

சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத் தாமிங்குத் தோன்றும்போது — தேவர்களாயிருந்து பிரயோசனங்களைப் புசித்தவராக இவ்விடத்திலே வந்து தோன்றும்பொழுது,

நரர்களாய்ப் பூமியின் கண் மானுடராய்ப் பிறக்கும் பிராப்பார் ஞானமுஞ் செய்திருந்து தேவர்களாய்ப் பிறப்பார்களோ தம்முடைய நல்ல வினைகளால் ஏ-று வினாவிடை

இந்தப்ர காரணத்தால் பாராகத்து வெளிக. (சஉ)

சிவாக்கிரயோகியருரை வருமாறு.

—o—

(நரர்களாய்த் துய்ப்பரென்றும் நல்லோரிடத்தே) ஸ்வர்க்கத்திலேயும் மநுஷ்யர்களாயிருந்து புசிப்பரென்னனில்? தேவலோகம் மநுஷ்யலோகமாம் தேவர்களாய்ப் புசிப்பரென்னில்? நியதியாலென்று சொன்ன அசத்தியவதாம் ஆகையால் தேவலோகத்திலே தேவர்களாய்ப் புசித்து பூமியின்கண்ணே பிறக்குமிடத்து மநுஷ்யராய்ப் பிறப்பரென்றி பூமியின்மேல் தேவர்களாகப் பெருவார்கள் அதுகண்டாரென்னெனில்?

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

கன்மநுகர்ச்சிக்கண் இம்மைமறுமைகளது இயல்பறியவல்லார்க்கு, அசுமாறுதலுண்மை இனிது விளங்குமெனபதாம்.

அற்றேல், நரர்வடிவுமுதலாயின சுரர்வடிவுமுதலியனவாய் வேறுபடும்வழியும், அவ்வவ்வாகாரம் மாறுதலில்லையெனக்

கொள்வார்க்கு அதுபற்றியிழுக்கென்னையென்பாரை நோக்கி, வேறுமெடுத்துக் காட்டுதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பூலோகத்திலே மானுடராயிருந்து பண்ணின புண்ணியம் தெய்வலோகத்திலே தேவர்களாயிருந்து புசிக்கையால், அச்சுமாறுமென்றவனை நோக்கி, அச்சுமாறிப் பிறக்குமென்றருளிச்செய்கிறார்.

நாகர்காந்த துய்ப்பப்பொன்னில் நரபதி சுரருலோகம் — தெய்வலோகத்தி லுள்ள போகங்களை மானுடராயிருந்து புசிப்பரோ வென்று நீ சொல்லில் மானுடரிருக்கிற பூலோகமுந் தெய்வலோகமாம்;— சுரர்காந்த துய்ப்பப்பொன்னில் பொன்னை வசச ழியுமாறே-தெய்வலோகத்தில் மானுடசரீரமாயிருந்து அநுபவிப்பார்கள் தெய்வசரீரமாயிருந்து அநுபவிப்பார்களென்று நீ சொல்லில்? அச்சுமாறுமென்றதுபோய் ஒரச்சு ஒரச்சாக மாறிப்பிறக்குமிப்படி யிருக்கையாலே —நரர்களாய்ப் பண்ணப்பெற்ற நாம்பெறுத தோன்றும்போது-தெய்வலோகத்திலே தேவர்களாயிருந்து அவ்வுள்ள போகங்களைப் புசித்து அவர்கள் பூமியிலே சென்னை வந்து சனிக்கும்போது,— நரர்களாய்ப் பிறப்பார் ஞாலத்தமரராய நண்ணிடாரோ - கண்மத்துக்கீடாக மானுடராய் வந்து சனிப்பார்கள், பூமியிலே தேவர்களாய்வந்து பிறவார்கள்.

இதனாற் சொல்லியது, பூலோகத்திலே மானுடராயிருந்து மிகுந்த புண்ணியங்களைச் செய்தவர்கள் அந்தச்சரீர மொழிந்தால் தெய்வலோகத்திலே தெய்வசரீரமாயிருந்து அங்குள்

ள போகங்களைப் புசித்து, அதுதொலைந்தவாறே மீளவும் பூலோகத்திலே வந்து மானுடசரீரத்தை யெடுக்கையி லச்சுமாறு தென்றவனை நோக்கி யச்சுமாறுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

சுரருலோகநரர்களாய்த் துய்ப்பரென்னின - மேலுலகத்து மானுடவடிவாக வனுபவிப்பரென்னின் — நராபதி - மண்ணுலகேயாம் — சுரர்களாய்த் துய்ப்பரென்னின் - தேவர்களா யனுபவிப்பரென்னின், — சொன்னவச்சுழியுமாகும் - சொல்லிய அச்சுமாறுமுண்டாம் — சுரர்களாய்ப் பலன்களைத் துய்த்து - தேவர்களாய்ப் பலனுகர்ந்து தொலைந்தவழி, — தாமியற்று கன்மந் தோன்றும்போது - தாமிவை புவியுலகிற் புசிக்கும்போது, — நரர்களாய்ப் பிறப்பர் - நரவடிவாய்ப் பிறப்பதன்றி, — அமரராய்த் துய்த்து - தேவராயனுபவித்தபின்னர், — நண்ணிடாரே - பொருந்திடார் என்பது கன்மநுகர்ச்சிக்குரிய முறைமைக ளியல்பு அறியவல்லார்க்கச்சுமாறுதலுண்மை யினிது விளங்குமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

அச்சுமாறியுடலெடுப்பதற்குக் காரணங் கன்ம
மென்றுணர்த்துகின்றது

வண்டுக ளாகிமாறு மயிர்க்குட்டி மற்றோர்சந்
துப், பண்டைய வுருவந்தானே வேட்டுவ னாய்ப்பிறந்

குங், கண்டுகொள் யோனியெல்லாங் கன்மத்தான் மாறுமென்றே, கொண்டன சமயமெல்லா மிச்சொனீ கொண்டதென்றே. (௪௫)

(இ-ள்.) வண்டுகளாகி மாறு மயிர்க்குட்டி	மயிர்க்குட்டிப் புழுப் பழைய வடிவு நீங்காமலேயே விட்டு வண்டுகளா யுருவ மாறுகிறதாகும்,
மற்றோர் சந்தப் பண்ணைய வுருவந் தானே வேட்டுவனாய்ப் பிறக்கும்	வேறேயொரு புழுவை வேட்டுவனானது பெயர்ந்து கூட்டிலடைக்க அதுதானே வேட்டுவனாகவும் பிறக்கும்
கண்டுகொள் யோனியெல்லாங் கன்மத்தான் மாறும்	பிராமணனாய்ப் பிறந்தும் தாய்ப் பிராமணனாய்ப் பிறப்பதற்குக் கன்மத்துக்கீடாக மற்ற யோனிபேதங்களெல்லா மாறி மாறிப்பிறக்குமென்றே யறிவாயாக
என்றே கொண்டன சமயமெல்லா மிச்சொனீ கொண்டதென்றே.	ஆதலால் மற்றச் சமயங்களெல்லாங் கன்மத்துக்கீடாக மாறிப்பிறந்து வருமென்று கொண்டிருக்க நீ மாறிப்பிறவாதென்றதென்னன்றோ எ-று.

ஓகார மிசைநிறை
என - வினா
இதற்குப் பராத்தத்தின்றிக. (௪௬)

சிவாகரயோகியருரை வருமாறு.

வண்டுகளாகிமாறி மயிர்க்குட்டி மற்றோர் சந்தப் பண்ணைய வுருவந்தானே வேட்டுவனாய்ப் பிறக்குங் கண்டுகொள்-ம்

விற்குட்டிப்புழுவானது அந்தச்சரீரம்மாறி வண்டுகளாம். மற்றும் பசுமைப்புழுவானது முன்னிருந்தவுருவந்தானே ஞானியாம் இதைப் பார்த்தியக்ஷமாகப் பார்த்துக்கொள்.—யோனியெல்லாம் கன்மத்தால் மாறுமென்றே கொண்டனசமயமெல்லாமிச்சொல்லிக்கொண்டதெங்கே-கருமத்தால் யோனிகள் மாறிப்பிறக்குமென்று எல்லாச்சமயத்தாருஞ் சொல்ல மாறிப்பிறவாதென் மிந்தச்சொல்லை நீ யாதனையிலே கூறுக்கொண்டாய்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

இம்மையிலும் வண்டுமுதலியன அங்ஙனமாறுதல் கண்கூடாயறியக்கிடந்தலானும், இஃதெல்லாச் சமய நூல்கட்கு மொப்ப முடிந்ததாகலானும், அங்ஙனம்—சிவனவையோடும் உரையளவையோடும் முரணிக்கூறுவார் கூற்றுப் போலியெனப்படாம்.

அற்றாயினும், வண்டுமுதலியனவற்றின் அவயவசசே பிறிதொன்றுமாய்ப் பரிணமிப்பதன்றி, அஃதழிந்து வேறு தோன்றுவதன்றாகலான், அவற்றை யீண்டெடுத்துக் காட்டுதல் அமையாதென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது

நிரம்பவழகியருரை வாருமாறு.

———0———

முன்சொன்ன வுயர்திணையி லுள்ள மானுடயோனி தெய்வயோனியாயும், தெய்வயோனி மானுடயோனியாயும், கன்மத்

தக் கீடாக விப்படி அச்சமாறிப் பிறக்கிறதானறி, அஃறிணையி
லுள்ள புழுக்கள் வண்டுகளாயும் வேட்டுவாளியாயும் அச்சமா
றுமென்று மேலும் மருளிச்செய்கிறார்.

வண்டுகளாகுமாறு மயிர்க்குட்டி - மயிர்க்குட்டிப் புழுவி
ன் பழையவடிவுதானே மாறி வண்டுகளாய்ப் போகிறது
ம் — மற்றோர்சாதிப் பண்டைய வுருவந்தானே வேட்டுவனா
ய்ப்பிறக்கும் - வேறேபொரு புழுவின் பழையவடிவுதானே வே
ட்டுவாளியாகப் பிறவாநிற்கும், — கண்டுகொள் யோனியெல்
லாங் கன்மத்தால் மாயம் - கன்மாநுகூலமாக எண்பத்
துநான்கு நூறாயிரம் யோனிகளும் ஒரு யோனியாக அச்சமா
றிப் பிறக்குமென்று யறியாயாக — என்றே கொண்டனை சமய
மெல்லாம் - இப்படி யச்சமாறிப் பிறக்கும் என்றே எல்லாச்ச
மயங்களும் சொல்லுகின்ற பொருளாயிருக்க, — இச்சொனி
கொண்டனையே - அச்சமாறுமென்று நீ கொண்டிருக்கிற வி
தத்தை எதிலே கண்டு சொல்லுகிறாய்.

இதனைச் சொல்லியது, கன்மத்துக் கீடாக மயிர்க்குட்டி
ப் புழு அச்சமாறி வண்டானதுபோலும், பச்சைப் புழு வச்சமா
றி வேட்டுவாளியானதுபோலும், அச்சமாறிப் பிறக்குமென்றும், அச்
சமாறுமென்ற பட்டாசாரியனை நோக்கி யருளிச்செய்ததொன்
று முறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மயிர்க்குட்டி வண்டுகளாகுமாறும் - இன்மையினும் மயிர்க்கு
ட்டி வண்டுகளாகுமாறும், — மற்றோர்சாதிப்பண்டைய வுருவந்
தானே வேட்டுவனாய்ப்பிறக்கும் - புழுத்தனபழையவடிவமே வேட்

வேறாகவு மச்சுமாறுதல்,—கண்டுகொள்-கண்கூடா யறிபச்சிட த்தலானும்,—சன்மத்தானேபாவிடெல்லா மாறுமென்றே - கன்மத்திறகேற்ப யோனி மாறுதலுமன்றேனவே,—சமயமெல் லாங்கொண்டன - எல்லாசமயநூல்கட்கு மொப்பமுடிந்த தாகலானும்,—இச்சொன்னீ யெங்கேசொன்னது-நீயகாட்சியள வையோடு முரைபளவையோடு முரணிகூறுகூறுப போலி யெனபதாம

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது

அகலிகை கல்லதானா ளரிபல பிறவியானான், பக
லவன் குலத்திறகேறனமிப் பாரெலா முழுதுமாண்டு,
நிகரிலா வரசனானுஞ் சிலம்பிநி லகம்போற்றச், சகம
தி லெலிதானன்றோ மாவலி யாயத்துத்தானே (௬௬)

(இ-ள்) அகலிகை கல்லதானாள்	கௌதமமா பாரி யகலியாதேவியைத தே வேந்திரன காமுற்றுத தீண்டவதுகண்ட வா சாபததால வ கல்லானாள்
அரிபல பிறவியானான	மாயனுமசசியங் கூமம் வராக நாரசிங் கம் வாமனன இராமன பரசுராமன பலப பத்திரராமன கிருட்டிணன எனப் பிருகுசா பததாற றசாவதாரததை யெடுககப்பட் டான.
பகலவன குலத்திற்றோன்றிப் பாரெலா முழுதுமாண்டு நிகரி	சிலநதிப்பூச்சி சூரிய வமிசத்திற் செங்க ட்சோழநாயனாராய்ப் பூமிமுழுது மாண் டொப்பில்லாத ராசாவானது.

லா வரசனுருளு
சிலமபி
நீ பேலகமபோ பெரிய வுலகமாகிய திருமறைக்காட்டிற் றாசசகமதிலே திருவிளக்குத் தூண்டின புண்ணியபலத்தா லிதானனேறே லன்றோ எலி மாவலியா யெல்லாருந் தோத மாவலி யாயத் திருச்செயயப பிறந்தது எ-று
துத்தாலே
மாவலியாயினனே பெண ரசிநீ யுயாதினை வாயபாடாகக் கூறுவா
"உகப்பி னுவாப்பி னெறிநின் பரமென்று - மயக்கமல வெனறே மதி" எனபதனு லதனை யறிக
ஏகார பிறறைச.
தானனை
ஓகார நேறறிற்
இதற்கு காமிகாகமம், காஞ்சபுராண மெனவறிக.
"நிறைநறைக் காமிநணி வீசுபெரி திபநகனைக, குறைநிறத தெலிநனைநககாற் சுட்டிடக் கனைறுதூணட, திரைகடல மாணுமவி ளாறுநீணடவா னுலகமெல்லாங், குறைவறக கொடுபபாபோவுங கொறவனைக்கி ரட்டனுரோ" (௪௪)

சிவாகரயோகியருரை வருமாறு.

மேலிதற்குகாரணம்
(அகலிகைகல்லதானுள .அபிநுனே) அகலிகைகல்லாயிருந்தாள. மகாவிஷ்ணு மீன ஆமை கேழல் நாரசிம்மம வாமனர் முதலாகிய பலதேகங்களுமெடுத்தார். பூர்வத்திலே சிலத்தியாயி

ருக்கவர் சூரியவம்சத்திலே சோழராஜாவாகஜநித்து பூமியெல்லாமாண்டார் இக்கலநியும், பூர்வம எலியாயிருந்தவன ஒரு புண்ணியவிசேஷத்திறுலே மகாபலியென்னும நாமத்தையுடைய வசுரனுகி மூன்றுலோகத்தையு மாண்டான

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

வெளிப்படை

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

அச்சு அழிந்தே மாறுதலும் அகலிகை முதலியோர்மாட்டுக் கேட்கப்படுதலான, யாண்டுமெவ்வாறே தெளியப்படுமென்பதாம

அகலிகை முதலியோர்க்கு அங்ஙன மாறியதனு சாபவருளகளாலுயதன்றிக் கன்ம மாத்திரையானன்று ஆகலான, அதுவேபற்றி யாண்டுமெவ்வாறு கோடல் பொருந்தாதென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ் செய்யுளென்பது

நிரம்பவழகியருரை வருமாறு.

—※—

முன்சொன்ன சேதனங்கள் அசேதனங்களாக மாறிப்பிறக்கும் தன்றியு மசேதனங்களு மாறிப்பிறக்குமென றருளிச் செய்கிறார்.

அகலிகை கல்லானுள்-சேதனவாக்கத்தி லுண்டாகியவ கலிகையென்பா ளொருத்தி யசேதனவர்க்கத்தி லுண்டாகிய

கல்லாய்ச் சனித்தாள்.— அரியல பிறவிபாரனை-புருஷோத்த மனை பிருகுவென்பா ரொருருஷி சாப [illegible] மசமுத லான பத்துச் சந்நங்களையு மெடுக்கான — பங்கய [illegible] த்திரு.நறிய பாலொலா முழுதுமாளோர் [illegible] லமயி - ஒருசிவ [illegible] [illegible] முவங்கிஷத்திலே பிறந்தது, பூர்வாக [illegible] ராசசியமப ணனி, ஒப்பிலாத [illegible] யாயிருந்தா [illegible] றியும்,— [illegible] மபோரா [illegible] வெளிதான [illegible] யாயிருவே-பெரிய பூமியிலு [illegible] விக்க, இந்தப் பூமியி [illegible] பொசேஷியலலோ [illegible] [illegible] [illegible]

இ [illegible] சொல்லிய து, அ [illegible] [illegible] வம, புருஷோத்த [illegible] பிரியராசாவா [illegible] பாலு, [illegible] [illegible] றைமையறிவி [illegible]

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அசலிலை - அகலிராமாயானவர்,—[illegible] மழனியவிட்ட சாபவசத்தால் கல்லாகியச்சமுந்தே மாறுச்லு ம,—அரி - மாயோனுவை,—பா [illegible] - ப்ருகுமுனி வனிட்ட சாபவசத்தால் மச்சமுதலிய தசாவதாரங்களுமெ ச்சமுந்தே மாறுதலும்,— சிவந்த-சிவப்புடையான து,—பக லவன் குலத்திற்றோன்றி-சூரியவமிசத்திலுதித்து,— பாரெலா முழுதாண்டு-பூமிமுழுதும ஆண்டு,—திவரிலாவரசரும-மு தல்வனுரா ரொப்பிலாத வரசரு க வச்சமுந்தேமாறுதலும்,

ம்,—எலிதான்-எலியானது,— சகமதில் இவ்வுலகத்தில்,—நில லகமபோற்ற - இவ்வுலகத்தார் போற்ற,—மாவெலியாயதனை ற - முதல்வனருளான மாவெலிச்சக்கரவர்த்தியாய் அசசமு நதே மாறுதலும் கேடகப்படுதலான யாவுமெவ்வாறே தெளியப்படுமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலவனைநோக்கி முடிந்தது முடிந்ததென
னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகிறார்.

செப்பிடும் மாறவேறு சிலர்விதி யாலேகன்மா
ல், வைப்புறும் யோனியெல்லா மாமிவந் திடாவிடு
மென்னின், அப்படி யாருஞ்செய்திக ழிறைகரி யாவ
னன்றே, முற்பட மொழிந்ததெல்லா முதல்வன்ற
ன் விதியேயாகும். (சரு)

(இ-ள்) செப்பிடு மாறு வேறு சில ர்விதியாலே — சிலவான்மாக்கள் கன்மவசத்தாலே நரரானவாக ளிச்சன்னத்து மந்தரராயே பிறக்குமாறுபோல், சிலவான்மாக்கண் மாறுமற் சில சன்மங்களுக்குத் தோன்றுவது கொண்டே யெல்லா யோனிகளுந்தான மாறுதென்று நீ சொல்லுவுரைத்ததை காணென்று நீர் சொல்லுகிறீராகில்?

கன்மால் வைப்புறும யோனி யெல்லா மாறிவந் திடா விடுகெனின் — கன்மத்துக்கிடாக வுண்டாகப் பட்ட வெல்லாயோனியு மாறிப்பிறக்குமோ. மாறிப்பிறவாதுகாணு மெனனில்?

எப்படியானும் அப்படி நீ சில மாருமலும் வருமென்றதும் நமக்குச் சிறிதொப்புக்காண
நீ சேர மாறு தென்றுற்போல நானுஞ் சேர மாறுமென்று சொல்லவில்லை
செய்திக்கிறை கன்மபலங்களுக்குப் பரமேசுரன் சாட்சிகரியாவனென்ன பூதருவென்று முன்னே சொன்னேனன்றே முற்படமொழிந்தேன
எல்லா முதல் ஆகையாலே காத்தாவினுடைய நியமத்தினை வந்தியே லுலே யிந்த சகத்தெல்லா மாகாநிறகும் யாகும் எ-று.
இதற்குக் காரணகமத்து மத்யகத்தனு சிவதருமோத்தரத்து மெனவறிக. (சாறு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

செய்வினைமாறவேறு சிலவிதியாலே - அக்கருமாறும் படி சிலர்சாபத்திருலும் வரத்தினாலும் வந்ததைச் சொன்னீரல்லது,— கன்மாலவைப்புறு மியோகிகேயில்லா மாறிவந்திடாவிதமென்னில் - கருத்தினாலே அசசுகள போகமாறி யில்விட்டது வந்திடாவென்னில்,—எப்படியானுஞ் செய்திக்கிறை கரியாவனென்றே முற்படமொழிந்தே னெல்லாமுதல்வன்றனை விதியேயாகும் - எல்லாவகையினாலும் ஆன்மாக்கள் செய்யும் கருமங்களுக்குக் காத்தாவானவன் சாட்சியென்று முதலேதெளியச்சொன்னோம். கீழ்ச்சொன்ன கோபப்பிரசாதத்தினு லுருமாறிவந்தது அந்தகர்த்தாவாலாகையால் எல்லாவுருக்

களும் கருமத்துக்கீடாக முதல்வனுடையவிதியினாலே மாறிப் பிறக்குமென றறிவாயாக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அகலிகைமுதலோர சாபத்தாலுருமாறினது, சுபாவத்தினால் அல்லவென்ன வுத்தர முரைக்கின்றார்.

சிலர் விதியாலேமாற - சாபானுக்கிரகம்வல்ல சில பெயர் சாபத்தினாலும் வரத்தினாலு மாறி யோனிகள பேதிக்க,—வேறுசெப்பினும்-கனமத்தினான மாறுமென்று சொன்னீர்,—கனமால் வைப்புறு மியோனியெல்லாம மாறிவந்தி—ா விங்கென்னில் - கனம நிமித்தமா யுண்டாகுஞ சரீரங்களைத்தும பேதித்து வாராவென்று நீ சொல்லில்,—எப்படியானுஞ் செய்திக்கு - சாபத்தினாலே மாறுதலுக்குங் கனமத்தினாலே மாறுதலுக்கும,—இறைசரியாவனென்றே முற்பட மொழிந்தேன - ஈசுவரன சாட்சியென்று முன்னமேசொன்னோம. ஈசுவரானுஞையினாற் கனம வேதுவாகச் சபிக்கும் பேர் சபித்தலால் வரங்கொடுக்கும் பெயர் வரங்கொடுத்தலால்,—எல்லாம - யோனிமாறுதல் முதலானைத்தும்,— முதல்வனறன விதியேயாகும்- கனமானு சார வீசுர சங்கற்ப காரியமாமே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மறைகளீசன் சொல் எனபது முதலாக மேற்கூறிப்போந்தமையின, வினைப்பயனெனப் பட்டனவெல்லாம் முதல்வனுடைய சாபவருள்களே யாதலின், விசேடமின்மையான், ஓரிடத்திற் கண்டது யாண்டு மொக்குமென்பதாம.

விதியெனறது ஈண்டுச் சாபவருள்கண் மேற்று.

இவை யைந்துசெய்யுளானும் மீமாஞ்சகரி லொருசாரார் மதம்பற்றி ஆசங்கித்துப பரிகரித்து, 'தானபல பேதஙகாட்டி' என மேற்கூறியது சாதிககப்பட்டது.

அற்றேல், நோககிறைறை நோகக நிற்குமுயிா, மற்றோரச் சிலைப் பற்றுதல் யாஙஙனஞ் செல்லுமெனபாரை நோககி யெழுந்தது வருஞ்செய்யுளெனபது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மீளவும பட்டாசாரியன ஒருயோனி மற்றொரு யோனியாக மாறிப் பிறவாதென்று சொல்ல, அவனை நோககிப பரமேசுரனாலே யோனிகளெல்லா மாறிப் பிறககுமெனறு மேலுமருளிச்செய்கிறா

செப்பிநுப் மாறவேறு சிலர்விதி யாலே - வேதாகமஙக ள் சொனன முறைமையனறியே வேறே சிலர் நியமிககபபட்ட நியமங்களாலே யோனி மாறுதெனறு முனனேசொனனாய். அதுவனறியும,— கனமால் வைப்புறு மியோனியெல்லா மாறிவரு திடாவிஙகெனனில் - கனமஙகளுக் கிடாகக் கற்பிககதக்க யோனிகளெல்லா மாறிப்பிறந்து வாராதெனறு நீசொல்லில்,—எப்படி யானுஞ்செய்திக் கிறைகரி யாவனென்றே முற்பட மொழிநதேன - எல்லாப் பிரகாரஙகளாலுங் கனமங்களுக்குப் பரமேசுரன் சாட்சிபூத வானெனறு முன்னேசொனனேன்,— எல்லா முதல்வனறன விதியேயாகும் - ஆகையால் சர்வமும் பரமேசுரனுடைய நியமததிலே ஆகாநிற்கும்.

இதனாற் சொல்லியது, யோனிகளெல்லா மாறிப்பிறந்து வாராதெனறு சொனன பட்டாசாரியனை நோக்கி; பரமேசு

ரனுடைய வாக்கினையாலே கன்மத்துக் கீடாக மாறிப்பிறந்து வருமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

வேறுமாற - மறைகள்சொன்ன சொல்லென்பது முதலாக மேற் கூறிப்போந்தமையி னச்சமுந்தே மாறுதல்,—சிலர் விதியாலேசெய்பவென்று - சிலர் சாபவருள்களா லுபதன்றி,—கன்மால் வைப்புறும் யோனியெல்லா மாறிவந் திடாவிதவெகனினைக் கன்மமாகுகினாக கேதுவா யோனிகளி லுயிர்கள்புக்கு மாறுத லின்றென நீசொல்லில்?—எப்படி யானும்-எவ்வகையானும்,—செடிகக கிறைகரி யாவனென்றே - உயிர்கள்செய்யுங் கன்மங்கட்கு முதல்வன் சானறென்பது,— முற்பட மொழிந்தேன - முன்பே யறியக்கூறினமையின்,— எல்லா முதல்வன்றன் விதியே யாகும்-வினைப்பய னெனப்பட்டனவெல்லா முதல்வனுடைய சாப அருள்களேயாதலின், விசேடமின்மையா னொரிடத்தி ற கண்டது யாண்டுமொக்கும்.

இவை - ௫ - செய்யுளானு மீமாஞ்சகரில் ஒருசாரார் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, 'தானபல பேதங்காட்டி' என மேற்கூறியது சாதிக்கப்பட்டது

மறைஞானதேசிகர் உரை

இங்ஙன மெய்தியது விலக்கிப் பிறிதுவிதிகூறி, மேற்
கன்மமு மாணமாவுந் தம்மிற் பொருந்திக் கா·
ரியப்படாது, ஒரு கருத்தா காரியப்படுத்
துவனென வுணர்த்துகிறார்.

அவ்வவ யோனிதோறு மவ்வவ வுலகந்தோறுஞ், செவ்விதி னமிந்துகன்மஞ் சேர்ந்திடா சீவனசேரா, விவ்வகை தம்மிற்சேர்வு மிறைசெய லாறுசெய்த, வெவ்வுரு வுந்தனகளமான் மாறறுவ னிறைவன்றனே. (௬௯)

(இ-ள்) **அவ்வவ யோனிதோறும** நரர் மிருக பக்ஷ்யாதிமுதலிய யோனிக டோறும.

அவ்வவ வுலகந்தோறும பூலோகமுதலிய வுலகங்கடோறும்.

செவ்விதி னமிந்துகன்மஞ் சேர்ந்திடா சீவனசேரா கன்மஞ் சமானமாகாமல் ஸ்தாவர யோனிக டோறு மந்தந்த புவனங்கடோறுந் தானுங் செல்லமாட்டாது ஆனமாவு மருந்தானமாதலா லதற்கேற்ற வழியைப்பெற்று தானடுள்ள போகங்களைப் புசிக்கமாட்டா.

இவ்வகை தம்மிற்சேர்வு மிறைசெயல் இந்தக் கன்மத்தையு மான்மாவையுங் கூட்டிக் காரியப்படுத்துவதுவு மாசத்தாயனது செயல்.

ஆறுற்செய்த வெவ்வுருவுந் தன்கனமான மாறறுவ னிறைவனுறனே. காககாத காருக்கேய யந்நந்த செயப்பதுக்கச் சாமாதகியமுறை யாங்கையா லெல்லா ரூபங்களிலு மானமாக்கள் செய்த கன்மங்களுக்கிடாக மாறிப்பிறப்பிப்பன. எ-று.

ஏகாரந் தேற்றம்.

இதற்குப் பார்க்கையிலு மங்கத்திலு மறிக. (௭௰)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

அவ்வவ யோனிதோறு மவ்வவ வுலகந்தோறுஞ் செவ்வி தினறிந்து கன்மஞ் சேர்ந்திடா சீவனைச்சேரா — கர்மபலம் புசிப்பதான தேகங்களையும் போகங்களையும் தானறிந்து கர்மமானது சடமாகையால் ஆன்மாவுக்குப் பொருந்தவறியாது. ஆன்மாவுங் கிஞ்சிஞ்ஞனாகையால் தானாகப் பொருந்தவறியான்,— இவ்வகை தம்மிற்சேர்வு மின்றிசெய லாற்றச்செய்த வெவ்வுரு வுந்தன கன்மால மாற்றுவ னிறைவனருளே—கன்மபலத்துக் கீடான தேகங்களையும் லோகங்களையு மெல்லாவற்றையுங் கூட்டுவிறது கர்த்தாவினுடைய கிரியாசத்தியாகையா லவ்வவர் செய்த கன்மத்துக் கீடா யெல்லா வுருக்களையு மாறிப்பிறக்குமாறு கர்த்தாவே செய்வன

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவன் செயலாற் சீவன் கன்மமிரண்டும் பொருந்தி யுறு மாறுதல் முதல் பலத்துக் குபயோகங்களாமென றுணர்கின்றா

அவ்வவ வுலகந்தோறும்-பூலோகமுதலிய புவனங்கடோறும்,—அவ்வவ யோனிதோறும் - அந்தந்தப் புவனத் துதிகளுந் தேகங்கடோறும்,— செவ்விதி னறிந்து-மாறுபாடின்றிப் புத்திபண்ணி,—கன்மம், அறிவின்மையால்,—சீவனைச் சேர்ந்திடா-சீவனைப்பொருந்தா,—(சேர்ந்திடா வென்று பாடமோதிற் கன்மந் தானே போகம் புசிப்பவனுக்குஞ், சீவனைப் பொருந்தாது, சீவன் சிற்றறிவாகையா லவைகளை யறிந்து),—தேரா-பெய

ருந்தா,—இவ்வகை தமமிற் சேர்வும்-(சேர்ந்திடா வென்ற பாடத்தால்) இந்தமுறைமை யொன்றுக்கொன்று சீவசரீரங்கள் பொருந்துதலுஞ் சீவகன்மங்கள் பொருந்துதலும் சரீரசன்மங்கள் காரியகாரணமாய்ப் பொருந்துதலும்,—இறைசெயலாறுல் - சிவன் செலுத்துவதனாலாம்,—செய்த வெவ்வுருவும்-பண்ணப்பட்ட வடிவங்களெல்லாம்,—தங்கன்மால் - அவரவர் பண்ணின கன்மத்துக்கேற்றதாக,—இயற்றுவ னிறைவனருளே-சிவனருளே பண்ணுவன.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மாயை வினைகளைக் காரியப்படுத்தி உயிர்களுக்குச் சேர்ப்பான் இறைவனே யென்பது மேற் பாரிசேடவளவையாற் பெறப்பட்டமையின், அஃது உயிர் முதலியவற்றின் செயலன்மையான், இறைவன் செய்தவசனை இறைவன் மாற்றுதற்கண் ஆசங்கை யின்மையென்பதாம்.

இவ்வென்பது வகரவீற்றுப் பலவறிசொல்

இன்னும் மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றேல் இவ்வாறு அசசுமாறித் தோன்றுமாயிற் சற்காரிய வாதத்திற்கு இழுக்காம் போலுமென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது

நிரம்பவழகியருரை வாருமாறு.

—o—

மீளவும் முன்சொன்ன பட்டாசாரியன் யோனிகளெல்லா மக்கமத்துக் கிடக்க மாறிப்பிறக்கு மொழிந்து வொருகத்து

வேண்டுவதில்லையென்ன; அவனை நோக்கி கர்த்தாவேணுமென்றருளிச்செய்கிறார்.

அவ்வவ யோனிதோறு மவ்வவ வுலகந்தோறுஞ் செவ்விதி னறிந்துகன்மஞ் சேர்ந்திடா — என்னின்றந் திருக்கிற அந்தந்த யோனிகடோறும் அதற் கேற்குத்தக்க வுலகங்கடோறும கன்மஞ் சடமாகையாலே, இன்னு னின்னகன்மஞ் செய்தானென்றும், இவனுக்கு இன்ன யோனியென்றும, இன்னவுலகத்திலே யிருப்பனென்றும, இன்னகாலங் கூடவேணுமென்றும, முறைபிறழாமற் றானே யறிந்து கூடமாட்டாது — சிவன சேரா — ஆன்மாவுங் கூட்டக் கூடுமதொழிந்து தானுக் இவை யிறைறை யறிந்து கூடமாட்டாது. — இவ்வகை தம்மிற்சேரவு மிறைசெயலாலே — இந்தக் கன்மங்களும் ஆன்மாக்களுந் தன்னிற பொருந்திக் காரிப்படுகிற முறைமையும் பரமேசுரனுடைய செயலான படியாலே, — செய்த வெவ்வுருவுந் தன்கன்மான மாறறுவ னிறைவன்றானே — ஆகையாலே எல்லா ரூபங்களிலும் ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கிடாக மாறிப் பிறப்பிப்பன பரமேசுரனதானே

செய்த வெவ்வுருவுந் தன்கன்மான மாறறுவ னிறைவன்றானே என்றதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் ௨-சூ. ௩-வெ. "அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞா தாவெசன்றவ, கவ்வினையிற் காந்த பசாசம்போ — லவ்வினையைப், போம லூட்டும்பிரானி றைசராசே, லாதா மறிந்தணைப்பா ராய்கு" என்றும், இருபாவிருபஃது. ௩௬-செ "வாக்கு மனமும் போக்குள்ளத் தனுவுஞ்-சொல்லு மினைவுஞ் செய்யுஞ் செயலு-நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து-முறைபிறழாமற் குறைவின்றி வொன்றாய்க் — காலமுந் தேசமு மாலற வகுத்து — கமியுங்கறருத்தவி னடி வகாருதியே." என்னுமதனு கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, கன்மஞ் சடமானபடியாலும் ஆன்மாத தனக்கென வோரறிவில்லாத படியாலும்; இவையிரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்துகிறது பரமேசுரனென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

கன்ம மவ்வவ் யோனிதோறு மவ்வவ் வுலகந்தோறுஞ் செலவிடுத லறிந்து சேர்ந்திடா - வினை சடமாகலின் அவ்வவ் வினைக் கிடான தனுக்களையும் புவனங்களையும் நேராக வறிந்து சென்றடையமாட்டா — சீவன்சேரா - உயிர்கள் சேதனமாயினுந் தமக்கென வறிவின்மையா னவ்வவையே யவற்றாற் பயனை யறிந் தெடுத்துக்கொண்டு நுகரமாட்டா.— இவ்வகை தம்மிற் சேரவும் - ஆதலின் மாயை வினைகளைக் காரியப்படுத்தி உயிர்க்குச் சேர்த்துவான,— இறைசெய லாலுல்-இறைவனே யென்பது மேற் பாரிசேட வளவையாற் பெறப்பட்டமையின், அஃதுயிர் முதலியவற்றின் செயலன்மையால்,— இறைவனருளே செய்த வவ்வுருவும் - இறைவன் செய்த வசதை,—தன் கன்மமான மாற்றுவன - வினைக்கேற்ப விறைவன் மாற்றுந்தறக ஞ சகலை யென்னையென்பதாம்.

இதனானே யேலாது வலியுறுத்தப்பட்டது

மறைஞானதேசிகர் உரை.

உமதுகர்த்தாத் தூலவுருவை யுண்டாக்குமிடத்து கெ
ந்த வுபாதானத்தி னின்று முண்டாக்குவனே

னறு வினவ; அதற்குச் சூக்குமவுடலை
னறுணர்த்துகிறார்.

மாயையிவ் வுருவமெல்லாம் வருவதென் கேனின்
றென்னிற, கூறிய சூக்குமந்தா னுருவெனிற் குறி
யொன்றென்னில், வேறொரு குறியாமாரம் வீரசங்
கிலியுமாகும், தேறுநீ யொருவனாலிச் செயலெலாஞ்
சிவனாலாகும். (௪௭)

(இ-ள்.) மாறியெ வுருவமெல்லாம் வருவதெனகே னின்றெனனில — அந்தந்த யோனிகளினு முலகங்களினு மசசும் யோனியு மாறிப்பிறந்து வருவதற்குக் காரணம் யாதென்று கேட்கிறாயாகில,

கூறிய சூக்குமந்தா னுருவெனில் — அந்தத் தூலவுடல்களெல்லாங் கலைமுதலிய முப்பத்தொரு தத்துவத்தா லுண்டாகின்ற சூக்குமதேகத்தி னின்று முதிக்குமென்று நீ சொல்லில்?

குறியொன்றெனனில் — அந்த மாயாகாரியத்தி னின்று முண்டாகிய யோனிபேதங்களெல்லா மொன்றல்லவோ வென்று நீ சொல்லில்? அஃதன்று.

வேறொரு குறியாமாரம் வீரசங்கிலியுமாகும் — பொன்னொன் றொன்றாயிருக்கவு மதிற் றோற்றிய வீரசங்கிலிமுதலிய வாபரணத்தின பெயரையு மடையாளங்களையுந் தனித்தனி பெற்றாற்போல; விந்தச் சூக்குமதேகமுந் தானொன்றாயே நின்று நரர் மிருகமுதலிய பெயரையுந் தனித்தனி யடையாளங்களையும் பெற்றுநிற்கும். அது தானாகத் தோன்றுவற்றோவெனில்?

தேறுநீ யொருவனால் இச் செயலெலாஞ் சிவனலாகும்.	ஒரு கம்மியனு னுண்டானதென்று விசாரித் தறிவாயாக அதுபோல இந்தப் பிரபஞ்ச காரியங்களெல்லா மொரு கர்த்தாவானவ னுபாதானத்தி னின்று முண்டாகாநிற்பன. எ-று.

இதற்கு நிசுவாச மெனவறிக. (௬௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மாறிவ வுருவமெல்லாம் வருவதெங்கே நின்றெனில்- இந்த ஸ்தூலதேகமானது கருமத்துக் கீடாக அநேகவிதமாய் மாறிவருகிறது எதிலே யுண்டாமெனில்?—கூறிய சூக்குமத்தா முருவெனில்-ஸ்தூலதேகம் விட்டு சூக்குமதேகத்தோடே ஆன்மா போக்குவரவு செய்யுமென்று முன்சொன்ன சூக்கும தேகத்திலே யுண்டாம்,— குறி பொன்றெனின் - காரணமொன்றுகையால் ¶ காரணகுணஹி காரியகுணா னாரபந்தே யென்னும் நியாயத்தினாலே அதி னுண்டாகப்பட்ட காரியங்களெல்லாம் ஒருபடித்தாயிருப்பதன்றி வெவ்வே றடையாளங்க ளாகாதெனில்?—வேறொரு குறியாமாரம வீரசங்கிலியும் ஒருவனாலாகும - பொன்னொன்றுயிருக்கச் செய்வா னொருவனால வைரமணி சங்கிலி கடகம் குடாதியென்று வெவ்வே றடையாளமும் பேருமுடையதாம். அதுபோல,—தேறுநீ யிச்செயலெலாஞ் சிவனாலாகும்-சூக்குமதேகத்திலே நின்றும வேறுவேறு அடையாளங்க ளாகிய ஸ்தூலதேக முண்டாகிறது சிவனாலே யென்று நீ தெளி.

¶ காரணகுணஹி காரியகுணா னாரபந்தே - காரணத்தின் குணங்கள் காரியத்தின் குணங்களை யுண்டாக்கும்.

காரணகுணம் காரியத்திலே யுண்டாமென்பது காரண மாகிய மாயாவிகாராதிகள் காரியமாகிய சர்வதேகங்களிலு முண்டென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

உருமாறுக லொத்ததுகொண்டு மாறி வருவதற்கு முதற் காரண மேதென்னின், சைவ பவுராணிக மதானுசாரியர்களா யிருக்கின்ற வாசாரியர்கள் மதத்தினு லுத்தர முரைக்கின்றார். மாறியிய வருவதெல்லாம் வருவதெதனாலென்றெனனில்-இந்தச் சுர நர பசு மிருக பக்ஷி ரூபமாயிருக்குந் தேகங்க ள மாறிமாறி வருவதற்கு முதற்காரண மேதென்று நீ கேட்கின் றாயாகில்,—கூறிய சூக்குமத்தா முருவெனில்?—சொல்லிய சூக்குமதேகத்திலே நின்றும தூலதேக முண்டாமென்று நீர் சொல்லில்,— குறியொன்றெனனில் - சூக்குமதேகத்தில் வை சித்திரிய மில்லாமையாற் றூலதேகங்களிலும் வைசித்திரிய மி ல்லாதே போமென்று நீர் சொல்லில்? பொற்பொருளாகிய வொரு முதற்காரணத்தி னின்று,—வேறொரு குறியாமாரமணி ரசன கிலியும ஒருவனு லாகும்-வேறொரு குறியாம் பதக்கமும் வீரசங்கிலியுஞ் சரப்பளியு மொருவனு லுண்டாகும,—தேறுந்-தெளிந்தறி,—இச்செயலெல்லாம் - இத்தக்காரிய வைசித்திரியமும் ஒருவனுலாகும. எவனுல்?—சிவனுல்,—ஆகும-உண்டாகும. ஒப்பற்ற பரமேசுரனுல்,—ஆகும்-உண்டாம, என்றுமாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

செய்வான தாற்றலான ஒருபொன் வெவ்வே றணிகலங்க ளாய்ப் பரிணமிக்கு மாறுபோல, இறைவன தாற்றலான் ஒரு

ருக்குமவுடம்பு வெவ்வேறச்சுக்களாய்ப் பரிணமித்துத் தோன்றுந்தன்மையான, அண்டசராசரிய யாதத்திற கிழுக்கில்லை யென்பதாம்

நிரம்பவழகியருளா வருமாறு.

—o—

இப்படி யுமமுடைய கர்த்தாவாலே மாறிப்பிறக்குமென்ற வடிவுகளெல்லா மெவ்விடத்திலே நின்று தோன்றுமென்று நீ கேட்கில்? சூக்குமதேகத்திலே நின்று மிந்தத் தூலசரீரங்களெல்லாந் தோன்றுமென றருளிச்செய்கிறார்.

மாறிய வுருவமெல்லாம வருவதெங்கேநின்றெனில் - ஆன்மாக்கள மாறிப்பிறக்கைக்கு இந்தத் தேகங்களெல்லா மெங்கேநின்று வருமென்று நீ கேட்கில்?—கூறிய சூக்குமத்தானூறு - வேதாகமங்கள சூக்குமமா யிருக்குமென்று சொல்லப்பட்ட மாயையிலே நின்று மிந்தத் தேகங்களெல்லா முண்டாகாநிற்கும்,—என்னில்-என்று நீ சொல்லில்,— குறியொன் றெனில்-அந்த மாயையிலே நின்றும் இந்தத் தேகங்களெல்லா முண்டாகில் எல்லா வடையாளங்களு மொத்திருக்கவேணுமென்று நீ சொல்லில்,— வேறொரு குறிபாமாமே வீரசங்கிலியுமாகும - வேறே வேறே ஒவ்வொரு குறிகளாகத் தோற்றப்பட்ட ஆரம் வீரசங்கிலி முதலான ஆபரணங்களெல்லாம பொன்னிலே நின்று முண்டாகுற்போல, மாயையிலே நின்று மெண்ணிறந்த வடிவுகளெல்லாந் தோன்றாநிற்கும். இப்படிப் பொன்னிலேநின்றும பணிகளுண்டாகுற்போல மாயையிலே நின்றும்பலவடிவுகளு முண்டாயிடத்துக் கர்த்தா வேண்டுவதில்லையென்னில்?—தேறுநீ யொருவனாலிச் செயலெலாஞ் சிவனாலாகும்-பொன்னிலே நின்று மிந்தப் பணிகளையெல்லா மொருவ

னுண்டாக்கின தன்மைபோல் மாயையிலே நின்று மிக்க வடிவு களெல்லா மொருகர்த்தா வுண்டாக்கவேணுமென்று புத்திபண் ணுவாயாக.

இதனாற் சொல்லியது, சூக்குமமாயிருக்கிற மாயையிலே நின்றுந் தூலமாயிருக்கிற வடிவுக ளுண்டாமென்றும், உண்டா மிடத்துந் தானே யுண்டாகாது பொன்னிலே நின்றும் பலப ணிகள் பணிசெய்வின லுண்டான முறைமைபோலக் கர்த் தாவாலே மாயையிலே நின்றும் பலவடிவுகளு முண்டாமென் னு முறைமை யறிவித்தது.

'சங்கமம்' 'நராகளாய்' 'வண்டுகள்' 'அகலிகை' 'செப்பிரு ய்' 'அவ்வவபோனி' 'மாறிபிவ்வுரு' ஆகத்திருவிருத்தம ஏழும ப ட்டாசாரிடன.

இவையிற்றுக்குப் பிரமாணம் பரபட்சம் அவனமறுப்பு. சிந-பர-பட்டா-மறு, ௬ செ. "அழிகின்றதாஃவினைக ளாகி னறவாறெனெரு வதமங்கி யானபரிசே, யொழிவின்றி போ தனமு மரவுண்டுநாம்வினைக ளுறுகின்ற வாறெதெனலாகு, க ழிகின்றதாலறிவு வினைதந்திடாவினைஞர் கருமங்களுடியுரவோ ர், பழுதினறியேயுதவு மதுபண்பதாகவருள் பரமனக ளுரும் வினையே." எனனுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இவ்வுருவமெல்லா மாறிவருவது-அற்றே விவ்வாறச்சுமா றித் தோனறுவது,— எங்கே நின்றெனில் - யாங்ஙன நின் றெனின்,— உருவெனிற் கூறிய சூக்குமத்தாம்-தூலவுடம்பாழி னங்ஙனங் கூறிப்போந்தகன் மூலமாகிய சூக்குமஉடம்பி னுண் டாம்,—குறியொன் றென்னின் - காரணமொன்றாகக் காரியம்

பலவாத லமையாதெனின்,—ஒருவனால் வேறொரு குறியாம்-செய்வான தாற்றலா னொருபொன,—ஆரம் வீரசங் கிலியுமா கும்-ஆரம் வீரசங்கிலிமுதலிய வெவ்வே றணிகலங்களாய்ப் ப ரிணமிக்குமாறுபோல,— சிவனு மிச்செயலெலா மாகும - இ றைவனதாற்றலா னொரு சூக்குமவுடம்பு வெவ்வே றாக்கங்களா ய்ப் பரிணமித்துத் தோன்றாத வுண்மையின,— நீக்கறு-ஐனை ரே சற்காரிய வாதத்திற் கிழுக்கில்லையெனப்படுஙனர் தெளிவாயா க எனபதாம.

மறைஞானதேசிகர் உரை.

மேற் புதந்த, நீ சொல்லிய ஆலவுருவிற்கும் கா ரணம் யாதென்று வினவ, சூக்குமமென றுணர்த்துகிறார்

சூக்குமங் கெடுந்தூலந் தோன்றிடா சூக்கும த்தி, லுக்கியோ ருடல்கிடப்ப தின்றுட லாகுந்த ன்மைக், கோகயெ சத்தியுண்டா யுடம்பருங் காலமுற று, நீக்கிட மாம்பின்வேறோ ரீணமா நிகழ்த்துமா போல். (௬௮)

(இ-ள) சூக்கும மாயாகாரியமாகிய சூக்குமதேகங் கெ ட் கெடுந்த ட்டுத் தூலமாகிய தேகாதிப பிரபஞ்சங்க துலக தோ டோன்றாது.

ன்றிடா

ஆனாற் சூக்குமதேகத்திலே பலவுடல்களையும் பண்ணிவை த்திருக்குமோ, அதற்குக் காரணம் யாதெனவில்?

சூக்கு மத்தி [illegible]

[illegible]

சூக்கிமோருட ம்கெடாதென்று

உட லாக்குந் தன்மைக் கோக ஙியசத்தியுண்டா யுடாரும

யினை குறையுடம்புங் கெடப்பதில்லை;

அந்தத் தேகாதிகளை யுண்டாக்கிறதற்கு ஏனிடத்தில் யோக்கியமாயிருக்கிற கிரியாசத்திக்கு ஞாபகமாயிருக்கிற மாயையை யதிட்டித்துக்கொண்டு தூலவுடல்களை யுண்டாக்கா நிற்கும்.

காலமுமாறு நீங்கி மரம்பினை வேரோர் நின்று ரிக முந்துமை போல.

யாதாமொரு மரத்துக்கு இறுதியான காலமவந்த காலத்து அதனை வெட்டினவிடத்து அந்தத் தூலங் கெட்டாலும் அதற்குக் காரணமாகிய வேருண்டாயிருக்கையால், அதனின்று மபெரியமரமான துண்டாகு முறைமைபோல். ஆதலால் அந்தச்சூக்குமத்து சத்தியான்மகமா யிருந்து தானே வியத்தியானமகமாய் விளங்காநிற்குங்காண் எ-று

இதற்குக் கிரணாகமத்து மிருகேந்திரத்து மறிக (சஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o ——

மேலைத்திருத்தம் மாணவகனுடைய ¶பிரசுத்தத்துக்கு உத்தரம்

¶ பிரச்னம் - கேள்வி

சூக்குமதேகம் கெடுந் தூலத்தோன்றிடா - வித்திலே மரமுண்டானபோது வித்தழிந்தாற்போல ஸ்தூலதேக முண்டானபோது சூக்குமதேகம் கெடாது.—சூக்குமத்தி னுக்கிதேபோ . . . [illegible]

உடலாக்குந்தன்மைக் கேற்கிய சத்தியுண்டா யுடறும் - உ.
டலானதை யாக்கும் பரிசெப்படியெனின்? பரமேசுவரனு
டைய வலியதொரு சத்தியுண்டாகவே யதினாலே சூக்குமதே
கத்தி லிருந்தும ஸ்தூலதேக முண்டாம் அதெவ்வாறெனி
ன்?—காலமுற்று நீக்கிட மரம்பின்வேரோ ரீன்மா நிகழ்த்து
மாபோல் - வடவிருட்சமானது கெடுங்காலஞ் சென்றுபட்டும்
அதன் வேராகிய விழுதிலே விருட்ச முண்டாவதுபோல.

விதையினாலே விருட்சமாகிறதுபோல பரிணாம வாதமுமல்
ல, பிரளயத்திலே யிருந்தவியாதி பூதங்களும் சூக்குமரூபமாக
மாயையிலே யிருந்து சிருஷ்டிகாலத்திலே அவைகளவைகளே
ஸ்தூலரூபமாமெனும் பாஞ்சராத்திராதி மதமுமல்ல, வேறிரு
க்கும்மரமுண்டானது சூக்குமதேகத்திலேயே ஸ்தூலரூபங்க
ளெல்லா மீஸ்வரசத்தியினாலே யுண்டாமென்று கூறப்பட்டது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பால் தயிரானதுபோலச் சூக்குமதேகந் தூலதேகமாய்ப்
பரிணமித்துக் கெடுமோவென்ன, கொடாதென றுணர்த்துகி
றார்

சூக்குமங் கெடுத்துலக தோன்றிடா-சூக்கும சரீரமழி
ந்து தூல சரீரமாகாது.—சூக்குமத்தி னுக்கியோரு
டல் கிடப்பதன்று-தாய் சரீரத்திற் பிள்ளை சரீரம்போலச் சூக்
குமசரீரத்துட தூலசரீரம் பரிணமித்திருக் கண்டாவதில்லை.—
உடலாக்குந் தன்மைக் கேற்கிய சத்தியுண்டா யுடறும்-தூல
சரீரமாக்குதற் குருகமாகிய சாமர்த்தியம் சூக்குமசரீரத்துக்கு
[illegible] சூக்குமசரீரம் தூலசரீரத்தை யுண்டாக்கும்.—[illegible]

முற்றும் - காலந்தோறும்,—நீக்கிட மரம்-விருக்ஷத்தைச் சே திக்க,—பினவேர்-அந்தவிருக்ஷமூலம்,— ஓர் நீண்மரம் நிகழ்ந் ததுமாபோல்-மற்றொரு நீண்டமரத்தை யுண்டாக்குவது போல.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனஞ் சூக்குமவுடம்பினின்றும் இத்தூலவுடம்பெல்லாம் வருவது, ஆரம்பவீசங்கிலியானாற்போல ஒன்று பிறி தொன்றாவதுமன்று. வித்து மரமானாற்போல ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவதுமன்று. மதிக்கண் கலைகள்போல ஒன்றி னையொன்று கடந்து தோன்றுவதுமன்று. மற்றென்னையெ னின்? மரவேரின் மற்றொரு மரம்போலச் சூக்குமவுடம்பிற் றூ லவுடம்புகள் சந்திருபமாயிருந்து தோன்றுவன வென்பதாம்.

சற்காரியமாகிறகட்டப்படும் விசேடங் கூறியவாறு.

யோக்கியம் ஏகக்கியமென மரீஇயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

புத்தன் சூக்குமத்தினின்றும் ஒருவடிவு தோன்றுமி டத்து அந்தச் சூக்குமங் கெட்டுப்போய்த் தூலந்தோன்றும், மீ ளவும் பலவடிவுகளும் அந்தச் சூக்குமத்திலே தோன்றுமென் கிறதெப்படியென்று சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிறார்.

சூக்குமங் கெட்டுத் தூலந்தோன்றிட - சூக்குமமாகிய மாயை கெட்டுத் தூலமாகிய தேகாதிப் பிரவஞ்சந் தோன்று து. அந்தச் சூக்குமங் கெட்டுத் தூலந்தோன்றுமெனக் கொள்ளு

மத்திலே யோருடல் பண்ணிக் கிடக்குமோ என்று நீசொல்வி ல்?—சூக்குமத்தி லுக்கியோ ருடல்கிடப்ப தின்று-அந்த மாயை யிலே யோருடம்பாய்ப் பண்ணிக் கிடப்பதுமில்லை அது லதுண் டாகிறபடி யெப்படி யெனனில்?—உடலாகுந்தன்மைக் கோக் கிய சத்தியுண்டாயுடன்றும்-தேகங்களை யுண்டாக்கு முறைமை க்கு அந்த மாயையினது ஒன்றுபட்ட சத்தியுண்டாயிருந்து, தே காதிப் பிரவஞ்சங்களை யுண்டாக்காநிற்கும் அதெனபோலவெ னனில்?—காலமுற்று நீக்கிட மரம் - ஒருமரத்துக்குப் பக்குவ ம் வந்ததனை வெட்டிப்போட்ட வளவில்,—பின் வேறோர் நீ ண்மர நிகழ்ந்துமாபோல் - அதுக்குக் காரணமாகிய வேர்கிட க்கையாலே அந்தவேர் தனனிடத்திலே நின்று மீண்டு மொரு நீண்டமரத்தை யுண்டாக்குகிற முறைமைபோல, மாயையிலே நின்றுத் தேகாதிய பிரவஞ்சங்கள உண்டாக்குகிறபடியும் இத் தன்மைத்து.

சூக்குமங்கெட்டுத் தூலந் தோன்றுமென்று புத்தன் சொ ன்ன விதற்குப்பிரமாணம சித்-பர-அவனமதம்,கூ-செ "தோ ற்றிய பொருளெல்லா நாசமா மென்றுசொல்லு, மாற்றமு ன னுலாதகல்மறறை மிருத்துரை வழக்கிலன்னை,போற்றிய பொருள்கள்கட்குப் போனது போல்முகிரந்து, வேற்றுமைப் பட்டதென்னை மிருத்துரை யிலவழக்கே."

சூக்குமங் கெட்டுத் தூலந்தோன்றிடா தென்று அவனை மறுத்ததற்குப் பிரமாணம். ஷை மறுப்பு, கச-செ. "அங்குரம் வித்தின்கேட்டிற் றோன்றுமதுபோல வினைத்தருவுங் கெட்டு வழி யாகுமெனனி, லங்கவற்றுக் காக்கக்கே டறைந்தாயெல் லுமெனித்தமென முனைமறந்தா யருந்துமாறுயி,இங்குமுளை யிலமரமா யெழுந்தின்று செல்லா திறந்தே யெழுந்தபடி யி ல்லாதென்னில், மங்கிவிடாதே பலதருண விருத்தவுளைப் ப

கும்வடிவு நீங்குகின்ற மாயுங்காணே." என்றுமதுங் கண்டு கொள்க.

இதனால் சொல்லியது, சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றுதென்றும், சூக்குமத்துக் குள்ளே தூலம் ஒருவடிவாயிராதென்றும், ஒருமரத்தை வெட்டிப்போட்ட வாக்க மரத்தினவேரிட்டு மீளவு மொருமரத்தை யுண்டாக்கினாற்போல மாயையிலே நின்று தேகாதிப் பிரபஞ்ச முண்டாமென்னு முறைமையும், அறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

(அங்ஙனஞ் சூக்குமவுடம்பி னின்று மித்தூலவுடம்பெல்லாம் வருவது ஆரம வீரசங்கலி யானாற்போல வொன்று பிறிதொன்றுருவது மன்று) சூக்குமங் கெட்டுத் தூலந்தோன்றிடா-வித்துமரமானாற்போல வொன்றுகெட்டு ஒன்று தோன்றுவது மன்று,—சூக்குமத்தி லாக்கியோ ருடல்கிடப்ப தின்று-மதிக்கெழுகலைகள்போல வொன்றிலக வொன்று கிடந்து தோன்றுவது மன்று. மற்றெனையெனின,— மரங் காலமுற்று நீங்கிட—மரமானது அதற்குரிய காலநீங்க,— பின வேறோர் நீண்மர மெழுந்தமாபோல்-பினமர வேரின மற்றொரு நீண்மர முண்டாதல் போல,—உடலாகளுந் தலைமகளு - சூக்குமவுடம்பிற் றூலவு—ம் புண்டாதற்கு,— ஒக்கிய சத்தியுடைய—றரும்-யோக்கியமான சத்திருபமா யிருந்து தோன்றுவன வென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மீளவு மவன் சூக்குமதேகத்தி னின்றும் தூலவுரு

வாத வரவேண்டுமோ, கன்மத்துக்கிடோக வுண்டாமெனன; மறுத்துரைத்துகிருர்.

விதைப்படி சூக்குமத்தே யுருவரும் வினையாலங்கே
யுதித்திடா வுருவமாக வுருவரு மரங்களவித்திற
கதித்தெழு மரமும்வித்துங் கழியும்பின் னழியுஞ்சூக்க
மதிக்கெழுகலைகளைபோலவருவதுபோவதாமே. (௫௬)

(இ-ள்.) விதைப்படி சூக்குமத்தே யுருவரும் — காதகாவின தாக்கினையாற் சூக்குமதேகத்தி வினைறுந் தூலவுருத் தோனறும்.

வினையா லங்கே யுதித்திடா வுருவமாக — கனமத்துக் கிடாகச் சூக்குமதேகத்தி வினறு தூலதேகங்க டாமே யுண்டாகமாட்டாது.

உருவரு மரங்கள்வித்திற் கதித்தெழும — சூக்குமமாகிய வித்திலே தூலமான மரங்களுணடானதுபோலச் சூக்குமத்தி னின்றுந் தூலதேகமுண்டாம்.

மரமும்வித்துங் கழியும்பின் னழியுஞ் சூக்கம் — மரமும்வித்து மொருகாலத்திற் சேரவழியக் கணடோ! அதுபோல மரங் கோணறினவிடத்து வித்தழிந்து போனறபோலத் தூலதேக மழியும்பொழுது சூக்குமஞ் சேரவழிந்து போங்காணுமெனவிற்? அஃதனறு.

மதிக்கெழு கலைகள்போல வருவது போவதாமே. — சந்திரனுக்குப பூரணகலை, பதினுறிற் காரணமாகிய வொருகலை யெப்பொழுது மழியாமலிற்க, மற்றகாரியகலைக ளோங்லோங்கிடங்களிலே யொடுங்கிநின்று பிறபு கூடுகிற முறைமைபோல; காரணமாகிய மாயையழியாமலிற்கவே, காரியமான சூக்குமதேக

மாகிய சத்துவங்களொடுங்கிக்கூடும். இங்ஙன
மொழிந்த தூலதேகங்களைப் போலவழியா
தாகையால், காரியகாரணங்களுக் கழிவின்றி
யிருக்கவே, காரியப்பட்ட தேகங்களு மிவை
யிறாது முண்டாகாநிற்கும். எ-று. (௪௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதுவு மதற்கே புறநடை.

விதிப்படி சூக்குமத்தே யுருவரும் வினையால் - கர்த்தாவினுடைய ஆஞ்ஞைப்படியிலே சூக்குமதேகத்திலே கருமத்துக்கிட்டாக ஸ்தூலதேகமுண்டாம்.— இங்கே யுக்திதிட்டா வருமாறு-இவ்விடத்து சூக்குமதேக மில்லாமல் ஸ்தூலதேக முண்டாகாது,—உருவரும் - சூக்குமதேகத்திலே ஸ்தூலதேகமுண்டாய் வரும் எவ்வாறெனில்?—மரங்கள் விதைக்கிற கதிதெழுட்-சூக்குமமாகிய விதைகளிலே ஸ்தூலமாக மரங்களுண்டானது போல,—மரமும்விதையுஞ் சழியுமபின னழியுஞ் சூக்கம்-வித்தழிந்து மரமாய் மரமு மழியக்கண்டதுபோல, சூக்குமங் கெட்டு ஸ்தூலமாகி ஸ்தூல மழியுங்காலத்து ஸ்தூலசூக்குமமிரண்டு மழியுமெனனில்? சூக்குமத்திலே ஸ்தூலந் தோன்றுகிற மாத்திரத்துக்கே வித்தும மரமு முவமையல்லது முற்றுவமையல்ல. அதற்குவமைபேதெனனில்?— மதிக்கு கலைகளைப்போல வருவது போவதாமே - சந்திரனுடைய பிரதான கலையானது காணவும் படாம லழியாமலு மிருக்க, அதனிலே ஓம்பண்ணப்பட்ட அக்கினியுடைய சூக்குமாம்சமான சூரியகிரணத்து வாரா † சம்பிருக்தமாய் ஷோடசகலையாக விருத்தியாகுந் போல ; ஆன்மாக்கள் பண்ணப்பட்ட தர்மாதர்ம ஐக்யமான

அதிருஷ்டம் சூக்குமபேதத்திலே சம்பிருக்தமாக, இதனால் சூக்குமதேகத்திலே யிருந்தும் ஸ்தூலதேக முண்டாம். அந்த சந்திரனுடைய கலைகளை தினமொருகலையாகப் பதினைந்துநாளும் பதினைந்து தேவர்களாயப் புசிக்க, அந்தக் கலையெல்லாம் க்ஷயித்துப் பிரதாநகலை யொன்றுமே நின்றாற்போல, ஆன்மாக்களும் தருமாதருமங்களையுடைய பலங்களெல்லாவற்றையும் புசிக்கவே ஸ்தூலதேகம்போய் சூக்குமதேகி யானதென்ற திதன் பொருள்

† சம்பிருக்தம் - சேர்ந்தது

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேலு மதற்கோர் புறனடை.

விதிப்படி சூக்குமத்தே யுருவரும் வினையால் - கனமாஞ் சாரமாய்ச் சிவசங்கற்பத்தின்படி சூக்குமதேகத்தி லிவறாக தூலசரீர முண்டாம் — உதித்திடா வுருவமாக - சூக்கும சரீரத்தானே திரிந்து தூலசரீரமாகாது.— இங்கே யுருவரும் மரங்கள் வித்திற் கதித்தெழும் - இவ்விடத்து வடிவுற்ற விருக்ஷங்கள் பீசத்தி லுண்டாம். அந்த,—மரமும் வித்துங் கழியும்,— (அப்படிச்) சூக்குமம் பிணமழியும் - சூக்குமதேக முருக்குணரிக் கெட்டுப்போம் ஆறு லப்படி யன்று,—மதிக்கெழு கலைகள் போல வருவது போவதாமே - சூக்குமசரீரத்தி லினறும் தூலசரீரங்கள் ஒருங்கலைபாய்ச் சேடித்த சந்திரனிடத்தே நின்று முதிக்கும் மற்றுள்ள கலைகள்போல உண்டாய்த் தாமே கெடும்.

—

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மரந்தோன்றுதல் வித்தையின்றி யமையாதவாறுபோல, அத்தூலவுடம்பு தோன்றுதலுந் தனக்கொரு முதலில்வழிக் கூடாதெனவும் அருத்தாபத்தியால் அஃதுண்டென்பது அறியப்படுமென்பதாம்.

சூக்கும வுடம்புண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு.

ஆண்டுத்தோன்று மாசங்கையை நீக்குதற்பொருட்டு மதிக்கெழு கலைகள்போல வருவது போவதாமெனவு முடன்கூறினர்.

அற்றேல், தூலவடிவுக்குக் காரணம் ஐம்பெரும் பூதமே யமையும் சூக்குமவடிவு மற்றுக்கெவன்? அறியாது கூறினாய்.

சற்காரியவாதத்திற் றூலப்பொருட்குக் காரணஞ் சூக்குமமே யாவதன்றிப் பிறிதில்லையெனவும், அச்சூக்குமவுடம்பாவது ஸூக்குமபூதமெனப்படும் தன்மாத்திரையானியன்ற வடிவாக லின் அதன் காரியமாதல்பற்றியே தூலவுடம்பை ஐம்பெரும்பூத வடிவெனப்படுதெனவும், தெற்றென வுணர்ந்துகொள்க.

உருவருமரங்கள் வித்திற் கரிந்தெழுமென்பதுமது, வி
த்துக்காட்டுவமை; மரமும்வித்துங் கழியுமென்பதுமது.
அழியுஞ் சூக்குமமெனவிலென்று உணர்ந்துகொள்க.
சூக்கம் பரத்தசசினைவு.

இவை மூன்றுசெய்யுளானுஞ் சூக்குமவுடம்பு முதற்கார ணமாமா றுணர்த்தித் தான்பலபேதங்காட்டுதல் பற்றிச் சற் காரிய வாதத்திற்கு இழுக்கின்மை கூறப்பட்டது.

அற்றேல், இப்பெற்றித்தாகிய சூக்குமவுடம்புக்கு மூலம் யேதில்லை போலுமெனின்? அவ்வாசங்கை நீக்குதற் கெழுந் து வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

—0—

இப்படித் தோன்றுமிடத்துச்சூக்குமத்திலே நின்றுந் தூல ங் கன்மத்துக்கீடாகத் தானேதோன்றும் கர்த்தா வேண்டு வதில்லையென்றும், சூக்குமமுந் தூலமுஞ் சேரக்கெடுமென்று ம் புத்தன்சொல்ல;* அவனை மறுத்து மேலு மருளிச்செய்கிறார்.

இப்படி சூக்குமத்தே உருவரும் வினையால் - மாயையி லே நின்றுங் கன்மத்துக்கீடாகப் பரமேசுரன் நியமித்தபடி யே வடிவுகளெல்லா முண்டாம்,— இங்ஙனே யுதித்திடா வருவ மாகி நிற்கும் - சூக்குமமாயிருக்கிற இதமாயையிலே [illegible]

தூலமாயிருக்கிற தேகாதிப்பிரவஞ்சந் தோன்றுது:தூலத்திலே நின்றும் தூலமுண்டாகவேணும்.அப்படிச் சொல்லுகிறது அர்த்தமல்ல,சூக்குமத்திலே நின்றுந் தூலந் தோன்றவேணும். அதெப்படியெனில்?—மரங்களவித்திற் கதித்தெழும் - வித்திலேநின்று மரங்களானது ஓங்கியெழுகிற முறைமைபோல், சூக்குமத்திலே நின்றுந் தூலமுண்டாகாநிற்கும்; அப்படித்தோன்றில் இரண்டுஞ் சேரவழியும் அதெனபோல,—மரமும்வித்துங் கழியும் பின் னழியுஞ்சூக்கும-மரமும் விதையுஞ் சேர வழிந்துபோகையாலே தூலமழிந்து போம்பொழுது சூக்குமமுஞ் சேரவழிந்து போங்காலும் தூலமழியுங்கொழிந்து சூக்குமம் மழியாது. அதெனபோலவெனில்?—மதிகளெழு கலைகளபோல;வருவதுபோவதாமே - சந்திரனுக்குக் காரணமாகிய கலையென்பதொரு கலை யெப்பொழுது மழியாமல் நிற்க, காரியகலைகள் ஒவ்வொரு விடங்களிலே யொடுங்கிக் கூடுகிறமுறைமைபோலக் காரணமாகிய மாயை நிற்கவே காரியமான சூக்குமதேகமென்று சொல்லப்பட்ட தத்துவங்க ளொடுங்கிக் கூடும், இதனையொழிந்து ஸ்தூலதேகங்களபோல வழியாது ஆகையால் காரணகாரியங்களுக்கு அழிவின்றியே யிருக்கவே காரியப்பட்ட தேகங்களுமிவையிற்றிலே யுண்டாகாநிற்கும்.

இதனாற் சொல்லியது, சூக்குமமாகிய மாயையிலே நின்று ஸ்தூலமாகிய தேகாதிபிரவஞ்சம் பரமேசுரனாலே கன்மத்துக்கீடாகத் தோன்றுமென்றும், உருவத்திலே நின்று முருவந் தோன்றாமல் அருவத்திலே நின்று முருவந் தோன்றுமென்றும், அதுக்குவமை சந்திரனுக்கு ஒருகலை காரணமாய் நிற்க மற்றுள்ள கலைகள் ஒன்றுகொன்று ஸ்தூலமாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருகிற தன்மைபோலும் என்னு முறைமையும்; அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

உருவரு மரங்கள்-உருவமாய் விளங்குகின்ற மரங்கள்,— வித்திற் கதித்தெழும்-தனக்கு முதலாகிய வித்தினின்றுந் தோன்றி யெழுதல்போல,— வினையால் விதிப்படி-வினைக்கேற்ப விதிவழியினால்,— உரு-இத்தூலவுடம்புகள்,— சூக்குமத்தே வரும்-தனக்கு முதலாகிய சூக்குமவுடம்பினின்றுந் தோன்றும்,— மரமும் வித்துங் கழியும்-மரமழிந்தவழி யதற்கு முதலாகிய வித்து முடனழியக்காண்டலின்,— பின்னழியுஞ் சூக்குமமெனின்-அதுபோலத் தூலவுடம்பு கெட்டவழி யதற்கு முதலாகிய சூக்குமவுடம்பு மழியும்போலுமெனின்? அற்றன்று. சூக்குமத்திற் றூலந்தோன்றுதன் மாத்திரைக் கொருபுடை யொப்புமையல்லது முற்றுவமை யன்மையான,— மதிக்கெழு கலைகள்போல வருவது போவதாமே-சந்திரனுக்குளவாகிய கலை பதினாறிற் காரணமாகிய வொருகலை யழியாதிருக்க மற்றக்கலைக டோன்றுதலு மொடுங்குதலு மாகுதலின், இங்கே யுருவமாக வுதித்திடா,— மரந் தோன்றுதல் வித்தையின்றி யமையாதவாறுபோல வத்தூலவுடம்பு தோன்றுதலுந் தனக்கொரு முதலின்வழிக் கூடாதென்னு மருத்தாபத்தியா லஃதுண்டென்ப தறியப்படுமென்பதாம், சூக்குமவுடம்புண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு.

இவை மூன்றுசெய்யுளானுஞ் சூக்குமவுடம்பு முதற்காரணமாமாறுணர்த்திக் தான்பல பேதங்காட்டுதல் பற்றிச் சற்காரியவாதத்திற் கிழுக்கின்மை கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மாக்க ளிச்சரீரத்தை யெடுக்குமிடத்து சூக்குமமே காரணமோ, அஃதன்றிக் காரணம் பல

வுளதோவென்று வினவ,மாயைமுதலொ
ன்றுக்கொன்று காரணமாயிருக்கு
மெனபதூஉங் குண்டலி சரு
வோபாதானமென்பதூஉ
முணர்த்துகிறார்

தூலமா முருவினுக்குச் சூக்கும முதலதற்கு, மூ
லமா னதற்குமூல மோகினி யதன்முதற்று, மேலதா
ம் விந்துசத்தி சிவமிவை மிசையாமெல்லாஞ், சாலவி
ன் றுருகுமானமாச் சிவத்தினைச் சார்ந்தபோது. (௬0)

(இ-ள்) தூலமா பஞ்சபூத பரிணாமமான தூலசரீரத்தி
முருவினுக் குப் புரியட்டதேகமான சூக்குமசரீரமே
கு சூக்கு மூலம்.
குமமுதல்

அதற்கு மூல அச்சூக்குமதேகத்துக்குக் காரணம் மூல
மான ப்பிரகிருதி.

அதற்கு மூல அப்பிரகிருதிக்குக்காரண மாயை.
மோகினி

அதன முதற் அசுத்தமாயைக்கு மேலாய பரம
று மேலதாம வி மான வுபாதானமாயிருக்குங் குண்டலி.
ந்து

சத்தி சிவமி இந்தக் குண்டலிக்கு மேலாகு சத்தி. இ
வை மிசையாம் வையிற்றுக கெல்லா மேலாய்ப் பரமகார
ணமா யழியாமனிற்குஞ் சிவம்.

எல்லாஞ் சா ஆன்மா யாதொரு போது சகலவுபாதி
லவின் றுருமா வாச்சிதமான பிரமத்தைப் பொருந்தினபோ
னமாச் சிவத்தி து, இந்தப் பேதங்களெல்லா மேரகவில்லை
னைச் சார்ந்த யாம். எ-று.
போது.

சாலத்-தாலவுறு தவகனிகூர் கழிபிகல். என்பதனு லறிக. இதற்குச் சித்தியாகமத் தறிக. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

தூலமா முருவினுக்கு ஸூக்குமமூக லதற்குமூலமான தற்கு மூலமோஹினி-ஸ்தூலதேகத்திற்கு முதற்காரணம் ஸூக்குமதேகமாகிய புரியஷ்டகம் அந்த புரியஷ்டகத்திற்கு முதற்காரணம் மஹானென்னும் பிரகிருதி அந்தப் பிரகிருதிக்கு முதற்காரணம் மோஹினியென்னும் அசுத்தமாயை—அதன்முதற்றான மேலாம விந்துசத்தி சிவமிவை மிணையாம-அந்த அசுத்தமாயைக்கு மேலான பிந்துவாகிய சத்தித்தத்துவமும் சிவமாகிய தத்தத்துவமும் வாக்குருபமாக ப்ரதம பந்தமான தேகமாம — எல்லாஞ் சாலவினருகுமானமாக சிவத்தினைச் சாரந்தபோது - இங்ஙனஞ் சொல்லப்பட்ட உபாதிகளெல்லாம் ஆன்மா சிவசாயுச்சியத்தை யடைந்தபோது அந்த வானமாவுக் கில்லையாமென் றிதன்பொருள்.

சிவனே யென்றது சிவத்தையென்று நபும்ஸகமாக வுரைத்தது நிர்க்குணப் பிரமத்தை யெனவறிக

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

காரண பரம்பரை யந்தச் சைவபௌராணிக மதானுசாரியாசாரியர்கள் மதத்திலுற் றனே காண்பிக்கின்றார்.

தூலமா முருவினுக்குச் சூக்குமமூதல்-ஸ்தூலதேகத்திற்குச் சூக்குமதேகம் முதற்காரணம் — அதற்குமூல மாயன்- அந்தக்

சூக்குமதேகத்திற்கு முதற்காரணம் பிரகிருதி. (தன்மாத்திரை யைந்து, மனம் புத்தி அங்காரமுமாக எட்டெனும் வசனத்தாக்குப் பிரகிருதி முதற்காரணம். எட்டுக்கொத்தென்று கொள்ளுமிடத்துப் பூதக்கொத்து, தன்மாத்திரைக் கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரியக் கொத்து, அந்தக்கரணக்கொத்து, குணக்கொத்து, பிரகிருதிக்கொத்து, கலாதிஐந்துமொருகொத்து, ஆக எட்டும் புரிவிற சூக்குமதேகத்தில் அட்டகம். புரியட்டகமென்று கொள்ளுமிடத்துப் பிரகிருதிமாயை இரண்டும் முதற்காரணமெனவறிக)— அதற்கு மூலமோகினி - அந்தப் பிரகிருதிக்கு முதற்காரணம் அசுத்தமாயை,—அதனுமுதற்றும் மேலதாம் விந்து-அந்த அசுத்தமாயைக்கு முதற்காரணம் உபரியனாயும் சுத்தமாயை,—சத்தி சிவாதி வை மிசையாம் - அந்தச் சுத்தமாயையைச் செலுத்தும் பராசத்தியும் பராசத்தியைச் செலுத்தும் பரசிவமும் மேலாய் விரியும்,—எல்லாம் - இப்போது சொல்லிய பிரபஞ்ச பிரபஞ்சமெல்லாம்,—ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்தபோது - ஆன்மா சொரூபமாகிய சிவத்துவாபிவியத்தியைப் பெற்றபோது,—காலமின் றாகும் - பந்திப்பிக்கும் முறைமையை விட்டிருக்கும்.

மதங்க பாரமேசுரத்தில் சிவத்துவம் பெற்ற முத்தான்மாவைக் குறித்துச் சிவன் பிரேரகரல்லர், சிவனைக் குறித்துத் தவனும் பிரேரியனல்லனென்று பேசப்பட்டது.

"பக்ஷார்த்தகதே சிவத்வேஷே, காரணத்வேந காரணம்;
நதம்பிரதிகதாசித்ஸ்யாத், ஸோபிகார்யத்வ கோசராத்;
அதீத. பரிபூர்ணச்ச ஸ்வதந்திரஸ் ஸர்வதோமுக."

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

தூலவுடம்பிற்கு முதற்காரணஞ் சூக்குமவுடம்பு, அதற்கு முதற்காரணம் மூலப்பகுதி, அதற்கு முதற்காரணம் மோகினி, அதுவே பரம முதற்காரணமெனப்படும். ஏனைக் குண்டலி விசத்தியோவெனின்? அது சுத்தமாய், இவையனைத்திற்குமவியாபகமாய் நிற்கும் இவ்விருவகைப்பிரபஞ்சமும் ஆன்மாச் சிவத்தினைச் சார்தற்கேதுவாகிய பக்குவகாலஞ் சாலுதற்பொருட்டு இப்பெத்தகாலத் துளவாயினவென்பதாம்.

அதன்முதற்குறித்தனைப்பது அம்மூலப்பகுதிக்கு முதலாகிய தாவென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் மோகினியின்மேனின்றது.

அதன்முதற்குறிணைத்தனறுவதித்து மேலதாமெனப் பரம முதற்காரணமாகக் கூறப்பட்டது.

இவ்வாறன்றி முதலென்றதனை எழுவாயாக வைத்துரைப்பார்க்கு, ரகரவிரட்டித்தல் பொருந்தாமையுஞ் சித்தாந்தத்திற்கு ஏலாமையுமுணர்க.

சிவமென்றது முனையது சுத்தமென்னும் பொருட்டு

சாலவாகுமென விளையும்.

சாலுதல் அமைதல்.

சார்ந்தவென்னும் பெயரெச்சம் ஏதுப்பொருட்கொண்டது.

இதனானே மேலதனைக் கனிகமுமாசணை நீக்கி வருஞ் செய்யுட்குத் தோற்றுவாயுஞ் செய்யப்பட்டது

'இருவினையின்பம்' என்னுஞ் செய்யுண் முதல், இதுகாறும் முதற்செய்யுளின் 'அலகிலாவுயிர்கள்கன்மத்தானையி னியாத்துச் செல்ல' என்றவிரண்டாங் கூற்றை வலியுறுத்தியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படிச் சந்திரனுக்குக் காரணகாரியம் பலவாயிருக்கிறதன்மைபோல மாயாகாரணகாரியமும் பலவாயிருக்குமோ வென்றவனை நோக்கி, அப்படிப் பலவாயிருக்குமென் றருளிச்செய்கிறார்.

தூலமாமுருவினுக்குச் சூக்குமமுதல - பூதகாரியமான தூலசரீரத்துக்குப் புரியட்டகமான சூக்குமதேகங் காரணமாயிருக்கும் — அதற்குமூலமான - அந்தப்புரியட்டகதேகத்துக்குக் காரணமாயிருக்கு மூலப்பிரகிருதி — அதற்குமூலமாகவும் - அந்தப் பிரகிருதிமாயைக்குக் காரணமாயிருக்கும் அசுத்த மாயை,— அதற்குமூலமாயிருக்கும் விந்துசத்தி-அந்த அசுத்தமாயைக்கு முதன்மையுமாய் அதற்கு மேற்பட்டதுமாயிருக்கும் விந்துவென்றுசொல்லப்பட்ட சத்திதத்துவம் — சிவமிவையிசையாம் - இவையிற்றுக்கெல்லாம் சிவதத்துவமேலாயிருக்கும். இவையாவுமாலை ஒருக்காலும் விடப்படாதோவென்னில்?— எல்லாச் சகலவினருக்கு மானமாகச் சிவஞானச் சாதனப்போது - ஆணவமாயுங் கிருவினையொப்புஞ் சத்திநிபாதமும் உண்டான வலகாத்து ஆசாரியருமேலே யுண்மையைப் பெற்று அந்தச்சிவத்துடனே யானபொழுது, இங்ஙனஞ்சொல்லப்பட்டவை யெல்லாம் விட்டுநீங்கி நேராக வில்லையாய்விடும்.

இந்நூற்சொல்லியது தூலசரீரத்துக்குக் காரணஞ்சூக்குமசரீரமென்றும், சூக்குமசரீரத்துக்குக் காரணமவ்வியத்தமென்றும், அவ்வியத்தத்துக்குக்காரணம் காரணமாயையென்றும், அசுத்தமாயைக்கு முதன்மையுமாய் மேலுமாயிருக்கும் விந்து சத்தியென்றும், இவையெல்லாத்துக்கு மேலாயிருக்கும் சிவதத்துவமென்றும், இவையெல்லாம் நேராகவில்லையாய்ப்போம் ஆ

ன்மா அந்தச் சிவத்தைப் பொருந்திஞல் என்னுமுறைமையுமறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆலமாமுருவினுக்கு முதலாகுங்கருமம் - தூலவுடம்பினுக்கு முதற்காரணஞ் சூக்குமவுடம்பு,— அதற்குமூலமான - அதற்குமுதற்காரண மூலப்பகுதி,— அதற்குமூலமோகினி,— அதற்கு முதற்காரணமோகினி,— அதன் முதற்குணமேலதாம்,— மூலப்பகுதிக்கு முதலாகியமோகினி பரமமுதற்காரணமென்பர்,— விந்துசத்திசிவமிவையிணையாம - குண்டலிசத்தியோவெனின் அநுசந்தமாயிவை யனைத்திற்கும வியாபகமாய்நிற்கும.— எல்லாம-இவ்விருவகைப்பிரபஞ்சமும்,— ஆன்மாசத்துவத்தினைச்சார்ந்தபோது சாலவினமுறும - ஆன்மாசிவத்தினைச்சார்ந்த கேதுவாகியபக்குவகால மனைத்தற்பொருட்டு இப்பெத்தகாலத்துனவாவன

இத்தொடரே மேலதனைச் சனிக்குமாசங்கைநீக்கி வருஞ்செய்யுட்குத் தோற்றுவாயுஞ்செய்யப்பட்டது

'இருவினையின்பம்'என்னுஞ் செய்யுண்முத லிருகாலமு முதற்செய்யுளின 'அலகிலாவுயிர்கள் கன்மத்தாணையின் மாந்து செலல்' என்ற இரண்டாமடிக்கூறறை வலியுறுத்தப்பட்டது

☞ உ-சூ, உ-அ, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

—o—

இப்படிச் சிவன் றனுவாதிகளைக் கூட்டிப் போகத்தை யான்மாக்களுக்குப் புசிப்பிக்கைக்குக் கா

ரணம்யாதெனின்? அவனுக்கொருபிரயோ
சனநிமித்தமன்று, ஆன்மாக்களைமோ
க்ஷமடைவிப்பிக்கையேகாரண
மென றுணர்த்துகின்றார்.

அரன்விதி யருளதென்றே யறைந்தன னதுமுன்னே
துரைநர கருந்துறக்கந் தனுகரணாதியெல்லாம்
வருவதுஞ் செய்தநாதி மலங்களும் மருந்தாற்றீர்த்துப்
பரகதி யதுவுந்தந்து பாதபங் கயமுஞ்சூட்டும். (ருக)

(இ-ள்.) அரனவிதி யருளதென்றே யறைந்தன னதுமுன்னே — முதற்சூத்திரத்திற் சிவனுடைமாக்களைக் குறித்துச் செய்யுஞ் செயல்களெல்லாம் 'நிக்ரகங்களாலு நேசத்தால் லீசனசெய்வன' என்றும 'மன்னுயிரெல்லவியாதி மருத்துவன்' என வுவமித்து முன்னேயுரைத்தனன்.

துரைநர கருந்துறக்கந் தனுகரணாதியெல்லாம் வருவதுஞ் செய்து — அரிதாகிய சொர்க்கமுதலிய மூவிடத்துக் குரிய தனுகரண புவனபோகங்களை யெல்லா முண்டாகும்படிக் கற்பித்து,

அநாதி மலங்களிம மருந்தாற் றீர்த்து — அநாதியாய் வருகிற மல மாயாதியாகிய வியாதியுடைய போகத்துக்குப் பொருட்டுள்ளதுமாகிய சுவர்க்கநரகங்களி லுண்டான போகங்களைப் புசிப்பித்துத் தீர்த்து,

பரகதி யதுவுந்தந்து — மேலான சிவானந்தானுபூதியைக் கொடுத்து,

பாதபங்கய முஞ்சூட்டும். — தனது காருண்ணியத்தாற் சீர்பாதகமலங்களை யிடைவிடாமற் பொருந்தியிருக்கும்படி சூட்டாநிற்கும். எ-று.

உம்மை - எண்

இசற்குக கிரணுகமம். (ருக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் கர்த்தா தநுகரணங்களைக் கூட்டிப் புசிப்பித்து, மலபரிபாகத்தில் அநுக்கிரகம்பண்ணி, மோக்ஷத்தைக் கொடுத்ததை யுணர்த்துதல்.

அரனவிழ்ப்பருளென்றே முதனையறைந்தனன் - சிருஷ்டியாதி க்ருத்தியங்கள் அருளுவாய்ப்பண்ணுகிறது அருளினாலேயென்று முன்னேசொன்னீரும் — அதுவுந்தவிர கருத்தாக்கள் தநுகரணாதியெல்லாம் வருவதற்குச்செய்ய அநாதிமலங்களும் மருந்தாற்றித்துப் பரசத்தியுமுந்து பாகபயமுங் கூட்டும் - அந்தந்தாவதும் பூமியிலும் நரகத்திலும் சுவர்க்கத்திலும் காமாநுரூபமாகப் பொருந்துகிற ஆன்மாக்களுக்கு தேகத்தையும் மனசுமுதலாகிய கரணங்களையும் புவனங்களையும் போகங்களையும் இவையெல்லாங் கூடியதாகப் பண்ணி, அநாதிமலமாகிய ஆணவம் மாயை காமியமென்றும் ஆன்மவியாதிகளை சுகதுக்கங்களாகிய ஔஷதத்தையும் புசிப்பித்துப் போக்கி, முன்னடைந்த அதோமார்க்கத்தை யொழித்து, ஊர்த்தவமாயிருக்கிற ஞானமார்க்கத்தைப் பிரகாசிப்பித்து, சாவதநிபாதமென்னு முறைமையாலே சிவன் தனது சாயுச்சியத்தையுங்கொடுப்பார்.

பாதபங்கயமென்றது ரூபகம்.

பரமானந்தாமிருதமாகிய மதுவை ஜீவாத்மாவாகிய †ப்ரமரம் புசிக்கப்பண்ணுவரென நிதனபொருள் †பரமரம்-வண்டு.

மாயாகாரியமாகிய தநுகரணாதியால் காரண மாகிய

கர்மங்களுக்கு நாசமெவ்வாறென்னில்? காஷ்டத் தக்கினி, கா ஷ்டத்தைத் தகிக்குமாப்போல வெனவறிக

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——0——

சுத்தமாயையி லசுத்தமாயை தோன்றுமென்றுஞ் சூக்கு மதேகத்திற் றூலதேகந் தோன்றுமென்றுஞ் சொல்லுஞ் சைவ பௌராணிக மதானுசாரிகளா யிருக்கின்ற வாசாரியாமத மனுவா விதந்து, சுத்த சைவசித்தாந்தாசிரியர் சொல்லு மதானுசார மாய்; சுத்தமாயை நித்தியமென்றும், முடிவி லசாடசமென்றுந் திருவிருத்தத்தாற் றூலதேகஞ் சாதாரணத்தத்துவ புவனமாகி ய முதற்காரணத்தி னின்றுஞ் சூக்குமதேகத்தை நிமித்தகார ணமாகப் பரிணமிக்கொண் டுண்டாமென்று முதாகரித்தற் குப க்கிரமிக்கின்றார்.

அரனவிதி - பதிபஞ்சகிருத்தியம்,—அருள தென்றே மு ன்னேயுரைத்தனம் - அந்தச் சிவனது பஞ்சகிருத்தியம் நிக்கிர கரூபமா யிருக்கின்றது மனுக்கிரகந்தானே யென்று முன் பதி பரீக்ஷையிற் சொன்னோம், அப்படியே,— அதுவு ம் - அந்த வருளுந் தொழிலும்,—நரை நரகந் துறக்கந் த னுகரணாதி யெல்லாம் - தங்களது கலப்பிலுமே மலபரிபாகத் தைப் பண்ணுஞ் சூக்குமதேகந் தூலதேக முதலிய மாயாகா ரியங்களை,— வருவதுஞ்செய்து - மாயையினின்று முற்பத்திப ண்ணி,—இம்மருந்தால - இந்தமாயாகாரியமாகிய ஔடதத்தா ல்,—அநாதி மலங்கடீர்த்து - மலமாயா கன்மங்களைப்போ க்கி,—பாக்கி யதுவுந் தந்து - பரத்திலே போசித்து,—பாத பங்கயமுஞ் சூடும் - சிவத்துவாபி வியத்தியையுஞ் செ ய்யும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி, இருபத்திரண்டுசெய்யுளான் மேன்முறை கூறநினைக்கட்டபடி முறைமையெல்லாந் தெரித்துணர்த்துகின்றார்.

எல்லாஞ் சிவத்தினைச் சார்ந்தபோது சாலவின்முதலாகிய வதுவும், இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைகளினின்றா இறைவன் செய்யுஞ் செயலென்றும், அது கருணையே யென்றும், தொகுத்தும் வகுத்தும் மேலே கூறிப்போந்தாமாகலின், அது தனுகரணங்கள் மலங்கன்மங்களாகிய நோக்குகருத்தாக அவருள்ளமைக்கப்பட்டன அவற்றால் அந்நோக்கிந்த வழிப் பரஞானத்தைக் கிரகித்த சிவானந்தப்பெரும்பேறு அவருற்றாரப்படுமென்பதாம்.

சத்தியென்பது ஞானத்தினையுணர்த்தல் வடமொழிமரபு.

முன்னேயறைந்தனன் என்றதனும் அமர்ந்துசெலக்க ஐவகைத்தாகச்சுட்டப்படுமியல்பெல்லாம் ஈண்டே கூறற்பாலனவாயினும், ஒவ்வொன்றினையும்பற்றி ஆண்டாண்டு ஒருங்குவைத்து நோக்கப்பட்டன; அவையெல்லாம் ஈண்டுப்பதத்துரைத்துக்கொண்டினாக வென்பதூஉமாயிற்று.

மாயாகாரியமெல்லாஞ் சிவத்தினைச் சார்கற்பொருட்டாமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு, அநாதிமலங்களின் மருங்காற்றீர்த்துப் பரகதியதுவுந்தந்து பாத பங்கயமுஞ் சூட்டினனென்றார்.

மலந்தீர்க்கு முகத்தால் அவை யங்ஙனமாமென்றவாறாயிற்று.

“இலனென்று தீயவை செய்யற்க” என்றாற்போல அனன்று ஈண்டுத் தன்மைக்கண் வந்தது.

மேல் இன்பத்துன்பமருத்தியே வினையறுபயனென்றவாசிரியர், ஈண்டு மாயாகாரியங்களை மருந்தென்றனை மலைவாம் போலுமெனின்? ஆகாது; நோய் தீர்தற்கு ஏதுவாயினவெல்லாம் மருந்தெனப்படுமாகலின்.

அது "உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென — றப்பானாற் கூற்றே மருந்து" என்பதனானுமறிக.

இஃது ஏகதேசவுருவகம்.

இருவினை பேற்கு றிப்போகத்தால் அவைகளுமம் மான் மோகினி விந்துவெல்லாம், மருந்தையுக்கு மருந்துபோல, மலமிளிநீக்கியநுகிய அறுக்குபடாப் பிரகவிருத்தியாதல் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி யுயிர்களுடைய காத்திராச சரீரங்களையும் ஆன்மாக்களையும் கூட்டிக் காரியப்படுத்துகிறது என்ன பயனைக் கருதிச் செய்கிறானென்னும், அப்படிக் கூட்டிக் காரியப்பட்டு வருகிற ஆன்மாக்களுக்குத்தான் பயனென்னென்ற புந்தினை நோக்கி, மேலும் அருளிச்செய்கிறார்.

ஆனவிதி யருளதென்றே யறைந்தன னதுவுமன்னே-பரமேசுரன் செய்யப்பட்ட கிருத்தியங்களெல்லாம் அவனுடைய காருண்ணியமென்றே முன்னற் சூத்திரங்களிலே சொன்னோம். இனி யான்மாக்களுக்கு அந்தக்காத்தாவால் பயனேதென்னின்?—தரா நர கருந்தறக்கந் தனுகரணாதியெல்லாம் வருவதனு செய்து-பூமி நரகு பெறுதற்கரிய சுவர்க்கம் சரீரத்துவம் புவனம் போகம் இவையெல்லாம் உண்டாம்படியுங் கந்

பித்து,—அநாதி மலங்க ளிம்மருக்கார்நீத்து-அநாதியே யுள்ளவனே யுள்ள மலமாயா கன்மங்களை நரக சுவர்க்கமுதலாகச் சொல்லப்பட்ட இந்த ஔஷதங்களாலே போக்கி, இப்படி கன்மங்களைப் பூமியிலேயிருந்து ஆர்ஜ்ஜிதத்தாற் கராசுவாகக் களிலேபோயனுபவித்தும் தொலைந்து கன்மமெல்லாம் வந்தவ வகாரத்து,—பாகதி யநுவுந்தந்து பாதபங்கயமுஞ் சூட்டும்-மேலான மோட்சத்தையும் இருவினைமலநீங்கி சீபாதமாகிய தாமரைமலர்களையுங் காட்சிதரும்.

இந்நூற் சொல்லியது, பரமேசுரன் செய்கிற கிருத்தியங்களெல்லாம் ஆன்மாக்களையுய்க்கக் கருணையினாலென்றும், சொர்க்கநரக முதலாகச் சொல்லப்பட்ட ஔஷதங்களாலே ஆன்மாக்களுக்கு அநாதியேயுள்ள மலமாயாகன்மங்களைப் போக்கித் தனது திருவடியையுஞ் சூட்டுமென்று முறைமையை யறிவித்தது.

'சூக்குமம்' 'விதிப்படி' 'தூலமாமுரு' 'அரணவிதி' ஆகத் திருவிருத்தங்கள் நாலு முடிந்தன.

'இருவினை' என்ற திருவிருத்தமுதல் 'அரணவிதி' என்ற திருவிருத்த மீறாகத் திருவிருத்தம் நாற்பத்தெட்டும் கன்மமலத்தின் காரணகாரிய மருளிச்செய்ததெனக் கொள்க.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அதுவும் - எல்லாஞ் சிவத்தினைச் சார்ந்தபோது சால வினைமுதலாகிய அதுவும்,—அரணவிதி-இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைகளினின்று இறைவன் செய்யுஞ் செய்தியென்றும்,—அருளென்று-அது கருணையேயென்றும்,—அரைந்தனன் முன்னே-தொகுத்தும் வகுத்தும் மேலே கூறிப்போந்தா மாதலின்,—நரைகர சருக்குறக்கந் தனுகரணாதியெல்

லாம்-பூமி நரக மரிய துறக்கம் முதலியவற்றிற்சென்றப்பயனை யனுப்பவித்தற் கேதுவாகிய தனுகரணாதிகளை,—வருவதாஞ்செய்து - உண்டாகச்செய்து,— அநாதிமலங்கள் - அநாதிமல கன்மங்களாகிய நோய்களை,—இம்மருந்தாற்றீர்த்து - இத்தநுகரணாதிகளாகிய மருந்துகளினாலே தீர்த்து,— பரகதி யதுவுந்தந்து - பரஞானத்தைவிளக்கி,—பாதபங்கயமுஞ் சூட்டும் - திருவடித்தாமரை சூட்டுதலாலாகிய சிவானந்தப்பெருமையையு மவனாற்றரப்படும்.

இதனானே மேற்கூறிப்போந்த தூல சூக்கும மான போகி வி விந்து வெல்லாம், மருத்துவனுக்கு மருந்துபோல மலவயித்தியனாகிய வரனுக்குப் பரிக்கிரக விபூதியாதல் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் கூறிய மாயாகாரிய மான போகத்தை
மறைக்குந் தொழிந்து மலங்களைப் போக்கவுற
றென வுரைக்கவாதிகூற, இத் தனுவா
தி பசுக்கமாயினு மிஃதில்லாவிட்ட
து மோட்சத்துக் கேதுவின
றென வுதாரணபூர்வமா
க வுரைத்தருகிறார்.

எழுமுடல் கரணமாதி யிவைமல மலமலத்தாற்,
கழுவுவ னென்றுசொன்ன காரண மென்னையென்னிற்,
செழுநவ வறுவைசாணி யுவர்செறி யித்தழுக்கை,
முழுவதுங் கழிப்பன்மாயை கொடுமல மொழிப்பன்முன்னோன். (௫௨)

(இ-ள்.) எழுமு
டல் கரண
மாதியிவை

மாயையினலுண்டாகிய தனுவாதிக ளெல்லா மலசம்பந்தமாதலான மலமெனப் பெறும்.

மலம்

மலமலத்தாற
கழுவுவனென
றுசொன்ன கார
ணமென்னையெ
னனில்

ஆணவமாகிய சிக்ந மாயாமலத்தைக் கூட்டி மூலமலத்தைப் போக்குவனென்று நீர் சொன்னதென்னெனில்?

செழுநவ வறு
வைசாணி யுவர்
செறிவித் தழுக்
கை முழுவதுங்க
ழிப்பன

மேன்மைபொருந்திய புதுமையினையுடைய புடைவையை, கோவினது மலமாயிருக்கிற சாணகமுவர் காரமுதலியவற்றாற் காருவாக வைக்கிற ரேசகர் நின்மலமாக்கா நிற்பன. அதுதன்மைபோல,

மாயை கொடு
மலமொழிப்பன
முனமேனை.

மலினமாயிருக்கிற வானமாவைச் சிவனுங் கலாதியாகிய மலினத்தைக் கூட்டித் தனது கிரியாசத்தியால் அதனைப் போக்கா நிற்பன. எ-று.

இதற்குக் கிரணாகமம். (௫௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலுதாரணம்.

எழுமுடல்கரணமாதி யிவைமல மலமலத்தாற் கழுவுவனென்றுசொன்ன காரணமென்னையென்னில் - உண்டாகப்பட்டதேகமும் மனஇந்திரியாதிகளு மிதகளெல்லாம் அஞ்ஞான

ட. அஞ்ஞானத்தை அஞ்ஞானங்கொண்டே போக்குவனென்றது ஏதுபோலெனின்?— செழுந்தவவறுவை சாணி யுவர் செறிவித்து அழுக்கை முழுவதுங் கழிப்பன மாயைகொடு மலமொழிப்பன் முன்னோன் - இவ்விடத்து + காருவானவன் அழுக்கேறியகோடிப் புடைவையிலே சாணியுமுவர்மண்ணுந் தோய்த்து மிகவுங் கறுத்துப்போகச்செய்யப்பண்ணி, முன்னேயிருந்த அழுக்கையுங் கூடவிடுவித்துப் பிரகாசவெள்ளையாக்குவன் அப்படிப்போலக் கர்த்தாவானவன் மாயாகாரியங்கொண்டே ஆன்மாக்களுடைய அஞ்ஞானத்தைப் போக்குவனென்றதென்பொருள்.

+ காரு - வண்ணான்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

மாயாகாரியத்தால் மலத்தைப் போக்குமெனப் படாதென்னை வடுக்குமென றுரைக்கின்றார்

எழுமுடல் கரணமாகு மிவை மலம் - மாயையினுண்டாகிய தனுகரணாதிகளெல்லா மழுக்கு—மலமலத்தால் கழுவுவனென்று சொன்னது என்னையெனின் - ஆணவமலமாகிய அழுக்கை மாயாமலமாகிய அழுக்கினால் போக்குவனென்றதற்குத் திருஷ்டாந்தமேதெனின்?—செழுந்தவ வறுவை சாணி யுவர் செறிவித்து - அழுக்கேறிய கோடிப்புடைவையிற் சாணியுவர் மண் முதலியவற்றைப் பிசறி,—அழுக்கைமுழுவதுங் கழிப்பன- புடைவையின் முன்னிருக்க தோஷத்தோடாகந்தக தோஷ முற்றுங் காருவானவன் நீக்குவன். அப்படி,—மாயைகொடு-மாயாமலத்தினால்,— முன்னோன் - சிவன்,— மலம்-ஆணவமலத்தை,—ஒழிப்பன.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அழுக்கைக்கொண்டு அழுக்கை நீக்கவேண்டுதலின், மாயேயமலமே ஏனை மலங்கட்கு மருந்தாகக் கூறப்பட்டனவென்பதாம்.

மலம் அழுக்கு என்பன ஒருபொருட்கிளவி.

இதனுண்மை மேலதுவலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி நீர் முன்சொல்லப்பட்ட மாயாகாரியங்கள் ஆன்மபோதத்தை மறைக்கும் தொழிற்று, மலங்களெல்லாம் போக்குமென்று நீர் சொன்னதெப்படியென்ற ஐக்கியவாதியை மறுத்தருளிச்செய்கிறார்.

எழுமுடல கரணாதி யிவைமலம்-உண்டாகப்பட்ட தனு கரண புவனபோகமென்று சொல்லப்பட்ட இவையெல்லா மாயாமலம்,—மலமலத்தாற் கழுவு மென்றுசொன்ன காரண மென்னவெனில் - இந்த மாயாமலத்தைக் கொண்டு ஆணவமலத்தைப் போக்குமென்று நீர் சொன்னபடி யெப்படி யெனனில்?—செழுமவ வறுவைசாணியுவர் செறிவித்தழுக்கை முழுவதுங் கழிப்பன - வாப்பமுறப் புனையும் பொருக்கிருக்கப்பட்டநின்ற புடைவையை சாணத்தையு முவரையுங் கூட்டி யதனுடைய வழுக்கெல்லாத்தையும் நீக்கிப் போக்காநிற்பன அத்தனைபோல்,—மாயைகொடு மலமொழிப்பன் முனைவன் - பரமேசுரனு மாயையிலே யுண்டான தனு கரண புவன போகங்களைக் கொண்டு, ஆணவமலத்தினது விருத்திகளைப் போக்காநிற்பன.

இதனாற் சொல்லியது, மாயையும் மலம், ஆணவமும் மலம். ஆனால் ஒரு மலத்தைக்கொண்டு ஒருமலத்தைப் போக்குவனென்றது எப்படியென்னை? புடைவையி லுண்டான வழுக்கைச் சாணத்தையும் உவரையுங் கூட்டி யதனுடைய வழுக்குக ளெல்லாத்தையும் ஒருத்தன் போக்குந் தன்மைபோல, பரமேசுரனு மாயாமலத்தைக்கொண்டு ஆணவமலத்தைப் போக்குவனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

எழுமுடல் கரணமாதி யிவைமலம் - எழுகின்ற தனுகரண முதலியனவு மலமாம்,— மலமலத்தாற் கழுவுவனென்று சொன்ன காரணமென்னை யெனின் - மலத்தைமலத்தா னீக்குவனென்று சொன்ன காரண மியாதெனில்?— செழுமழுக்குறுவை - செழிப்ப கோடிவஸ்திரத்தில்,— சாணியுவர்செறிவித்து - சாணமுவரு முதலியவழுக்கைக்கொண்டு,— அழுக்கை முழுவதுங்கழிப்பன - அழுக்கை முழுவதுங் கழிக்குஞ் செய்யுமவனைப்போல,— முன்னோனுமாயையொடு மலமொழிப்பன - முதல்வன் மாயேயமலத்தினை மருந்தாகக்கொண்டு ஏனைமலங் களைத் தீர்ப்பனென்பதாம்.

இதனானே மேலது வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங்கூறிய கன்மத்தான், மாயாதனுவிற் போகம் புசிப்பிப்பனென்றீர், அஃதொசுக்கும மாயவி லக்கணம் யாதென? மேலுணர்த்துகிறார்.

நித்தமா யருவாயேக நிலையதா யகிலத்துக்கோர்,
வித்துமா யசித்தாயெங்கும் வியாபியாய விமலனுக்
கோர், சத்தியாய்ப் புவனபோகந் தனுகரணமுமுயி
ர்க்காய, வைத்ததோர் மலமாயமாயை மயக்கமுஞ் செ
ய்யுமன்றே. (௫௧)

(இ-ள்) நித்தமாய — பிரபஞ்ச சங்காரத்தில் இலயித்தான மீளவு மிளையுண்டாகக்குமதற்கோ ருபாதான மில்லையாதலாலே யிதற்கநித்தியத்துவங் கூடாதபடியினாலே நாசமில்லாததாய,

அருவாய் — ஆன்மாக்கள்செய்த கன்மத்துக்கீடாகப்பி ரசுருதியிற்றோன்றிய பதார்த்தங்களைப் புசிக்கும்படி யிச்சையைப்பண்ணி யிருக்கவுந் தானொன்றுருக்கதாய்,

ஏகநிலையதாய் — அநேகமென்கிறதற்குப் பிரமாணமில்லாத படியா லொன்றானதாய்,

அகிலத்துக்கோர் வித்துமாய் — சகலசகத்துக்குங்காரணமாய்,

அசித்தாய் — காரியஞ் சடமாயிருக்கையினாலே தானுஞ் சடமாய்,

எங்கும் வியாபியாய் — எவ்விடத்துங் காரியங் காணப்படுகையினாலே வியாபகமாய்,

விமலனுக்கோர் சத்தியாய் — நின்மலனான சிவனுக்குப் பரிக்கிரக சத்தியானதாய்,

புவனபோகந் தனுகரணமுமுயிர்க்காய் — ஆன்மாக்களுக்கு மாயேயமான தனுவாதிகளை யுண்டாக்குவதாய்,

வைத்ததோர் மலமாய — ஆணவ மாயை கன்மமென மூவகைப்பட்ட மலங்களில் ஒன்றென்றுசொல்லுமதாய்,

மாயைமயக்க முஞ் செய்யுமன்றே. — மாயையான தான்மாக்களை மயக்கத்தை யுஞ்செய்யாநிற்கும—எ-று.

எல்லாசகத்தையு மயக்கத்தைப பண்ணுகையான மாயை யென்றா (௫௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மாயாலக்ஷண முணர்த்துதல்

நித்தமாய் - காரிய காரண மிரண்டும அநித்தியமெனனும் பௌத்தமத ஸநிராசார்த்தமாக,—அருவாய்-ரூபமாயிருக்கிற பரமாணுவேகாரணமெனனும கையாயிகமதநிராசார்த்தமாக,—ஏகநிலையதாய்-வேதாகமத்தைக் கேட்கையைப்போல் பிரதிபுருஷ நியதமாக மாயையுமுண்டென்பதன்றி சகலராகிய ஆன்மாக்களுக்குச் சாதாரணமாக மாயையொன்றேயென்றது,—அகிலத்துக்கோர் வித்துமாய் - பிரபஞ்சம சூனியோபாதான மெனனும் மாத்தியமிகமதம்போலன்றி சாகோபசாகாதிகளையுடைய விருக்ஷத்துக்கு சூக்ஷுமமாகிய வித்துப்போல ஸ்தூலமாகிய பிரபஞ்சத்துக்கு சூக்குமமாகிய மாயையுண்டென்றது,—அசித்தாய் - சிற்சத்தியே ஜகதுபாதான காரணமெனனும் அத்வைதவாதி நிராசார்த்தமாக் ஜடமென்றது,—எங்கும் வியாபியாய் - ஸ்வகாரியமாகிய முப்பத்தொரு தத்துவங்களிலும் தத்காரியமாகிய தாத்துவிகங்களிலும வியாபித்து நிற்பதாய்,—விமலனுக்கோர் சத்தியாய் - நின்மல சிவனுக்கொரு பரிக்கிரக சத்தியாய்,—புவனபோகத் தனுகரணமு முயிர்க்காய்-ஆன்மாக்களு

க்குக் கருமாநுரூபமாகத் தநுகரணபுவனபோகங்களுண்டாவதற்கு உபாதாநகாரணமாய்,—வைந்தவோர்மலமாய் - ஆணவமாயைகாமியமென றெண்ணப்பட்ட மூன்றுமலங்களுள் ஒருமலமாய்,—மயக்கஞ்செய்யுமன்றே - மாயை ஆன்மாக்களைப் பொய்யைமெய்யென்றுமடி மயக்கறிவைப்பண்ணி அநாதியேயுள்ளதாயிந்த மாயையென றிதன்பொருள்.

§ நிராகார்த்தகம் - தளருநல்

तदुक्तं पौष्करे – शिवेच्छाकार्याविनीयुक्त-
रूपा च कलाद्याश्रया स्मृता । सायुतानि च सावय-
षां सकलानां च नीरूपाः ॥ प्रलयेऽपि च सा नित्या
स्य कलादिकारणारम्भके । नित्यैवामीतिका-
रणं मायासूक्ष्मसूक्ष्मा तत्कस्य तत् ॥ कार्यकृत्त्वि
चयच्छक्तिसि पदार्थस्थं । विस्तीर्णस्वात्मयाधर्मज
क्लंयपरिणामादिकृत् ॥

श्रीमत्स्वायम्भुवे – मायातत्त्वं जगद्बीजं नित्यं
व्यापि तत्कृत् । विभुकैकं सूक्ष्मं तन्नाशि व्याप-
कं च तत् ॥

श्रीमत्किरणेऽपि – तदेकं शिवं बीजं जग-
च्छक्तिमच्छक्तिमत् । सहकार्यादिकारणं सर्वेषा-
मव्यापकं च तत् ॥ कलादिनाशीय भेदेन जगद्
भेदहेतुना । भेदेनावाप्यते वृत्तिं तत्त्व-
तत्त्वसंहिता ॥ तदेवं तत्र सैवं व्याप्यकार्य

[illegible] இதி।

குணத்திரய ¶சாமியாவஸ்தா ரூபமாயிருக்கிற அவ்யக்தமேது+த்துபாதாநகாரணமெனப்பொருந்தும், மாயையென்றொன்றிவேண்டாவெனின் இக்குணங்களானது மூலகாரணமாகாது. † தார்க்கிகர்களிலே குண சாமியாவஸ்தை யல்லாமல் பரத்தக்காக பிரகிருதியில்லையென்று சொல்லுவார்கள், அது பிரமாணிகரல்ல குண சாமியாவஸ்தைக்கு பரப பிரகிருதியெ லபேக்ஷிதகாரகம ஆகையா லிதுமூலகாரணமல்ல

† தார்க்கிகர் - வேறு சித்தாந்தம். சாமியம் - சமானம்.

[illegible] இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஆதலால் அசுத்தமாயையினிலக்கணமேதென வினவிசைக்கின்றார்.

நித்தமாட - காரிய காரணங்களிரண்டுமே அநித்தியமெனனும் பௌத்தனுக்குப்போல நித்தியமின்றி, — அருவாய்-உருவாகிய பரமாணுவே காரணமெனனுமனைய யிகனுக்குப்போ லுருவமன்

றி,—ஏகநிலையதாய்-மாயை யனந்த மென்றும் சத்தென்றுஞ் சொல்லும் வேதாந்தைகதேசிக்கும் சுத்த வேதாந்திகட்கும் போல முறைமையி னேகமின்றி சத்தன்றி,—அகிலத்துக்கோர் வித்துமாய்-சூனியோபாதானம் சூனியம் பிரபஞ்சமென்னும் பௌத்தைகதேசிக்குப்போலச் சூனியமின்றி,—அபேதமாய்-சித்பிரமோபாதானத்தினின்றும் சடசித் துற்பத்தியாமென்றா பரிணாமவேதாந்திக்கும் நாராயணபிரகிருதியினின்றுஞ் சடசித்துண்டாமென்னும் பாஞ்சராத்திரிக்கும்போலச் சித்தன்றி,—அருவியாபியாய்-கண்ணுக்குத்தோற்றிய பூதங்காரணமென்னு முலோகாயதனுக்குப்போல வியாபியன்றி,—சிவனுக்கோ ரசத்தியாய்-சிவனுக்குச் சமவேத சிற்சத்தியொன்று பரிக்கிரக சத்தியிரண்டு ஆக மூன்றினுளொரு பரிக்கிரக சத்தியாய்,—புவனபோக தனுகரணமு முயிர்க்காய் வைத்ததோர மலமாய்-பிறபோக்கியப்பொருள்களையும் தூலசரீரசூக்கும சரீரங்களையு மிலக்கணையா லவைகளாலுண்டாகிய சிற்றறிவையுங் கொடுத்த மாயாமலமாய்,—மாயை மயக்கஞ்செய்யுமென்றே-மாயையானது அந்தச்சிற்றறிவைப்பற்றி நான்சுகி நான் துக்கி யென்றுவரும் விபரீதஞானத்தையு முயிர்க்குப்பண்ணுந்தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி, அம்மாயைமாயேயங்களது இயல்பாவது என்னையென்பார்க்கு, அதனை வகுத்துக் கூறுவான்றொடங்கினார்.

உலகிற்கு முதற்காரணமெனப்படும் மாயையாவது, நித்தமாதன் முதலிய இலக்கணங்களை யுடையதென்பதாம்.

மாயையின் சொரூபங்கூறுவார், புவனபோகந் தனுகரணமும்முயிர்க்காயென்றும், அதுவும் மாத்தியமிகர் மதம்பற்றிச் சூனி

யத்திற் செல்லாமைப்பொருட்டு உலகத்திற்கோர் வித்துமாமெ
ன்றும், அதுவுங் கணிகவாதிகள் மதம்பற்றிச் சார்பினிற் செல்
லாமைப்பொருட்டு நித்தமாமென்றும், அதுவும் உலோகாயதர்
மதம்பற்றிப் பூதங்களிற் செல்லாமைப்பொருட்டு அருவாமென
்றும், அதுவும் வைசேடிகர் முதலியோர் மதம்பற்றிப் பரமாணு
க்களிற் செல்லாமைப்பொருட்டு எங்கும் வியாபியாமென்றும்,
அதுவுஞ் சாங்கியர் மதம்பற்றி முக்குணங்களிற் செல்லாமைப்
பொருட்டு ஏகநிலையதாமென்றும், அதுவும் பாற்கரியர் மதம்ப
ற்றிப் பிரமத்திற் செல்லாமைப்பொருட்டு விமலனுக்கோர் சத்
தியாமென்றும், அதுவுஞ் சிவாத்துவிதர் மதம்பற்றிச் சிற்சத்தி
யிற்செல்லாமைப்பொருட்டு அசித்தாமென்றும், அதுவும் மாயா
வாதி மதம்பற்றி அநிர்வசனத்திற் செல்லாமைப்பொருட்டு வை
த்தோர் மலமாமென்றும், இத்தன்மைத்தாகிய மாயை, ஆண
வமலம்போல மயக்கமே செய்யுமென்னுஞ் சைவருளொருசாரா
ரை மறுத்தற்பொருட்டு, மயக்கமுஞ் செய்யுமென்றுங் கூறினார்.

செய்யுளாகலின் முறை பிறழ வைக்கப்பட்டன.

ஈண்டு மயக்கமென்றது விபரீதவுணர்வை.

மயக்கமென்னு மும்மை, அது தன்னியல்பன்மை யுணர
நின்றது.

நிரம்பவழகியருரை வருமாறு

இப்படிச் சொல்லப்பட்ட மாயையினுடைய விலக்கணமென
ப்படியென்ற மாணாக்கனைநோக்கி; மாயையினிலக்கண மருளிச்
செய்கிறார்

(அசுத்தமாயையானது) நித்தமாய்-அழியாததாய், —அரு
வாய் - ஒருவர்க்குந் தோன்றாததாய்,—ஏகநிலையதாய் - ஒன்று

விருக்கிற நிலைமையினையுடைத்தாய்,—அகிலத்துக்கோர் வித்து
மாய் - பிரபஞ்சத்துக்கொரு காரணமுமாய்,—அசித்தாய் - அ
சேதனமுமாய்,—எங்கும்வியாபியாய் - எவ்விடத்திலும் வியா
பகத்தையுமுடைத்தாய்,—விமலனுக்கோர் சத்தியாய்-மலரகித
னாயிருக்கிற பரமேசுரனுக்கு தானொருசத்தியுமாய்,— புவன
போகந்தனுகரணமு முயிர்கட்கா -ஆன்மாக்களுக்குத் தனுவுங்கர
ணமும் புவனமும் போகங்களுமாய்,—வைத்ததோர்மலமாய்-
மூன்றுமலங்களிலே வைத்தெண்ணப்பட்டதொருமலமுமாய்,—
மாயைமயக்கமுஞ் செய்யுமன்றே - மாயையானது ஆன்மாக்க
ளுக்குப் பொய்யைமெய்யாகவும் மயக்கத்தையுஞ் செய்யும்.

நித்தமாய் எ-து தன் காரியமாயுள்ள முப்பத்தொன்று
மழியுமிடத்துந் காரணத்துக்கு அழிவில்லையென்றதெனக்கொ
ள்க.

அருவாய். எ-து. காரணத்திலொழிந்து காரியப்படுமிடத்
திலுங் கொன்றுதென்றதெனக்கொள்க

அசித்தாய். எ-து இதுவே ஆன்மபோதஞ் சீவித்தசா
மாயினு மிது சடமென்றதெனக்கொள்க.

எங்கும வியாபியாய். எ - து தன்னுடைய காரியமாயுள்
ள முப்பத்தொன்றுக்கும எவ்வளவு வியாத்தமுடையது,அவ்வ
ளவுந் தனக்கு வியாத்தமுடையதென்றதெனக்கொள்க.

புவனம் எ-து உலோகங்கள்

போகம் எ-து. அன்னமுதலானவையிற்றை.

தனு. எ-து. உடல்.

கரணம். எ-து. அந்தக்கரணமும் புறக்கரணமும்.

வைத்ததோர் மலமாப். எ-து. எண்ணப்பட்ட மலங்களி
லொன்றுயென்றதெனக் கொள்க.

இதனாற்சொல்லியது, அசுத்தமாயை நித்தியமென்றும்,

அருவமென்றும், ஒன்றாயிருக்குமென்றும், பிரபஞ்சத்துக்குக் காரணமென்றும், சடமென்றும், எங்கும் வியாத்த முடைய தென்றும், பரமேசுரனுக்குச் சத்தியாயிருக்குமென்றும், ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களுமா யிருக்குமென்றும், மூன்று மலங்களிலே ஒன்றாயிருக்குமென்றும், ஆன்மாக்களுக்குப் பொய்யை மெய்யாக மயக்கத்தையுஞ் செய்யுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

மாயை - உலகிற்கு முதற்காரணமெனப்படு மாயையாவது,—நித்தமாய் - நித்தமாகியும்,—அருவாய் - அருவாகியும்,—ஏகநிலையதாய - ஒன்றாகியும்,—அகிலத்துக்கோர்வித்துமாய் - உலகமுண்டாதற் கோர்வித்தாகியும்,—அசித்தாய - சடமாகியு ம,—எங்கு வியாபியாய் - எவ்விடத்தும் வியாபகமாகியும்,—விமலனுக்கோர்சத்தியாய் - முதல்வனுக்கோர் பரிக்கிரகசத்தியாகியும்,—புவனபோகந் தனுகரணமுமுயிர்க்காய் வைத்ததோர் மலமாய் - புவனமும் போகமும் தனுவும் கரணமுமாக வுயிர்களின்பொருட்டு விரிந்ததோர் மலமுமாகியும்,—மயக்கமுஞ்செய்யுமன்றே - மயக்கத்தினையும் செய்தலாகிய இலக்கணங்களையுடையது.

மறைஞானதேசிகர் உரை.

இந்த மாயையிற்றோற்றிய காலமுதலிய தத்துவங்களினது தோற்றமும், காலத்தத்துவத்தினது வியாபாரமு முணர்த்துகிறார்.

மாயையிற் காலமோடு நியதியின் கலாதிதோன்று, மாயவக காலமூன்று மாகியு மளித்தும்போகமிகே, காயமோடுலகுக்கெல்லாங்காலசங்கைபண்ணிப்பணி, நாயகனாணையாலே நடத்திடுஞ்சகத்தையெல்லாம். (௫௪)

(இ-ள்) மாயையிற் காலமோடு நியதியின் கலாதிதோன்றும வாயுவானது சமுத்திரத்தி லொருபிரதேசத்தை விகாரப்படுத்துமாறுபோல, அனந்ததேவநாயனார் கிரியாசத்தியாலந்தமாயையி லொருபிரதேசத்தை விகாரப்படுத்தி, அதினின்று காலதத்துவத்துடனியதியையு மகளாதிகலையினையு முண்டாக்குவார். இவ்வாதாமாக வுண்டாக்குவரோ வெனின்? காத்தாவினதாசங்கையாலெனவறிக.

ஆயவக்காலமூன்றும் அககாலம செல்காலம வருகால நிகழ காலமென மூன்றுட.

அவைவருமாறு — யாதொருகாலத்தி லியாதொருவினையை செய்து முடிக்கப்படும், அஃகிறந்தகாலம.

யாதொருகால மியாதொருவனு லொன்றைச் செய்யவேண்டுமென்று விரும்புதல், வருகாலம.

யாதானொருவனு லியாதாமொருகருமந் தொடங்கப்பட்டது முடிவின்றி யிருக்குமது, நிகழ்காலமெனவறிக.

ஆகியு மளித்துமபோகமி பிருதவிமுதல் ஞாகமீறான தத்துவங்களைத் தோற்றுவித்தும் அவையிற்றினுடனான யான்மாக்களை நிறுத்துவித்தும அவையிற்றைத் தோற்றின முறையையி லொடுக்கிவித்தும இங்ஙன மூவிதமாகச் செய்தும்,

காயமோடுலகுக்கெல்லாங்கா ஆன்மாக்கள் தனுகரணங்களை யெடுத்துச் சாதாரண வசாதாரணமாகிய புவனத்தனை

ல சங்கையினைப் பண்ணி

டாகிய போகங்களைப் புசித்தற்குத் துடி லவ நிமேஷ முதலிய காலங்களை யுண்டாக்கி அங்கங்குள்ள வானமாகக் கொடுங்காலம் புசியாநின்றதே யெனப்பண்ணி; அக்காலஞ் சடமாதலாற் றுனுகப்பங்கத்தைக் கொடுக்கவற்றோவெனின்?

நாயகனுடைய சத்தியாலே நடத்துகிறது சகத்தை யெல்லாம்

சிவன் றனதாஞ்ஞா சத்தியாலே பிரபஞ்சமெல்லாத்தையு மிப்படி நடத்தாநிற்பன.

அசுத்தமாயையிற்றோற்றிய காலமானது சுத்தமாயா புவனவாசிகளுக்குச் சிருட்டி முதலிய கிருத்தியங்களையு மதிலுண்டாகும் போகங்களையுஞ் செய்வதெங்ஙன மெனில்? சுத்தமாயையிலுண்டாகிய சுத்தகாலந்தானே யந்தப் புவனவாசிகளுக்குச் சிவசத்தி போக முதலியவற்றை யுண்டாக்கிப் புசிப்பியாநிற்கும்.

இதற்கு மதங்கத்துஞ் சுப்பிரபேதத்தும் பௌஷ்கரத்து மறிக. (௫௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேல் நாலுவிருத்தத்தால் மாயையிற் கலாதிதத்துவங்களே தோன்றும படியும், தத்கிரியைகளுங் கூறுகின்றது.

அசுத்த மாயையினாலே அநந்தேஸ்வர சத்திக்ருத க்ஷோபத்தினாலே முதல் காரியமாயையுண்டாம். மேல்-*போகாவதி பரிச்சேதகமாய் பூதபவிஷ்யத் வர்த்தமானாத்மகமாயிருக்கிற காலந்தோன்றி, சிருஷ்டிகாலமென்றும் ஸ்திதிகாலமென்றும்

சம்ஹாரகாலமென்றும் திரிவிதமாய், சாதாரணமாகவும் அசா
தாரணமாகவும் பிரதிபுருஷநியதமாய், தத்தச்சரீரோற்பத்தி
யாதிகளுக் கேதுவாய், சர்வபோகநாயகருசிய ஈஸ்வரசத்தி
யான ஜநநிரோதயித்ரி ஆரிணியெனனும் சதநிசநரயா திஷ
டாநத்திலே ஜகதுற்பத்தியாதிகளைப் பண்ணும்.

* போகாவபரிச்சேதகம் - போகமுடிவை யளவிடுகை.

இதற்குக் காலவாதி காலமானது ஏகமுமாய் விபுவுமாய்
பிரவாஹநாதி காரியங்களுக்கெல்லாம் ஹேதுவாயிருக்கையால் நி
த்யமாயிருக்கிற காலத்துக்கு உற்பத்தியாதிக ளெப்படியென்னி
ல்? பூர்வாபர ¶ ப்ரதீதியுண்டாகையிலே காலமநேகமும்
அநித்யமும்.

¶ பிரதீதி - அறிவு

அந்தப்பூர்வாபர ப்ரதீதியானது சூரியகதியாதி யுபாதியி
னாலே வருவதல்லது, காலத்துக்கு பேதம் வாஸ்தவமல்லவெ
ன்னில்? அந்தவுபாதியினாலே தானே காலவ்யவஹாரம் வரு
மாகில், காலமே யில்லாதேபோகத் திரியும்.

காலமொன்றேயாகில், இன்னகாலத்திலே யின்னதாம் இ
ன்னகாலத்திலே யின்னதாகாதென்றும், அந்வயவ்யதிரேகமுங்
கூடாது. இதன்றியும், நாழிகாதிகளுக்குச் சூரிய கதியாதி யு
பாதியல்லது ‡ லவ × த்ருடி யாதிகளுக் கில்லையாகையால் கா
லபேத † மௌபாதிக மல்ல, ஸ்வாபாவிகமென்று சித்தம்.

‡ லவம் - கணமெட்டுக்கொண்டது, × த்ருடி - நொடிப்
பொழுது, † ஔபாதிகம் - உபாதியாலுண்டானது.

கடாதி பதார்த்தங்களிலே பூதபவிஷ்யத்வியவகாரமொ
ழிந்து வர்த்தமான வியவகாரமில்லாதிருக்கையால் வர்த்த
மானகாலமே யில்லையென்னில்? கடநிருமாணத்திலே மிருத்

பிண்டாவஸ்தை பூதகாலமாம் * ஜலாஹரணயோக்கியகாலம் பவிஷ்யத்காலமாம். சகரத்திலே கபாலாதியவஸ்தையாயிருக்கிறகாலம் வர்த்தமானகாலம் ஆகையால் காலத்திரயமுமுண்டு ஆகையால் ஜடமும் அநேகமுமானதுக்கு நித்தியத்வங்கூடாது நிரயமில்லாத வஸ்துவுக்கு விபுத்வங் கூடாது ஆகையால் காலமநேகம் அநித்யமென்பது சித்தம்.

* ஜலாஹரண - ஜலங்கொண்டுவருகை

அக்கிந்தக்கால முற்பத்தியாதிகளுக்கு ஏதுவாமென்னில். இந்தக்காலோற்பத்திக்குக் காலமுண்டோ இல்லையோ? காலமுண்டென்னில்? — அநவஸ்தையாம் இல்லையென்னில்? காலமேயுண்டாகாது என்னில்? இந்தக் காலம் ¶ஸ்வவியதிரிக்தத் தத்துவகாரியங்களுக்கு ஏதுவல்லது தன்னுடைய உற்பத்திக்குத் தானே ஏதுவல்ல. காலாதீதரான ஈசுவரன் ஸ்வேச்சையினாலே காலத்தையபேட்சியாமலே காலத்தை +யுற்பாதிப்பர்?

— அநவஸ்தை - முடிவின்மை, ¶ ஸ்வவியதிரிக்த - தனக்குவேறான, + உற்பாதித்தல் - உண்டாக்குதல்

இந்தக் காலம் அசுத்தமாயா ஜந்யமாகையினாலே சுத்தமாயாகாரியோற்பத்தியாதிகளுக்குக் காலமேதென்னில்? சுத்தமாயையிலுமிவ்வாறு சுத்தகாலமுண்டு.

ஆகில் காலோபசங்காரத்துக்குக் காலமேதென்னில்? இந்தக் காலாபேக்ஷை சதாசிவாதிகள் பண்ணுங் கிருத்தியங்களுக்கே காலாதீதரான சத்தர் காலத்தையபேக்ஷியாமல் ஸ்வேச்சையினாலே பஞ்சகிருத்தியங்களையும் பண்ணுவர்

இன்னும் இந்தக்காலமானது ஒன்றுக்கு பூதகாலமும் ஒன்றுக்கு வர்த்தமானகாலமும் ஒன்றுக்கு பவிஷ்யத் காலமுமாயிருக்கையினாலே பூதபவிஷ்யத் வர்த்தமானகாலமாக ஒருபடித்தாயிராதாகையால், பதார்த்தா†வச்சேதககாலம் திரிவிதமெ

ன்பது கூடாதென்னில்? காலமும் இச்கும் ப்ரதிவஸ்து நிய தமாயிருக்குமாகையால், முதலே ப்ரதிவஸ்து நியதகால மென்று சொல்லுகையிலேலே சொன்ன தூஷணங்கூடாது. நித்தியகாலாது யாத்மித்துவாத ஆன்மா நித்தியனா? காலம நித்தியமாகில் ஆன்மாவுக்கு நித்தியத்துவ மெப்படியென்னில்? காலா நவச்சின்னத்வமே. நித்தியத்துவ மெப்படி கூடுமென்னில்? காலாநவச்சின்னத்வமே நித்யத்வமாகையால், பூர்வோக்த் தூ ஷணமில்லை + அவச்சேதகம் - அவவிச்சேதகம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

காலத்திரயத்தையும் ஜநநி ஹாரணி ரோதயித்ரியென்னு மீஸ்வரசத்தித்திரயமு மதிஷ்டித்துநின்று ஸம்ஹாராதிகிருத்தியங்களைப் பண்ணுமென்றதற்குச் சம்மதி.

[illegible]

𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌪𑌶𑌵𑌃 𑌨𑌿𑌯𑌕𑌃 । 𑌜𑌨𑌨𑍀𑌜𑌨𑌨𑍀𑌜𑌨𑌕𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌯𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌯𑌕𑌾𑌃 ॥ 𑌸𑌾𑌯𑌿𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑍇
𑌸𑌂𑌯𑌮𑌿𑌨𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।

ஏகககாலப் பிரளயாந்தரத்திலும் சுத்தா சுத்தமாயை யுடைய பஞ்சகிருத்தியத்தைப் பண்ணுவனென்பதற்கு சமாதி.

𑌆𑌦𑍌 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 - 𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑍍𑌸𑍍𑌥 𑌮𑌾𑌯𑌾 𑌯𑌤𑌃
𑌮𑌾𑌯𑌾𑌮𑍀𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌤𑍍 𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌕𑌾𑌲𑌂 𑌤𑍁 𑌪𑌾𑌶𑌯𑌤𑍍
𑌕𑌲𑌾𑌕𑌲𑍇 । 𑌤𑌯𑌾 𑌸𑌕𑍍𑌤𑌿𑌯𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌾𑌯𑌾𑌂 𑌪𑌿 𑌕𑌾𑌲𑌂 𑌤𑍁
𑌪𑌶𑍍𑌚𑌤𑍁 𑌸𑌂𑌯𑌮𑌂 𑌯𑌦𑍍𑌯𑍁𑌗𑌾 𑌯𑌤𑌿𑌜𑌾𑌤𑌃 ॥ 𑌇𑌤𑌿.

பின் நித்யகலாதிதோன்றத் தோன்றியென்பது †சாகாம் டசாபத மாகையால், சேஷம மேலிருக்கத்திலே கூறுநி னரது

† சாகாமக்ஷாபதம - விருமேயோடு கூடினபதம.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மாயையினின்றும தத்துவங்களினது தோற்றமும தொழி லுமுறைறகக்னறுா.

மாயையிற்காலமோடு நியதியின கலாதிதோன்றும - சுத் தமாயையிற் சிவன சிருஷ்டித்த காதபகத்தின பின பந்தமா யககதேசுரசத்தி கலக்கிய மாயையினின்றும காலதத்துவம நிய தித்தத்துவம் கலாதத்துவம் பிறக்கும் (ஆதியென்றதனாற் புருட தத்துவமுமுண்டாம்.) முன மானதப் பிரத்தியக்ஷப் பிரஸ்தா பத்திலே தத்துவங்களினது வியாபாரக்கிரமம்விஸ்தரிக்கப்பட் டது; இப்போ தற்பத்திக்கிரம மாசாரியர் தாமே யுரைக்கின

றூர் —ஆயவக்காலம் - சூக்குமதேகத்துள்ளசாதாரணமாயிருக்குங் காலதத்துவம், (புறம்பிற்சாதாரண காலதத்துவத்தினை ஆவிர்த்தி துடி முதலிய கலைகளை முன்னிட்டுக் கொண்டு போக்கியப் பொருளிற் போகத்தினைப் பொருட்டுயிர்களைச் செலுத்தி மகாப்பிரளய பரியந்தமிருக்கும் புறம்பிற் சாதாரண காலம்)—மூன்றாயாக்கியுமளித்துமபோக்கி-போகவந்த பரிச்சேதகமாய்த் துடி லவம் காட்டாதி காரியகலாபேதத்தினாலே செல்காலம் வருகாலமிரண்டினை மத்தியத்தி னிகழ்காலமாயும், சரீர முதலிய தாத்துவிகப் பொருள்களினது ஈறு தோற்றல் நிற்றல் நிமித்தமாய் நிற்குங் காலதத்துவத் தோற்றத்திலுங் காலம் வேண்டில்ன. அவத்தைவருமாதலால் தத்துவத்தோற்றத்திற் காலநிமித்தமன்று இதினை நியமிக்குங்காலதத்துவம் போலச் சங்காரத்தை நியமிக்குங் கலையித்திரி பெணகின்ற சங்கார சத்தியே; தத்துவத்தோற்றத்தில் நிமித்தியமாய்,—காபமோடேலக்குகெல்லாம-தனுகரண புவனபோகங்கட்கு,--காலசங்கையினைப்பண்ணி-ஏகமுதற் பரார்த்த பரியந்த கால வெண்ணிக்கையை யுண்டாக்கி,—நாயகனாணையாலே-சிவாஞ்ஞையினாலே வைப்பட்ட காலதேவதையினாலே யதிஷ்டிக்கப்பட்டு,—நடத்திடுஞ் சகத்தையெல்லாம-சடசித்துக்க ளனைத்தையு முற்பத்தி யோக்கியத்தை யுற்பத்தி பண்ணிச் செலுத்தும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அத்தன்மைத்தாகிய மாயையினின்றுங் காலமுதலிய தத்வங்களுளவாம். அவற்றுட் காலமாவது முதல்வனாணையான் முத்திறப்பட்டுத் தனக்குக் கீழுள்ள காரியப்பிரபஞ்சமனைத்தை

யுங் கால வரையறையிற் படுத்திக் கன்மத்தை வரைசெய்து நிற்குமெனபதாம்.

என்னும்மை முன்னருஞ்சென றிடையுட.

நாயகனாணைபாலே யெனபதனைத் தத்துவாதிகாரமுழுதி முய்த்துரைகக.

நிரம்பவழகியருரை வருமாறு.

அசுத்தமாயாகாரண மருளிச்செய்து, காரியமான தத்துவ ஙகளின் தோற்றமு மவைகாரியப்படு முறைமையு மருளிச்செய்கிறா.

மாயையிற காலமோடு நியதியின கலாதி தோனறும் - அதோ மாயையிலே காலமுமு அதனொடு நியதியும் அதனபின கலையும தோனறும,—அவ்வக்காலமுனறுப் - இப்படியான கால தத்துவநதான செல்காலம வருகாலம நிகழ்காலம என மூனறாய,—ஆகியு மளித்தும போக[illegible] இறநதாலததை [illegible] ருகிறகாலததிற புதுமையும் நிகழ்காலததிற பலததையும் உண டாககி,—காயமோ டுலகுககெல்லாங காலசஙகையினைப பண்ணி - தேகாதி பிரபஞசங்களுககெல்லாங காலவெல்லைகளையுமுணடாக்கி, இது தானுகப பிரபஞசத்தைக காரியப்படுத்துமோ வெனனில்?—நாயகனாணையாலே நடத்திடுஞ சகத்தையெல்லாம் - பரமேசுரனுடைய வாக்கினாலே இப்படிக் காலதத்துவம் பிரபஞசத்தையெல்லாம் நடத்தும்

நாயகனாணையாலே நடத்திடுஞ் சகத்தையெல்லாம் - கிரியாசத்தி சத்திதத்துவத்தை யெழுப்ப, சத்திதத்துவங் காலத்தையெழுப்ப, காலம் ஆன்மாவுக்குள்ள கன்மத்தைக கூட்டுமெனறுகொள்க.

இதனாற் சொல்லியது அசுத்தமாயையிலே காலமும் நியதி யுங் கலையுந் தோன்றுமென்றும், சத்தி தத்துவத்தாலே காலத் தத்துவங் காரியப்படுகிற முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

மாயையில் - அநந்தனமயாகிய மாயையினின்றும்,— கா லமோடு - காலதத்துவத்தோடு,— நியதி - நியதிதத்துவமும்,— பின்கலாதிதோன்றும் - பின்கலைமுதலியனவு முறையேதோ ன்றுவனவாம்.— ஆம் அக்காலம் - அவற்றுளொன்றாகிய காலதத் துவமானது,— நாயகன்றனையாலே மென்றும்-முதல்வனாணையா லமுந்திறப்பட்டு,— ஆக்கியுமளித்தும்போக்கிக் காயமோடுலகுந் கெல்லாம் - தோற்ற நிலையிறுதியென்னு முத்தொழிலுடைய வி னசமுகத்துள்ள காரியப்பிரபஞ்சமனைத்தையும்,— காலசங்கை யிற்படவைத்து - காலவரையறையிற்படுத்தி,— சகத்தையெல் லாம் நடாத்திடும் - இவ்வு[illegible]த்திற் கன்மத்தைவரைசெய்து நிற் கும் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற்கூறுந்த முறையானே நியதிகலையின் காரிய
ப்பாடுங் கலையிற்றோற்றிய வித்தையினது
காரியப்பாடு முணர்த்துகிறார்.

நியதியின தோன்றிக்கன்ம நிச்சயம் பண்ணுவிக் கு, மயாவிலாக் கலையினதோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின, செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்குஞ் [illegible]

தேவித்தை, யுயர்கலை யதனிற்றோன்றி யறிவினை யுதிக்கப்பண்ணும். (௫௫)

(இ-ள்.) நியதியின் றோன்றி கன்ம நிச்சயம் பண்ணிநிற்கும்.

அந்தக் காலதத்துவத்துக்குப்பின் நியதிதத்துவந் தோன்றிப் பட்சபாதமில்லாத விராசாவானவன் றுட்ட நிக்கிரகமுஞ் சிட்ட பரிபாலனமுஞ் செய்துலகத்தி லான்மாக்களை நியமித்து நிற்கின்றவனாயிருக்கு நிற்குமாபோல; சிவனு மான்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக வேறாகாமை தவின்றியே யந்தந்த காலங்களிற் போகங்களைப் புசிக்கும்படி யுறுதியிடாநிற்கும்.

ஆயா விலாக் கலையினின்றோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின்செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்குஞ் சிறிதே.

நியதிக்குப்பின் மாயைக்கப்பாலாகக் கலாதத்துவந் தோன்றி, யான்மாவுக் கநாதியாயிருக்கிற வாணவமல சத்தியை யுவாக்களாக்கள் செய்த கன்மத்துக் கீடாகச் சிறிது நீக்கி, ஞானமான தன்மைகளை விடயத்துக்குப் புப்படாமல் ஒத்த மாத்திரமே நிருக்கிக்கும்படி சிவனது ஞானக்கிரியாசத்தி பண்ணுவிக்கும்.

வித்தை யுயர் கலை யதனிற்றோன்றி யறிவினை யுதிக்கப்பண்ணும்.

வித்தியாதத்துவமானது சிறந்த பிரகாசத்தினையுடைய கலையிற் றோன்றி, ஆன்மா புத்தியிடமாக விடயங்களைக் கிருக்கும்படி தத்துச சிவசத்திப் பிரேரகத்தினாலே வித்தியாதத்துவங் காரணமாய்நின் றறிவை விளங்கப்பண்ணும் எ-று.

ஒருபாத்திரத்தை யக்கினியிற் காய்ச்சினவிடத் தரசுப்ப தன்மைக்கு யோக்கியமானதுபோல, ஆன்மாவுங் கலையைப்

பொருந்தினபோது சுகதுக்கபோகமே ரூபமாகிவருகிற பலங்களைப் புசிக்கச் சத்தருவனுதலாலு மயர்விலாக கலையெனச் சிறப்பித்தார்.

இதற்குப்பௌஷ்கரத்து மிருகேந்திரத்துங்காண்க. (௫௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

நியதியினருளுனறிக கனம நிசசயம்பண்ணிநிற்கும்-காலத் தத்துவத்துக்குப்பின்புமாகையிலேயின்றும் நியதித்தத்துவமானதுதோனறிக கர்ம +நியமனத்தைப்பண்ணி ஒருவர்பண்ணின காமபலத்தை ஒருவர்புசியாதபடியும், விஷய சௌந்தரியத்தினாலே அதிகப்ரவிருத்திகள் வாராதபடியும், பிராப்தமான பாபபலபோகம் அநிஷ்டமென்று விடாதபடியும், பரிபக்குவமான காமபலத்தை முன்பின்னுக புசிக்கவொட்டாமலும், ஈசுரசத்திப்பிரேரணையினால் ராசாஞையானதுபோல ; நியமனஞ்செய்து புசிப்பிக்கும்.

+ நியமனம் - ஏற்பாடு.

ஈஸ்வரசத்தியே நியமனத்தைப்பண்ணுதோ! நியதி தத்துவமென்றொன்றை அங்கீகரிப்பது கற்பநாகௌரவமெனனில்? ஈஸ்வரசத்தி நின்மலையாகையினாலே நியதி *வியவகாரமன்றித் தானே பண்ணும்பொழுது அதுமுதலியையேபண்ணும்.

* வியவகாரம்-மணாவு

காமந்தானே தத்தந் கர்த்தாக்களுக்கு நியமமாகப்பலத்தைக்கொடாதோ வெனனில்? காமமானது க்ருஷிடாதிகளைப்போலத் தொழிலாகையினால் நியாமகம்பண்ணமாட்டாது. ஆகில் ஒருவர்பண்ணின க்ருஷியாதிபலங்களை ராஜாவுமிருக்கையிலே ஒருவர் புசிக்கக்காண்கிறோமே யென்னில்? டஞ்சுத்திலே ×கு

த்விக்குகள் பண்ணின கருமபலத்தை யஜமானன்புசிக்கிறாற் போல, ஏவினவன் தொழில்செய்தவனுடையபலத்தைப் புசிப்பன

× ருத்விக்கு - யாகஞ்செய்துவைக்கின்றவன்

அவ்வாறு ஏவினவனும் ஏவல்செய்தவனுமன்றி, ஒருவன் தன்னொன்று பண்ணின கிருஷியாதிபலத்தை ஒருவன்புசிக்கக்காண்பானேயென்னின்? அதுவும் ஜன்மாந்தர சம்பந்தமல்லது வாராது ஆகையால் ஈசுவரசத்தியுங் காலமும் கர்மமுமன்றி நியதித்தத்துவமென்பது ஆன்மாக்களுடைய போக+நியாமகமாக வுண்டாகவேணும் —

+ நியாமகம் - ஏற்பாடு

தது³க்தம் பௌஷ்கரே — போ⁴க்³யாயாம் ப்ரவ்ருத்தஸ்ய கர்மாதி³த்³யாத்ப்ரவ்ருத்திஷு | கர்மணா ஸஞ்சிதாநாந்த: ஹிமாவஹஸ்த்ரிணஸ்தி || தச்ச நாஸே ப்ரவ்ருத்தேயம் நியதிர்வ்யாபிநீ ஸதி | நத்வ ஜ்ஞேயோ நாதி³ஸ்தா²யா வ்யக்தகர்மணா || ப்ரவ்ருத்தா ஸிவத: தஸ்மாத் ஸ்வஸ்வ கர்மஸ்வேவ யோஜகா: | கவிஹோத்ரேஷு நிஷ்டா²ம் நியோஜயதி ஸாஸ்வதா || ஸாஜ்ஞேத ஸ்வஸ்வ நேமாத்³யாஜ்ஞே நேஷ்டா கதா²து | யத்³வா நக்ஷத்ரே ஸ்வாஞ்ஜநாஜ்ஞேத: பரைர: || ஸாஜாஜ்ஞாஜ்ஞா யந்த்ரமஜ்ஞேத ஸ்வஸ்வ: பரைர: | க்ஷுஜ்ஞா நிதயேயேய ஸாஸம்ஜஸ்ய நாஸிநீ || ஸநயா நியம் தத்த யத்ஸம்ஜ்ஞா யாதிகழ | கழ ஸேதாகஸ் ஸ

க்ரியாஶக்திரேவாஸ்ய மாயிகா || ஸத்யம் ந ஶாஸ்த்ரம்
கிஞ்சிந்நியதிர்வ்யயாந்த: | தத்த்வபோதா த்ரிகாலேஶ்வ
ரந்துஶ்சைவ சேந்த்ரியஶக்திபி: || நகஶ்சித் ஸ்வ ஸ்வம் ஸ்வ
ஸ்தூலம் ஸம்பந்தயிதும் ஶக்தி: | கஶ்சித்ஸ்வாத் க்ருஷிவத்
ஸ்வாநேநகஶ்சித் ப்ரியாஸக்த: || கலைஶ்சாபி க்ருதகஶ்சித்
க்ருஷ்யாத்யம் தத்ஸம்பந்தயத் | தத்கஶ்சித் கர்த்ரா ந
வ்யாப்தம் த்ருஶ்யதே த்விர்ஸ்வர: || ஸாங்கத்வே ராஜா
ஜ்ஞா த்ருஷ்டாந்தோவிஷ்வக்த: | தேச ப்ரயோஜ்ய க
ர்தாரோ ஸம்ஜதே க்ருஷிஜம் ஸமம் || க்ருஷிகர்த்ரா
ரஞ்ஜீத ஸவகஶ்சித் ப்ரஹ்மாவர்தே | யதாஸ்வயம்ஸ்ய
தேயாமேயா யஜ்ஞாநஸமாவஸ: || தஸ்யாந்தேவ்யப்த
கர்த்ரார ஸ்வேதா நப்ரோக்த த்ருஷணம் | ப்ரக்ஷேபா
தவிநிர்முக்தா ராஜாஜ்ஞா யத்ரவித்யதே || தத்ரவஶ்யா
ஞ்ஞதத்க்கர்த்ரா வ்யாப்தம் தத்க்ருஷிஜம்ஸமம் | கிஞ்சி
த்ருஷ்டாந்தகம் கஶ்சித் வித்யதே பலவத்தரம் || ஸமம் தத்
நஸாரேண ஸம்ஜதே தே ஶக்தீஶ்வரா: | தஸ்மா
ஞ்ஞியதி தத்வஸ்ய ஸம்ஸாரம் ஸோமமியாஶகிதி ||

அயர்விலாக்கலை பின்முனர்ச் சிறிதேயாணவ மொதுக்கிச் சித்தின செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் - சோம்புதலற்ற கலாதத்துவம் பிறகுண்டாய், ஆணவத்தைச்சிறிது நீக்கி ஆன்மஞானவியாபாரசத்தியை விளங்கப்பண்ணும்.

சிதரூபமாயிருக்கிற ஆன்மாவை கலாதத்வம் பிரகாசிப்பிக்கவேணுமோவெனவில்? ஆன்மாக்க ளநாதியே ஆணவத்தி

னாலே ஞானக்கிரியை தடுக்கப்பட்டிருக்கையால் அந்த ஆணவத்தைக் கலையினாலே சிறிது நீக்கவேணும். நீக்காதிருக்கில் விஷய +கிராஹ்யமில்லாமல் கேவலாவஸ்தையைப்போல ஆன்மாக்களில்லையென்பதுபோலேயாம் +சூந்யாகாரமாய் விடும்.

+ கிராஹ்யம் -கிரகிக்கிறது, × சூந்யாகாரம் - சூந்ய மொப்பதும்

ஆகில் ஆணவமுழுதும் நீக்கப்படாதோவெனின், அந்தக் கலையினாலே நீக்கப்படாது ஆன்மாக்களுடைய காமத்துக்கு, கேவலாவஸ்தையிலே யிருக்கிற ஆன்மாவை, பாசிமுழுதுங் குளத்திலே கல்லுவிட்டெறிந்தபொழுது அந்தக் கல்லுவிழுந்தவிடம் பாசிநீங்குவதுபோல, இந்தக்கலையினாலே ப்ரமேசுவரன் ஆயத்தைநீக்கி ஈசுவரன் ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பிப்ப

கலையைச்சிருஷ்டித்துக்கொண்டு ஆணவத்தைக்கீறி நீக்கவேணுமோ? ஈசுவரன் தம்முடையசக்தியினாலே போக்கி நீக்கலாகாதோவெனின், ஈசுவரசக்தி ஸ்பரிசத்தால் ஆணவம் ¶ஸாவாணமாக்கிவிடும். அதற்கு திருஷ்டாந்தமாக மாசம் குரு னகேவலனாயிருக்கையிலே பராசத்தித ஸ்பரிசயோகம் இல்லாதத்தைக்கொண்டு குருவானவன் சீக்ஷிக்கிறவனுக்கிற சிஷ்யனைத் தாமஸபரிசியாமல் தண்டினாலே கட்டியெழுப்புமாட்டேன், ஈசுவரன் பரிக்கிரகசக்தியாகிய கலாதிதத்துவங்களினாலே சிறிது அஞ்ஞானத்தை நீக்குவார். இதன்காரணம் தயங்காவப்புவாயிருக்கிற ஆன்மாவை சிவசரீரமாய் ‡ஆவரிக்கையால் இதுவே புமான்களுக்கு முதற்பந்தம்

¶சாவாணமகா - முழுதும், ‡ ஆவரித்தல் - மறைத்தல்.

தத்ருக்தம் ஸௌக்ஷ்மே - ஜ்ஞாநஸக்தி ஸ்வரூபாந் நாஸ்வா
சைதந்ய வ்யாப்தக: | சைதந்ய வ்யஞ்சகா

[illegible] இதி.

வித்தை யுபாகலயத்தினின்றுந் தோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும். — வித்தியாதத்துவமானது ஆன்மாக்களுடைய போகார்த்தமாகத் தனக்குமேலான கலாதத்துவத்திலே தோன்றி, ஆன்மாக்களுக்கு விஷயதரிசனத்தைப் பண்ணுவிக்கும்.

விஷயதரிசனத்துக்கு ஆன்மஞானமே யமையாதோவெனில்? ஆன்மஞானமானது சுதந்தரமில்லாமையால் சிவா† பிமுகமாகவொழிந்து விஷயாபிமுகமாகாது. வித்தியா×க லுஷிதமானாலல்லது ஆன்மசிற்சத்தி விஷயாபிமுகமாகாதாகையால் வித்தியிலே * ஏதவ காத்திருதவ முடைத்தாய், புத்திஸ்வரூபமாயிருக்கிற ÷கிராஹ்யபத்தை யுடைய

ஆன்மாவுக்கு விஷயதரிசனத்திலே யாதொன்று¶ கரணம் அது வித்தை.

+ அபிமுகம் - எதிர்நோக்கினது, × கலுஷிதம் - கலக்கப்பட்டது, * ஜ்ஞத்வம் - அறியுந்தன்மை, — கிராஹ்யம் - விஷயம், ¶ கரணம்-உதவி.

விஷயதரிசனத்திலே புத்தி கரணமாகாதோவெனில்; புத்தியு மான்மாவிலே கிரகிக்கப்படுகையால் கடகுடாதியம்போலச் சடமே, புத்தி ஆன்மாவுக்கு கிராஹ்யமாகையினாலே சக்ஷுகரணமாக ரூபங்களைக் கிரகிக்குமாப்போல, இந்தப்புத்தியையும் கிரகிக்கிறதற்கு வித்தைகரணம். அசுரீவந-ரீசே சாரதிநா ×பந்தாநங்கச்சதி என்கிற நியாயமாக, கிரமத்திலே சக்ஷுராதித்துவாரா கிரகிக்கப்பட்டுப் புத்தியினாலே விஷயமானது நிச்சயிக்கப்பட்டுள்ளவில், வித்தையினாலே புருஷனானவன் அந்தவிஷயத்தை கிரகிப்பன்.

×பந்தாநங்கச்சதி-வழிநடக்கிறான்

இந்தவிஷயத்தை கிரஹிக்கிறதற்கு புத்தி ஞானமென்கையால், புத்தியேகரணமாகப் போகுமென்னில்? உள்ளது. சக்ஷுராதியிந்திரியங்களைப்போலன்றி புத்தியாதிகரணத்திரயங்களும் மனதுசம்சயத்தையும், அகங்கார மபிமானத்தையும், புத்திநிச்சயத்தையும் பண்ணுகையால், பதார்த்ததரிசனத்திலே சூரியாவலோகனம்போல, விஷயதரிசனத்திலே யிவைகள் வித்தைக்குச் சகாகாரியாயிருக்கும். ஆகையாற் கலையானது ஆணவத்தைச் சிறிதுநீக்கி ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பிக்க, இத்தவித்தை ஞானத்தைக் கலுஷிதம்பண்ணி விஷயதரிசனத்தைப் பண்ணுவிக்கும். இத்தவித்தை ஆன்மாக்களுக்கு இரண்டாம்பந்தம்.

[illegible]

ஶைவந நபோ⁴யஸ்ய ச தைஜஸ: || வித்³யா கலா-
ஶ்ரிதா தஸ்ய வ்யக்திவ்யஞ்ஜகதாம் க³தா | சித்³ வா-
ஜ்ஞாநயோரந்யோந்யஸ்யா ப⁴வஸ்ய ஸம்ப³ந்த⁴கா ப⁴க: ||
போ⁴யாத்மக ப்ரகாஶத்வம் நதேஷாமபி தைஜஸ-
கா | ஸோயா ஸ்வீகரணம் வித்³யா ஸம்வித்: கரணம் த-
த: || கலாவ்ருத்திம் விநா தஸ்யா ஜ்ஞநயோ: கார்ய-
ஸங்கர: | கலாதோ நகரம் வித்³யாஸ் த்ரிதீயோஸ்ய
ஜாக்ரநாத் || கலா வித்³யா ஸ்வயமேவாஸ்ய கத²ம்போ
போ⁴கஸாதி⁴கா | இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—௧—

நியதிமூலவிபதினை றொழிற் நிச்சயிக்கின்றார்

நியதி பின்னேன்றி-பின்பு மாயையினின்றும் நியதிதத்துவமுண்டாய்,— கன்ம நிச்சயம்பண்ணி நிற்கும்-தனது கன்மபலமாகிய சுகதுக்கங்களைப் பிரதிபதி சம்பந்தித்துப் பிறர் புசியாமற் பிறரவைகளைத் தனது சம்பந்தியாயிருக்கின்ற வான்மாப் புசியாமல் வரையறைபண்ணி நிற்கும்,—அயர்விலாக கலையினேன்றி யாணவமொதிக்கிச் சித்தின் செயல்புரிகிரியா சத்தி சிறிதுதெரிவிக்கும் - பின்பு பிரகாசமான கலாதத்துவம் மாயையிலுண்டாய் ஒரு பிரதேசத்திலே மலசத்தி வியாபாரத்தை மறைத்து ஆன்மாவினது புறப்பொருளறிவாகிய ஞானக்கிரியாசத்திவியாபாரங்களைக் கிரியாதிககமாய்ச் சிறிது விளங்கித் திரும்பித் தற்பொருளறிவாகிய சத்திமத் கர்த்தாவைப் பொருந்திக் கர்த்திருகாரகமென்று பேர் பெற்று நிற்கும்.— வித்

தை யுடர் கலை யதனிற்றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும் - பின்பு வித்தியா தத்துவங் கலா தத்துவத்தி லுண்டாய்க் கலையினுலொரு பிரகாரம் விளக்கப்பட்ட ஞான சத்தி வியாபாரத்தை மலவாசனைபோக்கி விளக்கிப் புறப்பொருளறிவாகிய சத்தி கரணத்தைப்பொருந்திக் கரண காரக மென்று பெயர் பெற்று நிற்கும்

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

நியதிதத்துவம் அக்காலத்தின் பின்னுக மாயையினின்று தோன்றி, அவரவர் செய்த கன்மம் அவரவரே நுகருமாறு நியமிக்கும் அதன்பின் அம்மாயையினின்றே கலைதோன்றி ஆணவத்தை யேகதேசத்தினீக்கி, ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கி வினைக்கீடாக வரும் போகத்தற் செலுத்தி நிற்கும். அக்கலையினின்றும் வித்தை தோன்றி அவ்வான்மாவினது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கி அதன்கட்செலுத்தி நிற்குமென்பதாம்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் நியதித்தத்துவமுங் கலையுங் காரியப்படுகிற முறைமையும், கலையிலேவித்தைதோன்றிக் காரியப்படுகிற முறைமையு மருளிச்செய்கிறார்.

நியதிபின்றோன்றிக்கன்ம நிச்சயம்பண்ணி நிற்கும்-நியதித்தத்துவமானது காலத்தின் பின்புதோன்றி ஆன்மாக்கள்செய்த கன்மத்தினளவானன்றி யேறக்குறையப் போகாதபடி யநுதியி

ட்டு நிறுத்தும்,—அயர்விலாக்கலையினன்றோன்றி யாணவமொடு
க்கி - மயக்கமில்லாத கலையானது நியதிக்குப்பின்பு தோன
றி, ஆணவமலத்தைச் சற்றேநீக்கி,—சித்தில்செயல்புரிகிரியாச
த்தி தெரிவிக்கும - ஆன்மாவினுடைய சேட்டையையுண்டாக்கி
ற கிரியாசத்தியைத் தோற்றுவிக்கும்.—சிறிதேவித்தையையாக
லையதனிற்றோன்றி யறிவினையுதிக்கப்பண்ணும - வித்தையெ
ன்றதத்துவமானது மேலானகலையினிடத்திலேதோன்றி ஆன்மா
வுக்கு அறிவையுண்டாக்காநிற்கும.

இந்தத்தத்துவங்கள் தாருக்ககாரியப்படவற்றோ வென
வில்? கிரியாசத்தி நியதித்தத்துவத்தையெழுப்ப, சத்தித்தத்துவ
ம நியதியையுங் கலையையுமெழுப்ப, இந்தத்தத்துவங்கள் ஆன்மா
வுக்குள்ள கன்மத்தைநிச்சயித்தும, கலை யாணவ மலத்
தைச் சிறிதேநீக்கி ஆன்மாவைத்தொழிற்படுத்தும் ஞானசத்தி
சுத்தவித்தையையெழுப்ப, சுத்தவித்தை வித்தையையெழுப்ப,
வித்தை யான்மாவுக்கு அறிவையுண்டாக்குமெனக்கொள்க

இங்ஙனஞ்சொல்லியது வித்தியாதத்துவத்தில் நியதியுங்கலை
யும, இக்கலையிலே தோன்றினவித்தையும, இந்தமூன்றுதத்துவ
முங்காரியப்படுகிற முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நியதியின்றோன்றி - நியதித்தத்துவம் அக்காலத்தினபின்னு
க மாயையினின்றுந்தோன்றி,—கன்மநிச்சயம்பண்ணி நிற்கும-
முதல்வனாணையா லவரவர்செய்த கன்ம மவரவரே நுகருமாறு
நியமிக்கும்.—பின் அயர்விலாக்கலைதோன்றி - அதன்பின்னும்
மாயையினின்றே யயர்ச்சியில்லாத்கலைதோன்றி,— ஆணவத்தி

றிந்தெயொதுக்கி-ஆணவத்தையேகதேசத்தினீக்கி,—சித்தின்செ
யல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் - ஆன்மாவினது கிரியாசத்தியை
விளக்கி முதல்வனுணையால் வினைக்கீடாக வரும் போகத்திற்
செலுத்திநிற்கும்.—உயாகலைபதனில் வித்தைதோன்றி - உயர்
ந்த அக்கலையினின்றும் வித்தியாதத்துவந்தோன்றி,—அறிவினை
ச்சிறிதே யுதிக்கப்பண்ணும் - அவ்வான்மாவினது ஞானசத்தி
யை யேகதேசத்தில்விளக்கி முதல்வனுணையானதனைக்கடைச்செலு
த்திநிற்கும்

மறைஞானதேசிகர் உரை.

அந்த வித்தியா தத்துவத்தி னிராக தத்துவந்
தோன்றிக் காரியப்படு முறைமையும், புரு
டதத்துவத்தினையு முணர்த்துகின்றார்

விச்சையி னிராகந்தோன்றி வினைவழி போகத்
தினாக, னிச்சையைப் பண்ணிநிற்குந் தொழிலயி விச
சைமூன்றும், வைச்சபோ திச்சாஞானக் கிரியைமுன்
மநுவியானமா, நிச்சயம் புருடனுப் பொதுமையி னி
ற்குமன்றே. (௫௬)

(இ-ள்.) விச்சை வித்தியா தத்துவத்திலே யராகதத்துவ
யி னிராகந் தோன்றி, ஆன்மாக்கள்செய்த கன்மத்து
தோன்றி வி க்கீடாகப் பிரகிருதியினின்றும் பிறந்த சுக
னைவழி போகத் துக்காநுபவங்களை மேன்மேலும் புசிக்கை
தினாக னிச்சை யின்பொருட் டிச்சையைப் பண்ணுநிற்கும்.
யைப் பண்ணிநி
ற்கும்

தொழிலறிவிச்சை மூன்றும் வைச்சபோது

ஆன்மா விச்சையாகிய விராகத்தினையு ஞானமாகிய வித்தையையுங் கிரியையாகிய கலையினையும் பொருந்தினபோது,

இச்சாஞானக் கிரியைமுன் மருவியான்மா நிச்சயம் புருடனாகிப் பொதுமையி னிற்கு மன்றே

ஆன்மா இச்சாஞானக் கிரியைகளாகிய கஞ்சுகத்திரயங்களையும் பொருந்தி, இந்திரியாதி விடயபோகங்களைப் புசிக்கைக்கு நிச்சயத்தையுடையனாய்? புருடதத்துவமென பதொரு மலமுண்டானபடியாலே புருடனென்னும் பெயரைப் பெற்றுப் பொதுவாயிருக்கும். எ-று.

வழிநூலார் கஞ்சுகத்திரயங் கூடினதே புருடதத்துவமென ச்ருதியிருக்க, சாம்புவாகிய சிவப்பிரகாசத்தில் "ஐவகையா லுறுபயனைக் குறுகவருங்கால மதுபுருட தத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர்" என்றுரைத்ததென்னைபோவெனின்? மதங்காகமத்தின் மூன்றென ச்ருதகையால அவ்வாசிரியருமோதினார் சிவப்பிரகாசம் - பொது - உ௯ - செ.

பௌஷ்கர முதலியவற்றினைந்தென ச்ருதகையால் ஆகமபேதமென வறிக.

இதற்குப பௌஷ்கரத்து மதங்கத்தையுமறிக (௫௯)

சிவாகரயோகியருரை வருமாறு.

மேலாக தத்துவலக்ஷணமும் புருஷதத்துவலக்ஷணமுங் கூறுதல்.

விச்சையிராகத்தோடறிவினைவழி போகத்தினைக் கணிச்சையைப் பண்ணிநிற்கும் - கலாவித்தைகளினாலே ஞாதிருத்வகர்த்திருத்வத்தை யுடைய ஆன்மாவுக்கு விஷயப் ‡ பிரவிருத்

தி யர்த்தமாக, வித்தியாதத்துவத்திலே நின்றும் ராகதத்துவந்தோன்றி கன்மாநுகுணமாக விஷயேச்சையைப்பண்ணும்.

‡ பிரவிருத்தி யாதகம் - பிரவிருத்தியின் பொருட்டு

ராகதத்துவமென்றொன்றுதோன்றி விஷயேச்சையைப்பண்ணவேணுமோ! ஆன்மா இச்சா ஞானக்கிரியாவானாகையால் அந்த விச்சைதானேபோருமெனனில்? சாக்கிரத்திலே யந்த இச்சாஞான க்கிரியைகளிருக்கையிலும் † அநாசக்தனான புருஷனுக்கு போகமில்லாமலிருக்கையினாலும் சக்தனான புருஷனுக்கு அசுத்தமாயிருக்கிற போகங்களைப்புசிக்கையிலே அமைவுபெறாமலிருக்கையினாலும் இந்தராகதத்துவமுண்டாகி போகத்தாவுக்கு உபகாரத்தைப்பண்ணும்.

† அநாசக்தன் - விருப்பில்லாதவன்

காலமானது பூர்வபவிஷ்யத் வர்த்தமான மாகிய தன்னுடைய விருத்திகளினாலே புசித்தபோகத்தை விடவும், ஒருபோகத்திலேநின்று புசிக்கவும், ஒருபோகத்தை ¶ யுத்பாதிக்கவும், நிமித்தமாய்நிற்க, நியதியானது காமபலத்திலே நியமனம் பண்ணி, காமமானது ஒருவர்பலம் ஒருவருக்குவாராமல் அவரவர்களே புசிக்கிறதற்கு சகாகாரியாய்நிற்க, கலையினாலும் வித்தையினாலும் போகோன்முகமான புருஷனுக்கு ராகமானது சடிதிப்பிரவிருத்தியை யுண்டாகப்பண்ணும். ராகமில்லாதவன் புசியாதாகையாலே புத்தியிலே அவைராக்கியமெனகிறராகமிருக்கிறதேபோரும், கலாஜந்யமாக வொருராகத்தை யங்கீகரிப்பது கற்பநாகௌரவமெனனில்? வித்தையினாலும் ராகத்தினாலும் கலங்கியிருக்கிற ஆன்மசிற்சத்தியானது இச்சைவடிவாய் புத்திதருமமான ராகத்துடனேகூடிப்பிரதிவிஷ்டம் § பிந்நராகமாய் அசாதாரணமாயிருக்கும்.

¶ உத்பாதித்தல் - உண்டாக்கல், § பிந்ந - வேறு.

முன்சொன்ன ராகத்துவமானது சாதாரணமாய் புத்திதர்ம ராகத்துக்கு அந்யமுமாய் கிராகியனுயிருக்கிறஆன்மாவுக்கு பந்தமாயிருக்கும்

சத்தாதி சாவவிஷயங்களும் திரிகுணாத்மகமா யிருக்கையினாலே தத்தத்குணாச்ரியனா யிருக்கிறபுருஷனுக்கு அந்தந்தவிஷய சௌந்தரியத்தாலே பிரவிருத்திவரும். மூல ராகம்வேண்டாமென்னில்? விஷய சௌந்தரியமே ராகத்துக்குக் காரணமாகில் + விரக்தனேயில்லையாம்.

+ விரக்தன - விருப்பில்லாதவன

அதில் ஆன்மநிஷ்டமுறிய சதா ராகமிருக்கில் புத்திபோகத்திலும் இச்சையடைப்பண்ணாமே யிருக்குமாகையால் * வீத ராகனேயில்லையாமென்னில்? அந்தராயமானது † வாசநாத்மாவென்றும் § பிரத்யக்காத்மாவென்றும் இரண்டுவிதமாயிருக்கும்.

*வீதராகன - ஆசையற்றவன, †வாசநாத்மா - அப்பியாசரூபம், §பிரத்யக - அறிவு

வாசநாத்துமாவானது ஆன்மஞான சம்பந்தியாயிருக்கும்.

ச்ரோத்ராதி பஞ்சேந்திரியங்களுஞ் சைசகாங் காரத் திலே தோன்றினவையாமென? ஆகாசத்திலே யுண்டான சத்தத்தை யறிவிக்கிற ச்ரோத்ரம் ஆகாசாத்மகமே! அவகத் தத் களுமப்படியே ஆகையினால் பஞ்சபூதங்களிலும் பஞ்சேந்திரியங்களுமுண்டாகி பஞ்சவிஷயங்களையு மறிவிக்குமென்னப் போகும் எனவில்? பூதங்களிலே பஞ்சேந்திரியங்களுமுண்டாகில் பஞ்சேந்திரியங்களுமுண்டாகிறாப் போலே †மூர்த்தி த்தாமே. அவ்வாறாகில் ஒவ்வொரு இந்திரியம் × அநேகேந்திரியங்களிலே கிரஹிக்கவேணுமே. மூர்த்தி மத்தானவையல் +பிரத்யேக மவஸ்தானமாக வேண்டும். ¶மூர்த்தி யந்தரத்திலே யாவிர்க்கப் படுகையிலே மூர்த்திமானாகி யிருக்கிற வஸ்துக்கு கிரஹணம் வாராமல் §ஸ்பர்சாதிகாகசரிதமாயிருக்கிற வஸ்துவை சக்ஷுசிரஹியாதே போகவேணும். சக்ஷுசானது தன்ஸ்ரீழுக் குள்ளே யிருக்கிற பதார்த்தத்தை கிரஹிக்கும் பொழுது ஜலத்திலே பிரவேசமான பாத்திரத்திலே தேஜஸுக்கு ஜலம் விருத்திரவிய மாகையால் சாதமாய்ப் போய் பதார்த்தக்கிரஹணங் கூடாததாகவேணும். தேஜோபூதத்திலே * ரூப

ங்கமாய் மூர்த்தமாகில் காணப்படாது. அதனுள் அஹங்காரத்திலே †உற்பவித்து அமூர்த்தமுமா யிருக்கும்மனமேயிருந்தால் அப்பொழுது சுவருக்குள்ளே யிருக்கிற பதார்த்தத்தையுங் கிரஹிக்கவேணுமென்னில் அது அப்படியல்ல. — குட்டியமாகிறது ‖ஸ்வச்சத்திரவியமாகிய நிர்மலவஸ்துவாய் ☞ சுத்தியைத் தனக்குள்ளேயிருந்தால் கிரஹியாது காணப்படுமோ? [illegible] மனமாய் அநித்தியத்தை யறிவிக்கிற இந்திரியங்களுக்கு [illegible] ஜாதியாக வேணுமென்று சொன்னது [illegible] சேர்ந்தால் திரவியமல்லா திருக்கிற ஓ கடகத்தைக் கிரியையும் [illegible] யிருந்தாலும் கடமாயிருக்கும் பதார்த்தத்தையிருந்தால் † விபக்ஷம் [illegible] இதனால் [illegible] ● [illegible] ரஹி [illegible] மகாங்காரத்தில் [illegible] அத்திக்குறி [illegible] லேயும் [illegible] ◯ [illegible] சுருக்கு [illegible] ஆய [illegible] கிரஹிக்கையால் [illegible] ற்றிக்கிலது [illegible] கைக்கு () பிராபகமான வஸ்துவை யொழிய கிரஹியாதானால்] குட்டியாதி விபவ [illegible] லேயிருக்கிறதைக் கிரஹியாதென்கிறது ^ அதுக [illegible]. இப்படியே இந்திரியங்களெல்லாம் பிராப்தமான வஸ்துவையே கிரஹிக்கும் —

‡ மூர்த்தி-உருவுள்ளது, × அகப்படு-வேறு, + பிரதியக்ஷம்-[illegible] வஸ்கோசம்-கண்ணுக்கு வெளியிருப்பு, ¶ வ்யாதகியம்-வேறுமூர்த்தி, § ஸ்படிககாசகம்-ஸ்படிகத்தால் மறைக்கப்பட்டது, * உற்பக்கம்-உண்டானது, † உற்பவித்து-உண்டாய், ÷ குட்டியம்-சுவர், ‖ ஸ்வச்சத்திரவியம்-நிர்மலவஸ்து, ☞ சத்தி-கடை, ஓ கடகம்-குடத்தை யுடைத்தது, + விபக்ஷம்-அறிவிக்கத் தக்

கது, ⁺⁺வியஞ்சகம-அறிவிக்கிறது, ● ரூபைகக் கிராஹி - ரூப மொளை, ○ சாக்ஷாத்-கேரிட, ௦ பிராப்கம்-கிடைதத்த, 1குட் டியாதி வியவதாகர்-சுவாமுதலான மறைவு, ⁂ அநுகக்க்ஷ்த ம்-சொல்லாம லோப ட்டது

[illegible]

கன்மேந்திரியங்களெல்லா முறைமுறைசெய்த வைகாரிய தருமென்பர் முன்னோர் - கன்மேந்திரியங்களான சொன்ன *வைகாரி காங்காரத்திலே தோன்றுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

தோன்றுமென்கிற மாத்திரமன்றி தோன்றுமென்று பெரியோர்கள் சொல்லுவார்களென்றதனால் இதற்குச் சங்கை யுத்தரங்கள் பலவாகப் பெரியோர்கள் பண்ணியிருக்கையால் அவை விரிந்த நூலிலே கண்டுகொள்க வென்று கருத்து.

*வைகாரிகம்-விகாரத்தால்.

தது-க்தம்- வாணீபாணீஹ பாயூபஸ்தானி சேந்த்ரியாணி வா | கர்மேந்த்ரியாணி ஜாயந்தே ஹ்யஹங்காராத் ஸவைகாரிகாத் .

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அகங்காரத்தினின்று மனமுதலிய பதினொரு தத்துவந் தோன்றுமென்று சொல்வாராய், மனத்தோடு ஞானேந்திரியங் கன்மேந்திரியத் தோற்ற முரைக்கின்றார்.

மனமது தைசதத்தின் வந்தது-மனதத்துவஞ் சாத்துவிகாங்காரத்தி லுண்டாய், — ஒருபொருளைப் பற்றி நினைவது செய்தன்மைய நிலைமையி நிற்கும் - வித்தியா தத்துவத்தோடு சேர்ந்த ஞானேந்திரிய மொன்றினால் விளங்கிய சித்தத்திற் சவிகற்ப நிர்விகற்ப ஞானவிஷயப் பொருள்களிலே பொருபொருளைச் சித்தமாய்ப் பொருந்தித் தூக்கி யிதின்னதாக வேண்டுமென்று சங்கற்பித்துத் தீர்ச் சந்தேசித்து நிற்கும் — ஆங்கேயந்தச் சாத்துவிகாங்காரத்திலே தானே;— இனமலி சோத்திர

இ-வர்க்கமிருக்க ஞானேந்திரிய மைந்தும்தோன்றிச் சிற்சத்தி வித்தியாதத்துவத்தோடு கூடி யிராகதத்துவங் கலக்க மனச சங்கற்பத்துக்கு முன்பொருளைப் பாகரும்.—சமய வித்தரிய மெல்லாம்-கன்மேந்திரியங்க ளைந்தையும்,— முன்முறை செய்த வைகாரிக தருமென்பர் முன்னோர் - முதகச்சொல்லிய விராசதாயகார முண்டாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அம்மூன்றனுள், தைசத வகங்காரத்தி னின்றும் மனந் தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இஃதியாதாசற் பாற்றெனச் சித்தருபமாய் நின்று சிந்தித்தும், பின் னதனை யுற்று நிச்சயித்தற் கண்ணதாகிய வேட்கையை விளைத்தும் நிற்கும், மனத்தின் பின்னதாக ஞானேந்திரியங்களும் அத் தைசத வகங்காரத்தி னின்றே தோன்றும். ஏனை வைகரி யகங்காரத்தி னின்றுவ கன்மேந்திரிய மைந்துந் தோன்றுமென்பதாம.

சோத்திராதி தோன்றுமெனச் சொல்லெச்சம் வருவித்துரைக்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் மனமும் ஞான விந்திரியங்களும் தைசதவாயகாரத்திலே தோன்றிக் காரியப்படுகிற முறைமையும் வைகரியாங்காரத்திலே கன்ம விந்திரியங்கள் தோன்றுகிற முறைமையு மருளிச் செய்கிறார்.

மனமது தைசதத்தின் வந்தொரு பொருளையுந்தி நினைவ தற்கேற்ற சங்கைய நிலைமையு நிற்கும் — முன்சொன்ன தைசத வாங்காரத்திலே மனமானது தோன்றி இந்திரியங்களை விஷ யங்களிலே புகுத்த வருமவசரத்து அவையிறுக்குக் காணமுற் பட்டுச் சென்று பொருந்தி நினைப்பதுஞ் சென்று பொருந்துதினை ப்பதுஞ் செய்து ஐயப்படாநிற்கும் — அங்கே யினமவி சோத் திராதி - அவ்விடத்திலே கூட்ட பிசைத்திருக்கிற ஞானவிந்திரியங் களான சோத்திராதிகளைந்துந் தோன்றும். — கன்மவிந்தி ரியங்களெல்லாம் முன்முறை செய்த வைகாரிகத்தருமெனமு றைசொல்லுவாரோ - கன்மவிந்திரியங்களான வாக்காதிகளைந்தும் முன் சொல்லப்பட்ட வைகாரியாங்காரத்திலே தோன்றுமென்று சொல்லுவார்களறிவாலுடைந்த பெரியோர்கள்

இதனாற் சொல்லியது, உட்கரணங்களில் மனமும் சோத்திராதியுந் தைசதாங்காரத்திலே தோன்றிற்றென்றும், வைகாரியாங்காரத்திலே புறக்கரணமென்று சொல்லப்பட்ட வாக்காதி தோன்றுமென்று முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தைசதத்தின - அம்மூன்றனுள் தைசதாங்காரத்தினின் றும், — மனமது வந்து - மனமானது தோன்றி, — ஒருபொரு ளையுந்தி நினைவதுஞ் செய்து - எதிர்ப்பட்ட தொருவிடயத் தை யிஃது யாதாகற்பாற்றென சித்தரூபமாய் நின்று சிந்தித்து ம், — அச்சங்கைய நிலைமையி னிற்கும் - பின்னதன்கணையுற்று நி ச்சயித்தற் கண்ணதாகிய வேட்கையை முதல்வனுணர்வின் வி

ளைத்துநிற்கும் — இவைமலி சோத்திராதி - மனத்தின் பின்னு கவினமிகுந்த ஞானேந்திரியங்களும், — ஆயதே தோன்றும் - அந்தக்கரணங்காரத்தி லிவரே முதல்வருள்ளையாற் றோன்றும், — முன்முறைசெய்த வைகாரிக - முன்னாற சத்திய வைகாரிகாகங்காரத்தி னின்றும், — கன்ம விந்திரியமெல்லாம் - கன்மேந்திரியங்களும், — தருமெய்ப்பா முன்னேற்றா - முதலவருளையாற் றோன்றுமெய்ப்பா முன்னோரா

மறைஞானதேசிகர் உரை.

மேவிடுந் தன்மாத்திரையானை ஞானேந்திரியமும்
தவ விடயமு முணர்த்துகிறா

செவிமெய்வாய் துவக்குக்கண்ணாக்கு நாசியென்ப திணையுநல்லோர், புத்தியிந்திரியமென்று புகலுவர் இவைதனக்குச், சத்தநற் பரிசரூப ரசகந்தங் களைந்தும், வைத்தவோர் விடயமாக வடைவினின் மருவுமன்றே. (௭௧)

(இ-ள்) சுரோ — செவியோர் சோத்திரந் துவக்கு சக்ஷு

த்வக்சக்கு — சிங்குவை கிராணமாக ஐந்தினையும் புத்தி

ச்சுசிங்கு — யிந்திரியமென்று சொல்லாநிற்பர்கள்.

நாசிகை நிங்கு

நல்லோர் புத்தி

யிந்திரியமென

று புகல்வார்

இவைதனக்கு — இந்தப் புத்தியிந்திரியங்களைந்துக்கும் விடயமாவன?

சத்தநற்பரிச — நன்றான சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்

ரூபரசகந்த — தமியவைந்தையும் விடயமாகக் கற்பியா நி-

ங்களைத் துய்க்கும் வைத்தனர்;

தன் மற்றுவற்றியல்புமாறு காண்க.

அடைவின்னமருவுமன்றே. ஆகாசாதியான பூதங்களைந்தும் அடைவே சோத்திரமான தேகத்திலாகாசமிடமாக நின்று சத்தத்தை யறியாநிற்கும்.

துவக்கான தேகத்தில் வாயுவிடமாக நின்று பரிசத்தை யறியாநிற்கும்.

கண்ணான சரீரத்திலே யக்கினியிடமாக நின்று ரூபத்தைக் காணும்.

நாக்கான சரீரத்திலப்புவிடமாக நின்று ரசத்தை யறியாநிற்கும்.

நாசியான சரீரத்திலே பிருதிவியிடமாக நின்று கந்தத்தைக் கிரகிக்கும்; ஆகவிம்முறையே பொருந்தாநிற்கும். எ-று.

நலஞ்சுகுமமாகிய விரண்டு சத்தத்தையும் புத்தி விகாதமாகிய செவிடனறியிலே நல்ல செவி விடயமாகக் கேட்கையால் நற்செவியெனச் சிறப்பித்தார்.

ஏனையவு மிவ்வாறு காண்க.

இதற்குப் பார்க்கிலை யாகமத் தறிக. (௬க)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஞானேந்திரியங்களுக்கு விஷய சம்பந்தங் கூறுகின்றது.

நற்செவி துவக்குக்கண் நாசி யைந்தினையும் புத்தியிந்திரியமென்று வைத்தனர்-ச்ரோத்திரம் துவக்கு சட்சு ஜிஹ்வா க்கிராண மஞ்சும் ஞானேந்திரியமென்று ஸ்தாபித்தனர்;—

இவைதனக்குச் சத்த பரிச ரூப ரசகந்தங்களாகும் விடயமாக வடைவே மருவுமென்று சொல்வோர் புகன்றனர் - இங் ஞானேந்திரியங்களான சுரோத்திராதிகள் ஐந்துக்கும் அடைவே விஷயமாகச் சத்த பரிச ரூப ரச கந்தங்களாகும் பொருந்துமென்று பெரியோர்கள் சொன்னார்கள்

பெரியோருரைத்ததனையொன்றாது முனைந்தோ வரியாகவுரைத்ததை யவ்விடத்தே ¶நாஸ் குறித்துக் கூறினானென்பது கருத்தாகையால் இதனை விஸ்தாரமாக வருமாறு —

¶குறித்தல் - சுருங்கச்சொல்லல்.

சுரோத்திரமாவது *கர்ண சஷ்குலிய வசசிந்த ஆகாசமிடமாக நின்று சத்தத்தைக் கேட்பது.

த்வக்கானது ×தேகசர்ம சூக்ஷ்மபூதவாயு விடமாகநின்று தனைப்பொருந்தின பதார்த்தங்களுடைய சீதோஷ்ண ¶நுஷ்ணஜிச கடின மிருதுக்களை கிரஹிக்கிறது

சக்ஷுசானது †நேத்ர கோளகையில் சூக்ஷ்மபூத தேஜசு விடமாக நின்று ‡ரூபவத்து பதார்த்தங்களைப் போய்க்கிரஹிக்கிறது.

ஜிஹ்வையானது §ரசனையில் சூக்ஷ்மபூத அப்புவிடமாக நின்று தனைப்பொருந்தின மதுராதி ஷட்ரசங்களையும் கிரகிக்கிறது.

கிராணமானது நாசிகையில் சூக்ஷ்மபூத பிருதுவியை ஆச்ரயித்து நின்று வாயுவசத்தினாலே வந்தடைந்த சுகந்த துர்க்கந்தங்களை கிரஹிக்கிறது.

*கர்ணசஷ்குலிய வசசிந்த - காதுக்குட்டப்பட்ட, ×தேகசர்மம் - சரீரத்தோல், ¶அநுஷ்ணஜிச - மிதமான சீதோஷ்ணம், †நேத்ரகோளகை - கண்குழிவிழி, ‡ரூபவத் - ரூபமுள்ள, §ரசனை - நா.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
நாஸ்தி.

தேஹாவயவங்களான + காண சக்ஷுசுலியா தயந்நியமாக § தத்த தவயவ நிஷ்டமாக சுரோத்திராதியாக வேறே அனேக தத்தவமென்று சொல்லவேண்டியதில்லையெனில், ? அது கூடாது. அந்த அவயவங்களிருந்தும் * அந்த ரூப பதார்த்தி ங்ருஹணானுபிரதேல அந்த ரூப பதார்த்த, ஜ்ஞானமாகிய × தத் தத் போஜகாதிருஷ்டா ‡ பாவத்திலேல சப்தாதிக்கிராஹக சத்திகள் ¶ பிரதிபத்தைக வாதாகையால் கூடுமெனில்? அப்பொழுது † திமிர ● துகி ○ திலாவாய ஸ்யாயமாக நா சடாதிகிரஹண சத்தகமென்றும் நாம் சுரோத்திராதி தத்துவமென்றும் சப்தபேசமாக சொல்லுகிற தொழிப ஆதத பேதமில்லை துவைகோல் நியும பரமார்த்த சிவப் பிரஸிதாக] மாதுசாரேண சுரோத்திராதி தத்துவமென்று வியவஹரிப் பதிக்கசதயம

+ காணசக்ஷுராதி டகநியமாக - காதுமுதலானதுக்கு வேறாக, § தத்த தவயவ நிஷ்டமாக - அந்தந்த அவயவத்திலிருப்பதாக, * அந்த ரூப பதார்த்திகள் - குருடு முதலியவர் செவிடர் முதலானவர், × தத்தத் போசகம் - அதையதை புசிப்பிக்கிற, ‡ அபாவம் - விளைதகல், வெளியிடல், ¶ பிரதிபத்தை - கட்டுப்பட்

டது, †திரமிட - தமிழன், ● ஆந்திர-தெலுங்கன், ○ இல-எள்ளு, 0பிரணீத - சொல்லப்பட்ட, 1 அநுசாரேண-வழியாய், ^சத்யம்-உண்மை.

சப்தத்தை சுரோத்திரம் போய் கிரஹிக்குமோ! தனவிடத்திலடைந்த சப்தத்தை சுரோத்திரம் கிரஹிக்குமோ! என்றொருவன் கேட்க, அதற்கு நையாயிகன் சப்தம் திக்குகளிலே யிருந்த *வீசி §தரங்க நியாயமாக ‡பேரியாதி தேசோத்பன்னமான சப்தம் ¶ஸ்வஜாதீயமாயிருக்கிற உத்தரோத்தர சப்தங்களை உற்பாதித்து பூர்வாபூர்வ சப்தங்கள் நசிக்க, அந்தியசப்தமானது சுரோத்திரத்தை சம்பந்தித்த பொழுது அந்த சப்தத்தை சுரோத்திரம் கிரஹிக்கும். ×உந்தப் பிரதேசத்தில் சப்தமும் இவ்வாறே +கதம்பமுகுள நியாயமாக †அந்திய சப்தமானது சுரோத்திர சம்பந்தமான பொழுது கிரஹிக்குமென்பன.

* வீசி-பெரிய அலை, § தரங்க-சின்ன அலை, †பேரியாதேசம்-பேரிகை முதலானயிடம், ¶ஸ்வஜாதீயம்-ஒரினம், ×உந்தப் பிரதேசம்-உயரகவிடம், +கதம்பமுகுளம்-கடம்பமொக்கு, †அந்தியம்-கடைசி

இது *அயுக்தம். பூர்வாபூர்வ சப்த முத்தரோத்தர சப்தத்தை ஜநிப்பிக்கதாகில், பேரியாதி சப்தத்துக்கு இவ்வளவென்று ×அவதியில்லையாம் ஆகையால் †சநாமுக்தபாணம் போல ‡வேக சந்தானத்திலே கணமே வந்தடைந்த சப்தத்தை சுரோத்திரம் கிரஹிக்கும். சுரோத்திரமானது சப்தோற்பத்திப் பிரதேசத்திலே போய் கிரஹியாத பொழுது இன்னவிடத்திலே இன்னதினுடைய சப்தமென்றெப்படி யறியுமெனவின்?

*அயுக்தம்-தகாது, ×அவதி-முடிவு, †சநாமுக்தபாணம்-வில்லினால் விடப்பட்ட பாணம், ‡வேகசந்தானம் - வேக பரம்பரை

பூர்வத்திலே *அநுரூபமான பெரியாருஞ் சப்தஜாதியங்களொன்று நிச்சயிக்கப்படும் சக்ஷுசும் இவ்வாறு தன்னை வந்தடைந்த பதார்த்தத்தைக் கிரகிக்குமோ! போய்க் கிரகிக்குமோ வென்னில்? வந்தடைந்த பதார்த்தத்தைக் கிரகிக்குமென்பது கூடாது. அதெவ்வாறென்னில்? கடாதியானது சக்ஷுசைவந்து பொருந்தாது. அக்கினியும் ×சஸ்திரமும் நேத்திரத்தைப் பொருந்தில் பாதைவரும். ஆகையால் ¶அவ்யவஹித வஸ்துக்களை †நயனத்தினுடைய பிரகாசங்கள் ரூபவத்து பதார்த்தங்களை வியாபித்தே கிரகிக்கும். மற்றத் துவக்கு ஜிஹ்வா கிராணங்களாகிற மூன்று இந்திரியங்களுந் தன்னைப் பொருந்தின ‡உசித விஷயங்களையே கிரகிக்கும். சக்ஷுசு இந்திரியங்களைப் போல கோளகமாத்திரமே வியாபகமல்லவென்னில்? அது கூடாது பெரியதாயிருக்கிற பர்வதாதி வஸ்துக்களைக் கிரகிக்கையினாலே கோளகமல்ல ஆகில் சர்வவியாபியே விஷயப் பிரதேசத்திலே போய்க் கிரகிக்க வேணுமென்னவேண்டா! §விருக்ஷாக்ரத்தையும் சந்திரனையும் ஏககாலத்திலே கிரகிக்கையினாலேயென்னில்? அதுவுங் கூடாது விருக்ஷாக்கிரத்தையுஞ் சந்திரனையும் ஏககாலத்திலே கிரகிக்கவில்லை. ஏககாலம்போலே தோன்றுகிறது தாமரை யிதழ்நூறை ஊசியினாலே குத்தினபொழுது காலக்ஷணந் தெரியாமல் ஒருக்காலே குத்தினதென்பதுபோல *சாகாக்கிரத்தையும் சந்திரனையும் ஒருக்காலே கண்டோமென்பது. ஆகையால் 2கோளகைக்கு அந்நியமாய் ¶பிரதிவிஷயம் வியாபித்து கிரகிப்பதாயுள்ளது சக்ஷுசு.

×சஸ்திரம்-ஆயுதம், ¶அவ்யவஹிதம்-கிட்டினது, †நயனம்-நேத்ரம், ‡உசிதம்-யோக்கியம், §விருக்ஷாக்கிரம்-மரத்தினுனி, *சாகா-கிளை, 2கோளகை-குவளை, ¶பிரதிவிஷயம்-விஷயந்தோறும்.

[illegible]

௩௦. தத்ஸ்ய ஸ்பர்ஸாதிவிஷயத்வம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஞானேந்திரியம் பார்க்கும் பொருளைப் பகர்கின்றார்.

கட்டில் கூப்பிட்ட நெறாவிடத்துச் சக லக்ஷணமின்றே லே கட்டிலிருக்கும் புருடனென்பதுபோலச் செவிமுதலிய வறிவிருக்கும் இந்திரியங்கள் செவிமுதலாகச் சொல்லப்பட்டன.

மற்றது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்விருவகை யிந்திரியங்களுள் ஞானேந்திரியங்க ளாவன? சோத்திரமுதலிய வைந்துமாம் அவற்றிற்கு விடயமாவன? முறையே சத்தமுதலிய பூதகுண மைந்துமாமென்பதாம்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் ஞானேந்திரியங்கள் காரியப்படு முறைமை யருளிச் செய்கிறார்.

நற்செவி துவக்குக் கண்ணு நாசி நாவைந்தினையுங் கேள்லோர் புத்தி யிந்திரியமென்று புகன்றனர் - நன்றான சோத்திரத் துவக்கு சட்சு சிங்குவை யாக்கிராண மென்று சொல்லப்பட்ட வைந்தையும் ஞானேந்திரியமென்று சொல்லாநிற்பர் அறிவா லுயர்ந்த பெரியோர்கள்.— இவைதனக்கு - இந்த விந்திரியங்க

ளைந்துக்கும்,— சத்த பரிச ரூப விரத கந்தங்க ளைந்தும்வை த்தனர் விடயமாக வடைவினி ய மருவுமன்றே - சத்தபரிசரூப விரதகந்தங்களென்று சொல்லப்பட்ட வைந்தையும் விஷயமாக வடைவிலே பொருந்துமென்று சொல்லாநிற்பார்கள் பெரியோர் கள்.

இதனாற்சொல்லியது, ஞானேந்திரியங்களைந்துக்கும் சத்தாதிகள் விஷயமாக வடைவிலே பொருந்துகின்ற காரியப்பிரமாண முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—0—

கர்மேந்திரியங்களோ,— புத்திந்திரியம் - ஞானேந்திரியங்களாவன?— நற்செவி துவக்கு நயனநாசி நாக்கு ஐயுமென்று புகன்றனர் - சுரோத்திரமும் துவக்கும் சக்ஷுவும் சிங்குவையு மாக்கிராணமு மாகிய வைந்து மென்று மொழிந்தனர்,— அவைதமக்கு விடயமாக - அவைகளுக்கு விடயமாவன?— அடைவினி ய - முறையே— சத்த பரிச ரூப விரத கந்தங்கள் - சத்தமு பரிசமு முருவமு மிரதமுங் கந்தமு மாகிய பஞ்ச குணங்களாம்,— மருவு மென்றே வைத்தனர் - பொருந்துமென் றந்தணர் சொல்லாநிற்பர்.

மறைஞானதேசிகர் உரை

மேவிருக்கு முறைபானே யனேபத்திரிடமு மத
னத்தொழிலு முணர்த்தற்கு
வாக்கொடு பாதம்பாணி பாயுவோ டுபத்தமை
ந்து, நீக்கினர் முன்னோர்கன்மேந் திரியங்க ளென்றிவை

னதே, யாக்கிய வசனகமன தானமும் விசர்க்கான
ந்த, மாக்கமா ஐந்துமைந்தின் றொழிலென வோதி
னாரே (௬௨)

(இ-ள்) வாக் கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து மிந்திரியங்க ளென நினைத்தே

அறிவாலுயர்ந்தோர் வாக்குப் பாதம் பாணி பாயு உபத்தமெனக் கூறிய வைந்தினையுங் கன்மேந்திரியங்க ளென்று பிரித்தனர். இவற்றினுக்குத் தொழிலிடமேதெனில்?

ஆக்கிட வசன கமன தானமும் விசர்க்கானந்த மாக்கமா ஐந்துமைந்தின் றொழிலென வோதினாரே

அவையிற்றின் றொழிலைத் திடமாக வுண்டாக்கிய வாக்கானது வசனத்தையும் பாதமானது கமனத்தையும் பாணியானது தானத்தையும் பாயுவானது விசர்க்கத்தையும் உபத்தமான தானந்தத்தையும் அடைவே யிவையிற்றின் றொழிலென்று சொன்னார்கள் எ-று.

ஆனமாலினி—தத்திலே கிரியாசத்தியும் ஞானசத்தியும் சமவேதமாயிருக்கையிலே, சத்திவியாபாரத்துக்கு அபிவ்யஞ்சகங்களாகையான ஞானேந்திரியங் கன்மேந்திரியமெனப் பெயர் பெற்றது.

இதற்குப் பார்க்கினையினும் பௌஷ்கரத்து மறிக. (௬௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் கர்மேந்திரியங்களுடைய வியாபாரங் கூறுதல்.

வாக்கொடு பாதம்பாணி பாயுவோ டுபத்தமைந்தும் நீக்
கின் முன்னே கன்மேந்திரியங்க ளென்னிலிந்தே-இந்த ஐந்து
விஷயக் கிராகங்களல்லாமல் தொழிற் செய்வ தாகையாலேபெ
ரியோர்கள் விசாரித்து கன்மேந்திரியமென்று பிரித்தார்கள் —
ஆக்கிய வசனாதானமும் விசர்க்கானந்த மூக்கமே
ந்து ஞானதின்றெழுமில்லை வேதிநூரே - திடம்பொருந்தி
வசனாதானம் 1விசர்க்கா நந்தங்க ளிதனையுடையே மு
ன்சொன்ன கன்மேந்திரியங் ளிருடைய கிரியையென்று சொ
ன்னார்கள் அவை வருமாறு

1 விசர்க்கம்-விடுதல்

வாக்கு பாதம்பாணி பாயு உபத்தங்கள் அவைவே சுரோத்தி
ரமான சப்தத்தை கேட்கில் வாக்கு ஆகாசமயமாய் நி
ன்று வசனிக்கும் த்வக்கானது பரிசத்தை பற்றில் பாதம் வா
யுவின்மயமாய் நின்று கமனத்தைப் பண்ணும் சக்ஷுவானது ரூ
பத்தை கிரகிக்கில் பாணியானது தேயுவினிடமாய் நின்று இதே
லேற்றலைச் செய்யும் ஜிஹ்வையானது ரசத்தை கிரகிக்கில்
பாயுவானது அப்புவினிடமாய் நின்றும் விசர்க்கத்தைப் பண்
ணும் கிராணமானது கந்தத்தை கிரகிக்கில் உபஸ்தமானது பி
ருதிவியினிடமாய் நின்று ஆனந்தத்தைப் பண்ணும் ஞானேந்தி
ரியங்களைந்தும் கன்மேந்திரியங்களுக்கு சகாயமாயிருக்கும் க
ன்மேந்திரியங்களைந்தும் ஞானேந்திரியங்களுக்கு சகாயங்களல்
ல. இவ்வாறு ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களுமான
மாவினுடைய ஞானக் கிரியாசத்தி வியாபாரத்துக்கு அபிவிய
ஞ்சகங்களாம்.

* தத்ர-கர்மவிஷயே - கர்மேந்த்ரியாணி வாக்பா-
ணி பாதபாயூபஸ்தாக்யாநி | ஜ்ஞாநேந்த்ரிய காரணாநி
ஷாமிந்த்ரியாணாம் ப்ராக் கர்மேந்த்ரியாணி || கர்மேந்த்ரியாணி

[illegible]

முந்தே சுத்தமாகையிலே வைகரியாதி வாக்கான நதோ னறுமென்று சொல்லியிருக்கையிலே இவ்விடத்து வாக்கென று ஒன்றைச் சொல்லுகிறது கற்பனை கௌரவமென்னில்? அப்படியல்ல. அந்த வைகரி வாக்குக்கு அபிவியஞ்சகஸ்தானம்

அதெவ்வாறெனில்? அநாதிசித்தமான அக்ஷரங்களைக் கையினாலே யெழுதினபொழுது அந்தரங்கையிலே உற்பத்தியானதல்ல அக்ஷரங்கள் அநாதிசித்தமாகையினாலே ‡லேகனக்கிரியை அந்த அக்ஷரங்களினுடைய †சாங்கேதிகத்துக்கு அபிவியஞ்சகம். அக்ஷரத்துக்கு அபிவியஞ்சகமென்றுமல் அக்ஷர சாங்கேதிகத்துக்கு அபிவியஞ்சகமென்றது, சாங்கேதிக§லிபி தேசபாஷாபேதங்களினாலே அநேகவிதமாகையினாலும் அக்ஷரமல்ல அக்ஷரமென்பது ஆந்தர¶ஸ்போடகம் ஆகிலிவ்யஞ்சனமாகையினாலுஞ் சத்தங்கள்தானே யாகாதோவெனில்? அது *அவ்வியக்த சத்தம். அது கேவலநாதமேயொழிய அர்த்த ஸ்போடகமல்ல. அவையாலந்த வைகரிவாக்குக்கு அபிவியஞ்சகஸ்தானமாக இந்த கர்மேந்திரிய வாக்கு சித்திக்கும். ஆகையினால் வாக்குரூபத்திற்கு சப்தத்தன்மாத்திர விபஞ்சகமே காரணமல்ல, வி[illegible]வே காரணம்

‡லேகனம்-எழுதல், †சாங்கேதிகம்-கட்டிப்பாடு, §லி

பி-எழுத்து, ¶ஸ்போடகம் - தெரிவிக்கிறது, *அவ்வியத்தம்- பிரித்து தெரியாதது

ததுக்தம் பௌஷ்கரே - நவாஸ்த்ர ஸ்ப்ருஷ்டநாஸ்த்ர ஜ்ஞே ஷாம் தத்ர வ்யஞ்ஜகாபாவதஃ | யத்ர வ்யஞ்ஜகம் ந தத்ர ஸ்வம் ஸ்வம் ஸம்பந்தவிஸாஞ்ஜியோஸ்திதா | தேஷாம் ச ஸங்காரணம் விஷ்யாஸ்மிந்நபேதம் வ்ருத்திகஸங்கி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

கன்மேந்திரிய வியாபாரத்தை விளம்புகின்றார்

முன்சொன்ன முறைமைகளிலிருக்கு மிந்திரியங்களை வாக்காதியாகச் சொல்லப்பட்டன. மனசசங்கற்பத்தாற் செலுத்தப்பட்டு ஞானேந்திரியம் ஞானசத்தியை விளக்கும்போது கன்மேந்திரிய மகங்காரத்தோடு சேர்ந்து கிரியாசத்தியை விளக்க, கிரியாசத்தி சமரம்பத்தோடே அகங்காரங் கிளம்பி, உதானுதி வாயுச் சேட்டையைப் பண்ண, வசனாதித் தொழில் வரும்.

மற்றது வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

ஏனைக் கன்மேந்திரியங்களாவன? வாக்குமுதலிய வைந்துமாம். இவை தொழில் செய்யுங் கருவிகளாகலின் ஞானேந்திரியங்களின் வேறாக வைத்துக் காணப்படும். இவற்றின் றொழிலாவன? முறையே வசனமுதலிய வைந்துமாமெனபதாம்.

அற்றேல், ஆன்மாவின் ஞானக்கிரியைகளை விளக்குதற்கு இந்திரியமாத்திரைகரணங் கலை முதலெனவும் முத்திறத்தன ஒன்றேயமையுமாகலின், ஏனைய மிகையாமபோலுமெனின்? அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் புறக்கரணத்தில் வாக்காதியின் தொழில்களருளிச்செய்கிறார்.

வாக்கொடு பாதம்பாணி பாயுவோ டுபத்தமைந்தும் நீக்கினாமுன்னே கன்மேந்திரியங்களொன்றினோந்து - வாக்கொடு பாதம் பாணி பாயுருபத்தமென்று சொல்லப்பட்ட வைந்தையும் ஞானேந்திரியங்களைப்போல இவையிற்றுக்கு அறிவில்லாதது கொண்டு கன்மேந்திரியங்களென்று அறிந்து முன்னே பெரியோர்கள் சொல்லி வைத்தார்கள்,— ஆக்கிய வசனகமனதானமும் விசர்க்கானந்த மூசகமானைந்து மைந்தின் றொழிலென வோதினோர் - அவையிற்றினாலே யுண்டாக்கப்பட்ட வசனகமனதான விசர்க்கானந்தமென்று சொல்லப்பட்ட உற்சாகத்தைகளுடைய வைந்தும் அந்தக் கன்மேந்திரியங்களைந்தின் றொழிலென்று ஓதியனோர்த பெரியோர்களருளிச்செய்தார்கள்.

இதனாற்சொல்லியது, கன்மேந்திரியங்களின் றொழில்களை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

கன்மேந்திரியங்கள் - ஏனைக் கன்மேந்திரியங்களாவன,— வாக்கொடு பாதம்பாணி பாயுவோ டுபத்தமைந்துமென - வர்

க்கும் பாதமும் பாணியும் பாயுவும் உபஸ்தமுமைந்துமென,— முன்னே விளைந்த நீக்கினர் - முன்பேயிவை யொழில்செய்யுங் கருவியாகலின் ஞானேந்திரியங்களின் வேறாக வைத்தனர்,— இவையைந்தின் றொழில் - இவையைந்தின் றொழிலாவன?— ஆகிய வசனகமன தானமும் விசர்க்கானந்தமுமைந்தும் - ஆகிய முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமு மானந்தமுமாகிய வைந்தும்,— ஊர்கமாமென வோதினரோ - வலியாமென மொழிந்தனரென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

புறக்கருவியு முட்கருவியு மானவாறு பத்த
தென வுணர்த்துகின்றார்.

வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவியாகு,
மோயாதமனாதிகாயத் துளுருட்கருவியாகு.மாயவா
ர்கட் கராகமாதி யவற்றினுட கருவியென்பா, மாயா
டன் வழிவந்ததறாற றுடக்குணடு வாழுமாலமா.(கூ)

(இ-ள்.) வாயாதி சுரோத்திராதி புறத்துவாழ் கருவியாகும் — இங்ஙனங் கூறிய விருவகையும் புறம்பே நின்று காரியத்தைச் சாதிக்கையாற் புறக்கருவிகளாகும்.

ஓயாத மனாதி காயத் துளுறுமுட் கருவியாகும் — சரீரத்தை விட்டு நீங்காதிருக்கிற மனது முதலிய வந்தக்கரணங்க ளுள்ளுக்கு மந்தரங்கமுட்கரணமாகும்.

ஆய்வார் கட் கராகமாதி யவ — விசாரித்துப்பார்க்கி லிராகமுதலிய வைந்து மனாதிகளுக்குட்கருவியாய் நிற்குமென

ற்றினுட் கருவி று சொல்லுவர்கள
யென்பர்

மாயாடன வ — ஆன்மாவானவன் மாயாகாரி
யிற்றிவர்ரூற் று — யமாகிய கலைமுதற பூமியீறாக விலையிற்றி
டகுஞுடு வாழு — னுடுவே நின்று சுகதுக்கத்தாற் பந்தி
மானமா — க்கப்பட்டு இருவினைப் பயன்களை யநுபவியா
நிற்கும் எ-று. (௬௩)

இதற்குச் சிந்திய விசுவந கிரணத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலந்தக்கரண பகிஷ்கரண சம்பந்தங் கூறுதல்.

வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவியாகும்-வாக்காதி ஐந்தும் சுரோத்திராதி யைந்தும் பகிஷ்கரணம் — ஓயாத மாருதி காயத்துணரு முட்கரணமாகும் - ஒழியாம லுலாவுதல் செய்யும் மனசுமுதலாகிய நான்கும் அந்தக்கரணங்களாம்.— ஆய்வார்கட் கிராகமாதி யவற்றினுட்கருவியென்பர்-இது நானல்ல விது நானல்லவென்று ஆன்மஸ்வரூபத்தைக் விசாரித்துப்பார்க்கும் அவர்க்கு ராகம் வித்தை கலைமுதலும் மனசாதியிலும் அந்தரங்கமான கரணங்களாம் — மாயாடான வயிற்றிவர்ரூற் றுடகுஞுடு வாழுமானமா - மாயையினிடத்தி லுண்டாகிய இந்தத் தத்துவங்களினுலே பந்திக்கப்பட்டு ஆன்மாவானவன் மாயாமண்டல மத்யஸ்தனாகி அசத்தியமான போகத்தைச் சத்தியமென றெண்ணிப் புசிப்பனென றிதனபொருள்

கருவிகரணமென்ப திரண்டும் பரியாயநாமம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அகரங்க பகிரங்க மறிவிச்சினுரா
மனாதி-மனம் புத்தியகங்காரஞ் சித்தம்;— இராகமாதி-
காலநியதிகள். ஒருபிரகாரந்தரமாக சாத்திருகாரக மாறுலுர,
கரணகாரகமாகிய கருவியென்று சொல்லப்பட்டதாதலால் க-
லைவந்தனை பிராசம
மறந்து வெளிப்பொருள

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்விந்தரிய யிந்திரியங்களும் ஒன்றனை விடயிக்கு முறு வாகக் உடம்பின் புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகள் மனமுதலாயின அவ்விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை உடம்பினகத்தே நின்று விடயிக்கு முட்கருவிகள் ஏனைக் கலாதிகளோவெனின்? அவ்வந்தக் கரணங்களான விடயிக்கப்பட்டு வந்தபடியே ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகட்குப் பொருந்தவனவாய் உள்ள அந்தக் கரணங்களாம். இவை தமமுள் வேற்றுமையாகலின் இம்முத்திறக்கருவிகளும் ஒருங்கேயான வேண்டப்பட்டு உயிரைப் பந்தித்து நிற்குமென்பதாம்

மாயாளெனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி மதமபற்றி உருவகஞ் செய்தற்பொருட் டெனினுமாம்.

ஓபாமை மனத்துக்கடை

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலிகந்த உட்கரணம் புறக்கரண முதலான கருவிகளிறு

லே மாயையினிடத்திலே ஆன்மாக் கட்டுப்பட்டு நின்று புசிக்குமென்று அருளிச்செய்கிறார்.

வாயாதி சோத்திராதி புறத்தவாம் கருவியாகும் - வாக்குப் பாதம் பாணி பாயு உபத்தமென்று சொல்லப்பட்ட வைந்தும் சோத்திரந் துவக்கு சட்சு சிங்குவை யாக்கிராணம் என்று சொல்லப்பட்ட வைந்தும் ஆக விஷயபந்தம் புறக்கருவிகளாகும் — ஓபாத மருந்தி காயத்துணரு முட்கருவியாகும் - முன்னே சொன்ன விந்திரியங்களைப் போல விட்டுப் பறாமல் ஆன்மாவைப் பிரியாம நிற்கிற அந்தக்கரணங்கள் நாலும் தேகத்துக் குள்ளே நின்று அறிகிற உட்கரணமாகும் — ஆயவராகம் — கராகமாதி யவற்றினுட் கருவியென்பர் - தற்போதமற்றுத் தம்பிரானுடைய திருவருளினாலே விசாரிப்பார்க்கு இராகமும் வித்தையுங் கலையு நியதியுங் காலமும் அவையிற்றுக்கு உட்கருவியாகுமென்று நாதாக்கள் சொல்லுவார்கள்,— மாயாடன வயிற்றியற்றுறு முடக்குமுடி வாமூனமா - மோகினியென்கிற பெட்டியுடைய மாயாசத்தியினுதரத்திலே கிடந்து இவையிற்றாலே பந்திக்கப்பட்டு அநுபவியாநிற்கும் ஆன்மா.

இக்கூறசொல்லிப்பத்து ஞானேந்திரியமுங் கன்மேந்திரியமும் புறக்கரணமென்றும், அவையிற்றுக்கு உட்கரணம் அந்தக்கரணமென்றும், அவையிற்றுக்கு உட்கரணம் அராகாதியென்றும், இவையிற்றுக் குட்கரண முபாதான மாயையென்றும், இந்த மாயையிடமாக ஆன்மாக் கன்மத்துக் கீடானதைப் புசிக்குமென்னு முறைமையு மறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

வாயாதி சோத்திராதி - கன்மேந்திரிய ஞானேந்திரியங்க

ளாகிய விருவகை யிந்திரியங்களும்,—புறத்துவாழ் கருவியாகும்-ஒன்றனை விடயிக்க லுறுவார்க்கு அவ்வுடம்பின் புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகளாகும்—ஓபாத மனுதி-ஒழிவில்லாத மனமுதலாயின,—காயத்துளரு முட்கருவியாகும்-அவ்விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை யுடம்பி னகத்தே நின்று விடயிக்கு முட்கருவிகளாகும்—அராகமாதி-ஏனை கலாதிகளாவன?—ஆய்வார்கட் கவற்றுட் கருவியெனபர்-ஆராய்கின்றவர்க்கு அயலந்தக் கரணங்களான விடயிக்கப்பட்டு வந்தபயனை யான்மாவி விச்சாஞானக் கிரியைகட்குப் பொருந்துவனவா யுள்ள அந்தக்கரணங்களாம் இவை தம்முள்வேற்றுமையாதலான,—மாயாள் தன்வயிற்றிவருள்-மாயையினிடத் துண்டாகிய விம்மூன்றிறக் கருவிகளு மொருகலையான வேண்டப்பட்டு,—ஆன்மாத் தொடக்குண்டு வாழும்- உயிரைப் பந்தித்து நிற்குமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

பூதாதியிற்றோன்றிய தன்மாத்திரைகளைந்து மவற்றின்
காரியமும் புரியட்டகமு மீதென்ப
துணர்த்துகின்றது.

ஓசைநாற் பரிசரூப விரதகந் தங்களென்று, பேசு
மாத் திரைகளைந்தும் பிறக்கும்பூ தாதிகத்தி, னேச
வின் திரியங்கட்கு நிகழுறி விதனுங்காண்டு, மானசசே
ர் மனுதிதன்மாத் திரைபுரி யட்டகந்தான். (௩௪)

(இ-ள்.) ஓசைந பூதாதியாங்காரத்தினின்றும் சத்தம் பரிற் பரிசரூப சம்ரூப மிரதங் கந்தமென்றுசொல்லிய த

விரத கன்மாத்திரைகளைந் துந்தோன்றும்.
தங்களொன்றுபே
சுமாத்திரைகளை
ந்தும் பிரகரும்
பூதாதித்தந்தின
நேசவிந்திரிய
ங்கடகுறிகழறிவி
தனாரகாணமும

இந்தச் சத்தாதிகாரத்தாலான மாத்திரைகளி டத்தினேசத்தையுடைய ஞானேந்திரியங்க ளைந்துக்கும் விளங்கத்தக்க வறிவுண்டாம். ஆகலால் அஃதில்லாவிடத்து அறிவில்லையெ னறுங்காண்டோம். அதற்குக் காரணமயா தெனின்?

ஆசைசேர் ம
னாதி தனமாத்தி
ரை புரியட்டகந்
தான.

ஆசையே வடிவாகநிற்கு மனது புத்தியா ங்காரம் இங்ஙனம் கூறிய தன்மாத்திரை களைந்து மானமாககளுக இவவெட்டும் புரிய ட்டக சரீரம் எ-று.

எண்பட்டதென்று கூறியிருக்கப் 'பூதஞ்சரீரம்போனால்' என்னும் விருத்தத்தில் முப்பத்தொன்றாகக்கூறிய அதுமாறுகொ ளக்கூறுங் குற்றமெனனின? அஃதன்று அமுப்பது மவவெட் டினுளடங்கும். அஃதெங்ஙனமெனனில் ? பூதம்-௫, தன்மாத் திரை-௫, ஞானேந்திரியம்-௫, கன்மேந்திரியம்-௫, அந்தக்கரண ம், குணம்-௩, அதற்குக் காரணமாகிய பிரகிருதி-௧, கலாதி-௫, இவ்வெட்டுக்கொத்து மவவெட்டினுளடங்குகையாற் குற்ற மில்லையெனவறிக. "போராறுகனமஞானமுடன் சத்தாதி பூதா தி, சாற்றுமனமூன்றுசத்துவமுமேற்றகுணம், மொன்றுடன மானகலாதிமைந்து முப்பானிவையு, மென்புரியட்டகமென ரென்".

இதனுள் முப்பதுங்காண்க. (௧௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சத்த பரிச ரூப ரச கந்தங்களென்னுங் காரணதன்மாத்திரைகளைந்தும பூதாதியகங்காரத்திலே தோன்றும. ஞானேந்திரியங்களைந்துக்கு மிந்த பஞ்சதன்மாத்திரைகளிலே உற்பத்தியான ஆகாசாதி பஞ்சபூதங்களினுடைய குணமாகிய சத்தாதிகள் விஷயமாம இச்சாரூபமாகிய மனசும அகங்காரமும் புத்தியு மிந்தக் காரணபஞ்சதன்மாத்திரைகளும புரியஷ்டகசரீரமாம. இது சகலாகமு

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தன்மாத்திராசமுற்பத்தியைச் சாற்றுகின்றார்.

ஓசை நற்பரிச ரூப விரத கந்தங்களென்று பேசுமாத்திரைகளைந்தும் பிறக்கும் பூதாதிகத்தில்-தீவிரதராதி பேதம் பின்னைசத்த குணமொன்றுமுடையது சத்ததன்மாத்திரை, சத்த பரிசகுண மிரண்டுமுடையது பரிசதன்மாத்திரை, சத்த பரிச ரூபகுண மூன்றுமுடையது ரூபதன்மாத்திரை, சத்த பரிச ரூப,

ரசகுண நான்குமுடையது இரசதன்மாத்திரை, சத்த பரிச ரூப ரச கந்த குண மைந்து முடையது கந்ததன்மாத்திரையென்று சொல்லப்படும் பஞ்சதன்மாத்திரைகள் தாமதாங்காரத்திலுண்டாம் —

நேசவிந்திரியங்கட்கு நிசமுறிவிசனூர்காணும் - பற்றுற்ற விருவகையிந்திரியங்களுக்கிந்தப் பஞ்சபூதத்தோடு கூடிய பஞ்சதன்மாத்திரைகளால் ஞானசத்தி கிரியாசத்திகளை விளக்குமதிவென் றுபசரிக்கப்படும் சாமாத்திய முற்பத்தியாம். அவை யாமாறு —

சத்ததன்மாத்திரையு மாகாசமுங்கூடித் தேரிற் றேராற்போல முன்சொன்ன முறைமையிற் சோத்திரேந்திரியத்துக்கும் வாக்கிந்திரியத்துக்கு மிடமாயிருக்கும் பரிசதன்மாத்திரையும் வாயுவுங்கூடித் தொக்கேந்திரியத்துக்கும் பாதேந்திரியத்துக்கு முன்சொல்லிய முறைமையி லிடமாயிருக்கும். ரூபதன்மாத்திரையு மக்கினியுங்கூடிச் சக்கேந்திரியத்துக்கும் பாணிக்கிந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையிலிடமாயிருக்கும் இரசதன்மாத்திரையு மப்புவுங்கூடி ஜிஹ்வேந்திரியத்துக்கும் பாயுவேந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையிலிடமாயிருக்கும் கந்ததன்மாத்திரையும் பிருதிவியுங் கூடி ஆக்கிராணேந்திரியத்துக்கு முபத்தேந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையிலிடமாயிருக்கும் —

ஆசைசேர் மனாதி தன்மாத்திரை புரிபட்டகந்தான் - இச்சை பொருந்திய மனம் புத்தி யகங்காரந் தன்மாத்திரை யைந்துந்தான் புரியட்டகம்.

சூக்குமதேகம் திரும்பப் புரி சூக்கும தேகத்திலே அஷ்டகம் எடுத்துக்கொண்டதென்று பஞ்சப் பூதக்கொத்து, தன்மாத்திரைக்கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரி

யக்கொத்து, அந்தக்கரணக் கொத்து, குணக்கொத்து, பிரகிருதிகொத்து, கலாதிகொத்து இவைகளைத் தன்மாத்திரை அந்தக்கரணங்களாகிய வெட்டினுள்ளடக்கி முப்பது தத்துவம் புரியட்டகமெனனுங் காண்பித்தோம் முன்சொல்லிய முறைமையில் குணமுடைத் திரவியங்களாய்ப் பூதகாரணங்களாய்ப் பிரத்தியக்ஷங்களா யிருக்கின்ற தன்மாத்திரைகளைப் பஞ்சேந்திரியவிஷயப் பிரத்தியக்ஷகாரிய பூதகுணங்களாகச் சிறிதனா சிறிது தத்துவங்கட்டளை முதலியவற்றுட் சொல்லிய தறியாமையா லெனவறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்விருவகை யிந்திரியங்களுந் தோன்றியபின்னர்ப் பூதாதி யகங்காரத்தினின்றுஞ் சத்தமுதலிய தன்மாத்திரையைந்துந் தோன்றி, அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு உதவுதலைச் செய்வித்து உடனிற்கும். இத்தன்மாத்திரைகளைந்தும் அந்தக்கரணங்கள் மூன்று மாகிய எட்டுங்கூடிய புரியட்டக வுடம்பாமென் றறிகவென்பதாம்.

மாத்திரையென்றது தலைக்குறை.

விடயவடிவாகிய சத்தாதிகட்குத் தன்மாத்திரை வடிவாகிய சத்தாதிகட்குந் தம்முள் வேற்றுமை காணமாட்டாதாருக்கு வேற்றுமை காட்டுவார், மறுத்தன்மாத்திரை புரியட்டகமென்பதூஉ முடன்கூறினார்.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

மேல் பூதாதி யாங்காரத்திலே தன்மாத்திரைகளைந்துந்

தோன்றுகிற முறைமையுங் காரியப்பட்டு முறைமையும் அருளிச் செய்கிறார்.

ஓசைநற்பரிசரூப விரதகந்தங்களென்று பேசுமாத்திரைக ளைந்தும் பிறக்கும்பூதாதிகத்தின், - பூதாதி யாங்காரத்திலே சத்த பரிச ரூப ரச கந்தங்களென்று சொல்லப்பட்ட தன்மாத்திரைக ளைந்துந் தோன்றும் —தேசவிந்திரியங்கட்கு நிகழ்ந்தி விசேஷற்சாண்டும் - இந்தச் சத்தாதிக ளைந்துங் காரணரூப அன்மாத்ராநந்தரூப புசிப்பிலே சின்னகத்தை யுண்டாக்குகிற ஞான விந்திரியங்க ளைந்துக்கும் விஷயங்கத்தக்க வறிவுண்டாம். இப்படிப் பஞ்சதன்மாத்திரைக ளிந்தச் சத்தாதிகளாகுஞ் சூக்ஷுமதேகமுமாம். அதெங்ஙனே யெனில்? —ஆசைசோம னாகிதனமாத்திரைபுரியட்டகமான - ஓசைபொருந்தி இருக்கப்பட்டவின்றமனமும் புத்தியும் ஆங்காரமும் தன்மாத்திரைக ளைந்தும் ஆன்மாக்களுக்குப் புரியட்டக தேகமுமாம்.

இதனாற் சொல்லியது பூதாதி யாங்காரத்திலே சத்தாதிகள் தோன்றுமென்றும், இவையிற்றினாலே ஞானேந்திரியங்களுக்கு அறிவுண்டாமென்றும், இவைதான் புரியட்டக தேகமுமாமென்று முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பூதாதிகத்தின் - அவ்விருவகை யிந்திரியங்களுந் தோன்றியபின் ஏனைப்பூதாதி யகங்காரத்தி னின்றும்,—ஓசைநற்பரிசரூபவிரதகந்தங்களென்று பேசுமாத்திரைகளைந்தும் பிறக்கும்- சத்தமும் நன்மையாகிய பரிசமும் உருவமும் ரதமும் கந்தமுமென்கிற தன்மாத்திரைகளைந்துந் தோன்றி,—தேசவிந்திரியங்

கட்டு நிகழுறிவிதனுற்காண்டும் - நேசமாகிய அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமா றாககருசெய்வித்து முதல்வனுணையா லுடலிற்கும்,—தன்மாத்திரை யாசைசேர்மனுதி - இதற்கு தன்மாத்திரைகளைந்தனு இச்சாரூபமாகிய அந்தக்கரண மூன்றுமாகிய வெட்டுங் கூடி,—புரியட்டகந்தான - புரியட்டகவுடம்பாமெனவறிக.

மறைஞானதேசிகர் உரை.

மேற் பூதங்கடோற்ற மு மதனுக் குணங்க ளு
மதனிற்கு முறையையு முணர்த்துகின்றது.

சாற்றிய பஞ்சதன்மாத் திரைகளிற சத்தமுன்னுத்,
தோற்றும்வான் வளிதீநீர்மண் டடக்கியே யொன்றுக்
கொன்றவ, கேற்றமா மோசையாதி யிருபகுணம் பிசைந்
துநிற்கு,மாறறவே விடயபூத மயக்காமி பாவத்தாமே.
(கரு)

(இ-ள்) சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளின — இங்கனஞ்சொல்லிய தன்மாத்திரைகளைந்தினும

சத்த முன்னுத் தோற்றும்வான் வளி தீ நீர் மண் — முதற்கட்சத்தத்திலாகாசமும், பரிசத்தில் வாயுவும், ரூபத்திலகினியும, இரதத்திலப்பும் கந்தத்திற் பூமியும் இப்படியே தோன்றும்.

அடக்கியே யொன்றுக் கொ — ஆகாச முதலாக வோசை முதலாயுள்ள குணங்களொன்றுக்கொன் றோரொவொரு

ன்றங் கேற்றமா குணங்களேற்றமாகப் பதிணக்தம் பொரு
மோசையாதி யி ந்தாநிற்கும்.
ருவகுண மிசைக
நிற்கும்.

அவை வருமாறு—ஆகாசத்துக்குச் சந்தமொன்றுமே குணம், இநதச் சதநம் பிரதிதொனி வனஞனமகமனறு.

வாயுவுக்குச் சத்தஞ் சாதாரணகுணம, பரிச மசாதாரண குணம.

அக்கினிக்குச் சத்தமும் பரிசமுஞ் சாதாரணகுணம், ரூப மசாதாரணகுணம்.

அப்புவுக்குச் சத்தம் பரிசம் ரூபஞ் சாதாரணகுணம், இரத மசாதாரணகுணம்

பூமிக்குச சததம பரிசம் ரூப மிரதம் சாதாரணகுணம், கந்தம் அசாதாரண குணமாகும்.

ஆகாசமொன்றுககுமே சத்தம், மற்ற நாலு பூதங்கட்குஞ் சத்தமில்லையெனின? இனி வைசேடிகரு சொல்லில் ஆகாசத்துக்கு எதிரொலியும், வாயுவுககுச சச சசவான வொலியும், அப்புவுக்குச் சலசலாதியான வொலியும், தேயுவுககு தமதமமான வொலியும, பிருதிவிக்குக கடகடாதியான வொலியும், இப்படி யைந்துக்குஞ் சத்தங் கேட்கப்படுகையாற் பஞ்சபூதங்கட்குஞ் சத்த முண்டென வறிக.

ஊற்றவே விட
யபூத மங்காங்கி
பாவத்தாமே.

சூக்குமமாய்த் தோற்றபபட்ட விடயங்களுந் தூலமாகிய பூதஙகளின் முறைமையை விசாரிக்குமிடத்தது தேகமுந் தேகியும்போலச் சாவானமாக்களுக்கு மிந்தப் பத்துங்கூடியே காரியப்படும் எ-று.

இதிற் றன்மாத்திரை கடம்போலவும் பூதமதிற் பூதமண் போலவுமென் றுவமித்துங்கூறுவர்.

இதற்குப் பௌட்கரத்துங் காமிகத்து மதங்கத்துமறிக. ௯௫

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—○—

மேலாகாசாதி பூதங்கடோன்றுமாறு மவற்றின் குணங்களுங் கூறுதல்.

சாத்திய பஞ்சதன்மாத்திரைகளிற் சத்தமுதலாத் தோற்றும் வானவெளி தீநீர்மண் - என பூதாதியகங்காரத்திலே தோன்றுமென்ற பஞ்சதன்மாத்திரையாகிய சத்தாதிகளிலே ஆகாசம் வாயு தேஜசு அப்பு பிருதிவி யடைந்துதோன்றும்.—

தொடக்கியேயொன்றுக்கொன்றங் கேற்றமா மோசையாதியிருங்குணமிசைந்துநிற்கும் - ஒன்றுக்கொன்று தொடக்கியேயென்றது, முதற் சூத்திரத்திலே 'வானவெளியாதி பூதந் தருவது' என்றதற்கு அவிரோதமாக ஒன்றையொன்று தவந்தித்துத் தோன்றுமென்று சொன்னது; ஆகாசாதியான அஞ்சு பூதங்களும், சப்தாதிகளான அஞ்சு குணங்களையும் உத்தரோத்தரமாக ஒவ்வொருகுண மதிகமாக உடைத்தாயிருக்கும்.

அவை வருமாறு.—

பஞ்சதன்மாத்திரைகளிலே பூதங்கள்தோன்றும். தன்மாத்திரையென்றது பூதோற்பத்திக்கே காரணமொழிந்து வேறு வியாபாரமில்லையென்றது.

இதிலே முதற்சொன்ன * உற்பூதசப்த தன்மாத்திரையிலே ஆகாசந்தோன்றி † ப்ரதித்வனி சப்தத்தை குணமாயுடைத்தாய் அதிருச்யரூபமாய் வாயுவாதி நாலு பூதங்களுக்கும் ‡ அவகாசத்தைக் கொடுக்கிறதுமாயிருக்கும். இதினுடைய கு

ணமானசப்தம் ச்ரோத்திரேந்திரியத்தினாலே § கிராஹ்யமாயிருக்கும்.

* உர்ப்பூதம்-காணப்படுவது. † ப்ரதித்வனி-பெரியவோசை, ‡ அவகாசம்-இடம். § கிராஹியம்-அறியத்தக்கது.

— அநுர்ப்பூதசத்த உர்ப்பூத ஸ்பரிசாத்மகமாயிருக்கிற ஸ்பரிசதன்மாத்திரையிலே ஆகாசத்தை தவந்தித்து வாயுத்தோன்றி சகசக சப்தத்தையும் அநுஷ்ணசீத ஸ்பரிச + குண விசேஷத்தையும் உடைத்தாய், ஆகாசமுள்ளளவும் சஞ்சரிப்பதுமாயிருக்கும். இதனுடைய குணமான ஸ்பரிசம் துவக்கு இந்திரியத்தினாலே கிராகியமாயிருக்கும்.

— அநுர்ப்பூதம் -காணப்படாதது.

+ குணவிசேஷம் - குணமேன்மை.

அநுர்ப்பூத சத்த ஸ்பரிச உர்ப்பூத ரூபாத்மகமாயிருக்கிற ரூபதன்மாத்திரையிலே வாயுவை + தவந்தித்து தேஜசு தோன்றி தகதக சப்தத்தையும் உஷ்ணஸ்பரிசத்தையும் ரூபகுணத்தையும் ¶ தாஹக † பாசகாதி சக்திடையும் உடைத்தாயிருக்கும் இதினுடைய குணமாகிய ரூபம் சக்ஷுரிந்திரியத்தினாலே கிராகியமாயிருக்கும்.

+ த்வந்தித்தல் - சேருதல். ¶ தாஹக-கொளுத்துகிற. † பாசக-சமைக்கிற.

அநுர்ப்பூத சத்தஸ்பரிசரூப உர்ப்பூத ரசாத்மகமாயிருக்கிற ரசதன்மாத்திரையிலே தேஜசை தவந்தித்து அப்புத்தோன்றி சலசல சத்த சீதஸ்பரிசரூபத்தையும் மதுரரச குணவிசேஷத்தையும் உடைத்தாயிருக்கும். இதினுடையகுணமாகிய ரசம் ரசனேந்திரியத்தினாலே கிராகியமாயிருக்கும்.

அனுற்பூத சத்த ஸ்பரிச ரூப ரச உற்பூத கந்தாத்மகமாயிருக்கிற கந்ததன்மாத்திரையிலே அப்புவை த்யநதித்து பிருதிவிதோன்றி கடபடாதி அநுஷ்ணாசீத ஸ்பரிச மதுராதி ஷட் ரசகலையுத கந்தவிசேஷ குணத்தையுமுடைத்தாய் * தாரகமாயிருக்கும். இதினுடைய குணமான கந்தம் ஆக்கிராணேந்திரியத்தினாலே கிராகியமாயிருக்கும்.

இவ்வாறு பஞ்சபூதங்களுந் தோன்றும்,

சப்தம் ஆகாசத்துக்கே குணம், மற்ற நாலு பூதங்களுக்குமல்ல.

வாயுவாதிகளுக்கும் ஸ்பரிசாதி யொவ்வொன்றே குணம் என்று வைசேஷிகர் சொல்லுகிற ஹேதுவானது பிரத்தியட்சமாக பிருதிவியாதியிலே சப்தத்தைக் காணுகையினாலு மிவ்வாறு ஆகாசத்திலே சொல்லியிருக்கையினாலும் பிரத்தியட்சாமே † பாதித விஷயமாகையினாலே ‡ காலாத்யயாபாதிஷ்ட ஏதுவாபாசம்

* தாரகம் - தரிக்கிறது. † பாதிதம் - பாதிக்கப்பட்டது. ‡ காலாத்யயாபாதிஷ்டம் - வேறு பிரமாணத்தினாலே பாதிக்கப்பட்ட சாத்தியமுள்ள ஏது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

இவ்வாறு பஞ்சதன்மாத்திரையிலே பஞ்ச பூதங்களுந் தோன்றித்தென்ன வேண்டுவதில்லை, ஆகாசத்திலே வாயுவும், வாயுவிலே அக்னியும், அக்னியிலே அப்புவும், அப்பிலே பிருதிவியும் தோன்றிதென்றே சொல்ல வேணும். வாயுவாதிகளிலே சப்தாதி குணங்களிருக்கையினாலே காரணகுணமே காரியத்திலே யுண்டாகவேணுமென்னும் நியாயத்தினாலேயென்னில்? ஆகாசத்திலே ஐந்துகுணமு முண்டென்று சொல்லவேண்டிவரும் அதில்லையாகையால பஞ்சதன்மாத்திரையே பஞ்சபூதங்களுக்குக் காரணம்.

[illegible] நாகாஶாஜ்ஜாயதே வாயு- [illegible] | [illegible]

[illegible]

ஆன்மாவிலே ஆகாசந்தோன்றி ஆகாசத்திலே வாயுவாதி பூதங்களுமொன்றிலேயொன்றுயதந்தோன்றுமென்ற வேத ஸ்ருதிகளு, இவ்விடத்து பஞ்சதன்மாத்திரையிலே தோன்று மென்றது விரோதமெனில்? காரியத்திலேயுண்டான குணத்தைக் காரணத்திலே யுண்டென்று அநுமிக்கவேணும்.

[illegible]

ஆகையால் சப்தாதி ஐந்துகுணமும் ஆகாசத்துக்கு உண்டாகவேணும் உண்டாகில் பிருதிவிக்கும் ஆகாசத்துக்கும் விசேஷமேயில்லையாம். ஆகாசமான்மாவிலே தோன்றுமென்னில்? ஆன்மாவும் ஆகாசம்போல சடமும் விகாரியுமாம் ஆகையால் முன் சொன்ன ஆன்மசப்தத்துக்கு லக்ஷணையாக * ஆன்மா வச்சேதகமாயிருக்கிற அகங்காரமே அர்த்தம் அது அன்றியும் † நிமித்த பஞ்சமிகாளும ஆகாசாதி யொன்றிலேயொன்று தோன்றுமென்றது, ஆகாசமுதலாக வொன்றின்பின்னொன்றுண்டாங் கிரமத்தினாலும் பஞ்சீகரணத்தினாலுமே ஆகையால் சுருதிக்கு விரோதமில்லை

* ஆத்மசத்தி னஞ்சாவது வேற்றுமை ஆத்மா வச்சேதகம்- ஆத்துமாவின தாமம். † நிமித்த பஞ்சமி- நிமித்தார்த்தத்தில் வந்தது.

பஞ்சீகரணக்கிரமமாவது ஒரு பூத ஸ்வரூபத்தை யிரண்டாக்கி யொரு பாதி யந்த பூதமாகவே யிருக்க, நின்றபாதி

நாலாகி நின்ற நாலு பூதங்களிலும் அக்யோக்யம் வியாபித்திருப்பது.

இது ஒன்றுக்கொன்று கூடக்கியென்றதற்குப் பொருள்.

இது சாதாரண மஹா பூதங்கள்.

லோகாயதனும் பௌத்தனும் பூதசதுஷ்டயமேயல்லாது ஆகாசமென்பதொன்றில்லை, நீர் சொல்லுகிறது அசத்து என்பார்கள், அவர்கள் சொல்லுகிறதற்கு முதலாரமும் சம்மதியுங் கூறுவாம்.

பூதங்கள் பிருதிவி யப்பு தேஜோ வாயுவென்கிற நாலு பூதமொழிந்து ஆகாசமென்றொரு பூதமில்லை, உண்டென்கிறது பிரத்தியட்சமு மல்ல அநுமானமு மில்லை எனில்? இதற்குப் பிரத்தியட்ச மநுமாந மாகமமமூன்றும் யாகாசமுண்டென்று சித்தாந்தங் கூறுகின்றது

பிராணிகளுடைய போகத்து வரத்து யாதொன்றுண்டானாலுண்டாம். அதற்கு ஏதுவாக ஆகாசமென்கிற பஞ்சபூதம்வேணும். இதனுடைய சப்தங் குணமாகையினாலே * தீவராதி † சப்தங்களுக்கு குணியாக ஒன்றுவேணும். அதற்கு ப்ருதிவியாதி நாலு பூதங்களும குணிகளாகாதபடியினாலே பாரிசேஷத்தினாலே சப்தத்தைக் குணமாகவுடையது ஆகாசமென்றொரு பூதமுண்டு. நாலு பூதங்களுடைய அபாவமே ஆகாசமென்னில்? அப்பொழுது கடாபாவம படமாகவேணும், ஆகாசம் சத்தகுணமாகையினாலே திரவியம் அபாவமாகாது.

* தீவரம்-உரத்த. † சதககுணகம்-சதத்தைத் குணமாகவுடையது.

[illegible]

[illegible]

ஷ்டிதுஸ்திதி நிர்குணாநாம் ஸம்பவேத் || தஸ்மாத் [illegible] ஆகா
ஶ [illegible] உத்பத்திநாஶவா: | கிஞ்ச [illegible]
[illegible] குண்யபேக்ஷோ குண: ஸ்ம்ருத: || குணீ வா ஆகாஶ [illegible]
[illegible] நிர்குணா [illegible] | ஸஹாவோ [illegible]
[illegible] || [illegible]
[illegible] | [illegible]
[illegible] .

மேல் நியாயவைசேஷிகா ஆகாசம் நித்தியம், இதற்கு உற்பத்திநாசஞ் சொல்லவேண்டுவதில்லை. ரூபத்திரவியத்துக்கு நாசமொழிய அரூபமாயிருப்பதற்கு நாசமெவ்வாறு, பூதசதுஷ்டயங்களினுடைய உற்பத்தி ஸ்திதிநாசங்களாகிய காலத்திரவிய வியாபியாயிருக்கிற ஆகாசத்துக்கு உற்பத்திநாச மெவ்வாறு கூடுமெனில்? சைவ வைதிக வைஷ்ணவ சாங்கியாதி யாகமங்களிலே ஆகாசத்துக்கு உற்பத்தி நாசஞ்சொல்லி யிருக்கையினாலே ஆகாசத்துக்கு உற்பத்திநாசங்கள் சர்வதந்திர சித்தாந்த சித்தம்.

ஆகில் கந்தாதிகள் குணங்கள், பிருதிவ்யாதிகள் குணிகள். குணிகளுக்கு குணமெப்படிக் காரணமாமெனில்? ஜடவஸ்துக்கள் குணத்துக்கு ஆசிரயமாகக் குணியென்றொன்றில்லை. ஜடவஸ்துக்களெல்லாம் குணமே! அது சைதந்யத்துடனே கூடினபொழுது சைதந்யம் குணியும், ஜடம் குணமுமாக அறியப்படும். ஜகத்தெல்லாம் குணாத்மகமே! ஆத்மாக்களே குணிகள். அதெங்ஙனென்னில்? விச்வம் சாந்தாத்மகமென்றும் கோராத்மகமென்றும் மூடாத்மகமென்றும் ஜடமாகிய

குணமும் சித்தாகிய வாத்மாவும் சம்பந்தித்த ‡பிரபாவத்தைச்சொல்லுகையினாலும் அப்படியே ராஜசகுணம் ஆத்மாவினுடைய கருமாதிப் பிரவிருத்திக்கும், காமசகுணம். *அநியம பரியாயமான அதனமதத்துக்கும், சாத்விககுணம் ஞானப்பிரகாசத்துக்கும் ஏதுவாக சம்பாதிக்கைபாலும்; பிரவிருத்தியினாலே மோஹமும், அநியமத்தினாலே துக்கமும், ஞானத்தினாலே சுகமும் அநுபவிக்கிறவன அதமாவானகயாலும், ஆதலாலே குணி; ஜடங்கள் குணங்களொழிய குணிகளல்ல ஆகிலும் ஜடங்களுக்கு குணகுணி வியவஹாரங்கள் ஆகமங்களிலே சொல்லியிருக்குதே யெனனின்? மாயாசாத்தி பரிணாம ×விசித்திரங்களினாலே †பூர்வோதித்த தத்துவங் குணியென்றும், அதனிடத்திலே யுண்டானதற்கு குணமென்றும், தத்பேக்ஷயாக முன்சொன்னதற்கே குணியென்றும் வியவகாரமாகையால்; குணந்தனக்கே பூர்வாபேக்ஷயாக குணமென்றும், அபராபேக்ஷயாக குணியென்றும் வியவகரிக்கப்படும் ஆகலால் ஜடங்களெல்லாம் குணமென்பதே §பாரமார்த்திகம் —

‡ பிரபாவம்-மேன்மை, * அநியம்-அநாசாரம், ×விசித்திரம்-ஆச்சரியம், †பூர்வோதித-முன்சொல்லப்பட்ட, உண்டான, § பாரமார்த்திகம-உண்மை.

ததோ2க்தம் பௌஷ்கரே - ஸத்த்வாதீ3நாம் கு3ணத்வேந
க்ருதா ப்ரகு3ணிதைததா | ந கு3ணீ கஸ்சித்
யோஸ்தி ஜீவோ கு3ணஸமாஸ்ரய꞉ || கு3ணா ப4வந்தி
வ்யக்தே கு3ணிஸம்ஜ்ஞா ஸ்ருதிஸம்மதா꞉ | விஶ்வகு3ணா
த்மகம் ஸாக்ஷம் போ4க்3யம் ஜ்ஞாத்ருகம் யத꞉ || யதா2 புஷ்ப

[illegible] இதி.

ஆற்றலையுடைய பூதமங்களாவதாமே - அசாதாரணமான பஞ்சபூதங்களிலேயுண்டான காரியங்கள் ஆன்மாவுக்கு அங்கமும், ஆன்மா அங்கியுமாய் நிற்கும். அவைவருமாறு --

அசாதாரண பிருதுவியிலே எலும்பு தசை மயிர் தோல் நகம் பல் முதலான கடினங்களெல்லாமுண்டாம்.

அப்பிலே மூத்திரம் ரத்தம் சிலேஷ்மம் வேர்வை சலம் முதலான §திரவரூபமெல்லாமுண்டாம்.

தேஜசிலே இருதயத்தில் உஷ்ணம் அன்னபானாதிகளைப் பாகம்பண்ணுதல் நயனத்தில் உஷ்ணம் தேகத்தில் காந்தி வைசத்தியம் தாபம் இத்தியாதி உஷ்ணகுணரூபமுண்டாம்.

வாயுவிலே பிராணாபானோதான வியான சமான நாக கூர்ம கிரிகர தேவதத்த தனஞ்செயனென்னும் தசவாயுக்களுமுண்டாகி அகங்கார விருத்தியை அநுசரித்து தேகத்தைத் தரித்துக்கொண்டிருக்கும். இந்த வாயுக்களுடைய கிரியாவிஸ்தாரம் யோகபாத விருத்தத்தில் வியாக்கியானத்திலே கூறுவாம்.

ஆகாசம் இடைபிங்கலை, சுஷும்னை முதலான சமஸ்த நாடிகளிலும் ஹிருதயாதி ஸ்தானங்களிலும் ×ஆசயாதி துவாரங்களிலும் அகங்கா¶ரானுஷங்கமாயிருக்கிற பிராணாதி வாயுக்களுக்கும் †அவகாசப் பிரதமாயிருக்கும்.

இது அசாதாரண பூதகாரியங்கள்.

§ திரவரூபம்-பெருகுகிறது. × ஆசயம்-முகம்.

¶ அநுஷங்கம்-சம்பந்தம்,

† அவகாசப் பிரதம்-இடங்கொடுப்பது.

[illegible]

மூன்றாந்தந்திரத்திலே விந்துமோகினி இந்த விரண்டுபோதங் காரணங்களிலே காரியோற்பத்தியாகிறதுக்குக் கர்த்தாவாக சதாசிவனையும் அநந்தேசுவரனையுஞ் சொல்லியிருக்க, இவ்விடத்து முன்றகாரணங்களை பஹுவாகப் பஞ்சபூதங்களை பஞ்சதன்மாத்திரையிலே தோன்றுமென்றும், பஞ்சதன்மாத்திரைகளை பூதாதி யகங்காரத்திலே தோன்றுமென்றும், கன்மேந்திரியங்களைந்தும் வைகாரிகாங்காரத்திலே தோன்றுமென்றும், ஞானேந்திரியங்களைந்தும் மனசும் தைஜசாங்காரத்திலே தோன்றுமென்றும், அகங்காரம் புத்தியிலே தோன்றுமென்றும், புத்தியும் சித்தமும் அவ்யக்தத்திலே தோன்றுமென்றும், அவ்யக்தங் கலையிலே தோன்றுமென்றும், கலைமுதலைந்தும் அசுத்தமாயையிலே தோன்றுமென்றும், இவ்வைந்தினுடைய சமுதாயத்திலே புருஷதத்வமாமென்றும், சுத்தமாயையிலே நாதந் தோன்றி நாதமுதலா யொன்றிலேயொன்று தோன்றுமென்றும், சொன்னதென்னையோ வெனின்? ஒருவித்திலே மரமான

து பலகொம்பு மிலையும் பூவுங் காயுமுண்டானதை அவஸ்தா பேதத்தால் விதையிலே முளையுண்டாய் முளையிலே மரமுண்டாய் மரத்திலே கொம்புண்டாய் கொம்பிலே பலவிலையும் பூவுமுண்டாய்ப் பூவிலே காயுமுண்டாச்சுதென்று சொன்னதுபோலவே சர்வத்துக்கு முபாதானத் துவயமே முதற் காரணமாக வுண்டானது.

அந்தக்காரணமானது தன் காரியத்தை நீங்காமலே நிற்கும். இந்தக் காரணத்திலே காரியங்கள் தோன்றும்படியும் நீங்காம லிற்கும்படியு மெங்ஙனென்னில்? ஆகாசம நிர்விகாரமாய் நிற்க அதனிடத்திலே வாயு சமுத்திரத்தைக் கலக்கத் திரையுங் குமிழியுந் நுரையுந் திவலையு முண்டானதுபோல, உபாதானத் துவயத்தையும் சிவனது சத்திசேஷ்டாபம்பண்ணத் தனுகரண புவனாதிகளெல்லா முண்டாம். அந்த வாயு ஆகாசத்திலேயசைவற வொடுங்கிறகவே திரை நுரை குமிழி திவலைகளெல்லா மொடுங்குவதுபோல ஈஸ்வரசத்தி ¶ பராங்முகமாகவே தனுவாதியாகிய பிரபஞ்சமும் தத் காரணங்களிலே யொடுங்கும். திரைமுதலானவைகளுடைய ரூபமும் பெயரும் வேற்றுமையாயும் சலமேயானதுபோல மாயாகாரியங்களு மாயையும் நின்றது இவ்வாறெனவறிக.

¶ பராங்முகம் எதிர் நோக்காதது.

ததுக்தம் — யதாவ்யஸ்யத்வாயுநா ததோத்திஷ்டந் ந்யாயிநீ । காயஸ்ராவாதஶ்ராவந்நா ஜாயாநப்யா
தஸைவஹீதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பூதங்களினுற்பத்தி புகல்கின்றார்.

சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளிற் சத்தமுன்னு - சத்ததன்மாத்திரைக் கிரமத்திலே,—வானவளி தீநீர் மண்தோற்றும்- உண்டாம்;—தொடங்கியே யொன்றுக்கொன்றங் கேற்றமாமோசை யாதி யிருங்குண மிசைந்துநிற்கும் - ஆகாச மாதியாகத்தொட் டொவ்வொன்றுக் கொவ்வொன் றதிகமாகச் சத்த பரிசரூபரச கந்தகுணங்கள் பொருந்தியிருக்கும். அவைவருமாறு.- ஆகாசத்துக்குச் சத்தகுணம், வாயுவுக்குச் சத்தஸ்பரிசகுணம், தேயுவுக்குச் சத்தஸ்பரிச ரூபகுணம், அப்புவுக்கு சத்தஸ்பரிச ரூபரசகுணம், பிருதிவிக்குச் சத்த ஸ்பரிச ரூப ரசகந்தகுணம் —ஆற்றலே விடயபூத மங்காங்கி பாவத்தாமே-(சத்தாதி விடயகுணங்கட் காதாரமாகையால் ஆகுபெயர். விடயமென்றது பூதகாரணசத்தாதி தன்மாத்திரைகளை, ஞானேந்திரிய விஷயமாகிய சத்தாதிபூத குணங்களையன்று) சடமும் கடத்தினது பூச்சுப்போலத் தன்மாத்திரையும் பூதமு மங்காங்கி பாவமாயிருக்கும்.

பூதங்கள் முறைமையிற் சூக்குமம் ஆந்தரம் வாகியமென்று மூன்றுபிரகாரமாம்

இவற்றுள், சூக்குமம் சூக்கும தேகத்திருந்து இந்திரிய வாதாரமாம்.

ஆந்தரம் தூலதேகத்திருந்து சரீரத்தை வளர்த்துள்ளிடங் கொடுத்தல் முதலிய தொழிலையியற்றும்.

வாகியம் அண்டபுவன போககியப்பொருளாதாரமாயிடங்கொடுத்தல் முதலிய தொழிலையியற்றும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அச்சத்தமுதலிய தன்மாத்திரைகளினின்று நின்ற முறையே ஆகாயமுதலிய தூலபூதமைந்துந் தோன்றி, அவற்றுடன் பிரிப்பின்றி முறையே ஒன்றற்கொன்று ஏற்றமாகிய சத்தமுதலிய குணங்கள் வியத்திரூபமாக வுடையனவாய் நிற்கும். இவ்வைம்பெரும் பூதங்கள் தன்மாத்திரைபோலக் கூடிநின்று இந்திரியங்களின் றொழிற்பாட்டை யாக்குதற்கு இவற்றின் காரியபூதங்களாகிய தாத்துவிகங்களறுபதும் அங்காங்கி முறைமையவாய் உடலிற்கு மென்பதாம்.

ஆற்றுதல் வல்லுதல்.

விடயமென்றது ஈண்டுக் காரியமென்னுந் துணையாய் நின்றது.

இவை பதினான்கு செய்யுளானும் தத்துவங்க ளொன்றி லொன்று தோன்று முறைமையும் அவற்றின் றொழிற்பாடும் பயனுந் தாத்துவிகங்க ளியல்புங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் சத்தாதிகளிலே பூதாதிகள் தோன்றுமென்றும், இந்தப் பூதங்களுக்கு ஆகாசமுதலாக ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு குணமேறியிருக்குமென்றும், இந்த விஷயங்களும் பூதங்களுக் தேகமுந்தேகியுமா யிருக்குமென்றும் அருளிச்செய்கிறார்.

சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளில் - சொல்லப்பட்ட சத்தாதிகளைந்திலும்,—சத்தமுன்னாத் தோற்றும்வான்வளி தீநீர் மண் - முன்சொன்ன சத்தத்திலே ஆகாசமும் பரிசத்திலேவா

யுவும் உருபத்திலே தேயுவும் இரதத்திலே அப்புவும் கந்தத்திலே பிருதிவும் ஆக ஐந்துந் தோன்றும்,—அடக்கியேயொன்றுக்கொன்றங் கேற்றமாமோசையாதி யிருங்குணமிசைந்துநிற்கும் - சத்தமுதலான பெரிய குணங்களைந்தும் ஆகாசமுதலான பூதங்களைந்திலும் ஒன்றுக்கொன்றங் கேற்றமாய்த் தொந்தித்துக்கொண்டு பொருந்திநிற்கும். இப்படிச் சொல்லப்பட்ட குணங்கள் ஒன்றுக்கொன்று விட்டு நீங்காமல் நிற்கும். அதெப்படியெனில்?—ஆற்றவே விட்டபூத மங்காங்கிபாவத்தாமே - வலியையுடைய விஷயங்களும் பூதங்களுந் தேகமுந் தேகியுமாயிருக்கிற முறைமைபோல, விஷயங்கள் தேகியும் பூதங்கள் தேகமுமாம்.

இதனாற் சொல்லியது சத்தாதியைந்திலும் ஆகாசமுதலான பூதங்களைந்துந் தோன்றுமென்றும், இந்தப் பூதங்களுக்கு ஆகாசமுதலாக வொவ்வொரு குணமேறி யிருக்குமென்றும், இந்த விஷயங்களும் பூதங்களுந் தேகமுந் தேகியுமா யிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சத்தமுன்று சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளின் - அச்சத்தத்தைமுன்னுக்கூறுகின்ற தன்மாத்திரைகளினின்று,—வான்வளி தீநீர்மண் தோற்றும்- முறையே ஆகாயமும் வாயுவும்தேயுவும் அப்புவும் பிருதிவியுமாகிய தூலபூதம் ஐந்துந் தோன்றி,—அடக்கியே யொன்றுக்கொன்றங் கேற்றமாய்- அவற்றுடன்பிரிப்பின்றி முறையே யொன்றுக்கொன் றவ்விடத் தேற்றமாகிய,—ஓசையாதியிருங்குண மியைந்துநிற்கும்-சத்தமுதலிய வேற்றமாகிய குணங்கள் முதல்வ னாணையால் வியத்திரூபமாக

வுடையனவாய் நிற்கும்,—விடயபூதமாத்திரமே - இவ்வைம்பெரும்பூதம் தன்மாத்திரையோடு கூடிநின்று இந்திரியங்களின் றொழிற்பாட்டை பூதக்குதற்கு,—அங்காங்கிபாவத்தாலே-இவற்றின் காரியபூதங்களாகிய தாத்துவிகங்களாறுபத்தும் அங்காங்கிமுறைமையவா யுடனிற்கும்.

இவை-கசு-செய்யுளானுந் தத்துவங்க டோன்றிநின்று தோன்று முறைமையும் பயனுந் தாத்துவிகங்களி னியல்புங் கூறப்பட்டன

மறைஞானதேசிகர் உரை

இந்தபூதங் காரியப்படு முறைமை
யுணர்த்துகின்றார்.

இரந்தர மாகிவானொரு விடங்கொடுத் திடஞ்சலித்
தே, பரந்திவை திரட்டுங்காற்றீச் சுட்டொன்று வித்தல்
பண்ணும், நிரந்தரங் குளிர்ந்துநின்று பதஞ்செய் நீர்ம
ண்டானும், முரந்தருங் கடினமாகித் தரித்திடு முணர்ந்
துகொள்ளே. (சுஎ)

(இ-ள்.) இரந்தர மாகிவானொன்று இடங்கொடுத்திடும்	ஆகாயந் தனக்குக் கீழ்ப்பட்ட பூதங்களுக்கும் வெளிகொடுத்திருப்பதே யிதற்குச் சுபாவம்.
சலித்தே பரந்திவை திரட்டுங்கால்	வாயுவானது போக்குவரவை யுடைத்தா யெங்கும் பரந்தவைகளையுந் திரட்டாநிற்கும்.
தீச் சுட்டொ	வெம்மையே சுபாவமாகிய வக்கினியான

னறுவித்தல் ப   து சுட டொன்றுவித்தலைச்செய்யும்.
ண்ணும்

நிரந்தரங் கு   குளிர்ச்சித் தன்மையே சுபாவமாய நீரா
ளிர்ந்து நின்று   னது திரவியங்களைப் பதஞ்செய்யும்.
பதஞ்செயுநீர்

மண்டாணு மு   பூமியானது சிகெனறு கடினத்தையு
ரக்கருங் கடின   முடைத்தா யெல்லாதவைதயுந் தரியாநிற்கும்
மாகித் தரித்தி
டும்

உணர்ந்துகொ   இப்படியிருக்கும் பூதங்களின் வியாபா
ளே   ரத்தை யறிவாயாக எ-று

உம்மை முற்றும்மை

இதற்குக் காமிகம் (௬௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மூன்று விருத்தமும் மகா பூதங்களுடைய வடையாளமும் வர்ணமுங் கூறுகின்றது

இடந்தரமாகி வானருவிடங்கொடுத்திடும் - ஆகாசமானது வெளியாய் நாலு பூதங்களுக்கு மிடங்கொடுத்திருக்கும்,—சலித்துப்பரந்தவை திரட்டுங்கால் - வாயுவானது சலனத்தை யுடைத்தாய் ஓரிடத்திற் கூடியிருந்த திரணை ‡ பரமாணுக்களை ப்பிரித்தும் பிரிந்துகிடந்தவைகளைக் கூட்டியுஞ் செய்யும்,—தீச் சுடடொன்றுவித்தல் பண்ணும் - அக்கினியானது பஞ்சலோகங் களை யுருக்கி யொன்றுதலைப் பண்ணும்.—நிரந்தரங்குளிர்ந்து நின்று பதஞ்செயுநீர் - அப்புவானது சைத்திய சுவபாவமாய் மண் ணுகளை யிளகப்பண்ணும்,—மண்டாணுக்கருங் கடினமாகித்

தரித்திடு முணர்ந்துகொள்ளே - பிருதிவியானது கடினமுமாய் தாரகமுமாய் இருக்கும்; இவ்வாறறிவாயாக வென்றிதன் பொருள்

‡ பர்ணம - இலை

இது சாதாரண பூதங்களுடைய செயல்.

அசாதாரண பூதங்களுடைய செயலு மிவ்வாறே தேகத்திலே தரிசிக்கப்படும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

ஆதாரமாகிய வாகாசமுதலிய பூதங்களாதிரருந் தொழில், ஆகிருதி, வண்ணம், பிரசாக்கரம, அடையாளம், தேவதை முதலியவற்றை முறையிலே மூன்று திருவிருத்தத்தாலுரைகின்றார்

இதனுரையை - ௯௮ - ஞ் செய்யுளிற் காண்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

இதைத் தத்துவங்களெல்லாம் அகமும் அகப்புறமும் புறமுமென மூவகைப்படும் அவற்றுள் பூதங்களினை வைத்துப் புறப்பூதங்களிற்படும் விசேடங் கூறுகின்றார்

ஆகாயமுதலிய வைம்பெரும் பூதங்கள் முறையே வெளியாதல் இடங்கொடுத்தன் முதலிய குணமுந் தொழிலு முடையனவென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் பூதங்கள் காரியப்படுகிற முறைமையை யருளிச்செய்கிறார்.

இரந்தரமாகிவான்று விடங்கொடுத்திடும் - பூதங்கள் சீவிக்கும்படி ஆகாசமானது எல்லாப் பூதங்களுக்குமிடங்கொடுத்து வெளியாயிருக்கும்,—சலித்துப பரந்தவை திரட்டுங்கால் - வாயுவானது சலிப்பையுடைத்தாய்ப்பரந்தெல்லாத்தையுந்திரட்டி நிற்கும்,—தீச்சுட் டொன்றுவித்தல் பண்ணும் - அக்கினியானது கடினத்தை வெப்பமாக்கிச் சுட்டொன்றுவிக்கும்,—நிரந்தரங்குளிர்ந்துநின்று பதஞ்செயுநீர் - அப்புவானது எல்லாக்காலத்திலுங் குளிர்ந்துநின்று சர்வத்தையு நெகிழ்ச்சியாக்கும்,—மண்டானு முரந்தருங் கடினமாகித் தரித்திடு முணர்ந்துகொள்ளே - பிருதிவியானது சிக்கனவையுடைய கடினமாகி எல்லாத்தையுந் தரித்துநிற்கும்; இப்படி யிவையிற்றை யறிவாயாக.

இதனாற்சொல்லியது பூதங்கள் காரியப்படு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—c—

வான்றான் - ஆகாயமானது —இரந்தரமாகி யிடங்கொடுத்திடும் - வெளியாத விடங்கொடுத்தலாகிய குணந்தொழிலை யுடையது,—கால் - வாயுவானது,—சலித்துப் பரந்தவைதிரட்டும் - சலித்துப் பரந்தவற்றைத் திரட்டுதலாகிய குணத்தொழிலையுடையது,—தீ - தேயுவானது,—சுட்டொன்றுவித்தல்பண்ணும் - சுட்டொன்றுவித்தலாகிய குணத்தொழிலை யுடையது,—நீர் -

அப்புவானது,—நிரந்தரங்குளிர்ந்து நின்று பதஞ்செய்யும் - இடைவிடாது குளிர்ந்து பதஞ்செய்தலாகிய குணத்தொழிலையுடையது,—மண்டானும் - பிருதிவியானது, —உரந்தரும் - வலிதருதற்கேதுவாகிய,— கடினமாகித் தரித்திடும் - கடினமாய்த் தரித்தலாகிய குணத்தொழிலையுடையது,— உணர்ந்துகொள்ளே - இவற்றினையறிவாயாக.

மறைஞானதேசிகர் உரை.

இப்பூதங்கட்கு வடிவு நிறமு மக்கரங்களிற்கு
முறைமையு முணர்த்துகிறார்.

மண்புன லனல்கால்வான்பால் வடிவுநாற் கோண
மாகுந், தண்பிறை மூன்றுகோணந் தருமறு கோணம்
வட்டம், வண்பொன்மை வெண்மைசெம்மை கறுப்
பொடு தூமவண்ண, மெண்டரு மெழுத்துந்தாறும்
லவரய வவ்வுமாமே. (௯௭)

(இ-ள்.) மண்புனலனல்கால் வான்பால் வடிவு	பிருதிவி முதலிய வைந்துக்கும் வடிவாவன?
நாற்கோணமாகும்	நாற்கோணமாகும்
தண்பிறை மூன்றுகோணந் தருமறு கோணம் வட்டம்	பிருதிவி தத்துவஞ் சதுரமாயும், அப்புதத்துவங் குளிர்ச்சியையுடைய வர்த்தசந்திரவடிவாயும், தேயு முக்கோணமாயும், வாயுவானது தருதிப்பாட்டினையுடைய வறுகோணமாயும், ஆகாசம் வட்டமாயுமிப்படியே வடிவையுடைத்தாயிருக்கும்.

வண் பொன்	இவையிற்றுக்கு முறையே வன்னமாவ
மை வெண்மை	ன? வசேப்பத்தையுடைய பொனமையும் வெ
செம்மை கறுப்	ண்மையுஞ் செம்மையுங் கருமையுங் கபிலவ
பொடு தூமவண்	ணணங்கள் நிற மடையேயாம.
ணம்	
எண்டரு மெ	இவையிற்றுக் கடையே யக்கரங்களாவ
ழுத்தத் தானும	ன? ல-வ-ர-ய-அ-அக வில்வைகளுமென வ
லவரய	வவவு றிவாயாக எ-று.
மாமே.	

“ தம்பெயர் மொழியின முதலுமயக்கமு-மிம்முறைமாறி யுமி யலுமெனப” என்னு மிலக்கணததால், லகாரமொழிக்கு முதலானவாறறிக.

இதற்குக் காரணம் வாதுளம் சுப்பிரபேதத்துமறிக

இதற்குக காரணமமேல் ‘குறிகள்’ எனகிற கவியிலே (சுஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பஞ்சபூதங்களுக்கு படையாளமும் நிறமு மக்ஷரமு முணர்த்துகல்.

பிருதுவியானது வெண்மை பொன்மை செம்மை கருமை புகைநிறம் இநத வைநது வர்ணததையுமுடைததாய் நாற்சதுரமாய் லகார பீஜாக்ஷரதைதயு முடைத்தாயிருக்கும்.

[illegible]

அப்புவானது வெண்மையாய்ப் பிறைபோன்று வகார பீஜாக்ஷரதைதயு முடைத்தாயிருககும்.

அக்னியானது செம்மையாய் மூன்றுகோணமுமாய் † ரேப பீஜாக்ஷரத்தையு முடைத்தாயிருக்கும்.

† ரேபம்-ரகாரம்.

வாயுவானது கறுத்த நிறமாய் அறுகோணமாய் யகார பீஜாக்ஷரத்தையு முடைத்தா யிருக்கும்.

இதற்கு நியாய வைசேஷிகா.

வாயுர்ரூபரஹித: அப்ரத்யக்ஷத்வாத் ஆகாசவத்.

என்று வாயு ரூபமல்ல, காணப்படாதாகையினாலே ஆகாசம்போல அருபமே. இதற்கு நிறஞ் சொல்லக்கூடாது என்பார்கள் அதற்கு

வாயு: ப்ரத்யக்ஷ: உத்பூதரூபரஹிதஸ்பர்சவத்த்வாத் கடவத்.

என்கிற அநுமானத்தினாலே வாயு பிரத்யக்ஷ மெரியது மாய் ஸ்பரிசத்தையு முடைத்தாகையினாலே கடம்போலே ரூபவத்தே! ரூபமாகில் நம்முடைய கண்களினாலே காணவே ணுமென்னில்? பிசாசாதி ரூபங்கள நம்முடைய கண்களினா லே காணப்படாததுகொண்டு அசிதமல்லாததுபோல, வாயு வும் நம்முடைய கண்களினாலே காணப்படாததுகொண்டு ரூப மல்லாததல்ல. அது உத்பூத ஸ்பரிசமும் அநுத்பூதரூபமாயிருக் கும். அந்த ரூபம யோகீஸ்வரர்களாலே காணப்படுவதாயிருக் கும்.

ஆகாசமானது புகைபோன்று வட்டமாய் அகார பீஜா க்ஷரத்தையு முடைத்தாயிருக்கும்.

ஆகாசம் அரூபமாகையால் நிறஞ்சொல்லுவது † அநுசிதம்.

† அநுசிதம் - தகாது.

இதன்றியும், மிருகேந்திரம் சர்வ ஞானோத்தராதி யாகமங்களிலே ஆகாசம் ஸ்படிகம்போலுமென்று சொல்லியிருக்கையில் தூம வர்ணமென்கிறது ஆகமவிரோதமெனனில்? உத்தரம்.

ஆகாசம் † சுவச்சமாகியும் கறுப்பாகியும் வாயு சம்யோகத்தினாலே § ஜபாகுசும சம்யோகத்தினாலே ரக்த ஸ்படிகமென்றதுபோல ஆகாசத்துக்குத் தூமவர்ணமென்று சொல்லப் பெறுமாகையால், ஆகமாந்தரங்களிலே தூமவர்ணமுங் கூறப்பட்டது. ஆகையால் விரோதமில்லையென றிதன்பொருள்.

† சுவச்சம் - நிர்மலம்

§ ஜபாகுசுமம் - செம்பரத்தை புஷ்பம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதன் உரை-கூஅ-செய்யுளிற் கண்டுகொள்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவை நிலமுதலாகக் கோணமுறையே நாற்கோணமுதலிய ஐவகை வடிவும் பொன்மைமுதலிய ஐவகை நிறங்களும் லகாரமுதலிய ஐவகைப் பீசங்களுமாகிய இவையுமுடையனவென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் பூதங்களினது வடிவும் நிறமும் இந்தப் பூதங்களுக்கு அக்கரங்கள் நின்ற முறைமையு மருளிச்செய்கிறார்.

மண்புன லனல்கால் வான பால் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஐந்தகக்கும்,—வடிவுநாற்கோணமாகுந் தண்பிறைமூன றுகோணந் தகுமறுகோணவட்டம - நிறைநிறை நாற்கோணமாயும,குளிர்ந்த அர்த்த சந்திரனைபபோனறும,திரிகோணமாயும், தருதிலையுடைதரா யிருககபபட்ட சட்கோணமாயும், விருத்தமாயும,—வணபொனமை வெணமைசெமமை கறுப பொடு தூமவனனம - இதுவும நிறைநிறை. இவையிறறுககு நிறம வரைப்பத்தைத்யுடைய பொனமையும வெளுப்பும சிவப்பும கறப்பும தூமமுமாம,—எண்டருமெழுத்துத்தாறும லவரயவ வவுமாமே - இவையிறறுககுச சொல்லபபட்ட அககரஙகள லவரயஅ

இககூறற சொல்லிபபூதஙகளினுடைய வடிவு நிறம இவையிறறுககுளள வககரஙகள நினற முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

மண்வடிவு நாற்கோணமாகும - பிரிதிவிககு வடிவு நாற்கோணமாகும,—வணணமவண பொனமையாகும - அதற்கு நிறம வணணிய பொனமையாகும்,—எழுத்து லவ்வு ராகும் - அதற்கு பீஜம லகாரமாம,—புனல்வடிவு தணபிறையாகும - அப்புககு வடிவு தணணிய பிறைபோலு மிருகோணமாம்,—வணணம் வெணமையாகும - அதற்கு நிறம வெண்மையாம், — எழுத்து வவ்வுமாகும - அதற்கு பீஜம வகாரம்,—அனல்வடிவு மூன்று கோணமாம் - தேயுவுக்கு வடிவு முக்கோணமாம்,—வணணஞ் செம்மையாகும் - அதறகு நிறம் செமமையாம்,—எழுத்து ரவ்வுமாகும் - அதற்குப் பீஜம் ரகாரமாம்,—கால்வடிவு தகும் அறுகோணமாகும் - வாயுவுக்குவடிவு தக்க அறுகோணமாம்,—

வணணங்கறுப்பாம் - அதற்கு நிறங் கறுப்பாம்,—எழுத்து யவ்வுமாகும் - அதற்குப் பீஜம் யகாரமாம்,—வானபால்வடிவு வட்டமாகும் - ஆகாயத்திற்குப் பரவியவடிவு வட்டமாம்,—வண்ணந் தூமமாகும் - அதற்கு நிறம் புகையாம்,—எண்டூடுமெழுத் தத்தனுமெய்யுமாமே - எண்டூடுத்தேதுவாகிய பீஜம் ஹகாரமாகுமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இப்பூதங்கட் கடையாளமு மதிதேவதையு
முரைத்தனர்.

குலிசவச் சிரத்திரேகை கோணந் தனுசுவத்தி,
யறுபுள்ளி யமுதவிந்து வடிவத்தியவ மயனமாலாதி,செ
யிபுக ஸ்ரீகண்டரு சதாசிவம் பூததெய்வம், செயிருதரு க
லையைந்திற்கு நிகழ்த்துவ ரிதந்தமை. (சுஅ)

(இ-ள்) குலிசவ சிரத்திரேகை கோணந் தனுசுவத்தி யறுபுள்ளி யமுதவிந்து — இவையிறுக கடையே வச்சிராயுதத்துடன் தாமரைப்பூவு மிருதலை மொழிபாகி யசுவத்திசமு மறுபுள்ளியும் அமுதவிந்துவாகிய வட்டமு மடையாளங்களாம்.

அதிதெய்வ மயனமாலாதிசெயிபுக ஸ்ரீகண்டரு சதாசிவம் பூததெய்வம் — இவையிற்றுக்கு முறையே பிரமன மால் உருத்திரன ஈசுரன சதாசிவனிவ ரைவருமிந்தப் பூதங்கட்கு அதிட்டாதாவா யிருப்பர்கள்.

செயிருதரு கலையைந்திற்கு நிகழ — மந்திர முதலிய வத்துவாவைத் தன்னிடத்தி லடக்கநிற்கு முறைமையினையுடை

த்துவ ரிக்த நீர் ய பஞ்ச கலைகளுக்கு மிக்க வதிதேவதைக
மை. ளென்றே யறியாதுயாதேதோர் சொல்லாநி
ற்பார்கள். எ-று.

உம்மை ற - எண்.

ஈண்டிக் கலையைக் கூறினதொப்பினை முதலக்கவென்னுந் தந்திரவுத்தியாற் கூறினதெனவறிக.

இதற்குச் சிந்தியாகமத்து சாரதாதிலகத்து மெனவறிக.

பூதங்கட் கதிதெய்வமொழிய மற்ற விருவகை யிந்திரியங்களுக்கு கரணங்களுக்கு மதி-தி யில்லையோவெனின்? ஞானேந்திரியத்துக்குச் சவண வாயு ஆதியன வருமென பிரகஸ்பதிபகவான் ஆதி-மு, கன்மேந்திரியத்துக்கு சரஸ்வதி இந்திரன் மால்மித்ராக்கினிதேவதை பிரஜாபதி கிரியாசத்தியு ஆதி-மு, அந்தக்கரணங்கட்கு நாலாம் சூத்திரத்திற்காணக.

அஃதன்றியும் மதங்கத்தும் சுப்பிரபேதத்தும சோமனை க்ஷேத்திரஞ்ஞா உருத்திரன் ஈசனென மனமுதலிய நாலுக்கும் கூறினகாணக.

ஏனையவும் விரிக்கிற் பெருகுமெனவறிக. (சுஅ)

சிவாக்யயோகியருரை வருமாறு.

—o—

மேல் பிருதுவியாதி தத்துவங்களுக்கு × லாஞ்சனமுந்தேவதையு முணர்த்துதல்.

பிருதுவியானது ‡ வச்சிராயுத லாஞ்சனமும் பிரமாவை யதிதேவதையுமாக வுடைத்தாயிருக்கும்.

அப்பு† பத்மலாஞ்சனமும் விஷ்ணுவைத் தேவதையுமாக வுடைத்தாயிருக்கும்.

தேய்வு ¶ சுவஸ்திகலாஞ்சனமும ருத்திரனைத் தேவதை யாக வுடைததாயிருக்கும்.

வாயுவானது அறுபுள்ளி லாஞ்சனமும மகேஸ்வரனைத் தேவதையுமாக வுடைததாயிருக்கும்.

ஆகாசமானது அமிர்தபிந்து லாஞ்சனமும சதாசிவதே வனைத் தேவதையுமாக வுடைததாயிருக்கும்.

இங்கே அடைவே நிவிர்த்தியாதி ஐந்து கலைகளுக்குஞ் சொல்லப்பட்டன வறிக வென்றிதன்பொருள்.

× லாஞ்சனம் - அடையாளம். ‡ வச்சிராயுதம் - வஜ்ரம் போன்றது. † பதமம - தாமரை. ¶ சுவஸ்திகம் - இருந் லை போன்றது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சாந்தியாதீதாதி பஞ்ச கலைகளுக்கும பஞ்சபூதத்துக்குப் போலாக்ருதி முதலியன வறிக.

பழைய வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

வச்சிரமுதலிய அடையாளமைந்தும் அயன்முதலாகிய வதிதெய்வ மைந்துமாகிய இவையும் அபபூதங்கள முறையேயுடையனவாம. இவை நிவிர்த்தி முதலிய கலைகட்கு மிவ்வாறே கூறப்படுமெனபதாம.

இவை மூன்று செய்யுளானும் புறப்பூதங்களின் இயல்புமே றெடுத்துக்கொண்டு வகுத்துக் கூறப்பட்டன.

ஏனை யகப்பூதங்களின் இயல்பு 'நேசவிந்திரியங்கட்கு நிகழ் நிவிதனாற் காணும்' எனவும், அகப்புறப் பூதங்களின் இயல்பு 'ஆசைசேர் மனத்திடமாந்தனைப் புரிந்திட்டகந்தான்' எனவுஞ் சூக்கும பூதமாகிய தன்மாத்திரைக ளோதியவாறுபற்றி அறியக் கிடந்தன.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலிற்பட்ட பூதங்களினுடைய அடையாளங்களையும் அதி தேவதைகளையு மருளிச்செய்கிறார்

குறிசதுரஞ்சிரந்திரோடு கோணந்தனைச் சுவத்தி யறுபுள்ளி யமுதவிந்து - இவையிற்றுக்குக் குறிகள் பிருதிவி முதலாக வச்சிரமுந் தாமரைப்பூவுஞ் சுவத்திகமும் அறுபுள்ளியும் அமுதவிந்துவுமாம் இவையிற்றுக்கு அதிதேவதைகளாரொவெனில்?—அதிதெய்வமயனமாலாதி செறிபுரஞ்சீரோடு சதாசிவம் பூததெய்வம் - பிரமா விட்டுணு உருத்திரன் செறிந்தபுரமுடைய யீசுவரன் சதாசிவன் இவர்கள் இந்தப் பூதங்களுக்கு அதிதேவதைகள் இந்தப் பூதங்களுக் கொழிந்துப் பஞ்சகலைக்கு மிப்படியென் றருளிச்செய்கிறார் —நெறிசருகலையந்திராகு நிவிர்த்தாதி ரிந்தநீர்மை - இந்தப்பூதங்களுக் காதாரமாய் நிற்கு முறைமையுடைய பஞ்சகலைகளுக்கும், இவையெல்லாம் நிற்குமுறைமை யிப்படியென்று சொல்லாநிற்பர்கள் அறிவாலுயர்ந்த பெரியோர்கள்.

இதனாற் சொல்லியது பூதங்களினுடைய வடையாளங்களும், இவையிற்றுக்கு அதிதேவதைகள் பிரமா விட்டுணு உருத்

திரன் ஈஸ்வரன் சதாசிவனென்றும், இவையெல்லாம் பஞ்சக லைகளுக்கும் ஒக்குமென்னு முறைமையு மறிவித்தது.

எழுமுடல் என்ற திருவிருத்தமுதல் குறிகள வச்சிரத்தி னேடு என்ற திருவிருத்தமீறாகப் பதினேழு திருவிருத்தமும் அசுத்தமாயா காரணகாரியங்களும்; அதிற் காரியமுப்பத்தொ ன்றும காரியப்படி முறைமையுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

வச்சிரத்தினேடு கோகனதஞ்சுவத்தி யறுபுள்ளியமுதவி ந்து குறிகள - முற்கூறிய பிருதிவிமுதலியவற்றிற்கு முறையேவ ச்சிரத்தோடு கோகனதமுஞ் சுவத்திகமும் அறுபுள்ளியுட னமு தவிந்துவுங் குறியாய், — அயனமாலாதி செறிபுகழீசனோடு ச தாசிவம அதிதெய்வம - அவற்றிற்கு முறையே யயனுமாலுமா தியாகிய ருத்திரனு மிக்கபுகழ்தங்கிய மகேசனேடு சதாசிவமு மதிதெய்வங்களாம. — நெறிதருகலைகடிற்கும - முந்தியகலை முதலிய அந்தவாயைத் தனவி—த்திலே யடக்கி நிற்கும, — ப ஞ்சகலைகட்கும - இந்தநீர்மை பூததெய்வங்கழுத்துவா, — இம் முறையே பூதங்கட கதிதெய்வமாகிய ஐவருமேஅதிதெய்வமாக கமொழிவர்.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் கூறிப்போந்த தத்துவமுப்பத்தாறையுஞ்
சுத்தாதி யிருவிதமெனப்பகுத்து சித்தசத்திலந்த
விவேகமு முணர்த்துகிறார்.

சுத்தத் துவங்களென்று முன்னமே சொன்ன
வைந்து, மிக்ககை மைம்பினியம்பு மினவுமுப்பத் தொ

ன்றுமாகத், தத்துவ முப்பத்தாறுஞ் சைதன் னியங்
களைந்து, சித்தசித் தான்மாவொன்று முப்பது மசித்
தேசெப்பில். (கூசு)

(இ-ள்.) சுத்த தத்துவங்களொன்று முன்னமே சொன்னவைந்தும்	'விதனையோ டசர்' என்னும் விருத்தத்தில் முற்கூறிய சுத்த தத்துவமைந்தும்,
இத் தனைமையி னியம்பு மிவை முப்பத் தொன்றும்	இக்தச் சூத்திரத்தின் மாயை முதற் பிருதிவி யீறாகக் கூறிய முப்பத்தொரு தத்துவமும்
ஆகத் தத்துவ முப்பத்தாறும	நாதமுதலைந்து மாயைமுதல் முப்பத் தொன்றுமாக முப்பத்தாறும்பொருந்தும். இவனை முடித்துக் கூறியவற்றுள்
சைதன னியங்களைந்து	அவையிற்றைப் பிரித்தறியுமிடத்துச் சைதன்னியமாகிய சுத்த தத்துவங்களைந்து,
சித்தசித் தான்மாவொன்று	சித்திது அசித்தென்று பிரித்துணரப் படாநின்ற வான்மாவை யுபசாரத்தாற் றத்துவமாக வெண்ணப்பட்டதொன்று,
முப்பது மசித்தேசெப்பில்.	நின்ற முப்பது தத்துவங்களையும் விசாரித்துச்சொல்லில் அசித்தென்றறிவாயாக. எ-று. (சுக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலெரு விருத்தத்திலே தத்துவங்களுடைய தொகை புணர்த்துதல்.

சுத்ததத்துவங்களொன்று முன்னமே சொன்னவைந்தும் - முன்னே சுத்தமாயையிலே தோன்றுமென்று சொன்ன வைந்து தத்துவமும், — இநகைமையினியபும் மிவைமுப்பத்தொன்றும் - அசுத்த மாயையிலே தோன்றுமென்று சொன்ன முப்பத்தொரு தத்துவமும், — ஆகத்தத்துவ முப்பத்தாறும் - ஆகத் தத்துவங்கள் முப்பத்தாறும். — சைதன்னியங்களைந்துசித்தசித்தான்மாவொன்று முப்பது மசித்தே செப்பில் - சொல்லப்பட்ட முப்பத்தாறுதத்துவங்களிற் சுத்தமாயையிற் றோன்று மஞ்சு தத்துவமும் சாட்சாத் சிற்சத்தியினாலே அதிஷ்டிதமாகையால் சைதன்யமென்று சொல்லப்படும். புருஷதத்துவமானது சடமாயிருந்தும் ஆன்மாவுக்குக் கஞ்சுகம்போல நீங்காமல் நிற்பதாகையால் சித்தசித்தாத்மகமென்று சொல்லப்படும் புருடதத்துவமொன்று, நின்ற முப்பதுதத்துவங்களும் சடமாமென்றிதன்பொருள். (௬௬)

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இப்படித் தத்துவங்களை முறைமை சொல்லித் தொகுக்கின்றார்

சைதன்னியமைந்தும - சிருஷ்ட சிவதத்துவமைந்துஞ் சிவசத்தி ரூபமானவாற சாக்ஷாத் சைதன்னியம், சிருச்சிய சிவதத்துவ மைந்தும் மாயாரூபமாய சைதன்ய வியஞ்சகோபகாரத்தினுபகார சைதன்யம் — சித்தசித்தான்மாவொன்றும் - புருஷதத்துவமொன்றுங் கலாதி பஞ்ச கஞ்சுகாவித்தியாதி பஞ்சக்லேசகலுஷிதமாதலாலியற்கையாற் சித்தாயிருந்தாலுஞ் செயற்கையாற் சித்தசித்து. — முப்பது மசித்தே செப்பில் - சொல்லுமிடத்துக் கலாதி சிறிது சைதன்யமுஞ்

சகமாதலாற் சித்தசித்தென்று செப்பப்பட்டாலும் மோசயோ
சயோதகமாதலா லியற்கையாற் கலாதி முப்பது மசித்தே
மற்றைய வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இப்பபுபற்றி மேலைச் சூத்திரத்துட் கூறிப்போந்த சுத்த தத்துவங்களைந்துடன் ஏனைக் கூறிய தத்துவ முப்பதல்லாமை றுமுளப்படத் தொகையான முப்பத்தாறு தத்துவமாம். இவற்றுள், முன்னைய வைந்துஞ் சடமாயினுஞ் சிற்சத்திக்குச் சுத்த தரவடிவாகலிற் சைதன்னியமெனப்படும். பின் முப்பத்தொன்றனுட் புருடதத்துவஞ் சாந்தத்தன்வையனாமாயாசத்தி, காரிக த்தெனப்படும். அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவே படு மென்பதாம்.

சித்தசித்தென்றது தமிழ்நூலின் முடிபு

இதனுள் மேற்கூறிப்போந்த தத்துவங்களுக்குத் தொகையும் அவற்ற தியல்பும் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

முன்னே முதற் சூத்திரத்திலே சொன்ன சிவதத்துவங்களுக்கும், இப்பொழுது சொன்ன வித்தியா தத்துவம் ஆன்மதத்துவங்களுக்கும் தொகை யருளிச்செய்கிறார்.

சுத்ததத்துவங்களொன்று முன்னமேசொன்னவைந்தும் - சுத்தமாமையில் தோன்றுமென்று முன்னே சொல்லப்பட்

சிவ தத்துவங்களைந்தும்,—இத்தகைமையினியம்பு மிவைமுப்பதொன்றும் - இந்த வசுத்தமாயையில் தோன்றுமென்று சொல்லப்பட்ட இந்தத்தத்துவங்கள் முப்பதொன்றும்,—ஆகத்தத்துவம் முப்பத்தாறும்-ஆகயிரண்டுவகையிலுந் தத்துவமுப்பத்தாறும். இவையிற்றினுண்மை சொல்லுமிடத்து,—சைதனியமாகவைந்தும - சுத்தமாயையில் தத்துவங்களைந்துஞ் சேதனமாயிருக்கும்.—சித்தசித்த நானமாவொன்று - சித்துடனேகூடி யறிவாயும அசித்துடனேகூடி யறியாமலுமாய் நிற்கிற ஆன்மாவென்றுங் காரணமாயிரண்டற நிற்கையினாலே ஆன்மாவெனகிற பெயரையுடைய புருடதத்துவமொன்றும,—முப்பது மசித்தேசெடயில் - அசுத்தமாயையில் தோற்றமாகையினாலே முப்பது தத்துவமும் அசேதனமென்று சொல்லப்படும.

இதனாற் சொல்லியது சுத்ததத்துவமைந்துஞ் சேதனமென்றும், அசுத்த தத்துவமுப்பதும அசேதனமென்றும், ஆன்மாவும் புருடதத்துவமும் தன்னிற் பின்னமற்றிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

முன்னமேசொன்ன - இவையுயற்றி மேலைச் சூத்திரத்துடனே கூறிப்போந்த,—சுத்ததத்துவங்களைந்து - சுத்தத்தத்துவங்களைந்துடன்,—இத்தகைமையி னியம்புமிவை முப்பத்தொன்றுமாக - ஈண்டுக் கூறிய தத்துவம் முப்பத்தொன்றுமுளப்பட,—முப்பத்தாறு தத்துவமாம் - தொகையான் முப்பத்தாறு தத்துவமாம்.—செப்பின் - சொல்லுமிடத்து,—ஐந்தைந்தனவியங்கள் - இவற்றுள் முன்னையவைந்துஞ் சடமாயினும்

சிற்சத்திக்குச் சுதந்தரவடிவாகலின் சைதன்னிய மெனப்படும்.—ஆன்மா வொன்றுஞ் சித்தசித்து - ஏனை முப்பத்தொன்றனுள் புருடதத்துவமொன்றுஞ் சார்ந்ததன் வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும்,—முப்பதும சித்தே - அஃதொழிந்த முப்பது மசித்தெனப்படும.

இதனானே மேற்கூறிப்போந்த தத்துவங்களுக்குத் தொகையும அவற்றி னியல்புங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

அவை சுத்தம் மிசிரம அசுத்தமென மூவகை
யெனப்படுவும், காண்ட மூவிதமெனப்படுஉ
முணர்த்துகின்றார்.

ஐந்துசுத் தத்தின்கீழே ழசுத்தாசுத் தம்மசுத்தந்,
தந்திடும் புமான்கீழெண் மூன் றுயதத் துவஞ்சிவாகக்கு,
வந்திடும் பிரேரகாண்ட மற்றது போககாண்ட, மந்
தமி லணுக்களுக்குப போக்கியங் காண்டமாமே. (௭0)

(இ-ள்.) ஐந்துசுத்தத்தின் சிவதத்துவமுதலிய வைந்து மவ்விடங்களிற் புவனங்களைச் சேர்ந்த வானமாக்கட்குச் சர்வஞ்ஞத்துவஞ் சர்வகிருத்தியங்களை விளக்குதற்குச் சாதனங்களாகையால் ஐந்தையுஞ் சுத்தமென்று சொல்லப்படும்.

கீழேழசுத்தாசுத்தம் சுத்த மாயைக்குக்கீழ் மாயைமுதலிய வேழுஞ் சுத்தமாயு மசுத்தமாயுமிருக்கும். அஃதெக்காரணத்தாலெனின்? ஆன்மாவுக்குச் சிற்றறிவை விளக்குதற்குச் சாதனமாகையாற் சுத்தமென்றார்.

சூக்குமரூபத் துவாரத்தாலே யானமாக்கடருக் குணரூபமாகிய சுக துக்க மோகங்களை யுண்டாக்குவதற்குச் சாதனமாகையால் அசுத்தமென்றார்; ஆதலால் சுத்தாசுத்த மாயிற்று.

அசுத்ததத்துவமேயுமானதென்றோ னொன்றுய தத்துவம	பிரகிருதிக்குக் கீழாகிய விருபத்துநாலுஞ் சித்திரையும் விளக்கிச் சித்து காத்திருந்த துவத்தையுஞ் சுகாதிகளையு முண்டாக்குகையால் அசுத்தமாயிற்று

சுத்தாதி மூன்றாந்தத்துவாவிற்கு மேலிறுத்த முறையே பெயருரைத்தனர்.

சிவர்க்கு வந்து மெ பிரேரகாண்டம	சுத்தமாயையிற சிவனகொள்ளுந திருமேனிகள்கேதுவாக யந்தத்தாய்ச் சிவனுக்குள்ளதாயிருக்குமாதலால் பிரேர காண்டமெனப்பெறும்.

அஃதெச்சாரணந்தானெனின்? சுத்தத்தத்துவங்களிலிருப்பார்கள் கிழுனாராசெய்து கடமைத்துக்க கிசைய நாலுவாககாலு மவர்களவாக ஏறிவை விளக்குமபடி யாதெனில்? நாதத்தத்துவ மூலாதாரத்தை யதிட்டித்துக்கொண்டு சூக்குமயினையும், விந்துதத்துவ நாபியை யதிட்டித்துக்கொண்டு பைசந்தியையும், சாதாக்கிய மிதயத்தை யதிட்டித்துக்கொண்டு மத்திமையையும்.

வைகரியிருவிதமாம். அஃதாவது? தன்செவிக்குக் கேட்குமதாயும், பிறசெவிக்குக் கேட்குமதாயும்.

இதின மூன்றினதை யீசுரதத்துவங் கண்டத்தைப் பொருந்திப் பிரேரிக்கும்.

மற்றத்தைச் சுத்தவித்தை முகத்தைப் பொருந்திப் பிரேரிக்கும் எனவறிக.

இக்கருத்தைப்பற்றிச் சார்புநூலாரும் "இத்தகைமை யிறையருளா லுயிரறியு மறிவுக் கீடாக வாடாதே யீரிரண்டி லுறாதத, விதனைமுத் லேவரால் விளங்கு ஞானம்" என்றனர்.

சிவப்பிரகாசம் - பொது - உஎ, செய்யுள்.

மற்றது போககாண்டம	மிச்சிராதத்துவாவாகிய வேழு தத்துவத்திற் பொருந்தப்பட்ட வான்மாக்கட்குப் போகத்தைக் கொடுத்துப் புசிப்பிக்கையாற் போ

ககாண்டமெனப் பெயராயிற்று. போகசயித்திரு காண்ட மெனபாருமுளர்.

அந்தமிலனுக்களுக்குப் போககியகாண்டமாமே.	அசுத்தாத்துவாவாகிய விருபத்து நாலுமளவிறந்த வான்மாக்கட்குப் போக்கியமாகிய வத்துக்களைப் புசிப்பிக்கப் படுதலாற் போக்கியகாண்டமெனப் பெயராயிற்று எ-று.

அந்தமிலனுக்கட் கெனபதனை யிருபாலுங் கூட்டுக.

பிரேரகம்-ஏவுதல், போகம்-போசனம்பண்ணுவது, போக்கியம் - புசிக்கப்படும் வத்துக்கள், இவை வடமொழி.

இதற்குச் சிந்தியாகமத்தினறிக.

பஞ்சராத்திரி பிரகிருதி மட்டமையாதோ! முப்பத்தாறுதத்துவம வேண்டுமோவெனன? காலநியதியினறிய போகங்களைப் புசிக்கப்படாதாகையாலும, அதனைப் புசிக்குமிடத்துப் புசிப்பதொன்றில்லாதபோது கணமபலம் புசிக்கப்படாதாதலால் அதனைப் புசித்தேதொலைந்தாலொழிந்து முத்தி கூடாதுகாண்; ஆதலாற் றத்துவ முப்பத்தாறுஞ் சைவாகமத்திலொழிய மற்றச் சாத்திரங்களி லில்லையெனவறிக. (எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் தத்துவ முப்பத்தாறில் சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தமெனறு மூனறு வகையும பிரேரக போகஜயித்ரு போகய காணட மெனபது முணர்த்துகல்.

ஐநதுசுததததின மேழுசுத்தாசுத்தம் மசுத்தந் தந்திடும் புமானகி ழெண்மூனருய ததுவஞ் சீவர்க்கு வந்திடும - சுத்த தத்துவ மைநதுக்கும் கீழாகச சுதத மாயாகாரிய தேகாதிக ளையுடைய அநந்தேசுரராலே, அசுததமாயையிலே மாயை காலம நியதி கலை வித்தை ராகம் புருடனெனறு மேழுதததுவமு ந் தோனறி; சுதத மாயாதத்துவஙகளிலுலே பிரேரிககபபடு கையால் சுத்தாசுத்தமெனறு பெயராம். புருஷதத்துவத்துக் கீழாக விதிஞலே வியாபிக்கப்பட்டதா யிருபத்துநாலு தத் துவங்களுண்டாம். இவவாறிநத முப்பத்தாறு தத்துவமும் ஜீ வாளமாவுக் குண்டாம்.—

பிரேரகாண்ட மருவுபோக சயித்திரியத்தோ டக்தமி லணு க்களுக்குப் போக்கியங் காணடமாகும் - இநத மூன்றுவகையு ம் சகலான்மாக்களுக்குச் சுத்த ததுவ மஞ்சும் பிரேரகாண்ட மாம், சுததாசுத்த ததுவமேழும் போகஜயித்ரு காண்டமா ம் போகசயித்ருவாவது புசிப்பிககிறது. ஆனம தத்துவ மிருப ததிஞலும் போக்யகாண்டமாம்.

பிரேரகமாவது ஒரு மரப்பொம்மைக்குக் கயிறுகளைக்கட் டிச் சூத்திரிக ஞட்டுமாப்போல் அசுத்த மாயாதத்துவங்களை சுத்தமாயா தத்துவங்களிஞலே துடக்கிச் சிவனுடைய சத்தி யானது சேஷ்டிப்பிக்கிறது.

போகஜயித்ரு காண்டமாவது ஆன்மாவுக்குச் சகாயமாய் நின்று போகத்தை யுண்டாக்குவது:

போக்கியமாவது புசிக்கப்படுவதாயிருப்பதுவே.

இவ்வாறு சகலர்க்குக் கண்டுகொள்க வென்றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——0——

தத்துவங்களினது ஸ்வரூபஞ் சொல்லுகின்றார்

ஐந்து சுத்தம் - சிவதத்துவ மைந்தும் தங்களிடத்திருப்போர்க்கும், இங்கு மியோகிகட்குமொரு பிரகாரம சாயுஞத்துவ சர்வ கர்த்திருத்வ சிவதத்துவ விளக்கமாதலால் பவித்திரம,—சுத்தத்தின கீழேழு - கலாதி பிரகிருதி அந்தம வித்தியாதத்துவ மேழுங் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித கர்த்திருத்துவ மோக விளக்கமாதலால,—சுத்தாசுத்தம் - பவித்திராபவித்திரம். (வித்தியாதத்துவத்தில் மாயையைக் கூட்டிப் பிரகிருதியைவிட்டுரைப்பாருமுளர், அப்படிச் சொல்லில் காரணதத்துவ காரியதத்துவ சாங்கரியம் வரும.)— அசுத்தந் தாமிப்ம புமான கீழெண்மூன்றுப தத்துவம் - புருஷதத்துவம பொருந்திய பிரகிருதி தத்துவத்துக்குக் கீழ் ஆன்மதத்துவ மிருபத்தினாலுங் கிஞ்சித் சிற்போதகமானாலும் வெகு மோகமாதலால் அசுத்தம். மூவாகத்துட் சிவதத்துவ மைந்தும,—சீவர்க்கு-ஞானமாவதற்கு,—பிரேரககாண்டம் வந்துமே - பிரணவ கலாபஞ்சக வாக்குபஞ்சக ஸ்வரூபமாயிருந்து, அசுத்த தத்துவங்களை முறைமையிற் செலுத்துங் கொத்தாகப் பொருந்தும். (வித்தியாதத்துவமேழும் ஆன்ம தத்துவ மிருப்பத்தினாலும்),—மருவு போகசயித்திரியத்தோடந்தயிலனுக்களுக்குப் போக்கிய காண்டமாமே - நாசமில் லானமாக்களுக்கு முறையிற் பொருந்தும் போகசயித்திருவென்று சொல்லப்பட்ட புசிப்பினி

றை கொத்து, அதனோடு போக்கியமென்று சொல்லப்பட்ட புசிக்கப்படுகின்ற கொத்தென்றுந் தானேயாம.

சிவஞானயோகியருரை வருமாறு.

இத்தத்துவ முப்பத்தாறனுள், முன்னைந்தும் நடுவேழும் பின்னிருபத்து நான்கும் முறையே சுத்தம மிச்சிரம அசுத்தமெனவும், பிரேரககாண்டம போகசயித்திருகாண்டம போக்கியகாண்டமெனவும காரணக் குறிபெற்று, முத்திறப்படுமெனபதாம்.

முன்னைய வைந்துஞ் சுத்தமாதன் மேற்கூறியபோந்தமையின் ஈண்டுணர்த்தொழிந்தார

போகசயித்திருவென்னும வடசொல்லிறு ஞகரமும அதனோடென்பதனுள அன்சாரியையும விகாரத்தாற றொக்கன.

அது பகுதிப்பொருள விகுதி

இவை காரணக் குறியாமாறு உய்த்துணர்ந்துகொள்க.

இதனானே அம்முப்பத்தாறு தத்துவமும மூவினமாதல் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலுந் தத்துவ முப்பத்தாறு மூன்று காண்டமாயிருக்கு மென வருளிச்செய்கிறார்.

ஐந்துசுத்தத்தின கீழே முசுத்தாசுத்தம் - சிவ தத்துவங்க ளென்று சொல்லப்பட்ட தத்துவங்களைந்துக்கும் சுத்தத்தத்துவங்களென்றுபெயர். இதற்குக் கீழாகச் சொல்லப்பட்ட வித்தியாதத்துவங்க ளேழும், அசுத்தாசுத்த தத்துவமென்றுசொல்

லப்படும்,—அசுத்தத்தத்துவம் புமான்கீழ் மூன்றாய தத்துவம் - இந்தத் தத்துவங்களுக்குக்கீழாக மூலப்பிரகிருதியிலேநின்றுந் தோன்றுநின்ற ஆன்மதத்துவமிருபத்துநாலும் அசுத்த தத்துவமென்று சொல்லப்படும் இவைதானெதுக்காரணமாகத் தோன்றினதெனில்?—சீவர்க்கு வந்திடும் - ஆன்மாக்கள் கன்மம் புசிக்கைக் காரணமாகத் தோன்றினதாம்,—பிரேரகாண்டமருவு போகசயித்திரியத்தோடுந்தமிலனுக்குப் போக்கியகாண்டமாமே - இப்படி எண்ணிறந்த வான்மாக்களுக்குமே பொருந்தப்பட்ட விந்த சுத்ததத்துவம் வித்தியா தத்துவங்களைப் பிரேரிக்கையால் பிரேரகாண்டமென்றும், சுத்த தத்துவங்களாலே பிரேரிக்கப்படுகையாலும் அசுத்தமாயிற் றோற்றமாகையாலும் சுத்தாசுத்தமென்று சொல்லப்படுகிற வேழுகளும் போக சயித்திரிய காண்டமென்றும், பிரகிருதியிற் றோற்றமானயிருநாலுஞ் சகலர்க்குத் தனுகரண போகமாகையினாலும் அசுத்த தத்துவமென்று சொல்லப்படுகிற விருபத்துநாலுக்கும் போக்கிய காண்டமென்றும் பேராம்

இதனாற் சொல்லியது, ஆன்மாக்கள் கன்மத்தைப் புசிக்கைக்குத் தத்துவ முப்பத்தாறுமாய், பிரேரகாண்டமென்றும் போக சயித்திரிய காண்டமென்றும் போக்கிய காண்டமென்றும் மூன்று வகைப்பட்டிருக்குமென்னு முறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஊர்த்த சுத்தத்து - இத்தத்துவ முப்பத்தாறனுள் முன்னைந்துஞ் சுத்தமெனவும்,—அதன்கீழேழு சுத்தாசுத்தம் - அதன்

கீழாக நடுவேனைமூ மிச்சிரமெனவும்,—புமான்கீழ் என்றொன்றுய்த் தங்கிடுந்தத்துவ மசுத்தம் - புருடதத்துவத்தின் கீழாய் பின் னிருபத்திருன்காகத் தரப்படுந் தத்துவம் அசுத்தமெனவும்,—சீவர்க்கு வந்திடும் பிரேரகாண்டம் - உயிர்க ளனுபவித்தற்கேதுவாக முறைமையே பிரேரகாண்டமும்,—மருவுபோக சயித்திரத்தோடு - பொருந்தி நின்ற போக சயித்திரகாண்டத்தோடு,—அந்தமி லணுக்களுக்கு - எல்லையிலாத வுயிர்கட்கு,—போக்கியகாண்டமாமே,—போக்கிய காண்டமெனவும் காரணக்குறிபெற்று முத்திறப்படுமே.

இதனானே யம்முப்பத்தாறு தத்துவமும் மூவினமாதல் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இத் தத்துவசதகம் பதி முதலிய பொருளிடத்து முனைடென் றுணர்த்துகிறார்.

தத்துவ ரூபமாகுந் தருமரு வுருவமெல்லாந், தத்துவந் தூலசூக்க பரங்களு மாகிநிற்குந், தத்துவந் தனனிற்சாரு மணுக்கள்சா தாக்கியத்திற, றத்துவஞ் சத்தஞ்சாருஞ் சகலமுந் தத்துவங்காண். (எக)

(இ-ள்.) தத்துவ ரூபமாகும் - சிவன தாக்கினை பாற் றாப்படாநின்ற வருவமாகிய சிவஞ் சத்தி நாதம் விந்துவும், தருமருவுருவமெல்லாம் - உருவமாகிய ஈசான முதலாயினவெல்லாந் தத்துவமெனப் பெயர்பெறும். தத்துவந்தூலசூக்க பரங்களும் - தத்துவங்கட்குக் காரணமாகிய பிரகிருதிமாயை அசுத்தமாயை சுத்தமாயை மூன்

மாகிநிற்கும். | ற மடையே தூலமெனவுஞ் சூக்குமமெனவும் பரமெனவும் பெயர்பெற்று நிற்கும்.

இவற்றுட் டூலமாவது- புருடனுக்குப புதநியாகிய போக்கியதசையுண்டாகுவது முக்குணமே வடிவாயிருக்கிற பிரகிருதியெனவறிக.

சூக்குமமாவது - ஆன்மாக்கள் போகம் புரிக்கிறதற்கேதுவாய் பிரிக்கப்படாத கலாதி தத்துவங்களுக்கும் பிரகிருதிக்குங் கீழுள்ள புவனத்திலிருக்கும் ஆன்மாக்களுக்கும், அதற்குமேலுள்ள வான்மாக்களுக்குங் காரணமாயிருக்கிற மாயையெனவறிக.

பரமாவது -வித்தேசர் முதலாயினோர்க்குத் தனுவையுண்டாக்குதற்குக் காரணமாய் மந்திரங்களுக்கும் பிறப்பிடமாய் நித்தியமாயிருக்குங் குண்டலியெனவறிக.

தத்துவசதன ளிற் சாரும்	சிவமுதலிய தத்துவங்களுடபிரளயகாலமளவு மழியாதிருத்தலாலதற்குத் தத்துவசத்தம் பொருந்தும்
அணுக்கள்சாதாக்கியத்திற்றத்துவசத்தஞ் சாரும்.	மந்திரங்களிடத்துஞ் சதாசிவமூர்த்தியிடத்துந் தத்துவசத்தம் பொருந்தும்.
சகலமுந தத்துவங்காண்.	நிட்களமாகிய சிவமும், சகளநிட்களமாகிய சதாசிவமூர்த்தியும், சகளமாகிய மகேசுரமூர்த்தியும், ஆன்மவர்க்கங்களும், பாசங்களுமாக

விவையெல்லா மழியாம லுண்மையான வத்துவாயிருக்கையாற் றத்துவசத்தஞ் சொல்லப்பெறும் எ-று.

இதற்கு வாதுள சுத்தாக்கியையினு மதங்கத்து மிருத்தினத்திரயத்துமறிக. (௭௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— o ——

இருவுந் தத்துவங்களுடைய லக்ஷணம் உணர்த்துதல்.

தத்துவரூபமாகுந் தருமுருவருவ மெல்லாம - உண்டாக்கப்பட்ட ரூபங்களு மரூபங்களுந் தத்துவங்களினுடைய ஸ்வரூபமாம். அவையாவன? பிருதிவியாதி நாலுபூதங்களும் ரூபங்கள், ஆகாசாதி தத்துவங்க ளெல்லா மரூபம், அரூபமென்றது § அஸ்மதாதி பாகியேந்திரியா கோசமாயிருக்கையால் —

§ அஸ்மதாதி பாகியேந்திரியா கோசரம - நாமமுதலானவர்களுக்கு பாகியேந்திரியத்துக்கு விஷய மாகாதது

தத்துவந் தூலசூக்கம பரங்களுமாகிநிற்கும - புவனாதாரமாகிய சாதாரண தத்துவங்களெல்லாம ஸதூலமாகவும் பிரதிபாக நியதமாகிய தத்துவங்கள் சூக்குமமாகவும் நிற்கும் † சித்சமகலிதமல்லாமல் ஜடத்துக்கு சேஷ்டையில்லா தாகையாலிந்த தத்துவாபிமானிகளாய்த் தத்துவ நாமங்களுமா யிருக்கிற தேவதைகளா பரமாகியு நிற்கும —

† சமகலிதம - சூழப்பட்டது.

தத்துவங்கனனிற்சாரு மணுக்கள - இந்த தத்துவங்களிலே ஆன்மாக்கள தங்கள் தங்கள் கன்மத்துக் கேற்கப் பொருந்தி ஜீவிப்பார்கள —

சாதாக்கியத்திற தத்துவ சதக்குசாரும- ஆன்மாக்களுக்குப் பொருந்தும் தத்துவம சாதாக்கிய மாமே. மேல் சத்திசிவதத்துவங்க ளிரண்டும * பிராப்பியமொழிய + சோத்தியமல்லவோ வென்னில்?—

* பிராப்பியம் - அடையத்தக்கது + சோத்யம - சோதிக்கத் தக்கது.

சகலமுங் தத்துவங்காண்-நாதாதி ப்ருதிவ்யந்த முப்பத்தாறு தத்துவமும் ஆன்மாக்களுக்கு போகார்த்தமாம். மலபரிபாகானுகுணமாக ஈஸ்வர னுண்டாக்குகையால் சகலமும் சோத்திய தத்துவமே!

தத்துவமென்றதற்குப் பொருள் நித்யமாகவேணும், தோற்றமும் மீறுமுடைய விவை யிற்றுக்களுக்குத் தத்துவமென்ற தெவ்வாறென்னில்? பஞ்சபூத லயத்துடனே தேவர்களுக்கு நாசமுண்டா யிருக்கவும் † மாத்யரை யபேக்ஷித்து ¶ அமாத்யமென்று பேரானாற்போல, சாத்விகமாகிய சரீராதிகளைப்போல உடனே § நாசவத்தன்றி பிரளய பரியந்தமும் நிற்பதாகையால் சாத்விகத்தை யபேக்ஷித்து இந்த முப்பத்தாறுக்கும் தத்வமென்று பேரானது.

ததுக்தம் - ஆபூதஸம்ப்லவஸ்தாநம் அம்ருதத்வம் ஹி பாஷ்யதே இதி.

தத்ப்ரகாசே .. ஸுரா ஸ்வயம் ப்ரதிஷ்டந்தி ஸம்வத்ஸராணாம் ஸஹஸ்ராயுதாநாம் | தத்ஸ்திதி வ்யாப்தே ரம்ருதமீர்யதே இதி.

† மாத்யம - மரணமடைகிற மனிதர், ¶ அமாத்யர் - தேவர்கள், § நாசவத்து - நாசமுள்ளது.

தத்வாபிமான தேவதைகளுக்கு மந்த தத்வ நாமங்களே யென்பதற்குச் சம்மதி

ததுக்தம் ஸர்வஜ்ஞானோத்தரே - யானி நாமானி தத்வாநாம் தானி தத்வாதிபேஷ்வபி | ஜ்ஞாத்வைவம் யோஜயேந்மந்த்ரம் யஸ்ஸித்திம் ப்ராப்துமீஹதே இதி.

சாதாரண தத்வங்கள் ஸ்தூலமும் அசாதாரண தத்வங்கள் சூக்குமமெனப்படுதற்குச் சம்மதி.

பௌஷ்கரே - ஸாமாந்யாநி விஶேஷாணி ஸூக்ஷ்மஸ்தூலாநி ஸூக்ஷ்மாணி தாநி வை। ஸ்தூலாநி கீர்த்திதாநி ஸ்தூலாநாம் ஸூக்ஷ்மாணி ஸ்தூலதாஸ்வார்த்தநார்த்தநி॥ ஸ்வஸ்வாதிகார ரஸ்வேந ப்ரேரணாத்ராந்நாஸிதா.

பிருதுவிக்கு அபிமானதேவதை பூதேவி, அப்புவுக்கு வருணன், தேஜசுக்கு அக்கினிபகவான், வாயுவுக்கு வாயுபகவான், ஆகாசத்துக்கு வியோமரூபியாயிருக்கிற ஈசுரன், ஸ்ரோத்ரத்துக்குத் திக்குதேவதை, த்வக்குக்கு வாயு, சக்ஷுசுக்கு சூரியன், ஜிஹ்வைக்கு வருணன், கிராணத்துக்கு அசுவினிதேவதைகள், வாக்குக்கு அக்கினி, பாதத்துக்கு இந்திரன், பாணிக்கு உபேந்திரன், பாயுவுக்கு மிருத்யு, உபஸ்தத்துக்குப் பிரமா, மனசுக்குச் சந்திரன், அகங்காரத்துக்கு ருத்திரன், புத்தி தத்துவத்துக்கு புத்திநாம சத்தி, குணதத்துவத்துக்கு பிரம விஷ்ணு மகேஸ்வரர்கள், ராகதத்துவத்துக்கும் புருஷதத்துவத்துக்கும் ஸ்ரீகண்ட பகவான், வித்தியாதத்துவத்துக்கு வித்தியாதேவி, காலதத்துவத்துக்கு காலேஸ்வரி, காலதத்துவத்துக்குத் தவிர நியதி தத்துவத்துக்கும் காலருத்ரன், மாயா தத்துவத்துக்கு மாயாதேவி, சுத்தவித்யா தத்துவத்துக்கு சுத்தவித்தியாதேவி, ஈஸ்வர தத்துவத்துக்கு அனந்தேஸ்வரன், சாதாக்கிய தத்துவத்துக்கு சதாசிவன், விந்துநாத தத்வங்களுக்கு சத்தியும் சத்தராகிய சிவனும்.

தத்த்வ ஜ்ஞாநாதிஜாத ஸ்ரஷ்ட்ருஸம்பூர்ணாத்மநாம் ஶ்ரீமதீ ... தத்ராத்மப்ரகாஶத்வா ...

[illegible]

[illegible]

ரிதாமஸஶ்ரஸ்ய || தஸ்ய சைதந்யரூபிதாமேவ பாயா
தத்ஸாமாந்யரூபிணீ | யதாவிர்பாவிதம் க்ருத்ஸ்நம்
ஜகத்ஸ்தாவரஜங்கமம் || ஶைவப்ராப்யம் தத்ஹ்யவேதாந்த்ய ஶக்தி
தாத்ருதகம் ஷாநந | ஶாவிந்நயேஷ்ஷ ஸம்காஶம் கிந்து
ஶுக்லம் ஸம்பூர்ணம் || தத்ர விதாயா விதேஜ்ஞயா பதோ
ராமஸஶ்ரஸ்யா | ஸம்ஸ்த்ரிதா ம்பூர்ணா ஸ்ம்ருக்ஷா யத்ர வி
நீஸக்தி ஶாஶ்வதீ || விதத்யாப்ராப்யம் தத்ஹ்யவேதாந்த்யஶ
வித்யாயாமரணபதந: || த்ரிமாவகலமலாஹம் கி
ஞ்சித்தகம் தம்பூர்ணம் | ஶைவப்ராப்யம் தத்ஹ்யவேதாந்த்யஶ
ஸ்வேத்யஸ்யா ஸ்வயம்பூஷஹ்ய || ஸதாஶிவாமரம் தத்வம்
பூர்வவல்கிம்பூர்ணம் | தத்ரா ஶுத்தமஹத்வா நேதவஶ்ர
தவேஶ்வரோமஹேஶ்வர: || ஸதாஶிவோவிஷ்ணுவ்யாவேஶம்
த்ரயோதிஶயப்ரப: || இதி.

மேல் பிரதாநதங்க ளிரண்டிற்கும் சத்தியும் சிவமுமென் பது சித்தம.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

காரணப்பொருள் காரியப்பொரு ளிரண்டினுக தத்துவச் சொல் நடக்குமென்று சாற்றுகின்றார்.

அருவக் தருமுருவம் - காரியப்பொருள்;—

அருவம் - காரணப்பொருள்;—

எல்லாம் - இவைகளெல்லாம்;—

தத்துவ ரூபமாகும் - ஸ்ரீமன் மதங்காதிகளிற் சொன்ன படி தத்துவ லக்ஷணத்தையுடையவாம்,—

தத்துவந் தூல சூக்கும பரங்களுமாகி நிற்கும் - அவற்றுள் பாசதத்துவந் தூலம், பசு தத்துவஞ் சூக்குமம்.

மகாமாயா பாசதத்துவத்தைக் குறித்துப் பசு தத்துவம் தூலம்.

பரமல வாசனை மணப்புற்ற சின்மாத்திர பசுதத்துவத்தைக் குறித்து மகாமாயா பாசதத்துவம் தூலம்.

பதிதத்துவம் பரம்

மலம் பசுதத்துவத்துட்படுத்திப் பசுதத்துவமென்று பகரப்படும்.

கன்மம் பாசதத்துவத் துட்படுத்திப் பாசதத்துவமென்று பகரப்படும்.

திரோதான சத்தியு மப்படியே பதிதத்துவத்துட்படுத்தி யப்படிப் பகரப்படும்.

அனுக்கிரக சத்தி பதிதத்துவத்துட் படுத்திப் பதிதத்துவமென்று பகரப்படும்

இந்நான்கும் சுவதந்திரத் தத்துவங்களாய்ச் சொல்லப்படாது.

பின்னைத் தத்துவங்களும் காரணகாரிய ரூபங்களாயிருக்கும்.

அவற்றுள், நிமித்தகாரண ரூபபதியாகிய வனாதிமுத்த னாதிமுத்த சிவதத்துவ விருமுப்பேத தத்துவத்துக்குள் அதிகார சிவதத்துவம் தூலம், போக சிவதத்துவம் சூக்குமம், இலய சிவதத்துவம் பரம்.

முதற்காரணமாகிய மகாமாயா தத்துவத்திலுந் தூல சூக்கும பரங்களப்படியே அதிகார முதலி லயாந்த பேதகாரியப்

பிரகுதிப் பிரவிர்த்தி நிவர்த்தி, பிரவிர்த்தி நிவிர்த்திக்குறிகளாலறிக.

திரும்ப முதற்காரண மூன்றுள, பிரகிருதி தத்துவம் தூலம், மாயாதத்துவம் சூக்குமம், மாமாயாதத்துவம் பரம்.

காரிய தத்துவங்களுக்குள, ஆன்ம தத்துவந் தூலம், வித்தியாதத்துவஞ் சூக்குமம், சிவதத்துவம் பரம்.

பசு தத்துவங்களுக்குள், சகல பசு தத்துவம் தூலம், பிரளயாகலா பசு தத்துவஞ் சூக்குமம், விஞ்ஞான கலா பசு தத்துவம் பரம்.

பதிதத்துவம் மூன்றுள், அபர முத்த பதி தத்துவந் தூலம், ஆதி முத்த பதி தத்துவம் சூக்குமம், அநாதி முத்த பதி தத்துவம் பரம்.

அந்தரங்க விசாரத்திலனாதி முத்த பதிதத்துவமும் பரம் ஆகலால், அபரமுத்த பதி தத்துவத்துக்குள, மந்திரமகேஸ்வர தத்துவம் தூலம், அனுசதாசிவ தத்துவம் சூக்குமம், அநாதிமுத்த ஆதிமுத்த பதிதத்துவமிரண்டும் பரம்.

சரீரம் மூன்றுள், பவுதிக சரீரம் தூலம், அசுத்தபுரியட்டகசரீரம் சூக்குமம், சுத்தபுரியஷ்டகசரீரம் பரம் —

தத்துவந்தனிற்சாருமணுக்கள் சாதாக்கியத்திற்றத்துவஞ் சக்தஞ்சாரும் - தத்துவ முதலிய ஷட்தத்துவாவைப் பொருந்தும் சதாசிவ தத்துவத்திலிருக்கு மீசானாதி மந்திரங்களும் தத்துவமென்று பெயர் பெறும்.

சகலமுந் தத்துவங்காண் - இப்படி எல்லாப் பொருளும் தத்துவ தாத்துவிகங்களா யிருப்பது காண்பாயாக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அருவு முருவு மருவுருவுமாயுள்ள காரியப்பிரபஞ்ச மனைத்தும் இத்தத்துவ வடிவேயாம் இம்முப்பத்தாறுந் தூலதத்துவஞ் சூக்கும தத்துவம் அதிசூக்கும தத்துவமென ஒரோவொன்று மூவகைப்பட்டுப் பொதுவும் பொதுச்சிறப்புஞ் சிறப்புமாய் நிற்கும். இத்தன்மையவாய தத்துவங்களை யதிட்டிக்கும் அனுபக்ஷ சம்புபக்ஷத் ததிதெய்வங்களும் அவ்வத் தத்துவப்பெயர் பெறுமாகலான், எல்லாப் பொருளையுந் தத்துவங்களின் வைத்துக் காண்கவென்பதாம்.

எனவே, இத்தத்துவ முப்பத்தாறு முணர்ந்தானுக்கு எல்லாப்பொருளும் இனிது விளங்குமென்பதாயிற்று.

இச்செய்யுளிற் கூறிய பொருளனைத்துஞ் சிவாகமங்களின் விரித்துணர்ந்துகொள்க.

இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவா றெல்லாமுரைப்ப.

இதனானே தத்துவங்களொருதலையா னுணரற்பாலனவென்பது கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொல்லப்பட்ட தத்துவ முப்பத்தாறுமே சகலமு மென்றருளிச் செய்கிறார்.

தத்துவரூபமாகும் தருமுருவருவமெல்லாம் - பிரபஞ்சத்திலுண்டாகப்பட்ட ரூபா ரூபங்களெல்லாந் தத்துவரூபமாயி

ருக்கும்,—தத்துவந் தூலசூக்க பரங்களு மாகிநிற்கும் - தத்து வந்தான தூலாசாரமும் சூக்சமும் இவையிற்றின மேலான பரமுமாயிருக்கும்,—தத்துவத்தனிற்சாரு மணுக்கள் - மூவகைப்பட்ட வானமாக்களுந் தத்துவங்களிலே பொருந்தி நிற்கும்,—சாதாக்கியத்திற் றத்துவசத்தஞ்சாரும - இந்த வானமாக்களுக்குச் சாதாக்கியத்தினாலே பிரேரகப்படுகிற புருடதத்துவம் பொருந்துனால் ஆன்மாவுக்கும புருடனென்று பேராம்,—சகலமுந்தத்துவங்காண - அரூபம் உரூபம் அருபாரூபம் ஆனவையெல்லாம் தத்துவமென்றே சொல்லப்படும.

இதனாற் சொல்லியது தத்துவம உரூபம் அரூபம் தூலசூக்க பரமா யிருக்குமென்றும், ஆன்மாக்கள் புருடதத்துவத்தைப்பொருந்தினால புருடனென்று ஆன்மாவுக்குப் பெயருண்டாமென்றும், ஆகையால் சருவமும் தத்துவமென்று முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சருமருவுருவமெல்லாந்-தரப்பட்ட அருவு முருவும் அருவுருவுமாயுள்ள காரிய பிரபஞ்சமனைத்தும்,—தத்துவ ருபமாகும் - இத்தத்துவ வடிவேயாம,—தத்துவந் தூலசூக்க பரங்களு மாகிநிற்கும் - இம்முப்பத்தாறுந் தூலதத்துவஞ் சூக்கும தத்துவம் அதிசூக்கும தத்துவமுமென வொரோவொன்று மூவகைப்பட்டுப் பொதுவும் சிறப்பும் பொதுச் சிறப்புமாய் நிற்கும்,—தத்துவந் தன்னிற்சாரும் - இத்தன்மையவாய தத்துவங்களையதிட்டிக்கும்,—அணுக்கள் சாதாக்கியத்தில்-அணுபக்க சற்புபக்கத் தெய்வங்களும்,—தத்துவஞ் சத்தஞ்சாரும் - அவ்வு

த்தத்துவப் பெயர்பெறு மாகலான்,—சகலமுந் தத்துவங்களின் - எல்லாப்பொருளையும் தத்துவங்களின் வைத்துக்காண்க.

எனவே இத்தத்துவ முப்பத்தாறு முணர்ந்தானுக் கெல்லாப்பொருளு மினிது விளங்கு மென்பதாயிற்று.

இதனானே தத்துவங்க ளொருதலைபான உணரற்பாலன வென்பது கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை

மேற் றத்துவங்க ளொடுங்கு முறைமை யுணர்த்துகிறார்.

தத்துவ மெண்மூன் றுஞ்சென் றான்மதத் துவத்
தொடுங்கும், வித்தையி லொடுங்குமாறுஞ் சிவத்தினி
லொடுங்குமூன்று, நித்தத் துவம்மூன்று மென்ப
ர்க ளிரண்டுநின்ற, சுத்தமாஞ் சிவத்தொடுங்குந் தோ
ற்றமு மிதுபோலாகும். (௭௨)

(இ-ள்.) தத்துவ மெண்மூன் றுஞ்சென் — ஆன்ம தத்துவமென்று சொல்லப்பட்ட இருபத்துநாலுங் காரணமாகிய பிரகிருதியிலே யொடுங்கும்.

றான்ம தத்துவத் தொடுங்கும்

அஃதாவது? கந்தத்திலே பிருதிவியும், இரசத்திலே யப்புவும், ரூபத்திலே யக்கினியும், பரிசத்திலே வாயுவும், சத்தத்திலேயாகாசமும், இந்தத் தன்மாத்திரைகள் தாமதாங்காரத்தும், வாக்காதிகளைந்தும் ராசதாங்காரத்திலும், சோத்திராதிகளைந்து மனமுஞ் சாத்துவி தாங்காரத்திலும், இம்மூன்றை யக

ங்காரம் புத்தியினும், புத்தியுஞ் சித்தமுங் குணவடிவானவைக ளவ்வியத்தத்திலே யொடுங்கும்.

வித்தையிலா றெட்டுமாறும	வித்தியாதத்துவமென்று சொல்லப்பட்ட வாறுதத்துவமு மாயையி லொடுங்கும்.

அஃதாவது-அராகம் வித்தையிலும், அந்தவித்தை கலையிலும், அக்கலையுங் காலமு நியதியு மாயையிலு மொடுங்கும்.

சிவத்தினிலே யேகுமூன்று	சுத்தவித்தை யீசுரஞ் சாதாக்கியமாக மூன்றுதத்துவமுஞ் சிவதத்துவ மென்னும் பெயரையுடைய விந்துவிலே யொடுங்கும்.
நித்த தத்துவ மிம்மூன்று மென பர்கள	இந்தமூன்றுஞ் சிவனுக்கு காரியப்பட்டா லதிட்டிக்கப்பட்டிருக்கிற விக்கிரகங் களாகையா லிதனையு நித்தியமென்று சொல்லுவர்கள்.
இரண்டு நின்ற சுத்தமாஞ் சிவத் தொடுங்கும்	பாரிசேடத்தால் விந்து நாதங்க ளிரண்டுஞ் சுத்தமுமாய் நித்தியமுமா யழியாமலிருக்கிற குண்டலியிலே யொடுங்கும்.
தோற்றமு மிதுபோலாகும்.	இப்படிச் சங்காரப்பட்டிருந்த பின்னையுஞ் சிருட்டிகாலத்திற குடிலையி லின்று மொடுங்கின முறைமையே நாதமுதற் பிருதிவி யீறாகத் தோன்றுகிற்கும். எ-று.

சிறிதாகமங்களிற் சுத்ததத்துவமென்ற வைந்து மொன்றி லொன்றாகத் தோன்றுமென்று சொல்லுமெனவறிக.

இதற்குச் சிந்தியத்தும் பௌஷ்கரத்து மறிக. (எஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் தத்துவங்களொடுங்கு முறைமை தொகுத்துணர்த்துகிறார்.

தத்துவமென்மூன்றுஞ்சென றான்மதத்துவத்தொடுங்கும் - பிருதிவியாதி சித்தமீறான ஆன்மதத்துவமிருபத்திநாலுந் தனக்குக் காரணமான பிரகிருதியிலே முன்சொன்ன வடைவிலேயொடுங்கும்,— வித்தையிலொடுங்குமாறு - புருஷதத்துவம் தத்துவபஞ்சக சமுதாயமாகையால் அந்த அஞ்சுதத்துவங்களுடைய வொடுக்கமே அதற்கு வொடுக்கமானபடியினாலே தனித்துச் சொல்லவேண்டுவதில்லையானது கொண்டு ராகமுதலாகக் காரியமாயையீறாக ஆறுதத்துவங்களும் ஆணவமலத்தை நீக்கி ஆன்மஞானத்தைப் பிரகாசிப்பிக்குங் கலாவித்தைகளை ஜநிப்பிக்கையினாலே உபசாரமலத்தை நடத்துமீஸ்வரசத்திக்கும் மலமென்று பேரானதுபோல, ஆன்மாவினுடைய வித்தியா பகவாசிபமாயிருக்கிற ஞானப்பிரகாசத்துக்குக் காரணமாயிருக்கையினாலே உபகாரலட்சணையாக வித்தையென்று பேருடைய அசுத்தமாயையிலேயொடுங்கும்,— சிவத்திலொடுங்குமூன்று - சுத்தவித்தை ஈஸ்வரம் சாதாக்கியமெனனும் மூன்றுதத்துவமுஞ் சிவதத்துவத்திலே யொடுங்கும்;— நித்த தத்துவமிம்மூன்றுமென்பர்கள் - வைஷ்ணவர் ¶ அப்பிராகிருதலோகம் நித்தியம், அதிலேயிருக்கிற பகவானுடைய விக்ரஹமும் நித்தியம், சாயுச்சிய மோட்சமானது அந்த பகவானைப்போல வனந்தகல்யாணகுண சகிதராய் மகாலட்சுமி § வியதிரிக்தமான சர்வபோகங்களும் விஷ்ணு † தல்யமாகவுண்டாயிருப்பதே யென்பதுபோல; சைவ யேகதேசிகளு

ம் சுத்தவித்தை ஈஸ்வரம் சாதாக்கியமென்கிற மூன்றுதத்துவமும் நித்தியம், இந்தத் தத்துவேஸ்வரராகிய ருத்திர மகேஸ்வர சதாசிவரென்கிற மூன்றுமூர்த்திகளும் நித்தியம், சாயுசசியமும் அவர்களைப்போல ×ஷாட்குண்ய பரிபூரணராய்த் †துல்லியராக விருப்பதேயென்பர்கள். அது சித்தாந்தமல்ல.— நின்றவிரண்டு சுத்தமாஞ் சிவதத்தொடுங்கும் - முன்னெடுக்கஞ் சொல்லாமலிருந்த சத்திசிவ தத்துவங்களிரண்டும் சுத்தமாயையென்னும் சாட்சாத் சிவாதிஷ்டித மாயையால் சிவமென்னும் பெயரையுடைய பரவிந்துவிலே யொடுங்கும்.— தோற்றமுமிதுபோலாகும் - பிரளயாநந்த சிஷ்டியு மிவ்வாறே யாமென்றிதன்பொருள்.

¶அப்பிராகிருதம் - பிரகிருதி சம்பந்தமில்லாதது, §வ்யதிரிக்தம்-வேறுபட்ட, †துல்லியம்-ஒப்பு, ×ஷாட்குண்ணியம்-அறுகுணம்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

சைவபௌராணிக மதானுசாரியர் மதத்தினுஞ் சுத்தமாயையில் அசுத்தமாயை யொடுங்குமென்று சொன்னதல்லாமல், மற்றவை சுத்த சைவசித்தாந்திகட்கு மொத்திருக்கும் தத்துவங்களின் றொடுக்கஞ் சாற்றுகின்றார்.

தத்துவ மெண்மூன்றுஞ்சென் றான்மதத்துவத்தொடுங்கும்-ஆன்மதத்துவ மிருபத்தினான்கும் புருஷதத்துவத்தோடு புணர்ந்த பிரகிருதியென்னு மான்மதத்துவத்திற் பிரளயமாம்,— வித்தையி லொடுங்குமாறு-கலாதி புருஷதத்துவாந்தமான்மதத்துவ மாறு மாயையிற் பிரளயமாம்,-

சிவத்தினி லொடுங்குமென்று- சுத்தவித்தை யீசுர சாதாக்கிய மென்கின்ற தத்துவமூன்றுஞ் சுத்தமாயையிற் பிரளயமாம்,—

நித்தத்துவமிம்மூன்று மென்பர்க-ளிரண்டு நின்ற சுத்த மாஞ் சிவத்தொடுங்கு-ந்தோற்றமு மிதுபோலாகும்-

சைவபௌராணிக மதானுசாரிபர் மதத்துப்பொருள் முதலுரைப்பாம்.

பிரகிருதி அசுத்தமாயை சுத்தமாயை நித்தியமென்று சாங்கியன்முதலோர்கள் சொல்லுவார்கள்; அது நமது மதமன்று.

இரண்டும் - பிரகிருதியும் அசுத்தமாயையும் முறைமையிற் சுத்தமாயையிற் பிரளயமாம்.

உற்பத்தியு மொடுக்கம்போல விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம வந்திடுமென்று முன்சொன்னபடியாம்.

சுத்த சைவசித்தாந்தாசாரியர் மதத்துப் பொருளினியுரைப்பாம்.

சுத்தவித்தை யீசுரஞ் சாத்தாகிய மென்கின்ற தத்துவ மூன்றும் நித்தியமென்று சைவருட் சிலபேர் சாற்றுவார்கள் அது நமது மதமன்று.

பின் இம்மூன்றும் இரண்டும்-சத்திதத்துவம் காரிய சிவதத்துவம் ஆகவைந்தும் காரணசுத்த சிவதத்துவமென்று சொல்லப்பட்ட சுத்தமாயையிற் பிரளயமாம்.

உற்பத்தியு மொடுக்கம்போல

“ஞானமே யானபோது” சிவனென்பது முதல் முன்சொன்ன படியாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இம்முப்பத்தாறு தத்துவங்களுஞ் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களி னொடுங்கும்வழி, நிலமுதன மூலப்பகுதியீறாகிய இருபத்துநான்கு தத்துவங்களுஞ் சீகண்ட ருத்திரனோ டொடுங்கும், மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறுதத்துவமும் வித்தையீசராகிய அனந்தரோ டொடுங்கும். அவற்றின்மேலுள்ள சுத்தத்துவமுதலிய மூன்றுதத்துவமும் இலயத்தினின்ற சிவனோடொடுங்கும். ஏனை சத்திதத்துவஞ் சிவதத்துவ மிரண்டுஞ் சுத்தசிவனோடொடுங்கும். இவை புநருற்பவமாங்காலும் அவ்வவை யவ்வவராலாம். இவருள் சுத்தசிவனொருவனே நித்தியன், ஏனைமூவரையு மவ்வாறு நித்தியரென்பாருமுளர்; அஃதுபசாரமேயெனப்படும்.

மூலப்பகுதிக்குங் குணதத்துவத்திற்குந் தம்முள் வேற்றுமை அவ்வியத்தமாதலும் வியத்தமாதலும் மாத்திரையேயன்றி ஏனையபோலப் பரிணாம விசேடமின்மையின்; அதுபற்றி அவ்விரண்டனையு மொன்றாக வைத்தெண்ணினார்.

ஏதுப்பொருட்கண் வரும் இன்னுருபு ஏனையிடங்களினும் விரித்துரைக்க.

ஆன்மாவுக் கதிதெய்வமாகிய தத்துவம் ஆன்மதத்துவமென உருத்திரனுக்குப் பெயராயிற்று

ஈண்டான்மாவென்றது ஏற்புழிக்கோடலாற் சகலவர்க்கத்தின மேனின்றது.

தத்துவமென்பது பொதுச்சொல்.

ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமென அவ்வக்காரணக்கடவுளர் பெயர் இடைபுபற்றி அவ்வத்தத்துவங்க

னுக்கு மாயினை யெனப்படுமுணர்த்துவார், அவரை யவ்வப்பெயரா ற கூறினார்.

இனி, நவந்தருபேதங் கூறுவான புகுந்தவாசிரியர், அதற்குத் தோற்றுவாயாக இச்செய்யுளை ஈண்டு வைத்தாராயினும், இயைபுபற்றி 'ஐந்துசுத்தத்தின' என மேலெடுத்தோதிய செய்யுளின் பின்னாக வைத்துக் கண்டுகொள்க.

இதனானே அந்தத்தத்துவங்களைத் தோற்றுவிக்குங் காரணக்கடவுளர் இவரென்பது வகுத்துக் கூறப்பட்டது.

இத்துணையும் மேன்முறை கூறிற் படுமுறைமை யெல்லாந் தொகுத்துக் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

முன்சொன்ன தத்துவ முப்பத்தாறும் ஒடுங்குமுறை யருளிச்செய்கிறார்.

தத்துவமெண்மூன்றுஞ்சென றொன்மைத் துவத்தொடுங்கும் - பிருதிவிமுதல சித்தமீறான தத்துவ மிருபத்திநாலுமா ன்மதத்துவமென்று சொல்லப்பட்ட பிரகிருதித்தத்துவத்திலே சென்றொடுங்கும் — வித்தையி லொடுங்குமாறும் - புருடதத்துவமொழிந்த வித்தியாதத்துவ மாறும் அசுத்தமாயையிலே யொடுங்கும் —சிவத்தினி லொடுங்குமூன்று - சுத்தவித்தை யீசுரம் சாதாக்கியம் என்று சொல்லப்பட்ட மூன்றுதத்துவங்களும் சிவமென்று சொல்லப்பட்ட விந்துவிலே யொடுங்கும். —நித்த தத்துவம்மூன்று மென்பர்கள் - இந்தமூன்று தத்துவங்களும் சுத்தமாயையிற் றோன்றின வாகையாற் சுத்தமாயா காரணகாரியங்களுக்குப் பின்னமற்றிருக்கையினாலே நி

த்திபதத்துவமென்றே பெரியோர்கள் சொல்லாநிற்பர்கள்.—இரண்டுமென்ற சுத்தமாஞ் சிவந்தொடுங்கும்-இவ்விடத்துச் சேஷித்த விந்துநாதங்கள் இரண்டும் சுத்தமான குடிலையிலேயொடுங்கும்.—தோற்றமு மிதுபோலாகும்-தோன்றுகிற முறைமையிலுமிப்படி தோன்றுநிற்கும்.

இதனாற்சொல்லியது, தத்துவ முப்பத்தாறும் தோன்றின கிரமத்திலே யொடுங்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—c—

(இம்முப்பத்தாறு தத்துவங்களுஞ் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களி லொடுங்கும்வழி) தத்துவ மென்மூன்றுஞ்சென்று-நிலமுதன் மூலப்பகுதி யீறாகிய விருபத்துநான்கு தத்துவங்களும்,—சென்று ஆன்மதத்துவத் தொடுங்கும்-சகலவர்க்கத் தான்மாக்கட்கு அதிதெய்வமாகிய சீகண்டருத்திரனொடுங்கும்,—ஆறும்-மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறுதத்துவமும்,—வித்தையிலொடுங்கும்-வித்தை யீசராகிய அனந்தராலொடுங்கும்,—மூன்றும்-அவற்றின் மேலுள்ள சுத்தத்துவமுதலிய மூன்றுதத்துவமும்,—சிவத்திலொடுங்கும்-இலயத்தினின்ற சிவனொடுங்கும்,—நின்றவிரண்டும் - ஏனைச் சத்திதத்துவஞ் சிவதத்துவ மிரண்டும்,—சுத்தமாஞ் சிவத்தொடுங்கும் - சுத்தசிவ னொடுங்கும்,— தோற்றமு மிதுபோலாகும்-இவை புணரும்பவம் ஆங்காறும் அவ்வவை அவ்வவரால் ஆம்.—இம்மூன்று நித்தத்துவமென்பர்கள்-இவருள் சுத்தசிவ னொருவனே நித்தியன், ஏனை மூவரையு மவ்வாறு நித்தியர் என்பாருமுளர்; அஃதுபசாரமென்பதாம்.

இதனானே யத்தத்துவங்களைத் தோற்றி யொடுக்குங் காரணக்கடவுளியல்பொன்பதுவகுத்துக் கூறப்பட்டது.

☞ உ-சூ, ௩-அதி, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

புறச்சமயமாகிய வுலோகாயதன முதலாயினோர்க்கு
முட்சமயமாகிய பாசுபத முதலாயினோர்க்கு
மடையுந் தத்துவ மீதென்று வரையறுத்
துரைக்கிறார்.

மொய்தரு பூதமாதி மோகினி யந்தமாகப், பொய்தரு சமயமெல்லாம் புக்குநின் றிடும்புகன்று, மெய்தரு சைவமாதி யிருமூன்று மவித்தையாதி, யெய்துதத் துவங்களாயு மொன்றுமின் றெம்மிறைக்கே. (௭௩)

(இ-ள்) மொய்தரு பூதமாதி மோகினி யந்தமாகப் பொய்தரு சமயமெல்லாம் புக்குநின்றிடும் புகன்று — செறிதலைப்பொருந்திய பூதங்கள் முதலாக மோகினி யென்னும் பெயரையுடைய மாயை யீறாகப் பொய்பொருந்தப்பட்ட புறச்சமயங்களெல்லாம், அவரவர்கள் கொண்ட கோட்பாட்டையே பரத்துவமெனக் கருதி, இவையொழிய வேறில்லையென்று சொல்லிக்கொண்டு; அந்தச் சமயங்களிலே நின்றனுட்டித்தவர்களுக்கு அந்த முத்தியை யடைவிக்கும்.

மெய்தரு சைவமாதி யிருமூன்று மவித்தை யா — சத்தியமாயுள்ள பொருளையுடைய சைவம், பாசுபதம், வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம் எனக்கூறிய வுட்சமயமா

தி யெய்துகத்து வங்களையும்

றும்; சுத்தவித்தை முதலிய தத்துவங்களைப் பொருந்தியிருப்பர்கள்.

ஒன்றுமின்றெ ம்பிறைகக்கே

இங்ஙனஞ் சொல்லிப்போந்த சமயங்களெல்லாவற்றிற்கும் பெருமையுடைய சித்தாந்தத்தினையனுட்டித்தவர்கள் முப்பத்தாறு தத்துவத்துக்கு மேற்பட்டிருக்குஞ் சிவமாகையால் மிகச் சிறப்புடைத்து. எ-று.

வியாழபகவான் சொல்லிய லோகாயத சாத்திரஞ் சொல்லும்படி, பிருதிவிமுதல் நாலுபூதங்கள் கூட்டரவானுண்டானவுடலே யானமாவென்னு ஞானத்தினாலே மேலான வாயுபதத்தை யடைவது மோட்சமென்பர்கள்.

சோதிடர்கள், அந்தநாலுபூதத்துடனாகாச தத்துவமுமுண்டென்றும், புருடனு மனுதியே காரிய காரணங்களினாலே பிரவாகமாயிருக்கிற சங்சார பந்தங்களு மனாதி. சரீரத்தினுடைய துக்கநிவிர்த்தியினால், விசிட்டமான கன்மத்தினாலே நல்ல சரீரத்தையெடுத் தந்த தேகாந்தத்திலே தாரகாபதத்தை யடைகிறதுதானே மோட்சமென்பர்கள்.

சௌளயாமளாதி சாத்திரிகள், இங்கை மைதுனாதியே புருடனுக் குய்த்த பிரயோசனமெனப் புத்திபண்ணி, ஐந்துபூதமுஞ் சத்தியமெனக் கருதி, அதுவே யானமாவெனக் கருதிய ஞானத்தினாலே யாகாசத்தில் பைசாச பதத்தை யடைவர்கள்.

சிலர், அக்னி சூரியன் இந்திரன் முதலாயினரையே வழிபட் டவர்கள் பதத்தை யடைந் தவர்களைப்போல விருக்கின்றதுதானே மோட்சமென்பர்கள்.

இவர்க்ளெல்லாரும் பூததத்துவ வாசிகளென வறிக.

மனுமுதலிய பதினால்வரும் பண்ணின மிருதிவழிநின் றனுட்டித்தவர்கள், பூதாண்ட காரணமான தன்மாத்திரைதானே பிரமமென்னு ஞானமுண்டாகையா லவர்க டன்மாத்திரையை யடைகிறதே மோட்சம.

சைமினிபகவான் சொன்ன கன்மமீமாஞ்சகர், ஆன்மா நித்தியமென்றுஞ் சுருதிவிகிதமாயிருக்கிற கன்மத்தினாலே ஸ்வர்க்காதி போகங்களைப் புசித்திருப்பர். அவர்கள் நித்திய நைமித்திக கன்மானுட்டானத்தாலே பரகதி யுண்டென்கையாற் றன்மாத்திரை யடைகிறதே முத்தி.

இந்திரிய சைதன்னியவாதிகள், சரீரத்துக்கு வேறாயிருக்கிற விந்திரியமே யான்மாவென்னும் ஞானத்தினாலே யந்த விந்திரியத்தை யடைகிறதே முத்தி

சிலர், அந்த விந்திரியத்துக்குக் காரணமான மனத்தானே யான்மாவென்னு ஞானத்தா லந்த மனத்தை யடைகிறதே மோட்சமென்பர்கள்.

சிலர், வித்தை மிருதி ராகம் துவேஷம் அபிநிவேஷம் என்று சொல்லப்பட்ட பஞ்சக்கிலேச தாடிதமான சித்தந்தானே சைதன்னியங்களி னிருபாதியமாகி, நானென்கிற பிரத்தியடரூப ஞானத்தினாலே சித்தத்தையறிந்து நீங்குகிறதே மோட்சம்.

அகங்கார சைதன்னியவாதி, அகங்கார வியாபாரமாயிருக்கிற பிராணாதியான வாயுக்களை யான்மாவென்னு ஞானத்தினாலே யதனையறிந்து அத்தத்துவத்தை யடைவதே மோட்சம்.

நியாயவைசேஷிகஞ் சொன்ன அக்ஷபாதர் கணாத ரிவர்கள், பிரமாணாதி பதினாறு பதார்த்த விவேக ஞானத்தினாலு மகங்கார தத்துவத்தை யறிந்தடைகிறதே மோட்சம்.

சுத்தா சொன்ன பௌத்தம், புத்தியினுடைய வியாபார சொரூபமும் புத்தி நிச்சயமாயிருக்கிற ஞானத்தை ஜலப்பிர

வாகம்போல நித்தியமாக வனுபவிக்கப்படாநின்ற ஞானசத்தி, சுகதுக்கப்பிரதிசமின்றியே சுகத்திற் சந்ததியே யான்மாவென்றறிகையால், இருபத்து மூன்றாந் தத்துவமாகிய புத்திதத்துவமே பிரதானமெனக் கருதியிருக்கிற ஞானசத்தி நசிக்கவே மோட்சம்.

அருகசாத்திரஞ் சொன்ன அருகதேவன், ஆதிசுத்தனாயிருப்பவனென்றும், சீவனென்பதொரு பதார்த்த மநாதியாகவுடைய மோகம் அந்தராயம் கோத்திரம் நாமம் ஆயுஷ்யம் வேதநீயம் தரிசனாவர்ணீயம் ஞானாவர்ணீயம் என்று சொல்லப்பட்ட பேதங்களெட்டினுங் கூடியிருக்குமென்றும்; இந்தத் தோஷங்கள் தாரசின சிலாசம்பன்னியான தபசுகளாற் போகப் போனவனெவ்விடத்தெப்படியிருப்பனெனில்? இருப்புக் கூட்டுக்குள்ளே சுரைக்குடுக்கை யிருந்தபோது நீருக்குள்ளே மிழ்ந்தும், அஃதில்லாதபோது மிதக்குமாறுபோல அப்பொழுது கருமங்களைப்போலப் பந்தங்களை விடப்படுவன இவ்வனேகாந்தவாதியாகையால் இப்பொருள்களுண்டோ வில்லையோவென்று கேட்டால், உண்டெனவு மில்லையெனவு மாமென்று சொல்லப்படாதென்றும், உண்டென்றுஞ் சொல்லப்படாது இல்லையென்றுஞ் சொல்லப்படாது உண்டென்று மில்லையென்றுஞ் சொல்லப்படாதெனவுமாம் என்றுசொல்லும். இப்படியே சத்தபங்கியாகிற வத்திரத்தையு முடையனாய்க் குணத்துவத்துக்குமேலுண்டான போகமனுக்கில்லாதபடியாலே குணத்துவத்தை யடைகிறதே மோட்சம்.

உலோகாயதம் பௌத்தம் ஆருகதமாகிய மூன்றும் வேதத்துக்குப் புறம்பாகையான முதற்கண் வைத்தார்

மீமாஞ்சகம் நியாயவைசேடிகம் சாங்கியம் பாதஞ்சலம்

பாஞ்சராத்திரம் வேதாந்தம் இவ்வாறும் வேதசம்பந்த மா
தலாற் பின்னர்க் கூறினார்.

பதஞ்சலிபகவான் சொன்ன பாதஞ்சல சாத்திரம், பிரகி
ருதியும் பிராகிருதமும் ஆன்மாக்களும் பந்தமோட்சமா யிருக்
கும், இந்த ஞானத்தாலு மாதிபோகமும் யோகபரிபாகமு மெ
ன்று மிருபத்தாறு தத்துவமாக வீசுரனொருவனுளன். இவனுக்
கான்மாக்களிற் காட்டில் நின்மலமான சித்தமென்று பெயரை
யுடையதாய், கேவலஞ் சாத்துவிகமான விக்கிரகத்தை யுடை
யராய், ஆன்மாக்களுக்கு ஞானோபதேசகரா யிருக்குமென் றறி
கையே முத்தியாதலால், புருடதத்துவப் பிராப்தியே பின்னர்க்
கூறினானென வறிக

வாசுதேவர் சொன்ன பஞ்சராத்திரம், குணதத்துவத்து
க்குமே லிருபத்தைஞ்சாந் தத்துவம் வாசுதேவனென்ப தொருப
தார்த்தமே பரதத்துவம், அந்தப் பரதத்துவத்தினின்றுஞ் சிருட்
டினை அநிருத்தன் மகாதத்துவசன் இளைகிணையன என்று
நாலு கூட்டமாக ஜகத்தையுண்டாக்கிற நிமித்தமாகப் பிறக்
கும். இந்த நால்வராலுஞ் ஜடமாயு மஜடமாயும் வருகிற வித்த
வஸ்துக்களெல்லாஞ் சிருட்டிப்படும். அந்தப் பிரகிருதியைச் சி
த்துக்கு மசித்துக்கும் வேறாகவறிந்து அந்தச் சாத்திரத்தின்வழி
தீக்கையைப்பெற்று நாராயணனைப் பூசைபண்ணி யந்தச் சொ
ரூபத்திலே லயிக்கிறது மோட்சம்.

கபிலர்சொன்ன சாங்கிய சாத்திரம், பிரகிருதி நித்தியம்
அவ்வியாபகஞ் ஜடரூபமா யெல்லாத்துக்குங் காரணமாய்
சத்துவாதி குணங்களின் சாம்யமான அவ்யக்த மூர்த்தமாயிரு
க்கும் பிரகிருதியிற்காட்டி லன்னியராய் நித்தியராய் வியாபக
ராய் மூர்த்தரா யறிவானவ ரறிவுமாத்திரமாயிருப்பார்கள்.
ஆன்மாக்க ளிவர்களை யிருபத்தைஞ்சாந் தத்துவமென் றறிக

விவேகஞானத்தா லிவனிடத்துண்டாய விவற்றைப் பெற்ற மோட்சமென்றும், ஆன்மாவைக் காட்டி லன்னியமாக வீசுரனென்றொருவனில்லையென்றும், சிலர் பிரகிருதிவசத்தாற் காரியத்தினிடத்திலே சொன்ன பரமகாரண புத்தியைப் பண்ணுகையாலும், இவர்களுக்குக் குணதத்துவத்துக்கு மேலுண்டான தத்துவமில்லாதபடியாலும் புருடதத்துவப் பிராப்தி.

வேதாந்திகள், பரமபிரகிருதியாகிய பிரமமே பரமார்த்தமாகவுள்ளது, இந்தப் பிரமத்தினிடத்திலே நின்றும் சீவான்மாக்களும் பிரபஞ்சமுந் தோன்றும். மற்றுண்டானதெல்லா மசத்தியம், அஃதெனபோலவெனனில் ? சுத்திகையினிடத் திரசதபுத்தி பண்ணுமாறுபோல ஜகத்துக் குபாதான மாயையென்பது தான் பிரமத்தைப்போலச் சத்தியமுமன்று, சசவிஷாணம்போல வசத்தியமுமன்று, இம்மாயைக் காட்டில் இலக்கணமான பிரமசொரூபத்தை வேதாந்த ஞானத்தினாலே யறிகையாற் புருடதத்துவப் பிராப்தியை யடைவதே மோட்சம்.

வேதவியாசர் சொன்ன இதிகாச பாரத பௌராணியர்கள், இந்தப் புராணத்தி லிருபத்தைஞ்சாந் தத்துவமாக வான்மாவையும், இருபத்தாறாக வுருத்திரனை, இருபத்தேழாந் தத்துவஞ் சிவனென்றுசொல்லி, இப்படியே பதார்த்த விவேகம்பண்ணியறிகிறதே முத்தி. இவர்களுக்கும் புருடதத்துவப் பிராப்தி. இச் சைவ பௌராணிகர், பிரகிருதி முதலிய தத்துவ சமூகங்களைப் பிரகிருதி புருடராலே யதிட்டிதாவாக வறிந்து, அதற்கு மேற்பட்ட வீசுவரனைச் சாலோகாதியான கணேசுரபதப்ராப்தியை யராகதத்துவத்தி லடைந்திருக்கிறதே மோட்சமென்பர்கள்.

பாசுபத சாத்திரம், ஆன்மாக்கள் பலராய், வியாபகரூபமாய், நித்திய ரூபமாய், காரியகாரண யோகத்தாலே பிரத்து

ஞானத்தையுடையராய், ஒருவர்க்கொருவர் பின்னமாயிருப்ப
ர்கள். இவர்களுக்கு மாயாமலமன்றி யாணவமலமில்லை. இந்த
மாயா மலத்தாலுங் கன்ம பாசத்தாலுங் கட்டுப்பட்டதனாலே
யிருவினைகளையும் அனுபவித்து வைராக்கியம்பிறந்து, இந்தச்சமய
சாத்திரம் பிரசாபத்திய முதலிய பதினாறுளே யொன்றின்வழி
தீக்ஷையைப்பெற்ற வான்மாக்களிடத்திலே சிவனுடைய ஞா
னமானது சங்கிரமிக்கும். அஃதெனபோல வெனின்? யாதா
மொரு புடைவையிலே யோலைப் பூமுதலியவற்றைப் போட்டு
வைத்துவிடத் தந்தவாசனை யதிலே பற்றினாற்போலச் சிவனிட
த்துண்டாய ஞானமுங் குணமுமுண்டாம். இவனிடத்திலே
கொடுத்தா லவனென்ன செய்வானெனின்? புத்திரனிடத்தி
லே குடும்ப பாரத்தை வைத்துத் தானசனியாசம் பண்ணு
மாறுபோலச் சிவஞானனுடைய வதிகாரஞ் செய்கிறத்திலே
யுபாதிபிறந்திருப்பன. இந்த ஞானத்தினாலே மாயையைப்
பொருந்தி யிருப்பர்கள்.

மாவிரத சாத்திரம், ஆன்மாக்களை முன்புபோலக் கொ
ண்டு ஆணவங் கன்ம மாயை இம்மூன்றையுங் கொண்டு ஆன்மா
க்களுக்குச் சங்காரதிசையில் ஞானசத்தி யுள்ளதாய்க் கிரியாச
த்தி யில்லையென் றினி வைராக்கியம்பிறந்து, இந்தச் சமயசாத்தி
ரமாகிய லயாருண முதலிய வொன்பதிலொன்றின்வழி தீக்ஷித
ராய்; அதன்வழிநின் றனுட்டித்தவாறே சித்தாகிய சிவனிடத்தி
ன மலத்தையுடைய வான்மாத் தோயுறுமென்னு மதியுண்டா
கையால் வித்தியாதத்துவத்தைப் பொருந்தி யிருப்பர்கள்.

காபாலசாத்திரம், முற்கூறினபடியே யான்மவிலக்கண
மும் பந்த விலக்கணமு முன்னென்றும், அந்தக் காபாலர்க்
குப் பஞ்சருசாத்தமுதலிய சாத்திரங்கள் பதினாறு ளொன்றி
ன்வழி தீக்ஷைபெற் றதன்வழிநின் றனுட்டித்தவர்கள், இருவ

னைப் பேயானது பிடித்தவிடத் தெப்படி யவன் வசமின்றி யாவேசத்தின் வசமாக விருக்தாற்போல, இந்த வானமாவிடத்தே சிவனுக்குண்டான சர்வஞ்ஞத்துவாதி குணங்களு மப்படி யாவேசிக்கு மறிவை யுடைத்தாகையான, மாயையி னதோபுடத்தைப் பொருந்தியிருப்பார்கள்.

சுத்த வாமதந்திரம், இந்தச் சத்தித்துவத்தில் நிவர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி இந்நாலு புவனத்திலேயே, சதாசிவ நாதனுருடைய வதோமுகத்திலே, கிழக்கு முதலாகக் காருடந் தட்சிணம வாமம் பூதந்திராவுடனாதாவாகச் சத்தித்துவ நிர்வயமாதலால் சாதாக்கிய தத்துவத்தி லிருப்பர்களென வறிக.

சிவனதுமேலான முகத்திற் றோற்றிட சித்தாந்த மிருபத்தெட்டுந் திவ்வியாகமங்கள, இம்முப்பத்தாறு தத்துவத்தையு மங்கீகரிக்கையால்; எமதுகாத்தா விவாகளைப்போ லனந்த தத்துவாதீதமெனவறிக.

இதனை யாகமங்களிற் பேதித்துக் கூறும். அஃதாகமப்பேதத்தால் வந்ததெனவறிக. (௭௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேலு நாலுபூதங்களுடைய கூட்டமாகியாக அந்யசமயிகள்நிற்குந் தத்வங்களை யுரைத்ததல்.

மொய்தரு பூதமாதி மோகினி யந்தமாகப் பொய்தரு சமயமெல்லாம் புகலுறுநின்று புகலும்-நாலுபூதக் கூட்டங்களாதியாக மோகினியாகிய அசுத்தமாயா தத்துவங்களுக்குள்ளே அந்தத்திலே யுண்டான புருஷதத்துவ பரியந்த மளவாக விவ்வளவே தத்துவமென்றும், இந்தத் தத்துவங்களி லதிஷ்டாக

தேவதையை பரதத்துவமென்றுஞ் சொல்லி, அதற்கேற்ற சாஸ்திரமார்க்கத்திலே நின்று; தேகாந்தத்திலே யந்தந்த தத்வங்களை யடைவார்கள். அநதந்த தத்துவஙகளை யடைந்தபேர் காலாந்தரத்திலே திரும்ப ஜநிக்கையினாலே, அந்தமுத்தி பொய்யே ஆகையால்; பொய்தரு சமயமென்றது.

மோகினியுகத மென்றதற்கு அசுத்தமாயாந்தமாக முப்பத்தொரு தத்துவமு மெனனப்போதும், புருஷதத்வ மட்டென்று சொல்லவேண்டுவதில்லை யென்னில்? புருஷதத்துவத்துக்கு மேல் சததிநிபாததத்தை யுடைத்தாய், அதனாற் சிவதீட்சையைப் பெற்று சர்வஞ்ஞததுவாதி † யபிவியத்திபான பேருக்கே பிராப்யமெனனும் ஆகமவசனத்தால் அசுத்தமாயாந்தமெனபது விருத்தம்.

†அபிவியத்தி-பிரகாசம்.

𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 - 𑌨𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌂
𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑌿𑌵𑌃 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑍋𑌪𑌰𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌿𑌵𑌸𑍍𑌤𑌂
𑌤𑍍𑌰𑍇 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌹𑍍𑌯𑌤𑌃 ॥ 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿
𑌶𑍇𑌷𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌸𑌾𑌧𑌨𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌚𑌾𑌸𑍍𑌯
𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌪𑍋𑌯𑌯𑌤𑌨𑌾𑌦𑍃𑌤𑌃 ॥ 𑌶𑌿𑌵𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌦𑍀𑌨𑍋𑌦𑌿𑌤
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌭𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌪𑌦𑌂 । 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑍀𑌯𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾
𑌨𑌂 𑌶𑌿𑌵𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂
𑌶𑍈𑌵𑍇 𑌨𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌂.

ஆகையால் புருஷதத்துவ மந்தமென்னுமல் மோகினி யந்தமாகவென்று மூலபாடத்திலே சொன்னது, மோகினிகாரிய

ங்களுக்குள் அந்தமான புருஷகத்துவ பரியந்தமென்று ஆகுபெ யராகக் கூறியது.

பொய்தரு சமயிகளடையும் பதமு மதற்கேதுவான ஞா னபேதங்களுமாவன? புத்திப பிரகாச பேதத்தினாலே யுண்டா ம் ஞானம் பதது விதம். அவர்களுக்கு † பிராப்ய ஸ்தானமு ம்பதது விதம். அவையாவன?

† ப்ராப்யம் - அடைதல்.

சார்வாகா-பிருதிவி யப்பு தேஜோவாயு வித்து நாலுபூத மே யுடையதென்றும், இந்த நாலுபூதத்தினுடைய சம்யோகத் தினாலே தேகமுண்டாம், அந்த தேகத்திலே போரறிவுண்டா ம்; அந்ததேகமே ஆன்மா என்பதாகிய ஞானத்தினாலே தேகாந தத்திலே பூதத்தை யடைவாகள்.

ஜ்யோதிஷர் - ஆகாசத்தை கூட வைந்துபூதமே யுள்ளதென் றும் ஞானத்தால் தேகாநத்திலே நட்சத்திர பதத்தை ய டைவர்கள்.

கௌளயாமளரும் வாமதக்ஷிண மார்க்கராகிய சாகத கா பாலிக காளாமுகரும் ஈஸ்வரனுண்டென்றும், வேத ¶விருத்தா சாரத்தினாலே பௌதிகமாகிய பிசாசபதத்தை யடைவார்கள்.

¶விருத்தாசாரம் - பெரியோர்நடைக்கு விரோதநடை.

*பௌராணிக ஸ்மார்த்தர்-பூதாண்டத்துக்குக் காரண மான பஞ்சதன்மாத்திரையே பிரமமெனனும் ஞானத்தினாலே தேகாநதத்திலே தன்மாத்திரையிலுள்ள புவனத்தை யடை வர்கள.

*பௌராணிகர் - புராணத்தை முக்கியமாகக் கொண் டவர்.

இந்திரியான்மவாதிகள் - ஞானேந்திரியமே ஆன்மாவென்

னும் ஞானத்தால் தேகாந்தத்திலே அந்த இந்திரிய பதத்தை யடையவார்கள்.

நையாயவாதிகள்-மனசு பரிபந்தமே தத்துவமென்னும் ஞானத்தால் தேகாந்தத்திலே மனஸ்தத்துவ புவனத்தை யடைவார்கள்.

வைசேஷிகர்-அகங்காரமே ஆன்மாவென்னும் ஞானத்தால் தேகாந்தத்திலே அகங்காரபுவனத்தை யடைவர்கள்

பௌத்தர்-ஞானவிருத்தியாகிய புத்தியே ஆன்மாவென்னும் ஞானத்தால் தேகாந்தத்திலே புத்திதத்துவ புவனத்தை யடைவர்கள்.

ஆருகதர்-குணமாக ஞானத்தினாலே தேகாந்தத்திலே குணத்துவத்தை யடைவார்கள்.

பாஞ்சராத்திரிகள்-பிரகிருதிக்கு மேல் பரமபதத்திலே அரியிருப்பா, அவருடைய சர்வகுண சாமமிபத்தை நித்தியமாகப் பெற்று அவருடைய சந்நிதானத்திலே யிருப்பதே மோக்ஷமெனனும் ஞானத்தால் தேகாந்ததிலே பிரகிருதி தத்துவத்தை யடைவாகள்.

சாங்கியர்-பிரகிருதி புருஷ விவேகத்தைப் பண்ணி புருஷன பிரகிருதியை நீங்கிநிறபதே மோக்ஷமெனனும் ஞானத்தால் தேகாநததிலே புருஷதத்துவத்தை யடைவர்கள்.

மாயாவாதிகளும-பிரதானத்திலே ¶ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற தனனை அந்த ○பிரதானத்துக்கு கயமான புருஷனாகு னென றறிகிறதே மோக்ஷமெனனும் ஞானத்தால் தேகாந்தத்திலே அந்த புருஷதத்துவததை யடைவர்கள்.

¶ஆக்கிரமித்தல் - அடக்கிக்கொள்ளுதல், ○பிரதானம்-பிரகிருதி.

கர்மயோகிகளும்-அப்படியே! இவர்களுக்குண்டான ஞான ஹேதுவு மெட்டுவிதமாம். அவையாவன?.

ஆதியாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகமெனப் பட்ட தாபத்திரயத்தையு மறிந்து நீங்கினவிடத்தி லுண்டாம் ஞான மொன்று.

இஷ்டமா யிருக்கிறவர்களுடைய உபதேசத்தினாலே யுண் டாம ஞானமொன்று.

தானே பூர்வஜன்ம வாசனாரூபமான சாஸ்திரத்தை ஆ லோசனைப் பண்ணுகையினாலே யுண்டாம் ஞானமொன்று.

தந்தம் மதப்பிரவிருத்திகளா யிருக்கிற குருபதேசத்தினா லே யுண்டாம ஞானமொன்று.

†குருமுகேநாசாஸ்திரார்த்த ¶த்தியயா வசத்தினாலே யுண் டாம் ஞானமொன்று.

தான ஜப தீர்த்த யாத்திரா தேவதா பக்திபாதி சத்க ருமங்களினாலே சித்த சுத்தித்துவாரா உண்டாம் ஞானமொ ன்று.

இந்த வெட்டுவிதத்தினாலும ஞானம் சித்திக்குமெனகி றது.

முன்சொன்ன தசவிதமுத்தி ஸ்தானத்தி லவர்களுக்கும் சரி.—

†குருமுகேந- குருமுகமாக, ¶அத்யயனம் - அட்டசித்தல்.

[illegible]

அந்யத்ராபி - ஸமுத்தநாத்ர காங்க்ஷாணீதி நா
மாகாரபரிஸய: | முணவ்ருக்த நரா சைவஸ்ய ப்ரா
வ்ருஷ்யா நாமியாத்நாஸ் || தத்ர தத்ரார்த்தபரிசைவ்ர
வஹித்ருசேதவிஷயஸ்த இதி | ஆவர்ாகஸம்பத ஸம்வி
ஜாயதோஸம்பதார்த்தவாதிந: || ஜ்யோதிஷ்ப்ராஸ்ய வித்ஸ்த
அஸ்ப்ராவர்ம் தாராவர்ணயத: | களேஹோஸ்ய வா
ந்தவாசேந விநாசிகாந்தஹாளிகா || இதி.

அந்யத்ராபி - சார்வாகா: கௌலிகா ஜ்யோதிஷ்ஸா
ஸஜாதிஸ்யஹாஷிதா: | வாசஸ்பதிண ஜாமுஷ்யா: வி
த்ருஸ்ஸா சார்வஷ்யிதா இதி.

பௌஷ்கரே - தஞ்சாந்த்ராஸிஜாத்ராஸ்ய வக்ஷ்ராரா
ஜீம்ஜீர்யாவரிர | வைசேஷிகாஸ்ஸாங்காஸ்ரஜஸ்ஸா
ந்த்ராயவாதிந: || பாஷிதகேவ்ஸ்யதாஸௌஜாமணே
ஷவாஸதாஷ்யிதா: || ப்ராகஸ்ரதா: வாஞ்சராத்ரா
ஸ்ஜந்த்ரம்தே ப்ரக்ருதேளமர: | வேதாஷஜாஸ்ய
ஸாம்வ்ராஸ்ய யோகிந: பரமேஷ்யிதா: || ஏதா
ஸ்ஸ்வாயிஹேசந ஸித்தேவநரஷ்யா | ப்ரா
க்ஸ்ஸ்கார ஸ்மேஸேநம ரம்வம் ஜாநம் ப்ரவத்த
தே | ஸைகாசஸ்வத்ரயேணஸ்ராக் ஸிதிஸித்தி
ஹிதஸ்யக் || தத்வாதத்ரயோஜாநத்ரயம்த்ஸ்ர
ஸம்ஸிஜய: | ஸம்ஸ்ரதா தம்பதேசேந தத்வஸ்கா

விஶிஷ்யதே ॥ ஸூக்ஷ்மஸித்தி விஶேஷாஸித்திர்த்தேஷாம
விஷயஃ । அஶேஷாஶீக்ஷிஸம்வேத்யதாம் விஷயவாஸநா
ஸதஜதி.

மெய்கருஞ் சைவமாதி யிருமூன்றும் வித்தையாதி மெய்த் தத்துவங்களையும்- (இதற்குப் பொருள் கோள்) அறிவிருமூன்றும் வித்தையாதியும் மெய்த்தத்துவங்கள மெய்தருஞ் சைவமெய்தும்-புருடதத்துவத்துக்குமேல் விராகமுதலான வாறுதத்துவங்களையும, சுத்த வித்யாதத்துவ முதலாகப் பொருந்தும் அஞ்சுதத்துவங்களையும், சற்பமோக்ஷத்தைப்பெறுஞ் சைவர் உண்டென்று சாதித்தனின்று, தேகாந்தத்திலே பசுத்துவத்துக் கேடாக அபரமுத்தி ஸ்தானமான விந்துதத்துவங்களைப் பொருந்துவர்கள

×தீவரசத்தி நிபாதராய் குருவினாலே நாரசித்திர ருணரகிதமுமாய் ஆதாரமுமனறியிலே ஏகாந்தசேந்திரியங்களினாலு ம கிரஹிக்கப்படாததுமாய் — அநுமாநா கம்யமுமாய சர்வ தத்துவா தீதமுமா யிருப்பது யாதொன்று, அதிலே+ யோசிக்கபபட்டவன பரமுத்தனென்று சைவாகமசித்தம.

×தீவர-வேகம, —அநுமாநா கமயம - அநுமானத்தினால் அறியப்படாதது, +யோசிக்கபபட்டவன-கூட்டப்பட்டவன

ததுக்தம் ஸ்வாவகாஶிகாயாம் - ஸத்ராம்வேதாந்தா
ஶம்பவே ஸூத்ராம்ஶே ஹ்யாநவஜ்ஜிதே । நிஸ்ஸ்ரேய போ
ஜிதோஜூக்தந்தி ஸாஸ்த்ரஸ்ய நிஸ்பாயதந்தி.

சிவதத்துவம் சிவனுக்கே தத்துவமொழிய ஆன்மாக்களுக்கு பிராப்பியமொழியச் சோதியமான தத்துவமல்லவெனவில்?—

ஒன்றுமின் றெம்மிறைக்கே-எம்முடைய பதியாகிய சிவனுக்கு ஒருதத்துவங்களுமில்லை; அவன் தத்துவாதீதனென்ன நிதனைபொருளா.

சைவமாதி யிருமூன்றும விரதையாதி என்ற பதத்துக்கு, சைவம் பாசுபதம் வாமம் காளாமுகம் பைரவம் மகாவிரதம் என்றிந்தவாறு சமயங்களும், சுத்தமாயைக்கு மேல் சுத்தவித்தையாகிய வைந்துதத்துவத்தையு மடைவார்களென்ன வாகாதோவெனனின்? ஆகாது. அப்படிச்சொல்லில் சிவாகமவிருத்தம். அதெவ்வாறெனனில்? வாமமாகிய சாகதரும், தட்சிணமாகிய காளாமுகரும்,பிசாசபதத்தை யடைவரென்றும; பாசுபதிகள் அசுத்தமாயா தத்துவத்தை யடைவரென்றும் ஆகம வசன மிருக்கையால்

தக்ஷூப் பௌக்ஷமே - வாமதக்ஷிண காமுக்யாஃ வி
ஶாசாஸ்வத்விதாஃ || பாஶுபதாஸ்து மாயாயாமிதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மறுசமயிகள முத்திததானங்களை வகுத் துரைக்கின்றார்.

பொய்தரு பூதமாதி மோகினி யந்தமாக - சுட்டமாயிருக்கின்ற பிருதிவி முதலிய பூதங்கள் முதலாகக் காரிய லக்ஷணை யிருமேல மோகினியென்று சொல்லப்பட்ட புருஷதத்துவ முடிவாக; பொய்தரு சமயங்கட்கு புருஷதத்துவத்துக்கு மேற் பிரவேசமில்லாமையால், மாயைமட் டென்றால் மாறுபடும் — பொய்தருஞ் சமயமெல்லாம் புக்குநின்றிடும்-உலோகாயத மத முதல் விவர்த்த வேதாந்த மீறுகு முத்திப்போலி, புறச்சமய

னெல்லாம் பிரவேசித்திருக்கும்.—புனற மெய்தருஞ் சைவமாதி யிருமூன்றும்-சிவனே தெய்வமென்று கொள்ளலாற் சத்தியமாகுஞ் சைவம் பாசுபதம் மகாவிரதம் வாமம காளாமுகம் வயிரவமென்கின்ற வுட்சமயங்களும, அதிற் பேதங்களும்,—வித்தையாதி பெய்த தத்துவங்களையும - சுத்தவித்தைமுத லிராக தத்துவாந்தம மத்தியதீபமாதலால், இரும்பவெடுத்துச் சுத்தவித்தையாதி சிவாந்தமாயிருக்கின்ற தத்துவங்களில்; மகாவிரதி முதலாய்ப பொருந்துவாகள் — ஒன்றுமின றெம்மிறைக்கே - எமது கர்த்தாவின்று சைவசித்தாந்த மார்க்கத்துக்கு.

“சகளே நிஷ்களேசைவ ஸர்வதாவஸமாநதா
ஸாயுஜ்யமிதி தத்புரோகதம ஸாரூப்ய மூாதத்ரல்பதா”

என்று சிந்திய விசுவ சாரோக்கிய வசனமிருக்கையால், சகள சகளாகள நிஷ்கள நிஷ்களாதீத சிவமான ஸ்வரூப மொன்றுமே மோக்ஷமல்லாமல், சடதத்துவங்களினது சமபந்தமொன்றுமில்லை யாமே! இப்படி முற்றெருப்புச சிவசாமியமாகில்,சிவ னிலய போக வதிகாராவஸ்தைகளை யடையுமபோது வராஜிகப படாதாகையால்,முத்தசிவாணமாவு மடைய வேண்டுமாதலால், பஞ்சகிருத்தியம பண்ணவேண்டும பண்ணுவனென்றுற் பண்ணுனென்றும் வெகுவசன விரோதம.சத்தியநகாமே; நீசாற்றியது;விரோதமில்லாமல் விளம்புவோங்கேள். முத்தானம சிவனிடத்திற் கிரமத்திற் கர்த்திரு சத்தியில்லையெனறால்.

“சித்வ்யக்த்யா சர்வகாத்ர்த்வம் சித்தாநா மீச்வரோயதா
அநயதாகர்த்ருதாநஸ்யா தீஸ்வரஸ்யாபிஸித்தவத்”

இதி மோக்ஷகாரிகா வசநத்திலுலே, கர்த்திருத்தவஞ் சிவனுக்குமில்லையாய்,ஸ்வரூபாங்கக் குறைவருமாதலாற் கர்த்திரு சத்தியுண்டு. அது சர்வகர்த்திரு சத்தி யல்லவென்னில்? சிவனது கர்த்திரு சத்தியுஞ் சர்வகர்த்திரு சத்தியல்லவாமென்று

சர்வகிர்த்திய மில்லாதே போம். ஆகையால், முத்த சிவான்மாவிடத்திலுஞ் சர்வகர்த்திருத்துவ சத்தியுண்டு. அப்படி நீருண்டென்று சொல்லில்? சிவனாலேவப்படா னென்றுகொண்டு, சிவனுக்குச் சர்வகர்த்திருத்துவ பங்கம்வரும். 'முத்தாணூனபாதி' எனனும் வசனவிரோதமும் வரும். அதில்லை, ஏவயோக்கியனையேவாதிருந்தாற் சர்வகர்த்திருத்துவ பங்கம். மலமில்லாமையால் ஏவயோக்கியனல்லாமையால், அதுவில்லை. ஏவயோக்கியமல்லானையேவினாற் சிருட்டிமுதற கிருத்தியமவனைக் குறித்து வருமென்றதனாற் சிவனுக்குச் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும். அதனாற்சர்வகர்த்திருத்வ பங்கமுந்தானே வரும. "முத்தாணூனபாதி" எனபதற்கும பொருள், அபரமுத்தர்களை ரக்ஷிப்பனென்று பொருளாதலால, வசனவிரோதமுமில்லை ஆகையால், முத்தசிவான்மாவுக்குஞ் சர்வகர்த்திருத்துவ சத்தியுண்டு சிவனுக்குப்போலவுண்டாகிலும் வியத்தமாகாதெனனில? முத்தனுக்கும் பெத்தனுக்கும் விசேஷமில்லாதே போம சத்தி நிரமசமாதலால் ஞானபாகத்தி லபிவியத்தியும், கிரியாபாகத்தி லனபிவியத்தியென்று சொல்லவும படாது. ஆகிலும், முனசொன்ன விருவருக்கும் விசேடமில்லையாமாதலால், அபிவியத்தி சர்வகர்த்திருசத்தி சிவனிடத்திற்போல, முத்த சிவான்மாவினிடத் துண்டு. சர்வகர்த்திருசத்திக கபிவியத்தியும, சர்வகிருத்தியத்திற் பண்ணுதலாகிய விழுதல. ஆதலால்வியத்தமானாலும், வியத்தமல்லாததுபோலப் பண்ணுமா சும்மா விருக்குமெனபதடாது பண்ணுமென்றால் பின்னசங்கற்பமில்லாமையால், அநேகேஸ்வர வாதம் வருவதுமின்று. பின்னைப் பண்ணப்படுமென்றால், சிவத்துவாபிவியத்திலக்ஷண ஸ்வப்பிரயோசனஞ் சித்தித்துப் போதலால், தனக்குப்பிரயோசனத்தின் பொருட்டுப் பிரவிர்த்திமானாகான். எக்காலத்து மிவைப்பற்றிருக்கும் சிவனெங்கும வியாபித்து, எக்

காலமு மிடைவிடாமற் பிறர் பிரயோசனம்பண்ணி வருதலால்; பிறர் பிரயோசனத்தின் பொருட்டுப் பிரவிர்த்தி மாறுகான். சர்வ கர்த்திருசத்திக் கபிவியத்தியுஞ் சர்வகிருத்தியத்திலுஞ் சங்கற்பமென்கின்ற விழுதலென்று முன்சாற்றினோம். இருப்பவது சிவசங்கரபத்தி னின்றுங் குறைத்துச் சுருக்கப்படாதாகையால், சிவனுக்குக் கிருபாசம்சித்த பஞ்சகிருத்தியம் முத்த சிவானமாவுக்குப பிரிந்த பின்னகிருத்திய பலமின்றிப் பின்னைபலர்ச்சநிய சஞ்சித்த பஞ்சகிர்த்தியமாகையால், விரோத வேற்றுமைகளின்று. இதற்குச் சிந்திய விசுவசாதாக்கிய முதலாகமங்களில வசனங் கேட்டறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி ஏழுசெய்யுளான நாலாவகூற்றைத் தெரித்துணர்த்துகின்றார்.

சாருவாகமுதல் ஐக்கியவாத சைவமீறாகிய புறப்புறச்சமயமும புறச்சமயமும அகப்புறச்சமயமு மெனனும் முக்கூற்றுச் சமயத் தெய்வங்களெல்லாம், பூதமுதல் அசுத்தமாயாதத்துவமீறாக, ஒவ்வொரு தத்துவங்களி னிலைபெறும. சிவாகமங்களுட் கூறப்படும் "ஏகனேக விருளகரும மாயையிரண்டு" என்னு மாறு பொருட்கும், உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படுந் தலையாகிய அறுவகைச்சமயத் தெய்வமாய் நின்ற அதிகார போக லயசிவபேதங்கள்; சுத்தவித்தை முதலிய ஐந்துதத்துவங்களுள் ஒவ்வொன்றி னிலைபெறும். சித்தாந்தசைவத் தெய்வமாகிய சுத்தசிவம், இம்முப்பத்தாறையுங் கடந்து நிற்குமென்பதாம்.

அமலனுதலைத் தெரித்துணர்த்தியவாறு.

அவ்வத்தெய்வங்க ணிலைபெறுந் தத்துவமே அவ்வச்சமயத்தார்க்கு முத்திததான மென்பதூஉம் இதனாற் பெறுதும்.

அவ்வவற்றின மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க் குணர்ச்சிசெல்லாமையின, அவ்வத்தத்துவத்தி னளவின்றி அவருக்கு மேற்சேறல் கூடாமை யறிக.

சமயதெய்வங்களைச் சமயமென வுபசரித்தார்.

இருமூன்றென்றதுமது.

ஆணவமலத்துண்மை கொள்ளமாட்டாத ஐக்கியவாதசைவனை நீக்குதற்கு மெய்த்தரு சைவமென்றும், ஆதியிருமூன்றென்றும், விசேடித்தார்.

பாடாணவாத சைவமுதற் சுத்தசைவமீறாகக்கிடந்த வேழனுள், பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேற்றுமை சிறிதாதல்பற்றி, அவையிரண்டனையு மொன்றாகவைத்து இருமூன்றெனத் தொகைகூறியவாறு.

இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாஞ் சிவாகமங்களோடு முரணுமென்றொழிக.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்தத்தத்துவங்கள், புறச்சமயத்துக்கு இத்தனை உட்சமயத்துக் கித்தனையென வருளிச்செய்கிறார்.

மொய்த்தரு பூதமாதி மோகினி யந்தமாகப் பொய்த்தரு சமயமெல்லாம் புக்குநின்றிடும் புகன்று — ஆன்மாக்களைக் கன்மத்துக் கீடாகச் செறித்துநிற்கிற பூதங்கள் முதலாக அசுத்தமாயை யீறாக, அசத்தியத்தைச் சத்தியமாகச் சாதிக்கிற புறச்சம

யங்களெல்லாம், இவையொழியவில்லை யென்றே சொல்லி, இ
வையிற்றிலே பொருந்திநிற்கும்.— மெய்தரு சைவமாதி யிருமூ
ன்றும் வித்தையாதி யெய்து தத்துவங்களையும - சிவனே தெ
ய்வமென்னுஞ் சத்திபதத்தை யுடைத்தான சைவமுதலான வுட்
சமயங்களாறும், சுத்தவித்தை முதலான சுத்த தத்துவங்க
ளெங்கையும பொருந்தும.—ஒன்றுமின்றேமமிறைசசே-அவனத
த்துவாதீத ரூபையாலே, இவையொன்றுமில்லை எமமுடைய க
ததாவுகரு.

இதனுறசொல்லியது, புறசசமயங் கொள்ளபபட்ட த
த்துவ முப்பததொன்று மெனறும, உடசமயங் கொளளப்ப
டட தததுவ முப்பததாறு மெனனு முறைமையு மறிவிததது.

"சுத்ததததுவம" "ஐநதுசுததம" "தததுவரூபம" "தத்
துவமென" "மொய்தரும" இவையஞசு திருவிருததமும ஆன
மாக்கள் செய்த கனமததைப் புசிக்கைக்குத தததுவ முபபத
தாறும் பலபிரகாரமாக நிற்குமெனறு சொலலியது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———0———

பொய்தரு சமயமெலலாம - சாருவாகன்முதல் ஐக்கியவா
த சைவமீறுகிய புறப்புறசசமயமும் புறச்சமயமும் அகப்புறச்
சமயமுமெனறு முககூற்றுச் சமயத தெய்வங்க ளெல்லாம,—
மொய்தரு பூதமாதி மோகினி யநதமாக - நெருங்கிய பூதமுத
ல் அசுததமாயாதத்துவ மீறுக,—புக்குநின்றிடும் - ஒவ்வொரு த
த்துவங்களி னிலைபெறும்.—புகன்ற மெய்தரு சைவமாதி யிரு
மூன்று-சிவாகமங்களிற் கூறப்படும் "ஏகனேனக விருள்கரும
மாயை யிரண்டு"என்னுமாறு பொருட்குமுன்மைத்தனமை வி
ளங்குகின்ற சைவமெனப்படும் தலையாகிய அறுவகைச்சமயத்

தெய்வமாய்நின்ற அதிகாரபோக லயசிவபேதங்கள்,— வித்தை யாதியெய்து தத்துவங்களேயும் - சுத்தவித்தை முதலிய ஐந் துதத்துவங்களி லொவ்வொன்றி னிலைபெறும்.— எமபிரைக் கொன்றுமின்றே - சித்தாந்த சைவத்தெய்வமாகிய சுத்தசிவ பிமமுப்பத்தாறையுங் கடந்து நிற்குமெனபதாம்.

இதனானே யமலனாகலைக தெரித்துணாத்தியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

சுதந்திரனாகிய பரமசிவன் றனது காருண்ணியத்தாற்
றனே நவவிதமான திருமேனியைக் கொள்வ
னென் றுணாத்துகின்றா

சிவஞ்சத்தி நாதம்விந்துச் சதாசிவன் றிகழுமீச,
னுவந்தரு ளுருத்திரன்றான் மாலய னென்றினொன்று
ாய, பவந்தரு மருவநாலிங் குருவநா லுபயமொன்று
ய், நவந்தருபேதமேக நாதனேநடிப்பனென்பர்.(எசு)

(இ-ள்) (சிவஞ்சத்தி நாதம்விந்து—ஏகநாதனே நடிப்பன) நிரதிகாரியான சிவனானே நிட்களம சகளம நிட்களசகள மென வானமாகக அறிவுகளுட் புலப்படுகையினபொருட்டொ னபது விதமான திருமேனியை யொன்றி லொன்றாகக் கொண்டு, பஞ்சகிருத்தியமாகிய பரமானந்த தாண்டவத்தை நடிப்பன. எ-று.

அநாதிமலமுத்தன் றனது சிற்சத்தி சன்னிதிமாத்திரத் திலே சிவத்தையும், இந்தச் சிவத்தினுயிரத்தொன்றிலே சத்தி யையும், அந்தச் சத்தியி லாயிரத்தொன்றிலே நாதத்தையும், அந்த நாதத்தி லாயிரத்தொன்றிலே விந்துவையுந் தோற்றுவி

ப்பன. அந்த விந்துவிற் பத்திலொன்றிலே சாதாக்கிய மூர்த்தி தோற்றுவிப்பன. அந்தச் சதாசிவமூர்த்தியிற் பத்திலொன்றிலே யீஶ்வரமூர்த்தியைத் தோற்றுவிப்பன. அந்த வீஶ்வரமூர்த்தியி லாயிரத்தொன்றிலே யுருத்திரமூர்த்தியையும், அந்த வீஶ்வரனுடைய கோடியிலொரு கூற்றிலே மாயனையும், அந்த வீஶ்வரத்திற கோடியிலொரு கூற்றிலே பிரமாவையும்; இப்படியே யொன்பதினமராகிய சாதிகாரியர்களை யடையேயுண்டாக்குவன.

இங்ஙனங் கூறிய திருமேனியைப் பிரித்தறியுமிடத் தருவநான் குருவநான்கு உபயரூபமொன்று

இப்படி மூவிதமாகத் திருமேனி கொண்டதனு லான்மாக்கட்குப் பிரயோசன மியாதெனில்? சிவமுதலிய நிட்களரூப நாலுஞ் சிவயோகிகள் தியானித்தற் பொருட்டெனவறிக. அந்த நிட்களமான திருமேனியை லிங்க பீடமாகப்பண்ணிப் பூசை செய்யப்படாதபடியாலே நிட்களமுமாயிற்று. பரமமான நிட்களந்தத்துசருக் கலையில்லாதபடியாலே நிட்களமெனறுர்.

அவயவங்களுடனே கூடியிருக்கையாற் சகளமெனறுர்.

பரமாகிய நிட்களமு மபரமாகிய சகளமுங்கூடி மிசிரமாயிருக்கையாற சகள நிட்களமெனறுர்.

ஒரு பொருளுக்கிரண்டு தன்மையுண்டாகி விதரோதராசிரயமென்னுங் குற்ற முண்டாமென்னில்? அஃதன்று. மரம்போலச் சகளம், அதினிழற்போல நிட்களம், அந்த மரத்தண்டாகிய பூச் சகளம், அதனை விட்டு நீங்காதிருக்கிற மணம்போல நிட்களம்; இவைபோற் சகளமு மகளமுங் கூடிற் குற்றமில்லையெனவறிக.

இந்தச் சகள நிட்களந் தானே போதாதோ! சகளமுண்டாகவேண்டுமோ வென்னில்? அது தாமிராதியான லோகத்தி

னும், காட்டமுதலிய வற்றானும், திருமேனிகொண்டு பூசைசெய்து, உச்சவாதிக் கெழுந்தருளி, அங்கங்கே யான்மாக்களை யனுக்கிரகஞ் செய்தற்பொருட்டுச் சகளமாயிற்று. நிட்களத்தினிடத்திற் சகளமின்மையானும் சகளத்தினிடத்து நிட்களமின்மையானு மொன்றுக்கொன்றேயுளதாகையால், அந்தச் சகள நிட்களத்தினிடத்தி லவ்விரண்டு முண்டாகையால், அதுவே சிறப்புடைத்தெனக் கருதித் தேவாகண முதலாயினோர் சிவலிங்கத்தையே தாபித்துப் பூசைசெய்தமையை யாகமத்தோதினார்; ஆண்டு விரிவிற்காண்க.

ஏகநாதன - எழுவாய், நடிப்பன - பயனிலை.

ஏகாரம் தேற்றம்.

இதற்குச் சுப்பிரபேதம் மகுடாகமம் காலோத்தாத்து மறிக (௭௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சகத்தோத்தியுக்தப் பிரவர்த்தகனொரு கர்த்தாவை திரிவிதமாகச் சொன்னதை, உபாதானோபாதி பேதங்களினாலே யொன்பது பேதமாமென்னு முறைமை கூறுதல்.

சிவமென்றுஞ் சத்தியென்று நாதமென்றும் விந்துவென்றும் சதாசிவமென்றும் விளங்கப்பட்ட ரூபத்தையுடைய மகேஸ்வரன் ருத்திரன் விஷ்ணு பிரமாவென நிவர்க ளொன்றிலே யொன்றாகத் தோன்றி, சிவம் சத்தி நாதம் விந்து நாலும் அரூபமும், மகேஸ்வரன் ருத்திரன் விஷ்ணு பிரமா இவர்கள் நாலும் ரூபமும், சதாசிவன ரூபாரூபமும், ஆக வொன்பது பேதத்தையும் சகத்தேகநாயகனாகிய சிவனொருத்தனே தனக்கு ரூபாதிகளில்லாதிருக்கவும், இந்த ரூபங்களை யதிஷ்டித்துக்கொண்

ரூபவான்போல நடனம் பண்ணுவரென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ஒன்றாக நின்றே பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுது ஒன்பது பேதமாகுமென்பது கற்பக கௌரவமென்னில்? ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் இந்த மூன்றுவகைக்கு, சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் என்னும் அந்த மூவகைத் திரயங்களுக்கும், பிந்து மோகினி மகானென்று மூவாகாரத் திரயங்களு முண்டாகையால்; அந்த பேதங்களினாலே பேதமாகக் கூறப்பட்டது

ஆகி லருபமென்பதொன்றாயிருக்கையிலே நாலுபேதமெவ்வாறெனனில்? காலமும் திக்கும் ஆகாசமும் அருபமாயிருக்கத் தத் காரிய பேதங்களினாலே பேதமானதுபோல, கிருத்தியபேதங்களினாலே பிந்தமாகக் கூறப்பட்டது. ஆகிலு மருபத்தில் * தாரதம்மியமையுண்டு.

* தாரதம்மியம் - ஏற்றக்குறைவு

ஆகில் அந்த கிருத்தியபேதங்களுந் தாரதம்மியங்களு மெவ்வாறெனனில்? பரமசிவத்தி லாயிரத்தொரு † அம்சமாக பராசத்தியானது ‡ ஆவிர்ப்பவித்து × அநுக்கிரகபரையா யிருக்கும் அந்தப் பராசத்தி சுத்தமாயையிலே பதிந்தபொழுது சாந்தியாதீத கலையுண்டாம்; ஆகையா லந்தச் சாந்தியா தீதத்தைப் பராசத்தி பரியாயமாகச் சொல்லுவார்கள். அந்தப்பராசத்தியி லாயிரத்திலொரு அம்சமாக சத்தாவஸ்தரான சிவனுக்கு இச்சாஞான ஸ்வரூபிணியான ¶ அவிநாபாவ சத்தியுண்டாம். அந்தச் சத்தி சுத்தமாயையை க்ஷோபித்தபொழுது அந்தச்சத்தியில் § சகச்ராம்சமாக நாதமூர்த்தியுண்டாம். நாதத்திலே நின்றும் சகஸ்ராம்சமாக விந்து மூர்த்தியுண்டாம். நாதவிந்து மூர்த்திகளைச் சிவனுஞ் சத்தியு மநுப்பிரவிஷ்டரா யதிஷ்

டித்து நின்று சூக்குமமான சத்தார்த்தப் பிரபஞ்சங்களை யுண்டாக்குவர்கள். மூர்த்தி மூர்த்திமானகளுடைய அபேதோபசாரத்தினாலே சிவனுக்கு நாதனென்றும், சத்திக்கு விந்துவென்றும் பேரானது. அந்தச் சத்தியிற் பத்திலொரு அம்சமாக சாதாக்கிய முண்டாம். சிவனந்த மூர்த்தியை அநுப்பிரவிஷ்டராய் நின்று, சுத்தாத்துவ கிருத்தியத்தைப் பண்ணுவர். அந்தச் சாதாக்கியத்திற் பத்திலொரு அம்சமாக மகேஸ்வரன்றோன்றி, அசுத்தமாயா கிருத்தியத்தைப் பண்ணுவர். அவரிடத்திலாயிரத்திலொரு அம்சமாக ருத்திரதேவர் தோன்றிக் கலையிலே நின்றும் மூலப்பிரகிருதியை * யுதிப்பித்து, அதிலே நின்றும் குணத்திரயாதியான சூக்குமசிருட்டிகளைப்பண்ணி, மகேஸ்வரருடைய கோடியம்சமாகத் தோன்றின பிரமாவையும் விஷ்ணுவையும் அசுத்தாத்துவ சிருட்டி ஸ்திதிகளிலே ┼ நியோகித்துத் தாம் காலருத்திரனை யதிஷ்டித்துக்கொண்டு நின்று, அசுத்தாத்துவப் பிரவிருத்தியையும் பண்ணுவர்.

† அம்சம் - பங்கு, ‡ ஆவிர்ப்பவித்து-உண்டாய், × அநுக்கிரகபளா - அநுக்கிரகத்தை முக்கியமாகவுடையது, ¶ அவிகாரபாவம்-நீங்காமை, § சகச்ரம்-ஆயிரம், * உதிப்பித்தல்-உண்டாக்குதல், ┼ நியோகித்தல் - ஏவுதல்.

தத்த்வம் வாமதேவம் தத்ஸ்வரூபம் த்ரிதா ஜ்ஞேயம் நிஷ்கலம் ஸகலாகலம் | ஸகலஞ்ச ததா ஜ்ஞேயம் த்ரிவிதம் தத்விஶேஷத: || நிஷ்கலஞ்ச ததோ ஹ்ருத்ஸ்தம் ஸகலம் ச ததாஹமேவ ச | ஸகலம் நிஷ்கலஞ்சைவ நவயோகி நிஷ்டா: க்ரமாத் || ஶிவதத்த்வஸமுத்பந்நாம் ஶாந்த்யதீதாதிஸம்பவா: | ஶாந்த்யதீதாதயா ஶக்தி

[illegible]

[illegible]

இது ஒன்பது பேதமுமொன்றிலேயொன்று தோன்றின தற்குச் சமமதி.

தத்தத் கிருத்தியங்களுக்குச் சம்மதி பூர்வத்திலே சொன்னோம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவபேத மணுபேதமெனப் பிரமாதி நவபேதமிருபேதமாம்; அதில் அணுபேதஞ் சத்திலோக முதற் புவனுதிபதியாய் வாஸ்தவபேத தேகியாயிருக்கும். சிவபேத மணுபேதத்தை யதிஷ்டித்துக் காற்பனிகபேத தேகியாயிருக்கும அதிற் சிவபேதத்தைத் தரிசிப்பிக்கின்றார்.

சிவம்-அதிக்கிராந்த விந்துக பரசிவம்,—

சத்தி-அதிக்கிராந்த விந்துக பராசத்தி,—

நாதம்-பரநாதம்,—

விந்து-பரவிந்து,—

பரநாதமென்பது, உன்மனுகலாதி சாந்தியதீத கலாந்தகர்ரிய சிவகலா சத்தியையும், சமநாதி அபரவிந்து நிவிர்த்தியந்த

காரியசத்தி கலாசத்தியையும், சமாகாராத்மகமாயுள்ள காரணசாந்தியதீத கலாரூப மகாமாயை.

பரவிந்து என்பது, உன்மனை கலாதி காரியப் பிரபஞ்சமொரு பிரதேசத்துண்டா யொடுங்கின மகாமாயையினதோரிடம்.

ஆகையால், மகாமாயையினது பரநாதப் பிரதேசத்தை யதிஷ்டிக்கும் அனுக்கிராந்த விந்துக பரசிவம்; நவபேத விருத்தத்தில் நாதமென்று சொல்லப்பட்டது.

பரவிந்துவை யதிஷ்டிக்கும் அனுக்கிராந்த விந்துக பராசத்தி, விந்துவென்று சொல்லப்பட்டது.

மகாமாயா காரிய பரநாத பரவிந்துக்கள், மகாமாயா காரிய அபரநாத அபர விந்துக்கள் காணப்பிக்கப் படாநின்றன.

உன்மனை - பராற்பரநாதம், சமனை - பராற்பரவிந்து.

வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப ஆத்த ரூப சிவகலைகளும், ஆத்தரூப மாத்திர பஞ்ச சிவகலா புவனங்களும், பரசிவ தத்துவமென்கின்ற பரநாதம்.

சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, வியாபினி யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்தரூப அர்த்த ரூப சத்திகலைகளும், அர்த்த ரூப மாத்திர சத்திகலா புவனங்களும், பராசத்தி தத்துவ மென்கின்ற பரவிந்து.

இவைகள், யோகினியினுடையவும் மகாவிராட் புருடனுடையவும் பிரமரந்திரத்திற்கு மேல், முறைமையில் சத்த ரூப மாத்திரங்களாகவும், சத்த ரூப ஆத்த ரூபங்களாகவும் அறியப்படும்.

பிரம ரந்திரத்துக்குள் இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப

அர்த்த ரூப சிவகலைகளும்; அர்த்த ரூப மாத்திர சிவகலா புவனங்களும், அபர சிவ தத்துவமென்கின்ற நாத, நாதாந்த, அபர நாதமாக அறியப்படும்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப ஆத்த ரூப சத்தி கலைகளும், அர்த்த ரூபமாத்திர சத்தி கலா புவனங்களும், அபர சத்தி தத்துவமென்கின்ற அபரவிந்துவாக அறியப்படும்.

உன்மனாதி யபரவிந்து, அந்தம் கிரமத்திற் பரசிவ பராசத்தித் தானமாக ஊகித்தறிக.

சத்த ரூப அர்த்தரூப பஞ்ச பஞ்சகலைகள், அர்த்த ரூபமாத்திர பஞ்ச பஞ்ச கலா புவனங்கள் பகுப்பாயிருக்கும்.

ஆத்த சந்திரன நிரோதி யிரண்டும் அபரவிந்துவி லடங்கும்.

மகார உகார ஔகாரங்கள், கிரமத்திற் சாதாக்கிய தத்துவ ஈஸ்வர தத்துவ சுத்த வித்தியா தத்துவ மென்கின்ற அபர விந்து கோடிகளுளாகும்.

அபரநாத அபரவிந்து அபரநாதங்கள் சதாசிவ ஈஸ்வர வித்தியாதிபதி ருத்திராதிஷ்டானங்களாகவும் அறியப்படும்.

கீழ் கீழ் நிவிர்த்தியாதி கலாரூபமாக வியாபித்த ஓங்காராதி நாதாந்தம் பிரமாதி பஞ்சதேவதா ஸ்தானமுமாம —

சதாசிவன றிகழு மீச னுவந்தரு ளுருத்திரனருண மாலயனென றிவ்வொன்றுப் பவதேரும் - சனமிகரும்

அணுபேதத்திற் சனம முபசாரமா யாரோபித்துச் சம்பு பக்ஷத்துக்குக் கற்பிக்கப்படும். இங்குச் சிவாதி பிரமாந்த நவ பேதத்துள்,—

அருவ நாலும் - காரண மகாமாயாவஸ்தா சாக்ஷாதிஷ்டான மாதலால், சிவாதி நான்கும் நிஷ்களம்.

உருவம் நாலும்-காரியாதிஷ்டானமாதலால், ஈசன முதலிய நானகும சகளம்.—

உபயமொன்றும்-சதாசிவம காரணத்தைத் தொட்டு உன்மனாதி சாதாக்கியாந்த காரியாதிஷ்டானமாகையால், சகளநிஷ்களம் —

நவந்தருபேத மேகநாதனை நடிப்பனெனபா - ச்யபேதமெனகின்ற நவபேதத்தை பொருபொருளாகிய சிவன, நானே அதிஷ்டேய பேதத்தை யொட்டி அபிநயித்தருத நடலக் கருப்பனையிருபே காண்பிப்பன.

அனுபேதமெனகின்ற நயபேதத்தை அணுப்பிரமாதி அனுபரசிவாநத அநேகேசுராகள சுவருபத்திருற காணபிபபா.

சிவம சத்தி நாதம் விந்து எனபதும, சாந்தி முதல ஐந்து கலை யெனபதும, ஒரு பொருளாதத்திருப்ப தனாக

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙன மொன்றாயின்றி திருமேனியிறையவன் ஒன்றியொன்றாகத் தோன்றி, ஒவ்வொரு தத்துவங்களினின்றுகொண்டு, தத்தந் தொழில்களைச் செய்யுஞ் சிவமுதல் ஐவருங்கிய முத்திறத்தோனெனபது வாக்கத்தினும் வேற்றுமையின்றி நின்று, அவ்வத்தொழில்களைச் செய்வனெனபதாம்.

ஏகாரம் தேற்றம.

மேல் ஒருவனே யிராவணுகி பாவகமுற்றுற் போல என்றதனை ஈண்டு மறிவுறுத்தவார், நடிப்பனெனறார்.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

இவ்வொன்பது பேதத்துட் சத்தி விந்துவென்னு மிரண்டும் சத்தி பேதமாயினும், ஏனை மனோன்மனி முதலிய பேதம் போலன்றி ஒன்றிரண்டாகப் பவந்தரு முறையிற் காரணமாயிடை நிற்றல்பற்றிச் சிவபேதத்துடன் வைத்தெண்ணி நவந்தருபேதமெனப்பட்டன.

நவந்தருபேத மேக நாதனை நடிப்பனென்றதும் ஒற்றுமை நயம்பற்றிப் பொதுவாகையாற் கூறியதென்பது.

அவை முறையே சிவதத்துவத்துக்கும் நாதத்துக்குமுரிய சத்தி பேதமே யாதலென்பது வருஞ்செய்யுளிற் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் சுத்தமாயையிலே பரமேஸ்வரன் கொள்ளப்பட்ட திருமேனிகள், ஒன்றிலே யொன்றாகத் தோன்று முறைமை யருளிச் செய்கிறார்.

சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீச னுவந்தருளுருத்திரன்றான் மாலய னொன்றினொன்றாய்ப் பவந்தரும்- சிவனுஞ் சத்தியும் நாதமும் விந்துவும் சதாசிவனும் விளங்கப்பட்ட ஈஸ்வரனும் கிருபையையுடைய உருத்திரனும் மாலும் அயனும் என்னுமிவர்கள், ஒன்றிலே யொன்றாகத் தோன்றிநிற்பார்கள் — அருவநாலி ருருவநா லுபயமொன்றாம்- இந்தத் திருமேனிகள்தான், இவ்விடத்து நிஷ்களம் நாலும், சகளம் நாலும், சகளநிஷ்கள மொன்றுமாயிருக்கும். இப்படிப் பலவாகச் சொல்லப்பட்ட திருமேனிகளுக்குப் பரமேஸ்வரனும் பலபேதங்களுமாயிருப்பனோ வெனில்?—நவந்தருபேத மேகநாதனே நடிப்பனென்பர் - இந்த ஒன்பது திருமேனியும் பரமேஸ்வர னொருவனேகொண்டு நடியாநிற்பன.

இதனாற் சொல்லியது, சுத்தமாயையிலே சிவன் கொள்ளப்பட்ட திருமேனிகள், சிவமுதலாகப் பிரமா வீறாக ஒன்பதுவே தமா யிருக்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

ஏகநாதனே - அங்ஙன மொன்றாயின்றி நிற்கு மெய்யிறைவன்,—சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீசன் உவந்தருளுருத்திரன்றன் மாலயனொன்றினொன்றாய்ப் பவந்தரும்-சிவமென்றுஞ் சத்தியென்று நாதமென்றும் விந்துவென்றுஞ் சதாசிவமென்றும் விளங்குகின்ற மகேஸ்வரனென்றும் உவந்தருளுகின்ற உருத்திரனென்றும் மாலென்றும் அயனென்றும் இவைகள், ஒன்றினொன்றாகத் தோன்றி, ஒவ்வொரு தத்துவங்களினின்றுகொண்டு அத்தத்தொழில்களைச் செய்யும்,—அருவநாலு - அருவமாகிய சிவம் சத்தி நாதம் விந்துவாகிய நான்கு திருமேனியும்,—உருவநாலு- உருவமாகிய மகேசனுருத்திரன் மாலயனாகிய நான்கு திருமேனியும்,—உபயமொன்றாய் - சதாசிவமாகிய அருவுருவத் திருமேனி யொன்றுமாகிய,—நவந்தருபேத நடிப்பனென்பர் - முத்திறத் தொன்பது வாகத்தினும் வேற்றுமையின்றி நின்று, அவ்வத்தொழில்களைச் செய்வன.

மறைஞானதேசிகர் உரை

சிவனைப்போலே சத்தியொன்றாயிருக்கக் காரியப்பாட்டாற் சத்தியினது பேதம் பல வென்றுணர்த்துகிறார்.

சத்தியாய் விந்துச்சத்தி யாய்மனோன் மணிதானாகி, யொத்துறு மகேசையாகி யுமைதிரு வாணியாய்

கி, வைத்துறுஞ் சிவாதிக்கிங்ஙன் வருஞ்சத்தி யொரு
த்தியாகு, மெத்திற நின்றனீச னத்திற மவளுநிற்
பள. (௭௫)

(இ-ள்) சத்தியாய் விந்துச் சத்தியாய் மனோன்மனி தானாகி யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி வைத்துறுஞ் சிவாதிகரு

முற்கூறிய சிவத்துக்குச் சத்தியும், நாதத்துக்கு விந்துச்சத்தியும், சதாசிவத்துக்கு மனோன்மனியும், ஈசுரத்துக்கு விந்துவி னுயிரத்திற் றோன்றிய மகேசையும், உருத்திரனுக்கு மனோன்மனியி லாயிரத்தி லொன்றிற் றோன்றிய கௌரியும், மாயனுக்குத் திருவும், பிரமனுக்குச் சரஸ்வதியுமாகி, தனித்தனியே சத்திகள் பொருந்தாநிற்கும்.

இங்ஙன வருஞ்சத்தி யொருத்தியாகும்

இப்படிச் சிவன முதலிய வெழுவர்க்கும், ஒருசத்தி தானே பலவா யதிட்டித்துக் கொண்டுநிற்கும். இந்தச் சத்திகளுஞ் சத்தனுக்கும் பேதமோவெனின்?

எத்திற நின்றனீச னத்திற மவளுநிற்பள்.

சிவ னிலயி யானபோது இலயசத்தி யெனவும், போகியானபோது போகசத்தி யெனவும், அதிகாரியானபோது அதிகாரசத்தியெனவும், இப்படிப் பெயருற்றுநிற்கும். ஏனையவு மிவ்வாறுகாண்க. எ-று.

சிவாதிக்கு வைத்துறுமெனவும், ஈசனெத்திறநின்ற னவளுமத்திற நிற்பளெனப பொருளுரைக்க.

இதற்கு வாதுளோத்தரத்துஞ் சுப்பிரபேதத்துஞ் சுத்தாக்கியிலு மறிக. (௭௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சத்திபேத முணர்த்துதல்

சத்தியாய் - சத்தர்க்கு ஞானசத்தியாய் விந்து க்ஷோபத்தைப் பண்ணி,— விந்துசத்தி யாய்-சிவன நாதா †திஷ்டாதாவானபொழுது விந்து ¶வதிஷ்டாத்திரியான சத்தியாய்,— மனோன்மனி தானுகி - சதாசிவர்க்கு மனோன்மனி சத்தியாய்,—மகேசையாகி - மஹேஸ்வரருக்கு மஹேஸ்வரி யென்னுஞ் சத்தியாய்,—உமை-உருத்திரதேவர்க்கு உமையென்னுஞ் சத்தியாய்,—திரு-விஷ்ணுவுக்கு லக்ஷ்மியெனனுஞ் சத்தியாய்,—வாணிபாகி - பிரமாவுக்கு சரஸ்வதியென்னுஞ் சத்தியாய்,—ஒத்தறும்-இப்படியே யந்தந்தக் கிருத்தியங்களுக்கும் விகாரங்களுக்கும் பொருந்தின ரூபத்தையும் கிருத்தியத்தையு முடைத்தாய்ப பொருந்தும்,— வைத்தறுஞ் சிவாதிககிங்ஙன வருஞ்சத்தி பொருத்தியாகும்-காரணேஸ்வரரிடங்களிலே தனது அதிகாரசத்தியை வைத்துத் தானு மவ்விடத்து அபிவியத்தியாய் நிற்குஞ் சிவனை யாதியான வேறு பேதங்களுக்கு முனசொன்னவாறு வரபபட்ட சத்தியொனறே! அதெவவாறெனனில்?— எத்திற நினறானீச னத்திற மவளுநிற்பள்-சிவனுக்கு அவிநாபூதை யாகையால் சிவனெவ்வாறு மூர்த்திகளை அதிஷ்டித்துக் கொண்டு நின்றான், அவ்வாறே யந்தந்த மூர்த்திகளுடைய சத்திகளையும் அதிஷ்டித்துக்கொண்டு நினறுந் தானொனறேயென் றி தன்பொருள்.

†அதிஷ்டாதா-அதிஷ்டிக்கிறவன், ¶அதிஷ்டாத்திரி-அதிஷ்டிக்கிறவள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சிவபேதமுணர்த்தி, அணுசத்தி பேதமானது கொடுக்குஞ் சத்திபேத முணர்த்துகின்றார்.

சத்தியாய்-அதிக்கிராந்த விந்துக பரசிவத்திற்கு அதிக்கிராந்த விந்துக பராசத்தியாய்,—விந்துச சத்தியாய்-நாதரூபியாயிருக்கின்ற அனதிக்கிராந்த விந்துக பரசிவத்திற்கு அனதிக்கிராந்த விந்துக பராசத்தியாய்,—மனோன்மனி தானாகி-சதாசிவத்திற்கு மனோன்மனி தேவியாய்,—ஒத்துறு மகேசையாகி-மகேஸ்வரனுக்கிணங்கிய மகேஸ்வரி தேவியாகி,—உமை திருவாணியாகி-உருத்திரனுக் குமாதேவியாகி, மாலுக்கு மகாலக்ஷ்மி தேவியாகி, பிரமாவுக்குச் சரஸ்வதிதேவியாகி,—வைத்துறு சிவாதிக்கிங்ஙன வருஞ்சத்தி ஒருத்தியாகும்-சிவமுதல் நவபேதத்துக்கு மிவ்விடத்து நவபேதமாய்த் தோற்றும் சத்தியொன்றாகும்,—எத்திற னின்றானீச னத்திற மவளுநிற்பள் - சிவன் கற்பித நவபேதமா யாதொரு பிரகாரமிருந்தான, சத்தியுங் கற்பித நவபேதமாய் அந்தப் பிரகாரமிருக்கும்.

சத்திபேத மேழென்று சொல்லியிருக்கச் சிவபேத நவபேதமென்றது விரோதம. சிவபேத நவபேதமென்று சொல்லியிருக்கச் சத்திபேத மேழுபேத மென்றது விரோதம். இப்படியாகில், விரோத பரிகாரமெப்படி? ஒருபிரகாரஞ் சொல்லுவோங் கேள்.

அகாசிருகை முதல் சிவகலா சாதிய வியாபினி யீறாகும் பஞ்சகலா புஞ்ச வடிவுற்றுச் சிவகலா சாதிய உன்மனா கோக்கதாக்கும பரநாதமென்றும், சத்திகலா சாதிய வியாபினி முதற் சூக்குமை யீறாகும் பஞ்சகலா புஞ்சவடிவுற்றுச் சத்தி

கலா சாதிய சமனாநோக்கம் தாக்கும் பரவிந்துவென்றும், ஊர்த்துவைமுதல் இந்திகை யீறாகும் பஞ்சகலா புஞ்சவடிவுற்றுச் சிவகலா சாதீய வியாபிநி நோக்கம் தாக்கும் அபரநாதமென்றும், சாந்தி யதீதைமுதல நிவிர்த்தி யீறாகும் பஞ்சகலா புஞ்சவடிவுற்றுச் சத்திகலா சாதீய ஞான்குமை நோக்கம் தாக்கும் அபரவிந்து என்றும் இருக்கும்

பராபர சிவதத்துவம் பராபர சத்தி தத்துவ வர்க்கம் நான்கினைபோர் மாறியும் மாறாதும் தனித்தனி யிருக்கும் சாந்தியதீதகலை; அக்கலை மணப்புற்று அத்தன்மை பெற்று அப்பெயர்பெறும் உண்மைக்கலை யாகும் பரசிவ மூர்த்தியாம் சிவகலையும் பதிலடங்கும்

அப்படி நான்கினு மிருக்கும் விந்தை பிரதிஷ்டை நிவிர்த்தியுள் ளடங்கும் சாந்திகலை, அக்கலை மணப்புற்று அத்தன்மைபெற்று அப்பெயர்பெறுஞ் சமூகலையாகும் மனாகத திமூர்த்தியாஞ் சத்திகலையு மதிலடங்கும்

ஆக நாலிரண்டெட்டுச் சடசிவகலை சடசத்திகலை; சற்காரிய காப்ப மகாமாயையினாற் காத்துவிசப் பிரளயத்துள் எண்கலை பிரியாப பிரிவுப்பித்தப பொறிது குபசரிக்கும், பிரியாப்பிரிவுச சிற்சிவகலை சிற்சத்திகலை சங்காரிய காபப வஸ்துக்களாம்,

பரசிவம் பராசத்தி அனாதி கிராசுக விந்துக பரசிவனெனும் பரநாதம பரவிந்து இவை நான்கும், தனித்தனி சிவபேதம் சத்திபேதம இருபேதமுற்றிருநான்கு பேதமாயிருத்தலால், சிவபேதம் ஞானகோடி சதாசிவமுதற் பிரமாவீறாகுஞ் சிவபேத மைந்தாங் கூட்டிச் சிவபேதம் நவபேதம்.

அச்சத்திபேதம் ஞானகோடி மனோன்மனிமுதற் சரஸ்வதியீறாகும் சத்திபேத மைந்தங் கூட்டிச் சத்திபேதம் நவபேதமென்னுங் கருத்திற் கருதி, 'நவத்தருபேதமேக நாதனே நடிப்

டன' எனவும், 'எத்திற நின்றா னீச னத்திற மவனுநிற்பன்' என்றும்; ஆசாரியர் சொல்லியதேதெனின் ஒருசொற் றோஷமு மில்லை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறிய சிவபேத மேழுக்குமுரிய சத்திபேதமும், மூன்றமயே சத்திமுதல் வாணியீறாக வெழுவகைப்படும். எம்மிறைவனாகிய பரமசிவன் சிவபேத மேழினும் நின்று நடாத்துமாறெல்லாம் அவனோடு தாதான்மியமாய் நிற்கும் பராசத்தியும், இச்சத்திபேத மேழினும் அவனுக்குத் துணையாய்நின்று நடாத்துமென்பதாம்.

அற்றேல், மேலைச் சூத்திரத்தின் 'வரும்வடி வெல்லாஞ் சத்தி' எனக்கூறி, யீண்டுச் சிவபேதஞ் சத்திபேதமென வேறுவைத்து, 'எத்திற நின்றா னீச னத்திற மவளுநிற்பள்' என்றல் மலைவுபோலுமெனின், மயங்காமைப் பொருட்டு; அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

மேலிந்த மூர்த்திகளுக்குச் சத்திக ளருளிச்செய்கிறார்

சத்தியாய் விந்துச்சத்தியாய் மனோன்மனி தானாகி யொத்துறு மகேசையாகி யுமை திருவாணியாகி வைத்தனும்- சிவனுக்குச் சத்தியும், நாதத்துக்கு விந்துச்சத்தியும், சதாசிவத்துக்கு மனோன்மணிசத்தியும், மகேஸ்வரனுக்கு மகேஸ்வரசத்தியு

ம், உருத்திரனுக்கு உமாசத்தியும், விட்டுணுவுக் கிலக்குமியும், பிரமாவுக்குச் சரஸ்வதியும், ஆகவொன்றிலே யொன்று தோன்றுமென்று சொல்லப்படும். இப்படிச் சத்திகள் பலவாயிருக்குமோவெனனில்?— சிவாதிகளிருவன வருஞ்சத்தி யொருத்தியாகும் - சிவமுதலான மூர்த்திகளுக்கு இப்படியே வருகிற சத்திகளெல்லாம் அந்தப் பராசத்தி யொன்றுமேயா யிருக்கும்,—எத்திற நின்றானீச னத்திற மவளுநிற்பள் - ஆகையால் பரமேஸ்வரன் எப்படியே நின்றான், அப்படியே அந்தப் பரமேஸ்வரியும் அதற்குப் பொருந்திநிற்பள்.

சிவம் ஒன்பதுபேதமாயுஞ் சத்தி யேழுபேதமாயும் நின்றது, ஒன்பதுபேதத்திற் சொன்ன சத்தி, சிவத்துக்குச் சத்தியாயும்; நாதத்துக்கு விந்துச்சத்தியாயும், சதாசிவமுதலான வருக்கும் மனோன்மனிமுதலான சத்திகள் அஞ்சுமாய் நிற்குமதுங் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது, பரமேஸ்வரன் கொண்ட கொண்ட மூர்த்தங்களுக் கெல்லாம் பரமேஸ்வரியும் அந்தந்த மூர்த்தங்களுக்குப் பொருந்தின சத்தியாய் நிற்பளென்னு முறைமையுமறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சிவாதிக்கு - மேற்கூறிய சிவபேத மேழிற்கும்,—இசைந்து வருஞ்சத்தி யொருத்தியாகும் - இவ்விடத்துக் குரிய சத்திபேதமூஞ் சிவசத்தியொன்றே.— சத்தியாய் விந்துச்சத்தி மனோன்மனி தானுகி யொத்தது மகேசையாகி யுமை திரு வாணியாகி வைத்ததும் - முறையே சிவத்திற்குச் சத்தியாகியும், சதாசி

வத்திற்கு மனோன்மணி சத்தியாகியும், மகேசனுக்குப் பொருந்திய மகேசை சத்தியாகியும், உருத்திரனுக்கு உமைசத்தியாகியும், மாலுக்குத் திருசத்தியாகியும், அயனுக்கு வாணிசத்தியாகியும், எழுவகைப்படும்,— ஏகனாகிய நிமலன - எம்மிறைவனாகிய பரமசிவனைப் பிரிவின்றி நின்று நடாத்துமாறெல்லாம்,— அவனது மகிமைநிற்பள் - அவனோடு சாதாரணியமாய் நிற்கும் பராசத்தியும் பிசசத்திபேத மேழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும்.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங்கூறிய சத்திசத்தர்களிவர்க்கும் பேத மின்மையை யுணர்த்துகிறார்.

சத்திதா னாதமாகித் தானுஞ் சிவமுமாகச், சத்திதா னாதியாருந் தரும்வடி வானவெல்லாஞ், சத்தியுஞ் சிவமுமாகுஞ் சத்திதான் சகத்துவைக்குச், சத்தியாஞ் சத்தன்மேவலாற் றெல்லாமாஞ் சத்திதானே. (எகூ)

(இ-ள்.) **சத்திதா னாதமாகித் தானுஞ்** — சிவனுடைமையினை யடைந்திற்கிற சமவாய சத்திதானே, நாதமுதலான திருமேனிகளெல்லாம், அதற்கதற்கேற்ற வடிவைப் பொருந்தாநிற்கும்.

சிவமுமக்கச் சத்திதானாதியாரும் — அந்த சிவமும் அச்சத்தி நாதமென்று சொல்லப்பட்ட சத்தியினது பேதமே என்னாதலையும் பொருந்திநிற்கும்.

தரும்வடிவானவெல்லாஞ் ச — ஆகையாற், பஞ்சகிருத் தோற்றப்பட்ட பதார்த்தங்களெல்லாஞ் சத்திமயமுஞ் சி

த்தியுஞ் சிவமு மாகும்	வமயமுமாகவே காணப்பட்டிருக்கும்.
சத்திதான் சத்தனுக்குஞ் சத்தியாம்	சத்தியினுடைய விகற்பங்களெல்லாஞ் சிவமே பொருந்துமோ வெனனின்? அந்தச் சத்திதானே சகரூபிய சிவனுக்குச் சத்தியாகையாற் றனக்கொரு முதன்மையில்லை
சத்தனவே ண்டிற் றெல்லா மாஞ் சத்திதா னே.	சகரூபிய சிவனையாதொன்றையுண்டாகவென்று நினைந்தாற் கடைத்தான், அப்பொழுதந்தச் சத்திதானேயவைகளை யதுவாக வுண்டாக்காநிற்கும். எ-று.

இதற்கு வாதுளோத்தரத்துஞ் சவுந்தரியலகிரியெனனுந் தோத்திரத்திலுமறிக (௭௧)

சிவாகாரயோகியருரை வருமாறு.

—0—

மேல் பிரபஞ்சத்திலே சத்தி சிவ நிற்குமுறைமை யுணர்த்துதல்.

சத்திதானுந்தமாதி காணும்- சத்தியான நாதாதி பிருதிவியந்த தத்துவங்களெல்லாவற்றுப்பிரவிஷ்டையா யிருக்கும்,—சிவமுமந்தச் சத்திதானுஞ்சியாதும் - சிவமுமந்தச் சத்தியாதியாக சாவவஸ்துக்களையும் அதிஷ்டித்திருக்கும். ஆகையால்;—தருவடிவானவெல்லாஞ் சத்தியுஞ் சிவமுமாகும் - அவாகளா லுண்டாக்கப்பட்டவெல்லா வுருவங்களுஞ் சத்தி சிவாத்மகமாம் —சத்திதான் சத்தனுக்குச் சத்தியாஞ் சத்தனவேண்டிற்றெல்லாமாஞ் சத்திதானே-சத்தியானது சத்தாவஸ்தரான சிவனுக்கும் பலமுமாம்; ஞானமுமிச்சையுங் கிரியையுமாமென் றிதனபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சத்தியாதி யெண்பேதங்களுக்குப் பரசிவமூலம், நாதாதி யெழுபேதங்களுக்குப் பராசத்தி மூலமென்பது பகர்கின்றார்.

சத்தன் - பரசிவம், — சத்தி - பராசத்தி, — வேண்டிற்றெல்லாம் - நாதாதி பேதமனைத்தும்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

மரமும் காழ்ப்பும்போல ஒப்பவியைந்து நிற்றலின், எல்லாத்திருமேனியுஞ் சத்திசிவ மிரண்டற்கும் பொதுவடிவே யாமாயினும், சத்தனுக்குச் சத்தி தேவியுமா மாகலான், அதற்குரிய வடிவு விசேடங் குணவிசேடம் பற்றிச் சிவபேதஞ் சத்திபேதமென் றாயினவென்பதாம்.

ஆகலா னதற்குரிய வடிவு விசேடங் குணவிசேடம்பற்றிச் சிவபேதஞ் சத்திபேதமென் றாயினவென்பது குறிப்பெச்சம்.

சத்தனுக்கோர் சத்தியாமென்றது, வல்லவனுக்கு வல்லமையாய் நிற்குமெனச் சிவசத்திகட்கு நாயகநாயகி பாவங்கூறியவாறு.

நாயகநாயகி பாவமாதலை வலியுறுத்துவார், சத்தன்வேண்டிற் றெல்லாமாஞ் சத்தியெனச் சத்தியின் பெருமை கூறினார்

வேண்டிற்றெல்லாமென்றது ஒருமைப் பன்மை மயக்கம்.

இவை மூன்று செய்யுளுந் தாதான்மியமாய் நீங்காது நிற்றலைத் தெரித்துக் கூறியவாறு.

அற்றேல், மேல் ஒன்றிரண்டாய்ப் பலவாகுமெனப்பட்ட சத்தி சிவங்களை யீண்டுத் தலைவனுந் தலைவியுமாய்த் தம்முட் புணருமென்பது முறையன்று போலுமென்பாரை நோக்கி, அதனை யுணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

சிவசத்திகள் நாதமுதலான தத்துவங்க ளெல்லாந் தானேயாய் நிற்குமென்றும், சிவனுட திருவுளத்திலே நிகழ்ந்த தெல்லாஞ் சத்திதானேயாய் நின்று நடத்துமுறைமையு மருளிச்செய்கிறார்.

சத்திதானுந்தமாதி தானாகும-நாதமுதலான தத்துவங்களெல்லாம அந்தப் பராசத்தி தானேயாய்ப் பொருந்தி நிற்கும்,—சிவமுமந்தச் சத்திதானாகியாகும் - சிவமு மந்தச் சத்தியினுடைய வியாபாரங்களுக்கெல்லாம் காரணமாய்,விட்டு நீங்காமல் நிற்கும். அப்படியிருக்கையினாலே,—தருவடிவானவெல்லாஞ் சத்தியும் சிவமுமாகும - பிரபஞ்சத்தி லுண்டாகப்பட்ட ரூபங்களெல்லாம் பரமேஸ்வரனும் பரமேஸ்வரியுமா யிருக்கும். முன்னே நாதமுதலான தத்துவங்களெல்லாம் சத்தியாகியே நிற்குமென்று சொல்லி, இப்பொழுது சிவமுஞ் சத்தியுமாயிருக்குமென்பா னேனென்னில்?—சத்திதான சத்தனுக்குச் சத்தியாம் - அந்தச் சத்தி தானுஞ் சிவனுடைய கிருத்தியங்களுக்கெல்லாம் தானேயாய் நிற்கும். ஆகையால்,—சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ் சத்திதானே - சிவன யாதொன்று திருவுளத்தடைத்தான,அந்தத் திருவுள்ளத் தடைத்த வதுதானே சத்திக்குச் செயலாம்.

இதனாற் சொல்லியது, நாதமுதல் பிருதிவி யீறாகவுண்டான தத்துவங்களெல்லாம் சத்திதானேயாய் நிற்குமென்றும், அ

ந்தச் சத்திக்கு முதல் சிவமேயென்றும், உண்டாகப்பட்ட வடிவுகளெல்லாம் சிவசத்திகளென்றும், சிவனுடைய திருவுள்ளத்தில் நிகழ்ந்ததே சத்தியினுடைய கிருத்தியமெல்லாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

சத்திசாதாக்கியமாதிகாரணரும் - நாதமுதற் பிருதிவியீறான தத்துவங்களெல்லாங் கூடிநிற்கும்.—சிவமு மந்தச்சத்திதானு மாகும் -சிவமு மந்தச் சத்திமுதலியவரை யடுத்து நிற்குமாகலான், மரமுங் காழ்ப்பும்போல வொப்ப இசைந்து நிற்றலின்,—சத்திதான் றரும வடிவானவெல்லாஞ் சத்தியுஞ் சிவமுமாகும்-சத்தியாற்றரப்படுமெல்லாத் திருமேனியுஞ் சத்திசிவமிரண்டற்கும் பொதுவடிவே யாயினும்,—சத்தனுக்குச் சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ் சத்திதானே - சத்தனுக்குத் தான்வேண்டியவாறெல்லாம் ஆகுஞ் சத்தியே,—ஓர் சத்தியாம்-ஒப்பற்ற தேவியுமாமாகலான், அதற்குரிய வடிவுவிசேடங் குணவிசேடம் பற்றிச் சிவபேதஞ் சத்திபேதமென் றாயினவென்பதாம்.

இவை மூன்று செய்யுளானுந் தாதான்மியமாய் நீங்காது நிற்றலைத் தெரிவித்துக் கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

அந்தச் சிவசத்தியினது சிருஷ்டி யுணர்த்துகிறார்.

சிவஞ்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான் சிவத்
தையீன்றும், உவந்திரு வரும்புணர்ந்திங் குலகுயி ரெல்

லாமென்றும், பவன்பிரம சாரியாகும் பான்மொழி க
னியாகும், தவந்தரு ஞானதபோதாகவித் தன்மைதா
ன் றெரியுமன்றே. (எஎ)

(இ-ள்) சிவஞா அப்பிரமேய முதலிய விலக்கணத்தையு
த தி த ன டைய சிவன, தனது காருண்ணியத்தாற்
லையென்றும் திருமேனிகொண்ட அவன தாயிரத்தொன்
றிலே பராசத்தியும, அந்தச சத்தியாயிரத்
தொருகூற்றி லாதிசத்தியும, அந்தச சத்தியி லாயிரத்தொன்றி
லிச்சாசத்தியும், அந்தச சத்தி யாயிரத்தொன்றின ஞானசத்
தியும, அந்தச சத்தி யாயிரத்தொன்றிற கிரியாசத்தியும், இப்
படிப பஞ்ச சத்திகளையுந தோற்றுவிப்பன

இது சிவசிருஷ்டி யெனவறிக.

சேற் சத்தி சிருஷ்டி.

சத்திதான சி நிட்களமான பஞ்ச சத்திகளிடத்திறுஞ்
வத்தையென்றும சர்வான்மாககளுககுந தியானபூசை நிமித்
தமாகவந தப்பராசத்தியிற் டத்திலொன்றி
ற் சாதாக்கியத்தையும், ஆதிசத்தியிற பத்திலொன்றிலே யமூர்
த்தி சாதாக்கியத்தையும், இச்சாசத்திப் பத்திலொன்றிலே மூர்
த்தி சாதாக்கியத்தையும், ஞானசத்திப பத்திலொன்றிலே கர்த்
திரு சாதாக்கியத்தையும, கிரியாசத்தியிற பத்திலொன்றிலே
கன்ம சாதாக்கியத்தையும, இங்ஙன மடைவே பஞ்ச சாதாக்கி
யத்தையுந் தோற்றுவியா நிற்பள்.

கர்த்திரு சாதாக்கிய முதலான நாலு சாதாக்கியமு மிலி
ங்காகாரமாயே யிருக்கும். மற்றக் கன்ம சாதாக்கிய மொன
றுமே சிவலிங்கமும் பீடமுமாயிருக்கும். ஆதலா லான்மாக்
கள் சிவபூசாதி கன்மங்களை இந்தக் கன்மசாதாக்கியத்தி லிட
த்திலே தானே செய்வார்கள்.

இந்தச் சிவலிங்கத்திற் றானே பூசிக்கவேண்டுமோ வெனி ன்? தண்டில முதலியவற்றிற் சிவனைப் பூசிக்க லந்தப் பூசை யிலுண்டான நூறுதிக மிகுந்த குற்றமாய் விடும். சிவலிங்கத் திற செய்தபூசை சமபூரண மல்லாவிட்டது மந்திரங்கள் திர விய மில்லாவிட்டதனு சமபூரணமாய் விடும ஆதலாற், சிவ லிங்கத்திலிட்டத்திற் செய்யும பூசையே சிறப்பென றாகமத்திற் கூறியதென வறிக.

௨௧௩ திருவுரு ம் புணர்ந்திலங்கு லகுயி ரெல்லாமீ னறும்	இலிங்கமயமாயிருக்கிறது லிங்கமும், பீட மயமாயிருக்கிறது யோனியுமாகிய விருவுருவும், தமமிற் பிரியாமல ஆனமாககளை யீடேற்று கையின பொருட்டுக் கூட்டி வைத்தவமா யா காரியமாகிய தனுவாதிகளை யானமாக

களுக் குண்டாக்கி; இங்ஙனஞ் சத்தியுடனே கூடிப் பிரபஞ்சத் தைத் தோற்றுவித்தானே யாயினும,—

பவன் பிரம சாரியாகும்	பவனுகிய சிவனெப்பொழுது நித்திய பிர மசாரியாயே யிருப்பன —
பானமொழி கன்னியாகும்	அந்தச் சத்தி யெப்பொழுதும கன்னிகை யாகவே யிருப்பள —
தவந்தரு ஞா னத்தோர்க்கித் தன்மைதான்	முற்சனனத்தி லார்ச்சித்த தபோபலத் தால ஞானத்தைப்பெற்ற ஞானிகளுக் கித் தமுறைமை தெரியாநிற்கும். எ-று.

றெரியுமன்றே.

உலகென்பது - புவனாதிகளை.

உயிரெல்லா மென்றது முப்பத்து முக்கோடி தேவர்களை யுஞ் சிருஷ்டித்ததெனவறிக.

இது பலபெயரும் பல வெழுவாயுங் கொண்டது.

இதற்கு வாதுளோத்தரத்தும் வாதுள சுத்தாக்கியினும் மறிக.

“மின்னிடை யுமைவாள்” எனும் திருவாசகம் திருப்பொற்சுண்ணத்தில் - கங - வது செய்யுளில் “மகட்குத், தனையுடைக் கேள்வனை மகனைத் தகப்பனைத் தமையனையெம்மையனை முதாள்கள்பாடி’ எனவும், “சிற்றிடைக்கொல்கு நட்டங்குறு திருவயிற் றுமொருத்தி, பெற்றெடுக்குந் திறத்தை பிள்ளைகளை மூவரம் மூவரையுங், கற்றிடச்சொன்ன பொருளெல்லாம் முறைவயிற் கைக்கால், செற்றிடச்சொன்ன பிள்ளைகளையும் தாயைமையைக் கேட்பியுமே” எனவும் இக்கருத்தைப்பற்றி வந்தவாறு காண்க. “மயிலாயினை யொளிசசை” எனப்படுவும், “மகேனை மனைவியைப் பெற்ற, தாயிலானைத் தழுவுமெலாருவியே” எனவும் அறிக (எஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேலிதுவுமது

சிவஞ்சத்தி தன்னையீன்றும் - பரமசிவன் ஆன்மாக்களுக்குச் சாயதத்துவங்களையு முலோகங்களையு முண்டாக்குவதாகவும், யோகிகளுக்கு உபகாரார்த்தமாகவும், சுயமேவ கருணையை நினைத்துப பராசக்தி பஞ்ச சக்திகளையும் கிரமத்திலே தோன்றப்பண்ணுவன,—சத்திதான் சிவதத்தையீன்றும் - அந்தப் பஞ்சசத்திகளும் முத்தியுக்தராகிற சதாசிவாதிகள் சிவசாதாக்கியாதிகளைத் தங்கள் தங்களிடத்திலே தோற்றுவிக்கும்,— உவந்திருவரும் புணர்ந்து உலகுயிரெல்லாமீன்றும் - அந்தச்சத்திகளுடைய அம்சமான பஞ்சசாதாக்கியங்களிலும் சிவன் பிரிவறப் புணர்ந்து நின்று எல்லாப் புவனங்களையும், புவனவர்த்திகளான ஆன்மாக்களுடைய தநுகரணங்களையு முண்டாக்குவ

ர்,—பவன்பிரமசாரியாகும் - இந்த உற்பத்திகளைப் பண்ணுவிக்கையால் பவனென்னும நாமத்தையுடைய * வாகீசராகிய சிவன விகாரமின்றிச் † சந்ததம ப்ரப்பிரம ‡ வாச்சியமான பரமசிவ பாவனையைப் பண்ணிக்கொண்டிருப்பர் —பானமொழிகனலியாகும - வாக்கு ரூபையான சத்தியும் || சங்கவர்ஜிதையாகியே யிருக்கும —தவத்தரு ஞானத்தோராக நிற்றன்மைதான் றெரியுமன்றோ - பூர்வசன்மத்தத் தவப்பலத்தினாலே குரு அனுக்கிரகத்தைப் பெற்று,ஞானநிஷ்டரான பெரியோர்களுக்கு இத்தன்மை ¶ அநுபவாரூடமாமென்றிதன்பொருள்.

* வாகீசர-வாக்குக்கு அதிபதி, † சந்ததம-எப்போதும், ‡ வாச்யம் - அர்த்தம், || சங்கவர்ஜிதை - விஷயப்பற்றில்லாதது. ¶ அநுபவாரூ-ம - அநுபவத்தை யேறினது.

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

முன்சொன்ன முறைமையிற பேதப் பிரசவம் பேசுகின்றார்.

சிவஞ்சத்தி தனையீனுஞ் சத்திதான்சிவத்தையீன்றும் - சுத்த சிவசோதி மத்தியசோதி நிஷ்கள நிருத்த சிவத்திலின்றுஞ் சோர்ந்திய அதிக்கிராந்த வித்தக பரசிவம், அதிக்கிராந்த

விந்துக பராசத்தியைத் தோற்றுவித்தும், அந்த அதிக்கிராந்த விந்துக பராசத்தி அனதிக்கிராந்த விந்துக பரசிவமென்னும் அபரநாதத்தைத் தோற்றுவித்தும், அந்த அபரநாதம் அனதிக்கிராந்த விந்துக பராசத்தியென்னும் அபரவிந்துவைத் தோற்றுவித்தும், அந்த அபரவிந்துவாகிய பராசத்தி ஆதிசத்திமுதல் நாலுசத்திகளைத் தோற்றுவித்து அந்த ஐந்தோடு பஞ்சசத்திகளிற் பஞ்ச சாதாக்கியங்களையும் பஞ்ச மூர்த்திகளையும் தோற்றுவித்தும், பஞ்ச சாதாக்கியங்களையும் பஞ்ச மூர்த்திகளையும் தோற்றுவித்தும், பஞ்ச சாதாக்கிய பஞ்சமூர்த்தி மூர்த்திகளைப் பிர பஞ்சப் பிரமங்களையும் விட்டு சமட்டி சதாசிவமாய்த் தோற்றுவித்தும், சதாசிவன் மனோன்மனியைத் தோற்றுவித்தும், மனோன்மனி மகேசுவரனைத் தோற்றுவித்தும், மகேஸ்வரன் மகேஸ்வரியைத் தோற்றுவித்தும், மகேஸ்வரி உருத்திரனைத் தோற்றுவித்தும், உருத்திரன் உமையைத் தோற்றுவித்தும், உமை மாலைத் தோற்றுவித்தும், மால் மகாலட்சுமியைத் தோற்றுவித்தும், மகாலட்சுமி பிரமாவைத் தோற்றுவித்தும், பிரமா சரஸ்வதியைத் தோற்றுவித்தும்;

இப்படிச் சிவபேதம் சத்திபேதமாகும் சிவஞ் சத்தியிருவரும் மகாமாயோபாதி புவனோபாதி மணந்து, பரவாகீஸ்வரி பரவாகீஸ்வரர்களாயும், அநந்தேஸ்வரத் துவாரத்திலே மாயோபாதி புவனோபாதி மணந்து, அபரவாகீஸ்வரி அபரவாகீஸ்வரர்களாயும், கேவல மாயாதேகோபாதி மணந்து மாதாபிதாக்களாயும்,—

உலகீன்ற இருவரும் புணர்ந்து - பருவமணந்து, அங்கு சுத்தமார்க்கத்தில்,—

இங்கு - அசுத்தமார்க்கத்தில்,—

உலகுயி ரெல்லாமீன்றும் - தனுகரண புவனபோகங்களை, அது சிவபேதம் அது சத்திபேதமாம். முத்தான்ம சிவ

ன், முத்தான்ம சத்தி, சிவமூர்த்தி, சத்திமூர்த்தி, ஈசான ஈசாவி, முதர்க்கிரம சதாசிவ மனோன்மனி முதல் நிரஞ்சனப் பிரமாசரஸ்வதி யீறாகவும், சாருசனப பிரமாதி ஸதம்ப பரியந்தமாகவும், எண்ணிறந்த ஆன்ம வர்க்கமனைத்தும் தோற்றுவித்தும்,—

பவன பிரமசாரியாகும் பானமொழி கன்னியாகும் - சம்புபக்ஷ நயாயிவபோக, சதசிபக்ஷ நவசதுதிபேதத் தோற்றமொடுக்கங் கிரியாசத்திப் பிரவிர்த்தி நிவிர்த்தி வைசித்திரியமாத்திரமாதலாலும், உவாநது புவாநதென்பது-உத்தியோகித்துச் சங்கற்பித்து என்று பொருள் போதருதலாலும், சிவம் நித்தியப் பிரமசாரி, சத்தி நித்திய கன்னிகையாம் —

இத்தன்மை - இந்தரகசியம் தான்,—

தவநதரு ஞானத்தோர்க்கு - சமாதிகொடுக்கும் சாக்ஷாத்காரவான்களுக்கு,—

தெரியுமன்றே - காணப்படுந்தானே

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சத்தியுஞ் சிவமுஞ் செய்யு மிச்செயல்களெல்லாம் நம்மனோர் பொருட்டாக நடிக்குங் கூட்டம் நாடகமாத்திரையேயன்றிப் பிறிதில்லை யென்பதாம்.

உம்மை - சிறப்பு.

“பக்கமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான்” என்பதுமுதலாக மேலைச் சூத்திரத்தின் விரித்துக் கூறியவற்றை, ஈண்டுருவகஞ் செய்து முகத்தாற் றொகுத்துணர்த்தி இவற்றின்றன்மை தனக் கெய்தலின்மையுதலைத் தெரித்துக் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சிவசத்திகளுட் னொன்றிலே யொன்றாகத் தோன்றுமோவெனனில்? அப்படித் தோற்றஞ் சொன்னாலும் சிவனுக்குஞ் சத்திக்கும் ஒருக்காலுந் தோற்றமில்லையென றருளிச்செய்கிறார்.

சிவஞ்சத்தி தனையீன்றும் - சிவன் சத்தியைத் தோற்றுவித்தும்,—சத்திதான் சிவத்தையீன்றும்-அந்தச் சத்திதான் சிவத்தைத் தோற்றுவித்தும்,—உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லாமீன்றும்-அவர்க ளிருவரும் பிரிப்பட்டுக் கூடினவிடத்திலே பிரபஞ்சத்தையும் ஆன்மாக்களையும் தோற்றுவித்தும்,—பவன் பிரமசாரியாகும்-இப்படிச் சத்தியுடனேகூடிப் பிரபஞ்சத்தை யெல்லாம் பெற்றானே யாயினும், பரமேஸ்வரன் எப்போதும் பிரமசாரியாயே யிராநிற்பன—பான்மொழிக் கன்னியாகும் - பால்போன்ற மொழியையுடைய பரமேஸ்வரியும் எப்போதுங் கன்னிகையாயே யிராநிற்பள். இந்தவுலகங்களையெல்லா முண்டாக்கியும் இப்படி யிருக்குமுறைமை யறிகிறவர்களில்லையோ வென்னில்?—தவத்தருஞானத்தோர்க் கிந்தன்மைதான்றெரியுமன்றே-முற்சனனங்களிலே செய்த தபோபலத்தாலே ஞானத்தைப் பெற்றவர்களுக்கே இந்த முறைமை தெரிவது

இதனாற் சொல்லியது சிவசத்திக ளிரண்டும் ஒன்றிலே யொன்றாகத் தோன்றியும், இவர்கள் தங்களிற் கூடிப் பிரபஞ்சத்தையெல்லா முண்டாக்கியும், பரமேஸ்வரன் பிரமசாரியாயும் பரமேஸ்வரி கன்னிகையாயு மிருப்பார்களென்றும்; இந்த முறைமை ஞானவான்களுக் கொழியத் தெரியாதென்னு முறைமையும் அறிவித்தது.

‘சிவஞ் சத்தி’ ‘சத்தியாய்’ ‘சத்திதான்’ ‘சிவஞ்சத்தி’ ஆக நாலு திருவிருத்தமும் சுத்தமாயையிலே சிவசத்திகள் திருமேனிகொண்டு பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நடத்தி நிற்கிற முறைமையைச் சொல்லியது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சிவஞ்சத்தி தன்னையீன்றும் - சிவதத்துவத்தினின்றுஞ் சத்தித்துவந் தோன்றியும்,—சத்திதான் சிவத்தையீன்றும் - சத்தித்துவத்தினின்றுஞ் சாதாக்கிய தத்துவந் தோன்றியும்,—உவகிருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும் - உவப்புற் றிருவருங்கூடி - இயைவிட்டது சடப்பிரபஞ்சஞ் சேதனப்பிரபஞ்சமெல்லாவற்றையுந் தோன்றச் செய்து,—பவனபிரமசாரியாகும் பானமொழிக கன்னியாகும்-இத்தத்துவமுதல்வ அனந்த முயிர்களேயடியையவனல்லவாகலின், பவனபிரமசாரியாதலும் பானமொழிகன்னியாதலு மாகிய வியப்புடைமை,—தவத்தருஞானத்தோர்க்கு - முறைமை விசேடத்தால் முதல்வனருட் பெற்ற ஞானிகட்கு,—இத்தன்மைத்தான வரியபுணர்ப்பே - சத்தியுஞ் சிவமுஞ்செய்யு மிச்செயல்களெல்லாம் நமக்குநேரே பொருட்டாக நடித்துக் காட்டும் நாடகமாகுமன்றோ! பிறிதில்லையென்பது விளங்குமென்பதாம்.

‘பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான்’ என்பது முதலாக மேலைச் சூத்திரத்தில் விரித்துக் கூறியவற்றை யீண்டுருவகஞ் செய்யு முகத்தாற் றெருட்டுணர்த்தி; இவற்றின் றன்மை தனைச் செப்புதலின் முதலே தெரித்துக் கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

தத்துவஞானியி னிலக்கண முணர்த்துகிறார்.

தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம்வீடெ
ன், றனுவினோ டெல்லாமாகி யடைந்திடுந் தத்துவ
ங்க, ளினிதறிந் திவைநிவிர்த்தி முதற்கலை யிடத்தேநீ
க்கி, நனிபர முணர்ந்தோனந்தத் தத்துவ ஞானியா
வான். (எ௮)

(இ-ள்.) **தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம்வீடென் றனுவினோடெல்லாமாகி யடைந்திடுந் தத்துவங்கள்** — ஆன்மாக்களுக்குத் தனு கரண புவனமாகிய விவைகளை மாயாபந்தத்துக்குக் காரணமென்றும், அதற்கு மேலான சுத்தமாயையே யான்மாக்கட்கு மோட்சத்துக்குக் காரணமென்றும், இப்படி யான்மாக்கட்குப் பலவாகத் தத்துவ முதலியவைகள் பொருந்தாநிற்கும்.

இனிதறிந்து — இதுக் கசுத்தமாயா பந்தமென்றும், இதுவே சுத்தமாயா பந்தமென்றும், இரண்டினையு நன்றாக வறிந்து;

இவைநிவிர்த் திமுதற் கலை யிடத்தேநீக்கி — மந்திரமுதலிய வைந்தினையு மாசாரியனாலே நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளி லவைகளிருக்கும் வியாத்தி வியாபகங்களையு மறிந்து தீக்ஷையிலுஞ் சோதிக்கப்பட்டு,

நனிபர முணர்ந்தோ னந்தத் — அந்த ஞானாசாரியராலே மேலான சிவனுடைய சம்பிரதஞானத்தை யறிந்தவனே த

தத்துவ ஞானி யாவான். தத்துவஞானியாவான். இஃதன்றி யிராகவசத்தாலும் வாசனுபவத்தாலு மதனவழி நின்றவன் தத்துவஞானியல்ல எ-று.

இதற்குச் சாவஞ்ஞானோத்தரத்துச் சித்திய விசுவத்து மறிக (௭௮)

சிவாகரயோகியருரை வருமாறு.

மேல் தத்துவஞானியாவான்து லக்ஷண முணர்த்துதல்.

தனுகரண புவனபோகந் தராபரம பந்தம்விடென றனுவிரேற டெல்லாமாகி யடைந்திருந் தத்துவங்கள்-ஆன்மாக்களுக்குக் கனமான குணமான தனுவாகவும் அந்தாப்பகிஷ கரணங்களாகவும் வாசஸ்தானமாகவும் போகவஸ்துக்களாகவும் பிருதிவியாதி சாதாக்கிய தத்துவபரியந்தம் பொருந்தும். இந்தச் சாதாக்கிய தத்துவத்துக்குமே லிரண்டு தத்துவமும் விஞ்ஞானந்தமய கோசமானதால் பரமமான பந்தமும் தன்னிவிருத்தியே பரமமான மோக்ஷமுமாம.—இவிந்நிந் நிலை நிவிரத்திமுதற் கலையிடத்தே நீக்கி நனிபரமுணர்ந்தோனைத் தத்துவ ஞானியாவான-இந்தத் தத்துவங்களு முப்பத்தாறினுடைய ஸ்வரூப சுவபாவங்களை நன்குக அறிந்து, நிவிர்த்தியாதிகளிலே யடங்கிய தத்துவங்களினுக்க கலைகளையுங்கூட நீக்கிச் சாக்தி யதீதத்துக்கு மேலாய் ஆனந்த ஸ்வரூபமாகிய பரசிவத்தை அருக்ஷியமாக தரிசித்தவன ஷடத்துவாந்தத்தில் பரதத்துவ ஞானியானவன். அவனே ஜநநமரண மில்லாதவனென்றிதன பொருள்.

வாசஸ்தானம் -இருப்பிடம், புவனம்.

தடீத்தஞ் ஜ்ஞாநேநா த்ரேண யேநதா ஸ்வஸ்வ பூதகஸா
நாம விஜ்ஞா நா நாக்ஷ தஸ்ய தா:| நோடியா ஸ்தநம் ஸத்ரு
ஸவமேதம்பிவமேவ நாசிஷி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

தவாதரு ஞானத்தோர்க் கிதத்தன்மைதான் தெரியுமென் றதனால், ஞானவாளிலக்கணங் கூறுகின்றார்.

தனு - தூலதேகம்,— கரணம் - சூக்குமதேகம்,— புவனம்-உலகம்,— போகம்-சந்தனம் மாலை மகளிர் முதலிய போக்கியப்பொருள் இவைகள் அசுத்தமாயாகாரியம்.— தற்பரம்- அதற்கு மேலாகிய தனுகரண புவனபோகமா யிருக்கின்ற சுத்தமாயாகாரியம் நிராளிரைபே,— பந்தம - அசுத்தமாயா காரியம்,— வீடு-அபரமுத்தித் தானமாதலால் சுத்தமாயாகாரியம்,—என்று-இவைகளெல்லாம்,—அணுவினோ டெல்லாமாகிய டைந்திடுங் தத்துவங்கள் - ஆன்மாவினோடு பொருந்தும் தத்துவ தாத்துவிகங்களை இவைகளை,—இனிதறிந்து - உத்தேசலக்ஷண பரீக்ஷைகளினாலே நன்குணர்ந்து, இது பரோக்ஷஞானம் ஆதலால் அபரோக்ஷஞானம் வரும்பொருட்டு ஆறத்துவாவாகப் பகுத்த முறைமையின்,—நிவிர்த்தி முதற்கலையிடத்தே நீக்கி-நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தை சாந்தி சாந்தியதீதை யென்கின்ற கலைகளிடத்துத் தள்ளி,—தனிபர முணர்ந்தோனை - தான் சின்மாத்திரமாய்ச் சேவித்து நின்று சிவனையுஞ் சின்மாத்திரமாகச் சிந்தித்துத் தற்பர சிவபரங்களை யைக்கியம்பண்ணித் தியானம்பண்ணினவன், —அந்தத் தத்துவ ஞானியாவ

ன் — முறைமையிற் சமாதி ஞானவானுய்ப் பின் அபரோக்ஷ சா க்ஷாத்கார சிவசிவ தற்சிவ ஞானவானுவன்.

சிவஞானயோகியருணை வருமாறு.

தனுகரண புவனபோகங்களும், அவை மூலமாயுள்ள பெத்தமுத்திகளும், அப்பெத்த முத்திகளிற்படும் பேதங்களைத் தும், மேற்கூறியபோதக தத்துவங்களாறுமிவையென்றும், அத்தத்துவங்களா உயிர்களோடியைவன வன்றி முதல்வனோடியைவனவல்லவென்றும், தாங்களாளும் பொருந்துமாற்றானுந் தெளிவுணர்ந்து, ஆசாரத்துவங்களாமுங் கழியுமாறுணையின வைத்துக் கழித்து, அவற்றிற்கு மேலாய் நிற்பதொன்றாகிய ஐம்பதி நிர்ணயிர்ப்பெற்றோனாயாவன் அவன்; பலவும் பிரமசாரியும் பானமொழி கைவிடுமாமெய்யனும் அவ்வுண்மை யறிவுடையனுமவனென்பதாம்

தவக்குரு ஞானத்தோராக சித்தனை தானே ஞெரிபுமென்ற தனைத் தெரிந்துணர்ந்து மேலதனை வழியுறுதிபயாறு.

தற்பரமென்னும் வடசொல் அப்பொருட்டாதல் தாற்பரியமென்பதனுறு மறிக.

நிரம்பவழகியருணை வருமாறு.

முன்னே சொல்லிப்போந்த தத்துவங்களெல்லாம் ஆன்மாக்களுக்குக் கருகாணமுத வெல்லாமாகப் பொருந்தி நிற்கு மென்றாய்ந்து இவையிற்றி னுண்மையை யறிந்து நீக்கிச் சிவநி

சனப் பட்டவர்களே ஞானவானக ளென்றும், அருளிச்செய்கிறார்.

தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம்வீடென ஞானி றே டெல்லாமாகி யடைந்திடும் - சரீரமுங் கரணங்களும் உலோகமும் புசிக்கத்தக்க பொருள்களுமாகிய அசுத்தமாயையும், அதற்குமேலான மாயையுங் கன்மத்தாலுண்டாகத் தக்க கட்டுப்பாடுகளும் சாலோகசாயுச்சியான பதமுத்திகளும் என்று ஆன்மாவுக்கு இப்படிப் பலவாகப் பொருந்தாநின்றது — தத்துவங்களின் விதறிந்து - இந்தத் தத்துவங்களின் உண்மையை நன்றாக விசாரித்துப்பார்த்துப் பொய்யென்றறிந்து,— இவை நிவிர்த்திரூபத்தாற் கலையிடத்தே நிற்கும் - இந்தத் தத்துவரூபப்பதார்த்தங்களையும் நிவிர்த்திமுதலான பஞ்சகலைகளுடனே நீக்கி,— ஈறிபர முணர்ந்தோனந்தத் தத்துவ ஞானியாவான் - மிக்கசிவனை யறிந்தவன் அந்த உண்மை ஞானியாவான்.

இதனாற்சொல்லியது, ஆன்மாக்களுக்குச் சர்வவ்யாபாரமுமாய்ப் பொருந்தி நிற்கிறது தத்துவமென்றும், அவையிற்றினுண்மையை யறிந்து அவையிற்றைப் பஞ்சகலைகளுடனே நீக்கிச் சிவனுடைய வுண்மையைத் தரிசித்தவனே சிவஞானி யாவனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம்வீடென்று - தனுகரண புவனபோகங்களும் அவை மூலமாயுள்ள பெத்தமுத்திகளும்,— எல்லாமாகி யடைந்திடுந் தத்துவங்களென்று - அப்பெத்தமுத்திகளிற் படும் பேதங்களனைத்தும் மேற் கூறிப் போந்த தத்துவங்களாயின வென்றும்,— இவை பகுதியிலு

டிவிகறிந்து - அத்தத்துவங்க ளுயிர்களோ டியைபவனவன்றி மூகஸ்வரோ டியைபவனவல்லவென்றும், நூல்களாலும் பொருந் தமாற்றாலுந் தெளியவுணர்ந்து,— நிவிர்த்திமுதல் கலையிடத் தே நீக்கி - அத்தத்துவங்களை நிவிர்த்திமுதலாகக் கழியுமுறை மையின வைத்துக்கழித்து,— நவிபர முணர்ந்தோன - அவற்றி ற்கு மேலாய் விற்பரோனறிவை யையகதிரிபின்றி யுணரப்பெற் றோன யாவன அவன,— அந்தத் தத்துவ ஞானியாவான-பவ ன பிரமசாரியும பானமொழி கன்னியு மாமெனனும் அவவுணமை யறிவுடையவருவன.

தவகதரு ஞானதபோதர்க கித்தனமைதான றெரியுமெனப தன்னைத் தெரிந்துணாகதி மேலதனை வழியுணாததியவாறு

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மாககட் கிப்படித் தத்துவங்களைக கூட்டிக் கா
ரியப்படுத்தும சேககாரணந்தா லெனினமே கன
மக்ஷயம் பிரந்து மலம்போவது காரண
மென றுணாத்துகிறார்.

எல்லாமாய்த் தத்துவங்க ளியைந்ததே னுனுக்
கென்னிற, றொல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத்
துடைத்தற்கும்பின், னில்லாமன் முற்றுவித்து நீக்கவு
கூடிநின்ற, பொல்லாத வாணவத்தைப் போக்கவும்
புகுந்ததன்றே. (எக)

(இ-ள்.) எல்லா ஆன்மாக்கட் கிப்படித் தத்துவங்களைச்
மாய்த்தத் சிவன வெகுவிதமாகப் பொருத்திய தேத
துவங்க ளி காரணத்தாலெனவில்?
யைந்ததே னுனு
க்கென்னில்

தொல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத் தொடைத்தற்கும

எடுக்குஞ் சனனங்கடோறும் பழையதாய் வருகிற பிராரத்த கன்மங்க ளெல்லாத்தையு மான்மாக்க ளதனைப் புசித்துத் தொலையாவிட்டது சனனமறாதாதலால் அதனைப் புசித்துத் தொலைக்கைக்குக் காரணமாகவும்,

பின்னில்லாமன் முற்றுவித்து நீக்கவும

சஞ்சிதகன்ம பெருக்கு முடலின்கட்பொருந்தில்லாதபடி தீக்ஷையினாலே சோதித்துப் போக்குகைக் காரணமாகவும,

கூடிநின்ற பொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்தன்றே.

தாமிரத்துக்குக் காளிதஞ் சகசமாயிருக்குமாறுபோல ஆன்மாக்கட்குச் சகசமாய்க் கூடிநிற்கும் பொல்லாதெனக் கூறியவாணவத்தைப் போக்குகைக் காரணமாகவுமாதலால், சத்துவங்களாகக் கூட்டிச் சிவன் காரியப்படுத்துவன. எ-று.

உம்மை எண்ணும்மை.

இதுவுஞ் சர்வஞானோத்தரம். (௭௧)

சிவாக்ரயோகியருளா வருமாறு.

—o—

மேல் ஆன்மாக்களுக்கு தநுகரணாதி பொருந்தவேண்டிய காரண முணர்த்துதல்.

எல்லாமாய தத்துவங்களியைந்ததேனனுவுக்கென்னில்-தத்துவங்களானவைகள தநுகரண புவனபோகங்களாய் ஆன்மாக்களுக்குக் கூடவேண்டியதேனென்னில்?—தொல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத் தொடைத்தற்கும்-ஆன்மாக்களுக்குப்பிரவாக வநாதியாக வருகிற கர்மபலங்களைப் புசிப்பித்துத் தொ

லைக்கவும்,—பின்னில்லாமை முற்றவித்து நீக்கவும்-மேலந்தக் கனமம் பொருந்தி நில்லாதவாறு இருவினை யொப்பாகிய பக்குவத்தைப்பண்ணிச் சஞ்சிதமாகிய சர்வகாமத்தையுமழிக்கவும்,—கூடிநின்ற பொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்தன்றே-செம்புக்குக் களிம்புபோல ஆன்மாவுடனே கூடிநிற்கிற அஞ்ஞானத்தை யொழிக்கவும், தநுகரணாதிகள் பொருந்தினதெனறிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

தநுகரணாதிக ளுயிரொடு சாரக் காரண மேதென்னக் காரணங் காண்பிக்கின்றார்.

எல்லாமாய்த் தத்துவங்க ளிசைந்ததென னுணுவுக்கெனில் - தத்துவங்களெல்லாம் மாயையினுண்டாயுயிரை வந்து பொருந்திய தேதுக்கெனில்?— தொல்லாய கன்மமெல்லாத் துய்ப்பித்துத் துடைத்தற்கும்- மலபரிபக்குவத்தைப் பண்ணிச் சத்திபதிவித்துத் தீக்ஷைசெய்வித்துச் சஞ்சித கன்மமெல்லாம் புசிப்பித்துத் தளைதற்கும்;— பின்னில்லாமை முற்றுவித்து நீக்கவும் - பிராரத்தம புசிக்குமிடத்துத் தியானபூசைமுதல் அனுஷ்டானங்களால் ஆகாமியஞ் சேவித்து நில்லாமற் கெடுத்துப் போக்கவும்,—கூடிநின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தவன்றே - சிவத்துவ விரோதியாகிய மூலமலத்தை முடிக்கவும் அடுத்ததன்றே.

தநுகரணாதிகள் மலபரிபாகத்துக்குக் காரணமாகில் விஞ்ஞானகலர்க்குத் தநுகரணாதியில்லாமையால் மலபரிபாகம் வரக் காரணமில்லை. சத்தியம் சோத்தியது; சகலராய் முன்னிரு

க்கயோகதிருகாரணிகளால் மலத்திலை வைத்த வாசனையால் மலபரிபாகம் வரும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனஞ் சுத்ததத்துவங்கள் அணுவின்றொடெல்லாமாகி உடைந்ததூஉம், இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும், அதனாற் பருவமெய்திய வழி மேலைக்கு வித்தாகாதவாறு நீக்கவையாணவாதிகளை முதிர்வித்துப் பற்றறக் கழித்தற்பொருட்டும், அவை கழியுமாகத்தால் எல்லா வுலகங்கட்கு மூலமாகிய வாணவமலசத்தியைப் போக்குதற்பொருட்டுமா மென்பதாம்.

எனவே, சுத்ததத்துவங்களான் நீக்கப்படுவனவாகிய மலங்கள் மங்கள அணுவுக்கேயன்றிச் சிவத்துக்கின்மையான, அந்தத்துவங்களும் அணுவின்றொடன்றிச் சிவத்தோ டியைபிலவாயினவென அதனாற் குசங்கை நீக்கியவாறாயிற்று.

அணுவுக்கேயென்னும் பிரிநிலையேகாரமுந் தொன்மையெனு மகரவைகார விகுதியும் விகாரத்தாற் றொக்கன.

இவை ஏழுசெய்யுளானும் காலாங்கூற்றிற பயும் முத்திறப்பொருளும் வகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலிந்தத் தத்துவங்கள் ஆன்மாவைப் பொருந்தினது யேது காரணமென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

எல்லாமாய்த் தத்துவங்க ளிசைந்ததே னணுவுக்கெனில்-ஆன்மாவுக்குத் தத்துவங்களிப்படி வெகுவிதமாகப் பொருந்தினது ஏது காரணமென்று நீ கேட்கில்,— தொல்லாய கன்ம மெல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற்கும்- பழைமையதாய் வருகிற பிராரத்த கன்மங்களை யெல்லாம் புசிப்பித்துத் துலைப்பிக்கைக்கும்,—பின்னில்லாமல் முற்றுவித்து நீக்கவும் - சஞ்சித கன்மம் பின்பு இல்லாமல் முகிவித்துப்போகவும்,—கூடி நின்றபொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்ததன்றே - ஆன்மாவுக்கு அநாதியே சகசமாய் விட்டு நீங்காமல் நிற்கிற அஞ்ஞானமான வாணவமலத்தை நீக்குவது நிமித்தமாகவும் பரமேஸ்வரனுடைய வாக்கினையாலே இந்தத் தத்துவங்க ளியைவதது பொருந்தாநின்றது.

இதனாற்சொல்லியது, இந்தத் தத்துவங்கள் ஆன்மாவுக்கு பலபிரகாரமாக வந்து கூடினது கன்மத்தைப் புசித்துத் தொலைக்கைக்கும், சகசமாய்நின்ற வாணவமலத்தைப் போக்கவு மென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தத்துவங்க ளணுவுக்கு எல்லாமா யிசைந்ததெனில் - அங்ஙனந் தத்துவங்க ளணுவினோ டெல்லாமாகி யடைந்தது யாதன்பொருட்டெனவில்?— தொல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற்கும்-பழைய இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும்,—பின்னில்லாமை முற்றுவித்து நீங்கவும்-அதனாற் பருவமெய்திய வழி மேலைக்கு வித்தாகாதவாறு நீக்கையா வதற்றை முதிர்வித்து பற்றறக் கழித்தற்பொருட்டும்,—

கூடிநின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுசேதன றே - அவைகழியு முகத்தால் விரவிநின்று எல்லா அநுதவ கட்கு மூலமாகிய வாணவமலத்தைப் போககுதற் பொருட்டு மாம.

இவை ஏழு செய்யுளானு காலாங்கூற்றிற்படு முதநிரப் பொருளும் வகுததுக் கூறப்பட்டன.

☞ உ-சூ, ச-அதி, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

அவ் வாணவ விலககண மிஃதென வுணர்த்துகிறார்.

ஒன்றதா யநேகசத்தி யுடையதா யுடனாயாகி, ய
ன்றதா யானமாயின்ற னறிவொடு தொழிலையார்த்து,
நின்றுபோத் திருத்துவத்தை நிகழ்த்திச்செம் பினிற
களிம்பேய்ந், தென்றுமணு ஞானங்காட்டு மாணவ மி
யைந்துநின்றே.

(இ-ள்.) ஒனறதாய — ஆணவமலஞ் சடமுமா யநேகமுமாகிற கட படாதிகளைப்போல வநித்தியமாய்விடு மாகையாற் பலவினறி யொனறு யிருப்பதாய், அஃதொன்றாய் அநேக வானமாககளை யெப்படி மறைககு மெனவில் ?

அநேக சததி யுடையதாய் — அநேககோடி காரியத்தை யுடைத்தாயென்றது, "அநேக மறைப்பன வாயிரகோடி விருத்திகளே" என வறிக. மல பரிபாகம் வந்த முந்தான்மாக்கட்கு மறைக்குந் தனது சத்திகளைப் பெத்தான்மாக்களையே மறைபபதாய்,

உடனாய் — விட்டு நீங்காததாய்,

ஆதியன்றதாய் — ஆன்மாக்கட் கொருகாலத்தில் வந்து கூடினதன்றி யநாதி சமவாயமாய்,

ஆணமாவின்றா றைதி வாடு சொ ழிலை யாதது நி னறு — இந்தப் பூதவிருளானது பிரபஞ்சத்திற் பதார்த்தங்களையுங் காணும்படி மறைத்துத் தன்னையே காட்டாநிற்கும். இந்தவாணவமு மதுபோலத் தன்னையுங் காட்டாமல் வேறொருபொருளையுங் காட்டாமலான்மாக்களின் ஞானக் கிரியைகளை மறைத்து நின்று,

போதிந்தது வுதவை நிழுதி — புசிக்கத் தக்கவைகளில் விருப்பத்தை வைத்து, அஃதாவது மாயாபோக மசுசியுமாய்ப் பொல்லாதிருக்கினு மதனைப் பாகக்கொட்டாமல் அதிக மோகமா உதிரசெல்லுகை

செயினிற்க ளிம பெய்ந்து — செம்பினிற் களிம்பையொத்து அநாதியே சகசமாய்

என்றுமன்ஞா னங்கா ட்டு மா லையிடைநது நி ன்றே. — ஆணவமான தான்மாக்களைப் பொருந்தி நின்றெப்பொழுது மஞ்ஞானத்தை விளக்குமதே சுபாவம். எ-று.

இதற்கு மிருகேந்திரத்து மலங்கத்துங் காண்க.

இந்த மலஞ் சகலரென்னப்பட்ட வான்மாக்கட்குச் சகலாவத்தையி லாகமுதலிய கருவிகளுடனே கூடிநின்றவிடத்து மோகமுதலிய வெழுவகையினையுஞ் செய்விக்கும்.

மோகமாவது - சிவத்திரவிய மபகாரமுதலான தீபாதகமென் றாசாரியனு லறிந்தாலும், அந்தவுணர்ச்சி சிறிதும் விளங்காம லறிவை மயக்கி யதியாதகாரியைச் செய்விப்பது.

மதமாவது - யாதாமொருவன முன்மோகித்துப் புணர்ந்தபோது மடவாளைப்பார்த் திவள் தேவர்கண மடவாரிற் சிறந்தாள், இவளைப் பெறும்பேறுபோ லப்பே றெமக் கில்லையென்று மதிப்பது.

அராகமாவது - அவளைப் பெறுதபோது மிகவும் வருந்தி யழும்படிக் காசையைச் செய்விப்பது.

விஷாதமாவது - தான வாஞ்சித்துப் புணர்ந்த மாதர் பிரிந்தபொழுது மிகவு மனோதுக்கஞ் செய்வது.

சோஷமாவது - சுற்றத்தைவிட டெப்படி நீங்குவோம். யாமரிந்தாற் குடும்பத்தை யாரதான றாங்குவாரென றந்த மனோதுக்கத்தாலே யுடம் புலருமபடி செய்விப்பது.

வைசித்திரியமாவது - சிவனமசகுள்ள விருவினைப் பலங்களுக் கிடாகத தெய்விகமுதலிய மூவிதத்தால் வருவிப்பவனை யுணராமை யழிப்பித் தவனெனனைக் கெடுத்தா னெடுத்தான், நானுமெனனை வணங்கினோ வாழவித்தே னெனமதிப்பது.

அரிசமாவது - புத்திர மித்திராதிகளைக் கண்டுகளித் தினி யெமக் கொன்றுங் குறைவில்லை யென்றிகழ்கை.

இப்படி யாணவ காரியத்தை யறிக. (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மாயை கனம மிரண்டனறியில் ஆன்மாவுக்கு உபாதியாக ஆணவமென றொன்றுசொனனது எவ்வாறுடைய தெனனின் ? மேலாறு விருத்தத்திலே யந்த ஆணவமல லட்சணபரீக்ஷைகளை சங்கையுத்தரங்களுடனே கூறுகின்றது.

ஆணவமொன்றதா யனேகசத்தியுடையதா யிசைந்து ஆதி யன்றந்த யுடனாய்ச் செம்பிற் களிம்பேய்த் தான்மாவின்ற னறி

வொடுதொழிலை யார்த்துநின்று பொத்துருத்துவத்தை நிகழ்த்தி யென்று மஞ்ஞானங்காட்டும்; எனமாறிக்கொள்க. ஆணவமானது ஒன்றேயாய்த் தத்தத்பரிபாக காலங்களிலே விட்டு நீங்குவதான அநேக சத்தியுடையதுமாய்ச் சர்வான்மாக்களிடத்திலும் சமயுக்தமான தெக்காலத் தெனனில்? ஆதியல்ல-அது வுமான்மாவைப்போல அநாதியாகையாற் செம்பு மதிற் களிம்பும்போலவாய்க் களிம்பு * ஸ்வர்ணதையை மறைத்தாற்போல அநாதியே ஆன்மாவினுடைய இச்சாஞானக் கிரியைகளைத் தடுப்பதாய், ஆன்மாக்களுக்கு அநாதி சமயுக்தமாய்க் கேவலாவஸ்தையிலே ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகளை † நிபிடாந்தகாரத்தில் விழித்த கண்போல விருக்கும்படிக்குத் தடுத்துநின்று, சகலாவஸ்தையில் மாயாபோகத்தைப் புசிக்கிறவளவுதையும் பண்ணுமாகையால், முதறியல்லாத கேவல சகலாவஸ்தா காலங்களெல்லா மஞ்ஞானத்தையே பண்ணுமென நிதனபொருள்.

* ஸ்வர்ணதை - பொன்னுயிருக்கை. † நிபிடாந்தகாரம்-மிகுந்த இருட்டு.

தடுக்தம் ஶ்ரீமந்ம்ருகேந்த்ரே - ஏகோ ஹ்யநேகஶக்திர்த்ருக்க்ரியயோஶ்சாதகோ மல: பும்ஸ: । துஷதண்டுலவஜ்ஜ்ஞேயஸ்தாம்ராஶ்ரிதகாலிகாவத்வா ॥ [illegible]

[illegible]

இந்த ஆணவ முண்டென்கிறத்திலே பிரமாணமானது பிரத்யக்ஷமோ, அநுமானமோ ஆகமமோ? ‡ அதீந்திரியமாகையினாலே பிரத்தியக்ஷமல்ல. பிரசித்தமான அக்கினியையும் தூமத்தையும் பாகசாலாதிகளிலே கண்டு, பர்வதத்திலே × வியாப்பிய லிங்கமாயிருக்கிற தூமத்தைக் கண்டு சாத்தியமாயிருக்கிற அக்கினியை நிச்சயிக்குமாப்போல ஆணவ ¶ சகசரிதமாக வொருவியாப்பிய ஏதுவைக் காணாதபடியாலே, அநுமானமுங்கூடாது.

‡ அதீந்திரியம் - இந்திரியத்துக்கெட்டாதது. × வியாப்பியலிங்கம் - வியாப்தியுள்ளேது; வியாப்தியாவது-சாத்திய சம்பந்தம், புகைக்கு அக்கினிசம்பந்தம்போல. ¶ சகசரிதம் - கூட இருப்பது.

பிரத்தியக்ஷானுமான விருத்தமாயிருக்கிற ஆகமமுங்கூடாதென்னில்? அநுமானமும், அநுமான சகசரிதமாயிருக்கிற ஆகமமுமுண்டு. அவையாவன? ஆன்மாவானவன் ஒன்றினாலேமறைக்கப்பட்ட சர்வஞ்ஞத்துவத்தை யுடையவன், கிஞ்சிஞ்ஞனாகையினாலே. யாதோரான்மா வொன்றாலே மறைக்கப்பட்ட சர்வஞ்ஞத்துவமில்லாமலிருக்கிறானோ அவன் கிஞ்சிஞ்ஞனல்ல; சிவனைப்போல. ஆன்மாக்களுடைய சர்வஞ்ஞத்துவத்திலே பிரமாணமுண்டானாலன்றோ ஒன்றினாலே மறைக்கப்பட்டவனென்றுசொல்லவேண்டுமென்னில்? ஆன்மாக்களுடைய ஞானசத்தியானது சர்வத்தையு மறியும் ஞானசத்தியாகையினாலே, ஐஸ்வரசத்திபோல இந்த அநுமானத்தினாலே ஆன்மாக்களுக்குஆணவத்தினாலே மறைக்கப்பட்ட சர்வஞ்ஞதை யுண்டென்பதற்கு வாதிவசகம். கிஞ்சிஞ்ஞதைக்கு இந்த ஆணவம் ஏதுவல்ல. கிஞ்சிஞ்ஞதைக்கு விஷய நியமனம் பண்ணுகிற கரணமே ஏதுவென்னில்? ஆன்மஞானம் சர்வகோசர மாகவேண்டும். அதில்லாதபடியினாலே நாமுன்னே சொன்ன வாணவமே கிஞ்சிஞ்ஞதைக்கு ஏது.

இந்த ஏதுவேண்டா, ஈஸ்வரனுக்குச் சர்வஞ்ஞத்துவம் ஸ்வபாவமானாற்போல, ஆன்மாக்களுக்குக் கிஞ்சிஞ்ஞதையே ஸ்வபாவமென்னில்? மோக்ஷத்திலே சர்வஞ்ஞனென்கிறது கூடாதேபோம். மோக்ஷத்திலும் சர்வஞ்ஞதையில்லையெனில்? பந்தமுத்திகளில் பேதமின்றியிலேபோய் சுருதி விரோதமுமாம். ஆகையால் ஆன்மாக்களுக்கு சர்வஞ்ஞத்துவம் சுவபாவமல்ல ஆணவமல † நிரோதத்தினாலேயென்று சித்தம்.

† நிரோதம் - தகைவு.

ததுக்தம் பௌஷ்கரே - ஜ்ஞாத்ருத்வஸ்ய ச ஸர்வஜ்ஞஸ்வ கிஞ்சிஜ்ஞதாயத: | நகிஞ்சிஜ்ஞத்வஸ்யாயம் ஸ்வஸ்யாயம் ஸ்வ நாபி நஸம்வ்ருத: || யதா ஶிவத்வஸ்யாவாயம் ஸ்வே வஸ்ஸாவ்ருதா ஜடி.

ஆன்மாக்களுடைய ஞானக்கிரியா §நிரோதத்துக்குக் கருமமேபோதும். ஆணவமென்றொன்றை யங்கீகரிக்க வேண்டுவதில்லையென்னில்? அந்தக் கருமம் அசுத்தமாதத்துவாவில் புத்திநிஷ்டமாகையினாலும், பிரளயத்திலும் அதோமாயையிலே யிருப்பதாகையினாலும், மாயாகாரியமாகவு மனோவாக்கு காய வியாபார சன்னியமாய்ச் சுத்தாத்துவ வாசிகளை சம்பந்திக்க மாட்டாதாகையினாலும், சர்வான்மாக்களுக்கும் ¶ ஆவாரகமல்ல. கருமமே ஆவாரகமும் போகாதி யேதுவுமாமாகில் அநேகத்துவத் துவாரா ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைக்கு ÷ சககாரியொழிய ஆவாரகமல்ல.

§ நிரோதம் - தகைவு. ¶ ஆவாரகம்-மறைக்கிறது. ÷ சககாரி - துணை.

ததுக்தம் தைத்ரேவ - யஸ்மாத்யஸ்மாத்ருகம் கஸ்மாத் தனை வைலக்ஷண்யவ்யவஸ்திதா | வ்யாப்யவ்யாபகதயோ ரக்ஷ

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மலத்தின திலக்கணம் வாசிக்கின்றார்.

ஒன்றதாய் - ஏகமாய் அனேகமாய் அசேதனமுமாகில், அநித்தியமுமாய் மகாப்பிரளயத்திற் சகலான்மாக்களுக்கும் முத்தராகவே வேண்டும். — அநேக சத்திபுடையதாய் - மலமேகமாதலால், மலந்தானே மறைந்து நீங்குமெனனில்? ஒருவனே முத்தனுங்காலத் தெல்லாரு முத்தராக வேண்டுமாதலால். அவரவரை மறைத்து முறைமையிற் பரிபக்குவம் வர நீக்கும் அநந்த சாமர்த்திய முள்ளதாய், — உடனு யாதியன்றதாய் - சகசநித்தியமாய், — ஆணமாவின றறிவொடு தொழிலையார்த்து நின்று - ஆவாரகசத்தியினு லான்மாவினது சாவஞ்ஞத்துவ சர்வ சர்த்திருத்துவரூப சிவத்துவத்தை மறைத்திருந்து, — போத்திருத்துவத்தை நிகழ்த்தி - அதோங்கியாமிகா சத்தியினுலே போக்கியா சத்தியைப்பண்ணி, — செம்பினிற் களிம்பேய்ந்தென்று மஞ்ஞானங் காட்டு மாணவ மிசைந்து நின்றே - தாமிரத்திற் காளிதம்போல மூல மலம் பொருந்தி நின்றேயெக்காலமும் மதியாமையைப் பண்ணும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அற்றேல் ஈண்டெடுத்துக் கொண்ட ஆணவமலம் யாது? அதனால் வரும் பொல்லாமை யாது? அதனைப் போக்குமாறு யாங்ஙனம்? எனபாரை நோக்கிப் பதினேழு செய்யுளான் ஒழிபு கூறுகின்றார்.

எண்ணிறந்த சத்திகளான் எண்ணிறந்த வுயிர்களினுஞ் செம்பிற் களிம்புபோல் அநாதியே விரவிநிற்பதொன்றாய்க் கேவலத்தில் ஆவாரக சத்தியானுஞ் சகலத்தில் அதோநியாமிகா சத்தியானும் அஞ்ஞான நிகழ்ச்சிகட்குக் காரணமாய் நிற்பது; மேற்கூறிப்போந்த ஆணவமல மெனபதாம்.

போத்திருத்துவம் போகநுகர்ச்சிக்கு வினைமுதலாந்தன்மை.

இதனானே மலத்தின் சொரூபங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

'எழுமுடல் கரணமாதி' என்ற திருவிருத்தத்தில் 'மாயை கொடுமலமொழிப்பன முனைவன்' என்ற பதத்துக்கு வியாக்கியானம் இவ்வளவும்வந்து முடிந்தது.

மாயையென்றது சுத்தமாயை அசுத்தமாயை யிரண்டுமெனக் கொள்க.

முனைவனென்றது பரமேஸ்வரன் என்னுமதுங் கண்டுகொள்க.

*இதுவரை முன்-௭௧-செய்யுளின்முடிவு விடப்பட்டதால் இங்கு தலைப்பில் சேர்க்கப்பட்டது.

முன்சொன்ன ஆணவமலத்தி னிலக்கணம் எப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

ஒன்றதாய் - ஏகமாயிருப்பதாய்,— அநேகசத்தி யுடையதாய் - எண்ணிறந்த சத்திகளையுடையதாய்,—உடனாய் - சகசமாய்,—ஆதியனாதாய் - அநாதியே யுள்ளதாய்,—ஆன்மாவின்றிவொடுதொழிலை யார்த்துநின்று - ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகளை அகனியைக் காட்ட மறைத்தாற்போலச் சற்றுந் தோன்றாமல் மறைத்துநின்று,—போத் திருத்துவத்தை நிகழ்த்தி - புசிப்பிலே இருத்தியை மிகவுமுண்டாக்கி,—செம்பினிற் களிம்பேய்ந்து - செம்பிற் காளிதத்தைப்போல அநாதியேயுள்ளதாய்,—என்று மஞ்ஞானங்காட்டும் - எப்பொழுது மஞ்ஞானத்தை விளைப்பிக்கும்,—ஆணவ மியைந்துநின்றே - ஆணவமலமானது சர்வான்மாக்களையும் பொருந்திநின்று இங்ஙனஞ் செய்யும்.

இதனாற் சொல்லியது, ஆணவமலத்தின் காரணமொன்றென்றும் காரியம் வெகுவிதமென்றும் ஆன்மாக்கள் ஞானக்கிரியைகளை மறைக்குமென்றும் புசிப்பிலே இருத்தியையுண்டாக்குமென்றும் செம்பிற் காளிதம்போல அநாதியே யுள்ளதென்றும் எப்பொழுது மறியாமையை யுண்டாக்கிக்கொண்டு நிற்குமென்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அநேக சத்தி யுடையதாய் - எண்ணிறந்த சத்திகளான்,—ஆன்மாவினுடனாய்-எண்ணிறந்த வுயிர்களினுஞ்சேர்ந்து,—செம்பிற்களிம்பேய்ந்து-செம்பிற்களிம்புபோல,—ஆதியன்றதாய்-அ

காதியே,—இவையைந்து நின்றேயொன்றதாய்-விரவிநிற்ப தொன்று ய்,—தன்னறிவொடு தொழிலையாத்து நின்று-கேவலத்தி ஞானமாவினறிவோடு தொழில்களை மறைத்தலாகிய ஆவாரக சத்தியானும்,—போத்திருத்துவத்தை நிகழ்த்தி-சகலத்திற் போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற் றன்மையாகிய அரோதியாமிக சத்தியானும்,—என்று மஞ்ஞானங்காட்டும்-என்று மஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது,—ஆணவம்-மேற்கூறிப்போந்த ஆணவமலமென்பதாம்.

இதனானே மலத்தின சொரூபங் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலைககவரதியும் பாசபதியு மாணவ மலமெனப
தொன்றில்லை, மாயையே யுள்ளதென்ன,
அதனைக்குறித் துணர்த்துகிருர்.

மலமென வேறொன்றில்லை மாயாகா ரியமதென்னி, லிலகுயிர்க இச்சாஞானக் கிரியைக ளெழுப்புமாயை, விலயிடு மலமிவற்றை வேறுமன் றதுவேறுகி, யுலகுடல்கரணமாகி யுதித்திடுமுணர்ந்துகொள்ளே. அக

(இ-ள்.)

மலமென வேறொன்றில்லை	ஆணவமல மென்றுசொல்ல வேறொன் றில்லை காணும்.
மாயாகாரியமதென்னில்	நீ சொல்லுகிற மாயையினுடைய காரியத்தைக் காணுமென்னில்?
இலகுயிர்க்கிச்சா ஞானக கிரியைகளெழுப்பு மாயை	ஆன்மாக்கட்கு விளங்காநின்ற ஞானக்கிரியைகளை மாயைதானே யுண்டாக்கி யதனை விளக்கும்.

விலகிடு மலயி வற்றை	இந்த ஞானக்கிரியைகளை யாணவமல சக்தி தடுக்கும்.
வேறுமன்று	இந்த வாணவ மலந்தா னான்மாக்கட்கு வேறன்றிச் சகசமாயே யிருக்கும்.
அதுவேறுகி	அந்த மாயையான தாணவ மலத்துக் குப் பின்னமாய்,
உலகுடல் கரணமாதி யுதித்திடு முணர்ந்து கொளளே.	அந்த மாயைதா னிந்தப்பிரபஞ்சமுமா யானமாக்கட்குத் தனுகரண புவனபோகங்களுமாய்த் தோன்றுகிற்கும். இந்த வாணவ மாயையாகிய விவையிற்றின பகுதியை யிப்படியென்றே யறிவாயாக. எ-று.

இவை நாலுக்கு மதங்கமெனவறிக.

இதற்குக காரண மேற்கவியிற காண்க (௮௧)

சிவாக்ரயோகியருளா வருமாறு.

—o—

மேல் மாயாகாரியமே ஆனமா வாரகமென்பதை மறுத் துணர்த்துதல்.

மலமென வேறொன்றில்லை மாயாகாரியம தென்னில் - ஆணவ மலமென றொனறில்லை, மாயா காரியமாகிய அவைராக்கியமான ராகமே ஆன்மஞானு வாரகமென்னில்? உள்ளது. ராகமானது நின்மலனாயிருக்கிற ஆனமாவை யாவரிககமாட்டாது. ஆவரிக்குமென்னில்? முத்தான்மாக்களையும் ஆவரிகக வேணும். முத்தான்மாக்களுஞ் சிவனும் ஏகப்பிரகாரமாகையால், சிவனையும் ஆவரிக்குமென்று சொல்லவேணும். அப்படி முத்தர்களுஞ் சிவனு மொருக்காலும் ¶ போக ஸகதராகக் கண்டதில்லை. இதன்றியும் பிரகிருதி சன்யமாகிய புத்தி தர்மமானது

ராகமொகையால், அநித்தியம். அநித்திய வஸ்துவானது நித்தியவஸ்துவான சிற்சத்தியை யாவரிக்கமாட்டாது.

¶ போகஸக்தர் - போகத்தில் பற்றினவர.

ததா₂ச பௌஷ்கரே - ராகோ₃வித்₃யாகாரணம் முக்தி
ஷ்டிதேஷ்வபி ஸ்தே₂ந்த₂ா । ஸத்₃வ்ரம் ராகோ₃ வித்₃யைஜ-
நவஸ்க்தி ஞ்சிக்கைரா த₃ரெ । கர்மேவ ஸம்ஸ்பர்ஶைவக்ரு-
ஸா₂நா₂வேக்ஷ்வவி ஶோஷக: ॥ நஹித₃ா₂க்₃ ஶாவோவா
விமோஹாமாஸ்க்₃ஞாதா । ஜ்ஞாயம் ப₃த்₃ரயாநா₂
க்₃ரா ராகோ₃ யொபஸ்யாயதஸ்க: ॥ யதா₂ஸ்ய ப₃த்₃க
தேஷ்ஸஸாதஸ்₂ஸ்ரேஷ்டிநஸ்வர: । வித்₃யாக்₃த₃ித₂த்₃வி
ஜாயாஸ்ஸஹைவ ப₃ாயக: கயைமி.

ஆகில் புத்திகதராகமல்ல, மாயாகாரியமாகிய ராகாதியே யென்னில்? மேலதுவுங் கூடாது,—

இலகுயிரிச்சாஞானக் கிரியைக ளெழுப்புமாயை விலகிடு மலமியற்றை வேறுமன று-ஆன்மாக்களுடைய விளங்கப்பட்ட இசசாஞானக் கிரியைகளை, மாயாகாரியமானது ஆணவமலத்தைச் சிறிதுநீக்கி விஷயோன்முகத்தைப் பண்ணுவிக்கும். ஆணவமலமானது, இச்சாஞானக் கிரியைகளைப் பிரகாசிக்க வொட்டாமல் வேறறநின்று தடுக்கும்.—

அது வேறுகி யுலகுடல்கரணமாகி யுதித்திடுமுணர்ந்துகொள்ளே - அந்த மாயாகாரியமானது ஆன்மாக்களுக்கு அந்தியந்தம் × பின்னமாக வசிக்கிற வுலோகங்களும் தூலதேகங்களும் † அக்தர் *பாகிய கரணங்களுமாக சிருட்டிகாலத்திலே யுதித்துப் பிரளயகாலத்திலே லயத்தை யடைவதாகையால், மரு

யாகாரியம் ஆன்மஞானு வாரகமல்ல; ஆணவமலமே ஆன்மஞானுவாரகமென் றறிந்து கொள்வாயாக வெனறிதன்பொருள்.

× பிணைமாகவசிக்கிற - வேறய் வாசஞ்செய்கிற. † அந்தர் - உள், * பாகியம் - வெளி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மாயாகாரிய விசேஷமே மலம், வேறில்லை யென்னும் பாசுபதி முதலோரையும்; பிரகிருதி காரிய விசேஷமே மலம் வேறில்லை யெனனும் சாங்கியன முதலோரையு மறுத்தனாக்கினார்.

மலமென வேறொன்றில்லை மாயாகாரியமதெனவில் இவ் வுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழும்புமாயை - சித்ருபப் பிரகாசனாகிய ஆனமாவின இச்சாஞானக் கிரியைகளை மாயை காரியத் துவாரத்தினாலே விளககும்,—விலகிடு மலமிவற்றை - மாயாகாரிய கலாதியில்லாதபோது பிரளயகலாவத்தையி லிச்சாஞானக் கிரியைகளைச் சிற்றறிவு மில்லாதபடி மறைக்கும்,—வேறுமன்று - அந்த மலம் அறிவோடு வேறின்றி முத்திபரியந்தம் பிரிவின்றி நிற்கும்.—அது வேறுகி - அந்த மாயாகாரியம் பிரிந்து கூடும் பந்தமாகி,—உலகுடல் கரணமாகி யுதித்திடும்- புவனமாதேக சூக்குமதேக முதலிய பொருளா யுற்பவிக்கும்,— உணர்ந்துகொள்ளே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உயிரோ டொற்றித்து நின்று அறிவிச்சை செய்கைகளை மறைப்பதாகிய மலத்துக்கும் வேறுகின்று அவற்றை விளக்குவ

னாகிய மாயைக்குந் தம்முள் வேற்றுமை பெரிதாகலான், அஃதறியாது மாயையே மலமென்பார் மதம் போலியென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

மேல் ஐக்கவாதி ஆணவ மலமென்ப தொன்றில்லை, மாயையே யுள்ளதென்று சொல்ல, அவனை மறுத்தருளிச்செய்கிறார்.

மலமென வேறொன்றில்லை மாயாகாரியம தென்னில் - அசுத்தமாயையிலுண்டான காரியங்களான மபேதத்தை மறைக்குமதொழிந்து இதற்கு வேறாக நீர் சொல்லுகிற வாணவ மலமென்ப தொன்றில்லையென்று நீ சொல்லில்?—இலகுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்பு மாயை - விளங்காநின்ற வான்மாக்களுக்கு இவர்களுடைய விச்சாஞானக் கிரியைகளை மாயை தோற்றுவிக்கும். ஆகையால் மாயை மறையாது,—விலகிடு மலமிவற்றை - இந்த இச்சாஞானக் கிரியைகளை ஆணவமலந் தடுக்கும்,—வேறுமன்று - இந்த வாணவ மலந்தான் ஆன்மாக்களுக்குச் சகசமாயிருக்கும். மலம்போல் மாயை சகசமல்லவோ வென்னில்?—அது வேறாகி-அந்த மாயையானது சகலத்திற் கூடியும் கேவலத்திற் பிரிந்தும் நிற்கையால் வேறுமாய். இதுவன்றியும்,—உலகுடல்கரணமாகி யுதித்திடு முணர்ந்துகொள்ளே - பிரபஞ்சமுமாய் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களுமாய்த் தோன்றும் மலத்தின் மறைப்பைப் போக்குகிறது மாயை யென்றறிவாயாக.

இதனாற் சொல்லியது ஐக்கவாதி ஆணவமலமென்ப தொன்றில்லை மாயையேயுள்ளது என்று சொல்ல, அவனை மறுத்து

ஆணவ மலமென்ப தொன்றுண்டென்றும், ஆன்மாக்களுக்கு அநாதியே சகசமாய் ஆன்மபேதத்தை மறைக்குமென்றும் மாயா காரிய மக்கமற்பவை நீக்குமதொழிந்து மறையாதென்று முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

மலமென வேறொன்றில்லை - மலமென வொருபொருள் வேறில்லை,—மாயாகாரியமதெனனில் - மாயாகாரியமே மறைக்கற்றொழிலைச் செய்யுமெனின்? அற்றன்று —இலகுயிர்க்கு-விளங்கா நின்றவுயிர்கட்கு,—இச்சாஞானக் கிரியைக ளெழுப்புமாயை - இச்சை யறிவுசெயல்களை வேறுநின்று விளக்குவதாகிய மாயைகளும்,—வேறுமனறிவற்றை விலகிடும்மலம் -உயிரோ டொற்றித்துநின்றிச்சையறிவு செயல்களை மறைப்பதாகிய மலத்திற்குந் தம்முள் வேற்றுமை டெரிதாகலின, அஃதறியாது,—உலகுடல் கரணமாகி-உலகு முடலுங் கரணமுமாகி,—அதுவேறாகியுதித்திடும்-உயிர்களுக்கு வேறாகியுதிக்கு மாயையே மலமெனபார் மதம்போலியெனபதனை,—உணர்ந்து கொள்ளே - அறிவாயாக வெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலதற்குத் திருட்டாந்த முணர்த்துகிறார்.

மாயையே யான்மஞானக் கிரியையை மறைத்துநிற்கும், தூயவிப் பருதிதன்னைத் தொடர்முகின் மறைத்தாற்போலப், போய்முகி லகலச்சோதி புரிந்திடு ம

துவேபோலக், காயமு மகலஞானத் தொழில்பிர காச
மாகும். (அக)

(இ-ள்.) மாயையே யானமஞானக்கிரியையை மறைத்துநிற்கும் — அந்த மாயைதானே யான்மாவினது ஞானக்கிரியைகளை மறைத்து நிற்கும். அஃதெவ்வாறெனனில்?

தூயவிப் பருதிதனைத் தொடராமுகின மறைத்தாற்போல — களங்காதி குற்றமற்ற வாதித்தனுடைய கிரணங்களை யெப்படிக் காளமேகமானது அந்தப் பிரகாசத்தைச் சற்றுந் தோனருமன மறைக்கு மாறுபோல.

போய்முகிலகலச்சோதி புரிந்திடுமதுவேபோல — உடனே தானேயந்த மேகத்தை யொருவாயுவானது வந்தடித்தவாறே யாதித்தனுடைய பிரகாசமானது விளங்கினாற்போல,

காயமுமகல ஞானத் தொழில்பிரகாசமாமே. — மாயாகாரியமாகிய சரீரத்துடனெவ்வளவு கூடியிருந்தானவ்வளவு மறைபடவே! யந்தனை யெப்பொழுது விட்டுநீங்கினனப்பொழு திவனுடைய ஞானக்கிரியைகள் பிரகாசியா நிற்கும். எ-று.

ஏகாரந் தேற்றம். (அக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் மாயையானது தன்னுடைய ‡ ஆவரண சத்தியினாலே ஆன்மஞானத்தை யாவரித்தது தனது காரியமாயிருக்கிற

× விக்ஷேபசத்தியினாலே விஷையோன்முகத்தைப் பண்ணுவி க்குமாகையால் மாயையே ஆன்மஞானம் வாரகமொழிந்து ஆ ணவமலம் வேண்டாமெனபவனை அறுவடுத்தல்.
‡ ஆவரணம்-மறைதல் × விக்ஷேபம்-தள்ளுதல், தோற்றுதல்.

தூயபருதிச சுடர்தனனை முகிலமறைத்தாற்போல ஆன்ம ஞானக்கிரியையை மாயையே மறைத்து நிறகும் முகில்போய கலசசோதி புரிந்திடு மதுவேபோலக் காயமும் மகலஞானத் தொளி பிரகாசமாமே-சூத்திரமான † ஆதித்தனுடைய பிரகாசத் தை மேகமானது மறைத்தாற்போல, ஆனமாக்களுடைய ஞா னக்கிரியைகளுக்க காரணமாகிய மாயைதானே ஆவரண சத்தி யினாலே மறைத்து நிற்கும் மேகமானது நீங்கினவளவில் சூரி யகிரணம பிரகாசித்தாற்போல மாயாமேகம நீங்கவே, ஆனமா க்களுடைய ஞானப்பிரகாசமானது விளங்குமென றதனபொ ருள.

† ஆதித்தன் - சூரியன்

இது பூர்வபடசம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பின திருஷடாந்தபூர்வமாய்சசொல்லிதிரஸ்தரிக்கினறார்.
தொழில் - கிரியை
மற்றவை வெளிப்பொருள்.

இது பூர்வபட்சம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இவ்வுரை-அகூ-செய்யுளிற் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மீளவு மான்மபோதத்தை மாயை மறைக்குமென்றும், ஒரு திட்டாந்தமிட்டு ஐக்கியவாதி சொல்லுகிற முறைமையு மருளிச் செய்கிறார்.

மாயையே யான்மஞானக் கிரியையை மறைத்துநிற்கும் - அதோமாயைதானே யான்மாவினுடைய விச்சாஞானக் கிரியைகளை மறைத்துநிற்கும் அதெனபோலவெனின்?— தூயவப்பருதி தனைவிற் சுடர்முகில் மறைத்தாற்போல - சுத்தமாயிருக்கப் பட்ட வாதித்தனது பிரகாசத்தை மேக மறைத்தாற்போல இது அவனைப்பெத்தத் தன்மை யேல்தனனுடைய முத்தித்தன்மை சொல்லுகின்றான்.— போய்முகி லகலச்சோதி புரிந்திடுமதுவே போல - அந்த மேகமகன்றுபோக ஆதித்த கிரணங்கள் பிரகாசித்தாற்போல,— காயமூலக ஞானத்தொழிற்பிரகாசமாமே- தேகமுநீங்கவே அநாதியிலுள்ள ஞானம் பிரகாசியா நிற்கும்.

இக்கூற் சொல்லியது, ஐக்கியவாதி ஆதித்த கிரணத்தை மேகம் மறைத்தாற்போல வான்மபோதத்தை மாயை மறைக்குமது பெத்தமென்றும், அதுவிட்டு நீங்குகிறதே முத்தியென் றார், தன்மதஞ் சொன்னதென்னு முறைமை யறிவித்தது

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

இவ்வுரை - அ௬-வது செய்யுளிற் காண்க.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

பரிதியை முகின்மறைப்பப் பாயொளி பதுங்கி னாற்போ, லுருவுயிர் மறைகயின்ஞானக் கிரியைக ளொளிக்குமாகும், கருதிடு மிச்சாஞானக் காரியங் காயம் பெற்றான், மருவிடு முயிர்க்குக்காயம் வந்திடா விடின் மறைபபே. (௮௫)

(இ-ள்) பரிதியை முகினமறைப்பப் பாயொளி பதுங்கினாற்போ லுருவுயிர மறைக்கின ஞானக கிரியைக ளொளிக்குமாகும்	சூரியனை மேகமானது மறைத்தாற்போல சூக்கும தூலசரீரங்களானவை ஆன்ம ஞானத்தை மறைக்குமாகில், ஆன்மஞானக் கிரியைகள் பிரகாசியாமல் அப்பிரகாசமாய் விடும்.
கருதிடு மிச்சா ஞானக காரியங் காயம் பெற்றான மருவிடும்	சூக்கும தூல சரீரமுண்டானால் இச்சத்தி காரியமாக வறிபப்படு மிச்சாஞானக்கிரியைகள் பிரகாசமாய் விடயங்களிலே பொருந்தும்.
உயிர்களுக்கு காயம் வந்திடாவிடின மறைப்பே.	மாயாகாரிய மாகத் தனுவுண்டாகாவிடில் விடயதரிசனங் கூடாதென றிதனபொருள்.

மாயாதேகமுண்டாகில் ஆன்மாக்களுடைய விச்சாஞானக் கிரியைகள் பிரகாசிக்கும்; மாயாதேகமில்லையாகில் இச்சாஞானக் கிரியைகள் பிரகாசியாவெனறு மன்னுவய வெதிரேகங்களினால், மாயை யானமாக்களுடைய விச்சாஞானக் கிரியைகளைத் தடுப்பதல்ல.

இந்தப் பாட்டு மேற்படத்தி லில்லாததனாலே சிவாக்கிரவுடையாருரைபார்த் தெழுதினது. (௮௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சித்தாந்தம்.

பருதியை முகின்மறைப்பப் டாயொளி பதங்கினாற்போ லுருவுயிர் மறைக்கில்ஞானக் கிரியைகளொளிப்பதாகும் - சூரியனை மேகமானது மறைத்ததுபோலச் சூக்ஷும ஸ்தூல சரீரங்களானவை ஆன்மஞானத்தை மறைக்குமாகில் ஆன்மஞானக்கிரியைகள் பிரகாசியாமல் அப்பிரகாசமாய்விடும்.—இச்சாஞானக் காரியங் காயம்பெற்றான மருவிடும்- சூக்ஷும ஸ்தூல சரீரமுண்டானால் சிற்சத்தி காரியமாகப்பட்ட இச்சாஞானக்கிரியைகள் பிரகாசமாய் விஷயங்களிலே பொருந்தும்—உயிர்கட்குக் காயமவந்திடாவிடின மறைப்பே - மாயாகாரியமாகிய தநுவுண்டாகாதாகில் விஷயதரிசனங் கூடாதெனறிதனபொருள்.

மாயாதேக முண்டாகில் ஆன்மாக்களுடைய இச்சாஞானக்கிரியைகள் பிரகாசிக்கும். மாயாதேக மில்லையாகில் இச்சாஞானக் கிரியைகள் பிரகாசியாதெனனும் அநுவய வியதிரேகங்களினாலே மாயை ஆன்மாவினுடைய இச்சாஞானக்கிரியைகளைத் தடுப்பதல்ல.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இனிச் சித்தாந்தம் வருமாறு.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

மாயை உ[illegible]டல் கரணமாய் வேறுநின்றே உயிரை மறை

த்தலையுடைய தென்பது உடம்பாட்டினு மெதிர்மறையினும் பரிதி முகி லுவமையினைத் தறியப்படு மென்றது பொருந்தாது. மேகம்போல மாயை மறைக்குமாயின், மறைத்தலாகிய காரியம், பரிதியிற்போல உயிரின்கணிகழ்தல் வேண்டும்; அஃதின்றிலலையென்பது உடம்பாட்டினு மெதிர்மறையினும வைத்து அறியப்படுதலான, அவ்வுவமை யீண்டைக் கேலாதெனபதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் ஐக்கவாதிமதத்தை மறுத் தருளிச்செய்கிறார்.

பருகிலை முகில்மறைப்பப் பாயொளி யொதுங்கிறாற்போல் - ஆதித்தனை மேக மறைக்கவிட்டு விளங்காதின்ற கிரணங்களொதுங்கிறாற்போல,—உருவுயிர் மறைக்கில் ஞானக் கிரியைகளொளிக்குமாகும்- ஆன்மாவைத் தேகமறைத்தபோது இவனுடைய விச்சாஞானக கிரியைகளு மறையாநிற்குமென்று நீசொல்லில்?—கருதிடுமிச்சாஞானக் காரியங்காயம்பெற்றால் மருவிடுமியிர் கரு-வென்றைச்சுட்டி யறியப்பட்ட இச்சையும் ஞானமுங் கிரியையு மானமாத் தேகத்துடனே கூடினபோ தன்டாக்காகிற்கும்.—காயம்வந்திடாவிடில் மறைப்பே - ஆன்மா தேகத்தோடேகூடி நில்லாதபோது இச்சாஞானக் கிரியைகள் தோன்றாமல் மறையும்.

இதனாற் சொல்லியது; ஆதித்தனை மேகம் மறைத்தாற் போல வானமாகசளுக்குஞ் சரீரம்பொருந்தினால், ஆன்மபோதத்தை மறைக்குமென்றது அத்தமாகாதென்றும்; மாயாதேகம் பொருந்தினு லான்மாவி னிச்சாஞானக் கிரியைகள் சிவிக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தூய அப்பருதிதன்னைச் சுடர்முகில் மறைத்தாற்போல - தூயதாகிய பருதியை மின்னலையுடைய மேகம் வேறுநின்று மறைத்தாற்போல,—மாயையே யான்மஞானக் கிரியையை மறைத்து நிற்கும் - மாயையே யுலகுடல் காரணமாய் வேறுநின்று ஆன்மாவினிச்சாஞானக் கிரியைகளை மறைத்த லமையுமென வுடம்பாட்டானும்,—முகில்போ யகலச் சோதி புரிதருமதுவே போல் - அம்மேகம் நீங்க பருதிவெளிப்பட்டுத் தோன்றுமாறுபோல,—காயமுமகல ஞானத்தொழில் பிரகாசமாமே - காயமாகிய மாயை நீங்க ஆன்மாவி னிச்சாஞானக்கிரியை பிரகாசித்த லமையுமென எதிர்மறையானும், இவ்வுவமையினையுந் தறியப்படுமென்றது பொருந்தாது.—பருதியை முகின்மறைப்ப பாயொளி பதுங்கினாற்போல்-பருதியை மேகமறைப்பப் பரவிய வொளிமழுங்கினாற்போல,—உயிருரு மறைக்கின ஞானக் கிரியைக ளொழிக்குமாகும் - உயிரை யுருவாகிய மாயை மறைப்ப ஆன்மாவி னிச்சாஞானக் கிரியைகள் ஒழிதலாகிய வுடம்பாட்டானும்,—கருதிடுமிச்சாஞானக் காரியங் காயம்பெறலுங் - கருதுகின்ற ஆன்மாவி னிச்சாஞானக் கிரியைகள் மாயாதநுவைப்பெற்றால்,—மருவிடு முயிர்க்குக்காயம் வகுத்திடாவிடின் மறைப்பே - விளங்கு மான்மாவிற்கு மாயாதநு வின்றெனின் மறைதலாகிய வெதிர்மறையானும் வைத்தறியப்படுதலான; அவ்வுவமையின்னைக் கேலாதெனபதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

போதகா ரியமறைத்து நின்றது புகன்மலங்கா.
ணோதலாங் குணமுமாக வுயிரினு ளிரவலாலே, காத
லா லவித்தைசிகைத் தருங்கலை யாதிமாயை, யாதலா
லிரண்டுஞ்சோதி யிருளென வேறுமன்றே. (அச)

(இ-ள்.) போதகாரியமறைத்து நின்றது புகன்மலங்காண: இந்த விரண்டுங் கூடியிருக்கையினாலே சரீரமுண்டாம். அஃதுண்டாகவே யந்தவான்மாவினுடைய ஞானக்கிரியைகளை மறைத்து நிற்கிற தந்த வாணவ மலங்காண.

ஓதலாங் குணமுமாக வுயிரினுள் இரவலாலே: அந்த மறைப்பான வாணவ மானமாவுக்குச் சகசமாய் நிற்கையால், அதனைக் கிரந்தங்களு மென்றுசொல்லில்? அந்தகுணமாகில் அக்னிக்கு வெப்பம்போலவும் ஜலத்துக்குத் தட்பம்போலவும் பிரிக்கப்படா திருக்கவேணும். அஃதன்றிக் குணமாயிற் குணியு மழியு மாகையால் இதுகுணமன்று.

காதலா லவித்தைசிகைத் தருங்கலை யாதிமாயை: மாயையானது தனது காரியமாகிய கலை முதலியவற்றால் ஆன்மாக்களுக்கு மலத்தை நீக்கிப் போகங்களைப் புசிப்பிக்கக் கடன டோ!

ஆதலாலிரண்டுஞ் சோதியிருளென வேறுமன்றே: ஆகையா லித்தமாயை யான்மாக்கட்குத் தீபம்போலவு மலமந்தகாரம்போலவு நிற்கின்ற இரண்டுஞ் சுபாவமாயிருக்கையாற் பேதமாக வங்கீகரிக்கப் பட்டது. எ-று.

உம்மை முற்றும்மை. (அச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிதவு மதற்கே புரகடை.

போதகாரிய மறைத்துநின்றது புகன்மலங்காண் - ஸ்வரூபஞான காரியமாகிய இச்சாஞானக் கிரியைகளைத் தடுத்துநின்றது நாமுன்னே சொல்லப்பட்ட வாணவ மலங்காண்;—இதுலாங் குணமுமாக வுயிரினுள் விரவலாமே - அநாதியே ஆன்மாக்களுக்கு விட்டுப் பற்றறாதே பொருந்தி யிருக்கையால், சாத்துவிகாதி குணங்கள் காமாதி குணமாக வொருத்தனையொருகுணம் பொருந்தின காலத்து லவனுக்குத் தன்மயமாயிருக்கவும், அது அவனுடைய குணமென்று சொல்லுவதுபோல; இந்தவாணவத்தையு மான்மாவுக்குக் குணமென்று உபசாரமாகவுஞ் சொல்லலாம்—சாதலாலவிதழைசிந்த மாயைகலையாதி கருமாதிலாவிரண்டுஞ் சோதியிருளென்ன வேறுமன்றே - ஈஸ்வரனுடைய இச‡சாநுவிர்த்தியாக மாயையானது ஆன்மா வாரகமாகிய வாணவமந்தகும்படிக்குக் கலையாதி தத்துவங்களைத் தனவிடத்திலே யுதிப்பிக்கு மாகையினாலே, ஆன்மஞானாவாரகமான வாணவமு மாயையு மிருளும் வெளியும்போலே பேதமே யாகையால், ஆவரண நிவிர்த்தி யார்த்தமாகக் கலாதிகளை யுதிப்பிக்கிற மாயையு மாவரண நிவிர்த்தி பண்ணுவதே யொழிந்து ஆவரணமாகாது. அதெப்படியெனனில்? காரணத்தினுடைய குணங்களே காரியத்தி லுண்டாம்; தீபத்துக்குக் காரணமான அக்னி அந்தகாரமாகாததுபோல ஆகில் மாயையே சிற்சத்தி அபிவியஞ்சமாகப்போகும், கலாதி சிருட்டியேனெனில்? மிருத்பிண்டயானது கடரூபமாயே சலாகரணக் கிரியைகளைப் பண்ணாமைப் போலவும், தந்துவானது படரூபமாயே‡ சீதநிவாரணம் பண்ணுவதுபோலவும், மாயையுங் கலாதிரூபமாய்ச் சைதந்ய அபிவியத்தையைப்பண்ணும். ஆகையால் மாயையும் மாயாகாரியமான சூக்கும ஸ்தூலசரீரமும் சைதந்ய ¶ நிரோதகமல்ல; ஆணவமே சைதந்ய நிரோதகமென்று சித்தம்.

‡ அநுவிதாயிநீ - அநுசரிக்கிறது. + சேதவியாரணம் - குளிைப்போக்குதல். ¶ நிரோதகம்-மறைக்கிறது.

ததுக்தம் தத்ரைவ - நவஜாயாஜமம் த்ஸ்வாத்ருத்தஃ
காயஸ்ய ப்ரகாஶிகா | காயஸ்ய ப்ரகாஶிகம் யத்த
ஸ்வாத்ந நாவாத்ந தத்தஸ்ய || யதா ப்ரகாஶம் கம் த்ரு
ஷண் வஹ்நிர் இவாவபாஸவதி | நதிவகரணம் வஹ்நிக்வி
த்ரு ப்ரகாஶிகஃ | தச்ச ஜாயாஸ்யரூபேண பூம்
ஸாம் காயஸ்ய கஶீச்ஷிதா || காரியேண ரணரூபே காயஸ்ய
கூாஸ்யதியம் தஜ்ஜாத்நா | யதா தக்தஸ்வ காயேஸ்ய
ண ப்ரோத்ய ஜாத்ரேக்ஷி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

மலம் அனுமானத்தா லறிப்படுமென்ப தரைத்தனரா.

போதகாரியம் - அறிசர்ச்சுறும்

இச்சை கிரியையிலடங்குமாறுபோலக் கிரியை ஞானத்திலடங்கும.

மலந் திரவியமானாலும் பிரிப்பின்றி நிற்றலால் குணமாக உபசரிக்கப்படும்.

ஆதலால், அஞ்ஞானந்தானே மலமென்னும்வேதாந்தியும் சைவரிலொருவருந் தள்ளப்பட்டனர்.

மலந்திரவியம் இது பிரதிஞ்ஞை.

அநேகசத்திமத்தாதலால் இது ஏது.

மல முண்டெனபதற்குப் பிரமாண முண்டோ? பிரத்ய

ட்சமன்று. ஆதலால் உண்டில்லையென்று சந்தேகமிருத்தலால் ஆகமசித்தமானாலும் அனுமானமே பிரமாணம்.

ஆன்மா மலவசீகிருத சத்திமான் இது பிரதிஞ்ஞை.

சிவன்போல் சர்வஞ்ஞனாயிருந்தாலும் கிஞ்சிஞ்ஞனாய்க் காணப்படுதலால் இது ஏது.

யாவனொருவன் மலவசீகிருத சத்திமானல்லன் அவன் கிஞ்சிஞ்ஞனல்லன் சிவன்போல இது திருட்டாந்தம்.

இது கேவல வெதிரேகி அனுமானமாதலால்;—

அவித்தை சித்தத் தருங்கலையாதி மாயை - மாயையானது மலமொரு பிரதேசத்திற் சிறந்த கலைமுதலிய தத்துவங்களைத் தோற்றுவிக்கும்

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

அல்லதூஉம், மலத்தானாகிய அஞ்ஞானம் முகிலானாகிய மறைவுபோலன்றி உயிரோடு வியாபகமாய் விரவிக் குணம்போலத் தோன்றி நிற்பதொன்றாகலானும், தொழிற்பாடின்கண் ஒளியிருள்போல மாயையோடு இகலி நிற்பதாகலானும்; அப்பெற்றித்தாகிய வாணவமலமே உயிருணர்வின் காரியப்பாட்டைத் தடுக்கவல்லதெனத் தெற்றென வுணர்கவென்பதாம்.

குணமுமென்னு மும்மை எதிர்மறைக்கண் வந்தது.

இவைநான்கு செய்யுளானும், ஐக்கியவாதி பாசுபதி முதலியோர்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, ஆணவ மலத்தினதுண்மை சாதிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

ஆகையால் மாயை மறையாது, மலமே மறைக்குமென்று அருளிச்செய்கிறார்.

போதகாரிய மறைத்து நின்றது புகல்மலங்காண்-ஆன்மாவினுடைய ஞானகிரியைகளை மறைத்துக்கொண்டு நின்றது நீயிலலையெனறுசொனன வாணவமலங்காண். அத்தமலத்தை,—ஒருகாலகுணமுமாக வுயிரினுள விரவலாலே - செம்பிற் களிம்புபோலச் சகசமாய் நிற்றலாலே, ஆன்மாவுக்கு ஆணவமலத்தைக் குணமென்றுஞ் சொல்லலாம். மலத்துக்குச் சுபாவ மான மபோதத்தை மறைக்கிறது,மாயைக்குச் சுபாவ மறைப்பை நீக்குகிறது,அப்படியிருக்கையால்,—காதலா லவித்தைசிந்தத் தருங் கலையாதி மாயை - ஆன்மாக்கள் கன்மத்தைப் புசிக்கைக்குண்டான ஆதாரவுக்கிடாக, ஆணவமலத்தா லுண்டாகிய வறியாமையை நீக்கும்படி, கலை முதல் பிருதிவி யீறான தத்துவங்களை மாயை தன்னிடத்திலே நின்றுந் தோற்றுவியா நிற்கும்.—ஆதலாலிரண்டுஞ்சோதி யிருளென வேறுமன்றே - ஆகையாலிவ்விரண்டு மலமும் ஒளியு மிருளும்போல ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்கும்.

இதனாற் சொல்லியது,ஆன்மாவும் ஆணவமும் வேறாய் நிற்கையாலே, இதை யான்மாவுக்குக் குணமாகவுஞ் சொல்லலாமென்றும், இந்த மலத்தின மறைப்பை மாயாகாரியங்கள் நீக்குமென்றும், இந்த மலமு மாயையு மிருளு மொளியும்போல மாறுபட்டு நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயிரினுள்விரவலாலே குணமுமாக வோதலாம் - அல்ல

ஆக மலசத்தாகிய அஞ்ஞானம் முகிலாகிய மறைவுபோல வறி உயிரொடுவியாபகமாய் விரவிக்குணம்போலத்தோன்றி நிற்பதொன்றாகலானும்,—மாயை காதலா லவித்தைதனித்து - மாயையானது விருபபத்தோடு ஆணவமாகிய இருள்கெட,—கருங்கலையாகியாதலால் - தீபம்போலத் தரப்பட்ட கலைமுதலிய தத்துவங்களுடைய தாதலால்,—இரண்டுஞ் சோதியிருளென வேறுமன்றே - தொழிற்பாட்டினைக ளிரண்டு மொளியிருள போல மாயைபோ டிகலிநிற்ப தாகலானும்,—புகலமலம போதகாரியமறைத்து நின்றதுகாண் - சொல்லுகின்ற அப்பெற்றித் தாகிய ஆணவமலமே யுயிருணர்வின காரியப்பாடடைத்து தடுக்கு வலலதெனத் தெற்றென வுணர்கவென்பதாம்.

இவை நான்கு செய்யுளானும் ஐக்கியவாதி பாசுபத முதலியோர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து; ஆணவமலத்தின துண்மை சாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

புருடன்றன் குணமவித்தை யென்றசடம் புருட
னாகுங், குருடன்றன் கண்ணின்குற்றங் கண்ணின்றன்
குணமோகூறாய், மருடன்றன் குணமதாகி மலமசித்
தாகிநிற்குந், தெருடன்றன் குணமதாகிச் சித்தென நி
ற்குஞ்சீவன். (௮௫)

(இ-ள்) புருடன் அந்தமல மான்மாவுக்குக் குணமென்று
றன குண மீ சொல்லின்?
மவித்தை
யெனில்

சடம் புருடனு கும் — குண தத்துவத்தை யங்கீகரிக்கில் ஆன்மாச் சடமாய்விடுவன். இதனை யோகிந்த தானுக வொன்றைப் புசிக்கைக்குக் கருத்தாவு மாகமாட்டான

குருடனென்ன கண்ணிற்குற்றங் கண்ணினுடைய குணமோ கூறாய் — ஒருவன் சாதியந்தகனு யிருக்கிற குற்றமெல்லாருடைய கண்ணுக்கு மது சுபாவமான குணமல்லவே! அதுபோல விந்தமறைப்பு மானமாக்களுக்குக் குணமா யிருப்பதல்லவே! சொல்லாய். இந்தவான்மாவுக்கு மாணவத்தின் குணம் வெவ்வேறு யிருக்குங்காண், அஃதெங்ஙன மெனனில்?

மருடனென்ன குணமன்றி மலமதாக நிற்கும் — ஆணவமலத்துக் கெப்போது மறியாமையே குணமாகையா லசேதனமாகி யெப்பொழுது நிற்கும சித்தாகில் விபுவுமா யானமாவைப்போன்று விடு மாதலா லது கூடாதென வறிக.

தெருடன்றன குணமதாகச் சிதனென நிற்குஞ் சீவன். — ஆன்மாவுக் கியாதாமொன்றையு மறிகிறதே குணமாகையாற் சேதனமாயே யிருப்பன காண். எ-று. (அ)

ஓகார மெதிர்மறை.

"உயிர்க்குக் குணமன றுயிர்ச்சத்திபோல-வுயிர்க்கெ கொடுங் காதே நிற்குமோ" எனவறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

ஆன்மாவுக்கு அஞ்ஞானத்தைக் குணமென்று உபசாரமா

யச் சொல்லுவா னென்பானேன்? அஞ்ஞானம் ஆன்மகுணமே என்பவனை நிராகரித்தல்.

புருடன்றன் குணமறிக்கை யெனிற்சடம் புருடனாகான் - ஆணவமலம் ஞானத்தைத் தடுக்குமென்ன வேண்டா, ஆன்ம குணமே அஞ்ஞான மெனனில்? அஞ்ஞானம் ஆன்மகுணமாகில், ஆன்மா ஜடமாம். அப்படியாகில் போக மோக்ஷம் ஆருக்கு? ஆகையால் ஆன்மா ஜடனாகான். சைதந்ய ஸ்வரூபனேயாகில், பதி சர்வஞ்ஞனே! பாசஞ் ஜடமே! அஞ்ஞானம் திரவியமல்லாமல் குணமே! ஆகையால் * பரிசேஷாத் அஞ்ஞானம ஆன்மாவுக்கே குணமெனனில்?—

குருடன்றன் கண்ணின்குற்றங் கண்ணின்றன் குணமோ கூறாய் - புருஷனுடைய கண்ணின் காசகாமலாதி தோஷம் கண்ணுக்குக் குணமோசொல்லு கண்ணுக்குக் குணமானது காணகிறது, காணாமல் மறைக்கிறது காசகாமலாதி. அதுபோல ஆன்மாவுக்கு ஞானேச்சாப் பிரயத்தினம் குணம், அதை மறைக்கிறது ஆணவமலமே!—

மருடன்றன் குணமதாகி மலமசித்தாகி நிற்குந் தெருடன்றன் குணமதாகிச் சித்தெனநிற்குஞ் சீவன்.-அஞ்ஞானந் தனக்குக் குணமாய் ஆணவ மலமானது ஜடத்திரவியமாய், ஆன்ம ஞானத்தைத் தடுத்து நிற்கும். ஞானேச்சாப் பிரயத்தினங்கள் குணமாயதனால் ஆன்மா சித்தென்று பேராய் நிற்குமென்றதன் பொருள்.

இதனால் ஆணவ மலமென் றொன்றுவேண்டா! அஞ்ஞானமான்மகுண மெனபகற்கு விகற்பம். அந்த அஞ்ஞானமென்றது † ஞானவிரோதியோ, ‡ ஞானாபாவமோ, || அந்யதாஞானமோ, ¶ ஞானநிரோதகமோ?

ஞான விரோதியெனனில் ஞானமே யில்லையாம். ஞானமுண்டென்னில் அஞ்ஞானமே யில்லையாம். தேசஸ் § திமிரங்கள்

போல ஞாநாபாவமென்னில் அபாவமாகிய வஸ்து ஒரு கிரியை யும செய்யமாட்டாது. கடாபாவம்போல ஆகுதம்.

அந்த அபாவந்தான் * பிராகபாவமோ. † பிரதி த்து வம்சாபாவமோ, ‡ அதயந்தா பாவமோ, ¶ அந்யோந்யா பாவமோ ?

பிராகபாவமென்னில்? பூர்வம் ஞாநமில்லாமல் காலாந்த ரத்திலே ஞாநமுண்டாகவேணும். பிரதிதவம்சா பாவமென்னில்? முன்னுககு ஞானமுண்டாயிருநது மேல்ஞாநமில்லாமற்போ கவேணும் அதயந்தா பாவமென்னில்? ஆன்மாவுககு ஒருக காலும ஞாநமில்லாமல் கடகுட்யம் போலேயாம். அந்யோ ந்யா பாவமென்னில் § பிரதயோகிக் கிரகணமில்லாத படியி னாலே யுசதி ஹீனம் அந்யதா ஞாநமென்னில் தோஷமில்லா மல் விபரீதஞாந முண்டாகாது, ஆகுதம்.

அதுதான + ஆகந்துகமோ ÷ ஸ்வாபாவிகமோ ?

ஆகந்துகமாகில், நிதநிய சைதநயததை பாதிககமாட்டா து. ஸ்வாபாவிகமென்னில், ஒருககாலும் ஆன்மாககளுககு ய தார்தத ஞானமில்லாமற்போம்.

கிளிஞ்சிலே வெள்ளியென் றறியும் அந்யதா ஞாநமானது ஸ்வபாவ ரஜிதஞாநததை பாதிககமாட்டாது. ஞாநதிரோத கமென்னில் நாம் சொனன ஆணவமென்று சித்தம். இநதமல ம் திரவியமே! அநேகசத்தி யுடைத்தாகையினாலே அணியை ப்போலே இநதமலங் குண குணியாய் நிற்குமென்றதற்கு குண மெவன? மோகம் மதம் ராகம் ● விஷாதம் தாபம் ○ சோ ஷம் × வைசித்திரியம் இவையேழும.

* பரிசேஷாத் - பரிசேஷாநுமானத்தால், † ஞாநவிரோ தி - ஞாநத்துக்கு எதிா. ‡ ஞாநாபாவம் - ஞாநமில்லாமை. || அந்நியதாஞானம் - வேறுவிதஞானம். ¶ ஞானதிரோதகம்-

ஞானத்தைமறைக்கிறது. § திமிரம் - இருள். * பிராகபாவம - காரியம் பிறக்கிறதற்குமுன்னபாவம். † பிரத்திவம்சாபாவம் - காரியமழிந்தபின்னபாவம். ‡ அத்யந்தா பாவம்-த்ரிகாலத்துமின்மை. ¶ அந்யோந்யாபாவம - அபேதம். §பிரத்யோகி-அபாவத்துக்கு எதிர்வஸ்து. + ஆகந்துகம் - நடுவே வந்தது. ⁓ ஸ்வாபிகம் - எப்போதுமிருக்கிறது. ● விஷாதம் - வியசநம். ○ சோஷம் - சோஷித்தல். × வைசித்திரியம்-ஆச்சரியம் அநேகபேதம்.

[illegible]

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஜடமாகிய மலஞ் சித்தாகிய புருடனுக்குக் குணமென்று சொல்லிற் புருஷனும் ஜடமாவனென்று செப்புகின்றார்.

அவித்தையென்பது - அஞ்ஞானமல்ல — கண்ணிற் குற்றம் - காசமுமை, படலகுணம்.—மருள் - அஞ்ஞானம்.—தெருள் - ஞானம்.

மறைத்தை வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உயிரினுள விரவிநிற்பதனை உயிரின் குண விசேடமென்றல் பொருத்த முடைத்தெனின்? அறியாது கூறினாய். ஒருபொருளினகட் குணத்தோடொப்பக் குற்றமும் உடனவிரவி நிற்கப்பெறுமென்பது குருட்டுக்கண்ணிற் காணப்படுதலின், விரவிநிற்றலேபற்றிக் குற்றமுங் குணமாதல் செல்லாமையானும், அஞ்ஞானத்திற்குக் குணிப்பொருள் ஜடமாவதன்றிச் சித்தாகாமையானும், உயிர் அறிதற்றொழிலுடைய சித்தேயாகலானும், உயிரினகட் குற்றமாய்க் காணப்படு மறியாமைக்குக் குணிப்பொருள் மலமென வேறுண்டென்பதாம்.

இதனானே, அறியாமை உயிர்க்குக் குணமெனனும் பாடாணவாதிகள் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து; மலத்தினுண்மை சாதிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

மீளவும் ஐக்கியவாதி, இந்த அறியாமை ஆன்மாவுக்குள்ள தொன்றென்று சொல்ல; அவனைமறுத் தருளிச்செய்கிறார்.

புருடனறன் குணமவித்தை யெனிற்சடம் புருடனுக்கும் - ஆனமாவுக்குக் குணம் அறியாமையென்று நீசொல்லில்? ஆன்மாவுஞ் ஜடமாய்ப் புசிக்கைக்குக் கர்த்தனுகான். ஆன்மாவுக்கு அறியாமை யுளதாயிருக்கவில்லை யென்ற தெப்படி யெனின்?—குருடனறன கண்ணின்குற்றங் கண்ணினறன குணமோ கூறாய் - அந்தகனது நயனத்திலுடைய படலம் நயனத்துக்குள தன்மையல்லவோ! அப்படியாயினும் அந்த மறைப்பு ஆனமாவுக்கல்லவோ குணமாயிருப்பது சொல்லாய். ஆனமாவுக்குள்ள குணம அறியாமையல்லகாண. அதெப்படி யென்னில்?—மருடனறன குணமதாகி மலமசித்தாகிநிற்கும் - எப்பொழுதுந் தனக்கறியாமையே குணமாகிய ஆணவமல மசேதனமாகியே நிற்கும்—தெருடனறன குணமதாகச் சிததெனநிற்குஞ் சிவன - அறிவே தனக்குக் குணமாகிய வான்மா எப்பொழுதுஞ் சேதனமாயே நிற்கும்.

இதனாற் சொல்லியது ஐக்கியவாதி ஆனமாவுக்குக் குணமறியாமையென்று சொல்ல, அவனை மறுத்து அறியாமை யாணவமலத்துக் குள்ளதென்றும், அறிவு ஆன்மாவுக் குள்ளதென்று மருளிச்செய்த முறைமை யறிவித்தது.

'மலமே' 'மாயையே' 'பருதியை' 'போதகாரியம்' 'புருடன்றன' ஆக இவையைந்தும் ஐக்கியவாதி. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம் அவன் மதம் "உலகத்- தாயவுயிர்க்கு மாயையினருளா- லிருவினைத் தகையி லுருவினைத் தருமால்-கருமுகி லடர விரிதருங்கதிர்போன்- றறிவாருயிரிற் பிரியா

தேயும்" என்றும், அவன்மறுப்பு "பொறிபுலனொடு குறைவற நிறைந்து - காட்சியவர்க்கு மூட்சியின முன்னாக் - கொடுத்தோ ராழி விடுத்தவா நாடிக் - கொள்வோர்காணு துளசிமீண் டுழித் - தந்தவர்கண் டாங்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அவித்தை புருடன்றன் குணமெனில் - உயிரினுள் விரவிநிற்பதாகிய அவித்தையினை உயிரின் குணவிசேடமென்றால் பொருந்தமுடைத்தே, வின்?—புருடன் சடமாகும் - சித்தாகிய புருடன் ஜடமாமெனப்பட்டு வழுவாமாதலின், அறியாது கூறினாய்.—குருடன்றன் கண்ணின் குற்றம் கண்ணின்றன் குணமோ கூறாய - ஒருபொருளின்கண் குணத்தோடொப்பக் குற்றமுமுடன் விரவிநிற்கப் பெறுமென்பது குருட்டுக்கண்ணிற் காணப்படுதலின், விரவிநிற்றலேபற்றிக் குற்றமுங் குணமாதல் செல்லாமையானும்,—மூலமருடன்றன் குணமதாகி டசித்தாகி நிற்குமட - அஞ்ஞானத்திற்குக் குணிப்பொருள் ஜடமாவதன்றிச் சித்தாகாமையானும்,—சீவன்றெருடன்றன் குணமதாகிச் சித்தெனநிற்கும் - உயிரறிவு தன்னொழிவையுடைய சித்தேயாகலானும், உயிரின்கண் குற்றமாய்க் காணப்படும் அறியாமைக்குக் குணிப்பொருள் மலமென வேறுண்டென்பதாம்.

இதனானே அறியாமை உயிர்க்குக் குணமென்னும் பாடாணவாதிகள் மதம்பற்றி நிராகரித்து, மலத்திற்குண்மை சாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனம் மும்மலங்களின் முறையுணர்த்தி, மேற்

பஞ்சமலங்களுக்கு மிரண்டு விருந்தசத்தா
லவையிற்றின் காரியப்பாடு தொகுத்
துணர்த்துகிறார்.

மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்
போல,மம்மர்செய் தணுவினுண்மை வடிவினை மறை
த்திருக்கும், பொய்மைசெய போகபந்தம் போத்திரு
த் துவங்கள்பண்ணு, மிம்மல மூன்றினோடு மிருமல மி
சைபபாயின்னும். (அகூ)

(இ-ள்) மும்மல நெல்லினுக முளை யொடு தவிடுமிப் போல் — நெல்லுக்குண்டாகிய முளைபோல வாணவமும், தவிடுபோல மாயையும், உமிபோலக் காமியமும், ஆகிய மூன்று மலங்களு மடைவேபொருந்தி நிற்கும்.

மம்மர்செய்த னுவினுண்மை வடிவினை மறைத்திருக்கும் — அவையிற்று ளாணவமலமான தான்மாக்கட்கு மயக்கத்தைச்செய் தவர்களுடைய ஞானக்கிரியைகள் விளங்கிக் காரியப்படாதபடி மறைத்து நிற்கும்.

இது மாயையைப்போலன்றி யசுசியான பதார்த்தத்தை யசுசியெனக் கருதாமல் அதனைச் சுசியெனக்கருதியும், அதிலே மோகிப்பித்து அதில் விழவிடுத்துகை.

பொய்மைசெய் போகபந்தம் — மாயையானது பொய்யையுண்டாக்குகிற போகத்தைப்பண்ணுவதாகும்.

அசத்தியத்தை மெய்யெனப்பண்ணி, மாயையானது தன்னுடைய பிள்ளைகளாகிய தநுவாதிகளாகியவையிற்றி னிடத்தி லுண்டாகிய குணதோடங்களைக் காட்டாமல், அசுசியை யசுசியெனாது மறைத்துநின்று மினுக்கியும்; இப்படி யிவைகள் தோன்றுமன் மயக்குகை.

போத் திருத்துவங்கள் பண்ணும் — கன்ம மலமானது ஆன்மாக்க ளிருவினையா லியற்றுஞ் சுகதுக்கமாகிய போகங்களைப் புசிப்பித்துத் திருத்திகளைப் பண்ணுநிற்கும்.

இம்மல மூன்றினோடு மிருமல மிசைப்பாயினனும் — இங்ஙனஞ் சொல்லிப்போந்த மும்மலங்களுடனே மேலுமிரண்டு மலங்களைச் சொல்லப் புகாநின்றேம். எ-று.

உம்மை யெதிரதுதழீஇய வெச்சம்.

இதற்குச் சுவாயம்புவத்தும் பார்க்கியையினு மறிக. (௮௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

கீழ்ச்சொன்ன வாணவ மாயை கன்ம மிந்த மூன்று மலங்களும ஆன்மாவை யடைந்து நிற்கு மியல்புணர்த்தல்.

மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல் - ஆணவ மாயை கன்மமென்னு மூன்று மலமும் ஆன்மாவுக்கு அரிசிக்குத் தவிடு முமியு முளையும்போலப் பிரகா * சாச்சாதனமும ஆவாரகமும் உற்பத்தி ஏதுவுமாய் நிற்கும்.—அணுவினுண்மை வடிவினைமறைத்து நின்று மம்மர்செய்து போதிருத்துவத்தைப் பண்ணும் - முன்சொன்ன மலத்திரயங்களுக் குள்ளே யாணவமலமானது, ஆன்மாவினுடைய ஞானேச்சாக் கிரியாரூபங்களைத் தடுத்துநின்று † மமத்துவா கங்காரங்களைப் பண்ணி விஷயங்களைப் புசிக்கிறவனாகப்பண்ணும் —பொய்மெய் செய் - மாயாமலமானது பொய்யாகிய தேகாதிகளை மெய்யென்னும்படி மயக்கத்தைப் பண்ணும்.—போகபந்தம்-கன்மமானது விஷயபோகங்களிலே அவந்துவத்தைப்பண்ணும். சகலாகிக்கு மூன்று மலமு மிவ்வாறு செய்துநிற்கும்.—இம்மலமூன்றி

ணோடு மிருமல மிசைப்பனின்னும் - இந்த மூன்று மலங்களையுஞ் செலுத்துவ தாதலால் உபசாரத் மலமென்று நாமத்தையுடைய திரோதாயியையும் மகாமாயையுமாக விரண்டு மலத்தையு மேற் கூறுவாமென் றிதன்பொருள்.

* ஆச்சாதனம் - மறைவு. † மமத்துவாகங்காரம்-எனது யானென்பது

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கன்ம மாயை மலங்கள் நிரைநிறை நிற்கும் முறைமையும், அப்படியே செய்யும் பிரதான கிருத்தியங்களையும், சேஷபாசங்களையும் செப்புகின்றேமென்று செப்புகின்றார்.

மம்மர் - மயக்கம்,—உண்மைவடிவு - சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ ரூப சிவத்துவம். மாயையும் கன்மமும் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவப் பிரதமாணுலும் நிரதிசய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ விரோதிகளென்பது சாற்றப்பட்டது, கன்மகாரியம்.—போகம்- போகவேதன விடயசுகதுக்கமோகம், மாயாகாரியம்.— பந்தம் - கலாதி, மலகாரியம்.— போக்த்ருத்துவம் - போகக கிரியாகர்த்திருத்துவம், போகாசத்தி கர்த்திருத்துவமுமாம்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேலே தன்மமோ டதன்மமாகியெனக் கூறப்பட்ட கன்மமலமும் அதன்பின்னாக நித்தமா யருவாயெனக் கூறப்பட்ட

மாயாமலமும் ஈண்டுக் கூறப்பட்ட ஆணவமலமு மாகிய விம்மூன்று மலங்களும், நெல்லுக்கு முளை தவிடு உமிபோல் உயிரைப் பற்றி நின்று முறையே போகமும் பந்தமும் போத்திருத்துவமும் பண்ணுவனவாம். இம்மலங்கண் மூன்றனோடுங் கூடி நின்று பந்திப்பன வேறுமிருமலங்களுளவென்பதாம்.

இது நிரனிறை.

கன்மமலம் போகம் பண்ணுதலாவது, நெல்லின்கணுள்ளதாகிய முளைதன் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல, உயிரின்கட் சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவித்தல்.

மாயாமலம் பந்தம் பண்ணுதலாவது, முளைத்தற்கு அனுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடுபோல, அச்சுகதுக்கங்களைத் தோன்றுதற்குத் துணைக்காரணமாய்த் தனுகாரியமாகிய தநுகரணமுதலியவற்றையும் உயிரையும் பிணித்து நிற்றல்.

ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணுதலாவது, அம்முளை அங்ஙனந் தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோல, அத்தோற்றத்திற்கு நிமித்தகாரணமாயவற்றை முற்குவித்து நின்று; அச்சுக துக்கங்களை உயிர் நுகருமாறு நிலைபெறுத்துதலெனக்கொள்க.

"பந்தம்போகம்போனிறுத்தலும்-வந்தமாயை வினைமலத்து" என்றார் ஞானாமிர்த நூலுடையாரும்.

முளை ஆகுபெயர்.

முளைதவிடுமிகள் பந்தத்திற்குங் காரணமாதல் மாத்திரைக்கும் உவமையாயின.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்சொன்ன மூன்று மலங்களும் அநாதியென்றும், ஆன்

மபோதத்தை மறைக்குமென்னு மாணாக்கனை நோக்கித் தோன்ற வருளிச்செய்கின்றார்.

மும்மலநெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல் மம்மர் செய் தணுவினுண்மை வடிவினை மறைத்துநின்று - மூன்றுமலங்களும் நெல்லுக்குண்டான முளையுந் தவிடு முமியும்போல மயக்கத்தையுஞ்செய்து, ஆன்மாவுக் குண்மையான சொரூபத்தையொருசாராக தோன்றாமல் மறைத்துநின்று,—பொய்ம்மைசெய்போகபந்தம் போத்திருத்தவங்களைபண்ணும் - பொய்யை மெய்யென்று மயக்குகிற போதத்தையும் அதனுடன் கட்டுப்பட்டு நிற்கிற புசிப்பையு மதைப் புசிப்பிலே இருத்துகையையு முண்டாக்காநிற்கும் இவையுடனறியும்,—இம்மலமூன்றினொடு மிருமலமிசைய பனின்னும் - இந்த மூன்றுமலத்துடனே மேலும் இரண்டுமலங்கூட்டிச் சொல்லப் புகாநின்றேன.

இதனாற் சொல்லியது, ஆணவம் மாயை காமியமென்னு மூன்று மலங்களுட மடக்கத்தைச் செய்து ஆன்மரூபத்தை மறைக்குமென்றும், இந்தமூன்று மலத்துடனே மேலுமிரண்டு மலங்கூட்டிச் சொல்லுகின்றோமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மும்மலம் - மேலே தன்மமோ டதன்மமெனக் கூறப்பட்ட கன்மமலமும், அதனபின்னுச நித்தமா யருவாயெனக் கூறப்பட்ட மாயாமலமும், ஈண்டுக் கூறப்பட்ட ஆணவமலமுமாகிய மூன்று மலங்களும்,—நெல்லினுக்கு முளையோடு தவிடுமிப்போல் - நெல்லுக்கு முளையோடு தவிடு மியும்போல்,—அணுவினுண்மைவடிவினை - உயிரின்சொரூபத்தை,— மம்மர்செய்து ம

மறைத்துநின்று - மயக்கத்திற் கேதுவாகப் பதித்துநின்று,— பொய்ம்மைசெய் போகபந்த போத்திருத்துவங்களை பண்ணும்- முறையே பொய்ம்மைசெய்யாநின்ற போகமும் பந்தமும் போத்திருத்துவமும் பண்ணுவனவாம்.—இம்மலமூன்றினோடினது மிருமல மிசைப்பன் - இம்மலங்கள் மூன்றினோடுங் கூடினது பதிப்பன வேறுமலங்களானவென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை

மேற் றொகுத்துப் போந்த மாயேய மலத்தையுந்
திரோதாயியினையு முணர்த்துகிறார்.

மாயையின் காரியத்தை மாயேய மலமதென்று, மேயுமும்மலங்க டத்தந் தொழிலினை யியற்றவேவுந், தூயவன் றனதோர்சத்தி திரோதான கரியதென்று, மாய்வரிம் மலங்களைந்து மனுககளை யணைந்துநிற்கும். (அஎ)

(இ-ள்.) மாயையின காரியத்தை மாயேய மலமதென்றும்	மாயையின காரியமாகிய கலைமுதலிய தத்துவ சமுகங்களை மாயேய மலமெனனும் பெயரைப் பொருந்தககூறியும்,
ஏயுமும்மலங்க டத்தந்தொழிலினை யியற்றவேவுந் தூயவன்றனதோர் சத்தி திரோதானகரிய	ஆன்மாக்களிடத்திற் பொருந்திநின்றாணவமுதலிய மூன்று மலங்களுந் தத்தந் தொழிலினைச் செய்யும்படி செலுத்தப்பட்ட சுத்தனான சிவனுடையசத்தி யானமாவினுடையவுஞ் சிவனுடையவுந் தரிசனத்தை யாகவொட்டாமன் மறைக்கையால், இதற்கு

றென்றுமாய்வர் த்திரோதாயி மலமென்றும், பெரியோர்கள்
சொல்லுவர்கள்.

இம்மலங்களை இந்தப் பஞ்சமலங்களு மான்மாக்களைப
ந்து மணுக்களை பொருந்திநின்று தத்தந் தொழில்களைச் செ
யணைந்துநிற்கும். ய்து நிற்கும். எ-று.

சிவசத்தியைப் பதிபதார்த்தமாகக் கூறியிருக்கப் பாசமெ னறோதிய தெனனெனின ? அந்தச் சத்தியினுண்மையை விசாரிக்கிற் சிவனுடனே சமவேதமாயிருக்கிறது பதிபதார்த்தமேயாயினும் அச்சத்தி பாசத்தைப் பின்சென்று பரிபக்குவம்பண்ணிச்செலுத்துகையாற் பாசமெனறுபசாரமாகக்காரணப்பெயராக்கிக் கூறப்பட்டது.

“திரோதகருசிற்சத்தி சிறியார்க் கிவறருள் விரோதஞ்செய் தார்க்கும்பின் வீடு” “ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்-பாசமெனுமபேரதறகுப் பாங்கு.” “சினமருவுதிரோதாயி கருணையாகித் திருந்திய சத்தினிபாதஞ்சேருமனறே” எனவறிக.

இதற்குச் சுவாயம்புவம் பார்க்கியை மிருகேந்திரத்து மறிக.

“சத்திகருகாழி மன் கட்டுமெப்பாசங்கள் மூன்றவைதான”
“விருத்திகளேபினைந் தளதேபினைந்தவப்பாச - மோதுவரோ”
யோதியவிவ்வினை-யொடுங்கியதே” எனவறிக. (அஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும் - அசுத்தமாயா காரியமாகிய பிரவிருத்திப் பிரகாசா * யதார்த்த ஞா

ங்களைச் செலுத்தும் சம்பந்தத்தை யுடைத்தாகையால் மகா மாயை யொருமலமென்றும்,—

எழும்மலங்க டத்தந்தொழிலினை யியற்றவேயுந் துயவன்றனதோர்சத்தி திரோதாயி கரியதென்றும் - ஆன்மாக்களைப்பொருந்தின ஆணவமாயைகாமியங்க மூன்று மலங்களும் தங்கள் தங்கள் கிரியைகளைப் புரியும்படிக்கு அதிஷ்டித்து நிற்பதாகையால் நின்மல சிவ ஸமவேத திரோதான சத்தியை யொருமலமென்றும்,—

ஆய்வர்-விசாரிப்பர்கள்.

விசாரிப்பதாவது ஆதிசத்தி மலமல்லாமலிருக்கவும் கிராதருடைய ஆசாரியனைக் கிராதாசாரிய னென்றதுபோல மலத்தை யதிஷ்டித்து நிற்கையால் மலமென்று குறிக்கலாமென்பது.—

ததுக்தம் ஶ்ரீம்ருகேந்த்ரே — தாஸாம் மாஹேஶ்வரீ ஶக்தி: ஸர்வாநுக்ராஹிகா ஶிவா | தர்மாநுவர்தநாதேவ பாஶ இத்யுபசர்யதே || இதி.

இம்மலங்களைந்து மணுக்களை யடைந்துநிற்கும்-இந்த மலங்களைந்தும் சகலராகிய ஆன்மாக்களைப் பொருந்தி நிற்குமென்றிதன்பொருள்.

* அயதார்த்தம் - பொய்.

ததுக்தம் காமிகே — ஸ ச பஞ்சவித: பாஶோ ஜா[illegible]விதோ மத: | மல: கர்ம ச மாயா ச ஶக்திஶ்சாத்ர நிரோதிகா || [illegible] | இதி.

ததாபர: — மல: கர்ம மஹாமாயா மாயோத்யம் மலம்,

ஜமஸ் । க்ரியாநகஸீஸ்க்ஷ் வாஸ்ஸெகை நாகம்ஷ்பெ ஞுகஷிஷ்.

சிவப்பிரகாசத்திலும், பொது-௨௦-வது, செ. "மோகமிக வுயிர்கடோறு முடனாய்நிற்கு மூலவாணவமொன்று முயங்கி நின்று, பாகமிக வுதவுதிரோ தாயியொன்றுடகர்மாயை யொன்றுபடர் கன்மமொன்று, தேகமுறு கரணமொடு புவனபோகச் செயலாரு மாமாயைத் திரட்சியொன்றென ஞ்சமல மைந்தெனபர்."

ஆகில் ஆணவஞானத்தைத் தடுக்கிறதற்கு நீர்சொன்ன திரோதான சத்தியே போதும், ஆணவமலமென்ப தொன்று வேண்டா! ஜடமானது சித்தாயிருக்கிற ஆன்மாவை யெப்படித் தடுக்கும். இதன்றியும் வியாபகனாயிருக்கிற ஆன்மாவுக்கு ஆவரணமும் கூடாதென்னில்? ஆன்மாவுக்கும் ஆணவமலத்துக்கும் அநாதி சம்போகமாகையால், அந்த மலத்தினுடைய சத்தியானது ஞானத்துக்கு பிரதிபந்தமாயிருக்கும். இதன்றியும் அசடமானது ஜடத்தினாலே பாதிக்கப் படுகிறதொழிய அஜடத்தினாலே பாதிக்கப்படாது ஈஸ்வரனெப்படி யான்மாக்களுக்கு ப்பாதகமல்ல, அப்படியே ஈஸ்வர சமவேதையான ஆதிசத்தியும் ஆன்மாவுக்கு பாதகமல்ல. ஆகையால் சித்தானது ஜடத்தினாலே பாதிக்கப்படாதபொழுது பின்னை யெதினாலே பாதிக்கப்படும்.

ஜடம் அஜடமென் றிரண்டுவஸ்துவல்லோ வுள்ளது, அஜடமாயிருக்கிற ஆன்மாவை அஜடமாயிருக்கிற ஆன்மாந்தரம் பாதிக்குமென்னில்? அப்பொழுது பாதகமாயிருக்கிற ஆன்மாவுக்கு நாசம்வரும். அதேதென்னவில்? ஆன்மாவுக்கு யாதொன்று பாதகமாம், அதினுடைய நாசமே முத்தி; அந்தப் பாதகமல்லாதபொழுது முத்தியேயில்லை. ஆகையால் ஆன்ம சித்சத்

தி யாதகம் ஜடமாகிய ஆணவ சத்தியேயென்று அங்கீகரிக்க வேண்டும்.

ஆகில் ஆன்மாவுக்கும் ஆணவ மலத்துக்கும் அநாதிசம்பந்தம் சொல்லப்பட்டது, ஆணவ மலத்தினாலே ஆன்மசத்தி ஆவரிக்கப்பட்டதோ, அப்பிரகாசமாகப் பண்ணப்பட்டதோ! ஆன்மாவும் ஆன்மசிற்சத்தியும் அபின்னரூபமானபடியால் ஆன்மசிற்சத்தி ஆவரிக்கப்பட்டதெனப் போகாது.

விபுவாகையால் அப்பிரகாசம் பண்ணுமெனனில்? பிரகாசத்துக்கு அப்பிரகாச மாகிறபொழுது நாசமேயாம்.

ஆகையா லிரண்டுங் கூடாது.

பின்னை யாணவமலம் ஆன்ம சிற்சத்தியை யேதுபண்ணித்தெனனில்? சிற்சத்தி விபுவாகையினாலே ஆவரணமுங் கூடாது, நித்தியப் பிரகாசமாகையினாலே அப்பிரகாசமுங்கூடாது; அக்னிசத்தியானது மணி மந்திர ஔஷதங்களினாலே தடுக்கப்பட்டுப் பிரகாசமாக ஜ்வலியாநிற்கவும், ×ஸ்போடகாதி கிரியைகளைப் பண்ணமாட்டாததுபோல, ஆன்ம சிற்சத்தியும் ஆணவமல சத்தியினாலே தடுக்கப்பட்டு நித்தியப் பிரகாசியாயிருந்தும் ஸ்வநிஷ்டையா யிருப்பதொழிய இச்சாஞானக் கிரியைகளாகிற காரியப் பிரவிர்த்தியைப் பண்ணமாட்டாமலிற்கும். ஆகையாலாணவமல சத்தியானதே ஆன்ம சிற்சத்தியை இச்சாஞானக் கிரியா காரியப் பிரவர்த்திகளைப்பண்ணாமல் தடுக்கும்.

இதற்குமேற் சங்கை.

திருக்கிரியாரூபம், ஆன்ம சிற்சத்தியென்று முன்னேசொல்லப்பட்டது. அது அறியப்படுகிறதும் பண்ணப்படுகிறதுமில்லாதபொழு தில்லை. இக்ஞாதிரு கர்த்திருத்துவ ரூபத்துக்கு அனனியமாகக் காரியமேயில்லை. ஆகையால் சிற்சத்திக்குகாரியத்தில் பிரவிர்த்திவாராமல் ஆணவமலம் தடுக்குமென்றது எ

